இப்பத்திரிகை சிறந்த துணையாக இருக்கும். இப்பத்திரிகையில் எழுதப்படும் ஒவ்வொரு விஷயமும் இலக்கணப்பிழையில்லாத தெளிவான செந்தமிழ் நடையில் அமைந்து விளங்கும். ஆண்டவனிடம் நீங்காத அன்பும் நல்லொழுக்கமும் ஒற்றுமையும் இன்னும் இவை போன்ற நன்மைகளையும் விருத்தி செய்யும்படியான அரிய விஷயங்கள் அரபி, ஆங்கிலம், தமிழ் என்னும் முப்பாஷைகளில் தேர்ந்த நம் முஸ்லீம் பண்டிதர்களாலும் பிறராலும் எழுதப்பட்டு வெளிவரும். இப்பத்திரிகையில் வெளிவரும் விஷயங்களாவன:—

(1) ஆண்டவன் அருளிய நம்மார்க்கத்தின் ஒப்பற்ற பெருமையையும், அதன் உயர்ந்த நோக்கங்கள் கொள்கைகள் இவற்றையும் தமிழுலகத்தில் பிரசித்தஞ் செய்தல்.

(2) விவேகத்தைத்தரும் நீதிகள், பெரியோர்களுடைய ஜீவ்ய சரித்திரங்கள், அறிவையுண்டாக்கும் தமிழ்ப்பாடல்கள் இவைகளை வெளிப்படுத்தல்.

(3) இந்தியாவிலும் மற்ற முஸ்லீம் தேசங்களிலும் அவ்வப்போது நடக்கும் வர்த்தமானங்களையும் மற்ற விசேஷங்களையும் அறிவித்தல்.

(4) அந்நியமதத்தோர் செய்யும் தர்க்கவாதங்களை நியாயவாயிலாக மறுத்தல்.

இன்னும் இவைபோல முக்கியமாக வேண்டும் விஷயங்களும் வெளிவரும். "சிறுகக்கட்டிப் பெருகவாழ்" என்ற நீதியை அநுசரித்துமூன்றுமாதத்திற் கொருமுறை நம்பத்திரிகை இப்போது வெளிவருவதாயினும், காலத்தில் இப்பத்திரிகை நம் சகோதரர்களது அன்புக்கும் ஆதரவுக்கும் உட்பட்டு விருத்தியடையத் தடையில்லை. நம் சகோதரர்களில் ஏழைகள் முதல் எல்லோரும் எளிதாக வாங்கிப்படிப்பதற்காகவே இதன் வருஷச் சந்தாத்தொகை மிகச் சொற்பமாக வைத்திருக்கின்றது. மதுரை இஸ்லாம் மதாபிவிர்த்தி சங்கத்திலிருந்து இப்பத்திரிகையை நடத்த முன்வந்திருப்பது, சிலர் போலப் பொருள் சம்பாதிக்கும் நோக்கத்துடனில்லை யென்பதும் மதாபிமானத்தினாலேயே என்பதும் இனி நீங்களே அறிவீர்கள். ஆகலால், இத்

தென்னாட்டுள்ள முஸ்லீம் சகோதரர்களெல்லாம், இப்பத்திரிகையைத் தாங்கள் சொந்தக் குழந்தைபோலக்கருதி, தாங்கள் அபிமானிப்பது போலத் தங்கள் சிநேகிதர்களைத் தூண்டியும் இப்பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்பத்திரிகை தமிழ்நாட்டில் விருத்தியடைந்து விளங்குமானால், இதனுடைய லாபமெல்லாம் ஒருவருக்குச் சொந்தமில்லாமல், மதுரை இஸ்லாம் மதாபிவிருத்தி சங்கத்தின் நன்மைக்கே உபயோகமாகிப் பல வழிகளாலும் மார்க்க அபிவிர்த்திக்கும் பயன்படுமாறு செய்யப்படும் என்பதை யாவரும் அறியத்தக்கது. ஆதலால், சகோதரர்களெல்லாம் இத்தகைய தர்மங்களை ஆதரித்து ஆண்டவன் கிருபையை அடைவார்களாக.

பத்திராதிபர்.

அப்துல்லா இபினு அப்துல்லா அவர்கள் இஸ்லாமான சரித்திரம்.

இவர் மஜார்க்கா பட்டணத்தில் ஓர் மாக்ஷிமைதங்கிய கிறிஸ்தவ பாதிரி; இவர் பெற்றோர்கள் மிகுந்த பணக்காரர்கள்; இவர் குழந்தையிலிருந்தே குருத்துவத்துக்கே ஆளானார். ஆறுவயதில் பைபில் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாடு மற்றும் அது சம்பந்தமான புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்து அவைகளில் பெரும்பான்மையை மனப்பாடமாக்கினார்.

இலக்கணம் தர்க்கசாஸ்திரங்களை இவர் படித்து தேர்ச்சியடைந்த பிறகு, காட்டலோனியா என்ற பட்டணத்திலுள்ள லெரிடா என்ற பெயருடைய சர்வகலாசாலைக்கு அனுப்பப்பட்டார். இங்கே சிலகாலமாக இவர் சடத்துவ சாஸ்திரத்தையும் வானசாஸ்திரத்தையும் கற்றுத் தேர்ந்த பிறகு வேத சாஸ்திரப்படிப்பிலே மாத்திரம் 4 வருடம் தன் கவனிப்பை ஊன்ற செலுத்தினார்.

லெரிடாவைவிட்டு அக்காலத்தில், கல்வியுடைய ஜனங்களிடத்தில் அதிக மதிப்பும் உன்னத நிலைமையிலுமிருந்த மிக்க பேர்பெற்ற போலோனு (Pologna) சர்வகலாசாலைக்குப் போனார். அவர் நிக்கொல்ஸ் மார்தல்லோ என்ற பேர்பெற்ற கிறிஸ்துவர்களால் மதிக்கப்பெற்று கௌரவம் பொருந்திய முதிர்ந்த பாதிரியார் வீட்டில் வசித்தார். இந்த நிக்கொல்ஸ்மார்தல்லோ என்ற பாதிரியாரோ தன்னுடைய அருமைவாய்ந்த கல்வியினாலும், தெய்வபக்தியினாலும் தன் ஞானஜீவ்யத்தினாலும் அவர் இந்தப்போலோனு பட்டணத்தில் மிகவும் உன்னத நிலையை வகித்தார். இம்மூன்று விஷயங்களில் அவர் காலத்திலிருந்த எந்தக் கிறிஸ்துவ பாதிரிகளும் இவருக்கு இணையில்லை.

பல ராஜ்ஜியங்களிலிருந்தும் மாக்ஷிமையுடைய ராஜாக்களாலும் கீர்த்திபெற்ற பிரபுக்களாலும் பைபில் வேதசாஸ்திரங்களில் மிகவும் கடினமான விஷயங்களை அடிக்கடி இவர் தீர்மானத்திற்கு அனுப்பி வருவதுண்டு. இதற்காக மேற்கண்ட ராஜாக்களும் பிரபுக்களும் ஏராளமான வெகுமதிகளையும் அனுப்பியிருக்கிறார்களென்றால் இவர் பெருமை அம்மம்ம! எவ்வளவு வியக்கத்தக்கது. இந்த முதிர்ந்த அறிவையுடைய பாதிரியிடத்தில் தான் கிறிஸ்துவமார்க்கத்தின் கொள்கைகளையும், அனுஷ்டானங்களையும் மஜார்க்காப்பட்டணத்திலுள்ளவாலிப குரு கற்றுக்கொண்டார்; இவர் அவருக்கு வெகுகாலம் உழைத்து அவரிடத்திலேயே எப்போதுமிருந்து கடைசியாய் அவர் இணைபிரியாத சிநேகிதர்களில் மேன்மைபெற்றவராகத் தம்மை ஆக்கிக்கொண்டார். இந்த வாலிப குரு நிரம்ப மரியாதையோடு போதகருக்கு உழைத்துவரவே அவர் தன் வீட்டின் சாவியையும் உக்கிராணத்தின் சாவியையும் இவர் (பாலிய குரு) வசத்தில் ஒப்புவிக்கும்படி அவ்வளவு நம்பிக்கையாய்விட்டது. இந்த மாதிரியாக நிக்கல்ஸ்மார்த்தல்லோ பாதிரியாரின் ஊழியத்திலும் படிப்பிலும் 10-வருஷம் அவருக்குச் சென்றது. ஒரு தினத்தில் நிக்கல்ஸ்மார்த்தல்லோ பாதிரியாரவர்கள் வியாதியாய்ப் பிரசங்கமண்டபத்துக்குப் போக முடியாமலிருக்க நேர்ந்தது.

அவர் பிரசங்கங்களைக் கேட்டிருந்த மாணாக்கர்கள் அவர் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். அப்போது அவர்கள் அநேக கல்வி நிறைந்த விஷயங்களைத் தர்க்கிக்க ஆரம்பித்தார்கள்; அப்படி அவர்கள் தர்க்கிக்கும்போது பாரேகலீது என்ற நாமம் பூண்டவர் எனக்குப் பின் வருவார் என்று கடவுளானவர் தன் ஒரே பேரான குமாரர் கிறிஸ்துவின் மூலமாய்ப்பேசின வார்த்தை அங்குவர நேரிட்டது. சில நேரங்களாக உணர்ச்சியான தர்க்கம் நடந்தது. ஆனால், முடிவில் இந்த விஷயம் தெளிவாகாமல் அவர்கள் கலைந்துவிட்டார்கள்.

சபை கலைந்தபின்னர் மேற்கண்ட பாலிய குரு தங்கள் குருவின் வீட்டுக்குப்போனார்; அப்போது நிக்கல்ஸ்மார்த்தல்லோ அவரை (பாலிய குருவை) பார்த்தும் நான் இல்லாதபோது நீங்கள் இன்று பேசின விஷயமென்ன? என்று கேட்டார்.

பாரேகலீது என்ற நாமத்தைப்பற்றிப் பேசினதில் எங்களால் யாதொரு தீர்மானமும் செய்ய முடியாமல் போய்விட்டது என்றும் ஒருவர் ஒருவிதமான அபிப்பிராயமும் மற்றொருவர் இன்னொருவிதமான அபிப்பிராயமும் தெரிவித்தார்களென்றும் அந்தப் பாலியகுரு நிக்கல்ஸ்மார்த்தல்லோ என்ற போதகருக்குச் சொன்னார். தவிரவும் அது விஷயமாய்ச் சொல்லப்பட்ட அநேக சீர்திருத்தங்களும் சொல்லப்பட்டது என்றும் சொன்னார். அப்போதகர் பாலியகுருவைப்பார்த்து அதுவிஷயமாய் நீ என்ன சீர்திருத்தம் சொன்னாய் என்று கேட்டார்.

அதற்கு அவர் சுவிசேடங்களின் வியாக்கியானத்திற் சொல்லப்பட்ட பிரகாரம் இன்ன இன்ன வேதசாஸ்திரிகளின் சீர்திருத்தத்தைத் தாம் சொன்னதாகச் சொன்னார். அப்போது நிக்கல்ஸ்மார்த்தல்லோ என்ற பெயருடைய வயோதிக போதகர் உரத்த சத்தமாக ஆச்சரியக்குறிப்புடன் சொல்லுகிறார். "நீங்கள் உண்மைக்குச் சற்று சமீபித்தாலும் உண்மையிலிருந்து நீங்கள் மிகவும் தூரத்தில் இருக்கிறீர்கள் என்றும். இன்னார் இன்னார் முற்றிலும் தப்பு இன்னார் இன்னார் ஏறக்குறையச் சரியாகச் சொன்னார்கள். ஆனால் ஒருவராவது அதின் உண்மையான அர்த்தத்தைக் கண்டுபிடிக்கவில்லை. தவிரவும், அறியவுமில்லை. மிகவும் ஆழ்ந்தவர்கள் தவிர இந்த பேர்பெற்ற நாமத்தைச் சரியாய் வியாக்கியானம் செய்யமுடியாது. மேலும், உங்களுக்குள் ஒருவராவது அவ்வளவு தூரத்திற்கு அறிவில் விர்த்தியாகாதவர்களாக இருக்கிறீர்கள் என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் பாலியகுரு அவர் காலில் விழுந்து முத்தமிட்டுச் சொல்லுகிறார்.

ஓ ஐயா! நான் வெகுதூரதேசத்திலிருந்து வந்திருக்கிறது தங்களுக்குத் தெரிந்தவிஷயம். இந்தப்பத்து வருடங்களாகத் தங்களுக்கு ஊழியம் செய்திருக்கிறேன். என்னால் சொல்லமுடியாதபடி அவ்வளவு ஏராளமாகத் தங்களிடமிருந்து கற்றிருக்கிறேன். இந்த சிறப்புப்பெற்ற நாமத்தை எனக்கு விளக்கிக்காட்டி எனக்குத் தாங்கள் இதுவரை காட்டிய அன்பின் அளவை பூர்த்திசெய்யுங்கள் என்று சொன்னார்.

அதன்பிறகு வயோதிக குருவானவர் அழ ஆரம்பித்து பின்வருமாறு சொல்லுகிறார்.

எனது மகனே! உண்மையாகவே நீ எனக்குச் செய்த ஊழியத்தாலும் எனக்குச்செய்த மரியாதையாலும் நீ எனக்கு மிகவும் அருமையாயிருக்கிறாய் என்பது திண்ணம். இந்த மகிமையுற்ற பெயரை அறிவதால் நிரம்ப லாபமுண்டென்பது நிச்சயம்.

ஆனால் அதை நான் உனக்கு வெளிப்படுத்தினால் கிறிஸ்தவர்களெல்லாம் உன்னை உடனே கொலைசெய்துவிடுவார்கள் என்று நான் பயப்படுகிறேன் என்று சொன்னார். அதற்கு அந்த பாலிய குரு பதிலுத்தரமாக மிகவும் உன்னதமான நம்முடைய பிதாவான ஏகோவாவின்பேரிலும், சுவிசேஷத்தின் உண்மையின்பேரிலும், அதைக் கொண்டுவந்தவரின் பேரிலும் ஆணையாகத் தங்களுடைய அனுமதியன்னியில் ஒருவருக்கும் தங்கள் இரகசியத்தை வெளிப்படுத்தமாட்டேன் என்று நான் வாக்குத்தத்தம் செய்கிறேன் என்று உரத்துக் கூறினார்.

அதற்குக் குருவானவர் என் அருமையான மகனே! நீ முதலில் என்னிடம் வந்தபோது உன் சொந்த ஊரின் சங்கதியைப்பற்றி வினவினேன். ஏனெனில், அது முஸ்லீம்தேசத்தின் அருகில் இருக்கி

றதா என்பதைப்பற்றியும் உன் தேசத்தார் அவர்களோடும் அல்லது அவர்கள் உன் தேசத்தாரோடும் உன்னோடும் சண்டைக்கு வந்தார்களா ? என்று அதாவது இஸ்லாத்தின் பேரில்உனக்கு என்னபகையிருக்கிறதென்று அறியவிரும்பினேன். திட்டமாய் அறிந்துகொள்.

ஓ மகனே! பாரேகலித் என்னும் நாமகரணமானது முஸ்லீம்களின் தீர்க்கதரிசியாகிய முகம்மது நபி அவர்களின்பேர்களில் ஒன்றாயிருக்கும். இவருக்குத்தான் 4வது வேதம் திறக்கப்பட்டிருக்கிறது. இந்த வேதத்தைப்பற்றித்தான் *தானியேல் தனக்கு அதை வெளிப்படுத்தப்படவேண்டுமென்று பிரசித்தம் செய்தபோது பேசினது.

உறுதியாக அவருடைய மார்க்கம் (முகம்மது நபி அவருடைய) உண்மையான மார்க்கம். அவருடைய கொள்கைகள் வேதத்தில் உள்ள பிரகாரம் உன்னதமானவை என்று வயோதிகர் சொன்னார்.

அதற்கு அந்தப்பாலியகுரு, ஐயா இது இப்படி என்றால், கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயமென்ன என்று கேட்டார்.

அதற்கு வயோதிகர், என் அருமைக்குழந்தாய் கிறிஸ்துவர்கள் இயேசுவின் மார்க்கத்தில் விசுவாசமாயிருந்தால் கடவுளின் மார்க்கத்தை (இஸ்லா மார்க்கத்தை) கைப்பற்றியிருப்பார்கள். ஏனெனில், மற்ற தீர்க்கதரிசிகளின் நாமத்தைப்போலவே கிறிஸ்துவின் மார்க்கமும் கடவுள் மார்க்கமாயிருக்கிறது.

அதற்குப் பாலியகுரு, ஐயா அப்படியானால் பரிகாரம் (போக்கு) என்னவென்று கேட்டார்.

என் குழந்தாய், இஸ்லாத்தை ஒப்புக்கொள் என்று சொன்னார். அதற்கு வாலிபர் அப்படியானால் இஸ்லாமார்க்கத்தை ஒப்புக்கொள்ளுகிற ஒருவன் இரட்சிப்பை (மோக்ஷத்தை) அடைவானா? என்றார்.

வயோதிகர் ஆம். அவன் இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் இரட்சிப்பை அடைவான் என்றார்.

---

*தானியேல் 12ம் அதி. 4.

பாலியகுரு, ஐயா! நான் முஸ்லீம் தேசத்திற்குப்போய் அவர்கள் மார்க்கத்திற் பிரவேசிப்பதுதான் தாங்கள் எனக்குச் செய்யும் உபதேசமோ!

வயோதிககுரு ஆம்; நீ ஞானவானாயிருந்து ரக்ஷிப்பை அடைய விரும்பினால் அப்படிச் செய்யத் துணியவேண்டும்.

ஏனென்றால், இஸ்லாமதத்தை ஒப்புக்கொள்வதினால் இம்மைப் பயனையும், மறுமைப்பயனையும் நீயடைவாய். இப்போது இந்த நிமிஷம் வரை நமக்குள் நடந்த இச்சமாசாரம் ஒருவருக்குந் தெரியாது. நீ இதை இரகசியமாக வைத்திருக்க மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஏனென்றால், இது வெளிக்கு வந்தால் நீ தக்ஷணமே கொல்லப்படுவாய். உனக்காக நான் ஒன்றும் செய்யமுடியாது. என்பேரில் அந்தப்பழியை யேற்றினால் அதனால் எனக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. ஏனென்றால், நான் உனக்கு விரோதமாய்ச் சொல்வதெல்லாம் ஜனங்கள் நம்புவார்கள். நீ எனக்கு விரோதமாகச் சொல்வதெல்லாம் ஒருவரும் நம்பார்கள். இப்படியிருப்பதால் ஒருவார்த்தையாவது நீ சொல்வாயானால் உன்னுடைய இரத்தத்திற்கு நான் உத்தரவாதியாகமாட்டேன்.

அதற்குப் பாலியகுரு அந்த எண்ணத்தை யொழித்து ஆண்டவனே என்னைக் கா என்று உரத்துக்கூறினார். அந்த வயோதிககுருவானவர் விரும்பின பிரகாரம் பாலியகுரு வாக்குத்தத்தம் செய்தபிறகு தன் யாத்திரைக்கு அவரிடத்தில் விடைபெறவே வயோதிகர் இவரை ஆசீர்வதித்து இவர் யாத்திரைச்செலவுக்காக 50-தீனார்களைக் கொடுத்தார். அந்தப்பாலியகுரு தான் பிறந்ததேசமாகிய மஜார்க்கா பட்டணத்திற்குச் சென்று அங்கே 6-மாதம் தங்கினார்.

அதின்பிறகு ஸிஸிலித்தீவுக்குக் கப்பலில் யாத்திரைபோய் முஸ்லீம் தேசத்திற்குப் பயணமாகுங் கப்பலுக்காக அங்கே 5-மாதம் காத்திருந்தார். தானிஸ்பட்டணத்திற்குப்போகிற ஒரு கப்பல் வரவே அதில் ஏறிக்கொண்டார். அக்கப்பல் அஸ்தமனமான பிறகு உண்டாகும் சந்திர வெளிச்சத்தில் ஸிஸிலியைவிட்டு புறப்பட்டு மறுநாள் மத்தியானம் தானிஸ்துறைமுகம்போய் நங்கூரம்போடப்பட்டது.

அவர் கப்பலைவிட்டு இறங்கி ஆயச்சாவடிக்கு வந்தபிறகு கிறிஸ்தவ போர்ச்சேவகர்களில் சிலர் கேள்விப்பட்டு அங்குபோய் அவர்களுக்குரிய வீட்டுக்கு அவரை இட்டுக்கொண்டு போனார்கள். தூனிஸ் பட்டணத்தில் வசிக்கும் சில வியாபாரிகளும் கூட அவர்களோடு வந்தார்கள். நிரம்ப தாராளமான உபசரணையை அநுபவித்துக்கொண்டு அவர்களுடன் நான்கு மாதத்தைக் கழித்தார். அதன்பிறகு கிறிஸ்துவ பாஷை பேசக்கூடியவர்கள் யாராவது சுல்த்தான் அவர்கள் சமஸ்தானத்திலிருக்கிறார்களா? என்று அவர் (பாலியகுரு) விசாரித்தார். அந்தக்காலத்திலிருந்த சுல்த்தான் காலஞ்சென்ற மாக்ஷிமைதங்கிய அபுல்அப்பாஸ்அகமது அவர்கள். மாக்ஷிமைதங்கிய சுல்த்தான் அவர்களின் வைத்தியரும், மிகுந்த நண்பரும் பெரிய உத்தியோகஸ்தர்களில் ஒருவருமாயிருந்த வைத்தியம் யூசுப் என்ற ஒருகல்விமான் அச்சமஸ்தானத்தில் இருப்பதாக அவர்கள் (கிறிஸ்துவர்கள்) அந்தப் பாலிய குருவுக்குச் சொன்னார்கள்.

இந்தச் சமாசாரத்தைக் கேட்டவுடன் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து அவர் (வைத்தியர்) எங்கே வசிக்கிறாரென்று விசாரிக்கவே அவருக்குப் பண்டிதரின் வீட்டைக் காண்பித்தார்கள். அவர் அப்பண்டிதரிடத்திற் போய்த் தன்னுடைய நிலைமையை அவருக்கு விவரித்துக்காட்டித் தான் இவிடத்திற்கு வந்திருக்கிறது, இஸ்லாமார்க்கத்தைத் தழுவுகிற ஓராசையே என்று சொன்னார். பண்டிதரானவர் இந்தச் சமாசாரத்தைக் கேட்டு மிகவும் சந்தோஷமானார்.

ஏனெனில், விசேஷமாகத் தன்மூலமாக இந்தச்சந்தோஷகரமான காரியம் நடைபெறப்போகிறதே என்பதுதான். ஆகையால், பண்டிதர் அந்த நேரத்திலேயே தன் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு இவரை (பாலிய குருவை) அரண்மனைக்குத் தன்னோடு கூட்டிக்கொண்டுபோய் அரண்மனை வாசலில் இவரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்து இவரின் பிரியத்தை சுல்த்தான் அவர்களிடம் சொல்லி உள்ளே அழைத்து இவர்சொல்லப்போகிற விஷயங்களைச்செவிகொடுக்கும்படி சுல்த்தான் அவர்களைப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டார். சுல்த்தான் அவர்கள் உத்தரம் கொடுக்கப்படவே இவர் சுல்த்தான் சமுகத்தில் (அரண்மனையின் வெளியிலிருந்து) கொண்டு வரப்பட்டார்.

சுல்த்தான் அவர்கள் பாலிய குருவை நோக்கி உமக்கு வயது என்ன என்று துவிபாஷகர் மூலமாகக் கேட்டார்கள். அதற்கு இவர் 35-வயது என்று மறுமொழி சொன்னார். பிறகு நீர் என்னென்ன படிப்பில் தேர்ந்திருக்கிறீர் என்று கேட்க அதற்கு தன் பயிற்சி எல்லாம் வெகுநேரம் எடுத்துச்சொன்னார்.

அப்போது H. M. சுல்த்தான் அவர்கள் "நீர் வாழ்க". என்று உபசாரவார்த்தைகூறி முஸ்லீமாகும் உமது பேரில் உன்னதமான கடவுளின் ஆசீர்வாதம் உண்டாவதாகஎன்றார்கள். பின்னர் மேற்சொல்லப்பட்ட துவிபாஷகரான யூசுப் அவர்களிடத்தில் பாலிய குரு சொல்லுகிறார்.

ஒருவனுக்கு விரோதமாக அநேக பெயர்கள் கிளம்பி கூச்சலிட்டு அவன்பேரில் மிக்க அவமானத்தையும் வருத்தத்தையும் உண்டாக்கும்படியான அவதூறுயினும் பாதகங்களேனும் செய்யாவிடின் எந்த மனிதனும் தன்மார்க்கத்தை ஒருபோதும் இழக்கமாட்டான் என்று நினைப்பார்கள். நானோ அப்படியல்லவென்று நமது எஜமானாகிய சுல்த்தானவர்களிடம் சொல்லுங்கள் என்றார். இதுவுமன்றித் தன்னைப் பற்றி கிறிஸ்துவ வியாபாரிகளும் போர்ச்சேவகர்களும் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதை சுல்த்தானவர்கள் அறியும்பொருட்டு உத்தரவு அனுப்பி வரவழைத்துத் தன்னைப்பற்றி அவர்களிடம் விசாரிக்கும்படியாகக் கிருபை கூர்ந்து அருளவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டார். அதன்பேரில் இஸ்லாத்தை ஒப்புக்கொள்வதாகச் சொன்னார். இதைச் சுல்த்தான் அவர்களுக்குத் துவிபாஷகர் தெரிவித்தார்.

அப்போது சுல்த்தான் அவர்கள் அப்துல்லா இபுனுசலாமென்பவர்கள் இஸ்லாமார்க்கத்தை ஒப்புக்கொள்ளும்போது நபிகள் நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லெல்லாஹு அலஹிவசல்லம் அவர்களிடத்துக் கேட்டபிரகாரம் நீர் கேட்கின்றீர் என்று பதில் சொன்னார்கள். அதன்பின் கிறிஸ்துவ போர்ச்சேவகர்களுக்கும் சில வியாபாரிகளுக்கும் சுல்த்தான் அவர்கள் உத்தரவு அனுப்பித் தருவித்துத் தான் இருந்த இடத்துக்கு அருகிலுள்ள ஓர் அறைக்குள் (பாலியகுருவை) இருக்கும்படி செய்து அந்தக் கிறிஸ்துவர்களை நோக்கி இன்ன கப்பலில் சமீபத்தில்வந்த மஜார்க்காபட்டணத்து வாலிபகுரு

வானவரைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயமென்ன? என்று கேட்டார்கள். அதற்குப் பதிலாக அந்தக் கிறிஸ்துவர்கள்.

அவர் எங்களுடைய மார்க்கத்தில் மஹாகல்விமான். அவரைப் பார்க்கிலும் கல்வியிலும் தெய்வபக்தியிலும் மிகவும் மேன்மைபெற்றவர்கள் எங்கள் கல்விமான்களில் இல்லை. என்ன அதற்குச் சுல்த்தான் அவர்கள் அந்தப் பாலியகுரு இஸ்லாமார்க்கத்தைத் தழுவிவிட்டால் அவரைப்பற்றி என்ன சொல்லுவீர்கள் என்றார்கள். அதற்குக் கிறிஸ்துவர்கள் நமது எகோவாவாகிய பரபிதாவும் ரக்ஷகருமான கிறிஸ்துவும் காப்பாற்றுவாராக. அவர் ஒருபோதும் அப்படிச்செய்யமாட்டார்.இது சத்தியம் என்று ஆகாயமட்டும் தன் சத்தத்தை உயர்த்திக் கெம்பீரக்கூச்சலிட்டார்கள்.

இந்தக் கிறிஸ்துவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டமாத்திரத்தில் பாலியகுரு இருந்த அறையின்கதவு சுல்த்தான் அவர்கள் உத்தரவின்பேரில் திறக்கப்பட்டது. பாலிய குருவோ இஸ்லாமார்க்கத்தை (கபூல்) ஒப்புக்கொள்ளும் நேரம் சமீபித்துவிட்டதற்காக சர்வவல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள கடவுளைப் பலவாறு துதித்தவராய் அறையைவிட்டு வெளிப்பட்டார். அப்போது கிறிஸ்துவர்கள் முழங்கால்படியிட்டார்கள். அதைப்பாலியகுரு கவனித்தாரல்லர். பின்னை இஸ்லாமார்க்கத்தை ஒப்புக்கொள்ளுதலிலேயே அவர் ஆந்மாவும் புலன்களும் கட்டுண்டு கிடந்தனபோல்நின்றார். பின்னர், அதே நேரத்தில் அக்கிறிஸ்துவர்களின் முன்னே திருக்கலிமாவை (அல்லாஹுத்தாலாவைத்தவிர வணங்கத்தக்கவன் ஒருவனுமில்லை முகம்மதுறசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் அல்லாஹுத்தாலாவுடைய உண்மையான தீர்க்கதரிசியாயிருக்கும்) என்று சொல்லி இஸ்லாமானார். இவருக்கு அப்துல்லா இபினு அப்துல்லா வென்று பெயர்வைக்கப்பட்டது. கிறிஸ்துவர்கள் தங்கள் முகத்தில் சிலுவையின் அடையாளத்தைச்செய்து இந்த மஹானைப் பலவாறு நிந்தித்தார்கள். அன்றியும் அரண்மனைவிட்டு தீவிரமாய் ஓட்டம்பிடித்தார்கள். இவர் இஸ்லாமார்க்கத்தைப் பின்பற்றியபிறகு (1370-முதல் 1394-வரை அரசாட்சிசெய்த மாக்ஷிமைதங்கிய சுல்த்தான் அபுல் அப்பாஸ் அவர்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு 4-தீனார்கள் பெற்றுவந்தார். பின்பு சீக்கிரத்தில் ஆபச்சாவடிக்கு எஜமானானார்.

கிறிஸ்துவசகோதரர்களே! நீங்கள் மேற்கண்ட மஹானைப் பின்பற்றுங்கள். உங்களிற் பெயர் பெற்றகுருவான நிக்கல்ஸ்யார்த்தல்லோ அவர்கள் சொன்னபிரகாரம் நீங்கள் மோக்ஷமடைவீர்கள் என்பது திண்ணம். இஸ்லாமார்க்கத்தைப்பின்பற்றுங்கள் பின்பற்றுங்கள் என்பதே நான் உங்களுக்குச் சொல்லும் உறுதிமொழி.

நாயன் துணை

குறிப்பு.

இவர்கள் சரித்திரம் ஆங்கிலேய பிரபுவாகிய அர்நால்டுதுரை அவர்களால் எழுதி லண்டனில் பிரசுரித்திருக்கிற (Spreaching of Islam) என்ற புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. இவர்கள் கிறிஸ்த்துமதகுருவாய் இருந்தபோது அவர்களுடைய பெயர் இங்கிலீஷில் இல்லாமல் லாட்டின்பாஷையில் இருப்பதால் அந்தப்படிப்புடையவர் நமக்குப் புலப்படாமையால் அந்தப்பெயரை இதில் காட்டக்கூடவில்லை. அவசியமானால் அடுத்தபத்திரிகையில் இன்ஸா அல்லா வெளியிடுகிறேன். இன்னம் அவருடைய கோரி தூனிஸ்மாநகரத்தில் இருக்கிறது. அது அங்கே மரியாதையாய்ப் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

* * *

இஸ்லாத்தின் பெருமை.

இஸ்லாமார்க்கம் ஒன்றே உலகத்தார் உய்யும்பொருட்டு கடவுளால் அருளப்பட்ட வேதத்தையுடையது. சகல நபிமார்களாலும் போதிக்கப்பட்டு வந்ததும் இஸ்லாமார்க்கமே. மனிதர்களை ஒற்றுமைப்படுத்தி இகபரசுகங்களைக்கொடுப்பதும் இஸ்லாமார்க்கமே. யாதொரு உதவியும் பிரயாசையுமின்றி தன் நீதியால் பரவிக்கொண்டு வரும் மார்க்கமும் இஸ்லாமார்க்கமே. மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டதுமுதல் எந்நாளும் பேதப்படாமலிருப்பதும் தன்னை அடைந்தவர்கள் தன்னைவிட்டுப்பிரியாமல், காந்தம் இரும்பை இழுத்துக்கொள்ளுமாறுபோல், மனிதர்களைத் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும் வல்லமையுடையதும் இஸ்லாமார்க்கமே. தனக்குமுன் சகலமார்க்கமும் விர்த்தியடையாதிருக்கவும், தான் அவைகளுக்குமுன் விர்த்தியாகிக்கொண்டு வருவதும் இஸ்லாமார்க்கமே என்பதற்கு இதன்கீழ்க் காட்டும் விஷயங்களே போந்தசாக்ஷியாம்.

இஸ்லாமார்க்கத்தில் சாதிபேதமாவது உயர்வு தாழ்வாவதுகிடையாது. இதன்றி, பகை விரோதம் தற்பெருமை சுயநயம் பாராட்டல் முதலிய தீயகுணங்கள் முற்றிலும் நீக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமார்க்கத்தில் இவை முற்றும் நீக்கப்பட்டிருப்பதால், அது மனிதர்களை ஒற்றுமைப்படுத்தும் மார்க்கமாயிருக்கிறது. உலகத்தில் கணக்கற்ற பொய் மதங்கள் காலத்துக்குக்காலம் எழும்பி சீக்கிரம் அழிந்துபோய்விட்டது. இன்னும் இருக்கின்ற அநேக மார்க்கங்களும் அந்தந்த மார்க்கத்தாருடைய முழுமுயற்சியின் பேரிற்றான் நிலைத்திருக்கின்றன. ஆனால், இஸ்லாமார்க்கத்தைப்போல் யாதொருதவியும் முயற்சியுமில்லாது தானே விருத்தியாக்கிக்கொண்டுவரும் மார்க்கம் உலகத்தில் வேறொன்றுமில்லை என்பதை எவரும் ஒத்துக்கொள்ளவேண்டும். இதனாலேயே இஸ்லாமார்க்கம் உண்மையானதென்று விளங்கும். இஸ்லாமார்க்கம் நபியவர்களால் வெளிப்பட்டகாலத்தில் அதற்குக் கொடிய இடையூறிழைத்த அபூஜகில் என்பவனும் ஒருதடவை "இஸ்லாமார்க்கம் கடவுளால் கொடுக்கப்பட்ட உண்மையான மார்க்கமென்று நான் அறிந்திருக்கிறேன்; அந்தமார்க்கத்தில் சேர்ந்துகொண்டால் என்னை ராஜாவாக்கியிருக்கிற சனங்கள் என்னை நீக்கிவிடுவார்கள்; இது எனக்குப் பிரியமில்லாததால் அதைப்பகைக்கிறேன்" என்றான். இன்னமும் இஸ்லாமார்க்கத்தை முழுதும் அழித்துவிடவேண்டுமென்று காலத்துக்குக்காலம் அநேகர் எழும்பி, கொடிய துன்பங்களைச் செய்தார்கள். அதனால் இஸ்லாமார்க்கம் சிறிதுங் குன்றிப்போகாமல் 'சுடச்சுடரும் பொன்போலவும், சங்கு சுட்டாலும் வெண்மைதருவதுபோலவும், அதிக விருத்தியாகிக்கொண்டே வந்தது. கி. பி. 1502-ம் வருடம் போர்த்துக்கல் தேசத்து ராஜாவாகிய பிரடினண்டு என்பவன் தன் தேசத்தில் நெடுநாளாய்க் குடியிருந்துவந்த முப்பதுலட்சம் இஸ்லாமானவர்களை நோக்கி அவர்கள் கிறிஸ்துமார்க்கத்தில் உடனே சேர்ந்துகொள்ளவேணுமென்றும், அப்படிச் சேராவிட்டால் சகல சொத்தையும் இழந்து ஊரைவிட்டுப் போய்விடவேண்டுமென்றும், கிறிஸ்துமார்க்கத்தில் சேராமலிருந்தாலும், அல்லது சொத்துக்களை எடுத்துக்கொண்டுபோகிறதாயிருந்தாலும், சங்காரம் செய்யப்படுவார்களென்றும் கட்டளையிட்டான். அதற்கு இஸ்லாமானவர்கள் கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்துகொள்ளப் பிரியமில்லையென்றும் ஊரைவிட்டுப் போய்விடுவதாயும் சொன்னார்கள். அதன்பேரில் மேற்கண்ட முப்பதுலட்சம் ஜனங்களுடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்துகொண்டு ஊரைவிட்டு அவர்களைத்துரத்தினான். பசியினால் ஆயிரக்கணக்காய் அவர்களில் பலர் மடிந்துபோனார்கள். அவர்கள் கைக்கொண்டிருந்த இஸ்லாமார்க்கத்திற்காகத் தங்கள் பொருள்களைப் பறிகொடுத்ததோடு உயிரையும் இழந்தார்கள். இப்படி உயிரையும் பொருளையும் இழக்கப்பிரியப்பட்டார்களேயொழிய ஒருவராவது மார்க்கத்தை இழக்கப் பிரியப்படவில்லை. இதனால் இஸ்லாமார்க்கத்தின் மேன்மையை அறிந்துகொள்ளலாம். ஆபிரிகாகண்டத்திலுள்ள பற்பலவூர்களில் கிறிஸ்துவர்கள் தங்கள் மார்க்கத்தைப் பரவச்செய்ய எடுத்த முயற்சியும் பணச்செலவும் கொஞ்சமல்ல. அப்படியிருந்தும் யாதொரு முயற்சியும் போதனையும் பணச்செலவுமில்லாமலே அங்கே பரவிக்கொண்டுவரும் இஸ்லாமார்க்க விருத்தியை நோக்கத் தங்கள் பயன் அதிகக் கொஞ்சமென்று கிறிஸ்தவர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள்

கொஞ்சகாலத்துக்குமுன் பிரான்சுதேசத்தில் கூடிய கிறிஸ்தவக்கூட்டத்தில் ஒரு பாதிரியார் நம் மார்க்கத்தை உலகத்திற் பரவச்செய்யக் கணக்கற்ற பணங்களையும் கொடிய துன்பங்களையும் அநேக உயிர்களையும் பலிகொடுத்து அதனால் நம்மார்க்கம் விருத்தியடைந்து வருவதிலும், யாதொருபிரயாசையும் போதனையும் பொருள் விரயமுமில்லாது மகமதியமார்க்கம் அதிகமாய்ப் பரவிவருவதைப் பார்க்க விசனகரமாக யிருக்கிறதென்றார்.

இன்னமும் சீனதேசத்திற் கிறிஸ்தவர்கள் காலத்துக்குக்காலம் தங்கள் மார்க்கத்தைப் பரவச்செய்யப்பிரயாசை எடுப்பதும் அதைக் கண்டு அங்குள்ளோர் இவர்களைச்சங்காரஞ்செய்யமுயல்வதும், இஸ்லாமார்க்கம் யாதொருதடையுமின்றி அங்கே பரவிக்கொண்டு வருவதும் இப்போது அது ஏழுகோடி முஸ்லீம்களை உடைய பெரிய ராஜ்யமாகவிருப்பதும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. இன்னும் உகண்டாராஜ்யத்தில் விருத்தியாகிக்கொண்டுவரும்இஸ்லாமார்க்கத்துக்கு முயற்சி எடுத்தவர்கள் யார்? ஒருவருமில்லை. மேலும், ராஜலாநகரத்தில் ஆயிரத்தெண்ணூறு யூதர்கள்சமீபகாலத்தில் இஸ்லாமானார்கள். இவர்கள் மிக்க செல்வவான்களாயும் ஒருவருடைய தயவையும் விரும்பாதவர்களாயும் இருக்கிறார்கள். தவிர யாதொரு தூண்டுகோலு மில்லாமலே, இஸ்லாம் மார்க்கத்தில் ஐரோப்பியர் பிரவேசித்து அப்துல்ரஹிமானெனப் பேர்வைத்துக் கொண்டனர். இவர்தான் சொந்தவேலையாய் மெக்காவுக்கு வந்து மெதுனாவுக்குப் போயினர். 1903-ம்வருடம் ஆகஸ்டுமாதத்தில் சூலிஷ் என்னும் கிராமத்தில் 45, குடும்பத்தவர் இஸ்லாம்மார்க்கத்தவராயினர். ருஷிய அரசினரின் அனுமதிபெற்றே இவர்கள் மார்க்கப்பிரவேசஞ்செய்தனர். பாதிரிமார் அவர்களைப்பலவாறு தடுத்தும் பயன்பெறவில்லை. இக்குடும்பத்தவரைவிட பரிஹான் ஷாஹீர்ஸாவித்தின் கானிஷ் என்னும்கிராமங்களிலுள்ள யூதர்களுள் 75-குடும்பத்தவர்களும் இஸ்லாமார்க்கத்திற் சேர்ந்தனர். அவர்கள் அல்லா ஒருவனே ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவன் என்றார்கள். அன்றியும் புந்தேமஹாப் என்னும் பௌத்த குருவும் அப்துல்மஜீது அபந்திஹிந்து அவர்களும் 16-நாட்களாக மார்க்கவிஷயங்களைக் குறித்து வாதம் புரிந்தனர்.

இருபகுதியாரும் தத்தம் மார்க்கத்தையே மேலானதென்று பலதிருஷ்டாந்தங்களைக்கொண்டு வாதஞ்செய்தும் கடைசியில் அபந்தி அவர்களை எல்லா மார்க்கங்களிலும் இஸ்லா மார்க்கமே மேலானதென்று ஸ்தாபித்தனர். அப்பௌத்தகுரு சந்தோஷமாக உண்மையான எண்ணத்தோடு உடனே இஸ்லா மார்க்கத்தைத் தழுவினர் என்று 1906௵ ஏப்பிரல்௴ 21௳ வெளியான மகாவிகடதூதன் பத்திரிகை 2வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பத்திரிகையை நடத்துகிறவர் இஸ்லாமார்க்கத்தவரில்லை; அன்னியமதப்பத்திரிகையிலே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வுண்மையுள்ள கடவுளருளிய மார்க்கத்தைக் கொண்டொழுகும் நம்மவர்காள்! நீங்கள் நம்மார்க்க உண்மையை பிறமதத்தாருக்குப் போதித்து இஸ்லாத்தில்வரும் சனங்களைக் கூடியவரை ஆதரிக்கப்பிரயாசைப் படுவீர்களாகில் மனிதர்கள் கூட்டங்கூட்டமாகச் சேர்வார்கள். இதை, முன்னறிந்துதான் “அல்லாகுத்தாலாவின் உதவியும் வெற்றியுமுண்டாகும்போது, அவனது மார்க்கத்தில் ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் வருவதை நீர் காண்பீர்” என்று பரிசுத்த வேதத்தில் (சூரா. ௧௧௦) கட்டளையும் பிறந்திருக்கிறது. இதுவே மார்க்கத்தில் முதலிற் செய்யவேண்டிய காரியம். இதைத்தான் போதிப்பதற்காக நபிமார்கள் உற்பத்தியானார்கள். நாமும் அவர்களைப்பின்பற்றி, நம்மாலாகும் சிறு காரியத்தையும் மார்க்கவிஷயத்திற் செய்யக்கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இவ்வித நற்காரியத்திற்கு இதுவரை ஒருவித நிலையான ஏற்பாடும் செய்யாது அசட்டையாக விட்டிருப்பது முஸ்லீம்களுக்குள் இருக்கும் பெரும் குறையே. எல்லாஊரிலும் பள்ளிவாசல்களையும் மதறசாக்களையும் விருத்தியாக்கிக்கொண்டு வருவதுபோல் மார்க்கத்தையும் விருத்தியாக்கிக்கொண்டு வரவேண்டாமா? ஆகையால் ஒவ்வொரு முஸ்லீம்களும் இஸ்லாத்தின் முக்கியகருமத்தை விர்த்தியாகும்படி உதவிசெய்ய முற்படுவீர்களாக.

இஸ்லாம் சகோதரத்துவம்

"சகோதரத்துவம்" என்னும் பதத்திற்கு இஸ்லாத்திற்றான், மற்றெல்லாமதக் கொள்கைக்கும் மேலான உண்மையும் பிராணபதமுமான பொருள் உண்டு. இம்மதத்திற் சார்ந்த தம் சகோதரர்பால் வாஞ்சையோடு தடுக்க வொண்ணா ஆற்றலுடன் சேர இழுக்கப்படுவதாக உணர்ச்சியுறு முஸ்லீம்கள் இருப்பார்களாயின், அவர்கள் அவ்வாறு இருத்தற்கு, அத்தகைய உணர்ச்சியைத் தாங்கள் அபிவிர்த்தி செய்யவேண்டியதின் ஆவசியத்தை யறிந்திராமையோ அல்லது, நமது பரிசுத்த நபியவர்களின் ஸாரம் மிக்க உபதேசமொழிகளை யறியாமையோ காரணமாகும். இஸ்லாம் நீங்கலாக மற்றெம்மதத்தையும் பின்பற்றுவோர் அறிந்துள்ள சகோர்தரத்துவத்திலும் அநேகமாய்ப் பூரணத்துவமுற்ற பிராதுர்த்துவமானது, உண்மைச்சமயத்தின் நிமித்தந் தமது உடல் பொருளாதியவற்றைத் தாராளமாகப் பரித்தியாகம் செய்தோர்பால் பரவியிருந்த விஷயம், முஸ்லீங்களின் பூர்வீக சரித்திரத்தின் மூலமாய் முடிவுற அறியலாகும்.

ஒரே க்ஷேமலாபங்களைக் கருதியோரும், 'உருக்கு' எனத்தகும் அன்புத்தளையால் ஒருங்கே பிணிக்கப்பட்டவர்களும் பரிபூரண சகோதரத்துவத்தைப் பண்படுத்தப் பக்தி சிரத்தையோடு கடமைப்பட்டவர்களுமாய்க் கடவுளையும் அவனது நபியையும் மெய்யாகப் பின்பற்றினவர்கள் பரஸ்பரம் சகோதரர்களே; என்று இன்னோர் சுபானுபவத்தில் அறிந்துணர்ந்தார்கள். அவர்கள் உண்மையான குடியாட்சிமுறை யேற்படுத்தினார்கள். இவ்வாட்சியில் எவ்வித ஜாதி குலவித்தியாசத்தையும் ஒழித்துச் சகலரும் சமநிலையில் நின்றனர். "கடவுளிடத்தில் உங்களுக்கு நம்பிக்கையில்லாமற்போனதென்ன? நீங்கள் உயிரற்றவர்களாயிருந்தீர்கள். அவனே உங்களை உருவாக்கி யுயிர்ப்பித்தான். ஆதலால், அவனே இனி உங்களை மரிக்கச்செய்து மறுபடியும் உயிர்ப்பிப்பான். அப்பொழுது அவனண்டை நீங்கள் திரும்புவீர்கள்." என்ற பரிசுத்த திருக்குரானில், 2-வது சூராவில் உள்ள இத்திருவாக்கியம் அவர்களுக்கு ஆழ்ந்த பொருளைத்தந்தது.

உண்மை மார்க்கத்தைப் பின்பற்றிச் செல்லும் மனிதரின் நிலைமையில் எவ்வித தாரதம்மியமு மிருப்பதாகப் பரிசுத்த வேதத்தில் வெளிப்படையாகவாவது, மறைவாகவாவது எந்த இடத்திலும் எவ்விதவார்த்தையுங்கிடையாது. பரிசுத்த நபியவர்களும் ஜாதி குலவித்தியாசத்தை ஏற்படுததுவது நியாயந்தான் என்று நிரூபிக்கத்தக்க விதமாய் ஒரு வார்த்தை கூட மொழிந்தார்களில்லை. ஆதலால், இஸ்லாமில் மற்ற மதங்களிலுள்ளது போல ஆசாரியப் பிரபுத்துவம் ஒருபொழுதுமிருந்ததில்லை. ஆரம்பம் முதற்கொண்டே பூரணசமத்துவக் கொள்கையானது உபதேசிக்கப்பட்டும், அன்று முதல் அதிகக்கண்டிப்புடனோ அல்லது, கண்டிப்புக்குறைவுடனோ அனுஷ்டானத்திற் கொண்டுவரப்பட்டுவருகிறது.

இதன் இயற்கை முடிவு யாதெனில், சகோதரத்துவம் என்னும் மொழியின் உண்மையான தாற்பரியந்தான். ஐதீகங்கள், இச்சகோதரத்துவத்தைப்பற்றி யெவ்வளவு தூரம் எண்ணலாமோ அவ்வளவும் எண்ணக்கூடிய அழகிய வசனங்கள் ததும்பப் பெற்றுள்ளன. மெதினாவில் பரிசுத்த நபியவர்களின் ஜீவிய திருச்சரித்திரமும், தனது ஒட்டகத்தைத் தன் அடிமையுடன் பகிர்ந்து அனுபவித்தகாலியின் மெய்க்கதையும் இதற்குப் பிரபலமான சிறந்த சான்றாகும்.

"ஒன்றோடொன்றை யொப்பிட்டுக் கூறல் பழிப்பிற் கிடமாகும்" என்பது பழமொழி. ஆயினும், யாவராயினும் இஸ்லாமின் கொள்கைகளை மற்ற மதங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அப்பொழுது அதில், சகோதரத்துவத்தினிருக்கைக்குக் காரணங்கள் தெள்ளிதிற் புலப்படும். மற்ற மதங்களிலெல்லாம் ஜாதி குலங்களின் தாரதம்மியத்திற்கு அநேக காரணங்கள் உண்டு. ஆனால், இஸ்லாமிலோ ஜாதிகளின் உயர்வு தாழ்விற்கு எவ்வகைச் சாக்குப் போக்குங் கிடையாது. இஸ்லாமின் இயற்கை விசேஷத்திலிஃதொன்று. இச்சகோதரத்துவம் கிறிஸ்துவ ஆலயத்தின் மேடைப் பிரசங்கத்தில் போதிக்கப் படுவதேயன்றி, கிறிஸ்துவ ஜனசமூக வாழ்க்கையிற் காண்ப

ற்கு அரிதாக வுள்ளது. எந்த உபதேசம் அனுஷ்டிக்கப்படவில்லையோ அது ஒருபோதும் பயன்றராதது.

"கடவுளிடத்திலேயே நமது உற்பத்தி; லயமும் அவனிடத்திலேயே." என்ற உண்மை முஸ்லிம்களின் மனதினூன்றிப் பதிந்துள்ளது. இவ்வுண்மை அவர்களுடைய ஆவியுள்ளும் ஆழப்பதிந்து அவர்களுடைய நித்திய கர்மானுஷ்டானங்களில் அவர்களறியாமலே வெளிப்பட்டு நிற்கின்றது. ஈதுண்மையாயின், முஸ்லிம்களின் நோக்கமும் அவாவும் ஒன்றாகவே இருப்பதால் அது அவர்கள் யாவரையும் சமநிலையில் வைத்துள்ளது.

இரட்சிப்படைவதற்கு எது ஒப்பற்றதாயும் நேராயுமுள்ளதோ, அம்மார்க்கத்தின்வழியே செல்லவேண்டுமென்ற தீர்மானத்தில் ஒன்றுபட்டிருப்பதினாலே இம் முஸ்லிம்கள் பிறமதத்தாரினின்றும் வேறுபட்டிருக்கின்றனர். கருத்தின் ஐக்கியமே ஆன்ம ஐக்கியத்தையும் ஒரு பொது சகோதரத்துவத்தையும் கூட்டுவிக்கிறது. இந்நெறி தவறியோர் யாராயினும் வந்தால் அவர்கள் சமாதானத்துடன் வரவேற்கப்பெற்றுச் சகோதரத்துவமாகிய பரவெளியில் ஆழ்ந்து நீதிமான்களுக்குரிய வெகுமதியைப் பெறுவதற்குத் தாங்கள் படும்போராட்டத்தில் திடமுறுத்தப்படுகின்றனர். ஒற்றுமையாலேயே பலமுண்டு. ஒரு பொது அவா அடைவதிலுள்ள ஆன்மஐக்கிய பலமே சிந்தனைக்கு மெட்டாத சிறந்த வலிமையைத்தரும்.

இஸ்லாமைப் பற்றி ஒரு நாஸ்திகரின் அபிப்பிராயம்.

"லிட்டரரி அண்ட் ராஷனலிஸ்ட் ரிவியூ" (Literary and Rationalist Review) என்ற பத்திரிகைக்கு எர்னஸ்ட் ஹேக் பண்டிதர் என்ற ஓர் மேனாட்டுப் பிரபல நாஸ்திகர் எழுதிய பின்வரும் விஷயத்தை "அப்ஸர்வர்" (Observer) என்ற பத்திரிகை எடுத்தெழுதி இருக்கிறது:—

நீங்கள் பாடசாலைக்கு உங்கள் பையனை அனுப்பும்போது அவன் திங்கட்கிழமையன்று மதசம்பந்தமான பாடத்தைத் தொடங்குகிறான். அப்போது அவனுக்குத் "திரித்துவ" க் கொள்கையைப் போதிக்கிறார்கள். "மூவொன்று ஒன்று" என்று அவனுக்குக் கற்பிக்கப்படுகிறது. அவனுடைய அடுத்தபாடம் கணக்கு. அப்பொழுது அவன் "மூவொன்று மூன்று" என்று கற்றுணர்கின்றான். நல்லதிருக்கட்டும். இத் 'திரித்துவ' க் கொள்கைகூட இவர்களுடையதன்று. இது கால்டியாதேசத்து மந்திரவாதிகள் கைக்கொண்டுவந்த சூரிய ஆராதனையின் பூர்த்தியாகும். இதனை இந்தியாவிலும் நீங்கள் காண்பீர்கள். ஆயினும் நான் ஆட்சேபிப்பதெல்லாம் முழுமூச்சாய்த் தெய்வத்தைக் கேவலம் மானுஷியனாக்கும் கொள்கையையே. கிறிஸ்துவமார்க்கம் ஒரேகடவுளை வழிபடும்மதம் என்பதயுக்திக்கு ஒத்ததன்று. அதில் மூவர் மட்டுமன்று, தேவர்க்குரிய தொழிலை நடத்திவரும் மடோனாவும் ஆயிரம் பரிசுத்தவான்களும் அம்மதத்தில் இருக்கின்றனர். கிறிஸ்துவ மதத்தின் தற்கால நிலை யாதெனில், பலதேவதைகளை உபாசனை செய்வதே. ஒரே கடவுளை வழிபடும் கொள்கை, இவ்வுலக முழுவதினும் இஸ்லாம் ஒன்றில்தான் சிறந்து விளங்குகின்றது. எம்மதத்தையேனும் நான் தழுவ வேண்டிவரின் மகமதியரின் (இஸ்லாம்) மதத்தைத் தழுவுவதே எனக்குச் சம்மதமாக இருக்கும். இஸ்லாமிகளின் தேவவணக்கம் எவ்வளவு மேன்மையுடனும் உருக்கத்துடனும் கூடியுள்ளது! கிறிஸ்துவாலயங்களிலும் மசூதிகள் எவ்வளவு ஏகத்துவமும் மாட்சிமையும் வாய்ந்தவை. கிறிஸ்துவாலயங்களின் உட்புறம் பளபளப்பான படங்களாலும் மினுமினுக்கும் பொருளாலும் நிரம்பியிருக்கின்றன. அவற்றின் வெளிப்பக்கச் சுவர்களோ மனிதர், மிருகங்கள், கோர ரூபமுள்ள தூம்புகள் முதலியவற்றின் உருக்களால் நிறைந்துள்ளன. ஆ! ஆ!! வெளிப்பகட்டேதுமின்றிப் பக்திசிரத்தையுடன் செய்யப்பட்டுவரும் குரானின் வணக்கமுறையை என்னென்பேன்! இவ்வணக்கத்துடன் கிறிஸ்துவாலயங்களில் நம் செவியில் விழும் மாயவார்த்தைகளையும் சப்திக்கின்ற சங்கீதத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

இதே பத்திரிகையானது மற்றொரு [illegible]

ஷியர் காண்டர்ஸட் (M. Condercet) என்னும் பிரக்யாதிபெற்ற பிரான்சிய தத்துவசாஸ்திரியின் அபிப்பிராயத்தையும் பின்வருமாறு அறிவிக்கிறது:—

“மகமதுவின் மதமே கபடமும் கலப்புமற்ற கொள்கையுடையது. அதுவே யுக்திக்கொத்த அனுஷ்டானங்கள் கொண்டுள்ளது. புறமதத்துவேஷமில்லாக் கொள்கை யுடன்கூடியதும் அதுவே.”

தொழுகை விளக்கம்.

சகோதரர்களே! திருக்குரானில் எவ்விதமாகத் தொழுகையைப்பற்றி யுபதேசஞ் செய்திருக்கிறதென்பதை யீண்டெடுத்துக் கூறுவாம்.

அல்லாகுத்தாலா தொழுகையைக் குறித்துத் திருக்குரானில், “தொழுகையை நிலைநிற்கும்படி வையுங்களென்றும், தொழுகையில் நிலைத்திருப்பவர்களே அவர்களென்றும், திடனாகத் தொழுகையானது மூமினானவர்கள் பேரில் நேரங் குறிக்கப் பெற்ற விதியாயிருக்கிறதென்றும், தொழுகையில் உள்ளச்சத்துடனே யிருப்பவர்களே யவர்களென்றும்” இந்தப்படி நான்கு விதமாக அநேக இடங்களில் கட்டளையிட்டிருக்கிறான்.

இப்படி இருக்க, மனிதர்கள் தொழுகையுடைய கருமத்தில் பலவிதமாகப் பிரிந்தார்கள். அவ்விதமாகப் பிரிந்தவர்களிற் சிலர் தொழுகையை முழுதும் ஒப்புக்கொள்ளாமல் அழிந்துபோனார்கள். இவர்களுக்குத் தலைவன் அபுஜஹில் லஹனத்துல்லாவாயிருக்கிறான். அவனைப்பற்றித் திருக்குரானில் “உண்மை கொண்டானுமில்லைத் தொழுதானுமில்லை” என்று அல்லாஹுத்தாலா சொல்லியிருக்கிறான். அவன் இன்னும் சொல்லுகிறான், “ஷகர் என்னும் நரகத்தில் உங்களைக் கொண்டு போகும்படி செய்ததெதற்காக என்று கேட்டதற்கு, (நரகத்திலிருந்து) நாங்கள் தொழுகையுடையவர்களா யிருக்கவில்லையென்று சொல்லுவார்க” ளென்று சொல்லி யிருக்கிறான். இந்த வசனத்தினால் அபுஜஹில் தொழுகையை யொப்புக் கொள்ளாமற் போனபடியால் அவன் போகுந்தலம் ஷகர் என்னும் நரகம் என்று ஆண்டவன் அறிவித்தான். இன்னுஞ் சிலர் தொழுகையை யொப்புக்கொண்டு அதன்படி தொழாமல் கெட்டுப் போனார்கள். அவர்கள் யூதர்களையுங் கிறிஸ்துவர்களையும் போன்றவராவார்கள். அவர்களைப்பற்றி அல்லாஹுத்தாலா, “ஸாலிகீன்களுக்குப் பின் சிலர் வருவார்கள்; அவர்கள் தொழுகையைப் பழுதாக்குவார்கள், சரீர இச்சையைத் தொடர்வார்கள்; ஆகையால் அவர்கள் மறுமையில், ‘கைன்’ என்னும் நரகத்தை யடைவார்கள்” என்று அருளியிருக்கிறான். இந்தவசனம் அவர்கள் அடையும் கதியைத் தெளிவாக விளக்கியிருக்கிறது.

இன்னுஞ்சிலர் தொழுகையை யொப்புக்கொண்டு சோம்பேறித்தனமாக ஒருவேளை தொழுவார்கள், ஒருவேளை விட்டுவிடுவார்கள், இப்படிச் செய்கிறவர்கள் முனாபிகீன்களா யிருப்பார்கள். இவர்களைப் பற்றித் திடனாக முனாபிகீன்களாகிறவர்கள் அல்லாஹுத்தாலாவுக்கு வஞ்சனை செய்தவர்களாகிறார்கள். அல்லாஹுத்தாலா அவர்களுடைய வஞ்சனைக்குக் கூலி கொடுக்கிறவனாயிருக்கிறான். இன்னுமவர்கள் தொழுகையில் எழும்பி நின்றால் சோம்பேறிகளாக நிற்பார்களென்று சொல்லியிருக்கிறான். இந்த வசனத்தினால் அவர்கள் முனாபிகீன்களென்று தெளிவாய் விளங்குகிறது.

என் சகோதரர்களே! நீங்கள் முனாபிகீன்க ளில்லையென்று சொன்னாலும் எப்பொழுதாவது நீங்கள் ஒருநேரந் தொழுகையை விட்டால் நீங்கள் எந்தக் கூட்டத்தாரிற் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்களென்பதை யோசித்துப் பார்த்து, அவர்களி லொருவராயிராமல் தப்பித்துக்கொள்ள வழியைத் தேடுங்கள். ஏனென்றால், அல்லாஹுத்தாலா, முனாபிகீன்கள் நரகத்தின் கீழ்த்தட்டிலிருந்து வருந்துவார்களென்றுஞ் சொல்லுகிறான்.

ஆகவே, இந்த மூவகையாரும் போகச், சில பெரியோர்கள் தொழுகையை யொப்புக்கொண்டு அதை விடாமல் அதன் கடமை

யையும் ஒழுங்கையும் பேணி அந்தந்த நேரத்தில் தொழுதுவந்ததோடு மற்ற நேரங்களிலும் நபில் (விசேஷ)த் தொழுகையை நடத்தி வந்தார்கள். இவர்களுக்குத் தலைவர் எங்களுக்கு நாயகமாய் வந்த முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள். இவர்களைப்பற்றி அல்லாஹுத்தாலா, (இரவில் மூன்றில் ஒருபங்குவரை, அல்லது பாதிவரை, அல்லது மூன்றிலிரண்டு பங்குவரை நீரும் உம்முடனே யிருக்கிறவர்களினின்றும் ஒரு கூட்டம் வணங்குவதை யும்முடைய நாயன் அறிந்திருக்கிறான்) என்று அருளியிருக்கிறான். இந்த வசனத்தினாலும் இதுபோலொத்த வசனங்களாலும் நபிநாயகத்தின் மகிமையும், அவர்களைப்பின்பற்றியவர்கள் மகிமையும், அவர்கள் தோழர்கள் மகிமையும் தெளிவாய் விளங்கும். அவர்களைப் பற்றி அல்லாஹுத்தாலா "தொழுகையில் உள்ளச்சத்தோடிருந்த மூமீன்கள் (விசுவாசிகள்) ஈடேற்றம் பெற்றார்களென்றும், அவர்கள்தான் "பிர்தௌஸ்" என்னும் சுவர்க்கத்தைச் சுதந்திரமாகக் கொள்வார்களென்றும் சொல்லுகிறான்.

விதி இப்படியிருக்க, இக்காலத்தில் நம் சகோதரர்கள் தொழுகையை விட்டவருக்கு நேரிடுந் துன்பத்தையும், விடாதவர்க்குக் கிடைக்குமின்பத்தையும் அல்லாஹுத்தாலா திருக்குரானைக்கொண்டும் ஆண்டவர்களுடைய ஹதீதைக்கொண்டும் நமக்கு அறிவித்திருக்கப், பின்னும் தொழுகையில அசிரத்தையாயிருந்து 'வயில்' என்னுமோடையையும், 'கைன்' என்னும் நரகத்தையும் அடைகிறதைக் குறித்து அச்சப்படுகிறார்களில்லை. 'கைன்' என்னும் நரகம் மிக்க கடினமான வேதனையையுடைய தலமாயிருக்கும். 'முனீர்' என்னும் கிதாபில் (சாஸ்திரம்) வருகிறதாவது:— "அபுஹுறைறா ரலியல்லாகு அன்ஹு சொன்னார்கள், நானும் உமறும் இஷா(இரவு எட்டு மணி)வுக்குப் பிறகு புறப்பட்டு ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் வீட்டுக்கு வந்து சிறிதுநேர மிருந்தோம். அப்பொழுது என்னுடைய கூட்டத்தார் பேரில் உண்டானசேதமே எனக்குப்பின் தொழுகையைக்கொண்டு நடத்துவார்களே, அதைநான் பார்க்கிறமட்டும் நான் ஜீவித்திருக்கவேண்டுமென்று சத்தத்துடனே அழுகையைக் கேட்டோம். அப்போது உமறு நீர் நில்லும், நாம் வாசலைத்தட்டி

யுத்தரவுபெற்று ஆண்டவர்களிடம் போய் நடந்த கருமத்தைக்கேட்போமென்று சொல்லிக் கதவைத்தட்டினார்கள். உடனே நபிநாயகத்தின் மனைவி ஆயிஷா பீவியவர்கள் வந்து யார் என்று கேட்டார்கள். அதற்கு உமறு நானும், அபுஹுறைறாவுமென்று சொன்னார்கள். நாங்களிரண்டுபேரும் வீட்டிற் புகுந்தோம். ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் கன்னத்தில் கண்ணீர் வடிந்தவர்களாகவும், விசாரமுடையவர்களாகவும், சுஜூது (வணக்கம்) செய்துகொண்டு "ஆண்டவனே யென்னுடைய கூட்டத்தார் பேரில் காரியகர்த்தனாயிருக்கும் நீ, உனக்குப் பாத்தியமானதை அவர்களுக்குச்செய், அவர்களுக்குப் பாத்தியமானதை நீ செய்யாதே" என்று சொன்னார்கள். அப்பொழுது நாங்கள் அல்லாவுடைய ரசூலே எங்களுடைய தாய்மாரும் தகப்பன்மாரும் தங்களுக்குக் காணிக்கையாயிருக்கும். ஏதேனும் தங்களுக்குத் துக்கம் நேரிட்டதோ? அல்லது துக்கமானசெய்தி யெங்கிருந்தும் வந்ததோ? என்று கேட்டோம். அதன் பிறகு ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் சொன்னார்கள், "உமறே நாம் ஹரமில்(மக்கத்துப்பள்ளி) தொழுகையை முடித்தோம்; அதன்பிறகு புறப்பட்டு நான் ஆயிஷா அவர்களுடைய வீட்டில் வந்து புகுந்தேன். ஜிப்ரீல்(தேவராஜன்)இறங்கி முகம்மதே! அல்லாஹுத்தாலா உங்களுக்குச் சலாம் சொன்னான். நான் ஓதினதை யுங்களையு மோதும்படிசொன்னான். ஆகையால் நீங்களும் அந்த திவ்யவசனத்தை யோதுங்களென்று ஓதிக்காட்டினார். அதன்பொருளாவது, (சாலிஹீன்களுக்குப் பிறகு சில கூட்டத்தார் வருவார்கள். அவர்கள் தொழுகையைப் பழுதாக்குவார்கள். சரீர இச்சையைத் தொடர்வார்கள். மறுமையில், 'கைன்' என்னும் நரகத்தைச் சந்திப்பார்கள்; அவர்களுக்குப் பொருளாசையே மேலாயிருக்கும்; அவர்களுடைய பள்ளிவாசல்கள் அலங்காரமாயிருக்கும்; அது தியானத்தை விட்டு ஒழிந்திருக்கும்; அவர்கள் உலக இச்சையில் மூழ்கிக் கிடப்பார்கள்; அவர்கள் வெளிவேஷம் சிறப்பாயிருக்கும். இருதயமானது கறுப்பாயிருக்கும்) என்பதே. இன்னும் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள், யாராயினும் ஒருவன் ஒருநாளைக்குத் தொழுகையை விட்டு விட்டால், அவனுக்கு இல்லா

மின் பெயரில்லை. அவன் யூதத்தன்மையாகவும் கிறிஸ்துவத் தன்மையாகவுமிறப்பானென்று திருவுள்ளமாயிருக்கிறார்கள்.

ஆகையால், சகோதரர்காள்? நமக்கு அல்லாஹுத்தாலா திருக்குரானைக் கொடுத்திருப்பது, நம்முடைய மனத்திலுள்ள தீங்குகள் நீங்கி எப்பொழுதும் அவனைத்தொழுது நல்வழியடைவதற்கேயாம். "திருக்குரானைக் கேவலம் மலைக்கு உபதேசிக்கப் படுமானாலும் அது பயந்து நொறுங்கி விடுமென்று" அல்லாஹுத்தாலா சொல்லுகிறான். இதனால் ஆண்டவன் அருளிய திருக்குரானை நமது மனம் பற்றுமானால் மனத்திலுள்ள கடுந்தன்மை நீங்கி நல்வழிப் படுவதற்கு என்ன தடையிருக்கிறது தொழுகையானது ஒவ்வொரு முஸ்லீம்களுக்கும் எக்காலத்தினும் விடாமல் அனுஷ்டித்து வரவேண்டுமென்ற விதியை இன்னும் திருக்குரானில் பலவிடங்களிலுங் காணலாம். இவ்விதியை நமது பெரியோர்கள் சிரமேற்கொண்டு தொழுகையை மிகச்சிரத்தையோடு தாங்கள் அனுசரித்தும் பிறர்க்கு உபதேசித்தும் ஆண்டவனுக்குப் பிரியமுள்ளவர்களானார்கள். இந்த உண்மைகளையறியாத சில போலிஞானிகள் தொழுகையின் சிறப்பை அறியாது தொழுகையாற் பயனில்லையென்று தாமுந் தொழுகையை விட்டுக் கெட்டுப் பிறரையும் கெடுக்க வழி தேடுகிறார்கள்.

சகோதரர்களே! நமது ஆண்டவனை அல்லாஹுத்தாலாவின் அருமைத் திருவாக்கையும் முன்னோர்களின் அனுஷ்டானத்தையும் நாம் பின்பற்றி நமது மதத்திற்குரிய முக்கிய கருமமான தொழுகையைக், குறித்தகாலங்களில் தவறாது இயன்றவரை நடத்தி நல்வழிக்கு ஆளாக முயல்வோமாக.

சமாசாரக்கொத்து

முஸ்லீம்மதத்தைத் தழுவினர்.

ஐக்கிய மாகாணங்களைச் சேர்ந்த மொரடாபாட் ஜில்லாவிலுள்ள சாம்பல்பூர் ஜமீந்தார் லாலா ராஜாபஹதூர், ஹிந்துமதத்தைவிட்டுநீங்கி முஸ்லீம் மதத்தைத்தழுவி விட்டாரென அலிகார் "இன்ஸ்டிடியூட் கெஜட்" என்ற பத்திரிகை கூறுகிறது. அவர் அலகாபாத் கவர்ன்மெண்ட் அச்சக்கூடத்தில் அக்கவுண்ட்ஸ் எக்ஸாமினராயிருந்தவர்.

* * * * *

சூதாட்டத்தாலுள்ள ஒருபயங்கரமானகொலை.

மாஸ்கோ நகரில் எம்இவனுப் என்றொரு தனவான் சூதாட்டத்தில் தன்பணத்தை யெல்லாமிழந்தபின், தன்மனைவியை ஒட்டம் வைத்து 2000-பவுன் வாங்கி யதையும்தோற்று அப்பால் தன்மண்டையைத்தானே நொறுக்கிக்கொண்டு இறந்தான்.

* * * * *

திருநெல்வேலிப் பேட்டையில்:— ஒரு முஸ்லீம் லைபிரேரி.

இந்தப் புத்தகசாலையானது சில மாதங்களாக கனம்-சா. ம. பீ. காதர்மைதீன் ராவுத்தரவர்களாலும், S. S. திவான் பீர்மைதீன்ராவுத்தரவர்களாலும், செ. ப. ம. முகம்மது ராவுத்தரவர்களாலும், ஷேக் அப்துல்காதர்லைபிரேரி என்ற ஒரு பெரியோரின் ஞாபகக்குறிப்பாக நடத்தப்பட்டுவருகிறது. இதில் நம்மவர்களுக்கு வேண்டிய புத்தகங்களும் பத்திரிகைகளும் இருக்கிறது. நம்முடைய கல்வி அபிவிர்த்திக்கு இது ஒரு முக்கிய சாதனமாயிருக்கிறது.

* * * * *

சென்னையில் "அல்லஜ்னத்துத்தீனியா" என்ற தீனுல் இஸ்லாம் சகாய நிதிச்சங்கம்.

இச்சங்கம் சென்ற ரபியுலவ்வல்மீ 12உயில் பிரம்பூர் மதரஸாஜமாலியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மதராஸ் கனம்-ஜமால் மய்யதீன் சாஹிபு அவர்கள் ரூபா-10000மும், திறவை ஹாஜி சாஹிபுநானு என்ற முகம்மது ஷாதலி அவர்கள் ரூபா-5000மும் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்கள். தவிரவும் சங்கத்துக்கு வருஷசந்தாவாகரூபா-3000த்துக்குமேல் வருகிறது. இச்சங்கத்தை மூன்

லீம்கள் அனைவரும் ஆதரிக்கவேண்டியது பெருத்தகடமையாகும். இதைப்பற்றியவிஷயங்கள் அடுத்த நம், "இஸ்லாம்நேசன்" என்னும் பத்திரிகையில் மிகவும் விவரித்துச் சொல்வோம்.

* * * * *

இச்சங்கத்துக்கு நன்கொடை அனுப்பும் கனவான்கள் அடியிற் கண்ட விலாசத்துக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

கனம் - அஹ்மதுஹசன்.
அல்லஜ்னத்துத்தீனியா செக்ரட்டேரி.
5-நிர் பங்களா, ஹைரோட்டு,
பிரம்பூர், சென்னை.

* * * * *

மதுரையில் சீராப்புராண வுபந்நியாசம்.

மதுரைஇஸ்லா மதாபிவிர்த்திச் சங்கத்தாரால் நாளது ஆடிமீ தொடங்கி சீராப்புராணத்தின் ஒரு பகுதியாகிய மதியழைப்பித்த படலத்தை ஸ்ரீமத். பு. பாவாமுகையதீன் புலவரவர்களைக்கொண்டு உபந்நியாசிக்கும்படி செய்தார்கள். அது இந்நகர முஸ்லீம்வாசிகள் கேட்டு மிக மகிழ்ச்சியுற்றார்கள். இப்புலவரவர்கள் பிரசங்கசக்தியும் சொல்வன்மையும் மிக வியக்கத்தக்கதே.

* * * * *

லண்டனில் ஒரு முஸ்லீம் பத்திரிகை.

இப்பொழுது லண்டனில் "பாலமுஸ்லீம்" (Young Muslim) என்று ஒரு மாதாந்திரப் பத்திரிகையை யாரம்பித்திருக்கிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஐக்கியமாய் வாழவேண்டு மென்பது தான் இப்பத்திரிகையின் கருத்து.

* * * * *

ஒருநன்கொடை.

இரங்கூனில் பெருத்த வியாபாரமுடையவராயும் ஜனசமூகத்தில் நன்கு மதிக்கப்பெற்றவராயும் இக்காலவள்ளலாயுமுள்ள ஜனுப்-அப்துல்கரீம் ஜமால் என்பவர், அலிகர்-மஹமடன் ஆங்கில ஓரியண்டல்காலேஜ் (மதுரஸத்துல்உலூம்)க்கு ரூபா 50000 நன்கொடையளித்திருக்கிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
17 FEB 1910

பிஸ்மில்லாஹி.

இஸ்லாம் நேசன்.

புஸ்தகம் 1.] 1909-ம் ௵ டிஸம்பர் ௴ [ஸஞ்சிகை 2.

ஹலரத் ஸதக்கத்துல்லா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சரித்திரச் சுருக்கம்.

இவ்வுலகந்தோன்றிய நாண்முதல் ஆதம் எனப்பெயர்கொண்ட முதல்வர்களான அவதார புருஷர்கள் இதுவரை * லக்ஷத்துக்கு அதிகமாகத் தோன்றியிருந்தார்கள்.

இவர்களின் பின்னர், உலகரக்ஷகராய்த்தோன்றிய நபிகள் நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் தலைமைத் தோழரும், மாதுலருமான அமீருல் மூமினீன்ஹலரத் அபூபக்கர் சித்தீகுரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சந்ததியில் பிரசன்னமாகி இந்தியாவிற் சென்று வசித்தவர்களில் மிகச்சிறந்தவர் முஸ்லீமாகிய நேத்தாளர். அவர்களின் புத்திரர் செய்யதுஹஸ

---

* இதை நமதுநண்பர் த. ஆறுமுகநயினார் பிள்ளையென்பார் அறியாது தாமியற்றிய சிறு புத்தகத்தில், முஸ்லீம்கள் உலகந்தோன்றி ஆறாயிர வருஷமாயிற்றென்பதாக வரைந்திருக்கிறார். கடைசியாக உலகத்திற் றோன்றின ஆதம் என்னும் மகான் பிறந்து இற்றைக்கு ஏழாயிர வருஷமாகிறது; அப்படியானால் லட்சத்திற்கு மேற்பட்டுத் தோன்றியிருக்கிற ஆதம்களின் காலத்தைக் கணிக்க வல்லவர் யார். உலக சிருஷ்டியைப் பற்றி முஸ்லீம்கள் சொல்லுகிறதே சரியென்று பிரம்ம சமாஜத்தினின்று வெளியிடப்பட்ட (The doctrine of transmigration refuted.) என்ற புத்தகத்தில் தெளிவாய் விளக்கியிருக்கிறது. இனியேனும் நமதுநண்பர் இதையறிந்து குறை கூறுவதை யொழிப்பாராக. ப-ர்.

ஸவாகிக்கு; யவாகிக்கித்துல்ஜவாஹிரு, அக்குலாக்குல், மத்தபூலியா மின்னுச்சவுராணி என்ற கிதாபுகளில் (புத்தகம்) லட்சத்திற்கு மேற்பட்ட ஆதம்கள் உலகத்திற் றோன்றி யிருப்பதாகக் கூறியிருக்கிறது.

ன்ஜூரி; அவர்களின் புத்திரர் செய்யதுகலந்தர்; அவர்களின் புத்திரர் ஹுசைன்; அவர்களின் புத்திரர் ஹசன்; அவர்களின் புத்திரர் கான்சாய்பு; அவர்களின் புத்திரசிகாமணியாக அவதரித்த செய்கு சதக்கு மரைக்காயர் என்னும் ஒரு பெரியமஹான், காயல் நகரமென்னும்பட்டணத்திற் பிறந்தனர். அக்காலத்தில் தென்னிந்தியாவில் அளவிறந்த அற்புதங்களைச் செய்வித்து இராஜாக்களாலும் இருடிகளாலும் மற்ற எல்லாவகுப்பு ஜனங்களாலும் போற்றப்பட்டு ஹலரத் நபிநாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் (கடவுளுடைய சமாதானமும் அருளும் அவர்கள் பேரில் உண்டாவதாக) பௌத்திரரும் இந்நாள்வரை ஒவ்வொருவகுப்பினரும் தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றவேண்டித் திரள்திரளாய்ச் சென்றுகொண்டிருக்கிற நாகைநாயகர் காதிரு ஒலிகஞ்ச்வா (1) சாஹுல் ஹமீது ஆண்டவர்களுக்கும், மேற்குறிக்கப்பெற்ற செய்கு சதக்கு மரைக்காயர் அவர்களுக்கும் மிகவும் நெருங்கிய நட்பு உண்டாயிருந்தது.

ஒருநாள் ஹலரத் சாஹுல் ஹமீது ஆண்டவரவர்கள் தன்னுடைய அன்பு மிகுந்த செய்கு சதக்கு மரைக்காயர் திருமுகத்தையுற்றுநோக்கி, எனது அன்புமிக்க நண்பரே! உமது மாக்ஷிமைக்குரிய சந்ததியில் சிறிதுகாலத்திற்குப்பிறகு முதிர்ந்த ஞானத்தையுடைய ஒரு மஹான் தோற்றுவார். அவர் கடவுளுடைய அன்பில் ஈடுபட்டிருப்பார். அன்றியும், இல்லற ஒழுக்கங்களிலும் துறவற ஒழுக்கங்களிலும் மிகச்சிறந்து விளங்கிப் பரிசுத்தமான தீனுல் இஸ்லாமார்க்கத்தின் ஒரு ஸ்தம்பமாயிருந்திலங்குவார். அவரது பரிசுத்தமான இருதயத்தில் ஞானப்பேரொளிநிறைந்து அவருடைய முகத்திலே ஜ்வாலிக்குந்தன்மையினால், இஸ்லாத்தில் ஒரு பெருஞ் சூரியனைப்போல் விளங்குவார். அவருடைய அறிவின் பெருமையானது அரபிகளுக்கும்* அஜமிகளுக்கும பிரயோஜனத்தைக்கொடுத்து அதனால் அவர்கள் இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் பெற்றுக்கொள்வார்களென்றும் அவருடைய பின்சந்ததிகளில், "இல்லையென்றிரப்போர்க்கில்லை" யென்று சொல்லாத தருமமே அணிகலமாய்ப்பூண்ட செல்வவான்கள் பிறப்பார்களென்றுந் திருவுளம்பற்றியதோடுங்கூட அவர்களுக்காகச் சர்வவல்லமையுள்ள அல்லாஹுத்தஆலா இடத்துப் பிரார்த்தனையுஞ் செய்துமுடித்தார்கள். இந்தப் பிரார்த்தனையைப்பெற்றுப் புத்திரனையடைந்த ஹலரத்செய்கு சதக்கு மரைக்காயர் அவர்கள் தன்புத்திரசிகாமணியான ஹலரத்து (1) செய்கு சுலைமான், ரஹும்ம ஹுல்லா அவர்களோடும் காயல்மாநகரத்தில் வாழ்ந்துவருநாளில், வடஇந்தியாவில் வேதியரொழுக்கத்தில் மிகச்சிறந்த அந்தணர்கள் தங்கள் கல்வியின் மிகுதியால் எம்மதத்தையும் நீக்கி இஸ்லாமொன்றுதான் பிரதமசத்தியமார்க்கமெனக்கண்டு ஐந்துவீட்டினர் தங்கள் குடும்பத்தாருடன் இஸ்லாத்தைப் பின்பற்றிச்சிலகாலத்திற்குப் பின்னர்ப் பாண்டியநாடடைந்து பரம்பக்குடியினருகிலுள்ள எமனேசுவரமென்ற நகரைத் தங்கள் வாசஸ்தலமாக்கி வாழ்ந்துகொண்டிருந்தனர்.

பிறகு அம்மரபில், ஞானம், கல்வி, ஒழுக்கம் இவைகள்வாய்ந்த ஒருவரைப் பள்ளிவாசலில் (கத்தீப்) காரியகர்த்தராக அவ்வூர் முஸ்லீம்களால் ஏற்படுத்தப்பட்டது. அக்காரியகர்த்தரின் தபோமஹிமையால் கருணாநிதியான கடவுள் அழகும் குணமும் வாய்ந்த ஒரு சற்புத்திரியை யளித்தார். அச்செல்விக்குப் பெற்றோர்கள் பாத்திமா என்ற நாமகரணத்தைச் சூட்டினார்கள். பின்பு அப்பெண்மணி

---

(1) "திக்குத் திகந்தமுங் கொண்டாடியேவந்து தீன்கூறி நிற்பர் கோடி, சிங்காச னாதிபர்க ளதையேந்தி யேவந்து ஜெயஜெயா வென்பர் கோடி, அக்கனருள் பெற்றபெரி யோர்களொலி மார்களணி யணியாக நிற்பர் கோடி, அஞ்ஞான வோறத் திட்டமெஞ் ஞானிக ளணைந்தருகு நிற்பர் கோடி, மக்கநக ராளும் முகம்மதுற் றசூல்தந்த மன்னரே என்பர் கோடி, வசனித்து நிற்கவே கொலுவீற் றிருக்குமுன் மகிமைசொல வாயு முண்டோ, தக்கபெரி யோனருட் டங்கியே நிற்கின்ற தவராஜ செம் மேருவே, தயையைவைத் தென்னையாள் சற்குணங் குடிகொண்ட சாகுல்ஹமீ தரசரே." இது குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பாடலாகும்.

* அரேபியாவிலன்றி மற்றதேசத்தில் பிறக்கும் ஜனங்கள்.

(1) இவர்கள் ஹிஜிரி 1001-ம் வருடம் பிறந்தார்கள். ஒருசமயத்தில் திருமக்காவில் கொடிய நெருப்பு வீடுகளில் பற்றி யெரியும்போது காயல்பட்டணத்துப்பள்ளியில் ஹௌவில் தண்ணீர் மூன்றுதடவையெடுத்து பரிசுத்த மக்காவின்பக்கமாயெறிய அத்தீயமர்ந்தது.

மங்கைப்பருவத்தையடைந்தபிறகு தகுந்த கணவனைத்தேடி விவாகஞ்செய்விக்கப் பெற்றோர்களும் உற்றோர்களும் ஆலோசித்துக் கல்வி ஒழுக்கமும், அழகும், செல்வமும் பொருந்திய நாயகன் எங்கு நமக்குக்கிட்டுமோ வென்று வியாகூலமடைந்திருக்குஞ்சமயத்தில், மேற்கூறப்பட்ட ஹலரத்மௌலானா சுலைமான் லெப்பை அவர்களின் பரிசுத்த இருதயத்தில் ஞானதிருஷ்டியின்பலனாக தனது மனைவி இன்னாருடைய புத்திரி பாத்திமா எனக்குறிக்கப்பெற்ற தெய்விக உத்தரத்தை நன்கு தெரிந்துகொண்டவராய் எமனேசுவரத்தையடைந்து பள்ளியின் காரியகர்த்தரிடஞ்சென்று தங்களின் புத்திரியைத் தனக்கு விவாகஞ்செய்துதரவேண்டுமென்பதோடுகூட அம்மாதர்க்கரசியின் கர்ப்பாசயத்தில் ஐந்துமாணிக்கங்களை நிகர்த்த ஐந்து பாலர்கள் அமைக்கப் பெற்றிருக்கிறார்களென்றும், அவ்விரத்தினங்கள் எம்மாலே வெளிப்படுத்தப்பட்டு உலகத்தில் ஜ்வலிக்கவேண்டுமென்பதையுஞ் சொன்னார்கள். இந்த அன்பு நிறைந்த வசனங்களைச் செவியுற்ற பள்ளியின் காரியகர்த்தர், செய்கு சுலைமான் றஹிம்மஹுல்லா அவர்கள் நல்லொழுக்கத்தையும் கல்வியையும் ஞானத்தின் பேரொளியையும் மிகப்பெற்றவர் என்று தெரிந்து இவரைவிடத் தன் அருமைப்புதல்விக்கு வேறு மணவாளன் கிடைப்பதரிதெனத் தேர்ந்து அழகும் குணமும் மிக்க பாத்திமா என்ற பெண்மணியை அப்பெருமானுக்கே கொடுப்பதாய்த் தீர்மானித்து விவாகஞ் செய்வித்தார்கள். பிறகு அம்மணமகளும் அந்நாயகரும் வாழ்ந்துவருநாளில் * ஐந்து புத்திரரத்தினங்களை அம்மாதர் திலகம் முறையே பெற்றனள். அப்புத்திரர்களில் மூன்றாமவரான இங்கு நாம் எடுத்துக்கொண்ட செய்குசதக்கத்துல்லா றஹிம்மஹுல்லாஹு அவர்கள்; இவர்கள் சரித்திரத்தை மீண்டெடுத்துக்கூறுவாம். மேற்கூறியபடி உலகசிருஷ்டி கால முதல் தோற்றப்பட்ட ஆதிபிதாக்களான லக்ஷத்திற்கு மேற்பட்ட

*** (1) ஸம்ஸுத்தீன் லெப்பை ஆலீம் றஹிம்மஹுல்லா (2) அகுமது லெப்பை ஆலீம் றஹிம் மஹுல்லா (3) நமது நாயகர் சதக்கத்துல்லா றஹிம்மஹுல்லா (4) ஸஹாபுதீன் என்ற காரணப் பெயருடைய செய்கு சாம் றஹிம்மஹுல்லா (5) இனி இவர் போன்ற மக்கள் இல்லையென்று சொல்லும்படியான செய்கு ஸலாஹுத்தீன் லெப்பை ஆலீம் றஹிம் மஹுல்லா என்பவரேயாம்.**

ஆதங்களின் காலங்களில் நிலைநிறுத்தப்பெற்ற அக்தாப்புகளெனும் ஞானிகளைப்போன்று சுமார் ஏழாயிரவருடங்களுக்கு முன் உற்பவித்த கடைசி ஆதம் அலைகிவஸல்லமவர்களின் மரபினராயும் அக்தாப்புகள் என்ற மஹாஞானவான்களில் ஒருவராயும் நிலைநின்ற மாட்சிமை தங்கிய செய்குசதக்கத்துல்லாரஹிம்மஹுல்லாஹு அவர்கள், நாகைநாயகர் சாஹுல்ஹமீது ஆண்டவரவர்கள் இவ்வுலகை நீங்கிக்கடவுளையடைந்து 60-வருடம் சென்றபின்னர், பரிசுத்தமுள்ள நபிநாயகம் முகம்மதுமுஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைகிவஸல்லமவர்கள் (கடவுளுடைய சமாதானமும் அருளும் அவர்கள்பேரிலுண்டாவதாக.) திருமக்காவைவிட்டுப் பரிசுத்த மதினா நகருக்கு யாத்திரை போன ஹிஜ்ரி 1040-ம்வருடத்தில் இந்தியாவில் ஏக சக்கிரவர்த்தியாய் அரசாட்சிசெய்த ஔரங்கசீப் அவர்களின் காலத்தில் அகிலாண்ட புவனங்கள் அனைத்தையும் அங்கையில் அடக்கியாளும் அதிகாரிகளான அக்தாப்புகளின் திலதமாயுற்பத்தியானார்கள்.

* இந்த மஹான் சிறிய பிராயத்தினராயிருக்கும்பொழுதே பரிசுத்த திருக்குரானை முற்றும் மனனம் செய்வித்துப் பாராயணஞ்செய்ததோடுகூட அறபுஇலக்கிய இலக்கணம் முதலான லுகத்து, நகுவு சருபு முதலிய எல்லாநூல்களையும் செவ்வனே கற்றுத்தேர்ச்சியடைந்தபின்னர், பிக்ஹு அகாயிது தஸவ்வபு என்கின்ற மூன்றுவகை இல்முகளையும் (கல்வி) கற்றுத்தெளிந்தார்கள். பதினான்கு வகை இல்முகளும் அவர்கள் பரிசுத்த மனதை, வாசஸ்தலமாய்க் கொண்டன. அன்றியும், அவர்கள் கற்றபடிநின்று, இரவெல்லாந்தொழுதும் பகலெல்லாம் நோன்பு நோற்றும் இல்லறம் துறவறம் என்று சொல்லப்படுகின்ற இவ்விரண்டொழுக்கங்களிலும் மேம்பாடடைந்து கடவுளைத் தெரிசித்து நிற்குந்தன்மையினால், " அல்லாமத்தென்றும், ஆரிபென்றும் " "இமாமுல் முஸ்லிமீன் என்றும், ஒலியுல்லாவென்றும் " ஞானவான்களால் அழைக்கப்பட்டதோடுகூட ஹலரத் ஹிலுரு அலைஹிவஸ்லாமவர்களால் உலகரக்ஷக நாயகராய் விளங்கிநிற்க, " குத்புஸ்ஜமான் " என்ற பட்டத்தைச் சூட்டப்பெற்றவர்களாய்

*** இவர்களின் குரு, மகுதூம் சின்னினா லெப்பை என்பவர்களே. இவர்கள் கடலில் நீர் மேல் நின்று விரிப்பின் மேல் தொழுதார்கள்.**

வாழ்ந்துவந்தனர்; அந்நாளில் வாதபித்தசிலேட்டுமங்களாலுண்டான பலவித ரோகஸ்தரும், கூன், குருடு, செவிடு, முடம், மலடு முதலான பிறவித்துன்பமுடையோரும் ஜின் செய்ததனால் (காணக்கூடாதவகுப்பினர்) பிடிக்கப்பட்டோரும், மனவேதனையால் துன்பக்கடலில் ஆழ்ந்து தவிப்போரும் பிரதிதினமும் ஹலரத் அவர்களைத் தெரிசித்துச் சுகமடைந்து போவார்கள். இவர்கள் திருமக்காவிற்கு யாத்திரை போயிருக்கும்பொழுது கீழக்கரையில், அப்போதிருந்த அவர்களின் குழந்தைகளில் ஒன்றின்மேல் மிக்க விருப்புற்றவராய், இப்போது காணக்கிடைக்குமோ? என்று சற்று விசனமுற்றிருக்கும்போது அம்மஹானின் பணிவிடைமாது அதைக்குறிப்பாலறிந்து கீழக்கரைவந்து அக்குழந்தையைப் பரிசுத்த மக்காவிற்குக்கொண்டு போய் அவர்களிடம் கொடுத்துப்பின்னர், கிழக்கரைக்குவந்து அக்குழந்தையின் மாதாவிடம் கொடுத்துத் திரும்பவும் திருமக்காவுக்குப் போகக் கொஞ்சநேரம் சென்றது.

இப்பெண்மணிக்கு இத்தகைய வல்லமையுண்டானதின் காரணம், அம்மாதுசிரோமணி எஜமானரான செய்குசதக்கத்துல்லா நாயகரவர்கள் தன் சட்டையை அந்த அம்மாள் மூலமாய் வண்ணானிடம் வெளுக்கப்போடும் பொழுதெல்லாம் அந்த மேன்மைபெற்ற மேற்சட்டையைத் தண்ணீரினாற் கழுவி அத்தண்ணீரைப் பானஞ்செய்து வந்த பலனேயாம். ஆகவே, அவர்களின் பணிவிடைமாதுசிரோன்மணியின் அற்புதமே இத்தகைய மாட்சிக் குரியதாயிருக்கும்போது, ஹலரத் அவர்களின் அற்புதத்தின் தன்மை எத்தகையதாக வேண்டும் அம்ம! அது சொல்லற் கெளிதோ!

இத்தகைய ஞான பொக்கிஷங் குடியிருக்கப்பெற்ற மஹாத்துமாவாகிய செய்கு சதக்கத்துல்லா றகிம்மஹுல்லா அவர்களுக்குக் *கீழக்கரையில் (1) கர்த்தாமுத்தாயும் (2) மஉனுபுனுஜா இதாவும் (3) கர்ணனும் ஒருங்கே உதித்தாற்போல உதித்துச் செல்வப்பெருக்கு முற்றும் தொலைந்து அடங்கியமிழ்ந்து வர்த்தகம் ஒடுங்கி உண்ண உணவும் உடுக்க உடையுமற்று எவ்விடத்திலும் மழையில்லாமல் குளங்கள் வற்றியும் கிணறுகள் காய்ந்தும் ஆற்றுநீர் வறண்டுமிருக்குங் கொடிய பஞ்சகாலத்தில், ஜனங்களுக்கு அன்னபானாதி முதலிய தட்டில்லாமற் கொடுத்துக் காப்பாற்றும் ரக்ஷகரான சீதக்காதி மரைக்காயர் அவர்கள், அவர்களின் அன்புமிக்க சிஷ்யராயும் உயிர்த்துணைவராயுமிருந்தார்கள். அன்றியும், இந்தியாவில் அப்போது ஏக சக்கரவர்த்தியாயும், மஹா நீதிமானும் ஞானவானுமிருந்த †ஔரங்கசீப் (அபுல் முசாவர் முகைனுத்தீன் முகம்மது ஔரங்க

---

* (1) செம்பிநாடு. (2) அனுத்துறைமங்கலம் (3) நினைத்தது முடித்தான் பட்டணம். (4) பௌத்திர மாணிக்கம். (5) தேவிக்கனை. (6) கிற்கிரு இந்தப் பெயர்களு மதற்குரியதே. 1, 2, 3, இம்மூவரும் பெருங் கொடையாளர்கள்,

† இந்த மஹானின் உண்மையான நற்செய்கைகளை முற்றும் மறைத்து அவர்களை இழிவு படுத்த வேண்டுமென்ற கெட்ட அபிப் பிராயத்தோடு, இஸ்லாமார்க்கத்தின் பேரில் வீணே பழி கூறி இதர வகுப்பினர் அவர்களை விரும்பாதிருக்கும் பொருட்டு, இஸ்லாமார்க்கத்தின் பேரில் முதிர்ந்த பகைமையுடைய கிறிஸ்தவ பாதிரிகளின் தூண்டு கோலால் எழுதப்பட்டு இப்போதும்வழங்கிவருகிறஇந்தியசரித்திரங்களில், (History of India) மிகத் தூஷித்துக் கொடுங் கோன்மையா யாண்டாரென்றும், அநேகரைக் கொன்றாரென்றும், இஸ்லாமார்க்கத்தைப் பரப்பக்கத்தியை யுபயோகித்தாரென்றும், கோயில்களை யிடித்தாரென்றும் பொய்யும் புரட்டுங் கலந்து எழுதப்பட்டிருப்பதை இந்து நண்பர்களும் நம்பி அவர்களை இகழ்கின்றனர். இப்படி அம்மஹானவர்களைக் குறைகூற யாதொரு ஆதாரமும் நியாயமும் கொஞ்சமும் எடுத்துக் காட்டாமலே தூஷிக்கிறது மிக்க இழுக்கேயாகும். இம்மஹானின் சரித்திரத்தை நடுவு நிலைமையோடு ஆராய்ந்து, T. W. அர்னால்டு என்னும் மேல் நாட்டுத் துரைமகன் தான் எழுதிய Preaching of Islam- என்னும் புத்தகத்தில் விரிவா யெழுதி யிருக்கிறார்கள். அதிற் சில அடியில் வருமாறு:—

“ஔரங்கசீப் அவர்களிடத்தில் இரண்டு பார்ஸீகர்கள் பொக்கிஷத் தலைவராயிருந்தார்கள்; அப்படியிருக்கும் போது ஒரு முஸ்லீம் ஔரங்கசீப் அவர்களுக்கு அல்லாஹுத்த ஆலாவினுடையவும் உங்களுடையவுமாகிய பகைவர்களை நீங்கள் நேசிக்கவேண்டாம் என்று வந்திருக்கிற பரிசுத்த குரானின் வாக்கியத்தை யெடுத்துக்காட்டி முஸ்லீம்களுக்கே அப்பொக்கிஷத்தலைமை வேலையைக் கொடுக்க வேண்டுமென்று ஒருவிண்ணப்பம் அனுப்பிவைத்தார். அதற்கு ஔரங்கசீப் அவர்கள் தன் கையினால் எழுதிய பதிற் கடிதம் இன்று மிருக்கிறது. அதில் என்ன எழுதியிருக்கிறதென்றால்; தாம் எழுதிய பரிசுத்த திருக்குர்ஆனின் வாக்கியத்தைப் பார்த்தேன்.

சீப் ஆலங்கிர் பாத்துஷா) அவர்கள் கேள்வியாலும் ஞானத்தின் முதிர்வாலும் ஹலரத்து செய்கு சதக்கத்துல்லா அப்பா அவர்களைத் தெரிந்துகொண்டவர்களா யடியிற்கண்டபடி கடிதம் எழுதி அனுப்பித்தார்கள். அது வருமாறு:—

என் அன்புமிக்க நாயகரே! தாங்கள் என்மீது கிருபைகூர்ந்து தமியேனுக்கு ஞானத்தை யுபதேசிக்கவேண்டுவதோடு கூட ராஜாங்கச் சீர்திருத்தங்களையும் கற்பிக்கவேண்டி, இச்சிறியேன் வாழும் டில்லிநகர்க்கு எழுந்தருளிவந்து இதை வாசஸ்தலமாக்கிக் கொள்ளக் கிருபைகூர்ந்து அருளவேண்டுமென்று கடிதமூலமாயும், தூதர்கள் மூலமாயும் வேண்டிக்கொண்டும் அதை யங்கீகரிக்காதிருந்தனர்.

ஆகவே, பின்னும் தங்களை வற்புறுத்தக் கூடாதாதலின், தாங்கள் மதுரை ஜில்லாவைச்சேர்ந்த சகல இடங்களுக்கும் நியாயாதிபதியாய் (காஸிபாய்) இருக்கவாவது தயைசெய்து அருளவேண்டுமென்று சக்கரவர்த்தியால் திரும்பவும் வேண்டப்பட்டும் "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்பதற்கேற்ப அதுவும், அங்கீகரிக்காமல் பயனற்றதாயிற்று. இவ்விதமாய் ஔரங்கசீப் அவர்களின் வேண்டுதல், முற்றும் பயனற்றதாய்விடவே மிக்க வியாகூலமடைந்து அவர்களுடைய பிரதான மந்திரியையும், சேனைத் தலைவரையும், ராஜகுடும்பப் பாதுகாப்பினரையும் ஒருங்கே கீழக்கரைக்கு அனுப்புவித்து, அவர்களிடத்துச் செப்புப்பட்டயத்தில் வரையப்பட்ட சாஸநமொன்றை யனுப்பி, ஹல்ரத்து செய்கு சதக்கத்துல்லா அவர்களிடம் கொடுத்து அந்தச் சாஸநத்திற் கண்டவிதம் நடத்துவிக்க வேண்டும்படி கட்டளையிட்டிருந்தார்கள்.

அக்கட்டளையாவது:—தாங்கள் மதுரைஜில்லாவில் நியாயாதிபதியாயிருக்க முற்றும் மறுத்துநின்றாலும், தங்களுடைய புத்திரர்களிலொருவரையாவது அப்படிச் செய்விக்கக் கிருபைகூர்ந்து அருள

ஆனால், அது நீர் சொல்லுகிறபடியல்ல. பின்னை? மறு உலகத்தின் மோக்ஷசாதன விஷயமாய் அவர்கள் சொல்லுக்கு இணங்கி அவர்களை நேசித்துத் தொடராதீர்கள் என்பதேயன்றி மற்றப்படியல்ல வென்றும், உலகவாழ்க்கையில் அவர்களோடு சம்பந்தப்பட்டிருக்கலா மென்றும், எந்தெந்த வேலையில் யார் யார் தேர்ச்சியடைந் திருக்கிறார்களோ அவர்களைத்தான் தன் கௌர்ண்மெண்டில் வைத்துக் கொள்ளப்படுமென்றார்," உத்தரவு செய்திருக்கிறார்கள். இதைப்பார்க்கும்போது ஔரங்கசீப் அவர்களின் நடுவுநிலைமையைப் புத்திமான்கள் தெரிந்து கொள்வார்கள். அன்றியும், அக்காலத்தில் பரிசுத்த மக்கா நகரத்திற்கு இந்தியாவிலிருந்து முஸ்லீங்கள் சூரத்து வழியாய்ப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது இந்துக்களான மஹாராஷ்டிரர்கள் அவர்களை யெதிர்த்து அவர்கள் சாமான்களைக் கொள்ளையடித்து அவர்களைச் சின்ன பின்னப்படுத்தி வந்தனர்.

அதை நிறுத்தும்படி ஔரங்கசீப் அவர்கள் பலதரம் அம்மகாராஷ்டிரருக்குத் தெரிவித்தும் பயன் படாது போனதாலும், அவர்கள் அக்கிரமம் நாளுக்கு நாள் விருத்தியாகி வந்தமையாலும், அநியாயமாய்ப் பரிசுத்த நகரின் யாத்திரைக் காரர்களின் இரத்தஞ் சிந்துதல் ஒய்வடையாமையைக் கண்டு அப்பெருங் கொள்ளைக்காரரை யெதிர்த்து அப்பாதகத்தொழிலை விட்டு அவர்களை நீக்கின இப்பெருமானா! இகழ்தற்குரியவர். அன்றியும், காசியிற் கோயிலையிடித்து விட்டதைப்பற்றி வீணே பெரும்பழி கூறும் இந்திய நண்பர்களைநோக்கி நாம் சொல்வதென்னவென்றால், நமது ஆங்கிலேய சரித்திரரான (History of Aurangazeb by Stanley lane Poole) என்பவரால் எழுதப்பெற்ற சரித்திரத்தில் இந்துக்கள் அந்த முஸ்லீம் கவர்ண்மெண்டுக்கு வரிக்கொடுக்கிறதை நிறுத்தியதோடுகூட ஒவ்வொருவரும் அங்கேயிருந்த முஸ்லீம்களிடத்திலுங்கூடவற்புறுத்தி வரிப்பணம் அறவிட்ட நிமித்தமும் இஸ்லாமானவர்களை அம்மார்க்கத்தை விட்டுவிடும்படி கெட்ட போதனையைப் போதித்த நிமித்தமும் அப்படிச் செய்வதைத் தடுக்கும் பொருட்டு யுத்த முண்டாகப் பட்டதில், அது மார்க்க கலகமாய்க் கோயிலை இவர்கள் இடிக்கவும், மசூதியை யவர்கள் தாக்கவு மாயிற்றென்பதே. சமீபத்தில் முஸ்லீம்களின் பள்ளியை இந்துக்கள் சேலத்தில் உடைத்துத் தரைமட்டமாக்கியதும் இங்கு கவனிக்கத் தக்கது. தென்னாட்டில் பாண்டியன், சேரனைக் கொல்லவும், சேரன், பாண்டியனைக் கொல்லவும் இந்[illegible] விதமாய்ச் சேர சோழ பாண்டியர் காலத்தில் ஒருவருக்கொருவர் சண்டை செய்ததும் வெற்றியின் பொருட்டுப் பரணி பாடலும் சகஜமேயாம். கிறிஸ்தவர்கள் முஸ்லீம்களையும் அதல்லாதவர்களையும் செய்த கொலைகள் பலவுள. அவர்கள் மார்க்கம், நிச்சயமாய்க் கத்தி மார்க்கமேயாம். அதைப் பற்றிப் பின், "கிறிஸ்து மார்க்கம் கத்தி மார்க்கமே" என்னுந் தலைப்பின் கீழ் வருவதைப் பார்த்தால் நன்கு விளங்கும். இவை போன்று இன்னும் பலவுள. விரிவஞ்சி நிறுத்தினேன். இனியாயினும் இந்து சகோதரர்கள் குறை கூறாதிருப்பாராக.

டி - நீ.

வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்தக் கடைசி வேண்டுதலையும் ஹலரத் செய்கு சதக்கத்துல்லா நாயகரவர்கள் மறுத்துவிடாது கிருபைகூர்ந்து தங்களின் புத்திரசிகாமணிகளில் ஒருவரான மாக்ஷிமைக்குரிய அல்லாமத்து முகம்மது லெப்பை ஆலீம்சாகிபு அவர்களை (காலியல் குவாத்) மதுரையம்பதிக்கு ராஜப்பிரதிநிதியாக ஏற்படுத்தப்பட்டார். அன்றியும், தொழுகையைவிட்ட முஸ்லீங்களுக்குச் சட்டப்படி தண்டனை விதிக்கப்பெற்றது. இப்பொழுதும், அம்மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியின் சாஸனத்தை நாம் காயற்பட்டணத்தில் பார்க்கலாம். இந்தவிதமாக ஔரங்கசீப் அவர்களுக்கும், செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் சிநேகத்தின் தன்மை நீடித்துக்கொண்டிருந்தது. மாக்ஷிமைதங்கிய ஔரங்கசீப் அவர்கள் மோக்ஷபதவியையடைய அல்லாஹுத்தஆலாவிடத்துப் பலவாறுபிரார்த்தனையும், நமதுநாயகர்செய்திருப்பதுமன்றி அறபியிலும் இம்மஹானுகிய சக்ரவர்த்தி ஆலிமவர்களைப்பற்றிச் சில * பாடல்களும் (பைத்துகள்) திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். அன்றியும், ஒருதினத்தில் தன் அன்புமிக்க சிஷரும் நண்பருமான பெருங்கொடைவள்ளல் சேக் அப்துல்காதர்மரைக்காயர் (சீதக்காதி) அவர்களின் தர்மசிந்தையையும் நல்லொழுக்கத்தையும் கெம்பீர உதாரத்துவத்தையும் தங்களின் அன்பரின் ஒருவரான ஆலங்கிரி பாத்துஷா அவர்களுக்கு எழுதியிருந்தார்கள். இதைப்பார்த்த ஔரங்கசீப் அவர்கள் பங்காள மாஹாணத்தில் செய்கு அப்துல்காதர் மரைக்காயர் (சீதக்காதி அவர்கள்) அவர்களை ராஜப்பிரதிநிதியாயிருக்கும்படி செய்விக்கவேண்டுமென செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கேட்டுக்கொண்டமையால் அதைத்தடுக்கப் பிரியமற்றவர்களாய் செய்கு அப்துல்காதர் மரைக்காயரவர்கள் பெங்காளத்திற்குப்போய் ராஜப்பிரதிநிதிவேலையையொப்புக்கொள்ளத் தன் சிஷர் (சீதக்காதி) அவர்களிடம்சொல்ல அவ்வுத்திரவைச் சிரமேற்கொண்டவர்களாய்ப் பெங்காளத்திற்குச் சென்று ராஜப்பிரதிநிதியாயிருந்தார்கள். இந்தவிதமாய்க்கொஞ்சகாலமரசாட்சி செய்தபின்னர், அந்த தேசத்தின் சீதோஷ்ணஸ்திதி அவர்களுக்கு முற்றும் மாறாயிருந்தமையாலும், அத்தேசத்திலுள்ளவர் நல்ல சுபாவமில்லாதவராயும் இருந்தமையற்றி யவர்களை நீதியின்படி யாளுதல் கூடாமையாயிருந்தமையாலும், அல்லாஹுத்தஆலாவைப்பயந்து மாட்சிமைதங்கிய சுல்தான் ஔரங்கசீப் அவர்களுக்கு மன்னிப்புப் பத்திரத்தோடு அவ்வேலையை ராஜினாமாக்கொடுத்துவிட்டுக் கீழக்கரையென்னும் இத்திருநகர்க்கு வந்து சேர்ந்தார்கள். வந்தபின்னர், மாட்சிமைதங்கிய ஔரங்கசீப் அவர்களுக்குச் சுண்டைக்காய்ப் பருமனுள்ள முத்துக்களாற் கோக்கப்பட்ட தஸ்பீகு (ஜெபமாலை) ஒன்று செய்வித்து ஹலரத் செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலமாய் டில்லிமாநகருக்கு அனுப்பிவைத்தார்கள். இந்த விலைபெற்ற ஜெபமாலை வரப்பெற்ற பாதுஷா அவர்கள், உள்ளங்கை அகலத்தையுடைய ஒரு சந்தனக்கட்டையையும், மூன்று மையுருண்டையையும் ஒருபிடி தேயிலையையும் அதற்குப்பிரதியாய் அனுப்பிவித்தார்கள். சந்தனக்கட்டையின்வாசனை, மல்லிகை முல்லை ரோஜா புஷ்பங்களைச் செறிந்து நிறையப்பெற்ற சோலைகளிலிருந்துண்டாகும் வாசனையைத் தாழ்த்திற்று. அன்றியும், அக்கட்டையை மூன்றுதடவை உரைகல்லிற் றேய்த்து அதையெடுத்து ஒருபடி தண்ணீரில் கலந்தால், உயர்வுற்ற ஹீரான் அத்தர் வாசனையின் மிகுத்து நிற்கும்.

மையுருண்டையோ வெனில், ஒரு வெந்தயப் பிரமாண முறைத்து ஜாடித் தண்ணீரில் கலந்தால் 20-பெயர்கள் பிரதி தினம் ஓயாதிருந்து எழுதினாலும் நிறம் குறைவுபடாமலும் கெடாமலுமிருக்கும். அன்றியும், அதிககாலம் நீடித்திருக்கும். தேயிலையோ வெனில், மூன்று இலைகளை ஒரு குடம் சுடு தண்ணீரில் போட்டால் மிக்க சிவப்பாயும் அதிக வாசனையாயுமிருக்கும். இம்மூன்றிலொன்றான மையுருண்டை மாட்சிமை தங்கிய செய்கு சதக்கத்துல்லா றலியல்லாகு அன்ஹு அவர்களிடத்திலும் மற்ற இரண்டு சாமானும் தர்மத்தையே அணிகலமாய்ப் பூண்ட செய்கு அப்துல் காதர் (சீதக்காதி) மரைக்காயரவர்களிடத்திலும் இருந்தன. இந்த விஷயங்களைச் சேதுபதி அரசரு மறிந்து மிக்க கொண்டாடினாரெனில்,

---

* இவைகளிற் சிலவற்றை இக்காலத்திலும் கூட செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்களின் கந்தூரியை (உற்சவம்) நிறைவேற்றும் காலங்களில் இவர்கள்பேரில் இரங்கும்படி “கடவுளிடத்தில்” பிரார்த்தனைக்காகப் படிக்கப்படுகிறதைப் பார்ப்பதோடுகூட அவர்களின் அற்புதங்களைப்பற்றிய அறபிச்செய்யுளைப் படிப்பதையும் பார்க்கலாம்.

அதன் பெருமை மிகச் சிறந்ததேயாம். ஹலரத்து செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஓராயிரத் திற்கு மேற் சீஷர்களிருந்தார்கள். இச்சீஷர்களில் தலைமையாய் விளங்கியவர், செய்கு சதக்கத் துல்லா நாயகரவர்களின் இளைய சகோதரரான செய்கு சிகாபுத்தீன் என்ற காரணப் பெயரையுடைய சாமு லெப்பை ஆலீம் அவர்கள் தான். இவர்களின் மகிமையும் கல்வியும் காரணங்களும் பேரும் ஆரிபீன்களாலும் வரையறுத்துச் சொல்லக் கூடாததாயிருந்தது. இவர்கள் பதினான்காவது பாலிய வயதிலேயே அறபி பாஷையிலுள்ள சகல படிப்புகளையும் முடித்துத் தங்கள் சகோதரரான நமது நாயகரிடத்தில் தீக்ஷையும் பெற்றார்கள். ஆனால், தொழுகையில் கொஞ்சம் அசிரத்தையாயிருப்பதாய்த் தோற்றப்பட்டார்கள். இதைப் பற்றி ஹலரத் செய்கு சதக்கத்துல்லா நாயகரவர்கள் தங்களின் இளைய சகோதரர் தொழுகையைச் சரியாய் நேரம் தவறாமல் அனுஷ்டித்து வரவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அது அவ்வளவு பயன்படுவதாய்த் தெரியவில்லையாதலால் தங்களின் கௌரவத்திற்குரிய மாதா அவர்களை நோக்கித் தம்பி சாமு சரியாய்த் தொழுகின்றானில்லை. அவன் வீட்டுக்குவந்தால் அன்னபானாதிகள் அவனுக்குக் கொடுக்கவேண்டாமென உறுதியாய்ச் சொல்லியிருந்தார்கள். சரியாக இரவு 8 மணி அடிப்பதற்கு முன் (இசாவுக்கு முன்) ஹலரத்து சாமுநாயினார் லெப்பை ஆலீம் அவர்கள் வீட்டுக்குவந்து தாயாரவர்களைத் தனக்கு அன்னம் கொடுக்கும்படி கேட்டார்கள். அப்படிக் கேட்கவே தாயாரவர்கள் அவர்களை நோக்கி மிக்க கோபத்துடன் என் மகனே! நீ ஏன் தொழுகின்றாயில்லை, நிச்சயமாய் அல்லாஹுத்த ஆலாவின் கட்டளையை நிறைவேற்றத் தவறுகின்றவர்களுடையும் கதியை நீ அறியவில்லையா? நீ தொழுகையைச் சரிவர நடத்தும் வரை நான் உனக்கு ஆகாரம் கொடேன். ஏனென்றால், நான் அதனிமித்தம் பாவியாயெண்ணப்படுவேன் என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். இதைக்கேட்டு ஹலரத் சாமு நயினார் லெப்பை ஆலீம் அவர்கள் திடுக்குற்றவராய்ப் பிரமித்து நின்று பின்னும் சில நிமிஷம் கழிந்த பின்னர்த் தன் தாயாரவர்களைப் பார்த்து நான் தொழுகையை நிறை வேற்றி வந்தால் அன்னம் தருவீர்களா? என் மீது

அன்பாயிருப்பீர்களா? என்று கேட்க, உடனே தாயாரவர்கள் மகனே நிரம்பச் சரியாகச் சொன்னாய், அப்படிச் செய், சர்வ வல்லமையுள்ள அல்லாஹுத்த ஆலாவின் ஆசீர்வாதமும் அவனின் அன்பு நிறைந்த ஹலரத் நபிகள் நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் (அவர்கள் பேரில் உன்னதமான கடவுளின் ஆசீர்வாதமும் கிருபையு முண்டாவதாக) கிருபையுமுண்டாவதாக எனச் சொன்னார்கள். இதைச் செவியுற்றவர்களாய்ப் பள்ளிவாசலுக்குப் போனார்கள். அப்போது இஷா தொழுகை நடைபெறப் போகிறதையும், ஹலரத் செய்கு சதக்கத்துல்லா நாயகரவர்கள் தொழுகையையுடையோர்களுக்குத் தலைமையாய் (இமாமாக) நின்று கொண்டிருப்பதைப் பார்த்துத் தாமும் அவர்களுடன் தொடர்ந்தார்.

இவ்விதமாகவே ஒரு றக்காயத்து முடிவுபெறவே மறுறக்காயத்தில் தக்பீரை விட்டுவிட்டவர்களாய்ப் பள்ளியைவிட்டுக் கிளம்பி வீட்டையடைந்து தாயாரவர்களை நோக்கி அன்பார்ந்த அம்மா! உத்திரவுப்படி பள்ளிக்குப் போனேன். தமையனார் காக்கா அவர்கள் பின்னின்று தொழுதேன். தொழுகையில் அவர்கள் (ஹலரத்து செய்கு சதக்கத்துல்லா அவர்கள்) இரத்தக்கடலில் மூழ்கிக்கிடந்ததால் அவர்களுடன் தொழுதல் நன்றல்லவென்று தொழுகையை விட்டவனாய் வந்து விட்டேன். பசிக்கின்றது சோறு தாருங்கள் என்று சொல்லக், கேட்ட அன்புமிக்க தாயாரவர்கள் இந்தச்சொற்களில் இரகசியமேதேனும் இருக்கவேண்டுமென்று எண்ணினவர்களாய்த் தம்மிளைய புத்திரர்க்கு அன்னமிட்டார்கள். அதை அவர் அருந்தியபின் வீட்டைவிட்டு வழக்கம்போல் வெளியே போய் விட்டார்கள்.

அதன் பிறகு ஹலரத்து செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன் ஹு அவர்கள் தொழுகையை முடித்தவர்களாய் பாத்திஹா ஓதி முடிந்த பின்னர், அவர்களின் சகோதரர் தொழுது கொண்டிருக்கும்போது தக்பீரை விட்டவராய்ப் பள்ளியை விட்டுப்போய் விட்டதைக் கேட்டு மிகவும் வருந்தி வீட்டுக்கு வந்து தம்பியையடிப்பதற்காகத் தேடினதில் வெளியேபோய்விட்டதாய்த் தெரிந்து மிக்க சினங்கொண்டிருந்தார்கள். இதையறிந்த தாயாரவர்கள்செய்கு

சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கித்தம் * இளைய மகனார் சொன்னதையெல்லாம் தவறாமற்சொல்லிக் கொண்டு வரும்போது அதைக்கேட்டுப் பிரமித்தவர்களாய்த் திகைத்து நின்றுவிட்டார்கள். சிறிதுநேரமிந்தப்படி கழிந்தபின்னர் எம்பெருமான் இனி, நம்தம்பியுடைய காரியத்தில் தலையிடக்கூடாதென்று தீர்மானித்துவிட்டார். இந்த மாட்சிமைக்குரிய சாமுநயினார் லெப்பை ஆலீம் அவர்கள் உலகத்தையெல்லாம் அங்கையிலடக்கியரசாட்சி செய்கின்ற அக்தாபுகள் கௌதுகள் முதலியவர்களால் மிகவும் போற்றப்படுகிற அதிகாரத்துவத்தையுடைய மஹான்களில் ஒருவரென்று நான் அறிந்திருக்கிறேனாதலின், அவர்கள் சரித்திரத்தை முற்றுவித்தல் அசாத்தியமேயாம். இவர்கள் ஹலரத்து முகம்மது சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்களின் (சர்வவல்லமையுள்ள அல்லாஹுத்த ஆலாவின் சமாதானமும் கிருபையும் அவர்கள்பேரிலுண்டாவதாக) திருவாக்கின்படி இஸ்லாத்தைப்பற்றி யாயிரம் மாலைகள் பாடியிருக்கிறார்கள். செய்கு சலாகுத்தீன் அவர்கள் தான் இரண்டாவது சீடர்; இவர்கள் ஓரிரவிலேயே பேரின்பத்தில் ஓராயிரம் பைத்துகள் (அறபி பாடல்கள்) சொல்லியிருக்கிறார்களென்றால், இவர்களின் மகிமை யெத்தகைய வாயிருத்தல் வேண்டும். இவர்களின் விலைபெற்ற பைத்துகளின் எதிரே மற்றவர்களின் பைத்துகள் எதிர் நிற்றலைக் காண முடியாது.

பின்னர், மூன்றாவது சீடர் கனம் தங்கிய தம்பி மகுமது நயினார் லெப்பை ஆலீம் ஒலியுல்லா வென்னும் மஹானே யாவர். (இம்மஹான் பரங்கிப் பேட்டை என்னும் மகுமூதுப் பந்தரில் அடங்கிச் சமாதியா யிருக்கிறார். இவர்களின் சீஷர் தான் பெரிய நாகு லெப்பை ஆலீமவர்கள். இவர்களாற் பாடப் பெற்ற நூல்கள் பலவுள.) இப்பெரும் நீதிமான் 14-விதமான கல்விகளையும் கற்று எப்பமிட்டவர்களேயாம். இவர்களால் எழுதப் பெற்றிருக்கிற * கிரந்தங்களின் மகிமையை என்னென்பேன்; அதில் வரைந்துள்ள வசனங்கள் கன்மனமுடையாருங் கரைந்து கடவுளைத் துதித்து நிற்கும்படி செய்விக்கின்றது. இந்தவிதமாய் ஹலரத் நாயகரவர்களின் உரிமைச் சீடர்கள் ஒவ்வொருவரின் பெயரும் சரிதையும் மிகுந்திருக்கின்றன. அவைகளை யெழுதப்புகின் மிக்க விரிவாகுமாதலின், விரிவஞ்சி நிறுத்தி அப்பெருமானுக்கு அப்போதைக்கப்போது உண்டான கைபிடி கைபிடிச் சீடர்களில் ஒருவரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுகின்றேன்.

அதாவது:— இத் தென்னிந்தியாவில் புலவர்நாயகமாய் விளங்கி நிற்கும் அருள்வாக்கி உமறு நாவலர் பெருமான் தான். இப்பெருமானே சிறந்த சீராப்புராணத்தின் கிரந்த கர்த்தராகும். இவர்கள் தாம்பாடியுள்ள கடவுள் வாழ்த்துப் படலத்தில் நமது பெருமானை அடியில் வருமாறு வேண்டியுள்ளார். அதாவது:—

"நம்மையா ளுடையான் வேத நபி திரு வசனந் தீனோர்
சம்மதித் திடப்பா ரெல்லாந் தழைக்கவே விளக்கஞ் செய்தோ
ரிம்மையு மறுமை யும்பே றிலங்கிய சதக்கத் துல்லா
செம்மல ரடியி ரண்டும் சிந்தையி லிருத்தி னேனே."

என்பதேயாம். மற்றப்படி புகழ்பெற்ற படிக்காசுத் தம்பிரான் நமச்சிவாயப் புலவர் முதலிய வித்துவான்களும், யோக புருடர்களில் பெரியோரும் செய்கு சதக்கத்துல்லா றகிம்ம ஹுல்லாஹு அவர்களிடத்து வந்து கலிமாச் சொல்லி அந்தரங்க ஈமான் கொண்டிருக்கிறார்கள். ஒருங்கே இந்துக்களின் வித்துவான் களிலும் ஞானவான்களிலு மாக 400-பெயர்கள் அவர்களிடத்து உள்ளீமான் கொண்டிருக்கிறதாய் வரையப் பட்டிருக்கிறது. அன்றியும், மெய்ஞ்ஞான சொரூபராகிய பீர் முகம்மது சாஹிப் அவர்களுக்கும், நமது நாயகரவர்களுக்கும் மிக்க நட்புடன் பல சம்பாஷணைகளும் நடந்திருப்பதுண்டு. (கோட்டைப் பட்டணத்தில் சமாதியாயிருக்

---

* செய்கு சதக்கத்துல்லா நாயகமவர்கள் இஷா தொழுகை நான்கு றக்காயத்திலும் பெண்கள் மாதவிடாய் கண்ட போது அன்னார் நடந்து கொள்ள வேண்டிய கிரிகைகளைப் பற்றிய (குக்கும்களை) ஒழுங்குகளை யோசித்தவர்களாய்த் தொழுகையை முடித்தார்கள். இதைத்தான் ஞானத்தின் முதிர்வு என்றும் அகக்கண் சிறப்பினால் தங்கள் தம்பி கண்டு தாயாரிடம் சொல்லியிருப்பதாய்த் தெரிந்து கொண்டார்கள்.

*கிரந்தங்களில் ஒன்று, மதுரை செய்யது இபுராகீம் புத்தகசாலையில் இருக்கிறது; அன்றியும், இது கையெழுத்துப் பிரதியாய் அறபித்தமிழிலிருந்து சுத்தத்தமிழில், கனம் உ. சி. ப. உருண்டை மீருமய்யதீன் இராவுத்தரவர்களால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இது அறபித் தமிழ் எழுதுவோரால் சில பிழைகளும் நேரிட்டுள்ளது. ப-ர்.

கிற)ஹலரத் இராவுத்தர்சாஹிபு அவர்களும் மிக்கநட்போடு கூடிப்பல சம்பாஷணைகள் செய்திருப்பதுமுண்டு; இவர்களின் குமாரர் ஹலறத்து மௌலா அபூபக்கர் சாஹிபு அவர்களும் நமது நாயகரின் நட்பாளரேயாம்; இவ்விதமாய் இகத்திலும் பரத்திலும் மாட்சிமை பெற்ற ஹலரத் சதக்கத்துல்லா நாயகரவர்கள் வாழ்ந்து வருமத்தியில், அவர்களின் ஆருயிர்த் துணைவரான ஜேஷ்ட சகோதரர் ஹலரத் சம்சுதீன் ஒலியுல்லா அவர்கள் மிக்க அற்புதங்களை யெல்லாஞ் செய்வித்து இணையில்லாத புகழைப் பெற்ற பின்னர், ஹி. பி. 1086ல் 57-வது பிராய முடிவில் துக்கசாகரமாகிய இவ்வுலகை விட்டு நீங்கிச் சுவன லோகத்தை யடைந்தார். இவர்கள் உபாத்தான (மரணம்) இரவில் தோற்றப்பட்ட அதிசயங்கள் நிரம்ப உள. அவைகளை அக்காலத்திலிருந்த அறபி வித்துவான்கள் தங்கள் தங்கள் நூல்களில் பாடல்களாகச் சொல்லியிருப்பதை இன்னும் பார்க்கலாம்; இவர்களின் இளைய சகோதரராகிய செய்கு சலாகுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹி. பி. 1098ல் துல்ஹஜ்ஜி மாதம் தாருபஹாவை (அழியாப் பதவியை) அடைந்தார்கள்; இந்த விதமான பிரிவினால், செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் சகோதரர்கள் சர்வவல்லமையுள்ள அல்லாஹுத்த ஆலா இடத்துச் சென்ற பின்னர், அவர்களின் மரணத்தையாற்றாதவர்களின் ஆறுதலுக்காக அதன் பின்னர் 17-வருடம் ஒப்பற்றவர்களாய்ச் சீவித்திருந்து ஹி. பி. 1115 வருடம் சபர்மீ 5உ வியாழக்கிழமை இரவு தம் புத்திரரையும், தம் புத்திரிகளையும், பௌத்திரரையும், பௌத்திரிகளையும் தன் ஆருயிர்த் துணைவரான சீதக்காதி மரைக்காய ரவர்களையும் விட்டு நீங்கிச் சதாகாலமுந் தன் இருதயத்தில் குடிகொண்டிருக்கும்படியான சர்வஜீவ தயாபரனை அல்லாஹுத்த ஆலாவையும் அவனின் திருத்தூதரான ரசூல் சல்லல்லாஹு அலைகிவ சல்லமவர்களையும் தியானித்தவர்களாய்ப் (அவர்கள்பேரில் உன்னதமான கடவுளின் ஆசீர்வாதமும் கிருபையுமுண்டாவதாக) பொன்னுலகு அடைந்தார்கள். (றலியல்லாஹு அன்ஹு) இவர்களின் மாட்சிமைதங்கிய சரீரமும் அவர்களின் அன்பர் சீதக்காதி மரைக்காயரவர்களின் திருப் பள்ளிவாசலில் அடக்கஞ் செய்யப் பெற்றது.

நமது உன்னதமான அல்லாஹுத்த ஆலாவும், அவர்களின் அன்பேயுருவாகி வந்த நமது நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்களின் கிருபையும் அவர்கள் பேரிலும் அவர்கள் சந்ததியார் பேரிலும் அவர்கள் சீடர்களின் பேரிலும் பொழிந்து கொண்டிருப்பதாக. இனி, அம்மஹானின் சந்ததியார்களைப் பற்றிச் சிறிது எழுதுகிறேன்.

ஹலரத் செய்கு சதக்கத்துல்லா நாயகரவர்களுக்கு ஒரு புத்திரரும ஐந்து புத்திரிகளுமிருந்தனர். அப்புத்திரரின் திருநாமம் முகம்மது லெப்பைஆலீம் என்பதேயாம். பெண்மக்களின் திருநாமங்களாவன:—(1) ஹதிஜா அம்மாள், (2) ஆமீனா அம்மாள், (3) சைனபு அம்மாள், (4) உம்மஹானி அம்மாள், (5) சாறா அம்மாள் இவர்களேயாம். இந்த அறுவர்களுக்கும் சந்ததிகள் உண்டு. இச்சந்ததியில் மேன்மைபெற்ற ஔலியாக்களும் ஆரி*பீன்களும் தார்மிஷ்டர்களும ஆலீம்களும் மதியூகி (மந்திரி)களும் மிகுந்து பிறந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் ராஜாக்களால் பெரிதும் போற்றப்பெற்று வாழ்ந்து வந்தனர்கள். ஒருதினத்தில், வள்ளல்பிரான் சீதக்காதி மரைக்காயரவர்கள், ஹலரத் செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்களின் புத்திரியாகிய சிறுவர் இருவரைத் தங்களுடைய அரசரான சேதுபதியிடம் கூட்டிக்கொண்டுபோய், மஹாராஜாவே! இதோநிற்கிற சிறுவர்கள்தான் எனது மாட்சிமைக்குரிய குருபரனின் பௌத்திர சிகாமணிகள். எனக்குப்பின் இவர்களே தங்கள் சமஸ்தானத்தில் மந்திரிகளாயிருக்கப் பாத்தியதையையுடையவர்கள். அதற்கு உத்திரவுகொடுக்கப் பிரார்த்திக்கிறேன். என்று கேட்க, சேதுபதியரசர், கனம்-மரைக்காயரவர்களின் உதாரத்துவத்தையும், குருபக்தியையும், ஸ்தோத்திரஞ்செய்து அப்படியே செய்விப்பதாய் அரசன் பேரானந்தத்துடன் சம்மதித்து எழுத்துமூலமாய் ஆதாரமுஞ் செய்வித்தனர். பின்னர், கொடைவள்ளற் பெருமானாகிய துரை, சீதக்காதிமரைக்காயரவர்கள் காலஞ்சென்றபின்னர், மேற்கண்ட இருவரில் ஜேஷ்டர் பெரியமரைக்காயர் என்ற கனம்-

---

* ச. ஹி. பி. வருவதிலெல்லாம் சகையான ஹிஜரி பிறந்து என்று அர்த்தம்வைத்துக்கொள்ளவேண்டும்.

லெப்பை நயினாமரைக்காயர் அவர்கள் இராமநாதபுரம் சம்ஸ்தானத்தில் பிரதானமந்திரியாய் நியமிக்கப்பெற்றார்கள். சின்னச் சீறாப்புராணத்திற்குக் கொடைநாயகராயிருந்து, உபகரித்திருப்பவர் இப்பெருமானேயாம். இவர்களின் தம்பி சின்ன மரைக்காயரென்ற கனம், அப்துல்காதர் ஆலீம் புலவரவர்கள் கல்விக்கடலாய் விளங்கி ஆரீபீன்களென்னும் மெய்ஞ்ஞானபுருஷோத்தமராய் ஜமாலியத்தாணமகுபீன்களாகிய ஔலியாக்களின் பிறவிச்செல்வராய்வாழ்ந்துவந்தனர். இவர்கள் அரபியிலும் தமிழிலும் பல பிரபந்தங்களியற்றியிருக்கிறார்கள். அதிற் சில பிரபந்தங்கள் பாடல்களாலியற்றப்பெற்றதேயாம். அவைகளில் பல நாகை நாயகர் ஹலரத்து செய்து சாஹுல் ஹமீது நாயகரவர்கள்பேரில் பாடப்பட்டிருக்கின்றன. ஆனால், அதிலிப்போது சொற்பக் கவிகள்தான் ஜனங்களுக்குள்நடைபெற்றுவருகின்றன. சாதாரணமாய் நம்மவர்களுக்குள், கஷ்டத்தையுடையவியாதி முதலியன நுழைந்து துன்புறுத்தும்நேரங்களில் வாசிக்கப்படுகிற அடைக்கலமாலை என்னும் சிறந்த நூலின் ஆசிரியர் இப்பெருமானேயாவர். மேலேவரைந்துள்ள கனம், பெரியநயினார் மரைக்காயர் என்ற லெப்பை நயினார் மரைக்காயர் அவர்களின் அடுத்த சகோதரர் தம்பி மரைக்காயரென்னும்காரணப்பெயரையுடைய * சுல்த்தானப்துல்காதர் மரைக்காயரவர்கள், தன் சொந்த யாத்திரைக்குச் செய்யப்பட்ட ஐத்துரூஸ் கப்பலில், உலமாக்கள், ஆலீம்கள், ஆபிதீன்கள் புலவர்களுள்பட நூற்றுக்கு அதிகமானவர்களுக்குக் கப்பற்கூலியில்லாமலும், உண்டி, உடை, செலவுமுதலியதும் கொடுத்துத் தங்களுடன் கூட்டிக்கொண்டு பரிசுத்த மக்காவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது, அங்கே தலைவராயிருந்த திரு மக்காசரீபு அவர்கள் பெரிய ஔலியாவாக இருந்தபடியால் அவர்களுக்கும், இவர்களுக்கும் நட்புண்டாயிற்று. அப்போது சரீபுசெய்குனா அவர்கள் செய்கு முகம்மது லெப்பையாலீம் மரைக்காயரவர்களின் நல்லொழுக்கத்தையும், பரோபகாரத்தையும், கல்வியின் சிறப்பையுங்கண்டு மகிழ்ந்து பட்டத்து மரைக்காயரான இப்பெருமானை விளித்து அமீருல்கிந்து என்றும், மலிக்குல்கிந்து என்றும், இமா

---

* இவர்களைப் பட்டத்துமரைக்காயரெனச் சொல்வதுமுண்டு.

ம் செய்குசதக்கத்துல்லா றகிமஹுல்லா அவர்களின் பௌத்திரராய்வந்த ஆலீமாகிய அல்லாமத்தென்றும் வாழ்த்தினார்கள். செய்குசரீபு அவர்களின் பாதகாணிக்கையாய்க்கணக்கற்ற பொருள் சமர்ப்பித்ததோடு, மிகவும் பணிந்து நின்றனர்கள். இவ்விதமாயிருந்தபொழுது பரிசுத்த ஹஜ்ஜின் தினம்கிட்டியதால், அதன்பொருட்டு அனுஷ்டானங்களையும் நிறைவேற்றினவர்களாய் ஹலரத் செய்து சரீபு அவர்களிடம் உத்திரவுபெற்றுக்கொண்டு தங்கள் ஜனனதேசம் வந்துசேர்ந்தார்கள். நிற்க, எளியோர்க்குச்செம்பொன் பிடிப்பிடியாயள்ளிக் கொடுத்துச்சதா உள்ளங்கை சிவப்பேறியிருக்கும்படியான தருமத்தையேயணிகலமாய்க்கொண்ட வள்ளலான தயாநிதிப்பிரபு ஹபீபு முஹம்மதுமரைக்காயரவர்களின் கீர்த்தியெங்கும் பரவிநிற்றலையறியாதாருமுளரோ? இந்த மாட்சிமைதங்கிய மஹானும், ஹலரத்து செய்குசதக்கத்துல்லாறலியல்லாஹு அன்ஹு அவர்களின் பௌத்திரரேயாம். இந்த மஹானின் பிறப்பைப்பற்றி யெமதுபாட்டனார் (செய்கு சதக்கத்துல்லாறலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் ஜீவியகாலத்திலேயே முன்னறிவிக்கையாகக் குறிப்புச் சொல்லியிருக்கிறார்கள்.

அதாவது:- எமது சந்ததியில் மஹா உன்னத புருஷரொருவர் பிறப்பாரென்றும், அவரது பெருமை மிகப்பெரியதென்றும் சொல்லியிருப்பதோடு அவர்களால் இயற்றப்பட்ட கசீதா என்னும் கவிதைகளிலும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இவர்க்குச் சொந்தமாக்கப்பட்ட காரணீகங்கள் மிக்க உண்டு. அதில் தமிழுலகத்தில் பிரஸ்தாபமாய் அறியப்பட்டிருக்கிற * மரைக்கா சோளமென்பதுவுமொன்று. இதன் பெருமை நவிலத்தக்கதன்று. இவர்கள் (ஹபீபு முஹம்மது மரைக்காயரவர்கள்) (கித்தாப்புகள்) அறபிஞான நூல்களைக்கற்றுக்கொண்டு வரும்பொழுதே, திடீரென்று தங்கள் படிப்பை நிறுத்திவிட்டார்கள். ஆதலால் கொஞ்சம் அறபி

---

* இதைக்கார்த்திகையடிச்சோள மென்பாருமுளர். எனில், அது கூடாதாம். பின்னை ஞானத்தின் அறிவையறிந்த மெய்யான அனுபவிகட்கும் வானசாஸ்திர நிபுணர்களுக்கும் உரைத்தால் தெரியுமேயன்றி மற்றவர்களுக்குத் தெரியாதாகலின் அதை இங்குக் கூறாதுவிட்டாம்.

ஞானநூல்களை வாசித்தவர்களென்றாலும், அல்லாஹுத்த ஆலா புறத்தில் நின்றும் "இல்முல்கிலுறென்றும் இல்முல்லதுன்னியயகியவகபியயாகிய" அறிவுண்டாகிவிட்டது. இதற்குதாரணமாகச் சில விஷயங்களைச்சொல்லுகின்றேன்.

அதாவது ஆரிமன்சுல்தான் அப்துல்காதிறென்ற குணங்குடிமஸ்தான்சாஹிபு அவர்களின் ஆசானாகிய எனது பேரனார் (கீழக்கரை) தைக்காசாஹிபு அவர்களின் மைத்துனன். அவர்கள் சொல்லியிருக்கிற தென்னவென்றால்:— புசூசு. இன்ஸான்காமில்புத்ஹுத் என்ற கித்தாப்புகளில் எனக்கும் சில ஆரீபீன்களுக்கும் அறவே அர்த்தம் தெரியாமல் மிக்க மயக்கத்தைக் கொடுக்கும் விஷயங்களையெல்லாம் நமது மைத்துனர் மரைக்காயரிடத்தில் (கலீபுமுஹம்மதுமரைக்காயரவர்கள்) கேட்டுத்தெளிந்துகொள்வோம். அவர்கள் தெரிவிக்கும் வியாக்கியானம் மிக்க ரசமாயும், அர்த்தபுஷ்டியுள்ளதாயுமிருக்குமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அன்றியும், இவர்களின் தருமத்தைப்பற்றிச் சில பெரியோர்கள் பைத்து (அறபிப்பாடல்) களில் அடியிற்கண்டபடி சொல்லியிருக்கிறார்கள்.

அஃதாவது செல்வப்பெருக்கத்தில் மாட்சிமைதங்கிய கபீபுமுகம்மது மரைக்காயரவர்களைவிட அநேகரைப் பார்த்திருக்கிறோம். ஆனால் தர்மத்தில் இவர்களைப் (கபீபு முஹம்மது மரைக்காயரவர்கள்) போலே இராஜாக்களும் ஜெயம் பெற்றார்களில்லை யென்பதேயாம்.

இன்னும் இம்மரைக்காயரவர்களைக்காலத்தில் அறபிக்கல்வியில் அல்கஸ்ஸாலியோ? எனவும்; தமிழ்க்கல்வியில் திருவள்ளுவரின் ஆசானோ? எனவும் மயங்கத்தக்கவர் ஒருவரிருந்தார். அவர்கள் ஒருசமயத்தில் இந்த மரைக்காயரவர்களின் தர்மத்தின் பிரபலம் இவ்வளவு சிறப்பாய் விளங்குவதென்னோ? இவர்களின் ஆஸ்தி 30 லக்ஷத்தை மிகைத்திராதே. ராம்லா என்பவரிடத்தில் **27**-கோடி ரூபாக்கள் இருக்கின்றதே. பாட்டல்வாலா இடத்தில் **30**-கோடி ரூபாக்கள் இருக்கின்றதே. அப்படியிருக்க, அவர்களின் கீர்த்தி இவ்வளவு பரவவில்லையே. நிச்சயமாய்க் கபீபு முகம்மது மரைக்காயரவர்களைப்பற்றியுண்டாகும் பிரஸ்தாபம் பொய்யாயிருக்குமென்று எண்ணி

யிருந்தார். இச்சந்தர்ப்பத்தில் கபீபு முஹம்மது மரைக்காயரவர்கள் காயல்பட்டணம் போனார்கள். அப்போது மேற்கண்ட சந்தேகித்தலையுடையவர் அவர்களைச் சந்திக்க நேர்ந்தபோது, சம்பாஷணை இவ்விருவருக்கும் நடந்தேறிக்கொண்டிருக்கும்.

அங்கு நடந்த தர்மத்தைக்கண்டு திகைத்துநின்றதோடு கபீபு முகம்மது மரைக்காயரவர்கள் திருவாயினின்று பிறக்கும்ஒவ்வொரு வார்த்தைகளிலும் ஞானாம்சம் நிறைந்திருந்தமைபற்றி, மிக்கஆச்சரியமுற்று, ஆனந்தமடைந்து இந்த மரைக்காயரவர்களின் தர்மத்தையும்; ஞானமே ஜ்வலிக்கின்ற அவர்களின் றன்மையையும்; என் சொல்வேன்! எனவும்; நிச்சயமாய் ஞானபொக்கிஷமும், தருமசிந்தையும் நற்குணத்தின் விசேடமும், மறுமைக்குரிய தவப்பேறும், ஒருங்கு சேர்ந்து அவர்கள் பரிசுத்த மனதை இருப்பிடமாய்க்கொண்டதாகலின் இத்தகைய மகானுக்கு நாம் யாரை யொப்பிடலாம்? ஒரு போதும் கூடாது, கூடாது, என அச்சந்தேகித் தலையுடையவரே சொல்லியிருக்கின்றனர். அன்றியும் ஒருக்கால் இவர்களெஜமான் குத்துபாய் இருக்கலாமென்று சொல்லி இருக்கிறதோடு கொடைமுதிர்ந்த வள்ளல் சீதக்காதி மரைக்காயரவர்களின் தர்மமே ஒருஉருவாய்த்திரண்டு உதித்தனோ? எனவுஞ் சொல்லியிருக்கின்றனர்.

கனம், அப்துல்காதர் மரைக்காயரவர்களின் புத்திரியும், செய்குசதக்கத்துல்லா நாயகரவர்களின் பௌத்திரியுமான முகம்மது இபுறாகீம் அம்மாளவர்களின் ஆத்மநாயகர் இஸ் மாயில் லெப்பை மாப்பிள்ளை என்பார் (1) "ளாகிலு" (2) "பாத்தினாகியா' (3) "இபாதத்துகளிலும்," ஞானாப்பியாசத்திலும் சர்க்குணத்திலும், மிகச்சிறந்தவர்களாய் இருந்ததோடுகூட பெரியோர்களின் நட்பையே தம்செல்வமெனக் கொண்டிருந்தார்கள். ஆனால் புத்திரப்பேறு ஒன்றே அவர்களுக்குக் குறைவாயிருந்தது. இதைப்பற்றிக் கொஞ்சம் விசனத்தோடிருந்த இஸ்மாயில் லெப்பை ஆலீமவர்களை ஒரு தினத்தில் அவர்களின் ஆசான் சந்தித்து உமக்குப்புத்திர பௌத்திர சந்தானமில்லாமையைப்பற்றி இவ்வளவு விசனமேன் எனச் சொன்னவர்களாய்த் தாங்கள் தரித்திருந்த தாம்பூலத்தை, செய்கு இஸ்மாயில் லெப்பை மாப்பிள்ளையவர்களை அருந்தும்படிசெய்து

உம்முடைய வியாகூலம் அகன்றேடும்படி இரண்டு சிறந்த ஆண் மகவைச் சர்வவல்லமையுள்ள அல்லாஹுத்த ஆலா, உமக்குக் கொடுப்பானென்றும், அவ்விருவரின் சேஷ்டருக்கு கபீபுமுகம்மது மரைக்காயரென்ற நாமகரணமும் சூட்டுவிப்பீராக. அன்றியும் நமது புத்திரர் அப்துல்காதர் ஆலீம்சாகிபு என்ற லெப்பைக்கனி ஆலீம் சாகிபின் புத்திரிக்கு உமது ஜேஷ்டபுத்திரனை மணமகனாய்க்கொடுத்து விடுமெனவும் சொன்னார்கள்.

இவ்விதம் வரங்கொடுத்த மஹான் அக்காலத்தில் ஜமான்குத்துபாயிருந்த ஹலரத்* அபூபக்கர்றகிமஹுல்லாஹு அவர்களேயாம்.

வரத்தின்படியே கடவுள் கிருபையால் இருகுழந்தைகளும் பிறந்தன. இதில் மூத்தவர் கபீபுமுகம்மது மரைக்காயரவர்களுக்கு மேற்கூறிய ஹலரத் லப்பைகனி ஆலீம் அவர்களின் ஜேஷ்டபுத்திரியை விவாகமுஞ் செய்யப்பெற்றது. இதுவும் ஹபீபு முஹம்மது மரைக்காயரவர்களின் பிறப்பின் வரலாற்றிலொன்றாகும். இந்தக் கபீபுமுகம்மது மரைக்காயரவர்களின் பத்தினி செய்கு சதக்கத்துல்லா நாயகரவர்களின் பேரர் மலிக்குல் உலமா அவர்களின் பௌத்திரியேயாம். இம்மாது சிரோமணிக்குத்தான் கபூபுமுகம்மது மரைக்காயரவர்கள் ரூபா 12000, மகர்கொடுத்தார்கள். மேற்கூறிய, அபூபக்கர் றஹிம்மஹுல்லாஹு அவர்களின் குமாரராகிய லெப்பைகனி ஒலியுல்லா அவர்களே செய்கு சதக்கத்துல்லா றகிம்மஹுல்லா அவர்களின் வம்சத்தில் மூன்று பெண்கள் நாயகத்தை விவாகஞ்செய்தவர்கள். இவர்களின் பாட்டனார் முதலியார் செய்ஹு ஒலியுல்லா அவர்களுக்கும், செய்கு சதக்கத்துல்லா றஸியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், அவர்களின் ஜீவகாலத்தில் ஒருவருக்கொருவர் மிக்க நட்பாளராயும் சம்பாஷணையுக்கடி செய்பவர்களாயுமிருந்தார்கள். இவ்விதசம்பாஷணைகளின் மத்தியில் ஒருசந்தர்ப்பத்தில் தங்கள் ஜீவகாலத்திலேயே நம்மிருவர் புத்திரர் புத்திரிகளுக்குள் ஒருவரோடொருவர் விவாகஞ்செய்து கொள்ளப்படவேண்டுமென்று பொதுவாய்ப் பேசநேரிட்டபோது, முதலியார் செய்கு அவர்கள் நமமவர்களுடைய பௌத்திரர் காலத்தில் அப்படியே விவாகம் நடந்தேறுக என்று சொல்லிவந்தமையால் அந்தப்படியே கபீபு முகம்மது மரைக்காயரவர்களுக்கும (செய்கு சதக்கத்துல்லா றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பௌத்திரா) ஹலரத் லெப்பைகனி ஆலீம்சாஹிபு அவர்களின் புத்திரிக்கும (முதலியார் செய்கு அவர்களின் பௌத்திரி) மேற்கண்டபடி இரண்டு முன்னறிவிக்கையோடும் விவாகம் நடைபெற்றது.

இன்னும் இது சம்பந்தமாய் நடந்தனவும் நடைபெறப்போகிறதுமான அநேக காரணங்கள் இருக்கின்றன. அவை மிக்க இரகசியமாதலின் அதைமுற்றும் விவரிக்காது போனாலும் ஒன்றைமட்டும் சிறிது சொல்லுகிறேன். அதாவது: செய்கு அபூபக்கர் றகிம்மஹு

---

* இவர்கள் தான் பாண்டிய நாடு, சோழநாடு, சேரநாடு என்று சொல்லப்பட்ட இம்மூன்று நாடுகளிலும் ஸ்பஷ்டமாய் நாகை நாயகரவர்களின் பின்னர் நன்றாய்ச் சனங்களாலறியப் பெற்றவர்கள். ஏனென்றால், நாகை நாயகர் செய்யது சாஹுல்ஹமீது ஆண்டவரவர்கள் தங்கள் ஜீவகாலத்திலேயே தங்களின் தர்காவில் (பள்ளிவாசல்) கொஞ்ச தூரத்தில் ‡ சங்கிலியொன்று தூக்கியிருந்த தோடுகூட இந்தச் சங்கிலியை குப்புஜ் ஜமான் வந்து கையை நீட்டுவார்களாகில் அச்சங்கிலி தாழ்ந்து வந்து அவர்கையில் அகப்படுமென்றும், மற்றவர்கள் கையில் ஒருபொழுதும் கிட்டாதென்றும் திருவாய்மலர்ந்தருளி யிருந்தார்கள். இந்தச் சங்கிலியை எத்தனையோ ஒளலியாக்கள் (ஞானவான்கள்) தொட முயற்சித்ததில் கூடாமற் போயிற்று. ஆனால், இவர்கள் (ஹலரத்து அபூபக்கர்றகிம் மஹுல்லாஹு) கையை நீட்டியவுடன் அச்சங்கிலி தாழ்ந்து வந்து இவர்கள் கைக்கு எட்டிற்று. அதிலிருந்து சங்கிலியும் மறைந்தது. அது பற்றித் தான் ஸ்பஷ்டமாக இவர்கள் குத்துபுஸ்ஜமானென்று அறியப்பட்டது. இந்த விவரத்தை அநேக உலமாக்களும் தமிழ் வித்துவான்களும் பாடியிருக்கிறார்கள். அன்றியும், சென்னை, நவாபு அவர்கள் தொண்டியில் ஷை ஹலரத்து அபூபக்கர் சாஹிபு அவர்களைக் கண்ணுற்ற போது நடந்த அதிசயங்கள் பல உள. ஷை நவாபு அவர்களே இவர்களை ஜமான் குத்பு என்று சாட்சி பகர்ந்திருக்கிறதுந் தவிர அவர்கள் சந்தியார்க்கு (யெவ்மியா) என்னும் உபகாரச் சம்பளம் ரூபா முப்பது அவராலேயே யேற்படுத்தப் பட்டு இன்றும் நடந்து வருகிறது. இச்சந்ததியாரும் செய்கு சதக்கத்துல்லா நாயகமவர்களின் பௌத்திரர்களேயாம்.

‡ முடிவு காலத்தைக் குறிக்கும் சங்கிலியொன்று இன்னமும், நாகூர்த்தர்க்காவிற் றொங்கிக் கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. ஷை சங்கிலியை நாகூர் நாயகர் அவர்கள் சித்திரக்கூடத்தி லிருந்து கொண்டுவந்த தாயும் கன்சுல்களுமாத்து என்னுங் கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது. ஷை சங்கிலி முன் கூறப்பட்ட சங்கிலியைவிட வேறு போலும். ப -ர்.

ல்லா அவர்களின் (குத்பியத்திற்குக் காரணர் ஹபீபு முகம்மது மரைக்காயரவர்களேயாகுமென்க.) இந்த அரியவிஷயத்தின் அந்தரங்கம் அகந்துறந்த ஞானிகள் சொல்லாமலே அறிவார்களானதினால் இம்மட்டோடுநிறுத்துகின்றேன். மாக்ஷிமைதங்கிய ஹபீபு முகம்மது மரைக்காயரவர்களின் தர்மத்தின் ஜ்வாலையானது, அவர்களின் மூலபிரான் ஹலரத் அபூபக்கர் சிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் ராஜரீகத் தலைநகரான திரு *மதினா நகரத்திலும் பிரகாசித்தது. அங்கு ஹபீபு முகம்மது கிற்கறீ என இம்மஹானின் பெயர் அழைக்கப்படுகின்றது. இவர்களால் கட்டப்பட்ட மஜ்திகளும் வேதபாடசாலைகளும், சத்திரங்களும் அங்கங்கே நிரம்பஉள. அவைகளை விரிக்கிற்பெருகுமாதலின், அவைகளிலொன்றைமட்டும் இங்கு குறிப்பிக்கின்றேன் மதுரையம்பதிக்கடுத்திருக்கிற பாம்பன் நகருக்கருகே நீர்வளம் நிலவளங்களாற் சிறந்து சோலைகள் சூழ்ந்து பிரகாசிக்கும்படி ஒருபட்டணத்தை யுண்டுபண்ணியதில் அழகுசதா ஜொலித்துக்கொண்டிருக்கிற ஒருமஜீதையும் கட்டி முடித்தார்கள். அது இன்றுவரை †கபீபரசன் பட்டணமென்று வழங்குகின்றதைப் பார்க்கலாம். இதன்சிறப்பை தவராஜ செம்மேருவான நாவலர்கோன் *செய்கு அப்துல்காதர் நயினாலெப்பை ஆலீமவர்களாற் பாடப்பெற்றிருக்கின்றது. இவர்களின் ஜாவடிகளில் யானைகள், ஒட்டகைகள், குதிரைகள் நிறைந்து நின்றன. சித்திரம் தீர்ந்த பல்லக்கோ பல உண்டு. வேலையாட்களோ அநேகர். இவர்களுக்குப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கூட அதிக மதிப்பும் மரியாதையும நடந்துவந்தது. இந்தவிதமாய் இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் ஜெயகம்பீரராய்ப் போற்றப்பட்டு வாழ்ந்த இம்மஹானின் நற்குணம் நற்செய்கைகளை யென் சொல்வேன்? இவர்களின் சகோதரர் ஹலரத்அப்துல்காதிறுசாஹிபு மரைக்காயர் அவர்களும் பெருந்தர்மசீலரேயாம். இவர்களின் அருமைத் திருப்புதல்வர் முகம்மதுகாசீம் மரைக்காயர் அவர்கள் ஆலீமாகவும் ஹாபிலாகவுமிருந்தார்கள். இவர்கள் பரிசுத்த ரம்சான் மாசத்தில் தராவீகு தொழுகையில் ஒரேரக்அத்தில் பரிசுத்த திருக்குரான் முழுமையும் பாராமல் மனனித்து ஓதுகின்றவர்களாயிருந்தாகள். இவர்கள் ஒருசமயத்தில் நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது தனக்கு தலைமுடி இறக்கிய நாவிதனுக்கு ஓராயிரம் பெறுமதிப்புள்ள ஒரு தோட்டத்தை நன்கொடையளித்தனர். இவரின் இளையசகோதரர் செய்யது இசுமாஹில் லெப்பை மரைக்காயரவர்கள் தமிழில் மிகத்தேர்ச்சியுற்றவர்கள். இதற்கு அறிகுறியாக நபிமூசா அலைஹிவஸலாமவர்களின் சரித்திரத்தைப்பாடல்களாற்சொல்லியிருக்கிறார்கள். அது மூசா நபிகாவியமென வழங்கப்பட்டுவருகிறது. மஹான் ஹபீபு முகம்மது மரைக்காயரவர்களின் புத்திரரத்தினமான செய்குசதக்கத்துல்லா மரைக்காயரவர்களும் வகைதொகையில்லாதளிக்கும் பெரும்புண்ணிய சீலரேயாம். அன்றியும் அவர்களின் தேஜசானது மிகச்சிறந்து எப்போதும் ஒளிவோடுகூடி ஜ்வாலித்துக்கொண்டிருக்கும். இத்தகைய பெரியோரின் பிதா தர்மப்பிரபு. ஹபீபு முஹம்மதி மரைக்காயரவர்கள் 48-வயது நிறைந்துவரும்பொழுது இவ்வுலகத்தை விட்டார்கள். இந்தவிதமாய் இரு

---

* பலவருடங்களுக்கு முன் சிலர் கீழக்கரையிலிருந்து அரபிநாட்டிற்குப் போயிருந்தார்கள். அங்குள்ளார் அவர்களைக்கண்டு நீங்கள் எந்நாட்டார் என்று கேட்டார்கள். அப்போது வழக்கமாய் இந்நாட்டார் மதினாசி என்று சொல்வதுபோற் சொல்லாமல் வாய் முந்துதலால் பழமையாய் நாங்கள் கிற்கிறு என்று சொன்ன வுடனே அவர்கள், நீங்கள் சகி(தர்மாபட்டர்) ஹபீபு முகம்மது மரைக்காயரவர்களின் வாசஸ்தலத்திலுள்ளவர்களா? அந்தத்தர்மப் பிரபு இருக்கிறாரா? என்று கேட்டார்கள். அதற்கு இவர்கள் மௌத்தாகி விட்டதாய்ச் சொன்னார்கள். இந்நாலில்லாஹி என்று கிப்லாவுக்கு நேரே திரும்பி பாத்திஹாவும் ஓதிதுவாவும் செய்து அவர்களை கபீபு முகம்மது மரைக்காயர்) பலவாறு துதித்ததை இங்குவந்து (கீழக்கரை) சொல்லியிருக்கிறார்கள்.

† இதைக்கண்ட பெரியோர்கள், "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவஸ்தைப் பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே—வித்தகமாய்க், காதிவிளையாடியிரு கைவீசிவந்தாலும், தாதி மனம் நீர்க் குடத்தே தான்" என்ற பட்டணத்தார் வாய்மொழியை இம்மஹானிடத்திலேயே யன்றி மற்றோரிடத்திற் கண்டில மென்றிருக்கின்றனர்.

* இவர்கள்தான் குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களின் வித்தையில் தோழராயிருந்தவர்கள். இவர்களாலியற்றப்பெற்ற புராணங்கள், மாலைகள், அந்தாதிகள், கலம்பகங்கள், சித்திரக்கவிகள்முதலியன பல உண்டு. அவைகளாவன:— 1-புது குஷாம். 2-திருமணிமாலை. 3-பரிசுத்த மக்காக் கலம்பகம். 4-நாகையந்தாதி இவைகளுமன்றி இன்னுமுள.

வுலகத்தில் புகழ்பெற்ற பெருமான்களின் பெருமை எல்லாம் ஒலி நாயகர் சாஹுல்ஹமீது ஆண்டவர்களுடையவும் * பௌத்திரமாணிக்கநாயகர் செய்குசதக்கத்துல்லாறகிம்ஹுல்லா அவர்களுடையவும் பிரார்த்தனையின் பலனேயாம். இத்தகைய ஹலரத் செய்குசதக்கத்துல்லா நாயகரவர்களின் சந்ததியில் மேல்வரையப்பெற்ற மஹான்களேயன்றி இன்னுமெத்தனையோ மஹான்களுற்பவித்திருக்கின்றனர். அவர்களிற் சிலராவன:—

(1) லெப்பைதம்பி மரைக்காயரவர்கள்.
(2) முகமதிஸ்மாஹில் மரைக்காயரவர்கள்.
(3) † செய்கு. அப்துல்காதர் நயினார் லெப்பை ஆலிமவர்கள்;
(4) இவர்களின் குமாரர்கள் ‡ அப்துல்காதர்லெப்பை ஆலிம் அவர்கள் இவர்களும் இன்னும் பலருமாம்.

மேற்கண்ட நால்வர்களில் ஒருவரான ஹலரத் அப்துல்காதர் லெப்பை ஆலிம் பௌத்திரரே. இந்துக்களிற் பெரியோரும், கடவுளே எனப்போற்றுகின்ற குணங்குடி மஸ்தான்சாஹிபு அவர்களின் ஆசானும், எமதுஅன்பு நிறைந்த பேரருமான செய்யது அப்துல்காதிறுலெப்பை ஆலிமவர்களேயாம். ஞானவான்களிற் சிறந்திலங்கானின்ற காசிம்புலவரவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழில் " வாழும் கீழக்கரை எங்கள் நாடே " என்று சொல்லியிருப்பதும், ஹலரத் மௌலானா பீருமுகம்மது சாஹிபு நாயகரவர்கள் தாங்கள் பாடின " பிஸ்மில்குறம்" என்னும் புத்தகத்தின் துவக்கத்தில் இரண்டாம்பாட்டில் சொல்லியிருப்பதையும், சீறாப்புராணகர்த்தா உமறுநாவலர் கோனவர்கள் கடவுள் வாழ்த்துப்படலத்தில் குத்துபுகளுக்கெல்லாம் தலைமைபெற்ற எம்பெருமானார் ஹலரத்து முகையதீன் ஆண்டவனவர்களைப்பாடி வேண்டித் தீர்ந்தபின்னர், நாகூர் நாயகரை வழக்கம்போல் கூறாது செய்குசதக்கத்துல்லா நாயகரைக் குறித்திருப்பதின் இரகசியங்களும் பல உள. இவைகளை அகக்கண் துறந்த மஹானுபாவர்களேயறிவர். அப்படியறிந்தால் இம்மை மறுமைப்பயனைப்பெற்றவர்கள் இவர்களேயென நன்குகண்டு தேறித்தெளிவர். மேலும் (முக்கிகூன்) என்னும் அகந்தெளிந்த ஞானவான்களிடத்தில் காரணங்கள் அவசியமற்று இழிவுபடுத்தக்கூடியதாம். இதைச்சித்து மாயை, எனத்தள்ளிவிடுவார் ஞானநூலார். இதைப்பற்றி வேதபுராணம் " ஆழிகடலினைவருத்திட்டாலும் அமரர்வந்தேவல்செய்திட்டாலும், பாழாம்சவம்பேசவைத்திட்டாலும் பகரும்பொன் வெள்ளி பண்ணினாலும், நாளுமழைபெய்யவுரைத்திட்டாலும் நயமாய்வான்மட்டும் பறந்திட்டாலும், வாழுந்தௌஹீதினிலையில்லென வள்ளல்நபியிறசூலோதினார்" எனக்கோஷிக்கின்றதை இங்குக் கவனிக்கத்தக்கதாம். ஆகவே இத்தகைய பெருமான்களில் நாயகரான செய்குசதக்கத்துல்லா ஒலியுல்லா அவர்களே இச்சிறியேனாகிய என்னைநோக்கி பௌத்திரா! நீ வனவாசம்போகவேண்டாம். வீடே உனக்குக் காடாகும், எனக்கிருபைகூர்ந்து விதித்தருளிய எம்பிரான் பிதாமகனின் திருவடிகளை முக்காலும் நமஸ்கரித்து இச்சரித்திரச்சுருக்கத்தை முடித்து ஓய்வடைகின்றேன். ஆமீன்.

* செய்யது அப்துல்காதிறு,
கீழக்கரை.

◆

---

*கீழக்கரை-இங்குவந்திருந்த ஹலாத் மௌலானா காயின் முகம்மில் செய்கு அலிஜபரீதீன் மௌலானா அவர்கள். நான் இத்தேயத்திற்கு வந்தது அலாத்து சதக்கத்துல்லா நாயகரின் கபுரை ஜியாரத் செய்வதற்கேயெனச் சொல்லியிருக்கிறார்கள்.

† இவர்களுக்குத்தான் வெற்றிலைப்பையும், பாக்குப்பையும் பேசினது. மழையில்லாதகாலத்தில் அவர்கள் வீட்டு மாதுளைமரத்திற்குமட்டும் மழை பெய்தது.

‡ இவர்கள்தான் சென்னையிலுள்ள காவியல் குவாத்து முதலானவர்களுக்கு பு. கு. சு. கித்தாப்பு ஓதிக்கொடுத்தவர்கள். இவர்களின் குமாரர்தான் நபிகள்நாயகத்தை நேரிற்கண்டு ஆசைமிகுதியால் பைத்துச்சொல்லியதிலேயே இவ்வுலகைவிட்டவர்கள்.

* இந்த மஹான் அவர்கள் தான் தற்காலத்தில் ஆரிபீன்களில் ஒருதிலதமாய் விளங்கிநிற்கும் மஹானுபாவர். இவர்களின் அற்புதங்கள் பலஉள. அவர்களின் இரண்டு மலர்போன்ற பாதங்கள் என் சிரமீதிருப்பதாக.

ப — ர்.

நாயன் துணை.

விதவைகளின் விவாகமும், இஸ்லா மார்க்கமும்.

ஓராயிர வருடங்களுக்குமுன் நாம், இந்தியாவின் மயானங்களைப் பார்த்திருந்தோமானால், *மாண்ட கணவனோடு கிலேசித்தலையுடைய வாலிபப் பெண்கள் இருதயங் கலங்கினவர்களாயும், கண்ணீர் சொரிந்தவர்களாயும், கூந்தலவிழ்ந்தவர்களாயும், இளைத்த மேனியையுடையவர்களாயும், அந்தோ! ஐயோ!! என அலறினவர்களாயும், அக்கினியில் தத்தங் கணவனோடு தகனிக்கப்படுதல் புலப்பட்டிருக்கும். ஜீவகாருண்ணியரென்று சொல்லப்படுகிற இந்துக்களின் இந்த இரக்கமறுஞ் செய்கை கொலைஞர்களையும் நடுங்கச்செய்யும்படியாயிருந்தது. இந்தப் பாதகத் தொழிலையவர்கள் ஏன் அனுஷ்டித்து வந்தார்களென்றால், ஸ்திரீகளுக்கு அவர்களுடைய வேதத்தில் யாதொரு சுதந்தரமுமில்லையெனவும், அவர்களை மிருகத்தைவிடக் கீழான தன்மையில் ஆளுதல் ஆண்மக்களின் ஆண்மைத்தனமெனவும், தங்கள்ஜீவியத்தின் முடிவோடு அவர்களின் ஜீவியமும் முடிக்கப்படவேண்டுமெனவும், கணவனுடைய ஜீவியகாலத்தின் பின்னர் அவர்கள் ஒருபொழுதும் சுகஜீவிகளாயிருந்து உலக இன்பத்தோடு கூடி ஒரே கடவுளை வணங்கி நிற்பதில் முற்றும் பிரியமற்றவர்களாயும், அப்படிச் செய்விப்பதே ஓர் மோக்ஷவழி என்றுமெண்ணியிருந்தப் பாதகங்களை மிகுதியாகச் செய்துவந்தார்கள். இந்த மான்ஷீக உயிர்வதையானது தினே தினே விர்த்தியாகி மிகப் பல்கிக்கொண்டேவந்தது. இஃது எவ்வளவுகாலம் நீடித்திருந்ததென்றால், முஸ்லீம் மன்னர்கள் இந்தியாவில் தங்கள்மார்க்கத்தின் ஜீவகாருண்ணியப்பெருமைகளை வெளிப்படுத்தும்வரையிற்றான். ஐயோ! கடவுளே! சர்வஜீவதயாபரா? நெருப்பில் தகித்தல் என்னும் இக்கொடிய உயிர்வதையை முற்றும் தொலைக்க உன் கிருபை நிறைந்த மார்க்கத்தார் உலகத்தில் ஒருவருமில்லையா? நேற்றுப் பஞ்சணையில் நித்திரைசெய்துகொண்டிருந்த மணமகள் இன்று நெருப்பில் தகிக்கப்பட்டனளே! அந்தோ பரிதாபம்! அவள் மெல்லிய தேகம் நெருப்பில் வேகின்றதே!

இந்தத் துர்ப்பாக்கியத்தையுடைய எங்கள் மதத்தில் உன்னன்புநிறைந்தவரை அனுப்பிவையெனக் கடவுளைப் பலவாறு பிரார்த்தனைசெய்யும் பெற்றோர்களும், பெண்களும், மற்றவர்களும் பிரார்த்தனையை நிறைவேற்றக், கடவுள் கிருபை, நிச்சயமாய்த் தெரிந்து கொடுத்திருக்கிற உலகத்தவர்களுக்கெல்லாம் சுதந்தரத்தை விட்டுக்கொண்டிருக்கிற எல்லாவற்றின் ஆரம்பமுதல் முடிவுவரையுள்ள எல்லா நன்மைகளையும் எல்லாவித லக்ஷணங்களின் அஸ்திவாரத்தையும் தனக்குள்ளே வைத்திருக்கிற பரிசுத்தமான குரானையுடைய முஸ்லீம்கள் இந்தியாவில் வரும்படியாயிற்று. (உண்மையாகவே அல்லாஹுத்த ஆலா (கடவுள்) உங்களுக்குப் பரிசுத்தமான இஸ்லாத்தைத் தெரிந்து தந்தான். அதனால், நீங்கள் அந்த மார்க்கத்தில் முஸ்லீமாயிருக்கிற தன்மையிலேயன்றி, மரணத்தையடையவேண்டாம். (திருக்குரான். 1+16) அவர்கள் பரிசுத்த நபிஅவர்களினது பரிசுத்தமுள்ள திருக்குரானினதும் கட்டளைகளை நிறைவேற்ற தீவிரித்தார்கள். அக்கட்டளை வருமாறு:— "கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவனை நீதியில்லாமல் கொலைசெய்யாதே. மனிதர்கள் பெரும்வகுப்பினராகவும் ஜாதிகளாகவும் பிரிந்திருக்கிறார்கள். தீங்கைச்செய்ய எவன் நிரம்பவும் பயப்படுகிறானோ அவன்றான் கடவுளுடைய பார்வையில் மிக்கமேன்மைபெற்றவன். (உயர்ந்த ஜாதியினன்) மான்ஷீகத் தன்மையைச்சிருஷ்டித்தவரும் எஜமானருமான அவர் (கடவுள்) எல்லாரையும் சரியாகப் பார்க்கிறார். ஒரு ஜீவனை நீங்கள் மரியாதையாய் நடப்பிவியுங்கள். (H. Y. குமாரன்)," "ஊமைத்தன்மையடைந்தவர்களையும்" கீழ்ப்படிந்து வேலைசெய்கிறவர்களையும் (பெண்களையும்) கொடூரமாய் நடத்திவிக்கிறவர்கள் முடிவான தீர்மானம் (கியாமம்) செய்விக்கிறநாளில் பலத்த தண்டனையைப் பெற்றுக்கொள்வார்கள்") எனவும், சொல்லப்பட்டிருக்கிறது. கணவனையிழந்த கைம்பெண்களை யாதரித்துக் காப்பாற்றுங்கள். அப்ப

---

* The History of India by James Great.

டிக் காப்பாற்றுகிறவன் இரவெல்லாந் தொழுகையையும் (வணக்கம்) பகலெல்லாம் நோன்பையும் (விரதம்) அனுஷ்டித்தவனடையும நன்மையை யடைவான். (ஹதீது) ஹலரத் முகம்மது ஸல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் கட்டளை அப்படி முயற்சித்தவர்களில் முதன்மைபெற்றவரும, இந்துக்களால் பெரிதும் போற்றப்பெற்றவரும், அவர்களுடைய மகளிரைத் தீயில் வேவிக்க இஷ்டமற்று அவர்களுடைய பெண்களைத்தான் விவாகஞ் செய்துகொண்டதுமன்றித் தன் சந்ததியார்களுக்கும் அப்படிச் செய்விக்கும்படி செய்தவருமான, கி-பி. 1556-ல் இந்தியாவில் ஏகசக்ராதிபதியாயிருந்த அக்பர் என்பவரை யறியாதாருமுளரோ?

இந்தப்பலமான மாறுதலை அவர் மார்க்கம் அவரை மறுக்கும்படிசெய்ததேயன்றி மற்றப்படியல்ல இந்த ஜீவகாருண்ணியம் இஸ்லாத்தினாற் பெறப்பட்டதுபோல் மற்றமதங்களாற் பெறப்படவில்லை. இப்போது கொடிய தொந்தரவையும், பலத்த அவமானத்தையும் விளைவித்துக்கொண்டிருக்கிற விதவைகளின் பரிதாபம், அதனால். (இஸ்லாம்) தான் முற்றும் நிவிர்த்திபெறக்கூடும் என்பதைக் கீழே வருவனவற்றால் தெரியலாம்.

1901-ம் வருஷத்திய ஜனசங்கைக் கணக்குப்படிப் பெங்காளத்தில் 55-லக்ஷம்; விதவைகளிருப்பதாய்த் தெரிவித்திருக்கிறது. இதில் அநேகபாகம் இந்துக்களுக்குரியதே யென்பதை நாம்சொல்லாமலே தெரியுமன்றோ? ஐயோ! ஒரு பட்டணத்தில் மட்டும் இப்படி விதவைகள் நிறைந்திருந்தால், இந்தியாமுழுதும் எத்தனைகோடி விதவைகள் நிறைந்திருப்பார்களென்பதை நாம்சொல்லவேண்டியதில்லை. அந்தோ! அவர்களின்கதி அதோகதிதான். அவர்களை யொருபோதும் இந்துமார்க்கம் திரும்பிப்பார்க்கப்போகிறதேயில்லை. இந்தக் கொடுமையைக் கவனிக்கும்பொழுது முற்காலத்தில் நடந்த அநாகரீகச்செய்கையான அக்கினிகுண்டமாவது நன்று நன்று என்று சொல்லும்படியாயிருக்கிறது. கல் மனமுடையாரும் கரைந்துருகத்தக்க இந்தப் பரிதாபகரமான நிலைமையில், அநேகவருடங்களுக்குமுன்னமேயே பரிசுத்தமுள்ள குரான் விதவைகளின்பேரில் எவ்வளவு சுதந்தரத்தையுங் காருண்ணியத்தையுஞ் சொரிந்திருக்கிறது.

முஸ்லீம்களே? ("உங்களினின்றும் மனைவிகளை விட்டு விட்டு மரணமடைந்தவர்களுடைய பெண்கள் நான்குமாதமும், பத்துநாட்களும் அவர்களுடைய மனதைக்கொண்டு வழிபார்க்கவும், பார்த்த பொழுதே அவர்கள் தவணையைக் கழித்து விட்டார்களே யானால், (நான்கு மாதத்தையும் பத்து நாட்களையும்) அதன் பிறகு அவர்கள் மார்க்கத்தின்படி (இஸ்லாம்) அவர்களின் மனம் போலச்(கணவனைத் தாங்களே தெரிந்து அங்கீகரித்தல் என்னும் விவாகம்) செய்வதில் உங்கள்பேரில் குற்றமில்லை யென்பதும் பிறவுமாம். உலகத்தின் தீர்க்கதரிசியாகிய ஹலரத்து முகம்மதுமுஸ்தபாரசூல் சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்கள் அந்த இரக்கமுள்ள உயர்வுபெற்ற கட்டளையின்படியே முதன் முதலில் விதவாவிவாகஞ்செய்து எல்லா வகுப்பினர்க்கும் அனுஷ்டானத்திற் காட்டியிருக்கிறார்களென்றால், விதவைகளின் பரிதாபத்தை இஸ்லாமார்க்கம் எவ்விதமாய் நிவிர்த்திக்கிறதென்பது வெள்ளிடைமலைபோல் தெரிகின்றதல்லவா?

நண்பர்காள்! இந்த மேன்மைதங்கிய இஸ்லாத்தின் வழிகளைப் பின் பற்றினால், நிச்சயமாய் உங்களுக்குச் சரியான பாதையைக்காட்டி மோக்ஷத்தைப் பயப்பிக்குமாதலின், அதுவே உங்கள் இருதயம நிறைந்த மனோபாக்கியமாயிருக்கவேண்டும்; இதற்கிணங்க ஆங்கிலேயக் கல்விமான்களால் எழுதப்பட்ட (பாப்லர் என் சைக்கிளோபீடியா 7-வது வால்யம் 326ம் பக்கம்) தெரிவிக்கிற தென்னவெனில், குரானின் பாஷாந்தரம் யாதொரு கலப்புமற்ற பரிசுத்தமான அரபிபாஷையாக விருக்கிறது. அதன் வசன நடையானது மனதைக் கவரத்தக்கதாயிருக்கிறது. அதன் செய்யுளலங்காரமோ இந்நாள்வரையில் ஒப்பற்றதாகவே யிருக்கிறது. அதிற் சொல்லப்பட்டிருக்கிற நீதியும், கற்பனையும், சுத்தமானவைகள். யாராவதொருவர் அக்கட்டளையைக் கண்டிப்பாயனுஷ்டித்து வருவாரேயாகில் அவர் சந்தேகமில்லாமற் பரிசுத்தராவர்.

இங்ஙனம்,
ஹாஜி அப்துல்காதர்,
திருவனந்தபுரம்.

சமாசாரக்கொத்து.

முஸ்லீம் மாணாக்கர்கள் பைபிளை வாசிக்க மறுத்துவிட்டார்கள்.

'பேருத்' என்னும் நகரத்திலுள்ள அமெரிக்கன் கலாசாலையில் எகிப்து தேசத்து சில முஸ்லீம் சிறுவர்கள் கல்விகற்று வந்தார்கள். தலைமை யுபாத்தியாயர் முஸ்லீம்பிள்ளைகளைப் பைபிள் படிக்கும்படி கட்டாயப்படுத்தினார். அன்றியும், கிறிஸ்தவப்பிள்ளைகள் ஜபம்செய்வதைப்போல முஸ்லீம்பிள்ளைகளையும் ஜபம் செய்யும்படி சொன்னார். ஆனால், அம்முஸ்லீம் மாணாக்கர்கள் தலைமை யுபாத்தியாயரை எதிர்த்து, அப்படியொருபோதுஞ்செய்யமாட்டோமென்றும், அப்படிச் செய்யும்படி நீர் கட்டாயப்படுத்தக்கூடாதென்றும், சொன்னார்கள். இந்தச்செய்தி அஸ்தானாவிலுள்ள அமெரிக்கன் அம்பாஷிடருக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த அம்பாஷிடர் தலைமை யுபாத்தியாயரை இனிமேல் முஸ்லீம் மாணாக்கர்களைப் பைபிள் படிக்கும்படியாவது, ஜெபம் செய்யும்படியாவது கட்டாயப்படுத்தக்கூடாதென்று செய்துவிட்டார். பிறகு கிறிஸ்தவர்கள் தாங்கள் ஜெபஞ்செய்யும்பொருட்டு வேறிடம்பார்த்துக்கொண்டார்கள்.

* * *

ஒருகிறிஸ்தவப்பாதிரி இஸ்லாமார்க்கத்தைத் தழுவினார்.

"போல்" என்னும் பெயருள்ள கல்வியிற்சிறந்த கிறிஸ்தவப்பாதிரி ஒருவர், எப்போதும் நம்மவர் மார்க்கத்தை யெதிர்த்து நம்மவருடன் தர்க்கஞ் செய்துகொண்டுவந்தார். மேலும் அவர் நம்முடைய பரிசுத்த குரானின்மீது முற்காலத்துப்பாதிரிகள் துவேஷத்தினால் கட்டிவிட்ட பொய்க்கதைகளைக் கடைப்பிடித்து, திருக்குரானைக் கையில் வைத்துக்கொண்டே நம்மவருடன் தர்க்கஞ்செய்தார். அவர் எவ்வளவு கெம்பீரமாய்த் தர்க்கஞ்செய்துவந்தாலுங்கூட நம்மவர்களின் உண்மையான நியாயத்திற்கு முன்னால், அவருடைய வாக்குவாதங்கள் நிலைபெறாது இறந்தொழிந்தன. அன்றியும், முஸ்லீம்களால் அவரப்போது கைக்கொண்டிருந்த கிறிஸ்தவமார்க்கத்திலுள்ள பல அபத்தங்களை அவருக்கெடுத்துக்காட்டி அவரை இஸ்லாமார்க்கத்துக்கு அழைத்தனர். அவர் இவ்விரண்டு மார்க்கத்தையும் பல நாட்களாய்ச் சீர்தூக்கிப்பார்த்து இஸ்லாம் மார்க்கமே உன்னதமான மார்க்கமெனத் தேர்ந்துணர்ந்து ஏழுகோடி முஸ்லீம்கள்நிறைந்துள்ள சைநாதேசத்தின் கந்தோன்புரியில் பகிரங்கமாய் இஸ்லாமார்க்கத்தை யனுசரித்து முஸ்லீம் ஆயினர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 APR 1910
MADRAS.

பிஸ்மில்லாஹ்

இஸ்லாம் நேசன்.

புஸ்தகம் 1.] 1910ம் ௵ மார்ச்சு௴ [ஸஞ்சிகை 3.

நமது பத்திரிகை.

"இஸ்லாம்நேசன்" என்னும் பத்திரிகையானது, நம்மவர்கள் கல்வி யபிவிர்த்தியினும், ஒற்றுமையுணர்ச்சியினுஞ்சிறந்து விளங்கி நிற்கவும், நமது முன்னோர்கள் கல்வியில் எவ்வளவு தேர்ச்சியடைந்து சிறந்து விளங்கினரென்பதை யறிந்துணர்ந்து அதன்படி யொழுகி நிற்கவும், அவர்கள் நம்மார்க்க விர்த்தியை நாடி யெவ்வளவு அரும்பெருங்கஷ்டங்களை யெல்லாமனுபவித்து வந்தனரென்பதைத் தெரிந்தறிந்து அதன்படி நாமும் செய்துவரவும், இக்காலத்தில் நம்மவர்கள் கல்வியை முற்றுமிழந்து அதட்டி யெழுப்பினும் கண்களை விழிக்காத ஆழமான நித்திரையிலிருப்பதை யவர்களுணர்ந்து கல்வியைக்கடைப்பிடித்தொழுகவும், நம்மவர்களின் மலிந்து விளங்குகின்ற ஏழை முஸ்லீம் சிறுவர்களுக்கு அங்கங்கே தருமப்பாடசாலைகள்ஏற்படுத்தியவர்களை மனிதத்தன்மையடையச் செய்விக்கவும், நம்மவர்களின் பரிதாப ஸ்திதியைக் கண்களாற் கண்டும், காதுகளாற் கேட்டும் நன்றாக வனுபவத்திற்றெரிந்திருந்துங்கூட நம்மவர்கள் முன்னேறுதலுக்குச் சிறிதும் முயற்சியெடுக்காதிருக்கும் நம்மவர்களின் செல்வவான்களை யவர்களின் மமதைகளை விட்டுத்திரும்பி நம்மவர்களுக்காக உழைத்துவரத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறதற்காகவும் மூன்று மாதத்திற் கொருமுறை நடைபெறும் ஒரு சிறுபத்திரிகையேயாம்.

ஆனாற்கல்வியபிவிருத்தியிலேனும், செல்வப்பெருக்கத்திலேனும் நமது முன்னோர்களைப்போற் சிறந்து விளங்க அலட்சியஞ்செய்துகொண்டிருக்கிற நமதன்பார்ந்த முஸ்லீம்சகோதரர்கள், மூன்று மாதத்துக் கொருமுறை இப்பத்திரிகையைப்பெறுவதிலிருந்து, அவர்கள் நன்மையையடையக்கூடுமா? என்பதைப்பலதடவையென்னிடத்தில்

நேயர்கள் விளைவிக்கொண்டிருப்பதுண்டு. நிச்சயமாய் அவர்கள் நன்மையடையக் கூடுமென்பதுண்மை. ஆனால், அவ்வளவு சிறந்த பயனையவர்கள் சீக்கிரத்திலடையமாட்டார்களென்பதுந் துணிபு. நமது பத்திரிகையை, அன்புமிக்க முஸ்லீம் சகோதரர்களின் பொருட்டுமாதமொருமுறை நடத்துவிக்கப் பாம்பையிலுள்ள எனது நண்பர்களும், மற்றத்தேசங்களிலுள்ள அன்பர்களும், என்னை வற்புறுத்தி நின்றாலும், அவ்விதம் நடத்துவிக்க நமது நண்பர்களின் ஆதரிப்பு மிகக்குறைவாயிருக்கிறதைப் பற்றி விசனிக்கிறேன். நமது பத்திரிகையைத் தனவான்களும், பரம ஏழைகளும், வாங்கி வாசிக்க வேண்டுமென்ற ஒருபெரிய கருத்தைமனதிற்கொண்டவனாய், வருஷமொன்றுக்கு ரூபா-முக்கால் சந்தாவேற்படுத்தி, நடத்திவருமிக்காலத்திலேயே, நமதுமுஸ்லீங்களிற்பெரும்பாலார் அதையாதரிக்கவில்லை. தென்னிந்தியாவில் நமது இஸ்லாம் சகோதரர்கள் 2500000-த்துக்கு மேற்பட்டிருந்துங்கூட அவர்களுடைய கடைக்கண்கள் தாமும் நம்முடைய பத்திரிகையின்மீது படவில்லை. இந்துக்களும், கிறிஸ்தவர்களும் தென்னிந்தியாவில், எத்தனையோ பத்திரிகைகளை நடத்துகின்றார்கள். அப்பத்திரிகைகளை அவ்வவ்வகுப்பார் சரியாயாதரிக்குந்தன்மையினால் அவைகள் சரியாய் நடைபெற்றுச் செழித்தோங்கிவருகின்றன. நம்மவர்களின் பத்திரிகைகளோ நித்திய ஆயுள் பூர்ணகண்டம், என்பதற்கொப்ப, மிகவும் ஈனஸ்திதியில் நடைபெற்று வருகின்றன. உதாரணமாகத் தற்காலத்தில் ஆங்கிலேய பாஷையில் நடைபெறுகின்ற, மஹமடன், என்ற சிறந்த பத்திரிகை வாரத்துக்கு இரண்டுமுறைதான் வெளிவருகிறது அதையாதரிப்பவர் ஐந்நூறு பேர்களே யாவர். அதே ஆங்கிலேய பாஷையில் நடைபெறுகிற, இந்துப்பத்திரிகையை யாதரிப்பவர் 1500-பேர்களாகும். அன்றியும், இப்பத்திரிகை பிரதிதினமும் பதிப்பிக்கப்படுகின்றது. இந்தியாவில் யான் அறிந்தவளவில் ஆங்கிலேயபாஷையில் பிரதிதினமும் பதிப்பிக்கப்படுகின்ற முஸ்லீம் பத்திரிகை யொன்றேனுங் காணவில்லை.

இனித்தமிழ்ப் பாஷையில் நடைபெறுகின்ற பத்திரிகைகளைப் பற்றிச் சிறிதாராய்வாம். நம்மவரின் பத்திரிகை யொன்றேனும்

தமிழ்ப்பாஷையில் தினப்பதிப்பாய் நடைபெறுங்காலம் எக்காலம் !
எக்காலம் ! என்று சொல்லும்படியா யிக்காலமிருக்கின்றது. ஐ
யோ! எக்காலம்என்று சொல்வது, எக்காலம்என்று அகன்றிடுமோ!
அல்லது இக்காலத்திற்குள் நம்முடைய கண்கள் அதைப்பார்க்கப்பா
க்கியம் பெற்றிருக்குமோ! யாதோ தெரிகிலேன். நமது துரதிஷ்
டம் வாரத்துக்கு மும்முறையேனும் நம்மவர் பத்திரிகை நடைபெ
றலாகாதா ? வாரத்துக்கு ஒருமுறை இருமுறை நடைபெறும் நம்ம
வர் பத்திரிகை ஆதரிப்பாரின்றி யொழிந்துபோயின. அப்பத்திரி
கை கனையும் இங்கு விவரிக்கிறேன். 1. முஸ்லீம் அபிமானி. 2. மக
மதியமித்திரன். 3. அஜாயிபுல் அக்பார். 4. சிங்கை விஜய கேதனன்.
5. முகம்மது சமதானி என்னும்இப்பத்திரிகைமுதலியனவேயாம்.
இந்த விஷயத்தை நினைக்குந்தோறும் மிக்கவிசனத்தைக் கொடுக்கி
ன்றது. இந்துக்களின் பத்திரிகைகளிலிரண்டுதினப் பத்திரிகைகளாய்
ஒன்று சென்னையிலும், மற்றொன்று புதுவையிலு நடைபெற்று
வருகின்றன. ஆகவே நம்மவர்களின் கல்வி யபிவிருத்தியும், ஆதரிப்
பும் மிகக்குறைந்துகிடக்கும் இக்காலத்தில் நமது “இஸ்லாம்நேசன்”
மாதம் ஒருமுறை வெளிவருவதாயின் நசித்துப்போகுமோவென
யான் கருதுவது, நமது முஸ்லீம் சகோதரர்களுக்கு ஒரு ஆச்சரிய
மாய் இருக்காதென்று நம்புகிறேன். இக்காலத்தில், நாகரீகத்தில்,
முதிர்ந்து விளங்குகின்ற இங்கிலாந்து தேசத்தின் லிவர்பூல் நகரத்
தில், நமது உன்னதமான இஸ்லாம் மார்க்கத்தை யனுசரித்து நமது
அன்பார்ந்த சகோதரர்களில் ஒருவராயிருக்கிற மாட்சிமை தங்கிய
H. E. அப்துல்லா குவில்லியம் பே எபண்டி எல் எல்.டி,அவர்களால்
நம்மவரின் விருத்தியின் பொருட்டு நடை பெற்று வந்த “கிரஸண்
டு” (இளம்பிறை) என்ற பத்திரிகையும், அமெரிக்காவின் மணிலா
என்னும் நகரத்தில் ராஜப்பிரதிநிதியாயிருந்து, நம்மவர், பரிசுத்த
இஸ்லாமார்க்கத்தை யனுசரித்து முஸ்லீம் சகோதரத்துவம்
என்னும் பரவெளியில் ஆழ்ந்திருக்கிற நமது உன்னதமான சகோத
ரர், மிஸ்டர் முகம்மது அலெக்ஸாண்டர் ரஸல்வெப், என்னும் மஹா
னால் நம்மவரின் முன்னேற்றத்திற்காக நடைபெற்றுவந்த முஸ்லீம்
உரல்டு, (முஸ்லீம் உலகம்) என்ற பத்திரிகையும், லண்டனில் நம்ம
வருக்காக உடல் பொருளாவிகளை யர்ப்பித்துழைத்த சுகரவர்த்தி
எம். ஏ. அவர்களால் நடைபெற்று வந்த “The Light of the

world" உலகத்தின் "விளக்கு" என்ற பத்திரிகையும் நம்மவர்களின் ஆதரிப்பின் குறைவினால் நின்றுவிட்டமை இங்குக் கவனிக்கத் தக்கதேயாம். இத்தகைய பரிதாபகரமான ஸ்திதியில், நமது "இஸ்லாம் நேசன்" பத்திரிகையை முஸ்லீம்சகோதரர்களிற் பலர் ஆதரித்துத்தங்கள் சொந்த வேலைகளைக்கூடக் கவனியாது, நமது பத்திரிகையை அங்கங்கேவிருத்திசெய்து, ஜெயம் அடைந்துகொண்டு வருகிறதை நோக்க மிக்க சந்தோஷத்தை விளைவிக்கின்றது. அப்படி முயற்சிப்பவர்களின் நாமங்களை இதனடியில் வரைகின்றேன்.

(1) கீழக்கரையை ஜனனதேசமாகக்கொண்டு இப்போது சென்னையில் வசிக்கிற கனம், செய்யது முகம்மதுப் புலவரவர்கள். 2. கனம், கோ. ம. அலியாராவுத்தரவர்கள், தூத்துக்குடி. 3 கனம் பீ. ஆர். செய்யதுமீரான் சாய்பு அவர்கள், ஈரோடு. 4. கனம், ஹாஜிஅப்துல்காதிர் வைத்தியரவர்கள், திருவனந்தபுரம். 5. கனம், பி. ஆர். குலாங்காதிறு அவர்கள், லண்டன். 6. கனம், ஐ. எல். எம். மறைக்காயரவர்கள், கொழும்பு. ஆகஇந்த அறுவர்களும் யாதொருகைம்மாறுங்கருதாது உழைத்துவருகிறார்கள். இவர்களுக்கும், மேலே குறிக்கப்பெற்ற மூன்று முஸ்லீம் பத்திராதிபர்களுக்கும், இவர்கள் சந்ததியார்களுக்கும், நமது உன்னதமான, அல்லாகுத்தாலாவின் கிருபையும், அவனது அன்பே உருவாகிவந்த நமது நாயகர் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைகிவஸல்லம் அவர்கள் கருணையுமுண்டாவதாக. நமது பத்திரிகையின் நிமித்தம் மிகுந்த பிரயாசையோடு உழைத்து வருகிற மேற்கண்ட முஸ்லீம் சகோதரர்களைப் போன்று நம்மவர்கள் ஒவ்வொருவரும் தங்களாலியன்றவரை முயற்சிசெய்து ஆதரிக்க முன் வருவார்களேயானால், நம் பத்திரிகை தென்னிந்தியாவில் மிகச்சிறந்து விளங்குமென்பதற்கு யாதொரு தடையுமில்லை.

நமது "இஸ்லாம் நேசன்" பத்திரிகைக்குச் சுமார் 1000-கையொப்பங்கள் சேர்ந்தவுடன், அதை மாதாந்தப் பத்திரிகையாக நடத்தத் தீர்மானித்திருக்கிறேன். அப்படி நடத்தும்படி செய்விக்க நம்மவர்களை வேண்டுகிறேன். எல்லாம் வல்லஇறைவனருள் எம்மவர்பேரிலிருப்பதாக.

ஆமீன். பத்திராதிபர்.

முகம்மது அலெக்ஸாண்டர் ருசல்வெப் என்னும் மஹான் இஸ்லாமான சரித்திரம்.

இந்த மஹா உன்னத புருஷரத்தினமாயிருக்கிற, வெப் அவர்கள், அமெரிக்காவின், ஐக்கியமாகாணங்களிலுள்ள நியூயார்க்ஹட்சன் பட்டணத்தில், 1846-ம் வருஷம் நவம்பர் மாதம், 9 உ அன்று ஜனனமானார். இப்பெரியோரின், அன்பிற்சிறந்த தந்தையாரின்பெயர் அலெக்ஸாண்டர் நெல்சன் வெப் என்பதே. நெல்சன் வெப் என்பவர், அக்காலத்தில் கிரந்தகர்த்தர்களிலொரு திலகமாய்விளங்கினார். மிஸ்டர் முகம்மது அலெக்ஸாண்டர் ருசல்வெப் என்பவர், தாம் இளமையிற்கற்குங்கல்விகளை, மெசஸ்சூசட்சிலுள்ள கிளன்டேல்ஸ் என்னும், வித்தியாசாலையில் படிக்கஆரம்பித்து, பிறகு ஹட்சன்பட்டணத்தின் சமீபத்துள்ள கிளவரக் சர்வகலாசாலையிற்றன்னுடைய சிறந்த உயர்தரப்படிப்புகளை முடித்தார். அன்றியும், அவர் சர்வகலாசாலையில், தன்படிப்பில்மிக்க அபிவிர்த்தியைச்செலுத்திவந்தார். தன் வித்தியாப்பியாசம் முடிந்தபின்னர், தன்னுடைய மேன்மைதங்கிய தகப்பனார் தொடர்ந்துவந்தவழியில், தானும்பின்றொடர, விலிவிசூரி என்னும், வாரப்பத்திரிகையையெழுதுபவராகத்தொடங்கினார். அவரதுசிறந்த வல்லமையும், மனதின்மேன்பாடும், அவரெடுத்தமுயற்சிகளில் மிக்க வெற்றியைத்தரத்தக்கதாயிற்று. அவர்பத்திரிகையிலெழுதும் விஷயங்கள் உலகமெங்கும் அவரது கீர்த்தியைப்பரப்புவதாயிற்று. அவருக்குச்செண்ட்ஜோஸப் பட்டணத்தின் கெஜட்டிலும், பத்திராதிபத்தியம் (பத்திரிகையின் றலைமை) கொடுக்கப்பெற்றது. இவ்விடத்திலுங்கூட அவர் தன்னுடைய வல்லமையின் பிரத்தியக்ஷத்தைவிளக்கிக்காட்டினார். பின்னர், அவருக்குச் செண்ட்லூவிப்பட்டணத்து மார்னிங்ஜர்னல் என்னும் பத்திரிகையின் அதிபர்களுள் முதன்மைத்துவம்அளிக்கப்பெற்றது. பிறகு அவர் செண்ட்லூவிப்பட்டணத்துமிசூரிரிபப்ளிகன் என்னும் பத்திரிகையின் அதிபர்களிலொருவரானார். இந்தமிசூரிரிபப்ளிகன்என்னும் பத்திரிகை ஐக்கியமாகாணங்களில் மிகச்சிறந்ததினப்பத்திரிகைகளில் மேன்மைபெற்றபத்திரிகையாயிற்று. இவர்

இந்தப்பத்திரிகையெழுதும் வேலையிலமர்ந்திருக்கும்பொழுது, 1887-ம் ௵ செப்டம்பர் ௴ அமெரிக்காவின் பிரஸிடெண்டுகிளவலெண்ட் என்பவரால், பிலிப்பையின்தீவுகளிலுள்ள முக்கியபட்டணமாகிய மணிலா என்னும் நகரத்தில், ஐக்கியமாகாணங்களின் ஸ்தானாதிபதியாக நியமனஞ்செய்யப்பெற்றார்.

1872-ம் ௵ அதாவது சற்றேறக்குறைய 37 வருடங்களுக்குமுன், கிறிஸ்தவமார்க்க நியாயம், புத்திக்கு மொவ்வாமைகண்டு அம்மார்க்கத்தைவிட்டு விலகினார். பிறகு, சிறிதுகாலம்வரை அவருக்கு ஒருமார்க்கமுமில்லாமலிருந்தது. ஆனால், அவர்மனதிலுள்ள இந்தநிலைமையானது அவரிடத்தில் அதிகமானகாலம் நீடித்திருக்கவில்லை. அவருக்குக் கீழைத்தேசங்களினுடைய மார்க்கவிஷயங்களைப்படிக்க முயலவேண்டுமென்ற ஒருயோசனைதோன்றி, 1881-ம் ௵ கீழைத்தேசமார்க்கவிஷயங்களை யூக்கமுடன் படிக்கமுயன்றார். இவரிடத்தில்மிகச்சிறந்த 13000-புஸ்தகவால்யங்களுக்குமேலேயிருந்தன. எப்பொழுதும் அவைகளைப்பார்வையிட்டுக்கொண்டிருப்பார். பின்னர் இப்புதுமையான மார்க்க ஆராய்ச்சியில் நாள் ஒன்றுக்கு ஏழுமணிநேரம்வரை பார்த்துவந்தார். பௌத்தமார்க்கத்தையும் பார்வையிட்டார். அதையனுசரிக்கவுஞ்செய்தார். பிறகுபௌத்தமார்க்கந்தனக்குத்திருப்தியில்லாமையைக்கண்டு, இஸ்லாமார்க்கத்தையங்கீகரித்தார். 21- வருஷங்களுக்குமுன்பாக இஸ்லாமார்க்கமொன்றுதான் பிரதமசத்தியமான மார்க்கமென்று திருப்தியடைந்தார். அவர்சொந்த வார்த்தைகளில், இஸ்லாமென்னுமார்க்கம், மோசேமுதல் ஹலரத்நபிநாயகம் முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள்வரைக்கும், கடவுளால் தெரிந்தனுப்பப்பெற்றதீர்க்கதரிசிகள் மனிதர்களுக்குக்காலத்திற்குக்காலம், வெளிப்படுத்திக்கொண்டிருந்த (இஸ்லாத்தைப்பூர்த்திசெய்விக்கிற முகம்மதுநபி அவர்கள் பின்வருவார்கள்) முன்னறிக்கையோடு சத்தியஸ்தாபகஞ்செய்யப்பட்டிருக்கிறதென்றும், இந்த ஒருமார்க்கந்தான் முக்கியமாக மனிதனுக்குத்தெரிந்தவரை காரணத்திற்கும், சாஸ்திரத்திற்கும் மிக்கஒற்றுமையுள்ளதாயிருக்கிறதென்றும், மனிதத்துவம் அதை (இஸ்லாத்தை) விசுவாசமாகவும், ஞானமாகவும், விவேகமாகவும் தொடரும்பொழுது, அம்மனிதத்தன்மையை மிகவும் மேன்மையாகவும், அபிவிருத்தியாகவும், அம்மான்ஷீகத்தின்போக்குகளை உயர்வாகவும், செய்விக்குமென்றும் சொல்லுகிறார். கனம்பொருந்தியமுகம்மது அலெக்ஸாண்டர் ரூசல்வெப்அவர்கள் நமதுமார்க்கத்தையனுசரித்தபொழுது மணிலாவில்ஒரு முஸ்லீமையுங் கண்டதேயில்லை.

இந்தமஹானால், 21. வருஷங்களுக்குமுன்பாகப் பஞ்சாப்மிர்சாகுலாம் அகமதுகாதியானி என்பவருக்கு, எழுதப்பட்டிருந்த கடிதங்களை இஸ்லாமார்க்கப்பிரசங்கி ஹசன்அலிஅவர்கள்பார்க்கநேர்ந்தது. அப்பொழுது அக்கடிதத்தில் அம்மஹானின் இருதயத்தில் பதிக்கப்பட்டிருக்கிற விசுவாசத்தையுடையமார்க்கம் இஸ்லாமென்றேகாட்டியிருந்தார். அன்றியும், முகம்மது அலெக்ஸாண்டர் ரூசல்வெப் அவர்களுக்கும், பாம்பேயின் பார்ஸிகனவான்- பத்ருதீன் அப்த்துல்லாகுர் என்பவருக்கும், கடிதப்போக்குவரவுகள் நடந்துகொண்டிருந்தன. மிஸ்டர் பத்ருதீன்என்பவர் லோக்கல்பத்திரிகைகளில், மிஸ்டர்வெப் அவர்களுடைய அன்பார்ந்த கடிதங்களிற் சிலவற்றைப்பிரசுரஞ்செய்தார். அக்கடிதங்களிலொன்றில், மிஸ்டர்வெப்அவர்கள் அமெரிக்காவின் ஸ்வதந்திரமான தேசங்களில், இஸ்லாமார்க்கத்தைப்பிரசங்கிக்க ஒருமுஸ்லீம்சகோதரர்வரவேண்டுமென்கிற தன்மேலான விருப்பத்தைக்காட்டியிருந்தார். மதினாவிற்சென்று வசிக்கிறவரும், ஜித்தாவில் வியாபாரம்செய்துகொண்டிருப்பவரும், பாம்பேயின்முத்துரத்தினாதிகளின் வர்த்தகத்திற்சிறந்தவருமான ஹாஜிஅப்துல்லா அரப் என்பவர், மிஸ்டர் வெப் அவர்களுக்கும், மிஸ்டர் பத்ருதீன் அப்துல்லா குர் அவர்களுக்கும் நடந்துகொண்டிருந்த கடிதப்போக்குவரவுகளைப்பார்க்கநேரிட்டது. மிஸ்டர் முகம்மது அலெக்ஸாண்டர் ரூசல்வெப்அவர்களின் மதச்சேர்க்கையில் நிரம்ப ஆனந்தமடைந்தார். பிறகு அவர்கள் (ஹாஜிஅரபியவர்கள்) தாங்களே நேராகக் கடிதங்களை வெப், என்பவருக்கு எழுதினார்கள். அதன்பிரயோஜனமானது ஹாஜிஅப்துல்லா அரப் என்பவரை மிஸ்டர் வெப் அவர்களைப்பார்க்க மணிலாவுக்குப்போகும்படிசெய்தது. இந்தியாவின்மிகச்சிறந்த மூஸ்லீமான அவர்பார்த்ததற்காக மிகச்சந்தோஷிக்கிறோம். ஹாஜி அப்துல்லாஅரப்என்பவர், இந்தியாவில்ஜனனித்தவராயிருந்தும் ஒருகாலத்தில், இஸ்லாமார்க்கத்தைப்பின்பற்றித்

தொடர்ந்துவந்தவர்கள் தரித்திருந்த மேன்மையானகுணங்களையடைந்திருந்தார். அவருடைய கடவுளிடத்திருந்து பூரணமானபக்தியையும் ,இஸ்லாத்தைப்பற்றியுழைக்க உற்சாகமான ஊக்கத்தையும், அவருடைய ஆவியைக்கடந்துபோகின்ற ஆவேசத்தையும், அவரின்பரிசுத்தமான இருதயத்திற்பெற்றிருந்தார். அது அவருடைய கெம்பீரமானமுகத்தில் ஜ்வலிக்கின்றதன்மையினால், அவரின்மனப்பரிசுத்தம் மிஸ்டர் வெப் என்பவரின் மனதிலூடுருவிப்பாய்ந்தது.

ஹாஜி அப்துல்லா அரப்என்பவர் வெப்என்னும் மஹானையும், அவரதுசிறிய குடும்பத்தினரையும்பார்த்து மிகுந்தஆனந்தமடைந்தார். வெப் என்னும், மஹானின்நல்லசுபாவம் குடியிருக்கப்பெற்ற அருமைவாய்ந்த மனைவியரும், அவரது மூன்றுசெல்வக்குழந்தைகளுங்கூடவே முஸ்லீமாயிருக்கக்கண்டார். அமெரிக்காவில் இஸ்லாமார்க்கத்தைப்பரப்ப, ஹாஜி அப்துல்லா அரப்என்பவர், அவசியமானபணங்களைச் சேகரித்துக்கொள்ளும் வேலையில் தாம் அமர்கின்றதாயும், மிஸ்டர்வெப்அவர்களே (மிசன்) அதற்குமுற்றும் உழைக்கவேண்டுமென்றுதெரிவித்ததன்பேரில், ஸ்தானாதிபதிநிதிவேலையை ராஜிநாமாக்கொடுத்துவிட்டு, ஆண்டவனுடைய மார்க்கத்திற்கு ஊழியஞ்செய்யஆரம்பித்தார். இந்தநிலைமையில் ஹாஜிஅப்த்துல்லாஅரப் அவர்கள்; இஸ்லாத்தின் தலைமைஸ்தானமாயிருக்கிற நியூயார்க்குப்பட்டணத்திற்குப்போகுமுன், இந்தியாவின் முக்கியமானபட்டணங்களைப்போய்ப்பார்க்கவேண்டுமென்று மிஸ்டர் முகம்மது அலெக்ஸாண்டர் ருசல்வெப் அவர்களைக் கேட்டுக்கொண்டார். கேட்டுக்கொண்டபடி மிஸ்டர் வெப்பவர்கள், 17-வருடங்களுக்குமுன் இந்தியாவுக்கு வந்திருந்தார்கள். ஷை வெப்அவர்களுடன், ஹசன்அலி அவர்களும், புனா, ஹைதராபாத், சென்னை முதலிய இடங்களுக்கு வந்திருந்தார்கள். அங்கங்கே இனிமையான, பிரசங்கங்கள் நடைபெற்றன. கடவுளின் அனுக்கிரகம் சதாசொரிந்துகொண்டேயிருக்கிற முகம்மது அலெக்ஸாண்டர் ருசல்வெப் என்னும், செல்வமிக்க பிரபு தான் எடுத்திருக்கிற இஸ்லாமார்க்க அபிவிர்த்தியின் காரியத்திற்குக் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டவராகவே இருக்கிறார்.

அவருடையவிசாலமான அறிவும், தேர்ந்தவாக்குச்சாதுரியமும், இருதயத்தின்பரிசுத்தமான நிலையும் அமெரிக்காவில் இஸ்லாத்தைப்பரவச்செய்ய ஒருபெரிய ஸ்தம்பமாயிருக்குமென்பது நிச்சயமே. இதுவிஷயத்தில் அவரைவிடச் சிறந்த மனிதரைக்காண, ஒருவராலும்முடியாது. ஒருபெரும் சனசமூகத்தின் பிரதிநிதியாகவிருந்த மாக்ஷிமைதங்கிய வெப் அவர்கள், இந்தியாவிற்கு வந்தபோது, பரிசுத்தமுள்ள இஸ்லாமார்க்கத்தின் மகத்தான நபி ஹலரத் முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்களின் மார்க்கத்தின், ஒருபெரிய பிரதிநிதியாக எல்லாமுஸ்லீங்களாலும் தெரிந்தெடுக்கப்பட்டவராய் அமெரிக்காவுக்குச்சென்றார். அவர் எல்லாமுஸ்லீங்களினுடைய அன்பில் ஈடுபட்டவராய் முஸ்லீங்களின் தொழுகையையுடையவராயினார். இவர் அன்பில்லாத முஸ்லீமல்ல; அவருடைய பரிசுத்தமான இருதயத்தில் உன்னதமான அல்லாஹுத்தஆலாவின் கிருபையும், ஹலரத் நபி நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் கருணையும், உண்டாவதாக. கடவுள் இஸ்லாத்தின் வழியை அவர்மனதிற் பலமாகப்பதியவைத்தார். இஸ்லாமார்க்கத்தின் ஆவியையவர் நன்றாயறிவார். அல்கஸ்ஸாலி மௌலானாரூமி என்னும் மஹான்களால், அடையப்பெற்ற ஞானக்களஞ்சியம், அவருக்குத்திறக்கப்பட்டிருக்கிறது. பூரணகிருபையுள்ள கடவுள் அவர்விருப்பத்தை முற்றும் நிறைவேற்றிவைப்பாராக. இம்மஹானின் சகலநன்மைக்கும் கடவுளைஸ்தோத்திரம் செய்வோமாக. பரிசுத்தமுள்ள நபி அவர்களின் அன்பானது இம்மஹானின் பேரில் எப்பொழுதும் மாறாதிருக்கவேண்டுவோமாக.

ஆமீன்.

இங்கிலாந்தில் இஸ்லாம்.

பின்வரும் விஷயம் ப்ரீதிங்கர் (Free thinker) என்னும் பத்திரிகையினின்றும் எடுத்தெழுதப் பட்டது.

சென்ற இருபதுவருஷங்களுக்குள்ளே இங்கிலீஷ்க்காரர்களில் சுமார் இரண்டாயிரம் பேர்கள் மகம்மதியராய் விட்டனரென்று

சொல்லிக் கொள்ளப் படுகிறது. இவ்விஷயம், ஒரு கிறிஸ்தவப் பத்திரிகை வாயிலாகவே வெளிவந்துள்ளதால் உண்மை யென்றே கொள்ளத் தக்கது. இது உண்மையே யாதலின் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய இவர்கள் ஈன ஜாதியைச் சேர்ந்தவர்களே யல்லர் என்று நிச்சயித்துக் கூறலாம். மகம்மதியர்களுள் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களைக் கிறிஸ்தவர்க ளாக்குவதில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் எடுத்துக் கொள்ளும் அபார சிரமத்தை யோசித்துப் பார்க்குங்கால், அப்பாதிரிகள் அபரி மிதமாகப் பணச்செலவு செய்துங் கூடச் செய்து முடிக்கக் கூடாத ஓர் அரிய காரியத்தை இஸ்லாம் மதம் செய்து முடித்து விட்டதென்று உறுதியாய் நம்பலாம். இத்தேசத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவியோரது தொகை எவ்வளவு வாஸ்தவ மானதாக இருந்த போதிலும், 'மத விசுவாசமுள்ள' கிறிஸ்தவர்கள் முன்னோர்கள் அதி சிரமப்பட்டு இஸ்லாம் மார்க்கத்துக்கு விரோதமாகப் பரப்பி வந்த அபவாதங்கள் இறந்து பட்டொழிந்த காலந்தொட்டு, இம் மதமானது துரபிமானங் கொண்டிராத இங்கிலீஷ்க்காரர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டே வருகிறது. ஆயினும், இஸ்லாம் மதத்திற்கு விரோதமாய் அதனைக் கவிந்துள்ள தப்பெண்ணங் களாகிய மேகப் படலத்தை நீக்கி உண்மை ஒளி விளங்கச் செய்ய வெகுகாலம் செல்லத்தான் செய்யும்.

கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளைப் பிரபலப் படுத்தும் படியான ஏற்பாடுகளைக் கொண்ட மிஷனரி மார்களின் முயற்சியைப் போன்ற எவ்வகை முயற்சியும் இல்லாமலே இஸ்லாமானது அடைந்துள்ள இவ்வபிவிருத்தியானது, இப்பரிசுத்த மார்க்கத்தைப்பற்றிய நல்லறிவு பரவுங்காலைக் கீழ்நாடுகளில் அது விருத்தியடைந்திருப்பது போல மேனாடுகளிலும் அது விருத்தி அடையு மென்பதற்கு ஓர் சிறந்த அறிகுறியாகும். இம்மதத்தைப் பற்றி மனதார அறிந்த உண்மையை வெளியிடுவதில் எண்ணிறந்த இடையூறுகள் உண்டென்றாலும் அவ்வுண்மையை ஸ்டான்லி பிரபுவை (Lord Stanlay)ப் போல மனப்பூர்வமாக உணர்ந்தறிந்தவர்களாவது அநேகர் இருக்கின்றனர் என்பதே எமது துணிபு.

பரிசுத்தமான திருக்குரானும், இருக்குவேதமும்.

ஆரிய ஸமாஜத்தைச்சேர்ந்த இந்துக்கள் தங்கள் மார்க்கத்திற்காக முதன்முதலிற் கடவுள் இருக்குவேதங் கொடுத்ததாய்ச் சொல்லுகிறார்கள். நாம் உலகசிருஷ்டியின் றுவக்கத்தில் மனிதர்களின் வழிகாப்புக்குக் கடவுளா லொருவேதம் கொடுக்கப்பட்டிருக்கிறதை யொப்புக்கொள்ளுகிறோம். ஆனால், அது இருக்குவேதமல்ல. சிருஷ்டியின் றுவக்கத்தில் ஆரியஸமாஜத்தினர்க்கு வேதங்கள் வெளிப்பட்டதா யுரிமை பாராட்டிக் கொள்ளச் சுதந்திரமில்லை. ஏனென்றால், இருக்குவேதம், அடிக்கடி (ரிக்) எஜுர், சாமம், அதர்வணம் என்னும் இவைகளின் காலத்திற்கு முன்பாகவே அநேக நீதிமான்களிருந்ததாய்ச் சொல்லுகின்றது. அந்த நீதிமான்களின் வழிகாப்புக்குரிய வேதமொன்றிருந்திருக்கவேண்டுமல்லவா? அன்றியும், அது உலகத்தில் ஜனசங்கை நிறைந்தபொழுது அவர்களின் ஜீவியத்திற்கு அவசியமான வஸ்துக்களெல்லாம் சேகரித்துக் கொடுத்தபின்னருள்ள காலங்களில், இவ்வேதங் கொடுக்கப்பட்டனவென்றுஞ் சொல்லுகின்றது. நிச்சயமாய் சிருஷ்டியின் றுவக்கத்திற்கூட மனிதர்களின் வழிகாப்புக்கு ஒருவேதம் கொடுத்திருக்கலாமென்பது உண்மைதான்.

ஆனால், இருக்குவேதம் மேற்கண்டவற்றால் மனிதனுக்கு முதலிற்கொடுக்கப்படவேயில்லையெனத்தெரிகின்றது. அன்றியும், (இருக்கு, எஜுர், சாமம், அதர்வணம்) இவைகளின் தற்கால நிலைமையைப்பார்த்தால் கடவுளைவிரோதித்துக்கொண்டிருப்பதாகவேசொல்லலாம். ஆகவே அதுகடவுளால்கொடுக்கப்பட்டதென்பதுகடவுளைத் தூஷித்தலாகுமன்றோ. ஆனால், ஒரேவொருவேதம் ஜனங்களுக்குக்கடவுளாற் கொடுக்கப்பட்டதென்றும், வித்தியாசமானவேதங்கள் வித்தியாசமான ஜனங்களுக்குஏன்கொடுக்கப்பட்டிருக்கக்கூடாதென்றும் நீங்கள் கேட்கலாம். இந்தக்கேள்வியின்சமாதானம் பின்வருவனவாம். துவக்கத்தின்ஜனசங்கை யொருகூட்டத்துச்சனங்களென்று சொல்லக்கூடாது அவ்வளவு குறைந்த மிகச்சிறிய ஜனசங்கையாயிருந்தது. ஆகவே,

ஒருவேதம் அவர்களெல்லார்க்கும் போதுமானதாகவே யிருந்தது. பின் ஜனசங்கை யதிகரித்தபோது ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒவ்வொரு பெரிய ஜாதிகளாய் விருத்தியான காலத்து நெருக்கத்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் வெகு தூரதேசத்தில் பிரிந்துபோன போதும், ஒவ்வொருவரும் தங்களின் முன்னோர்களின் செய்கையைப்பற்றி முற்றும் மறந்து அறியாமையை யடைந்திருக்குங் காலத்தில், கடவுளின் கிருபாகடாக்ஷமானது ஒவ்வொரு வகுப்பு ஜனங்களிலும் தனித்தனியே தீர்க்கதரிசிகளை யனுப்பிப் பல வேறுபாடாகப் பிரிவுபட்ட ஜனங்களுக்கு ஒவ்வொரு வேதமுங் கொடுக்கப்படக் காரணமாயிற்று. இவ்விதம் பிரிவையடைந்த ஜனங்களுக்குள் தற்கால நாகரீகத்தால் போக்குவரவும், சகோதரத் தொடர்பும், சம்பாஷணைகளும் ஏற்பட்டபொழுது ஒரே கூட்டத்திலிருந்து பெருக்கத்தால் பிரிவையடைந்த பல வேறுபட்ட ஜனங்களெல்லாரையும்ஒரே வகுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுப் பிரிவை யடையப்பட்டிருக்கிற ஜனங்களெல்லாம் மறுபடியும் ஒருங்குசேர்ந்து வாழவேண்டுமென்றே கடவுள், பல வகுப்பையுடைய எல்லா தேசத்தவர்க்கும் ஒரே வேதத்தை யனுப்பிவித்து அதில், இந்தவேதம் உங்கள் தேசத்திற்கு எப்பொழுது வருகின்றதோ, அப்பொழுதே அத்தேசத்தவர்களெல்லாரும் அதைஅங்கீகரிக்கவேண்டுமென்று கட்டளையுமிட்டான். அந்த ஒரேவேதம் பரிசுத்தமுள்ள **திருக்குரானேயாம்.** அதுவேறுபாடான ஜனங்களின் மத்தியில் பரஸ்பரம் அன்பை நிலைநிறுத்தக் கொடுக்கப்பட்டது. பரிசுத்தமுள்ள திருக்குரானுக்கு முன்பாகத் தெரியப்படுத்தப்பட்ட வேதங்களெல்லாந் தனித்தனி வகுப்பின்ஜாதியார்க்கென்றே அவ்வவ் வேதப் புத்தகங்கள் தெரிவிக்கின்றன. சீனர்கள் (Chinese)பெர்ஷியர்கள் (Persians) இந்துக்கள்(Hindus) சீரியன்ஸ்(Syrians) எகிப்தியர்(Egyptians)ரோமர்கள்(**Roamans**) இந்த வித்தியாசமான வகுப்புடையவர்களுக்குக் கொடுக்கப்பெற்ற வேதங்களினதும், தீர்க்கதரிசிகளினதுமாயுள்ள சுழல்தல் (மோக்ஷ அறிக்கை) அந்தந்த வகுப்பினர்களுக்கே வரையறுக்கப் பெற்றிருந்தது. அவர்கள் இதர வகுப்பின் ஜனங்கள் எவ்வளவு சீர்கெட்ட நிலைமையிலிருந்தாலும் அதைப்பற்றி யக்கரையற்றவர்களாயிருந்தார்கள்.

அதற்குப் பின்னர், உலகத்திலுள்ளவர்க் கெல்லாம் சுதந்தரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிற பரிசுத்தமுள்ள திருக்குரான் கொடுக்கப்பட்டது. பரிசுத்தமுள்ள திருக்குரான் ஒரு குறிப்பான ஜனங்களுக்கு மட்டும் கொடுக்கப் பெற்றதன்று. பின்னை, உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுக்குஞ் சுதந்திரமாய்க் கொடுக்கப் பட்டிருக்கிறது. உலகத்தில் பல பாகங்களிற் பரவிப் பல வகுப்பினர்களாக வசிக்கின்றவர்களெல்லாரும் ஒரே வகுப்பினர்களாக (முன்போல்) இருத்தற்குரிய காலங் கிட்டுமென்பதை முன்னறிந்தே, அப்பரிசுத்தமுள்ள திருக்குரானிற் சொல்லியிருக்கின்றது; இதன் அனுபவம் இப்போது நடை பெறுகின்றன. இப்பிரபஞ்சத்திலுள்ள ஜனங்களெல்லாம் ஒரு வகுப்பினர்களாகப் பிணைக்கப் பட்டிருக்கும்படியான நிச்சயமான உருவங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இவ்வித ஒற்றுமைக் கேற்ற வலிய அஸ்திவாரமாயிருக்கிற பரஸ்பர சகவாசத்தின் வழிகள் நாளுக்கு நாள் மிக அபிவிருத்தியாகிக் கொண்டிருக்கின்றன. முற்காலங்களில் வருஷக்கணக்காகப் பிரயாணஞ் செய்திருக்கிற தூர தேசங்கள், இப்போது நாட்கணக்காகப் பிரயாணஞ் செய்யப்படுகின்றன. ஒருகாலத்தில் தேசங்களுக்குத் தெரியாதிருந்த சமாசாரங்கள் பின்னர் வருஷங்களைக் கொண்டும் மாதங்களைக் கொண்டுந் தெரிவிக்கப் பட்டன. இக்காலத்திலோ அவைகள் நிமிஷத்தில் தெரிவிக்கப் படுகின்றன. (இஸ்லாத்தை யெளிதி லறிந்துகொள்ளக் கூடிய நாகரீகமான காலத்தின் றுவக்கத்தில் பரிசுத்தமுள்ள திருக்குரான் கொடுக்கப்பட்டது.) உலக முழுது மொரு ஆச்சரியமான மாறுதலின் நிலைமையிலிருக்கிறது. ஐரோப்பா, (இங்கிலண்ட்) அமெரிக்கா, ஜப்பான், ஆபிரிக்கா இந்த இடங்களில் பூர்வீக மாறுதலடைந்து இஸ்லாத்தை ஆயிரக்கணக்காகப் பின்பற்றி வருகிறார்கள். உலகத்தின் தற்காலப் போக்கு ஒரு திருப்புதலையுடையதா யிருக்கிறது. அத்திருப்புதல் கடவுள் உலகத்திற் சிதறுண்டு போயிருக்கிற வித்தியாசமான ஜனங்கள் ஒரே வகுப்பினர்களா யிருப்பதற்கும் ஒற்றுமையுட னிருப்பதற்கும் ஆயிரக் கணக்கான வருஷங்களாய் வேறுபடுத்தப் பட்டிருந்தவர்களை ஒருமித்துக்கொண்டு வருதற்கும் விரும்பி யிருக்கிறதாகக் காட்டுகிறது. எல்லாச் சனங்களின் வழியாயிருக்கிற பாத்தி

யதையையுடைய பரிசுத்தமுள்ள திருக்குரான் இதை முன்னமேயே விவரித்திருக்கிறது. அது சொல்லுகிறதாவது:—முகம்மதே! நீர் சொல்லும். மனிதர்களே, "உங்களுக்கெல்லாங் கடவுளின் தீர்க்க தரிசியாக நான் இருக்கிறேன். (7-158) உலகத்திற்கு கிருபையாகமட்டும் உம்மை நாமனுப்பியிருக்கிறோம். உலகத்திற்கு, எச்சரிக்கை செய்யும்படி தன்னுடைய ஊழியனுக்குப் பகுத்தறிவைக்கொடுத்து அனுப்பிவைத்தவன் எவனோ அவனுக்குத்துதியுண்டாவதாக" என்பதே. (15-1) இந்த உரிமையை யுலகத்திற்கெல்லாங் கொடுந்துக் கொண்டிருக்கிற பரிசுத்தமுள்ள திருக்குரானுக்கு முன்பாக ஒரு பொழுதும் ஒரு வேதமும் எல்லா வகுப்பினர்களுக்கும் காண்பிக்கவில்லை யென்று நாம் உறுதியாய்ச் சொல்வோம்; அன்றியும், மாக்ஷிமை விளங்கப் பெற்ற ஹலரத் நபி முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்களுக்கு முன்னர், (உன்னதமான கடவுளின் சமாதானமும் அருளும் அவர்கள் பேரிலுண்டாவதாக.) வந்த ஒவ்வொரு தீர்க்க தரிசிகளும் அவரவர்களுக்குரிய ஜனங்களுக்கு மட்டும் அவரவர்களுடைய வெளிப்படுத்துதலை வரையறுத் திருந்தார்கள்.

கிறிஸ்தவர்கள் தெய்வமென்று சொல்லுகிற இயேசுவுங்கூடக் காணாமற்போன இஸ்ரவேல் வீட்டார்க்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படியல்ல என்று சொல்லியிருக்கிறார். [மத்தேயு 15-24] உலகத்தின்றன்மை, பிரபஞ்சமெல்லாமிருக்கிற மாக்ஷிமை தங்கிய பரிசுத்தமுள்ள திருக்குரான், உரிமைக்காலத்தின் சாக்ஷியாயிருக்கிறது. பரிசுத்தமுள்ள நபிஹலரத் முகம்மது முஸ்தபாரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் (உன்னதமான கடவுளின் சமாதானமுங் கிருபையும் அவர்கள்பேரில் உண்டாவதாக.) வருகை மிகத்தெளிவாய் உலகத்தினர்க்கெல்லாம் வெளிப்படுத்தல் என்னும் மோக்ஷ பொக்கிஷத்தின் கதவைத் திறந்துவிட்டது. இன்னமும், அந்தக்கட்டளை (பரிசுத்தகுரான்) முகம்மதே சொல்லும். ஓ! மனிதர்களே ? நிச்சயமாய் நான் உங்களுக்கெல்லாங் கடவுளின் தீர்க்கதரிசியாயிருக்கின்றேன்' என்பதே. அவர்கள் (ஹலரத் முகம்மது முஸ்தபாரசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள்) உலகத்திலுள்ள ராஜமன்னர்களுக்கெல்லாம் இஸ்லாத்தை யங்கீகரிக்கும்படி கடிதம்

எழுதியிருக்கின்றார்கள். அவர்களின்முன்னிருந்த ஒரு தீர்க்கதரிசிகளும் நம்மவர்கள் ஹலரத் நபி நாயகம் அவர்கள் செய்வித்ததுபோல் வேறுமற்ற தேசஜனங்களின் ஆளுகைத்தலைவர்களுக்குக் கடிதங்கள் எழுதவேயில்லை என்னும் விஷயம் மிகத்தெளிவாயிருக்கின்றன. முந்திய தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த ஜனங்களையன்றி, அதினும் பெருத்ததொகைகளாயிருக்கிற ஜனங்களுக்குத் தீர்க்கதரிசியாயுயர்த்தப்படவில்லை. இந்த பரிசுத்தமுள்ள நபிநாயகம் ஹலரத் முகம்மது முஸ்தபாரசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் (உன்னதமான கடவுளின் சமாதானமுங் கிருபையும் அவர்கள்பேரிலுண்டாவதாக.) தன்னுடைய வெளிப்படுத்துதலை உல்கத்தினர்க்கெல்லாம் சுதந்திரமாய்ப் பிரசங்கித்தவர்களாயும், வேறு ஜனசங்கைகளையெல்லாம் தங்களுடைய மார்க்கத்திற்கு வரவழைத்தவர்களாயும், தீர்க்கதரிசிகளிலெல்லாம் முதன்மைபெற்றவர்களாயும், நிரம்பிய கருணையுடையவர்களாயுமிருந்தவர்கள் அவர்களே.

சர்வவல்லமையுள்ள கடவுளே! எம்மவரின் பெருமானாகிய இந்த நபிநாயகம் முகம்மது முஸ்தபாரசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்களின் பேரிலும், அவர்களின் சந்ததியார்களின் பேரிலும், அவர்களைப் பின்பற்றின எங்கள் பேரிலும் உன் அன்புநிறைந்த கருணையை மென்மேலும் பொழிவாயாக.

ஆமீன்.

Abandonment of Christian Institutions.

கிறிஸ்தவ நியாயப் பிரமாணங்கள் கைவிடப்படுதல்.

1. திருக்குரான் ஆனது எல்லாக்காலங்களுக்கும் எல்லா ஜனங்களுக்கும் பொருந்தும்படியான சட்டமென்பதை அநேக வழிகளில் ரூபிக்கப்பட்டு வருகின்றது. கிறிஸ்துவ மார்க்கத்தைப்போல இஸ்லாமார்க்கத்துக்குச் சட்டங்களை உண்டாக்கயாதொருசபை வேண்டிய தவசி

யமில்லை; அதன்சட்டங்களைச் சீர்திருத்தவாவது, அல்லது மாற்றவாவது யாதொரு சட்ட நிரூபணருக்கும் அவசியமுண்டாகிறதில்லை. அதின்மார்க்கச் சட்டங்களை விலக்கும்படியான மசோதாக்களை (bills) உண்டுபண்ண யாதொரு இராஜதந்திரிக்கும் அவசியமில்லை.

2. குரானின் சட்டமானது உலகத்தாரெல்லாருக்கும் பொருந்தினதும் சதா நிலையுள்ளதென்பதும் பின்வரும் விஷயங்களினால் வெளியாகும். கிறிஸ்துவ நாடுகளிலுள்ள அதர்மங்களை நிவர்த்தி பண்ண மருந்துவேண்டியபோது இஸ்லாத்தின் சட்டமல்லவா அம்மருந்தைக் கொடுக்கிறது. கிறிஸ்து மார்க்கந் தீங்குகளை விளைவிக்கின்றது. இஸ்லாமார்க்கமோ அந்தத்தீங்கை விலக்க ஜீவாமிர்தத்தைக் கொடுக்கிறது. ஆ! ஆ!! கிறிஸ்து மார்க்கத்துக்கும் இஸ்லாமார்க்கத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! கிறிஸ்துமார்க்கமானது உலகத்தாருக்கெல்லாம் பொருந்தும்படியானமார்க்கமல்ல. ஆகையால்தான், அதின் சட்டங்களால் விளைகின்ற கெடுதிகளெல்லாம் கிறிஸ்தவ நாடுகளிலேயே கிளம்புகிறது. கிறிஸ்தவர்கள் தங்கள் மார்க்கத்தின் அபிமானத்தால் அத்தீங்குகளையெல்லாம் கொஞ்சகாலமாகத் தடுக்காமல் விட்டுவருகிறார்கள். ஆனால் கிறிஸ்தவசட்டத்தின் பலனாக அத்தீங்குகளெல்லாம் சகிக்கமுடியாதபடி வளர்ந்தபோதும் அழிவும் அதர்மமும் அளவுக்கு மிஞ்சினபோதும், சீர்திருத்தர்கள் சும்மாயிருக்கிறதில்லை. கிறிஸ்துவக்கொள்கையின் தீங்கான செல்வாக்கால் ஜனங்களின் ஜீவியம் அபாயத்திலிருப்பதை அவர்கள் பார்க்கும்போது அவர்கள் சும்மாவிருப்பார்களா?

3. கிறிஸ்தவ மார்க்கத்தின் கெதி உண்மையாகவே மிகவும் விசனிக்கத் தக்கது. காரணவாதிகள் (Rationists) அதின் கொள்கைகளை நிந்திக்கிறார்கள். இராஜ தந்திரிகளோ (Politicians) அதன் பிரமாணத்தைப்புறம்பே தள்ளுகிறார்கள். இந்தவிதமாகக்கிறிஸ்தவ மார்க்கமானது சாகுங் கெதிக்கு வந்துவிட்டது மல்லாமல், பாதிரிமார்களின் முயற்சியால், அக்கெதியிலிருந்து அதை மீட்கக் கூடாத காரியமாயிருக்கிறது. வெகுநாள் பரீக்ஷையின் பேரில், கிறிஸ்துவின் சட்டம், அசாத்தியமானது மல்லாமல் தீங்கை விளைவிக்கக் கூடியதுமாக விருக்கக் கண்டு, கைவிடப்பட்டு, குரானின் சட்டமானது அதற்குப் பதிலாக, வரவர அங்கிகரிக்கப் பட்டு வருகின்றது. யாதாமொரு கிறிஸ்தவ சங்கத்தின் சட்டங்களை மாற்றவாவது அல்லது நீக்கிவிடவாவது, சீர் திருத்தங்கள் ஏற்பாடு செய்யும்போது, இயல்பாகவே குருமார்கள் பலத்த ஆக்ஷேபணை செய்கிறார்கள். ஆகவே அப்போது பெரிய விவாத முண்டாகிறது. ஆனால் அக்குருமார்களின் நிலைமை எப்போதும் சாதிக்கத் தக்கதல்ல வாதலால் சீர்திருத்தக் கட்சிக்காரர்கள் கடைசியில் அவர்களை மேற் கொள்ளுகிறார்கள்.

4. இயேசுவின் வெளிப்படையான போதனைகளானது சாதனைக்குரியதல்லாததும் சங்கடத்தை விளைவிக்கக் கூடியதென்றும், காரணங்களால், எப்படித் தள்ளுபடிசெய்யப்பட்டன வென்பதற்கு, விவாக விமோசன சட்டத்தில் (Divoreeaet) அத்தாட்சியைக் காணலாம். இயேசுவின் வெளியான வார்த்தைகள் தள்ளப்பட்டன. இயேசுநாதர் மிகவும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறதாவது, “நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, விபசாரக் குற்றத்தினிமித்த மல்லாமல் வேறே முகாந்தரத்தால் தன் பெண்சாதியை நீக்கி, மற்றொருத்தியை விவாகஞ்செய்கிறவன் எவனோ அவன் விபசாரஞ் செய்பவனாவான். அப்படித் தள்ளுதல் சீட்டு எழுதிக்கொடுத்துத் தள்ளப்பட்டவளை எவன் விவாகம் செய்கிறானோ, அவன் விபசாரஞ் செய்பவனாவான்” இயேசு இந்தச்சட்டத்தை அழுத்திச் சொன்னபோதிலுங்கூட கிறிஸ்தவர்கள் அது (சட்டம்) மிகவும் நாசமானதென்றும் அநேக கெடுதிகளை உண்டாக்குகிறதென்றும் கண்டதினால், சட்ட நிரூபண சபையார்கள் கடைசியாக அதைப் புறம்பே தள்ளும்படி நேரிட்டு, விபசாரத்தினிமித்தமல்லாமல், மற்ற முகாந்தரங்களாலும் விவாகசம்பந்த விலக்கு (Divorce)ச் செய்யலா மென்று இடங்கொடுத்தார்கள். கிறிஸ்தவ தேசங்களிலெல்லாம் இப்போது மேற்கண்ட, இயேசுவின் சட்டமானது வழங்கா தொழிந்த சட்டமாய்விட்டது! குரானின் சட்டமானது இதற்குப் பதிலா யேற்றுக்கொள்ளப்பட்டது. ஆகையால் இயேசுவின் பிரமாணங்களால் நேர்ந்த கெதியானது இவ்விதமாய் நிரூபிக்கப்பட்டது.

5. இயேசுவோ, மிகவுஞ் சொற்பக் கட்டளைகளைப் பிறப்பித்தார். அச்சொற்பக் கட்டளைகள் ஏறக்குறைய எல்லாம் சாதனைக்குரியவையல்லவெனக் கண்டறியப் பட்டிருக்கின்றன. தன் ஒரு கன்னத்தில் அடிபட்ட யாதாமொரு கிறிஸ்தவனும் தன் மற்ற கன்னத்தை விரோதிக்குத் திருப்பிக் கொடுக்கிறதில்லை. குருமார்களுங் கூட இந்தச் சட்டத்தைப் பழக்கத்துக்குக் கொண்டுவரத் தைரியமில்லை. குருக்களல்லாத (அதீட்சகர்கள்) மற்ற ஜனங்களைப் பார்க்கிலும், குருக்கள்மார்களுக்குள், பழிவாங்கும் ஆண்மை அதிகம். இங்கிலாந்தில் ஒரு பிரதி குருவுக்கும் (Vicar) சேகரத்தானுக்கும் (Paristhioner) சமீபத்தில் நடந்த விவாதத்தில் கிறிஸ்தவக் குருமாரின் பழிவாங்குந்தன்மை நன்றாய் விளங்கிற்று. சென்ற அத்தியாசீனகாலத்தின் (Last Session) கடைசியில் பிரித்தானியா பார்லிமெண்டு சபையாரால் ஏற்படுத்தின, காலஞ்சென்ற பெண்சாதியின் சகோதரியின் விவாக மசோதா (Diseased Wife's Tister Bill) வானது அவ்விவாதத்துக்குக் காரணமாகும். சர்ச் ஆப் கிறிஷ்ட்டு (Church of Christ) என்னும் கிறிஸ்தவ சபையாருக்குள் இறந்துபோன பெண்சாதியின் சகோதரியை விவாகஞ் செய்வது பிரமாணத்துக்கு விரோதமெனச் சொல்வது, லெவி ஆகமம் (Levi Aicies) 18-ம் அத்தியாயத்தின் தார்ப்பரியத்தின்பேரில் முக்கிய ஆதாரமாயிருக்கிறது. தவிரவும் கிறிஸ்தவக் குருமார்கள் தங்களுயிருக்குச் சமமாய் எண்ணியிருக்கிற இந்த நியாயப் பிரமாணத்தை, அறிவின்மையுடையது என்றும் மிகவும் சௌகரியக்குறைவுள்ளதென்றும் ஜனங்கள் கண்டபோது, இராஜாங்கத்தாருக்கு விரோதமாய் ஒரு பலத்த எழுச்சி உண்டானது. இந்த விவாதமானது 1850-ம் வருஷத்திலேயே ஆரம்பித்துவிட்டது. ஆனால் சென்ற அத்தியாசீன காலத்தின் இறுதியில்தான் (Last Aession) இந்தப் பிரமாணத்தைத் தள்ளுபடி செய்வதற்கு நியாய துரந்தரர்கள் (Adoocates) தங்கள் காரியத்தை முடிக்கக் கிளம்பி, இறந்துபோன பெண்சாதியின் சகோதரியைக் கலியாணஞ்செய்து கொள்வது நியாயமென வற்புறுத்துஞ் சட்டத்தை ஏற்படுத்தினார்கள். என்றாலும், குடியேறின நாடுகளில் வெகு காலத்துக்கு முன்னமே இந்த நிர்ப்பந்தம் எடுபட்டுப் போய்விட்டது. இறந்துபோன பெண்சாதியின்

OFFICE OF THE RE[illegible] REGISTERED 12 APR 1910 MADRAS

சகோதரியை விவாகம்செய்துகொள்ளலாமென்ற இந்தப் பிரதமசட்டமானது, தென்ஆஸ்ட்ரேலியாவில் அங்கீகரிக்கப்பட்டது. என்றாலும், அந்தக் குடியேற்ற நாட்டின் பார்லிமெண்டு சபையார் இந்த மசோதா சட்டத்தை ஐந்து தடவை ஏற்றுக்கொண்டதின் பேரில்தான் இராஜாங்கத்தாரின் சம்மதம் கிடைத்தது. மற்ற நாட்டார்களும் இதைச் சீக்கிரம் பின்பற்ற ஆரம்பித்தார்கள். விக்டோரியா, டாஸ்மேனியா, நியூசவுத்வேல்ஸ், குயின்ஸ்லாண்டு, நியூஜிலாண்டு, மேலஆஸ்ட்ரேலியா, பார்பாடோஸ், கன்னடா, மோரீஸ், நெட்டால், கேப்காழனி முதலிய நாடுகளில் இம்மாதிரியான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. மஹாபிரித்தானியா (Great Britain) கடைசியாய் வழிப்பட்டது. ஆனால் குருமார்கள் வழிக்குவரவில்லை. தங்கள் வல்லமையால் கூடியவரை எவ்விதத்தாலும் இந்தச்சட்டத்தை உண்டாக்குவதிலிருந்து தடுக்க எதிர்வாதஞ்செய்யத் தீர்மானித்தார்கள்போல் தெரியவருகிறது.

6. இங்கிலாந்திலுள்ள ஈட்டன் பிரதிகுருவான (Vicair of Eaton) ரெவரெண்டு கியானன் தாம்சன் துரை (Rev. Mr. Canan Thompson) யானவர் மிஸ்டர் பானிஸ்டர் துரை (Mr. Banister) தன் இறந்துபோன பெண்சாதியின் சகோதரியைக் கலியாணஞ்செய்ததற்காக அவருக்கு இராப்போஜனம் வகையராவை மறுத்துவிட்டார். மிஸ்டர் பானிஸ்டர் துரை, சிலகாலம் தாரமிழந்தவராகவிருந்துவிட்டு, 1907௵ ஜூலை மாதத்தில் தான் இறந்துபோன பெண்சாதியின் சகோதரியை விவாகஞ்செய்ய அபிப்பிராயப்பட்டார். ஆனால், அப்போது இங்கிலாந்தில் அவ்விவாகம் நியாயப் பிரமாணத்துக்கு விரோதமாயிருந்தபடியால், மிஸ்டர் பானிஸ்டர் கன்னடா தேசத்துக்குக் குடிபோய் அங்கே விவாகத்தை நடத்தவேண்டியிருந்தது. தன் பெண்சாதியோடு தன்சுயதேசத்துக்குத் திரும்பிவரச் சட்டம் இடங்கொடுக்கவில்லை. இவ்வித அசௌகரியத்துக்கெல்லாம் அவரை ஆளாக்கினது கிறிஸ்துச்சட்டமே என்றாலும், இராஜாங்கத்தார் அவர் உதவிக்குவந்து இறந்துபோன பெண்சாதியின் சகோதரியை விவாகம் செய்வது கூடுமென்ற சட்டத்தைப் பிறப்பித்தபோது மிஸ்டர் பானிஸ்டர் துரையும் அவர் பெருமாட்டியும் தங்கள் சுயதேசம் வந்து சேர்ந்தார்கள். இங்கே வந்தபிறகும் தங்கள்

சேகரத்துப்பிரதிகுருவானவர் தங்களுக்குஇராப்போஜனமுதலியதைக்கொடுக்காமலிருக்கக்கண்டார்கள். தவறாமல்தேவாலயத்துக்குப்போகிறவரும் தேவாலய விஷயத்தின் வேலையில் ஊக்கமாய் உழைத்து வருபவருமான இப்பிரபுவுக்கு இது ஒரு மானபங்கமாயிருக்கிறது. பிரபல பகிரங்க துன்மார்க்கன் விஷயத்தில் தான் அப்பேர்ப்பட்ட நடபடிக்கைசெய்வதற்கு ஒரு ஆலயகுருவுக்குத் தகும். ஆகையால், மிஸ்டர் பானிஸ்டரும் அவர் பெருமாட்டியும் தங்கள் குருபேரில் வியாஜ்ஜியம் செய்தார்கள். வாதிகளின்பேரில் அநுகூலமாகவே அந்த வியாஜ்ஜியம் முடிவானதாக நமக்குத் தெரியவருகிறது. இப்போது அந்த ஞானானுமானத்தை (Sacrament) அந்தக்குரு தன் சேகரத்தாரிருவருக்கும் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் தன் உத்தியோகத்தை இழக்கவேண்டும். குருமார்கள் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் விவாகத்தை நடத்தும்படி சட்டமானது அவர்களைவற்புறுத்தாவிட்டாலும் இராஜாங்கத்தாரால் கிரமமென ஒப்புக்கொள்ளப்பட்டதைச்செய்கிற யாதாமொரு குடியானவனை ஜாதியைவிட்டு அப்புறப்படுத்த அவர்களுக்கு (குருமார்களுக்கு) அதிகாரமில்லை,

7. மேலே சொன்ன சம்பவத்தைப் பற்றி பயனீர் (Pioneir) என்னும் பத்திரிகை கூறுகிறதாவது:—"இந்த விஷயத்தின் இரகசியம் என்னவென்றால், பிரதி குருவானவர் தன் அத்தியக்ஷரின் (Bishop) யோசனையும் போதனையுங் கேட்டேநடந்துவந்திருக்கிறதாகத் தெரியவருகிறது. இவ்விஷயமானதுசென்ற வருஷத்தில் நடந்த விவாதத்தை மறுபடியும் மூர்க்கமாய் கிளப்புவதற்கு ஒரு முற்குறியாம். அத்தியக்ஷர்கள் ஒரே பிடிவாதமாய் இராஜாங்கத்தாரால் கிரமமென ஒப்புக்கொள்ளப்பட்டவற்றை முறைகெட்ட விவாகமென மதிக்கத் துணிந்தால் இந்தச் சிறியநார்விச் (Norwitch) சங்கதியானது, குருமாருக்கும் இராஜாங்கத்தாருக்கும் ஒற்றுமையின்மையையுண்டு பண்ண முதல் ஏதுவாயிருக்குமெனலாமென்பதே.

8. இராஜாங்கத்தார் நியாயப் பிரமாணங்களைத் தவிர்க்கிறதைப் பற்றி குருமார்கள் இராஜாங்கத்தாரோடு முரணிக் கலவரஞ் செய்யத் தயாராகும்படி இராஜாங்கத்தார் பேரில் அவ்வளவு கோபமுடையவர்களாயிருக்கிறார்கள். இராஜாங்கத்தார் இந்தக் கிறிஸ்தவ சட்டத்தை தள்ளுபடி செய்ததினால் என்ன ஆபத்தென்றால், திருக்குரானைப் பின்பற்ற நேரிட்டதுதான். ஏனெனில், திருக்குரானானது இறந்து போன பெண்சாதியின், சகோதரியை விவாகஞ் செய்ய இடங்கொடுக்கிறது அத்தியாயம் IV ருக்கு 4) இப்போது கிறிஸ்தவ நாடுகளில் பரவியிருக்கின்ற பலவகைச் சங்கடங்களுக்கு, கிறிஸ்துமதமே காரணமாகும். கிறிஸ்துவ சட்டங்களையும், கிறிஸ்துவ நியாயப்பிரமாண சங்கங்களையும் நீக்கி, திருக்குரானின் கட்டளைகளை அவைகளுக்குப் பதிலாய் ஸ்தாபித்தால் அச்சங்கடங்களத்தனையும் விலகிப்போம்.

9. கிறிஸ்தவ நாடுகளில் உண்டாகிற சங்கடங்களை நிவிர்த்தி செய்யத் தகுந்த மெய்யான பரிகாரமானது, இஸ்லாமிய சங்கங்களிலும் திருக்குரானின் ஆழ்ந்தஞானச் சட்டங்களிலுமிருந்துமட்டுமே கிடைக்கும். தற்காலத்தில், கிறிஸ்தவர்களைப்பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கும் நியாயத்துக்கொவ்வாததும் நன்னெறி யழிந்ததுமான துன்பத்தை விளைவித்துக் கொண்டிருக்கிற கிறிஸ்துவச்சட்டத்தைத் தள்ளிவிடும்படி கிறிஸ்தவர்களை வழிப்படுத்தி அதற்குப்பதிலாக, இஸ்லாத்தின் சட்டத்தை அவர்களை அங்கீகரிக்கும்படிசெய்யுமென யாம் நம்புகிறோம்.

ஆமீன்.

அறிவின் கடமையும் தன்னை மதிப்பின் கேடும்.

வெண்பா.

சொற்கொண்டு மேவுந் துதிபலவும் குன்னெனுமோர்
சொற்கொண் டெலாமமைத்த தூயவற்காம்-சொற்கொண்ட
வேத முகம்மதற்கு மீகிளைக்கு மன்பருக்கும்
மேதைசல வாத்துசலாம் வேண்டு.

சருவ சிருஷ்டிகளையு மமைத்து, அதற்குத்தக்கவாறு பராமரித்துக் காத்தழிக்கும் சர்வவல்லமையும், அளவிறந்த ஞானமும், ஜீவகாருண்யமுமுள்ள பரிபூரணக்கடவுள், ஆத்மகோடிகள் நற்கதியடையுமாறளித் தருளிய, பரிசுத்த சத்தியகுரான் சரீபில் "அண்டபுவனங்களையும், அவைகளிலுள்ள யாவையும், நாம்வீணாய்ப்படைக்கவில்லை (என்கிலும் நமதுவல்லமையின் மீதறிகுறிகளாகவும், நமது அடியவர்களுக் குபயோகமாகவுமிருக்கும்) என்றும்" அல்லாஹுத்தஆலா உங்களை, யுங்கள் தாய்மார்ருதரங்களிலிருந்து யாதொரு வஸ்த்துவையுமறியாதவர்களாக வெளியாக்கி, நீங்களவனையறிந்து, நன்றிபாராட்டி, வணங்க பார்வை, கேள்வி இருதயங்களையும் உங்களுக்கமைத்தான்" என்று அருளியபடி உயிரில்லாத பொருள்களையும், பரிசமொன்றையே யுணரும் புல், மரமாதியவோரறிவுயிர்களையும், பரிசம், இரசம், இரண்டையு முணரும் சிப்பி, சங்காதியவீரறிவுயிர்களையும்,பரிசம் இரசம், கந்தமூன்றையுமுணரு, மீர், கறையான், முதலிய மூவறி உயிர்களையும், பரிசம், இரசம், கந்தம், ரூபம், நான்கையுமுணருந்தும்பி, வண்டாதிய, நாலறிவுயிர்களையும், (1) பரிசம், இரசம், கந்தம், ரூபம், சப்தமைந்தையுமுணருமாடு, ஆடு, ஒட்டகை முதலிய ஐயறிவுயிர்களையும், இவ்வையறிவோடு பகுத்தறிவென்னும் விசேஷசக்தியுடைய மனிதருக்கவைகள் உபயோகப்படுத்தப்பட்டவைகளாயும், மனிதரை சகலசிருஷ்டிகளையும் படைத்து,அவைகளுக்கேற்றபடி யிரணமளித்தாட்கொண்டுவருங் காருண்யக்கடவுளையுள்ளபடி யணுத்துணையும் பிசகாதறிந்து, வணங்கக் கடமைப்படுத்தப்பட்டவர்களாயும், படைத்தனனென்பது சருவ சமயத்தவர்களுக்குஞ் சம்மதமானதுவே.

பண்டை யிலக்கண நூலாசிரியர் "மக்கடாமே யாறறிவுயிரே, உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே,, "மக்கடேவர் நரகருயர்திணை, மற்றுயிருள்ளவு மில்லவு மஃறிணை" என்ற சூத்திரங்களான் மக்கண் மாத்திர மாறறிவுடையவரென்றும், மனிதரும், வானவரும், நரகருமுயர் பகுப்பினரென்றும் அவரொழிந்த மற்றவுயிருள்ளவுமுயிரில்லாதனவுமெல்லாமிழிந்த பகுப்பினவென்றும், வரையறுத்துப் போந்த வபிப்பிராயங்களும் வலியுறுத்தத்தக்கன. மனிதர்பெறும் பேறுகளிலெல்லா மிக்குயர்ந்த விவ்விசேஷ சக்தியான நன்மைதீமை யின்னின்ன தெனப்பகுத்தறியு மறிவையுடைத்தாதல் பெரிது மரிதாயிருத்தல் பற்றியே "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பே றல்லபிற" என்றார் திருவள்ளுவரும்.

அளவிடற் கரியவிவ் வறிவுடைய மனிதரிறைவனையுள்ளபடி யறிந்து வணங்க வமைக்கப்பட்டன ரன்றிப் பிறிதொன்றுக்கல்லர். இதனை யறியாதாரியாவரு மெங்கேனுமிலர்.

தமது ஜாதி, மதமின்ன தெனவறியாத சிறுவர்களைவினவிலும், மனிதரொழிந்த மற்றையவுயிருள்ள வுயிரில்லாத யாவையுமனிதருக்குபயோகமாகவுங் கடவுளை யுள்ளபடி யறிந்து வணங்கக்கடமை பூண்டவர்களாய் மனிதர்களையுங் கடவுள் படைத்தாரென்றருத்தம் தரும்படி பழைய தமிழ்க்கவி யொருவர்கூறிய "படைத்தான் படைப்பெல்லாமனுவுக்காக, மனுவைப்படைத்திட்டான்றனை வணங்க" என்னுஞ்செய்யுளையுடனே சொல்லி முடித்துவிடுவார்கள். மேற்கூறிய வாற்றாலும், பிறவாற்றாலு முதல்வனை யறிந்தொழுகுங்கடமை பூண்டமக்கட் பிறப்பினரியாவருங் கடவுளாலருளப்பட்ட சத்தியமார்க்க மின்னதென நன்கறிந்ததின் வழிசேர்ந்து தமது கடமையை நிறைவேற்றச்சாதித்து நிற்பது ஆவசியமாகின்றது.

உலகத்திற் பரவிவரும் பற்பல மார்க்கங்களுந் தனித்தனியே தான்றானே மெய்ம்மார்க்க மென்றுமஃதொழிந்தனவேனைய வெல்லாம் பொய்ம் மார்க்க மென்றுஞ் சாதித்து நிற்கின்றன. நிற்க; சமையக்கோட்பாடுகளாற் பற்பலவகுப்பினராய் மாறுபட்டிருக்கும் பலசாதியரும் ஓரே தெய்வ முண்டென்று சாதிக்கும் விஷயத்தில் வாயான் மாத்திரம் ஒன்றுபட மொழிவாராயினுந் தெய்வத்திற்குரியவிலக்ஷணமுதலிய பல்வேறு விஷயங்களிலொருவரையொருவர் பெரிது மறுத்துப் போவாராகின்றனர்., ஆனால், மெய்ம்மையிற் பிரவேசிக்கக்கடமை பூண்டநாம் அங்கீகரிக்கத்தக்க விஷயங்களைக்கைக்கொண்டும் ஏற்கத்தகாதவற்றைத்தவிர்த்தும் விலக்கவேண்டியதவசியம்:—அவற்றுண் முக்கியமாய்க்கவனிக்க வேண்டியபலவிஷயங்களிரண்டுமாத்திர மடியிற்காட்டுகின்றேன்

---

[1] இவைகளைந்து முறையே தொட்டல், சுவைத்தல், மோத்தல், பார்த்தல், கேட்டலாகிய வைந்தாலறியப்படும் புலன்கள்.

முதலாவது தெய்வமுண்டென் றறிதல்:—அஃதாவது நெருப்பைக் கண்ணாற் காணாவிடத்துப் புகையினால் நெருப்புண்டென்றும், காற்றைக் காணாவிடத்துப் பொருட்களி னசைவினாற் காற்றுண்டென்றும், அறிகிறதுபோல் கட்புலனுக்குக் கதுவப்படாத கடவுளை சிருஷ்டிப் பொருட்களாலும், அவைகளினேற்ற வித்தியாசங்களினியக்கங்களாலு மவைகளை யுண்டமைத்துக் காத்தழிக்குஞ் சர்வவல்லமையுள்ள கடவுளொருவனுண்டென்று தெரிந்துகொள்கிறோம்.

இரண்டாவது கடவுளதுஇலட்சணங்களை யறிதல்:—அஃதாவது முத்தொழிற்புரியும் வல்லமையுடைய கடவுட்டன்மைக்கு அத்தியாவசியமாகிய தனிமை, சருவவல்லமை, சருவஞானம், பூர்வீகம், தன்னிற்றானிற்றல், ஒப்பின்மை முதலிய இன்றியமையாத இலக்கணங்களையுடையவனாகவும்; இவைகளுக்கு நேர் விரோதமானவைகளுந் தெய்வத்தன்மைக்கறவே பொருந்தாதவைகளுமான தன்மை, வலாமை, மடமை, புதிதாயிருத்தல், பிறருதவி வேண்டல், நிகருடைத்தாதல், முதலிய அறவேயில்லாத இலக்கணங்களை யிருக்கப்பெறாதவனாகவும், கடவுளிருக்கவேண்டிய தவசியமாயிருக்கிறது. ஏனென்றால், முன்னையவைகளிலொன்றேனு மில்லாதவனாகவாவது பின்னையவைகளி லொன்றேனுமுடையவனாகவாவதிருந்தா னொருவனுலகசம்ரட்சணை புரிவது கூடாதவிஷயமானதனா லென்க.

உதாரணமாகத் தனிமை, இன்றியமையாத இலக்கணங்களிலொன்று. கடவுட் டனிமையின்றிப் பலராயிருப்பதாயும், அவர்களிலொருவனை யுயிர்ப்பிக்க வொருகடவுளும், அதே நிமிஷத்திலவனையே அழித்துவிட மற்றொருகடவுளும் அபிப்பிராயப் பட்டார்களென்றும், வைத்துக்கொள்வோம். அப்படியானவிருவருடைய இஷ்டப்படி தனித்தனி ஒவ்வொருவரும் நாடிய வினை யந்நிமிஷத்தில், அவனையே யுயிர்ப்பித்தலும், அவனையே யழித்தலு மெங்ஙன முடிவுபெறும். உயிர்ப்பித்தவழி யழிவின்மையும், அழித்தவழி யுயிர்ப்பித்தலின்மையுமாகிவிடுமன்றோ? அங்ஙனமாயின், இருவரிலொருவனுடைய வினைமுடிந்து, மற்றொருவனுடைய வினை முடிவுபெறாதாகி முடிந்த வொருவன் சருவவல்லமையுடையவனாகவும், முடியாதவன் சருவவல்லமையில்லாதவனாகவு மாகிவிடுகிறான். நம்போற் சருவவல்லமையில்லாதவனைக் கனவிலேனுங் கடவுளென்று நம்பவிடம்பெறாதென்பது அற்பவறிவினர்க்குஞ் சொல்லாமலே விளங்கும். இதுபோலநேகதிருஷ்டாந்தங்களாற் கடவுள் சருவவல்லமையுள்ள பலராயிருத்தல் கூடாதென்றுந் "தெய்வமொருவனே யென்றுணரவல்லீரே, லருவினைகளைந்துமறும்" என்றபடி யொருவனே யென்னுந் தனிமையின்றியமையாத விலக்கணமென்று வெளியாகிறபடியே யனைய வின்றியமையாத விலக்கணங்களையுமுடையவனாக விருப்பதுமிருக்கக்கூடாத விலக்கணங்களை யேற்காதிருப்பதுங்கட்டாயமென்று நன்குதெளிவாகும்.

மேற் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள விலக்கணங்கள், நமது இந்தியாவில் விசேஷமாகக் காணப்படும் இந்து, கிறிஸ்துவ, இஸ்லாமார்க்கங்களுடைய ஆதரவான வேதநூல்களிலெம்மார்க்கமதத்திற் சரியாகக் கூறப்பட்டிருக்கின்றன வென்பதை நன்கறிந் துணருமாறு இந்து சமையத்தைப்பற்றி முதலி லாராய்வோம்.

இந்து சமயம்:— இச்சமையத்தவர்களுக்குப் பிர்மாவினாற் கொடுக்கப்பட்ட, இருக்கு, எஜுர், சாமம், அதர்வணமென்னும் நான்குவேதங்களிருப்பதாகச் சொல்லிக்கொள்வதே தவிரக், கிறிஸ்தவர்களுக்குப் பைபிளும், முஸ்லிம்களுக்குக் குரானும், முதனூலாக விசேஷமாகப் பரவியிருப்பது போலவே, அவர்களுக்கு அவ்வேதங்களாவது அல்லது வேறு ஆதரவான முதனூலாவது தமிழுலகத்திலறியப்படாமையானும், சாஸ்திர புராணங்களாதியவைகளான் மேற்கூறிய விலக்கணங்களில்லாதவரைக் கடவுளென்று ஸ்தாபிக்கப் படுகிறதுமன்றி, யொன்றை மற்றொன்று பெரிது மறுத்துப் போகிறது. உதாரணமாகச் சிருஷ்டித்தல், சம்ரட்சித்தல், அழித்தலாகிய முத்தொழில்களையும், ஒரே கடவுணடத்த வேண்டியதவசியமாயிருக்க இதற்கு விரோதமாய்ப் பிரமா, விஷ்ணு, சிவன் என்னு மூவர்களே யவைகளை நடத்துகிறவர்களென்றும், அவர்களுக்குள் பிரமாவானவர் தமது புத்திரியை மனைவியாக்கிக் கொண்டதினிமித்தம், அவருக்குக் கோயிலு மதமுமில்லாது போயினவென்றும், அவரொழிந்த இருவருக்குங் கோயிலுமதமு மேற்பட்டு அவர்களிருவருள் சிவன் பெரியவரென்று சிவமதஸ்தர்களும்,

விஷ்ணு பெரியவரென்று விஷ்ணு மதஸ்தர்களும், ஒருவரை யொருவர் மறுத்தெழுதும் புஸ்தகங்களையும், அவைகளா லேற்படுங் கூக்குரல்களையும், விசேஷமாக எங்குங் காணலாம்.

அன்றியுஞ் சிவனானவர், ஐந்து சிரசுடைய பிரமாவினது ஒரு சிரசை நியாய வீனமாகக்கொய்த தப்பிதத்திற்காகப் பிரமஹத்தி, அஃதாவது கொலைப்பழியால் பீடிக்கப்பட்டுப் பித்தரெனும் நாமத்துடனெங்கும் அலைந்து திரிந்துழன்றனராம். இத்தகைய கடவுளென்று கற்பிக்கும் நூல்களை நம்புதற்கிட மில்லாமையால், அவைகளைத் தவிர்த்துக், கிறிஸ்தவ மதத்தைப்பற்றி யாராய்வோம்.

கிறிஸ்தவ மதம்:—இவர்களுக் காதரவான வேதநூல் பைபில். இப்பைபிலானது, ஆண்டவனொருவனா லருளப்பட்ட பரிசுத்த சத்தியவேதமாயிராது பலராலெழுதப்பட்ட சரித்திரங்களும் நிருபங்களு மடங்கிய வொருவிதக் கதைப் புஸ்தகமாயிருக்கிறது. அன்றியும், அதிற் கடவுளுக்குரிய இலக்கணங்களைக் காணப்படாதிருப்பதோடு பற்பல விடங்களிலும், ஆனது, ஆகிறது, ஆவதாகிய திரிகால வர்த்தமானங்களைப் பிழையற அறிந்திருக்கிற சர்வஞ்ஞான முடைய கடவுளை வருங்கால சம்பவங்களைச் சிறிதுமே யறியாதவரென்று குறிக்கப்பட்டிருக்கிறது.* ஆதியாகமம்-1-அதி3, 4, 10, 17, 18-ம் வசனங்களில் “3 தேவன் வெளிச்சமுண்டாகக் கடவதென்றார், வெளிச்சமுண்டாயிற்று. 4 கர்த்தர் வெளிச்சம் நல்லதென்று கண்டார். (10) கர்த்தர் காய்ந்த தரைக்குப் பூமி யென்றுஞ் சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரமென்றும் பேர் வைத்தார். தேவனதை நல்லதென்று கண்டார் (17—18) பூமியின் மீது பிரகாசிக்கவும், பகலையு மிரவையு மாண்டுகொள்ளவும் வெளிச்சத்திற்கும் இருளுக்கும் வித்தியாசந்தோன்றவுந் தேவனவற்றை வானமென்கிற ஆகாயத்தில் வைத்தார். கர்த்தர் அது நல்லதென்று கண்டார்” என்றும், ஆதி - 6 அதி 6-ம் வசனத்தில், “கடவுள் பூமியிலே மனுஷனையுண்டாக்கி யதற்காக மனவருத்த மடைந்தார். அஃதவ ரிருதயத்து விசனமாயிருந்தது” என்றுங் காணப்படுகிறபடி கடவுள் வெளிச்ச முதலானவைகளை நல்லவைகளெனச் சிருஷ்டிக்க முன்னறியாதவராக விருந்து, சிருஷ்டித்த பின், நல்லவைகளெனக் கண்டறிந்ததாகவும், மனிதரக்கிரமம் புரிவாரென்றறியாதிருந்து, சிருஷ்டித்த பின், னவரது அக்கிரமச் செயலினைக் கண்டு, முன்னறியாதிருந்து சிருஷ்டித்த மடமைக்கு மனவருத்தப்பட்ட தாகவும், அவரது இருதயத்து விசனமாக விருந்ததாகவும், வெளியாகிற தல்லவா?

இங்ஙனம், வருங்கால சம்பவங்களை யறியாத வொருவரைச் சர்வஞ்ஞராகிய கடவுளென்றுங் கடவுண் மீதறியாமையைச் சுமத்துகிற தப்பிதமான நூலைத் தேவவாக்கென்று மெவ்வாறு நம்பக் கூடும். அன்றியும் பைபில் பலராலெழுதப் பட்டிருப்பதால் அநேக மாறுதல்க ளடைந்திருக்கக் கூடுமென்று, “வேதோபகரண” முதலிய நூல்களாற் றெளிவாகின்றது. அதற்கிணங்கக் காலத்திற்குக் காலம் வேண்டியசமயங்களில் பாதிரிமார்களால் பைபிலின், வசனங்கள் மாற்றப்பட்டு வருகின்றன வென்பதைக் கிறிஸ்தவருடைய பற்பல மிஷீன்களின் பிரிவு பைபில்களொன்றுக் கொன்றொவ்வாமையே நன்கு வெளியாக்கும்; என்றாலும் பைபில் முழுதுங்கட்டுக் கதையென்று துணியவிடமில்லை. ஒரு சில வசனங்கண் மட்டிலும், முன்னிருந்தபடி யிருக்கலாமென்று கருதலாம். தற்போது வசனங்களுக்கு அபிப்பிராயங்கண் மட்டிலும் பேதமாய் மாற்றிவைத்துப் படர்கதிர்ச் சூரியனைச் சிறு கையான் மறைத்தவர்களுக் கிணங்கக் கிறிஸ்தவர்கண் மறைத்தபோதிலும், உண்மை வெளியாகாது மறைந்து விடுமா? உதாரணமாக.

பைபிளில், (ஸ்அயா) “ஏசாயா 28-அதி—1—2—3’-ம் வசனங்களில் “எப்ராயீமுடைய வெறியரின் பெருமையான மகுடத்துக்கு மதுபான லாகிரியாயிருக்கிறவர்களுடைய செழிப்பான பள்ளத்தாக்குடைய, கொடுமுடியரின் மீதுள்ள வலங்காரச் சேர்க்கையான வாடிப்பூவுக்குங் கேடே. இதோ; பலனும், வல்லமையுமான வொரு.

---

* இவ்வியாசத்திற் காட்டப்பெற்றிருக்கும் பைபிள் வசனங்கள் முழுதும் “அல்கிதாபுல் முகத்தஸ” சத்திய வேதம் என்ற பெயருடன் கிறிஸ்தவர்களால் அறபி பாஷையில் இயற்றப் பெற்றிருக்கும் பைபிளிலிருந்து மொழிபெயர்த்து எழுதப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பைபிளுக்கு மேற்கண்ட விஷயங்கள் வித்தியாசப்பட்டிருப்பினும் அபிப்பிராயங்கள் மாறுபட்டிரா.

வன் எஜமானுக்கிருக்கிறான். அவன் கன்மழை வெள்ளம்போலவும், அழிக்குஞ் சூறைக்காற்றுப் போலவும், புரண்டு வருகிற கனமான தண்ணீரின் வெள்ளம் போலவும், வந்து, அதைத்தரையிலே யெடுத்தெறிந்து விடுவான். எப்ராயீமுடைவெறியர்களின்முக்கிய கிரீடங் கால்களான் மிதித்துவிடப்படுதல்." என்று கண்டிருக்கின்றது. எப்ராயீமென்றது:—ஸ்ரவேலங் (பனீஸ்ராயீல்) கைவசமிருந்தவொரு பட்டணத்திற்குப் பெயர் மதுபானஞ் செய்கிறதினால் வருங்கேடுகளை யந்த ஸ்ரவேல் சந்ததியாருக்குக் கடவுள் தீர்க்கதரிசியாற் றெரியப்படுத்தி விலக்கிவந்தும் அந்தத் துன்மார்க்கர்கள், அதைவிட்டு விலகியிராது, லாகிரியினான் மதிகெட்டும், மதுபானத்தினால் அமிழ்ந்து வழிதப்பியுமிருந்த தனாற் கடவுளந்த வெறியர்களின் முக்கிய கிரீடங்களைக் கால்களான் மிதிக்கவுஞ், சாராயங்களைக் கைகளாலெடுத் தெறியவும் வல்ல வொருவரைத் தன்னிடமிருந்தனுப்புவதாய், 'ஏசாயா'த் தீர்க்கதரிசி மூலந் தெரிவித்திருக்கிறான். இதனான் முந்திரிச் சாராயமுதலிய லாகிரிவஸ்துக்களைச்சற்றுமுபயோகிக்கக் கூடாதென்று கட்டாயப்படுத்தி விலக்கி நிற்குமொருவர் தேவனருளாலவதாரமாவாரென்று தெரியவருகிறது. இத்தீர்க்க தரிசினங் கிறுஸ்துவைப் பற்றியதாகக் கிறிஸ்தவர்கள் புரட்டு நியாயஞ் சொல்வது சுத்தப்பிசகு. ஏனென்றால், "யோவான் 2 அதி 1-முதல் 7வரையுள்ள வசனங்களால், ஒரு கானான் வீட்டிற் கல்யாணத்திற்குக் கிறிஸ்துவும், அவர் தாயாரும், சீஷர்களுஞ் சென்றிருக்குஞ் சமயம் அம்மண வீட்டில் முந்திரிச் சாராயங் குறைவாயிருந்ததைத் தமது தாயாலறிவிக்கப்பட்ட கிறிஸ்து, 6 கற்சாடிகளிற் றண்ணீரை நிறையும்படி செய்து அவைகண் முழுவதையு முந்திரிச் சாராயமாக மாறும்படி செய்தாரென்று வெளியாகிறபடி, சாராயமில்லாதபோது தண்ணீரையே சாராயமாக மாற்றிய கிறிஸ்து விடாமுயற்சியாய்க் குடித்துவருஞ் சாராயத்தை யறவே குடிக்கக்கூடாதென்றெடுத்தெறியும்படி வந்தவரா யிருப்பதெங்ஙனம்? இவருக்கெவ்வாறிந்தத் தீர்க்கதரிசனம் பொருந்தும்? கிறிஸ்துவுக்கிது பொருத்தமுடையதாக வப்போஸ்தலரொருவருஞ்சொல்லவேயில்லை இது போன்ற அநேகவிஷயங்களுக்குத் தப்பபிப்பிராயம் வைக்கின்றார்களாயினும் இன்னமொரு விஷயத்தைமட்டிலுங் கீழெழுதுகின்றேன்.

அஃதாவது:—யோவான் 16-ம் அதி 7—8—12—13-ம் வசனங்களில், "7. நானுங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறேன். நான் போகிறதுங்களுக்குப் பிரயோசனமாயிருக்கும்; எப்படியெனில், நான் போகாதிருந்தாலந்தத் தேற்றுகிறவர் உங்களிடத்தில் வாரார். போவேனேயானா லவரை யுங்களிடத்திற் கனுப்புவேன். 8. அவர் வந்து பாவத்தையும், நீதியையும், நியாயத் தீர்ப்பையுங் குறித்து உலகத்தாருக்கு மெய்யறிவைக் கொடுப்பார். 12. நான் பின்னு மநேக காரியங்களை யுங்களுக்குச் சொல்லவேண்டியதிருக்கிறது. நீங்களவைகளை யிப்பொழுது சகிக்கமாட்டீர்கள். 13. சத்திய ஆவியானவர் வரும்பொழுது சகல சத்தியத்திலேயு முங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமற் றாங்கேள்விப்பட்டவைகளெவைகளோ, அவைகளைப் பேசி யினிவருங் காரியங்களையு முங்களுக் கறிவிப்பார்." என்று கண்டிருக்கிறது. இத்தீர்க்கதரிசனங் கிறிஸ்து சொன்னபடி, தமக்குப் பின்வரு முகம்மதுநபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுக்குச் சொந்தமானதா வித் தீர்க்கதரிசனம் நிறைவேறியதாய்க் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் யாதொன்றுஞ் சொல்லவில்லை. அப்போஸ்தலரல்லாத லூக்காமட்டுந் தமது நடபடிக்கை 2-ம் அதி 1முதல் 4வரை யுள்ள வசனங்களால் கிறிஸ்து பரமண்டலத்திற் கேகியபின் (பெந்தகோஸ்)என்னும் பண்டிகைநாளிற் சீஷர்களெல்லாரு மொருமனப்பட்டிருந்தார்களென்றும், விரைவாய்ப் பலத்த காற்றடிக்கிற முழக்கம்போலொருமுழக்கமுண்டாகி யவர்களை உட்கார்ந்திருந்த வீடு முழுதும் நிரப்பி அக்கினியுள்ள நாவுகள்போற் பிரிக்கப்பட்ட நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு யாவர்மேலும் வந்திருக்க அவர்களாவியினா னிரப்பப்பட்டுத் தங்களுக்கு ஆவியானவர் கொடுத்த திராணியின்படி வேறுபாஷைகளைப் பேசத்தொடங்கினார்கள் என்றும் வரைந்திருக்கின்றார்.

இவ்வசனங்களால் வெளியாகிற அக்கினி நாவுகள்போற் பிரிக்கப்பட்டதாய் வந்திருந்ததையே கிறிஸ்துவால் குறிக்கப்பட்ட தேற்றுகிறவரென்று கிறிஸ்தவர்கள் கண்மூடித்தனமாய் வாளாபிதற்றுகின்றனர். அவர்கள் தாங்கள் சொல்லுகிறபடி யந்த அக்கினிநாவே தேற்றுகிறவராயின் கிறிஸ்து சொன்னபடி சுயமாய்ப் பேசாமற்

றுங் கேள்விப்பட்டவைகளெவைகளோ, அவைகளையன்றோ பேச வேண்டும். அங்ஙன மென்னவார்த்தைபேசினார்? என்ற ஒரேகேள்வியிற் றலைகுனிந்துவிடுகிறார்கள்.

ஆதியாகமத்திற்கண்டபடி யிடையிற் சேர்க்கப்பட்ட தப்புந் தவறுமான வசனங்கள் பலவும், ஏசாயா - யோவானிற்கண்டபடி புராதன விஷயங்கண் மிகச் சிலவும் விரவிய பைபிளின் கோட்பாடுகளைப்பற்றி விரிவாயெழுத இச்சிறிய வியாசமிடம் பெறாதபடியாற், சுருக்கமாய்த் தெய்வ இலக்கணங்களுக்குச் சற்றுமே பொருந்தாத விஷயங்களிதிற் பலவாய் மலிந்திருப்பதால் முழுநம்பிக்கைக்குத் தக்கதல்லவென்றேசொல்லி யதைத் தவிர்த்து முஸ்லீம்களின் வேதமாகிய குரானைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

குரான்:—இதிற் கடவுள்முன் கூறப்பட்ட தனிமை, சருவவல்லமை முதலிய வின்றியமையாத விலக்கணங்களை யுடையவனாகவும், பன்மை, ஏலாமை முதலிய பொருந்தாத விலக்கணங்களை யேற்காதவனாகவுமிருக்கிறானென்று நன்கு விளக்கிக் காட்டுவதோடு, இருதயம் பரிசுத்தமாவதற்கான வெண்ணிறந்த மெய்ப்போதனைகளையும், பாவவிருளைப்பறக்கடித்துத் தொலைக்கத்தக்க அரிய பெரிய விஷயங்களையும், பொதிந்த தேவ வாக்காக விருக்கின்றது. அன்றியும், பைபிளில், ஏசாயா-28, அதி. 1, 2, 3-ம் வசனங்களிற்கண்டபடி வெறியரின் கொடுமுடிகளைக் கால்களாலுதைக்கவுஞ், சாராயங்களைக் கைகளாலெடுத்தெறியவும், வல்லவர்களான முகம்மது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைக் கடவுள், தனதருளா லவதரிக்கச்செய்து, அவர்களின் மூலமாய்ப் பரிசுத்த சத்தியவேதமாகிய, குரான்சரீபையுங் கொடுத்து அதிற் கள்ளுச்சாராயம் வகையராக்களைக் கண்டிப்பாய் விலக்கும்படியும் கற்பித்திருக்கிறான். நபிகள் பெருமானார் அவர்களும்அதின்படியேகள்ளுச் சாராயமுதலிய லாகிரிவஸ்துக்களை யுபயோகப்படுத்தவாவது, விற்கவாவது, வாங்கவாவதுகூடாதென்று கட்டாயப்படுத்தி, விலக்கியிருப்பதாய்த் தெரியவருகிறது.

இன்னும், பைபிளில்-யோவான்-16-ம் அதி. 7, 8, 12, 13-ம் வசனங்களில், கிறிஸ்து தான் பரலோகஞ்சென்றபின், தேற்றுகிறவரை வரப்பண்ணுவதாய்ச் சொன்னபடி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களே, பூவுலகிலவதரித்து, இருளகத் தொழியாதவர்களுக்கெல்லாம் இருளையகற்றி, மெய்ம்மார்க்க ஞானோதயச் சுடரேற்றி, யன்னோர்மனங்களையெல்லாம் சன்மார்க்க நிலையிற் சற்றும் பிறழாது தேற்றுகிறவர்களா யிருந்ததோடு, கிறிஸ்து சொன்னபடியே நபியவர்கள் பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையுங்குறித்துத் தாங்களாக யாதொன்றும் பேசாமல், (வஹீ) தேவஅறிவிப்பாற்கேள்விப்பட்டவைகளெவையோ, அவைகளைப்பேசிச் சகல சத்தியத்தின்பேரிலு மனிதரை நடத்திவந்ததாயும், அநேக விடங்களில், குரான் ஷரீபிற் கண்டிருக்கின்றது. நிற்க, இதுகாறுஞ் சுருக்கமாய்க் கூறிவந்தவைகளாலும், பிறவற்றாலுங் கடவுளது இலக்கணமகிமையை நன்கு விளக்கிக்காட்டுவது முன் வேதங்களிற் புகழ்ந்துரைக்கப்பட்டது முண்மை

(இன்னும் வரும்)

செய்யது முகம்மதுப்புலவர்,
கீழக்கரை.

பரிசுத்த கஃபா

——):o:(——

அல்லாஹுத்தஆலாவைத் தவிர வேறு எந்தப் பொருளையும் தொழக்கூடாது என்று பரிசுத்த குரான் கண்டிப்பாய்க் கட்டளையிடுகிறது. ஆதலால் முஸ்லீம்கள் கஃபாவைத் தொழுகிறார்கள் என்று சொல்வது அறிவின்மையே. இதனை ஆக்ஷேபிக்கிறவர்கள் பரிசுத்த குரானிலுள்ள அநேக மஹா வாக்கியங்களைப் படித்து நாங்கள் சொல்வது உண்மைதான் என்பதை உணர்ந்துகொள்வார்களாக. ஆதலால் இஸ்லாம் கொள்கைக்கு வேறுபாடான இந்த சஃபா வணக்கத்தைக் குரான் போதிக்கிறது என்று அறிவுள்ளவன் எவனும் உண்மை என்று சாதிக்கமாட்டான். தொழும்பொழுது நாம்

ஒரு குறித்த திசையை நோக்கி இருத்தல்வேண்டும். இவ்வாறு இருத்தல் இன்றியமையாதது. நாங்கள் பலர் ஒன்றுசேர்ந்து தொழுகின்றோம். ஒரே திசையை யாவரும் நோக்காவிடில் அவ்வாறு தொழுதல் முடியாது. இது பற்றியே குறித்த திசையொன்று எங்களுக்கு ஏற்படுத்தவேண்டியது அவசியமாயிற்று. அது ஒற்றுமையைக் கெடாமல் காக்கிறது இஸ்லாமின் உற்பத்தி கஃபாவிலிருந்துதான். அதுகடவுளின்“* திருவீடு” என்று சொல்லப்படுகிறது. நாம் ஒரு சிநேகிதனுடைய வீட்டுக்குப் போகும்பொழுது நமது நோக்கம் சிநேகிதனையல்லாமல் வீடன்று. அதே மாதிரியாய்க்கடவுளுடைய வீடு (Bait Ul Allah) என்று சொல்லப்படுகிற இடத்தை நோக்கி † நாம் யாத்திரை செல்வோமானால் நாம் தொழவேண்டிய மெய்ப்பொருளும் தொழுவதற்கு உரியதுமானதும் கடவுளேயன்றி வீடன்று. நாம் தொழும் காலையில் கஃபாவைப்பற்றிய புகழ்ச்சிமொழி ஒன்றேனும் இல்லை. கஃபா நாங்கள் தொழும் வஸ்துவாய் இருந்திருக்குமானால் அதில் அதனைப்பற்றிப் புகழ்ந்து இருக்கவேண்டுமே. விக்கிரக ஆராதனை செய்வோர்களுடைய கடவுள்கள் நன்மையும் தீமையும் அளிக்கக்கூடியன என்று அவர்களால் கருதப்படுகின்றன. அவைகளிடத்திலிருந்து பல தயவுகளை எதிர்பார்த்தும், பிரார்த்தித்துக் கேட்டும் வருவதோடு அவைகளுக்குக் கோபம் வராதபடி சாந்தி முதலியன செய்யவும் அவர்கள் முயலுகின்றார்கள். இவ்வாறு செய்வதே வணக்கமென்பதின் பொருள்.

---

* அல்லாஹுத்த ஆலாவைத் தொழுவதற்கு அதில் முதலாவதாய்க் கட்டிடம் கட்டப்பட்டது. அதுபற்றி அதைத் திருவீடு என்று அழைக்கப்படுகின்றது.

† வருஷத்திற்கு ஒரு முறை கஃபாவுக்கு உலகத்திலுள்ள முஸ்லீங்களெல்லாரும் யாத்திரை போவது, ஒவ்வொரு தேசத்து முஸ்லீங்களின் சீர்திருத்தங்களை ஒவ்வொருவரும் நன்கறிந்து அதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யக்கூடியதாயிருக்கின்றமை பற்றி இதை உலக முஸ்லீம்கள் கூடும் ஒரு பெரிய மகாசபையென்றே சொல்லலாம்.

ஆனால் கஃபாவினிடத்திலிருந்து நாங்கள் எவ்விதத் தயவையும் எதிர்பார்ப்பதில்லை. அதற்கு நாங்கள் அஞ்சுவதுமில்லை. ஆதலின், நாங்கள் அதனை வணங்குகிறோமென்பது பொருந்தாதவிஷயம். நாம் வணங்குவது முழுதும் கடவுளையேயன்றி வேறு எதையுமன்று. விசுவாச நம்பிக்கைகளினால் ஏற்படக்கூடியது தொழுகை. நாங்கள் ஒரு மெய்க் கடவுளிடத்தில் முதல் முதல் விசுவாச நம்பிக்கை கொண்டு பின்பு அவனைத் தொழுகின்றோம்; ஆனால் கஃபாவில் எங்களுக்கு விசுவாசமே இல்லை.

நாங்கள் கஃபாவின் சுவர்களைத் தொழுவதில்லை. நாங்கள் அவைகளைப் பார்க்கவேண்டுமென்ற அவசியமுமில்லை. அவைகள் இடிபட்ட காலத்திலும் நாங்கள் இப்பொழுது எவ்வாறு தொழுகிறோமோ, அவ்வாறே தொழுதுகொண்டு வருவோம். கஃபா அப்துல்லா பின் சாபர் (Abdullah Bin Jabbir) காலத்தில் இடிக்கப்பட்டுப் பின்பு மீண்டும் கட்டப்பட்டது. அக்காரணம்பற்றி முஸ்லீம்கள் யாரும் தங்கள் தொழுகையை நிறுத்திவிடவில்லை. அரைகுறையாகவும் தொழவில்லை. இதுகாறும் கூறியவாற்றால் ஒரு பொருளை நோக்கி இருத்தல் தொழுகையாகமாட்டாது என்பது விளங்கும்.

கஃபாவை நோக்கிப் பார்ப்பதினால் நாம் கடவுளுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாகிறோம். எப்படியெனில், அவ்வாறு நோக்குங்கள் என்று கடவுளுடைய கட்டளையுமிருக்கிறது. இக்கட்டளையை எப்போது நாங்கள் நிறைவேற்றுகிறோமோ அப்பொழுதே நாங்கள் அவன் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்தவர்களாகின்றோம். ஏதேனும் ஒரு திசை குறிக்கப்படாது இருக்குமானால் நாங்கள் எங்களுக்கு இஷ்டமான திசையை நோக்கியிருப்போம். ஆனால், அது பலமாறுபாடுகளுக்கும், கலக்கங்களுக்கும் காரணமாக இருந்திருக்கும்; அன்றியும் வேறு எந்த திசை திரும்பினாலும் பெருமை அதிகப்படப்போகின்றதில்லை. ஆகையால் குறித்த திசையை நோக்குவது ஒரு நற்செய்கையாய் இருப்பதையும் எமது தொழுகையில் எந்தப் பகுதியும் பயன் உற்றதாகவே இருத்தலையும் காண்க.

பிறமதங்களைப் பின்பற்றுவோர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவ நேரிடுகிறது. திசையேதும் குறிக்கப்படாவிட்டால் இவ்வள

மார்க்கத்தில் புதிதாய்ச் சேருகிறவர்கள் இதுவரை தங்கள் தங்கள் தெய்வங்களை வணங்கி வந்த முறைப்படி தங்கள் பழைய கோவில்களில் எந்த திசையை நோக்கித் திரும்பினார்களோ, அந்த திசையில் இனியும், திரும்புவதுமல்லாமல் தங்கள் பழைய கொள்கைகளை எங்கள் மதத்தில் நுழைக்கவும் பார்ப்பார்கள். உதாரணமாகச் சூரியனை வணங்கி வந்தவர்கள் சூரியனை நோக்கியே தொழ விரும்புவார்கள். புதிதாக வேறு மதத்தைத் தழுவியவர்கள் தங்களுடைய பழைய தெய்வங்களிடத்தும் கொள்கைகளிடத்தும் கொஞ்சமேனும் பற்று வைத்தேயிருப்பார்கள். சிறுகச்சிறுகத்தான் அவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களை முற்றிலும் கைவிடுவார்கள். திருஷ்டாந்தமாக இந்து மதம் நீங்கி இஸ்லாமதத்தைத் தழுவிய சிலருக்கு மாம்ஸம் உண்ண மனம் வருவதில்லை. சுருங்கச்சொல்லின் திசை ஏதும் குறிக்கப்படாவிட்டால் குழப்பம மிகுவதோடு இஸ்லாமில் அநேக தீமைகள் வந்து கலக்கும். முஸ்லீம்களை ஒருங்கே சேர்க்கிறதற்கும், மற்ற மதங்களில் இருந்து இஸ்லாம்மார்க்கத்தில் பிரவேசித்தவர்களுடைய விசுவாசத்தைச் சோதித்து அறிவதற்கும் கஃபாசாதனமாயிருக்கிறது. எப்படி என்றால் இம்மார்க்கத்தில் சேருவோர் யாவரும் தங்கள் தங்கள் கொள்கைகளை முற்றிலும் துறந்து தாங்கள் வணங்கிவந்த தெய்வங்களை விட்டுவிட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். கஃபாவின் திசையை நோக்குவதிலிருந்து உலகத்திலுள்ள இஸ்லாமானவர்கள் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து அவர்களுக்குள் சகோதரத்துவத்தை விர்த்தி செய்யும்படியாயிருக்கிறது. ஆனால், இக்காரணம் பற்றி நாங்கள் கஃபாவை வணங்குகிறோமென்று சொல்லுதல் தவறு. ஏனென்றால், எங்கள் பிரார்த்தனை முழுதும் கடவுளுக்கே செலுத்தப்படுகின்றது! ஆதலின், அப்பொழுது கஃபாவைப்பற்றிய எண்ணமே எங்களுக்குக் கிடையாது!! முற் கூறியபடியே எங்களுக்கு கஃபாவில் விசுவாசமும் நம்பிக்கையும் கிடையாது!!! ஆகையால் நாங்கள் கஃபாவை வணங்குகின்றவர்களல்லரென்று நிச்சயமாய் அறியலாம்.

[இது காடிகானு சேர் அலி. B. A. அவர்களால் எழுதியனுப்பப்பட்டது].

REGISTERED 13 JUN 1910 BOOKS MADRAS

பிஸ்மில்லாஹ்.

இஸ்லாம் நேசன்.

புஸ்தகம் 1.] 1910-ம்௵ ஜூன்௴ [சஞ்சிகை 4.

இஸ்லாம்.

[1892-ம்௵ நவம்பர்௴ 10௳ வியாழக்கிழமையன்று, பம்பாய் நகரில் பிரேம்ஜி கவாஸ்ஜி இன்ஸ்டிடியூட்டில் பிரபலர்கள் அநேகர் கூடிய ஸபையில் காஜி முகம்மது ஸாலே லண்டேயின் அக்கிராசனத்தின் கீழ் * முகம்மது அலெக்சாந்தர் ரஸ்ஸல்வெப் என்னும் கனவான் ஆங்கிலபாஷையில் ஒரு உபந்யாசம் செய்தனர். அதன் தமிழ்மொழி பெயர்ப்பு வருமாறு:—]

கிறிஸ்தவமார்க்கம் பரவி வரும் நாட்டில் பிறந்து பிரஸ்பிடீரிய வகுப்பாரின் வைதிகக் கொள்கையில் வளர்க்கப்பட்ட அமெரிக்கனான நான், இஸ்லாம் மார்க்கத்தை எனது வாழ்நாளின் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டதற்குக் காரணம் என்னவென உங்களுக்குச்சொல்ல வேண்டுமென்று வேண்டப் பட்டிருக்கிறேன். நெடுங்காலம் செய்த ஆராய்ச்சியினால், இம்மார்க்கந்தான் சிறந்ததென்றும் மனிதகோடிகளின் ஆத்ம விஷயங்களுக்கு ஏற்றதான ஒரே மார்க்கமென்றும் கண்டறிந்தபடியால், இதை நான் ஏற்றுக்கொண்டேனென்று உண்மையாக உங்களுக்கு உடனே பதில்சொல்லிவிடலாம். ஆனால் இந்தப்பதில் வெகு பொதுப்பட இருப்பதினால், உங்களுக்குத் திருப்தியைக் கொடுக்காமலிருக்கும். இனி, நான் ஒரு முஸல்மானானது எப்படி யென்றும் ஏனென்றும் விபரமாய் உங்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக, முகம்மது நபி அவர்கள் உண்மையாகச் செய்த உபதேசம் என்னவென்பதை உங்களுக்குச் சொல்லவும்

---

* இந்த மஹானின் சரித்திரத்தை நமதுநேசன், மூன்றாவது சஞ்சிகையில் வரைந்திருக்கிறோம்.

சாதாரண கிறிஸ்தவன் ஒருவன் காட்டும் கவனத்தைக் காட்டிலும், வெகு அதிகமாகவே, ஜாக்கிரதையாகவும் துரபிமானமில்லாமலும் பார்க்கும் மேற்றிசையோரால் இஸ்லாமார்க்கமானது கவனிக்கப்பட வேண்டியதற்குரியதென்று காட்டவும் முயல்வேன். ஆராய்ச்சிசெய்யும் மனதைத் திருப்திபண்ணக் கூடியவண்ணம், இஸ்லாமார்க்கத்தைப் பற்றிப் பூர்ணமாக ஒரே ஒரு பிரசங்கத்தில் எடுத்துரைப்பது அசாத்தியமென்பது வெளிப்படை. ஆகவே, ஒருவாறு பொதுப்படவேதான் கூறிக்கொண்டு போகவேண்டியிருக்கிறது. சிலபையன்களைப்போல, நானும் பக்திச் சிரத்தை மிகுந்த குணத்தோடு பிறந்ததில்லையென்று சொல்கிறேன். தங்களுடைய பிள்ளைகளுக்கு மாதிரிகைகளாகத்தாய் மாரால் சிற்சிலபோது காட்டப்படும். நல்லபிள்ளையாகவும் நான் இருந்ததில்லை. எனது சொந்த நகரத்திலுள்ள பிரஸ்பிடீரிய ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடத்துக்கு தவிர்க்கக்கூடாத போதெல்லாம் சென்று, போதகர் நெடுநேரமாகச் செய்யும் கடினமான பிரசங்கங்களை அலுப்புடனும் பொறுமையின்றியும் கேட்பேனாயினும், மனோகரமான சூரிய வெளிச்சத்தில் ஓடியாடி, உறுமிக்கொண்டு செல்லும் சிற்றாறுகள், அழகு நிறைந்த புஷ்பங்கள், களித்துக்கொண்டிருக்கும் பறவைகள் இவைகள் மூலமாகக் கடவுளே நேராக உபதேசிக்கும் திருப்திகரமான பிரசங்கங்களைக் கேட்க எனது மனம் ஆவல்கொண்டுநிற்கும். நான் இருபது வயதுடையவனாய் எனக்கே எஜமானனானதும், கோவிலின் நிர்ப்பந்தத்தையும், மந்தகதியையும் கண்டு சகிக்காமல், அதைவிட்டு அகன்றேன்; பின்னர், அதனுள் ஒருபோதும் சென்றதில்லை. வைதீக கிறிஸ்தவ மார்க்கத்தினிடம் எனக்குப் பற்றுண்டாக்கும்படியான விஷயம் ஒன்றையும் வாலிபனான நான் அதிற் கண்டதில்லை; பிற்காலத்திலும், அது பெரும் பிழைகளையுடையதென்பதற்கும், மோக்ஷத்தைக் கொடுக்கவும் மானிட குணத்தைச் சுத்தமாக்கி உயர்த்தவும் போதுமானதல்லவென்பதற்கும் திருப்திகரமான சாட்சியங்களைத்தான் அதில் நான் கண்டேன். நற்காலத்துக் கேற்றபடி நான் சர்ச்சை (தர்க்கம்) செய்யும்மனமுடையவனாகவிருந்தேன். ஒவ்வொரு விஷயத்துக்கும் காரணத்தை அறியவிரும்பினேன்; ஆனால் வைதீகர்களாகட்டும், மௌனீகர்களாகட்டும், தங்களுடைய மதக்கொள்கையைப்பற்றிய யுக்திக்கு

ஒத்த சமாதானத்தைக் கொடுக்கச் சக்தியற்றவரென்பதைக் கண்டுகொண்டேன்; ஆயினும் அவ்விருவகுப்பினரும், அவ்விஷயங்கள் ரகசியமானவையென்றாவது, என் புத்திக்கு எட்டாதனவென்றாவது சொல்லிவிட்டனர்: எனது ஆத்ம விருப்பத்தைத் திருப்தி செய்யவும், காரண காரியத் தொடர்ச்சியைக் காணவும், கிறிஸ்தவமார்க்கத்தில் ஏதேனும் தென்படுமாவென்று வீணில் முயற்சிசெய்த பின்னர், நான் ஒரு * லோகாயதனானேன்; சில வருஷங்கள் வரையில் நான் ஒரு மதக் கொள்கையையும் பின்பற்றவேயில்லை. பதினொரு வருஷங்களுக்கு முன்னால் எனக்குக் கீழ்த்திசை மதக்கொள்கைகளிற் பற்றுண்டாகவே, கீழ்த்திசை முறையை ஆராய்ச்சி செய்யும் விற்பன்னர்களைப் போல, நானும் பௌத்த மதத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளத் தொடங்கினேன். அதிகமாக விவரித்து உங்களுக்கு அலுப்பை யுண்டாக்குவானேன்? அத்தருணத்தில் 13,000 கிரந்தங்களையுடைய சிறந்த புஸ்தகசாலையொன்று என்னருகிலிருந்தது; தினந்தோறும், நாலுமணி முதல் ஏழுமணி வரையில் எனக்குச் சாவகாசமிருந்தது; வாழ்க்கையையும் மரணத்தையும் பற்றிய ரகசியங்களைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்வதில் வெகுவாகப் பாடுபட்டேன்; இவ்வித ரகசியங்களுக்கும் உலகிலுள்ள மதக் கொள்கைகளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் தெரிந்துகொள்ள விரும்பினேன். என் மனமோ, ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாகக் கூறுபடுத்திக் கிரகிக்கும் சுபாவமுள்ளதாகவும், மற்றைய மதக்கொள்கைகளிலெல்லாஞ் துரபிமானமற்றதாகவும், உண்மை யெங்கு காணப்பட்டாலுஞ் சரியே அதை ஏற்றுக்கொள்ளத் தயாராகவும் இருந்தது.

நான் ஒரு தீர்ந்த லோகாயதனாகவிருந்தமையால் முதல்முதலில், அந்த லோகாயதக் கொள்கையைப்பின் பற்றும் பிரபலர்களின் முறையை உற்றுநோக்கினேன்; அஞ்ஞானமாகிய அந்தகாரத்தில் நான் எவ்வளவு பரிபூர்ணமாக மூழ்கிக்கிடந்தேனோ அதைப்போலவே அம்முறையும் மூழ்கிக்கிடந்ததைக்கண்டுணர்ந்தேன். மானிட சரீரத்திலுள்ள ஒவ்வொரு எலும்பு, தசை, நரம்பு, உறுப்பு, இவைகளின் பெயர்களையும், அதது அமையப்பெற்றிருக்கும்ஸ்தானத்தை

---

* நாஸ்திகன்.

யும் காரணத்தையும் அந்த லோகாயத முறைசொல்லக்கூடுமாயினும், உயிருள்ள மனிதனொருவனுக்கும் உயிரற்றவன் ஒருவனுக்கும் உள்ள உண்மையான வித்தியாசத்தைமட்டும் அது சொல்வதற்கில்லாதிருந்தது. ஒவ்வொரு மரம், செடி, பூ இவைகளின் பெயரையும், அததன் ஜாதியையும் குண குணங்களையும் அம்முறை சொல்லக்கூடுமாயினும், மரம் வளர்வதும் புஷ்பம் மலர்வதும் ஏனென்றும் எப்படியென்றும் சொல்வதற்கில்லாதிருந்தது. மனிதன் பிறந்ததும், சிலநாள் வாழ்ந்ததும் பின்னர் இறந்ததும், முற்றிலும் நிச்சயந்தான்; ஆனால் அவன் எங்கிருந்து வந்தானென்பதும், எங்குசென்றுள்ளானென்பதும் தங்களால் கொஞ்சமேனும் விவரிக்கமுடியாத புதிர்களென்று அந்த லோகாயதவாதிகளே ஒத்துக்கொள்கிறார்கள். "அவைகளெல்லாம் வைதீகமார்க்கத்தைச்சேர்ந்தவை" என்று ஒருசாஸ்திரக்ஞன் என்னிடம் சொன்னான். "ஆனால் வைதீகமார்க்கத்துக்குத்தான் இவ்விஷயங்களைப்பற்றி ஒன்றுந்தெரியவில்லையே" என்று நான் திரும்பக்கூறினேன். "எனக்குந்தெரியவில்லை. சாஸ்திரத்துக்கும் தெரியவில்லை" என்று அவன் பெரும்மோசமானதோர் கேவலமான பதிலைச்சொல்லிவிட்டு; இவ்விஷயத்தை எங்கள் சம்பாஷணையினின்றும் தள்ளிவிட்டான்.

மில், லாக், காண்ட், ஹிகல், பிட்சு, ஹக்ஸ்லி இன்னோரன்ன ஆசிரியர்கள், அணுவைப்பற்றியும் ஜீவப்பிரகிருதியின் ஆதியுருவைப்பற்றியும் மேதாவிகளைப்போல வெகு ஆடம்பரத்தோடு விவரணம் செய்வதைக்கண்டேனென்றாலும், அவர்களில் ஒருவரேனும், ஆத்மா இன்னதென்றும் மரணத்துக்குப்பின் அதன்கதி எப்படியாயிற்றென்றும், சொல்வதற்கில்லாதுபோயினார். "அவ்விஷயத்தைப்பற்றி ஒருவர் கூடச்சொல்லமாட்டார்" என்று யாரோ சொல்லுகிறதுபோல் எனக்குக்கேட்கின்றது. அது மதிகெட்ட குருட்டுமானிடர் செய்யும் பெரும் பிழைகளில் ஒன்றாகும். இவ்விரகசியத்தைத்தெரிந்துகொண்டோர் பலர் இருக்கின்றனர்; ஆனால் அவர்கள் ஏதேனுமொரு மார்க்கத்தைக் கைப்பற்றும் லோகாயதர்கள் அல்லர். அறியாத்தனத்தாலாவது, குருட்டு நம்பிக்கையாலாவது, திடீரென எழுந்தவோர் மனோவேகத்தாலாவது நான் இஸ்லாம்மார்க்கத்தைக் கைக்கொள்ளவில்லையென்றும், உண்மையைத்தெரிந்து கொள்ளவே

ண்டுமென்ற பேராவலினாலும் ஊக்கத்தோடும், நேர்மையோடும் இடைவிடாது செய்ததுரபிமானமற்றபக்ஷப்பினாலும் ஆராய்ச்சியினாலுமே நான் அதைக் கைக்கொண்டேனென்றும் உங்களுக்குத் தெரியச்சொல்வதற்காகவே இவ்வளவு தூரம் என்னைப்பற்றிப்பேசிவந்தேன். இனி இஸ்லாம் மார்க்கம் எப்படிப்பட்டதெனப்பார்ப்போம்; பார்த்தால் நான் அதைச்சுவீகரித்ததின் காரணம் உங்களுக்கு எளிதில் விளங்கும். "முஸ்லீம்கள் நம்புவது என்ன?" என்ற கேள்விக்கு உடனே பதில் கூறவேண்டுமென்று எவனாவது என்னைக்கேட்பானானால், "கிறிஸ்தவர்கள் நம்புவது என்ன?" என்றுகேட்கப்பட்டால் எவ்வாறு உடனே பதில் சொல்லமுடியாமல் திகைப்பேனோ, அவ்வாறே திகைப்பேன். கான்ஸ்டன்டைன் நாள் முதல் தொடங்கி இந்நாள் வரையிலுமுள்ள சர்வகால கிறிஸ்தவர்களும் தங்கள் தங்களுடைய மனோபாவங்களைக்கொண்டு மதக் கொள்கையை விருத்திசெய்து அலங்கரிக்கும் வழக்கத்தை, அரேபிய தீர்க்கதரிசியின் பின்னோர்களிற் பலர் கைக்கொண்டிருக்கின்றனர். ஆகவே முகம்மது நபி அவர்களால் கற்பிக்கப்படாதெனவும், உண்மை மார்க்கமான இஸ்லாத்தில் இருக்கக்கூடாதனவுமான பலநம்பிக்கைக் கொள்கைகள் இக்காலத்துள்ள முஸ்லீம்களினிடையே வழக்கத்திலிருக்கின்றன. மார்க்கங்களின் பிரதமசித்தாந்தங்களினிடையே காணப்படாதனவும், மதவிஷயங்களிற் பிரமாணர்களென்று சொல்லிக்கொள்வோரின் பிரமையினாலும் பக்ஷபாதஎண்ணங்களினாலும் தோன்றினவையுமான வேறுபட்ட பற்பல அபிப்பிராயங்கள்—அல்லது துரபிப்பிராயங்கள்—மனிதகோடிகளின் மதக்கொள்கையில் காணப்படுவது மானிடபுத்தியின் அதிசயசாமார்த்தியத்துக்கு ஓர் சான்றாகும். ஐம்பதுக்கு அதிகமான வேறுபட்ட கிறிஸ்தவவகுப்புக்கள் ஒவ்வொன்றும் அததன் கொள்கைகளுக்குப்பைபிளேயே ஆதாரக்கிரந்தமாகக் கொண்டிருக்கின்றதென்றும், ஒவ்வொரு வகுப்பைப்பின்பற்றுவோர்களும் தங்கள் கொள்கைகளே சரியானவையெனவும், யுக்திக்கு ஒத்தவையெனவும், நியாயமானவை யெனவும், மற்றையோரின் கொள்கைகள் தப்பானவையெனவும் எடுத்து நிரூபிப்பதற்கு அந்த நிந்தனைப்பட்ட நூலையே பிரமாணமாகச் சொல்கின்றனரென்றும் நமக்கு நன்றாய்த்தெரியும். மானிட புத்தியானது எவ்வளவு தூரம்

வரையில் செழிப்படையுமென்பதையும், மதவிஷயமானகிரந்தங்கள் எவ்வளவு அதிகமாக விருத்தியடையுமென்பதையும் பூர்ணமாகத் தெரிந்துகொள்ள விரும்புவீராயின், இஸ்லாம்மார்க்கத்திலும்,கிறிஸ்தவமார்க்கத்திலும் எழுதப்பட்டிருக்கும் திரள்திரளான கிரந்தங்கள் பலவற்றையும் பொறுமையுடன் படித்து, பற்பல சமயவாதிகளிடமும் சென்று அவர்கள் கூறும் நியாயவாதங்களைக்கேளுங்கள். நம்பிக்கையில்லாமைக்குச்சமானமான ஐயமும் திரிபுமுள்ளவோர் ஸ்திதியில் சீக்கிரமே நீங்கள் வந்து விட்டதாகக்காணாமற்போனால், உங்கள் முன்னர்க்கூறப்பட்டநியாயவாதங்களின்சிக்கல்களை நீங்கள் தெரிந்துகொள்ளத்தவறியவராவீர். உங்கள் முன்னர் எதிர்ப்படும் பற்பலவகைகளும் விதங்களுமான மனோபாவனைகளினின்றும் ஹலரத்முகம்மதுநபிஅவர்களும், இயேசுவும் உபதேசித்தனவும் உபதேசிக்காதனவும் இன்னின்னவை தான்என்று நிச்சயப்பட்ட திருப்தியான அபிப்பிராயமொன்று உங்களுக்குத்தோன்றுமானால், உங்களுக்கு முன்னால். இவ்விஷயமாகப் பரிசோதனை செய்தவரைக்காட்டிலும் நீங்கள் நிரம்ப நன்றாகச் செய்தவர்களாவீர்கள். நன்றாக வரையறுக்கப்பட்ட சிற்சில சித்தாந்தங்கள் உள்ளன. மொத்தத்தில் அவைகளை முஸ்லீம்களில் எல்லோரும் நம்பாதுபோனாலும் பெரும்பான்மையோர் நம்புகின்றனர். ஆனால் முகம்மது நபிஅவர்கள் செய்தருளிய உபதேசங்களின் மனோபாவனைகளைப்பற்றிய மட்டில், அந்தரங்கமுஸ்லீங்களாகிய ஸூபி வகுப்பாரைத்தவிர, மற்றையோரெல்லாம் பற்பலவிதமாக வேறுபட்டிருக்கின்றனர்.

வைதீக இஸ்லாமார்க்கம் ஆறுவகையாகப் பகுக்கப்படும் 1-வது எல்லாப்பொருள்களைச் சிருஷ்டித்தவனும், எக்காலத்திலு முள்ளவனும், தனிமையானவனும், மாறுபாடில்லாதவனும்,எல்லாமறிந்தவனும், சர்வசக்தியுள்ளவனும், சர்வதயாபரனும், நித்தியனுமானஒரே ஆண்டவனின் நம்பிக்கை. 2—வது உருவில்பூரணரும், அழகில்ஜோதியுடையவரும், ஆண்பெண் எனத்தகும் பால்பேதமற்றவரும், அழிந்து போகும் மானிடருக்குரிய ஆசாபாசங்களும், குற்றங்குறைகளும், காமவிகாரங்களும்இல்லாதவரும், ஆகாசவாசிகளுமானதேவதூதர்களில் நம்பிக்கை. 3-வது குர்ஆனது கடவுளால் நேராகவும், தேவதூதரான ஜிப்ரீல் மூலமாகவும், முகம்மது நபிஅவர்களுக்கும் பற்பல

சமயங்களில் அருளப்பட்ட தெய்வீக விளம்பரமடங்கிய கிரந்தம் என்றவோர் நம்பிக்கை. 4—வது *ஆதாம், 1 நோவா, 2 ஆப்ரகாம், 3 மோஸஸ், 4 இயேசு. முகம்மது முதலிய பிரபுக்களாகிய கடவுளால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளில் நம்பிக்கை. 5-வது மனிதர்கள் பூலோகத்தில் செய்திருக்கிற காரியங்களுக்கு ஏற்பதண்டனையையோ சன்மானத்தையோ பெறுவதற்காகக் கடவுளின் முன்னர்த்தோன்ற வேண்டுமென்கிற உயிர்த்தெழுகையிலும் கடைசித்தீர்மானத்திலும் நம்பிக்கை. இவ்விததண்டனையும் சன்மானமும் எவ்வாறாக விருக்குமென்பதில் அபிப்பிராய பேதமிருக்கின்றது. 6—வது உலகசிருஷ்டிக்கு முன்னமேயே மாற்றவொண்ணாதபடி கடவுளால் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டு நித்திய புஸ்தகத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கும்விதியை, மானிடன் ஒருவன் தனது செய்கைகளால் தடுத்துக்கொள்வதற்குச் சக்தியற்றிருக்குந்தன்மையான தெய்வ சங்கல்பத்தில் நம்பிக்கை. முதற்பார்வையில் இவ்விஷயம், மனிதர்களுக்குச்சுயேச்சையில்லாமல் செய்துவிடுகின்றதெனத் தோன்றும்;

ஆயினும்சற்றுஉற்றுநோக்கினால்அவ்வாறில்லையென்பதுவெளிப்படும். ஆகவே, பிரதான கொள்கைகளைக் கவனிக்குமிடத்து, அது ஆக்ஷேபத்துக்கிடமான சித்தாந்தங்களை ஒழித்து நிற்கும். அந்தரங்க கிறிஸ்தவமார்க்கத்தைப் பெரும்பாலும் ஒத்திருப்பதைக் காணலாம். இவ்விதமத்தியஸ்தானங்களினின்றும் அநேகமான ரேகைகள் பலவாறாக விரிந்தோடி, அதைப்பின் பற்றுவோர்களின் குணத்துக்கேற்றபடி பயனுள்ளவையாய் நம்பிக்கையிலும் வந்தனை வழிபாட்டிலும் பிரம்மாண்டமான வோர்முறைபாகத்திரண்டு நின்றிருக்கின்றன. அனுஷ்டிக்கப்படவேண்டிய கொள்கைகள் தொழுகை, கலிமா, தானம், நோன்பு, யாத்திரை யென ஐவகைப்படும். இனி, நமது நபியாரென்றும் எப்படிப்பட்டவர்களென்றும் கவனிப்பதினால், இம்மார்க்கம் எங்கிருந்து உண்டாயிற்றென்று தெரிந்துகொள்ள முயல்வோம்.

நான்கண்டுகொண்டஉண்மைகளைத்தேடுவதில்,வைதீகவைராக்கியர்களும் போலிபக்தியுள்ளவர்களும் அழித்துவிடவேண்டுமென்றுவெகுவாகப்பாடுபட்டபோதிலும் அழிபடாமற், கற்பகாலந்தோறும் மனிதகோடிகளுக்கென்று காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கும் அவ்விலை

---

* 1 நூகு. 2 இப்ராஹீம். 3 மூசா. 4 ஈசா அலைஹிஸ்ஸலாம்

21 | 1909 NOS 11—3

லாமணியின் மங்கிய ஒளியைக்காண்பதற்கு முன்னம், போலிச்சரித்தம், போலி அப்பிராயங்கள், போலி நியாயங்களாகிய பெருங்குப்பை கூளங்களைப்புரட்டித்தள்ள வேண்டியிருந்ததென்று உங்களுக்குச்சொல்வேன். நியாயமென்ன,மானிடசாட்சியமென்ன,இவைகளைக்கொண்டு நோக்கும்போது, முகம்மது நபிஅவர்கள் ஆத்மஉண்மையான ஒரே பெரும் விஷயத்தைப்பற்றித்தெரிந்துகொள்ள வேண்டியதற்காக உலகம் பிரியமாகக் கொள்ளும் பொருள்களை யெல்லாம் தாமாகவே வேண்டாமென்று நிரகரித்துவிட்டசுத்தரும், பரிசுத்தருமானவர்களென்றும், அவ்வுண்மையை அரபியர்களுக்கு உபதேசிக்கமுயன்றதில் வெகுகுரூரமும், பழிவாங்கும் தன்மையும், அமைந்ததான பரிகாசம் நிந்தை, இம்சை இவைகளை அனுபவித்தவர்களென்றும், தமது காரியத்தைக் குறைவறச்செய்த பின்னர், வெகுபரிதாபமுள்ள தரித்திரதசையில் மரணமடைந்தவர்களென்றும் வெகு திருப்திகரமாகத் தெரிகின்றது. இவ்விஷயங்களைக்கிறிஸ்தவ நூலாசிரியர்களே ஒப்புக்கொள்கின்றனராதலால் இஸ்லாமிய சாட்சிகளைக் கூப்பிடவேண்டிய அவசியமில்லை. ஒருவாலிபன் ஒருநாள் இயேசுவை நோக்கித்தான் நித்தியவாழ்வையடைய வேண்டியதற்காகச் செய்யவேண்டியதென்னவென்று கேட்டதாகவும், அதற்கு அவர், "உன்னிடமுள்ளதை யெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டுச், சிலுவையைக் கையிலேந்திக்கொண்டு என்னைப்பின்றொடர்ந்துவா" வென்று விடையளித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இனி இதைத்தான் முகம்மது நபியவர்கள் செய்தார்கள். ஆனால் அவர்கள் வைதீக கிறிஸ்தவர்களுடைய அபிப்பிராயப்படி, இயேசுவைப் பின்றொடரவில்லை. உலகத்தில் தனக்கிருந்தவைகளையெல்லாம் அவர்கள் பரித்தியாகம் செய்துவிட்டு, கீழ்த்திசையில் உண்மைமார்க்கத்தை உறுதியாக ஸ்தாபிக்கும்வரையில், பொறுமையுடனும், நம்பிக்கையுடனும் பற்பல கஷ்டங்களையும் சோதனைகளையும் சகித்துவந்தார்கள். நமது நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரத்தைப் பற்றி எழுதிவைத்திருக்கும் ஒவ்வொரு கிரந்தகர்த்தாவும், அவர்களுடைய பாலியத்தில் அவர்கள் சாந்தராகவும், நற்குணமுடையவர்களாகவும், சீக்கிரத்தில் விஷயத்தைக் கிரகிக்கும் கூர்மைவாய்ந்தவர்களாகவும், அடக்கம், ஒதுக்கம், யோசனை மிகுந்துள்ளவர்களாகவும் இருந்தனர்களென்று தெளிவாகக் கூறியிருக்கின்றனர். மெக்காநகரத்துச் சிறுவர்களுடன் முகம்மதுநபி அவர்கள் சர்வசாதாரணமாகக்கூடியாடினார்களெனினும், அவர்களுடைய(சிறுவர்கள்)கெட்ட குணங்களையாவது அற்ப நடத்தையையாவது கிரகித்தார்களில்லை. பாலியத்தில் அவர்கள் பிரியநடத்தைகளினாலும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையினாலும் கபடமின்மையினாலும் சிறந்திருந்தனர்கள். மனிதனானபோதும் அப்பெருமான் செய்த காரியங்களிலெல்லாம் நாணயமும் நியாயமும் தயாளமும் உடையவர்களாகவிருந்தார்கள். வியாபாரியாகவிருந்ததில், அவர்களுடைய யோக்கியதையும் நாணயமும் குற்றங்கூறவொண்ணாதபடி யிருந்தன. மெக்கா நகரவாசிகளால் அவர்களை ஆலமின், "நம்பத் தகுந்தவர்" என்று கூறப்படுமளவுக்கு அவர்களுடைய குணம் வெகுவாக அங்கீகரிக்கப்பட்டு வந்தது. சன்மார்க்கத்திலும் யோக்கியதையிலும் வெகுஉறுதியான கொள்கைகளை ஐம்பது பிராயம் வரையில் அனுசரித்துவந்த ஒருவர், திடீரென்று அவைகளை உதறிவிட்டு, கிறிஸ்தவ நூலாசிரியர்கள் சொல்லுகிறபடி, ஒரு கெட்டமனிதனாக மாறிவிடுவது சாத்தியமென்று தோன்றுகின்றதா? நான் அதை நம்பவேயில்லை. நெடுங்காலம் செய்த படிப்பு, ஆராய்ச்சி இவைகளின் பயனாக முகம்மது நபி அவர்களின், தராதரங்களைப்பற்றிப் போதுமானவள்வு திருப்திகரமான வோர் அபிப்பிராயத்துக்குத் தாங்கள் வரக்கூடவில்லையென்று கிறிஸ்தவ நூலாசிரியர்களில் சிறந்தோரெல்லோரும் கட்டாயமாய் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் இவ்வாறு தவறிப்போனதற்குக் காரணம் வெகு தெளிவாகத் தென்படுகின்றது. தங்களுடைய லோகாயதமதத்தை ஆதாரமாகக்கொண்டு இதைநோக்கியதும் அவர்களுடைய சந்தேகங்களை நிவர்த்திக்கக்கூடிய சிலவிஷயங்களை துரபிப்பிராயத்தினாலும் தப்பெண்ணங்களினாலும் பயனற்றவையென நிராகரித்துவிட்டதுமாம். மேதாவிகளான இந்த நூலாசிரியர்களில் பலர் "முகம்மது நமது கிறிஸ்தவனைப் போன்றவரல்லர்; ஆதலால் அவர் ஒரு வஞ்சகராகவே இருக்கவேண்டும். ஆயினும் அவ்வளவு உண்மைச் சுத்தரான ஒருவர் கிறிஸ்தவராக

இருக்கவில்லையே யென்பதைக்கண்டு நாம் வருந்துகிறோம்'' என்று பொதுப்படக் கூறியிருக்கின்றனர். அவர்களுடைய சொந்த திர்க்கதரிசியின் உபதேசமொழிகளை அவர்கள் நன்றாய்க் கிரகித்திருப்பார்களானால், இவ்வித வெளித் தோற்றத்தைப்பற்றி யாதொரு ஆச்சரியமும் வந்திராது. முகம்மது நபி அவர்கள் ஆத்ம உண்மையை உபதேசிக்கத் தொடங்கியதற்குமுன்னர், அவர்களுடைய பிரபஞ்ச வாழ்க்கையின் தோற்றங்கள் எல்லாம், பேராசையுடைய ஒருவன் அக்காலத்தில் பெறுவதற்கு விரும்பக்கூடியனவாகவே விருந்தனவென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. அவர்களுடைய உறவினர்கள் செல்வவான்களாக விருந்தனர். அவர்களுடைய பெற்றோர்கள் இறந்ததும், அவர்களுக்கு அன்பும் ஆதரவும் நிறைந்தவோர் நற்றகப்பன்போல நின்று அவர்களைத் தனது குடும்பத்தில் ஏற்றுக்கொண்ட ஆபுதாலப் என்னும் அவர்களுடைப பெரியதகப்பனார், அரபியாவில் செல்வம் மிகுந்த சிரேஷ்ட வியாபாரிகளில்ஒருவராக விருந்தனர். மெக்கா நகரத்தின் கவர்னர் ஸ்தானத்தை வகிக்கும் உத்தியோகஸ்தரிடமே இருக்கக்கூடிய கஃபாவின் ஸம்ரக்ஷத்வம் முகம்மது நபிஅவர்களின் குடும்பத்திலேயே பரம்பரையாகஇருந்துவந்தது. அப்போதுள்ளபடியே அவர்கள் (முகம்மது நபியவர்கள்) வாணாளைக் கழித்துத் திருப்தியடைய எண்ணியிருந்திருப்பார்களானால், அவர்களுடைய பெரியதகப்பனின் செல்வமும் கஃபா சம்ரக்ஷ பதவியும் அவர்களுக்குக் கிடைத்திருக்கும். கிறிஸ்தவர்கள் சாதாரணமாக நம்புகிறபடி அவர்கள் ஒரு வஞ்சகராகவும் பேராசை படைத்தவராகவும் நியமமற்றவராகவும் இருந்திருப்பார்களேயாயின் அவர்கள் பொறுமையுடன் காத்திருந்து, உறவினர்களுடன் சிநேகமாகவிருந்து, காலக் கிரமத்தில் செல்வமென்ன, பெரிய கவுரவமென்ன, சுக சவுகரியங்களென்ன, பெருமித வாழ்க்கையென்ன, இவைபோன்ற உலக விஷயங்களைப்பெற்று அரபியாவில் சிறந்து விளங்கியவர்களுள் ஒருவராக இருந்திருப்பார்களென்பது திண்ணம். ஆனால் அவர்கள் கூரிய கற்களும் குரூரமுட்களும் நிறைந்து கிடந்த ஒரு பாதை வழியே அவர்களைச் செலுத்தியதும், உலகவாழ்க்கை சம்பந்தப்பட்டமட்டில் அவர்களுக்குச் சொல்ல முடியாத கொடிய ஏமாற்றங்களையும், தரித்திரத்தையும், துக்கத்தையும், துன்பங்களையும் கொடுத்ததுமான ஒரு மேலான மார்க்கத்தைப் பின்பற்றினார்கள். உலகத்தில் பெரும்பான்மையோருடைய மனதைக்கொள்ளைகொண்டுபோவதான செல்வத்தையும் சுகத்தையும் சம்பாதிப்பதிலேயே பித்துக்கொண்ட கருத்துடையவராய், மேலான மார்க்கத்தைத் திரும்பித் தானும் பாராமலிருக்கும் ஜனங்களுடைய இருதயத்தில் வெகு ஆழமாகப் பதியவேண்டிய படிப்பினையொன்று இங்குண்டு. உலக விஷயங்களை முகம்மது நபிஅவர்கள் முற்றிலும் தவிர்த்துவிட்ட கதை யுங்களுக்குத் தெரிந்திருக்கலாம். தொழுகையிலும், நோம்பு இருப்பதிலும் தியானம் செய்வதிலும் அவர்கள் வெகுவாகக் காலம்கழிப்பார்கள்; ஆகாரமோ வாற்கோதுமையும் பேரீச்சம்பழமுந்தான். ஜலத்தைத்தவிர வேறொன்றையும் பானம் செய்வதில்லை. இவ்வாறு உணவில் மிதமாக விருந்ததைத் தமது ஆயுள்காலம் முடிவடையும் வரையில் கைக்கொண்டனர்கள். சிற்சிலசமயங்களில் மாதக்கணக்காகப் பேரீச்சம்பழங்களைமட்டும் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு இருப்பார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஹிராமலையிலுள்ள வோர் குகைதான் அவர்கள் பிரியமாகக் கொண்ட ஏகாந்த வாஸஸ்தானம். அங்கு அவர்கள் தியானத்தில்வெகுநாள் கழிப்பதுண்டு; கீழ்த்திசை முழுவதும் சிறந்த ஜோதியை நிரப்பிப் பின்னாளில் வெகுவாகப் பிரகாசித்து எரிந்துகொண்டிருந்த நெருப்பை மூட்டி, உண்மை ஒளியைப்பரப்பியதான தனது காரியத்தை அங்குதான் பெற்றார்கள். அப்பெருமானது கொள்கைகளில் முதலில் நம்பிக்கைவைத்த மாதுசிரோமணியும் அம்மஹான் செய்யும் காரியத்தில் தானும் கண்ணும் கருத்துமாகவிருந்து ஊக்கங்காட்டிய பெண்மணியுமான அவர்களது பிரிய மனைவி கதிஜா நாயகம் அடிக்கடி அவர்களைப் பின்றொடர்வதுண்டு. தமது ஏகாந்த வாசஸ்தலத்தினின்றும் வெளிப்பட்டு, மெக்காவிலிருந்த தமது சொந்த வீட்டுக்குச் செல்லும்போதெல்லாம், தன் கையாலான நன்மைகளைச் செய்துகொண்டும், வியாதியினாலும் துரதிஷ்டத்தினாலும் தங்களைச் சம்ரக்ஷணை செய்துகொள்ளச் சக்தியில்லாதவர்களுக்கு உதவிகளைச் செய்துகொண்டும் செல்வார்கள். இம்மாதிரியாகத்தான், அவர்களுடைய சொந்தச் செல்வத்திலும் கதீஜா நாயகத்தைக் கல்யாணம்செய்துகொண்டதினால் அவர்களுக்குக் கிடைத்த செல்வத்திலும்

பெரும்பாகம் கரைந்துபோய்விட்டது.

முகம்மது நபி அவர்களின் குணத்தைப்பற்றி நியாயமானவோர் முடிவுக்கு வரவேண்டியதற்காகவும், அவர்களுக்கும் மற்றுமுள்ள பரிசுத்த தீர்க்கத்தரிசிகளுக்கும் இருக்கக்கூடிய ஒப்புவமைகளைக் கவனிக்கவேண்டியதற்காகவும் இனி நாம் அவர்களுக்குத் தெய்வ ஆவேசம் உண்டானதற்கு முன்னும் பின்னும் அவர்களுடைய வாணாளைப்பற்றிய வெகு பிரசித்தமும் சர்வாங்கீகாரமுமான இவ்விஷயங்களையெல்லாம் ஜாக்கிரதையாக ஆராய்ந்தறியவேண்டியது அவசியமாகின்றது. நாம் வந்துள்ள இக்காலத்தில் அவர்கள் தமக்கு வெளியிடப்பட்ட உண்மைகளில் எதையேனும் பகிரங்கமாக உபதேசிக்க முயன்றார்களில்லை; என்றும் அவர்களது வாழ்நாளின் கிரமமும் அவர்களுடைய நெருங்கின சுற்றத்தாரைத் தவிர வேறொருவராலும் அதிகமாகக் கவனிக்கப்படவில்லையெனத் தோன்றுகின்றது. அக்காலத்தில் அவர்கள் இன்னதென்று அவர்களுடைய துணைவர்களால்நன்றுதெரிந்து கொள்ளப்படாததுமன்றி அவர்களால் அதிக சிரத்தை பாராட்டப் படாததுமான யாதோவொரு காரணத்தினால் தமது உலக ஆசைகளை முட்டாள் தனமாக நிராகரித்துவிட்ட ஓர் தீங்கற்ற மதப்பித்தன் என்றே கருதப்பட்டனர்கள். பின்னர் தாம்செய்ய வந்திருக்கும் காரியம் இன்னதென்று பகிரங்கமாய்ப் பிரசுரப்படுத்தி, அதனால், சரித்திராசிரியர்களால் வெகு உண்மையாக விவரிக்கப்பட்டுள்ளபடி வெறுப்பு, இரக்கமின்மை, குரூரம் இவைகளோடு கூடிய இம்சையையும் பரிகாசம் என்ற புயற்காற்றையும் தாமே தம்மீது வரவழைத்துக் கொண்டனர்கள். நித்திய வாழ்வை அடைவதற்குரிய ஒரே உண்மையான மார்க்கத்தை உலகத்துக்கு உபதேசிக்கப் புகுந்த தீர்க்கதரிசிகளில் எவராவது துன்பப்படாமற் சுகமடைந்திருக்கின்றனரா? ஒருவரேனுமில்லை. உலகமானது பேய்த்தன்மையுள்ள வன்மத்தோடு உண்மையை வெறுக்கின்றது, அதை உபதேசிப்பவருடைய உயிரையும் வாங்கிவிட வேண்டுமென்று மதிமயக்கமாய்த் தவிக்கின்றது. மெக்கா நகரத்தாரின் கோபத்தையும் வெறுப்பையும் எழுப்பிவிடும்படி முகம்மது நபி அவர்கள் உரிமை பாராட்டிக்கேட்ட விஷயமானது, கோபம் மிகுந்த யூதர்களால் அதேமாதிரி துன்பப்படுத்தப்பட்ட நாஜரத்வாசியான இயேசு

கேட்டதைப் போன்றதாகவே யிருந்தது. முகம்மது நபி அவர்கள் தாம், ஒரு தீர்க்கத்தரிசி யென்றும், கடவுளால் அனுப்பப்பட்ட சிஷனென்றும், ஒரேகடவுளின் ஆவேசத்தினால் ஆவிர்ப்பவிக்கப்பட்டு முக்திநெறிக்கு உண்மையான வழியை அரபியர்களுக்குக் காண்பிக்கவும், கேவலம் லோகாயதமானவோர் மதக்கொள்கையை அவர்கள் பின்பற்றியதால் வந்த தீங்குகளையும், விக்ரகஆதாரனைகளையும் அகற்றி அவர்களை நல்வழிக்குக்கொண்டு போவதற்கும், வந்தவரென்றும் சொன்னார்கள். அடிக்கடி அவர்கள் இயேசு ஒரு அமானுஷியப் பிரகிருதி யல்லவென்றும், மனிதர்களைப் போலவேயே உடற்கூறும், மனோலக்ஷணங்களும், ஆத்ம குணங்களும், பெற்றவோர் மனிதன் கானென்றும் கடவுளிடத்திலிருந்து நித்தியவாழ்க்கைக்கு உண்மையான வழியையும், ஜனன மரணமாகிய ரகசியத்தின் பொருளையும் அறிந்துகொண்டவரென்றும், அவ்வழியை அவர்களுக்கு உபதேசிப்பதற்காகவே, உலகத்தைத் துறந்து விட்டனரென்றும், அவர்கள் வாழ்வதற்காகவே தாம் உடல்பொருளாவியை அர்ப்பித்துழைத்தவரென்றுஞ்சொல்வார்கள். பொய்ச்சரித்திரங்களும் மேற்கோள்களும், தந்திரமானயுக்திவாதங்கள் எல்லாம் என்னென்னவையோசொன்னபோதிலும் இயேசுகிறிஸ்து சிலுவையில் உயிரைவிட்டதும் இவ்வழியினால் தான். மோஸஸ், ஆப்ரகாம், இல்யாஸ், இயேசு முதலிய ஒவ்வொரு உண்மைத் தீர்க்கத்சரிசிகளும் எவ்வாறு தாங்கள் அனுப்பப்பட்டதாகச் சொல்லிக்கொண்டனரோ, அவ்வாறு தான் தாமும் அனுப்பப்பட்டதாக முகம்மதுநபி அவர்கள், சொல்லிக்கொண்டனர்கள். அவர்கள் புதிதாகவொரு மதக்கொள்கையை ஸ்தாபிக்கவில்லை உலகந்தோன்றியகாலம் முதற்கொண்டு மனிதனுக்கென்று காப்பாற்றிவைக்கப்பட்டிருக்கிறதும், உலகம் நிலைத்திருக்கும் காலம்வரையிலும் அவ்வாறே காப்பாற்ற வைக்கப்படப் போவதுமான ஒரே உண்மையைத் தான் அவர்கள் உயிர்ப்பிக்க முயன்றார்கள். தப்புவழியிற் சென்ற சிலர் எண்ணுவதுபோல, தாம் கடவுளென்றாவது, கடவுளின் குமாரன் என்றாவது ஒருபோதும் சொல்லிக்கொள்ளாத இயேசு எதை உரிமை பாராட்டிக் கேட்டாரோ அதைத்தான் முகம்மது நபி அவர்களும் கேட்டார்கள். அதற்கு அதிகமுமில்லை, குறைவுமில்லை. ஸென்ற் ஜான் எழுதிய சுவிசேஷத்தில் எட்டாவது அதி

பாயத்தில் 58-வது வாக்கியத்தில் இயேசுகிறிஸ்து கூறியதாகவுள்ள ஒருவசனமுள்ளது. விவிலிய நூலைப்படிப்போரும் அதை வியாக்யானம் செய்வோரும் அவ்வசனத்தின் பொருளையறியாது தடுமாறுகின்றனர். கிரேக் பாஷையிலுள்ள மூலகிரந்தத்திலிருந்து அதைச் சரியாக மொழிபெயர்த்தால், அவ்வசனம் இயேசுகிறிஸ்து தாம் இன்னாரென்று சொல்லிக்கொண்ட விஷயத்தைத் தெளிவாகவும் சந்தேகமின்றியும் தெரிவிப்பதாகவுள்ளது. அவ்வசனம் ஆப்ரகாம் இருந்ததற்கு முன்பாக நான் இருக்கிறேன் என்று உண்மையாக நான் உங்களுக்குச் சொல்லுகிறேனென்று இயேசு அவர்களுக்குச் சொன்னார்” என்பதாம். இருக்கிறபடியே வசனத்தைக் கவனித்தால், அது இலக்கணப் பிழையுள்ளதென்றும், யாதொரு பொருளையும் கொடுக்கக்கூடியதல்லவென்றும் தெரியும். ஆங்கிலேயத்தில் சரியானபடி மொழிபெயர்த்தால், அவ்வசனம் “எனக்கு முன்னால் ஆப்ரகாம் எப்படியிருந்தாரோ அப்படியே நானும் இருக்கிறேனென்று உண்மையாய் உங்களுக்குச் சொல்கிறேன்” என்று பொருள் பயக்கும். அதாவது அவரும் ஆப்ரகாமைப்போல தெய்வீகம் பொருந்தியவோர் தீர்க்கதரிசியேயாம். தமக்குமுன்னால் வேறு உண்மைத் தீர்க்கதரிசிகள் இருந்திருக்கின்றனர் என்று இயேசுவே ஒப்புக்கொண்டிருக்கின்றார். முஸ்லீம் பண்டிதர்களில் சிலர், நாம் ஒப்புக்கொள்ளக்கூடிய பிரமாணங்களாலும் நியாயவாதங்களாலும் ஹஸரத் முகம்மது நபி அவர்கள் பின்னர்த் தோன்றி, அவர்களைப் பின்பற்றுவோர்களை உண்மையில் செலுத்துவார்களென்று இயேசுகிறிஸ்து வெகு தெளிவாக முன்னறிக்கை செய்திருக்கின்றனரென்று வற்புறுத்துகிறார்கள். இயேசுவின் உண்மை உபதேசங்களுக்கு விரோதமானது ஒன்றையேனும் நமது முகம்மது நபி அவர்கள் கற்பிக்கவில்லையென்று நிச்சயமாக உங்களுக்குக் கூறுவேன்; இதற்கு மாறாக இஸ்லாமார்க்கத்தின் உண்மைக் கொள்கைகளையும், நாஜரத் தீர்க்கதரிசி தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்தவற்றையும், ஆராய்ந்துபார்த்தால் அவையிரண்டும் குணத்திலும் சாரிலும் ஒரே தன்மையானவென்று தோன்றுமலிரா. நாஜரத தீர்க்கதரிசியை நமது முகம்மது நபி அவர்கள் அடிக்கடி “மேரியின் அற்புத குமாரனை இயேசு”

என்று குறிப்பித்திருக்கிறார்கள். யூதர்களுக்குக்கடவுளால் அனுப்பப்பட்ட பரிசுத்த தீர்க்கதரிசியென்றே அவரைக் கருதி அன்பினாலும், பக்தியினாலும் கண்ணியத்தினாலும் அவருக்கு விசேஷ மரியாதை செய்திருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவமார்க்கமென்று பிழைபடக் கூறும் முறையில் அடங்கியுள்ள அசங்கியமான கொள்கைகள், தப்பெண்ணங்கள், மூட பக்திகள் இவைகளையெல்லாம் நமது நபி வெகு கடுமையாகத் தான் கண்டித்திருக்கிறார்கள். போலி மார்க்கங்களைப் பின்பற்றியதனால் வரும் தாழ்ந்த லோகாயதம், பேராசையாகிய பெருங்களை, சுயநயம், உலகப்பற்று இவைகளினின்றும் மானிடர் விடுபட்டு மேலுயர்த்தப்பட வேண்டியதற்காகவும் ஊனின் இச்சையினால் வழி தவறியவரை நல்வழியில் செலுத்தவேண்டியதற்காகவும் மானிட அபிவிருத்தியில் சிற்சில காலங்களில் ஜனங்களிடையே தீர்க்கதரிசியுற்பவிப்பாரென்றும் ஆத்ம பரிபூர்ணத்தையடைய விரும்பும் மானிடர்களின் மேல் போக்கைக் கடவுள் இவ்விதமாகத்தான் உதவி செய்வாரென்றும், முகம்மது நபி அவர்கள் கற்பித்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள் தாம் தீர்க்கதரிசிகள் எல்லோருக்கும் கடைசியாக உற்பவித்தவரென்றும், அவர்கள் கற்பித்தனவற்றுக்கு விரோதமாகத் தாமொன்றையும் கற்பிக்கவில்லையென்றும், ஸஹாக்களான அரபியர்கள் மனதில் ஒரே பெரிய உண்மையைப் புதுப்பிக்க வேண்டியது தான் தமது காரியமென்றும் உறுதி சொல்லியிருக்கிறார்கள். இவ்வுறுதி மொழியின் உண்மை இஸ்லாத்தின் தத்துவத்தைப் பற்றிச் சிறிது அறிந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கும். “என்ன! இஸ்லாத்திலும் ஒரு தத்துவம் உண்மையாக இருக்கிறதா?” என்று கிறிஸ்தவன் ஆச்சரியத்துடன் கேட்கிறான். தப்புவழியில் சென்ற சகோதரனே? அது உண்மை தான்; இஸ்லாம் ஒரு மார்க்கமட்டு மன்று; தத்துவமும் கூடத்தான். அதுவும் சுத்தமான பரிபூர்ண தத்துவம். லோகாயத சாஸ்திரத்தால் அறியப்படாததான ஓர் அதிருசயமான சக்தியினால் இயக்கப்பட்டு சாந்தமாகவும், காம்பீரியமான ஒழுங்காகவும் நடைபெற்றுவருகிற பெரிய இயற்கைத்தோற்றங்களான பிரகிருதியின் அழகு அற்புதம், மரங்கள் புஷ்பங்கள் வளர்வது அழிவது, கிரகசாரங்கள், காலவியல்பு மாறுதல் இவைகளையெல்லாம்

சுற்றிப்பாருங்கள். எல்லா விஷயங்களிலும் ஊடுருவியிருக்கிற மாறாத ஒழுங்கு, எஜமானன் ஒருவனுடைய சக்தியைக் குறிக்கின்றது. தென்னை மரங்களில் திராக்ஷைப் பழங்களையும் முட்செடிகளில் அத்திப்பழங்களையும் நாம் காண்பதில்லை. ஒவ்வொரு பழமும் அததனதன் மரத்திலேயே தோன்றி முதிர்ந்து, மானிட உணவுக்கு உபயோகப்படுத்தப் படாவிட்டால் அழிந்து சூனியமாய்ப் போய் விடுகின்றது. நாம் மின்னற்கொடியைக் காண்கிறோம்; இடி யிடிப்பதையும் புயற்காற்றுக் கோரமாய் மோதுவதையும் கேட்கிறோம்; ஆனால் இவ்விதத் தோற்றங்களுக்குப் பின்னால் இருக்கும் தடுக்கவொண்ணாச் சக்தியைப்பற்றிச் சாதாரண மனிதனுக்கு ஒன்றுந் தெரியாது. இவ்விதத் தோற்றத்தை விவரிக்கச் சாஸ்திரம் முயன்றது; ஆனால் விவரிக்க முடியாமற் போனபோதிலும், அவைகளை யடக்கியாளுஞ் சிற்சில சாசுவதமான சட்டங்களும் நியமனங்களும் இருக்கின்றன வென்றும், அவைகளின் மூலமாக அத்தோற்றங்கள் உண்டாகப்போவதை முன்னதாக அறிந்துகொள்ளலா மென்றும் கண்டுபிடித்திருக்கின்றது. முத்திநெறியை உபதேசித்த இயேசுவையும் மற்ற தீர்க்கதரிசியையும் போலவே முகம்மது நபி அவர்களும் தமது உபதேசங்களை இரண்டுவிதமாகக் கொடுக்கவேண்டியதின் அவசியத்தைக் கண்டுகொண்டார்கள். அதாவதுமேலானஉண்மைகளை அறிந்து கிரகிக்கக்கூடியவர்களான சிலர்க்குமட்டும் ஒரு விதமும் உலகப்பற்றினாலும் ஊன் பந்தத்தினாலும் குருடர்களாகிக் கிரியைகளில் லோகாயதமான விஷயத்தைமட்டுமே கிரகிக்கக் கூடிய ஜனங்களுக்கு இன்னொருவிதமுமாகத் தமது கற்பனைகளை இரண்டாகப் பகுத்துக் கொண்டனர். இக்கருத்தைத் தெரிவிக்கக் கூடியதான வரலாறுகள் திருக்குரானிலும் கர்ணபரம்பரைச் செய்திகளிலும் நிரம்பவுள்ளன. இயேசுகிறிஸ்து தமது சீஷர்களைநோக்கி “மோக்ஷ லோகத்தைப்பற்றிய ரகஸியங்களை நீங்கள் தெரிந்துகொள்ளக் கூடும்: ஆனால் வெளியில் உள்ளோர்க்கு எல்லா விஷயங்களும் நீதிக்கதைகள் மூலமாகச் செய்யப்படும்” என்று கூறியிருக்கின்றனர். பரி! இயேசுவும் பரி! முகம்மது அவர்களும் தெய்வீகம். பொருந்தியவர்களாயிருந்ததால், “பிரகிருதி” யென்று நாம் சொல்வதிலுள்ள ரகஸியங்கள் அவர்களுக்கு வெளியிடப்பட்டன வென்றும். தற்காலத்திய லோகாயதனுக்குத் தெரிந்துள்ளதைக்காட்டிலும் மேலானதோர் தத்துவத்தை உபதேசிக்க அவர்களுக்குச் சக்தியிருந்ததென்றும் நாம் முடிவுக்கு வருவது நியாயமானதேயாம். இவ்விதமான மேம்பட்ட தத்துவத்தின் மூலமாகவே நான் இஸ்லாம் மார்க்கத்துக்குக்கொண்டு வரப்பட்டேன் என்று உங்களுக்குப் பகிரங்கமாய்க் கூறுகின்றேன். குரானைப்படித்து, தனது மதக்கொள்கைகளைப்பற்றி யாதேனுமொரு அபிப்பிராயத்தை யுடைய ஒவ்வொரு முஸல்மானும், இயேசு ஒரு தெய்வீகம் வாய்ந்த தீர்க்கதரிசியென்று தாராளமாய் ஒப்புக்கொள்கிறான். ஆனால், இப்போது கிறிஸ்தவ மார்க்கமென்று சொல்லப்படுவதும் கிறிஸ்தவக் கோயில்களிலுள்ள பிரசங்க மேடைகளிலிருந்து கற்பிக்கப்படுவதுமான முறை ஆபிரிகாவிலுள்ள வூடு ஜாதியாரின் முறையைப்போலவும், முக்திப்படையாரின் அசங்கியக்கொள்கைகளையும் கோமாளிச்சேஷ்டைகளையும் போலவும் இருக்கிறதேயன்றி, நாஜரத்வாசியால் கற்பிக்கப்பட்ட முறையைப்போலஇருக்கவில்லை யென்று அவன் நன்றாய் அறிவான். கிறிஸ்தவன் ஒருவனுடன், இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி நான் பேசும்போதெல்லாம் உடனே அவன் அது நாகரீகத்துக்கு விரோதமான தென்றும், பல ஸ்திரீகளை விவாகம் செய்யஅனுமதிகொடுக்கிறதென்றும், கொடுமையாக இரத்தஞ்சிந்திய வரலாற்றை யுடையதென்றும், அதைப் பின்பற்றுவோர்கள்வீண்வைராக்கியமும்குரூரமுமுடையவர்களென்றும் கூசாமல் கூறுகின்றான். இவைகளெல்லாம் உண்மையென்றும், ஒரு மதக்கொள்கையைக்கண்டனம் செய்வதற்கு உரியவை யென்றும் அவனுக்குத் தோன்றுகின்றன. இஸ்லாத்தைப்பற்றித்தெரிந்து கொள்ளாமல் அமெரிக்காவிலும், நான் சந்தேகிக்கிறபடி, இங்கிலாந்திலும் உள்ள சாதாரணகிறிஸ்தவன், ஒவ்வொருமுஸ்லீமுக்கும் மனைவிகள் நிறைந்த அந்தப்புரமொன்று உண்டென்றும், கிறிஸ்தவன் ஒருவனைக்கொல்லவேண்டுமென்று கத்தியைக் கையிலேந்திக்கொண்டு திரியாதபொழுதைத்தவிர, மற்றைய நேரமெல்லாம் அவ்வந்தப்புறத்திலேயேதான் தன் காலத்தில் பெரும்பாகத்தைக் கழிக்கிறானென்றும் பூர்ணமாக நம்பியிருக்கிறான். ஒவ்வொரு முஸ்லீமும் ஒரு கிறிஸ்தவனைக் கொன்று தின்றாலொழிய மோக்ஷத்தில் நல்லஸ்தானமொன்றைப் பெறமாட்டானென்று நம்புவதாக, சுமாராக

ஞானம் படைத்த ஒரு கிறிஸ்தவன் ஒரு சமயத்தில் என்னிடம் சொன்னான்.

ரங்கோனில் ஓர் பார்ஸிஜாதியான் “ஆனால் நாங்கள் இப்போது நாகரீகத்தில் முதன்மையடைந்திருப்பது கிறிஸ்தவமார்க்கத்தினால் தான் என்பதை நீர் மறுக்கமுடியாது” என்று என்னிடம் சொன்னான். “அதை நான் மறுக்கவே செய்கிறேன்” என்று விடையளித்துப்பின், புதியஏற்பாட்டையும், மலைப்பிரசங்கத்தையும் அவனுக்குச்சுட்டிக்காட்டி, அவைகளின் கொள்கைகளை, கிறிஸ்தவநாகரீகத்தோடு இணக்கிப்பார்க்கும்படி சொன்னேன். அவ்வாறு செய்ய முடியாது. உண்மை யென்னவெனில், அந்தமேற்றிசை நாகரீகம் பேராசையினாலும் சுய நயத்தினாலும் உண்டானதென்பதும், அதில் கிறிஸ்தவமார்க்கத்தின் உண்மையான ஸ்வபாவம் கொஞ்சமேனும் இல்லையென்பதுமே. கிறிஸ்தவச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொடங்கி அதனாலேயே மேற்றிசையோரின் முற்போக்கும் அபிவிருத்தியும் சதாகாலம் தடைபட்டனவென்பது நன்குதெரிந்த விஷயம். அது ஊர்கோலத்துக்கு முன்னர் நின்றுகொண்டு, உயரத்தூக்கியகைகளுடன், “இதற்குமேல் நீங்கள் செல்லக்கூடாது. சென்றால் எனக்கு அகௌரவமும் துர்ப்பலமும் உண்டாகும்” என்று சொல்லிய வண்ணமாகவிருந்தது* அது அப்பால் தள்ளப்பட்டு தடுக்க வொண்ணாத அலையினால் தாண்டிச்செல்லப்பட்ட பின்னர் நகர்ந்து கொண்டுபோகும் படைவகுப்பை அலைத்துத்தடுக்கத்தன்னால் செய்யக்கூடிய ஒவ்வொரு விதத்தாலும் முயன்றது. ஆயினும் இப்போது அது அத்தியாச்சரியமான உறுதிப்பாட்டுடனும் நாணக்கேட்டுடனும் “நாங்கள் செய்திருக்கிறதைப் பாருங்கள்; எங்களுடைய சிரேஷ்டமான கிறிஸ்தவநாகரீகத்தைக்கண்டு எங்கள் முன்னர் வீழ்ந்து வணங்குங்கள்” என்று கூசாமல் சொல்கின்றது. கிறிஸ்தவ நாகரீகமென்று சொல்லப்படுவது, கிறிஸ்தவ உலகம் அஞ்ஞானத்திலும் காட்டுமிராண்டித்தனத்திலும் மடங்கிக்கிடந்த எட்டாவது நூற்றாண்டில், ஸ்பெயின் தேசத்திலிருந்த முஸ்லீம்களினிடையே தான் அதற்கு வெளிச்சம் தோன்றிற்றென்னும் உண்மையை ஒவ்வொரு மனிதனும் தானே சோதித்துத்தெரிந்து கொள்ளலாம்.

“முஸ்லீங்களுக்கு நாம் சாஸ்திர ஞானத்தில் கடமைப்பட்டிருக்கும் விஷயத்தை மறைப்பதற்கு ஐரோப்பியக்கிரந்தங்கள் ஒரேரீதியாக முயற்சிசெய்யும் மாதிரியைக்கண்டு நான் துக்கிக்கிறேன். உண்மையாகவே, அவைகளை நெடுங்காலம் மறைத்துவைக்க முடியாது. மதத்துவேஷத்தாலும், ஜாதீய அகங்காரத்தாலும் எழுந்த அநீதியைச் சாசுவதமாகவே நிலைநிறுத்திவிட முடியாது. அரபியன் தனது புத்தி சாமர்த்தியத்தின் அடையாளங்களை ஐரோப்பாவில் வைத்துவிட்டுப் போயிருக்கிறான். அதைக் கிறிஸ்தவ உலகம் கூடிய சீக்கிரத்தில் அங்கீகரிக்கப் போகின்றது. அவன் அதை, சாதாரண ககோள உருண்டையின்மீது எழுதப்பட்டுள்ள நக்ஷத்திரங்களின் பெயர்களைப் படிக்கும் ஒருவன் காணக்கூடியவாறு, ஆகாயத்தில் அழியாதபடி எழுதிவைத்திருக்கிறான்.” என்று புரோபஸர், டிரேபர் கூறுகின்றார்.

நமது நாகரீகம், கிறிஸ்தவ மார்க்கத்தைத் தாயாகப்பெற்ற கிறிஸ்தவ நாகரீகம் என்று நம்புவன் ஒவ்வொருவனும், புரோபஸர், டிரேபர் எழுதியுள்ள “ஐரோப்பிய விவேக அபிவிருத்தி” என்னும் கிரந்தத்தையேனும், அவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லும் வேறு உண்மையான சரித்திர கிரந்தத்தையேனும் படிக்க வேண்டும். ஸ்டான்லி, லேன், பூல் என்பவர் தாம் எழுதிய “ஸ்பெயினில் மூர் ஜாதியார்” என்னும் கிரந்தத்தில், முஸ்லீம்களினிடமிருந்தே முதலில் சாஸ்திர ஞானத்தையும், கலாஞானத்தையும் ஐரோப்பா கண்டம்பெற்றதென்று தெளிவாகக் காட்டியிருக்கிறார். ஐரோப்பாவின் மற்றைப்பாகமெல்லாம் கேவலமான ஸ்திதியில் இருந்ததைத் தெரிவிக்கையில், “ஒரு ராஜ்யத்தைப் பெரியதாகவும் செழிப்பாகவும் செய்யக்கூடியதும், நாகரீகத்தையும் பரிஷ்காரத்தையும் உண்டாக்கக்கூடியதுமான ஒவ்வொரு விஷயமும் முஸ்லீம் ஸ்பெயினில் காணப்பட்டது” என்று கூறுகின்றார். கிறிஸ்தவர்கள் சீக்கிரத்தில் நியாயவான்களாகவும் விவேகிகளாகவும் ஆகக் கற்றுக்கொள்வார்களென்றும், கிறிஸ்தவ நாகரீகத்தைப்பற்றிய இவ

---

* இஸ்லாம் நேசன் 3-வது சஞ்சிகை, 75-ம் பக்கம் பார்க்க.

விதமான அசட்டுப்பேச்சுகள் நம் காதுகளில் இனிக் கேட்கவேமாட்டாவென்றும் நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இனி, அந்தப் பெரிய ஆள் மருட்டியாகிய * வெகுநாயகி வரணத்தைச் சற்று பார்ப்போம். ஒரு கிறிஸ்தவன் முதன் முதலில் என்னைக் கேட்கும் கேள்வி யென்னவெனில் "நீர் வெகுநாயகி வரணத்தை நம்புகிறீரா?" என்பதுதான். "ஆம்; சிற்சில நிபந்தனைகளின்பேரில் அதை நம்புகிறேன்" என்று நான் விடைகூறுகிறேன். சென்ற வாரத்தில், படிப்பாளியாகிய ஒரு முஸல்மான், "நீர் வெகுநாயகி வரணத்தை உண்மையிலேயே நம்பமாட்டீர்; அமெரிக்காவிலும் அதை வழக்கத்துக்குக் கொண்டுவரச் சிபார்சு செய்யமாட்டீரல்லவா?" என்று என்னிடம் சொன்னான். கேட்டதும், நான் வெகுநாயகி வரணத்தில் நம்பிக்கை வைத்திருப்பது மட்டுமன்று, அதைச் சரியாகவும் கவுரவமாகவும் ஏற்றுக்கொள்வதற்குத் தகுந்த சன்மார்க்கமும் பரிஷ்காரமும் அமெரிக்காவில் போதுமானவளவு உண்டானவுடன், அமெரிக்கஜனவாழ்க்கை முறையில் அதை வழக்கத்துக்குக் கொண்டுவருவதற்குச் சிபார்சும் செய்வேன் என்று பதில் சொன்னபோது, அவன் ஆச்சரியமடைந்தது தெளிவாகத் தெரிந்தது. இவ்விஷயத்தை நாம் பகுத்தாராய்வோம். நமது நபிநாயகம் இவ்வுலகத்தில் உபதேசம் செய்தருளியபோது, அரேபியாவில் ஜாதீய ஆசாரத்தாலும் சட்டங்களாலும் வரையறையின்றிய வெகுநாயகி வரணம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தம்மைப் பின்பற்றுவோர்கள் ஒத்த அன்போடும் நீதியோடும் நடத்தக்கூடியதைக் காட்டிலும் அதிகமான ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாதென்று தெளிவாக வற்புறுத்தியும் நான்கு மனைவிகளை மட்டுமே விவாகம் செய்ய அனுமதி கொடுத்தும், அவ்வழக்கத்தை அவர்கள் மட்டுப்படுத்தியுள்ளார்கள். பின்னர் அவர்கள் ஒருமனிதன் இரண்டு மனைவிகளைச்சமானமாகநேசிக்க முடியாதென்று கூறியிருக்கின்றார்கள். இக்கூற்று, நான்கு ஸ்திரீகளைக் கல்யாணம்செய்துகொள்ளும் சுதந்தரத்தை ரத்துசெய்துவிட்டதென்றேசொல்லலாம். அப்போதிருந்த ஜாதீய ஆசாரங்களைச் சுத்தப்படுத்தி, ஸம்ஸார வாழ்க்கையை இன்னும் மேலானதோர் நன்னிலைமைக்குக்கொண்டுவரவேண்டுமென்பதே அவர்களுடைய கருத்தென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. இவ்வெகுநாயகி வரணம், மேற்றிசையோரால், துன்மார்க்கமுள்ளதென்றும் குற்றமுள்ளதென்றும், சன்மார்க்கத்துக்கும் நீதிக்கும் விரோதமானதென்றும் கருதப்படுகையில், கீழ்த்திசையில் வழங்கிவரும் ஆசார அனுஷ்டானங்களால் அது, இக்கருத்துக்கு நேர்விரோதமான தோற்றமுடையதாகி, ஆசாரத்தைப்பற்றிய மகோன்னதமான அபிப்பிராயங்களுக்கு முற்றிலும் இணங்கியே யுள்ளதென்று கருதப்படுகின்றது. இவ்விஷயத்தைப்பற்றிப் பல விவரங்கள் உள்ளன; அவைகளைப்பற்றியெல்லாம் விஸ்தாரமாகக் கூறவேண்டுமாயின், இவ்வந்திநேரத்தில் எனக்குக் கொடுபட்டிருக்கும் காலத்துக்கு அதிகமாகச் சாவகாசம் வேண்டியிருக்கும். இப்போதுள்ள அமெரிக்கா ஜாதீய முறையில் இவ்வெகு நாயகி வரணத்தை உடனே வழக்கத்துக் கொண்டுவருவது வெகு கெடுதலாகத்தான் முடியுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அம்முறையும் அதன் நோக்கங்களும் தன்மைகளும் சரியாகத் தெரிந்துகொள்ளப்பட்டபிறகும், கல்வி கேள்வியிலும் நாகரீகத்திலும் சிறந்துள்ள ஜனங்களிடையே நிச்சயமாகக் கொடுத்தே தீருகிற பயன்களை, ஔதார்யமான இஸ்லாமிய சன்மார்க்க சக்தி கொடுத்தபிறகும், அதைக் கட்டாயமாக வழக்கத்துக்குக் கொண்டு வருவதற்குச் சிபார்சு செய்யவேண்டும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மிகுந்த கிலேசத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிற வியபிசாரம், பர்த்துரு துரோகம், இவைகளாகிய பெருந்தீங்குகளுக்கு அது ஒன்றுதான் ஏற்ற பரிகாரமாகும். மேலும், அதுசுபாவமாகவே யடைந்து இருக்கக்கூடியதான வோர் மகோன்னத பதவியில் நமது ஸ்திரீஜாதிகளை உயர்த்தும். இஸ்லாமிய தர்மசாஸ்திரம் வெகு நாயகி வரணத்துக்குச் சம்மதித்தபோதிலும், அவ்வழக்கம் சமயக் கோட்பாடுகளில் ஒன்றாகக் காட்டப்படவில்லை. தன்வீட்டில் இருக்கும் நிலைமையின் கட்டாயத்தாலும், இஸ்லாமிய கடமைகளின்படி தான் நடந்தொழுகக் கூடுமென்ற கருத்தாலுமன்றி, நல்ல முஸல்மான் ஒருவன் ஒரு ஸ்திரீக்கு மேலாக விவாகம் செய்துகொள்ள நினைக்கமாட்டான். தான் வாழும் தேசத்தில் வழங்கும்

---

* பலதாரமணம்.

தர்மங்களுக்கு விரோதமாகாவிட்டால் ஒருவன் நான்கு ஸ்திரீகளை மட்டும் கல்யாணம் செய்துகொள்ளலாம்; அதற்குமேல் போகக்கூடாது. ஆனாலும் தனது மதக்கொள்கைகளையும் சுதந்தரங்களையும் இழந்துவிடாமலேயே ஒருவன் ஒற்றை மனைவியுடனாவது, மனைவியேயில்லாதவனாகவாவது இருக்கலாம். வெகு நாயகிகளையுடைய ஒரு முஸல்மான் நல்ல முஸல்மான் என்று கருதப்படுவதைப் போலவே, ஏகபத்னீவிரதமுடைய முஸல்மான் ஒருவனும பத்னியேயில்லாத முஸல்மான் ஒருவனும் நல்லவன் என்று கருதப்பட்டு, அயலார்களாற்கண்ணியமாகவே மதிக்கப்படக்கூடும்.

ஐரோப்பாவிலேனும் அமெரிக்காவிலேனும் உள்ள பெரிய நகரமொன்றுக்கு என்னுடன் வந்து, ஜனஸமூகத்தினிடையே புழுங்கிப் பெருகும் தன் மார்க்கமும் குற்றமுமாகிய எதிர்க்கக்கூடாத காட்டாற்றின் அடையாளங்களைப் பாருங்கள்; நாகரீகமான நர்த்தன விருந்து, நல்வரவுவிருந்து, போஜனக்கச்சேரி இவைகளிலொன்றுக்கு என்னுடன்வந்து, கடவுளின் (சிரேஷ்டம்) உத்கிருஷ்ட சிருஷ்டிப் பொருள்களிலொன்றான ஸ்திரீ ரத்னங்கள் இப்பத்தொன்பதாம் நூற்றாண்டின் நாகரீகத்தின் பழக்க வழக்கங்களால், அடைந்துள்ள ஸ்திதியைப் பாருங்கள்; குடிவெறியினால் தூண்டப்பட்ட ஆசாபாசங்களையும், காமாதுரத்தையுமுடைய மனிதர்களின் பார்வைக்கு, பரிசுத்தமான பிரத்தியேக கிரகத்தில் மட்டுமே காணக் கூடியதான சரீர அழகைக் காட்டிக்கொண்டு இருக்கும். செல்வமும் கல்வியும் படைத்த கிறிஸ்தவர்களின் கண்ணிய மனைவிகளையும் அவர்களது பரிசுத்தைகளான பெண்களையும் பாருங்கள்; வர்த்தமானப் பத்திரிகைகளை யெடுத்து, அதில் நமக்கு வெறுப்பையும் வெட்கத்தையும் நிரம்பக் கொடுக்கின்ற விவாக நிவர்த்தி சமாசாரங்களையும் ஜனஸமூக அபவாதங்களையும் விவாக துக்கங்களையும் பார்த்துப்பின், கிறிஸ்தவ தர்மமென்றும் கிறிஸ்தவ பழக்க வழக்கமென்றும் கூறப்படும் இவைகள் நல்லவைகள் தாமா என்று எனக்குச் சொல்லுங்கள். இவைகளுக்கெல்லாம் பரிகாரம் எங்குள்ளது? இஸ்லாமிய தர்மத்திலும் பழக்க வழக்கத்திலும் இஸ்லாமிய கொள்கைகளிலேயோ கிறிஸ்தவ தர்மமும் பழக்கவழக்கமும் அநேக நூற்றாண்டுகளாகச் சோதனை செய்யப்பட்டு முற்றிலும் தவறிவிட்டன. இனி இஸ்லாத்தையும் சோதித்துப் பாருங்கள்.

இனி, இஸ்லாமார்க்கத்தினது இரத்தக்கறையுள்ள வரலாற்றையும், கத்தியின் மூலமாக அது பரவச் செய்யப்பட்டதையும் சற்று கவனிப்போம்: இரத்தக்கறை சம்பந்தப்பட்டமட்டில், இஸ்லாமார்க்கமானது, கிறிஸ்தவ மார்க்கத்தின் வஸ்திரங்களை ஒப்பிடும்போது, வெட்கத்தினால் தலைகுனியவேண்டிய காரணமேயில்லையென நம்புகிறேன். சிலுவைப்படை யெழுச்சியையும் கிறிஸ்தவ விரோதிகளைத் தண்டிக்க வெழுந்த குருமார் விசாரணையையும் பற்றிய சரித்திரங்களை எப்போதாவது நீங்கள் படித்திருக்கிறீர்களா? 637-ம் ஆண்டில் எருசலேம் நகரம் காலிப் உமர்ராஜா அவர்களால் கைப்பற்றப்பட்டபோது அவர்கள் அந்நகரத்தின்பூர்வ விருத்தாந்தங்களைப்பற்றிப்பேசிக்கொண்டு ஸாப்ரோனியஸ் என்னும் தலைவனுடன் அந்நகரத்திற்குள் குதிரையேறிச்சென்றனர்கள். ஒரு துளி யிரத்தங்கூடச்சிந்தப்படவில்லை. ஆனால் கிறிஸ்தவ சிலுவைப் படையெழுச்சிக்காரர்கள் அந்நகரத்துக்குள் புகுந்தபோது, சிறுகுழந்தைகளின் மூளைகள் சுவர்களில் மோதி எறியப்பட்டன; கைக்குழந்தைகள் அலங்கத்தின்மீது எறியப்பட்டன; கையிலகப்படக்கூடிய ஸ்திரீகளெல்லோரும் மானபங்கப்படுத்தப்பட்டனர். புருஷர்கள் நெருப்பின்மீது வறுக்கப்பட்டனர். சிலர் தங்கத்தை விழுங்கியிருப்பார்களோ என்று பார்ப்பதற்குப் பிளக்கப்பட்டனர்; யூதர்கள் அவர்களுடைய சபா மண்டபத்துக்குட் துரத்தப்பட்டு அங்கு தகிக்கப்பட்டனர். ஸ்திரீ, புருஷர், குழந்தைகளாகிய எழுபதினாயிரம் பேர்கள் குரூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர். இதெல்லாம் முஸ்லீம் சரித்திர வாசிரியர்களாலன்று. கிறிஸ்தவ சரித்திர வாசிரியர்களாலேயே சான்று கூறப்பட்டுளது. ஸ்திரீகளையும் குழந்தைகளையும் கிழவர்களையும் கொல்லக் கூடாதென்றும் அபாயப்படுத்தக் கூடாதென்றும், விளை நிலங்களையும் பேரீச்சைமரங்களையும் அழிக்கக்கூடாதென்றும், ஒரு நகரம் கீழ்ப்படிந்ததும் கத்தியை உறையில் சொருகிவிடவேண்டுமென்றும் முஸ்லீம் தளகர்த்தர்கள் நமது நபிநாயகத்தாலும் முதல் காலிப் அபூ பக்கரவர்களாலும் அடிக்கடி கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டிருக்

தனரென்று தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கின்றது. பூதகையை, இரக்கம், அன்பு இவைகள் வற்புறுத்தப்பட்டன.

மெக்கா நகரம் நமது நபிநாயகத்துக்குக்கீழ்ப்படிந்ததும், அந்நகரத்தில் தான் அவர்கள் வெகுவெட்கங்கெட்டதனமாக அவதூறுடன் இம்சிக்கப்பட்டனர்களென்றாலும் அந்நகரவாசிகளே அவர்களுக்குக் குரூரமான தீங்குகளைச் செய்திருந்தனரென்றாலும் அவர்கள் அதனுள் பிரவேசித்தபோது மனிதனாகட்டும், ஸ்திரீயாகட்டும், குழந்தையாகட்டும் ஒருவராவது கொல்லப்படவுமில்லை; கொடுமையாக நடத்தப்படவுமில்லை. சமயம் வாய்த்தபோது ஏன் அவர்கள் தமது பழியைத் தீர்த்துக்கொள்ளவில்லை? அவர்களிடம் பழி வாங்குங்குணம் வஞ்சகம் என்பவற்றில் அணுவளவேனும் இருந்ததில்லை; அவர்கள் அன்பும் உண்மையும் நீதியும் தயையும் நிறைந்த கடவுளின் தீர்க்கதரிசியாக இருந்தார்கள்.

இருவகை வரலாறுகளும் போதுமானவளவு பரிதாபகரமானவையாகவும் இரத்தக்கறை படிந்துள்ளவையாகவும் இருப்பது கடவுளுக்குத் தெரிந்தேயிருக்கின்றது. ஆயினும், அசுரத்தனம் இரத்தப்பிரியம் மிருகத்தன்மை இவைகளுக்குக் கிறிஸ்தவர்கள் சொல்லவேண்டிய சமாதானத்தைக் காட்டிலும் வெகுவாகக் குறைந்த அளவிலேயே முஸ்லீம்கள் சொல்லவேண்டியிருக்கும் என்பது எனது நிச்சயம். தங்களுடைய கொள்கைகளை நம்பாதவர்களை நிர்த்தயையாய்க் கொன்று கொண்டே செல்வதற்கு ஆதாரமாக சாந்தமும் தாழ்மையும் உள்ள இயேசுவின் உபதேச மொழிகளிலிருந்தேனும் நடத்தையிலிருந்தேனும் கிறிஸ்தவர்கள் தகுந்த அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்களா? ஆனால் இப்போது அவர்கள் அம்மாதிரி செய்வதில்லை, அதற்குக் காரணம் அது அவர்களில் சிலர்க்கு வெறுப்பாகவிருக்கும் என்பதல்ல, பொது ஜன அபிப்பிராயம் மாறியிருப்பதுவே. ஒருவன் தனது மதத்தை எவ்வளவு ஆர்வமோடு நம்பினாலும் சரியே, அதைப் பரவச் செய்வதில் அளவுக்கு மிஞ்சிய ஊக்கமும் மனச்சாட்சியில்லாமையும், அமானுஷியத் தன்மையும் காட்டுவது இக்காலத்தில் அபாயகரமானதாகவிருக்கின்றது. இஸ்லாமார்க்கமானது கத்தியினாற் பரவச்செய்யப்பட வேண்டுமென்று முகம்

மது நபியவர்கள் ஒருபோதும் சிபார்சு செய்ததில்லை. கற்பித்ததுமில்லை. அதற்குச் சம்மதித்ததுமில்லையென்றும், கொடுஞ் செய்கைகள், உயிர்க்கொலை இவைகளையவர்கள் வெகுவாகக் கண்டனம் செய்தனரென்றும் உங்களுக்கு நான் சொல்லும்போது, பக்ஷபாதமின்றி, உண்மையோடும் துரபிமானமின்றியும், இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செய்யச் சிரமப்படும் ஒவ்வொருவனும் தானே சோதித்துத் தெரிந்துகொள்ளக் கூடிய உண்மையையே சொல்லுகிறேன்.

கல்வி கேள்விகளில் வல்ல முஸ்லீம் ஒருவர் "இஸ்லாத்தை மறுப்பதற்குக் கத்திதான் தண்டனையென்று சொல்வது, மற்றைய மதப் பண்டிதர்களால் இம்மதத்துக்கு விரோதமாகக் கூறப்படும் பெரும் பொய்க்குற்றங்களில் ஒன்றாகும். அவ்வாறு குற்றங் கூறுவோரின் மதியீனத்தாலேயே அது உண்டாகின்றது. தான் கற்பிக்கும் விஷயங்கள் எல்லாவற்றிலும் வாஸ்தவமான மனப்பூர்வ நம்பிக்கை அவசியம் இருக்கவேண்டுமென இஸ்லாம் விதிக்கின்றது. பலாத்காரத்தாலும் கொடுஞ்செய்கையாலும் ஒருவன் மனதில் உண்மைப் பக்தியுண்டாகாது."

திருக்குரானும், "மதக்கொள்கையில் பலாத்காரம் வேண்டாம்; தப்புவழியினின்றும், சரியானவழி தெளிவாகத்தெரிந்துகொள்ளும்படி செய்யப்பட்டிருக்கின்றது. ஆண்டவனுக்குச் சித்தம் இருக்குமானால் உலகில் உள்ள எல்லோரும் ஒரேநம்பிக்கையையுடையவராக விருப்பார்; நம்பிக்கையுள்ளவர்களாம்படி மனிதர்களை நீங்கள் பலவந்தப்படுத்துவீர்களா?" என்று அருளுகின்றது.

நமது நபிநாயகமும், "ஷேகர்" வகுப்பான் ஒருவனைப்போலவே சண்டையிடாத குணமுள்ளவர்களும் அமைதியை விரும்புகிறவர்களுமாகவிருந்தார்கள். முற்றிலும் தடைசெய்யாமலிருக்கும் தன்மைதனக்கும், அரேபியாவிலிருந்த ஒவ்வொரு முஸ்லீமுக்கும் சீக்கிரத்தில் மரணத்தைக்கொடுக்குமென்று நபிநாயகம் தெரிந்துகொண்டுமவர்கள், நம்பாதவர்களோடு கொடுஞ்செய்கைகளுடன் கூடிய சண்டைகளைக் கூடுமானவரையில் விலக்கிவிடவேண்டுமென்றும் உயிர்களைக்காப்பாற்றிக்கொள்ளவேண்டிய அவசியம்நேரிடும்போதல்லாமல் மற்றையவேளைகளிற் சண்டையே போடக்கூடாதென்றும்

தம்மைப்பின்பற்றுவோர்களுக்கு வற்புறுத்தியிருந்தனர்கள். இஸ்லாம், மார்க்கத்துக்கு விரோதமாகக்கூறப்பட்ட குற்றங்கள் பலவுள்ளன; அவைகள் உண்மையாக விருந்தபோதிலும், இஸ்லாமிய கொள்கைகளுக்குச்சற்றேனும் சம்பந்தப்பட்டவையென்று நியாயமாகச்சொல்வதற்கிடமில்லை; ஒவ்வொரு மதக்கொள்கையிலும் வைராக்கியமுள்ளவர்களும் மதாபிமானம்நிறைந்துள்ளவர்களு மிருக்கின்றார்கள்; அவர்களுடைய கெட்டகுணத்தினாலேயே, அவர்கள்பின்பற்றுவதாகச் சொல்லும் மார்க்கத்துக்கும் அபகீர்த்தியுண்டாகின்றது.

மதியீனமும் துரபிமானமுமுள்ள நூலாசிரியர்களால் இஸ்லாமார்க்கத்துக்கு விரோதமாகக்கூறப்பட்ட பொய்க்குற்றங்களுக்கெல்லாம், ஒரே ஒரு பிரசங்கத்தில் பதில் சொல்லிவிட முயல்வது பயனற்றதாம்; உங்களுடையபொறுமையைக்கடந்துபோய் விடுவேனோ என்றஞ்சியே, ஒரே ஒருவிஷயத்தைமட்டும்சொல்லவிரும்புகிறேன். ஒவ்வொருவனும் தனதிஷ்டப்படியே மதக்கொள்கையில் சொல்லும்படிவிடும் குணம் முஸ்லீம்களினிடையே இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. சேம்பர்ஸ் சகலகலாநிகண்டு “என்னும்கிரந்தத்தில் ஒரு கிறிஸ்தவ ஆசிரியர்” ஸ்பெயினில் அரசாண்ட முஸ்லீம்களிடையேஇருந்த ஒருவிசேஷத்தைக்கூறவேண்டியிருக்கின்றது; ஏனெனில் அது அவர்களுக்கும் அவர்களுடைய ஸகஜீவிகளாகவும் அவர்களுக்குப்பின் வந்தவராகவும் இக்காலம் வரையில் அத்தேசத்தை ஆள்வோருக்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாய் வெளிப்படுத்துகின்றது. அவ்விசேஷம் என்னவெனில், மதக்கொள்கை விஷயங்களிற் பொதுவாக அவனவன் இஷ்டப்படி விட்டிருந்த பொறுமைதான் என்று கூறுகின்றார். இந்நூலாசிரியர் கிறிஸ்தவராகவிருப்பதினால், இஸ்லாத்தை ஒட்டிப்பேசுகிறார் என்று குறை கூறுவதற்கில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கிறிஸ்தவர் என்று கூறத்தகும் காட்பிரி ஹிகின்ஸ் என்னும் இன்னொரு நூலாசிரியர் பின் வருமாறு கூறுகின்றார்:—“மதவைராக்கியத்துக்கும் பொறுமைக்குமாக முகம்மதிய மார்க்கத்தைப் பற்றிக் கிறிஸ்தவ குருக்கள்மார் வைவதைக்கேட்பதைக் காட்டிலும் சர்வசாதாரணமானது வேறொன்றுமில்லை. எவ்வளவு உறுதிப்பாடும் பாசாங்கும்! கிறிஸ்தவர்களாகமாட்டோமென்றதற்காக மொரிஸ்கோவர்களை ஸ்பெயின் தேசத்தை விட்டு வெளியில் துரத்தியது யாவர்? மெக்ஸிகோவிலும் பெருவிலுமுள்ளவர்களைக் கிறிஸ்தவர்கள் அல்லரென்ற காரணத்தால் லக்ஷக்கணக்காகக் கொன்றதும் அடிமைகளாகக் கொடுத்ததும் யாவர்? கிரீஸ் தேசத்தில் முகம்மதியர்கள் காட்டிய வேறுபாடு என்னவாகவிருக்கிறது? அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஆஸ்திகள், மதக்கொள்கை, குருக்கள்மார், அத்தியக்ஷர்கள், பிரதானர்கள், கோயில்கள் இவைகளை ஆக்ஷேபமின்றி அனுபவிக்கும்படி விடப்பட்டிருக்கின்றனர். ஆங்கிலேயர்களுக்கும் டிமர்லா நாட்டிலிருந்த நீகிரோவர்களுக்கும் நடந்த சண்டையில் மதக்கொள்கை கொஞ்சமேனும் காரணமாகாமலிருந்ததைப் போலவே கிரேக்கர்களுக்கும் துருக்கர்களுக்கும் நடந்த சண்டையிலும் மதக்கொள்கை காரணமாக விருந்ததில்லை. * * * காலிப்கள் ஜெயித்தவிடங்களிலுள்ள ஜனங்கள் இஸ்லாமாய்விட்டால் அவர்கள் ஜெயித்தோருக்குச் சமானமான அந்தஸ்தை உடனே பெற்றவராயினர்.”

புத்தி சாதுர்யமும் கல்வியுமுள்ள அபிப்பிராயபேதியொருவர், ஸாரஸன் ஜாதியாரைப்பற்றிச் சொல்லும்போது “அவர்கள் ஒருவரையும் இம்சித்ததில்லை; யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவர்களிடையே வெகு சந்தோஷமாக வாழ்ந்தனர்” என்கிறார்.

ஹிகின்ஸ் ஆசிரியர் இன்னும் காலிப்களின் சரித்திரம் முழுவதிலும் “இன்குவியிஷன்” என்னும் விசாரணைச் சங்கத்தைப் போல அரைவரிசையேனும் அபகீர்த்தியுள்ளதான ஒன்றும் காணப்படாது; மதக்கொள்கையின் அபிப்பிராயத்துக்காக மனிதன் ஒருவன் நெருப்பினால் தகிக்கப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றுமேயில்லை. அமைதியான காலத்தில் இஸ்லாமார்க்கத்தைக் கைப்பற்றாத காரணத்துக்காக மட்டும் ஒருவன்கூடக் கொலைசெய்யப்படவில்லையென்றும் நான் நம்புகிறேன் என்று கூறுகின்றார்.

“ஆனால் அதெல்லாம் அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னர் நடந்த விசேஷங்களாம்; இப்போது கிறிஸ்தவர்கள் அவ்வளவு வைராக்

கியமுள்ளவர்களாகவும் அசூயைக்காரர்களாகவும் இருக்கவில்லை" என்று கிறிஸ்தவன் சொல்கிறான். அப்படியிருக்கவில்லையா? முன்னூறு வருஷங்களாக கிறிஸ்தவ நாடாகிய ஸ்பெயின் * தேசத்துக்குக் கீழ்ப்பட்ட எழுபது லக்ஷத்துக்கு அதிகமான ஜனத்தொகையையுடைய நாடாகிய பிலிப்பைன் தீவுகளுக்குப் போங்கள். உரோமன் கத்தோலிக் மதத்தைத்தவிர வேறொரு மதத்தைக் கற்பிக்க முயன்று அதனால் உங்களுக்கு நேரக்கூடிய கதியைப் பாருங்கள். கிறிஸ்தவமத போதகர்களை வரவொட்டாமல் தடுப்பதும் அவர்களுக்குப் போதுமான காவல்செய்து கொடுக்காததுமான இஸ்லாம் நாடு உலகத்தில் இல்லவே இல்லை. மூன்று வருஷங்களுக்கு முன்னால் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் அந்நிய பைபிள் சங்கத்தாரின் பிரதிநிதிகள் இருவர் பைபிள் விற்பதற்காக பிலிப்பைன் தீவுகளின் தலைநகராகிய மணிலாவுக்குச் சென்றார்கள். அவர்களில் ஒருவர்வந்து மூன்று வாரங்களுக்குள் இறந்துவிட்டார்; கத்தோலிக் குருக்கள்மாரில் சிலரின் தூண்டுகோலால் அவர் விஷமிட்டுக் கொல்லப்பட்டனர் என்று சொல்லிக்கொள்ளும்படி துஷ்ட ஜனங்கள் போதுமானவளவு அங்கிருந்தனர். மற்றொருவரோ ராஜ்யத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மதக்கொள்கைக்கு விரோதமாகக் கற்பிக்கிறான் என்னும் குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்; பின்னர் ஸ்பெயின் ராஜாங்கத்தின் உத்தரவினால் சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டனர். இதெல்லாம் மூன்று வருஷங்களுக்கு முன்னேதான் நடந்தது. சிலமாதங்களுக்குப் பின்னர் மணிலாவிலிருந்து சீனர்கள் அங்கு புத்தமதச்சடங்கொன்றை நிறைவேற்றுவதற்குத் தங்களுக்கு அனுமதிகொடுக்கப்படுமென்று நம்பி சீனாவிலுள்ள பூசூ நகரத்திலிருந்து ஏழு பௌத்த குருக்கள்மாரை வரும்படி தூண்டினர். அவர்கள் வந்ததும் கைதுசெய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பெற்று சீனதேசத்துக்குத் திருப்பியனுப்பப்பட்டனர். முஸ்லீங்கள் பொறுமையுடையவர்கள் என்று சொல்லப்படுவது வீண் பொய்யுரை என்பதற்குச் சான்றாகச்சாட்சியங்கள் அனேகம் விடலாம். உண்மையைக்

---

*இவ்வுபன்யாசம் செய்தகாலத்தில் பிலிப்பைன் தீவுகள் ஸ்பெயினுக்குச் சொந்தமாக விருந்தன; பின்னர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமாகிவிட்டன.

கூறுங்கால் பொறுமையென்பது இஸ்லாமிய கொள்கைகளுக்குமுற்றிலும் புறம்பானது; புத்திக்கூர்மையுள்ள முஸ்லீம் ஒருவனேனும் அதற்குச் சம்மதிக்கமாட்டான். அதன்கீழ்க் குற்றவாளியாகவுமாட்டான்.

இஸ்லாமான உண்மை மார்க்கத்தின்ஸாரம் என்னவெனில், கடவுளுடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து விடுதலாம்; அதனுடைய பிரதானக்கல் தொழுகையாம். ஸர்வவியாபகமான சகோதரத்துவம் தானதர்மம், அன்பு அருள் இவைகளை அது கற்பிக்கின்றது; மனம் செய்கை வாக்கு இவைகளில் தூய்மையையும் பரிபூர்ண தேகச் சுத்தத்தையும் அது விரும்புகின்றது. மனிதனுக்குத் தெரிந்துள்ள மதக்கொள்கைகளில் இதுதான் வெகு சுலபமானதும் மகோன்னத பதவியிலுயர்த்தக் கூடியதுமாம். சம்பளம்பெற்றுழைக்கும் குருக்கள் மாரும் வெகு விஸ்தாரமான சடங்குகளும் அதில் இல்லை; பிரதிநிதிக்குருக்களால் செய்யப்படும் பிராயச்சித்தம் என்னும் பாபநிவிர்த்தியை அது அங்கீகரிப்பதில்லை; அதைப் பின்பற்றுவோர்களின் பாபங்களுக்கு அவர்களுடைய ஜவாப்தாரித்தனத்தை அது நிவிர்த்தித்து விடுவதில்லை. எல்லாப்பொருள்களுக்கும் பிதாவாகவும் இயற்கைத் தோற்றங்கள் எல்லாவற்றிலும் குடிகொண்டிருக்கும் தெய்வீக ஆவியாகவும் சர்வக்ஞனும் சர்வ வல்லமையுள்ளவனும்சர்வவியாபியுமான பிரபஞ்ச அதிகாரியாகவும் உள்ள ஒரே ஒரு கடவுளைத்தான் அது அங்கீகரிக்கின்றது. அவனைத்தான் அம்மதத்தைப் பின்பற்றுவோர்கள் பக்தி சிரத்தையுடன் வணங்குகின்றனர். அவன் முன்னர் அனைவரும் பூர்ணமான சமானத்துவமும் சகோதரத்துவமுமுள்ளவோர்மேடையின்மீது நிற்கின்றனர். நமது பரிசுத்தரான நபி நாயகத்தின் உண்மைக்கட்டளைகளை உள்ளபடி தெரிந்துகொண்ட பக்திமானான முஸல்மான் தனது மதக்கொள்கையிலேயே வாழ்ந்து அதையே தனது வாணாளின் முக்கிய சித்தாந்தமாகச் செய்துகொள்கிறான். தினசரி அவனுடைய வரவு செலவுகள் எல்லாவற்றிலும் அதுஉடனிருக்கின்றது; தொழுகைக்குக்குறிக்கப்பட்டகாலம்வந்தவுடன் தனது காரியத்தையும், உலகவிஷயங்களையும் புறக்கணித்துவிட்டுக் கடவுளுக்குத் தனது ஆத்மாவைக் காட்டிக்கொடுக்கப்பா

தபடி அவன் ஒருபோதும் அவைகளில் அமர்ந்திருப்பதில்லை. அவனது ஆசைகள், துக்கங்கள், நம்பிக்கைகள் பயங்கள் எல்லாம் அதிலேயே ஆழ்ந்துகிடக்கின்றன; இரவில் படுக்கைக்குப்போகும்போது அவன் கடைசியாக நினைப்பது அதுவே; "தொழுகைக்குவாருங்கள்! தொழுகைக்குவாருங்கள்!! தூக்கத்தைக்காட்டிலும் தொழுகை சிறந்தது!!! தூக்கத்தைக்காட்டிலும் தொழுகைசிறந்தது!!!! என்ற காம்பீர்யமான நாதமுள்ள சுரத்துடன் காலைவேளையின் எதிரொலியை எழுப்பிக்கொண்டு மசூதியின் மண்டபத்திலிருந்து தெளிவாகவும் கெட்டியாகவும் மோதீனின் குரல் கணீரென்றுவரும். விடியற்காலத்தில் முதன்முதலில் அவன் மனத்துட் புகுவதும் அதுவேயாம்.

ஆமீன்.

ஒரு பெருந்துக்கம்

மாட்சிமைதங்கிய இந்தியா சக்கரவர்த்தி எட்வர்ட் அவர்களின் நிரியாணம்.

மாட்சிமை தங்கிய எட்வர்ட் மன்னரவர்கள் தேகசௌக்கியத்தின்பொருட்டுக்குளிர்ச்சி மிகப்பொருந்திய பயிரட்ஸ் என்னும் நகரத்திற்குச் சென்றிருந்தார்கள். அங்கு குளிரின் கொடுமையால் அம்மன்னருக்கு மூச்சிழுப்பு உண்டாகிப் பலப்பட்டமையால் லண்டன் நகரத்திற்கு வந்துசேர்ந்தார்கள். அங்கும் வியாதி மிகவும் பலத்தேயிருந்தாலும் 5-ம் தேதி வியாழக்கிழமை அவ்வளவு மோசமான நிலைமையிலில்லை. 6-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று சுவாசக்குழல் அபாய ஸ்திதியிலிருந்தமையால் அதிகக் கவலைக்குமிடமாய் நம்பிக்கைக்கு அநேகமாய் எதுவில்லாமற் போயிற்று. போகவே, மறுநாட் சாயந்திரம் சனிக்கிழமை இரவு 8—மணிக்கு அவருடைய நேசகுடும்பத்தைப் பார்வையிட்டார். அன்றிரவு 9—மணி முதல் 10 மணி வரை அவருக்குப் புத்திசுவாதீனமில்லாதிருந்தது. 10-மணிக்கு மேல் இவ்வுலகத்தை விட்டுவிடும்படியான சிலேற்பனமூச்சு வந்துவிட்டது. அன்றிரவே 11-மணி 45—நிமிஷத்திற்கு நிரியாணமாயினர்கள்.

இந்த மஹான் நம்மவர்களுக்குச்செய்த நன்மைக்களவன்று! இஸ்லாத்தின் மஹோன்னதரான ரிட்டயர் பெங்கால் ஹைகோர்ட் ஜட்ஜ் மௌல்வி மிஸ்டர் அமீர் அலி அவர்கள் மிகவும் உன்னதமாகிய பிரிவிகௌன்சலில் உத்தியோகம் பெற்றதும், இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் தங்களுக்கிருக்கும் குறைகளைத் தாராளமாய் வெளிப்படுத்தி நிவிர்த்திபெற வேண்டி அவர்களுக்கு மாட்சிமை தங்கிய கௌனர் அவர்கள் சபையிலும் மெம்பராகத் தனிச்சுதந்திரம் கொடுத்ததுவும், மதராஸ் ஹைகோர்ட் தோன்றிய நாள்முதல் முஸ்லீம் ஜட்ஜ் ஒருவரைப்பெறாத குறைவை நிவிர்த்திக்க, கனம் அபீத்றற்றகுமான்சாகிபு அவர்களை ஏற்படுத்தி தென்னிந்தியா முஸ்லீங்களைக் களிப்பிக்கச்செய்ததும் இம்மன்னர் வாழ்நாளிலேயாம்.

இந்த மகத்தான நன்மையை நம்மவர்க்குச் செய்த சக்கரவர்த்தியவர்களை நாம் இழந்துவிட்டோமே! இச்சக்கரவர்த்தியவர்கள் காலத்திலேயே இன்னும் நாம்பெறவேண்டிய நன்மையையடைய அதிர்ஷ்டம் பெற்றோமில்லையே!

ஐயோ! மாட்சிமைதங்கிய விக்டோரியா சக்கரவர்த்தினி காலத்திற்கூடக்கொடுக்கப்படாத சுதந்திரங்களை நம்மவர்க்குக்கொடுத்த இந்த அன்பான சக்கரவர்த்தியை இழந்துவிட்டது மிகவும் விசனகரமானது! பரிதாபகரமானது!! துக்ககரமானது !!!

THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
14 SEP 1910
MADRAS.

பிஸ்மில்லாஹி.

இஸ்லாம் நேசன்.

புஸ்தகம்2.] 1910-ம்௵ ஆகஸ்டு௴ [ஸஞ்சிகை 1.

தென்னிந்தியா அரபிப்பாடசாலைகள்.

தென்னிந்தியாவிலுள்ள பிரதானநகரங்களிலும், கிராமாந்தரங்களிலும் தக்க மூலதனத்தோடு அரபிப்பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதிற்கற்கும்மாணவர்பலர் மிகுந்தஏழைகளே. ஏழைகளல்லாதவர் ஒருவர் அல்லது, இருவர்கள்தான் ஆங்கு அபூர்வமாகப் படிப்பார்கள். ஆங்குக்கற்கும் மாணவர்களுக்கு, அப்பாடசாலையிலிருந்து போஷிக்கப்பெற்றுச் சம்பளமின்றியுங் கற்பிக்கப்படுகின்றன. இதுபற்றியே பலர் அங்குப் படிக்கின்றார்கள். மாணவர்களிடத்துச் சம்பளம்வாங்காமலும், அவர்களுக்கு ஆகாராதிகள் கொடுக்கப்பெறாமலுமிருந்தால், அங்குப் படிப்பவர்கள் மிகவுங் குறைந்துவிடுவார்களென்றே யெண்ணவேண்டியிருக்கிறது. தமிழ் முதலிய பாஷைகளைப்படிக்கச் சம்பளமுதலியவற்றைக் கொடுத்து மிகவுஞ் சிரத்தையோடு நம்மவர் படிக்கின்றனர். இந்த மேலான அரபிபாஷையையும், எனவ்விதம் படிக்கக்கூடாது. அரபிபாஷையைமட்டும் ஆகாரம்கொடுத்தும் சம்பளமின்றியும் பயிற்றுவிப்பது ஏன்? ஒருபாஷையைப் படிக்க விரும்புவோர் சம்பளம் முதலியவற்றைக் கொடுத்துப் படித்தாற்றான், அதில் அவர்களுக்கு ஆவலும் பூரணதேர்ச்சியடையவேண்டுமென்ற விருப்பமும் உண்டாகும். சம்பளங் கொடுக்கக்கூடிய ஸ்திதியுள்ளவர்கள் பலர், தங்கள் பிள்ளைகளை யரபிபாஷை பயிலும்படி செய்வதில், ஜீவனோபாயம் கௌரவமாய் நடந்தேறாதென்பதுபற்றியே யக்கல்வியில் பிரியமற்றுவிடுகிறார்கள். அரபிப்பாடசாலைகளில் கற்கும்மாணாக்கர்கள் அக்கல்வியில்

தேர்ச்சியடைந்து ஜீவனோபாயஞ் செய்யும்படியானவிதமாகப் போதனாமுறை யவ்வளவு சரியாயநுஷ்டிக்கப்படவில்லை. இதுபற்றியே ஆங்குப் பயிலும்மாணவர்கள் பூரணதேர்ச்சி யடையாதவர்களாய்க் கஷ்டஜீவியத்துக் காளாகிவிடுகின்றனர்.

இக்காரணம்பற்றியே சம்பளங்கொடுத்துப் பயிலத்தக்க தகுதியுள்ள பலர் அதைப்படிக்க விரும்புகிறார்களில்லை. முஸ்லீங்களாகிய நாம் மேலுலகத்தில் ஜெயகெம்பீரர்களாயிருக்க ஒவ்வொரு நற்கருமத்தையுஞ் செய்வதுபோல், இவ்வுலகத்திலுங் கௌரவஜீவனோபாயஞ்செய்து வாழ்ந்திருக்கவேண்டும். மேலுலகத்தில் நாம், ஜெயகெம்பீரர்களாயிருத்தல் போதுமானதென்று இவ்வுலகசம்பத்தில் கவலையீனர்களாயிருந்துவிடக் கூடாது. பரிசுத்தகுரானில், உலகசம்பத்தைப்பற்றியும், பரலோக சம்பத்தைப்பற்றியும் ஒரேவாக்கியத்தில் வந்திருப்பதை நாம் கவனிக்கவேண்டும். ஆண்டவனே, இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் எங்களுக்கு அருள்செய்என்று பரிசுத்தகுரானி லருளியிருப்பதை நோக்கின், நாம் இவ்வுலகத்தில் பொருட்செல்வமுடையவர்களாகவும், அவ்வுலகத்தி லருட்செல்வமுடையவர்களாகவு மிருக்கத்தக்க விஷயங்களைக் கடைபிடிக்கவேணுமென்று தெரிகிறது. ஆகவே, அரபிபாஷையிற்பயிலும் மாணவர்களுக்கு அவ்வுலகத்திலும் பயன்கொடுக்கும்படி பயிற்றுவிப்பதோடுகூட இவ்வுலகத்திலும் பயன்கொடுக்கும்படி செய்வது உத்தமமாம். தென்னிந்தியாவில், அரபிபாஷையைத் தக்கபடி படித்துச் சரியானவழியில் பலர்க்கும் பயன்படும்படி உபயோகித்தவர்கள் மிகச் சிலரே. அப்படித்தானும் இக்காலத்திற்பார்ப்பது மிகவும் அரிதாய்விட்டது. மேலும், அரபிபாடசாலைகளிற் கற்பிக்கு முபாத்தியாயர்களிற் பலர் சரியான திறமையில்லாதநிமித்தம் பாடசாலைகளின் பலங் குறைந்துபோகிறது.

ஆகவே, இனி அரபிபாடசாலைகளில் வகுப்புகள் ஏற்படுத்தியவைகளுக்குத் தக்கவாறு திறமைவாய்ந்த உபாத்தியாயர்களையு மேற்படுத்தி நகுவு, சருபுமுதலிய இலக்கணங்களை முதன்முதலிலேயே கற்றுக்கொடுத்து மாணவர்களின் ஆவிகளைக் குறைப்பதை நிறுத்தி வகுப்புகளுக்கு ஏற்படுத்தியிருக்கும் வாசகபுஸ்தகங்களுக்கேற்ப

அவைகளைப் பயிற்றுவித்தும், இப்பொழுதுபயிற்றுவிக்கும் பிக்ஹூ விஷயங்களுடன், கணிதம் பூலோகசாஸ்திரம் ராஜீயசரித்திரம் முதலியவைகளைப் படிப்படியாய்ப் பயிற்றுவிப்பதோடுகூட தேசபாஷையாகிய தமிழையும் அவைகளுக்குத் தக்கவாறு படிப்பித்துக் கொடுத்தல் வேண்டும். ஆனால், தேசபாஷையாகிய தமிழையங்கு பயிற்றுவிக்கக்கூடாதென்று சிலர்சொல்லுவர்; இதுநன்றன்று. ஏனெனில், அரபிபயிலும் மாணவர்களுக்கு அரபிபாஷையிலுள்ள விஷயங்களைத் தமிழிலேயே கற்றுக் கொடுக்கின்றனரேயன்றி, யரபிபாஷையில் கற்றுக் கொடுக்கிறதில்லை. அவ்விதங்கற்றுக்கொடுக்கு முபாத்தியாயர்தானும், தமிழ்ப்பாஷைமூலமாகவே யரபிபாஷை கற்றிருக்கலாமேயன்றி மற்றப்படியன்று. பின்னைத், தமிழையாங்குக் கற்றுக்கொடுக்கக்கூடாதென்று கூறுவது பிழையாகுமல்லவா? ஆகவே மேற்கண்டவிதமாகப் படிக்கும் மாணவர்களின் கல்வித்தேர்ச்சியை வருஷத்துக்கொருமுறை, சரியான கல்வித்தேர்ச்சியுடையவர்களைக் கொண்டு பரீக்ஷிக்கும்படி செய்து அதில் தேர்ச்சியடைந்தவர்களைத்தான் மேல்வகுப்புக்கு அனுப்பவேண்டுமென்ற முறையை யேற்படுத்தவேண்டும். அன்றியும், அம்மாணவர்களின் தேர்ச்சிக்குத் தக்கவாறு யோக்கியதாபத்திரங்களை யளித்தல்வேண்டும். இவ்விதஞ் செய்வோமாகில், சம்பளங்கொடுத்து வாசிக்கத்தக்கவர்கள்விரும்புகிற தேசபாஷையும், அரபிப்பாடசாலையிற்கற்பிக்கப்படுவதினால், அவர்களும் அதிற்சேர்ந்து கற்க முற்படுவார்கள். அன்றியும், இவ்விரண்டுகல்வியு மாங்குக் கற்பிக்கப்படுவதால் அங்குத் தேர்ச்சியுறும்மாணவர்கள் அரபிபாஷையிலுள்ள பலகணக்கற்ற ஞானகிரந்தங்களைச் சனங்களுக்குபகாரமாய்த் தேசபாஷையில் வெளிப்படுத்தி அவர்களின் மதிப்பைப் பெறுவதுமன்றிப் பலவழியில் அக்கல்வியையுபயோகப்படுத்திக் கௌரவமாச் சம்பாதித்துவாழவும் அரபிப் பாடசாலைகள் நாளுக்குநாள் விருத்தியடைந்து விளக்கமும் பெறும்.

ப-ா.

THE BETTER WAY.

மேலான மார்க்கம்.

[அஞ்சுமான் ஹிமாயத்தி இஸ்லாம் சங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க, 1892-ம௵ டிசம்பர்-௴ 11௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு அஜீஸ் பாக் மாளிகையில் சென்னைமாநகரிலுள்ள பிரபல முஸ்லீம்கள் கூடிய ஸபையில், நவாப் முகம்மதுகான் பகதூரின் அக்கிராசனத்தின்கீழ், முகம்மது அலெக்சாந்தர் ரஸ்ஸெல் வெப் என்னும் கனவான் அரியதோர் நீண்ட பிரசங்கம் ஆங்கிலேய பாஷையில் செய்தார்; அதை ஈங்குத் தமிழில் மொழிபெயர்க்கின்றோம்.]

சிலமாதங்களுக்கு முன்னால், நான் ஒரு ஆங்கிலேயனோடு, மோக்ஷத்தை யடைவதற்குச் சிறந்த சாதனம் கிறிஸ்தவமார்க்கமென்று தப்பாகக் கூறப்படும் முறையா? அல்லது இஸ்லாம் மார்க்கமா என்று அறியவேண்டி அவைகளின் குணாதிசயங்களின் தாரதம்மியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். சரீரம் பிரேதமாகப்போன பின்பும், ஆத்ம ரூபமான ஜீவன் ஒன்றுண்டென்பதில் தனக்குப் பூர்ண நம்பிக்கையுண்டென்றும், மோக்ஷ ராஜ்யமென்று கிறிஸ்தவர்களால் கூறப்படும் இவ்வித மரணாதீத நிலைமையை அடைவதற்குக் கிறிஸ்தவமார்க்கம் ஒன்றுதான் வழியைக் காட்டும் சிறந்த சாதனமென்றும் அவர் வாதித்தார். ஆனால் அவர் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றி வாஸ்தவமாகத் திருப்தியடையவில்லையென்று எனக்குத் தோன்றிற்று. ஆகவே, விவேகம் என்னும் தீபத்தைக்கொண்டு நோக்கும்போது அதில் விசதமாகத் தெரிகிற சில குற்றங்குறைகளை அவருக்கு எடுத்துக்காட்ட முயன்றேன். நான் சொல்லி முடிந்ததும் அவர், "நீர் கிறிஸ்தவ மதத்தைப்பற்றிச் சொல்லியதில் நிரம்ப உண்மை யிருக்கின்றது; ஆயினும் அதைக்காட்டிலும் மேலான மார்க்கமொன்றைக் காட்டுவீரா?" என்றார்.

REGISTERED
14 SEP 1910
MADRAS.

கிறிஸ்தவமார்க்கத்தைத் தவிர வேறொரு மார்க்கம் இருக்கிறதோ என்று கூடத்தெரியாததினாலோ, அல்லது ஒரே யுண்மை மார்க்கமான இஸ்லாத்தினது தகுதியையும் அருமை பெருமைகளையும் நன்றாகப் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்வதினின்றும், அவர்கள் முன்னமேயே கொண்ட தப்பெண்ணங்களும் யோஜனை மாதிரியும் தடைசெய்வதினாலோ, அக்கிறிஸ்தவ மார்க்கத்தையே அரை மனதுடனும் சந்தேகாஸ்பதத்துடனும் அவலம்பித்துவரும் சர்க்கை செய்யுங் குணமும், யோக்கியமும் விசாலமனமும் உடைய ஆயிரக்கணக்கான பேர்களால் இக்கேள்வி கேட்கப்பட்டிருக்கின்றது. பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களால் தப்பாகவே கிரகிக்கப்பட்டு வருகிற நமது நபிநாயகத்திற்கு ஆண்டவன் அருளிய மார்க்கத்தைச் சேர்ந்த மதக்கொள்கை மனித கோடிகளுக்குத் தெரிந்திருப்பதில்லை. அது உண்மையானதாகவேனும், அதமபக்ஷம் எச்சரிக்கையுடனும் துரபிமான மில்லாமலும் ஆராய்ச்சி செய்து பார்க்கக்கூடியதாகவேனும் இருக்கலாம் என்று சுட்டிச் சொன்னாற்கூட, அவ்விஷயம் கவனத்தைச் செலுத்திப்பார்க்கக் கூடியதற்கும் தகுந்ததல்லாத பிரத்தியக்ஷ மதியீனமென்று கருதி, அதை ஒரு வெறுப்புப் புன்சிரிப்போடு ஏற்றுக்கொள்ளும் அளவு, அம்மார்க்கத்துக்கு விரோதமான தப்பெண்ணம், உலகத்தில் ஆங்கில பாஷையைத் தாய்ப்பாஷையாகப் பேசும் ஜனங்களிடத்திற் குடிகொண்டிருக்கின்றது. இஸ்லாம் மார்க்கமானது ஒரு பொய் மார்க்கமென்றும், இரத்தப்பிரியமுள்ள வைராக்கியர்களால் பின்பற்றப்படுவதென்றும், அதனுடைய குணங்களெல்லாம் லோகாயதமாகவும் தாழ்மையாகவும் இருக்கின்றனவென்றும், தெளிவாயும் திருப்திகரமாயும் காட்டப்பட்டுள்ளதென்று ஐரோப்பிய அமெரிக்க கிறிஸ்தவர்கள் வெகு உறுதியாகவும் சர்வ சாதாரணமாகவும் நம்புகிறார்களென்பதைக் கேட்க, உங்களுக்கு ஆச்சரியமுண்டாகும். இஸ்லாம் மார்க்கத்தையும் அதை அவலம்பிப்பவரையும் பற்றி, ஆங்கிலோ ஸாக்ஸன் ஜாதியார் கொண்டுள்ள அசங்கிய எண்ணங்களிற் சிலவற்றை நீங்கள் தெரிந்துகொண்டால், உங்களுக்கு அ[illegible]சரியமும் வேடிக்கையுமுண்டாகும். ஆயினும், இவ்வித எண்ணங்களைக் கொண்டிருப்பதற்காக அமெரிக்கர்களாகிய உங்களையும், எங்களது ஐரோப்பியசகோதரர்களையும் [illegible] குற்றங்கூறலாகாது. ஏனெனில், [illegible]

அசூயை மிகுந்த அஞ்ஞானம், கெட்ட வைராக்கியம் இவைகளால் உண்டான துவேஷப்பொய் விருத்தாந்தத்தின் பயன்களாம். கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றிய ஆதிப்பாதிரிமார்கள், நமது நபிநாயகத்தையும் அவர்களது உபதேசமொழிகளையும், உலகத்துக்கெல்லாம் சிரோ பூஷணம்போல் விளங்கிய காலத்திய இஸ்லாமிய ஸஹோதர ஸங்கத்தையும் பற்றி ஓய்வு ஒழிச்சலில்லாமல் பலமாகப் புளுகி வந்தார்கள். இப்பாதிரிமார்களே உலகத்திலுள்ள பெரும் பொய்யர்களென்று பெட்ரார்க்கு கூறியிருக்கிறார். ஆனால் இவ்விதமாக, பெட்ரார்க்கு துரபிப்பிராயங் கொண்டிருக்கலாமென்பதற்குக் காரணமுண்டு; அவருடைய ஸகோதரியைச் சுத்தாத்மா இருபத்திரண்டாம் ஜான்போப் கற்பழித்துவிட்டானென்று எழுதிவைக்கப் பட்டிருக்கிறது; மேலும், அவர் அவின்யானில் இருந்த போப்பின் மாளிகையில் நடந்த அட்டூழியங்களை நேரே கண்டுமிருக்கிறார். ஆனால், புரபஸர் ட்ரேபர் எழுதிய "ஐரோப்பிய விவேக அபிவிருத்தி" என்னும் புஸ்தகத்தைப்படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஆதிப்பாதிரிமார்களின் வார்த்தைகளை எவ்வளவுதூரம் நம்பலாம் என்பது தெரியவரும்.

முஸ்லீம் ஸ்பெயின் தேசமானது மிகச்சிறந்த நாகரீகத்தின் மத்தியாகவும், செல்வம், கல்வி, ஒழுக்கம் இவைகளுக்கு உறைவிடமாகவும், பிரகிருதிசாஸ்திரங்களுக்கும் கலாஞானங்களுக்கும் ஊற்றுக்கண்ணாகவும் இருந்தகாலத்தில், ஐரோப்பிய கிறிஸ்தவர்கள், அசுத்தத்திலும், தாழ்விலும், அநாகரீகத்திலும் கிடந்து உழன்றுகொண்டும், தங்களைக்காட்டிலும் ஒவ்வொரு விதத்திலும் அளவிடப்படாதவாறு மேலோங்கி நின்ற ஜாதியாரிடத்திலுள்ள அசூயையினாலும் வெறுப்பினாலும் இஸ்லாத்தைப்பற்றி எல்லாவிதமான பொய்யுரைகளையுண்டுபண்ணிக்கொண்டிருந்தனர். இவ்வித துவேஷசிந்தை தலைமுறை தலைமுறையாக வந்துள்ளது. அவ்வாறுவந்துள்ளதின் பயனை முகம்மது நபியவர்களைப்பற்றியும் அவர்களது மார்க்கத்தைப் பற்றியும் கிறிஸ்தவகிரந்த கர்த்தாக்களால் எழுதிவைக்கப்பட்ட இப்போதுள்ள நூல்கள் பலவற்றிலும் வெகு தெளிவாகக் காணலாம். நமது நபி நாயகத்தையும் அவர்களதுஉபதேச மொழிகளையும் தாழ்வாகக்கூறி நூலெழுதி வெளியிட்டிருக்கும்ஒவ்வொரு கிறிஸ்தவகிரந்தகர்த்தாவும் ஆதியிலிருந்த கிறிஸ்தவர்களின் பக்ஷபாதமுள்ள ஆதாரங்களைவைத்துக்கொண்டே தான் எழுதி, பலநூற்றாண்டுகளுக்குமுன்னால் உண்டான பொய்யுரைகளும் பொய் அபிப்பிராயங்களும் இன்னும் நிலைநிற்குமாறு உதவிபுரிகிறான். ஜான்டெவன்போர்ட்டு, காட்பிரி ஹிகின்ஸ் முதலியவர்களைப் போன்றவர்கள், பொய்க்கதைகளாகிய குப்பைகூளங்களின் அடியில் தோண்டி, உண்மையின்பாகங்களில் சிலவற்றை வெளிக்குக்கொண்டுவரும்போது மட்டுந்தான், மனிதகோடிகளில் லக்ஷக்கணக்கான ஜனங்களுடைய வாழ்நாள்களை ஆண்டுவரும் சாசுவத உண்மைப்பொருளின் அடையாளங்களிற் சிலவற்றையாங்கில பாஷையைப்பேசும் உலகம் பெறுகின்றது.

ஆசியா கண்டத்து ஜனங்களைத் தம்முடைய மதத்தினராக மாற்றுவதற்குப் பிரயத்தனம் செய்யும்பொருட்டு, கீழ்த்திசைக்கு வரும் கிறிஸ்தவ மதபோதகர்கள், வர்த்தமானப்பத்திரிகைகளுக்கும் சமாசாரப்பத்திரங்களுக்கும் எழுதிவிடுக்கும் நிரூபங்களாலும் மேற்றிசை ஜனங்களுக்கு முஸ்லீங்களிடத்தும், அவர்களுடைய மார்க்கத்தினிடத்தும் துரபிமானமுண்டாகின்றது. இம்மதபோதகர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்குத்தகுந்த பயன் கிடைப்பதில்லை என்பது உண்மையே. அதாவது பயன் கிடையாமற்போவது அவர்களுடைய ஊக்கக்குறைவினாலன்று. ஆயினும் உங்களையும் உங்கள் மதக்கொள்கையையும், தப்பாகப் பிறர்க்கு எடுத்துக்காட்டுவதற்காக இம்மதபோதகர்களை நீங்கள் நியாயமாகக் குறைகூறக்கூடாது. ஏனெனில், முக்கால்வாசி விஷயங்களில் அவர்கள் உண்மையைக் கூறுவதாகவே வாஸ்தவத்தில் நம்புகின்றனர். அவர்களுக்கு இதைத்தவிர வேறு நல்ல விஷயம் ஒன்றுந் தெரியாது; ஆதலால் அவர்கள் செய்யும் பிழைகளின் அதிக்கிரமத்தை அவர்களுடைய அஞ்ஞானம் வெளியாக்குகின்றது. பொதுவாக, அவர்கள் கல்வியிலும் அநுபவத்திலும் குறைந்தவராகவும் துரபிமானத்தில் மட்டும் நிறைந்தவராகவும் இருக்கின்றனர். தங்களுடைய மதக் கொள்கையை நம்புவதுதான் சரியென்றும், மற்றையோரெல்லாம் தப்பான வழியிற் செல்கின்றனரென்றும், உறுதியான நிச்சய புத்தியுடன் அவர்கள் வேலைக்குத் தொடங்குகின்றனர். ஆதலால், மற்றைய மார்க்கத்தைப் பின்பற்றுவோர்கள் எவ்வளவு தூரம் தப்பான வழி

யில் செல்கின்றனர் என்பதைத் தெரிவிக்க ஆசைகொள்கின்றனர். இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி யவர்களுக்குத் தெரிந்தவையெல்லாம் பூர்ண ஞானமில்லாத கிறிஸ்தவர்கள் எழுதிவைத்த நூல்களிலிருந்தே கிரகிக்கப்பட்டவையாம். ஆகவே, அவர்களுடைய அஞ்ஞானத்தினால், இஸ்லா மார்க்கத்தினுடைய காரியங்களையும் தோற்றங்களையும் பெரிதாக்கியும் விகாரப்படுத்தியும், அதிசயோக்தியாக வர்ணித்தும் காட்டவேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றுகின்றது. அவர்கள் அப்படிச்செய்கிறார்கள் என்பதனால் நீங்கள் அவர்களைத் தாழ்வாக மதித்துத் துவேஷிக்கக்கூடாது. துவேஷிப்பீரானால், அது நபிநாயகத்தின் கட்டளைகளுக்கு முற்றிலும் மாறான செய்கையாகும். உங்களுடைய கடமை யென்னவென்றால், அவர்களோடு பொறுமையாகவிருந்து, நல்வழியை அவர்களுக்குக் காட்டி, அவர்களை அஞ்ஞானமாகிய அந்தகாரத்தினின்றும் உண்மையாகிய வெளிச்சத்துக்குக் கொண்டுவரவேண்டியதுதான். நாம் இதைச் செய்தால், நமக்கு ஒரு பெரிய வெகுமதி கிடைக்குமென்று திருக்குரான் கூறுகின்றது. பொறுமையுடனும் ஊக்கத்தோடுமிருந்து, அவர்களுக்கு உண்மை மார்க்கத்தைக் காட்டுங்கள்; அவ்வழியே போகமாட்டோமென்று அவர்கள் பிடிவாதமாக மறுத்தளித்தால், அதனால் அவர்களுக்குக் கஷ்டம்நேருவது திண்ணம்; உங்களுக்குமட்டும், கடவுளுக்கும் ஸகஜனங்களுக்குஞ்செய்யவேண்டியகடமையைச்செய்துதீர்த்துவிட்டோம் என்ற ஆத்ம திருப்தியுண்டாகும்.

மோக்ஷத்தை யடைவதற்கு உண்மையான ஒரேமார்க்கம், மேலானதான இஸ்லாம் மார்க்கம்தான் என்பது எதனால்? மோஸஸ் முதற்கொண்டு ஹஜரத் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் வரையிலுள்ள ஆண்டவனின்சிறந்த தீர்க்கதரிசிகள்மூலமாய், காலங்கள்தோறும், மனிதகோடிகளுக்குத் தெரிவிக்கப்படுகிற நித்தியமான உண்மைப்பொருளை அது அஸ்திவாரமாகக் கொண்டிருப்பதனால்தான்; அந்த நித்தியமான உண்மைப்பொருள் அதுவாகவே இருப்பதினால்தான்; மேலானதோர் வாழ்க்கையைநாடும் ஆத்மாவினுடைய ஆவலைத் திருப்தி செய்யக்கூடிய ஒரே மார்க்கம் அதுவாகவிருப்பதினால்தான்; சாஸ்திரத்துக்கும் யுக்தி வாதத்துக்கும் முற்றிலும் ஒத்திருக்கக்கூடிய மனிதனுக்குத் தெரிந்துள்ள ஒரே மார்க்கம் அதுவாகவிருப்பதினால்தான். தாழ்மைப்படுத்தும் மூடபக்தி அதில் இல்லாமலிருப்பதினாலும், மானிட விவேகத்தையும் பகுத்தறிவையும் நேராகவே அதுநோக்கி முறையீடு செய்வதினாலுந்தான். ஒருமனிதன் செய்கின்ற ஒவ்வொரு காரியத்துக்கும், எண்ணுகின்ற ஒவ்வொரு நினைவுக்கும் அவனையே அது ஜவாப்தாரியாக்குவதினாலும், பிரதியான பிராயச்சித்தமொன்று உண்டெனக் கூறி அவனை, பாவத்தைச் செய்யும்படி தூண்டாமலிருப்பதினாலுந்தான். குணத்தில், அது மேன்மையைத் தருவதாகவும், நாகரீகத்தைக் கொடுப்பதாகவும், உண்மையாயும், நியாயமாயும், புத்தி பூர்வகமாயும் அதைப்பின்பற்றினால், மானிடசக்தியின் மேலான அம்சத்தை விருத்தியாக்குவதாகவும் இருப்பதினால்தான்.

இப்படி நான் சொல்லுவதைக் கேட்கும் கிறிஸ்தவர்கள், இதைச் சிறிது புன்சிரிப்புடன் ஏற்று, இஸ்லாத்தில் உள்ளதாகச் சொல்லப்படும் மேலுயர்த்தக்கூடிய குணத்தின் காரியங்கள் ஏதேனும் தென்படுகின்றனவாவென்று இஸ்லாமியரில் தாழ்ந்த வகுப்பார் இருக்குமிடத்துக்குச்சென்று பார்க்கலாமாவெனக் கேட்பார்கள். இக்கேள்வி நான் இந்தியாவுக்கு வந்தபின் என்னைக்கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு இங்கு மறுமொழிகூற விரும்புகிறேன்.

(இன்னும் வரும்.)

திருக்குரான்.

"ஓ ஜனங்களே! உங்களுடைய ஆண்டவனிடமிருந்து உங்களுக்கு இப்போது ஓர் எச்சரிக்கையும், உங்கள் மனத்திலுள்ளதற்கு ஓர் நன்மருந்தும், நம்பிக்கையுள்ளோர்க்கு ஓர் வழிகாட்டியும் கிருபையும் வந்திருக்கின்றன." குரான் என்பது 'படித்தல்' என்னும் பொருள் தரும் "குரா" என்னும் வினைப்படியாகப்பிறந்து "படிக்கப் படவேண்டிய விஷயத்தைக் குறித்து நிற்கின்றது. அதற்கு கிதாபுல்லா, (அல்லாஹுத்தஆலாவின்கிரந்தம்,) [illegible]மஜீத் (சிறந்தநூல்), அல்புர்கான் (பகுத்தறிவு) என்றும் மறுபெயர்களுண்டு. அதில் 114

சூறுக்கள் அல்லது அத்தியாயங்கள் உள்ளன. அவைகள் ஒரே அளவுள்ளவையல்ல; ஒவ்வொன்றின் தலைப்பெயரும் அதிலுள்ள சிறந்த வார்த்தை காரணமாக இடப்பட்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயமும் பற்பல வாக்கியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாக்கியமும் ஆச்சரியம் என்ற பொருள்படும் ஆயத் எனப்படும். திருக்குரானை முஸ்லீங்கள் அத்தியந்த பயபக்தியுடன் கொண்டாடுவார்கள்; தேகசுத்தம் செய்துகொள்ளாமல் அவர்கள் அதைக்கையால் தொடவுமாட்டார்கள். யுக்திக்கு ஒத்த கொள்கையை அது உபதேசிப்பதாலும், சிறந்த நன்னெறியைப் போதிப்பதாலும், மனிதர்களுடைய மனத்தூய்மைக்குச் சிறந்த காரணப்பொருளாக விருப்பதாலும், விஷயங்களை அழகாகவும் காம்பீர்யமாகவும் சொல்லிக்கொண்டு போகும்முறையினாலும், திருக்குரான் அத்தியாச்சரிய கிரந்தமென்று கருதப்படுகின்றது. நடையோ வெகு சிலாக்கியமானது. அதற்குச் சமமான நடையுள்ள கிரந்தத்தையேனும் ஒரு அத்தியாயத்தையேனும் எழுதி வெளியிட்டவர் அரபிய கல்விமான்களுள் ஒருவருமேயில்லை.

எமென் நகரத்துச் சிரேஷ்டகவியாகிய தாபீது என்பவர் எழுதிய காவியமொன்றை அதன் அழகுக்காகவும் சிறப்புக்காகவும் மரியாதை செய்யவேண்டி, மெக்கா நகரத்துள்ள கோவிலில் கட்டித்தொங்கவிட்டிருந்தனர். அவ்வளவு சிறந்த கவிகூட, திருக்குரானின் இரண்டாவது அத்தியாயத்தின் ஆரம்ப வாக்கியங்களைப் படித்தவுடன் பரவசராகி அவைகள் ஆண்டவனின் ஆவேசத்தால்ஆவிர்ப்பவிக்கப்பட்டவராலேயே செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றுசொல்லி, உடனே இஸ்லாம் மார்க்கத்தை யனுசரித்தனர். ஜெர்மனிய கவியாகிய கீதியும், “அது நம்முடைய கவனத்தை இழுத்து நமக்கு ஆச்சரியத்தையுண்டாக்கி, கடைசியாய் நம்முடைய பூஜ்யதையையும் கட்டாயமாய்ப் பெறுகின்றது. விஷயத்துக்கு ஏற்ற நடையமைந்துள்ளது. நோக்கமோ வெகு மேலானதாகவும் காம்பீர்யமாகவும் பயங்கரமானதாகவும் உள்ளது. கற்பகாலந்தோறும் மிகுந்த செல்வாக்கை அது உண்டுபண்ணிக்கொண்டு போகும்” என்கிறார். பாஸ்வர்த்ஸ்மித் என்பவர் “சாதாரணமாகச் சம்பவியாத அதிருஷ்டம் ஒன்றினால், முகம்மது நபி ஒரு ஜாதியாரையும், ஒரு ராஜ்யத்தையும், ஒரு மார்க்கத்தையும் ஸ்தாபித்தவராகவிருக்கின்றார். தாம் கல்வி இல்லாதவராயினும், காவியம், தர்மசாஸ்திரம், வேதம் என்று பற்பல விதமாகச்சொல்லக்கூடிய அரியதோர் கிரந்தத்தை யருளியிருக்கிறார்.” என்கிறார். நன்னெறிக்குப் புறம்பானதும், அசங்கியமானதுமான விஷயம் ஒன்றேனும் அதிற் காணப்படாது. ஆதிமுதற்கொண்டு அந்தம்வரை படித்தாலும் சற்றுவெட்கத்தினால் தலைகுனியக்கூடிய விவரம் ஒன்றுகூடத் தென்படாது. மார்க்கவிஷயங்களிலும், ஆசார அனுஷ்டானங்களிலும், ஜன ஸமூக வாழ்க்கையிலும், வியாபாரத்துறையிலும், போர்த்தொழிலிலும், நீதிமுறையிலும், குற்றவிசாரணைத் தண்டனையிலும் அதுவேதான் முஸ்லீங்களுடைய ஆதாரக்கிரந்தமாக விளங்குகின்றது. ஆண்டவன் ஒருவன் உண்டென்பதற்குப் போதுமான சாட்சியங்களைக் குரான் தந்தருள்கின்றது. உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒருகாரணமுண்டு என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே மனிதனும் தானாக உண்டாயிருக்கமாட்டான். மேலும் அவனுக்குப் பகுத்தறிவு என்னும் குணமிருப்பதினால் அவனைப்படைத்த காரணமும் சர்வ சக்தியுள்ளதாகவும், சர்வஞானமுள்ளதாகவும் இருக்கவேண்டும். அக்காரணந்தான் கடவுள். ஆகாயத்திலுள்ள சூரிய சந்திராதிகள் ஒருவிதமான விதிக்குட்பட்டுச் சுழலுகின்றன. விதியொன்று ஏற்பட்டால் அவ்விதியைநிர்மாணம்செய்தவன் ஒருவன் இருக்கவேண்டுமல்லவா? இங்கு அவ்விதமான விதியை நிர்மாணம் செய்தவன் தான் கடவுள். அக்கடவுளுடைய குணாதிசயங்களைப்பற்றியும் திருக்குரான் வெகு அழகாய்க்கூறுகின்றது. உலகத்தைச் சிருஷ்டித்துக் காத்து அடக்கியாள்பவன் அவனேனென அது முறையிடுகின்றது. அவனுடைய ஏகத்துவத்தைப் பற்றியும் வெகு தெளிவாகக் கூறுகின்றது. அவன் ஆதியந்தமில்லாதவனென்றும், சர்வ வல்லமையுள்ளவனென்றும், எல்லாந்தெரிந்தவனென்றும், தன்னந்தனியானவனென்றும், சர்வவியாபகனென்றும், மனோவாக்குக்கு எட்டாதவனென்றும், வெகு தார்மீகனென்றும், பரிசுத்தனென்றும், நீதிமானென்றும் அது கூறுகின்றது. அவன் ஆணை செல்லாத இடமே இல்லை. உலகங்களைக் காக்கவேண்டியது அவனு

க்கு ஒரு பெரும் பாரமுமன்று; சர்வவல்லமைக்கு ஏற்ப அவனிடம் கிருபையும், அன்பும் நிறைந்துள்ளன. ஆதரவற்றவர்களைக் காப்பதும், துன்பப்பட்டவர்களைத்தேற்றுவதும், தீயவழிகளிற் சென்றோரை நன்னெறிக்குக் கொண்டுவருவதும், முறைபாடுகளைக் கேட்பதும், பாவங்களைப் போக்குவதும், கருணைமாரியைச் சொரிந்து ஜனங்களுக்கு அனுக்கிரகம் செய்வதும் அவனுடைய செய்கைகளாகவுள்ளன. அவனுடைய அன்பு தாயினிடத்தன்பைக் காட்டிலும் மிக மேலானது.

அவனுக்குச் சமானமாகச் சிருஷ்டிப் பொருள்களில் ஒன்றையும் சொல்லவொண்ணாது. அவனை ஒரு பொருளெனக் கருதக்கூடாது. எல்லாப் பொருள்களும் அவனைச்சார்ந்துள்ளனவேயன்றி அவன் ஒரு பொருள்மீதும் சார்ந்திருப்பதில்லை. அவனுக்கு உருவமுமில்லை; அருவமுமில்லை; அவன் எல்லைமுதலிய அளவற்றவன்; மாறுபாடற்றவன். நித்திய முதற்காரணன், உயர்வற, உயர்நலமுடையவன்; ஒப்பாரு மிக்காரு மில்லாதவன்.

மனிதனால் கடவுளை நேருக்கு நேராகக் காணமுடியாது; ஆயினும் அவன் பற்பல விதமாய்த் தன்னை வெளியிடுகிறானென்பதில் சந்தேகமில்லை. நம்மைச் சுற்றியுள்ள இயற்கைப்பொருள்களெல்லாம் கடவுளுடைய அபாரசக்தியையே குறிக்கின்றன. ஆயினும் ஆயிரத்தில் ஒருவர்தாம் அவ்வியற்கைப் பொருள்களில் கடவுளைக் காண்கின்றனர். அன்றியும் கடவுள் தீர்க்கதரிசிகளையனுப்பி ஜனங்களுக்கு உய்யும் வழியைக்காட்டியருள்கின்றனர். மோஸஸ், டேவிட், (தாவூது) இயேசுஹலரத் முகம்மது அவர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் அவ்வப்போது கடவுளால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளாவார்கள்.

துரபிமானமற்ற கிறிஸ்தவ நூலாசிரியர்கள் முகம்மதுநபி தெய்வீக சக்திவாய்ந்தவரென்று அங்கீகரித்திருக்கின்றனர். அவர் ஒப்பற்ற உயர்வுற்று தர்ம சிரேஷ்டர் என்று பாஸ்வர்த்ஸ்மித் கூறுகிறார். கடவுளிடத்துப் பூர்ண பக்தியோடு விளங்கி, ஆசார அனுஷ்டானங்களில் நல்ல மாறுபாடுகளைச் செய்தருளிய முகம்மதுநபி உண்மையில் கடவுளால்தான் அனுப்பப்பட்டிருக்கவேண்டுமென்று ஜான்டெவன் போர்ட்டும், அவரை ஒரு உண்மைத் தீர்க்கதரிசியெனக் கருதுகிறேன் என்று கார்லைலும் சான்று கூறியிருக்கிறார்கள். மற்றைத் தீர்க்கதரிசிகள் தாங்கள் எடுத்தகாரியத்தை முடிக்காமற் போய்விட்டனர். நமது நபிநாயகம் மட்டுமே தமது காரியத்தைச் செவ்வனே கடைபோகுமட்டும் செய்து போயினார்கள்.

அவர்களுடைய அறுபத்தொன்றாவது பிராயத்தில் தமதுஒரே மகனை இழக்கவேண்டி நேர்ந்தபோது அந்தத்துக்கத்தை வெகுபொறுமையுடன் சகித்துக்கொண்டு "ஆண்டவன் கொடுக்கிறான், ஆண்டவன் எடுத்துக்கொண்டு போகிறான்; அவன்பேர் போற்றப்படுவதாக" என்று தைரியம்சொல்லித் தேற்றிக்கொண்ட விஷயம் ஒன்றே அவர்களுடைய உண்மையையும் ஊக்கத்தையும் காட்டக்கூடியசான்றாகும். அக்குழந்தை இறந்துபோன அதே நிமிஷத்தில் ஒருசூரியகிரகணம் நிகழ்ந்தது. அதைக்கண்டு, ஜனங்கள் அக்குழந்தை இறந்ததற்கு ஆகாயமும் துக்கிக்கின்றதெனச் சொன்னார்கள். இந்த முகஸ்துதியைப்பொறாத நபிநாயகம், அவர்களுக்கு மூடபக்தி யுண்டாகாதவண்ணம் "சூரியனும் நக்ஷத்திரங்களும் கடவுளின் காரியமாகவுள்ளன; மானிடர்கள் இறப்பதையும் பிறப்பதையும் வெளிப்படுத்த அவைகள் மறைபடுவனவல்ல" என்றுசொல்லி அவர்கள் கொள்கையைக் கண்டித்தனர்கள்.

(இன்னும் வரும்)

ஜூம்ஆ லுஹன்.

முஸ்லீம் ஸ்திரீகளின் நிலைமை.

ராஜீய விஷயமாகவும் ஆசாரச் சீர்திருத்த விஷயமாகவும் பேசவரும் ஒவ்வொருவரும் இக்காலத்தில் "இந்தியாவிலுள்ள ஸ்திரீகளின நிலைமையை அவசியம் உயர்த்த வேண்டும்" என்று வெகு பதிவாகப் பேசி முடிப்பார்கள். அதற்குத் தகுந்த இரண்டொரு பிரேரேபணைகளும் ஏற்படும். பின்னர் அவ்விஷயமாக ஏதேனும் நமது காதுகளில் விழவேண்டுமானால் அடுத்தமுறை கூடும் ராஜகீய ஸபைக்கோ ஆசாரச் சீர்திருத்தச் சபைக்கோ தான் போகவேண்டும். இப்

போது உள்ள ஸ்திரீகள் தாம் பின்னால் வரப்போகும் ஜனஸமூகத்தை அபிவிருத்தி செய்பவர்களாதலால், இவ்விஷயமாகச் செய்யும் பிரயத்தனங்களிலெல்லாம் நமக்கும் விசேஷ அனுதாபமுண்டு. ஆயினும் இதுவரையிலும் பேசியும் எழுதியுமிருப்பவையெல்லாம் கேவலம் ஏட்டுச் சுரைக்காயாக முடிந்திருக்கின்றனவேயன்றி அனுபவத்துக்கு வரக்கூடிய யாதொரு முயற்சியும் காணப்படவில்லை.

“இந்திய ஸ்திரீகள்” என்னும் விவரத்தில் இந்தியாவிலுள்ள எல்லா ஜாதி ஸ்திரீகளும் அடங்குவார்களாயினும், இவ்வியாசத்தில் நாம் விசாரிக்கப் புகுவது இந்தியாவிலுள்ள நமது முஸ்லீம் சகோதரிகளைப்பற்றி மட்டுமேயாம். அவர்களுடைய தற்கால நிலைமையை உயர்த்தவேண்டுவது அவசியமானால், இப்போது அவர்களுடைய நிலைமை எப்படியிருக்கிறதென்றும், எவ்விஷயத்தில் குற்றங்குறைகள் காணப்படுகின்றனவென்றும் முதலில் கவனிக்கவேண்டியது அத்தியாவசியகமாம். இஸ்லாமிய சரித்திர ஞானமுடையவர்க்கெல்லாம், முஸ்லீம் ஸ்திரீகளுடைய ஆயுட்கால முழுவதிலும் அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட பதவிகள் ஏற்பட்டுள்ளனவென்பது நன்றாகத் தெரிந்திருக்கும். “சுயேச்சையையுடைய மானிடருக்குள்ள பாத்தியங்களெல்லாம், வயதுவந்த முஸ்லீம் ஸ்திரீக்கு சட்டப்படி உண்டாகின்றன” வென்று, ரைட் ஆனரபிள் சையது அமீர் அலி அவர்கள் தாம் எழுதிய “இஸ்லாத்தின் ஆவி” என்னும் கிரந்தத்தில் கூறியிருக்கின்றனர். முஸ்லீம் ஸ்திரீகளுக்கு ஏற்பட்டுள்ள அந்தஸ்தெல்லாம் வெகு நியாயமாகவே ஏற்பட்டவையாம். இந்திய ஸ்திரீகளுக்கு இப்படிப்பட்ட பதவியில்லையென்றே சொல்லலாம். இந்துக்களுடைய வம்சாவளியில் ஸ்திரீகளின் பெயர்களைக் கூடக்குறிப்பிடுவதில்லை. கிறிஸ்துவ ஸ்திரீகளுக்கும் இவ்விதமான பதவியிருப்பதாக அவர்களுடைய பைபிளும் கூறவில்லை. ஆகவே, மற்றைய வகுப்பு ஸ்திரீகளுக்கு இல்லாததோர் உயர்பதவியை முஸ்லீம் சகோதரிகள் பெற்றிருக்கின்றார்களென்பது தானே போதரும்.

சட்ட விஷயமாக முஸ்லீம் ஸ்திரீகளுக்கு, மற்றையோர்க்கில்லாத உயர் பதவியிருக்க, ஜனஸமூக விஷயத்தில் அவர்ஸ்திதி என்னவென்று பார்ப்போம். பொதுவாகவே ஸ்திரீகளுக்கு அவமரியாதை செய்வதை இஸ்லாமியன் ஒருவன் சகியான். ஆபத்தில் இருந்த ஒருஇந்திய ஸ்திரீயைக் காப்பாற்ற ஹுமாயூன் அரசன் ஒரு இஸ்லாமிய சிற்றரசனோடு சண்டைக்குப்போனது நமக்கு நன்றாய்த் தெரியும். வெகுவாகக்ஷீணமடைந்துள்ள இக்காலத்திலுங்கூட ஸ்திரீகளுக்கு அத்தியந்த மரியாதை செய்யப்படவேண்டுமென்ற எண்ணம் முஸ்லீங்களின் மனதுக்குப் புறம்பானதல்ல. ஆயினும், நமது முஸ்லீம் சகோதரிகளின் நிலைமை வெகுவாக உயர்த்தப்படவேண்டிய ஸ்திதியில் தான் இருக்கிறது என்பதும் உண்மையே. க்ஷீணஸ்திதி நமது நபிநாயகத்தின் கட்டளைக்கு ஒத்திருக்கவில்லை; நம்முடைய வாணாளுக்கேற்ற நாகரீக நடையுடை பாவனைகளுக்கும் அது முற்றிலும் ஒத்திருக்கவில்லை. இவ்வாறு க்ஷீணமடைந்ததின் காரணத்தை நாம் விசாரிக்கப்புகவேண்டாம். அவசியமாகச் சீர்திருத்தம் செய்யவேண்டிய விஷயங்களை மட்டும் கவனிப்போம்: அவையிரண்டுள்ளன; முதலாவது கல்வி, இரண்டாவது விதவா விவாகம். இத்தருணத்தில், நமது ஜாதியாரிடம் நடையாடிவரும் “கோஷா” வழக்கத்தை அகற்றிவிடவேண்டாமா என்ற ஓர் கேள்வியுண்டாகலாம். நமது ஸ்திரீகளெல்லோரும் கல்வியில் ஏகதேசம் தேர்ச்சியடைந்த பின்னரும் ஏழைகளாகவும் ரோகிகளாகவும் காணப்படும் பாலிய விதவைகள் மறு மணம் புரிந்து கொண்ட பின்னருமே இக் “கோஷா” வழக்கத்தைப் பற்றி நாம் ஆலோசிக்கப்புகவேண்டியது நியாயம் என்பது எமது துணிபு. “கோஷா” வழக்கம் *தேகாரோக்கியத்துக்கு விரோதமானதென்பதை யாம் அங்கீகரிக்கின்றனம்; ஆயினும், சிறுவயதிலேயே கணவர்களை யிழக்கப்பெற்ற பாக்கியவீனர்களான நங்கைமார்களின் கதி இன்னும் பரிதாபகரமானதாகத் தோற்றுகின்றது. அவர்களுக்கு உலகவின்பங்களை அனுபவிக்கச்சுதந்தரங் கிடையாது. தங்களைக் காட்டிலும் அதிர்ஷ்டமுள்ளவர்கள் அவ்வின்பங்களை அனுபவிப்பதை இவர்கள் கண்ணால் மட்டுங் கண்டு களிக்கவேண்டியிருக்கின்றது. விதவா விவாகம் கூடாதென்று ஏற்பட்ட பிரமாணமில்லாத விதியைக் காட்டிலும் குரூரமான

---

* பர்த்தாவோடு முஸ்லீம் சகோதரிகள் தேகாரோக்கியமான இடங்களுக்கும் பூங்காவனம் முதலிய இடங்களுக்கும் செல்லலாமாதலால், தேகாரோக்கியக் கெடுதி நேரிடாது. ப.ஆ.

விதி வேறேதேனுமுண்டா? இப்படி ஆயுள் முழுவதிலும் இவர்களைத் துக்கத்தில் ஆழ்த்தி, துன்பப்படச் செய்வதைக் காட்டிலும் சககமனம் (அல்லது சதி) செய்துவிட அனுமதி கொடுப்பது நலம். ஆயினும் அவ்வழக்கம் கூடவே கூடாதென்று சட்டத்தால் நமது காருண்ய அரசாங்கத்தார் தடுத்திருக்கின்றதற்கு நாமெல்லோரும் மனப்பூர்ணமான சந்தோஷத்தைக் காட்டவேண்டும். விதவையாகவே இருக்கச்செய்வது குரூரமானது மட்டுமன்று; அவ்வழக்கம் பரிசுத்த குரானுக்கும் நமது நபிநாயகத்தின் கட்டளைகளுக்கும் புறம்பானதாம். இருந்தும் அவ்வழக்கம் ஏன் இன்னும் பிடிவாதமாக நிலைத்திருக்கிறதென்பதும், முதல் கணவன் இறந்த பின், குறித்த காலம் கடந்ததின் மேல் மார்க்கசம்பந்தமான வேறொரு விவாகச் சடங்கு ஏன் இன்னும் ஏற்படுத்தவில்லையென்பதும் வியக்கத்தக்கவையாம். இக்கெட்ட வழக்கம் இருந்துகொண்டிருக்கும் போதே “கோஷா” வழக்கத்தை நிவர்த்தித்து விடுவது பெரும் பாதகமாய் விடும். ஒருவேளை நமது ஸ்திரீகளின் நிலைமை இன்னும் தாழ்ந்து போய்விடும்; அப்போதுண்டாகும் துராசாரத்தை மாற்றுவதற்கு விதவா விவாகம் சற்று பின்பட்டுப்போனதாகவும் ஆகிவிடலாம். தாயைப்போல பிள்ளையென்பது பழமொழி. தாய் சீர்திருந்தம் பொருந்தியவளாய்த் தன் மதிப்பைப்பெற்றிருப்பின், அவள் வயிற்றுப் பிள்ளைகளும் அவ்வாறே விருத்தியடைந்து உலகிலுள்ள ஜாதியாரிடம் தன் மதிப்பையும் கௌரவத்தையும் பெறுவார்கள். இவ்விஷயமாக இதுவரையில் செய்துவந்தபிரசங்கங்கள் மூலமாக யாதொரு பயனும் உண்டாகவில்லை. நமது ஜனஸமூகத்தலைவர்கள், ஸ்திரீகளுக்குக் கல்வி போதிப்பதிலும், விதவாவிவாகம் புரிவதிலும் விசேஷ அனுதாபம் காட்டிச் சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டும். அவர்களே முன்வந்து காரியங்களைச் செய்து, பின்புள்ளோர்க்கு வழிகாட்டவேண்டும். வங்காளத்தில் டாக்டர் அசுடோஷ் மூகர்ஜி வெகு தைரியத்தோடு விதவாவிவாகம் புரிய அனுமதி கொடுத்து இந்திய ஜனங்களுடைய நன்மதிப்பைப் பெறவில்லையா?

இந்தியாவில் ராஜகீய விஷயத்துக்காக ஏற்பட்ட சங்கங்கள் எல்லாம், ஸ்திரீ கல்வியையும் விதவாவிவாகத்தையும் பற்றி இப்போது காட்டுவதைக் காட்டிலும் பன் மடங்கு அதிகமான சிரத்தையைக்காட்டி முயற்சி செய்யவேண்டும். வருஷா வருஷம் பலவிடங்களில் கல்விச் சங்கங்கள் ஏற்படுவதை நாம் நேரிற் காண்கிறோம். அவைகளினால் நாம் விரும்புகிற விஷயம் கைகூடுகின்றதாவென்று தைரியமாகக் கேட்கலாம். அலிகர் முஸ்லீம் கலாசாலையை ஸ்தாபிதம் செய்து அழியாப் புகழைப பெற்ற கனவான், கேவலம் கல்விவிஷயமாகப் பேச்சோடு மட்டும் நின்றிருப்பாரானால், அலிகர் கல்விக்குறைவிடமாக விருப்பதைக்கண்டு ஆனந்திக்க முடியுமா? சங்கங்கள் கூடி பிரேரபணைகள் செய்து விடுவது மட்டும் போதாது. முஸ்லீம் ஸ்திரீகளினிடையே கல்வி அபிவிருத்தியாவதற்கு, தக்க ஏற்பாடுகளைச் செய்து முஸ்லீம்கல்விச் சங்கத்தார், ஆங்காங்குப்பலவிடங்களிலும் சிறு சிறு சபைகள் ஏற்படுத்தி, தினந்தோறும் கல்வி விஷயமான பிரசங்கங்கள் புரியும் படிக்கும், கூடுமானால் ஸ்திரீகளின் மூலமாகவே, அந்தப்புரங்களிலுள்ள கோஷாஸ்திரீகளுக்கும் கல்வி கற்பிக்கும்படிக்கும் ஏற்பாடு செய்யவேண்டியது அத்தியாவசியகமாம். கிறிஸ்தவ மதபோதகர்கள் கண்ட கண்ட விடங்களிலெல்லாம் போய் நின்றுகொண்டு வெகு ஊக்கத்தோடு பிரசங்கம் புரிவதனாலல்லவா, வருஷா வருஷம் அம்மதத்தைப் புதிதாகக் கைப்பற்றுகிறவர்கள் அதிகமாகின்றனர். இவ்வேற்பாடுகள் பயனற்றவையென்று நம் தலைவர்களுக்குத் தோன்றினால், ஸ்திரீகளின் கல்விக்கும் விதவா விவாகத்துக்கும் ஏற்றதான வேறு ஏற்பாடுகள் ஏதேனுமிருந்தால் அவைகளை அவர்களே சொல்லிச் செய்யட்டும். ஏற்பாடுகள் எவ்விதமானவையாக விருந்த போதிலும் அவைகளெல்லாம் அதிக பணச்செலவுள்ளதானதாக விருக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை. நாகரீகமிகுந்துள்ள இக்காலத்தில் விசேஷ பணச் செலவில்லாமல் பெருங்காரியம் ஒன்றும் முற்றுப்பெறுவதில்லை. ஏற்பாடுகள் வெளிவருமானால், பணமும் ஏராளமாகக் குவிந்துவிடுமென்பது அனுபவசித்தம். கல்விச் சங்கத்துக்கும் முஸ்லீம சபைக்கும் எவ்வாறு பணம் குவிகின்றது? பின்னதான முஸ்லீம் சபை முற்றிலும் ராஜகீயமான விஷயங்களை மட்டும் கவனிக்கின்றது. ஸ்திரீகளின் நிலைமையுயர்ந்தால் தான் ராஜகீய விஷயமான உயர்ச்சியுமுண்டாகும் என்பது உறுதியாகவிருக்க, அச்சபையார் ஏன் ராஜகீய விஷயங்களை மட்டும் கவனித்துவருகிறார்களென்பது புலப்படவில்லை. ராஜகீய விஷயமும்

ஆசாரவிஷயமும் ஒன்றோடொன்று கலந்திருந்தால், இருவிஷயமாகவும் முஸ்லீங்களுக்கு விசேஷ நன்மையுண்டாகும். தாய்மார்கள் உயர்ந்தால், தொட்டில்களிலிருந்தே குழந்தைகளுக்கும் உயர்ச்சிஉண்டாகும். இந்த சந்தர்ப்பத்தில் ஒரே ஒரு எச்சரிக்கை அவசியமாகின்றது. இந்திய அந்தப்புரத்தை, மேற்றிசையோரின் நர்த்தன விருந்துச்சாலையைப் போலாக்கி விடுவது தான் "உயர்ச்சி" யென்று எண்ணப்படுமாயின், அவ்வித வுயர்ச்சி இந்தியாவுக்கு வேண்டவே வேண்டாம். நர்த்தன விருந்துச் சாலையின் குற்றங்குறைகளையோ குண விசேஷங்களையோ பற்றி இங்குநாம்பேசவரவில்லை. ஐரோப்பிய கல்வியிலும் நாகரீகத்திலும் இந்தியன் ஒருவன் எவ்வளவு சிறந்திருந்தாலும், மேற்றிசையோரின் நர்த்தன விருந்தின் இன்பத்துக்கு அவன் ஒரு போதும் சம்மதிப்பதில்லை. மேற்கூறிய "உயர்ச்சி" யென்பது, ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் சகலவிதத்திலும் சமத்துவம் ஏற்படவேண்டியது தானென்னப்படுமாயின், அவ்விஷயமாக மேற்றிசையோர்களே முதல் முதலில் வழிகாட்டும் வரையில் கீழ்த்திசையோர் காத்துக்கொண்டிருக்கலாம்.

ஜிலாலுடீன்.

முகம்மதிய ஸர்வகலாசாலை

மத்தியகால ஐரோப்பாவிற் குடிகொண்டிருந்த அநாகரீகமும் அக்ஞானமும் பழமொழியாகவே மாறிவிட்டன. மூடபக்தியும் குருக்கள் மாரின் வைராக்கியமும் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்த வண்ணமாகவே யிருந்தன. ஸகோதரத்துவம் என்னும் பாசம் அற்றுப்போயிருந்தது. எங்கு பார்த்தாலும் துராசாரமே நிரம்பியிருந்தது. கல்வியைக் கற்பார் ஒருவருமில்லை; சட்ட சாஸ்திரங்கள் மூலைகளில் ஒதுக்கப்பட்டன; தத்துவசாஸ்திரம் படிக்கக்கூடாதென விதிக்கப்பட்டிருந்தது. தேச சரித்திரம் வாயைமூடிக்கொண்டது. அத்தியக்ஷ குருக்கள் லௌகிக புஸ்தகங்களைப் படிக்கக்கூடாதென 398-ல் கூடிய சங்கம் ஒன்றுவிதித்தது. பௌதிகசாஸ்திரத்தை எல்லோரும் வெறுப்புடன் தள்ளிவிட்டனர். ஆனால் வைதீக விஷயமாக மட்டும் ஏராளமான கிரந்தங்கள் பூற்றீசலைப் போற்கிளம்பின. அவைகள் முற்றிலும் அக்கினிக்கு இரையாகப் போய்விட்டாலும் அதனால் நமக்கு யாதொரு நஷ்டமும் உண்டாகாது. யுக்திக்கு ஒவ்வாத மூடபக்தி கல்வியைத் தடுத்தது. ஜனங்கள் புத்தியை உபயோகிக்கக்கூடிய பிரவர்த்திகளில் தலையிடவில்லை. இதுவேதான் மத்தியகாலங்களிலிருந்த கல்வியின் நிலைமை.

இது நிற்க, முஸ்லீங்களின் செய்தி என்னவாகவிருந்ததென்று பார்ப்போம்: அவர்கள் அரபிய வனாந்தரங்களிலிருந்து, சுயேச்சையும் நாகரீகமும் கல்வியுமாகிய தீவர்த்திகளைக் கையிலேந்திக் கொண்டு வெளிப்புறப்பட்டார்கள். * மூர்ஜாதியார் ஸ்பெயின்தேசத்துக்கு வந்தபோது அது பாழ்பட்ட பிரதேசமாகவும், உயிர் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களைமட்டுமே கொடுக்கக் கூடிய வளமுள்ளதாகவும் இருந்தது. உடனே அவர்கள் அந்நாட்டைப் பலவிதத்திலும் வளப்படுத்த நினைத்து, வியவசாயத்தின் அபிவிருத்திக்காகப் பாசன வாய்க்கால்கள் வெட்டினார்கள்; பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினார்கள். நாட்டை யாள்வதற்கு வேண்டிய சட்டதிட்டங்களை யுண்டாக்கினார்கள். மதவிஷயத்திலும், பிரசங்கவிஷயத்திலும் சகல ஜனங்களுக்கும் சுயேச்சையைக்கொடுத்தனர். பொறுமையும், மார்க்கவிஷயமாகச் சித்திரவதை செய்வதும் மூர்ஜாதியாருக்குத் தெரிந்திராத விஷயங்களாம். அவர்கள், மேலான அறிவுக்கும் நல்ல நாகரீகத்துக்கும், நடையுடை பாவனைகளுக்கும் பேர் போனவர்கள். அண்டலூஷியாவுக்குத் திலகம் போல விளங்கிய கார்டோவா நகரத்துக்கு நாலாபக்கங்களிலிருந்தும், கலைகளையும் சாஸ்திரங்களையுங் கற்றுக் கொள்வதற்காக வித்தியார்த்திகள் திரள்திரளாக வந்தனர். அது கல்விக்கோர் உறைவிடமாகவும், பண்டிதர்கள் குழுமியிருந்த சபாமண்டபமாகவும், சாஸ்திர ஆசையுள்ளோர் தேடிப்போகும் இன்ப நகரமாகவும் இருந்தது. அதிகம் சொல்வானேன்? கல்வியிலும் செல்வத்திலும் நாகரீகத்திலும் முதன்மையானதெல்லாம் அங்குக்காணப்பட்டன. வைத்திய சாஸ்திரத்தில் மூர்ஜாதியார் பிரபலமடைந்திருந்தனர். யாஹ்யா, இப்னுஇஸ்ஹாக், அல்கதானி, ஜாரானி, இபுனுஜுஹர் இன்னோரன்ன பிரபலர்கள் சிற

---

* முஸ்லீம்கள்.

ந்த வைத்தியர்களாக விளங்கினர். தத்துவ சாஸ்திரிகளிற் பேர்போனவர்களாக அவெம்பெஸ், இபுனு ருஷ்டு என்பவர்கள் ஸ்பெயினில் தான் இருந்தனர். முஸ்லீம் அதிகாரம் பிரபலமாக விருந்த காலத்தில் ஸ்பெயினில் எழுபது பகிரங்க புஸ்தகசாலைகளிருந்தனவென்றால் அதன் கல்விச் சிறப்பைப் பற்றித் தனியே கூறவேண்டுமோ? காலிப் இரண்டாம் ஹாகம் ராஜாவினுடைய புஸ்தகசாலையிலுள்ள கிரந்தங்களின் பேர்கள் மட்டும் அடங்கிய பூர்த்தியாகாத அட்டவணைகள் 40 வால்யங்களிருந்தனவென்றால், அங்கிருந்த புஸ்தகங்களின் சங்கியை நீங்களே உத்தேசித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். பட்டு, கம்பளம், கண்ணாடி இவைகளுக்கு ஆல்மீரா பேர்போனவிடமாகவிருந்தது. தொலிதோ கத்திகள் வெகுசிறந்தனவாம்; ஆல்மீரா, ஸெவில், மூர்ஷியா, கிரானடா முதலியவிடங்களில் முதல்தரமான யுத்தாயுதங்கள் செய்யப்பட்டன.

சாஸ்திரம்; கலைகள், கைத்தொழில்கள் இவைகளுக்குப் பாக்தாத் நகரம் பிரபலமடைந்து கார்டோவாவைப் பின்னிடச்செய்தது. காலிப்களுடைய அற்புதமான அரண்மனைகள், ஜனங்கள் நிறைந்த பட்டணங்கள், அவர்களுடைய பொன் வெள்ளிச் சாமான்கள் எல்லாம் வெகு சோபிதமாக விளங்கின. சில காலிப்களுடைய அரண்மனைகளே கல்வி மண்டபங்களாக மாறின. அவர்களுள் அநேகர் போட்டி போட்டுக்கொண்டு புஸ்தக சாலைகளையும் பாடசாலைகளையும் ஏற்படுத்தினர். கல்வியிற் பெரியோரெல்லோரும் பாக்தாதுக்கு வந்து அரசனிடமிருந்து சம்மானம் பெற்றுப்போயினர். பலபாஷைகளிலுள்ள கிரந்தங்களை அரபிபாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன. பாக்தாதுக்குச் சற்று தூரத்தில் காலிபின்மாமனாருடைய தூண்டுதலின் பேரில் ஒரு நக்ஷத்திர மண்டல பரிசோதனை சாலை ஏற்படுத்தப்பட்டது. அவரே, முகம்மது இபுனுமூஸா இபுனுஷாகிர் என்பவரை இவ்வுலகத்தை அளந்து வரும்படி செய்தனர். பௌதிக சாஸ்திர விற்பன்னர்களாய் ஹஸன் இபுனுஹூஸேன் அபுல்வாபா, இபுனு யூனுஸ் என்பவர்கள் விளங்கினார்கள்.

இந்தியாவிலோ, இஸ்லாமிய நாகரீகம் மொகலாய சக்கரவர்த்திகள் அரசாண்டகாலத்தில் தான் மகோன்னதமாகத் தோன்றிற்று.

இந்தியர்களுடைய கல்வியும் நாகரீகமும் வெகுவாக க்ஷீணித்துப் போயிருந்தது. அத்தருணத்தில்தான் மொகலாயர்கள் வந்து இந்தியாவைச் சீராக்கினார்கள். பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன; ரஸ்தாக்கள் போடப்பட்டன;பிரயாணிகளின் சௌகரியத்துக்காக சத்திரங்களும் சாவடிகளும் உண்டாக்கப் பட்டன. நல்ல சட்டங்கள் உண்டாயின. காஷ்மீரச்சால்வைகளும் டாக்கா மஸ்லின்களும் ஐரோப்பாவில் விலையாயின. டாஜ்மஹால் கோரியின் அமைப்பும் அழகுமேபோதும்; மொகலாயரின் நாகரீகத்தின் உன்னதத்தைக் காட்டுவதற்கு, மயில் சிம்மாதனம், ஐரோப்பிய அரசர்களுடைய வேலைப்பாடான சிங்காதனங்களையெல்லாம் பார்த்துப்பழித்தது போன்றிருந்தது.

உயர்ச்சிக் கெல்லாம் தாழ்ச்சியுமுண்டு. ஆகவே, இவ்வளவு உயர்ச்சிபெற்ற மொகலாயர்களுக்கும் க்ஷீணம் வந்தது. செல்வமும் சுகமும் பெருமிதவாழ்க்கையும் தலையிடவே, அவர்களுக்கிருந்த வீரமும் தைரியமும் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை விட்டகன்றன. ஒவ்வொரு போர்வீரனும் தனக்கென்றே ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டனன். 1857-ம் ஆண்டில் மொகலாயசக்கரவர்த்தியாகிய பகதூர் ஷாவுக்கு அரண்மனைக்கு வெளியில் ஒருவரும் மரியாதை செய்வதில்லை. அவ்வளவு தாழ்ந்த பதவிக்கு வந்துவிட்டது; அவருடைய அரசாதிகாரம். பின்னர் சிப்பாய்க் கலகம் நேர்ந்ததும், அதனால் ஜனங்களுக்குத் துன்பங்கள் உண்டானதும் நன்றாகத் தெரிந்தவையானபடியால் அவைகளைப்பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை.

இந்தியா முஸ்லீங்கள் வெகு கேவலமான ஸ்திதியிலேயே இருந்தனர். நம்பிக்கைகூட அவர்களைக் கைவிட்டுவிட்டது. அவர்கள் விறகுவெட்டிகளாகவும், தண்ணீர் தூக்கிகளாகவும், பங்கா இழுப்பவர்களாகவும் ஆனார்கள். இப்படிப்பட்ட துர்த்தசை காலத்தில் நற்காலத்துக்கு அடையாளமாக, ஒரு உத்தமர்தோன்றி க்ஷீணமடைந்தவர்களைக் கைகொடுத்து உயர்த்தினார். அப்படிக் காப்பாற்றித் தம்முயிரையும் இக்கல்விஷயத்தில் அர்ப்பிதம்செய்தவர் யாரெனில் ஸர் ஸையது அகமது கான் என்பவரே.

ஸர்ஸையது அவர்கள் குற்றங் குறைகள் உள்ளவிடத்தை எளிதிற் கண்டுகொண்டார். முஸ்லீங்கள் அடைந்திருந்த க்ஷீணதசையிலிருந்து அவர்களை மேற்பதவிக்குக் கொண்டுவரக் கூடிய மந்திரக்கோல் கல்வியென்பதை அவர் நன்றாய்த் தெரிந்து கொண்டார். சாந்தம், அமைதி, செல்வம் இவைகளைக் கொடுப்பது கல்வியே; அஞ்ஞானத்தினால் உண்டாகும் கெட்ட நடபடிக்கைகளை வெருட்டுவதும்கல்வியே. கல்வியினால் தான் நமது ஜனங்களுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டுமென்பதை அனுபவ ஞானத்தினால் அறிந்த ஸர்ஸையது அகமது அவர்கள் அலிகர் முகம்மதியக் கலாசாலையை ஸ்தாபித்தனர். அக்காலத்தில் அவருக்கு எதிரிகள் பலர் ஏற்பட்டனர். என்றாலும் நற்காரியத்தில் வரும் இடையூறு நன்றாகவே முடியும். இப்போது அக்கலாசாலையைக்கொண்டாடாதவர்எவருமில்லை. வெகு சீக்கிரத்தில் அது ஆச்சரியப் படும்படியான அபிவிருத்தியையடைந்துள்ளது. பிரபலர்கள் பலர் அதினின்றும் கற்றுத் தேறிவருகின்றனர். தூக்கத்திற் கிடந்த முஸ்லீம் இந்தியாவை அக்கலாசாலைதான் விழிக்கச் செய்தது.

அலிகர் கலாசாலையை ஒரு ஸர்வகலாசாலையாக்கவேண்டுமென்பதுவே ஸர்ஸையது அவர்களின் பெருவிருப்பம். அதற்காக அவர்கள் அல்லும் பகலும் விடாமுயற்சியோடு உழைத்து வந்தார்கள். ஆனால் அவருடைய விருப்பம் முற்றுப் பெறுவதன்முன்னம், அவருயிரை இஸ்றாயீல் கொண்டோடிப்போய்விட்டார்.

அவர்களுடைய பொறுப்பு ஸையது முகம்மது அவர்கள்மீதும் நவாப் மொஷினுல்முலுக் என்பவர்மீதும் விழுந்தது. அவர்கள் கல்வி விஷயமாகச் செய்திருக்கும் அரியவேலைகள் அற்பசொற்பமல்ல. ஸர்ஸையது அவர்களை முன்னுக்குக் கொணர்ந்த அரிய நற்குணங்கள் எல்லாம் இவர்களிடமும் இருந்தன. ஆயினும் முன்னவர்க்கு இருந்த தைரியமும் மனோதிடமும் இவர்களிடம் அவ்வளவாக இல்லையென்றே சொல்லவேண்டும். இருந்திருக்குமேல் அது முகம்மதிய சர்வகலாசாலையாய் இதற்குள் தலையெடுத்து வேலை செய்துகொண்டிருக்கும்.

ஜிலாலுடீன்.

[இன்னும் வரும்]

ஓர் எச்சரிக்கை.

——[:o:]——

எலும்புந் தோலுமே மனிதனாவதில்லை. அவைகள் ஆத்மா என்று கூறப்படும் உண்மையான மனிதன் வாழ்வதற்காகஏற்பட்ட ஓர் வீடாகும். அவ்வீடும் ஆத்மாவும் ஒன்றுகூடியபிறகுதான் மனிதன் தனது நிலைமையையடைகிறான். அந்நிலையை அடையச் செய்வதும், அழித்துவிடுவதும் கடவுளின் காரியங்கள் என்று நாமெல்லோரும் நன்கறிந்திருக்கிறோம். கடவுள் ஒரு காரியத்தையும் வீணிற் செய்வதில்லை. ஆகவே, மனிதனைச் சிருஷ்டித்ததும் வீண்காரியம் அல்லவென்பது தானே போதரும். சோம்பேறியாக வாழ்ந்து காலங்கழிக்கிறதற்காக மனிதன் சிருஷ்டிக்கப்படவில்லை. ஒவ்வொருவனும் செய்துதீரவேண்டிய காரியமுண்டு. கடவுளையறிந்து அவனை வழிபடுவதும், நற்காரியங்களைச் செய்வதும் மனிதன் செய்யவேண்டிய கடமைகளெனத் திருக்குரான் அருளுகின்றது.

உலகவிஷயத்தைத் திருக்குரான் மறந்துபோய்விடவில்லை. நாம் இவ்வுலகில் வாழவேண்டும்; மற்றுமுள்ள ஜனங்களோடு ஒருமித்திருக்கவேண்டும்; தன்னந்தனியே வாழ்ந்து காலங்கழிப்பதற்காக உலகத்தைவிட்டுப் பிரியக்கூடாது. துறவியாகப்போவது இஸ்லாம்மார்க்கத்துக்குப் புறம்பான விஷயமாம். உலகஜனங்களோடு ஒருமித்து உழைத்தே நாமும் நமது கடமைகளைச் செய்யவேண்டும். எல்லா முஸ்லீம்களும் தொழுகையைச் செய்யவேண்டுமெனக் கட்டளையிட்ட கடவுள், தொழுகை முடிந்ததும் அவர்கள் உலகத்தில் பரவி, ஆண்டவனின் செல்வத்தைத் தேடவேண்டுமென்றும் கட்டளையிடுகிறான். திருக்குரானில் இன்னொருஇடத்தில், ஆண்டவனின் செல்வத்திலிருந்து ஜனங்கள் லாபமடையவேண்டியதற்காகப் பகற்பொழுது பிரகாசமாக்கப்பட்டதெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னொரு சந்தர்ப்பத்தில் லௌகிகவிஷயமும், வைதீகவிஷயமும் ஒரேவாக்கியத்திற் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. “ஆண்டவனே! இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் எங்களுக்கு அருள்செய்; நரகத்தீயிலிருந்து எங்களைக் காப்பாற்று” இதைப் போல இன்னும் எவ்வளவோ மேற்கோள்கள் திருக்குரானிலிருந்து எடுத்துக் காட்டலாம். ஆதலால், உலகவாழ்க்கையின் அபிவிருத்

திக்கு இஸ்லாம் பெருந்தடையாக நிற்கிறது என்று கூறுவோரின் வார்த்தையெல்லாம் வீண்வார்த்தையென்பது தெளிவாகும். இதனால் நாம் எல்லோரும் வைதீகவிஷயத்தைக் கவனிக்காமல் விட்டுவிடவேண்டுமென்பது பொருளன்று. மார்க்கவிஷயமான விவரங்களையெல்லாம் எல்லாமனிதர்களும் அறிந்திருக்க முடியாது; ஒவ்வொரு முஸ்லீமும் அவ்வாறு கட்டாயமாகத் தெரிந்துகொண்டிருக்கவேண்டுமென்று இஸ்லாம் நிர்ப்பந்திப்பதில்லை. அவர்களில் சிலர் மார்க்கவிஷயமான ரகஸியங்களைத் தெரிந்துகொண்டு, மற்றையோருக்குப் போதித்து, அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே திருக்குரானின் நோக்கம். ஒவ்வொரு முஸ்லீமும் வைதீகவிஷயங்களில் பாரங்கதனாகவிருக்க முடியாது. கடவுளுடைய கருத்தும் அப்படிப்பட்டதன்று என்பதற்குத் திருக்குரானினின்றும் வேண்டிய ஆதாரங்கள் கொண்டுவரலாம். ஆயினும் ஒவ்வொரு முஸ்லீமும் இஸ்லாம்மார்க்கத்தின் பொது விதிகளையும் கொள்கைகளையும் பயபக்தியோடு அநுசரிக்கவேண்டும். சில்லறை விவரங்களைத் தெரிந்துகொள்ளாமற்போனாலும் பொதுவிவரத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். இஸ்லாம்மார்க்கத்தின் பழையநாளில் ஒவ்வொரு முஸ்லீமுக்கும் இவ்விதஞானம் எளிதிற் கிடைத்திருந்தது. இவ்விதக் கொள்கைகளை நன்கறிந்த ஜனஸமூகத்தில் வாழ்ந்ததால் அவ்விதஞானம் எளிதிலுண்டாகக் காரணமாயிற்று. ஆனால் சென்ற சிலகாலமாக முஸ்லீங்கள் தங்கள் மார்க்கத்தையும் பூர்வீக சரித்திரத்தையும் முக்கால்வாசி மறந்திருந்தனர், இதையறிந்தஸர் செய்யது அகமதுகான் அவர்கள், இத்தகையதீங்கு முஸ்லீங்களை மடக்கிவிடாமுன், ஒருஅருங்காரியம் செய்தனர். அக் காரியத்துக்கு நாம் எவ்வளவுதூரம் கடமைப்பட்டுள்ளோம் என்பதைச் சொல்லவொண்ணாது. நிலைத்திருக்குந் தகுதியைக் காட்டாத ஜனஸமூகம் நிலைத்திருப்பது அரிதாகும். தங்களுக்குத் தாமே உதவிசெய்துகொள்பவர்களுக்குக் கடவுள் உதவிசெய்கிறான் என்பது பழமொழி. இப்பழமொழிக்கிணங்க, காலஞ்சென்றஸர் செய்யது அவர்கள் ஒரு கலாசாலையை ஏற்படுத்தினார்கள். அவர்களுடைய முயற்சிதான் நம்மைக் காப்பாற்றிற்று, அவர் உயிருடனிருந்தால் இன்னும் எவ்வளவோ செய்திருப்பார். அவர் இன்னும் என்னசெய்யவேண்ணியிருந்தாரென்பதுவும் நமக்குத் தெரியவில்லை. தலைமையை வகிக்க அவர்தாம் தகுதியுள்ளவராகவிருந்தார். ஆயினும், முஸ்லீங்கள் அவருடையகருத்தை நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை. கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்படும் லௌகீகக்கல்வி போதுமானதன்று என அவர் நன்கறிந்தபடியால்தான் முஸ்லீம்களுக்கென்றே தனியாக ஒரு கலாசாலையேற்படுத்தினார். முஸ்லீம்கள் தங்களுடைய மார்க்கத்தையும் பழைய சரித்திரத்தையுந் தெரிந்துகொள்ளாமற்போவதைப் பார்க்க அவருடையமனஞ் சகிக்கவில்லை. சரித்திரஞானம் வெகு அவசியமானது; மேலெழப்பார்க்கும் ஒவ்வொரு சமூகமும் சரித்திரத்தை நன்றாகத் தெரிந்துகொண்டால்தான் நிலைத்திருக்கமுடியும். "தேசசரித்திரம் வழிகாட்டும் தீபம்; உண்மையின வெளிச்சம்! முன்புள்ளோர்களுடைய செய்கைகளைப் பின்புள்ளோர்களுக்கு உபதேசிக்கும் ஆசிரியன்; தர்மசாஸ்திரத்தையும் நற்குணங்களையும் கற்பிக்குஞ் சிறந்த கலாசாலை; ஞானிகளுடைய அறிவைப் பரிசுத்தப்படுத்தும் பள்ளிக்கூடம்" என்று முகம்மது தலாட் ஹரப் என்பவர் கூறுவது முற்றிலு முண்மையே.

மார்க்கவிஷயத்திலும் பூர்வீக சரித்திரத்திலும் விசேஷ ஞானத்தைப் போதிப்பதற்காகத்தான், முஸ்லீம்களுக்கென்று பிரத்தியேகமான கலாசாலை யேற்பட்டதென்பது எமது அபிப்பிராயம். இஸ்லாம்மார்க்கம் ஒவ்வொருவருக்கும் சிற்சில வைதீக கடமைகளையும் கண்டிப்பாய் விதிக்கின்றது. அவைகள் (1) கடவுளுக்குச் செய்யவேண்டிய கடமை (2) தனக்குத்தானே செய்யவேண்டிய கடமை (3) பிறருக்குச் செய்யவேண்டிய கடமையென மூவகைப்படுகின்றன. ஆயினும் இவ்வியாசத்தில், வைதீகவிஷயமாக முஸ்லீம் ஒருவன் செய்யவேண்டியதைப்பற்றிப் பேசப்போவதில்லை. சிறுமுஸ்லீம்களுக்கு இப்போது போதிக்கப்படும் கல்விமுறையைப் பற்றியே பேசுவதாகவிருக்கிறோம். ஒவ்வொருமனிதனும், தான் சாசுவதமாக வாழப்போவதாய் நினைத்துக்கொண்டு, இவ்வுலகத்துக்கும் நாளைக்கு இறக்கப்போவதாக நினைத்துக்கொண்டு மறுவுலகத்துக்கும் பாடுபடவேண்டும் என்று குலாபய் ராஷிதீன் என்னும் முஸ்லீம் செல்வர் கூறுவதுண்டு. நாமும் இவ்வார்த்தையைப் பின்பற்றி முயலவேண்டும். இதற்காகவேதான் [illegible]

ஏற்பட்டுள்ளன. கேவலம் லௌகீக கல்வியைமட்டுமே இக்கலாசாலைகள் போதிக்கக்கூடாது. புராதன சரித்திரத்தையும் மார்க்கத்தையும்பற்றிய கல்வி அவசியம் போதிக்கப்படவேண்டும். ஆனால் இப்போதுள்ள நமதுகலாசாலைகள் எல்லாம் இவ்வாறு செய்கின்றனவா? இல்லையென்றே சொல்லவேண்டும். நல்லகல்வி கற்பிக்கப்படுகின்றதென்பது உண்மையாகவிருக்கலாம். அக்கலாசாலைகளிலிருந்து நல்ல முஸ்லீம்கள் வெளிவருகிறார்களாவென்பதுமட்டும் சந்தேகம். இதற்குக் காரணங்கள் பல. அக்காரணங்களைமட்டும் இங்கு சுருக்கிக் கூறுவோம்:—

(1) மார்க்கவிஷயமாகப் போதுமானகல்வி கற்பிக்கப்படுவதில்லை, ஒருவேளை கற்பிக்கப்பட்டாலும், உபாத்தியாயர்கள், பிள்ளைகள் பார்த்து நடக்கும்படியான மாதிரிகளாக இருப்பதில்லை. உபாத்தியாயர்களும் கலாசாலை அதிகாரிகளும், அவர்களுடைய மார்க்கத்திலுள்ள மார்க்க உபதேசிகளுக்கு விசேஷ கௌரவம் வைப்பதில்லை. இதற்கு லாயக்காயுள்ளவர்கள் சிலர் இருப்பார்கள் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். ஆயினும் அவர்கள் சங்கியையில் வெகுவாகக் குறைந்தவர்களாகவே இருப்பார்கள். இவ்விதமாக இருக்கும்வரையில் நாம் முன்னுக்குவருவது கடினம். (2) உபாத்தியாயர்கள்மீது மட்டும் பழியைச்சுமத்துவது நியாயமல்ல. பெற்றோர்களும் இவ்விஷயத்தில் ஏனோ தானோவென்றுதான் இருக்கிறார்கள். அவர்களுக்கே மார்க்கவிஷயமானஞானம் அதிகமாகஇருப்பதில்லை. இவர்களின் கீழ், பிள்ளைகளிருப்பது "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" என்பதைப்போலுள்ளது. (3) ஜாதீய கலாசாலைகளில் சொந்த சரித்திரத்தைத் தெரிந்துகொள்வதற்கு விசேஷசௌகரியங்கள்செய்துகொடுக்கவில்லை. பிள்ளைகளுக்கு அவ்விதமாகப்பள்ளிக்கூடங்களில் நுழையும்போது எவ்வளவுஞானம் இருந்ததோ அவ்வளவுஞானந்தான் அவர்கள் பள்ளிக்கூடங்களை விட்டு வரும்போதும் இருக்கிறது. பெரிய உத்தியோகங்களைப் பெறவேண்டுமென்ற எண்ணத்துடனேதான் பிள்ளைகள் கல்விச்சாலைக்குட் புகுகின்றனர். முன்னோர்களுடையபிரவர்த்தி, எவ்வளவுசிரேஷ்டமானதாகவிருந்தாலும், பிள்ளைகளுக்குப் பிடிப்பதில்லை. லௌகீகஞானத்தைப்பெற்று, பட்டதாரிகளாக ஆவதுதான் உடம்பெடுத்த பயனென்று கருதுவது பிழை

யாகும். அதனால், ஜாதீய அபிவிருத்தி உண்டாகாது. காலத்துக்கு ஏற்றபடி நாம் நடக்கவேண்டும்; ஆரம்பத்திலேயே நாம் தவறிவிட்டோம் என்று தோன்றுகின்றது. இனி இதைப்பற்றி அதிகமாகப் பேசுவதிற் பயனில்லை. காரியத்தைத்தான் செய்யவேண்டும். நல்ல மாதிரியாக நடந்துகாட்டி, பின்புள்ளோர்க்கு மாதிரிகளாகவிருக்க வேண்டியதுதான் நல்லதென்று காண்கிறது.

ஹிலா ஹுடன்.

ஸர் ஸாலர் ஜங்.

அரியதாகிய இம்மானிடப் பிறவியில் உதித்து அருஞ்செயல்களைச்செய்து அதனால் அழியாப் புகழ்படைத்த நமது முஸ்லீம்செல்வர்களின் சங்கியை அனந்தம். அவர்களுடைய நடை யுடை பாவனைகள், காரியங்கள், கருத்துக்கள் எல்லாம் நமக்கும் நமக்கு முன்னும் பின்னு முள்ளோர்களுக்கும் நல்ல மாதிரிகைகளாமென்பதிற் சிறிதேனும் சந்தேகமில்லை. உலகத்திற் பேர்படைக்கவேண்டுமென்று எண்ணுவது சர்வ சாதாரணமாம். அதிர்ஷ்டவசத்தினால் காலமும் இடமும் வாய்க்க, அதனால் பேர்படைத்தவர்களும் இருக்கின்றனர். ஆயினும், தம் தம் முயற்சியினாலேயே மேலெழுந்து புகழ்படைத்தவர்கள் பலர். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" என்று வள்ளுவரும் கூறுகின்றனர். ஆதலால், புகழ்படைக்கவேண்டுமென்னும் அவா ஒவ்வொருவர் மனத்திலும் இருப்பது நிச்சயமாதலால், அவர்களுடைய இன்பத்துக்காக, பூர்வம் புகழ்படைத்தசிரேஷ்டர்களின் ஜீவியசரிதச் சுருக்கங்களைச் சமயம் வாய்க்கும்போதெல்லாம் நமது "இஸ்லாம்நேசன்" மூலமாய் வெளியிடலாமென்பது எமது துணிபு. மார்க்க விஷயமாக வுழைத்துப் பேர்பெற்ற சிரேஷ்டர்கள், பரோபகாரச் சிந்தையுடையவர்களாய் ஏழை எளியவர்களுடைய கஷ்டங்களைத் தீர்க்க முயன்று முன்வந்த பிரபலர்கள், செல்வங்களிலெல்லாம் மேலான கல்விச் செல்வத்தைப் பெற்ற உத்தமர்கள், செங்கோன் முறைமை கோணாத முடிமன்னர்கள், வரும்பொருள் உரைத்த [illegible]

யே அழகாகக்கொண்டு விளங்கிய மந்திரிகளான ராஜ்யதந்திர நிபுணர்கள், சிறந்த சாஸ்திரக்ஞர்கள், புலவர் திலகர் கொண்டாடும் கவிச்சிரேஷ்டர்கள், மா நிதியம் படைத்த வியாபாரிகள் முதலியோர்களுடைய சரித்திர விநோதங்களை எழுதி வெளியிடுவதில் நமது அபிமானிகளுக்குப் பூர்ண திருப்தியிருக்குமென்றே எண்ணுகிறோம். முதன்முதலில் நமது இந்தியாவில் ஹைதராபாத் ராஜ்யத்தில் மந்திரித்துவம் வகித்துப் பெருமைபெற்ற நவாப் ஸர் ஸாலர் ஜங் என்பவரைப்பற்றிப் பேசுவோம்.

நவாப் மீர் துரா அலிகான் பகதூர், ஸாலர் ஜங், ஷுஜா-உட்டௌலா, முக்தாருல்முல்க் என்னும் விருதுப்பெயர்கள் பெற்ற ஸர் ஸாலர் ஜங் அவர்கள் ஹிஜிரி 1244-ம் ஆண்டில் (கி. பி. 1834) ஜனனமானார்கள். அவர்களுடைய முன்னோர்கள் புண்ணியக்ஷேத்திரமாகிய மெதினா நகரத்திலிருந்து இந்தியாவின் மேற்குக்கரையிலுள்ள கொங்கணநாட்டிற் குடியேறியிருந்தனர். அவர்கள் பீஜப்பூர் ராஜ்யத்திலிருந்த உயர்குடும்பத்திற் சம்பந்தம் செய்துகொண்டனர். அச்சந்ததியிலுதித்த ஒருவர், முதல் நிஜாம் அவர்களுடைய தலைமையின் கீழ் அமர்ந்ததும் நவாப் என்னும் பட்டப்பேர் பெற்றனர். அக்காலந்தொடங்கி, அந்த வம்சத்தில் யாரேனுமொருவர் நிஜாம் ராஜ்யத்தில் ராஜரீக விஷயங்களில் முதன்மைபெற்றே வந்திருக்கின்றனர். காரன்வாலிஸ் பிரபு இந்தியாவில் இராஜப்பிரதிநிதியாகவிருந்த காலத்தில் மீர் ஆலம் என்பவர் அங்கு முதன் மந்திரியாக விருந்தார். அவருக்குப்பின் அவருடைய மருமகனாகிய முனீருல் முல்க் அமீருல் உம்ரா என்னும் கனவான் மந்திரியானார். அவர் நமது ஸர் ஸாலர் ஜங் நவாபின் பாட்டனார். பின்னர், அவருடைய குமாரரான ஸிராஜ்-உல்முல்க் என்பவர் மந்திரியானார். அவர் 1853-ம் ஆண்டு மேமீ 27ந்தேதி இறந்ததும், மந்திரி ஸ்தானம் அவரது சகோதரரின் குமாரரான நமது ஸாலர் ஜங்குக்கு வந்தது. ஸாலர் ஜங் மந்திரித்துவத்தை அடைந்தபோது அவருக்குப் பத்தொன்பது வயது. ராஜகீயவிஷயங்களில் அதிக அனுபவமில்லை. ஆனால், அபூர்வ சாமர்த்தியம் படைத்தவர் என்பதைமட்டும் தெளிவாகக்காட்டிக்கொண்டார். அவருடைய பாலியத்தின் பெரும்பாகத்தை ஆங்கிலேய ரெஸிடென்ஸியிற் கழித்திருந்தனர். அவர் மந்திரி ஸ்தானத்தைப்பெற்ற அவ்வருஷத்தில்தான் ஹைதராபாத்துக்குச் சொந்தமான பீரார் மாகாணங்கள் ஆங்கிலேய அரசாங்கத்தார் வசம் ஒப்படைக்கப்பட்டன. வளமைபொருந்திய அப்பிரதேசங்கள்நாட்டைவிட்டகன்றதற்குப் பொருமுதவர்களாய் ஜனங்களெல்லோரும் பொங்கிக்கொண்டிருந்தனர். ராஜ்யப் பொக்கிஷம் சூனியமாகவிருந்தது; வரி விதிக்கப்பட்ட ஒழுங்கு பயனற்றதாகவும் வீணானதாகவுமிருந்தது; மதாவேசம் குடிகொண்ட வைரிகள் ஹைதராபாத்தில் வெகுவாகக் கூடியிருந்தனர். அப்படிப்பட்ட காலத்தில் விசேஷ அனுபவம் பெற்ற பிரபலர்கள்கூடச் சற்று மனம் தயங்குவார்கள். ஆனால், நமது நவாப் ஸாலர் ஜங் வெகு தைரியமான மனதோடு வேலைக்குத் தொடங்கிவிட்டனர். முதன்முதலில் சர்க்கார் உத்தியோகத்தில் இருந்தவர்களுடைய சம்பள விகிதங்களைக்குறைத்தனர். அவருடைய சொந்தச் சம்பளமுங் குறைபட்டது. போலீஸ் அதிகாரிகளை அதிகப்படுத்தினர். கலகஞ் செய்வதற்குத் தகுந்தவிடமென்று எண்ணி, திரள் திரளாக ஹைதராபாத்துக்குட் குடியேறிய ரோஹில்லர்களையும் அரபியர்களையும், அவ்வாறு அங்கு குடியேறவொட்டாமற் றடுத்தனர், அதிகம் சொல்வானேன்? நான்கு வருஷங்களுக்குள் ஆச்சரியமான மாறுதல்களைச் செய்துவிட்டனர். வியாபாரம் பிரபலமடைந்தது; நாட்டின் வரும்படி அதிகரித்தது; ஜனங்களுக்கும் பொருள்களுக்கும் பயம் அகன்றது. அத்தருணத்தில் அவரைச் சோதனை செய்வான்போன்றதோர்காரியம் நிகழ்ந்தது. முஸ்லிமான அவர் ஒரு இஸ்லாம் நாட்டின் அதிபதியாகவிருந்தார். பெரிய சிப்பாய்க்கலகம் இந்தியாமுழுவதிலும் பரவிவிட்டது. ஆங்கிலேயருடைய அதிகாரம் மயிர்முனையில் தொங்கிக்கொண்டிருந்தது போன்றிருந்தது. ஹைதராபாத்து ஜனங்கள் வீதிகளில் கிளம்பிச் சண்டைக்குக் கூவிக்கொண்டிருந்தனர். மத்திய இந்தியாவும் தக்ஷிணமும் ஹைதராபாத்தையே நோக்கிக்கொண்டிருந்தது. “நிஜாம் போய்விட்டால், நாம் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம்.” என்று பம்பாய் கவர்னர் ரெஸிடெண்டுக்குத் தந்தியடித்தனர். கலக நெருப்பு சென்னையிலும் பம்பாயிலும் பற்றியிருக்கும். ஆனால், அவ்விதமான சம்பவங்கள் ஒன்றும் நேரிடவேயில்லை. நிஜாம்நிலைதவறவில்லை. ஆனால் கலகக்காரர்களை அடக்குவது மட்டும் இருபத்து நான்குவயதுள்ள சிறு

வரைப்பொறுத்ததாகவிருந்தது. போதாததற்கு இந்தக்குழப்பத்தின் நடுவில் நிஜாம் அவர்கள் தேகவியோகமாய்விட்டனர்கள். ராஜனில்லாமல் இருந்தால் உண்டாகக்கூடிய தீங்குகளை நன்குணர்ந்த ஸாலர் ஜங் உடனே நிஜாமின்சிறுமகனைப்பட்டத்தில் வைத்தனர். இந்தவைபவத்தைக்கண்டு திரும்பிய ரெஸிடெண்டான கர்னல் டேவிட்ஸன், தமது விடுதிக்குப்போனதும் அந்த ராஜப்பிரதிநிதியிடமிருந்து "டில்லி நகரம் கலகக்காரர்களின் கைவசமாயிற்று. என்று வந்திருந்த தந்தியொன்றைக் கண்டார். உடனே அவர் ஸாலர் ஜங்கை வரவழைத்துச் சமாசாரத்தைச்சொன்னார். அதற்கு ஸாலர் ஜங் அந்த சமாசாரம் ஹைதராபாத் வாசிகளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பேயே தெரிந்து விட்டது என்றுரைத்தனர். முடிசூட்டுக்குவந்திருந்தபோதேஎல்லோரையும் மடக்கி, தடையொன்றுமே யில்லாமல் செய்திருப்பதற்கு அவர்களுக்குச் சௌகரியம் இருந்தது. ஆனால் ஸாலர்ஜங் நடுவுநிலைமைதவறாத உத்தமகுணசீலரானதால், தம்முயிரையும் பொருட்படுத்தாமல் கலகத்தை அடக்குவதிலேயே கண்ணுங் கருத்து மாயிருந்தனர். கலகப்பிரியரானஜனங்கள் இவரைப்பலவிதத்திலும் வேண்டிக்கொண்டனர். ஒன்றுக்கேனும் இவர் இடங்கொடுக்கவில்லை. தம்மைப்போலவே உறுதியாக நின்ற அரபிப்பட்டாளத்தைக்கொண்டு, கலகஞ்செய்யும் ஜனங்கள் கோட்டையை விட்டுவெளியே போகாமல் வாயிற் கதவண்டை காவல்செய்து விட்டனர். ரெஸிடென்ஸி தாக்கப்பட்டபோது, உடனே இவர் கலகக்காரர்களைக்கடுமையாகத் தண்டித்து, கலகம் இன்னும் விருத்தியாகாமலிருக்கும்படி செய்தார். அவர் அக்காலத்தில் ஆங்கிலேயருக்குச்செய்த உதவி அளவுபடுவதன்று. மதிப்பிடக்கூடியது மன்று.

கலகம் நின்றதும், பழையபடியே ஸாலர் ஜங், தமது நாட்டைச் சீர்திருத்துவதில் கருத்தைச்செலுத்தினார். அவர் மந்திரியாக விருந்த காலத்தில் இருபது வருஷங்களுக்குள் அந்நாட்டின் வரும்படி எழுபத்து நான்கு லக்ஷத்திலிருந்து இரண்டரைக்கோடியாக அதிகரித்துவிட்டது; ஜனங்கள் விருத்தியடைந்தனர்; நல்ல ரஸ்தாக்களும் இருப்புப்பாதைகளும் போடப்பட்டன; நீர்ப்பாசனச் சௌகரியத்துக்காக பெரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன; நாட்டின்பெரும்பாகம், வரும்படியின் கணக்குக்காக, அளக்கப்பட்டது; கல்வி அபிவிருத்தியடைந்தது. பந்தோபஸ்துக்குத் தகுந்த போலீஸ்ஏற்படுத்தப்பட்டது; உபயோகமற்றபோர்வீரர்கள் விலக்கப்பட்டனர்; இவ்விதச்சீர்திருத்தங்களெல்லாம் பழைய பிரபுக்களுக்குப் பிடிக்கவில்லை; அவர்கள் நவாப் ஸாலர் ஜங்கை எப்படியாவது வேலையைவிட்டு அகற்றிவிடவேண்டுமென்று முயன்றனர். நிஜாம் கர்னல் டேவிட்ஸன், ஸாலர் ஜங் இவர்களுள் ஒருவர்க்கொருவரிடம் மனஸ்தாபம்வரும்படியாகவுஞ் செய்துவிட்டனர். ஆயினும், தப் காரியத்தைச்செவ்வனே சாதித்துக்கொண்டு போகக்கூடிய சக்தி ஸாலர் ஜங் இடமிருந்தது. மேலும் அவர்செய்த அரியஉதவிகளுக்காக அவரை ஆதரிக்க அக்காலத்து ஆங்கிலேய கவர்னமெண்டார் இசைந்திருந்தனர். 1869-ம் ஆண்டில் நிஜாம் அப்ஜலுல்டௌலா தேகவியோகமானதும், சர்வாதிகாரத்துடனும்ஸாலர்ஜங் பிரதிகாவலராயினர். அவருக்குத்துணையாக அமீரிகுபீர்என்பவரும் உடன் பிரதி காவலராக நியமனம்பெற்றனர். 1875-ல் அப்போது இங்கிலாந்துக்கு இளவரசராகவிருந்தவர் (மாஜி சக்ரவர்த்தி ஏழாவது எட்வர்டு அரசர்) இந்தியாவுக்கு வந்தபோது, நமது ஸாலர்ஜங்கை நேரிற்கண்டு, அவருடைய அபூர்வசக்திகளைப் பார்த்து வியந்து, அவரை இங்கிலாந்துக்கு வந்துபோகும்படிகேட்டுக்கொண்டனர். இவரும் அப்படியேசென்றனர். இங்கிலாந்திலும், ஐரோப்பாவில்மற்றைய விடங்களிலும் நமது ஸாலர் ஜங்குக்கு ராஜோபசாரமாகவே மரியாதைகள் நடந்தன. அவர் ஒரு பெரிய ராஜ்யத்தின் பரம்பரை அரசரெனவே பலபேர்களால் கருதப்பட்டனர். ஆனால், இந்தியாவுக்கு அவர்திரும்பிவந்ததும், அப்போதுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களால் சரியானபடி மரியாதை செய்யப்படவில்லை. பீரார் மாகாணங்களைத் தமது நாட்டுடன் மறுபடியும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுஅவருடைய அவா; அதற்குச் சிலசௌகரியங்களையும்தாம் இங்கிலாந்தில் தாமதித்தபோது செய்து வந்தனரென்று கருதப்பட்டனர். அதுகாரணமாகவே அவருக்கு மரியாதை குறைந்ததென்று ஊகிக்க இடமுண்டு. ஹைதராபாத்தில் அவருக்குஜன்மவிரோதியான ஒருவர் உடன்பிரதிகாவலராக நியமனம் பெற்றனர். அப்படிப்பட்ட சமயத்தில், ஸாலர் ஜங் வேலையைவிட்டு நீங்கிவிடுவார் என்று கூட எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஹைதராபாத்துக்குஇன்னும் நற்காலம் இருந்தது. எத்தனையோ துன்பங்களையும் சோதனைகளையும்பொறுத்

த நமது ஸாலர் ஜங் இவைகளையெல்லாங் கவனிக்காமல் முன்போலவே முதன்மைப்பதவியை அடைந்தனர். இருந்தாலும் அவருக்குப் போட்டியாக வேறொருவர் நியமிக்கப்பட்டபடியால், முன்போல, அவ்வளவு எளிதாய்ச் சீர்திருத்தங்களைச் செய்யச் சௌகரியமில்லாதுபோயிற்று.

ஸாலர் ஜங் வெகு அழகாக உடுக்கப்பெற்றவர் என்று சொல்வதுண்டு: அவரது உடை வெகு சாதாரணமானதேயாம்; தலையிலணியும் வெள்ளைப் பாகை மிகுந்த அழகுடன் விளங்கும். அவர் நெட்டையானவர்; முகமோ, அமைதியோடு விளங்குவதாயினும் நன்றாக யோஜிக்கும் தன்மையைப் பெற்றவர் என்பதைக் காட்டும். புன்சிரிப்பு வரும்போது அது வெகு சோபிதமாகத் தோன்றும். ஆங்கிலேயபாஷையில் எழுதுவதிலும் பேசுவதிலும் கைதேர்ந்தவர். நடந்துகொள்ளும் மாதிரியோ வெகு மரியாதையானதாம்.

ஸாலர் ஜங் செல்வாக்கில் மிகுந்தவர் என்று சொல்வதினாலேயே அவர் எப்போதும் வேலை செய்துகொண்டிருப்பவர் என்பதும் விளங்கும். காலையில் ஆறுமணிக்கெல்லாம் படுக்கையைவிட்டெழுந்திருந்து கொலுமண்டபத்தில் வீற்றிருப்பார். அங்கு ராஜ்யத்திலுள்ள கேவலந் தாழ்ந்தஜனங்கள்கூட தாராளமாய்ப் போகலாம்; பிற்பாடு படிப்பறைக்குப்போய், கஜானா கணக்குகளைப் பார்வையிடுவார்; ரெஸிடென்ஸியிலிருந்து பார்ஸிய முன்ஷீ கொண்டுவரும் கடிதங்களைப் பற்றி யோஜிப்பார். பின்னர் நீதிபதிவந்து பார்வையிடுவார். இதற்குள் பத்தரைமணி யாகிவிடும். கால்மணிநேரத்துக்குள் காலைப்போஜனத்தை முடித்துக்கொண்டு, தமது பிரதான முன்ஷியை வரவழைத்து அவருடன், முதல்நாள் வந்த மனுக்களைப் பார்வையிடுவார். பன்னிரண்டுமணிக்குப் பிரபலர்களுக்குத் தனியே பேட்டி கொடுப்பார். பன்னிரண்டரைமணியானதும் நகரப்பிரபுக்கள் வந்து கண்டு போவார்கள். கடிதங்களுக்குக் கையெழுத்துப் போட்டபின், சிறிதுநேரம் இளைப்பாறுவார். இரண்டுமணிக்கெல்லாம், சில்லறை உத்தியோகஸ்தர்களும், ஸாவகாரிகளும் நிஜாமின் அந்தரங்க அதிகாரிகளும் வந்துபோவார்கள். ஐந்தரைமணிக்கு, குதிரைலாயங்களைச் சுற்றிப்பார்த்து வந்தபின், நகரைச்சுற்றி, வண்டியேறியோ, குதிரைசவாரிசெய்தோ பார்த்துவருவார். திரும்பிவந்ததும் சாப்பிட்டுவிட்டுத் தமது சொந்தக்கடிதங்களைக்கவனிப்பார். இரவு பத்தரைமணிக்குப் படுக்கப்போவார்.

அவருடைய அரிய வேலைப்பாட்டுக்கு மெச்சிய அறிகுறியாக, கவர்ன்மெண்டார், 1867-ல் அவருக்கு கே. ஸி. எஸ். ஐ என்னும் பட்டத்தையும் 1871-ல் ஜி. ஸி. எஸ். ஐ. என்னும் பட்டத்தையும் அளித்தனர். இவர் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது, ஆக்ஸ்போர்டு கலாசாலைச்சங்கத்தார் தமது நன்குமதிப்பைத்தெரிவிப்பதற்காக இவருக்கு டி. ஸி. எல் என்னும் கௌரவபட்டத்தை மகிழ்ந்து அளித்தனர். இவ்வளவு செல்வமும் சீரும் படைத்த இம்மகானுடைய சாமர்த்தியத்தின் பயனை ஹைதராபாத் ராஜ்யம் நெடுங்காலம் அடையப் பாக்கியம் செய்திருக்கவில்லை. ஸர் ஸாலர் ஜங் பகதூர் அவர்கள், 1883-ல், தம்முடைய நாற்பத்தொன்பதாவதான இளம்பிராயத்தில், காலராவென்னும் கொடிய வியாதியினால் தேகவியோகமாயினர். இவருக்கு இரண்டு புத்திரர்களும் இரண்டுபுத்திரிகளும் உளர்.

இவரது சரித்திரத்தால் நாம் அறிந்துகொள்ளவேண்டியபடிப்பினைகள் பலவுள்ளன. அதிபால்யத்தில் அதாவது பத்தொன்பதாவதுபிராயத்திலேயே ஒரு பெரிய ராஜ்யத்தின் முதன் மந்திரிஸ்தானத்தை வகிக்கத்தக்க மனோபலம் தமக்குப் பூரணமாக உண்டு என்பதை இவர் நன்றாகவுணர்ந்திருந்தார். அவரைப்போல அவ்வளவு இளம்வயதில்இவ்விதமான பதவியைப்பெற்றவர்களேயில்லை. ஆங்கிலேயநாட்டில் பிட் என்பவர் தமது இருபத்துநான்காவதுவயதில் முதன்மந்திரி யானார். நியாயமான காரியங்களில் எவ்வளவு இடுக்கண்கள் நேரிட்டபோதிலும் அவைகளைப் புறக்கணித்துவிட்டு, காரியத்தின்மீதிலேயே நோக்குடையவராக விளங்கியவர்களுள் நமது கதாநாயகர் சிரோமணியாக விளங்குகிறார். தமது பதவிக்கேற்ற பெரும் ஞானமும் அதற்கேற்ற நற்குணங்களும் நமது ஸர் ஸாலர் ஜங் பகதூரிடம் நிறைந்திருந்தனவென்று தனியாகச்சொல்லவேண்டியதில்லை. தம்முயிரைக்கூட லக்ஷியம்பண்ணாமல் நம்பினவர்களைக் காப்பாற்றுவதிலே முயற்சிசெய்ய முன்வந்து பேர்படைத்த இவருக்கு உவமைபெறக் கூடியவர்கள் அருமையிலும் அருமை.

ஜிலாலுடீன்.

பலதாரமணங் குற்றமா ?

—::—

நண்பர்காள்! கிறிஸ்துவ சகோதரர்கள் தங்களுக்குள், சக்தியுமகத்தியமு முள்ள ஒருபுருஷன் ஒருதாரத்திற்கு மேற்பட்டு விவாகஞ் செய்யக் கூடாதென்று சொல்வது, உங்களனைவோர்க்கும் நன்கு தெரிந்த விஷயமேயாம். மேற்கண்ட சக்தியுமகத்தியமு முடைய வொருபுருஷன் பலதாரமணஞ்செய்து கொள்ளலாமா என்பதைப் பற்றியீண்டு விவரித்துக் கூறுவாம்.

ஒருமனைவிக்கு மேற்பட்டு நான்குமனைவி வரைக்கும் அன்னவஸ்திர முதலானவை கொடுத்து சம்ரக்ஷணை செய்யும்படியான பொருள்மிகுதியும், அவர்களிச்சையை நிவிர்த்திக்கக்கூடிய ஆண்மையையுமுடைய; ஒருபுருஷ சிரேஷ்டன், ஒருமனைவிக்கு மேற்பட்ட இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு மனைவிகளை விவாகஞ்செய்துகொள்ள யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஏனென்றால், உத்தியோக முன்னிலையிலாவது வர்த்தக முன்னிலையிலாவது மற்றெவ்வித முன்னிலையிலாவது அதிகக் கஷ்டப்பட்டுப் பொருள்களைச்சம்பாதித்து அப்பொருள்களைக்கொண்டு பெண்ணை, விவாகஞ் செய்து, அவளுக்குவேண்டிய அன்னவஸ்திர முதலிய சௌகரியங்களுக்காகத்தான், அவ்வளவு பொருள்களைச் செலவுசெய்து காப்பாற்றி வருகிற தன்மை, ஆண்மக்களுக்கேயன்றிப் பெண்மக்களுக்கு இல்லையல்லவா? இதுவுமன்றிப், புருஷன் தன்னுடைய ஆயுள் வரையிலும், தன்மனைவிக்கு அன்னவஸ்திரங் கொடுத்துக் காப்பாற்றி வருகிறது மன்றித், தனக்குப் பிற்காலத்திலும் அவளுக்குக் குறைவுவராமலிருக்கும்படி, தான் வெகு சிரமப்பட்டுச்சம்பாதித்த சொத்துக்களையும் அவளுக்கு ஆஸ்தியாக வைத்துப்பாதுகாக்கும் தன்மை, புருஷனிடமிருக்கிறதேயன்றி ஸ்திரீயினிடமில்லை. இவ்விதமாக மனைவியைக்கண்ணுங் கருத்துமாகக்கவனித்து வருகிற ஒருவன், சக்தியிருந்து தன் தேகசௌக்கியத்தினிமித்தம் ஒருமனைவி போதாமல், இரண்டு மூன்று நான்கு பெண்களை விவாகஞ்செய்ய நினைப்பானாகில், கிறிஸ்துவர்கள் அவ்விதஞ் செய்யக் கூடாதென்று தடுப்பதற்கு என்ன நியாயமிருக்கிறது.

அன்பர்காள்! நாஸரத்து வாசியான் இயேசுநாதராற் சொல்லப்பட்டதெனப் பிழைபடக்கூறும் பைபிளில், ஓரே ஸ்திரீக்கு மேற்

பட்டபெண்களை விவாகஞ் செய்யக் கூடாதென்று கட்டளையிடப்பட்டிருக்கிறதா? எனப்பார்ப்போம். மத்தேயு 19-ம் அதிகாரம் 4, 5, 6-வது வசனங்களில், "ஆதியிலே சிருஷ்டிகர் (ஒரு) ஆணும் (ஒரு) பெண்ணுமாக உண்டாக்கினார். இதனிமித்தம் ஒருவன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன்மனைவியுடனேயிசைந்திருப்பான்; அவர்களிருவரும் ஒருசரீரத்தைப் போல இணைபிரியா திருப்பார்கள்; அவ்விதமிருக்கிறபடியால், அவர்களிருவராயிராமல் ஓரேசரீரத்தைப் போலிருப்பார்கள். ஆதலால், பராபரனிணைத்ததை மனிதர்பிரிக்கக் கூடாதென்கிறார்." என்ற வாக்கியம் வெளிப்படையாயிருக்கிறது. இது நமக்கென்ன தெரிவிக்கிறதென்றால், கடவுள் ஆதியிலே (ஒரு) புருஷனையும், (ஒரு) ஸ்திரீயையும் சிருஷ்டித்தாரென்றும், அது பற்றிப் புருஷன் தகப்பனையும் தாயையும் விட்டு மனைவியுடனே சேர்ந்திருப்பானென்றும், பராபரனிணைத்ததை மனிதர் பிரிக்கக்கூடாதென்றுமேயாம். இதில், மனைவியை விலக்கக்கூடாதென்று காணப்படுகிறதேயன்றி, ஒரு மனைவிக்கு அதிகமாக விவாகஞ் செய்யக் கூடாதென்று இயேசுநாதர் சொன்னதாகத் தெரியவில்லையே? ஆனால், ஆதியில் (ஒரு)புருஷனையும் (ஒரு)ஸ்திரீயையும் கடவுள் சிருஷ்டித்த நிமித்தம் அவர்களிருவராயிராமல் ஓரே சரீரத்தைப் போலிருக்கவேண்டுமென்றும், மேற்கண்ட வாக்கியத்திற் காணப்படுவதால், ஒருவன் இரண்டு பெண்களை விவாகஞ் செய்யின், இருவராயிராமல் ஓரே சரீரத்தைப்போன்றிருக்க முடியுமா? என்று ஒரு கேள்வி கேட்கலாம். இரண்டு சரீரமாக விராமல் ஒரு சரீரத்தைப் போலிருக்க வேண்டுமென்று இயேசு நாதர் சொன்னதெல்லாம் வேற்றுமையாக விராமல், ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்பதற்கேயன்றி, இரண்டு சரீரமும் ஓரே சரீரமாக இணைந்து போவதற்கன்று. அப்படிச் செய்ய யாரால் முடியும்! உலகத்திற் பிறந்த ஒருவராலுமாகாது. ஏனெனில், ஒரு அணுவுக்குள் மற்றொருஅணு அடங்காதென்பது அனுபவசித்தம்.

ஆகவே, நாம் மேலே வரைந்தவாறு, மணமகனும் (புருஷன்) மணமகளும் (பெண்சாதி) வேற்றுமையின்றி யொற்றுமை யுடன் வாழ்வதற்கே இயேசு நாதர் சொல்லியிருப்பதாய் நிச்சயமாக இவ்

வொருவரும் நன்றாயறிந்து கொள்ளலாம். இவ்வித ஒற்றுமையுடனேயே ஒரு நாயகனிடத்திற் பல பெண்கள் இயற்கைப்படி விவாகஞ் செய்யப் பெற்று வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதைச் சுமார் அறுபது வகுப்புக்கு மேற்பட்டவரான கிறிஸ்துவர்கள் ஒவ்வொருவரும் ஆதாரமாகக் கொண்டிருக்கும் பைபிளிலிருந்து எடுத்துச் சொல்லுகிறேன். பரி.இயேசு நாதரின் தகப்பனெனப் பெயர்கொண்ட தாவீதுக்கு நூறுமனைவிகளும், கிறிஸ்துவர்களால் ஞானவானென்று கொண்டாடப் பெறும் சாலோமனுக்கு ஆயிரம் மனைவிகளு மிருந்ததாகப் பைபிளே கூறுகிறது. இவர்களெல்லாரும் ஒற்றுமையுடன் வாழ்ந்திருக்கவில்லையா! ஒற்றுமையுடனே வாழ்ந்து வந்தனரென்பது திண்ணம். இவ்வளவு தூரம் பேசி வந்த விஷயத்தில் மற்றொருபெரிய கேள்வியுண்டாகலாம். அது வருமாறு:—மத் 19, 14. “ஆதியில் சிருஷ்டிகர் மனிதரையுண்டாக்கினபோது (ஒரு) ஆணும் (ஒரு) பெண்ணுமாக உண்டாக்கினார்.” என்று பைபிளில் வந்திருக்கிற வசனப்படி ஆதாமுக்குக் கடவுள் ஏவாளைச் சிருஷ்டித்ததைத் தவிர, வேறு பெண்களைச் சிருஷ்டிக்கவில்லையே. ஆதாமுக்கு ஒருமனைவிக்கு மேற்பட்டுப் பல மனைவிகளிருக்க வேண்டு மென்று கடவுள் கருதியிருந்தால், ஏவாள்தவிர வேறு பெண்களைச் சிருஷ்டித்திருக்கலாமே. அவ்விதம் சிருஷ்டிக்கவில்லையே. கடவுள் ஆதிமனிதனாகிய ஆதாமுக்கு ஒரேஸ்திரீயைச் சிருஷ்டித்துக் கொடுத்ததெல்லாங்கூடி அவர் மக்களாகிய மனிதர்களெல்லாம் ஒரு ஸ்திரீயை விவாகஞ் செய்யவேண்டு மென்பது கருதியே.

இக்கேள்வியானது, மஹாகல்விமானாகிய கனம் - செய்யது இஸ்மாஹில் அல்பீஸ் அவர்களுக்கும்,சென்னைவிஸ்லியன் காலேஜ்ப்ரின்ஸபல் ரெவரண்டு மனோகன் எம்.ஏ. அவர்களுக்கும் நடந்திருக்கிற தர்க்கவாதப் புஸ்தகத்தில், கேட்கப்பட்டுச் சமாதானமுங்கூறப் பட்டிருக்கிறது. அதையவ்விதமே யெடுத்து யிங்கு வரைகிறோம்.

பாதிரியார்:—“இருக்கட்டும் செய்யது ஆதாமையும் ஏவாளையும் தேவன் சிருஷ்டித்தார் என்பதை நீவிர் ஒப்புக்கொள்ளுகிறீரோ இல்லையா?”

செய்யது:— “ஆம், ஐயா; நான் இதைமனப்பூர்வமா யொப்புக் கொள்ளுகிறேன்.”

பாதிரியார்:— “தேவன் இப்படிச் செய்ததினாலேயே அவர் ஒரேமனுஷியனையும் ஒரேஸ்திரீயையும்மட்டும் உண்டாக்கினார். என்பதை நீர் அறிந்து கொள்ளவில்லையா?”

செய்யது:— “ஆம், ஐயா; நான் அறிந்தே யிருக்கிறேன்.”

பாதிரியார்:— “தேவன் ஒருமனிதனுக்காக ஒரு ஸ்திரீயையே யுண்டாக்கியிருக்கிறபொழுது உம்முடைய குரானில், ஒருமனிதன் இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு ஸ்திரீகளைக் கலியாணஞ் செய்து கொள்ளலாமென்று அவர் எப்படி மறுபடியும் சொல்லியிருப்பார். இந்த விஷயமே குரான் தேவனுடைய வாக்கல்ல என்பதைக் காட்டுகிற தல்லவா?”

செய்யது:— “ஐயா! இந்த ஒருவிஷயத்தைக் கொண்டேகுரான் தேவவாக்கேயென்று நான் நிரூபிக்கிறேன். இப்பரிசுத்த குரானை யாதார பலமாகக் கொண்டே சகல மனிதர்களும் இனி ஒரு காலத்தில் இஸ்லாம் மார்க்கத்தைத்தழுவும் ஒரேமதஸ்தர்களாக ஆகி விடுவார்களென்றும் உமக்கு நிரூபிப்பேன்.”

பாதிரியார்:— “ஆ! ஆ! ஆ! மிகநேர்த்தியாக இருக்கிறது. எப்படி? சொல்லும் பார்ப்போம்”

செய்யது:—“ஐயா; நான் சொல்லுவதைத்தயவுசெய்து கவனத்தோடு கேளுங்கள். தேவன் ஒரேமனிதனையும் ஒரே ஸ்திரீயையும் படைத்தானென்றே நாமிருவரும் ஒப்புக் கொள்ளுகிறோம். நல்லது; ஜனனமரணக்கணக்கை “Census Report” எடுத்துப்பாருங்கள். ஐம்பது புருஷர்களுக்கு எழுபது ஸ்திரீகளிருக்கக் காண்கிறோம். ஆதியில் தேவன் ஒரேமனிதனையும் ஒரே ஸ்திரீயையும் படைத்துங்கூடத் தற்காலத்தில் புருஷர்களைக்காட்டிலும் ஸ்திரீகளதிகமாயிருக்கக்காண்கிறோமல்லவா? உண்மைஇப்படியிருப்பதினாலே ஆதியில் ஒரே மனுஷனும் ஒரேஸ்திரீயும் சிருஷ்டிக்கப் பட்டதற்கும், தற்காலத்தில் ஸ்திரீகள் பல்கியதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்பதைநீர் ஒப்புக்கொண்டே தீர வேண்டியிருக்கிறது. தங்களு

க்கு ஒன்று அதிவினயத்துடன் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். தங்களுடைய கொள்கைப்பிரகாரமும் வியாக்கியானத்தின்படிக்கும் ஐம்பதுபுருஷர்களிருப்பார்களேயானால், ஐம்பதுஸ்திரீகளுக்கு மேலிருக்கக்கூடாதே. ஒவ்வொரு புருஷனும் ஒவ்வொரு ஸ்திரீயைக் கலியாணஞ் செய்துகொண்டானானால், மீதி இருபது ஸ்திரீகளும் கணவனுந்து என்செய்வார்கள். அதாவது ஐம்பதுலக்ஷம் புருஷர்களும் எழுபதுலக்ஷம் ஸ்திரீகளுமிருக்கின்றார்களென்று நாம் குறைந்தபக்ஷம் கணக்குப் பார்ப்போமேயானாலும், எஞ்சிய இருபதுலக்ஷம் ஸ்திரீகளுக்குத் தேவன் எங்கே யிடம்பார்த்து வைத்திருக்கிறார்? ஆதலால், முன் யோசனைசக்தியுடைய ஆண்டவன் பிரதிதினமும் புருஷர்களின் தொகை குறைந்து ஸ்திரீகளின் தொகையதிகப்படுமென்று அறிந்தே, ஒருமனிதன் (ஒன்று) அல்லது இரண்டு, மூன்று நான்கு ஸ்திரீகளையும் கலியாணஞ் செய்துகொள்ளலாமென்று பரிசுத்தகுரானிற் கூறியிருக்கின்றான். பரிசுத்தகுரானிற் சொல்லப்பட்ட ஆண்டவனதுவசனமே தற்காலத்திலுள்ளஜனப்பெருக்கத்துக்குப் பொருந்தியிருக்கிறது. ஸ்திரீகளின் தொகை புருஷர்களின் தொகையைக் காட்டிலும் குறைந்திருந்தால் மட்டும் பரிசுத்த குரானின் உண்மையைப்பற்றி நீர் சந்தேகிக்க இடமுண்டாகலாம். ஆனால், ஸ்திரீகளின் தொகை யதிகரித்திருத்தல் பரிசுத்த குரான் வாக்கியத்திற்கு முற்றிலும் பொருத்தமாயிருப்பதால், பரிசுத்த குரான் தேவவாக்கென்பது ஸ்திரமாயிற்று.'' என்பனவும் பிறவுமாம்.

(இன்னும் வரும்)

ப-ர்.

உலக வர்த்தமானம்.

பாரஸீகத்தில் குழப்பம்

பாரஸீகத்தில் நவீனக்கிளர்ச்சியுண்டானதின் காரணமாக அந்நாட்டு அதிபதியான ஷா ஊரைவிட்டு அகற்றப்பட்டதும், பொதுஜன அபிப்பிராயத்துக்கு ஏற்ப இப்போது ராஜ்யபாரம் நடந்துவருவதும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயங்களாம். ஆயினும் அந்நாட்டில் இன்னுங் குழப்பம் நின்றபாடில்லை. ராஜ்ய விஷயங்களை யொழுங்காக்குவதற்கு வேண்டிய

பணம் கையிலில்லை. வெளியிற் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. கடன் கொடுக்கச் சக்தியுள்ள ஆங்கிலேயர்களும் ருஷியர்களும் சிற்சில நிபந்தனைகளின்பேரில் தான் கடன் கொடுப்பதாகச் சொல்கின்றனர். அந்நிபந்தனைகள் பாரஸீகத்தின் சுயேச்சாதிகாரத்துக்குத் தடையாகவிருப்பனபற்றி, அந்நாட்டார் அவைகளையங்கீகரிக்கத் தயங்குகின்றனர். இது இவ்வாறு நிற்க, ருஷிய சேனைகள் நாட்டைவிட்டுப் போகாமற் பிடிவாதமாக நின்றுகொண்டிருக்கின்றன. ஆயினும், பாரஸீகம் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. ருஷியாவினால் அதற்குச் சேதம் வராதபடிகாப்பதற்கு இங்கிலாந்து இருக்கின்றது. பாரஸீகத்தின் வடபாகத்தை ருஷியர் கைப்பற்றுவாரானால், அவ்விடத்தில் ஆங்கிலேயரும் ருஷியரும் அண்டைக்காரர் ஆவார்கள். ஆகவே அவ்விருவர்களுஞ்சற்று சாக்கிரதையுள்ளவர்களாகவே இருக்கநேரிடும். இதனால் அதிகமான பணச்செலவுமுண்டாகும். இவ்விதமாக நேரிடா வண்ணம், பாரஸீகத்திலிருக்கும் ஆங்கில்ஸ்தானாதிபதி முன் யோஜனைசெய்து காப்பாற்றுவாரென்று கருதப்படுகின்றது.

ப-ர்.

போபால் ராஜ்யம் பெண்ணரசு

இந்தியாவில் மத்திய மாகாணங்களிலுள்ள போபால் நாடு இப்போது ஒரு முஸ்லீம் சகோதரியால் ஆளப்படுகிற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்; ஆயினும் அவ்விராஜ்யம் சென்ற மூன்று தலைமுறைகளாகவே ஸ்திரீகளால் ஆளப்படுவது பலர்க்குத் தெரியாமலிருக்கலாம். மொகல் சக்ரவர்த்தியான அவுரங்கசீபின் கீழிருந்த ஆப்கானிய யுத்த வீரன் ஒருவனால் இவ்விராஜ்யம் சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்னால் ஸ்தாபிதமானது. இப்போது அரசு புரியும் உத்தமியின் பாட்டியாரான ஸிக்கந்தர்பேகம் வெகுசாமர்த்திய சாலியான அரசி; 1857-ம்வருஷத்திய சிப்பாய்க் கலகத்தில் அவர் ஆங்கிலேயருக்கு அரிய பலவுதவிகள் புரிந்தனர். அவருடைய குமாரத்தியான ஷாஜஹான் பேகம் அவருக்குப்பின்னால் பட்டத்துக்கு வந்தனர். இவ்விருவர்களும் பக்கா "கோஷா'' க்களாக விருந்ததில்லை; ஆனால், இப்போதுள்ளவரோ (நவாப் ஸுல்தான் ஜஹான் பேகம்) கோஷா ஸ்திரீயாயினும், புத்திக்கூர்மையும் சாமர்த்தியமும், ஜனங்களின் அபிவிருத்தியையே கோருஞ் சித்தமும் வாய்ந்த சீமாட்டியாவார். இந்த சந்தர்ப்ப

த்தில் பூர்வம் இந்தியாவில் சாமர்த்தியத்துடன் அதிகாரத்தை வகித்த ரிஜயா ஸுல்தான் பேகம், நூர்ஜஹான் பேகம் முதலிய முஸ்லீம் செல்வச் சீமாட்டிகளின் ஞாபகம் வந்து மனத்தை இன்புறுவிக்கின்றது.

* * * *

ருஷியாவில் இஸ்லாம்.

ருஷியாவில் உள்நாட்டுக் குழப்பங்கள் கொஞ்சங் கொஞ்சமாக அடங்கிவருகின்றன. ராஜ்ய விஷயங்களும் ஒழுங்குபெறுகின்றன. இதற்கிடையே, அந்நாடு தன்னையறியாமலே இஸ்லாம் மார்க்கத்துக் தவந்தனை வழிபாடு செய்துகொண்டிருக்கின்றது. அதன் தலைநகரான சென்ற் பீடர்ஸ்பர்கில், ஒரு மசூதி கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்து, அதற்கு அஸ்திவாரமுங் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் போடப்பட்டது. கிறிஸ்துவ மதாசாரியரான பாட்ரியார்க் என்பவர் இதற்கு எப்படி இணங்கினாரோ தெரியவில்லை. தாத்தாரி ஜாதியாருக்குத் தங்களுடைய பழைய இஸ்லாமிய சம்பந்தங்களை யடியோடே அறுத்துவிட முடியவில்லை போலும். இந்தப்புதிய மசூதி தனது வயிற்றுக்குள் என்னென்ன பெரும் விஷயங்களை அடக்கிக்கொண்டிருக்கின்றதோ அறியோம். ஒருவேளை, ருஷியா காலக்கிரமத்தில் ஒரு பெரிய முகம்மதிய ராஜ்யமாகி, மற்ற ராஜ்யத்துடன் போட்டிபோடுவதாக விருக்குமா? அல்லது காலத்தினுடைய செய்கைகளால் ருஷியாவும் மற்றகிறிஸ்துவநாடும் இஸ்லாம் மார்க்கத்தை அனுசரிக்கும் ராஜ்யங்கள் ஆகக்கூடுமா? கடவுளுடைய சித்தத்தை அறியவல்லார் யார்? என்று முஸ்லீம் ஹிரால்ட் கூறுகின்றது.

மார்க்க பேதிகளின் சங்கியை.

உலகத்தின் மொத்த ஜனஸங்கியை 1,544,510,000 என்றும் அவர்களில்,534,940,000பேர்கிறிஸ்தவர்களென்றும், 175,290,000 பேர் முஸ்லீம்களென்றும், 10,860,000 பேர் யூதர்களென்றும், 823,420,000 பேர் புறச்சமயத்தினரென்றும் ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். இப்புறச்சமயத்தினரில் 300,000,000 பேர் கான் பூசியர்களென்றும், 214,000,000 பேர் பிராமணர்களென்றும், 121,000,000 பேர் பௌத்தர்களென்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, உலகத்திலுள்ள ஆயிரம் மனிதர்களில் 346 பேர் கிறிஸ்தவர்களாகவும், 114 பேர் முகம்மதியர்களாகவும், 7 பேர் யூதர்களாகவும், 533 பேர் மற்றைச் சாதியாராகவும் இருக்கிறார்கள். 1885-ம் ஆண்டில் எடுத்த வோர் கணக்கின்படி அப்போது 230, 000,000 முஸ்லீம்கள் இருந்தனராம். சென்ற சில மாதங்களுக்கு முன்பிரசுரமானபிரபல்லிய சுவிசேஷவர்த்தமானிஎன்னும்கிறிஸ்தவ பத்திரிகையில் முஸ்லீம்கள் 24,000,0000 பேர்களிருப்பதாய்க் கண்டிருக்கிறது. இப்போது முஸ்லீம் ஜனஸங்கை குறைவதற்குக்காரணம் சொல்லப்படாமையால் நம்பிக்கைக்கு போதாததாகவேயிருக்கிறது.

* * * *

அலிகர் முஸ்லீம் கலாசாலை

முஸ்லீம் மாணவர்களுக்கென்றே அலிகர் நகரத்தில் ஒருபெரிய கலாசாலையிருப்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அதற்குச்சில காலைக்கு முன்னர் தம்பெயரைக் காட்ட விருப்பங்கொள்ளாத ஒருவர் லக்ஷம் ரூபா நன்கொடையளித்தனர். ராம்பூர் நவாப் மூலமாகக் கொடுக்கப்பட்ட அந்நன்கொடை அப்போது யாரிடமிருந்து வந்ததென்று தெரியாமலிருந்தது. இப்போது அப்பெருந் தொகையைக் கொடுத்தவர் குவாலியர் தேசத்து மகாராஜா ஸிந்தியா வென்று தெரிகின்றது. ஜாதி பேதத்தைக்கருதாது, முஸ்லீம்களின் அபிவிருத்திக்கென்றே ஓர் இந்திய அரசர் நன்கொடை புரிவது வெகுவாகச் சிலாகிக்கத் தக்கதேயாம். இந்தியர்களும் முஸ்லீம்களும் ஒத்துவாழமாட்டார்களென்று ஊளையிடும் ஜனங்கள் இந்த சமாசாரத்திலிருந்தாவது தாங்கள் சொல்வதும் எண்ணுவதும் பிழையென்று தெரிந்து கொள்ளட்டும். இது நிற்க, ஜூனாகாத் நவாப் அவர்கள் மேற் கூறிய கலாசாலைக்கு 25,000ரூபா நன்கொடையளித்திருக்கின்றனர். அப்பெருந் தொகையில் 5000 ரூபா, ஆக்காகானால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஐரோப்பிய கல்விவெகுமான மூலதனத்துக்கும், 8000 ரூபா ஒரு அச்சியந்திரசாலை ஸ்தாபிக்கப்படுவதற்கும், 12,000 ரூபா "ஜூனாகாத் விடுதி" என்ற பேருடன் ஒரு விடுதி மாணவர்களுக்காகக்கட்டப்படவேண்டியதற்குமாக விநியோகப்படுமென அறிகிறோம். முஸ்லீம்களின் நன்மையை உத்தேசித்து உதவி புரிந்த இந்த மகான்களுக்கு நாம் நமது மனப்பூர்வ

மான வந்தனத்தை ஸமர்ப்பிக்கின்றோம். இவ்வித அதிருஷ்டத்தைப் பெற்ற அக்கலாசாலையின் பொறுப்புக்காரர்களுக்கும் நம்முடைய சந்தோஷத்தைத் தெரிவிக்கின்றோம். அக்கலாசாலை மேன்மேலுந் தழைத்தோங்கும்படி நாயகன் அருள்புரிவானாக!

* * * *

இங்கிலாந்தில் இந்தியா ஆபீஸ் ஸபையில் இரண்டு இந்திய மெம்பர்கள் புதிதாக ஸ்தானம் பெற்றிருக்கிறார்களென்பதும், அவர்களுள் ஒருவரான ஸையது ஹுஸேன் பில்கிராமி என்னும் முஸ்லீம் சகோதரர் தமது வேலையை ராஜீநாமாக்கொடுத்துவிட்டாரென்பதும் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அந்தக் காலி ஸ்தானத்துக்கு இந்தியா காரியதரிசியான மார்லி பிரபு அவர்கள், ஜூனகாட் தேசத்தில் மந்திரி ஸ்தானத்தை வகித்திருந்த அப்பாஸ் அலிபேக் என்னும் முஸ்லீம் சகோதரரை நியமித்து அவர் லண்டன் போய்ச்சேர்ந்து வேலையை யொப்புக்கொண்டாரென்பதைக் கேட்க அத்தியந்த சந்தோஷப்படுகிறோம். இவர் பம்பாய் ஸிவில் ஸர்வீஸைச் சேர்ந்தவர். நல்ல மதியூகி; அரியசாமர்த்தியம் வாய்ந்தவர்; ஜன்ஜீரா, ஜூனகாட் இந்தநாடுகளை ஒழுங்காக்கி நன்னிலைமைக்குக் கொண்டுவந்த அநுபவசாலி. தமது ஸபையில் இந்தியர் ஒருவரும் மகம்மதியர் ஒருவரும் இருக்கவேண்டுமென்ற எண்ணமுடையவரான மார்லிபிரபுவுக்கு நாமெல்லோரும் நன்கு கடமைப்பட்டுள்ளோம். அப்பாஸ் அலிபேக் அவர்களுக்குத்தமது புதிய வேலையைச் செய்ய ஊக்கத்தையும், பூரண ஆயுளையும், திடசரீரத்தையும், மனச் சந்துஷ்டியையும் அல்லாகுத்தாலா அருள்வானாக!

இந்தியா ஆபீஸ் மெம்பர்ஸ்தானம் — அப்பாஸ் அலிபேக் நியமனம்

* * * *

முஸ்லீங்களின் கைத்தொழில்.

இந்தியாவில் இப்போது கிளம்பியுள்ள “ சுதேசியம் ” விஷயமாக முகம்மதியர்கள் ஒன்றுஞ் செய்யவேயில்லை என்று சிலர் கூறுவது வெற்றுரை யென்பது பின்வரும் விஷயங்களால் விளங்கும். கைத்தொழில்களை விருத்திசெய்வதில் அவர்களும் விசேஷமாக முன்வந்திருக்கின்றனர். உதாரணமாக ஆமதாபாத்திலும், எல்லிச்பூரிலும் அவர்கள் நெருப்புக்குச்சி யுண்டாக்கும் சாலைகள் நிருமித்து வேலை செய்கின்றனர். கல்கத்தாவிலும், ரெங்கூனிலும் தனித்தனியே எண்ணையாட்டும் யந்திரங்கள் உள்ளன. ஸூரத்தில் கடுதாசி உற்பத்திசெய்யுந் தொழிற்சாலை யொன்றுண்டு. லக்னோவில் பனிக்கட்டி செய்யுஞ் சாலையொன்றிருக்கிறது· கான்பூரில் தோல் பதமிடுஞ் சாலைகளும் இரும்புத் தொழிற்சாலையும் உள்ளன. வங்காளத்தில் கப்பலோட்டும் கம்பெனியானது முகம்மதியர்களால் தான் முதன்முதலில் ஸ்தாபிதமானது. பஞ்சாபில் ஓரியண்டு பாங்கு என்னும் நாணயசாலை முகம்மதியர்களால் நடத்தப்படுகிறது. சர்க்கரை ஆலைகளும், பஞ்சு ஆலைகளும் முகம்மதியர்களுக்குச் சொந்தமாக அநேகமாக உள்ளன. இவைகளையெல்லாம் யோசிக்கும்பொழுது முஸ்லீம்கள் இந்த நாட்டின் அபிவிருத்தி விஷயத்தில் பின் வாங்கவில்லையென்பது தெளிவாகும்.

முஸ்லீங்களின் அபிவிருத்தி.

மார்ச்சுமாதத்திய “ முஸ்லீம் ரிவியூ ” என்ற பத்திரிகையில் ஒரு நண்பர் முஸ்லீங்கள் மேன்மேலும் அபிவிருத்தியடையவேண்டுவதற்குச் சில குறிப்புக்களைக் காட்டியிருக்கின்றார். இந்தியாவிலுள்ள முஸ்லீங்கள் அனைவரும் நல்ல கட்டுப்பாடுள்ள ஜாதியாராக வேண்டியதற்கு அவர் செய்திருக்கும் பிரபோதங்களாவன:—

(1) கூடுமானவரையில் ஒவ்வொரு முஸ்லீமும் தேகாரோக்கியமுள்ளவனாகவும் மனதிலும் தேகத்திலும் சுத்தமும் திடனுமுள்ளவனாகவும் இருக்கவேண்டும். (2) ஒவ்வொரு முஸ்லீமும் பிறரைச் சார்ந்திராமல், தானே உழைத்துச் சம்பாதிக்கவேண்டும். (3)ஜனசமூக வாழ்க்கையில் நன்மையையும் நற்பயனையும் கொடுக்கக்கூடிய நற்குணங்களெல்லாம் ஒவ்வொரு முஸ்லீமிடமும் இருக்கவேண்டும். (4) ஒவ்வொரு முஸ்லீமும் தனது மார்க்கத்தை நன்றாகத்தெரிந்துகொண்டு முஸ்லீம் ஜனசமூகத்தில் தான் ஒரு அணுவென்றும் தன்னுடைய க்ஷேமம் தனதுஜனசமூகத்தின் க்ஷேமத்தோடு ஒற்றுமைப்பட்டுள்ளதென்றும் கருதவேண்டும். (5) ஒவ்வொரு

முஸ்லீமும் பிரதமக் கல்வியைக் கற்றிருக்கவேண்டும். (6) நமது ஜாதிய பலம் மற்றை ஜாதியாருடைய பலத்தைக் காட்டிலும் அதிகமானதாகவிருக்கவேண்டும். (7) நமது புத்தி சாமர்த்தியமும் அதன் பயன்களும் இயற்கையின்மீது மேலான அதிகாரத்தையுடைத்தானவையாக இருக்கவேண்டும். (8) நமது உலகதர்மங்கள் வெகு உத்தமமானவையாக இருக்கவேண்டும். (9) நமது வாழ்க்கை சுத்தமாகவும் எளிதாகவும் உபயோகமுள்ளதாகவு மிருக்கவேண்டும் (10) நமது ஜாதீய செல்வமும் செய்கைகளும் மிக மேன்பட்டனவாகித்துன்பத்தைக்குறைப்பதற்கும் சுகத்தை விருத்திசெய்வதற்கும் உபயோகப்படுத்தப்படவேண்டும்.

இவைகள் நல்ல பிரபோதங்களெனக் காண்கிறபடியால் ஒவ்வொரு முஸ்லீமும் தன்னாலானவரையில் இவைகள் கைகூடுமாறு உதவிசெய்வாராக.

பிரதமக் கல்வி யபிவிருத்தி.

——):*:(——

ஐக்கியநாடுகளில் நூற்றுக்கு இருபத்தொருபேர் பிரதமக் கல்வி கற்கும்மாணவர்களாக இருக்கிறார்களாம்; கனடா, ஆஸ்திரேலியா, ஸ்விட்ஜர்லாந்து, இங்கிலாந்து இன்வகளில் நூற்றுக்குப் பதினேழு முதல் இருபதுவரையில் இருக்கிறார்கள். ஜெர்மெனி, ஆஸ்திரியா, ஹங்கரி, நெதர்லாந்து இவைகளில் 15முதல் 17வரையில்; பிராஞ்சு தேசத்தில் பதினான்குக்குக்கொஞ்சம் மேல்; ஸ்வீடனில் 14; டென்மார்க்கில் 15; பெல்ஜியத்தில் 12; ஜப்பானில் 11; இத்தாலி, கிரீஸ், ஸ்பெயின் இவைகளில் 8–முதல் 9-வரையிலும்; போர்த்துகல், ருஷியா இவைகளில் 4-முதல் 5-வரையிலும்; பிலிப்பியன் தீவுகளில் 5; பரோடாராஜ்ஜியத்தில் 5; பிரிட்டிஷ் இந்தியாவில் இரண்டிற்குக் கொஞ்சங் தாழ்வு.

[“ஹாஜ்” மூலதனம்] போபால்பேகம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பம்பாய் “ஹாஜ்” கமிட்டியார், க்ஷேத்திர யாத்திரைக்குப் போகும் ஏழை எளியவர்களின் உதவிக்காகச் சென்ற வருஷம் ஒரு மூலதனம் ஏற்படுத்தினர். அந்தச் சாசுவத மூலதனத்துக்கு, வருஷாவருஷம் தாமுந் தொகைகொடுப்பதாக மேற்கூறிய

பேகம் அவர்கள்இந்தியா கவர்ன்மெண்டாருக்கு எழுதியிருக்கின்றார்கள். “ஹாஜ்” கமிட்டியார் இந்த மூலதனத்தைச் சாசுவத மூலதனமென்றும் தற்கால மூலதனமென்றும் இருவகையாக்கியுள்ளனர். சாசுவத மூலதனம் அக்கவுண்டாண்டு ஜெனரல் வசம் ஒப்புவிக்கப்படும். தற்கால மூலதனம் தீர்த்தயாத்திரைகளின் அவசர உபயோகத்துக்காகச் செலவழிக்கப்படும். அது கமிட்டியாரிடம் இருக்கும். இரண்டு மூலதனத்துக்கும் தொகை உதவிபுரிவோர்களுடைய விருப்பப்படியே அத்தொகை செலவிடப்படும். ஹாஜ் கமிட்டியின் அக்கிராசனாதிபதிக்குஇப்போதுபோபால்பேகம் 2400ரூபா அனுப்பியுள்ளார்கள். பம்பாய் வாசியான மக்பா என்னும் கனவானும், பிரயாணிகளின் உதவிக்காக 200ரூபா மேற்கூறிய கமிட்டியாருக்கு அனுப்பியிருக்கிறாரென அறிகிறோம். புண்ணிய க்ஷேத்திர யாத்திரைக்காகப் போகும் நமது ஏழை முஸ்லீம்களின் வறுமைப்பிணி இனி கொஞ்சங் கொஞ்சமாக நீங்குமென்று எதிர்பார்க்கிறோம். இவ்வரிய உதவிசெய்து பெரும் புண்ணியத்தைக் கட்டிக்கொள்பவர்களுக்கு ஆண்டவன் விசேஷ கருணைசெய்வானென்பதில் சந்தேகமில்லை.

“ஜெருசலேம் ஒமர்ஹத்தாபு மஜீதுஅசுசியாக்கப்பட்டது.” ஜெருஸலேத்திலுள்ள நம்மவர்களின் இராஜகெம்பீர உமறுகத்தாபுறளியல்லாஹு அன்ஹு அவர்களின்பள்ளிவாசலைப் பார்த்துவருவதற்காகச் சில அமெரிக்காப் பிரயாணிகள் சென்றனராம். சென்றவர்கள் தாங்கள் போட்டிருந்த பாதரக்ஷைகளோடு மஜீதுக்குள் நுழைந்துஉரத்தசப்தத்துடன் பேசிக்கொண்டும் புகைப்படம் பிடித்துக்கொண்டும் நின்றார்களாம். அத்தருணத்தில்ஆப்கானிஸ்தானத்திலிருந்துவந்து அங்குதொழுதுகொண்டிருந்த முஸ்லீம் தீர்த்தயாத்திரி யொருவர் அவர்கள் செய்வது தகாதென்று தடுத்துச்சொன்னார். உடனே அவருக்கும் அமெரிக்கர்களுக்கும் வாக்குவாதம் உண்டாக முஸ்லீம் கோபங்கொண்டுகைத்துப்பாக்கியை யுபயோகித்து பள்ளிவாசலைப்பார்க்க வந்தவர்களுள் இரண்டு அமெரிக்க ஸ்திரீகளைக் காயப்படுத்திவிட்டதாகவும், அவரைக் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் சமாசாரம் எட்டுகிறது. முன்னாளில், வைராக்கியங்கொண்டவர்கள் இருந்ததினால்

பள்ளிவாசலைப்பார்க்கப்போகிறவர்கள் தகுந்த காவலுடன் போவது வழக்கமாம். இப்போது அவ்வழக்கம் அதிகமாக நடையாடுவதில்லையென்றும், அதனால் சங்கடங்கள் நேரிடுகின்றனவென்றும் தெரிகின்றது. என்னதானிருந்தாலும், அந்நியமதஸ்தர்களுடைய பள்ளிவாசலில் ஒருவன் நுழைவதாகவிருந்தால், அம்மதஸ்தர்களுடைய மனதுக்கு விரோதம் வராமலிருக்கும்படி முன் ஜாக்கிரதை செய்துகொண்டே செல்லவேண்டும். இல்லாவிடில் வந்ததை யனுபவிக்க வேண்டி நேரிடும்.

“ அமெரிக்காவில் பாரஸீக அபிவிருத்திச் சங்கம் ” அமெரிக்கா தேசமோ விசித்திரமான தேசம். அதிலும் சிகாகோ என்னும் பட்டணமோ வெகு விசித்திரம். சகலவிதமான விஷயங்களும் அங்கு நடைபெறும். புதிதாக அங்கு உண்டாயிருக்கிற விசேஷம் என்னவென்னில்:— பாரஸீக அபிவிருத்தியை உத்தேசித்து ஒரு சங்கம் ஏற்பாடாயிருக்கிறதுதான். அதற்கு மூலபுருஷராக இருப்பவர் மிர்ஜா அகமது ஸோகராப் என்னும் பாரஸீகராம். அநேக செல்வவான்கள் அச்சங்கத்தில் சேர்ந்திருக்கின்றனர். நியூயார்க்கு பட்டணத்தின் பெரிய வியாபாரியான உவில்லியம் ஹோயர் என்பவர் தாம் அச்சங்கத்தின் றலைவர். சுமார் முன்னூறு அங்கத்தினர் இப்போது இருக்கின்றனராம்; பாரஸீகத்தில் நடக்கும் விஷயங்களை அமெரிக்கர்களுக்குத் தெரியப்படுத்தி, பாரஸீகஜாதியாரிடம் அமெரிக்கர்களுக்கு அனுதாபம் உண்டாகும்படி செய்வது இந்தச் சங்கத்தின் நோக்கமாம். சங்கத்தார் இச்சங்கம் ஸ்தாபிதமான காரணத்தையும் விவரத்தையும் அமெரிக்கர் தலைவரான டாப்டுக்கு ஒரு கடிதமூலமாய்த் தெரிவித்திருக்கிறார்களாம். நாடெங்கும் பள்ளிக் கூடங்களையும் இலவச புஸ்தகசாலைகளையும் ஸ்தாபித்துத் தங்கள் கொள்கைகளை வெளிப்படுத்த இச்சங்கத்தார் எண்ணங்கொண்டிருக்கின்றனர். நோக்கம் ஏறக்குறைய பரோபகார குணமாகத் தோன்றுகின்றது. அமெரிக்கர்களுடைய அனுதாபத்தைப் பெற்று அது நன்றாகப் பூர்த்தியடைய வேண்டுமென்றே நாமும் விரும்புகிறோம்.

ப.ர்.

சமாசாரக்கொத்து.

துருக்கி ராஜ்யத்தில் கப்பற்படை யொன்று சித்தம் செய்வதற்காக ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஸுல்தானுடைய செய்கையைப்பார்த்து ஜனங்களும் வெகு குதூகலத்துடன் கையொப்பம் செய்து பணவுதவி புரிகிறார்கள். இதுவரையில் கோடி ரூபாய்க்கு அதிகமாகவே சேர்ந்திருக்கிறது

• • • •

மெக்கா—மெதினா இருப்புப்பாதையை அஸிரிய எகிப்திய செல்வவான்கள் போடுவதாகக்கேட்டார்கள். துருக்கி ராஜாங்கத்தார் அதற்குச் சம்மதிக்கவில்லை. தாங்களே வேலை தொடங்கப் போகிறார்களாம்.

• • • •

ராணுவ விஷயங்களுக்காக மூன்று ஆகாயக்கப்பல்கள் தேவை என்று துருக்கி கவர்ன்மெண்டார் ஜெர்மானிய வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுக்கப்போகின்றனர். அம்மூன்று கப்பல்களும் அதிரியனோபின் படையுடன் இருக்குமாம்.

* * • •

கல்கத்தா பிரஸிடென்ஸி காலேஜில் தலைவராக விருந்த பி. கே. ராய் என்பவரின் குமாரத்தியை, பாட்னாவில் அஸிஸ்டாண்டு கலெக்டராகவிருக்கும் மெயிட்லண்டு என்னும் ஐரோப்பியர் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாகத் தெரிகின்றது. தேதியின்னும் குறிப்பிடவில்லை.

* * • •

ராம்பூர் ஸம்ஸ்தானத்தில் நானது ஆகஸ்டு மாதத்தில் ஒரு கைத்தொழில் கிருஷிக் கண்காட்சி நடத்தப்படும். நவாப் அவர்கள் இதற்கு முயற்சி செய்து வருகிறார்கள்.

• • • •

மார்க்கக்கல்வி.

அலிகாரிலிருக்கும் மகமடன் ஆங்கிலோ ஓரியண்டல் கலாசாலையின் காரியதரிசி நவாப் முன்தாக் உஸேன் அவர்ர்ன் தமது பத்து வயதுள்ள

ஒரே புத்திரனை நட்டுவாவிலிருக்கும் மௌல்வி அஜரத்வலீத்தி சாஹிபு அவர்களிடமனுப்பி மார்க்கக்கல்வி கற்கும்படி யேற்பாடு செய்திருக்கிறார். இவரிவ்விதஞ் செய்திருப்பது அவரிடத்தில் மார்க்க விசுவாசமும், மார்க்கக் கல்வியின் அபேக்ஷையும் எவ்வளவு தூரம் ஆழ்ந்து ஊன்றியிருக்கிறதென்பதைக்காட்டுகிறது. இதைக்கேட்கும் இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் அனைவரும் மிகுந்த சந்தோஷமடைகின்றனர்.

இங்கிலாண்டில் இஸ்லாம் பரவினால் இந்தியா முஸ்லீங்களுக்குப் பயனென்னை?

சில வருஷங்களாக இங்கிலாண்டில் இஸ்லாம் மார்க்கம் கம்பீரமாய்த் தன் முழுச்சுவாலையோடும், வெகு அழகோடும் பரவிக்கொண்டு வருகிறது. இஸ்லாமார்க்கமல்லாத மற்ற மார்க்கத்தார் அங்கு தங்கள் மார்க்கத்தையே லூன்றும் படியாகப்பலமான முயற்சி செய்து வந்தாலுங்கூட இஸ்லாம் மார்க்கத்துக்கு வெற்றியுண்டாகி அதுவே யங்குப் பலமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. இப்படிப் பரவிக்கொண்டிருப்பதினால், இந்தியாவிலுள்ள நம்மவர்க்கு அதிகமான பயன் உண்டாகிக்கொண்டிருக்கிறது. அதாவது சமீபத்தில் இந்தியா கவர்ன்மெண்டில் மாக்ஷிமைதங்கிய கவர்னர் ஜனரல் அவர்கள் சட்டநிரூபண சபையிலும் மாக்ஷிமை தங்கிய கவர்னர் சட்டசபையிலும், நம்மவர்கள் மெம்பராக தனிச்சுதந்தரங் கொடுக்கப்பட வேண்டுமென்று ரைட் ஆனரபிள் அமீரலியவர்களும் H. H. ஆக்காஹான் அவர்களும் வாதாடியபொழுது, இங்கிலாண்டு தேசத்திலுள்ள ஆங்கிலேய முஸ்லீம் சகோதரர்கள், அவர்களுடனின்று முயற்சித்ததினாலேதான், நம்மவர்க்கு அந்தச்சுதந்தரம் கிடைத்ததென்று மகமடன் பத்திரிகைக்கு ஒருவரெழுதுகிறார்.

——):(*):(——

சாலைகள்.

துருக்கி கௌர்ன்மெண்டார் தங்கள் தேசத்தில் ஐயாயிரம் மைலுக்கு விருக்ஷங்களோடு கூடிய ரஸ்தா உண்டுபண்ண பிரான்ஸு தேசத்து இஞ்சினீருக்குக் கண்டிராக்ட்டு விட்டிருக்கிறார்களாம்.

ப-ர்.

REGISTERED 28 OCT 1910 MADRAS.

பிஸ்மில்லாஹி.

இஸ்லாம் நேசன்.

புஸ்தகம் 2.] 1910-ஹு செப்டம்பர்-மீ [சஞ்சிகை 2.

சாம்பல்.

மதுரையிற் பிரசுரமாகும் "வித்தியாபாநுப்" பத்திரிகை தொகுதி 2. பகுதி 3-ல் பக்கம் 77-ல் "திருநீற்றின் பெருமை" யென்னும் வியாசத்தில், 11-வது பாராவாகப் புறமதத்தாருக்கு முண்டெனல்:—என்றற் றொடக்கத்துச், "சைவசமயத்தினர் இத்திருநீற்றுப்பெருமையை நன்கு தெரிந்து மிகப்போற்றுகிறார்கள். புறமதத்தினரும் இதன் பெருமையையறிந்து போற்றிவருகிறார்களென்பதுங் காட்டுவாம். மகமதியமதத்தினர் தமது பள்ளிவாசலிற் சர்க்கரை கொண்டுவந்து பாத்திஹாச் செய்கிறவர்களுக்கு அவணுள்ள குருக்கள் சாம்பலையே யளித்தருகின்றனர். அதற்கு நாருஷா எனப் பெயர் கூறுவர். அதனைப்பெற்ற அம்மதத்தினர் வாயிலிட்டு உட்கொள்ளுகின்றனர். இது இன்றும் எல்லாப்பள்ளிவாசல்களிலும் நிகழ்வதாகும்." என்று வரையப்பட்டிருக்கிறது. முஸ்லீங்கள் அதைப் போற்றுகிறார்களென்பது ஒருக்காலுங் கூடாது. அது முஸ்லீங்களுக்கு உடன்பாடன்றென்பது வருமாறு:—

இற்றைக்கு 1500-வருடங்களுக்கு முன், அரபியர்கள் தங்கள் குடும்பங்களில் மரணம் நேரிடும்போதெல்லாம் அத் துக்கத்துக்கு அடையாளமாகச் சாம்பலை முகத்திற்பூசிக்கொள்வர். அவர்கள் அப்படிப் பூசும் சாம்பலானது மாட்டுச் சாணத்தினின்றுண்டானதென்றாவது, அல்லது சாணமல்லாத விறகுக்கட்டை முதலியவற்றிலிருந்துண்டான சாம்பலென்றாவது நமக்குத் தெரியவில்லை; ஆனால், சாம்பல் துக்கத்துக்காக (தற்காலத்தில் ஐரோப்பியர் துக்கத்தினிமித்தம் கருப்பு உடை யல்லது கருப்புத்துண்டு அணிவதுபோல்) மட்டும்பூசி வந்தாரென்பது நமக்குத் தெளிவாய்த் தெரிகிறது. இவர்களுக்கு மத்தியில் [illegible] எம்பெருமானார் ஹஸ்ரத் முகம்மது ஸல்லல்

லாஹூ அலைஹிவசல்லமவர்கள் அவதரித்தபின்பு இந்த வழக்கமும் அவர்களைவிட்டு விலக்கப்பட்டது. அன்றியும், இஸ்லாம் மார்க்கம், சாணியினால் வீடு மெழுகுவதையும், எருவினா லடுப்பெரிப்பதையும், அதிலிருந்துண்டாகும்சாம்பலால் பல்விளக்குவதையும், மற்றும்அது சம்பந்தமான விஷயங்களையும் விலக்கிவிட்டது. விஷயமிவ்விதமிருப்பதினால், சாணியிலிருந்துண்டாகிய திருநீறு என்றழைக்கப்படுகிற சாம்பலை முஸ்லீங்கள் எவ்வாறு போற்றுவர். ஒருபொழுதும் போற்றார்கள். பின்னை? மகம்மதியமதத்தினர், தமது பள்ளிவாசலில் சர்க்கரைகொண்டுவந்து பாத்திஹாச் செய்கிறவர்களுக்கு அவணுள்ளகுருக்கள் சாம்பலையே யள்ளித் தருகின்றனரேயென்பது, இஸ்லாம் மார்க்கத்தினர்க்கு எவ்வாறாயினும் ஒவ்வாதாயினும் அப்படி நடப்பதுண்மையே. இஸ்லாம் மார்க்கக் கோட்பாடுகளை நன்றாயறிந்த ஒருவர், முஸ்லீங்களுக்குட் குருத்துவம் இல்லையென்பதையறியலாம். இதுபற்றியே சகரவர்த்தி எம். ஏ., உலகத்தின்விளக்கு என்ற தமது பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார். உண்மை மார்க்கத்தைப் (இஸ்லாம்) பின்பற்றிச்செல்லும் மனிதரின் நிலைமையில் எவ்வித தாரதம்மியமு மிருப்பதாகப் பரிசுத்த வேதத்தில் (குரான்) வெளிப்படையாகவாவது, மறைவாகவாவது எந்த இடத்திலும் எவ்விதவார்த்தையுங் கிடையாது. பரிசுத்த நபியவர்களும் ஜாதிகுல வித்தியாசத்தை யேற்படுத்துவது நியாயந்தானென்று நிரூபிக்கத்தக்கவிதமா யொருவார்த்தைகூட மொழிந்தார்களில்லை. ஆதலால், இஸ்லாமில் மற்றமதங்களிலுள்ளதுபோல ஆசாரியப் பிரபுத்துவம் ஒருபொழுது மிருந்ததில்லை. ஆரம்ப முதற்கொண்டே பூரண சமத்துவக் கொள்கையானது உபதேசிக்கப்பட்டும், அன்று முதல் அதிகக்கண்டிப்புடனே அல்லது கண்டிப்புக் குறைவுடனே அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டும் வருகிறது என்பதாலறியலாகும். ஆகவே, அவணுள்ளகுருக்கள் என்று மேலேகாட்டியுள்ள வசனத்தின் தார்ப்பரியம் முஸ்லீங்களுக்கு இல்லையென்பது தெளிவாயறியலாம்.

இனிச், சாம்பலை வழங்குவது பள்ளிவாசல்களிலேயா? அன்றன்று. முஸ்லீங்கள் ஆண்டவனைத்தொழும் பள்ளிவாசல்களில் இந்தக் கெட்டசெய்கையை யொருபொழுதுங் காணமுடியாது. உதாரணமாக இங்கிருக்கிற தாசில்தாரால் கட்டப்பட்ட பள்ளிவாசலிலும், காஜிமார்தெருப் பள்ளிவாசலிலும் இந்தச் செய்கையை யாரேனும் பார்த்திருக்கின்றனரா? அல்லது அங்குநடக்கக் கேட்டிருக்கின்றனரா? அது ஒருபொழுது மில்லையன்றோ. இவ்விதமே மற்றப் பள்ளிவாசல்களிலுமாம். பின்னை? இந்தக் கெட்ட செய்கையெங்கு நடக்கின்றதென்றால், மூடத்தன்மையும் தன்னகங்காரமுங் குடிகொண்டிருக்கிற தர்ஹாக்களிலேயாம். அங்கு இதுமட்டுமா? நடக்கிறது; பின்னைத், தாசியாட்டம், சந்தனக்கூடு, கொடியேற்றல், விளக்குவைத்தல், கொட்டடித்தல் இவைபோன்ற பல அநாசரீகச் செய்கைகளுமாம். தர்ஹா என்பது, என்னவென்பதை யிங்கு விளக்குவாம். தர்ஹா வென்பது, இஸ்லாம் மார்க்கத்தில் ஆரிபீன்களாயிருந்து உலக ஆசையைப் பற்றறவிட்டமஹாத்மாக்களிறந்துவிடின், அன்னவர் சமாதியான விடத்தில் கட்டப்பட்டிருக்கிற இடத்துக்குத் தர்ஹா என்று பெயர். இத்தென்னிந்தியாவிலுள்ள தர்ஹாக்களுக்கெல்லாஞ் சிரோபூஷணமாய் விளங்கிநிற்பது நாகூரிலுள்ள தர்ஹாவேயாம். அங்குதான், ஹலரத் சாஹுல் ஹமீது நாயகரவர்கள் சமாதியாயிருக்கின்றனர்கள். அங்கு பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் முதலிய எல்லா வகுப்பினர்களும் அவ்விடம்வந்து திரள்திரளாகக்குவிந்து விடுவார்கள். அங்கு நடக்கும் உத்ஸவங்களிலெல்லாம் பெரும்பாகத்தை இவர்களே கைக்கொண்டு நடத்துவார்கள்.

REGISTERED 28 OCT 1910 MADRAS.

இவர்கள் பாத்திஹா ஓதத்தெரியாதவர்களாதலால், அங்கு காணிக்கைப் பணத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும் பக்கீர்களிடம் போய், பாத்திஹா ஓதும்படி வேண்டிப் பணமுங்கொடுப்பர். பணத்தைப்பெற்ற அங்குள்ள பக்கீர் பாத்திஹா ஓதுவார். ஓதும்பொழுது வாசனைக்காக அங்கு ஒருபாத்திரத்தில் கட்டைவிறகிட்டு எரித்துச் சாம்பிராணிப்புகைபோட்டு வைப்பர். அதிலுள்ளசாம்பலையே பாத்திஹா ஓதும்படி செய்விக்கும் இந்த இந்துக்கள், தங்கள் தங்கள் கோவில்களிலுள்ள குருக்களிடம்விபூதிபெற்று அந்தச்சுவாமிக்கு நாம் திருப்தியாய் நடந்திருக்கிறோமென்று சந்தோஷிப்பது

போல, இந்தத் தர்ஹாக்களிலும் வாங்கி உட்கொண்டும் நெற்றியிலும் பூசினாற்றான் அங்கு சமாதியாயிருக்கும் அந்த மஹான், தன்பேரில் திருப்திகொள்வாரென்றே அந்தச் சாம்பலை நோக்குகின்றனர். ஏனென்றால், தம்மவர் தெய்வத்துக்குத் தாம் செய்வது போலவே, இங்கும் செய்யவேண்டுமென்ற எண்ணம்அவர்களிருதையத்தில் ஆழப் பதிந்திருக்கிறது. அன்றியு மிங்கு அப்படிச் செய்யாமற்போனால், நாம், நம் ஆலயங்களிலுள்ள தெய்வத்துக்கு ஒருவிதமும், இந்தத் தர்ஹாவிலுள்ள தெய்வத்துக்கு ஒருவிதமுமாகச் செய்து நாம் தெய்வத் துரோகியாகித் தீங்கைப் பெறுவோமென்றெண்ணியே இவர்கள் அங்கு சாம்பலை விரும்புகின்றனர். பாத்திஹா ஓதுகிற பக்கீரும், பணஆசையைக் கொண்டு தம் மார்க்கத்தின் விஷயத்தை யறியாது அந்தச் சாம்பலை யவர்களுக், கள்ளிக் கொடுப்பதிலிருந்து தனக்குப் பணத்தால் வந்த கெடுதி யென்னவெனக்கருதி மூடத்தன்மையாக அள்ளிக் கொடுத்துவிடுகின்றனர். அதிலொருவன் மார்க்கத்துக்குப் பயந்து சாம்பலைக் கொடுக்க மறுக்கினும், மற்றொரு பக்கீர் பணத்தைவாங்கிக்கொண்டு சாம்பலை யள்ளிக்கொடுக்கத் தயாராயிருக்கின்றனர். ஆகவே, இந்தத் துராசாரமானது இவ்விதமாய் விருத்திக்குவந்து முஸ்லீங்களிற் சிலமூடபக்தியுள்ளவர்களை யது இழுத்துவிட்டது. மேற்கண்ட பக்கீர்சாய்புக்களிடம் பாத்திஹா ஓதவருபவர் ஆயிரக்கணக்காய்க் கூடிவருபவராதலால், சாவகாசமாகப்போய்ப் பாத்திஹா ஓதிக்கொள்ளமுடியாது. அங்குப்போயிருக்கிற முஸ்லீங்களிற் சிலர் சந்தர்ப்பத்துக்குஏற்றபடி சர்க்கரைவாங்கிக்கொண்டுபோகாமலே, அங்குள்ள பக்கீரிடம் பாத்திஹா ஓதச்சொல்லிப் பணங்கொடுப்பார்கள். அதைப்பெற்றுக்கொண்ட பக்கீர், தம்மிடம் இயல்பாகவே யிருக்கிற பாத்திஹா ஓதிக்கொண்ட சர்க்கரையை அவனுக்குக் கொடுப்பது தனக்குநஷ்டமெனக்கருதி யாதொருநஷ்டத்தையும் கொடுக்காத சாம்பிராணித் தூவப் பாத்திரத்திலுள்ள சாம்பலையே யள்ளிக்கொடுத்துவிடுகின்றனர். அதைப் பெற்றுக்கொண்டவரோ, ஆண்டவர்பேரால் பாத்திஹா ஓதினதிலிருந்து வந்த இச்சாம்பலை நாம் தடைசெய்யக்கூடாது எனக்கருதிச் சர்க்கரையை வாயிலிட்டுக்கொள்வதுபோல, இதையும் வாயிலிட்டுக் கொள்வார்கள். மேற்படி பாத்திரத்தில் சாம்பலில்லையானால், அங்குள்ளமண்ணையே யள்ளிக்கொடுக்கின்றனர்; அதையும் தின்றுவிடுவார்கள். ஆனால், விஷயந் தெரிந்த ஒருமுஸ்லீமிடம் இந்தச் சாம்பலையாவது அல்லதுமண்ணையாவது கொடுப்பானேயானால், அதையங்கேயே யெறிந்துவிடுவதையும் நாம் பார்க்கலாம். ஆகவே, முஸ்லீங்கள் மண்ணைத்தின்பதும், சாம்பலைத்தின்பதும் அதிலுள்ள பெருமை காரணமல்ல. அதன் காரணம், பெரியவர்கள்பேரால் தருவதை யுட்கொள்ளவேண்டுமென்பதேயாம். ஆகவே, சாம்பலைஅறியாமையாலே வாங்கியும்போர்கூட அந்தச் சாம்பலிற் பெருமையிருக்கிறதென்ற காரணத்தைக்கொண்டல்ல வென்பது தெளிவா யறியலாம். தர்ஹாக்களில் நடக்கிற தாசியாட்டம் முதலிய தகாத செய்கைகளில் இதுவுமொன்றாம். ஆகவே, இந்தச் சாம்பல் வழங்கும் செய்கை, தாசியாட்டம் முதலிய செய்கைகளைவிடப், பாவத்தை யதிகமாகப் பயக்குமெனக்கருதி, நாகூர்த் தர்ஹாவில்எம்மதத்தினர்க்கும் கொடுப்பதை நிறுத்திவிட்டமையும், திருப்பரங்குன்றத்திலிருக்கிற சிக்கந்தர் ஔலியாத் தர்ஹாவில் முஸ்லீங்களுக்கு மட்டும் இச்சாம்பல் வழங்கும் செய்கை நிறுத்திவிடப்பட்டமையும் இங்கு கவனிக்கத்தக்கது. ஆகவே, இது முஸ்லீங்களுக்கு உடன்பாடன்று என்பதை யொவ்வொருவரும் தெளிவாயறியலாம்.

முஸ்லீம் சகோதரர்களே ? தர்ஹாவில்நடக்கிற இத்தகாதகிருத்தியங்களைப் பார்க்கும்பொழுது உங்களுடைய மனம் விசனப்படவில்லையா? இத்தகாத கிருத்தியங்களை முற்றும் நிறுத்தும்படி ஒவ்வொரு உண்மையுள்ள முஸ்லீமும் முயல்வாரென்றே நான் கருதுகின்றேன்.

பத்திராதிபர்.

திருக்குரான்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி.)

குரானில்அடங்கியுள்ள தர்மசாஸ்திரம், அதைக்கொண்டுவந்தவரின்மகோன்னதமான நன்னெறியையும் சிறந்த மனநிலைமையையும்

தெளிவாகக் காட்டுகின்றது. "நீங்கள் நியாயத்தையும் நன்மையையும் செய்யவேண்டுமென்றும், உறவினர்க்குக் கொடுக்கவேண்டியவற்றைக் கொடுக்கவேண்டுமென்றும், பாபம் செய்யக் கூடாதென்றும், பிறர்க்குத்தீங்கு இழைக்கக்கூடாதென்றும், ஆண்டவனால் கட்டளையிடப் படுகிறீர்கள்" என்று குரான்கூறுகின்றது. அநியாயம், கர்வம், பொய்யுரை, பழிவாங்கும் குணம், நிந்தனை, பரிகாசம், பேராசை, வீண்செலவு, துன்மார்க்கம், தாழ்ந்தநடைகள், அவநம்பிக்கை, சந்தேகம், வஞ்சனை, மதுபானம், சூதாட்டம், தற்புகழ்ச்சி, பொறாமை இவைகளெல்லாம் தீயவையென்றும் கடவுளுக்கு ஏற்காதனவென்றும் கூறப்பட்டுள்ளன. நற்குணம், உதாரத்துவம், தன்னடக்கம், பொறுமை, கோபமின்மை, சிக்கனம், உண்மை, சுத்தம், தர்மம், யோக்கியதை, மரியாதை, சாந்தத்தில் ஆசை, பெற்றோர்க்கும் பெரியோர்க்கும் பூஜ்யதை, சொல்லிலும் செய்கையிலும் அடக்கம், ஒரேஆண்டவனிடத்து நம்பிக்கை, அவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிதல் இவைகளெல்லாம் உண்மையான பக்திக்குத் தூண்களென்றும், உண்மையான விசுவாசியின் அடையாளங்களென்றும் கருதப்படுகின்றன.

திருக்குரானில் கூறப்பட்டுள்ள மார்க்கம் கேவலம் ஏட்டுச்சுரைக்காயன்று. நமது வாணாளில் அனுஷ்டிக்கக்கூடிய கொள்கைகளையே கூறுகின்றன. கடவுளுக்குப் பக்தியும், ஸஹஜனங்களுக்கு உதவியும், வாழ்க்கையில்சிரத்தையும், சன்மார்க்கமும், சுயநயம் கருதாமையுமே வேண்டுமென்று அது வற்புறுத்துகின்றது. இப்படி வற்புறுத்தப்படும் விஷயம்ஒவ்வொன்றுக்கும் திருக்குரானிலிருந்து வேண்டியவளவு மேற்கோள்கள் எடுத்துக்காட்டக்கூடும். ஆயினும் இங்கு இடமின்மைபற்றிக் கூறாதொழிந்தனம்.

இஸ்லாமிய கொள்கைகள், நன்றாக அனுஷ்டிக்கப் படும்படி எளிதாக அமைந்துள்ளன. அரபியர்களுடைய நடையுடை பாவனைகளை முழுதும் மாற்றி, அவர்களை ஒருபுதிய ஜாதியாரைப் போலாக்கிய திருக்குரானின் மகிமையையும் அபாரசக்தியையும் நாமோ கூறவல்லேம்! முஸ்லீம்கள் ஒரு காலத்தில் அபிஸீனிய ராஜ்யத்துக்கு ஓடிப்போய் அவ்வரசனிடம் சரணம் புக்கபோது பின்வருமாறு கூறியிருக்கின்றனர்:—

“அரசனே! நாங்கள் அஞ்ஞானத்திலும் காட்டுமிராண்டித்தனத்திலும் ஆழ்ந்து கிடந்தோம்; நாங்கள் விக்கிரகங்களை வணங்கினோம்; இறந்துபோன உடல்களைத்தின்றோம். குடும்ப பந்தங்களை அலக்ஷியம் செய்தோம்; அன்னியர்களுக்கும் அயலார்களுக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாதொழிந்தனம். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பது எங்கள் தருமமாக விருந்தது. அத்தருணத்தில் எங்களிடமிருந்து உண்மையும், யோக்கியமும், பரிசுத்தமும் பொருந்திய ஒரு தீர்க்க தரிசியை ஆண்டவன் எழுப்பினான். அவர்கள் எங்களுக்கு ஆண்டவனுடைய ஏகத்துவத்தைக் காட்டி அந்த ஆண்டவனுடன் வேறொரு தெய்வத்தையும் கூட்டாகக் கூடாதென்று உபதேசித்து விக்ரகங்களை வணங்கக் கூடாதென்றும், ஸ்திரீகளைப்பற்றித் தூஷணை சொல்லக்கூடாதென்றும், ஆதரவற்ற குழந்தைகளின் பொருள்களைக் கவரக்கூடாதென்றும், உண்மையைத்தான் கூறவேண்டுமென்றும், நம்பிக்கையை மோசம் பண்ணக் கூடாதென்றும், இரக்கமுள்ளவராக விருக்கவேண்டுமென்றும், பிறருடைய பாத்தியங்களைக் கவனிக்கவேண்டுமென்றும், உறவினர்களை நேசிக்க வேண்டுமென்றும், பலமில்லாதவர்களைக் காக்கவேண்டு மென்றும், துன்மார்க்கத்தையும் தீத்தொழிலையும் தூர அகற்றிவிட வேண்டுமென்றும் கட்டளையிட்டருளினார்கள். தொழுகையைச் செய்யும்படிக்கும், தானதர்மங்கள் புரியும்படிக்கும் விரதமிருக்கும்படிக்கும் அவர்கள் எங்களுக்கு உபதேசம் செய்தருளினார்கள். நாங்கள் அவர்களைநம்பி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்ததினாலேயே, இம்சிக்கப்பட்டு ஊரை விட்டுத் துரத்தப் பெற்று, உமது அடைக்கலத்தைத் தேடிவந்தோம்.”

“ஆத்மாவைச் சுத்தப்படுத்தியவன் நல்வாழ்வை யடைபவனாவான், அதை அசுத்தப் படுத்தியவன் அழிந்து போனவனாவான்” என்று திருக்குரான் கூறுகின்றது. சாமான்ய ஜனங்களுக்கு மார்க்கத்தில் பற்று நிலைத்திருப்பதற்காக சில வெளிச் சடங்குகள் வேண்டியிருக்கின்றன. ஆதலால், திருக்குரானும் எளிதும் பிரயோஜனமுமான சில சடங்குகளை நியமித்தது. ஆயினும் அவைகளுக்கே அதிக முக்கியத்தைக் கொடுத்துவிடவில்லை. தேகச் சுத்

தம் வேண்டுமென்று விதிக்கப் பட்டாலும் மனச்சுத்தந் தான்வெகு முக்கியமானதும் இன்றியமையாததுமாம்.

முஸ்லீம் பண்டிதர்கள், சுத்தத்தில் நான்கு வகையுண்டென வரையறுத்திருக்கின்றனர். முதலாவது தேகத்தில் அழுக்கின்றி வைத்துக் கொள்ளும் சுத்தம்; இரண்டாவது, தீச் செயல்களைச் செய்யாதபடி தேகத்தின் அவயவங்களைச் சுத்திசெய்தல்; மூன்றாவது தீக்குணங்களிற் செல்லாவண்ணம் மனதைச் சுத்திசெய்தல்; நான்காவது, மனிதனைக் கடவுளிடமிருந்து பிரிக்கக்கூடிய ஆசாபாசங்களினின்றும் ரகஸியமான எண்ணங்களை அகற்றுதல் என்பனவாம்.

உண்மையான மார்க்கத்தின் விசேஷம் என்னவெனில், கடவுளிடத்துப் பக்தி வைத்து, ஸஹஜனங்களுக்குத் தன்னாலான உதவியைச் செய்து, இன்ப துன்பங்களில் பொறுமையோடிருந்து, கடவுளின் சித்தத்துக்குத்தம்மை ஒப்படைத்து விடுவதேயாம்.

(இன்னும் வரும்)

ஜீலாலுடீன்.

THE BETTER WAY.

மேலான மார்க்கம்.

[9-ம் பக்கத்தொடர்ச்சி.]

ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுவதாகச் சொல்வோருடைய வாழ்க்கை ஆசாரகுணங்களால் மட்டுமே, அம்மார்க்கத்தின் குறைகுணங்களை அறிவதாயிருந்தால், கிறிஸ்தவமார்க்கம் வெகு பரிஷ்காரமாகக் கண்டனம் செய்யப்பட்டு, சீக்கிரத்திலேயே இருந்தவிடந் தெரியாமற்கூட மறைந்துபோய்விடும். ஒத்த கல்வியையும் உலக ஞானத்தைப்பெறுவதில் ஒத்த சௌகரியங்களையும் ஒத்த புத்திக் கூர்மையையும் அடைந்திருக்கும் கிறிஸ்தவன் ஒருவனையும் முஸ்லீமொருவனையும் சீர்தூக்கிப்பார்த்தால், கிறிஸ்தவனைக் காட்டிலும் முஸ்லீமிடத்தில் நல்ல ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் காணப்படும்

என்று நான் நிச்சயமாகச்சொல்வேன். எனது வாழ்நாளில் சந்தித்திருக்கக்கூடிய ஜனங்களில், வெகு கேவலமாக இழிந்த தாழ்மையிலும் பரம வைராக்கியத்தோடுகூடிய மூடப்பக்தியிலும் கிடந்துழலும் சிலர், தாங்கள் கிறிஸ்தவமார்க்கத்தைப் பின்பற்றுவோர்கள் எனச் சொல்லிக்கொண்டனர். உண்மையில் அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லர்; நாஸரத் வாசியான இயேசுநாதரின் உண்மை உபதேச மொழிகளைப்பற்றி ஸ்தூலமான மனோபாவம் கூட அவர்களிடம் இருந்ததில்லை. ஆனால், கிறிஸ்தவமதக் கொள்கைகளில் மட்டும் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது; அல்லது நம்பிக்கை இருந்ததாகச் சொல்லிக்கொண்டனர். உண்மை முஸ்லீமாக விருக்கவேண்டுமானால், கிளிப்பிள்ளையைப்போல, சிற்சில வார்த்தைகளையும் வாக்கியங்களையும் திரும்பத் திரும்பச் சொல்வதைத்தவிர, வேறு சில விஷயமும் வேண்டியிருக்கிறதென்பது ஒவ்வொரு முஸ்லீமுக்கும் தெரியும். ஒரு மனிதன், தான் முஸ்லீம் என்று சொல்லிக்கொள்வதனால் மட்டுமே, அவன் நமது நபி நாயகம் அருளிய உபதேச மொழிகளைத் தெரிந்துகொண்டிருக்கிறான் என்றாவது, அவைகளின் பிரகாரம் நடந்தொழுகுகிறானென்றாவது நினைக்க இடமில்லை. அவ்வாறு அவன் செய்யாமற்போனால், இஸ்லாம் மார்க்கத்தின் குணங்களுக்கும் தன்மைகளுக்கும் அவனை ஓர் உதாரணமாகக் கொள்ளவே கூடாது. ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுவதாகச் சொல்வோருடைய செய்கைகளாலும் தோற்றங்களாலும் மட்டுமே, அம்மார்க்கத்தை நியாயமாக நிர்ணயிக்கமுடியாது. இஸ்லாம் மார்க்க முறையில், துன்மார்க்கம், அசுத்தம், ஆசாரத்தாழ்வு, மூடபக்தி, வைராக்கியம் இவைகளின்மீது சார்பாகக்கூடிய குணம் ஒன்றேனுமில்லை. இதற்கு மாறாக அது, மானிடகுணத்தில் உயர்வும் பரிசுத்தமும் மிகுந்துள்ள பலவற்றினிடமுமே நம்மைக் கொண்டுபோய் விடுகின்றது. தேக சுத்தமும் ஆசார அனுஷ்டான சுத்தமுமின்றி, பொய்யனையும் குரூரனையும், சகியாதவனையும், மரியாதை யில்லாதவனையும், வைராக்கியம் மிகுந்துள்ளவனையுமிருக்கும் இஸ்லாமியன் ஒருவனைக் கண்டால், அவன் இஸ்லாம் மார்க்கத்தை உண்மையாகப் பின்பற்றுபவன் அல்லன் என்றும், அவன் அவலம்பிப்பதாகச் சொல்லும்

மார்க்கத்தின் ஸ்வபாவத்தைக் கிரகிக்க அவன் முற்றிலும் தவறிப் போனவன் என்றும் நீங்கள் உடனே நிச்சயித்துவிடலாம்.

இனி, கடவுளின் ஏகத்துவம், நபியின் தெய்வீகசக்தி. தேகசுத்தம், தொழுகை, உபவாசம், சகோதரத்தன்மை, ஐயமிடுதல், பரிசுத்தமக்கா யாத்திரைகளாகிய சிறந்த சித்தாந்தங்களான நமது இஸ்லாம் மார்க்கத்தின் பிரதான குணங்கள் சிலவற்றைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுவோம். புத்திசாலியான ஒருவனுக்கு இம் மார்க்கத்தைச் சிபார்சு செய்யவேண்டியதற்கு இவைகளைப் பற்றிய விவரங்களை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது மட்டுந்தான் அவசியம் என்று நினைக்கிறேன்.

கடவுளின் ஏகத்துவத்தின் உண்மை, இயற்கைத் தோற்றங்கள் எல்லாவற்றிலும் வெளிப்படையாகத் தெரிகின்றது. மனிதர்களுக்குத் தெரிந்துள்ள ஒவ்வொரு மதஸ்தாபகர்களும் அதைத் தெளிவாகவும் சந்தேகத்துக்கு இடமில்லாமலும் உபதேசித்திருக்கின்றனர். கிறிஸ்தவமதக் கொள்கையான கடவுளின் திரித்துவம், இயேசுகிறிஸ்து மரித்த முன்னூறு வருஷங்களுக்குப்பின்னால், ஆண்டியாக் நகரத்து அத்தியக்ஷகுருவினால் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், இயேசுகிறிஸ்து அவ்விஷயத்தைப்பற்றி உபதேசித்ததுமில்லை, கேட்டிருந்ததுமில்லையென்றும் நாம் சரித்திர பூர்வகமாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். விக்கிரக ஆராதனையும் பல தெய்வ வணக்கமும் தப்புவழியிற் சென்ற மனிதர்களாலேயே எப்போதும் கண்டுபிடிக்கப்பட்டனவாகவுள்ளன. அவ்விதமான கொள்கைகள் வாஸ்தவத்தில் தெய்வீக சக்தியுள்ள மதாசாரியர்களால் உபதேசிக்கப்பட்டதில்லை.

இயற்கை விஷயங்கள் பற்பல தெய்வங்களால் சிருஷ்டிக்கப்பட்டவையென்று நீங்கள் நம்புவதானால், அவ்வியற்கையின் முறையைக் கவனியுங்கள். உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும்; நமது கண்ணுக்குப் புலப்படாத சக்தியொன்றினால் நடத்தப்பட்டு, ஒழுங்காகவும் கிரமமாகவும் இயங்குகின்றதைக் காண்கிறோம். கிரகங்கள், அவைகளுக்கேற்பட்ட மண்டலங்களின் வழியே நிதானமாகவும் அணுவளவேனும் நிலைதவறாமலும் சுற்றுகின்றன; பருவகாலங்கள் வருவதும் போவதுமாக இருக்கின்றன; அளவிடப்படாத ஆகாயத்தினின்றும் காற்றானது கிளம்பி, அந்தரத்தில் வேதாளங்களைப்போல உறுமிக்கொண்டு போகின்றது; அல்லது தாயார் ஒருத்தி மிருதுவாக முத்தமிடுவதைப்போல, உஷ்ணமிகுந்த நமது புருவங்களின்மீது வீசுகின்றது. பூமியிலிருந்து மரங்கள் மெதுவாகக் கிளம்பி நிழலைக்கொடுக்கும் கிளைகளைப்பரப்புகின்றன; அல்லது வெகு அழகாகச் சோபையுடன் விளங்குகின்றன. சிறிய செடியோ, நறுமணம் வீசும் மலர்கள் மூலமாகக்கடவுளின் மகிமைக்குத் திறைப்பணத்தைச் செலுத்தும் வரையில் வளர்ந்துகொண்டே போகின்றது. நிரந்தரமான இயற்கை விதிகளால் பழங்களும் தானியங்களும் மனிதருடைய ஆகாரத்துக்காகவும், புல் பூண்டுகள் மற்றைய ஜீவப்பிராணிகளுடைய ஆகாரத்துக்காகவும் உண்டாகின்றன. வறண்டு நீர் நசையற்றிருக்கும் பூமியை உயிர்ப்பித்துப் போஷிப்பதற்காக மேகங்களினின்றும் ஜலம் கீழே வீழ்கின்றது. பூமண்டலத்திலும் ஆகாயமண்டலத்திலுமுள்ள ஜீவப்பிராணிகள், சக்திகள் இவைகளின் தோற்றங்களெல்லாம், அததற்கேற்பட்ட பொதுவான மார்க்கத்தினின்றும் மாறுதலுக்கேனும் வேறுபாட்டுக்கேனும் இடங்கொடுக்காத ஒரு தேர்ந்த சக்தியால் அடக்கியாளப்படுகின்றன.

ஜிலாலுத்தீன்.

(இன்னும் வரும்.)

பலதாரமணங் குற்றமா ?

(38-ம் பக்கத்துத் தொடர்ச்சி)

நாம், மேலே இயேசுநாதர் ஒரு ஸ்திரீக்குமேற்பட்டு விவாகஞ் செய்யக்கூடாதென்று கட்டளையிடவில்லையென்றும், விவாகவிலக்கு மட்டும் செய்யக்கூடாதென்று கட்டளையிட்டிருப்பதாயும் நிரூபித்தோம். ஆகவே, இயேசுநாதர் கட்டளையிடாமலிருக்க கிறிஸ்துவப் பாதிரிகள் தங்கள் வேதத்திற்கும், இயேசுவின் சொற்களுக்கும்

விரோதமாகத் தங்கள் மனோகற்பனையால் ஒரு புருஷன் இரண்டு ஸ்திரீகளை விவாகஞ் செய்யக்கூடாதென்று தங்கள் மதத்திலுள்ளவர்க்குக் கட்டளை கொடுத்திருப்பது நன்றன்று. உன்னதமான இஸ்லாம் மார்க்கத்தில் சக்தியு மகத்தியமுமுடைய புருஷனானவன் ஒன்றுக்கு மேற்பட்டு நான்கு ஸ்திரீகள்வரை விவாகஞ் செய்யலாமென்று தீர்ப்பாகச் சொல்லியிருக்கிறபடி, நாளிதுவரை நம்மவர்கள் அதை யனுஷ்டித்து வருகிறார்கள். சிநேகிதர்களே! மேற்கூறிய நியாயங்களினாலும், இயேசு, ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்திரீகளை விவாகஞ்செய்யக்கூடாதென்று கட்டளையிடாமையினாலும், அவர் பக்ஷமும், நம்முடைய பக்ஷமும் ஒத்திருப்பதால் பலதாரமணஞ் செய்துகொள்ளலாமென்றே உங்களனைவோர் புத்திக்கும் நன்றாய் விளங்குமன்றோ?

அன்பர்காள்! ஒருவேளை கிறிஸ்துவ சகோதரர்களாவது, அவர்களின் பாதிரியாராவது, வீண்வாதத்திற்காக, ஒரு புருஷனுக்கு நான்கு ஸ்திரீகளைப் போஷிக்கக்கூடிய செல்வமும், அவர்களிச்சையைத் தணிக்கக்கூடிய தேகசக்தியுமிருந்தால் பலதாரமணஞ்செய்துகொள்ளலாமென்று நீர் சொல்லுகிறபடி ஒரு ஸ்திரீக்குஞ்செல்வமும் தேகசக்தியுமிருக்கின்றன. அப்படியானால், அந்தப்பெண்ணுக்கும் ஒரு புருஷனுக்கு மேற்பட்டு நான்கு புருஷர்கள்வரை விவாகஞ் செய்துகொடுக்கவேண்டுமேயென்று கேட்பின், அது பொருந்தாதாம். ஏனென்றால், பொருளைச் சம்பாதிக்கவும், தன் மனைவிக்கு வேண்டியவற்றைக் கொடுத்துக் காப்பாற்றவும், உலகத்திற் பெரும்பான்மையாய்ப் புருஷர்களுக்கே யந்த சக்தி இருக்கின்றதன்றி, ஸ்திரீகளுக்கில்லையல்லவா? அப்படியிருக்க, ஒருக்கால் ஏகதேசமாக ஒரு ஸ்திரீக்கு இருந்தாலும், பெரும்பான்மையான புருஷர்களைப்போலச் சிறுபான்மையான பெண்களுக்குச் செய்யவேகூடாது. சிறுபான்மையாக விருந்தாலும், அந்தப் பெண்களுக்கு அவசியம் பலபுருஷமணம் செய்விக்கவேண்டுமேயெனில், அப்படிச் செய்யக்கூடாமையாயிருக்கிறது. ஒரு பெண்ணுக்கு நான்கு புருஷர்களன்று; நூறு புருஷர்களை விவாகஞ் செய்வித்தாலும் அவள் அந்த நூறு புருஷர்களுடனுங்கூடி வருஷத்திற்குளத்தனை பிள்ளையைப்பெறமாட்டுவாள்?

அவளுக்கு ஓரே பிள்ளையைப் பெறச் சக்தியுண்டேயன்றி அதிகமில்லையன்றோ? ஒரு புருஷனுக்கே நான்கு பெண்களை விவாகஞ்செய்யின், அந்நால்வருடன் கூடி, வருஷத்திற்கு நான்கு பிள்ளைகளைப் பெறும்படியான சக்தி புருஷர்களுக்கிருக்கிறதேயன்றிப் பெண்களுக்கு இல்லையன்றோ? சகல நியாயமும் தெரிந்த ஆண்டவன் அப்படிப்பட்ட சக்தியைப் புருஷர்களுக்கே கொடுத்து பெண்களுக்குக் கொடாமையால், பெண்கள் செய்யத்தகாதென்பது நன்றாய் விளங்குகிறது. சில சந்தர்ப்பங்களில் அபூர்வமாய் ஒரு ஸ்திரீ இரண்டு மூன்று குழந்தைகளைப் பிரசவிக்கிறதுபற்றிப் பெண்களுக்கு அதிக சக்தியிருக்கிறதென்று சொல்லக்கூடும். ஏதோ, ஒருகாலத்தில், அத்யற்புதமாய் நிகழும் இந்தச் சம்பவங்களுக்கும் சாதாரணமாக நடக்கும் சம்பவங்களுக்கும் வெகு வித்தியாசமுளது. ஆயினும், ஒரு புருஷன் நான்கு பெண்களை மணம்புரியின், ஒரு ஸ்திரீக்கு மூன்று குழந்தைகளாக நான்கு ஸ்திரீகளுக்கும், பன்னிரண்டு குழந்தைகளை யவனும் அடையலாம். இதுபற்றியும், ஆண்மக்களுக்கு அதிகச் சக்தியுண்டென்பது வெளியாம். ஒரு ஸ்திரீயானவள் நான்கு புருஷர்களை மணஞ்செய்வித்து ஒரு பிள்ளையைப் பெற்றாலும், அல்லது ஆச்சரிய சம்பவப்படி மூன்று பிள்ளைகளைப் பெற்றாலும், அந்தப்பிள்ளையின் தகப்பனார் இன்னாரென்றும், இன்னாருடைய ஆஸ்திக்குப் பாத்தியமுடைய பிள்ளையென்றும் தெரியுமா? ஒருபொழுதும் தெரியாதன்றோ? ஒரு புருஷன் நான்கு பெண்களை விவாகஞ்செய்து சாதாரண வழக்கப்படி நான்கு குழந்தைகளையோ, அபூர்வசம்பவப்படி பன்னிரண்டு குழந்தைகளையோ பெறின், தன்னைப்பெற்ற தகப்பனின் பெயர் சரியாகத் தெரிகிறதுமன்றித், தகப்பனின் ஆஸ்தியைச் சரியாக வைத்துக்கொள்ளவுங் கூடுமல்லவா? இதுபற்றிப் புருஷர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நான்கு ஸ்திரீகளை விவாகஞ் செய்யத் தகுதியுள்ளவர்களேயன்றிப்பெண்கள் அவ்வாறு செய்வதற்குத் தகுதியல்லரென்பது தெளிவாம். ஒரு ஸ்திரீயானவள் நான்கு புருஷர்களை விவாகஞ்செய்து சாதாரண வழக்கப்படி வருஷத்திற்கு ஒரு பிள்ளையும் அபூர்வ சம்பவப்படி வருஷத்திற்கு மூன்று குழந்தைகளையும் பெறுகிறதானால் உலக விருத்தியும் மார்க்க விருத்தியும் குறைந்து போகின்றன.

ஏனென்றால், ஒரு மனிதன் நான்கு பெண்கள் வீதம், நாலு மனிதன்பதினாறுபெண்களை விவாகஞ்செய்து,அந்நான்குமனிதர்களும்வருஷத்துக்குப்பதினாறுகுழந்தைகளையடைகிறார்கள். நியாயமான முறையில் இவர்கள் பதினாறு குழந்தைகளையடைவதால், இதுதான் அதைவிடச் சிரேஷ்டமானதாகும். அன்றியும், அவர்கள் அபூர்வ சம்பவப்படி ஒரு பெண்ணுக்கு மூன்று குழந்தைகள் வீதம், பதினாறு பெண்களுக்கு 48 குழந்தைகளையுமடையலாம். ஆகவே, ஒரு பெண் நான்கு மனிதர்களை விவாகஞ்செய்து மார்க்க விருத்தியும், உலகவிருத்தியு முண்டாக்கிவருவதைத் தடுத்துவிடுகிறது. இது மதிகெட்டவனுக்கும்சபிக்கப்பட்டதாகுமல்லவா?, 1தீமோத் 3-வது அதிகாரம் 2-12-வது வசனங்களில், கிறிஸ்துவர்களுக்குள் குருவாகிறவர்களும் குருவுக்கு உதவிக்காரராயிருக்கிறவர்களும் ஒரே மனைவியையுடையவர்களாயிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது

இந்த வாக்கியத்தைச் சற்று கவனிப்போம். இது இயேசுநாதரால் சொல்லப்படாததாய் அவரின் சீஷனல்லாத பெவ்லால், தீமோத்தேயுவுக்கு எழுதிய கடிதமாகும். அக்கடிதத்தில் மேற்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுநாதரால், இது சொல்லப்படாமையால் நாம் இதை ஆதாரமாக எடுத்துக்கொள்வது எப்படி? கிறிஸ்துவர்களுக்குள், இயேசுநாதராலாவது, அவருடைய சீஷர்களின் கையினாலாவது எழுதப்பட்ட பைபிள் கிடையாது.. மூலப்பிரதி நம்மிடமில்லையென்று செண்ட் ஜோஸப் தாவீது ஐயர் என்னும் கிறிஸ்துவப் பாதிரியாராலியற்றப்பட்ட வேதோபகரணம் 6 வது பக்கத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும், கிறிஸ்துநாதர் மரணமடைந்த 300-வருடங்களுக்குப்பின் சிலரால், இயேசுநாதரின் சீஷர்களின் பெயரால் எழுதிவைத்திருக்கிற புத்தகமும், நம்பிக்கைக்குப் போதாத சில பல கடிதங்களும் அவர்களுக்கு இப்போது வேதமாயிருக்கிறது. கிறிஸ்துவர்கள் பெவ்ல் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டிருக்கிற கடிதத்தில் கண்காணியும் (பாதிரி) உதவிக்காரன் (உபதேசி) ஒரே மனைவியுடையவர்களாயிருக்கவேண்டுமென்று எழுதியது இயேசுநாதர் சொன்னதைத் தான் அவ்விதம் எழுதியிருப்பாரென்றும், அல்லது பரிசுத்த ஆவியினாலேவப்பட்டுச் சொல்லியிருப்பாரென்றும் கூறிச் சாதிக்கவுங்கூடும். பெவ்ல், வாக்குச் சுத்தரல்லரென்பதையும் பரிசுத்த ஆவி அவரிடத்திலில்லையென்றும், நாம் பைபிளைக்கொண்டே நமது சகோதரர்களுக்கு நிரூபித்துவிட்டால் அவர்கள் அதை அங்கீகரித்துக் கொள்வார்களென்றும் நம்புகிறேன். “ பெவ்ல் ஆலோசனைச் சங்கத்தாரை யுற்றுப்பார்த்துச்சகோதரரே! இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நன்மனச் சாக்ஷியோடே நடந்துவந்தேனென்று சொன்னான். அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய அன்னியா, அவனுக்குச் சமீபமாக நின்றவனை நோக்கி இவன் வாயில் அடியுங்களென்று கட்டளையிட்டான். அப்பொழுது பெவ்ல், அவனைப்பார்த்து வெள்ளையடிக்கப்பட்ட சுவரே! தேவன் உம்மை அடிப்பார். நியாயப் பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராயுட்கார்ந்திருக்கிற நீர் நியாயப் பிரமாணத்துக்கு விரோதமா யென்னை அடிக்கச்சொல்லலாமா என்றான். பக்கத்தில் நின்றவர்கள் தேவனுடைய பிரதான ஆசாரியரை வைகிறாயா என்றார்கள். அதற்குப் பெவ்ல், சகோதரரே ! இவர் பிரதான ஆசாரியர் என்று எனக்குத் தெரியாது. உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாகவென்று எழுதியிருக்கிறதே யென்றான். (அப் 23-1-முதல் 5-வரை) பெவ்ல், சங்கத்தாரை யுற்றுப் பார்த்து அதிலும் நியாயப் பிரமாணத்தின்படி யென்னைநியாயம் விசாரிக்கிறவராயிருந்தும், என்று பிரதான ஆசிரியரைச் சுட்டிக்காட்டிவிட்டு அவர் அறியேனென்று சொல்வது பொய்யல்லவா? இதனால், பரிசுத்த ஆவி அவரிடம் இல்லையென்றும் உண்மை பேசுகிறவர் அல்லவென்றும் விளங்குகிறது. இதுபற்றி நாம் அவர் வாக்கியத்தை ஆதாரமாகஎடுத்துக்கொள்ளச் சாத்தியமாகவில்லை. ஆயினும், அவர் வாக்கியப்படியே வைத்துப்பார்த்தாலும், இரண்டு மூன்று மனைவியுடையவர்கள் கிறிஸ்துவர்களுக்குக் குருவாகவும், குருவுக்கு உதவிக்காரராகவு மிருக்கக்கூடாதென்று தோற்றுகிறது. அவ்விதம் தோற்றும்பொழுது பாதிரிகளும் உபதேசிகளுந் தவிர மற்றவர்கள் சாதாரணமாக, 2, 3, 4 மனைவியையுடையவர்களாகவிருக்கலாமென்றுநன்றாகத் தெரிகிறது. அதன்றியும், அக்காலத்திலுள்ளவர்கள் அவ்விதமே இருந்தார்களென்றும் மேல்வாக்கியத்தால் தெரிகிறது.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

மேற்றிசைஸ்திரீகளும் கீழ்த்திசைஸ்திரீகளும்.

எகிப்து தேசத்தை வாசஸ்தானமாகக் கொண்டவரும், பற்பல பத்திரிகைகளுக்கும் "பாபிஸாது பில் பதியா" என்னும் புனைபெயருடன் விஷயதானங்கள் புரிந்துவருபவருமான கல்விகேள்விகளிற் சிறந்த ஒரு எகிப்திய சகோதரி, சென்ற ஏப்ரல் மாதம் 15-ம்தேதியன்று "அல்ஜமி அத்ஸல் மிஸ்ரியா" என்னும் எகிப்திய சர்வகலாசாலையின் பெரிய மண்டபமொன்றில் கீழ்நாட்டுஸ்திரீகளையும் மேல்நாட்டுஸ்திரீகளையும்சீர்தூக்கி அரியதோர் பிரசங்கம்செய்தனர். அப்பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்த ஐரோப்பிய ஸ்திரீகளும். சுதேசஸ்திரீகளும் அதன் அருமை பெருமைகளை வெகுவாகச் சிலாகித்தனராம். அச்செல்வி செய்த உபந்யாசத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு வருமாறு:—

கௌரவம்பெற்ற செல்வச் சீமாட்டிகளே! மனிதகோடிகளில் யாரேனும் ஒரு வகுப்பார், ஓரிடத்திற் கூடியிருந்து, தங்களுடைய ஸ்திதியையும் அந்தஸ்தையும் பற்றி யோஜிக்கச் சுதந்தரமுடையவராகவிருந்தால் அச்சுதந்தரத்தைக் கொண்டாடக் கூடியவகுப்பார் ஸ்திரீஜாதிகளே தாம். ஸ்திரீஜாதியாராகிய நாமெல்லோரும் வெகு கேவலமான ஸ்திதியிலிருக்கிறோம். அதைப்பற்றி ஒருவர் சிந்தித்தாலும்கூட துக்கத்தைத்தவிர வேறொரு முடிவுக்கும் வரமுடியாது. அதன்பயனாக நமதுதேசம் முன்னிருந்ததைக் காட்டினும் இப்போது வெகுவாக க்ஷீணித்துப் போயிருக்கிறது. நமது சகோதரிகள் ஐரோப்பிய ஸ்திரீகளின் நடையுடைபாவனைகளை அனுசரிக்கத் தொடங்கினார்கள். அப்படி யனுசரிப்பது முகம்மதிய தர்மத்துக்கு ஒத்திருக்கிறதா இல்லையா வென்பதை அவர்கள் கொஞ்சம்கூட நினைத்துப் பார்ப்பதில்லை. கீழ்த்திசைப் பழக்கவழக்கங்கள் அதற்கு அனுகூலமுள்ளவையா அல்லவையா என்று கூடப்பார்ப்பதில்லை. இதுவொன்றே நமது நாடு அடைந்திருக்கும் கேவல ஸ்திதியைக் காட்டப் போதுமான ருஜுவாகும். நாட்டின் பெரும்பாகம் இந்த ஸ்திதியை அடைந்திருக்கின்றது; ஆயினும் எஞ்சி நிற்கும் ஸ்திரீகள் மட்டும் பழைய வழக்கங்களைக் கைவிடாமலிருக்கின்றனர். இப்பழைய வழக்கங்கள் நல்லவையா என்றும் அனுகூலமுள்ளவையா வென்றும் அவர்கள் கவனிப்பதில்லை. அவைகள் கெடுதலானவையாகவிருப்பின், அதற்குக் காரணம் என்ன வென்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ளச் சிரமப்படுவதில்லை. ஆதலால் இங்கு மேற்றிசை ஸ்திரீகளையும் கீழ்த்திசை ஸ்திரீகளையும் பற்றிய விஷயங்களையெல்லாம் கூற எண்ணமுடையேன். இடையிடையே, காணக்கூடிய குற்றங்குறைகளை உங்களுக்கு விவரிப்பேனாதலால், நீங்கள் மனந்தெளிந்து திருத்தமடையச் சௌகரியமுண்டாகும். இனி எனக்குத் தெரிந்ததைக் கூறத்தொடங்குவேன்:—

வாழ்க்கையின் முதற் பருவம்:—சீமாட்டிகளே! முகம்மதுநபியவர்களுடைய அவதாரகாலத்துக்கு முன்னால் நமது வீடுகளில் ஒரு பெண் குழந்தை பிறந்தால், அக்காலத்தில் அவ்வீடிருந்த நிலைமைக்கும் அதேமாதிரி சந்தர்ப்பத்தில் இக்காலத்துள்ள நிலைமைக்கும் அதிக வித்தியாசமில்லை. அந்தப் பழைய நாட்களில், மூடத்தனம் பொருந்திய அரபியர்கள், பெண் குழந்தைகளைப் பிறந்தவுடனேயே உயிருடன் புதைத்துவிடுவது வழக்கம். ஆனால் நாம் இப்போது அவ்வாறு செய்வதில்லை. பரிசுத்தகுரானும் அவ்வாறே கூறுகின்றது. பெண்குழந்தை பிறந்த சமாசாரத்தைக் கேட்டதும் ஒருவன் சந்தோஷப்படாமல் வெறுப்போடுகூடிய முகமுடையவனாய்க் கோபக்குறிதோன்ற விருப்பானென அக்கிரந்தத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அந்த சமாசாரத்தைப் பரவவிடாமல் மறைக்கஅவன் முயலுவான். அப்பெண்குழந்தையை எப்படியாவது அகற்றிவிடவேண்டுமென்பதே அவன் விருப்பமாகவிருக்கும். யாரேனுமொருவனுக்கு ஒரு பெண்குழந்தையிடம் வெறுப்புண்டாகுமானால் அப்பெண்குழந்தையின் மனம் அதுகாரணமாக மாறுபாடடைகின்றது. வளர வளர அவள் தனக்குச் செய்யும் காரியங்களிலும்தன் சகோதரர்களுக்குச் செய்யும் காரியங்களிலும் விசேஷ வித்தியாசத்தைக் காண்கிறாள். எப்போதும் தான் அம்மாதிரி பாராட்டப்படுவாளென்னும் எண்ணத்தினால் அவள் முன்னுக்குவர முயற்சி செய்வதில்லை.

(இன்னும் வரும்)

ஜிலா ஹுடன்.

முகம்மதிய ஸர்வகலாசாலை.

(22-ம் பக்கத்தொடர்ச்சி.)

முஸ்லீங்களின் ஏற்றத்தாழ்ச்சியைப்பற்றி கிரந்தகர்த்தாக்கள் வெகுபிரபலமாக எழுதிவருகின்றனர். பிராசீன முஸ்லீங்களின் அருஞ்செயல்களையும் கீர்த்தியையும் பற்றிப்புகழுவதும், தற்கால முஸ்லீங்களின் சீர்கேட்டையும் கல்வியில்லாமையையும் பற்றி இகழுவதும் சாமானியமாய் விட்டன.

கல்வியும் இஸ்லாமும் வார்த்தைகளில் வித்தியாசப்படுகின்றனவாயினும், பொருளில் ஒன்றெனவே கூறிவிடலாம். இரண்டுக்கும் விரோதம் கொஞ்சங்கூட இல்லை. ஒன்றையொன்று பூர்த்தியாக்கும் தன்மை வாய்ந்தது என்றே சொல்லவேண்டும். “மதாபிமானத்துக்காகப் பிராணனைத்தியாகம் செய்பவனுடைய இரத்தத்தைக்காட்டிலும் கல்விமானின் மசி பரிசுத்தமானது” என்று நபிநாயகம் திருவாய் மலர்ந்தருளுகின்றனர்கள். கல்வி விஷயத்தில் உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் அர்ப்பணஞ் செய்த மேதாவிகளின் செய்கைகளின் மீதுதான் இஸ்லாத்தின் கட்டிடம் எழுதப்பட்டுள்ளது என்னலாம். கல்வி இல்லாமையும் அஞ்ஞானமும் அநேகமாய் மாந்தருடைய மனத்தின்கண் குடிபுகுந்ததினால் மேற்கூறிய அருங்கட்டிடம் பர்தாவுக்குள் மறையப்பட்டிருந்தாலும் இன்னும் அதை நம்மோடு வைக்கப்பட்டிருக்கிறது. கல்விமான்களின் நெற்றியிலிருந்து வழிந்து விழும் வியர்வைதான் அப்பர்தாவை இற்று விழச்செய்யும்.

ஒரு ஜாதியார் முன்னுக்கு வரவேண்டியதற்கு இன்றியமையாத பொருள் கல்வியாம். அவர்கள் உலகில் ஜீவித்திருப்பதற்குக்கூடக்கல்வி அவசியம் வேண்டும். அவர்களுடைய வருங்காலநிலைமை தற்காலத்தில் அவர் பெறும் கல்வியின் அளவையும் மாதிரியையும் பொறுத்ததாகவுள்ளது. ஐரோப்பியர்கள் நாகரீகத்தில் முதன்மையடைந்து விளங்குவதெல்லாம் கல்வியென்னும் மாத்திரைக்கோலால் தான். ஜாதீய அபிவிருத்திக்குக்கல்விதான் ராஜபாட்டையென்று அவர்கள் நன்கறிந்து கொண்டிருக்கின்றனர். ஜப்பான் தேசம் கல்விமுதிர்வால் முப்பது வருஷங்களுக்குட் செய்திருக்கும் அற்புதச்செயல்களைப்பாருங்கள், இதற்கு முன்னால் அந்நாடு இருந்த இடங்கூடத்தெரியாமலிருந்தது. இப்பொழுதோ முதன்மைபெற்று

விளங்கும் ராஜ்யங்களில் அதுவும் ஒன்றெனத்தலைநிமிர்ந்து நிற்கின்றது. முஸ்லீங்களாகிய நாமோ கல்வியாலேயே கடைத்தேறவேண்டுமென்பதை இனிமேல்தான் தெரிந்து கொள்ளப்போகிறோம். எல்லாப்பூட்டுக்களையும் திறக்கக்கூடியதான பொற்சாவி கல்வியாம். நம்முடைய இரும்பைப்பொன்னாக்கவல்ல ரசகுளிகையும் அதுவே. கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை. அது மிகவும் சக்தி வாய்ந்தபானம். லௌகீகக்கல்வியோடு மார்க்கக்கல்வியையும் பருகியவர்க்குத்தாகம் என்பதே இராது. லௌகீகக்கல்விவிஷயமாய், ராஜாங்கத்தாரும் கிறிஸ்தவப்பாதிரிமார்களும் ஏதோ கொஞ்சம் நன்மை செய்து வருகின்றனர். நாம் முழுவதும் அவர்களுடைய உதவியை மட்டும் எதிர்பார்க்கக்கூடாது. நம்மால்தான் நாம் கடைத்தேறவேண்டும். கல்விவிஷயமான மூலதனத்துக்கு பட்டினியோடிருக்கும் முஸ்லீம் ஒருவன் உபகரிக்கும் அற்ப உதவியானது, வெளியிலிருந்துவரும் பெரும் உதவிக்குச்சமானமாம் “தன்கையே தனக்குதவி” யென்பது இக்காலத்திற் கைகண்ட வசனம். “தங்களைத்தாமே உதவிசெய்பவர்க்கு ஆண்டவன் உதவி செய்கிறான்” என்பது ஒரு பழைய அரபியப்பழமொழி. ஒவ்வொரு விஷயத்திலும் அதிலும் முக்கியமாய்க்கல்வி விஷயத்தில் ராஜாங்கத்தாரின் உதவியை எதிர்பார்ப்பது சௌகரியமானதன்று; அதனால் சுயேச்சா நிர்ணயமும் உற்சாகமுங் குன்றிவிடும். வேண்டுமானால் நாமும் ராஜாங்கத்தாருடன் சேர்ந்து ஒருமித்து உழைக்கலாம்.

இதுகாறும் கூறியவாற்றால், முகம்மதிய சர்வகலாசாலையொன்று பிரத்தியேகமாய் நிர்மாணிக்கப்படவேண்டுமென்று கல்வி கேள்விகளில் வல்ல முஸ்லீங்கள் பாடுபடுவது ஆச்சரியமாகாது. அக்கலாசாலை மூலமாய் ஞானமாகிய வெளிச்சம் ஒவ்வொரு மூலையிலும் பரவும்; க்ஷீணித்திருக்கிற நமது ஜனஸமூகமும் நன்மைபெற்று மேலெழவழியுமுண்டாகும். முகம்மதிய ஸர்வகலாசாலை ஸ்தாபிதமான நாள் தொடங்கி முஸ்லீங்களின் பழைய அபிவிருத்தி திரும்பவும் தொடங்குமென்று நிச்சயமாய்க் கூறலாம்.

நிற்க, சர்வகலாசாலை என்பதென்னை? கற்கக்கூடிய ஒவ்வொரு விஷயத்தையும் பற்றிக்கற்றுக்கொள்ள விரும்புவோர் கூடுமிடம்

என்று அதைச்சொல்லலாம். இங்கிலாந்தில் சர்வகலாசாலை நெடு நாளாகவுள்ளன. இந்தியாவிலோ சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையில்தான் அது ஸ்தாபிதமானது. இந்திய பூமியில் அது வேரூன்றிற்றென்றாலும், அதன் குற்றங் குறைகள் சமீபகாலத்தில்தான் விளங்கின. இந்தியக்கல்வி முறையில் குற்றங்குறைகள் பலவுள்ளன. அவைகளை எல்லாம் நன்றாக நிவிர்த்திக்கும் மருந்து ஒன்று தேவையாகவுள்ளது. கல்வியினால் ஐரோப்பாகண்டம் செல்வம் நிறைந்ததாயிற்று. இந்தியாவில் கல்வி செல்வத்தைக் கொடுத்தது என்பதற்கிடமில்லை. அந்நியப்பொருள்களைப் பெற வேண்டுமென்னும் ஆசைமட்டுமே இங்கு நிலைத்தது. மேற்றிசையோரின் நாகரீகத்தைநாம் மேற்கொண்டோமில்லை. அவர்களுடைய வெளிவேஷத்தைமட்டுமே நாம் ஏற்றுக்கொண்டோம். பள்ளிக்கூடங்களில், கிளிப்பிள்ளைகளைப் போலக்குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருப்போட்டு விடுகிறோம். அதனால் நமக்கு வாழ்நாளின் சங்கதிகளில் தடுமாற்றமுண்டாகின்றது. பீ. ஏ. எம். ஏ. முதலிய பட்டப்பரீக்ஷைகளில் முதன்மையாகத்தேறியவர்கள் கூட வாழ்க்கையனுபவத்தில் இன்னது செய்வதெனத்தெரியாமல் தவிக்கின்றனர். இன்னகாரியத்துக்காகப் பாடுபடுகிறோம் என்னும் குறிப்பு இருப்பதில்லை. இதைவிடக்கேவலமான விஷயம் ஒன்றுமிராது என்பதை நேயர்கள் அறிவார்கள். முஸ்லீம் செல்வர்கள் இதை நிவர்த்திக்க முன்வருவது நியாயமானதுதான்.

இன்னொரு விஷயம் கவனிக்கப்படவேண்டியதுண்டு. இப்போது நமது பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கப்படும் இந்துதேச சரித்திரங்களில் பெரும்பாலன முஸ்லீங்களும் இந்தியர்களும் ஒருமித்து வாழவேண்டும் என்ற எண்ணத்தைத் தடைசெய்வதாகவுள்ளன. கிஜினி முகம்மது என்னும் அரசன் இந்தியாவின்மீது படையெடுத்துவந்து கோயில்களையிடித்து, விக்கிரகங்களை உடைத்தானென்று விஸ்தாரமாக எழுதுவதால் இந்துப் பிள்ளைகளுக்கு முஸ்லீம் சிறுவர்கள்மீது துரபிமானமுண்டாகிறது. அம்மாதிரியாகவே ஹாஜ்யாத்திரைபோன முஸ்லீங்களை ஸிவாஜிசக்கரவர்த்தி கொள்ளையடித்தானென்பதைக் கேட்கும் முஸ்லீம் சிறுவர்களுக்கு இந்துப் பிள்ளைகளிடம் துரபிமானமுண்டாகின்றது. இவ்வித தப்பெண்ணங்களுக்கு இடமில்லாதவாறு தேசசரித்திரங்கள் எழுதப்படவேண்டும். எப்போதும், அவர்கள் மனதில்ஸமாதானமும் ஸஹோதரத்துவமும் குடிகொள்ளும்படி பாடுபடவேண்டும். அக்பர் முகம்மதுகெஜனி அவுரங்கசீபு, முதலியோரைப்பற்றி ஒவ்வொருவரும் மதபேதமில்லாமற் பெருமைபாராட்டவேண்டும். இப்படிச் செய்யவேண்டியதுதான் நமது சர்வகலாசாலை சீக்கிரத்திற்செய்யவேண்டிய முதல் வேலையாம். தேசசரித்திரத்தைக் கற்பிப்பதில் உபயோகமில்லாத சிறு விஷயங்களைப் போதிப்பதை நிறுத்திவிடவேண்டும். நமது முன்னோரின் அருமை பெருமைகளை வெளிப்படுத்தி அவைகள் சிறுவர்களுடைய மனத்திற் பதியும்படி செய்யவேண்டும். இருபத்திரண்டு வயதுக்குள் இரண்டாம் முகம்மது ஸுல்தான் கான்ஸ்தாண்டிநோபிளை ஜெயித்தது நமது முஸ்லீம் சிறுவர்களுக்குத் தெரியுமா? ஐரோப்பாவில் இப்போது நடைபெற்றுவரும் மேலோங்கிய நாகரீகத்துக்கு மூலகாரணம் முஸ்லீங்களின் பழைய நாகரீகந்தான் என்னும் விஷயத்தை அறிந்திருக்கும் முஸ்லீம் சிறுவர்கள் எவ்வளவுபேர்? இபுநுகல்தூன் என்னும் சரித்திரவாசிரியருடைய கிரந்தங்களைப் பற்றிக் கேள்விப்பட்டதேனுமுண்டா? அல்ஜீரியா நாட்டு மீர்அப்துல்காதர் என்னும் சீரியோருடைய அருமைக்குணங்களைப் பற்றியேனும் கேட்டதுண்டா? இவைகளையெல்லாம் விட்டுவிட்டு பதினான்காம் லூயி அரசன் எப்படி யிறந்தானென்பதையும், தென்னாப்பிரிக்கா சண்டையில் லார்டு ராபர்ட்ஸ் எப்படிச் சண்டைசெய்தாரென்பதை மட்டும் போதிப்பதில் யாது பயன்? பூர்வீக சிறப்பு இன்னவாறிருந்ததென்பதைப் போதிப்பதினால் நம்மவர்க்கு அளவிறந்த நன்மை உண்டாகக்கூடும். இவ்வாறு தேசசரித்திரத்தைப் போதிக்க முயற்சி செய்யவேண்டும்.

ஜிலாலுடீன்

இஸ்லாத்தின் அபிவிருத்தி.

சமீபகாலத்துக்குமுன்னால் எடின்பரோ நகரத்தில் கிறிஸ்தவப் பாதிரிமார்களின் சங்கமொன்று கூடிற்று. அங்கு, ஆப்பிரிக்காக்கண்டத்தில் இஸ்லாம் மார்க்கம் வெகு தீவிரமாய்ப் பரவிவரும் விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. நீலநதிப்பிரதேசங்கள் மத்திய ஆப்பிரிக்கா, கீழ் ஆப்பிரிக்கா, மேற்கு சமுத்திரக்கரைத்தேசங்கள், நைஜீரியா, ஸூடான், காங்கோ, தென்னாப்பிரிக்கா முதலிய விடங்களில், சுதேசிகள் வெகு தீவிரமாய் இஸ்லாம்மார்க்கத்திற் புகுகின்றனரென்றும் ஆப்பிரிக்காக்கண்டத்தில் கிறிஸ்தவ பாதிரிமார்களின் சங்கியை மூன்றுமடங்கு அதிகமாகவேண்டுமென்றும், வைத்தியமும், கல்வியும், கொடுக்கக்கூடிய பாதிரிமார்களின் தொகுதி அவசியம் வேண்டுமென்றும், அங்கு அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது. ஆப்பிரிக்காக்கண்டம் முஸ்லீம் தேசமாகப் போகிறதைத் தடுக்கவேண்டுமென்று அப்பாதிரிகள் பேசிக்கொண்டனர். முஸ்லீம் செல்வர்களின் அரிய பிரயாசையின்றியே, இஸ்லாம்மார்க்கம் ஆப்பிரிக்காவில் கிறிஸ்தவர்கள் பயப்படும்படி தீவிரமாகப் பரவிவருகிற சங்கதி பொதுவாக முஸ்லீங்களுக்கு அளவில்லாத சந்தோஷத்தைக்கொடுக்கும். கிறிஸ்தவப்பாதிரிமார்களுக்குப் போதுமான பணமும், பணத்தைக்காட்டிலும் மேலானதான கிறிஸ்தவ ராஜாங்கங்களின் செல்வாக்கும் இருந்தும் கூட, இஸ்லாம்மார்க்கமேதான் ஆப்பிரிக்காவிற் பரவிவருகின்றது. கிறிஸ்தவமார்க்கம் ஸஹோதரத்துவத்தைப் பற்றிப் போதிக்கின்றதேயொழிய அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவில்லை. ஆப்பிரிக்காவில் அது முற்றிலும் தவறிவிட்டது. இன்னும் கொஞ்சநாளில் அக்கண்டம் முழுவதும் இஸ்லாம்மார்க்கத்தில் அகப்பட்டதாய் வந்துவிடும். இதை உலகம் அறிந்திருக்கும். மேற்கூறிய கிறிஸ்தவ பாதிரிமார்களும் அறிந்தேயிருப்பார்கள். இருந்தும், ஏன் இன்னும் அவர்கள் நீகிரோவர்களைக் கிறிஸ்தவர்களாக்கப் பணத்தை வீணாகச் செலவிடுகின்றனர். தங்களுடைய ஜன்ம தேசங்களிலிருந்து ஏராளமாகப் பணம் வந்துகொண்டு இருக்கும்வரையில் இவர்கள் இவ்வித வீண் வேலையைச் செய்துகொண்டுதானிருப்பார்கள்போலும்!

ஒருவன் முஸ்லீம் ஆகிவிட்டால், நிறம் அந்தஸ்து ஜாதிபேதமின்றி மற்றை முஸ்லீங்களுடன் ஒன்றுசேர்ந்தவனாய்விடுகிறான். சக்கரவர்த்தியும், குடியானவனும் ஒரேபதவியில் வந்துவிடுகின்றனர். இவ்வித ஒற்றுமையைக் கிறிஸ்தவமார்க்கம் கொடுக்கின்றதா? அவர்களுக்குள் நிறம் பற்றி உண்டாகும் சண்டைசச்சரவுகள் அனந்தம் வெண்ணிறம்பெற்ற கிறிஸ்தவர்கள் கரிய கிறிஸ்தவர்களுடனிருந்து ஒரே கோவில் தொழுவதற்குச் சம்மதியாத காரணத்தாலல்லவா பின்னவர்கள் தங்களுக்கென்றே ஒரு கோவிலைக் கட்டிக்கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட வித்தியாசங்கள் இஸ்லாம் மார்க்கத்துக்கு முற்றிலும் புறம்பானதென்று சொல்லவும் வேண்டுமா?

இனி, இஸ்லாத்தைப் பின்பற்றுவதால் நீகிரோவர் அடைந்துள்ள நன்மையென்னவென்று பார்ப்போம். அவர்களிப்போது நல்ல உடை உடுக்கின்றனர். வீண்பொழுது போக்குவதில்லை. ஏதேனுமொரு பிரவர்த்தியில் புகுகின்றனர். அரபிப் பள்ளிக்கூடங்கள் அவர்களுக்கென்றே ஏற்பட்டிருக்கின்றன. பேய் பூதங்களின் வணக்கம் காட்டுமிராண்டித்தனம் நரமாமிசபக்ஷணம் சிசுவதை பேயோட்டுதல் முதலியவைகள் எல்லாம் நீகிரோவரைவிட்டகன்றுவிட்டன. மதுபானமும் சூதாட்டமும் நின்றுபோயின. அநாகரீகமான வியபிசாரத்தனம் அடியோடே போய்விட்டது. சண்டைசச்சரவுகள் அகன்றன. இவைகளையெல்லாம் யோசிக்கும்போது அநாகரீகமாகிய அந்தகாரத்தில் கிடந்த இவர்களை "இஸ்லாம்" என்ற தீபம் வெளிக்குக் கொண்டுவந்து நாகரீகத்தைக் கொடுக்கின்றது என்பது தானே போதரும். ஆப்பிரிக்காகண்டம் இஸ்லாம்நாடானதைப்போலவே இவ்வுலகமுழுவதும் ஒருநாள் இஸ்லாத்தின்கீழ் வரும் என்பதற்கிடமுண்டு.

ஹலரத் அல்கவ்ஸவால் அவர்களின் ஜீவியசரித்திரம்.

முஸ்லீம் செல்வர்களுடைய சரித்திரவிநோதங்களைச் சமயம் வாய்க்கும்போதெல்லாம் எழுதி வெளியிடுவதாக எண்ணி, மு

முதலில் ஹைதராபாத் நாட்டில் முதன் மந்திரியாகவிருந்த ஸாலர் ஜங் பகதூர் அவர்கள் சரித்திரத்தை "இஸ்லாம் நேசன்" ஆகஸ்டு மாதச்சஞ்சிகையில் வெளியிட்டோம். இப்போது கல்விமான்களிற் சிறந்து விளங்கிய பண்டிதரத்னமாகிய அல்கஸ்ஸாலியவர்களின் சரித்திரத்தை எழுதி வெளியிடுகிறோம்.

இமாம் இபுனு ஹமீது முகம்மது ஜைனுதீன் அல்தூஸியென்னும் சிரேஷ்டர் பிரபல ஞானியாகவும், தத்துவசாஸ்திரியாகவும், கல்வியாசிரியராகவும், ஸூபிவகுப்பைச் சேர்ந்த பிரதான அபிமானியாகவும் இருந்தனர்கள். ஐரோப்பிய நாடுகளில் அவரது பெயர் "அல்கஸ்ஸாலி" என்று மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. அம்மஹான் ஹிஜ்ரி 450-ல் (அதாவது கி. பி. 1058-ல்) குராஸான் மாகாணத்திலுள்ள தூஸ் என்னும் கிராமத்தில் ஜனனமானார்கள். இவர்களது ஜனனஸ்தானம், ஷாநாமா என்னும் கிரந்தத்தைச் செய்து மெய்க்கீர்த்தி பெற்ற பர்தூஸி என்னும் கவிச் சிரேஷ்டரின் பிறப்பிடமாகவும், பாக்தாத் நகரில் அரசுபுரிந்த தர்மசக்கிரவர்த்திகளில் ஒருவராகிய "இரவிற் சொல்லிய அரபிக்கதைகள்" என்னும் கதையில் கூறப்படும் கலிப்ஹாரூன் அல்ராஷித் என்னும் செங்கோன் மன்னரின் அடக்கஸ்தானமாகவும் பேர்பெற்று விளங்கியுள்ளது. நமது பண்டிதரத்தினத்தில் பிதா "கஜல்" என்னும் நூல் வியாபாரம் செய்து வந்தமையின் இவர்களுக்கு "கஸ்ஸாலி" என்ற பேர் வந்தது. தூஸ்கிராமத்தின் ஓர் பகுதியாகிய கஜாலு என்னுமிடத்தில் இவர்கள் பிறந்தபடியால் அப்பெயர் பெற்றார்களென்றும் கூறுவர்.

அல் கெஸ்ஸாலின் பாலியத்திலேயே அவர்களது பிதா காலஞ்சென்றுவிட்டனர்கள். ஆதலால் அவர்களும் அவரது சகோதரனும் தங்களுடைய தகப்பனாரின் மித்திரரான ஒரு ஸூபி வகுப்பைச் சேர்ந்தவருடைய ஆதரவின்கீழ் வந்தனர்கள். இளம் பிராயத்திலேயே இவ்விருவர்களுக்கும் கல்வியைக்கற்பதில் பேரவா இருந்தபடியால், அதையுணர்ந்த இவர்கள் போஷகர் இவர்கள் ஜோர்ஷான் என்னுமிடத்தில் அபுநாசர் முகம்மது இஸ்மால் என்பவர் ஸ்தாபித்திருந்த கல்விச்சாலைக்கு அனுப்பினர். அங்கு அல்கஸ்ஸாலி தங்களது பொறுமையினாலும், விடாமுயற்சியினாலும், இடைவிடாத அப்பியாசத்தினாலும் விசேஷ கல்வியைக்கற்றனர்கள். அப்படிக்கற்ற கல்வியை விருத்திசெய்ய வேண்டுமென்று எண்ணி, கல்வி கற்பிப்பதில் பாக்தாதுக்கு நிகராக விளங்கிய நிஷாபூர் என்னுமிடத்துக்கு இவர்கள்சென்று, அங்கு பிரபல விற்பன்னர்களால் தர்மசாஸ்திரம், தத்துவநூல், தர்க்கசாஸ்திரம், சமயநூல், முதலியவைகளைப்பற்றிச்செய்யப்பட்ட அருமையான உபந்நியாசங்களைக்கேட்டுத் தேர்ச்சியடைந்தனர்கள். அவர்களது ஆசிரியர் இறந்ததும் அவர்களது ஸ்தானத்தை வகிக்கவோர் தகுதியுள்ளவர் வேண்டியிருந்தது. அல்கஸ்ஸாலி அதற்குத்தகுந்தவர் என்று எண்ணி நியமிக்கப்பட்டார்கள். இவர்களது கல்வி கற்பிக்கும் மாதிரியால் பிள்ளைகளெல்லாம் இவர்களைக் கொண்டாடுவாராயினர். இவர்களது பேரும் புகழும் நெடுந்தூரம் பரவத்தலைப்பட்டது. பாக்தாத்தில் கல்விமான்களை ஆதரித்துவந்த பிரதான விஜயருக்கும் இவர்களுடைய புகழ் தெரிந்தது. உடனே அவர், நமது பண்டிதரத்னத்தை வரவழைத்துத் தாம் ஸ்தாபித்திருந்த நிலாமியா ஸர்வகலாசாலையில் ஒரு போதகாசிரியராக நியமித்தனர். அங்கு இவர்கள் செய்த அரிய வேலைப்பாட்டினால் இவர்களது புகழ் முஸ்லீம் தேசம் முழுவதும்பரவிற்று. இவர்களது ஆழ்ந்த கல்வி, சொல்வன்மை, அபூர்வஞானம், சீடர்களிடத்து அன்பு இவைகளெல்லாம் அக்கலாசாலைக்கே பெருங்கீர்த்தியைக் கொண்டுவந்தன. நான்கு வருஷங்கள் வரையில் அக்கலாசாலையில் உழைத்தபின்னர், அல்கஸ்ஸாலி புண்ணிய க்ஷேத்திரமாகிய மெக்காவுக்குப் போய்வரவேண்டுமென்னும் எண்ணத்துடன் தமது வேலையை ராஜிநாமாக் கொடுத்துவிட்டார்கள். அதன் பின்னர் அப்பெருமான் தமது வாணாள் முழுவதையும் பிரயாணத்திலும் தர்மசாஸ்திரம் மார்க்கக்கொள்கை முதலியவைகளைப்பற்றிச் செய்யும் உபந்நியாசத்திலும் கழித்தனர்கள். போகுமிடங்களிலெல்லாம் வித்யார்த்திகளும் பண்டிதர்களும் திரள் திரளாகக் கூடி இம்மஹான் அற்புதப் பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்வடைந்தனர்.

அரபிய தத்துவ நூலில் அல்கஸ்ஸாலி சற்று சந்தேகங்கொண்டவகுப்புகளில் ஒருவராகக் கருதப்படுகின்றார். ஆயினும் அதுஉண்மையன்று; அரிஸ்டோடின் என்ற தத்துவ ஞானியின் கொள்கைகளை விவரித்துச்சொன்ன அரபிய கிரந்தகர்த்தாக்களுடைய அபிப்பி

ராயத்தை நமது பண்டித ரத்னம் சர்ச்சைசெய்து சிற்சில விடங்களில் மறுதளிக்கின்றார்கள். இவர்கள் ஒருபெரிய கிரந்தகர்த்தா. காவிய விஷயமாக இவர்கள் எழுதியுள்ள கிரந்தங்கள் ஒன்றுகுறைய நூறெனக் கூறுவர். அவைகளில் பெரும்பாலன அரபிய பாஷையில் உள்ளன. சில பர்ஷியன்பாஷையில் உள்ளன; இவ்வளவிலும் மூன்றிலொருபாகந்தான் அவர்காலத்துக்குப்பின் தங்கின. மற்றவை இறந்தொழிந்தன· அவர்களது சிறந்த கிரந்தமென்னவெனில், "இஹ்யாயுலூமுத்தீன்" என்பதாம். முஸ்லீம் ஞானிகளால் அது வெகு அபூர்வ கிரந்தமெனக் கொண்டாடப் படுகின்றது. முஸ்லீம் கிரந்தங்கள் மற்றவையெல்லாம் இறந்துபோனாலும் இது ஒன்று மட்டும் இருக்குமேல், மற்றவைகளின் அவசியம் நமக்குஇருக்காது என்று ஒரு கிரந்தகர்த்தா கூறுகின்றார். மதவிரோதமான விஷயங்களைப் போதிக்கின்றன வென்னும் சந்தேகத்தால் நமது பண்டிதரவர்களுடைய கிரந்தங்களில் பல அக்கினிக்கு இரையாக்கப்பட்டன. இந்த தொண்ணூற்றொன்பது கிரந்தங்களையும் அவர்கள் தமது ஐம்பத்தைந்து வருஷங்களுக்குள்ளேயே எழுதி முடித்தனர்களென்றால் அவர்களது விடாமுயற்சியையும், ஊக்கத்தையும், ஞானத்தையும் பற்றித் தனியே நாம் கூறவேண்டுமா?

அல்கஸ்ஸாலி தமது அந்தியகாலத்தை குராஸானில், போதகாசிரியராக விருந்து கழித்தனர்கள். மேற்கினின்றும் திரும்பிவந்தும் நிஷாபூரில் சிலநாள் தங்கிப் பின்னர்த் தமது ஜன்மஸ்தானமாகிய தூஸ் கிராமத்துக்குப்போய் அங்கு தமது மாணவர்களுக்குஒரு கலாசாலையும், ஸூபி வகுப்பாருக்கு கான்காஹ் என்ற ஒரு மடமும் ஏற்படுத்தினர்கள். ஹிஜ்ரி 505ல் (கி. பி. 1111ல்) அவர்கள் தேகவியோகமானார்கள். அதுவரையில் கல்வியைக் கற்பிப்பதிலேயே இன்பமுள்ளவராக விருந்தனர்கள்.

ஐரோப்பா கண்டத்தில் அஞ்ஞானம் குடிகொண்டிருந்தகாலத்தில் முஸ்லீம் விற்பன்னர்களான அல்கஸ்ஸாலி, அவெஸன், அவெரோஸ், ராஸஸ், அபுல்காஸிஸ், இபுனுஜான்ஜிமுதலியசிரேஷ்டர்கள் கல்வியை அபிவிருத்திசெய்வதில் கண்ணுங் கருத்துமாக விருந்துபாடுபட்டு, தமாஸ்கஸ், பாக்தாத், மூஸாத், கைரோ, நிஷாபூர், கார்டோவா, கிரானடா, ஸலமான்கா முதலிய சர்வகலாசாலைகளை ஸ்தாபித்து அவைகளின் மூலமாய் ஞானமாகிய வெளிச்சம் ஒவ்வொரு மூலைகளிலும் புகும்படி செய்த அருங்காரியம் அளவுபடுவதன்று. இஸ்லாமிய நாகரீகத்தின் இன்னொரு விசேஷம் என்னவெனில், கிரேக்க, எகிப்திய, பிராசீன கிரந்தகர்த்தாக்களிடமிருந்து முஸ்லீம் விற்பன்னர்கள் பெற்ற ஞானத்தைப் பகிரங்கமாய் அவர்கள் ஒப்புக்கொள்ளுதலாம். ஐரோப்பிய கிரந்தகர்த்தாக்களோவென்றால், மேற்கூறிய முஸ்லீம் விற்பன்னர்களின் கிரந்தங்களை மொழிபெயர்த்து அவைகளினால் அமைந்த ஞானத்தைத், தாங்களே சொந்தமாகக் கிரகித்த ஞானமென்று நெடுநாள்வரையில் சொல்லிக்கொண்டிருந்தனர். ஆனால் இப்போது, நாகரீகம் முதிர முதிர முஸ்லீம் விற்பன்னர்களுடைய அருஞ்செயல்கள் உண்மையானபடி மதிப்பிடப்படுகின்றன. முஸ்லீம் கிரந்தக்காரர்களின் நூல்கள் மேற்றிசைப் புலவோரின் அறிவு விசாலத்துக்காக அவரவர்களுடைய பாஷைகளில மொழிபெயர்க்கப்படுகின்றன.

சிறந்த போதகாசிரியர்களென்று கொண்டாடப்படுகிற கோமினியஸ், பெஸ்டலோஸி, புரோபெல் முதலிய ஐரோப்பியர்கள் ஆரம்பமுதலே கல்வித்தொழிலைக் கைக்கொண்டதில்லை. வேறு பிரவர்த்திகள் பயனைத் தராதபோனபடியால்கடைசியாகக்கல்வித்தொழிலை அவர்கள் மேற்கொண்டனர். முஸ்லீம் போதகாசிரியர்களோவென்றால், ஆரம்ப முதலிலேயே கல்வித்தொழிலில் பிரவர்த்தித்தனர். கல்வியைத் தேடுவதில் சைனாதேசம் வரையிலும் போகலாமென்று நபிநாயகம் கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆதலால், முஸ்லீம் ஆசிரியர்களுக்குக் கல்வித்தொழிலை மேற்கொள்வதில் போதுமான ஆதாரம் கிடைத்தது. ஐரோப்பியர்களுக்கு அப்படியில்லை. ஆதியில் ரோமன்கத்தோலிக் குருவாகிய போப்பின் அதிகாரத்துக்கும், கல்விகற்ற ஆதிப் பாதிரிமாருக்கும் விரோதமாகவே ஆசிரியர்கள் நடக்கவேண்டியிருந்தது. இப்படியிருக்கும்போது கல்வித்தொழிலைமேற்கொள்வதில் ஊக்கமும் உற்சாகமும் அவர்களுக்கு எங்கிருந்து வந்திருக்கும். முஸ்லீம் விற்பன்னர்களின் மாதிரியிலிருந்துதான் வந்திருக்கவேண்டுமென்பது சொல்லாமலே யமையும்.

அல்கஸ்ஸாலி தங்களுடைய சிறந்த கிரந்தமொன்றில், மாணாக்கனுடைய லக்ஷணங்களையும் ஆசிரியனின் லக்ஷணங்களையும் கூறியிருக்கின்றனர்கள். அவைகளைக்கூறி இவ்வியாசத்தை முடிவு செய்வோம். மாணாக்கனைப்பற்றி அவர்கள் கூறுவதாவன:—

(1) அவன் தீயவழக்கங்களை அகற்றவேண்டும்; அகற்றாவிட்டால் கல்வியபிவிருத்திக்கு இன்றியமையாததான மனத்தூய்மை உண்டாகாது. (2) தான் மேதாவியென்று பெருமைபேசிக்கொள்ளக்கூடாது. உபாத்தியாயரிடம் கீழ்ப்படிதலுள்ளவனாக விருக்கவேண்டும்; அவருக்குத் தடையாகவிருக்கக்கூடாது. எல்லாவிதத்திலும் அவருடைய கட்டளையின்படி நடந்து, அவர் மனங்கோணாதவாறு ஒழுகவேண்டும். (3) ஆரம்பத்தில் வித்யார்த்தி கல்வியைமட்டும் கற்கவேண்டும். முதன்முதலிலேயே சர்ச்சைக்குத்தொடங்கிவிடக்கூடாது. தொடங்கினால் கல்வியில் ஆசைபோய்விடும். நன்றாய்க்கல்வியில் முதிர்ந்தபின், சர்ச்சைக்கு ஆரம்பிக்கவேண்டும். அப்போது உபாத்தியாயர் சொல்லிக்கொடுப்பது பிழையென்று தெரிந்துகொண்டால் அவ்வுபாத்தியாயரைவிட்டு நீங்கவேண்டும். (4) மாணாக்கன் சகல விஷயங்களிலும் ஞானம்படைத்தவனாகவிருக்கவேண்டும். ஆயினும் ஒரு விஷயத்தில்மட்டும் பூர்ண பாண்டித்தியம் அடையப்பாடுபடவேண்டும். (5) அவனுடைய கல்வியபிவிருத்தி கிரமமானதாகவும் நிச்சயமுள்ளதாகவும் இருக்கவேண்டும். (6) உபாத்தியாயன் மாணாக்கனின் அளவுக்கு ஏற்றவிதமாகப் பாடங்களை ஒழுங்குபடுத்திப் போதிக்கவேண்டும். எளிதிலிருந்து கடுமையானதற்கும், லௌகீகஞானத்திலிருந்து மார்க்கத்துக்கும், மார்க்கஞானத்திலிருந்து வைதீகஞானத்துக்கும் நடத்திக்கொண்டுபோகவேண்டும். (7) மாணாக்கன் சன்மார்க்கத்தை அடைவதிலேயே கண்ணும் கருத்துமுடையவனாக விருக்கவேண்டும். வாணாளின் பயன் ஆண்டவனுக்குப்பிரியமான குணமுள்ளவனாக இருக்க முயற்சிசெய்வதுதானென்று அவன் அறிந்து கொள்ளவேண்டும்.

ஆசிரியனைப்பற்றி அவர்கள் கூறுவதாவன:— (1) மாணாக்கர்களிடத்து அவன் அன்பும் தயையுமுள்ளவனாக விருக்கவேண்டும். (2) மாணாக்கர்களிடமிருந்து யாதொரு வெகுமானத்தையும் அவன் எதிர்பார்க்கக்கூடாது. மாணாக்கனின் நற்குணமே அவன் தனது ஆசிரியனுக்கு எப்போதும் கடமைப்பட்டிருப்பதைத் தெரிவிக்கும். (3) ஆசிரியர், மாணாக்கர்களுடைய நடையுடைகளைக்கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்து அவர்களுக்கு நற்குணம் உண்டாகும்படி பாடுபடவேண்டும். பக்குவமாவதற்கு முன்னால் அவர்கள் வைதீக விஷயத்தில் மனத்தைச்செலுத்த வொண்ணாமல் ஆசிரியன் காக்கவேண்டும். (4) அடிக்கடி சுட்டிக்காட்டும் குறிப்பினால் மாணாக்கர்கள் தீயவழியில் போகாமலிருக்கும்படி செய்யவேண்டும். (5) ஒரு விஷயத்தில் சமர்த்தனான ஆசிரியன் தானறியாத விஷயங்களைப்பற்றி இகழக்கூடாது. இகழ்ந்தால், அவ்விஷயங்களில் மாணாக்கர்களுக்குத்துரபிமான முண்டாகிவிடும். (6) எப்போதும் சமயத்துக்கு ஏற்ற சமாதானத்தைக்கூறி, மாணாக்கர்களுடைய சந்தேகங்களை நிவர்த்திக்கவேண்டும். ஆசிரியன் தன்புத்திக்கு எட்டாததைச்சொல்லிக்கொடுக்க முயலக்கூடாது. (7) தான் சொல்லுகிறபடி ஆசிரியன் நடந்தும் காட்டவேண்டும். இல்லையேல் மாணாக்கரின் பரிகாசத்துக்குள்ளாவார்கள்.

ஜிலாலுடீன்,

மறுபிறப்பு.

(ஓர் மறுப்பு உபந்நியாசம்.)

அருமைச் சகோதரர்காள்! மானிட ஆன்மாவானது மறு காயப்பிரவேசம் செய்கின்றதென்று எண்ணுங் கொள்கையில் எனக்கு நம்பிக்கை யில்லை யென்பதை நீங்கள் அறிவீர்கள். அக்கொள்கைக்கு விரோதமாக நான் கொண்டிருக்கும் ஆக்ஷேபணைகளிற் சிலவற்றை இன்றைய மாலையிற் சொல்லப்போகிறேன். ஆனால் அவ்வாறு செய்யுமுன்னர் பிழைபட்டதும் அடிபட்டதுமான இப்பழைய ஆரியக் கொள்கையை கற்றறிந்த நமது நாட்டாரிடத்து மறுபடியும் உயிர்ப்பிக்க முயற்சி செய்யும் ஆரிய ஸமாஜத்தாராகிய எனது ஸகோதரர்கள், அக்கொள்கைக்கு அனுகுணமாகக் கூறும் நியாயங்களில் ஏதேனும் உண்மையிருக்கிறதா என்று பார்க்கவேண்டி, அவைகளைச் சொல்லவேண்டியது அவசியமாகின்றது.

அக்கொள்கை எம்மாதிரியான உருவத்தில் உற்பத்தியானதென்பது கூறுவதற்கு எளிதன்றாயினும், அது வெகு பழையதானவோர் கொள்கையென்பது மறுக்கவொண்ணாத விஷயம். அநேக ஜனங்கள் அதில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பிராசீனமும் ஜன ஸங்கியையும் அதிகமாக ஒன்றையும் ருஜுப்படுத்துவதில்லை. மனிதகோடிகளில் பெரும்பான்மையோர் அக்கொள்கையில் நம்பிக்கையுடையராக விருப்பின், அவர்களைப்போலவே ஞானம்படைத்த பலபேர்கள் அக்கொள்கைக்கு விரோதமாகவும் இருக்கின்றனர். ஹிந்துக்களும் புத்தமதத்தினரும் ஏதாவது ஒரு மாதிரியாக அக்கொள்கையில் நம்பிக்கை வைக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்களுக்கும் முகம்மதியர்களுக்கும் அதிற் கொஞ்சமேனும் நம்பிக்கையில்லை. இன்னொரு விஷயத்தை எடுத்துக்கொள். பிரகிருதி*வணக்கம் என்பது மானிட வகுப்பாருடைய வெகு பிராசீனக்கொள்கையென்பதை நாமெல்லோரும் அறிவோம். அது வேதகற்பத்தைப் போலப் பழமையானது. தற்காலத்துள்ள வேத விற்பன்னர்களுடைய ஆதாரத்தின்பேரிலேயே நாம் இதைக் கூறுகின்றோம். இன்னும் அது இந்தியாவில் இக்காலத்திலும் ஏராளமாகப் பின்பற்றுவோர்களைப் பெற்றிருக்கின்றது. பிரகிருதி வணக்கம் வெகு பழமையானதும் வெகு ஜனங்களால் பின்பற்றப்படுவதுமாக விருப்பதினால் அது சரியானதென்று சொல்வது நியாயமாகுமா? பொதுப்படக் கூறுமிடத்து, புதியதாக விருப்பதொன்றைக் காட்டிலும் பழையதாக விருப்பதொன்று பூர்த்தியாகாததென்று சொல்லலாம். எப்படியானாலும், வெகு பழையதானதும் வெகு ஜனங்களாற் கொள்ளப்படுவதுமான வோர் நம்பிக்கை நிச்சயமாகவே நியாயமானதாக விருக்கவேண்டுமென்று சொல்லுவதற்கிடமில்லை.

யோஜிக்கப்படவேண்டிய விஷயம் இன்னுமொன்றுண்டு. ஆரிய ஸமாஜத்தாராகிய நமது நண்பர்கள் தாங்கள் நமக்குக்காட்டும் இக் கொள்கையின் தோற்றம், முதன்முதலில் அக்கொள்கையை உற்பத்தி செய்தவருடைய தோற்றந் தானென்று நிச்சயமாக உறுதி சொல்லக் கூடவில்லை. எனது கருத்தை விளக்கிக்காட்டுவதற்காக ஒரு உதாரணம் கூறுகின்றேன். ஹிந்துக்களும் ஆரிய ஸமாஜத்தாரும் வேதம் பிழைபடாததென்பதில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். ஆயினும் அப்பரிசுத்த கிரந்தங்களில் சில பாகத்தைப் பொருள் செய்வதில் இருவகுப்பார்க்கும் மிக்க வித்தியாசமுள்ளது. ஒரே மந்திரங்கள் ஒரு வகுப்பாருக்கு ஆத்ம விஷயமாகவும் மற்றொருவருக்குப் பௌதிகவிஷயமாகவும் பொருள்படுவது வியக்கத்தக்கது. ஒரு வகுப்பாருக்கு “அக்னி”என்பது சாதாரண நெருப்பென்றும் மற்றொரு வகுப்பாருக்குக் கடவுளுடைய பெயரென்றும் பொருள்படுகின்றது. ஆயினும் இருவரும் வேதங்கள் கடவுளுடைய வார்த்தைகள் என நம்புகின்றனர். ஆதலால், தற்கால ஆரிய ஸமாஜத்தாரின் கொள்கைக்கும் பழைய ஆரியரின் கொள்கைக்கும் வித்தியாசம் இருக்கலாமென்றே எனக்குத் தோன்றுகின்றது.

---

* விக்கிரஹவணக்கம் முதலியன.

அக் கொள்கையானது முழுவதும் பிழைபட்டதென்று நாம் சொல்வதில்லை. ஆத்மவிஷயமாக நோக்குமிடத்து அதில் விசேஷ உண்மையிருக்கின்றது. ஒருவிதத்தில்—அதுதான் சரியான விதமென்று நான் நம்புகின்றேன்—பிரம்மஸமாஜத்தைச் சேர்ந்தோராகிய நாங்களும் புனர்ஜன்மத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றோம். ஒருவிதத்தில் எங்களுடைய ஆத்மா ஒரு ஸ்திதியிலிருந்து இன்னொரு ஸ்திதிக்கு மாறிக்கொண்டிருக்கிறதென்று நாங்கள் ஒவ்வொருவரும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்து கொள்கிறோம். நண்பர்காள்! கோபத்துடனும், சத்துருவிடம் பழிவாங்கவேண்டுமென்று கொதிக்கும் உள்ளத்துடனும் இருக்கும் மனிதனொருவனுக்கும் கொடிய மிருகத்துக்கும் ஏதேனும் வித்தியாசம் இருக்கிறதாவென்று சொல்லுங்கள். அந்த நிலைமையில் அவனுடைய உள் ஆவியும் வெளித்தோற்றமும் மிருகத்தன்மை படைத்தனவபோலத் தோன்றுகின்றன. தனக்குள்ளே கடுவிஷத்தை யடக்கிக்கொண்டிருந்தபோதிலும் வெளிப்பார்வைக்குப்பணிவே உருவெடுத்துவந்தாற்போல் மென்மையோடும் சாந்தத்தோடும் புழுதியில் புரளும் கொடும் பாம்புக்கும் பொய் பிரட்டுக்களில் உழலும் சுயநலங் கருதுகிற மூடர்களுக்குமுள்ள அத்தியந்த ஒற்றுமையை நீங்கள் உடனே தெரிந்துகொள்

ளக்கூடுமென நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். சிற்றின்பப்பிரியனான ஒருவன் மானிடவுருவோடுகூடிய மிருகமென்று கருதப்படுகிறான். சுறுசுறுப்பும் உபயோகமுமுள்ள வாழ்க்கையின் உஷ்ணத்தில் குறைவுள்ள அசட்டுச் சோம்பேறி உயிருடனிருக்கும் மனிதன் என்று சொல்லப்படுவதைக் காட்டிலும் இறந்த கட்டையென்று சொல்லப்படுவது பொருத்தமானதாகும். அன்பு, தயை, மனோவிகாரமான மற்றைக் குணங்கள்இல்லாத வன்னெஞ்சன் ஒருவன் ஒரு இரும்பித் துண்டுக்குச் சமானமானவனேதான். [illegible]திலேயே பிறந்து வாழ்ந்து மடிந்துபோகிற ஊரும் புழுவுக்கும் உலகவின்பத்திலேயே பற்றுள்ளவனைச் சிற்றின்பத்தைத் திருப்திசெய்வதையே உடம்பெடுத்த பெரும் பேறாகக் கருதிக்கொண்டு மண் புழுவைப்போலத் தனக்கெனவே வாழ்ந்து, மேலானதும் பரிசுத்தமானதும் தெய்வீகமானதுமான விஷயங்களில் ஆசையில்லாதவனைக் காலங்கழிக்கும் மனிதனுக்கும் உண்மையிலேயே வித்தியாசத்தைக் காண்பதரிது. பரிசுத்த கிரந்தங்களிலிருந்து ஞானத்தைக் கிரகித்துக்கொண்டு, அவ்வாறு கிரகித்த ஞானத்தை அனுபவத்தில் கொண்டுவராதவர்கள் சுமைதூக்கும் மிருகங்களுக்குச் சமானமாவார்கள். தாங்கள் கற்றதாகச் சொல்வதை உணராதவர்களைப் புத்தியில்லாக் கழுதைகள் என்று நாம் அடிக்கடி கூறுகிறோம். சுதாவிலேயே யாதொரு அபிப்பிராயமுமின்றி நடையாகும் பொய்ப் போலியர்களைச் சாமர்த்தியமுள்ள வாலில்லாக் குரங்குகளென நாம் பொதுவாக மதிக்கிறோம். இவ்விதமாக நோக்குங்கால், புனர்ஜனனம் என்பதின் பொருள் கொள்கை உங்களில் ஒவ்வொருவருக்கும் நன்றாக விளங்கும்.

இனி நாம் எடுத்த விஷயத்துக்குத் திரும்புவோம். மறுபிறப்புக்கொள்கையில் நம்பிக்கைவைப்போருடைய ஸ்திதியில் நாம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இவ்வுலகத்தில் ஏன் அவ்வளவு துன்பமும் துயரமும் இருக்கவேண்டும்? தனது தீச்செயல்களினாலேயே மனிதன் தனக்கே சில ஆபத்துக்களை விளைவித்துக்கொள்கிறானென்பது உண்மையே; ஆயினும், அவன் கொஞ்சமேனும் உத்திரவாதியாகக்கூடாத வேறுபல ஆபத்துக்கள் இருக்கின்றன.

(இன்னும்வரும்)

ஜிலானுடீன்.

பிஸ்மில்லாஹி.

இஸ்லாம் நேசன்.

புஸ்தகம் 2.] 1910-ஞு அக்டோபர்-மீ [சஞ்சிகை 3.

THE REGISTRAR OF
REGISTERED
DEC 1910
MADRAS.

THE BETTER WAY.

மேலானமார்க்கம்.

(59-ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுளின் அடையாளங்களிற் சிலவற்றை எவ்வளவு காம்பீரியமாகவும் தெளிவாகவும் திருக்குரான் கூறுகின்றது.

“உண்மையிலேயே, கடவுள் தானியத்தையும் பேரீச்சை விதையையும் முளைக்கச்செய்கிறான்; இறந்தோரிலிருந்து உயிருள்ளோரையும், உயிருள்ளவரிலிருந்து இறந்தோரையும் அவன்கொண்டுவருகிறான்; இது தெய்வீகமே.”

“பொழுது விடியும்படி அவன் கட்டளையிடுகிறான்; சிரமபரிகாரத்துக்காக இரவையும், காலத்தைக் கணிப்பதற்காகச் சூரியசந்திரர்களையும் அவன் நியமித்திருக்கிறான்.”

“இரவில் கடலிலும் கரைமீதும் உங்களுக்கு வழிகாட்டிகளாகவிருக்கும்பொருட்டு, அவன் நக்ஷத்திரங்களை நியமித்திருக்கிறான்.

“ஆகாயத்தினின்றும் மழையைக் கீழே அனுப்புபவனும் அவனே. அதனால் நாம் எல்லாப் புல் பூண்டுகளின் முளைகளையுற்பத்தி செய்கிறோம். அவைகளினின்றும் பசுமையான இலைகளையும் நெருங்கிவளரும் தானியங்களையும், பே[illegible]சை மரங்களின் பாளைகளினின்று தாழ்ந்து தொங்கும் பழக் குலைகளையும், திராட்சத் தோட்டங்களையும் ஒலிவை இலையையும், மாதுளையையும் இன்னும் இவை போன்றவைகளையும் உண்டாக்குகின்றோம். அவைகள் பழுத்து முதிரும்போது அவைகளின் பழங்களைப் பாருங்கள். உண்மையாகவே, நம்பிக்கையுள்ள ஜனங்களுக்கு இதில் அடையாளங்கள் தென்படும்.”

மானிடர்களுக்கு ஏற்பட்டுள்ள பகுத்தறிவைக்கொண்டு நோக்கும்போது, இவ்வுலகத்தை யடக்கியாளும் கடவுள் ஒருவனா மூவரா அல்லது பலரா என்பதில் எது யுக்திக்கு மிகவும் ஒத்திருக்கின்றது? ஆத்மஸம்பந்தமான சாஸ்திரமோ கடவுளின் ஏகத்துவத்தைச் சந்தேகமற நிரூபணம் செய்கின்றது; இந்த சித்தாந்தத்தின் உண்மைக்குச் சாட்சியங்கள் நமது வாழ்நாளின் ஒவ்வொரு போக்கிலும் காணப்படுகின்றன. இந்தச் சாட்சியங்கள் துரபிமானத்தைத் தூர அகற்றிவிட்டு, கவனமாகப் பார்க்கும் ஒவ்வொரு விவேகிக்கும் நம்பிக்கையைக் கொடுக்கும்.

நமது நபிநாயகம் தெய்வீக சக்தியுள்ளவர்கள் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா? ஆதாரங்கள் யதேஷ்டமாக வுள்ளன. அவைகளைச் சுருக்கமாகவும் பூர்த்தியாகவும் சொல்லவேண்டுமானால், எனக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் அளவுக்கு மேலாகச் சாவகாசம் வேண்டும்; மேலும் சாதாரண முஸ்லீங்களுடைய அபிப்பிராயத்தைவிட ஆழமானதாயும் அகன்றுமிருக்கும். இஸ்லாத்தின் தத்துவார்த்த விஷயமாகவும் விவாதம்புரிய நேரிடும். ஆனால் நமது திருக்குரான் அதன் கட்டளைகளின் தன்மை, நபியின் உபதேசமொழிகளின் தன்மை, அவர்களுடைய ஜீவசரிதையைப் பற்றிய உண்மை விவரங்கள், சாதனங்கள், இவைகளைத்தவிர வேறு பலமான ஆதாரங்கள் நமக்கு வேண்டாம். சிதறிப்போகக்கூடிய மானிட புத்திக்கூர்மையைக்கொண்டே, வழிகாட்டும் ஆவேச சக்தி வேறொன்று மில்லாமல், யாதொரு மனிதனும், இவர்களைப்போல வாழவாவது, உபதேசம் செய்யவாவது, அருங்காரியங்களைச் செய்யவாவது சக்தியுள்ளவனாக இருக்கமாட்டான்.

இஸ்லாத்தைப் பற்றிப் படிக்கத் தொடங்கியபின் எனது மனதில் நன்றாகப் பதிந்த முதல் விஷயங்களில் ஒன்று என்னவெனில், சாதாரண மனிதன் ஒருவனை முற்றிலும் தளர்வடையச் செய்யக்கூடிய இடையூறுகளும் உற்சாகமின்மையும் நேர்ந்த போதிலும் அவைகளைக் கவனியாமல், ஒரே சாதிப்பாகவும் உறுதியாகவும் நமது நபிநாயகம் காட்டிய ஊக்கந்தான். தாம் உபதேசம் செய்தவற்றை அவர்கள் பூர்ணமாகவும் முழு மனதோடு நம்பினதாகத் தெரிகின்றது. அவர்கள் சாதாரண மனிதர்களுடைய மனதைப்போன்ற மனமுடையவர்களாயாவது, செய்யும் காரியங்களில் சஞ்சலமும், அநிச்சயமு முடையவர்களாயாவது, மனோராஜ்யமான காரியங்களைச் செய்ய மனமுள்ளவர்களாயாவது இருந்திருந்தால், அவர்களுடைய யதார்த்தம் சாட்சியாக ஏற்றுக்கொள்ளப் படுவதிற் சற்று உபயோகமில்லாமலிருக்கும். ஆனால், அவர்களுடைய சின்னஞ்சிறு வயதிலாகட்டும், வாலிபப்பருவத்தி லாகட்டும், மனிதனான காலத்திலாகட்டும், அவர்கள் சமமான மனமுடையவர்களென்றும், எடுத்த காரியங்கள் ஒவ்வொன்றிலும் ஊக்கத்தோடும், யோக்கியமாகவும் யுக்திக்கு ஏற்றவாறு நடந்துவந்தவர்களென்று காண்கிறோம். சன்மார்க்கத்திலும் அவர்கள், அக்காலத்துள்ள சிறுவர்கள் வாலிபர்களுக்கு அதிகமாகவே இருந்தார்கள்; நிதானமாகவும் நம்பிக்கையுள்ளதாகவும் இருந்த அவர்களுடைய வாழ்நாளின் போக்கு, அவர்களுடன் சம்பந்தஞ்செய்த எல்லோருடைய அன்பையும் கண்ணியத்தையும் பெற்றது. செல்வம், அதிகாரம், பெரிய அந்தஸ்து, இவையெல்லாம் அவர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடியதாகவிருந்தன. கிடைப்பதாக விருந்த உலக சௌகரியங்களைப் பெறுவதற்கு அவர்கள் இச்சைகொண்டிருந்தால், மானிட ஆசையிலும் இன்பத்திலும் உண்டாகக்கூடிய ஒவ்வொரு சுகத்தையும் அனுபவித்திருப்பார்கள்; ஆனால் அவர்கள் வேறொரு மேலான மார்க்கத்தைத் தெரிந்தெடுத்தார்கள்; சவுகரியத்தையும் பெருமித வாழ்க்கையும் பராமுகம் செய்தார்கள்; சாதாரண மனிதனுக்கு உயிரை இன்பமாக்குகின்ற எல்லாவற்றையும் நிராகரித்து விட்டார்கள்; உண்மையைத்தமது ஸஹஜனங்களுக்கு உபதேசிப்பதற்காகப் பழிச்சொல்லையும், இம்சையையும், மிகுந்த தரித்திரத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். இவ்விஷயங்களும் அவர்களது உபதேச மொழிகளின் தன்மையுமே, அவர்கள் வாஸ்தவத்தில் தெய்வாவேசம் பொருந்தியுள்ளவர்களென்பதை எவனுக்கும் நிச்சயமாகப் புலப்படுத்துவதற்குப் போதுமானவை யாகும்.

இவ்வுபதேச மொழிகளைக் கவனமாகக்கூறுபடுத்தினால் அவைகள், தர்ம மார்க்கத்தில், மோஸஸ், ஆப்ரகாம், ஈசா முதலிய உலக சரித்திரத்துக்குத் தெரிந்த உண்மைத் தீர்க்க தரிசிகளின் தர்மோப

தேசங்களைப் போலவே இருப்பதைக் காணலாம். நமது நபி நாயகம் வெளியிட்டருளிய மார்க்கமானது அதற்கு முன்பேயே மனிதனுக்கு வெளியிடப்பட்டிருந்த மார்க்கத்தைவிட வேறானது. இதற்குக் காரணம் என்னவெனில், அவர்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளால் உபதேசிக்கப்பட்ட கொள்கைகளைச் சுற்றியெழுந்த குறைபாடுகளை ஒழிக்கவும் பிழைகளைத் திருத்தவும் வேண்டிய பொதுக் கருத்துடன், பூர்த்தியும் பரிஷ்காரமுமுள்ள வோர் தர்மசாஸ்திரத்தைக் கொடுக்கவிருந்ததே நமது நபிநாயகத்தின் காரியமாக விருந்தது தான். அவர்களுடைய வெளிப்படையான கருத்து என்னவெனில், விக்ரக ஆராதனையிலிருந்து மனிதர்களைத் திருப்புவதும், நம்பிக்கையோடும் சாமர்த்தியத்தோடும் பின்பற்றினால், கடவுளிடம் இன்னும் நன்றாக நெருங்கச்செய்யக்கூடியதும், மனதிலும் சரீரத்திலும் சுத்தர்களாகவும் ஒவ்வொரு விதத்திலும் சிறந்தவர்களாகவும் ஆகக்கூடியதுமான ஓர் தொடர்ச்சியான விதிகளைக்கொடுப்பதுமாம். அவர்கள் இந்தக் காரியத்தைப் பரிஷ்காரமாய்ச் செய்து தீர்த்தார்கள்; தம்மைப் பின்பற்றுவோரின் மனத்திலும் இருதயத்திலும் இஸ்லாம் மார்க்கத்திய முறைகள் நன்றாகப் பதியும் வரையில் அவர்கள் இவ்வுலகத்திலிருந்து திரும்பக் கூப்பிடப்படவில்லை.

இப்போது நாம் கிரமமாக இஸ்லாம் மார்க்கம் ஜனங்களால் சாமான்யமாக அங்கீகரிக்கப்பட்ட விஷயத்தைப்பற்றித்தான் கவனிக்கக்கூடும். முதன்முதலில் நோக்கியதும் தெரியக்கூடியதான விஷயத்தைக் காட்டிலும் ஆழ்ந்ததும் தத்துவப்பொருள் நிறைந்ததுமான ஓர் தோற்றம் அதில் இருக்கிறதென்று முன்னமேயே கூறியுள்ளோம். ஆயினும், மேலெழுந்த விதமாக நோக்கியபோதிலுங்கூட நன்கு தெரியக்கூடியதான அதன் அழகு என்னவென்றால், அற்பக் கூலியாள் முதல், மகாமேதாவியான ஞானி, கவி வரையில் உள்ள எல்லா வகுப்பினருடைய ஆத்ம சம்பந்தமான தேவைகளுக்கும் தகுந்தபடி தன்னை முழுவதும் இணக்கிக்கொள்ளுங் குணந்தான். அதில், யுக்திக்கும் புத்திக்கும் முரணானதும், நியாயமும் தயையுமாகிய இயற்கைக் குணங்களுக்கு எவ்வளவாகிலும் விரோதமானதும் ஒன்றுமே இல்லை. ஸ்வபாவம் கடந்தபொருள்களில் நம்பிக்கையையும், அனுபவத்துக்கு வராத கொள்கையையேனும் அசங்கதமான மூடபக்தியையேனும் கைக்கொள்ள வேண்டுமென்பதையும் அது நிர்ப்பந்திப்பதில்லை. மனோ வாக்குக் காயங்கள் மூன்றிலும் வெகு சுத்தம், கடவுளை யடையவேண்டுமென்ற நிதானமும் சஞ்சலபுத்தியில்லாததுமான பேரவா, சுயநயம் பாராட்டாத நிஷ்களங்கமான சகோதர வாஞ்சை இவைகளே கருதுகின்ற பயன்களாம். அப்பயன்களை அடைவதற்கு ஏற்பட்டுள்ளமார்க்கங்களோ, மனிதனுடைய யுக்தியினால் எவ்வளவு பரிஷ்காரமாகச் செய்யப்படலாமோ அவ்வளவு பூர்த்தியாக வுள்ளன.

ஒரு மார்க்கத்துக்குப் பிரதானமாகவுள்ளது தொழுகைதானென்று நமது நபி வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். அவர்களது மார்க்கத்திலுள்ள மற்றைய விசேஷங்களைக்காட்டிலும் இந்தத்தொழுகை விசேஷத்திலேயே அவர்கள் அதிக சிரத்தை பாராட்டியிருக்கிறார்கள். தொழுகையின் காம்பீரியத்தையும் முக்கியத்தையும் இன்னும் தெளிவாகக் காட்டுவதற்கும், இன்னொரு நியமத்தை அனுஷ்டிக்க வழிதேடுவதற்குமே “ஒலூ” என்ற ஸ்நானம் ஏற்படுத்தப்பட்டது. சாசுவதமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் வழிகளால் சுத்தராகவிருக்க வேண்டுமென்ற எண்ணம், தமது மார்க்கத்தைப் பின்பற்றுவோருடைய மனத்தில் நன்றாகப்பதியவேண்டுமென்பது அவர்களுடைய வெளிப்படையான அபிப்பிராயமாம். ஆகவே, மற்றைய விதிகளிற்போலவே, ஸ்நான விதியிலும், வழக்கத்தின் வல்லமையை அவர்கள் நன்கறிந்து சிலாகித்தனர்களென்பது தெரியவரும். தினந்தோறும் குறித்த தடவைகள் தொழுகையைச் செய்யும் முஸ்லீம் ஒருவன் தனது “ஒலூ” வையும் நினைக்காமல் தொழுகையை நினைக்கமாட்டான். ஆதலால் பிரதிதினமும், அவன் கைகால்களையும் முகத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று, ஐந்துதடவைகள் நினைப்பூட்டப்படுகிறான். மலஜலோபாதைக்குப்போவதில் அவன் வெகு சுத்தம் பாராட்டுகிறான். இவ்விஷயத்தில் இவ்வளவு சுத்தம் மற்றைய மதத்தினர் பாராட்டுவதில்லை. இம்மாதிரியாக, இவனுக்குத் தேகசுத்தத்தில் ஒரு வழக்கமுண்டாகி விடுகின்றது. தனது மார்க்கத்தையே கைவிட்டு விட்டாலொழிய இவ்வழக்கத்தைக் கைவிடமுடியாது. காபாவிருக்கும்

திக்கை நோக்கி முகத்தையும், கடவுளைநோக்கி மனத்தையும் நாம் திருப்பும்போது, நமது கைகால்கள், முகம், மர்மஸ்தானங்கள் மட்டுமன்று; தேகத்தின் மற்றைய உறுப்புக்களும் வஸ்திரங்களும் கூட வெகுசுத்தமாகவே இருக்கவேண்டுமென நமது நபிநாயகம் கருதினார்களென்று, நம்மிடமிருக்கும் சாட்சியங்களால் தெரிந்து கொள்கிறோம். "ஒலூ" வைப்பரிஷ்காரமாகவும் ஜாக்கிரதையாகவும் செய்த ஒரு முஸ்லீம், அழுக்கடைந்த வஸ்திரத்துடன் தொழுவானானால், அவன் சட்டத்துக்கு விரோதமானவன் என்று நான் சொல்வேன். மசூதிகளிலும், தொழுகைக்கு ஏற்பட்ட மற்றைய ஸ்தலங்களிலுமுள்ள தரைகள் கூடுமானவரையில் வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதும் எனது அபிப்பிராயம்.

ஆனால், இவ்வாறு எல்லா முஸ்லீங்களும் பரமசுத்தர்களாக இருக்கிறார்களா? என்று யாரேனுமொருவர் கேட்கலாம்.

அப்படிச் சுத்தமில்லாமல் இருக்கும் சிலரை நான் கண்டிருக்கிறேன் என்று சொல்ல விசனிக்கிறேன்; ஆனால் அதற்குக்காரணம் நமது நபிநாயகத்தின் உபதேசமொழிகளின் பொருளை அவர்கள் நன்றாகக் கிரகிக்கவில்லை யென்பதுதானென்று எண்ணுகிறேன். அவர்களுடைய வெளிப்படையான கருத்து என்னவெனில், வழக்கத்தின் கீழ்க்கொண்டுவருவதினால், பரிசுத்தகுணத்தை ஆதரித்துத் திடப்படுத்த வேண்டுமென்பதே. ஒரு மனிதன் ஏதேனுமொரு காரியத்தைக் குறித்தகாலத்திற்செய்ய வழக்கப்பட்டிருந்தால், அந்தக்காலம் வந்ததும் அவனுடைய மனம் அவ்விஷயத்தின் மேல் நாடுகின்றது. நல்வழக்கம் ஒன்றை ஸ்தாபிக்கவேண்டுமானால், செய்துதீரவேண்டிய கடமையென்று எண்ணியே, அதை அப்பியசிக்கத்தொடங்குகிறோம்; இச்சையினால் மாத்திரம் அதை அப்பியசிப்பதாகவிருந்தால் அது எவ்வளவு தூரம் நம்மைப்பற்றி நிற்குமோ அதைக்காட்டிலும், கடமையினால் அதை எப்போதும் அப்பியசிப்பதாகவிருந்தால் அதிகமாக அது நம்மைப்பின்பற்றும். கிறிஸ்தவ மார்க்கம் என்று சொல்லப்படும் மதக்கொள்கையினும், இஸ்லாம் மதக்கொள்கை உயர்ந்தது என்பதற்குள்ள பலவிசேஷங்களில் இது ஒன்றாகும். கிறிஸ்தவமார்க்கத்தில் ஒருவன், தொழுகையும் சுத்தமாகவிருத்தலும் புண்ணியத்தைத்தருமென்றும், அவனுக்கு இஷ்டப்பட்டபோது இவ்விதிகளை அனுசரிக்கவேண்டுமென, உபதேசிக்கப்படுகிறான். அவனுடைய இஷ்டப்படியே விட்டுவிட்டால், மனிதன், தனக்கு எளிதாயும் சவுகரியமுள்ளதாயும் இருக்கும் கடமைகளையும், இகத்தில் உண்டாகக்கூடிய சுகத்தைக் கொடுக்கும் கடமைகளையுமே செய்வான்.

தொழுகைக்கும் இவ்வபிப்பிராயம் பொருந்தும். தொழுகை இன்றியமையாதது என்று நமது நபிநாயகம் கூறியிருக்கின்றார்கள். "தொழுகை நல்லது தான்; நீங்கள் தொழவேண்டும்; பிரதிதினமும் ஐந்துதரம் தொழவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்வேன்; கூடுமானபோதெல்லாம் அடிக்கடி தொழுங்கள்" என்று நமது நபிநாயகம் சொல்லியிருந்ததாக வைத்துக்கொள்வோம். அப்படியானால் உலகத்திலுள்ள முஸ்லீங்களில் எவ்வளவு தொழுகை இருக்குமென்று நினைக்கிறீர்கள்?

வெகுகொஞ்சமாகத்தான் இருக்குமென்றுநிச்சயமாகச்சொல்வேன். கிறிஸ்தவர்கள் இக்காலத்துச் செய்யும்தொழுகையைப்போல, வெகு கொஞ்சமாகவே இருக்கும். "இடைவிடாது தொழுங்கள்" என்று பைபிள் கூறுகின்றது. வெகு பலமாகத் தொழவேண்டுமென்றும், பட்டினியிருக்கவேண்டுமென்றும் அதுவற்புறுத்துகின்றது. ஆனால், வைதீக கிறிஸ்தவர்களிடையே எனக்குள்ள நீண்டஅனுபவத்தினால் நான் கண்டது என்னவெனில், பலர் தொழுவதே கிடையாது; சிலர், இரவில் படுக்கப்போகும்போதுமட்டும் ஒரு தடவை பிரதிதினமும் தொழுகின்றனர். இன்னும் சிலர், இரவில் படுக்கப்போகும்போதும் காலையில் படுக்கையைவிட்டெழுந்திருக்கும் போதுமாக இரண்டு தடவை தொழுகின்றனர் என்பதாம். இரண்டு தடவைகளுக்கு மேலாக, ஒவ்வொரு நாளும் அதிகமாக அடிக்கடி தொழும் வழக்கத்தையுடையவனையும், தொழுவதற்கு முன் ஒழுங்காக ஸ்நாநம் செய்தவனையும் நான் கண்டதேயில்லை.

" அதெல்லாம் சரிதான்; ஒரு கிறிஸ்துவன், தொழுவானானால், மனப்பூர்வமாகத் தொழுகிறான்; முஸ்லீம் தொழுவானானால், யந்

திரப்பிரகாரமாய் யோசனையின்றித் தொழுகிறான்; அவனுடைய
வார்த்தைகளிற் பொருளேயில்லை" என்று ஒருகிறிஸ்தவன் என்னி
டம் ஒருபோது சொன்னான்.

இதுவே தான் நீதியென்று நான் நம்பவில்லை. இப்படிச்செய்வ
தாகக் கூறப்படும் முஸ்லீமைப் போலவே, யந்திரப்பிரகாரமாகவும்,
கிளிப்பிள்ளையைப் போலவும், தாங்கள் சொல்லும் வார்த்தைகளின்
பொருளைச் சற்றேனும் கவனிக்காமல், கர்த்தருடைய பிரார்த்தனை
யைச் சொல்லிவிட்டு "நான் இப்போது படுக்கப்போகிறேன்" என்று
திருப்பித் திருப்பிக் கூறும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருக்
கின்றனர். யந்திரப்பிரகாரமாகவே தொழுகையைச் சொல்கிறா
னென்றாலும் முகம்மதியனுக்கு ஒரு அநுகூலம் இருக்கின்றது.
அவன் செய்யும் வணக்கங்களும் முழந்தாட்பணிவும், அவனுடைய
கடமையை எப்போதும் ஞாபகப்படுத்தி, அவன் மனம் வேறெங்
கேனும் செல்லாமலும் தடுக்கின்றன. அவன் ஐந்து தடவைகள்
தொழுவானானால், அவ்வைந்து தடவைகளிலும், கிறிஸ்தவன் ஒரு
தடவையில் சுருங்கச் செய்வதைப்போலவே, மிகுந்த கனிவோடு
தொழுகின்றான். ஆகவே, கிறிஸ்தவர்களைக் காட்டிலும் முகம்மதி
யன் அதிகமாகவே தொழுகிறானென்று தோன்றுகிறது.

ஆனால், முஸ்லீம் ஒருவன் கவனமில்லாமலும் அசிரத்தை
யாகவும் தொழுவானானால், அதற்குக் காரணம் இம்மார்க்கத்தின்
குறைபாடுகளன்று; முகம்மது நபியின் கட்டளைகளை இவன் நன்றாக
அறிந்து கொள்ளாததுதான். தொழுகை, பயனைத் தரவேண்டுமா
னால், மனப்பூர்வமாகச் செய்யப்படவேண்டுமென்றும், உலகவிஷ
யங்களிலுள்ள கவனத்தை யகற்றிச், சொல்லும் வார்த்தைகளிலும்
செய்யும் வணக்க முழந்தாட் பணிவிலுமே முழுக்கவனமும் இருக்க
வேண்டி மனதைச் சீர்திருத்திக்கொள்வதே ஸ்நாநத்தின்பயன்களில்
ஒன்றென்றும், நமக்குவெகுதெளிவாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.
கடவுளின் முன்னர் தேகமனோ சுத்தத்தோடு போகவேண்டுமென்ற
எண்ணத்தை நாம் பின்பற்றவேண்டும்; வெகு மரியாதையாகவும்
ஆ[illegible]ம் பூர்த்தியாகவும் அவனை வழிபடவேண்டும். தொழுகையில்
வின் வார்த்தைகளைக் காட்டிலும் பன்மடங்கு விசேஷமானபொருள்

உள்ளதென்றும், இஸ்லாம் மார்க்கத்தில், இச்சையுடன் தொழாதவர்
களைக்கூட, தொழச்செய்யும் வழக்கத்துக்குக் கொண்டுவரக்கூடிய
பயன் தரும் வழியொன்று உள்ளதென்றும், இமாம் ஆல் கஜாலியின்
வார்த்தைகளைப் படிப்போருக்குத் தெரியும்.

நமது நபிநாயகத்தின் காலத்திலும், அவர்களையடுத்துவந்தோ
ரின் காலத்திலும் வழங்கிவந்த தொழுகை முறையை இப்போதும்
கண்டிப்பாய்ப் பின்பற்றவேண்டிய அவசியமில்லையென்று தனக்குச்
சிற்சிலவேளைகளில் அபிப்பிராயம் உண்டாவதாக ஒரு முஸ்லீம்
என்னிடம் ஒருநாட் சொன்னான். இப்படிநினைக்கக் காரணம்என்ன
வென்று நான் கேட்டதும் அவர், அரபியர்கள் சாதாரணமாக
தொழுகையைச் செய்யும் ஜனங்கள் அல்லரென்றும், தொழும்வழக்
கத்தை அவர்களிடம் உண்டாக்குவதற்கு ஒருவகையான கண்டிப்பு
விதிகள் வேண்டியிருந்தன வென்றும் சொன்னார். உடனே நான்,
அவருக்கு ஐரோப்பிய நடையுடைபாவனைகளை அனுசரித்து வரு
வோர்களின் ஸ்திதியைச் சுட்டிக்காட்டி, கண்டிப்பான விதிகள் ஏற்
படுவதற்கு 1200 வருஷங்களுக்கு முன்னால் எவ்வளவு அவசியம்
இருந்ததோ அவ்வளவு அவசியம் இற்றைக்கும் இருக்கின்றதென்று
கூறி அவரைத் தெளிவித்தேன். பத்தொன்பதாம் நூற்றாண்டின்
நாகரீகம் என்று சொல்வதன் கீழடங்கும் நடையுடைபாவனைகள்,
தொழுகையைச் செய்யுங்குணத்தை உற்பத்திசெய்து அதைவிருத்தி
செய்வனவென்றால், என் ஆயுள் முழுவதும் அந்நாகரீகத்திலேயே
நான் வாழ்ந்து வந்திருக்கிறேனாயினும், அக்குணத்தைக் கண்டு
பிடிக்க நான் முற்றிலும் தவறிப்போய்விட்டேன்.

மனிதன் வழக்கத்துக்கு அடிமைப்பட்டவன்; உலகவின்பத்
தை பொட்டிய விஷயமொன்றைச் செய்ய விரும்பினாலொழிய,
ஒரு தரம் ஆரம்பித்துத் தொடர்ந்துவரும் வழக்கத்தைவிட்டு மாறு
வது மகா சிரமமான காரியமாகும். தினமொன்றுக்கு ஐந்து தரம்
தொழும் வழக்கத்தை அவன் பெறுவானானால், அவ்வழக்கம் அவ
னது மரணகாலம் வரையில் அவனைப்பற்றி நிற்கும். அவனதுமார்க்
கத்தின் முக்கிய கொள்கைகளைப்பற்றி அவனுக்கிருக்கும் ஞானம்
அதிகரிக்க அதிகரிக்க, அவன் செய்யும் தொழுகையும் ஊக்கத்திலும்
மனப்பூர்வமாகச் செய்யப்படுவதிலும் அதிகரிக்கும்.

இஸ்லாம் மார்க்கத்தினது சிறந்த விதிகளில் ஒன்று என்னவெனில், கூட்டங்கூடியே தொழவேண்டுமென்பதைப் பற்றிய நியமந்தான். கூடுமானால், மற்றையோருடன் கூடியே எப்போதும் தொழவேண்டுமென்று முஸ்லீம் கற்பிக்கப்படுகிறான். இப்படி விதிக்கப்பட்டதற்குப் போதுமான தகுந்த காரணங்கள் பலவுள; அவைகளைப்பற்றியெல்லாம் இஸ்லாத்தின் தத்துவத்தைப்பற்றிப் பேசும்போது தான் கூறுவதற்கியலும். இப்போது நாம் அவ்விதியின் வெளித்தோற்றத்தை மட்டுமே கவனிப்போம். முதலாவதாக, அது ஜாதி பேதத்தை அறவே ஒழித்துவிடுகின்றது. எல்லா மனிதர்களும் சமமாகக் கருதப்படுகிற கடவுளுடைய சந்நிதானத்தில் எஜமானனையும் வேலைக்காரர்களையும் ஒரே பதவியில் அது வைக்கின்றது. பிச்சைக்காரன், வியாபாரி, கடைக்காரன், கைத்தொழிலாளி, கோடீசுவரன், மற்றைத்தொழிலாளி முதலிய எல்லோரும் மசூதியிற் றொழுங்காலத்தில் ஒருவரையொருவர் நெருக்கிக்கொண்டு சகோதரர்களைப்போல நிற்கின்றனர். குறித்த காலங்களில் முஸ்லீங்களிற் சிலர் ஓரிடத்திற் கூடுவார்களாகில் அவர்கள், தங்கள் தங்களுடைய அந்தஸ்தைப் பாராட்டாமல் கூடித் தொழக் கடமைப்பட்டுள்ளவர்கள். முஸ்லீம் ஒருவன் எவ்விடத்தில் இருந்தாலும் சரியே, தொழுங்காலம் வந்ததும் தொழுகையைச் செய்யக் கடமைப்பட்டவன். அவ்விடம் சவுகரியமற்றதாக விருந்தால், வேறு நல்லதோரிடத்தைத் தேடியடையவேண்டும். தொழுகையைச் செய்யாத தனது துணைவர்களின் கண்முன்னே தான் மட்டும் தொழுவதற்காக முழந்தாட்பணிய வேண்டியதும், அதற்காக, அவர்களை விட்டு நீங்கி வேறிடத்துக்குப் போகவேண்டியதும், வாலிபன் ஒருவனின் கர்வத்தை நன்றாக அடக்கும்.

தொழுகையைப்பற்றிய விதிகள் எல்லாவற்றினும் தன்மையெல்லாம், காரியத்தில் உண்மையையும், மார்க்கத்தில் பூர்ண பக்தியையும், உண்மையான ஒரே கடவுளை மனமாறத்தொழுவதையும் பெறுவதாகவே உள்ளது. இஸ்லாம் என்ற பதத்துக்குப் பொருள், கடவுளின் சித்தத்துக்கு விட்டுவிடுதல் என்பதாம். ஆகவே, சத்தமாகவும் பூர்ணம[illegible] உள்ள தொழுகையே இம்மார்க்கத்தின் சாரமாக வுள்[illegible].

கடவுளின் ஏகத்துவத்திலும், நபிநாயகத்தின் ஆவேச சக்தியிலும் நம்பிக்கை கொண்டிருப்பவன், தன்னை முகம்மதியன் என்று சொல்லிக் கொள்ளலாமாயினும் அவன், தனது ஆத்மாவைக் கடவுளிடம் நெருங்கக் கொண்டுவருவதற்காக மனப்பூர்வமாகத் தொழாதவரையில், உண்மையாக இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுபவன் என்று கருதப்படமாட்டான்.

இஸ்லாம் மார்க்கத்துக்கு விரோதமாக நான் கேட்டுள்ள வெகு ஆச்சரியமானதும் அசங்கியமுள்ளதுமான ஆக்ஷேபம், தொழுகை விஷயத்தைப்பற்றியே யுள்ளது. இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றிப் பொதுவாகவே நான் ஒரு ஆங்கிலேயருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் கேட்ட ஆக்ஷேபங்களுக்கெல்லாம் நான் விடைகள் கூறியபின்பு அவர் "ஆமாம்; நான் முகம்மதியனாவதற்குத் தடையாக ஒரே ஒரு விஷயம் முகம்மதியர்களிடம் காணப்படுகின்றது. அஃதென்னவென்றால், தொழுகையில் நெடுநேரங்குந்திக்கொண்டிருப்பதால் அவர்கள் ஒவ்வொருவரும் வளைந்த கால்களையுடையவரும், காற்சட்டையில் முழந்தாள்களையுடையவருமாக விருக்கிறார்களென்பதே" என்றார். இதைக் கேட்டதும், எனக்கிருந்த திகைப்பு ஒருவாறு நீங்கியபிறகு, "சுவர்க்கத்துக்குப்போகாமலிருப்பதைக்காட்டிலும், வளைந்த கால்களுடனும் சட்டைக்குள் முழந்தாள்களுடனும் சுவர்க்கத்துக்குப்போவது மகா மேலானதென்று எனக்குத்தோன்றுகின்றது" என்று பதிற் சொன்னேன். அது முதற்கொண்டு, வளைந்த கால்களுடனும் சட்டைக்குள் முழந்தாள்களுடனும் இருக்கும் ஒருமுஸ்லீமை நான் கண்டால், உடனே அவரிடம் எனக்குப் பயபக்தியுண்டாகின்றது. ஏனெனில், அவர் தமது மதக்கடமைகளைச் செய்கிறவரென்று நான் அறிகிறேன்.

இத்தொழுகை விஷயத்தை அடுத்து வருவது, இஸ்லாமார்க்கத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றான நோம்பு இருத்தலாம். ஒவ்வொரு மதக்கொள்கையிலும், சிக்ஷையின் பிரதான நி[illegible]களில் ஒன்றாக உபவாசம் காணப்படுகின்றது. இயேசு [illegible]து அதைத் திருப்பித் திருப்பி உபதேசித்து, ஆத்மவிருத்திக்கு முதற்காரணங்களில் ஒன்றாக வற்புறுத்தினார். ஆனால், கிறிஸ்தவமார்க்க

மென்ற பெரும் கட்டிடத்தை எழுப்பிய சிற்பிகள் இதை ஒரு நிரந்தரமான விதியாகக் காட்டினாரில்லை. ஆகவே அது பொதுவாகக் கிறிஸ்தவர்களிடத்திலும், சிறப்பாக புரோடஸ்டாண்டு வகுப்பாரிடத்திலும் வழக்கத்தில் இல்லாது போயிற்று. உரோமன் கதோலிக் வகுப்பாரில் சிலர் மட்டுமே உபவாசம் இருப்பதாகக் காட்டிக் கொள்ளுகிறார்கள்; ஆனால் பட்டினியிருந்து விரதங்கொண்ட புரோடஸ்டாண்டு வகுப்பான் ஒருவனையேனும் நான் கேட்டதில்லை.

“நம்பிக்கையுடையவர்களே! உங்களுக்கு முன்னால் இருந்தவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்ததைப்போலவே உங்களுக்கும் நீங்கள் கடவுளுக்குப் பயந்து நடப்பதற்காக ஒரு உபவாசம் விதிக்கப்பட்டிருக்கின்றது.” என்று பரிசுத்த குரான் கூறுகின்றது. இது ஒரு கண்டிப்பான விதி. இவ்விதி, உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லீம் வகுப்பினராலும், பிரதிவருஷமும் ரம்ஜான் மாதத்தில் மனப்பூர்வமாக அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது உபவாசத்தால் கிடைக்கக் கூடியதாகச் சொல்லப்பட்ட நன்மைகள், க்ஷீணதசையுற்ற இக்காலத்தில் கிடைத்திருக்கின்றனவாவென்று பல விஷயங்களில் கேட்கலாம்; ஆயினும், விசேஷ ஆத்மலாபம் பெறப்பட்ட வேறு பல விஷயங்கள் சந்தேகமின்றி இருந்தேயிருக்கின்றன.

உலகந்தோன்றிய காலமுதற்கொண்டு, நமது நபிநாயகம் காலம் வரையிலிருந்த ஒவ்வொரு தெய்வீக மதபோதகர்களும், தங்கள் தங்களைப் பின்பற்றுவோர்களை உபவாசம் இருக்கும்படி கற்பித்திருப்பதாலும், உலகத்தில் எவ்விடத்திலாகட்டும், பரம ஆத்மலாபங்களையடைந்தோரெல்லோரும் அதை அநுஷ்டிக்கும்படி வற்புறுத்தியிருப்பதாலும், அதற்கு ஒரு தகுந்த காரணம் இருக்கிறதென்று ஊகிப்பது நியாயமாகும். தேகாரோக்கியமும் பலமும் க்ஷீணமடைய அடைய, மனோ சக்தி தெளிவடைந்து அதிகரிக்கின்றதென்பது நன்கு தெரியப்பட்ட விஷயமாம். சோதனையைச் செய்பவன் ஒருவன், ஒருநாள் பட்டினியானது தனது உணர்ச்சியை நன்றாக விருத்திசெய்து மனோசக்தியைத் தெளிவாகவும் சுறுசுறுப்பாகவும் ஆக்குவதைக் கண்டான். வயிறு நிறையச் சாப்பிட்டபொழுதைக் காட்டிலும், நாம் பட்டினியாகவிருக்கும்போது, அதிக சவுகரியத்துடன் சிந்தனை செய்யவும் எளிதில் மனதை அடக்கியாளவும் கூடும்.

பௌதிக சாஸ்திரங்களால் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றாலும், நோம்பு இருத்தலென்பது அர்த்தமில்லாத காரியமென்பதும், மூடபக்தியானதென்பதும், ஒருவித சிக்ஷாமுறையென்பதும் அன்றி, வேறு பொருளும் பயனுமுள்ளதென்று ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. அதன் உண்மையான காரியமென்னவெனில், உலக விச்சையிலும் எண்ணத்திலும் ஆத்மாவுக்கு இருக்கும் சுமையைத் தவிர்த்து, ஆத்ம ஞானத்தைப் பெறுவதற்கு அதைச் சித்தப்படுத்துதலாம். அல்லது, ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வசிக்கும் சைதன்யப் பொருளான உயர்ந்த பொருளின் முன்னர் வருவதற்குத் தகுந்தவிதமாக இருக்கும்படி ஆத்மாவைச் சுத்தி செய்தல் என்றும் அதைச் சொல்லலாம்.

ஆனால் யதார்த்தமாகவும் காம்பீரியமாகவும் இக்கடமையைச் செய்பவர்களுக்கு வெகு அநுகூலத்தைக் கொடுக்கக் கூடியதான உபவாசத்தின் சிக்ஷாவிதிகளைப்பற்றி மட்டுமே நாம் இங்கு பேசுவதாக இருக்கிறோம். உபவாசத்தை யந்திரப் பிரகாரமாகவும், அதன்மேல் நோக்கங்களைக் கவனிக்காமலும் அநுஷ்டித்தாலுங்கூட அது, உபவாசமிருக்க முயலாதபோனால் எவ்வளவு தூரம் ஒரு முஸ்லீம் ஆத்ம பூர்த்தியைப் பெறுவதற்கான வழியிற் செல்வானோ, அதைக் காட்டிலும் சற்று அதிக தூரமாகவே அவனை அம்மார்க்கத்தில் போகும்படி செய்யும் உபவாசமிருப்பவன் எவ்வளவுக்கெவ்வளவு யதார்த்தவானாகியும் ஊக்கமுள்ளவனாகியும் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு உயர்ந்த பயன்களும் பின்னர் பெரிய லாபங்களும் அவனுக்குக் கிடைக்கும். விதிப்படிக்கும் விரதம் இருக்கவேண்டுமென்று அறிந்துள்ள மனிதன் தனது இஷ்டம் போனபடியே போகலாம். கடவுளுக்குக்கீழ்ப்படிதல் சிறந்தகுணம்; ஆனால் வேண்டாவிருப்போடும் அசிரத்தையோடும் கீழ்ப்படிதலைக் காட்டிலும், ஊக்கத்தோடும் சந்தோஷத்தோடும் செய்வது வெகு மேலானதாம்.

தினமொன்றுக்கு ஐந்து வேளைகளும், வாரமொன்றுக்கு ஒரு தினமும் கடவுளுக்கு அர்ப்பிதம் செய்யப்படுவதைப்போல, வருஷமொன்றுக்கு ஒருமாதம் அவனுக்கு அர்ப்பிதம் செய்யப்படுகிறது

ன்று பொதுப்படக் கூறலாம். இந்த மாதத்தில் ஒவ்வொருநாளும் சூரியோதய முதற்கொண்டு சூரியாஸ்தமனம் வரையில் ஒவ்வொரு முஸ்லீமும் ஆகாரத்தைத் தவிர்த்திருக்கவேண்டும்; அக்காலத்துக்குள் அவன் கோபத்துக்காவது ஆசாபாசங்களுக்காவது இடங்கொடுத்தாலும், பொய் சொன்னாலும் பரதூஷணம் செய்தாலும், அவனுடைய விரதம் முறிந்துபோனதாகவும் பயனற்றதாகவும் கருதப்படும். இவ்வாறு கீழ்க்குணங்களை யடக்குவதும், உணவைத்தவிர்த்திருப்பதைப் போலவே உபவாசத்தின் ஓர் பகுதியாம். வருஷத்தில் ஒருமனிதன் ஒரு மாதத்துக்கு மட்டும் சீலனாகவிருக்கவும், மற்றைய பதினொரு மாதங்களில் தனது குணம் சீலத்துவத்தைக் கொஞ்சமேனும் அடையாமலிருக்கவும் கூடுமா?

விரதத்தின் உண்மையான கருத்து இப்படி ஜீவப்பிரகிருதியான கீழ்க்குணங்களைத் தாற்காலிகமாக அடக்குவதுமட்டு மன்று; அது ஒரு சிறந்த விதி. அவ்விதியைச் சாமர்த்தியமாகவும், மனப்பூர்வமாகவும் தொழுகையோடும் கைப்பற்றி யொழுகினால், அது தொண்டை நரம்பைக்காட்டிலும் வெகு அருகில் இருப்பதாகத் திருக்குரான் கூறும் கடவுளுக்கும் ஆத்மாவுக்கும் நெருங்கியதோர் சம்பந்தத்தை நிச்சயமாகக் கொண்டுவரும்.

“அந்தரங்கத்தில் கடவுளுக்குப் பயப்படுவோர்க்கு மன்னிப்பும் பெரியதோர் சன்மானமும் நிச்சயமாகவுண்டு. உங்களுடைய சம்பாஷணை மறைவானதாக விருந்தாலும், வெளிப்படையானதாகவிருந்தாலும், உங்கள் மனத்துள் இருப்பனவற்றை அவன் நிச்சயமாய் அறிகிறான்” என்று திருக்குரான் கூறுகின்றது.

இது உண்மையானால், உபவாசம், தொழுகை, மனனம் இவைகளின் பொருளும் பயனும் வெகு தெளிவாக உடனே புலப்படுகின்றன. ஆகாரத்தைத் தவிர்த்திருப்பதினால் மானிட இச்சைகள் தாழ்வடைந்து ஆத்மசக்திகள் மேலாடி நிற்கின்றன. கடவுளிடத்து ஆத்மா சுயேச்சையாகப்போய் நிஷ்களங்கத்தோடு நிற்கின்றது. இவ்வித அப்பியாசத்தினால் பெரும் நன்மை வருவதை யாரேனும் சந்தேகிக்கின்றனரா ?

வெகு ஊக்கத்தோடும் நம்பிக்கையோடும் வேலைசெய்யும் இஸ்லாம் மதபோதகராகிய நமது கண்ணியமுள்ள சகோதரர், ஹசன் ஆலி, நோம்பிருத்தலைப்பற்றி ஒரு வியாசம் எழுதியிருக்கின்றனர். அதில் அருமையான அபிப்பிராயங்களும் பிரபோதங்களும்உள்ளன. உர்து பாஷையில் அச்சடித்திருக்கப்பட்ட அந்நூல் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு முஸ்லீம் கையிலும் இருக்கவேண்டும்.

நமது நபிநாயகத்தின் வெளிப்படையான கருத்துஎன்னவெனில், தம்மைப் பின்பற்றுவோர்கள் உபவாசம், தொழுகை, ஆசௌசம் இவைகளின் வழக்கத்தைப் பெறும்படி தூண்டவேண்டுமென்பது தான். இக்குணங்கள், தலைமுறைதத்துவமாக, அவர்கள்குழந்தைகளுக்கும் அக்குழந்தைகளின் குழந்தைகளுக்கும் வந்து, எல்லா ஜனங்களும் நல்லமார்க்கத்தில் நடக்காமற் போனாலும், சிலராவது அதிலிருக்கக் காரணமாமெனக் கருதினார்கள். ஆயிரத்திருநூறு வருஷங்கள் கழிந்துவிட்டன; இன்னும், உலகமுழுவதிலுமுள்ள முஸ்லீங்களால் ரம்ஜான் மாதம் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டாடப்படுகின்றது. அவர்கள் பெற்றுள்ள வழக்கம், ஜனங்களுடைய எண்ணங்களுக்கு மேற்பட்டதான நன்மைகளைச் செய்துகொண்டு, அவர்களைப்பற்றி நிற்கின்றது.

இஸ்லாம் மார்க்கமானது எவ்வளவு நியாயமாகவும் யுக்திக்கு ஏற்றவாறாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளதென்பதும், அதைச்சாமர்த்தியமாகவும் நம்பிக்கையாகவும் பின்பற்றினால் அதனாலுண்டாகக்கூடிய பெரும் நன்மைகள் எவ்வளவென்பதும், அம்மார்க்கத்தைக்கவனமாகவும் துரபிமானமின்றியும் ஆராய்ச்சிசெய்யும் ஒவ்வொருவருக்கும் தெரியாமற்போகாது. வழக்கம், கெட்டதாகட்டும், நல்லதாகட்டும், அதன் வலிமை எவ்வளவினதென்பதும், பாவத்திலும் துன்மார்க்கத்திலும் நாம் செல்வது எவ்வளவு எளிதென்பதும் நமக்கு நன்குதெரியும். இந்தக்காலத்தில் யோக்கியனெனப்பேரெடுப்பதைக்காட்டிலும், அயோக்கியனெனப் பேரெடுப்பது எளிதும் சவுகரியமுமாமென்று தோன்றுகின்றது.

“துன்மார்க்கமென்பது பயங்கரமான முகத்தையுடைய வோர் ராக்ஷதனைப்போன்றது; அதைக்கண்ட மாத்திரத்திலேயே நமக்கு அதனிடம் அருவருப்புண்டாகின்றது; ஆயினும் அதை அடிக்கடி பார்த்துக்கொண்டிருப்பதினால், அதன் முகம் நமக்கு அறிமுகமாக

நாம் அதை முதலில் வெறுத்துப் பின்பரிதபித்துப் பின் அணைந்து கொள்கிறோம்'' என்று கவி உண்மையாகவே கூறியிருக்கிறார்.

மதக்கொள்கை சம்பந்தமான வழக்கம், செய்யவேண்டிய கடமை இவைகளின் மார்க்கத்தினின்றும் நாம் ஒருதரம் விலகிவிட்டால், லோகாயதம் என்னும் அலையோடு கலந்து பாவமும் துயரமுமான கொந்தளிப்புள்ள பெரிய கடலுக்குள் நாம் தள்ளப்படுவது எளிதாய் விடும். ஆதலால், நாம் கொள்ளவேண்டிய சிறந்த வழியென்னவெனில், நமது மார்க்கத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் நாம் நன்கறிந்து கொள்ளும் வரையில் அதைப் படித்துப்பின்னால் அதில் சொல்லப்பட்டிருக்கும் விதிகளையும் கடமைகளையும் ஊக்கமாகவும், வாஸ்தவமாகவும் மனப்பூர்வமாகவும் செய்யவேண்டியதுதான்.

இனி, இஸ்லாம மார்க்கத்தின் இன்னொரு விசேஷமான ஸகோதரத்துவத்தைப் பற்றிப் பார்ப்போம். மெதினாவைத் தமது வாசஸ்தானமாக்கிக்கொண்ட பின்னர் நமதுநபிநாயகம்செய்தருளிய முதற்காரியங்களில் ஒன்று என்னவெனில், கீழ்த்திசை முழுவதிலும் பெரியதான சிறந்த சுழற்சியையுண்டாக்கக் காரணமாகவிருந்த ஊக்கமும் பக்தியுமிருந்த முஸ்லீம் நேயர்களாலான ஒரு சகோதரச் சங்கத்தை ஸ்தாபிக்கத் தொடங்கியதுதான். அவர்களுடைய வாழ்க்கையிலும் உபதேசத்திலும், தங்கத்தகட்டில் வெள்ளி நூலிழை ஓடினாற்போல, சகோதர வாத்ஸல்யமும் அன்பும் மிகுந்துள்ள வலியதோர் குணத்தைக் காண்கிறோம். அக்குணம் ஆதி முஸ்லீம்களின் எல்லாக்கருத்திலும் செய்கைகளிலும் ஊடுருவிச்சென்று, போர்க்களத்தில் அவர்கள் செய்திருக்கும் அதிசிரேஷ்டமான காரியங்களுக்கெல்லாம் ஒரு முதற்காரணமாக விருந்தது.

மரணாவஸ்தையிலிருந்த ஒரு கிழவன், தனது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காகத் தன் மக்களைத் தன்னருகில் கூப்பிட்டழைத்த கதையொன்று சொல்லப்படுகிறது. அவனருகே அவர்கள் கண்ணுங் கண்ணீருடனும் வந்து நின்று, அவன் சொல்லப்போகும் வார்த்தைகளைக் கேட்கச் சித்தமாக விருக்கையில் அவன்,அவர்களில் ஒருவரை நோக்கிச் சில சிறிய குச்சிகளைக்கொண்டு வரும்படி சொன்னான். அவ்வாறே அம்மகன் கொணர்ந்ததும் தகப்பனின் கட்டளைப்

படி அக்குச்சிகளில் ஒன்றைத் தனது விரல்களால் ஒடித்தான். பின்னர், அவனுடைய தகப்பன் அவனைநோக்கிக் குச்சிகளையெல்லாம் ஒன்று சேர்த்துவைத்து அவைகளை ஒடிக்கமுயலும்படி சொன்னான். மகன் தனக்கிருந்த சக்தியெல்லாவற்றையும் காட்டி ஒடிக்கமுயன்ற போதிலும் அவைகளை ஒடிக்க முடியாமற் போனான். உடனே மெலிந்த குரலில் அக்கிழவன், "அந்தக்குச்சி தனியாகவிருந்தபோது அதை ஒடிப்பது எவ்வளவு எளிதென்பதையும், அவைகள் எல்லாம் ஒன்று கூடியபோது அவைகளை ஒடிப்பது எவ்வளவு அசாத்தியமென்பதையும் பார்த்தீர்களா! நான் இறந்து போனபிறகு நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய படிப்பினை யிதில் உள்ளது. ஒற்றுமையிலேயே பலமுள்ளது'' என்றான்.

இந்தப் படிப்பினையைத் தான் நமது நபிநாயகம் தங்களைப் பின்பற்றுவோர்களுக்குக் கற்பித்ததாகத் தெரிகின்றது. கடவுளிடம் நிஜமான பக்தியினால் தூண்டப்பட்டு உண்மைச் சகோதரத்துவம் என்னும் பிணிப்பினால் கட்டுண்டிருக்கும் வரையில் அவர்களை வெல்வது முடியாதகாரியம் என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். முஸ்லீம்களுக்குள் அவ்விதமான சகோதரத்துவம் இருந்தவரையில், உண்மை மார்க்கத்தைப் பாதுகாப்போரின் மனத்தில் சகோதர வாத்ஸல்யமும் அன்புமாகிய நெருப்பு எரிந்துகொண்டிருந்த வரையில், இஸ்லாம் மார்க்கமானது மகோன்னத பதவியையும் சிறப்பையும் அடைவதற்குத் தான் தடையில்லாமற் போன பாதையிலே சென்றுகொண்டிருந்தது. ஆனால் ஐக்கியமின்மையும் கலகமும் தோன்றியவுடனே, முஸ்லீம்களின் வலிமை குன்றத்தொடங்கிற்று; சென்றுகொண்டிருந்த சைன்யம் தனது பாதையிற் கிடந்த இடையூறுகளை வெல்வதற்குக் கொஞ்சமேனும் சக்தியில்லாமற்போயிற்று. எட்டாம் நூற்றாண்டில் முஸ்லீம் உலகம் இருந்த நிலைமையையும் இப்போது அது இருக்கும் நிலைமையையும் ஒத்துப்பாருங்கள்; அதில்மிகுந்தஉபயோகமுள்ளபடிப்பினையொன்று தெரியவில்லையா? என்பதையுங் கவனியுங்கள்.

தனது மார்க்கத்தை நம்பி, நமதுநபிநாயகத்தின் ஞாபகத்தைப் பக்தி சிரத்தையோடு கொண்டாடும் ஒவ்வொரு முஸ்லீமும் செய்ய

வேண்டிய கடமையென்னவெனில், 1200 வருஷங்களுக்கு முன்னால் வாழ்ந்து, ஒரே உண்மைக்கடவுளை அன்புடன் வழிபட்டு வந்த நமது சகோதரர்களிடம் மேலாடித் தோன்றிய குணமான சகோதரத்துவம் என்னும் குணத்தை இடைவிடாமலும் ஊக்கத்தோடு முயன்று உயிர்ப்பிக்கவேண்டியதாம். இஸ்லாம் மார்க்கத்தைப்பின்பற்றுவோர்கள் கடவுளின் முன்னால், சகோதரர்களாகவே இருக்கவேண்டும்; அவர்களுடைய வாழ்நாள் முழுவதிலும் ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளும் சம்பந்தத்தை ஏவக்கூடியதான சுயநன்மையற்ற பரஸ்பர சகோதரத்துவம் அவர்களுடைய மனத்தில் உண்டாகப்படவேண்டும். இதைச் செய்வதற்குப் பரஸ்பர மன்னிப்பும் இணக்கமும் வேண்டும். பொறுமையையும் பலத்தையும் நமக்கு அளிக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டும், உண்மைச் சகோதரர்களைப்போலவே யதார்த்தமாகவும் ஊக்கமாகவும் கைகோர்த்துக்கொண்டும் நாம் ஒருவரொருவருடைய குற்றங்குறைகளைச் சகித்துக்கொண்டிருப்போமாக.

மானிடர்களுக்குத் தெரிந்துள்ள வேறுபட்ட பலவகை மார்க்கங்களிலும் ஒரே ஒரு உண்மைதான் ஊடாடிச் செல்லுமாயினும், ஒரே ஒரு உண்மை மார்க்கந்தானிருக்கக்கூடும். தீர்க்கதரிசிகளின் உபதேசங்களையெல்லாம் கவனமாகவும் துரபிமானமின்றியும் ஆராய்ச்சி செய்துபார்த்தால் இந்த உண்மையை நாம் எளிதில் கண்டுபிடித்துவிடலாம். கிறிஸ்தவர்களுடைய புதிய ஏற்பாட்டில் தப்பான மொழி பெயர்ப்புகளையும், புதிதாகச் சேர்க்கப்பட்டனவற்றையும் களைந்து பார்க்க, இவ்வுண்மை நாஜரத்வாசியான இயேசு கிறிஸ்துவால் உபதேசிக்கப்பட்டிருப்பதைத் தெளிவாய்க் காண்கிறோம். ஆனால், அவருடைய காரியம் முடிவடைவதற்கு முன்னால்அவருக்கு மரணம் நேரிட்டுவிட்டது; ஆதலால், தம்மைப் பின்பற்றுவோர்களின் மனத்தில் அவ்வுண்மை நன்றாகப் பதியும்படியான அனுஷ்டானக் கிரமம் ஒன்றை ஏற்படுத்தாமற் போய்விட்டார். அவருடைய பன்னிரு சீஷர்களில் பெரும்பாலார் அவரை நன்கறிந்து கொள்ளவில்லையென்றும், அவர்கள் அவரது உபதேச மொழிகளின் பொருளைக்கிரகிக்க முற்றிலும் தவறிப்போயினரென்றும் தெளிவாய்த் தெரிகின்றது. இப்போது கிறிஸ்தவமார்க்கமென்று சொல்லப்படும் முறை, இயேசு கிறிஸ்து இறந்தபின் மூன்று நூற்றாண்டுகளுக்கப்பாலிருந்த பால் என்பவரின் உபதேசமொழிகளை ஆதாரமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதாகும்; பால், நாஜரத்தீர்க்கதரிசியைக் கண்டறிந்ததில்லை. இது மட்டுமோ, அவருடைய உபதேசமொழிகளைப் பற்றிப் பாலுக்கு வெகு மங்கலான அபிப்பிராயமிருந்ததாகவும் தெரிகின்றது.

தீர்க்கதரிசிகள் எல்லாரிலும் சிரேஷ்டரும் கடைசியாக அவதரித்தவர்களுமான நமது நபிநாயகம் இப்பெரும் உண்மையைத் தம்மைப் பின்பற்றுவோர்கள் நன்றாக அறிந்துகொள்ளும் வண்ணம் நேரில் உபதேசித்ததுமன்றி, தலைமுறை தத்துவமாக எல்லாக்காலத்திலும் உலகிலுள்ள எல்லாச் சாதியாரிடத்துக்கும் கொண்டுபோகக்கூடியவண்ணம் அரபியர்கள் மனத்தில் வெகு நன்றாகப் பதியும்படி பூர்த்தியான அனுஷ்டானக் கிரமமொன்றையுண்டாக்கி ஸ்திரப்படுத்தியுமுள்ளார். அவர்களுடைய சன்மானத்தைப் பெறும்படி கடவுள் அவர்களைக் கூப்பிடுவதற்குமுன்னால் அவர்கள் செய்யவேண்டியகாரியம் முற்றிலும் நிறைவேறி விட்டது; பாவத்தில் அடிபட்டுழலும் மாந்தர்களுக்கு அவர்கள் வைத்துவிட்டுப் போயிருக்கும் உண்மையாகிய செல்வம், அவர்களது உயர்ந்த மாசிலாக் குணத்துக்கும் அரிய தன் மறுப்புக்கும் ஞாபகார்த்தமாக உத்தேசித்து எழுப்பப்பட்டவோர் பெரிய மாளிகையெனச் சொல்லலாம். நமது சிறந்த நபிநாயகத்தின் ஞாபகத்தைப் பக்தி சிரத்தையுடன் கொண்டாடும் ஒவ்வொரு முஸ்லீமும், மேற் கூறப்பட்ட மாளிகையான இஸ்லாம் மார்க்கத்தை ஒவ்வொரு ஜாதியாரிடமும் பரவும்படி செய்வதில் ஊக்கத்தோடு உதவிபுரிவதையே சந்தேகமின்றித் தன்னுடைய முக்கிய கடமையாகக் கொள்ளவேண்டும்.

“உண்மை தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும் மறுபடியும் கிளம்பும்” என்பது ஒரு பழைய உண்மைப்பழமொழி. சென்ற பன்னிரண்டு நூற்றாண்டுகளாக, இஸ்லாம் பற்பல நிலைமைகளை அடைந்திருக்கின்றது. சென்ற சிலவருஷங்களுக்கு முன்னால்வரைக்குங்கூட அது, கேவலம் பௌதிக நாகரீகமான பெரும்பாரத்தின் கீழ் அகப்பட்டு வரவர க்ஷீணித்துக்கொண்டு வந்ததாகத்தெரிந்தது.

ஆனால், ஒரு பெரும் மாறுதலுக்கும், முன்னால் அதை உலகத்தின் சிறப்பாக்கிய பழைய சக்திக்கும் அறிகுறியாகிய சின்னங்கள் தோன்றுகின்றன. சென்ற பத்துவருஷங்களுக்குள் ஆப்பிரிக்கா கண்டத்தில் அதன் அபிவிருத்தி ஆச்சரியகரமானதாகவுள்ளது; ஐரோப்பாவிலும் அது பலமாக வேரூன்றியிருக்கின்றது; கடவுளின் உதவியால், அதை ஆவலுடன் பெற்றுக்கொள்ளக் காத்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் மிகுந்த அபிவிருத்தியுள்ள சுயேச்சாதேசமாகிய அமெரிக்காவிலும் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறோம். இவ்விதசாட்சியங்கள் உங்கள் முன்னால் இருக்க, கடைசி முடிவைப்பற்றி உங்களுக்குச்சந்தேகமா? "லாயிலாஹ இல்லல்லா முகம்மதுர் ரசூலுல்லா."

ஜிலாலுடீன்.

பலதாரமணங்குற்றமா?

(63-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகவே, கிறிஸ்துவசமயத்தவர்களாயிருக்கும் ஒரு புருஷன் தன் சௌக்கியத்திற்கு ஒரு பெண் போதாமலோ, அவளுடைய தேக சௌக்கியத்தைக் குறித்தோ, சந்ததியைக் குறித்தோ, அவள் கெட்ட நடத்தையான துன்பத்தைச் சகிக்கமாட்டாமலோ மற்றப் பெண்ணை விவாகஞ்செய்ய நினைப்பானாகில், பாதிரிகள் அவனுக்கு மறு விவாகஞ்செய்யவிடாமல் தடுக்கிறதினால், அவன்றனக்குண்டாயிருக்கிற காமநோய் சகிக்கமாட்டாமல், அத்துன்பத்தைத் தீர்த்துக்கொள்ள அவன் விபசாரஞ்செய்து பிள்ளைகளைப் பெறும்படியாயிருக்கிறது. இந்த நியாயமற்ற கட்டளையினால், மனிதன் விபசாரத்திலழிந்து நரகப்பிராப்தியாவதுமல்லாமல், விபசாரத்திற் பிறக்கும் குழந்தைகள் மிகவும் அசுத்தர்களென்று எண்ணப்பட்டு இழிவையுமடைகிறார்கள். உதாரணமாகத், திருநெல்வேலி டோனாவூர் டெண்டு பாதிரியார் தம்முடைய மனைவி ஊரிலில்லாதகாலத்தில் ஒரு சாணாத்தியோடு விபசாரஞ்செய்து குழந்தைகள் பெற்றதாய்த் "கிறியகத்துவ நிவாரணம்" என்னும்புஸ்தகத்தில் 205-ம் பக்கத்தில்சொல்லப்பட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது,

162395

அன்பர்காள்! உங்களுக்கு லண்டன் இங்கிலீஷ் ஜர்ஜ்ஜில் ஒரு பெரிய குருவான கானன் ஐஸக்டெய்லர் 1887-வது வருஷம் அக்டோபர்மீ 7உயில் ஊல்வராம்டன் என்னும் பட்டணத்திலே செய்த பிரசங்கத்தைச் சொல்லுகிறேன். அது மறுநாள் லண்டன் டைம்ஸ் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில், பலதாரமணத்தைப்பற்றிய விவரம் வருமாறு:—"ஐரோப்பா, துருக்கி, ஈஜிப்டு, அல்ஜீரியா என்ற சீர்திருத்தப்பெற்ற நாடுகளில் பலதாரமணம் அபூர்வமேயன்றிச் சாதாரணப் பொதுவழக்கமன்று. பலபாரித்வத்தில் எவ்வளவு கெடுதிகளிருக்கின்றனவோ, அவ்வளவிற்கும் அனுகூலங்களுமிருக்கின்றன. இது பெண்குழந்தை கொலையை நிவிர்த்திக்கிறதன்றிப் பெண்கள் ஒவ்வொருவரும் விதிப்படி நியமிக்கப்பட்ட புருஷர்களினாற் காக்கப்படவேண்டுமென்று மேற்படுகிறது. பலதாரமணவிதியிருப்பதினால் இஸ்லாம் நகரங்களில் தொழிலாளிகளான விபசாரிகள் ஒருவரேனுமிருக்க ஏதுவில்லை. கிறிஸ்தவர்களுக்குள், பலபாரித்வவிதியில்லாததினால் கிறிஸ்துவநாடுக்ளில் தொழிலாளிகளான விபசாரிகள் அநேகரிருக்க ஏதுவாகிறது. ஆகையினால், இஸ்லாம் நாட்டிலுள்ள பலதாரவிவாகத்தைக் காட்டிலும், கிறிஸ்துவநாடுகேளிலுள்ள முறைகடந்த விபசாரித்வம் பெரிய வெட்கக் கேடல்லவா? நிச்சயமாக அது ஒரு பெரிய வெட்கக்கேடே. பலபுருஷர்கவனம் இன்னதென்பது இஸ்லாத்துக்கு எள்ளளவேனுந் தெரியாது. ஆனால், கிறிஸ்துவ மார்க்கத்துள்ள இரகசியவழியான பல புருஷகவனம் ஒரு பெருத்த சாபத்தைப்போல், அந்த நாடுகளிற் சூழ்ந்துகொண்டிருக்கிறது. மேலும், அது பெண்களுக்கு இழிவையும் புருஷர்களுக்குப் பிணியையும் வருவிக்கின்றது. இஸ்லாத்தில் உறுதியாய் விவரிக்கப்பட்ட பலதாரமணத்தினால், அவ்விதம் நேரிட இடமில்லை. பலபுருஷகவனிகளாய பெண்களையுடைய ஆங்கிலேயர் பலதாரமணஞ் செய்யுமுஸ்லீங்களின்மீது (அவதூறாகிய) கற்களையெறியத்தக்க யோக்கியதையுடையவர்களல்லர். கிறிஸ்துவர்களே? நமது சகோதரனுடைய (முஸ்லீங்கள்) கண்களிலிருக்கிற சிறு துரும்பையெடுக்கிறதற்கு முன்னரே, நம்முடைய (கிறிஸ்துவர்கள்) கண்களிலிருக்கிற உத்திரத்தைப் (பெரிய மரக்கட்டை) பிடுங்கிக்கொள்வோமாகவென்பதே."

கிறிஸ்துவர்களுக்குளுண்டாயிருக்கிற இவ்விஷயமானது பலமான பாவங்களுக்கு ஊற்றாயிருக்கிறதன்றியும், பழைய ஏற்பாட்டிற்கும், இயேசுநாதர் கட்டளையிடாத நியாயத்திற்கும் அவர்கள் முன்னோர்கள் நடந்துவந்த அனுஷ்டானத்திற்கும் விரோதமாயிருப்பதால், புருஷனானவன் பாவத்துக்குள்ளழுந்தி நரகத்துக்குட் போகாமலும், தன் பிள்ளைகளைப் பாவத்துக்கு ஆளாக்காமலுமிருக்கும்படி அவன் நியாயமாகப் பலதாரமணஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது துணிபு. தனசம்பத்தையுடைய அரசனாவது, ஒரு பிரபுவாவது, ஒரு பெண்ணை விவாகஞ்செய்து அந்தப் பெண்ணுக்குச் சந்ததி யில்லாமற் போகுமானால், தனக்குப் பிற்காலத்திற்றான் எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சம்பாதித்த ஆதீனத்துக்கு ஆதரவில்லாமலும், அந்த ஆதீனங்களை யன்னியர்கள் அனுபவித்துக் கொள்ளும்படியாயிருக்கிறதன்றிச், சிருஷ்டிதொடுத்து நாளதுவரை நடந்துவந்த தன்னுடைய சந்ததி தனக்குப்பின், அற்றுப்போகிறதுமன்றி, இனி உலகத்தில் நடக்கப்போகிற தன்னுடைய பெயருமழிந்து போகிறதாயிருக்கிறதல்லவா? இவ்விதமெல்லாமிருக்க, முதன்மனைவிக்குச் சந்ததியில்லாவிட்டால், அந்தப்புருஷன் பலதாரமணஞ் செய்து தனக்குப்பின் றன்னுடைய ஆதீனத்துக்கு ஆதரவாகியும் தன்னுடைய சந்ததி விருத்தியும் மார்க்கவிருத்தியுமாகிறது மல்லாமல், தனக்குப்பின் றன்பெயர் அழியாமலிருக்கவும் ஏது உண்டாகிறதல்லவா? இது பற்றியும் பலதாரமணஞ் செய்துகொள்ளலாமென்று ஏற்படுகிறது.

புருஷன் பெண் இவர்களுக்கு தேகத்துக்கு வியாதி முதலான துன்பங்கள் வந்து அவதிப்படுங்காலந்தவிர, சௌக்கியமாயும் தேகசுபாவமாயுமிருக்குங்காலத்தில் இன்பத்திற்குப் புருஷர்களால் ஒருபொழுதும் பெண்களுக்குத் தடை நேரிடாமலும், பெண்களால் அடுத்தடுத்துப் புருஷர்களுக்குத் தடை நேரிடும்படியாயிருக்கிறது. அஃதேனென்றால், பெண்களுக்குச் சுபாவமாக மாதந்தோறும் 3, 5, 7, 9, 10 நாள்வரையிலும் மாதவிடாயினாலும், பூர்த்தியான கர்ப்ப காலத்திற் சிலநாளும், பிரஸவித்தபின் 10, 20, 30, 40, நாள்வரையிலும், புருஷனுடைய வீட்டில் மனைவியிருந்தும் இச்சைக்குதவாமல் அவ்வக்காலங்களில் புருஷனுக்குண்டாகிய இச்சையை நிவிர்த்தி பண்ணவழியில்லாமல் அவன் துன்பப்பட வேண்டியதாயிருக்கிறது. புருஷனானவன், வெகுகஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளையெல்லாம் தன்மனைவியின் இஷ்டப்படி செலவழித்து அவளைக்காப்பாற்றியும் பெண்களினால் அடுத்தடுத்துப் புருஷர்களுக்குத் தடைநேரிடுகிறதாயிருக்கிறதேயன்றிப், புருஷர்களால் பெண்களினிஷ்டத்துக்கு ஒருபோதுந் தடைவருகிறதாய்த் தெரியவில்லையன்றோ? ஆகவே, தன்னிச்சையை நிவிர்த்திக்கவும், தன்றேக சௌக்கியத்தையெண்ணியும், உலகவிருத்திமார்க்க விருத்தி இவைகளையெண்ணியும், ஒருவன் பலதாரமணஞ் செய்யின், அவனைக் குறைகூறுவது அறிவுடையோர்க்கழகில்லையல்லவா? கிறிஸ்துவர்களின் வேதமாகிய பைபிளிலும், அவர்களின் காமன்பிரையாப் புஸ்தகத்திலும் பெண்கள், புருஷர்களுக்கு அடங்கி நடக்கச்சொல்லி யிருக்கிறதேயொழிய பெண்களுக்குப் புருஷர்கள் அடங்கி நடக்கச்சொல்லவில்லை. இதுபற்றியும், புருஷர்களுக்குள்ள பலம் பெண்களுக்கில்லையென்று தெரிகிறது. அன்றியும் பெண்கள் விபசாரியாகப் போய்விட்டால், அவர்களை நீக்கிவிட்டு வேறே விவாகஞ்செய்து கொள்ளலாமென்று பைபிளில், மத்தேயு முதலிய இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. புருஷர்கள் விபசாரஞ் செய்தால், அவர்களை நீக்கிவிட்டு வேறே விவாகம் பெண்கள் செய்துகொள்ளலாமென்று அதிற் சொல்லாமையால், புருஷர்களுக்குள்ள சிரேஷ்டம் பெண்களுக்கு இயேசுநாதராற் கொடுக்கப்படவில்லையென்றே தெரிகிறது.

மேல்நாட்டாருக்குள் வழங்குகிறபடி ஒருபெண்ணை யொருபுருஷன் கலியாணஞ் செய்தமாத்திரத்தில், அந்தப்பெண்ணுக்குள்ள பெயரானது மறைந்து புருஷனுடைய பெயரால் வழங்கப்படுகின்றாள். விவாகத்தைச்செய்த மாத்திரத்தில் புருஷனுடைய பெயர்மறைந்து மனைவியின் பெயரால் அவனையழைக்கப்படவில்லை. இதனால், மனைவியின் பெயர் மறைந்து புருஷனின் பெயர்க்குள் மறைந்துவிடுகிறது. இதுபற்றியும், ஸ்திரீயைவிடப் புருஷனே சிரேஷ்டவானென்றும் அறியலாம். இந்த நியாயங்களினாற்றான், முற்காலத்திலிருந்த உண்மையான பெரியோர்கள் புருஷர்களுக்கு

ள்ள பலத்தையுஞ் செவ்வனேயாராய்ந்தறிந்து பரிசுத்த குரானிலுள்ள கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பலதாரமணஞ்செய்து வந்தனர்கள். ஆகவே, புருஷர்கள் பலதாரமணஞ் செய்யலாமேயன்றி, ஸ்திரீகள் அவ்வாறு செய்யக்கூடாதென்று இதுகாறும் கூறிவந்த நியாயத்தினால் நீங்கள் தெளிவாயறியலாம். இந்நியாயமான முறையையனுஷ்டிக்காததினால், கிறிஸ்துவநாடுகளில் பெரிய சங்கடங்கள் நேரிட்டிருக்கிறது. இந்தச்சங்கடங்களை நிவிர்த்திக்க மெய்யான பரிகாரமானது, பரிசுத்தகுரானின் ஆழ்ந்த ஞானச்சட்டங்களிலிருந்தும், இஸ்லாமிய சங்கங்களிலிருந்துந்தான் கிடைக்கும். தற்காலத்தில் கிறிஸ்துவர்களைப்பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கும், ஞானத்துக்கொவ்வாததும் நன்னெறியில்லாததுமாகிய கிறிஸ்துவ சட்டத்தை நீக்கிவிடும்படி கிறிஸ்துவர்களை வழிப்படுத்தி, இஸ்லாத்தின் சட்டத்தை யதற்குப்பதிலாக அவர்களையங்கிகரிக்கும்படி செய்யுமென நாம் நம்புகிறோம்.

பத்திராதிபர்.

மறுபிறப்பு.

(80-ம் பக்கத்தொடர்ச்சி.)

இன்பவினியோகத்தில் வித்தியாசமும் பக்ஷபாதமும் ஏன் இருக்கவேண்டும்? உதாரணமாக, ஏன் ஒருவன் ஏழையாகவும் மற்றொருவன் செல்வவானாகவும், ஒருவன் அரசனாகவும் மற்றொருவன் பிச்சைக்காரனாகவும் பிறக்கவேண்டும்? ஒருவனுடைய அண்டையயலார்கள் விலைமதிக்கவொண்ணாப்பேறாகிய கட்பார்வையையுடைத்தாயிருக்க, அவன்மட்டும் ஏன் குருடனாகப் பிறக்கவேண்டும்? சுபாவத்திலேயே ஏன் ஒருவன் அடிமுட்டாளாகவும் மற்றொருவன் மேதாவியாகவும் இருக்கவேண்டும்? இவ்விதமான கேள்விகள் சர்ச்சைசெய்யும் குணமுடைய ஹிந்துக்களின் மனத்தில் நெருங்கியெழுந்ததுண்டு; பழமொழியாக மாறிவிட்ட அவர்களுடைய மானஸகற்பனாசக்தி, மறுபிறப்புக்கொள்கையைக் கண்டுபிடிக்கும்படி தூண்டிவிட்டது. உண்மையிலேயே, நீதிமானான கடவுள் தீமைகளைச்

செய்யமாட்டார்; இன்னும் அவர் தமது ஜனங்களிற் சிலருக்குக் கண்டவாறெல்லாம் அனுக்கிரகம் செய்துவிட்டு, வேறுசிலருக்கு ஆயுட்காலம் முழுவதும் துன்பத்தையே கொடுக்கமாட்டார். இவ்வுலகத்தில் மாந்தர் படுந் துயரமும் துன்பமும், அவர்கள் அனுபவிக்கும் இன்பமும், முற்பிறப்பிற்செய்த தீச்செய்கைகளுடையவும் நற்செய்கைகளுடையவும் காரியங்களாகவிருக்க வேண்டுமென்று ஹிந்துவின் மனத்திற்றோன்றிற்று.

ஒன்றன்பின் ஒன்றாக நான் பின்னால் கூறப்போகும் காரணங்களால் மேற்சொன்ன மறுமொழி திருப்திகரமானதல்லவென்று கொள்கிறேன். ஆனால் மறுபிறப்பில் நம்பிக்கைவைத்திருப்போனை, பூர்வஜன்மம் இருந்திருக்கவேண்டுமென்னும், அவசியத்துக்கு உட்படுத்துகிற கேள்விகள் கவனிக்கப்பட வேண்டியனவாம்.

இனி முதலில், மனிதர்களுடைய அந்தஸ்தில் காணப்படுகிற வேற்றுமை கடவுளுடைய அநீதியைக்கொஞ்சமேனும் ருஜுப்படுத்துவதில்லையென்பது எனது அபிப்பிராயம். இதற்குமாறாக; கடவுளுடைய அதிகாரம் இவ்வுலகில் நிலைபெறவேண்டியதற்கு அது அவசியமாக வேண்டியிருப்பது பிரத்தியக்ஷம். எல்லா மனிதர்களும் ஒரே பிரவர்த்தியிலும் ஒரே பதவியிலும் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் ஒரே அளவுள்ள செல்வமும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தாலும், அதாவது அவர்கள் அனைவரும் அரசர்களாகவும் ஆள்வோர்களாகவும் இருந்தால், கடவுளுடைய நீதிக்கு அவ்வித நிலைமை பொருந்தியதாகவிருந்தால், அப்போது எல்லாம் குழப்பத்திலும் அராஜகத்திலும் முடிவடைந்து மேற்றிசைச்சூனியவாதிகள் விரும்புகிறபடி ஆகிவிடும் என்று சொல்லுகிறேன்

இரண்டாவது:— ஜனஸமூகத்தில் உயர்ந்த பதவியும் அந்தஸ்தும் ஒருவனுக்கு அதிகமான சந்தோஷத்தை நிச்சயமாகக் கொடுப்பதில்லை. எவனுக்கு அதிகமாகக்கொடுக்கப் பட்டிருக்கிறதோ அவனிடமிருந்து அதிகமாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது தரித்திரத்திலும் செல்வாக்கும் உலகாதிகாரமும் இல்லாததிலும் வாழ்கிற ஒரு ஏழை மனிதன், பெரிய அந்தஸ்துடன் கூடியேயிருக்கிற

கவலைகள், பொறுப்புகள், கடுமையான கடமைகள் இவைகளுக்குட்பட்டு அரசாளும் ஒரு பெரிய ராஜாவைக்காட்டிலும், சந்தோஷமுள்ளவனாக விருக்கலாம். கீர்த்தியிலும் செல்வாக்கிலும் வெகுமேலாக விளங்கிய அரசர்களில் எத்தனைபேர் தாழ்ந்த குடியானவனுடைய குடும்பத்தில் இருக்கக்காண்கிற மனச்சாமாதானத்துக்காகப் பெருமூச்சுவிட்டிருக்கின்றனர்.

மூன்றாவது:—உலகசம்பத்து உண்மையான சந்தோஷத்தைத் தெரிவிப்பதில்லை. நம்மில் பலபெயருக்கு, ஐயோ! உலகச் செல்வமானது நன்மையாக விராமல் கடுஞ்சாபமாக விருக்கின்றது. செல்வத்தைச் சரியானபடி உபயோகிக்கக் கற்றோரின் சங்கியை எவ்வளவு குறைவாகவுள்ளது! அடிக்கடி உலகவின்பமானது மனிதர்கள் நித்தியமான ஆனந்தத்தை அடையாவண்ணம் தடுத்துவிடுகின்றது. பிரபல ஜாதியார்கள் க்ஷீணமடைந்ததைத் துரிதப்படுத்தியவை பெருமித வாழ்க்கையும், உலக இன்பத்தில் உள்ள சகல சவுகரியங்களில் அளவுக்கு மிஞ்சிய போகமும்தானென்று தேச சரித்திரத்தால் நாம் அறிகிறோம். ஆத்மஸம்பந்த மனமுடைய ஹிந்துவுக்கு செல்வமானது நரகத்துக்குப் போகும் வாசல்கள் மூன்றில் ஒன்றாகும். "ஒரு செல்வவான் மோக்ஷ ராஜ்யத்தில் புகுவதைக்காட்டிலும், ஊசியின் காது வழியே ஒரு ஒட்டகம் புகுவது எளிதாகும்" என்று இயேசு கிறிஸ்து கூறுகின்றார். சஞ்சல புத்தியுள்ள மனிதனால் தடுக்கப்படவொண்ணாத சோதனைகளைச் செல்வம் தருகின்றது.

நான்காவது:—அதேமாதிரி, வறுமையானது ஆத்மா உண்மையிலேயே சந்தோஷமற்றிருப்பதைத் தெரிவிக்கும் நிச்சயமான சாட்சியன்று. மோக்ஷ ராஜ்யத்தின் செல்வத்தைத் தேடிப்போனவர்கள் வறுமையையே விரும்பினவர்களாக விருந்தனர். இயேசுகிறிஸ்து நிற்க நிழலில்லாதவரான ஏழையாக விருந்தனர். வீடற்ற அந்நியனாகவே அவர் வாழ்ந்தனர். நானக், கபீர், சைதன்யர், முகம்மது முதலிய பல பிரபல ஜனஸமூக வழிகாட்டிகள் பரம ஏழைகளாகவே யிருந்தனர். மனிதனுடைய விநயத்துக்கும் அவனுடைய மிருகத்தன்மை யடங்குவதற்கும் இன்றியமையாப் பொருள்களாக

உணவிலும் உடையிலும் படாடோபம் கூடாதென்பது ஒவ்வொரு மார்க்கத்திலும் கட்டளையிடப்பட்ட விஷயமாம். சுருக்கிச் சொல்லுங்கால், தினம் ஒருமுறை யுண்டு திருப்தியடைந்திருக்கும் ஆத்மாவானது செல்வத்தில் புரளுகிற முடியுடை மன்னர்களைக்காட்டிலும் பன்மடங்கு சந்தோஷமாக விருக்கும். இப்படிக் கூறுவதினால் நான் உலகப் பொருள்களின் முக்கியத்தின் மதிப்பைக் குறைவாகச் சொல்லவில்லை. நான் சொல்வதெல்லாம் என்னவெனில், உலகச்செல்வத்தைப் பெற்றிருப்பதில் உண்மையான சந்தோஷம் பொறுத்திருப்பதில்லை யென்பதினால், ஒருவனை அரசனாகவும், மற்றொருவனை ஏழைப் பிரஜையாகவும் கடவுள் படைப்பதினால் அவருக்கு அநீதி என்னும் குணம் ஏற்பட்டுவிடவில்லை யென்பதை ருஜுப்படுத்துவதுதான். [இன்னும் வரும்.]

ஜிலா லுடீன்.

திருக்குரான்.

(56-ம் பக்கத்தொடர்ச்சி.)

கல்வியைக் கற்றுப் பரவச்செய்யவேண்டியது சிலாக்கியமானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதன் ஞானத்துக்குப் பிரார்த்திக்கவேண்டுமென உபதேசிக்கப்படுகிறான். ஐசுவரியத்தைக்காட்டிலும் ஞானம்மேலானதென்றும் மதிக்கப்பட்டிருக்கின்றது. "கல்விமார்க்கத்திற் செல்லும் மனிதனைக் கடவுள்மோக்ஷமார்க்கத்திற் செலுத்துவார்; உண்மையாகவே, தேவதூதர்கள், கல்வியைத் தேடுபவனை, விரித்த கைகளுடன் வரவேற்பார்கள். பூலோகத்திலும் பரமண்டலத்திலுமுள்ள ஒவ்வொரு பொருளும் அவனுக்குப் பரிந்துபேசும். பக்தனுக்கும் கல்விமானுக்குமுள்ள வித்தியாசம், நக்ஷத்திரத்துக்கும் சந்திரனுக்குமுள்ள தாரதம்மியத்தைப் போன்றுள்ளது." என்று திருக்குரான் கூறுகின்றது. "கல்வியை மறைப்பவன் உயிர்த்தெழும் நாளில் நெருப்பினாலாகிய கடிவாளம் பூட்டப்பெறுவான்" என்று விதிப்பதினால்தான் அரபியர்களுக்குள் வெகுவாகக் கல்விச் செல்வம் பரவிவந்தது. நாகரீகம், கல்வி, சாஸ்திர ஞானம், வியாபா

ரம், கிருஷித்தொழில், வாழ்க்கைத்தொழில் முதலியவற்றில் அபரிமிதமான அரிய செய்கைகள் முஸ்லீம்கள் செய்ததற்கு மேற்கூறிய குரானின் கட்டளையே காரணமாம். அவர்களுள் நீதிக்கும், அரிய சாமர்த்தியத்துக்கும், பொது நன்மையில் பாடுபட்டதற்கும் பேர்போன சிரேஷ்ட அரசர்கள் தோன்றினார்கள். ஹாரோன் அர்ராஷித், ஆல்மாமூன், அப்துர்ரகுமான், ஆல்ஹாகம் இன்னோரன்ன பிரபலர்கள் தங்கள் அதிகாரத்தையும் செல்வத்தையும் செல்வாக்கையும்மனிதகோடிகளின்மானஸிகஅபிவிர்த்தியிலும், கல்விமுதலியவற்றின் அபிவிருத்தியிலுமே அர்ப்பிதம் செய்தனர். அவர்கள் நாளில், பாக்தாத், கிரேனாடா, கார்டோவா, கைரோ முதலிய நகரங்கள் நெடுந்தூரம் வரையில் பிரகாசத்தைச் சொரிந்தன. சாஸ்திர ஞானமும் கலாஞானமும் விருத்திசெய்யப்பட்டன; புஸ்தகங்கள் சேகரிக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டன ; கடற்பிரயாணம், வியாபாரம், கிருஷித்தொழில் இவைகளெல்லாம் புரோத்ஸாகப்படுத்தப்பட்டன. ஸ்பெயின் நாட்டில் அக்காலத்தில், பொது ஜனங்களுக்கென்றே எழுபது புஸ்தகசாலைகளும், பதினேழு கல்விக்கழகங்களும் இருந்தனவென்றால், கல்வி விஷயமாக விருந்த ஆதரிப்பைப்பற்றித் தனியாகச் சொல்லவும் வேண்டுமா.?

ஐரோப்பாவில் மதவிஷயமாக வுண்டான சீர்திருத்தம் கல்வி விஷயமாக வுண்டான புனருத்தாரணத்தோடு சம்பந்தப்பட்டதாக வுள்ளது. அக்கல்வி விருத்தி ஸ்பெயின் தேசத்திலிருந்த முஸ்லீம் சர்வகலாசாலைகளுக்கு முற்றிலும் கடமைப்பட்டுள்ளதென்பது ஜகத்பிரசித்தம். ஐரோப்பாகண்டம் முழுவதும் அஞ்ஞானமாகிய அந்தகாரத்தில் மடங்கிக் கிடந்தபோது ஸ்பெயினில் மட்டுமே கல்வித்தீபம் ஆறு நூற்றாண்டளவு எரிந்துகொண்டிருந்தது. கல்வியைக் கற்க விரும்பினோர்கள் ஸ்பெயினுக்குச்சென்று, அங்கு இடையறாது ஊறிவந்த கல்வி ஊற்றில் தங்கள்தாகத்தைத்தீர்த்துக்கொண்டார்கள். வந்தவர்கள் கிறிஸ்தவர்களாக விருந்தபோதிலும் மரியாதையாகவும் அன்பாகவும் வரவேற்கப்பெற்றனர்.

மானிடவர்க்கம் திருக்குரானுக்குக் கடமைப்பட்டுள்ளது. ஒரே கடவுளுண்டென்றும் அவனைத் தான் வணங்கவேண்டுமென்றும்

விளம்பரம் செய்ததும், கிறிஸ்தவ மார்க்கத்திலுள்ள பிழைகளைக் கண்டனம் செய்ததும், விக்ரகங்களை அகற்றியதும் புறச்சமயங்களை யடக்கியதும், ரத்தச்சண்டைகளை நிவர்த்தித்ததும், காமாதுரமான விவாகங்களை நிறுத்தியதும், நரபலி, பெண்சிசுவதை, அம்மணக்கோலங்கள், மதுபானம், சூதாட்டம் முதலியவைகளை ஒழித்துவிட்டதும், ஸ்திரீகள் அடிமைகள் இவர்களுடைய நிலைமைகளை உயர்த்தியதும், ஆத்மவிஷயமான தாபத்தை உண்டாக்கிவிட்டதும் மனித கோடிகளுக்கு அளவிறந்த நன்மைகளாக முடிந்தன.

குருக்கள்மாரென்ற தனி வகுப்பு ஒன்றைத் திருக்குரான் அங்கீகரிப்பதில்லை. ஆத்மஞானம் இன்னாருக்குத்தான் சித்திக்கும் இன்னாருக்குச் சித்திக்காது என்று ஒப்பந்தம்செய்துவிடுவதில்லை. விருப்பமுள்ள மனம் கடவுளிடத்துக்குப் போவதற்கு யாதொரு தடையுமில்லை. ஒவ்வொரு மனிதனும் அவனுடைய குருவாகவே யிருக்கலாம். பரமண்டலத்தின் திறவுகோல் பிரத்தியேகமாக ஒருவனிடமும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. மிகுந்த பத்தியுள்ளவன் தான் கடவுளுக்கு உவந்தவன்.

ஜாதி மதாசாரம் திருக்குரானில் கூறப்படவில்லை. கடவுளின் முன்னர் எல்லோரும் சமானமானவர்களேயாம். “பூர்வோத்திரத்தில் பெருமை வேண்டாம்; நம்பிக்கையுள்ளவர்கள் எல்லோரும் சகோதரர்கள். எல்லோரும் சமானர்கள்” என்று திருக்குரான் அருளுகின்றது. எஜமானர்களும் வேலையாட்களும் அரசர்களும் பிரஜைகளும், வெண்ணிறமுடையவர்களும் கருநிறமுடையவர்களும் பேதமின்றிக் கலந்திருக்கின்றனர். கடவுளின் ஆலயத்தில் பிரத்தியேகம் பாராட்டப்படுவதில்லை. எந்த மதத்தினனாயினும் சரியே, ஒருவன் முஸ்லீமாக மாறிவிட்டால் உடனே அவன் இஸ்லாமிய ஸகோதர சங்கத்திலோர் அங்கத்தினராக ஆய்விடுகிறான்.

சன்னியாசித்துவம் வேண்டாமென்று திருக்குரான் விதிக்கின்றது; தேகத்தை வீணில் சிரமப்படுத்திக் கொள்வதையும் அது கண்டிக்கின்றது. “கல்யாணஞ் செய்துகொள்ளுங்கள்; நல்ல வஸ்திரங்களை உடுத்துக்கொள்ளுங்கள்; உண்டு குடித்துச்சுகியுங்கள். ஆனால்

வீண்செலவு செய்யாதிருங்கள்; ஏனெனில் வீண்செலவு செய்பவரிடம் கடவுளுக்குப் பிரியம் இல்லைஎன்று திருக்குரான் கூறுகின்றது. இஸ்லாமிய கொள்கைகள் எல்லாம், உபயோகமுள்ளவையாகவும், யுக்திக்கு ஒத்தவையாகவும், எளிதில் அனுஷ்டிக்கப்படக் கூடியவையாகவும், மானிட அபிவிருத்தியின் ஒவ்வொரு நிலைமைக்கும் ஏற்றவையாகவும் உள்ளன.

“உங்களை நாம் விளையாட்டுக்காகச் சிருஷ்டித்தோமென்றும், நீங்கள் நம்மிடம் திரும்பி வரமாட்டீர்களென்றும் நினைக்கிறீர்களா ? என்று திருக்குரான் வினவுகின்றது. உண்மையாகவே, எல்லாமறிந்த கடவுள் வீணாக ஒன்றையும் செய்வதில்லை.”

“ ஹிலாலுடீன் ”

மேற்றிசை ஸ்திரீகளும் கீழ்த்திசை ஸ்திரீகளும்.

(65-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு பெண்குழந்தை பிறந்தால் ஏன் அவ்வளவு துக்கமும் கோபமும் உண்டாகவேண்டுமென்பது எனக்கு அத்தியாச்சரியத்தைக் கொடுக்கின்றது. அவள் மானிட சிருஷ்டியைச் சேர்ந்தவள் அன்றோ? அவள் ஒரு மனிதனுக்குத் தாய் ஆகமாட்டாளா? அல்லது அவள் ஒரு மனிதனுக்குப் பிறக்கவில்லையா? அவள் ஒருவனுக்கு மனைவியாகி வீட்டின் சுகசவுகரியங்களைக் கவனிக்கமாட்டாளா? பிள்ளைகள் உதவுவதுபோல அவளும் ஏன் பெற்றோர்களுக்கு உதவமாட்டாள்? தனது கணவனுடைய இன்பதுன்பங்களை அவளும் பங்கிட்டுக்கொள்வதை நாம் காணவில்லையா? இன்னும் தன் கணவனுக்கு விசேஷ அனுகூலத்தைச் செய்பவளாகவுமிருக்கவில்லையா? இவைகளெல்லாமிருக்கட்டும் நமது குரானும் ஹதீசும் புருஷர்களின்மீது ஸ்திரீகளுக்குக் கொஞ்சம் அதிகாரம் இருக்கிறதென்று கூறுகின்றனவே. இவ்விரு கிரந்தமும் அவ்விஷயமாக விஸ்தரித்துச் சொல்வதை ஏற்றுக்கொண்ட வட ஐரோப்பாவிலுள்ள சில ஐரோப்பியர்கள், புருஷர்களுக்குள்ள மரியாதையுடனேயே ஸ்திரீகளையும் நடத்துகின்றனர். கீழ்த்திசையில், ஒரு குடும்பத்தின் கீர்த்தியையும் அந்தஸ்தையும் நிலைநிறுத்துவது பிள்ளைகள் தாம்பெண்ணல்லவென்னும் கொள்கை பரவியுள்ளது. ஆனால் பிள்ளைகளையுடைய குடும்பங்கள் கீர்த்தி யடையாமலிருப்பதில்லையாவென்று நான் கேட்கிறேன். விஷயம் என்னவெனில், கீர்த்தியடைவதற்குக் குழந்தைகள் வேண்டுமென்பதேயில்லை. நல்லவனாகவிருப்பதே கீர்த்தியைக்கொடுக்கும். புத்திரர்களிருந்ததனால்தான் தீர்க்கதரிசிகளைக் கடவுள் உண்டாக்கினான் எனச் சொல்லுவீர்களா? இல்லை! இல்லை! அவர்கள் தங்களுடைய உத்தம நடையினாலும் பக்தியினாலுமே கடவுளுடைய தீர்க்க தரிசிகள் ஆனார்கள். புத்திரர்களிருந்தால் கீர்த்திவரும் என்பது உண்மையாகவிருந்திருக்குமேல், ஒவ்வொரு பக்தனும் அநேக ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டிருப்பான். ஆனால்விஷயம் வேறானதாகத் தெரிகின்றது. அவ்வித பக்தகோடிகளில் பலர், தமது முடிவுகாலம்வரையில் கல்யாணமே செய்துகொள்ளாமலிருந்திருக்கின்றனர். இன்னும் சில தீர்க்கதரிசிகள், தங்களுடைய பிள்ளைகள் முகம்மதியராக ஆகமாட்டோமென்றதனால், அவர்களுக்கு ஆஸ்தியொன்றும் கொடுக்காமல் செய்திருக்கின்றனர் என்றும் காண்கிறோம். அபுல் அவாலி மிஸ்ரி என்னும் கீர்த்திவாய்ந்த அரபியக் கவிச்சக்கரவர்த்தியின் பிரதாபத்தைநிலைநாட்ட அவருக்கு ஒரு மகனிருந்தானா? அவர் கல்யாணமே செய்துகொள்ளவேயில்லை. ஆகவே அவருக்குக் குழந்தையுமில்லை. ஆயினும் அவர் கீர்த்தி நம்மால் இன்றைக்கும் புகழப்படுவது எதனால்? அவருடைய அருமையான கிரந்தங்களாற்றான் நாம் அவருடைய பெயரை இன்னும் கொண்டாடுகிறோம். பெற்றோருக்கு நேரும் துயரத்தையேனும் மரணத்தையேனும் குமாரன் நீக்கிவிடச் சக்தியுள்ளவனாகிறானா? இல்லை, அப்படியானால் பிள்ளைகள் வேண்டும் என்னும் பேரவா மட்டும் ஏன் உண்டாகின்றது? பிள்ளையாகவிருக்கட்டும், பெண்ணாகவிருக்கட்டும், அதை நடத்தும் மாதிரியெல்லாம் பெற்றோரைப் பொறுத்ததாகவே யுள்ளது. பிதா இறந்தபின்பு அவருடைய ஆஸ்திகளையெல்லாம் மகன் வீணாக்கிவிட்டால், அப்பிதாவின் பெயர் எப்படி விளங்கிநிற்கும்?

வாழ்க்கையின் இரண்டாம்பருவம்:—குழந்தைப் பிராயம்-கீழ்த்திசைப் பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளைச் சற்று அன்பா

களும் பெண்களை அன்பு குறைவாகவும் நடத்துவது வழக்கம். இவ்வித வழக்கம் ஐரோப்பியரிடத்துக் கண்டிப்பாய்க் கிடையாது. மகன், மகள் இருவரிடத்தும் சமமான அன்பு அவர்களுக்கிருக்கும். நமது புத்திரர்களை அன்பாய் நடத்தி, அவர்களுக்குத் தெளிவுண்டாக்கினும் சிற்சில வேளைகளில் அவர்கள் நமக்குத் திருப்தியுண்டாகும் வண்ணம் நடந்துகொள்வதில்லை. வேலைசெய்து ஜீவனம் பெறவேண்டியிருக்கும் ஏழை ஸ்திரீகள் தாங்கள் வெளியில்போகும்போது தங்கள் குழந்தைகளைத் தாதிமாரிடம் கொடுத்துப் போகின்றனர். ஐரோப்பிய மாதர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குத் தாங்களே பால்கொடுத்து அவைகளுடைய தேகாரோக்கியத்திலேயே கண்ணாயிருக்கிறார்கள். கீழ்த்திசை ஸ்திரீகளாகிய நாமோ நம்முடைய குழந்தைகளுக்கு நாமேபால்கொடுப்பது அகௌரவமென்ன நினைக்கிறோம். ஆகையால், நாம் குழந்தைகளைத் தாதிமாரிடம் ஒப்புவிக்கிறோம் அவர்கள் போகுமிடங்களுக்கெல்லாம் அக்குழந்தைகளையும் எடுத்துச்செல்கின்றனர் இதன்பயன் என்னவெனில், அக்குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடைய மாதிரிகளைப் பின்பற்றாமல், தாதிமார்களுடைய மாதிரிகளைப் பின்பற்றுகின்றன. இன்றியும் குழந்தைகளுடைய தேகாரோக்கியத்தையும் நாம் நன்றாகக் கவனிப்பதில்லை. எளிதில் ஜீரணிக்கமுடியாத தின்பண்டங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறோம். அதனால் இரைப்பை துர்ப்பலமடைகின்றது. ஜீவயாத்திரைப்பயணம் சுருங்குகின்றது. இந்தத்துன்பங்களையெல்லாம் குழந்தை தாண்டிநிற்குமாயின், அதற்குத் துர்ப்பாஷைகள் பழகுகின்றன. நாம் அதைக் கண்டிக்காமல் மகிழ்கின்றனம். இதனால் உற்சாகமடைந்த பையன், அத்திய வழியிலேயே இறங்கி சீக்கிரத்தில் கெட்டுப்போய், தனக்குத்தீராத வினைகளை வரவழைத்துக்கொள்வதல்லாமல் தன் பெற்றோர்க்கும் பெரும் பழியைக்கொண்டு வருகிறான். குழந்தைகள் நடக்கத் தொடங்கும்போது, நாம் அக்குழந்தைகளைத் தட்டுமுட்டு சாமான்கள் நிறைந்த விடத்தில் விட்டுவிடுகிறோம். இதனால் சாமான்கள் சேதமாகவும், குழந்தைகளுக்குக் காயமுண்டாகவுங் காரணமாகின்றது.

(தொடரும்)

[illegible]

OFFICE ... SEP 1911 MADRAS

இதிலடங்கிய விஷயங்கள்

பெயர்	பக்கம்
இஸ்லாம் நேசன்	113
மதாபிமானமும், மதாபிமானியும்	114
மரணத்தின் எல்லை	119
மறுபிறப்பு	124
நாயக மான்மியம்	128
மறுபிறப்புண்டு•	13[illegible]
இஸ்லாமிய போதகர்கள் வேண்டும்	[illegible]
விவேகசாகரம்	[illegible]
பாரஸீகமும், இஸ்லாமும்	1[illegible]
ஹிப்னாடிஸம்	150
இரண்டுவினாக்கள்	155
கிறிஸ்தவர்களுக்கோர் நற்செய்தியென்னும் புத்தகத்திற்	
குக் கண்டனம்	158
ஷை கண்டனச் சூறாவளி	161
தென்னிந்தியாவில் முஸ்லீம்கல்வி	183
தொழுகையின் பிரயோசனம்	187
போலிஞானிகள்	193
கொடுமையானவார்த்தை	195
விநோதமஞ்சரி	196
உலகவர்த்தமானம் { முஸ்லீம்வர்த்தமானம்	198
உலகவர்த்தமானம் { பொதுவர்த்தமானம்	206

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
		இதன் 1-வது பாகம் 1. முதல் 8 வரை பக்கங்களை 113 முதல், 120 வரை, பக்கங்களாகக் கொள்ள வேண்டியது.	
113	27	அகீம்பா	அக்கீம் - பா
,,	32	அகீம்	அக்கீம்
116	20	மாதாபி	மதாபி
118	27	தூக்தக்	தூக்கத்
120	18	ஆகதாவேதக	ஆகதாயவேதக
,,	24	புடைவர்	புடையவர்
122	5	கிழுர்கள	கிழுர்கள்
125	13	கிணறது	கின்றது
128	15	கட்கமான்	கம் + மான்
,,	26	ஆகுகி	ஆங்கி
131	30	லென்றுப	லென்றும்
132	17	வாணியர்களோ?	வாணியர்களோ.
139	17	தனக்கு	தமக்கு
148	27	வேண்டு	வேண்டும்
		149-ம் பக்கத்தில் (ஜலாலுத்தீன்) என்ற கையெழுத்துக்கருகில் (ப-ர்) என்றிருப்பதைக் கீழேயிருக்கும் புட்நோட்டின் அடியில் சேர்த்துக் கொள்ளவேண்டியது.	
150	10	றுப்	றும்
,,	15	றும்	ளும்
162	19	வஸ்துத்தனத்த	வஸ்துதனத்த
168	2	மணிக்கன்னை	மணித்தன்னை.
169	19	எங்குகண்டு	எங்குக்கண்டு
171	11	வாகயிருக்	வாயிருக்

பிழை திருத்தம்.

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
171	21	தேவள்	தேவன்
173	10	[illegible]	[illegible]
175	2	[illegible]	[illegible]
,,	29	[illegible]	[illegible]
184	17	உலதத்தை	உலகத்தை
189	11	பொய்வன்	பொய்யன்
190	16-17	தொக்து	தொற்று
,,	24	ஏது	ஏது
191	15	வஸ்திரத்தாய்	வஸ்திரத்தால்
,,	29	அந்தகாலைத்	அந்தக்காலத்
,,	30	[illegible]	[illegible]
192	12	பாகவுங்	பாகவும்
,,	16	ஸ்தானமுங்	ஸ்தானமும்
194	4	தெரிய	தெரியு
199	11	சங்க்த்தார்	சங்கத்தார்

◆

ஆகாயத்தில் பறந்தார்:—பிப்ரவரி மாதம் 17-18உ களில் காலை 6½ - மணிமுதல் 8 - மணி வரையில் பிரான்ஸிலிருந்து வந்திருக்கும் பாரன்டெ. கார்ட்டே என்னும் தனவான் சரோப்லேன் என்னும் கப்பலில், சென்னை ஜிம்கானா மைதானத்திலிருந்து மேலே கிளம்பிப் பறந்தார். ஒவ்வொருநாளும் மூன்றுமுறை ஏறி ஏறி இறங்கினார். ஆகாயத்தில் மூவாயிரத்திச் சில்லறை அடி உயரம் மேலே கிளம்பினார்.

பத்திராதிபர் குறிப்புக்கள்.

இஸ்லாம்நேசன் 3-வது சஞ்சிகை சென்ற 1910௵ அக்டோபர் மாதம் வெளியாயிற்று. சிலவகை இடையூறுகளால் இதுவரையில் அடுத்த சஞ்சிகை வெளிவரவில்லை. நவம்பர், டிஸம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களுக்குச் சேர்த்து வெளிப்படுத்தியிருக்கிறோம். 4 மாதங்களுக்கு 128-ப் பக்கங்கொண்ட சஞ்சிகையாக வெளிவரவேண்டியது. ஆனால், காலம் நீடிக்குமென்னும் எண்ணத்தால் துரிதமாகக் 96 பக்கத்தோடு 4 ஆவது சஞ்சிகையை வெளிப்படுத்தினோம். இன்ஷாஅல்லா இனி இஸ்லாம்நேசன் மாதந்தோறும் அந்த அந்த மாதம் 25௳ யன்று தவறின்றி வெளிவரும். இப்போது குறையாயிருக்கும் 32 பக்கமும் வருஷமுடிவில் ஒருதனிச்சஞ்சிகையாக வெளிவரும்.

இஸ்லாம்நேசன் 187-ம் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் "தொழுகையின் பிரயோஜனம்" என்னும் விஷயம், இஸ்லாம்நேசன் ஆபீஸில் வெளியாயிருக்கும் "இஸ்லாத்தின் சிறப்புக்கள்" என்னும் புத்தகத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது. இப்புத்தகத்தில் ஒவ்வொரு விஷயமும் இதைக்காட்டிலும் இனிமையாயிருக்கும். இப்புத்தகம் ஒவ்வொரு முஸ்லீம் சகோதரரின் கையிலும் இருக்கவேண்டியது அவசியம்.

இஸ்லாம்நேசன் பத்திரிகை, காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால் இதில் வெளியாகும் விஷயங்களைத் திரட்டி ஒருவரும் புத்தக உருவாக வெளிப்படுத்துவது கூடாது.

ஈருலகத்துக்கும் வள்ளலான முகம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்களின் சரித்திரத்துக்கு "நாயகமான்மியம்" எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இப்பெயர் சிலருக்கு அருவருப்பை விளைக்கும்போலிருந்தால் ஒருகால் அதைமாற்றி "அன்பியாநாயகம்" என வேறுபெயர் கொடுக்கும்படி ஏதுவுண்டாகும். (ஸல்) என்பது, ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்பதாகும். பத்திரிகையில் பரமாசாரியர் என வருமிடங்களில் அன்பியாநாயகம் என்பது பொருள்.

பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வோர் கவனிக்கவேண்டிய விதிகள்:—காகிதத்தின் ஒரேபக்கத்தில் எழுதவேண்டும். கூட்டெழுத்தில்லாமல் பிரித்துப் பிரித்து விளங்க எழுதவேண்டும். தெளிவானநடையில் இலக்கணப்பிழையின்றி எழுதவேண்டும்.

* * *

بسم الله.

இஸ்லாம் நேசன்.

புத்தகம் 2.] 1911௵ பிப்ரவரி [சஞ்சிகை 4.

இஸ்லாம் நேசன்.

அன்பார்ந்த நேயர்களே!

சென்ற இரண்டுமாத காலமாக இஸ்லாம் நேசன் வெளிவராத காரணத்தைப்பற்றி நீங்கள் அறிய ஆவலுடையவர்களாயிருப்பீர்களென்பதற்கையமின்று. இஸ்லாம் நேசன் மூன்று மாதத்திற்கொருமுறை வெளிவந்துகொண்டிருக்கும்போது அதை 450 நேயர்கள் ஆதரித்தனர். மாதாந்த பத்திரிகையானது முதல் அதை ஆதரிப்பவர் மிகக் குறைந்தவர்களே. இவர்களிடமிருந்து வந்த சந்தாத்தொகையைக் கொண்டு இஸ்லாம் நேசனை இவ்வருடம் முடிவுவரை நடத்துதல் அசாத்தியமென்பதை நான் சொல்லாமலே நேயர்கள் அறியலாம். நஷ்டமாகும் தொகை என் கையிலிருந்து கொடுக்கும்படி நேர்ந்திருக்கிறது; இதில் எனக்குக் கவலையில்லையேனும் இஸ்லாம் நேசனுக்கு வேண்டிய விஷயமுற்றும் முன் நானே எழுதிவந்ததுபோல் மாதாந்த பத்திரிகைக்கும் எழுதும்படி நேர்ந்தது. வியாபாரத்தைத் தொழிலாகவுடைய எனக்கு முழுவிஷயமும் நானே எழுதுதற்குக்காலம் இடம் கொடுக்கவில்லை. இஃதன்றி வியாபார சம்பந்தமாக நான் பல இடங்களுக்கும் பிரயாணஞ் செய்யவேண்டி நேர்ந்ததால் மாதந்தோறும் இஸ்லாம் நேசனை வெளிப்படுத்தல் அசாத்தியமாயிற்று. இந்தக் காரணங்களினிமித்தம் நேயர்களுக்குப் பணத்தைத் திரும்ப அனுப்பிவிட்டுப் பத்திரிகையை நிறுத்திவிடவேண்டுமெனப் பலமுறை நினைத்தேன். ஆனால் இஸ்லாம் நேசன்மீது எனக்கிருக்கும் அன்பு அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆயினும் மேற்கண்ட காரணங்களால் பத்திரிகையை விடாமல் நடத்துவதற்கும் சாத்தியமாகவில்லை. ஆகவே இதைப்பற்றி என் அன்புக்குரிய சகோதரரவர்கள் கனம் அபீம்பா-முகம்மது அப்துல்லாசாஹிபு அவர்களுக்குக்கடிதமூலமாய்த்தெரிவித்தேன். அவர்களுக்கு இதற்கு முன்னமேயுள்ள சொந்த விஷயங்கள், இஸ்லாம் நேசனை நடத்தமுடியாமல் அவர்களைத் தடுத்தபோதிலும் நம்மவர்மீது இயற்கையாகவே அமைந்துள்ள அருள்நிறைந்த அவர்கள் இருதயம் என் வேண்டுதலுக்கு இடம் கொடுத்தது. அதற்காக உன்னதமான ஆண்டவனைத் துதிக்கின்றேன். கனம் அபீம்பா-முகம்மது அப்துல்

லா சாஹிபு அவர்களுடைய உதவி எனக்குக் கிடைக்காவிடின் நிச்சயமாக இஸ்லாம் நேசன் நிறுத்தப்பெற்றிருக்குமாதலால் ஏற்ற சமயத்தில் உதவிசெய்ய முன்வந்த அந்த மஹானவர்களுக்கு நான் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அப்படியே இஸ்லாம் நேசன்மீது அன்புடைய ஒவ்வொருவரும் அந்தப் பெரியோர்க்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்களென்றே நம்புகிறேன். இனி இஸ்லாம் நேசன், உன்னதமான அல்லாஹுத் தஆலாவின் கிருபையால் எங்களிருவருடைய பத்திராதிபத்தியத்தின்கீழ் மாதந்தோறும் செவ்வனே வெளிவந்துகொண்டிருக்கும். ஆண்டவன் கிருபை என்றும் நம்மவர்மீதிருப்பதாக. ஆமீன்.

பத்திராதிபர்.
உ. சு.

மதாபிமானமும், மதாபிமானியும்.

“மார்க்கமும் மூர்க்கமும் ஒருங்கே நிறைந்தவர்கள் முஸ்லீம்களே,” என்று உலகத்தவர் எல்லாரும் நமக்குப் பட்டம் அளித்திருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் சொல்வதைப் பொய்ப்படுத்தக்கூடாதென்று நம்மவர்களுள் அநேகர் அதை ஒரு பூஷணமாக ஏற்றுக்கொண்டு பெருமூர்க்கர்களாயிருக்கிறார்கள். நமக்கு மூர்க்ககுணம் உண்டென்பதை நாம் முழுதும் அங்கீகரிக்கவில்லை. முஸ்லீம்களிடத்தில் மதப்பற்று (மார்க்கத்தில் அபிமானம்) மிகுந்திருக்கிறது ; ஆனால், மதப்பற்றுச் (வெறியினிடத்தில் அபிமானம்) சிறிதும் இல்லையென்றே கொள்ளவேண்டும்; மூஸ்லீம்களை மார்க்கவெறி பிடித்தவர்களென்று பிறர் சொல்வது சிறிதும் பொருந்தாதென்று லிவர்பூலிலுள்ள ஸ்ரீமான் அப்துல்லாகுவில்யம் அவர்கள் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். பிறமதங்களிலுள்ளவர்கள் தம் தம் மதத்தில் வைத்திருக்கும் பற்றைக்காட்டிலும் முஸ்லீம்கள் தங்கள் மதத்தில் வைத்திருக்கும் அபிமானத்தின் மிகுதியைக்கண்ட அன்னியர்கள் நாம் மதவெறிபிடித்தவர்கள் என்று தப்பெண்ணங்கொள்ளுகிறார்கள். கிரிஸ்தவர்கள் கோடிக்கணக்கான திரவியத்தைச்செலவு செய்து தம்முடைய மதத்தைப் பரப்ப யத்தனிக்கிறார்கள் முஸ்லீம்கள் இவ்வாறு ஒரு முயற்சியும் செய்வதில்லை. ஆயினும், இவ்வுலகத்தில் மிகப்பிரதான நகரமாக எண்ணப்படும் லண்டன் மாநகரத்துள்ளும் இஸ்லாம் இடம் பெற்றுக்கொண்டது. ஒருவருடைய முயற்சியும் இல்லாமல் அமெரிக்காவிலும் நம்முடைய சுத்த சத்தியம் பரவிவருகிறது. அவர்களெல்லோரும் முன் கிரிஸ்துமதத்தை அனுஷ்டித்தவர்களே. ஆனால், கிரிஸ்தவர்களுடைய விடாப்பிடிவாதத்தால் அம்மதத்தில் சேர்ந்திருக்கும் மனிதர்களுள் எத்தனைபேர் இஸ்லாமார்க்கத்திலிருந்து நஸாராமார்க்கத்தைத்தழுவி யிருப்பார்களென்று நினைக்கிறீர்கள் ? ஆயிரம் நஸாராக்களில் ஒருவரேனும் முஸ்லீமாயிருந்து பிறகு கிரிஸ்தவராயிருப்பாரென்று எண்ணவிடமில்லை. யாரேனும் அப்படி மாறி யிருந்தால் அவர்களின்தொகை மிகக்குறைவாயிருக்கும். சிலர் தாம் கிரிஸ்தவராகுமுன் இஸ்லாத்தில் இருந்ததாகவும், இம்மதத்தில் உண்மையில்லையென்று கண்டபிறகு, இகலோகத்திலேயே பாவத்தைப் போக்கும் பெருமைவாய்ந்த மோக்ஷமார்க்கமாகிய கிரிஸ்தவமதத்தைப் பற்றியதாகவும் பொய்யாகச் சொல்லுவதுண்டு. முஸ்லீம்களை ஏமாற்றும் பொருட்டு இவ்வாறு சொல்வது வழக்கம். இப்படிப்பட்ட கிரிஸ்தவர்களை நெருங்கி இஸ்லாமார்க்கத்தின் இரகசியங்களை அவர்பால் விசாரித்தால் ஒன்றுந்தெரியாமல் விழிப்பார்கள். ஆதலின், முஸ்லீம்களுக்குத் தங்கள் மதத்தில் மிகுந்த பற்றுண்டென்பது செவ்வனே விளங்குகிறது. சைவப்பற்று மிகுந்தவரும், அம்மத ஆராய்ச்சியில் உழைப்பவரும், ஆங்கிலத்தில் தேர்ச்சியுடையவருமாகிய ஒரு பிராமணர் சொன்னதாவது: முஸ்லீம்களைப்போல் வேறு எந்த மதத்தினரும் தம் தம் மதமே மோக்ஷசாதனமானதென்று திருப்தியடைவதில்லை ; முஸ்லீம்கள் மட்டுமே தங்கள் மதத்தில் முழு நம்பிக்கையும் உள்ளவர்கள் என்பதே.

அரபு நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமின்றி உலகத்தின் எல்லாப் பாகத்திலுமுள்ளவர்களின் நன்மைக்காகவும் ஆதிமுதல்வனால் அனுப்பப்பட்ட சுத்த சத்தியத்தை உலகமுழுதும் பரப்பவேண்டுமென்பதே நம்முடையபரமாசாரியராகிய நாயகசிகாமணியவர்களின் நோக்கம். அம்மகோபகாரிகளின் பெருநோக்கத்துக்குத் தக்க விதமே அவர்கள் சுவர்க்கலோகம் புகுந்தபின் இஸ்லாமார்க்கம் மேற்றிசையிலும் கீழ்த்திசையிலும் பரவிச்சென்றது. பைத்துல்முகத்திசைப் பிடித்துக்கொள்ளும் பொருட்டு மூன்றுமுறை படையெடுத்துவந்த ஐரோப்பிய நஸாராக்களை நம்முடைய சத்தியமார்க்கம் வென்றுவிட்டது. இப்போது இஸ்லாம்பரவாதநாடே இல்லை ; ஆனால், கிரிஸ்தவமதம் பரவாத நாடுகள் அநேகமுண்டு. இவ்வாறு உலகமுழுதும்தானே பரவிச்செல்லும் நம்முடைய மார்க்கத்தில் சேர்ந்தவர்களெல்லோரும் மதாபிமானம் நிறைந்தவர்களாகவே யிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள முஸ்லீம்க

களும் வேற்று நாட்டு முஸ்லீம்களுக்குப் பின்னிடுவதில்லை. மற்றவர்கள் போலவே இவர்களுக்கும் மதாபிமானம் மிகுதியாகவுண்டு ; மார்க்க அபிவிருத்திக்காக ஆயுள்முழுதும் உழைக்கும் முஸ்லீம்கள் அநேகர் இந்தியாவிலுண்டு ; அரபிக்கலாசாலைகளை பேற்படுத்துவோர் பலர் ; ஆங்கிலக்கலாசாலை ஏற்படுத்துவோர் பலர் ; ‘ நத்வா ’ என்னும் சங்கம் ஏற்படுத்துவோர் பலர் ; மார்க்கப் புத்தகங்களை எல்லோருக்கும் விளங்கும்படியான பாஷையில் எழுதி வெளிப்படுத்துவோர் பலர் ; பத்திரிகைகள் நடத்துவோர் பலர். இவ்வாறெல்லாம் இஸ்லாமார்க்கத்துக்காக உழைத்துவருபவர்கள் எண்ணிறந்தவருண்டு. இந்தியாவில், இப்படிப்பட்ட மதாபிமானமும், மதாபிமானிகளும் காணப்படும் பாகம்யாது? உண்பதும், உறங்குவதுமே மனிதன் செய்யவேண்டிய கடமையென்று கருதியிருக்கும் மிலேச்சச்செல்வர் பலர் நிறைந்த இத்தென்னிந்தியாவா? ஒருபாஷையும் எழுதப்படிக்கத் தெரியாமல் உயிரோடுகூடிய பிணம்போலிருக்கும் முஸ்லீம்கள்வாழும் இத்தென்னிந்தியாவா? மார்க்கத்தின் உண்மை தெரியாமல் மிருகங்களுக்கும் தங்களுக்கும் வித்தியாச மின்றிப் பிறந்து பிறந்திறக்கும் அறிவீனர்கள் மலிந்துள்ள இத்தென்னிந்தியாவா? பத்திரிகை தானே வந்தாலும் படிக்கத்தெரியாமல் பலரையும் தூஷிக்கும் துருக்கர்கள் நிறைந்த இத்தென்னிந்தியாவா ? இவ்வளவு நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்ற இத்தென்னிந்தியாவில் மாதாபிமானம் உண்டென்று நினைக்கவும் தகுமோ ? பள்ளிவாயில் சம்பந்தமாகக் கக்ஷிசெய்து கொண்டு ஹைகோர்ட்டு வரையில் வருவதுதான் மதாபிமானம் என்று கருதியிருக்கிறார்கள் நம் துருக்கர்கள்.

அரபிப்பாடசாலைகள் இத்தென்னிந்தியாவில் அநேக முண்டு. அங்கிருந்து ஆலிமார்கள் அநேகர்வெளிவருகிறார்களென்பது உண்மையே. ஆனால், அந்த அரபிப்பாடசாலைகளில் ஆங்கிலமும் தமிழும் கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கும் வரையில் தங்களுடைய பிரயாசை பயன்படாதென்பது மவுல்விகளுக்கும் தெரிந்தவிஷயமே; தமிழைமட்டுமாவது கற்றுக்கொடுத்தாற்றான் அரபிக்கலாசாலைகள் உண்டானதற்குத்தக்க பலனுண்டு. தென்னிந்தியாவில் முஸ்லீம்களுக்காக ஆங்கிலக்கலாசாலை பேற்படுத்துவதைப்பற்றிப் பேசுவதற்கு இது காலமன்று. இன்னும் பல ஆண்டுகள் செல்லவேண்டும் ; நாகரிகமும் முதிரவேண்டும். மார்க்கப்புத்தகங்களை இதுவரையில் தமிழில்எழுதியிருக்கும் ஆலீம்களின் தமிழை வாசித்தால் அந்த ஆலீம்களை ஆலீம்களென்றே சொல்ல வேண்டும் எனத்தோன்றுகின்றது. வேறொரு பெயரால் அவர்களை அழைப்பது தகாது. அரபிப்பாஷை தமக்குத் தெரியுமென்னும் அகம்பாவத்தால்

வாயில் வந்ததை யெழுதுவதே தமிழ் என்று தப்பு அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். ஆயிரம் தமிழ் வித்வான்கள் ஒன்றுசேர்ந்து உழைத்தாலும் ஆலீம்கள் செய்திருக்கும் ஆபாசத்தைத் திருத்தமுடியாது போலிருக்கிறது.

இனி, பத்திரிகையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இதில் ஆராய்ச்சிக்குச் சிறிதும் இடமில்லை ; பத்திரிகை எழுதுவோருமில்லை ; படிப்போருமில்லை என்பதே முடிபு. எவ்வளவு எளியநடையில் எழுதினாலும் பொருள்விளங்கவில்லையென்றே முஸ்லீம்களில் பெரும்பாலார் சொல்லுகிறார்கள்; இப்படிப்பட்ட மனிதர்களை வைத்துக்கொண்டு பத்திரிகை நடத்தவேண்டுமென்று ஒருவர் முன் வந்தாலும், அவருடைய ஊக்கம் தடைப்பட்டு நின்றுவிடுகிறது. இந்தியாவின் ஜனத்தொகை முப்பதுகோடியில் இரண்டு கோடிமனிதர்கள் தமிழ்ப்பேசுகிறார்கள். இவர்களில் எட்டிலொருபங்கு ஜனங்கள் துருக்கர்கள். இந்த இருபத்தைந்து லட்சத்தில் (2467351) சுமார் இருபத்துநான்கு லட்சம்பேருக்குக் கையெழுத்தும் போடத்தெரியாது. ஆ! என்ன மோசம் ; மிகுந்த இலட்சம் பேர்களில் கடிதமட்டும் எழுதப்படிக்கத்தெரிந்தோர் எழுபத்தையாயிரம் ; மிகுந்த இருபத்தையாயிரம் மனிதர்களும் நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும், பத்திரிகை படித்துப் பொருள்தெரிந்துகொள்ளக் கூடியவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களில் பன்னீராயிரவர்களுக்குப் பணமில்லை ; ஆறாயிரம் பிரபுக்களுக்கு அவகாசமில்லை ; பத்திரிகைபடிக்க அரைமணிநேரமும் ஒழியாமல் இரவும் பகலும் அவர்கள் உழைத்துக்கொண்டே யிருப்பார்கள்; எஞ்சிநின்ற எழாயிரம் கனவான்களுக்கும் பொருட்செல்வமும் உண்டு, கல்விச்செல்வமும் உண்டு. இந்த எழாயிரம் முஸ்லீம்தனவான்களும் பத்திரிகையை ஆதரிக்கவும், அதைப்படித்து உலகத்துக்கு உதவிசெய்யவும் முன் வருவார்களாயின் முஸ்லீம்களின் தமிழ்ப்பத்திரிகையால் உலகத்துக்கு மிக்கபயனுண்டாகுமென்பதில் ஐயமில்லை.

இஃதிப்படியிருக்க, நம் இஸ்லாம் நேசனை ஆதரிப்பாரின் தொகை மிகக்குறைவாகக்காணப்படுகிறது; இது மிக்கவிசனிக்கத்தக்கதே. இதற்குக்காரணம் என்ன ? பணமில்லாக்குறையன்று, படிப்பில்லாக்குறையன்று, மதாபிமான மில்லாக்குறையுமன்று. ஆனால், மனமில்லாக்குறையேகுறை. நம் முஸ்லீம்களுக்கு விருப்பமட்டுமிருந்தால் அவர்கள் என்ன என்னதான் செய்யமாட்டார்கள்? நண்பர்களே ! நல்ல சமயம் வாய்த்திருக்கிறது; கரும்புதின்னக்கூலியா ? பால்குடிக்கக் கூலி

டிக்கவேண்டுமோ? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுங்கள்; நம் இஸ்லாம் நேசனை இதுவரை நடத்திவந்தவர்கள் இன்னாரென்று தெரிந்து கொள்ளாமையால் இப்பத்திரிகையை ஆதரிக்கப் பின்வாங்குகிறீர்கள் போலும். இவர்கள், யாரோஒருவர் அநாமதேயமாக வெளிவந்து பத்திரிகை நடத்துவதாக நடித்து உங்கள் தனத்தைப்பறித்துக்கொண்டு மோசம் செய்துவிடுவார்களென்ற சந்தேகத்தால் தானே நீங்கள் பத்திரிகையை ஆதரிப்பதில்லை? உங்களுடைய சந்தாத்தொகையை எதிர்பார்க்கும் கனவான் இவர்கள் என்று நினைக்கவேண்டாம். சீதக்காதி மரைக்காயரும் இவர்களுக்கு ஈடில்லையென்று சொல்லும்படியானவர்கள். மார்க்கவிஷயத்துக்குச் செலவு செய்வதில் சிறிதும் பின்னிடாதவர்கள்; முஸ்லீம்களுக்கு ஒரு தாதா என்றே சொல்லவேண்டும்; இஸ்லாமார்க்கத்துக்காக வாழ்நாள் முழுதும் பாடுபடுபவர்கள்; சிறிதும் தளர்வில்லாமல் மதாபிமானத்தோடு முஸ்லீம்களின் நிலைமையை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று துவஜம் கட்டிக்கொண்டிருப்பவர்கள்; கல்விப்பொருள் செல்வப்பொருள் இரண்டும் ஒருங்கமையப் பெற்றவர்கள்; தென்னிந்தியா முஸ்லீம்களாகிய நம்மிடத்தில் இஸ்லாமார்க்கத்துக்குத்தக்க நற்குணநற்செய்கைகள் இருக்கவேண்டுமென்று பாடுபடுபவர்கள்; கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்கள். "ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மை இருநிலம்பிளக்க வேர்வீழ்க்கும்மே" என்றபடி நட்பிற்குச்சிறந்த பாத்திரம்; எப்பொழுதும் மார்க்கவிஷயத்தில் ஆராய்ச்சிசெய்வதையே ஊண் உறக்கம் என்று கருதியிருப்பவர்கள்; இவ்வளவு குணம் வாய்ந்த புருஷர்யார்? இவர்கள்தாம் திருநெல்வேலிப் பேட்டையில்வாழும் ஸ்ரீமான். உ. சி. ப. உ. சுல்தான் செய்யது அகமது இராவுத்தரவர்கள்.

இப்படிப்பட்ட ஒருகனவான், முன்வந்து உழைக்கும்போது நாம் ஏன் இன்னும் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. நாகரிகமென்னும் சூரியன், உச்சிக்குமேல் வந்தும் தென்னிந்தியா முஸ்லீம்கள் மட்டும் அறிவின்கதவைத் தாளிட்டுக்கொண்டு அஞ்ஞானாந்தகாரத்துக்குள் அழுந்திப் பொழுது புலர்ந்தது தெரியாமல் சொப்பனாவஸ்தையிலிருக்கிறார்கள். மேற்குறித்த தனவான், நம்மை ஒன்றும் செய்யச்சொல்லவில்லை; தங்களுக்குள்ள ஊக்கத்தை மற்றவர்கள் கெடுத்துவிடாமலிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறார்கள். பத்திரிகையை எல்லோரும் வாங்குவதால் தங்களுக்கு இலாபம்வருமென்னும் எண்ணம் அவர்களுக்கில்லை. அநேகர் பத்திரிகையை வாங்கிப்படித்தால் உலகத்துக்கு மிக்க நன்மையுண்டாவதோடு தங்களுடைய ஊக்கமும் தளர்வடையாமல் மேன் மேல் விருத்தியாக ஏது வுண்டாகுமென்று கருதுகிறார்கள். பத்திரிகையை எல்லோரும் ஆதரித்தாலன்றோ உழைப்பவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும்? அவர்களுடைய பெருந்தன்மையையும், தண்ணளியையும் என்னென்று சொல்லுவேன்? பத்திரிகையில் இலாபம் கிடைத்தாலும் அதையும் முஸ்லீம்களின் உபயோகத்துக்காகவே செலவு செய்யவேண்டுமென்று நினைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பேருபகாரி முன்வந்திருக்கும் போது இஸ்லாம் நேசனை நீங்களெல்லோரும் வாசிக்கவேண்டியது அவசியமென்று நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. அல்லாஹுத் தஆலாவின் காரியங்களில் உதவிபுரிவோருக்கு அல்லாஹுத் தஆலாவும் உதவிபுரிவான்.

ஹக்கீம், பா. முகம்மது அப்துல்லாசாயபு.
பத்திராதிபர்.

மரணத்தின் எல்லை.

பத்திராதிபரவர்களுக்கு.

ஐயா! இப்பத்திரிகைவாயிலாக நான் அடிக்கடி எழுதிவரும் நிருபங்களைப் பிரசுரித்து வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பூலோகத்தில் மனிதராய்ப் பிறந்தோர்கள் இறப்பதுவழக்கம்; அப்படி மரணத்தின் எல்லையைத் தாண்டிச்சென்றவர்களோடு இகலோகத்திலிருப்பவர்கள் சம்பாஷணைசெய்ய முடியுமா என்னும் விஷயத்தைப் பற்றிப் பண்டைக்கால முதல் ஆராய்ச்சி நடந்துவருகிறது. மரணமாகிய நதிக்கு ஒரு பாலம் போட்டு அதன் வழியே அப்பக்கத்திலுள்ளாரும் இப்பக்கத்திலுள்ளாரும் கலந்து கொள்ளமுடியுமா என்பதே அவ்வாராய்ச்சியின் நோக்கம். மரணத்துக்குப் பாலம் போடுவது எக்காலத்திலும் முடியாதகாரியமென்று எண்ணிறந்தோர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இறந்தவர்களோடு நாம் கலக்கமுடியும் என்று பண்டைக்காலமுதலே சிலர் வாதித்துவருகிறார்கள். இவர்களின் தொகை மிகக்குறைவானது. ஆயினும் இத்தகைய எண்ணமுள்ளவர்கள்தாம் புராதனகாலங்களில் மதங்களை ஸ்தாபித்திருக்கக்கூடும். அவர்களே வேதங்களையும் வகுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்திலுமுள்ள செத்தோரையழைக்கும் கிரியைகளில் நாம் கூறிய அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துதற்கு வேண்டிய அநேகங் கருமங்கள் செய்யப்பட்டுவரு

கின்றன. இறந்தநாளில் வருஷந்தோறும் செத்தோரைக்குறித்து அவர்களுடைய ஆத்துமாவின் திருப்திக்காக நாம் செய்யும் கருமங்களை உற்று நோக்குங்கால், நாம் அவர்களோடு நேரே கலக்கமுடியாவிடினும் அவர்களுடைய சூக்ஷுமதேகம் நம்மோடு கலந்து நாம் செய்யும் ஆகுதிகளை உண்டு திருப்தியடைகிறதென்பது செவ்வனே புலப்படும்; முஸ்லிம்கள் செத்தோரைக்குறித்து ஓதும் பாத்திஹா, அவர்களுடைய ஆத்துமாவுக்கு அமைதி யுண்டுபண்ணுகிறதென்று நம்புகிறார்கள். ஆகவே, இருபக்கத்திலுள்ளவர்களும் கலக்கிறார்கள்; நாம் அவர்களைக் காண்பதில்லை; அவர்கள் நம்மைக்காண்கிறார்கள்; அவர்கள் பேசுவதை நாம் கேட்பதில்லை; அவர்கள் நாம் பேசுவதைக் கேட்கிறார்கள்; பார்ப்பதும் கேட்பதும் அவர்கள் சூக்ஷுமதேகத்தால் செய்கிறார்கள்; நம்முடைய பார்வையும் கேள்வியும் ஸ்தூலதேகத்தில் நடைபெறுகின்றன. மரணபூமியை நாம் மிதிக்குமுன் நம்முடைய சூக்ஷுமதேகத்தால் பார்க்கவும் கேட்கவும் கற்றுக்கொண்டால், இறந்தவர்களோடு சம்பாஷிப்பது எளியகாரியமாகும்; ஸ்தூலதேகத்தோடு வாழும் மனிதர்களுள் சிலர்தாம் தம்பாலுள்ள சூக்ஷுமதேகத்தை எளிதில் பக்குவப்படுத்தமுடியும்; சூக்ஷுமதேகபக்குவத்தை எளிதில் பெறக்கூடிய மனிதர்களை வைத்துக்கொண்டு பொறுமையோடும் விடாமுயற்சியோடும் பரீக்ஷித்துவந்தால் இறந்த உயிர்களோடு சம்பாஷிப்பதை நாம் எளிதில் பெறலாம்; இதற்குரியபக்குவிகளை நாம் எவ்வாறுதெரிந்து கொள்ளக்கூடும்? ஒருவன் மரணமடைந்தால் அவனோடு சம்பாஷிக்கக்கூடியவர்கள், அவன் உயிரோடிருக்கும்போது அவன்மாட்டு அளவில்லா அன்புடையவர்களாகவும், இறந்தபின் அவனோடு சம்பாஷணைசெய்ய விருப்பமுள்ளவர்களாகவும், களங்கமற்ற மனமுடையவர்களாகவு மிருக்கவேண்டும். இறந்தவரோடு சம்பாஷணை செய்வதில் அவர்கள் சிறிதும் சந்தேகம் கொள்ளக்கூடாது. சம்பாஷணைசெய்யவேண்டுமென்னும் உறுதியுள்ளவர்களாகவுமிருக்கவேண்டும். நம்பிக்கையைக் கைவிட்டவர்களும் இறந்தோரைக்குறித்து வேறொரு வழியும் புலப்படாமல் துக்கசாகரத்தில் மூழ்குவோரும் இவ்வித்தைக்கு அருகராகார்.

மரணத்தால் பிரிக்கப்பட்ட நம்முடைய அன்பர்களிடமிருந்து ஒருவார்த்தையையேனுங் கேட்பதற்கு மிக்க ஆவலுடையவர்களாயிருக்கும் மனிதர்கள் ஏன் அதற்குத் தக்க முறையை அனுஷ்டிக்காமல் இறந்தோரைக்குறித்து எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கிறார்கள்? இறந்தவர்களோடு சம்பாஷிப்பதற்கு விருப்பம் மட்டும் போதாது. அந்த விருப்பத்தை முயற்சியிலும் காட்டவேண்டும்; அன்னது வேண்டும்,

இன்னது வேண்டும் என்று அநேகர் சொல்லுகிறார்கள். ஆனால், தமக்கு வேண்டியவற்றை அடையவாவது, எப்படி அடைவதென்று முயற்சி செய்யவாவது பின்வாங்கினால் அவர்களுடைய விருப்பம் விருப்பமாகாது; ஆனால் அவர்களுடைய விருப்பம் உண்மையான விருப்பமென்று எவ்வாறு தெரிந்துகொள்வது?

உண்மையான விருப்பம் பெறுவது முடியாதகாரியமன்று. மறு உலகத்தில் வசிப்பவரோடு சம்பாஷிக்க யாரேனும் விரும்பினால் அவர், அந்தச் சாஸ்திரத்தில் உழைத்துவரும் அறிஞர்களுடைய முறைகளைத் தெரிந்துகொண்டு அவற்றை அனுஷ்டிக்கவும் பிரயாசை யெடுக்க வேண்டும்.

ஜூலியா சங்கம்.

மாது ஜூலியா, எ. எம்ஸ் என்பவள், மறு உலகத்துக்குச் சென்று சிறிது காலத்துக்குப்பின், “இவ்வுலகத்தில் தங்களுடைய நெருங்கிய பந்துக்களை விட்டு நீங்கி மரணமடைந்திருக்கும் சூக்ஷுமதேகிகளையும், அவர்களின் இகலோக பந்துக்களையும் ஒருவரோடொருவர் பேசும்படிசெய்வது எளியகாரியம்” என்று ஆலோசனை சொன்னதன்மேல் ஜூலியாசங்கம் என்ற ஒரு கூட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவள் இறந்தபின் 1894-ம்௵த்தில் இவ்வாலோசனையை இகலோகத்திலுள்ள தன்னுடைய நண்பரிடம் தெரிவித்தாள். இவ்விஷயம் அவ்வருஷத்திலேயே “மரணத்தின் எல்லை” என்னும்பத்திரிகையில் வெளிவந்தது. பிறகு, “ஜூலியாவின் கடிதங்கள்” என்னும் புத்தகத்தில் அஃது எழுதப்பட்டிருக்கிறது. அம்மாது சொன்ன ஆலோசனையாவது:--

நான் மிகுந்த ஆவல்வைத்திருக்கும் ஒருவிஷயத்தில் நீர் ஏதேனும் உதவிபுரிய முடியுமோ என்று உம்மைக்கேட்கிறேன். பரலோகம் சென்றவர்கள் இகலோகத்திலுள்ள தம்முடைய அன்பர்களோடு கலந்து பேசுவதற்கு உரிய இடம் ஒன்று ஏற்படவேண்டுமென்று நான் அநேகங் காலமாக நினைத்திருந்தேன். இப்பொழுது இந்தப்பரலோகத்திலிருந்து இகலோகத்திலுள்ள உம்மோடு நான் பேச விரும்புவதுபோல் இங்கே இன்னும் எண்ணிறந்த சூக்ஷுமதேகிகள் தம் தம் நண்பர்களோடு பேச விருப்பங்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தங்களுடைய எண்ண

த்தை உலகத்திலுள்ளவர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு ஒருதுணைக்கருவி இல்லையென்று பரிதபிக்கிறார்கள். இஃதோர் வின்னியாசமான தோற்றமாயிருக்கிறது. உங்களுடைய உலகத்தில் மனிதர்கள் இறந்தவரைக்குறித்து மிக்கதுக்கத்தில் மூழ்கியிருக்கிறார்கள. அவர்கள் இறந்தோரைக்காண விரும்புகிறார்கள். எங்களுலகத்திலிருப்பவர்களும் உங்களோடு பேச முடியாமல் துக்கத்தில் மூழ்கியிருக்கிறார்கள். இவ்விருதிறத்தாரையும் ஒன்று படுத்துவதற்குச் செய்யவேண்டிய உபாயம் யாது ? அதன் பொருட்டு நாங்கள் செய்யவேண்டிய காரியம் ஒன்றுமில்லை; நீங்களே உதவிபுரியவேண்டும். ஆனால், எப்படி உதவிபுரிவதென்று நீங்கள் நினைக்கக்கூடும். அஃதோர் முடியாதகாரியமன்று. அதைச்செய்து முடித்துவிட்டால் மரணத்தின் துக்கமும், சவக்குழியின் துன்பமும் நீங்கிப்போம். ஏசுவின் சிஷ்யர்கள் மரணத்துன்பத்தை நீக்கிவிட்டதாக நினைத்தார்கள். ஆனால், மரணம் அவ்வளவு இலகுவில் தோல்வியடையவில்லை. மரணம் இன்னும் தன் தொழிலை நடத்திக்கொண்டேயிருக்கிறது. இதுவரையில் இறந்தோரும், இறவாதவரும் கலந்து சம்பாஷித்திருக்கிறார்களோ ? நாங்கள், உங்களைவிட்டு நீங்கவில்லையென்று நீங்கள் நினைத்தால் மட்டுமே நாமிருவரும் கலக்கக்கூடும்; உயிரோடிருப்பதைக்காட்டிலும் உங்களுக்கு அதிகசமீபத்தில் நாங்களிருக்கிறோம். நான் உயிரோடிருந்ததைக்காட்டிலும் இப்பொழுது உம்மீது அதிக அன்புபாராட்ட வில்லையா? நானும், நண்பரும் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது மிக்க நெருக்கமாக இருக்கிறோம். என் நண்பருக்கு அது தெரியாது. நீரும் என்னைத் தற்செயலாகக்கண்டிராவிடில் என்னைப்பற்றி அறிந்திருக்கமுடியாது.

இருபக்கத்தாரையும் சேர்க்கும் பொருட்டு ஒரு சங்கம் ஏற்படவேண்டும் ; இரண்டு மூன்று நம்பத்தக்க மனிதர்களை வைத்துக்கொண்டு ஒரு கூட்டத்தை உம்மால் ஏற்படுத்த முடியாதா? ஒரு முறையேனும் உலகத்திலுள்ளவர்கள் தம்முடைய இறந்த நண்பர்களின் ஆவி உயிரோடிருந்ததைக்காட்டிலும் தங்களுக்கு அதிகசமீபத்தில் வசிக்கிறதென்று தெரிந்துகொள்வார்களாயின் இவர்களுடைய துக்கமும் கண்ணீரும் குறைபடும். அப்படிப்பட்ட சங்கத்தை இவ்வுலகத்தாரெல்லோரும் எதிர்பார்க்கிறோம் என்னும் விஷயத்தில் நீர் பூரண நம்பிக்கையும் வைக்கலாம்.

இவ்விஷயம் நிறைவேறும் என்னும் எண்ணத்தில் நாங்களெல்லோரும் மிகுந்த சந்தோஷம் கொண்டிருக்கிறோம். எங்களுடைய நண்பர்கள் உலகத்தில் வேறுவழி புலப்படாமல் பிரலாபித்துக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய துக்கத்துக்குக் காரணமாகிய நாங்களும் அவர்களுக்குப் பக்கத்தில் உலாவிக்கொண்டிருக்கும் விஷயத்தை அவர்களுக்குத்தெரிவிக்கமுடியாமல் தியங்கிக்கொண்டிருப்பதை நோக்குங்கால் எங்களுக்கு அளவிறந்த துக்கமுண்டாகிறது. உலகத்தில் அநேகர் தங்களுடைய இறந்துபோன நண்பர்கள் நரகத்தில் வீழ்ந்திருக்கக்கூடுமென்று துக்கித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் கடவுளுடைய கருணையின்கீழ் வசிக்கிறார்கள். அருமைவாய்ந்த **எல்லனே** நீர் **மினர்வா** என்பவரோடு கலந்து யோசித்து இதற்கு இன்னது செய்யலாமென்று தீர்மானம் செய்வீராக. செய்யவேண்டிய காரியங்களுள் இதுதான் முதன்மையானது. இது நிறைவேறிவிட்டால் இறந்தவர்களுடைய ஆவியெல்லாம் வெளிப்புறப்பட்டு மனிதரோடு உலாவ ஆரம்பிக்கும்.

இங்குள்ள சூக்ஷ்மதேகிகள் உலகத்தவரோடு கலக்கும் எண்ணத்தில் இவ்வளவு விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்களென்று தெரிந்துகொண்டபோது நான் மிக்க வியப்படைந்தேன். அஃதிப்பொழுது சகசமாகத்தோன்றுகிறது. உம்மையும், உம்மைச்சேர்ந்தவர்களையும் நான் இவ்வளவு நேசிக்கும்போது மற்ற ஆவிகளும் இவ்வாறு நேசிப்பது ஓர் ஆச்சரியமன்று. இச்சங்கம் ஏற்பட்டால் இன்னும் ஒரு முக்கியமானகாரியம் நிலைபெறும். இதனால் உலகத்தில் ஒரு பெரும் பிறழ்ச்சி உண்டாகுமென்றும், அப்பொழுது ஆத்மாவின் உண்மை எல்லோருக்கும் விளங்குமென்றும், இவ்வாறு முயற்சிசெய்வது ஆத்மாவின் உண்மையைக்கண்டுபிடிப்பதற்காகவே யென்றும், ஆத்மாவின் என்றுமழியாத்தன்மையை அறிந்துகொள்ள ஏதுவுண்டாகுமென்றும், எல்லாம் வல்ல இறைவன் எப்பொழுதும் நமக்கருகில் இருக்கிறானென்று தெரிந்துகொள்ள ஒருவழி ஏற்படுமென்றும் இப்பக்கத்திலுள்ள என்னுடைய நண்பர்களாகிய அநேகம் சூக்ஷ்மதேகிகள் சொல்லுகிறார்கள்.

ஜூலியா.

மறுபிறப்பு.

(107-ம் பக்கத் தொடர்ச்சி,)

ஐந்தாவது:—எல்லா மனிதர்களுக்கும் சமமான புத்திசாலித்தனம் இருப்பதில்லை. சிலர் சுபாவமாகவே சாமர்த்தியமுள்ளவர்களாகவும், சிலர் சுபாவத்திலேயே மந்தமதி யுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். மேதாவிக்கும் அசடனுக்கும் உள்ள வித்தியாசம் சந்தேகமறத் தெரிகின்றது. ஆயினும், சகோதரர்களே! நம்மில் ஒவ்வொருவனும் அவனவனுக்கு அருளப்பட்ட புத்திசாலித்தனத்தையும் சாமர்த்தியத்தையும் உபயோகப்படுத்தின விதத்தைத் தெரியப்படுத்த வேண்டியதற்காகப் பரமதயாளுவான இறைவனுடைய நியாயத்தீர்மானப் பீடத்தின் முன்னர் நிற்கவேண்டிய காலம் வரும்போது, மேலிருந்து அருளப்பட்ட ஞானத்தின்படி நடந்தொழுகாமலிருந்த சாமர்த்தியவானைக் காட்டிலும் அசடனுடைய பாடே உண்மையில் பன்மடங்கு மேலானதாக விருக்குமென்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; அறிவுவிஷயத்தில் மேலோங்கியிருப்பவர்கள் சன்மார்க்க விஷயத்தில் குன்றியவராகவும் அதனால், மூடர்களைக் காட்டிலும் தாழ்ந்தவராகவும் இருப்பது சகசம். சாமர்த்தியசாலியைப் போலத் தானும் இம்மையிலாவது மறுமையிலாவது கடுமையாக விசாரணை செய்யப்படுவானென்று ஏழை மதியுள்ளவன் பயப்படக் காரணமில்லை. ஞானமென்பது அபார சக்திதான். ஆனால் அது துர்விநியோகப் படுத்தப்பட்டால் அக்ஞானத்தைக் காட்டிலும் பன்மடங்கு தாழ்ந்த நிலைமையுள்ளதாகின்றது.

ஆறாவது:—குருடாகவோ, செவிடாகவோ, ஊமையாகவோ, அல்லது வேறேதேனுமோர் அங்கப்பழுதுடனாகவோ பிறப்பது சந்தேகமில்லாமலே ஒரு பெரும் துர்ப்பாக்கியந்தான்; ஆயினும் அத்துர்ப்பாக்கியம் வேறு நற்குணங்களால் மாற்றிக்கொள்ளக் கூடியதாகின்றது. வெளிப்பார்வைக்கு ஊனக்கண்களையுடைய மனிதர்களின் சக்திகளைக் காட்டிலும் அதிதீக்ஷண்யமான மானஸ சக்திகளைத் தயாபரனான கடவுள் குருடனிடத்து அமைத்துவைத்திருக்கக் கூடுமென்பதை யார் அறிவார்? பெரும் புகழ்பெற்ற கவிச்சிரேஷ்டர்களில் சிலர் குருடர்களாக விருந்திருக்கின்றனர். பிரம்மஸமாஜத்தின் பிரதான குருவான சுத்தாத்மா மகர்ஷி தேவேந்திர நாதர் தமக்குக் கண்ணும் காதும் போனதைப் பற்றிக் கடவுளிடம் விசேஷ நன்றியறிதலைக் காட்டுவாராயினர். மனிதர்களைத் தம் வசப்படுத்தக்கூடிய உலகவிஷயங்களுக்கு அவர் இறந்தவர்போலாயினமையின், மனத்தை ஒருமைப்படுத்தி, இந்திரியங்கள் இருந்தால் எவ்வளவு செய்திருக்கக் கூடுமோ அதைக்காட்டிலும் எளிதிலேயே கடவுளைக் காண்பதற்கும் கேட்பதற்கும் தமக்குச் சக்தியுண்டாயிற்றென்று அவர் மனப்பூர்வமாகக் கூறுகின்றார்.

இவ்வாறு கூறுவதனால் கட்பார்வையாகிய பெரும் பாக்கியத்தை நான் குறைந்த மதிப்புள்ள தாக்குகிறேனென்று நீங்கள் ஒருபோதும் எண்ணக் கூடாது. ஆனால் அருமையிலும் அருமையான இரண்டொருவரிடத்துத் தவிர, நமது சரீரத்திலுள்ள பெரும் ஜோதிப்பொருளான ஊனக்கண் என்னும் பெரும்பேறு, பரமதயாளுவான கடவுளால் ஆத்மாவைப் பிரகாசமாக்குவதற்கென்றே நமக்கு அருளப்பட்டிருக்க, அஃது அவ்வாறு தன் காரியத்தைச் செய்யாமல், ஆத்மா வாழப் பெறும் உட்பிரதேசங்களை இருட்டாக்கியிருக்கின்றது என்பதை நம்முடைய பாபவாழ்க்கைகள் காட்டுகின்றன. ஊனக்கண் குருடாகப்போவது பெருந்துன்பமென்பதில் சந்தேகமில்லை; ஆயினும் சன்மார்க்கக் குருட்டுத்தனத்தோடு அதைச் சீர் தூக்கிப் பார்த்தால் ஒரு நற்பாக்கியமாகவே தோன்றும். மீட்கமுடியாததான ஞானக்கண் குருட்டையும் ஊனக்கண் குருட்டையும் ஒப்பிடுவோமானால் பின்னது வெகு அற்பமான விஷயம் என்பது தெரியும்; மனிதர்களுடைய குழந்தைகள் செய்யும் அக்கிரமங்களின் காரணங்களை விசாரிப்போமானால், உண்மையிலேயே பாபங்களில் பாதி அசுத்தமான காமப்பார்வையினா லுண்டானதாகத் தெரியும். எனது நண்பர்களே! குருடாகப்பிறப்பது பெரும் துன்பமா? அல்லது பாபக் கண்ணால் இறந்து நரகத்தில் புகுவது பெருந்துன்பமா? என்பதை எனக்குச் சொல்லுங்கள்.

சரீர சுகதுக்கங்கள், ஆத்ம சுகதுக்கங்கள், இவைகளினுடைய காரணங்கள் பலவகைகளாகவும், அளவிலும் தன்மையிலும் பல விதங்களாகவும் இருக்கையில், வெளித்தோற்றத்தை மட்டும் கொண்டே எதாவது ஒரு வகுப்பைப்பற்றிச் சிலாகித்துத் தீர்மானம் செய்யக்கூடிய பதவியில் யார் இருக்கின்றனர்?

மானிட துக்கத்தையும் துன்பத்தையும் பற்றிய விசாரணையில், உண்மைக்காக உயிரைக்கொடுத்த தனக்கெனவாழாத் தகைமையாளனுடைய வாழ்க்கையைக் காட்டிலும் அதிகமாகத் தெளிவைக் கொடுக்கக் கூடியது வேறொன்றுமில்லையென்று தோன்றுகின்றது. ஐயோ! உலக

த்துக்கு நன்மையைச் செய்த சீரியோர்கள் துரோகிகளைப் போல மரணமடைந்தது எவ்வளவு தரம்! ஆயினும் அவ்வித மரணந்தான் துன்பத்தின் ரகஸ்யத்தைத் தெரிவித்து, பாபத்தில் அழுந்திக் கிடப்போர்க்குப் புதிய வாழ்க்கையைக் கொடுக்கின்றது. தெய்வீக தர்மமான தனக்கென வாழாத்தன்மையின் விளம்பரமாகிய சிலுவையில்தான் உலகத்தின் விமோசனம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நம்முடைய அறிவுக்கு எட்டாமல் மறைந்திருக்கும் தெய்வீகச் செய்தியின் காரண காரியங்களைப் பற்றிக் கேட்கப்புகுவது, உலகத்தில் புழுப்போல விருக்கும் மனிதனிடத்துள்ள அதிகப் பிரஸங்கங்களில் முதன்மையான தாகும். இவ்வாறு பயபக்தியில்லாமல் ஆராய்ச்சி செய்யப்புகும் எண்ணந்தான், இன்று பேசுவதாக எடுத்துக்கொண்ட மார்க்கக் கொள்கையைப் போன்ற மனோகற்பிதமான கொள்கைகள் ஏற்படுவதற்கு இடந்தருகின்றது. வாணாளின் தீமைகள், அதன் துன்பங்கள், துக்கங்கள், துயரமும் வாதையுமான அனுபவங்கள் ஆகிய இவையெல்லாம், மார்க்கமென்னும் தீபவொளியினுதவியைக் கொண்டு நோக்கப்படும்போது, மனிதனுடைய ஆத்மாவின் கல்விஞானாபி விருத்தியின் பொருட்டுப் பரமதயாளுவான கடவுளால் அனுப்பப்பட்ட கிருபாகுணத்தின் பலவிதத்தோற்றங்களெனவும், அவைகள் கடவுளுடைய அன்புநிறைந்த தேவதூதர்களைப் போலாமெனவும், மேற்கூறிய சமாதானங்கள், கேவலம் உலகவிஷயத்திலேயே எப்போதும் நாட்டத்தை யுடையராகவிராமல், ஆத்மவிஷயங்களில் ஆழ்ந்துபார்க்கும் கண்ணையுடையராயும், புறச்சமய விஷயத்தில் துரபிமானத்தினாலும் ஸ்வமதாபிமானத்தினாலும் பந்தப்படாதவராயும் இருக்கும் மதியூகிகள் எல்லோரையும் இணங்கச்செய்யுமென்று நாம் நம்புகிறோம். இன்னும் இதற்கெதிராக, உலகத்தில் சிறந்த பொருள்களெனக் கொண்டாடப்படுபவைகள்; அதன் கவுரவங்கள், அரசபோகங்கள், மகோன்னதமான பதவிகள், அதன்செல்வம், அச்செல்வத்தால் பெறக்கூடிய எல்லாவித இன்பங்கள் ஆகிய இவையெல்லாம் நியாயமானபடி உபயோகப்படுத்தப் படாவிட்டால், பற்பல செங்குத்தான மலைச்சிகரங்களெனவும், அச்சிகரங்களிலிருந்து அநேக ஆத்மாக்கள் மனத்தினால் எவ்வளவு கேவலமாக நினைக்கக்கூடுமோ அவ்வளவு தாழ்மையான ஆத்மக்ஷீணமாகிய பெரும் பள்ளங்களில் எளிதில் விழுந்துவிட்டன வெனவும் போதரும். சர்வஜ்ஞான கடவுளின் எண்ணத்தை நாம் பூர்ணமாக அறியமாட்டோம். அவனுக்கு மிகவும் கீழ்ப்படிந்து அவனிடம் அத்தியந்த பயபக்தியுடனிருந்த இயேசுகிரிஸ்து, ஸாக்ரட்டீஸ் போன்ற ஊழியர்களுடைய துன்பங்களை ஏன் அக்கடவுள் நிவிருத்திக்கச் சித்தங்கொள்ளவில்லை யென்பது நம்மால் சொல்லமுடியாது. ஆனால், உலகிலுள்ள பெரிய ஜனஸமூகங்களிடையே இம்மகான்கள் பெற்றிருந்த செல்வாக்கின் பெரும் ரகஸ்யமெல்லாம் இவ்விதத் துன்ப அனுபவத்தில் தான் அடங்கியுள்ளது.

சர்வதயாபரனான கடவுளின் சிருஷ்டியில் வாதை, துன்பம், துக்கம், பிணி முதலியவை இருப்பது பலபேர்க்கு விரித்துரைக்க வியலாததான பிரஸ்னம் என்று தோன்றுகின்றது. தீமைசெய்பவன் துயரடைவது எளிதில் விளங்கக்கூடிய விஷயமே. அவனுடைய மூர்க்கமான பிடிவாதமே அவன் துன்பத்துக்குக் காரணமாகின்றது. அவன் படும் வாதையெல்லாம் அவனுடைய துர்க்காரியங்களின் பயனைத்தவிர வேறில்லை. ஆனால் நிரபராதிகள் ஏன் துயரடையவேண்டும்? இவ்விஷயத்தில் தெளிவான ஞானமில்லாததுதான் உண்மையை நாடும் ஆத்மாக்களில் அநேகம் கெட்டுப்போனதற்குக் காரணமாகவுள்ளது. சன்மார்க்கம் முள்ளும், புதரும் நிறைந்த பாதையாக விருப்பதும், இதற்கு மாறான துன்மார்க்கம் ஒழுங்காகவும் சமனாகவும் இருப்பதும் ஏனென்று இவர்களுக்குப் போதப்படுவதில்லை.

இவ்வித ரகஸ்ய விஷயத்தில் இயேசு கிரிஸ்து காட்டிய தெளிவு எவ்வளவு! துன்ப அனுபவங்களெல்லாம் மனிதனுடைய செய்கையின் காரணமாக மாட்டாதென்றும், அவை கடவுளாலேயே அனுப்பப்பட்டவையென்றும், ஆதலால் மனிதன் அவைகளைச் சந்தோஷத்தோடு அனுபவிக்கத்தான் வேண்டுமென்றும் உள்ள விஷயத்துக்கு இயேசுகிரிஸ்து சாட்சியமாக விருக்கிறார். துன்ப அனுபவம் அவசியமானது; ஆதலின் நிவர்த்திக்கக் கூடாததாகின்றது. அதற்குத் தெய்வீகம் வாய்ந்த காரியம் ஒன்றுண்டு. உண்மையிலேயே பரிசுத்தவாதையில் கடவுளுடைய பூர்ணமான அன்பு குடிகொண்டிருக்கிறது. அவ்வன்பு வாதைப்படுவோனுக்கும், அவனுடை வாதையில் சேர்வோருக்கும் உரித்து. சிலுவையானது கிரிஸ்துவ விளம்பரத்தின் சாராம்சமில்லையா? இருந்தாலும் சிலுவையில் அறையப்படுவதைக் காட்டிலும் அதிக வாதையைத் தருவது வேறு ஏதேனும் உண்டா? பரமதயாளுவான பிதா நிரபராதியும் நிஷ்களங்கருமான தமது ஒரே மகனை, துரோகிக் கொப்பந்தம் அவமானமும் திகிலும் உண்டாக்கத்தக்கதோர் மரணத்தை யடையும்படி தியாகம்செய்தது மனிதகோடிகளிடம் அவனுக்குள்ள அத்தியந்த அன்பையும் இரக்கத்தையும் தெரிவிக்கின்றவோர் தெய்வீகச்சூழ்ச்சி! இஃது ஆச்சரியமான விளம்பரம்! இவ்விஷயம் மானிட புத்திக்கு எட்டாததாக விருக்கிற

து. அந்தோ! உலகத்தார்க்கு அது யாதொரு திருப்தியையும் கொடுக்கிறதில்லை. ஏனெனின் உலகமார்க்கங்கள் கடவுளுடைய மார்க்கங்கள் அல்ல; ஆதலால், இவ்விளம்பரம் ஏற்கனவே மறைபொருளாக விருக்கும் பிரஸனத்தை இன்னும் மாயமுள்ள தாக்கி மதிமயக்கத்தை இருமடங்கு மயக்கமுள்ள தாக்குகின்றது.

(இன்னும் வரும்.)

ஜலாலுத்தீன்.

நாயகமான்மியம்.

இத்தொடர், நாயகர் + மான்மியம் என்று பிரியும். "சிலவிகாரமாமுயர்திணை" என்றவிதிப்படி நாயகமான்மியம் எனப் புணரும்; நாயகர்–தலைவர், மான்மியம்–மகாத்மியம்; ஆகவே தலைவருடைய பெருமைஎனப் பொருள்படும்.} இத்தொடர் காரணவிடுகுறியாய்ப் பரமாசாரியராகிய நம்முடைய நாயகசிகாமணி யவர்களின் சரித்திரத்தைக் குறிக்கும். நாயகம்மான்மியம் எனப் பிரித்தால், நாயகம் என்னும் பதம் பண்பாகுபெயராய் நம்முடைய நபிகள் நாயகத்தைக் குறிக்கும்.

பூவுலகத்தின்கண் பண்டைக்கால முதல் திருவவதாரம் பூண்டிருக்கும் மகோன்னத மதபோதகர்களுள் நம்முடைய நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஒருவர்மட்டுமே சரித்திர ஆதாரம் காட்டும்படி மனிதராய்த் தோன்றியிருக்கிறார்கள் என்று சரித ஆசிரியர்கள் தலைக்கட்டியிருக்கிறார்கள்; மற்ற மதபோதகர்களின் தோற்றம் தேசசரித்திரங்களிற் காணப்படுவதில்லை. புராணங்களில் மட்டும் அவர்களுடைய தோற்றம் சொல்லப்பட்டிருக்கிறது. தேசசரித்திரத்தின் ஆதாரத்தை வைத்துக்கொண்டு அவர்களுடைய உண்மையை உறுதிப்படுத்துதல் முடியாத காரியமாகும். என்சைக்குளோ பொய்டியா பிரிட்டானிகா என்னும் ஆங்கில நூலின் முதற்பதிப்பில் கிறிஸ்து உலகத்தில் அவதரித்ததைப்பற்றி ஒன்றும் காணப்படவில்லை. இவ்வாறே வேறு மத ஆசிரியர்களும் அந்த அந்த தேசசரித்திரத்திற் கூறப்படவில்லை. சரித்திர ஆதாரத்தோடு நம்முடைய திருத்தூதரின் அவதாரத்தை உறுதிப்படுத்துதல் சாலும். பரமாசாரியரைப்பற்றி அவர்களுடைய காலத்தில் உண்டாயிருந்த சரித்திரத்தைப் பின்னுள்ளோர் மாற்றுவதும், இல்லாத கட்டுக்கதைகளை அதில் சேர்ப்பதும் முடியாதகாரியம் என்று அநேகர் அபிப்பிராயங் கொண்டிருந்தபோதிலும், அந்த உயர்தர அரபியவர்களின் தலையில் அநேகர் அளவிறந்த பொய்க்கதைகளைக் கட்டி ஏற்றிவிட்டு, அவர்கள் உண்மையான மனிதப் பிறவியில் ஒருவர் அல்லரோ என்று நாமெல்லோரும் சந்தேகிக்கும்படி கட்டுக்கதையாகிய அந்தகாரத்தில் அவர்களை அமிழ்த்திவிட்டார்கள். உள்ளதை உள்ளபடி உணர்த்துவது சரித்திரமாயிருக்க இவர்களுடைய சரித்திரத்தை மட்டும் பொய்க்கதையாக்கி விட்ட பொறாமைக்காரர் அநேகர்; தேசசரித்திரமாகிய தீபத்தை ஏற்றிக்கொண்டு உண்மையென்னும் சுரங்கத்துள் நுழைந்து பார்த்தால் நம்முடைய பரமாசாரியரே இவ்வுலகத்தில் முதன் முதல் மதவொற்றுமையை ஏற்படுத்தினவர்கள் என்பது தெளிவாக விளங்கும். மனிதவர்க்கத்துள் ஜாதி வேற்றுமையும், மதவேற்றுமையும் இருக்கக்கூடாதென்று ஏகசகோதரத்துவம் என்னும் மார்க்கத்தை உடதேசித்தவர்கள் இவர்களே; இவர்கள்தாம், மனிதனுடையகடமை இன்னதென்றும், அவன் சன்மார்க்கத்தில் ஒழுகுதற்கு வேண்டிய முறைகள் இன்ன இன்னவென்றும் வரையறுத்துக்காட்டி யிருக்கிறார்கள். பெண்களை ஆடவர் உயர்வாக நடத்தவேண்டுமென்றும், எல்லா ஜீவான்மாக்களிடத்தும் அன்பும் அருளும் பாராட்டவேண்டுமென்றும் கற்பித்தவர்கள் இவர்களன்றி வேறுயார்? தருமத்தின் இலக்கணத்தை உறுதிப்படுத்தினவர்களும் இவர்களே; இவர்களுடைய உண்மை விளங்காமையால், இந்த மகோபகாரி யவர்களை அநேகர் நிந்திக்கத் தலைப்பட்டனர்.

இனி நாம் எழுதிவரும் இவர்களுடைய சரித்திரத்தில் மகிமைவாய்ந்த பேராசிரியர்களால் எழுதப்பட்டிருக்கும் சரித்திரங்களை ஒப்பிட்டு உண்மையான விஷயங்களை மட்டும் வெளிப்படுத்துவோம்; இதில் அவர்களுடைய மகாத்மியம் எல்லாவற்றையும் வெளிப்படுத்துவது இயலாத காரியமாயினும் அவர்களைப்பற்றி அநேகர் கொண்டிருக்கும் தப்பெண்ணங்களை இது மாற்றுமென்று ஒருவாறு எண்ணுகிறோம்.

" 'உங்களைப்போல் உண்மையில் நான்ஒருமனிதனே, உங்களுடைய இறைவன் ஒரே ஒரு கடவுள் என்னும் விஷயம் எனக்குத்தான் விளக்கப்பட்டிருக்கிறது' என்று நீர்சொல்லும்:"

"தன் இறைவனைக் காணவிரும்பும் ஒருவன் நன்மையைச் செய்யவேண்டும்; தன் இறைவனைத்தவிர வேறொருவரையும் பூஜிப்பதற்கு முயலக்கூடாது." (குரானேஷரீப்) 18-110, 111.

அத்தியாயம்-1.

அரபுநாடும் அரபிகளும்.

நபிகள் நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களின் ஜீவியசரித்திரத்தின் உண்மையை அறியப்புகுமுன் அவர்கள் இவ்வுலகத்தில் அடைந்திருக்கும் வெற்றி இத்தன்மைத்தென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் அவர்கள் திருவவதாரம் செய்தநாடு, அங்கு அவர்கள் காலத்துக்கு முன்னுள்ள மதக்கொள்கை, அரசுநிலை ஒழுக்கு முதலியவற்றைப்பற்றி நாம் சிறிது தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். பூர்வகாலமுதல் கி. பி. ஏழாவது நூற்றாண்டு வரையிலுள்ள அநேகந் தலைமுறை காலம்வரையில் ஆசியாகண்டத்தின் தென்மேற்கு மூலையில், மேற்கில் செங்கடலாலும், தெற்கில் இந்துமகா சமுத்திரத்தாலும், கிழக்கில்பாரஸீகக்குடாக்கடல், உமான்குடாக்கடல் இவற்றாலும் சூழப்பட்டு வடக்கில் பாபிலோனியா, சிரியா இந்நாடுகள்வரையில் அகன்றிருக்கும் தேசமாகிய * அரபுநாடுமட்டும், ஆசியாவின் மேல்பாகமும், ஆபிரிக்கா, ஐரோப்பா கண்டங்களின் மத்தியபாகமும் அநேகம் மாறுதல்கள் அடைந்துவரும்போது, சலனமில்லாமல் ஒரு தன்மைப்பட்டதாயிருந்தது. இராச்சியங்களும், தேசங்களும் புதிதுபுதிதாகத் தோன்றி அழிந்துகொண்டிருந்தன. பழைய இராஜபரம்பரைகள் மறைந்தும், புதியபரம்பரைகள் தோன்றியும்வந்தன. தேசங்களின் எல்லைகளும், பெயர்களும் மாறிக்கொண்டிருந்தன. தேசவாசிகள் அடியோடு அழிக்கப்பட்டும், அடிமைகளாக ஆக்கப்பட்டும் வந்தார்கள். அரபுநாட்டைச் சூழ்ந்துள்ள எல்லை நாடுகளில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்த போதிலும் இந்நாடுமட்டும் அசைவற்றிருந்தது. இந்நாட்டிலுள்ளாரும் அங்குமிங்கும் பிரயாணம் செய்துகொண்டு தங்களுடைய கெம்பீரமான தோள்களை அடிமையென்னும் நுகத்தடியின் கீழ் செலுத்தாமல் பழையகால ஒழுக்கவழக்கங்களையே அனுசரித்தவர்களாய்ச் சுயேச்சையோடு வாழ்ந்துவந்தார்கள்.

ஆனால், பரமாசாரியரவர்கள் திருவவதாரஞ் செய்யும்போது அரபுநாட்டின் பெரும்பாகம் வேறுதேசமன்னரின் கீழ் இருந்தது. சிரியாநாட்டிலுள்ள அநேகம் பகுதிகள் குஸ்துன்துன்யா நகரத்துச் சக்கரவர்த்தியின் கீழிருந்தன. பாரஸீகத்தின் எல்லையிலுள்ள பகுதிகளைப் பாரஸீகத்திலிருந்த குஸ்ரவ் வம்சத்தார் ஆண்டுவந்தார்கள். செங்கடலுக்கும் மக்கமாநகரின் தெற்குப் பகுதிக்கும் இடையிலுள்ள கடற்கரைப்பாகங்கள் அபிசீனியாவிலுள்ள கிரிஸ்தவ அரசரது ஆட்சியின் கீழிருந்தன. ஆனால் "அரண்" என்று பொருள்படும் ஹிஜாஜ் மாகாணம் மட்டும் அந்நியநாட்டார் வசம் அகப்படாமல் தப்பித்துக்கொண்டுவந்தது. உலகத்தையெல்லாம் ஒருகுடைக்கீழ் ஆளவேண்டுமென்று பேரவாக்கொண்டிருந்த மன்னர்களாலும் இம்மாகாணம் பிடிபடவில்லை. இம்மாகாணத்தின் சமவெளியிலேதான் நம்முடைய முதலாசிரியரின் திருவவதாரஸ்தலமாகிய மக்கமாநகரும், இஸ்லாமார்க்கத்தை வளர்த்த மதினமாநகரும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அரபிகள், தங்களுடைய பூர்வபரம்பரை அநேகமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து தொடர்ந்துவருவதாகச் சொல்லுவார்கள். பூர்வகாலத்தில் உண்டான மகாவெள்ளத்துக்குப்பின் நூஹ் அலைகிஸ்ஸலாம் அவர்களின் புத்திரரான ஷாம் அலைகிஸ்ஸலாம் பரம்பரையினின்று அரபிகளின் முக்கியவர்க்கமாகிய ஆதைத்து, தாமூதைத்து என்னும் பரம்பரையார் உண்டானார்களென்று கர்ணபரம்பரையான சரித்திரம் வழங்குகிறது. இந்தப் பூர்வ வர்க்கத்தாரெல்லோரும் தங்களுடைய பாவமிகுதியால் அழிக்கப்பட்டுவிட்டார்கள். குரானேஷரீபில் காணப்படும் சிலவாக்கியங்களல்லாமல் வேறுவித ஆதாரம் இச்சரித்திரத்தைப்பற்றி அகப்படவில்லை. இவர்களைக் கீழ்தேச சரித்திரங்களில் "பூர்வ அரபிகள்" என்று வழங்குவார்கள்.

ஷாம் அலைகிஸ்ஸலாம் அவர்களின் காலத்துக்குப்பின் நாலாவது தலைமுறையினின்று உதித்தவர்களே இக்கால அரபிகளாவார். இப்பரம்பரையார் தெற்கிலும், மேற்கிலும் சென்று பரவினார்கள். அவர்களில் யரப் என்னும் பெயருள்ள ஒருவர், எமன் தேசத்தை நிலைநிறுத்தினார். இவருடைய பெயரால் அந்நாடு அரப் என்று பெயர் பெற்றதென்றும், அத்தேசத்தார் அரபிகளென்று வழங்கப்பட்டார்களென்றும் ஒரு சரித்திரம் காணப்படுகிறது. ஜர்ஹாம் என்னும் வேறொருவர் ஹிஜாஜ் நாட்டை நிலைபெறச் செய்தார். அவர் வம்ஸத்தார் அந்நாட்டில் அநேகந் தலைமுறை ஆண்டுவந்தார்கள். இப்ராஹீம் அலைகிஸ்ஸலாம் அவர்களைவிட்டு நீங்கிவந்த பீவிஹாஜரான், அவர்களும் இஸ்மாயீல் அலைகிஸ்ஸலாமவர்களும் ஹிஜாஜ் அரசபரம்பரையில்தான்வந்து அடைக்கலம்புகுந்தார்கள்;

---

* அரபா—பாலைநிலம், வெறுநிலம். அந்நாடுமுழுதும் பாலைநிலமானதால் இப்பெயர் பெறுவதாயிற்றென்பர்.

சிறிதுகாலம் சென்றபின் ஜர்ஹாம்வம்சத்திலுள்ள முதந் என்றும் மன்னருடைய குமாரியை இஸ்மாயீல் அலைகிஸ்ஸலாம் மணந்துகொண்டார்கள்.

பாலைநிலங்களில் கூடாரங்களில் வசிக்கும் அரபிகள், பட்டணங்களில் வீடாரங்களில் வசிக்கும் அரபிகள் என அவர்கள் இருவகைப்படுவர். இவ்விருதிறத்தாருக்கும் இடையில் எப்பொழுதும் பகைமையே குடிகொண்டிருக்கும்; பட்டணங்களில் வசிப்போர் சேர்த்தியான விளைநிலங்களை வைத்துக்கொண்டு அங்கங்கே மாளிகைகளைக் கட்டிக்கொண்டு வசிப்பார்கள்; அவர்கள் வீட்டைச்சுற்றித் திராக்ஷைத் தோட்டங்களும், பூம்பொழில்களும், பேரீச்சமரத் தோப்புக்களும், நன்செய் நிலங்களும் நிறைந்திருக்கும். அவர்கள் ஆடு மாடுகளைமேய்த்துக்கொண்டு உழுதொழில் செய்துவருவார்கள்.

இவ்வர்க்கத்தைச்சேர்ந்த மற்றவர்கள், செங்கடல் துறைமுகப் பட்டினங்களில் வியாபாரம் செய்வார்கள். அரபுநாட்டின் தெற்கிலுள்ள பாரஸீகக் குடாக்கடலோரத்திலும், கப்பல்வியாபாரிகள் வசிப்பார்கள். எமன் நாட்டிலுள்ள அரபிகளெல்லாம் வாணிபர்களே? இங்கே வாசனைப்பண்டங்கள் மிகுதியாக விற்பனைசெய்யப்படும். புலவர்கள், இப்பாகத்தைச் சபியா என்று அழைப்பார்கள். கீழ்தேசத்து வியாபாரிகளில் இவர்கள்தாம் மிக்க ஊக்கமுடையவர்கள். இந்தியா, ஆபிரிக்கா முதலியவிடங்களிலிருந்து தங்கம் வாசனைப்பண்டம் முதலிய விலை உயர்ந்த சாமான்களும், ஆபிரிக்காவிலுள்ள பர்பேராதேசத்திலிருந்து கஸ்தூரியும் அரபியாவுக்குக் கப்பல் மார்க்கமாகவரும். இப்பண்டங்களெல்லாம் ஒட்டகத்தில் பொதியாக ஏற்றி உள்நாடுகளுக்கு அனுப்பப்படும். மத்தியதரைக்கடலின் வழியாக மேல்நாடுகளுக்கும் இவை ஏற்றுமதி செய்யப்படும். இந்தவாணிபர்களுக்கு வேண்டிய எண்ணிறந்த ஒட்டகங்கள் கூடாரத்தில் வசித்து ஊரூராகத்திரியும் அரபிகளிடத்தில் கிடைக்கும்.

நகரங்களிலும் பட்டணங்களிலும் உழுதொழில் செய்துகொண்டும், வியாபாரம் நடத்திக்கொண்டும் வசிக்கும் அரபிகள் உண்மையான அரபிகளல்லரென்று சரித்திரம் கூறுகிறது. தங்களுடைய நிரந்தரவாசத்தாலும், வாணிபத்தின் அமைதியாலும் இவர்கள், தங்களுடைய உண்மையான இயற்கையை மறந்துவிட்டார்கள். இக்காரணத்தாற்றான் எமன் தேசத்தை அயல் நாட்டார் அடிக்கடி கைப்பற்றிக்கொண்டிருந்தார்கள். பகைவரைவெல்வது இவர்களால் முடியாமற் போயிற்று.

இவர்களைக் காட்டிலும் கூடாரங்களில் வசிக்கும் அரபிகளே தொகையில் மிகுந்தவர்கள்; ஊரூராக அலையும் இவர்களிடத்திற்றான் அத்தேசத்தாரின் புராதன இயற்கை எப்பொழுதும் காணப்பட்டு வந்தது. ஒட்டகம், குதிரை ஆகியமிருகங்களும், ஆண், பெண் அடிமைகளும் அவர்களுக்குரிய செல்வம்; பாலைவனங்களில் புல், பேரீச்சமரநிழல், கிணறுகள் முதலியவை காணப்படக்கூடிய இடங்களை இவர்கள் தேடிச்செல்வார்கள். அங்குள்ள புல் ஒழிந்தவுடன் வேற்றிடத்தை நாடிப் புறப்படுவார்கள்.

இவர்களுள் அநேகம் உட்பிரிவுகள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒரு ஷெய்கு அல்லது அமீர் என்பவர் தலைவர். இவர் தம்கூடாரத்துக்கெதிரில் வேலை நட்டுவைத்தால் அதற்கு மற்றவர்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இந்தத் தலைமைப்பட்டம் ஒரே வம்சத்தில் தொடர்ந்துவரும். ஆனால், மற்றவர்கள் விருப்பங்கொண்டால் வேறொரு வம்சத்தவரைத் தலைவராக நியமித்துக்கொள்ளலாம். அமீருடைய நடை மற்றவர்களுக்கு உசிதமாக இராவிடில் அவர் உடனே விலக்கப்படுவார். யுத்தம் ஆரம்பிப்பதற்கும் சமாதானம் செய்வதற்கும் அவருக்கு அதிகாரமுண்டு. ஓரிடம் விட்டு இன்னவிடம் புறப்படவேண்டும் என்பதும், அன்னியரை ஆதரிப்பதும், அவராலேயே செய்யப்படவேண்டும். ஆயினும், மற்றவர்களுடைய விருப்பத்தின்படியே அவர் நடக்கவேண்டும். இவ்வாறு அநேகம் பிரிவுகளிருந்த போதிலும் ஒவ்வொருவரும், தமக்கும் மற்றவருக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்குணர்ந்திருந்தார்கள். வெவ்வேறு பிரிவுகளின் தலைவர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து தமக்குள்ஒருவரைத் தலைவருள் தலைவராக ஏற்படுத்திக்கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து எல்லோரும் நடப்பார்கள். ஒவ்வொரு பிரிவிலுள்ளாரும் அத்தேசத்தின்வேறு வேறு இடங்களில் திரிந்தாலும் இந்த முதல்தலைவர் உத்தரவுசெய்தால் எல்லோரும் ஓரிடத்திற் கூடவேண்டும்.

ஆயினும், இத்தனைவர்க்கத்தாரையும் அடக்கியாளுதற்குரிய இராச்சியாதிகாரம் ஒருவருக்கும் இல்லாமையால் ஒருவருக்கொருவர் சண்டை விளைந்துகொண்டிருக்கும். அவர்களுக்குள் பழிதீர்த்துக்கொள்ளுதல் ஒரு வேதகக்கட்டளையா யிருந்தது. ஒருவன் கொல்லப்பட்டால் அவனுடைய உறவினர் அதற்கு மாறாகப் பழிவாங்கவேண்டும். இதனால் பெருங்கலகங்களும் விளைவதுண்டு. அநேகம்பரம்பரைவரையில் சண்டைமூண்டுகொண்டே யிருக்கும். கொலையுண்டவனுக்காகப் பழிவாங்காவிட்டால், அவனுடைய கபாலத்தினின்று ஒரு சிறகுள்ள பூச்சி வெளிப்பட்டு

ஆகாயத்தில், “எனக்குத் தாகசாந்தி செய்யுங்கள்; எனக்குத் தாகசாந்தி செய்யுங்கள்” என்று கத்துவதாக அவர்கள் நம்பியிருந்தார்கள். அப்பூச்சிக்கு ஹமா அல்லது ஸாதி என்று பெயர் சொல்லுவார்கள். அவனைக்கொன்றதற்காகக் கொலைசெய்தவனுடைய இரத்தத்தைக் குடித்தால் மட்டும் அவ்வுயிர் சாந்தி யடைவதாக நினைப்பார்கள்.

இவர்கள் தங்களுடைய ஒட்டகங்களையும், குதிரைகளையும் திருடர்களினின்றும் காப்பாற்ற வேண்டியது அவசியமாதலால் இவர்களுக்கு ஆயுதப் பழக்கம் நன்றாகத் தெரியும். வில் வாள் வேல் ஆகிய ஆயுதப்பிரயோகங்களில் இவரை ஒப்பாரும் மிக்காருமில்லை; குதிரையைப் பழக்குவதில் இவர்கள் மிக்கபுகழ்பெற்றவர்கள். யுத்தப்பழக்கமும் இவர்களுக்குத்தெரியும். ஆனால், இவர்கள் மிக்க துர்மார்க்கர்கள்; மதுபானம், சூது, மாதராடல் முதலிய துர்மார்க்க மனைத்தும் அவர்கள்பால் ஒருங்கே காணப்படும். இடக்க ரடக்கலான பாடல்களை வெளிப்படச்சொல்லி ஆனந்திப்பார்கள். கொலையும் களவும் அவர்களுடைய இயற்கைத்தொழில்; விவசாயமும், வியாபாரமும் இழிதொழிலென்று கருதுவார்கள். இத்தகைய இழிதொழில் செய்வோரைக் கொல்வதாலும், அவர்கள் திரவியத்தை அபகரிப்பதாலும் ஒன்றும் தீங்கில்லையென்று சமாதானம் செய்துகொள்வார்கள்.

அவர்களுடைய தோற்றம் மெலிந்து காணப்படும். ஆனால், தேகதிடம் வாய்ந்து சுறுசுறுப் புள்ளவர்களாயிருப்பார்கள். அளவற்ற துன்பத்தையும், அயர்ச்சியையும் சகிக்கக்கூடியவர்கள்; அவர்களுடைய நிறம் பழுப்புக்கலந்த வெண்மையாயிருக்கும்; ஆகாரம்மிதமாகச்செய்வார்கள்; பேரீச்சம்பழங்களையே பெரும்பாலும் புசித்து ஜீவிப்பார்கள்; அவர்களுடைய தேகத்தைப்போல் மனமும் உறுதிவாய்ந்ததாயிருக்கும். விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளும் சக்தியும், கூரிய நுண்ணறிவும், சிறந்த கற்பனாசக்தியும் பெற்றிருந்தார்கள். தங்களுடைய குலத்தைப்பற்றி மிக்க பெருமை பாராட்டிக்கொள்வார்கள். சிறந்த புலவர்கள் எழுதியகாவியங்களைக் கேட்டால் மனமுருகி மெய்ப்பாடு அடைவார்கள். மற்றப் பாஷைகளைக் காட்டிலும் அரபிப்பாஷைக்குள்ள பலவகைமேன்மையால் அவர்களெல்லோரும் இனிமையாகப் பேசுந் திறம்பெற்றிருந்தார்கள். பெருங்காப்பியங்களைப் படிப்பதைக்காட்டிலும் சிறுநூல்களிலேயே அவர்களுக்கு விருப்பம் மிகுந்திருந்தது. அவர்களுடைய பேச்சில் உபாக்கியானங்களும், கதைகளும் மிகுந்திருக்கும்.

அவர்கள் கொடுமைவாய்ந்த போர்வீரர்களாயினும் பெருந்தன்மையும், விருந்தினரை உபசரிக்குங்குணமும் அவர்மாட்டு மிகுதியாக உண்டு; தருமம்செய்வதில் மகிழ்ச்சியுடையவர்கள்; வழிப்போக்கர்யாரும் அவர்கள் வீட்டுக்குள் தடையின்றி நுழையலாம்; ஜென்ம விரோதிகளாயினும் ஒருமுறைசேர்ந்து விருந்துசாப்பிட்டால் எப்பொழுதும் பிறகு அவர்களுக்குள் மனவருத்தமுண்டாகாது.

யுத்தத்தில் பிடிபட்டபெண்கள் வெற்றியடைந்தவரின்கீழ் அடிமைத்தொழில் புரியவேண்டும்; அவர்கள் விரும்பினால் இப்பெண்கள் பாடல்பாடி நாட்டியம் செய்யவேண்டும்; சொந்தக்காரர் பெண்களைப்பெற விரும்பினால் வெற்றிபெற்றவரால் குறிக்கப்பட்ட பணத்தைக் கொடுத்து மீட்டுக்கொண்டு போகவேண்டும்; இந்தப்பணம் வெற்றிபெற்றவரைச்சேரும்.

பஞ்சகாலங்களில் அவர்கள் ஒட்டகங்களின் இரத்தத்தைக் குடித்து ஜீவிப்பார்கள். அப்பொழுது பசுமாட்டைப் பக்கத்திலுள்ள மலைச்சாரலுக்கு ஓட்டிக்கொண்டுபோய் வாலில் காய்ந்தவைக்கோலைக் கட்டி நெருப்பு வைத்துவிடுவார்கள்; பிறகு அந்தச் சுட்டமாமிசத்தைப் புசிப்பார்கள்;போர்க்கைதிகளைஈடுவாங்காமல் விட்டால் அஃது அவர்களுக்குள் ஒரு குறையாக மதிக்கப்படும்; பலதார மணம் அவர்களுக்குள் இயற்கையான வழக்கமாயிருந்தது; ஒருதாரமணம் செய்வதை ஓர் இழிதொழிலாக எண்ணியிருந்தார்கள். அவர்களுடைய குரூரமான குணங்களுள் மிக்கபயங்கரமானது, அவர்கள் பெண்குழந்தைகளை உயிரோடு சவக்குழியில் புதைப்பதே; ஒவ்வொரு குடும்பத்தினின்றும் ஒவ்வொரு ஆண்குழந்தையைத் தங்களுடைய தெய்வத்துக்காகப் பலியிடுவதுமுண்டு.

அவர்கள் பெண்களை மிக்க இழிவாக நடத்திவந்தார்கள். பெண்களுள் அநேகர் புலவர்களாகவும், யுத்தவீரர்களாகவும் இருந்தபோதிலும் அவர்கள் இழிவாகக் கருதப்பட்டு வந்தார்கள். அவர்களுடைய விவாகம் அதிக எளிதாக நடத்தப்பட்டு வந்தது; புருஷர்களுடைய கோபத்துக்குத் தக்கவிதம் அக்கலியாணபந்தமும் மிக்க எளிதில் முறிக்கப்பட்டு வந்தது.

அபுல் பஜ்ல்.

மறுபிறப்புண்டு.

மனிதர்கள் மிருகமானார்கள்.

"இஸ்லாம் நேசன்" பத்திராதிபரவர்களுக்கு:

தங்களுடைய பத்திரிகையில் மறுபிறப்பைப்பற்றி ஓர் உபங்யாசம் எழுதப்பட்டுவருகிறது. என் சிற்றறிவிற் கெட்டியமட்டும் மறுபிறப்பு இல்லையென்றே தங்களுடையபத்திரிகையால் தெரிந்துகொண்டேன்; இதற்குமாறாக நான் ஓர் அதிசயங் கண்டேன்; அதுமுதல் மறுபிறப்பைப்பற்றி மறுபடியும் எனக்குச் சந்தேகம் பிறந்திருக்கிறது. எனக்குள்ள இந்த மயக்கத்துக்கு யாரேனும் தக்கவர் மருந்துகொடுத்து என் சந்தேகத்தைத் தெளிவிப்பார்களென்று கருதித் தங்கள்பத்திரிகை வாயிலாகப் பின்வரும் விஷயத்தை எழுதத்துணிந்தேன்.

சென்ற ஜனவரிமாதம் 10௳ செவ்வாய்க்கிழமை மாலை 3-மணிக்கு மதராஸ் மாபூஸ்கான் தேவடிக்கருகில் மண்ணடிஎன்னுமிடத்தில் மனிதர்கள் கூடிக்கொண்டிருந்தார்கள்; நேரஞ்செல்லச்செல்ல ஆயிரக்கணக்கான மாந்தர் நிறைந்து அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தார்கள். மண்ணடிக் கடைத்தெருவும், பிராட்வேயும், வேங்கடாசல ஐயர்வீதியும் மனிதத்திரளாகவே காணப்பட்டன. நான் மண்ணடியில் நின்றுகொண்டிருக்கும்போது யாரோ என்னை ஆகாயத்தில் தூக்கினாற்போல் தோன்றிற்று. யார் என்னை இவ்வாறு தூக்கினாரென்று பார்க்கும்போது என்கால் நிலத்தில் பாவாமல் நான் கூட்டத்துக்குள் அகப்பட்டு நெரிந்து மேலேகிளம்பினதாகத் தெரிந்துகொண்டேன். கூட்டத்தில் நான் சிக்கப்பட்டிருந்ததால் என் ஸ்வாதீனம் இல்லாமலே கூட்டம் சென்றவழியே என்தேகமும் போய்க்கொண்டிருந்தது. என்கால்கள் நிலத்தில் பாவாமலே மண்ணடியிலிருந்து வேங்கடாசலஐயர் வீதிக்கு நான்வந்து சேர்ந்தேன். "இன்றைக்கு நான் விழித்தவருடைய முகம் கெட்ட சகுனமுள்ளது", என்று எண்ணிக்கொண்டு, என் வயிற்றை நசுக்கி விழியைப் பிதுக்கிவிடும்போலிருந்த அந்தக் கூட்டத்தினின்று தப்பிக்கொண்டு அவ்வீதியிலுள்ள ஒரு திண்ணையில் ஏறிநின்று வேடிக்கைபார்த்தேன். ஹிந்துக்களுக்குரிய ஏகாதசிவிசேஷத்தால் ஜனங்கள் அவ்வாறு கூடியிருக்கக்கூடுமென்று எண்ணிக்கொண்டு சும்மாநின்றேன். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அநேகர் குதிரையில் ஏறிக்கொண்டும் தரையில்நடந்துகொண்டும் ஜனங்கள் கலகம்செய்யாமல் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது சிறிது நேரத்துக்குள் பறையோசையும், மேளசப்தமும் கேட்டன. உடனே மனிதர்கள் வீதியின் இருமருங்கிலும் ஒதுங்கிக்கொண்டு ஏதோவொன்றை எதிர்பார்ப்பவர்போல் ஆவலோடு நின்றார்கள். அப்பொழுது ஒரு பெரிய புலியும் அதன்குட்டியும் துள்ளிவிளையாடிக்கொண்டு வீதியில் நடந்து சென்றன. கண்காட்சி சாலையிலுள்ள வேங்கைதான் வெறிகொண்டு ஓடிவந்ததென்று நினைந்து நான் ஓட்டம் பிடித்தேன். அந்தப்புலி ஒருவரையும் ஒன்றும் செய்யாதென்று அங்குள்ளார் சொன்னதன்மேல் அச்சம்நீங்கிப் புலியைப்பார்த்தேன். அது பின்னிரண்டுகால்களாலும் நாட்டியம்செய்துகொண்டு முன்னங்கால்களை மேலே தூக்கி எதிரில்பாய்ந்து விளையாடிச்சென்றது. அந்தப்புலியின் தேகமுழுதும் பொன்னிறமுள்ள வரிகள்காணப்பட்டன. கண்ணில் கண்ணாடி மாட்டப்பட்டிருந்தது. புலியின்பின்னே ஒரு மனிதன் ஒன்று தன்கையில் வைத்திருந்தான்; அதைப்புலியின் வாலென்றுசொன்னார்கள். வால்நுனியில் பட்டுவஸ்திரங்களும் புதுவேஷ்டிகளும் மாட்டப்பட்டிருந்தன. அந்தப்புலி சென்றவுடன் அவ்வாறு அநேகம் இரண்டுகால்புலிகள் குதித்துக்குதித்து விளையாடிச்சென்றன. இருகால்புலிகள் இருநூற்றைக் கண்டேன். அநேகம் கருமந்திகள் தேகமெங்குங் கரியைப்பூசிக்கொண்டு இடுப்பில் இருப்புச் சங்கிலியால் கட்டப்பட்டு இரண்டுகாலால் நடந்துதிரிந்தன. சில குரங்குகளும் அவ்வாறே குரங்காட்டியின் உதவியின்றி உலாவிக்கொண்டிருந்தன.

அப்பொழுது "ஜாலி-ஜூலா-சேன்-சேன் - மம்மர்லிமோ - தீன்" என்று கத்திக்கொண்டு இரண்டுமூன்று தமிழர்கள் ஓடிவந்தார்கள். ஒருவன் நாகத்தகட்டால் கைபோல் செய்யப்பட்டிருந்த ஒரு விக்கிரகத்தைத் தூக்கிக்கொண்டு ஆவேசங்கொண்டவனைப்போல் துள்ளித் துள்ளி ஓடினான். அவனை இன்னும் இரண்டுமனிதர்கள் இடுப்பைப்பற்றிக்கொண்டு பின்னே ஓடினார்கள். தமிழர்களுடைய விக்கிரகம் மனிதனைப்போல் செய்யப்பட்டிருக்குமென்று சொல்லுவார்கள். ஐந்துவிரல்கள் முளைத்த கைபோலிருக்கும் விக்கிரகத்தை இப்போதுதான் கண்டேன். பிறகு முஸ்லீம்கள்போல் வேஷந்தரித்துக்கொண்டிருந்த சிலர் இம்மாதிரியான கையைத்தூக்கிக்கொண்டு "யாளி-தூளா-அசேன்-ஒசேன்-இமாம் போள்ரே இமாம்-தீன்" என்று கூச்சல் செய்து ஓடினார்கள். நிமிஷந்தோறும் இவ்வாறு கணக்கிலடங்காத கைகள் அங்குமிங்கும் ஆவேசத்தோடு ஓடிக்கொண்டிருந்தன. நாகத்தால் செய்யப்பட்ட கைகளும்,

பித்தளைக்கைகளும், வெள்ளிக்கைகளும், பொற்கைகளும், சந்தனக்கைகளும் கூச்சல் செய்துகொண்டு உலாவித்திரிந்தன. உலகில் நாம் என்ன என்ன வேஷதாரிகளைக்காணுதல் முடியுமோ அந்த அந்த மாறுவேஷங்களெல்லாம்காணப்பட்டன. இவர்களெல்லோரும் ஸுன்னிகளும்ஹிந்துக்களுமாயிருந்தார்கள். இரவு 8-மணிக்கு உன்னதமான நவாப் கை வந்தது. வேடிக்கை பார்ப்பவர்களில் அநேகர் தசாங்கமென்னும் வாசனைப்பொடியை அக்கைமேல் தூவி எறிந்தார்கள். ஏதேனும் இஷ்ட பூர்த்தியாக வேண்டுமாயின் இப்பொடியை அக்கையில் எறிந்தால் நாடியபொருள் கைகூடும்; ஞானமும் புகழுமுண்டாம் என்று சொன்னார்கள். இன்னும், திருவல்லிக்கேணியில் ஸுன்னிகளல்லாத முஸ்லீம்களும் கையை வைத்துக் கொண்டாடுவார்களாம். இவர்கள் அக்கையை நினைந்து நினைந்து தங்கள்கையால் மார்பில் அறைந்துகொள்வார்களாம். சில கைகள் தரையில் நடந்து செல்லுகின்றன; சில குதிரையிலேறிச் செல்லுகின்றன; வேறுசில கூண்டுகளிலும் தொட்டிகளிலும் தூக்கிக்கொண்டுபோகப்படுகின்றன. சிலகைகளில் ஒரேவிரல் காணப்படுகிறது; சிலவற்றில் இரண்டுவிரலுண்டு; ஐந்துவிரல்கைகளே யநேகம். சிலகைகளுக்குப் "பாரா இமாம்" என்று பெயராம். இவ்வாறெல்லாம் கைகளை வைத்துக் கொண்டாடிவரும்போது மனிதர்கள் அநேகர் மிருகமாகவும், ஒருசாதியார் மற்றொருசாதியாராகவும், ஒருதொழிலாளி மற்றொருதொழிலாளியாகவும் மறுபிறப்படைகிறார்கள். ஹிந்துக்களும், பௌத்தர்களும், சைனர்களும் தங்களுடைய கருமவசத்தால் இறந்தபின் மறுபிறப்படைகிறார்களென்று கேட்டிருக்கிறோம். மரணமானால் மறுபிறப்புண்டென்று அவர்கள் சொல்லுவர். அவர்சாமிக்கு இவ்வளவுதான் சக்தி; இறக்குமுன் இந்தப் பிறவியிலேயே மறுபிறப்பைத்தரும் சக்தி அந்தச்சாமிக்கு இல்லை. ஆனால் இந்தக்கைக்கு மிகுதியான சக்தியுண்டு. பத்துநாளையில் ஒருவன் எத்தனையோ மறுபிறப்பை அடைகிறான். காலையில் பெண்ணாவான், நடுப்பகலில் ஆணாவான், மாலையில் மிருகமாவான். இவ்வளவு பெருமையும் இந்தக்கைக்கு உண்டு. இந்தக்கையின் பெருமையே பெருமை; இஃது அதிட்டமுள்ள கை.

கைத்திருவிழா நடக்குங்காலத்தில் புலிவேஷம், மந்திவேஷம், ஜங்கிவேஷம், பங்கிவேஷம், ஆண்டிவேஷம், தோண்டிவேஷம், பாம்பாட்டிவேஷம், காமாட்டிவேஷம், தோட்டிவேஷம், பாட்டிவேஷம், தொப்பிவேஷம், கொப்பிவேஷம், கொட்டாங்கச்சிவேஷம், தட்டுவாணிவேஷம், கிழிந்ததுணிவேஷம், ஹல்வாவேஷம், விலங்குவேஷம், குடுகுடுவேஷம், பேசாமடந்தைவேஷம், யானைவேஷம், பானைவேஷம், ஞானிவேஷம், மோனிவேஷம், இன்னோரன்ன ஆயிரக்கணக்கான வேஷங்களெல்லாம் காணப்படுகின்றன.

இதை நான் எழுதும்போது வேஷதாரிகளுள் ஒருவரைக்குறித்தேனும் அவருக்குச் சன்மானம் அளிக்கும் பிரபுக்களில் ஒருவரைக் குறித்தேனும் சொல்லுவதாக நீங்கள் எண்ணவேண்டாம். இந்த அநாகரிகத்துக்குக்காரணம் வேஷதாரிகளுமல்லர்; வேடிக்கைபார்ப்போருமல்லர்; ஆனால் சிலபிரபுக்களே இதற்குமூலகாரணம். கைகளின்மேல் வைத்திருக்கும் பக்தியாலாவது வேறுகாரணத்தாலாவது இவ்வாறு நிகழ்வதில்லை; ஆனால் சில திண்ணைச்சோம்பேறிகளும் பிழைக்கவழியற்ற கீழ்ச்சாதியாரும் தங்களுக்குத் தக்கவரும்படி கிடைக்குமென்னும் எண்ணத்தால் இவ்வாறெல்லாம் உருமாறுகிறார்கள். பிச்சைக்காரர்களைக்கண்டால் தெருக்கதவையடைக்கும் வச்சைமாக்கள் இச்சோம்பேறிப் பிச்சைக்காரர்களுக்கு மிகுதியாகக் கொடுக்கிறார்கள். வேஷந்தரிக்கும் ஒவ்வொருவனும் தன்தனக்குத் தெரிந்த ஒவ்வொரு பிரபுவிடத்தில் சன்மானம் பெறலாமென்றே மிருகமாகவும் வேறுசாதியாகவும் மாறுகிறான். தனக்குக் கொடுப்பார் யாருமில்லையென்று தெரிந்துகொண்டால் ஒருவரும் வேஷந்தரிக்க முன்வரார். முற்காலத்தில்உரோமாபுரியில், கொலைத்தொழில்செய்த குற்றவாளிகளை வருஷத்துக் கொருமுறை சிம்மத்தோடு சண்டைசெய்யும்படிவிட்டு மனிதர்கள் சுற்றிநின்று வேடிக்கைபார்ப்பது வழக்கம். இப்போது மனிதர்களே மிருகமாக மாறுவதை நோக்குங்கால் உரோமாபுரியிலிருந்த அநாகரிகத்தைக்காட்டிலும் இதுமிக்க அநாகரிகமும் அருவருப்பும் உடையதாயிருக்கிறது. இவ்வேஷத்தால் அநேகம் கலகங்கள் வருஷந்தோறும் அங்கங்கே விளைந்துகொண்டிருக்கின்றன. இவ்வருஷமும் பம்பாயிலும், மற்றுஞ்சில பாகங்களிலும் பெருங்கலகம் விளைந்தன.

கைகளின் உற்சவகாலங்களில் நடக்கும் அநாகரிகத்தைப்பற்றி இவ்வாறு நான் எழுதுவதில் சில நேயர்களுக்கு மனவருத்தமுண்டாகலாமென்று நினைக்கிறேன். ஆயினும் கடவுளால், ஐம்புலஅறிவோடு பகுத்தறிவும் சேர்ந்த ஆறறிவுயிராகப் படைக்கப்பட்ட மனிதவர்க்கத்தாரை இவ்வாறு புலியாகவும், கரடியாகவும், கருமந்தியாகவும், குரங்காகவும் வேஷங்கொள்ளச்செய்து, அவர்களை மிருகங்களாகவேபாவித்து ஆடச்சொல்லி, அறிவற்ற ஏழைகள் மாறுவேஷம் பூண்டால் அவர்களுக்குச் சன்மானங் கொடுப்பதாக உற்சாகத்தையுமுண்டாக்கி இவ்வாறு அவர்களு

டைய ஆசையைக் கெட்டவழியில் திருப்பி, முதல்தரமிருகம்போல் நடித்தால் மிக்ககௌரவமிருப்பதாக அவர்கள் எண்ணிக்கொள்ளும்படி தூண்டிவிட்டு, வேடிக்கைபார்த்து இனாம் அளிக்கும் பிரபுக்கள், தாங்களிவ்வாறு செய்வது தெய்வத்துக்குச் சிறிதும் சம்மதமில்லையென்று தெரிந்துகொள்ளுவார்களென நம்புகிறேன். இன்னும் அவ்விராத்திரி 8-மணிக்கு ஊர்வலம்வந்த உன்னதமான நவாப்நையின்மேல் நானும் எல்லாரும்போல் தசாங்கப்பொடியை வாங்கி யிறைத்தேன். இவ்வாறு இறைத்த என்னோக்கமும் வேண்டுகோளும் இன்னவென்று நீங்கள் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களாயின் சொல்லுகிறேன். அஃதாவது: “கனம்நை அவர்களே! தங்களுடைய சக்தியால் என்போன்ற இந்த நல்லமனிதர்கள் இவ்வருஷமுதல் மிருகமாக மாறாமலிருக்கும்படி அவர்களுக்கு நல்ல அறிவு கொடுப்பீராக. அவ்வாறு மிருகமாகும் மித்திரர்களுக்குப் பிரபுக்கள் இனி இனாம் கொடுக்காமலிருக்கும்படி அவர்களுடைய மனத்தைத் திருத்துவீராக,” என்பதே.

முஸ்லீம்பக்தன்.

இஸ்லாமிய போதகர்கள் வேண்டும்.

லாகூரில் பிரசுரமாகும் “வதன்” என்னும் பத்திரிகை, கொஞ்சநாள்களுக்குமுன் முஸ்லீம்கள் மார்க்கவிஷயத்திலும் ஜனஸமூக வாழ்க்கையிலும் இப்போது அடைந்துள்ள சீர்கேட்டைப்பற்றித் துக்கித்து எழுதும்போது, இந்தியாவில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் முகம்மதியர்கள் என்ற பேரை மாத்திரம் பெற்றிருக்கிறார்களே யொழிய, அம்மார்க்கத்தின் அருமை பெருமை வாய்ந்த கொள்கைகளைக் கொஞ்சமேனும் தெரிந்துகொண்டிருக்கவில்லை யென்று கூறுகின்றது. இதுமட்டுமோ? அவர்களில் அநேகர் விக்ரக ஆராதனைக்காரர்களுடைய ஆசார அனுஷ்டானங்களையும் கொண்டாடுகின்றனர். ராஜபுதனத்தில் இம்மாதிரியான முகம்மதிய குடும்பங்கள் பலவிருக்கின்றன. அவர்களுடைய பெயர் அக்பர் ஸிங் என்பது போன்றுள்ளன. ‘ஜௌரா’ என்பது ஒரு முகம்மதிய நாடு; அதில் வாழும் கல்வியறிவில்லாத முஸ்லீம்கள் முற்றிலும் விக்ரகவணக்கமுள்ளவராகக் காணப்படுகின்றனர். ஸிந்து, கூர்ஜரம், தக்ஷிணம் முதலிய விடங்களிலும் இம்மாதிரி தான் இருக்கின்றது. ‘ஹைதராபாத்’ ஒரு முகம்மதிய நாடு. அங்காவது நல்ல விஷயங்கள் காணப்படுகின்றனவோ வென்றால், அங்குள்ளவைதாம் மற்றைய விடங்களில் உள்ளவைகளைக் காட்டிலும் அதிகமான சீர்கேட்டைப் பெற்றிருக்கின்றன. அங்குள்ள பிரபல ஹிந்துக்குடும்பத்தலைவர்கள் ஹிந்து ஸ்திரீகளையும் முகம்மதிய ஸ்திரீகளையும் கல்யாணம் செய்துகொள்வதுண்டு. என்றாலும் முஸ்லீம் ஸ்திரீகளிடம் பிறக்கும் குழந்தைகளைப் பிதாவின் ஆஸ்திகளில் யாதொரு பாத்தியதையும் கொண்டாடும்படி விடுவதில்லை. குல்பர்கா முதலிய விடங்களில் உள்ள முஸ்லீங்கள் ஹிந்துக்களைப்போலவே இறந்தோரைப் புதைத்துவிடாமல் தகனம் செய்யும் வழக்கத்தை அனுஷ்டித்துவருகின்றனர். அங்குள்ள முஸ்லீங்கள் நீண்ட காலமாய் ஹிந்து மார்க்கத்துக்குத் திரும்பிவிடவேண்டுமென்று பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வைதீக ஹிந்துக்கள் இதற்குச்சம்மதியாததுதான் பெருந்தடையாகவிருக்கிறதென்றும், அவர்கள் சம்மதித்தால் அங்குள்ள முஸ்லீங்கள் இதற்குள் ஹிந்துக்களாக மாறியிருப்பார்களென்றும் தெரிகின்றது. ஆனாலும் ஆர்ய “ சுத்தி ” முறை ஒரு வழிகாட்டியிருக்கிறது. அதனால் சில முஸ்லீங்கள் திரும்பவும் தங்களுடைய பூர்வ ஜாதிக்குத்திரும்பியிருக்கின்றனர்.

இஃதெல்லாம் நம்முடைய உலமாக்கள் ஏனோ தானோ வென்றிருப்பதனால்தான் உண்டாயிருக்கிறது. இந்த முகம்மதியர்கள் விழித்துக்கொண்டு உட்கார்ந்து அஞ்சுமன்கள் ஸ்தாபித்து, அந்தப் பிரதேசங்களுக்கு மதபோதகர்களை அனுப்பி அங்குள்ள ஜனங்களுக்கு இஸ்லாம் மார்க்கக் கொள்கைகளையும் அனுஷ்டானங்களையும் தெளிவாய் எடுத்துரைக்கும்படி செய்யவேண்டும். உலமாக்கள் தாங்களே நல்லமாதிரிகளாக நடந்துகாட்டி, அதனால் ஜனங்களுடைய குணங்கள் நல்வழிக்கு வருமாறு பாடுபடவேண்டும். உலமாக்கள் செய்யவேண்டியது இன்னு மொன்றுண்டு; பஞ்சாப், கீழ்வங்காளம், சென்னை, தக்ஷிணம், மலைப்பிரதேசங்கள் முதலிய விடங்களில் ஹிந்துக்களுக்குத் தீண்டாதவரான தாழ்ந்த ஜாதியார் கோடிக்கணக்காக விருக்கின்றனர். பிரிடிஷ் கவர்ன்மெண்டாருடைய உதவி இவர்களுக்கு இல்லாமலிருக்குமாயின் இவர்களுடைய பாடு பெருங் கஷ்டமா யிருக்கும். இவர்களிடையே இஸ்லாம் மார்க்கத்தைப் பரவச்செய்து இவர்களுக்கு மானிட ஸமூகத்தில் மற்றவரோடு சமமான பதவியைக்கொடுத்துக் கல்வியைக் கற்பித்து வைப்பது ஸர்வஜன சம்மதமாகு மென்பதில் ஐயமில்லை.

இதனால் இந்திய நாடு அபிவிருத்தியடைந்து அரசுமுறையில் தோன்றும் சிற்சில கஷ்டங்களும் விலகுவதற்குச் சவுகரிய முண்டாகும். ஜனஸமூகத்தில் அவர்கள் நியாயமாக எதிர்பார்க்கும் பதவியை அவர்களுக்குக் கொடுப்பதாக விருந்தால் அவர்கள் இஸ்லாம் வர்க்கத்தை வெகுசந்தோஷத்துடன் பின்பற்றுவார்கள்; அவ்விஷயத்தில் எடுத்துக் கொள்ளும் முயற்சிக்குக் கைமேல் பலன் கிடைக்கும் என்பதில் தடையில்லை.

ஆதலால் உலமாக்கள் இஸ்லாமிய கொள்கைகளைப் பிரசுரம் பண்ணி உண்மையோடும் ஊக்கத்தோடும் கடமையைச் செய்துவருவாரானால் ஆண்டவன் அவர்களுக்கு விசேஷ அருளைச்செய்வான். ஆதி காலத்தில் நமது மேலான மார்க்கத்தைப் பரவச்செய்த சீரியோர்களுடைய புகழுடன் இந்த உலமாக்களின் புகழும் ஒன்றாகிக் கற்பகாலம் வரையில் நின்றுலவும் என்பது நிச்சயம்.

விவேகசாகரம்.

ஷெய்கு ஸஅதி ரகுமத்துல்லாஅலைஹி அவர்கள்.

கி. பி. 1194௵ ஹிஜரி 571ல் பாரஸீகதேசத்தின் தலை நகராகிய ஷீராஜ் என்னும்பட்டணத்தில் அவ்வூர் ராஜகிருகத்தில் உத்தியோகம் செய்துவந்த, அலிரவியல்லாகு அங்கு அவர்களின் பரம்பரையிலுதித்து **அப்துல்லா** என்னும் நாமம் பூண்ட ஒருவருடைய புத்திரராக இவர்கள் அவதாரம் செய்தார்கள். இவர்களுடைய இயற்பெயர் **முஸ்லீஹுத்தீன்** என்று சரித்திரக்காரர்சொல்லுகிறார்; ஆனால், எல்லோரும் இவர்களை ஷீராஜி ஷெய்கு ஸஅதி ரகுமத்துல்லா அலைஹி அவர்கள் என்றே அழைக்கிறார்கள். அவர்கள் பெயரைக்குறிக்காமல் ஷெய்கு என்றுமட்டும் சொன்னபோதிலும் அஃது அவர்களையே குறிக்கும். அவர்களுடைய இளம் பிராயத்திலேயே தாய் தந்தையரிருவரும் காலஞ்சென்றுபோனார்கள்.

இவர்கள் எல்லாச்சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெறவேண்டி, **பக்தாதிலுள்ள நிஜாமியா** கலாசாலையில் கல்விகற்று ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகி முதன்மையான ஸூபியானார்கள். **அபுல்பிரா இபுனுல் ஜோஸி** என்பவர்களிடம் சாஸ்திர ஞானமும், **ஷெய்கு அப்துல்காதிர் ஜீலானி** ரகுமத்துல்லா அலைஹி அவர்களிடம் வேதஞானமும் கற்றுக்கொண்டார்கள். ஜீலானியவர்களுடன் பதினான்குமுறை பாதசாரியாய்த் திருமக்காயாத்திரை செய்தார்கள்.

இவர்கள் இரண்டுமுறை விவாகம் செய்துகொண்டார்கள்; முதல் மனைவியை அவருடைய கொடுமைக்கஞ்சி விலக்கிவிட்டார்கள். இரண்டாவது மனைவியைப்பற்றி ஒன்றும்தெரியவில்லை: கிருகஸ்தாசிரமத்தில் இவர்களுக்குச்சுகம் அதிகமாயில்லை. இவர்களுடைய ஒரேபேறான புத்திரரும் சிறுவயதில் இறந்துபோனார்.

மனைவிமக்களின் சுகத்தை விரும்பாதவர்களாய் வாழ் நாளின் இறுதிப்பாகத்தில் சுமார் அறுபதுஎழுபது வருஷகாலம் துறவியாகக் குகையில் வசித்துவந்தார்கள். இவர்களுக்கு இல்லற இன்பம் விளையாமற்போனது இவர்களுடைய குற்றமன்று.

இவர்களுடைய ஆயுளில் முதல் முப்பதுவருஷம் ஞானம் தேடுவதிலும், அடுத்த முப்பது அல்லது நாற்பது வருஷம் உலகயாத்திரை செய்வதிலும் அடுத்த அறுபது அல்லது எழுபது வருஷகாலம் துறவறவொழுக்கத்திலும் கழிக்கப்பட்டன.

கிலர் அலைகிஸ்ஸலாம் அவர்களருளால் பாடல் இயற்றும் சக்திபெற்றதல்லாமல் சித்திவேலைகளுக்குரிய வன்மையும் அடைந்திருந்தார்கள். இவர்கள் சற்றேறக்குறைய இருபத்திரண்டு நூல்கள் பார்ஸிபாஷையில் இயற்றியிருக்கிறார்கள். முதல் ஆறு சிறு புத்தகங்களும், பூம்பொழில் எனப்பொருள்படும் **குலிஸ்தானும்**, **குபிஸாத்** என்னும் நூலின் சில பாகமும் வசனநடையில் எழுதப்பட்டவை; ஏனையவெல்லாம் பாடல்களால் இயன்றவை.

இவர்கள் நூறு வருஷங்களுக்குமேல் ஜீவித்திருந்தார்கள். **தவுலத்ஷாவும், இபுராகீம்கானும்** ஷெய்குடைய ஆயுள் நூற்றிரண்டென்று சொல்லுகிறார்கள். தவுலத்ஷாவின் காலத்திலிருந்த ஜாமி யென்னும் சரித ஆசிரியர் எப்பொழுதும் உண்மையே சொல்லுவார்; இவர், ஷெய்குஸஅதி ரகுமத்துல்லா அலைஹி அவர்கள் ஷீராஜில் ஹிஜரி 571 ல் பிறந்து ஹிஜரி 690 ல் சுவர்க்கம்புகுந்தார்களென்று சொல்லுகிறார்.

ஆகவே அவர்கள் சாந்திரமானக்கணக்கின்படி நூற்றிருபது ஆண்டும், ஸௌரமானக்கணக்கின்படி நூற்றுப்பதினாறு ஆண்டும் இவ்வுலகத்தில் ஜீவித்திருந்ததாகத்தெரிகிறது.

இம்மகானால் இபற்றப்பட்ட நூல்கள் இருபத்திரண்டும் இப்பொழுது அச்சேறவில்லை. சில நூல்கள் மட்டும் வெளிப்பட்டுலவுகின்றன. ஏனையவும் பார்ஸியில் வெளிப்பட்டால் உலகத்தவருக்கு மிக்க நன்மையுண்டாகும். குலிஸ்தான் என்னும் ஒரு நூலே உலகத்தவருக்குப் புத்தி புகட்டப் போதுமானது. மற்ற நூல்களும் ஞானம் புகட்டுவதில் இதற்குப் பின்னிடைவன வல்ல; இந்த நூல்களை ஐரோப்பியர்களும் சிறப்பித்துத் தம் தம் பாஷையில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஜேம்ஸ்ராஸ் என்னும் ஆங்கிலேயர் மிகுந்த பிரயாசையோடு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். அப்படிப்பட்ட இனிமையான மொழிபெயர்ப்பு இலக்கணப்பிழையின்றித் தமிழில் வெளிப்படவேண்டியது அவசியம். இதுவரையில் தெளிவான மொழிபெயர்ப்புத் தமிழில் வெளிப்படவில்லை; ஆதலின் இப்பொழுது முதன் முதல் பூம்பொழில்என்னும் குலிஸ்தான் நூலைச் சிறிது சிறிதாக இப்பத்திரிகை வாயிலாக மொழிபெயர்த்துச்சுத்தமாக வெளிப்படுத்த எண்ணியிருக்கிறேன். மொழிபெயர்ப்பில் ஏதேனும் தவறுகளைக்கண்டால் மௌல்விகள் பொருமை கொள்ளாமல் இனிய வசனத்தால் என்னைத்திருத்துவார்களென்று நம்புகிறேன்.

குலிஸ்தானுக்கு ஷெய்கு ஸஅதி ரகுமத்துல்லா அலைஹி அவர்கள் எழுதிய முகவுரை :

தயாபரனும், தாக்ஷண்ய பிரானுமாகிய இறைவனது திருநாமத்தினால் (ஆரம்பிக்கின்றேன்.)

மாட்சிமையும் பெருமையும் பொருந்திய ஓர் இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக ; வணக்கத்தால் அவனுடைய சாந்நித்தியத்தையும், அவன்மாட்டு நன்றிபாராட்டுவதால் அவனுடைய உதாரத்துவத்தையும் பெறலாம் ; உள்ளேயிழுக்கப்படும் ஒவ்வொரு சுவாசமும் ஆயுளுக்கு அபிவிருத்தியையும், அது வெளியில் விடப்படும்போது ஆத்மாவுக்கு ஆனந்தத்தையும் விளைக்கிறது; ஆதலின், ஒவ்வொரு தனிச்சுவாசத்திலும் இருவகை நன்மைகளுண்டாகின்றன ; ஒவ்வொரு நன்மைக்காக

ஒரு முறை நன்றிசெலுத்தவேண்டும். “ இந்த நன்றி மறவாமையாகிய கடமையினின்றும் தன்னை அப்புறப்படுத்திக்கொள்ளும் வண்ணம் தன் கையாலும் வாயாலும் நன்றி செலுத்தவேண்டும்.*” “ஏ, தாவூதின் புத்திரர்களே ! நன்றிபாராட்டும் விஷயத்தில் மகிழ்ச்சியோடிருங்கள் ; ஏனெனின், என் ஊழியக்காரர்களில் நன்றிபாராட்டுவோரின் தொகை சிறிதாயிருக்கிறது”—குரானேஷரீப். “தன்னுடைய குற்றத்தைத் தெரிந்துகொண்டு கடவுளுடைய சந்நிதியில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் ஊழியன் நல்லவனென்று கருதப்படுகிறான் ; இல்லையேல் இறைவனுடைய மேலான சந்நிதிக்குத்தக்க பொருளைக் கொண்டுவந்து சமர்ப்பிப்பது எவருக்கும் முடியாதகாரியமாகும்.”

அவனுடைய அளவற்ற அருள்மாரி எல்லாப்பொருள்கள்மேலும் வருஷிப்பதால் ஒவ்வோரிடத்திலும் அவனுடைய உதாரகுணத்தால் எல்லாவகை ஆகாரங்களும் கிடைக்கின்றன. தன் ஊழியக்காரர்கள் மகாபாதகமான காரியங்களில் தலையிட்டுத் தீயவழியில் ஒழுகினாலும் அதற்காகக் கடவுள் ஆகாரத்தின் § விரிப்பை அகற்றுவதில்லை. அவர்களுடைய தூய்மையொழிந்த விக்கிரக ஆராதனைக்காக ஏழைகளுடைய நித்திய ஆகாரத்தை நிறுத்துவது மில்லை.—“ சர்வதயாபரனே ! உன் இரகசிய நிதித்திரளிலிருந்து மதப்பற்றில்லாதவர்களுக்கும் அக்கினிபாராதனை செய்வோருக்கும் ஆகாரம் கொடுக்கிறாய் ; உன் பகைவரிடத்தும் தயைபுரியும் நீ உன் நேயர்களை எவ்வாறு பராமுகம் செய்யமுடியும்.?”

மரகத நிறமான கம்பளத்தை எங்கும் விரிக்கும்படி காலைக்காற்றாகிய தன் உக்கிராண உத்தியோகஸ்தனுக்கு உத்தரவு செய்தான் ; பூமியாகிய தொட்டிலில் தாவரங்களாகிய குமாரிகளுக்குப் பால்கொடுத்து

---

* ஒருவன் கடவுளுக்குச் செலுத்தவேண்டிய நன்றி மறவாமையாகிய கடமையைத் தான் முழுதும் செலுத்திவிட்டதாகக் கருதவேண்டுமாயின் கையால்தொழுதும் நாவால் வாழ்த்தியும் அதைச் செலுத்தவேண்டும். தன்கடமை முழுதும் கழியும் வரையில் கையால்தொழவும் நாவால் வாழ்த்தவும்வேண்டும்.

§ உணவருந்தும்போது ஆகாராதிகள் தரையில்விழாமலிருக்கும் பொருட்டுப் பாய் வஸ்திரம் முதலிய விரிப்புக்களைக் கீழே விரித்துக்கொள்ளுதல் முஸ்லீம்களின்வழக்கம்; அவ்வாறு ஆகாரத்துக்காக விரிக்கும் விரிப்பு இங்கே குறிக்கப்பட்டது.

வளர்க்கும்படி வசந்தகால மேகமாகிய தன் வேலைக்காரிக்கு உத்தரவு செய்தான். வருஷப்பிறப்பில் அணிந்துகொள்ளும் போர்வைபோல், பசிய இலைகளாகிய போர்வைகளை மரங்களின் மார்பில் போர்த்தினான்; வசந்தகாலம் வந்தவுடன் புன்னகைபுரியும் புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட மாலைகளை இளங்கொம்புகளின் தலையில் சூட்டினான்; அவனுடைய மகாசக்தியால் கரும்பிலுள்ள ரசம் என்றுமழியாத தேனாகமாறிற்று. அவனுடைய அருள் நிறைந்த போஷணையால் பேரீஞ்சின்பருப்பு ஒரு கெம்பீரமான மரமாய் வளர்ந்தது. "நீ உன் நித்திய ஆகாரத்தைப் பெறும்பொருட்டும், அதை நன்றியறிதலோடு தின்னும்பொருட்டும் காற்று, மேகம், சந்திரன், சூரியன், வானம் ஆகிய எல்லாம் உனக்காகவே சுழல்கின்றன; அவைகளெல்லாம் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன; நீயும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பது ஒரு நியாயமான கடமையாகும்."

"அங்கீகரிக்கப்பட்ட தூதரும், உதாரத்துவம் தயை கெம்பீரம் புன்னகை பொருந்தி, முத்திரிக்கப்பட்ட தீர்க்கதரிசியும்," அண்டகோளத்தின் அரசரும், சிருஷ்டிப்பொருள்களுள் பெருமைவாய்ந்தவரும், ஈருலகங்களுக்கும் தூதரும், மனிதர்களுள் மாசற்றவரும், தீர்க்கதரிசிகளுள் இறுதியானவரும் (அல்லது காலசக்கரத்தின் சிகரமானவரும்) ஆகிய முகம்மது முஸ்தபா (அவர்கள்மீதும், அவர்களடியார்கள் மீதும் இறைவனுடையவாழ்த்தும் சமாதானமும் உண்டாக) அவர்களின் திருவாக்கில், "நீ அதன் துணை இருக்கும்போது நம்பிக்கையின் மதில் எவ்வாறு அசைய முடியும்? நூஹூ (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைத் தனக்குக் கடல் வழி காட்டியாக வைத்திருப்பவனுக்குச் சமுத்திரத்தின் அலைகளிடத்தில் என்ன அச்சம் இருக்கமுடியும்?" என்ற வாக்கியம் காணப்படுகிறது.

ஸஅதி.

நமது இஸ்லாம் மார்க்கத்தின் இரு பெரும் பகுப்புக்களாகிய "ஷியா," "ஸுன்னி," என்னும் பேதங்களை அறச்செய்து, அவ்விருவகுப்பையும் ஒன்றாக்கக்கூடிய மார்க்கவுணர்ச்சி யொன்று பாரஸீகத்தில் தலையெடுத்திருக்கின்றது. அவ்வுணர்ச்சி "பஹா வுல்லா" என்பவரால் தலையெடுத்தமையின் அதற்குப் "பஹாமதம்" என்று பேர்கொடுக்கப்பட்டுள்ளது. பஹா மதத்தின் கொள்கைகள் நெடுந்தூரம் பரவியுள்ளன. உலகத்தில் இப்போது இருபதுலக்ஷத்துக்கு மேலான ஜனங்கள் பஹையர்களாக விருக்கிறார்களென்று கணக்கிடப்பட்டுள்ளது. பாரஸீகர்களில் ஐந்திலொரு பாகத்தார் பஹையர்களாம். ஐரோப்பிய துருக்கியிலும் ஆசியா துருக்கியிலும் பஹையர்கள் அதிகரித்தவண்ணமாகவே யிருக்கின்றனர். எகிப்து, மொராக்கோ, அல்ஜீரியா, தூனிஸ், திரிபோலி முதலிய முஸ்லீம் நாடுகளிலும் பஹையர் மதம் வெகு தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்தியாவின் வடபாகத்திலும் அது செழித்துவரத் தொடங்குகின்றது. பம்பாய், கராச்சி, குவெட்டா, பெஷாவர், ராவல்பிண்டி, லாகூர், டில்லி, லக்னோ முதலிய விடங்களிலிருக்கும் முஸ்லீம்கள் பஹையர்களாக மாறியிருக்கின்றனர். இஸ்லாம்மார்க்கத்தினரோடு மட்டும் பஹா மதபோதகர்கள் சும்மா இருந்துவிடவில்லை. அமிருதஸாகரத்திலுள்ள சிக்கியர்கள, பனாரிஸ் பட்டணத்திலுள்ள பிராமணர்கள், ஸிலோன், பர்மா, ஸியாம் முதலிய விடங்களிலுள்ள பௌத்தர்கள், சீனா, ஜப்பான் வாசிகள், பாரஸீகத்திலுள்ள யூதர்கள், இவர்களில் பலபேர் பஹையர்களா யிருக்கின்றனர். கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்கு உலகத்தில் ஒருவிடத்திலேனும் இம்மாதிரியான ஜெயம் கிடைத்ததேயில்லை. தலைமுறை தலைமுறைகளாக ஒதுங்கியே யிருந்து, தங்களுடைய மார்க்கக் கொள்கைகளைப் பாதுகாத்துவந்த பார்ஸி ஜாதியார்கூட பஹைய மார்க்கத்தில் சேர்ந்திருக்கின்றனர். இன்னும், ருஷியா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து தேசங்களிலும் பஹைய மதம் புகுந்துள்ளது. லண்டன், லிவர்ப்பூல், மான்செஸ்டர், கிளாஸ்கோ, எடின்பரோ முதலிய நகர்களிலும் அநேகர்கள் பஹைய மார்க்கத்தை அனுஷ்டிப்பவராக விருக்கின்றனர். அமெரிக்காவிலும் அம்மார்க்கம் விருத்தியடையும் போலிருக்கிறது. அநேக அமெரிக்கர்கள் பஹைய கிரந்தங்களைப் படிப்பதற்காகவே பாரஸீக பாஷையைக் கற்றுக்கொள்கின்றனர். கனாடா மாகாணத்திலும் பஹைய மார்க்கத்தின் ஊக்கம் காணப்படுகின்றது.

இவ்வாறு உலகமுழுவதையும் தன் வசமாக்கப் பார்க்கும் இப்புதிய மார்க்கத்தின் குணந்தான் என்ன? யூதர்கள் தங்களுடைய மெஸ்ஸையாவின் வரவை எதிர்பார்க்கின்றனர். கிறிஸ்தவர்களோ, கிறிஸ்துவின் வரவை நோக்கிக்கொண்டிருக்கின்றனர். முஸ்லீங்களோ, மஹ்தியின் தோற்றத்தைச் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர்; ஐந்தாம் புத்தரின் அவதாரத்தைப் பௌத்தர்கள் எதிர்பார்க்கின்றனர்; ஸொராஸ்டிரியர்கள் ஷாபஷ்ராமையும், ஹிந்துக்கள் கற்கியவதாரத்தையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு எல்லா ஜாதியாரும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைத் தான் இப்புதிய மார்க்கஸ்தாபகரான பஹாவுல்லா’ என்பவர் சூசிப்பிக்கின்றனர். இதன் பிரதமக்கொள்கை யென்னவெனின், பெரிய மதங்களுக்குள்ளிருக்கும் வேற்றுமையைப் போக்கி, அவைகளின் அசங்கியக் கொள்கைகளை நிவர்த்தித்து, எல்லாவற்றையும் ஒன்றாக்கவேண்டுமென்று முயல்வதுதான். பஹாய மார்க்கத்தில் குருக்கள்மார் கிடையாது; வைதீகச்சடங்குகள் இல்லை; பகிரங்கமான தொழுகையும் இல்லை; கடவுளில் நம்பிக்கையும் அவருடைய தோற்றங்களில் விசுவாசமுமே தான் இதன் முக்கிய அம்சம். ஏகதாரவிரதம்தான் கொண்டாடவேண்டுமென்று இம்மார்க்கம் விதிக்கின்றது. ஜனங்கள் அனைவருக்கும் ஒரே ஒரு பாஷைமட்டும்தான் இருக்கவேண்டுமென்றும், விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக மத்தியஸ்தர்களின் கோர்ட்டுக்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் அது வற்புறுத்துகின்றது.

இனி, இம்மார்க்கத்தின் முக்கிய கொள்கைகளைப்பற்றிப் பேசுவோம். உலகத்தில் சண்டையே இனி இருக்கக்கூடாதென்றும், எங்கும் சமாதானமே வியாபித்திருக்கவேண்டுமென்றும், விவாதங்கள் மத்தியஸ்தர்கள் மூலமாகத் தீர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்றும் பஹாவுல்லா கட்டளையிடுகின்றார். ஜனங்களுக்குள் பரஸ்பர சிநேகமும், பொறுமையும் இருக்கவேண்டு. “நீங்கள் அனைவரும் ஒரேமரத்தின் கனிகள்” என்று அவர் கூறுகின்றார். சகல ஜனங்களையும் ஒற்றுமையாக்கும் சக்திவாய்ந்த ஒரேஒரு பாஷைதான் எல்லோராலும் பேசப்படவேண்டும். பிள்ளைகளையும் பெண்களையும் கல்விகற்கும்படி பெற்றோர்கள் செய்யவேண்டும்; ஏழைகளைக் கிராமத்தார்கள் செலவுசெய்து கல்விகற்கும்படி தூண்டவேண்டும். அஞ்ஞானம் ஓரிடத்திலிருக்கும் வரையில் அங்கு அபிவிருத்தியிராது. எல்லா ஜனங்களும் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ளவேண்டும்; குருக்கள்பலர் இப்புதியமார்க்கத்தில் கிடையாது. இம்மார்க்கத்தைப் போதிப்பவர்கள் யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் பெறக்கூடாது. ஜனங்கள் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். சன்னியாசம்கூடாது. எப்போதும் சந்தோஷமும் சுகமுமே குடிகொண்டிருக்கவேண்டும். சூதாட்டம், மதுபானம், அபின்சாப்பிடுதல், முதலிய துர்மார்க்கங்கள் அறவே ஒழிக்கப்படவேண்டும். மிருகங்களும் பிராணிகளும் ஹிம்சிக்கப்படக்கூடா. அவைகளைத் தயவாய்ப் பாதுகாக்கவேண்டும். ஸ்திரீகளைத் தாழ்ந்த பதவியில் வைக்கக்கூடாது. மனிதர்களுக்குச் சமமான பதவியை ஸ்திரீகள் அடையக்கூடியவர்கள். இப்புதுமார்க்கத்தைப் பரவச்செய்வதில் கட்டாயம் ஒன்றும் செய்யக்கூடாது. இவ்வாறு கட்டளையிடுவதனால் இப்புதிய மார்க்கத்தின் காரியம் உலகத்துக்கு நன்மைசெய்யவேண்டியதென்றே புலப்படும். எல்லாவிடங்களிலிருந்தும் ஒளியைப் பெறுவதில் பஹாயர்கள் சிரத்தையுள்ளவர்களாகவிருக்கிறார்கள். ஆகவே எல்லாமார்க்கங்களும் தெய்வீகம்வாய்ந்தனவென்றும், உண்மைப் பொருளை யடக்கியுள்ளனவென்றும், அவ்வித உண்மைப்பொருள் மனிதனாலேற்பட்ட சடங்குகளினாலும் மூடபக்தியினாலும் மங்கிப்போயிருக்கிறதென்றும் பஹாயர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

இதுகாறும் கூறியவாற்றால் பஹாயமதம் என்பது ஒரு நூதன மார்க்கமென்று கூறத்தகுந்த தன்று; உண்மை மார்க்கமொன்றுக்கு வேண்டிய முக்கிய அம்சங்கள் இதில் இல்லை. ஆதலின், இதனை ஒரு மார்க்க உணர்ச்சியென்றே கூறவேண்டும். கிறிஸ்தவமார்க்கத்துக்குப் புரோட்டஸ்டாண்டு வகுப்பு ஏற்பட்டதைப் போல, இது முகம்மதியமார்க்கத்துக்கு ஏற்பட்ட *ஓர் உணர்ச்சியென்று சொல்லலாம். ப-ர்.

ஜலாலுத்தீன்.

---

*இஸ்லாம்மார்க்க சம்மந்தமான ஒருணர்ச்சியென்பதில் எமக்கு உடன்பாடுதான்; ஆனால் கிறிஸ்தவமதத்துக்குப் பிராட்டெஸ்டெண்ட் மதம்போல்இஸ்லாத்துக்குப் பஹா மதம் என்றுகூறுவதில் எமக்கு ஆக்ஷேபமுண்டு; ஏனெனின், ரோமன்கதோலிக் மதத்தினரும், பிராட்டெஸ்டெண்ட் வகுப்பாரும் ஒரேபைபிளை ஒப்புக்கொள்ளுகிறார்கள்; கிறிஸ்துவையே இருவரும் தங்கள்தீர்க்கதரிசியென்று சொல்லுகின்றனர். இவ்வாறே, “லா இலாஹா இல்லல்லாஹு, முகம்மதுர்ரஸூலுல்லாஹி-இறைவனைத்தவிர வேறொரு கடவுளில்லை, முகம்மது(ஸல்)அவனுடைய தீர்க்கதரிசி,” என்ற வாக்கியத்தைத் திரிகரண சுத்தியோடு ஒப்புக்கொள்ளாதவன் முஸ்லீமல்லன்; குரானேஷரீபையும் தேவகட்டளையெனஒப்புக்கொள்ளவேண்டும்.

ஹிப்னாடிஸம்.

(ஞானசாரம்.)

செல்வம், உழைப்பு, ஞானம், கல்வி முதலிய விஷயங்களில் உலகத்தாரெல்லோரும் தமக்கு இணையில்லையென்று சொல்லும்படி மிக்க உன்னத நிலைமையை அடைந்திருப்பவர் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாண வாசிகளே. அம்மாகாணங்களில் மிகச் சிறந்தநகரம் நியூயார்க் என்பது. இந்நகரத்துக்கருகில் ராச்சஸ்டர் என்ற ஒருபட்டணமுண்டு. அங்கேமனத்தின் தத்துவத்தை ஆராயக் கூடிய ஹிப்னாடிஸம் என்னும் மெய்ஞ்ஞான சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்த அநேகம் ஞானிகள் தழைத்தோங்கி வருகிறார்கள். அவ்வூரில் இத்தகைய பெரியோர்களால் ஆதரிக்கப்பட்டு வரும் சபையொன்றுண்டு. அச்சபையில் அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டவர்களுக்கு அவர்கள், ஹிப்னாடிஸ சாஸ்திரத்தைக் கற்றுக்கொடுக்கிறார்கள். உலகத்தின் எந்தப்பக்கத்திலுள்ளவர்களும் அச்சங்கத்தில் சேர்ந்துகொள்ளலாம். நானும் அச்சங்கத்தில் ஒருவனாகச் சேர்ந்திருக்கிறேன். அச்சங்கத்தாரின் பேருதவியால் நான் அடைந்த வெற்றியை ஆங்கிலமறியாத எல்லோருக்கும் உண்டாக்கவேண்டுமென்று கருதி, சங்கத்திலிருந்து நான் கற்றுக்கொண்ட விஷயங்களையும், என்சொந்த அனுபவத்தையும் ஒரு புத்தக உருவமாக வெளிப்படுத்தக் கருதியிருந்தபோது, என் எண்ணத்துக்கிணங்க என் நண்பர்களில் அநேகர் அதைப்பற்றி வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். அவ்வாறே அந்தச் சாஸ்திரத்தின் இரகசியங்களை "மனோவசிய தத்துவம்" என்னும் ஒரு புத்தகமாக வெளிப்படுத்தினேன். இந்த ஞான சாஸ்திரம் ஒரு ஞானசாகரமாதலால் மனோவசிய தத்துவமென்னும் அச்சிறு புத்தகத்திலேயே எல்லா விஷயங்களும் அடங்கியிருக்குமென்று எதிர் பார்க்க முடியாது. அப்புத்தகத்தை வாசித்த அநேகரும், இன்னும் என்னுடைய நண்பர்களும் ஹிப்னாடிஸத்தைப்பற்றி விரிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறார்கள். ஒரு புத்தகமாக இப்பொழுது எழுதுவது சில்வகை இடையூறுகளால் முடியாமற்போனதால் அவர்களுடைய கோரிக்கையை மறுக்கக் கூடாதென்று இஸ்லாம்நேசனில் அவகாசம் நேர்ந்தபோது சிறிது சிறிதாக வெளிப்படுத்தலாமென்று நினைத்திருக்கிறேன்.

ஞானசிகாமணிகளாகிய உத்தமசீலர்களால் எழுதப்படவேண்டிய இந்தச் சாஸ்திரத்தின் விஷயத்தைப்பற்றி நான் எழுத முன்வந்த தறுகண்மையை மேன்மக்கள் மன்னிப்பார்களாக.

ஹிப்னாடிஸத்தின் சம்பந்தமாக நிகழும் சித்திகளின் இரகசியங்களை ஆராயப்புகுந்தால் அதில் ஒன்றும் ஆச்சரியமாகவாவது, இயற்கைக்கு மாறானவிஷயமாகவாவது காணப்படாது. இயற்கையில் நாம் எதிர்பார்க்கும் விஷயங்களே ஹிப்னாடிஸத்திலும் காணப்படுகின்றன. ஒருவர் ஹிப்னாடிஸம்செய்வதை முதலில் நாம்பார்த்தால் ஒவ்வொன்றும் ஆச்சரியமாகவும், இயற்கைக்கு முரணாகவும் காணப்படும். அந்தச் சாஸ்திரத்தில் நாமும் பழக ஆரம்பித்து அதன் நுண்ணிய காரணங்களைப் பகுத்துணர்ந்து பார்த்தால் எல்லாம் இயற்கைக்கு ஒத்தவண்ணமே காணப்படும். ஒருவன், மழை ஒருதுளியும் பெய்யாத ஒரு நாட்டிலிருப்பதாக நினைத்துக் கொள்வோம்; ஒரு காரணத்தால் மழைவளமுள்ள வேறொரு நாட்டுக்கு அவன் வரும்படி நேர்ந்தால் அந்நாட்டிலுள்ள மழையைக் கண்டு அவன் ஆச்சரியமடைவான். பிறந்ததுமுதல் மழையைப் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்கு அஃது இயற்கையாகத்தோன்றும். மேலெறிந்த கல் கீழேவிழுவது இயற்கையே; அவ்வாறே ஹிப்னாடிஸ முறையில் மனத்தைத் திருப்பினோருக்கு அதில் தக்க சித்தியுண்டாவது இயற்கையாகும்.

ஒருவன் ஹிப்னாடிஸ நிலைமையிலிருந்தால் அவன்பால் இரண்டு குணங்கள் காணப்படும். முதலாவது, அவன் தூக்கத்திலிருந்துகொண்டு ஹிப்னாடிஸம் செய்தவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் தெய்வக்கட்டளையாக நினைத்துத் தவறாமற் செய்து முடிப்பான். இரண்டாவது, செய்கிறவன் சொல்லும் ஒவ்வொரு விஷயத்தையும் செய்யப்பட்டவன் மெய்யென்று நம்புவான். இந்திர ஜாலம், மகேந்திரஜாலம் முதலியவைகளெல்லாம் அவனுக்குத் தோற்றச் செய்யலாம்.

'ஹிப்னாடிஸத் தூக்கத்தில் மந்திரத்தின் உதவியால் உண்டாக்கப்படும் அற்புதக்காட்சிகளைச் சாதாரண விழிப்புநிலையிலிருக்கும் மனிதர்களுக்கும் தகுந்தமந்திரத்தின் உதவியால் தோன்றச்செய்யலாம்' என்று சில ஹிப்னாடிஸக்காரர் அபிப்பிராயங் கொள்ளுகிறார்.

ஒவ்வொருவரும் செய்து பார்க்கத்தக்க அவருடைய இலேசான முறையை இங்கு எழுதுகிறேன். இம்முறையை அநேகர் அனுஷ்டித்து வெற்றிபெறுகிறார்கள். அஃதாவது: ஒருமெல்லிய இருப்புக்கம்பி மெதுவாகச் சூடேறும்படி சிறிது மின்சாரத்தை அக்கம்பியில் ஏற்றவேண்டும்; இந்தக்கம்பியை ஒருவன், தன்சுட்டுவிரலுக்கும் பெருவிரலுக்கு மிடையில் பிடித்துக்கொள்ளவேண்டும்; இவ்வாறு பலமனிதர்கள் வெவ்வேறு கம்பிகளைப் பிடித்துக்கொள்ளலாம்; அவர்கள்கையிலிருக்கும் கம்பி சூடேற ஆரம்பித்தவுடன் அவர்களெல்லோரும், "இப்பொழுது" என்று சொல்லும்படி நாம் அவர்களுக்கு உத்தரவு செய்யவேண்டும்; எல்லோரையும் ஆயத்தமாக இருக்கச்செய்து நாம் மின்சாரப்பெட்டியின் ஊசியை ஒரு சப்தமுண்டாகும்படி திருப்பவேண்டும். உடனே அவர்கள் ஒருவர்பின் ஒருவராக, "இப்பொழுது" என்று சொல்லுவார்கள்; இந்தவேடிக்கையை மறுபடியும் செய்யவேண்டும். அவர்களை ஆயத்தமாயிருக்கச்செய்து நாம் மின்சார ஊசியருகில்போய்ச் சப்தம்செய்யாமல் அதை மற்றொருபக்கம் திருப்பவேண்டும். அப்படித்திருப்பும்போது மின்சாரம் கம்பிகளில் பிரவேசிக்க மாட்டாது; அவற்றில் மின்சாரம் பிரவேசிக்காமலிருப்பதால் உஷ்ணமும் உண்டாகாது. இவ்வாறிருந்தும் அவர்கள் உடனே முன்போலவே "இப்பொழுது" என்றுசொல்வார்கள். இவ்வாறு இன்னும் அநேகம் வேடிக்கைகள் செய்யலாம்; இவற்றில் ஒன்றிலேனும் ஹிப்னாடிஸத்தின் சம்பந்தமில்லை; ஆயினும், வேடிக்கைசெய்யும் பக்குவத்தாலும், செய்யும்போது பேசும் வார்த்தையின் இனிமையாலும் பொய்யானவிஷயங்களைத் தோற்றச்செய்யலாம்.

இதை அநேகமனிதர்களை வைத்துக்கொண்டுசெய்தால் பெரும்பான்மையோர் ஏமாந்துபோவார்கள்; எல்லோரையும் இவ்வாறு விழிப்புநிலையில் ஹிப்னாடிஸம் செய்யலாம்; ஹிப்னாடிஸம் என்னும் பதத்தைக் கேட்டால் அது மகாமந்திரமென்று அநேகர் அஞ்சுகிறார்கள்; அப்பதத்தை உபயோகிக்காமல் வேறு பதங்களை உபயோகித்தால் அவை தப்பு அபிப்பிராயத்தை உண்டுபண்ணுகின்றன. "ஏமாற்றம்," "மயக்கம்" முதலிய பதங்கள் தப்பெண்ணங்களையே உண்டுபண்ணும்; ஹிப்னாடிஸத்தால் தூங்கச்செய்யாமல் விழிப்புநிலையில் தகுந்தவார்த்தைகளை உச்சரித்து ஹிப்னாடிஸம் செய்துவிடலாம்; ஆரியக்கூத்தர்கள் வேடிக்கைபார்க்கும் முழுக்கூட்டத்தாரையும் ஏமாற்றுவதெல்லாம் பேச்சின்வன்மையால்தான்; எத்தனைபேர் கூத்தரிடம் அகப்பட்டு அவர்சொன்னவாறேசெய்கிறார்கள். அவர்களுடைய கைப்புரட்டுச் சாலத்தின் உண்மை தெரியாமல் இன்னும் எத்தனைபேர் குட்டிச்சாத்தானுடைய வேலையென்று நினைக்கிறார்கள்? பீதாம்பரஐயர் சங்கிலியால் கட்டுண்டு கம்பம்விட்டுக் கம்பத்தில்பாயும் சூக்ஷுமம் யார்யாருக்குத் தெரியும்?

சபையில்பேசும் வன்மையுள்ளாருக்கும், மதபோதகர்களுக்கும், பாடுவோருக்கும் இத்தகைய சக்தியுண்டு. அவர்களுடைய தொனியின் சாதுரியத்தால் சபையிலுள்ளாரை முழுதும் மயக்கிவிடுகிறார்கள்; எல்லோரும் தங்களை மறந்து அவர்களுடைய பேச்சில் ஈடுபட்டுப் போகிறார்கள்; அநேகருடைய பிரசங்கத்தைப் பத்திரிகையில் எழுதிப்படித்தால் அநேகம் தவறுகள் காணப்படும்; ஆனால், அவர்கள் பேசும்போது ஒருவரும் ஆக்ஷேபம் செய்யாமல் ஆவலோடு கவனித்துக்கொண்டிருப்பார்கள்; அநேகர் பிரசங்கங் கேட்கும்போதுமட்டும் மிக்க ஆவலோடிருந்து வீடுவந்துசேர்ந்தவுடன் அப்பிரசங்கத்தின் விஷயத்தைச் சிந்தித்துத் தாங்கள் அப்படிப்பட்ட இடத்துக்குப் போனதே தவறென்று நாணமடைகிறார்கள்; நியாயாலயங்களில் கக்ஷிக்காரர்களுக்காக வாதிக்கும் நியாயவாதிகள் நியாயாதிபதிகளின் முன்னர் இல்லாததை உள்ளதாகவும், உள்ளதை இல்லாததாகவும் உறுதிப்படுத்திவிடுகிறார்கள். குற்றவாளியின் குற்றம் வெளிப்படையாகத் தோன்றும் போதும், கோர்ட்டில் பிறக்கும் தீர்மானம் மட்டும் வேறுவிதமாகக் காணப்படுகிறது.

ஹிப்னாடிஸம் செய்யாமல், எண்ணிறந்தோருக்கு அவர் விழிப்புநிலையிலிருக்கும்போதே இல்லாத சப்தங்களையும், வாசனைகளையும், உருவங்களையும் தோன்றச்செய்யலாம்; ஒருமந்திரமூர்த்தி, ஒருவஸ்துவை ஒருவருக்கும் காட்டாமல் தரையில்வைத்து வேறொருவனுடைய கையால் அதை மூடிக்கொள்ளச் சொல்கிறான்; இவன்கையின்கீழிருப்பது ஒருகருந்தேளென்று மந்திரமூர்த்தி சொன்னவுடன் கையால் மூடிக்கொண்டிருந்தவன் கதறிக்கொண்டு அப்பால் விழுகிறான்; பிறகு கையின்கீழிருந்தது கழற்சிக்காயாகத் தெரிகிறது. ஒரு சுவரில் கரிய மையால் ஒருசக்கரம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் நடுவில் ஓர் ஊதாநிறமுள்ள சிறு மணி வைக்கப்பட்டிருக்கிறது; அதிக தூரத்திலிருந்து ஒருவன் அம்மணியை உற்றுநோக்கிக்கொண்டு அதனருகில் வருகிறான்; அம்மணி அவன்கண்ணில் பட்டவுடன் அவனுக்கும் சுவருக்கும் இடையிலுள்ள தூரத்தை

நாம் அளந்துகொள்ளவேண்டும்; இவ்வாறு பத்துப் பன்னிரண்டுமுறை செய்து ஒவ்வொருமுறையும் தூரத்தை அளந்துகொள்ளவேண்டும். பிறகு கருப்பின் நடுவிலுள்ள ஊதாமணியை அவனுக்குத் தெரியாமல் நாம் எடுத்துவிடவேண்டும்; மறுபடியும் அந்த மணியைப் பார்க்கும்படி அவனுக்குச்சொன்னால் முன்போலவே மணி தன் கண்ணுக்குத் தெரிகிறதாகச் சொல்லித் தூரத்தை அளக்கச் சொல்லுவான்; மணி அங்கில்லாதிருந்தும் அவன் கண்ணுக்குத்தெரியும்; பலமுறை மணியைப் பார்த்திருப்பதால் அஃதில்லாதபொழுதும், இவன் கண்ணுக்கு அஃதிருப்பதுபோல்தெரியும். அநேகர் மனக்கலக்கத்திலிருக்கும்போது இல்லாத தோற்றங்களையும், சப்தங்களையும் உணர்வதாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். மக்பத் என்பவன் டங்கன் மன்னனைக் கொல்லப்போகுமுன் இருளில் தன் தலைக்குமேல் வாளாயுதம் தொங்கிக்கொண்டிருந்ததாகக் கண்டானென்று வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதியிருக்கிறார்.

இல்லாதசப்தம் கேட்பதற்கு உதாரணம் என்சொந்த அனுபவத்தில் ஒன்றுண்டு. அஃதாவது: என் இளம்பிராயத்தில் என்னுடையபிதா அகாலமரணத்தால் தேகவியோகமானார்; அவர்நிமித்தம் நானும் என் தாய் முதலிய மற்றையோரும் அதிகமாகப் பிரலாபித்துக்கொண்டிருந்தோம்; இராவுமுழுதும் அவ்வாறிருந்து விடிந்தவுடன் தந்தையின்தேகத்தை அடக்கம் செய்யத் தூக்கிச் சென்றோம். பள்ளிவாயிலில் மையத்துக்காகத் தொழுதுகொண்டிருக்கும்போது வீட்டிலிருந்து தாயாரும் மற்றவர்களும் ஓலமிட்டுக்கொண்டு தெருவழியே ஓடிவந்ததாக என்காதில் ஒரு சப்தம்கேட்டது. தாயார் ஓடிவந்தது உண்மைதானோவென்று அறியும்பொருட்டு அநேகரை அனுப்பிப் பார்க்கச்சொன்னேன்; அப்பொழுது என்னுடையபுத்தி பிறழ்ந்திருப்பதாக எல்லோரும் பரிதாபப்பட்டார்கள்; பொய்யெனத்தோன்றினும் ஓலமிட்டு அழும் ஓசை ஒருமணிநேரம் என்காதில் கேட்டுக்கொண்டிருந்தது. இஃதெல்லாம் மனத்தின் தோற்றமே; அழுகையைக்கேட்ட காதில் அஃதில்லாதபோதும் அவ்வோசை கேட்கிறது.

குவாக்கன்போஸ்.

இரண்டு வினாக்கள்.

1. சென்ற துல்ஹஜ்ஜு மாதம் 15உ சென்னைமாநகருக்குத் தெற்கில் சுமார் 15-மைல் தூரத்திலுள்ள கோவளம் என்னும் ஊருக்குப் போயிருந்தேன்; அங்கே ஒரு மகாத்மா அடக்கமாயிருக்கிறார்கள். அவர்களுடைய இறந்த நாள் வருஷோற்சவம் அப்பொழுது நடைபெற்றது; அவ்வூர் கோரியில் அடக்கமாயிருக்கும் பெரியோரின் சரித்திரத்தைப்பற்றி வினவியபோது அங்குள்ளார் பகர்ந்தவிடையாவது: இத்தஸ்தலத்தில் அடக்கமாயிருப்பவர்களின் பெயர் தமீம் அன்ஸாரியார் என்பது. நம்முடைய அன்பியாநாயகம் முகம்மது முஸ்தபா (அவர்கள்மீதும் அவர்களடியார்கள்மீதும் கடவுளுடைய வாழ்த்தும் சமாதானமும் உண்டாக) அவர்களின் காலத்தில் ஜீவித்திருந்த தமீம் அன்ஸாரியார் இவர்களே; இவர்கள் மவுத்தானபோது தம்முடைய சிஷ்யர்களிடத்தில், தாம் உயிர்நீத்தவுடன் தம்முடைய தேகத்தை ஒருபெட்டியில் வைத்துச் சமுத்திரத்தில் விட்டுவிடும்படி உத்தரவு செய்திருந்தார்கள். அவ்வாறே அவர்கள் தேகம் சமுத்திரத்தில்விடப்பட்டது. அஃது அலைகளால் ஒதுக்கப்பட்டு இக்கோவளத்தில் கரைதட்டிற்று; அப்பொழுது கரையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நுளையர்கள் அப்பெட்டியை எடுக்க யத்தனித்தார்கள்; ஆனால், பெட்டி சமீபத்தில் மிதந்துகொண்டிருந்தும் அவர்கள் பிடிக்கயத்தனிக்கும்போது கைக்கெட்டாத தூரத்தில் ஒதுங்கிக்கொண்டிருந்தது. அதிகநேரம் முயன்றுபார்த்தும் அவர்களால் அப்பெட்டி பிடிபடவில்லை. பிறகு அவர்கள் ஊரிலுள்ள முஸ்லீம்கள் பாற்சென்று தெரிவித்தார்கள். உடனே அவர்கள் கடலோரம் சென்று பெட்டியை எடுத்துவந்து அதைத் திறந்துபார்த்தார்கள். ஓர் எட்டில் பெட்டிக்குள்ளிருந்தவர்களுடைய நாமதேயமும், சரித்திரமும் வரையப்பட்டிருந்தன. பிறகு அந்தமகானுடைய தேகத்தை நல்ல அடக்கம் செய்தார்கள் என்பதே.

இச்சரித்திரத்தில் சிறிது சந்தேகத்துக்கு இடங்காணப்படுகிறது. விஷயத்தின் உண்மை தெரிந்த மேதாவிகள் எனக்குள்ள சந்தேகத்தைத் தெளிவிப்பார்களாக. கி. பி. 570-ல் நம்முடைய பரிசுத்தமான [illegible]

கம் திருவவதாரம் செய்தார்கள்; கி. பி. 711-ல் முதன்முதல் முகம்மது காசீம் என்ற முஸ்லீம் இந்தியாவுக்கு வந்தார்; அதற்குமுன் இந்தியாவில் முஸ்லீம்கள் இல்லை; அவருக்குப்பின்தான் இந்தியாவில்இஸ்லாமார்க்கம் பரவத்தலைப்பட்டது; அன்பியாநாயகம் திருவவதாரம்செய்து 141 வருஷத்துக்குப்பின் இந்தியாவுக்கு முதல்முஸ்லீம்வந்திருக்கிறார். அப்பொழுதே தென்னிந்தியாவில் இஸ்லாமார்க்கம் பரவவில்லை; தென்னிந்தியாவில் இஸ்லாம் பரவியது 500 வருஷத்துக்குமுன்னராகும்; ஆகவே கி.பி. 1400-ல் இங்கே இஸ்லாமார்க்கம் பரவியிருக்கக்கூடும். சமுத்திரத்தில் மிதந்துகொண்டுவந்த அன்ஸாரியாரவர்களின் தேகத்தைக் கோவளத்திலுள்ள முஸ்லீம்கள் அடக்கம்செய்தார்களென்று கதை கூறுவதால் கி. பி. 7-ஆவது நூற்றாண்டில் ஜீவித்திருந்த நாயகமவர்களோடு உடன் வசித்த தமீம் அன்ஸாரியாரவர்கள் எவ்வாறு கி. பி. 14-ஆவது நூற்றாண்டில் கோவளத்தில் அடக்கப்பட்டிருத்தல் சாலும்? கி. பி. 7 - ஆவது நூற்றாண்டில் முஸ்லீம்களால் கோவளத்தில் அடக்கப்பட்டார்கள் என்பதை அங்கீகரித்துக் கொள்வோம்; அவ்வாறாயின் அவர்கள் 700 வருஷகாலம் ஜீவித்திருந்ததற்குச் சரித்திர ஆதாரமுண்டோ? 14 - ஆவது நூற்றாண்டுக்குமுன் கோவளத்தில் முஸ்லீம்கள் இல்லாதிருந்தகால் அன்ஸாரியாரை அநேககாலத்துக்குமுன் அடக்கம்செய்திருக்கக்கூடும் என்பது அசம்பாவிதமாம். 700 வருஷம் உயிரோடில்லாமல் 100 வருஷம்தான் உயிரோடிருந்தார்கள் என்று கொண்டால் மற்ற அறுநூறு வருஷகாலம் அவர்களுடைய தேகம் சமுத்திரத்தில் மிதந்துகொண் டிருந்திருக்கவேண்டும். இஃது எவ்வாறுபொருந்தும்? ஆனால், எகிப்துதேசத்தில் காணப்படும் சவக்குழிகளில் நாலாயிரம் வருஷத்துக்கு முற்பட்ட பிரேதங்களெல்லாம் சிறிதும் அழிபடாமல் காணப்படுகின்றனவென்று உலகத்தார் சொல்லிக்கொள்ளுகிறார்கள்; ஒருகால் இப்பிரேதங்களுக்கு அக்காலத்தோர் உபயோகித்த முறைகளைப் பிற்காலத்தார் அன்ஸாரியாருடைய தேகத்துக்கும் உபயோகித்திருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். அப்பிரேதங்கள் பூமிக்குள் புதைபட்டிருந்தன; அன்ஸாரியாருடைய தேகம் நீர்மேல் மிதந்துகொண்டிருந்தது. ஆதலின், அம்முறை இதற்கு உரியதாகுமோ என்பது சந்தேகம்; தேகத்தை அநேகவருஷம் காப்பாற்றக்கூடிய முறையொன்றிருந்தால் அஃதின்றைக்கும் அனுஷ்டானத்திலிருக்கவேண்டாமா? இன்னும், அந்தப்பெட்டிக்குள்ளிருந்த சீட்டு இப்பொழுது அகப்படவில்லை; சீட்டைக்காட்டாமல் அவ்வாறு ஒன்று இருந்ததாகச் சொன்னால் எவ்வாறு நம்புவது? எல்லாம் தெய்விகத்தால் நடைபெறக்கூடுமென்று சிலர்சமாதானம் சொல்லுவார்கள்; அன்ஸாரியாரவர்கள் அரபியாவில் சமுத்திரத்தில் விடப்பட்டநாளும் கோவளத்தில் அவர்கள் அடக்கப்பட்டநாளும் சரித்திர ஆதாரத்தோடு தெரிந்தால் மட்டும் அவர்கள்தேகம் அழிபடாமல் 600 ௵ சமுத்திரத்தில் மிதந்துகொண்டிருந்த தெய்விகம் உண்மையாகும். முற்காலத்திலிருந்த தமீம் அன்ஸாரியாருடைய பெயரை வைத்துக்கொண்டு வேறொரு மகான் ஏன் இருந்திருப்பது முடியாது? இன்றைக்கும் பெரியோர்களுடைய நாமத்தை நாம் இட்டுக்கொள்வதில்லையா? இதற்குச் சமாதானம் தெரிந்தவர்கள் சரித்திர ஆதாரத்தோடு பூர்வபட்சம் செய்வார்களென்று நம்புகிறேன்.

2. உலகத்தில் சரித்திரமென்கிற தீபம் விளங்க ஆரம்பித்ததுமுதல் மனிதர்கள் நாலுமுதல் ஆறடிவரையில் அளவுள்ளவர்களாகவே பிறந்திருக்கிறார்கள்; சென்ற இரண்டாயிரவருஷகாலத்துக்குள் வசித்திருந்த மனிதர்களின் உயரம் இதுதான்; ஆனால், அப்போதைக்கப்போது சில மனிதர்கள் மிக்க உயரமாயிருந்திருக்கிறார்கள்; பதினைந்தடிக்குமேல் யாரும்உயரமாயிருந்ததில்லை; ஆனால், இப்பொழுதுதென்னாட்டில் முத்துப்பேட்டையென்னும் நகரில் ஒருபெரியவர்களின் கோரி யிருக்கிறது; அதில்அடக்கமாயிருப்பவர்களின்பெயர் ஷெய்கு தாஊத் ஒலி அவர்களென்பதாகும்; அவர்களுடைய கல்லறை (கபர்)மிக்க நீளமாகக் காணப்படுகிறது. அதன் உண்மைநீளத்தை நான் அளந்துபார்த்ததில்லை; ஆனால், இயற்கைக்குமாறாக அந்தக் கல்லறை மிக்கநீளமாயிருக்கிறது; அவர்களுடைய சரித்திரத்தையும், அவர்கள் உண்மையில் இப்பொழுதிருப்பது போல் அவ்வளவு உயரமாகத்தானோ இருந்தார்களென்பதையும் அறிஞர்கள் விளக்கி யெழுதுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

மெய்ஞ்ஞானந் தேடுவோன்.

* * *

ம-௱-௱-ஸ்ரீ, சா. ம. பீ. காதர் மைதீன் என்பவரால்
இயற்றப்பட்ட

“கிரிஸ்தவர்களுக்கோர் நற்செய்தி”

என்னும் புத்தகத்திற்குக்
கண்டனம்.

“இஸ்லாம் நேசன்” பத்திராதிபருக்கு.

கனம் பத்திராதிபரே !

தாங்கள் தயவாகத் தங்கள் பத்திரிகை வாயிலாக எழுத அனுமதி அளித்தற்பொருட்டுத் தங்களுக்கு மிக்க வந்தனம்.

மேற்படி புத்தக நூலாசிரியர் கிரிஸ்தவர்கள் சொல்லும் அநேகங் கோட்பாடுகள் தவறு என்று அநேகவகையாய்ச் சாதிக்கிறார்.ஒவ்வொரு அதிகாரமாக உற்றுக் கவனிப்பது கிரிஸ்தவனாகிய என்மேல் விழுந்த கடமை. இதை வாசிக்கும் முகம்மதிய சகோதரர்களே! உங்களுக்கு எம் பெருமான் இயேசு திருவள்ளல், யாம் எழுதப்புகும் சத்தியங்களை உங்கள் இருதயங்களில் நிலைநிறுத்தவும் உங்கள் மனக்கண்களைத் திறந்தருளவும் வேண்டுமென்று அவர் திருப்பாதங்களில் அடியேன் கெஞ்சுகின்றனன். அவரது கிருபை நம்மனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

1. ஏசு கடவுளல்லரெனல்.

3-ம் பக்கத்தில் “தகப்பனும் மகனும் ஒன்றானாலன்றோ கடவுளும் ஏசுவும் ஒன்றாதல் கூடும்” என்றார்.

திரியேகத்துவ உபதேசமானது கிரிஸ்து மார்க்கத்தின் மற்றப்போதகங்களை இணைத்தும் உறுதிப்படுத்தியும் வருகிறது. கிரிஸ்துமார்க்கத்தின் உபதேசங்களெல்லாம் இஃது இல்லாமல் முற்றுப்பெறுகிறதில்லை.

“தாயைப்போல் பிள்ளை நூலைப்போல்சேலை” என்னும்தமிழ்ப் பழமொழியை அநேகர்கேட்டிருக்கலாம். தகப்பனுடைய அம்சம், அறிகுறிகள், குணம் மகன்பால்அமைந்துஇருப்பது நியாயமானஉலகஇயற்கை. ஆகவே கடவுளுடைய திவ்ய இலக்ஷணங்களாகிய பரிசுத்தம், சர்வஞானம், சர்வவல்லமை, நீதி முதலான குணங்கள் பூரணமாய் நிறைந்த இயேசுஒன்றாதல் கூடாதா? கூடும். யோ. 10. 30. அதே பக்கத்தில் “ஏசுவுக்குப் பிதாவாக இருப்பவர்,அவரே ஏனையர்க்கும் பிதாவாக இருக்கின்றமை பற்றி எல்லாரும் கடவுள் ஆவார்கள்” என்பது புத்திக்கு விரோதமான சாதிப்பாய் இருக்கிறது. நம் ஏழாவது எட்வர்ட் அரசர் தம் மக்களுக்குத் தகப்பனே; குடிகளுக்கும் தகப்பன்போல் இருந்தார். அநேகர் தகப்பன் என்றே நினைத்தும் பேசியும் வந்தார்கள். அக்காரணம் பற்றி எட்வர்ட் இராஜாவுக்கும் அவர்மக்கட்கும் இருக்கும் ஐக்கியம், அன்பு மற்றவர்களுக்கு இருக்கும் அன்போடு ஒற்றுமையாய்ப் பேசலாமா? முழு அபத்தம். “என் சகோதரர்களிடத்திற் சென்று என்பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என்தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் எழுந்து போகின்றேன்” என்னும் இவ்வாக்கியம் இயேசு மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என்னும் சத்தியத்தை ரூபிக்கிறதுமன்றி இயேசுவின் பிதாவாகிய தேவன் எல்லாருக்கும் பிதாவாயிருக்கிற சத்தியத்தை உறுதிப்படுத்தியும் இயேசுவின் தெய்விகத் தன்மையையும் திரியேகத்தில் இரண்டாம் ஆளாய் இருந்தார் என்ற உண்மையையும் பலத்த அத்தாட்சியாக்குகிறது. தேவவசனங்களை வியாக்கியானம் செய்வதில் தேவ உதவியைத்தேடிச் சத்தியத்தைக்காணப் பிரயாசைப்படவேண்டுமேயல்லாமல் வீணாய்ப் பரிகாசமாய்க் கேலிக்காக எழுதுவது சுவரை வைக்காமல் சித்திரம் எழுதப் பிரயாசைப்படுவதுபோல் இருக்கிறது. நாலு சுவிசேஷங்களில் பற்பலகாலங்களில் தேவ ஆவியால் எழுதப்பட்ட அற்புதமூர்த்தியாகிய இயேசுவை உற்றுக்கவனிப்போமாக; மகாசிறந்த நடக்கையும் சம்பூர்ண லட்சணங்களும் நிறைந்த இவரை வரையக்கூடியவர்யார்? அது மனுஷனால் முடியுமோ? முடியாதே; மேலும் ஆதியாகமம் 6, 2, லும், யோபு. 1, 6 லும், மத். 5, 45, 48 லும், உள்ளவசனங்களை எடுத்துக்காட்டி, கடவுளுக்கு அநேககுமாரர்களுண்டானபடியால் அவர்கள் எல்லாம் ஏன் கடவுளாகவில்லை என்ற கேள்வி கேட்கிறார்.

அதுமாத்திரமல்ல. அவர்கள் கடவுளல்ல என்றால் ஏசுமாத்திரம் எப்படிக் கடவுளாவார் என்ற சாதுரியமான கேள்வியும் கேட்கிறார்.

கடவுளுக்குச் சிருஷ்டியின்படி பூவுலகில் மனிதஜென்மமெடுத்த ஒவ்வொரு ஆத்துமாவும் பிள்ளைதான். சிருஷ்டிகர்வேறே, சிருஷ்டிவேறே. சிருஷ்டிகருக்கும், சிருஷ்டிக்கும் எவ்வளவோவித்தியாசம். மேலேகாட்டிய வாக்கியங்களில் குறிக்கப்பட்டவர்கள் சிருஷ்டிகளேயொழிய, சிருஷ்டிகர் அல்ல. இயேசுவோ சிருஷ்டிகர். யோ. 8. 58ல் "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்றார். பிரி, பவுல்கொலோ 1. 17-ல் எல்லாம் அவருக்குள் இருக்கிறது, அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்" என்கிறார். இன்னும் போ.3. 13 லும், பிலி. 2. 6, 11 லும் அவர் மனிதத்தன்மையைப் போர்வையாகத்தரித்த தேவன் என்று காட்டப்பட்டிருக்கிறதல்லவா? சிருஷ்டியைச் சிருஷ்டிகரோடு சமமாக்குவது தேவத்தன்மையை மட்டுப் படுத்துவதுபோ லிருக்கிறதே.

கொலே. 15-ல் அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும் சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர் என்றிருக்கிறதே. இஃது எவ்வளவாய் இயேசுவின் தெய்விகத்தன்மையை விளக்குகிறது; இதேபோதுமானது. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ?

(இன்னும்வரும்.)

சாமுவேல் தாமஸ் நாடார்.

[நான் ஒரு சிநேகிதரோடு பேசிக்கொண்டு இருக்கும்போது புரூப் ஷீட்டு வந்தது. அதை நானும் அவரும் ஒத்துப்பார்த்துக்கொண்டிருக்கும்போது மேலே பிரசுரிக்கப்பட்டிருக்கிற "நற்செய்தியின் கண்டனை"யை அவர் பார்க்கலானார். அவர் அதற்கொரு மறுப்பெழுதித் தருவதாயும், அதை இந்தப்பத்திரிகையில் பிரசுரஞ்செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டபடி இது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ப-ர்.]

கிரிஸ்தவர்களுக்கோரு நற்செய்தி என்னும் புத்தகத்திற்கு மிஸ்டர், சாமுவேல் தாமஸ் நாடார் அவர்கள் எழுதிய கண்டனச் சூறாவளி.

* * *

கிரிஸ்தவர்களுக்கொரு நற்செய்தி யென்னும் புத்தகம் நன்னடையில் அமைந்து தர்க்கயுக்திகளோடு இயைந்து முன்னொடு பின்முரணின்றி இருத்தலை நாடார் அவர்கள் அமைதியாயிருந்து நாடாது ஏதேதோ நினைத்தவாறு எழுதியதை நோக்க, பரிதாபமும் வியப்புமுண்டாகின்றன. கிரிஸ்தவர்கள் சொல்லும் கோட்பாடுகள் பல தவறேயென்று பலபிரமாணங்களாலும் ஏதுக்களாலும் நிலைநிறுத்தப் பெற்றிருக்கிற "நற்செய்தியை" உற்றுநோக்குபவர், நண்பர்கண்டனம் நகைப்புக்கிடமாமென்றே கொள்வர். நற்செய்தியிலுள்ள ஒவ்வோர் அதிகாரத்தையும் உற்றுக்கவனிப்பது தம்மேல் விழுந்த கடமையென்று நண்பர் சொன்னாலும் அதிலுள்ள ஒரு சிறுவாக்கியத்தையேனும் உண்மையாய் உற்றுநோக்கிக் கவனித்தவரல்லர் என்பதைப் பின்வரும் விஷயங்களால் இதைப்படிப்போர் நன்கறிவார்கள்.

1. பூர்வபட்சம்.

ஏசு கடவுளல்லரேனல்:—

' 3-ம் பக்கத்தில், "தகப்பனும் மகனு மொன்றானாலன்றோ கடவுளும் ஏசுவும் ஒன்றாதல்கூடும்?" என்றார். திரியேகத்துவ உபதேசமானது கிரிஸ்தவ மார்க்கத்தின் மற்றப்போதகங்களையிணைத்தும், உறுதிப்படுத்தியும் வருகின்றது. கிரிஸ்து மார்க்கத்தின் உபதேசங்களெல்லாம் இஃது இல்லாமல் முற்றுப் பெறுகிறதில்லை. "தாயைப் போல் பிள்ளை நூலைப்போல் சேலை" என்னும் தமிழ்ப் பழமொழியை அநேகர் கேட்

ருக்கலாம். தகப்பனுடைய அம்சம் அறிகுறிகள் குணம் மகன்பால் அமைந்திருப்பது நியாயமான உலகவியற்கை. ஆகவே கடவுளுடைய திவ்ய இலக்ஷணங்களாகிய பரிசுத்தம், சர்வஞானம், சர்வவல்லமை, நீதி முதலான குணங்கள் பூரணமாய் நிறைந்த இயேசு ஒன்றாதல் கூடாதா? கூடும். யோ. 10, 30. ’ என்று நண்பர் வரைந்திருக்கிறார்.

1. சித்தாந்தம்.

“தகப்பனும் மகனும் ஒன்றானாலன்றோ கடவுளும் ஏசுவும் ஒன்றாதல்கூடும்?” என்று மட்டும் ஆசிரியர் “நற்செய்தி”யில் எழுதினாரல்லர். பின்னை; “ஏசுவைக் கடவுளின் குமாரரென்றும், அவர் கடவுளே என்றுங்கூறும் கிறிஸ்தவ நேசர்களே! அப்பனும் மகனும் ஒன்றானாலன்றோ கடவுளும் ஏசுவும் ஒன்றாதல் கூடும்?” என்று வரைந்திருக்கிறார். ஒருவன் தனக்குத்தானே அப்பனும் மகனுமாக விருத்தல் எங்ஙனம் அமையும்? ஒருவன் தானல்லாத ஒருவனுக்குக் குமாரனாயும், அப்படியே மற்றொருவனுக்குப் பிதாவாகவும் இருக்கலாம். இவ்வாறு ஏசுவல்லாத ஒருவருக்கு ஏசு குமாரராகவும், அப்படியே மற்றொருவருக்குப் பிதாவாகவும் இருக்கலாமேயன்றி, ஏசுவுக்குத் தகப்பனாயிருக்கிறவரும், ஏசுவால் குமாரரென் றழைக்கப்படுகிறவரும், ஏசுவும் ஒன்றாதல் கூடாதன்றே?

ஒருவஸ்துத் தனக்குக் காரணமான வஸ்துவாய் இருக்குமென்பது தன்னைப்பற்றுதல் என்னும் குற்றமாம். ஏசு பிதாவாயுமிருக்கிறார் என்பது தன்னைப்பற்றுதல் என்னுங் குற்றத்திற்கு இலக்காமென்பதை நண்பரறிந்தால் இனி யொருபோதும் ஏசுவும் பிதாவும் ஒன்றென்று கூறார் கூறார். ஒருவன் தன்னுடைய தோளில் தானே ஏறிக்குதிப்ப துண்டாயின் பிதாவும் குமாரனும் ஒன்றாதல் கூடும். நண்பர் தகப்பனைப்போல் பிள்ளையென்று பழமொழி கூறாது, “தாயைப்போல் பிள்ளை” என்று கூறியது தாயினுடைய அம்சம் அறிகுறிகள் குணம் பிள்ளைபாலமைந்திருக்குமென்பதை நிரூபிக்கு யென்றன்றோ இதைக் கூறிப்போந்தார்? இதப்பழமொழியின்படி மானுஷீகத் தன்மையுள்ள மரி அம்மாளின் குமாரரான ஏசு மானுஷீகரேயன்றிப் பிறிதன்று.

தாயைப்போல் பிள்ளையென்ற இவர் ஏசுவைப்போன்றே மரியம்மாளை நாலாளாய்வைத்து ஏன் வணங்குகிறதில்லை? அப்படி வணங்காவிடினும், அப்படி வணங்குபவராகிய கத்தோலிக் கிறிஸ்தவரையும், குலன் ஜீதியன்ஸு கிறிஸ்தவரையும், மிரியாமாயிட்டுக் கிறிஸ்தவரையும் தூற்றுவது ஒழுங்காமா? வாயால் மாத்திரம் ஒன்றென்று சொல்லிக்காரியத்தில் அப்படியில்லாத நண்பரை என்னென்று நாம் சொல்வது? அன்றியும், தாய் கற்புக்கரசியாயும், பெண் வேசியாயுமிருப்பதை நம்முடைய கண்கள் பார்க்கின்றன. இதில் தாயினுடைய அம்சம் குணம் குறிகள் மகளிடங் காணப்படுகின்றன என்று அறிவுள்ளவனெவனும் சொல்லிச் சாதிக்கமாட்டான். ஆகவே இந்த உவமானம் பயனற்றதாய் முடிந்ததென்க.

நண்பர், தகப்பனும் மகனுமொன்றென்றுநிரூபிக்கத் தாயைப்போல் பிள்ளையென்னும் பழமொழியை எடுத்துக் கூறியிருக்கிறதாகத் தெரிகிறது. தகப்பனைப்போல மகன் என்னும் பாட்டிப்பழமொழியொன்று நண்பருக்குக் கிட்டாமையினாலே, அப்பனும் மகனும் ஒன்று என்னும்பழமொழி உலகத்தில்வழங்கினால் இவரது மதக்கோட்பாட்டுக்கு அஃது ஓர் அஸ்திவாரமா யிருக்குமெனக் கருதி, அப்பனுடைய குணம் குறிகள் மகன்பால் அமைந்திருப்பது நியாயமான உலகவியற்கை என்றார்போலும்.

தகப்பனுடைய குணங் குறிகள் மகன்பால் அமைந்திருக்கவேண்டியதவசியமானால், யாக்கோபு எப்படி யோசேப்பை நேசித்து வந்தானோ அப்படியே அவன் மக்களெல்லாரும் யோசேப்பை நேசியாமைக்குக்காரணமென்ன? நேசியாது போனதோடு தங்கள் தகப்பனைக் கண்ணீருடன் பூமியிலிறங்கச்செய்ய யோசேப்பை விற்றுவிட்டு மிருகம் கொன்றுவிட்டதென்று பொய்யுங் கூறினார்களல்லவா? தகப்பனுடைய குணங் குறிகள் மக்களிடம் அமைந்திருந்தால் தகப்பனைப்போலவே யோசேப்பை அவர்களும் நேசித்திருக்க வேண்டுமன்றோ?

அன்றியும், மத்தேயு வம்சஅட்டவணையை வகுப்புப்படுத்திக் காட்டுவதில், பதினேழாம் வம்சத்தில் இரண்டாம்வகுப்பில் பேர்கள் அதிகம் வந்தபடியால் தொகையைச் சரிக்கட்டும்படி மூன்றுபேர்களை விட்டுவிட்டாரென்றும், அப்படி விடப்பட்டவர்கள்பேர் பிரஸ்தாபமற்றவர்களென்றும் பைபிள் வியாக்கியானப் புத்தகத்தில் கண்டிருப்பது நண்பர்கொள்கைப்படி தவறன்றோ? ஏனென்றால், அப்பனுடைய குணங்குறிகள் மகன்பால் அமைந்திருக்க வேண்டிய தவசியமாதலின் இம்மூவர்களின் பிதாக்களைப்போலவே இவர்களுக்கும் தகப்பனுடைய குணம் குறிகள் அமைந்து பேர் பிரஸ்தாபமுடையவர்களாய் இருக்கவேண்டியதிருக்க, மத்தேயு இவர்களை அவர்களின் பிதாக்களைப்போல அல்லரென்று தள்ளிவிட்டது சரியன்றன்றோ?

மத்தேயுவுக்கு நண்பருக்குத் தெரிந்த நியாயம் தெரியாமற் போயிற்றே. ஆகவே இதனால் அப்பனுடைய குணம்குறிமுதலியன மகன்பால் அமைந்துதானிருக்கவேண்டுமென்பது அவசியமில்லையெனப்பைபிளே நமக்குத் தெரிவிக்கிறதன்றோ? இன்னும் இதுபோன்றவிஷயங்கள் பைபிளில் பல இருக்கின்றன. அதற்கோர் அட்டவணை வேண்டுமானாலும் நண்பருக்குக் கொடுக்கிறேன். தகப்பனுடைய குணங்குறிகள் மகன்பால் அமைந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லையெனப் பைபிளைக்கொண்டே காட்டினோம். இனிவேறுவகையானும் அது பொருந்துகின்றதா எனப்பார்ப்போம். புரோட்ட ஸ்டாண்டு கிரிஸ்தவராகிய எட்டாவது ஹென்றி அரசருடைய புத்திரிகளில் ஒருத்தி கத்தோலிக்காயிருந்து புரோட்டஸ்டாண்டரைக் கொலைசெய்ததும், மற்றொருத்தி புரோட்ட ஸ்டாண்டு மார்க்கத்திலிருந்து கத்தோலிக்கரைக் கொன்றதும் ஏனோ? தகப்பனுடைய குணம் அறி குறிகள் அம்சம் இந்தப்பெண்மணிகளிடத்தில் அமைந்திருக்கவேண்டியது உலகவியற்கையும் நியாயமுமானால் இந்த அனர்த்தங்களெல்லாம் விளையக்கூடாதல்லவா? இஃதெல்லாமிருக்கட்டும். இந்த உவமானத்தை நண்பர்பாலேற்றிக் கொஞ்சம்பார்ப்போம். நண்பருடைய மூலப்பாட்டனாவது இந்துவாய் இருத்தல் வேண்டும். அவருடையகுணம் முதலியவெல்லாம் இந்துமார்க்கத்திலேயே அழுந்திக்கிடத்தல் வேண்டுமன்றோ? அப்படியாயின், அவர் மகன் மகன் தலைமுறையில்வந்த இவரும் இந்துமார்க்கத்தின ராகாது போவரா? ஐயோ! இந்த உவமானத்தால் தன்னையே இந்துமார்க்கத்தினராக ஆக்கிக்கொண்ட இந்தப்புத்திசாலியின் உபதேசம் முஸ்லீம்களின் இருதயத்திற் பதியவேண்டுமாமே. இவர் ஸ்தோத்திரித்த ஏசு இவரையே பரிதபிக்க விட்டாரென்றால், ஏனையோரை யென்செய்யார்? ஆகவே தகப்பனுடைய குணங்குறிகள் மகன்பால் அமைந்திருப்பது உலகவியற்கையான நியாயமென்பது கூடாது.

தகப்பனைப்போல மகனும் என்பதை நண்பர் எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்து வரைந்திருப்பார். அவர் அபிப்பிராயப்படியே தகப்பனுடைய அம்சம் அறிகுறி குணம் மகன்பால் அமைந்திருக்குமென்று வைத்துப்பார்த்தாலுங்கூட ஏசுவுக்குத் தெய்வீகம் சித்திக்கவில்லை என்பதை விளக்குவாம்.

தகப்பனிடத்திலுள்ள குணம் அம்சம் அறிகுறிகள் மகனிடத்தில் இருப்பதாக வைத்துக்கொண்டாலும், ஒருவரும் மகனையும், தகப்பனையும் ஒன்றென்று கூறுவதில்லை. அதுபோலவே, கடவுளுடைய திவ்ய இலக்ஷணங்கள், ஏசுவினிடத்தி லிருந்ததாக வைத்துக்கொண்டாலுங்கூட கடவுளும் ஏசுவும் ஒன்றாதல் இல்லை.

இனி, "நூலைப்போல் சீலை" என்னும் பழமொழியையும் சிறிது ஆராய்வாம். நூலின்கண் நெய்தலாதி தொழிலமைப்பே சீலையென்று சொல்லப்படுகின்றது. இதற்கு உவமேயமாவது, நூல் ஸ்தானத்தில் பிதாவும், சீலை ஸ்தானத்தில் குமாரனுமாம்? நூலின்கண் நெய்தலாதிதொழிலமைப்பிற்கே கற்பிதமாய்ச் சீலை என்னும் பெயர் எப்படித்தரப்பட்டதோ, அப்படியே பிதாவினிடத்தில் ஏதோதொழில் நடந்து, அத்தொழிலுக்கே குமாரன் என்னும் பெயர் கற்பனையாய்க் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். நூலைப்போல் சீலை என்னுமிடத்துச் சீலை யுண்மைப்பொருளல்லாது போல, பிதாவைப்போல் ஏசு உண்மைப்பொருளல்ல. **ஆனால் பொய்ப்பொருளாம். இதனால், ஏசு இரண்டாளாய் இருந்தாரென்பது பயனற்றதாம்.**

ஏசுவினிடத்துப் பரிசுத்தம், சர்வஞானம், சர்வவல்லமை, நீதி முதலான குணங்கள் இருந்தனவா என்பதைக் கவனிப்பாம்.

1. **பரிசுத்தம்.** ஏசு பரிசுத்தராயிருந்தால் அவரிடத்தில் அசுத்தமாகிய சாத்தான் போய் அவரை மலையின்மேல் தூக்கிவைத்துக்கொண்டு என்னைத் தாழவிழுந்து பணிந்துகொள்ளுமென்று சொல்வானேன்? பரிசுத்தம் ஒளியின் தன்மையது. அசுத்தம் இருளின் தன்மையது. ஒளியினிடத்து இருள் செல்லாததுபோல, பரிசுத்தத்தினிடத்தில் அசுத்தம் செல்லாது. ஏசுவைப் பரிசுத்தரென்று சொல்வதானால், அவரிடத்துச் சாத்தான் சென்றிருக்கக் கூடாதன்றோ? ஏசு பரிசுத்த மல்லாதவராய் இருந்தமைபற்றியன்றோ பரிசுத்தமில்லாத சாத்தான் அவரிடத்துப்போனான்? அன்றியும் ஏசுவைச் சாத்தான் மிகைத்துத் தூக்கிக்கொண்டு போகிறவனாக இருந்ததால் ஏசு சுத்தர் அன்றென்பது தெளிவாம்.

2. **சர்வஞானம்.** மத். 21, 19. ஏசு பசியால் வருந்திப் பசியைத்தீர்த்துக்கொள்ள ஓர் அத்திமரத்தண்டைவந்து பார்க்கையில், அம்மரத்தில் பழமில்லா திருந்ததால் பசியின் கொடுமையா லதைச்சபித்தார். பழங் கொடுக்காத காலத்தில் அத்திமரம் பழந்தருமா? தாராதபோது அதையறியாமல் சபித்ததும், பழமிருக்குமென்றெண்ணி மரத்தண்டைவந்து ஏமாந்து போனதும்தான் சர்வஞானத்தின் இலக்கணமோ? (மாற்கு. 13, 32. மத். 24, 36.) “அந்தநாளையும், அந்தநாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனு மறியான். பரலோகத்திலுள்ள தூதருமறியார். குமாரரும் (ஏசுவும்) அறியார்” என்று ஏசுவே கூறும்போது அவரைச் சர்வஞானி எனக் கூறல், தலையில்லாத ஒருவன் தடிகொண்டு ஓடினான் என்பதற் கிலக்காம்.

3. **சர்வ வல்லமை.** ஏசுவானவர் தம்மை யூதர்கள்பிடித்துக் கொன்றுவிடுவார்களென் றஞ்சி, (லூக்கா. 22, 36, 38.) “பட்டய மில்லாதவன் தன் வஸ்திரத்தைவிற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்” என்றுசொல்லித் தமக்குச் சர்வவல்லமை இல்லையென்பதைத் தெளிவாய்க் காட்டியிருக்கிறார். அவரை எங்ஙனம் சர்வவல்லமை யுள்ளவரென்று கூசாமற் கூறலாம்? அன்றியும் (மத். 26, 39, 42.) ஏசு சற்று அப்புறம்போய் முகங் குப்புறவிழுந்து, “என்பிதாவே! இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆயினும் என்சித்தத்தின்படியல்ல; உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது” என்று ஜெபித்தார். அவர் மறுபடியும் இரண்டாம்தரம் போய், “பிதாவே! இந்தப்பாத்திரத்தில் (மரணத்தில்) நான் பானம்பண்ணினாலொழிய இஃது என்னைவிட்டு நீங்கக் கூடாதாகின் உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது,” என்று ஜெபம் பண்ணினார். சாவுக்குப்பயந்து கடவுளைநோக்கித் தன்னைக்காப்பாற்றும்படி பிரார்த்தித்தும், உமது சித்தத்தின்படி ஆகக்கடவதென்று கடவுளுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்து மிருக்கிற ஏசு எங்ஙனம் சர்வவல்லமையுள்ளவராவர்? தம்முடைய உயிரிடத்து எவ்வளவோ பற்றும் ஆசையும் ஏசு வைத்திருந்தபோதிலும், தம்மைத்தாம் காப்பாற்றும் வன்மை யில்லாததனாலே தேவனுடைய சித்தத்திற்கு முறையே தம்மை யொப்புக்கொடுத்தபின்னர், தேவன் சித்தத்தின்படி அவர் மரணத்தை அடையும் போது தேவனுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை மறுத்து, “என்தேவனே! என்தேவனே!! என்னைக் கைவிட்டீரே” என்றிறந்த ஏசுவோ சர்வவல்லமை யுள்ளவராவர்? தேவனுக்குக்கொடுத்த வாக்குத்தத்தத்தை யேனும் மரணபரியந்தம் இருதயத்தில் அடக்கிவைக்கக் கூட வல்லமையற்ற ஏசு அற்பவல்லமை யுடையவராயாவது இருந்ததில்லை யென்பதைச் செவ்வனே அறியலாம்.

4. **நீதி.** (லூக்கா. 8, 32. 33.) ஒருவனைப் பிடித்திருந்த பல பைசாசுகள் ஆயிரக்கணக்கான பன்றிகளை யிரையாகக் கேட்டபோது, கிறிஸ்து அப்படியே உத்தரவு கொடுத்தார். அவை பன்றிகளைக் கடலில் அமிழ்த்திக் கொன்று விட்டன. இதனால் பன்றியையுடையவனுக்கு எவ்வளவு நஷ்டம்? அன்றியும், (யோ. 12, 15.) ஏசு தமக்குச் சொந்தமல்லாத கழுதையைக் கொண்டுவரும்படி செய்து அதில் ஏறிச்சென்றதனால் கழுதையையுடையவனுக்கு எவ்வளவு நஷ்டத்தை யுண்டாக்கினார்? ஐயோ! இந்தவிஷயங்களில் ஏசு எவ்வளவு நீதித் தவறு செய்திருக்கிறார். இவரை நீதியுடையவர் என்று சொல்வது கூடாது! கூடாது!!

நண்பர், ஒருவேளை ஏசு மனித்தன்மையும், தேவத்தன்மையு முடையவராதலால் கடவுள் தன்மையில் பரிசுத்தமும் சர்வஞானமும், சர்வவல்லமையும், நீதியும் இருந்தனவென்றும், மனிதத்தன்மையில் அபரிசுத்தமும், அஞ்ஞானமும், வல்லமையின்மையும், அநீதியும் இருந்தனவென்று சொல்லின், ஒரு வியாபகப் பொருளிடத்து ஞானமும், அஞ்ஞானமும், பரிசுத்தமும், அபரிசுத்தமும், சர்வவல்லமையும், வல்லமையின்மையும், நீதியும், அநீதியும் இருப்பதாகச் சொல்லக்கூடாது. நேர் மாறான இரண்டு குணங்கள் ஒருபொருளின் கண்ணிரா. எப்படி ஒரு தடியில் நெடுமையும், குறுமையுமிராவோ, அப்படியே ஞானமும் அஞ்ஞானமும், பரிசுத்தமும், அபரிசுத்தமும், வல்லமையும், வல்லமையின்மையும், நீதியும், அநீதியுமிராவென்க.

(யோவான். 10, 30.) என்று மேற்கோளொன்று நண்பர் காட்டியிருக்கிறா ரன்றோ? அதையும் பார்ப்போம். மேற்படிவாக்கியத்தில், (ஏசு) 'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோமென்றார்' என்றிருக்கிறது. இதனால் இருவரும் ஒருவராவது எங்ஙனம் அமையும்? தலைவன் இடுங் கட்டளையை அங்கீகரித்துநடக்கும் ஒருவர், "நானும் தலைவனும் ஒன்றாயிருக்கிறோம்" என்றால் மனப்பொருத்தத்தி லொன்றாவார்களேயன்றி, இரண்டுமனிதர்களும் ஒன்றாவார்களா? பொருளால் ஒன்றென்றுரைப்பது விபரீதம். நானும் என்பெண்சாதியும் ஒன்றென்று ஒருவன் உரைப்பானால் நண்பர் பொருளால் ஒன்றென்றுரைப்பாரோ? பொருளாலொன்றென்னும் போலி அபிப்பிராயம் நண்பருடையதே யன்றி, ஏசுவின் அபிப்பிராயமில்லை. இதை அவர் வாக்கியத்தால் நிரூபிப்பாம். (ஷை யோவான். 17, 20-23.) " ஆ பிதாவே! நீர் என்னை யனுப்பியதை உலகத்தார் விசுவாசிக்கத் தக்கதாக நீர் என்னிலேயும், நாம் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களும் (சீஷர்கள்) நம்மில் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். அல்லாமலும் நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் (சீஷர்கள்) ஒன்றாயிருக்கும்படி" என்று ஏசு கூறினார். நண்பர் கூற்றுப்படி ஏசுவும் சீஷர்களும் ஒரே பொருளாகவேண்டும். ஏசுவும் பலசீஷர்களும் ஒரேபொருளானால் பலசீஷர்களும் கடவுளாக வேண்டும். அப்போது பல சீஷர்களும், ஓர் ஏசுவும், ஏசுவின் ஒருபிதாவுமாகிய இவர்களெல்லாம் ஒரே பொருளாம்.

ஏசு, "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்றதற்கு, யூதர்கள் அவரைக் கொலைசெய்யக் கல்லாலெறியும்போது அவ்யூதர்களைநோக்கி, "பைபிளில் உங்களையெல்லாம்(யோவான். 10, 34, 35, 36.) கடவுளென்று சொல்லியிருக்க, நான் என்னைத்தேவகுமாரன் என்று சொல்லியது தேவதூஷணையாகுமா?" என்றார். தாம் தேவகுமார ரென்று சொல்லித் தம்மைவிட யூதர்களை யுயர்வாக்கி, அவர்களைக் கடவுளென்று பைபிள் ஆதாரத்தின் மேல் அந்த ஏசுவே ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்கிறார். இதனால், நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோமென்பதற்குப் பொருள் இருவரும் ஒருவரல்ல, வேறுவேறு என்று அறியலாம்.

கிரிஸ்தவமார்க்கத்தின் மற்றப்போதகங்களை யிணைத்தும், உறுதிப்படுத்தியும் வருவதாய்ச் சொல்லுகிற திரியேகத்துவத்தையும் கவனிப்பாம். நண்பர் திரியேகத்துவத்தைப்பற்றிப் பிரமாணம்போல் எழுதினாரேயன்றி, அதை விவரித்து யுக்திப்பிரமாணங்களோடு இன்னும் விவரித்தார் அல்லர். இனியேனும் விவரிப்பாராக; ஆயின் நன்று.

திரியேகத்துவம் என்னும் சொல் பைபிளில் இல்லவே இல்லை. அப்படி இருக்கும்போது நண்பர் அதை எங்கு கண்டுபிடித்தனரோ அறியோம். (யோவான். 5, 7.)"பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர்: பிதா, வார்த்தை, (ஏசு) பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்று" என்று எழுதப்பட்டிருக்கிறதென்றால், ஷை வாக்கியம் கிரீக் பிரதியில் இல்லாமையாலும், அசம்பாவிதமாய் மூன்றும் ஒன்றுஎனச் சாதிக்கப் பின் நுழைக்கப்பட் டிருப்பதாலும், (வேதோபகரணம். 14-ம் பக்கம் பார்க்க.) அது கவனிக்கத்தக்க தன்றாம். திரியேகத்துவத்தைச் சிறிது விவரித்து அதிலுள்ள மகத்தான தோஷங்களை யெடுத்துக்கூறி மறுப்பாம். திரி என்பது மூன்று. ஏகம் என்பது ஒன்று. ஏகத்துவ

மென்பது ஒன்றாம் தன்மை. இதனுடைய திரண்டபொருள் மூன்றும் ஒன்றாம் தன்மையாம் என்பது. இங்கே மூன்று முன்னர் ஒன்றாகிப் பின்னர் ஒன்றாம் தன்மையானது வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், இம்மூன்றும் பழமாயிருக்கின்றன என்பதுபோலெனின், மூன்று பழமும் மூன்றுபழமாகவே யிருக்கின்றனவேயன்றி, ஒருபழமாய்விடவில்லை. அப்படியே திரியேகத்துவம் ஒன்றன்றாம். பின்னை, வேறு வேறாம்.

திரியேகத்துவமென்பது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி இம்மூன்றும் ஒன்றாயிருக்கிறார் என்பதன்றோ? மூன்றுபொருள் ஒரு பொருளாயிருக்குமென்பது யுக்திக்கு ஒவ்வாது. நண்பர் தனித்தனி மூன்றுபொருள் ஒருபொருளா யிருப்பதற்கு உலகத்தில் ஒரு திருஷ்டாந்தம் காட்டி, அதை நிலைநிறுத்துவரா? ஒரு விதத்தாலும் ஒத்துவரா. திரியேகத்துவ உபதேசம் பயனற்றதாம். இனி, பிதா கிறிஸ்து இவர்களின் விஷயத்தைப் பைபிளிலேயே யிருந்து எடுத்துக்காட்டி, திரியேகத்துவமில்லை என்பதையும் கிறிஸ்து கடவுளல்ல மனிதனே என்பதையும் விளக்குவாம்.

(யாத். 20. 30.) “என் முன் வேறு தெய்வம் கிடையாது.” உபாகமம். 32, 39. “நான் நானே; என்னோடு வேறு தேவனில்லை” என்பதை இப்போது பாருங்கள்.

எசாயா. 45, 5, முதல் 8. “நானே கர்த்தர். வேறொருவருமில்லை. என்னைத்தவிர தேவனில்லை. என்னைத்தவிர ஒருவருமில்லை,” முதலியன.

மத். 19, 17, ஒருவன் எசுவை நல்லவரென்று சொன்னபோது, எசு “ஏ னென்னை நல்லவனென்கின்றாய்? கடவுள்தவிர மற்றவர் நல்லவரில்லையே” என்றார்.

மாற்கு. 12, 32. ஒருவன் ஒரே கடவுளுண்டென்று சொன்னபோது எசு சரிதான் என்று ஒப்புக்கொண்டார். யோ. 14, 28. கடவுள் தம்மைவிடப் பெரியவரென்று எசு சொல்லுகிறார்.

அப். 2, 22. எசுக்கிறிஸ்துவாகிய மனிதனைக் கடவுள் ஒப்புக்கொண்டார். (இங்லீஷ் பைபிளைப்பார்க்க.)

1. கொரிந்தியர். 11. 3. மனிதனுக்கும் கிறிஸ்துவுக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் கடவுளுக்கும் எசுவுக்குமிருக்கிறது. இவ்வாறே சொல்லிக்கொண்டு போவதில் மிகவும் விரியுமாதலால், புதிய ஏற்பாட்டிலுள்ள பெயர் அத்தியாயம் வசன மிவற்றைமட்டும் சொல்லுவாம். *

2. பூர்வபட்சம்.

“அநேகபக்கத்தில் இயேசுவிற்குப் பிதாவாக இருப்பவர் அவரே ஏனையோருக்கும் பிதாவாக யிருக்கின்றமைபற்றி எல்லோரும் கடவுளாவார்கள்; என்பது புத்திக்கு விரோதமான சாதிப்பாய் இருக்கிறது. நம் ஏழாவது எட்வர்ட் அரசர் தம்மக்களுக்கும் தகப்பனே குடிகளுக்கும் தகப்பன்போல விருந்தார். அநேகர் தகப்பனென்றே நினைத்தும் பேசியும் வந்தார்கள். அதுகாரணம்பற்றி எட்வர்ட் இராஜாவுக்கும், அவர் மக்கட்கும் உள்ள ஐக்கியத்தையும், அன்பையும் மற்றவர்களுக்கு இருக்கும் அன்போடு ஒற்றுமையாய்ப் பேசலாமா? முழு அபத்தம். என்சகோதரர்களிடத்துச்சென்று, என்பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும் என்தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும், எழுந்துபோகிறேன், என்னும் இவ்வாக்கியம் இயேசு மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என்னும் சத்தியத்தை ரூபிக்கிறதுமன்றி, இயேசுவின் பிதாவாகிய தேவன் எல்லாருக்கும் பிதாவாயிருக்கிற சத்தியத்தை உறுதிப்படுத்தியும், இயே

---

* மாற்கு. 12, 29. 13, 32. 13, 52. மத். 23, 39. 5. 42. யோ. 17, 3. 4, 34. 5, 38. 6, 37. 20, 17. 14, 28. லூக். 11, 20. 22, 29. ரோமர். 16, 27. 10, 9. 4, 24. 1-கொரிந்தியர். 8, 6. 6, 6. 11, 3. 2.ம் கொரிந்தியர். 1, 3. 1-தீமோத்தேயு. 1, 17. 2, 5. 6, 15, 16. கலாத்தியர். 3, 20. எபேசியர். 4, 6. 1, 17. யாக்கோபு. 2, 19. வெளி. 15, 3, 4. கொலோ. 1, 13. முதலிய பலவாம்.

சுவின் தெய்வீகத்தன்மையையும், திரியேகத்தில் இரண்டாம் ஆளாயிருந்தார் என்ற உண்மையும் பலத்த அத்தாட்சிப் படுத்துகின்றது" என்றார்.

2. சித்தாந்தம்.

நற்செய்தி ஆசிரியர், "என்சகோதரரிடத்திற் சென்று, என்பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என்தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும், எழுந்துபோகிறேன் என்று சொல்லு" என, யோவான் இருபதாம் அதிகாரத்தில் ஏசு சொன்னதாய் எழுதப்பட்டிருக்கிற வாக்கியத்தை எடுத்து வரைந்து, ஏசுவுக்குப் பிதாவாக இருப்பவர் ஏனையோருக்கும் பிதாவே என்றும், ஏசுவுக்குக் கடவுளாக இருப்பவர் ஏனையோருக்கும் கடவுளே என்றும் கூறி, ஏசுவைக் கடவுளென்னு மிடத்து, ஏனையோரும் கடவுளாமென்று வரைந்திருக்கின்றனர். அதற்கு நண்பர் ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்திக்குள்ள சொந்தக்குமாரர் போன்று, இயேசுவும் கடவுளின் சொந்தக்குமாரரென்றும், குடிகளுக்குச் சக்ரவர்த்தி அவர்கள் அபிமானப் பிதாவாய் இருந்தது போன்று, ஏசு அல்லாத ஏனையோருக்குக் கடவுள் அபிமானப்பிதா என்கிறார். எட்வர்ட் சக்ரவர்த்தி அவர்களின் குழந்தைகள் அவரிடமிருந்து உண்டான குழந்தைகளாதலாலும், குடிகள் அப்படியல்லவாதலாலும் சக்ரவர்த்தி அவர்களுக்குக் குடிகள் சொந்தப்புத்திர ராகார். இந்த உவமானப்படி ஏசு கடவுளால் உண்டாகியும், ஏனையோர் கடவுளல்லாத மற்றவரால் உண்டாகியுமிருந்தால்தான் ஏசு சொந்தப்புத்திர ராவார். ஏனையோரும் ஏசுவைப்போலக் கடவுளால் உண்டானவர்களாதலால், ஏனையோரைப் போன்றே ஏசுவுமாமென்க. ஏசு தகப்பன் இல்லாமல் பிறந்திருப்பதால் விசேஷமே என்று நண்பர் கூறின், தாய் தகப்பன் இல்லாமற் பிறந்த ஆதாமும், ஏவாளும், மெல்கிசேதேக்கும் ஏசுவைவிட மிகவும் சொந்தக்குமாரர்களும், குமாரத்தியுமாமென்க. ஆகவே, இந்தவாதம் ஒருவகையாலும் மணம்பெறாதொழிந்தது. ஏசு என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என்தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும், எழுந்து போகிறேன், என்னும் இவ்வாக்கியம், ஏசுமெய்யாகவே உயிர்த்

தெழுந்தார் என்னும் சத்தியத்தை ரூபிக்கிறதுமன்றி, இயேசுவின் பிதாவாகிய தேவன் எல்லாருக்கும் பிதாவாயிருக்கிற சத்தியத்தை உறுதிப்படுத்தியும், எனச் சொன்னாரே யொழிய ஏசுவின் தேவன், எல்லோருக்கும் தேவனாயிருக்கிற சத்தியத்தை உறுதிப்படுத்தியும் சொல்லாமல், அந்தவாக்கியத்தை விழுங்கி இயேசுவின் தெய்வீகத்தன்மையை உறுதிப்படுத்துகிறது, என வாளாக்கூறியது அபத்தத்திலும் அபத்தமல்லவா? ஸ்பஷ்டமாய் ஏசு, "என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும்" என்று சொல்லியிருப்பதால், ஏசுவுக்குக் கடவுள்யாரோ அவரே ஏனையோர்க்கும் கடவுளென்று கரதலாமலகம்போல் தெரியும்போது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைத்ததுபோல் மறைத்து, தெய்வீகத்தன்மை என்றும், இரண்டாளென்றும் சொல்லிக் கடவுளாக்கப் பார்ப்பது, பணம் பெறாத பித்தளையைப் பத்தரைமாற்றுப்பொன்னாக்குவது போலாம். ஏசுவுக்குக் கடவுள் யாரோ அவரே ஏனையோருக்கும் கடவுளாதலால், ஏசு தெய்வீகத்தன்மைவாய்ந்தவரு மல்ல, இரண்டாளுமல்ல என்பன தெளிவாம். "உங்கள் பிதாவினிடத்திற்கு எழுந்து போகிறேன்" என்னும் இவ்வாக்கியம் ஏசு மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என்னும் சத்தியத்தை உறுதிப் படுத்துகின்றது என்றார். நற்செய்தி 22-ம் பக்கத்தில், மரித்த ஏசு மண்ணுக்கு இரையானாரேயன்றி மறுத்தும் மீளவில்லை, என்று ஆசிரியர் தக்க நியாயத்தோடு எழுதியிருக்கின்றமையால் அதை நண்பர் கண்டனம் செய்து எழுதுவரேல் ஏசு உயிர்த்தெழுந்தாரா இல்லையா என்பதை அதன்பின்னர் வரைவாம்.

3. பூர்வபட்சம்.

"தேவவசனங்களை வியாக்கியானம் செய்வதில் தேவ உதவியைத்தேடிச் சத்தியத்தைக் காணப் பிரயாசைப் படவேண்டுமேயல்லாமல், வீணாய்ப் பரிகாசம், கேலிக்காய் எழுதுவது சுவரைவைக்காமல் சித்திரம் எழுதப் பிரயாசைப்படுவதுபோ லிருக்கிறது. நாலு சுவிசேஷங்களில் பற்பல காலங்களில் தேவ ஆவியால் எழுதப்பட்ட அற்புதமூர்த்தியாகிய இயேசுவை உற்றுக் கவனிப்போமாக. மகா சிறந்த நடக்கையும், சம்பூரண லட்க்ஷணங்களும் நிறைந்த இவரை வரையக்கூடியவர் யாவர்? அது மனுஷனால் முடியுமோ? முடியாதே" என்றார்.

3. சித்தாந்தம்.

தேவவசனங்களை வியாக்கியானம் செய்வதில், தேவ உதவியைத் தேடியே நண்பர் நற்செய்திக்குக் கண்டனம் எழுதி யிருப்பார். தெய்வ உதவியைத் தேடி நண்பர் எழுதிய கண்டனம் எவ்வளவு தண்டனை யடைந்தது என்பதை இதன் முடிவில் அறிந்து கொள்ளலாம்.

நற்செய்தி பரிகாசத்திற்காக எழுதவில்லை. மூவொன்று மூன்று, மூவொன்று ஒன்றன்று, என்பன போன்ற நியாயங்களையும், உண்மைகளையும் ஜனங்கள் நன்கறிந்து உய்யவேண்டுமென்ற பெருநோக்கத்தால் இப்புஸ்தகத்தைக் கனம் காதர் முகைபதீன் அவர்கள் தமது இளம் பிராயம் 23-ல் எழுதி முடித்துப் பிரசுரம் செய்தார். இந்த உபகாரத்தைச்செய்த அப்பெரியாரை இகழ்தல் நன்றன்று.

பைபிளில் இல்லாத திரியேகத்துவம் முதலிய வற்றைப்பற்றி நண்பர் வாளா எடுத்துவரைந் திருப்பதால் இவர்தாம் சுவரில்லாமல் சித்திரம் எழுதுபவரை யொத்தாரென்க. பைபிள் தேவ ஆவியால் எழுதப்பட்ட தென்னுமிவர், நற்செய்தி 52-ம் பக்கத்தைப் பார்த்திரார் என்றே நம்புகிறேன். பார்த்திருந்தால் இவ்வாறுஎழுதத்துணியார்! துணியார்!! 'நன்னடக்கையும், சம்பூரண லட்க்ஷணங்களும் நிறைந்த இயேசுவை வரையக் கூடியவர் யார்?" என்றார். சம்பூரண இலட்க்ஷணங்கள் முதலிய இல்லாத ஏசுவுக்கு உண்டென வரையக்கூடியவர் ஒருவருமில்லைத்தான். கிரிஸ்தவர்களிடத்தில் அவர்கள் கொள்கையைப்பற்றிப் பேசும்போது விடையளிக்க முடியாத விஷயங்களுக்கெல்லாம் பரமரகசியம் மனிதனால் சொல்லக்கூடியதோ என்று வாய்ப்பறையறைவர். நண்பர், "ஏசுவினுடைய இலட்க்ஷணங்களையே இங்குவரைய முடியுமோ? முடியாதே" என்று கூறியிருப்பது நமக்குச் சந்தேகமாகவே யிருக்கிறது. கடைசிவரை பார்ப்போம்.

4. பூர்வபட்சம்.

"மேலும், ஆதியாகமம்.6, 2-லும், போ. 6-லும், மத். 5, 45, 48-உம், உள்ளவசனங்களை எடுத்துக்காட்டிக் கடவுளுக்கு அநேகங் குமாரகளுண்டான படியால் அவர்களெல்லாம் ஏன் கடவுளாக வில்லை என்ற கேள்வி கேட்கின்றார். அது மாத்திரமல்ல. அவர்கள் கடவுளல்லரென்றால் ஏசுமாத்திரம் எப்படிக் கடவுளாவார்? என்ற சாதுரியமான கேள்வியும் கேட்கின்றார். கடவுளுக்குச் சிருஷ்டியின்படி பூவுலகில் மனுஜென்ம மெடுத்த ஒவ்வோர் ஆத்துமாவும் பிள்ளைதான். சிருஷ்டிகர் வேறே, சிருஷ்டிவேறே, சிருஷ்டிக்கும், சிருஷ்டிகருக்கும் எவ்வளவோ வித்தியாசம். மேலேகாட்டிய வாக்கியங்களில் குறிக்கப்பட்டவர்கள் சிருஷ்டிகளே யொழியச் சிருஷ்டிகர் அல்ல. இயேசுவோ சிருஷ்டிகர். யோ. 8, 58 - ல் "ஆப்பிரகாம் உண்டாகிறதற்கு முன்னரே நான் இருக்கிறேன்" என்றார். பரிபவுல் கொலோ. 1. 17-ல் "எல்லாம் அவருக்குள் நிலைநிற்கின்றது; எல்லாவற்றிற்கும் முந்தினவர்" என்றார். இன்னும், யோ. 3. 13 லும், பிலி. 2. 6. 11 லும், "அவர் மனுஷத்தன்மையைப் போர்வையாகத்தரித்த தேவனானவர்" என்று காட்டப்பட்டிருக்கிறதல்லவா? சிருஷ்டியைச் சிருஷ்டிகளோடு சமமாக்குவது தேவத்தன்மையை மட்டுப் படுத்துவதுபோ லிருக்கிறதே. கொலோ. 1, 15. ல் "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும் சர்வசிருஷ்டிக்கும் முந்தினபேறுமானவர்" என்றிருக்கிறதே. இஃது எவ்வளவாய் இயேசுவின் தெய்வீகத்தன்மையை விளக்குகின்றது. இது போதுமானதே. கைப்புண்ணுக்குக் கண்ணாடிவேண்டுமோ?" என்றார்.

4. சித்தாந்தம்.

மேலும், "ஆதியாகமம் 6, 2. ல், 'தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்திரிய முள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள் தங்களுக்குப் பெண்களை தெரிந்து கொண்டார்கள்' என்றிருக்கிறது. யோபு. 1-வது அதிகாரம் 6-ம்வசனம்: 'ஒருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவில் வந்து நின்றான். மத்தேயு. 5-வது அதிகாரம். 45, 48-வது வசனம்: இப்படிச் செய்வதனாலே நீங்கள் பரலோகத்தி லிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராக யிருப்பீர்கள்; ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணரா யிருக்கிறதுபோல் நீங்களும் பூரணச

ற்குணரா யிருக்கக் கடவீர்கள்,' என்று கூறுவதால் கடவுளுக்கு அநேகங் குமாரர்கள் உண்டென்று தெரியவருகிறதல்லவோ? அவர்களைஎல்லாம் நீங்கள் ஏன் கடவுளென்று கூறுவதில்லை. கூறினால் நீங்கள் மேற்கொண்ட கொள்கைக்கு விரோதமென்னை? விரோதமின்றாகவும் அவர்களை எல்லாம் (குமாரர்) கடவுளெனக் கூறாது, ஏசுவைமாத்திரம் கடவுளெனக் கூறுவது மதிமயக்கன்றோ?" என்று ஆசிரியர் வரைந்திருக்கிறார்.

நண்பர் அப்பனும் மகனும் ஒன்றென்று சொல்லிப் பிதாவையும், (கடவுள்) குமாரரையும் (ஏசு) ஒன்றாக்கப்பார்த்தார். அது சாத்தியமாகவில்லை. ஏசுவைப்போல் பிதாவுக்குப் பலகுமாரர்களிருப்பதால் அவர்களெல்லாம் கடவுளாகவேண்டுமே" என்றதற்கு, ஏசுவைப் பிதாவின் சொந்தக்குமாரரென்று உவமானமும் சொல்லிப்பார்த்தார். அதுவும் பயனற்றதாயிற்று. இப்போது ஏசுவைச் சிருஷ்டிகரென்றார். முதலில் ஏசு சொந்தக்குமாரராகவேண்டும். பின்னர் பிதாவும் அவரும் ஒன்றாகிச் சிருஷ்டிகராதல் வேண்டும். ஏசு சொந்தக்குமாரரல்லவாதலாலும், அப்பனும் மகனும் ஒன்றாதல் ஒருவகையாலும் கூடாதாதலாலும், ஏசு சிருஷ்டிகரன்றாம். பின்னை, சிருஷ்டியாம். குமாரரான ஏசு ஏனையோரைப்போல் குமாரரா யிருக்கின்றாரேயன்றிக் கடவுளாய் விடவில்லை என்பதை இனியேனும் நண்பர் அறிந்திடுவாராக.

நண்பர் ஏசுவைச் சிருஷ்டிகரென்று வரைந்து அதற்கு ஆதாரமாய்க் காட்டியிருக்கிற "யோ. 8, 58, கொலோ. 1, 17, யோ. 3, 13. பிலி. 2, 6, 11. கொலோ. 1, 15." இந்தவாக்கியங்களை அப்படியே எடுத்துக்காட்டி உண்மையை விளக்குவாம்.

எபிரேயர் 7-வது அதிகாரம் 1, 2, 3. வசனங்கள்:— "மெல்கிசேதேக்கு உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமா யிருந்தான்.

இவன் நீதியின் இராஜாவாகவும் சமாதானத்தின் இராஜாவாகவு மிருந்தான்.

இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறு மில்லாதவன். இவன் நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவும் உடையவனாயிராமல் தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய், என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்."

ஆப்பிரகாம் உண்டாகிறதற்கு முன்னரே இயேசு இருந்ததாய்ச் சொல்லியிருப்பது போன்று, சாத்தானும் ஆப்பிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே யிருந்து இப்போது மிருப்பதால் அவனும் சிருஷ்டிகராதல் வேண்டும். அன்றியும், மெல்கிசேதேக்குத் துவக்கமும் முடிவும் இல்லாதவனா யிருப்பதால் இவனும் சிருஷ்டிகராதல் வேண்டும். * கொலோ. 1. 17-ல், "எல்லாம் அவருக்குள் (ஏசு) நிலைநிற்கிறது. எல்லாவற்றிற்கும் முந்தினவர்" என்று எழுதப்பட்டிருக்கிறது போலவே, §மெல்கிசேதேக்கும் எல்லாவற்றிற்கும் முந்தினவனாயும், முடிவில்லாதவனாயு மிருக்கிறான். இவன் குமாரனுக்கு ஒப்பானவனென்று சொல்லப்பட்டிருப்பதால் நண்பர் கொள்கைப்படி ஏசுவினிடத்து நிலை நிற்பதெல்லாம் இவனிடத்து நிலை நிற்பதாலும் இவனும் சிருஷ்டிகராதல் வேண்டும்.

யோவான். 3. 13-ல் "பரலோகத்திலிருந்து இறங்கினவரும், பரலோகத்தில் இருக்கிறவருமான மனிதகுமாரனே யல்லாமல், பரலோகத்திற்கு ஏறியவர் ஒருவருமில்லை" என்றிருக்கிறது. ஏசுகடவுளாயின்

---

* கொலஸ்திரியர் பிலிப்பையர் இவ்விரண்டு விஷயங்களும் இயேசுவின் சீஷரல்லாத பவுலால் சொல்லப்பட்டிருப்பதாலும், கொலோ. 1, 17. 1. 15, பிலி. 2. 6. 7, இந்தவாக்கியங்கள் இயேசுவின் சொந்தவாக்கியமல்லவாதலாலும், பவுல் வாக்குச்சுத்தரல்லவாதலாலும், அதை ஆதாரமாய் எடுத்துக்கொள்ளச் சாத்தியமில்லை. ஆயினும், நண்பர் திருப்திக்காக மேலே அதையும் எடுத்துப் பேசியிருக்கின்றேன்.

§ துவக்கமும் முடிவு மில்லாதவனிடத்தில் எல்லாம் நிலைநிற்க வேண்டியது அவசியமாம்.

கடவுளுக்குரிய இலக்கணங்களை நியாயத்திற்குப் பொருத்தமாகச் சொல்லி ஸ்தாபித்துக் கொள்வதை விட்டு விட்டு இறங்குவதையும், ஏறுவதையும், இருப்பதையும் சொல்லிக் கடவுளாக்குவது என்னவிந்தை? தேவ தூதர்கள் பரலோகத்திற்கு ஏறி இறங்கி இருப்பதாகவும், ஏனோக்கு ஏறி இருப்பதாகவும், சாத்தான் இருந்தும், ஏறியும், இறங்குவதாயும் பைபிள் கூறுவதை நண்பர் அறியார் போலும், மேலேசொல்லப்பட்டவர்களெல்லாம் எப்படிக் கடவு ளில்லையோ, அப்படியே ஏசுவுமாம்.

பிலி. 2, 6, 7. "அவர் (இயேசு) தேவனுடைய ரூபமாயிருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனிதச்சாயலானார்" என்றும், கொலோ. 1, 15-ல், "அவர் அதரிசனமான தேவனுடைய சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறு மானவர்" என்று மிருப்பதைப்போன்றே, ஆதி. 1. 26-ம் வசனத்தின்படி தேவனுடைய ரூபமாயும், சாயலாயுமிருக்கிற மனிதர்களெல்லாம் எப்படி வெறுமையாயும் அடிமையாயு மிருந்தும் கடவுளாகவில்லையோ, அப்படியே ஏசுவுமாம். மெல்கி சே தேக்கு மனிதனாய்க் காணப்பட்டாலும் சிருஷ்டிக்கு முந்தினவனாயும், முடிவில்லாதவனாயும், குமாரனுக்கு (ஏசுவுக்கு)ஒப்பானவனாயுமிருத்தலால், அவன் மனிதத்தன்மையைப் போர்வையாய்ப் போர்த்த தேவனாதல் வேண்டும். அவன் எப்படித் தேவனாகவில்லையோ அப்படியே ஏசுவுமாம். 2-ம் மோசே. 33-ம் அதிகாரம். 20-வது வசனத்தில் "பராபரனுடைய முகத்தைப் பார்க்கிறவன் உயிரோடிருக்க மாட்டான்," என்று எழுதியிருக்கிறது. ஏசு சிருஷ்டிகரானால் அவரைப் பார்த்தவரெல்லாம் மரணமடைந் திருக்கவேண்டுமே, அப்படி இல்லாமையாலும் ஏசு சிருஷ்டிக ரன்றென்றே அறியலாம்.

ஏசு சிருஷ்டிகர் அல்லரென்பதை மற்றொரு நியாயத்தாலும் மறுப்பாம்.

உடம்போடு கூடிய உயிரையன்றோ ஏசுவென்றுசொல்வது? உடம்பு சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களுள் ஒன்றென்பது யாவருக்கும் சம்மதமாதலின், ஏசு சிருஷ்டிகர் என்பது பொருந்தாது உயிர் தான்சிருஷ்டிகரென்றால், நமக்கும் உயிரிருத்தலால் நாமும் சிருஷ்டிகராதல்வேண்டும். உயிரும் சிருஷ்டிக்கப்பட்டதானால் ஏசுவின் உயிரும் சிருஷ்டிக்கப்பட்டதாம். சிருஷ்டிக்கப்பட்ட உயிர் சிருஷ்டியாதல் கூடாது. இரண்டு வகையாலும் ஏசு சிருஷ்டியே யன்றிச் சிருஷ்டிக ரல்லராம்.

நண்பர் கண்டனைக்குச் சமுத்திரகலச நியாயமாகச் சிறிதே மறுப்பு எழுதினோம். சமயம் நேர்ந்தபோது பார்ப்போம். நாம் இதுகாறும் பேசிவந்த நியாயத்தால் கனம் சாமுவேல் தாமஸ் நாடார் அவர்களின் கண்டனை தக்க தண்டனை யடைந்ததென்பது வெளிப்படையாம்.

இங்ஙனம்:
எதார்த்தவாதி, சென்னை.

பிஸ்மில்லாஹி.

திருநெல்வேலிப் பேட்டை
ஷைக் அப்துல்காதிரு புத்தகசாலை நிர்வாகருள் ஒருவரும்,
"கிறிஸ்தவர்க்கோர் நற்செய்தி" ஆசிரியரும்,
சா. ம. பீ. சே. பண்டகசாலைகளுக்கு உரியோருள் ஒருவருமான
அருங்கலை விநோத
சா. ம. பீ. காதிருமொய்தீன் ராவுத்தரவர்கள்
பிரிவாற்றாது,
மதுரை இஸ்லாம் மதாபிவிர்த்தி சங்கக் காரியதரிசியும்,
"இஸ்லாம்நேசன்" பத்திராதிபருமான
வித்யாஸாகரம். உ. சி. ப. உ.
சுல்தான் ஸையிது அகமது ராவுத்தர்
அவர்கள் பாடிய

இரங்கற்பாக்கள்.

காதிருவும் மொய்தீனும் கனிந்தெவர்க்கும் உதவுகின்ற காரணத்தால்
காதிருமொய் தீன்எனவே மேதினியோர் ஓதிடும்ஓர் கலைவல் லோனே!
மேதகைய வேதகலை மாதினமும் ஓதிமிக மேன்மை உற்றோய்!
ஏதம்அறு நீதகுண மேதிகழும் சோதரமே! எழில்மிக் கோனே! (க)

பேர்மிகுசெஞ் சாலிவிளை ஏர்மிகுநெல் வேலிபைச்சார் பேட்டை என்[னும்
சீர்பதியின் மாதவமே! பீர்முகம தென்னும்ஒரு சீலோன் சேயே!
நேர்பெறுநம் குலவிளக்கே! நேசம்நிறை யாதியநன் னெறிமிக் கோனே!
'தாருல்ஃபனா' தனைநீக்கித் 'தாருல்பகா' தனைச்சார்ந்த தன்மை என்னே?

பேட்டையினி லேபிறந்தப் பேட்டையினி லேவளர்ந்து பின்னும் அந்[தப்
பேட்டையினி லோர்அன்னப் பேட்டைநிகர் பெண்மணியைப் பிரியத்[தோடப்
பேட்டையினி லேமணந்தப் பேட்டையினி லேவணிகப் பெருமை வா[ய்ந்தப்
பேட்டையினி லோங்கினைபப் பேட்டையினின் றென்றென்றும் பிரிந்த[தென்னே? (௩)

"இறைவன்விரும் பியசில்லோர் இளமையிலே இகம்நீப்பர்" என்ன[மேலார்
அறைதருநன் மொழிக்கிசைய, ஆண்டிருபத் தாறினிலே அவனி நீங்கி,
மறையுணரும் மாண்புடையாய்! நரைதிரைமூப் பாதியன வருத்தா[தேஎக்
குறைவுமற வாழ்வான்நீ பொன்னாடு புக்கனையோ? கூறாய்; கூறாய். (௪)

மங்கலமே வியமதுரை மாநகரி லே"**இஸ்லாம் மதாபிவிர்த்தி**
சங்கம்" நிறீஇ, நம்மார்க்க நெறிபரப்பி, அச்சபையின் தலைமை பூண்டு,
சங்கையுளார் நன்குணரக் "**குரான் உண்மை விளக்கம்**" எனும் தனி[நூல் செய்த
துங்கமிகு மோய்தீன்ரா வுத்தரினற் சீடனெனத் துலங்குந் தூயோய்!()

வெறுத்துநம துயர்மதத்தை இழித்தகிறித் தவர்உய்ய விருப்ப முற்[றுத்
தறித்தவர்க்கும் தண்ணிழலைத் தந்துதவும் தன்மையுள தருவே போன்[று
"**கிறித்தவர்க்கோர் நற்செய்தி**" என்னும்ஒரு மெய்ந்நூலைக் கெழுமச் செ[ய்தோய்!
ஒறுத்தவர்க்கும் உபகாரம் உஞற்றுபவர் உலகத்தில் உன்போல் உண்[டோ? (௬)

இத்தகைய உபகாரம் புரிந்தும்அவர் திருந்தாமல் இருப்பா ரென்று
மெத்தவும்ஐ யுற்றவர்அ சத்தியவே தத்தைஒரீஇ மேலோராகிப்
பத்திபொடு சுத்தநம்ம தத்தைநனி உற்றிடுவான் பரிந்துபேச
நத்திமிகப் புத்தியுளாய்! நித்தியன்பால் அத்தலம்நீ நண்ணினாயோ? ()

மடன்உறையும் மனத்திலுறு மாசகல, மாஇஸ்லாம் மார்க்க மாநற்
சுடர்கொளு,வ "**ஷைக்அப்துல் காதிருநூல் நிலையம்**" எனச் சொல்லா நி[ற்கும்
தடமிகுபுத் தகசாலை தனைநிறுவிப் புகழுற்ற தக்கோய்! அத்தைப்
படிமிசைபோங் கச்செயுமுன் "காச"மெனும் பாவியுனைப் பறித்திட்[டானே. (௮)

சென்னையிலும் எந்நலமும் துன்னியநன் னெல்லையிலும் செய்ய கீர்த்தி
மன்னியபண் டகசாலை தனைநடத்தி மேன்மேலும் வயங்கச் செய்தோய்!
என்னை எமை நீபிரிந்த தெங்குற்றாய்? யாம்அறிய இயம்பொ ணாதோ?
உன்னை இனி யாம்காண்ப தெந்நாளோ? எந்நாளோ? உரைத்திடாயே!

சந்ததம்நி னைந்துமிக நொந்தழுநின் றன்மனையும் தாயும் மற்றும்
அந்தமிகு நின்னுடன்பி றந்தவரும் நந்தமரும் அண்டினாரும்
பந்துஜன மும்பிரிய நண்பரும்உ றுந்துயரைப் பார்த்தும் ஓர் கால்
வந்துனது சந்திரமு கந்தனைநீ காட்டாத வர்மம் என்னே? (௧0)

இகவுலகு தனைநீக்கி ஹிஜ்ரிஆ யிரத்துமுந்நூற் றிருபத் தொன்பான்,
மொகரமதி மூவிரண்டில், முதன்மைபெறு ஞாயிறென மொழிநன் னா[ளில்,
அகமகிழ்வோ **டாகிறத்தே** நிகரறுநற் பதவியினை அடைந்தாய்! நின்[போல்
சகமறிய முதல்வருடம் முதல்மாதம் முதல்நாள்யார் தாம்பெற்றாரே?

மாகநதி நீராடி மறைபோதி முன்னையினும் மாண்புற்றேநீ
காகளமா தியமுழங்கக் கவின்மிக்க ஹூர்லீன்கள் கானங்கேட்டப்
பாகனைய இன்மொழியார் பல்விதபோ கமுமெய்திப் பரமாநந்த
சாகரமூழ் கித்தினமும் **ஆகிறத்தே ஏகனிடம்** சார்ந்து வாழி! (௧௨)

முக்கிய அறிவிப்பு.

இந்த “இஸ்லாம் நேசன்” ஒன்றுதான் முஸ்லீம்களுக்குள் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை; இஃதன்றி வேறுபத்திரிகை யில்லை. இதை அன்போடு ஆதரிப்போருக்கு மிக்கவந்தனம்; இப்போது ஆதரிப்பது போல் இனி எப்போதும் ஆதரிக்கும்படி வேண்டுகிறோம். ஆயினும் இப்பத்திரிகை, தனக்குக்கிடைக்கும் வரும்படியை வைத்துக்கொண்டு தன்னுடைய ஆயுளை விருத்திசெய்துகொள்ளும்படியான நிலைமைக்கு இன்னும் வரவில்லை; பிறர்மேல் சாராமல் தன்னைத்தானே போஷித்துக் கொள்ளும் காலம் “இஸ்லாம்நேச”னுக்கு எப்பொழுது வரும்? இப்பொழுது தாப்பாலையுண்டு தத்திவிளையாடுகிறான்; தானே நடக்க முயல்வது எப்பொழுது? முஸ்லீம்களுடைய ஒரேமகனான இவன் இவ்வாறு க்ஷயரோகத்தால் துன்பப்பட, நாம் ஏன் பராமுகமா யிருக்கிறோம்? இப்பொழுது நேசனை ஆதரிக்கும் ஒவ்வொரு பிரபுவும் தங்களைத் தவிர்த்து வேறு இரண்டிரண்டு கையொப்பக்காரர்களைச் சேர்த்துக்கொடுத்துத் தயவுபுரிந்தால் ஒருவாறு நேசனுடைய வரவுசெலவு நேராகும். இந்தியாமுழுதும் இஃதொன்றுதான் முஸ்லீம்களுக்குரிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை; தமிழ்ப்பாஷை பேசும் 25 லக்ஷம் முஸ்லீம்களுள் 500 ற்றில் ஒருபங்கு நேசனை ஆதரிக்க முன்வந்தால் நம்மவருக்கு எவ்வளவு நன்மை விளையும்? இந்தியாவில் கல்வியிலும் நாகரிகத்திலும் மிகக்குறைந்தவர்கள் நம்மவர்களே. அந்தோபரிதாபம்! மற்றச் சாதியாரைப்போல் நாமும் சிறந்தவர்களாவது எக்காலம்? முஸ்லீம்கள் எந்தப்பாஷையையாவது கற்றுத்தேர்ந்தா லன்றோ முன்னுக்குவருவர்? இவர்கள் நிலைமை இரங்கத்தக்கதே. ஹிந்துக்களுக்காகத் தமிழில் தினப்பத்திரிகைகளும், வாரப்பத்திரிகைகளும், மாதப்பத்திரிகைகளும் எண்ணிறந்தனவுண்டு. முஸ்லீம்களோ இந்த ஒருபத்திரிகையையும் செவ்வனே நடத்தப் பின்வாங்குகிறார்கள். அவர்களின் சௌகரியத்துக்காகவே குறைந்த சந்தா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சந்தாநேயர்கள் அதிகமானால் இதே சந்தாவுக்குப் பத்திரிகையைப் பெரிதாக்கலாம். தயவுகூருங்கள்.

நிருப நேயர்கள் இனிமையானவிஷயங்களை எழுதி இப்பத்திரிகையில் பிரசுரம் செய்து இதை மங்காத ஒளியுள்ளதாகச் செய்வார்களாக. நன்மையைச் செய்பவர் நன்மையே பெறுவர்.

பத்திராதிபர்.

ஆனரபிள் சையத் முர்த்தஸா சாஹிபு அவர்கள் “இந்தியன் ரெவ்யூ” வில் எழுதுகிறார்கள்:

ராஜாங்க விஷயத்திலும், அறிவு விஷயத்திலும், மதவிஷயத்திலும் மிக்க புகழ்பெற்றவர்களும், தேசத்தார்களின் சரித்திரத்தால் மிகக் கொண்டாடப்பட்டவர்களும், ஐரோப்பாகண்டம் அந்தகாரத்தில் மூழ்கிக்கிடந்த அந்தக்காலத்தில் அதற்கு முதலாசிரியராயிருந்து கல்விகற்றுக் கொடுத்துப் பெருஞ்சிறப் படைந்தவர்களுமாகிய முஸ்லீம்கள் இப்பொழுது உலக வளர்ச்சியில் அதிகமாகப் பிந்தியிருக்கிறார்களென்பதும், இதரதேசத்தினரோடு நாகரிகத்தில் சேர்ந்துவரச் சக்திபற்றுப் பலஹீனஸ்திதியி லிருக்கிறார்களென்பதும் சொல்லாமலே அமையும் இவ்வாறு முஸ்லீம்கள் தாழ்ந்த நிலைமையை யடைந்திருப்பதன்காரணங்கள் இன்னவையென்று உம்முடைய எண்ணிறந்த சந்தாநேயர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டு இந்த நிருபத்தில் இத்தகைய மாறுபாட்டின் காரணத்தை என்னாலியன்றமட்டும் ஒருவாறு தொகுத்து எழுதுகிறேன்.

குரானேஷரீபின் உண்மைப்பொருளைக் கண்டோரும், இஸ்லாத்தின் தத்துவத்தைத் தெரிந்துகொண்ட ஞானிகளும் சாஸ்திரத்துக்கும் சித்திரத்துக்கும் (Science and Art) தக்க கௌரவம் கொடுத்துவந்தார்கள். ஜடத்தையும், ஞானத்தையும் (material and spiritual) ஒன்றுசேர்த்து முன்னுக்குக் கொண்டுவருவதுதான் பேரானந்தமென்று அவர்கள் உறுதியாக நம்பியிருந்தார்கள். மதத்துக்காக உண்மையில் உயிர்விடுதல் என்பதன்பொருள், அம்மார்க்கத்தின் உண்மைப்பொருளையறிந்து கொள்ளுதலல்லாமல் மதச் சண்டை செய்வதன்று என்பதை உறுதிப்படுத்தும் அரபியாவின் நபியவர்களின் கொள்கைகளை அவர்கள்முழுதும் நன்கறிந் திருந்தார்கள். “ஒருவன் தன்பாவத்தைப்போக்கி மோக்ஷமடைய விரும்புவானாயின்,” ஞானத்தின் ஆழமான மூலத்தை ஆராய வேண்டும்” என்று ஹுஜ்ஜதுல் இஸ்லம் (இஸ்லாத்தின் மேற்கோள்) எனச் சிறப்புப்பெயர்பெற்ற இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லா அலைஹி

அவர்கள் சொல்லுகிறார்கள். மேற்கூறப்பட்ட வர்க்கத்தார் போன்ற தத்துவஞானிகளின் கொள்கையின்படி மதச்சண்டைகளும், மதத்தர்க்கங்களும் இழிவான காரியங்களாம். இவ்விதச் சண்டைகளெல்லாம், அல்லாஹுத் தஆலாவால் படைக்கப்பட்ட சில உயிர்களுக்கு வருத்தத்தையுண்டுபண்ணி, வேறு வேறுமதத்தினருக் கிடையில் மனஸ்தாபத்தையும் கலகத்தையும் விளைவிப்பதால் அவற்றை அவர்கள் கடிந்துவந்தார்கள். இப்படிப்பட்ட தத்துவஞானிகள் முஸ்லீம் உலகத்தை ஆண்டுவந்தகாலம் வரையில் ஒவ்வொன்றும் முஸ்லீம்களின் நன்மையை விருத்திபண்ணி வந்தது; நாகரிக உலகத்தில் முஸ்லீம்களும் எல்லாரோடுகலந்து முன்னுக்கு வந்துகொண்டிருந்தார்கள்.

முஸ்லீம்களுக்குள்ள துரதிட்டத்தால் இவ்வாறு நடந்துகொண்டுவந்த விஷயம் அதிககாலம் நீடித்துவரவில்லை. "லா ரஹ்பானியத பில் இஸ்லாம்" (இஸ்லாமார்க்கம் சன்னியாசத்தை அங்கீகரிக்கவில்லை)என்னும் அன்பியாநாயகமவர்களின் திருவாக்காகிய இஸ்லாத்தின்மர்மத்தையறிந்துகொள்ளாமல் அதற்குமாறாக வேறோர் உபதேசம் (அஃதாவது, உலகத்தைத் துறந்துவிட வேண்டுமென்பது) செய்வதற்காகப் பொறுப்பில்லாத அநேகர் தத்துவஞானிகள் போல் வேஷம் தரித்துக்கொண்டு வெளிக்கிளம்பினார்கள். பொறுப்பற்றவர்களும், சுயநயம் பாராட்டுவோரும், துஷ்டகுணம் நிறைந்தோரும், தாந்தோன்றிகளாகவும் புறப்பட்ட இந்தப்போதகர்களின் உபதேசத்தால்தான் ஒருகாலத்தில் பெருமைபெற்றிருந்த இந்த முஸ்லீம்வர்க்கத்தார் இந்த நிலைமைக்கு வந்துவிட்டார்கள்.

இத்தகைய உபதேசம் தென்னிந்தியாவிலுள்ள முகம்மதியர்கள்பால் மிகுதியாகக் காணப்படுகின்றது; ஆதலின் நாகரிக முதிர்ச்சியில் மற்றவர்களோடு தாங்களும் பின்வாங்காமல் முன்னோக்கிச் செல்வதைவிட்டு அவர்கள், மேல்நோக்கிச்செல்லும் மற்றவர்களுக்கும் இடங்கொடாமல் அவர்களுடைய வழியை மறித்துக்கொண்டார்கள். இவர்களிடத்தில் நியாயவாதம் பேசினால் அதற்கு இணங்கி மறுமொழி கூறார்கள். நியாயவாதத்தால் பயனொன்றுமின்று. முற்காலங்களில் தத்துவத்தை

உள்ளபடியறிந்து உபதேசித்து வந்த ஞானிகளை இவர்கள் விரோதிகளெனக் கருதி அவர்கள்மேல் இவர்கள் ஓய்வில்லாமல் தூஷணையைச் சுமத்திக்கொண்டேயிருப்பார்கள். அவர்களை மததுவேஷிகளென்றும் இவர்கள் கூசாமல் சொல்லுவார்கள். அறிவற்ற ஜனங்கள் இவர்களுக்கு மிக்க மரியாதைசெய்து இவர்களே தங்களுடைய இரக்ஷகர்களென்று கருத ஆரம்பித்தவுடன், இவர்களுடைய போலி மதப்பற்று மிகுந்துவரத் தலைப்பட்டது.

இஸ்லாமார்க்கத்தின் விரோதிகளாகிய மேற்கூறப்பட்ட மனிதர்களின் குறும்பையடக்கும்பொருட்டு இதுவரையில் ஒருவிதத்தக்க முயற்சியும் செய்யப்படவில்லை. இவர்களுடைய விடாப்பிடிவாதமான கொள்கைகள் இஸ்லாமார்க்கத்தின் உண்மைக்கொள்கைகளுக்கு முற்றிலும் மாறாயிருந்தமையின் மார்க்கத்தின் உண்மைஞானிகள், இவர்களுடைய பொய்யானவிஷயம் தானே அழிந்துவிடுமெனக் கருதிச் சும்மா இருந்துவிட்டார்கள். இவர்களுடைய விஷயமும் அவர்களால் உபத்திரவம் அடையவில்லை. ஆனால் அவர்கள் கண்ணைத்திறந்து பார்த்தபோது அவர்களுடைய விரோதிகள் செய்திருந்த குறும்புகள் இவ்வளவென்று தெரிந்துகொண்டு இந்தக்கேடுகளை எவ்வாறு நீக்குவதென்று புலப்படாமல் திகைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்களுடைய குறும்பு அதிகரித்து விட்டதால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. தங்களுடைய எதிரிகள் மிக்க பலசாலிகளாய்விட்டதைக் கண்ட அவர்கள் ஒன்றும் செய்யமாட்டாமல் மனங்கலங்கி நின்றார்கள். இதனால் இருகக்ஷிக்கு மிடையில் மூன்றாவதாக வேறொரு கக்ஷியுண்டாயிற்று. மேற்கூறிய இருகக்ஷிகளிலும் சேராமல் இவர்கள் தனியே முஸ்லீம்களின் ஞான அபிவிருத்திக்காக மௌனமாயுழைத்துவந்தார்கள்.

இந்த மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களைத் தத்துவஞானிகளாகக் காட்டிக்கொள்ளாமல், தாங்களே சுயேச்சையாக முன்னுக்குவந்து சுதந்திரத்தை நிலைநிறுத்திக்கொண்டு, தாங்கள் இஸ்லாமார்க்

சத்தின் உண்மைக்குத் தக்கவிதம் நடக்கக்கூடியவர்களென்று பெருமைபாராட்டி வந்தார்கள். எல்லோருக்கும் மிக்க வருத்தத்தை யுண்டுபண்ணும்படி இறந்துபோன ஸர் ஸையத் அகுமதுகான் அவர்கள்போன்ற வன்மையும் விடாமுயற்சியுமுள்ள முஸ்லீம் ஒருவரும் இச்சென்னை ராஜதானியில் இல்லாமையால், முஸ்லீமா யில்லாதிருந்தாலும் முஸ்லீம்களின் க்ஷேமத்தையே கோரிக்கொண்டிருக்கும் வேறுமதத்தினரைத் தங்களுக்குத் தலைவராக நியமித்துக்கொண்டார்கள். இப்படிப்பட்ட நியமனம் முன் ஜஸ்டிஸாயிருந்த போடாம்துரை யவர்களுக்குக் கிடைத்தது. இத்துரையவர்களுக்கு முஸ்லீம்களிடத்தில் மிக்க பற்றுண்டென்பது எல்லோருக்கும் தெரியும். துரையவர்களுடைய தலைமையின் கீழிருந்த இந்தமூன்றாவது பக்ஷத்தார்கள் சிறிது வன்மைபெற்றுக்கொண்டு இரண்டாவது கக்ஷியிலிருந்த போலித்தத்துவ ஞானிகளுக்குத் தோல்விமேல் தோல்வி கொடுத்துக்கொண்டு வந்தார்கள்.

இந்தக் கக்ஷிக்காரர்கள், 1901௵ "முழு இந்தியா முகம்மதிய கல்வியபிவிருத்தி சங்கம்" என்ற கூட்டத்தைச் சென்னைமாநகருக்குக் கொண்டுவந்து அதை ஒழுங்காக நடத்தும்படி அவ்வளவு பெருமை பெற்றுவிட்டார்கள். இந்தராஜதானியில் முகம்மதியர்களின்கல்வி அபிவிருத்திக்கு இஃதொரு முக்கியமான அடையாளமாயிருக்கிறது.

இந்தச் சங்கம் சென்னைக்குவந்ததன்பயனாக முஸ்லீம்களுக்கு அநேகநாளாய் ஒரு குறையாயிருந்த எண்ணம் நிறைவேறிற்று. அஃதாவது: "தென்னிந்தியாமுகம்மதிய கல்வியபிவிருத்தி சங்கம்" என்பது ஏற்படுத்தப் பட்டது. கலாசாலையில் சேர்ந்துபடிக்கும் முஸ்லீம் மாணவர்களில் தகுந்தவர்களுக்கு இச்சங்கத்தார் அவர்களுடைய கல்வியபிவிருத்தியை யுத்தேசித்து உபகாரச் சம்பளம்கொடுத் துதவிவருகிறார்கள். கலாசாலை வகுப்புக்களுக்குக் கீழுள்ள பாடசாலை வகுப்பில் வாசிக்கும் பிள்ளைகளுக்கும் உபகாரச்சம்பளம் இச்சங்கத்தார் கொடுக்கும்படி பிரயத்தனம் செய்வார்களாயின் அதுபேருபகார மாயென்று முஸ்லீம் வர்க்கத்தார் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

இந்த மூன்றாவது பக்ஷத்தார் இன்னும் ஒருபெருங் காரியம் செய்திருக்கிறார்கள். "உலமாக்களின் சங்கம்" என்னுங் கூட்டத்தாரையும் சென்னையில் கூடும்படி செய்தார்கள். இச்சங்கத்தார், முஸ்லீம்களின் மௌட்டிய நோக்கங்களை நீக்கியும், அவர்களுக்கு இஸ்லாத்தின் உண்மைஞானத்தை விளக்கிக்காட்டியும், ஜடத்தையும் ஞானத்தையும் ஒன்றுசேர்த்தே முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று உறுதியாகப் போதகம் செய்தும் மிக்க உதவிபுரிந்தார்கள். முஸ்லீம்கள் முன்னுக்குவரும்படியான வேறொரு நல்ல அடையாளத்தையும் உம்முடைய சந்தாநேயர்கள் தெரிந்து கொள்ளலாம். பிறர்மேல் சார்ந்திருப்பதைக் காட்டிலும் தங்கள்மேல் தாங்கள் சார்ந்திருப்பதே அவசியமென்று இவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

தொழுகையின் பிரயோஜனம்.

(க) ஆண்டவனே நம்மைச் சிருஷ்டித்தான், அவனே நமக்கு இரணங்கொடுக்கிறான். அவனிடமே நாம் திரும்பிப் போகவேண்டும். அவனிடமே நமது நன்மை தீமைகளிருக்கின்றன. ஆகையால், நமது சிருஷ்டிகர்த்தா, நமது சர்வாதிகாரி ஆகிய ஆண்டவனை நாம் மனத்தில் இராப்பகல் முழுதும் நினைக்காவிட்டாலும் இரவிலும் பகலிலும் சில தடவைகளாயினும் நினைக்கவேண்டியது நம்மீது கடமையாம். ஏனெனின், மனித சுபாவத்தின் தன்மை, அஃதாவது மனிதரின் பிறவிக்குணமாவது, எந்த விஷயத்தை அல்லது எந்தவஸ்துவை நாம் அதிகமாய்ப் பழக்கவழக்கம் செய்கின்றோமோ அதனை, எவ்விதக் கஷ்டமுமின்றி வெகு சுலபமாகப் பற்றிப் பிடித்துத் தமது சொந்தக்குணமாக, அஃதாவது பிறவிக்குணமாகவே செய்துகொள்வதால், பிறகு எவ்விதத்திலும் அது நீக்கக்கூடாததாய் முடிவுவரையில் நிலைத்துநின்று போராடி முடிவில் முடிவாகிறதேயாம். இந்தவிஷயத்தை நித்திரை, மயக்கம், பை

த்தியம், முதலியவைகளில் பிரத்திபக்ஷமாய் இன்றுங்காணலாம். மயக்கம், பைத்தியம் முதலியவையுண்டா யிருக்கும்போது, போலீஸ் உத்தியோகத்தில் அதிகங் கவனத்தைச் செலுத்தினவன் அது சம்பந்தமான வார்த்தைகளைப் புலம்பவும், ஸிவில் விஷயத்தில் கவனத்தை அதிகஞ் செலுத்தினவன் அப்போது அது சம்பந்தமானவைகளைப் பிதற்றவும், இவ்விதம் எந்த எந்த விஷயத்தில் மனத்தை அதிகம் செலுத்தி யிருக்கின்றார்களோ அந்த அந்த சம்பந்த வார்த்தைகளைப் புலம்புவதையும் பிதற்றுவதையும் நாம் கண்ணால் பார்க்கவும், காதால் கேட்கவும் நேரிடுகிறது. இப்படி அவர்கள் ஒன்றைப் புலம்பவும் பிதற்றவும் நேரிடுவது அதனை அதிகமாய் அவர்கள் பழக்க வழக்கஞ்செய்து வந்ததன் பயனே யன்றி வேறொன்று மல்ல. இன்னும் எந்த விஷயத்தை நாம் அதிகங் கவனிக்கின்றோமோ அந்த விஷயமே நாம் தூங்கும்போது நித்திரையில் கனவிற் காணப்படுகிறது. இதுவும் நமது நினைவு அதிக்கிரமித்ததன் லக்ஷணமேயன்றி வேறொன்றுமல்ல. இதுவரையில் நாம் தெரிந்து கொண்டதாவது, மனிதப்பிறவிக் குணத்தின் லக்ஷணமானது, எதை நாம் அதிகமாய்ப்பழக்க வழக்கஞ் செய்கின்றோமோ அதுவே நமது மரணமாகிய முடிவுவரையிலிருக்கு மென்பதே. மனிதராகிய நமக்கோ உலகத்தில் பற்பல தொல்லைக ளிருக்கின்றன. அவைகளிலேயே நமது கவலைகளை யெல்லாம் செலுத்திவந்தால் நமது பிறவிக்குணமானது அவைகளையே பற்றிப் பிடித்துக்கொள்ளும். பிறகு அவை நமது முடிவோடேயே முடியும். இதனால் நமது ரக்ஷகனாகிய அல்லாஹுத் தஆலாவை நினைக்கவும், அவனுக்கு நன்றி செலுத்தவும் ஏதுவில்லாமற் போகிறது. எல்லாம் வல்லநாயகன் அவனே; சர்வபோஷண கர்த்தா அவனேயென்றும் நாம் முன் உறுதிப்பத்திரம் செய்திருக்கிறோம். அதன்படி அவனை நமது நாயகனெனஏற்று, அவனுக்குத் துதிசெலுத்தல், நன்றி செலுத்தல் முதலியவைகளைச் செய்யவேண்டியது கடமையாயிருக்க, அவனை அறவேமறந்து மற்ற விஷயத்தில் நமது முழுக்கவனத்தையுஞ் செலுத்திக் கொண்டிருப்பது ஞாயமாகுமா? நீதியாகுமா? முறையாகுமா? ஒருகாலும், இருகாலும், முக்காலும் ஆகவே யாகாது. உலக வியவகாரக் கவலையை இடையில் தடையில்லாமல் ஒரேயடியாய் விட்டு விட்டால், அது நமது பிறவிக்குணமாகி முடிவுவரையில் நின்று

நமது நாயகனுக்கு நன்றி யற்றவனாகவும், பொய்யனாகவும், அசத்தியனாகவும், வாக்கு விரோதியாகவும் செய்து விடும். இப்படியாகிவிடுவது உலகத்திற் கேற்குமா? நியாயச் சட்டம் விடுமா? எவ்வித ராஜாங்கச் சட்டமும் இதற்கு அனுமதி கொடுக்குமா? தண்டனையில்லாமற் போமா? ஒரு காலும், இருகாலும், முக்காலும் போகவேபோகாது? ஆகையால், முக்கியமாகவும், அவசியமாகவும், தினந்தோறும் குறைந்தபக்ஷம் சில தடவைகளாயினும் ஆண்டவனை நினைத்து நன்றி செலுத்துவதால், உலக விபவகாரத்தில் முற்றும் ஆழ்ந்துபோகாமலும், அது பிறவிக்குணமாக மாறிவிடாமலும், ஆண்டவனை அறவே மறந்துபோகாமலும், நன்றி மறந்தவன், பொய்வன், வாக்குவிரோதி என்னும் பேருண்டாகாமலு மிருக்க ஏதுவாகும்.

ஆகையால் இரண்டிரண்டு, நந்நான்கு மணிகளுக்கிடையில், ஒரு நாளையில் ௫ நேரம் அவனை ஞாபகப்படுத்தும்படி நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மனமானது எப்போதும் உலகத்தின் வியவகாரங்களில் ஆழ்ந்து கிடக்கின்றபடியால் அப்படியே ஆழ்ந்து மூழ்கிப் போகாவண்ணமாகவும் அவனை அறவேமறந்து போகாத வண்ணமாகவும் அடிக்கடி யிடையில் அவனை ஞாபகம் செய்யும்படியாகப் பிரயத்தனப் படவேண்டியது. நாம் இவ்விதம் பிரயத்தனப்பட்டு அவனை நினைக்காமல் அறவே மறந்துவிட்டால், நமது நாயகனே அல்லது உலகத்தாரே நம்மை, "தமது எஜமானை மறந்து நன்றிகெட்ட அடியார்களெனவும், தமது எஜமானுக்குக் கீழ்ப்படியாத அடியார்களெனவும்" சொல்ல ஏதுவாகும் என்பதே.

உலகத்தில் தற்காலத்தில் அனேக மார்க்கங்களிருக்கின்றன. அவற்றுள் எந்த மார்க்கத்தாரும் இஸ்லாமானவர்கள் எக்காரியத்திலும் பிஸ்மில்லாஹி, அல்ஹம்து லில்லாஹி முதலிய வாக்கியங்களால் அடிக்கடி ஆண்டவனை நேராக நினைப்பதுபோல் நினைப்பதில்லை. இன்னும் எந்த மார்க்கத்திலும் இவ்விதம் அடிக்கடி நேராக அவனை வணங்கும்படியான சுலப வழியுமில்லை. மேலும் நாம் செய்யும் வணக்கமானது வாக்கு,

மனம், தேகத்தின் எல்லா அவயவங்கள் முதலிய யாவற்றின் சம்பந்தமுள்ளது. வேறெந்த மதத்திலும் இவ்விதவணக்கம் ஏற்படவுமில்லை. புத்திமான்கள் இந்த விஷயத்தைச் சற்றுக் கவனித்து நிதானமாய் யோசிக்கின் இதன் மகிமையும் இதனாலுண்டாம் பயனும் நன்கு புலப்படும்.

(உ) தொழுகைக்காகத் தேகம், வஸ்திரம், ஸ்தானம் ஆகியவை சுத்தமாயிருக்கவேண்டியது ஆவசியகம்; அஃதாவது பர்லாம். தேக சுகத்திற்குச் சுத்தமே பிரதானமும் மூலமுமென முன்னமே நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால் தேகசுத்தியானது ஸ்நாநம், அர்த்த ஸ்நாநம் (ஒலு) முதலியவைகளால் உண்டாகுமென்பது முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் வஸ்திர சுத்தி முதலியவைகளைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

நமது தேகத்தினின்றும் கழிகிற அசுத்த பதார்த்தங்கள் (மலம் ஜலம் முதலியவைகள் போன்றவைகள்) நாம் உடுத்திக்கொள்ளும் வஸ்திரங்களிற் படாமல், உடைகளைச் சுத்தமாய் உடுத்திக்கொள்ள வேண்டும். அசுத்தமான உடைகளால் தேகத்தில் வியாதியுண்டாகவும், தொத்து வியாதிகள் வெகு சீக்கிரமாயும், சுலபமாயும் பற்றவும் ஏதுவாகின்றபடியால், தொழுகைக்காகத் தேகசுத்தியாயிருப்பதுடன், வஸ்திர சுத்தியாகவும், ஸ்தான சுத்தியாகவும் இருக்கவேண்டியதென்னும் ஏற்பாடுண்டாயிற்று. சுத்தவஸ்திரமானது தேகசுகத்திற்கு மூலமாவதுந் தவிர எப்போதும் நாம் சுத்த வஸ்திரத்தையே யுடுத்திக்கொள்ளும் வழக்குங்கும் ஏதுவாகிவிடும். நம்மிடம் உட்காருகிறவர்கள், நம்மிடம் பேசுகிறவர்கள் முதலியவர்களுக்கும் நாம் சுத்தமான வஸ்திரத்தை யுடுத்தியிருப்பதால், நம்மீது அசங்கம், அருவருப்பு முதலியவை யுண்டாக ஏதுவில்லாமற் போம். இன்னும், இவ்விதம் நம்மில் ஒவ்வொருவரும் சுத்தமான உடையுடுக்கப்பழகி எப்போதும் சுத்தமாயிருப்போம்.

இக்காரணம் பற்றியே, சிறுநீருக்கிருந்த பின் மண்ணாங்கட்டி, ஜலம் முதலியவைகளால் சுத்திசெய்யும் ஏற்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனின் ஒருபாத்திரத்திலுள்ள ஜலத்தை யூற்றிச் சற்றுப் பொறுத்துப் பார்த்தால் அதிற் கொஞ்ச ஜலம் மறுபடியும் தங்கியிருப்பதை அநுபவமாய்க் காணலாம். அப்படியே நாம்சிறு நீருக்கிருந்தபின் சிலதுளி மூத்திரந்தங்கிப் பின்பு வெளிப்படுவது இயல்பு. ஆகையால் அதை நாம் மண்ணாங்கட்டி முதலிய ஜலத்தை யுலர்த்தக்கூடிய வஸ்துக்களால் உலர்த்துவதுடன் ஜலத்தாலும் கழுவும்படி ஏற்பாடாகியிருக்கிறது; அப்படிச் செய்யாவிட்டால் அம் மூத்திரத்துளிகள் வஸ்திரத்திற்பட்டு அந்த வஸ்திரமும் அசுத்தமாக ஏதுவாகும். அதனால் ஏதேனும் வியாதி சம்பவித்து, தேக சுகத்திற்குக் கெடுதியுண்டாகும். ஆகையால் இந்தவிஷயமும் சுகாதார விதிக்கும், புத்தி யுத்தி ஆகியவைகளுக்கும் ஏற்றவைகளே யெனவிளங்கும்.

இதனால் தேகசுத்தம், வஸ்திர சுத்தம் ஆகிய சுகாதாரத்திற்குப் பிரதானமான விதிகள் கற்பிக்கப் படுகின்றன வென்பது விளங்கும்.

தொழுகைக்காகச் சுத்த வஸ்திரத்தாம் தேகத்தை மறைக்கவேண்டியதென்பதும் ஆவசியகம்; அஃதாவது பர்ல் ஆம். இதுவும் மனிதர்களுக்குத் தகுதியான உடைகளும் ஆவசியகமென்னும் சுகாதார சாஸ்திர விதிக்கு ஒத்திருக்கிறது. இன்னும் புருஷர்கள் இவ்விதம்உடுத்தவேண்டும் எனவும் ஸ்திரீகள் இவ்விதம் உடுத்தவேண்டுமெனவும் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளோ இரண்டு முன்கைகள், முகம், இரண்டு பாதங்கள் ஆகியவைகள் தவிர மற்றெல்லாப் பாகங்களையும் கண்டிப்பாய் மறைக்க வேண்டியது கட்டாயமும் ஆவசியகமுமாம்; அஃதாவது பர்ல்ஆம். ஏனெனின், ஸ்திரீகளின் தேகமானது புருஷர்களின் தேகத்தைப் பார்க்கிலும் அதிகமாகவும் முக்கியமாகவும் மறைக்கப்படவேண்டுமென்பதே பிரதானமாம். புருஷர்களும் தேகமுழுவதும் மறைக்கவேண்டியதும் ஆவசியகமே. இன்னும் அவரவர்கள் வசிக்கும் தேசத்தின் சீதோஷ்ணத்திற்குத் தகுந்தபடியாயும் சீதோஷ்ண காலங்களுக்குத் தகுந்தபடியாயும் உடுக்கவேண்டியது சுகாதார சாஸ்திரச்சட்டம். அந்தஅந்ததேசத்தவர்கள், அந்த அந்த காலத்திற்குத் தகுந்த வஸ்திரங்களைத் தகுந்தபடி யுடுத்துக்கொள்ளட்டுமெனவே இன்னதுதான் அவசியமானதெனவும் இவ்வகையான

துதான் வேண்டுமெனவும், வற்புறுத்தப்படாமல் பொதுவாய்ச் சொல்லப்பட்டிருப்பது ஷை சாஸ்திரத்திற்கு எவ்வகையாலும் ஒத்தேயிருக்கிறது. இன்னும் வெள்ளை நிறமான வஸ்திரம் சிரேஷ்டமானதெனச் சொல்லப்பட்டிருப்பதன் காரணம், வெள்ளை நிறமான துணிமணிகளின்மேல் படுகிற உஷ்ணம் அதற்குள் செல்லாமல் சிதறிப்போவதனாலேயாம்; இதுவும் சுகாதார விதிக்கு ஒத்ததே.

இக்காரணங்களால் தொழுகையானது ஸ்திரீ, புருஷர் ஆகியவர்கள் அவர்களின் இயல்பின்படி மரியாதையாகவும் ஒழுங்காகவும் உடுத்திக்கொள்வதைக் கற்பிக்கிறது. ஆண், பெண் என்னும் விகற்பமில்லாமல் தேகத்தின் சிலபாகம் மறைக்கப்பட்டும் சிலபாகம் திறக்கப்பட்டும் அலங்கோலமாகவும், தலைவிரிகோலமாகவும் உடுப்பதைக் கண்டிப்பாய் விலக்கி, ஆசாரமாகவும் சீர்திருத்தமாகவும் உடுத்திக்கொள்ளக் கற்பிக்கிறது. இந்த ஏற்பாடும் சாஸ்திரம் யுத்தி, புத்தி, அநுபவம் ஆகியவைகளுக்கும் ஒத்திருப்பது பரிஷ்காரமாய்த் தெரிகிறது.

(ஈ.) தொழுதுகொள்ளுகிற ஸ்தானமும் சுத்தமாயிருக்க வேண்டியது. ஆவசியகம். இதனால் நாம் குடியிருக்கிற வீடு, வாயில் முதலிய இடங்களும் அசுத்த முதலியவைகளில்லாமற் சுத்தமாயிருக்க வேண்டுமென்பது விளங்கும். ஏனெனின், அந்தவிடங்கள் அசுத்தமாயிருந்தால், நமது தேகத்தில் அல்லது வஸ்திரத்திற்பட்டு அசுத்தமாக ஏதுவாகும். நாம் அல்லது நமது ஸ்திரீகள் அசுத்தமானவிடத்தில் தொழுதுகொள்ளக்கூடாது. ஆகையால், வீடு வாசல்களை நாம் சுத்தமாய் வைக்கவேண்டிய விதிகளெல்லாம் இதில் அடங்கியிருக்கின்றன. நாம் அவ்விதிப்பிரகாரம் நமதுவீடு வாசல்களை வைத்திருப்பதால் நமது சுகம் பெரும்பாலும் நல்ல ஸ்திதியிலேயே யிருக்க ஏதுவாம். ஆகையால் இவ்விதியும் சுகாதாரச் சட்டம் யுத்தி, புத்தி, அநுபவம் ஆகியவைகளுக்கும் ஒத்திருக்கின்றனவென்பது தெளிவாய் விளங்குகிறது.

இதுவரையில் நாம் தெரிந்துகொண்டதாவது, தொழுகைக்காகத் தேகம், வஸ்திரம், ஸ்தானம் ஆகியவை சுத்தமாயிருக்கவேண்டியது ஆவசியகம்; அல்லது பர்ல் என்னும் பொது விதிகளால் சுகாதாரத்திற்கு வேண்டிய வாயுசுத்தம், ஜலசுத்தம், ஸ்நானம், அர்த்த ஸ்நானம், தேகசுத்தி, வஸ்திரசுத்தி, நாம் உடுத்தும்வகை, வாசம்செய்யும் ஸ்தானசுத்தி முதலியவைகளின் விதிகளெல்லாம் தேசம், தேகம், காலம், சுபாவம் ஆகியவைகளுக்குத் தகுந்த விதமாக அடங்கி யிருக்கின்றனவென்பதே.

போலிஞானிகள்.

பிரான்சுதேசத்தார், தாங்கள் காட்டிக்கொள்வதைக் காட்டினும் உண்மையில் மிக்க அறிவுள்ளவர்களா யிருக்கிறார்களென்றும், ஸ்பெயின் தேசத்தார்கள், தங்களுக்குள்ள உண்மையான அறிவைக்காட்டினும் அதிகமாக வெளியில் நடித்துக்கொள்கிறார்களென்றும் நாம் கேள்வியுற் றிருக்கிறோம்; ஆனால், தேசத்தார்களை நாம் எடுத்துக்கொள்ளாமல் சாதாரண மனிதர்களையே பரீக்ஷித்துப் பார்த்தால் இவ்விரண்டு குணங்களும் காணப்படும்; உண்மையான ஞானமுள்ளவன் சாதாரணமாகக் காணப்படுகிறான்; சிறிதும் ஞானமில்லாதவன் மகாஞானிபோல் நடிக்கிறான். போலிஞானிகள் தங்களுடைய அறிவின்மை வெளியில் தோன்றாமலிருக்கும் பொருட்டுச் செய்துகொள்ளும் நடிப்பைக் கண்டால் புத்திமான்களுக்கு மிக்க அருவருப் புண்டாகிறது; அற்பமானவிஷயங்களையும் அவர்கள் பெரியஞானம்போல் பேச ஆரம்பிப்பார்கள். அவர்கள் சிறிதைப் பெரிதாகப் பாராட்டி ஓயாமற் பேசுவார்கள்.

போலிஞானிகள் ஐவகைப்படுவர்: சிலர், சாதாரண மனிதர்களைக்கண்டால் தங்களுடைய ஞானத்தில் ஒருபாகத்தைக் காட்டி மற்றவற்றை மறைத்துக்கொள்வதுபோல் நடித்துக் கற்றவர்களைக் கண்டால் மௌனஞ் சாதித்திருப்பார்கள். தங்களுக்குத் தெரியாத விஷயங்களையும் அ

ஞ்சாமற் பிரசங்கம் செய்வார்கள். தங்களுக்குத் தெரியாதது உலகில் ஒன்றுமில்லை யென்று பிறர்மதிக்கும்படி நடிப்பார்கள். வேறு சிலர், தங்களுடைய சிரக்கம்பம் கரக்கம்பங்களால் தங்களுக்கு அதிகம் தெரியமென்று வெளிக்காட்டுவார்கள்; சிரக்கம்பஞ் செய்யும்போது ஒருகண்புருவத்தை ஆகாயத்தை நோக்கியும், மற்றொருபுருவத்தைப் பாதாளத்தைநோக்கியும் சாய்த்து இழுப்பார்கள். மற்றுஞ் சிலர், ஓங்கி ஒருவார்த்தையைச் சொல்லிச் சம்பாஷணையை நிறுத்திவிடுவார்கள். பிறர் சொல்வது உண்மையாயினும் அவர்களுக்கு ஒன்றுந் தெரியாதென்று கூசாமற் சொல்லுவார்கள். சிலர், தங்களுக்குத் தெரியாதவற்றை அலக்ஷியம் செய்து அவற்றைத் தெரிந்துகொள்வதால் சிறிதும் பயனில்லையென்று மறுத்துப் பேசுவார்கள்; தங்களுடைய அறியாமையே ஞானமென்று நினைத்துக்கொள்வார்கள். சிலர், நல்லவை தீயவை இன்னவென்று பகுத்தறிந்து கொள்ளாமல் மனிதர்களை உற்சாகப்படுத்தி அவர்களை ஏமாற்றித் தங்களுக்கு ஞானம் இருப்பதுபோல் மறைத்துக் காட்டுவார்கள். இவர்கள் எப்பொழுதும் எதிர்வாதம் செய்துகொண்டேயிருப்பார்கள்; தங்களுக்குள்ள மறுத்துப்பேசும் சக்தியால் தங்களுக்கு மிக்கஞான முண்டென்று மதித்துக்கொள்வார்கள். உண்மையை இன்மையென்றும், இன்மையை உண்மையென்றும் வாதம்செய்பவரோடு கற்றவர்கள் சம்பாஷிக்க மாட்டார்கள். மற்றவருக்கு இணங்கினால் தமக்குக் குறைவென்று போலிஞானிகள் நினைத்துக் கொள்கிறார்கள். வியாபாரத்தில் நஷ்டமடைந்த வணிகர் தங்களுடைய இழிவை வெளிக்காட்டாமல் மறைத்துவைக்கும்பொருட்டுச் செய்துகொள்ளும் தந்திரங்களைக் காட்டினும் அதிகமாக இந்தப் போலிஞானிகள் தங்களுடைய அறிவின்மையை மறைப்பதற்கு நடிப்புச் செய்துகொள்ளுகிறார்கள். போலிஞானிகள் சாதாரண மனிதர்களை ஏமாற்றிவிடுவார்கள்; அவர்களுடைய நிலைமையைக் கண்டறிந்து ஒவ்வொருவரும் அவர்களை ஏற்றுக்கொள்வதுகூடாது. போலிஞானிகளை ஏற்றுக்கொள்வதைக் காட்டினும் வெளித்தோற்றத்தில் பேதைபோல் காணப்படும் மனிதர்களை யேற்றுக்கொள்வது மிக்க நன்மையாக்கும்.

கொடுங்கோன் மன்னன் கண்டுபிடித்த கொடுமையான வாதை.

*

பூர்வகாலத்திலே, நேபிஸ் என்னும் பெயர்கொண்ட ஓர் அரசன் ஸ்பார்ட்டா தேசத்தை ஆண்டுகொண்டிருந்தான். அவன் சுபாவத்திலேயே குரூர குணமுள்ளவன். அவன் கொண்ட பணப்பேராசை அவனைக் குடிகளுக்கு இன்னும் பொல்லாதவனாக்கிற்று. கையிலகப்பட்டுக்கொண்ட ஜனங்கள் தங்களுடைய ஆஸ்திகளை ஒளித்துவைத்த இடத்தைச் சொல்லச்செய்யத்தக்க புதிதுபுதிதான கொடிய தண்டனைகளைச் செய்துவந்தான். ஒரு விசித்திரமான பிரதிமையைக் கட்டிக்கொள்ளச்செய்வதும் இவைகளில் ஒன்றாம். அந்த ராஜன், தான் வருத்திப்பணம் பிடுங்க நினைத்த மனிதனைத் தன் அரண்மனைக்கழைத்துச் சம்பிரமமான விருந்திட்டு அரண்மனையில் ஏகாந்தமான இடத்திலே தன்னோடு பேசவரச் சொல்லுவான். அந்த அறையில் அழகிய பட்டுச்சரிகைத் திரைகள் தொங்கிக்கொண்டிருக்கும். அறையின் ஒருமூலையிலே பளபளப்பான பட்டாடை உடுத்திய ஸ்திரீ வடிவப் பதுமை யொன்றிருக்கும். அந்த ராஜா வந்த விருந்தாளியை அந்தப் பதுமையை ஆலிங்கனஞ்செய்துகொள்ளச் சொல்வார். அப்படிச் செய்தவுடனே அந்தப்பதுமை தன் கைகளைத் தூக்கி அந்த நிர்ப்பாக்கியனுடைய கழுத்தையும் தலையையும் பிடித்துக்கொண்டு அவன் கோவென்று வேதனையால் அலற அமுக்கிக்கொள்ளும். அந்தப் பதுமையின் கைகளின் உட்புறத்தில் இரும்பு ஆணிகள் இரகசியமாய் அமைக்கப்பட்டிருக்கும். அவைகள் முகத்திலும் தலையிலும் குத்தும். அவன் அவஸ்தையினால் குற்றுயிராய்க் கிடக்கையில் அந்த ராஜன் கிட்டவந்து "இப்போதாவது" உன், பணம் எங்கேயிருக்கிறது சொல்வாயா என்பான்.

பிச்சைக்காரர்கள் என்னும் கொடியமன்னர் செய்யும் வாதையால் மனிதர்படுந் துன்பம் நேபிஸ்ராஜன் கண்டுபிடித்த வாதைக்குக் குறைந்ததல்லவே.

விநோதமஞ்சரி.

குரங்காட்டி: "துரைகளே! இக்குரங்கு மகாசாமர்த்தியமுள்ளது; என்னவேலை செய்யச்சொன்னாலும் இதுசெய்யும்; இதனால் செய்ய முடியாத வேலை ஒன்றுமில்லை."

விகடன்: "இது பேசுமோ?"

குரங்காட்டி: "ஆம், பேசும்; நீ அந்தவர்க்கத்திலிருந்து தோன்றியவனாதலின் அதன்பேச்சு உனக்கு நன்றாக விளங்கும்; நீதான் அதன்பேச்சைத் தெரிந்துகொண்டு எங்களுக்குச் சொல்லவேண்டும்."

* * *

ஒருகுளத்தில் இரண்டுமனிதர்கள் புதிதாகத் தூண்டில்போட்டு மீன்பிடித்துக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது ஒருவன், அஜாக்கிரதையால் நீரில் விழுந்துவிட்டான். அவன் நண்பன் மிக்க பிரயாசையோடு நீரில் மூழ்கினவனைக் கரையேற்றினான். ஆனால், குளத்தில் விழுந்தவன் அதிகநேரம்வரையில் மூர்ச்சையாய்க் கிடந்தான். அவன் கண்ணைத்திறந்தவுடன் மற்றவன்சொன்னதாவது: "நண்பனே! நீபோயிருந்தவிடத்தில் அதிகமீன் மேய்ந்துகொண் டிருந்ததைப் பார்த்தாயா?"

* * *

புலவர்: "கடைச்சங்கத்தார் காலத்தைக் காட்டிலும் இப்போது மிகுதியான நாவலர்கள் தோன்றியிருக்கிறார்கள்."

ஆங்கிலமாணாக்கன்: "அக்காலத்தைப்போல் இக்காலத்தில் நாவலர் ஒருவரேனுமில்லை."

புலவர்: "இத்தனைபேர் நாவலர்கள் இல்லாமலிருந்தால் இத்தனை நாவல்கள் வெளிவரக் காரணமில்லை.

* * *

இலக்கணவாத்தியார்: "குழந்தாய்! என்னபடிக்கிறாய்?"

சிறுவன்: இந்தவருஷம் பி. ஏ. பரீக்ஷைக்குப் போகிறேன்."

இலக்கணவாத்தியார்: "எந்தப்பாடையில் பரீக்கைக்குப் போகிறாய்?"

சிறுவன்: "ஐயா! தங்களுடைய பாடையில்தான் போகிறேன்."

* * *

அரசன் அதிகநேரம் பேசிக்கொண்டிருந்து கடைசியில் மிக்க தளர்வடைந்து, உட்காரப்போகுந் தருணத்தில் சொன்னதாவது:—"நான் சகிக்கவேண்டிய பாரங்கள் அநேகம்; இராஜ்யபாரம், பூமிபாரம் இன்னும்——"

விகடன்: "குளோரோபாரம், அபடோபாரம்"

* * *

படித்தவர்: "இந்தவாக்கியத்தின் பொருள்யாது?"

மாணாக்கன்: "ஐயா! பொருள் விளங்கவில்லை."

படித்தவர்: "கேள்; நான் இன்னும் ஒருமுறை உனக்கு அறைகிறேன்."

மாணாக்கன்: "ஐயா! நீர் என்னை அறைந்தால் என் அம்மாள் உம்மை உதைக்கச் சொன்னாள்."

விகடன் போர்வீரனானது.

ருஷியாதேசத்தின் தலைநகராயிருந்த மாஸ்கோ என்னும் பட்டணத்தில் ஒரு விகடனிருந்தான்; அவன் அவ்வூர்மன்னனுக்குப் பொழுது போக்காக விநோதக்கதைகள் சொல்லுவது வழக்கம். ஒருநாள் அரசன் அவன்மீது சந்தோஷங்கொண்டு "விகடா! உனக்கு ஏதேனும் வரம் வேண்டுமாயின் என்பால் கேட்டுக்கொள்; தருகிறேன்" என்றுசொன்னான். அப்பொழுது விகடன் தன்னை ஒரு போர்வீரனாக ஆக்கவேண்டு

மென்று விண்ணப்பஞ் செய்தான்; உடனே அரசன் அவனைப் போர்வீரனாக்கினான். பிறகு ஒருநாள் இரவில் அரசன் அவனைப் பரீக்ஷிக்கும்பொருட்டு அவன் அஜாக்கிரதையோடு தூங்கும்வேளையில் அவனுடைய அரையிலுள்ள உறையிலிருந்து உடைவாளைப் பிடுங்கிக்கொண்டு அதற்குமாறாக ஒரு மூங்கில் துண்டால்செய்த போலிக்கத்தியொன்றை வைத்துவிட்டுச் சென்றான். மறுநாள் அரசன் சபையிலிருந்து விசாரணைபுரியும்போது ஒருவன் குற்றவாளியாயிருப்பதைக் கண்டு அவனை வாளால் வீசிக்கொல்லும்பொருட்டு இந்தவிகடனையழைத்து அவனைக்கொல்லச்சொன்னான். உடனே தன்னுடைய உறையில் உண்மையான வாள் இல்லையென்று கண்ட அந்தவிகடன் மூங்கில்கத்தியில் கையைவைத்துக் கண்களைமூடிக்கொண்டு, “ஜெகதீசா! நான் இதுவரையில் ஒருவருக்கும் துன்பம் செய்ததில்லை; இப்பொழுதுநான் ஒருமனிதனைக் கொல்லும்படி அரசனுடைய உத்தரவு பிறந்திருக்கிறது; நான் அவனைக் கொல்லாமலிருக்கும் பொருட்டு என் உடைவாள் மூங்கில்வாளாக மாறிவிடவேண்டியது; அதற்கு நீர் அருள்புரிய வேண்டும்” என்று தெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டே மூங்கில்வாளை உருவினான். அதுகண்ட அரசன், அவனை மிகவியந்து, “நீ விகடனாகத்தான் இருக்கமுடியும், போர்வீரன் தொழில் உனக்கேற்றதன்று” என்றுசொல்லி அவனை விகடனாகவே வைத்துக்கொண்டான்.

உலக வர்த்தமானம்.

முஸ்லீம் வர்த்தமானம்.

திருமக்காயாத்திரை:—திருமக்காயாத்திரைக்குப் பிரயாணமாகும் முஸ்லீம்கள் தங்களுடைய பிரயாணத்துக்குப் போதுமான திரவியம் வைத்துக்கொண்டு புறப்படவேண்டுமென்று பம்பாய் கவர்ண்மெண்ட்டார் உத்தரவுசெய்திருக்கிறார்கள். திருமக்காவுக்குப் போய்விட்டால் எப்படியாவது யாசகம்செய்து திரும்பிவரலாமென்னும் நோக்கத்தோடு போவதற்கு மட்டும் வேண்டியபணம் சேகரித்துக்கொண்டு அநேகர் மக்காவுக்குப் புறப்படுகிறார்களென்று, பம்பாயிலுள்ள முஸ்லீம்கனவான்களால் நடத்தப்பட்டுவரும் ஹிஜாஜ் சங்கத்தார் அவ்வூர்கவர்ண்மெண்ட்டாருக்குத் தெரிவித்தார்கள். ஹிஜ்ஜுக்குப்போய்த் திரும்பிவரும்போது பம்பாய்மட்டும்வந்து பிறகு தங்கள் தங்கள் ஊருக்குப்போகமுடியாமல் அநேகம் ஹாஜிகள் வருந்துகிறார்களாம். பம்பாயிலிருந்து திரும்பிவருவதற்கு ரிட்டர்ண் டிக்கட்டாவது, அல்லது போதுமான பணமாவது வைத்திருக்கும் மனிதர்களைமட்டும் ஹஜ்ஜுக்கு அனுப்பவேண்டுமென்று ஹிஜாஸ்சங்க்த்தார் மனுப்பண்ணியிருக்கிறார்கள். பம்பாயிலுள்ள யாத்திரைப் பாதுகாவலரிடம் திரும்பும் செலவுக்குவேண்டிய பணத்தை வைத்துவிட்டுப் போகவேண்டுமாம். யாத்திரைக்குவேண்டிய திரவியம் முழுதும் இருந்தால்மட்டும் ஹஜ்ஜு ஒருவனுக்குக் கடமையாகும் என்று குரானேஷரீபில் வந்திருக்கும் விஷயத்தை ஒவ்வொரு முஸ்லீமும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமென்று பம்பாய்கவர்ண்மெண்ட்டார் தெரிவிக்கிறார்கள்.

* * *

லண்டனில் பள்ளிவாயில்:—லண்டன்மாநகரத்தில் தொழுகைக்கு வேண்டிய பள்ளிவாயிலொன்றும், இஸ்லாமார்க்க சம்பந்தமான புத்தகசாலையொன்றும் இருக்கவேண்டியது அவசியமெனக்கருதி, அங்குள்ள முஸ்லீம்பிரபுக்களும், இஸ்லாத்தில் பற்றுள்ள அநேகம் ஆங்கிலேயர்களும் தீர்மானம்செய்திருக்கிறார்கள். இதற்காக மாட்சிமைதங்கிய ஆகாகான் 5000 பவுன் உதவியிருக்கிறார்கள்; முஸ்லீம் உலகத்திலுள்ளபிரபுக்களும் அரசர்களும் இதற்கு உதவிபுரிவார்கள். துருக்கியிலிருந்து இங்கிலாந்துக்குப் போயிருக்கும் மந்திரி, பாரசீகதேச மந்திரி, ஆம்தில்துரை, ஆவர்பரிதுரை, ரொனால்ஷ்துரை, இந்தியாகௌன்ஸிலிலுள்ள மூன்றுதுரைகள் முதலிய அநேகர் இவ்விஷயத்தை நடத்த முன்வந்திருக்கிறார்கள். இந்தியா, சிங்கப்பூர், பினாங்கு, சீனா முதலிய இடங்களில் முஸ்லீம்கள் இதற்காகப் பணம் வசூல்செய்ய ஆரம்பித்திருக்கிறார்க

ள். இங்கிலாந்து பாங்கில் இச்சங்கத்தார் பற்றுவரவுசெய்வார்கள். நம் நாட்டுத்தனவான்களும் அந்தப்பாங்கிக்கு நேரே பணம் அனுப்பலாம். இஸ்லாம்நேசனும் தன்னால் இயன்றமட்டும் சேகரித்துப் பணம்அனுப்பத் தீர்மானித்திருக்கிறது. ஒருபைமுதல் எவ்வளவுகொடுத்தாலும் பெற்றுக்கொள்ளுவோம். தங்கள் தங்களாலான பணத்தைக்கொடுத்து உதவிபுரிவீர்களாக. பணம்கொடுப்போர் பெயரும், அவர்கள்தொகையும் ஒவ்வொருமாத இஸ்லாம்நேசனிலும் வெளிவரும்.

* * *

முஸ்லீம் சர்வகலாசாலை:—மாட்சிமைதங்கிய ஆகாகான் அவர்களின் நன்முயற்சியால் முஸ்லீம் சர்வகலாசாலைக்கு வேண்டியதொகை சீக்கிரம் வசூலாய்வருகிறது. இவர்கள் மாட்சிமைதங்கிய போபால்பேகம் அவர்களிடம்சென்று சர்வகலாசாலை சம்பந்தமாகப் பேசினார்கள். அப்பேகமவர்கள், மகாமாட்சிமைபொருந்திய நம்முடைய சக்ரவர்த்தியவர்கள் இந்தியாவுக்கு வருவதில் மிக்கமகிழ்ச்சிகொண்டு அதற்கு அறிகுறியாக ஒருலக்ஷம்ரூபா சர்வகலாசாலைக்கு நன்கொடையளிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். இதற்காகப் பணம் வசூல்செய்யும் நிமித்தத்தால் மாட்சிமைதங்கிய பேகம் அவர்கள் இவ்வருஷம் லண்டனுக்குப் புறப்படுவதாக யோசித்திருக்கிறார்கள். இவர்களைப்போல இன்னும் அநேகர் பணம்சேகரிக்க யத்தனிப்பார்களென்று நம்புகிறோம்.

மகாமாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்கள் இரண்டாவதுமுறை இந்தியாவுக்கு வருவதற்குச் சந்தோஷ அறிகுறியாக அலிகாரிலுள்ள "வேல்ஸ் இளவரசர் சாஸ்திரசாலை" என்னும் பள்ளிக்கூடம் "சாஸ்திர அரச கலாசாலை"யாக மாற்றப்படும் என்னும் விஷயத்தைக்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம்; இதன்காரணமாக முஸ்லீம் சர்வகலாசாலைக்கு வேண்டிய பணத்தையும் வசூலிக்கப் பிரயத்தனம் நடந்து வருகிறது. மகா மாட்சிமைதங்கிய நம்முடைய சக்ரவர்த்தியவர்களுக்கு மகுடாபிஷேகம் நடக்கும்போது அந்தச் சந்தோஷ ஞாபகார்த்தமாக முஸ்லீம் சர்வகலாசாலையை ஏற்படுத்திவிட வேண்டுமென்னும் நோக்கம்

எல்லோருடைய ஞாபகத்திலும் வந்துவிட்டது. மாட்சிமைதங்கிய ஆகாகானவர்களின் ஆதரிப்பின்கீழ் ஒரு சங்கத்தார் கல்கத்தா, லக்னௌ, லாகூர், பம்பாய் முதலிய விடங்களுக்கு இந்த ஜனவரி, பிப்ரவரிமாதங்களில் போவார்கள். மாட்சிமைதங்கிய ராம்பூர் பேகமவர்கள் தேக அசௌக்கியமாயிருப்பதால், மாட்சிமைதங்கிய ராம்பூர் நவாப் அவர்கள் இச்சங்கத்தில் சேரமுடியாதோவென்று அஞ்சுகிறோம். ஆனால், நவாப் அவர்கள் சுதேசநாடுகளுக்குப்போய்ப் பணம் வசூல் செய்யக்கூடுமாயின் அந்நாடுகளிலிருந்தே லக்ஷக்கணக்கான தொகை அகப்படும்.

மாட்சிமை தங்கிய போபால்பேகமவர்கள் முஸ்லீம் சர்வகலாசாலைக்காக ஒருலக்ஷம்ரூபா தருவதோடு அலிகார் கலாசாலைக்கு மின்சாரவிசிறிகளும் விளக்குக்களும் சொந்தச்செலவில் போட்டுக்கொடுப்பதாகவும் வேறு உதவிகளும் செய்வதாகவும் வாக்களித்திருக்கிறார்கள்.

பேகமவர்களின் இளையபுத்திரர், ஹமீதுல்லாகான் இளவரசர் அலிகார் கலாசாலையின் மாணாக்கர்தாம்; கலாசாலையிலுள்ள மற்ற மாணாக்கர்களுக்கும் உபாத்தியார்களுக்கும் இவர்பால் மிக்க நட்புண்டு.

இந்த முஸ்லீம் சர்வகலாசாலைக்குப் பணம் சேர்ப்பதற்கு வேறோர் உபாயமும் செய்திருக்கிறார்கள்: இந்தியாவின் எந்த ஊரிலிருக்கும் முஸ்லீமானாலும் இந்தச் சர்வகலாசாலையில் பற்றுள்ளவராயின் தங்கள்தங்கள் ஊர்களிலும், கிராமங்களிலும், வீதிகளிலும், சந்துகளிலும் வீடுவீடாய்ப் புகுந்து, தர்மம்வாங்கி அவ்வாறு கிடைக்கும் பணத்தை அவர்களுக்கு அனுப்பலாம்.

மிகுந்ததனவானும், கல்வியறிவு ஒழுக்கங்களில் சிறந்தவரும், குடிகளிடத்து அருள்நிறைந்தவருமாகிய மாட்சிமைதங்கிய ஆகாகான் அவர்கள் இந்த நன்முயற்சியை மேற்கொண்டிருக்கும்போது, முடிசூட்டு வைபவம் நடக்கும் நாளில் முஸ்லீம் சர்வகலாசாலைக்கு அஸ்திபாரக்கல் நாட்டப்படுமென்பதில் என்னசந்தேகம்? இந்தச் சர்வகலாசாலைக்கு

ரூ 20, 00, 000 வேண்டுமென்று மாட்சிமைதங்கிய ஆகாகான் அவர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். இவர்கள் சொந்தத்தில் ரூ 100, 000 அளித்திருக்கிறார்கள். லண்டன் மஸ்ஜிதுக்காக 5000 பவுன் உதவியிருக்கும் மகானும் இவர்களே. இவர்களை ஆண்டவன் நெடுங்காலம் காப்பானாக. மிகுதி ரூ 1, 900, 000 மும் சுதேசநாடுகளிலிருந்தும், முஸ்லீம் பிரபுக்களிட மிருந்தும் சேகரிக்கவேண்டுமென்று யோசித்திருக்கிறார்கள். பத்துலக்ஷம் ரூபாவரையில் வசூல்செய்ய இடம்வாய்த்திருக்கிறது. சுதேச நாடுகளிலுள்ள முஸ்லீம் மன்னர்கள்பால் இவர்கள், தாங்களே நேரில் போய்ப் பணம் சேகரிப்பதாகத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இவர்களை முழு முதற் கடவுள் அநேக வருடம் ஜீவித்திருக்கச் செய்வானாக. ஆமீன்.

கும்பகோணத்தில் அஞ்சுமன்:—சென்ற சில ஆண்டுகளாகக் கும்பகோணத்தில் ஓர் "அஞ்சுமனெ இஸ்லாம்" என்னும் சங்கம் நடந்து வந்தது. முஸ்லீம்களின் கல்வி அபிவிருத்தியி னிமித்தம் இச்சங்கத்தின் பெயரையும் "அஞ்சுமனெ ஹிமாயதே இஸ்லாம்" என்று மாற்றி முஸ்லீம் சிறுவர்களின் கல்வியை முன்னுக்குக்கொண்டுவர அச்சங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்களெனக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். சென்றவருடம் இச்சங்கத்தார் ஆறுபள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார்களாம். ஐந்தாவது ஆறாவது வகுப்புக்களில் படிக்கும் இரண்டு முஸ்லீம் மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கிறார்கள். சங்கத்துக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 150 வரும்படியும், ரூ 125 செலவும் ஏற்படுகின்றன. 1911 ஜனவரி 6௳ கூடிய கூட்டத்தில் ரூ 5775 வரையில் கொடுப்பதாக அங்குவந்திருந்த தனவான்கள் வாக்களித்தார்கள். உ. லால்கான்சாயபு, மு. பாபுசாயபு, மு. இ. முகம்மது இஸ்மாயீல் சாயபு, ஆ. கா. இஸ்மால்சா ராவுத்தர், உ. ஆ. முகம்மதுகன்னிராவுத்தர், காதர்மொஹிதீன் ராவுத்தர் இவர்களின் பேருதவியால் சங்கம் நடைபெற்று வருகிறது. உ. லால்கான்சாயபு ரூ 2000 நன்கொடையளித்திருக்கிறார்களாம். இவ்வாறே மற்ற ஊர் முஸ்லீம்களும் செய்வார்களாயின் நம்மவருக்கு மிக்கபயனுண்டாகும்.

மதுராஸில் முஸ்லீம்கூட்டம்:—1911வருடம் ஜனவரிமாதம் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் சென்னை விக்டோரியா ஹாலில் ஒரு முஸ்லீம்கூட்டம் கூடிற்று. சென்னையில் உபாத்தாகும் முஸ்லீம்களை மயிலாப்பூரில் அடக்கம் செய்யக்கூடாதென்றும், அடையாற்றுக்குத் தூக்கிக்கொண்டு போகவேண்டுமென்றும் கவர்ண்மெண்ட் உத்தரவுபிறந்தது. அடையாறு ஊருக்குவெளியில் அதிகதூரத்திலிருப்பதால் மையத்தைத் தூக்கிக்கொண்டு அவ்வளவு தூரம் நடந்துபோவதுமுடியாதென்றும், மஸ்ஜிது தர்கா ஆகிய வற்றிற்குச் சமீபத்தில் மையத்துக்கொல்லை இருக்கவேண்டுமென்றும், இன்னும் சிலகாரணங்களால் அவ்வாறு மாற்றுவது உசிதக்குறைவாகுமென்றும், அக்கூட்டத்தார் தீர்மானம் செய்தார்கள். கூட்டம் 1000 முஸ்லீம்கள்; சபாநாயகர், கனம் அப்துல் அஜீஜ்பாஷா அவர்கள்; பத்துப்பன்னிரண்டு ஊர்களிலிருந்து அனுதாபத்தந்திகளும் வந்தன. இந்தமுடிவைக் கவர்ண்மெண்டாருக்கு அனுப்புவார்களாம்.

முஸ்லீம்சர்வகலாசாலை:—லாகூரில் ஜனவரிமாதம் 24ந்திகதி கூடி, ஒருகூட்டத்தில் அலிகார்முஸ்லீம் சர்வகலாசாலைக்கு வேண்டிய பணம் சேர்க்கும்பொருட்டு ஒருமாகாணசபை ஏற்படுத்தப்பட்டது. பஞ்சாப் மாகாணமுழுதும் ஜில்லாக்கள்தோறும் ஒவ்வொருசபை ஏற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. அடுத்தமாதம் மாட்சிமைதங்கிய ஆகாகான் இம்மாகாணத்துக்குப் போவார்கள். சுமார் 10 லக்ஷம் ரூபாவரையில் சேர்ந்துவிட்டது.

பாரஸீகம்:—பாரஸீகத்தில் புதிய அரசருக்குப் பட்டங்கட்டியது முதல் ராஜ்ய சம்பந்தமான குழப்பங்கள் மிகுந்திருக்கின்றன.

தண்டிக்கப்பட்டார்:—கைரோ பட்டணத்திலுள்ள ஜனக்கக்ஷித்தலைவரான முகம்மது பரீத் என்பவர் ஜனவரிமாதம் 23 ந்திகதி ராஜது

ரோகமான ஒரு பாட்டுக்கு முகவுரை எழுதியதற்காக ஆறுமாதம் தண்டிக்கப்பட்டார்.

* * *

பக்ரீத்கலகம்:-நவம்பர்மாதம் 9, 10, 11 ந்திகதிகளில் கல்கத்தாவில் முஸ்லீம்களுக்கும் மார்வாரிகளுக்கும் குர்பான் சம்பந்தமாகப் பெருங்கலகம் விளைந்தது. கொலைகளும், கொள்ளைகளும் இருகக்ஷியிலும் நடைபெற்றன. 60 பட்டாணிகளும், 40 ஹிந்துக்களும் பிடிக்கப்பட்டார்கள்.

இரங்கூனிலும் பக்ரீத்சம்பந்தமாகக் கலகம்விளைந்தது. அப்பொழுது அக்கலகத்தை நிறுத்தும்பொருட்டுப் போலீஸார் துப்பாக்கியைப் பிரயோகம் செய்தார்கள்.

* * *

எஜுகேஷனல்கான்பரன்ஸ்:—நவம்பர் மாதம் 27 ந்திகதி நாகப்பூரில் அப்துல்லா இப்னு யூஸுப் அலி எம். ஏ, எல். எல். எம், ஐ. சீ. எஸ் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மகமடன் எஜுகேஷனல் கான்பரன்ஸ் கூடிற்று.

* * *

ஆல் இந்திய முஸ்லீம்சங்கம்:—நவம்பர்மாதம் 28 ந்திகதி நாகப்பூரில் கனம், நபீயுல்லா அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் இச்சங்கம் கூடிற்று.

* * *

அலிகார்காலேஜ்:—அலிகார்காலேஜில் காரியதரிசி வேலைபார்த்து வந்த கனம், முஷ்தாக் ஹுஸைன் தம்வேலையை இப்போது ராஜினாமாகொடுக்காமல் முஸ்லீம் சர்வகலாசாலையை நிலைநிறுத்துமட்டும் வேலைபார்ப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஹிஜாஸ்குழப்பம்:—ஹிஜாஸ் இருப்புப்பாதைக் கருகில் கோராக் என்னுமிடத்தில் ஒருகுழப்பம் ஏற்பட்டது. கலகக்காரர்களோடு அநேகம் பத்துக்களும் சேர்ந்துகொண்டு பத்து ஸ்டேஷன்களை இடித்துவிட்டார்கள். அநேகம் கொலைகளும் நடந்தன. ஐம்பதுமைல் வரையில் தண்டவாளங்களைப் புரட்டிவிட்டார்கள். கொராக்கை முற்றுகைபோட்டு மிகுதியான கொள்ளையடித்துக் கொண்டிருக்கும்போது ஸாமிபாஷா அவ்விடம்வந்து கலகத்தை நிறுத்தினார்கள். இன்ஜின்டிரைவர்கள் புகைவண்டியை ஓட்டோமென்று பயப்படுகிறார்கள். ஹிஜாஸ் இருப்புப்பாதைக் கம்பெனியாருக்கு இதனால் பெருத்த நஷ்டமுண்டாகும். யாத்திரை முஸ்லீம்களெல்லோரும் கரைமார்க்கமாகவும், கடல்மார்க்கமாகவும் போகவேண்டியதாகும்.

* * *

இந்தியாவுக்கு வந்தார்:—இத்தேசத்திலுள்ள முஸ்லீம்களின் நிலைமையை நேரில் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் நோக்கத்தோடு லிவர்ப்பூரிலிருந்து அந்நகரத்தாராகிய ஸ்ரீமான், ஷெய்குல் இஸ்லாம் அப்துல்லாகுயில்யம் அவர்களின் மருகர் ஸ்ரீமான், அப்துஸ்ஸலாம் சாஹிப் ராபர்ட்ஸன் பீ. ஏ. அவர்கள் சென்ற நவம்பர்மாதம் சிக்கந்தராபாத்துக்கு வந்திருந்தார்கள்.

* * *

புதுநியமனம்:—கனம் யாகூப் ஹுஸைன்ஸெய்ட் அவர்கள் சென்னை முனிஸிபாலிட்டியில் ஒருகமிஷனராகக் கவர்ண்மெண்டாரால் நியமனம் பெற்றிருக்கிறார்.

* * *

மதுரை:—பிப்ரவரிமாதம் 5 ந்திகதி மதுரையில் "முகம்மதிய கல்வியபிவிருத்தி சங்கம்" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தென்னிந்தியா முகம்மதிய கல்வியபிவிருத்தி சங்கத்துக்கு இஃதோர் அங்கமாம்.

கான்பஹதூர் அப்துஸ் ஸுபஹான்சாஹிபு அவர்கள் இதன் அக்கிராசனாதிபதியாம்.

பொது வர்த்தமானம்.

1912௵ ஜனவரிமாதம் 1௳ முஹர்ரமாதம் 10௳ யாக வருவதால் மகா மாட்சிமைதங்கிய நம்முடைய சக்கரவர்த்தியவர்கள் முஸ்லீம்களுக்கு வருத்தமுண்டாகுமென்று நினைந்து முடிசூட்டு வைபவத்தை வேறொருநாளில் வைத்துக்கொள்ளும்படி தெரிவித்தார்கள். ஆதலின் தில்லிதர்பாரில் 1912௵ ஜனவரிமாதம் 10௳ முதல் 20௳ வரையில் முடிசூட்டு வைபவம் நடைபெறும்.

* * *

புதுமந்திரி:—நவம்பர்மாதம் 9௳ இந்தியாமந்திரி மார்லிதுரையவர்கள் தம்முடைய வேலையை விட்டுவிட்டார்கள். அதுமுதல் க்ரூதுரையவர்கள் இந்தியா மந்திரியாக வேலைபார்த்து வருகிறார்கள்.

* * *

புதுகவர்னர்:—ஹார்டின்ஜ்துரையவர்கள் நவம்பர்மாதம் 21௳ பகல் 1 மணி 15 நிமிஷமுதல் இந்தியாவின் ராஜப்பிரதிநிதியாக வேலை யொப்புக்கொண்டிருக்கிறார்கள்.

* * *

மதுராஸ்கவர்னர்:—மதுராஸ்கவர்னர் ஸர் ஆர்தர் லாலிதுரையவர்கள் இன்னும் 4 மாதகாலம் கவர்னராக இருக்கலாமென்று உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பைபிள்:—பைபிளில் 5, 536, 489 எழுத்துக்களும், 773, 693 வார்த்தைகளும், 31, 173 வாக்கியங்களும், 1, 189 அத்தியாயங்களும், 66 புத்தகங்களு மிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

* * *

உயிரோடு புதைக்கப்பட்டார்:—ஆஸ்திரியாதேசத்தில் நார்தீனி என்று பெயர்வகித்த ஒருவரிருக்கிறார்; இவர் மிக்க வன்மையுள்ளவர்; தேகாப்பியாசம் மிகுதியாகச்செய்து அதிகபலமடைந்திருக்கிறார்; 20 வினாடிவரையில் தம்முடைய இருதயத்தையும் துடிக்காமல் நிறுத்திவிடுகிறார். ஒருநாள் அவர் ஒருமரப்பெட்டியில் படுத்துக்கொண்டு கண்வாய் காதுகளைப் பஞ்சால் அடைத்துவிட்டுத் தம்மைப்புதைக்கச்சொன்னார். ஓரடி ஆழத்தில் 10 நிமிஷம்வரையில் மணலில்புதைக்கப்பட்டார். பிறகு பெட்டியைத்தோண்டி எடுத்தபோது அவருக்கு எவ்வித உபாதையும் காணப்படவில்லை.

* * *

4. மரணங்கள்:——"கிரிஸ்தவர்களுக்கொரு நற்செய்தி" என்ற கிரந்தத்தை இயற்றிய ஆசிரியர், கனம், சா. ம. பீ. காதர்மைதீன் இராவுத்தரவர்கள் சென்றமாதம் காலம்சென்றுபோனார்கள்.

மதுராஸ் மாபூஸ்கான்தேவடியிலிருந்த பிரபலவர்த்தகர் கனம், பீர்சாஹிபு அவர்கள் இவ்வருஷம் ஹஜ்ஜுக்குப்போய் மக்காவில் மரணமானார்கள்.

சிறந்த நாவலராய் விளங்கிச் சிலேடைபாடுவதில் மிக்கதேர்ச்சிவாய்ந்திருந்த வேம்பத்தூர் பிச்சுவையரவர்களும், கும்பகோணம் கவர்ண்மெண்ட்காலேஜ் தமிழ் வித்துவானாயிருந்த வை. மு. சடகோபராமானுஜாசாரியரும் சென்ற ஜனவரிமாதம் காலஞ்சென்றுபோனார்கள்.

* * *

புதுநியமனம்:——கும்பகோணம் கவர்ண்மெண்ட் காலேஜில் சென்ற ஜனவரிமாதம் 24௳ முதல் பிர்மஸ்ரீ, மணலூர் வீ. ராமானுஜாசாரிய

வர்கள் தமிழ்வித்துவானாக வேலைபார்த்து வருகிறார்கள். இவர்கள் மிக்க கௌரவமும் பெருந்தன்மையும் வாய்ந்தவர்கள்; தகுந்த போக்கியமுள்ளவர்கள்; மிக்க கல்வியறிவுடையவர்கள். "கற்ககசடறக் கற்பவை கற்றபி னிற்கவதற்குத்தக" என்றபடி மிகுந்த சீலம் அவர்கள் பாலுண்டு; மாணவருக்குப் பாடம் சொல்வதில் சாமர்த்தியமிகுந்தவர்கள்; தமிழென்றால் வாயும் கசக்குமென்று ஆங்கிலம்பயிலும் மாணாக்கர்கள் சொல்லும் இக்காலத்தில், அவர்களுக்கு இதமாகப் பாடம்சொல்லும் திறமுடையவர்கள்; இலக்கணப்பாடஞ் சொல்லுவதில், அக்கலாசாலையில் முன் தமிழ்வித்துவானாயிருந்த ஸ்ரீ. தியாகராஜசெட்டியாரவர்களுக்கு இவர்கள் ஒப்பென்று சொல்லலாம்; இவர்களுடைய மாணாக்கர்களெல்லாம் இலக்கண நுண்ணறிவுடையராகக் காணப்படுகின்றனர்; இவர்களுக்கே அவ்வேலை உறுதியாகுமென்று நம்புகிறோம். கடவுளும் கிருபை செய்வாராக.

* * *

மகாராஜாவரவு:—பிப்ரவரிமாதம் 2உ வியாழக்கிழமை சென்னையிலுள்ள மிக்க வியாபகமுள்ள பெரியோர்கள், சென்னை கவர்னர் அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் ஒரு கூட்டம் கூடினார்கள். தில்லி தர்பாருக்கு முடிசூட்டு வைபவத்துக்குவரும் ஜார்ஜ்மகாராஜா அவர்களையும் மேரிமகாராணியவர்களையும் இச்சென்னைமாநகருக்கும் வரவேற்க வேண்டுமென்று எல்லோரும் ஒருங்கே தீர்மானித்துத் தங்கள்நோக்கத்தை மன்னரவர்களுக்குத் தெரிவிக்கும்படி இந்தியாமந்திரிக்குத் தெரிவித்திருக்கிறார்கள். கவர்னர் லாலிதுரையவர்கள் அடுத்த அக்டோபர் மாதம் வரையில் வேலைபார்க்கலாமென உத்தரவுபிறந்திருந்தது. ஆனால், சக்ரவர்த்தியவர்கள் இச்சென்னைக்கு வரும்வரையில் இந்தக் கவர்னரே வேலைபார்த்து வரும்படி கவர்ண்மெண்ட்டார் உத்தரவு கொடுக்கும்படி இச்சபையார் வேண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

* * *

அடுத்தகவர்னர்:—ஸர்தாமஸ் கிப்ஸன் கார்மைக்கேல் பார்ட்துரையவர்கள் இச்சென்னைக்கு அடுத்தகவர்னராக நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
8 - SEP 1911
MADRAS.

بسم الله

இஸ்லாம் நேசன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை-2.] 1911, மார்ச். [வகை-5.

கடவுள் இல்லையா?

"கடவுளே யில்லை! கடவுளேயில்லை!! அண்டகோளத்திற் காணப்படும் எல்லா வஸ்துக்களும் இயற்கையாகவே உண்டாகின்றன; இயற்கையாகவே வளர்கின்றன; இயற்கையாகவே அழிகின்றன; பிணிமூப்புச் சாக்காடெல்லாம் இயற்கையாகவே நிகழ்கின்றன; எல்லாம் இயற்கையே யல்லாமல், இவை யெல்லாம் நடைபெறுதற்குக் காரணமாய்க் கடவுள் என்ற வஸ்து ஒன்றில்லை" என்று நாஸ்திகர்கள் வாதிப்பதுண்டு. பண்டைக்காலமுதலே நாஸ்திகவாதம் உலகத்தில் இருந்து வருகிறது; ஆனால், இக்காலத்தில் சாஸ்திர ஆராய்ச்சி மிகுந்துவருவதால் தெய்வம் உண்டென்னும் ஆஸ்திகக்கொள்கையே தலைப்பட்டு வருகிறது. கடவுள் உண்டென்பது உறுதியாகி விட்டது. அப்படி ஆஸ்திகர்களால் உண்டென்று ஒப்புக்கொள்ளப்படும் கடவுளின் தன்மை இப்படிப்பட்டதென்று சிறிது இங்கு ஆராய்வோம்:

நம்மால் அளவிடற்கரிய பராக்கிரமமுடைய நமது சிருஷ்டிகர்த்தாவின் வன்மை, அருள், தயை, கொடை, ஆக்கல், அழித்தல் முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசவும், புகழவும் எவரா[illegible]முடியாது. ஆயினும், இவ்வுலகில் நமக்கியன்ற வரையில் அவருடைய புகழைப்பற்றிப் பேசவேண்டியது நமது கடமையாயிருப்ப

தால் இவ்விடத்தில் அவ்விஷயத்தைப் பற்றி ஒருவாறு எடுத்துக் கூறுவோம்:

ஏகபரிபூரணராய் எங்கும் நிறைந்து,தனித்துச் சர்வவன்மையோடு கூடி ஏகாங்கியாய் நிற்கும் ஏகவஸ்துவே கடவுள். ஆதி அந்தம் அற்றவராய் எக்காலத்திலும் ஓரு தன்மைப் பட்டவர்,அவர் ஒருவரே. தாய்தந்தையரால் பிறவியெடுக்காமலும், வேறெந்தவஸ்துவாலும் சிருஷ்டிக்கப் படாமலும் தன்னந்தனியாய் இன்பதுன்பமற்றதாயிருக்கும் அபூர்வ வஸ்துவும் அவரே. ஆண் பெண் அலியென்னும் வடிவங் கொள்ளாதவரும், ஊர் பெயர் அற்றவரும், உறவற்றவரும், அரூபமுள்ளவரும், அண்டகோடிகளனைத்தையும் கயிறில்லாப் பம்பரம்போல ஆட்டுவிப்பவருமாகிய ஆதிமுதல்வர் அவரே. அவர் இராஜாதிராஜர்; மாபாதிகாரர்; பாராளுநாதர்; நானாவிநோதர்; சர்வாதிகாரர்; சர்வோத்தம நீதர்; இன்னும் அளவிடக்கூடாத அனந்தகோடி வன்மையுடையவர். அவர் ஒருவரே வணக்கத்துக் குரியவர். ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களும் அவருக்கே உரியவை. அவரை ஒப்பார் ஒருவருமேயில்லை. அவ்வாறான உன்னதமும் மகிமையும் பொருந்திய கர்த்தாவானவர் நம்மீது வைத்துள்ள அன்பைக் கவனிப்போம்:

அவர், சர்வ ஜீவான்மாக்களிலும் மேலான பதவியிலுள்ள மானிடவகுப்பில் நம்மைச் சிருஷ்டித்து இன்றியமையாத பிரயோசனங்களைத் தரக்கூடிய கைகால்முதலிய சகல அவயவங்களையும் கொடுத்துப் பகுத்தறியும்படி புத்தியையும் ஏற்படுத்தி, நாம் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவு மிருக்கும்படி மனைவிமக்களை உதவி, நமக்குரிய ஆகார வாகனாதிகளுக்காகப் பலதானியவகைகள், புல், பூண்டு, ஆடு, மாடு, குதிரை, யானை, ஒட்டகம்முதலிய சகல ஜீவராசிகளையும் உற்பத்தியாக்கிக் கொடுத்திருக்கிறார். நாம் அவரை நினைக்காவிடினும், அவர் நம்மை ஒருகணப்போதும் மறப்பதில்லை. நாம் அவரைப் பார்க்காவிட்டாலும், அவர் நம்மை இடைவிடாது பார்த்துக்கொண்டே யிருக்கிறார். அவருடைய கருத்தை நாமறியாவிடினும் நம்முடைய கருத்தை அவர் அறிந்து கொண்டிருக்கிறார். நாம் பலவேலைகளைச் செய்து அலுத்துத் தூங்கினாலும் அவர், நமக்காகச் செய்துவரும் எண்ணிறந்த காரியங்களால் அலுப்படையாமல் விழித்திருந்து நம்மைப் பாதுகாத்து வருகிறார். அவர்,இரவும் பகலும் நமக்காக மிகுந்த வேலைகளைச் செய்து வருகிறார். எனினும், அவர்,எவருடைய உதவியையும் எதிர்பார்ப்பவரல்லர். நாம் அனைவரும் அவருடைய உதவியையே எதிர்பார்க்கின்றோம்.

அவருடைய சர்வசக்தியைப்பற்றிப் பிரஸ்தாபிப்பதற்கு எவரால் முடியும்? ஏகாண்டமான பூமியைப் படைத்து, யாதொரு தூலமுமில்லாமல் வானத்தை அதற்கு மேற்குடையாகக் கவித்து, பெரிய சமுத்திரங்களை அணையில்லாமலடக்கி, தானியம் புல்பூண்டு முதலியவற்றின் விளைவுக்காகவும், மனிதர் ஆடுமாடு முதலியவைகள் ஜீவிப்பதற்காகவும் ஆறுகுளம் ஏரிமுதலியவைகளில் ஜலத்தை யுண்டாக்கி, காலக்கிரமப்படி மழை பனி வெயில் முதலியவை பெய்யவும் காயவும் செய்து, மனிதர்முதலிய சர்வஜீவான்மாக்களையும் சிருஷ்டித்து அவர்களை யிரட்சித்து அழித்து விடுதலாகிய இத்தனை விநோதச் செய்கைகட்கும் அவரே தக்கவர். ஆகையால், எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் தந்தையாகிய மூலபுருஷர் அவரேயன்றி வேறொருவருமில்லை. நாம் இரகசியமாகவும், வெளிப்படையாகவும் செய்துவரும் ஒவ்வொருசெய்கையும், பேசிவரும் ஒவ்வொரு வார்த்தையும் அவர் கவனத்துக்குத் தப்புவதே யில்லை. ஆகவே, நம்முடைய எல்லாச் செய்கைகளுக்கும் அவரே சாக்ஷியாயிருக்கிறார். அவர், கண்ணின்றிப் பார்த்தும், காதின்றிக் கேட்டும்,வாயின்றிப்பேசியும் வருகிறார். அவருடைய அற்புதச் செயல்களுக்கு இணை வேறொன்றுமேயில்லை. இத்தகைய அற்புதக் குணங்களமைந்த பேரின்பக் கடலைச் சதா நமது மனத்தில் தியானித்துத் தொழுது வரவேண்டியது நமது முதன்மையான கடமையாம்.

இவ்வாறு நாம், மெய்யன்போடு வணங்கத் தகுந்த அந்தக் கடவுளின் தன்மையைப்பற்றிப் பேசுவதற்கு நாம் சக்தியற்றவர்களாயிருக்கின்றோமாயினும், இயன்றவரையில் அவருடைய உண்மையைப்பற்றிச் சிறிது எழுதப்புகுவாம்:

ஓருமனிதன் பிரயாணம் செல்லும்போது வழியிலே தங்கமோதிர மொன்றைக் கண்டெடுத்தால், நூதனமாகக் கண்ட அத

ன் விருத்தாந்தத்தைச் சிறிது மறியான்; எனினும், அஃது ஒரு வடிவத்தோடிருப்பதால், செய்தவன் ஒருவன் உண்டென்பதை மாத்திரம் சந்தேகமின்றி உணர்ந்து கொள்ளுவான். இன்னும் ஒருவன், கப்பலேறிச் சமுத்திரயாத்திரை செய்யும்போது திடுமெனத் தோன்றிய புபற்காற்றால் ஒரு பாறையில் மோதிக் கப்பலுடைபட நீரில் வீழ்ந்து அலைகளால் ஒருவனமடர்ந்த தீவிற் சேர்க்கப்பட்டபோது, அவன் அங்கே உலாவிப்பார்க்கையில் அஃது எவ்விதப் பிராணியு மில்லாத காடாயிருந்தும் அங்கே ஓரிடத்தில் அலங்காரமான மாளிகையொன்று கட்டப்பட்டிருந்தது; அதிலும் மனிதசஞ்சாரமில்லை; எனினும், அது தொழில் முடிவாகிய மாளிகையாயிருப்பதால் "இதைக்கட்டியவன் ஒருவனிருப்பான்" என்பதை நிச்சயமாயுணர்ந்து கொள்வான். ஆதலால், இவற்றைப் போலவே நம்மால் பார்க்கப்படும் இப்பூவுலகமானது, யானைமுதலெறும்பீறான எண்பத்து நான்கு லட்சம் பேதமுள்ள ஜீவன்களாலும், தாவரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதால் "இத்தொழிலுக்குக் கருத்தன் ஒருவன் இருப்பான்" என்பது நிச்சயமாக விளங்குகின்றதன்றோ? இத்தகைய தொழில் வன்மையுடையவனைத்தான் வேதங்கள், "கடவுள்! கடவுள்!!" என்று கூறுகின்றன. ஆகவே, நாமும் "அவன்தான் கடவுள்" என்று உறுதியாக நம்பவேண்டும்.

மேலும் நாம், ஒரு சோலையைப் பார்க்கும்போது அதிலுள்ள மரங்களெல்லாம் அசைந்துகொண்டிருக்கின்றன; எனினும், அவற்றை அசைப்பவர் ஒருவருமில்லை; அவர் நம்கண்களுக்குப் புலப்படவுமில்லை; "ஆனால், இவை தாமே அசையுமா? இவ்வாறசைவதற்கு ஓர் ஏது வேண்டுமே" என்று நாம் ஆழ்ந்து யோசிக்கும்போது அதற்கு ஹேதுவொன்றுண்டென்பதையும், காற்றென்னும் ஒரு வஸ்து இருந்தே நம்கண்களுக்குப் புலப்படாமல் இவ்வாறசைக்கிறதென்பதையும் நன்குணர்கின்றோம். ஆகவே, நாம் கண்ணாற் பார்க்காவிடினும் காரியத்தைக்கொண்டு அரூபமாயிருக்கும், காரணமாகிய காற்றை உள்ளதென்று நிச்சயப்படுத்துகின்றோம். இம்மட்டுமன்று; சிலசமயங்களில் நாம் வெளியில் உலாவும்போது தேகத்தில் யாரோவந்து தடவினதைப் போன்று ஒருவித ஸ்பரிச முண்டாகிறது; அதனால், காற்றுவந்து மோதுகிறதென்று தெரிந்துகொள்ளுகிறோம்; ஒரு பிரம்பை யெடுத்து ஆகாயத்தில் வீசினால் ஒருவித சப்தமுண்டாகிறது; இதற்குக் காரணம் யாதென்று நாம் யோசிக்கும்போது, "ஆகாயத்தில் அரூபமாய்ச் சஞ்சரிக்கும் காற்றைப் பிரம்பு ஊடுருவிச் செல்வதால் இந்தத் தொனி உண்டாகிறது" என்று சுலபமாகத் தெரிந்து கொள்ளுகிறோம்; சில சமயங்களில் திடீரென்று பலமரங்கள்சுழன்று கீழே விழுந்து விடுகின்றன; அப்போது "இது சண்டமாருதத்தின் செய்கை" என்று ஒருவர் எடுத்துச் சொல்லாமலே குறித்தறிகிறோம்; இப்படிக் கண்ணிற்படாமல் உலாவும் காற்றை உணருவதற்கு எத்தனையோ ஹேதுக்களிருக்கின்றன. இவற்றைப் போலவே கடவுளை அறிதற்குப் பல இலகுவான ஹேதுக்களிருப்பதால், அவற்றைக்கொண்டு ஏன் அக்கடவுளை நிச்சயப்படுத்தியுணரலாகாது? உலகத்தில் நடக்கும் பலவிநோதமான கிரியைகளைக் கொண்டே அவர் உண்டென்பதைச் சாமானியரும் உறுதிப்படுத்தி விடலாம்: சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் ஆகிய இவைகள் நாடோறும் முறை பிறழாமற் சஞ்சரிக்கின்றன; காலக்கிரமப்படி மழை, பனி முதலியன தவறாது பெய்கின்றன; உரியகாலத்தில் சூரியன் போதுமான அளவில் வெப்பத்தைக் கொடுக்கிறான்; பலபயிர்கள் புல்பூண்டு முதலியன அதனதன் காலந்தப்பாமல் விளைகின்றன; கடல் எப்பொழுதும் தானே நீரை அலைத்து இரைச்சலிடுகின்றது; பல ராசிகளும் தினந்தோறும் எப்படியும் ஆகாரத்தில் குறைவில்லாமல் உண்டு ஜீவிக்கின்றன; எல்லா ஜீவன்களிடத்தும் ஜனன மரணங்கள் தினத்தொழிலாக நடந்துகொண்டிருக்கின்றன; இன்னும் எத்தனையோ விநோதச் செயல்களெல்லாம் நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் உய்த்துணருமிடத்து, இக்கிரியைகள் யாவற்றிற்கும் காரணனான மூலபுருஷன் ஒருவன் இருக்கிறானென்றும், "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்றும், அவ்வாறில்லையாயின், "நெருப்பின்றேல்புகையில்லை" என்றபடி உலகத்தில் எக்கிரியையும் நடத்தற் கேதுவில்லையென்றும், இந்தமூல புருஷனே எவர்க்கும், எவைக்கும், எவ்விடத்தும், எக்காலத்தும் இறைவனென்றும் எவரறியார்? அம்மம்ம! இவன் செயலையும் பெருமையையும் அளவிட்டுச் சொல்ல எவர் வல்லார்? இவனது அரு

ம்பெருஞ் செயலைக் குறித்து விபவாதார் எரிவாய் நரகத்துக் கிரையாவாரென்பதி லெள்ளளவும் ஐயமின்று. இப்பொழுது ரெயில் வண்டி, தந்தி, கப்பல், புகைக்கூண்டு முதலியவற்றின் சாதாரண வேலைகளைப் பார்க்கும் போதே அவற்றைச் சிருஷ்டித்த மனிதருடைய சாமர்த்தியத்தைப்பற்றி மிகவும் புகழ்கின்ற நாம், மனோவாக்குக் காயங்களுக் கெட்டாத காரியங்களைநடத்தும் ஆண்டவன்பால் எவ்வளவு ஆச்சரியப்படவேண்டும்? கேவலக்ஞானிகளாகிய மானிடவகுப்பைச் சார்ந்த நம்மால் என்னசெய்ய முடியும்? அவன்செய்கையில் கோடியிலொரு பங்கேனும் செய்தற்கியலுமா? ஒருமனிதன், கடவுள் கட்டளையால் சப்தித்துக் கொண்டிருக்கிற சமுத்திரத்தை ஒரு நிமிஷமேனும் சப்திக்காமல் நிறுத்துவானா? சூரியனை ஓடாமற் றடுப்பானா? ஒரு சிற்றெறும்புக்கேனும் ஜீவன்கொடுக்கும் தன்மை மனிதனுக்குண்டா? எதுவும் முடியாது. இத்தகைய தன்மையுள்ள மனிதனால் கடவுள் இல்லையென்று சொல்வதற் கெவ்வாறியலும்? மதிமயக்கத்தால் இல்லையென்று கூறும் நாஸ்திகரும், அப்பேரிறைவன் செய்கைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வராயின் உடனே நல்லறிவுபெற்று அவனுக் கடிமையாகாதிரார். இதுவரை சொல்லிவந்த காரணங்களால் எல்லாவற்றிற்கும் முதன்மையாகிய கடவுள் ஒருவன் உளனென்றும், அவனாலேயே உலகம் நடைபெறுகின்றதென்றும், அவனன்றி வேறேகடவுள் இல்லையென்றும் தெரிந்துகொண்டோமாதலின், எல்லோரும் அவனையே இடைவிடாது துதிப்போமாக; அவனன்றி எதுவுமில்லையென் றுறுதிகொள்வோமாக.

பத்திராதிபர்.

கல்வி.

—:0:—

நெடுங்கடல் சூழ்ந்த இந்நிலவுலகின்கண் தோன்றியுலவும் பற்பல தோற்றங்களுள்ளும் பகுத்தறிவுவாய்ந்துள்ள தன்மையொன்றாலேயே மானிடப் பிறவியே சாலவும் உயர்ந்ததென்றும், அத்தகைய மெய்யுணர் வொன்றின் பொருட்டே மற்ற ஜீவகோடிகளனைத்தும் மானிடவகுப்பார்க்குக் கீழ்ப்படிந்திருக்கின்றன வென்றும், இறைவனாலியற்றப்படும் பெருஞ்செயல்கள் தவிர மற்ற எச்செயல்களும் மானிடரால் செய்து முடித்தல் இயலு மென்றும் எண்ணிறந்த நூல்களும் கூறுவதை நாமனைவரும் நன்குணர்ந்திருக்கின்றோம். இந்தப் பகுத்தறிவின் அருமை பெருமைகள் எவராலும் அளவிடற்கரியனவாம்; இதனால் எவ்வகைப் பெருங்காரியங்களையும் சாதிக்கமுடியும். எனினும், ஒருநல்ல வித்தானது நிலத்தின் தன்மைக்குத் தக்கவாறு பலனைத்தருதல்போல இஃது, ஒவ்வொரு மானிடரின் இயற்கைக்குத் தக்கபடி விருத்தியடைந்து நன்மைகளைப் பயக்கும். எவ்வாறெனின், சத்துள்ள நிலத்தில் விதைக்கப்படும் வித்தானது யாதோரிடையூறு மின்றி முளைத்தெழுந்து செழித்தோங்கி, நாளடைவில் நல்ல பலனைக் கொடுக்கும்; இதுபோல, நல்லகுடும்பத்திற் பிறந்து உத்தமரோடு சேர்ந்திருப்பவர்களுக்கு ஏற்பட்ட அறிவானது நாடோறும் நல்ல வழியில் விருத்தியடைந்து புகழையும் மேன்மையையுந் தருகின்றது. நல்லசத்தில்லாத உவர் நிலத்தி விடப்படும் நல்ல வித்தானது முளைக்கும்போதே கருகி ஒன்றுக்கு முதவாமற் போவதுபோல ஒழுங்கற்றவிடத்தில் பிறந்து மூடரோடுறவாடுவோருக் கேற்பட்ட அறிவானது சேர்க்கைத் தோஷத்தால் ஒன்றுக்கு முதவாமல் கெட்டு அபகீர்த்தியையும் பாவத்தையு முண்டாக்குகிறது.

இவ்வகையறிவை நன்னிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமானால், சத்தில்லாத நிலத்திற்கு உரமான வஸ்துக்களையிட்டு அதில் விதைக்கப்படும் வித்தை நற்பலன் தரும்படி செய்துகொள்வதுபோல, ஒரு தக்க உபாயந்தேடவேண்டும். இதற்குத்தக்க உபாயமாவது: கல்விகற்றல் ஒன்றேயாம். இதனால் எவ்வகை மூடமான அறிவும் விளக்க முடையதாகி உன்னதபதவிக்கு வருமென்பதில் எள்ளளவும் ஐயமின்றாம். எனினும், இஃது இவ்வொரு வகையார்க்கு மாத்திரம் பயனைத் தருவதன்று; மேற்கண்ட இருவகையார்க்குமே பயன்றருவதில் மிக அவசியப் படுவதாகும்; நல்லநிலத்திற்கு மேலும் உரமிட்டால் பின்னும் அதிகப்பலனைத் தருவதுபோல நற்பகுதியிற் சார்ந்தார்க்கும் கல்வியிருந்தால் அவர்களுடைய நல்லொழுக்கமும் மேலும் விருத்தியடைந்து நலந்தருமென்பது எவரும் நன்குணர்ந்த விஷயம். ஆகவே, உலகத்தில் கல்வியானது, எல்லோருக்குமே என்றைக்குந் துணையாகத்தக்கதாதலா

ல், மானிடர் ஒவ்வொருவரும் அடையவேண்டிய முப்பொருள்களுள் முதன்மைபெற்ற ஒன்றாம்.

இவ்வகைக் கல்வியானது, உலகில் பலபாஷைகளென்னும் பேதங்கொண்டு ஒவ்வொரு தேசங்களிலும் அந்தஅந்த இடத்தின் றன்மைக்கேற்றவாறு நிலவி வருகின்றது. இவ்வாறு இஃது அநேகம் பாகுபாடுகளை யுடையதா யிருப்பினும் முடிவாக யோசிக்குமிடத்து "வைதீகக் கல்வி; இலௌகீகக் கல்வி" என்னும் இரண்டு பிரிவினையுடையதென்றே விளங்கும். இவற்றுள் இலௌகீகக் கல்வியானது, உலகவியவகாரங்களை யறிந்து, நடுவுநிலைமையோடு அறம்பொருள் முதலியவற்றைத் தேடி இன்பத்தை யடைதற்கும், வைதீகக் கல்வியானது, தவம் யோகம் முதலியவற்றைச் செய்து பேரானந்தத்தை யடைதற்கும் ஏதுவா யிருப்பனவாம். இலௌகீகக் கல்வியில் அறம்பொருள் இன்பம் ஆகிய மூன்றின் விவரமும், வைதீகக் கல்வியில்*வீட்டின் விவரமும் அடங்கியிருக்கும். இவற்றுள் இலௌகீகக் கல்வியே வைதீகக்கல்விக்கும் வழிகாட்டியாகும். ஆகவே, முதலில் இலௌகீகக் கல்விகற்று, அவ்வாறு கற்றதற் கேற்பநடந்து, பின்பு வைதீகக்கல்வி கற்றல் முறையாம்.

பொதுவாகக் 'கல்வி' என்னும் பதத்திற்குக் 'கற்றல்' என்பது பொருளாம். இது நல்லது கெட்டது ஆகிய எல்லாவற்றிற்கும் உரியதாய் நின்று, "நன்மையைக் கற்றல்; தீமையைக் கற்றல்" எனப் பொருத்தியுரைத்தற் கியலுமெனினும், இப்பதத்தைத் தீமையின்பால் சேர்க்காது விலக்கி, நன்மையின்பால் சேர்த்து, அறம்பொருள் இன்பம் வீடென்னும் நான்கினுக்கும் பொதுவாக்கி, "அறத்தைக்கற்றல், பொருளைக்கற்றல், இன்பத்தைக்கற்றல், வீட்டைக்கற்றல்" எனப் பொருத்தியுரைத்தலே சாலவும் சிறந்ததாம். நாம் இவ்வாறிணைத் துரைப்பினும் உரைக்காவிடினும், 'கல்வி' என்ற மாத்திரத்தில் "நற்பநுவல்களைக் கற்றல்" என்று பொருள்படுமேயன்றி, 'தீமையைக்கற்றல்' என்றாவது, 'வேறுவிஷயங்களைக் கற்றல்' என்றாவது ஒருகாலும் பொருள்தராது. ஆகவே, எவ்வகையிலும் இக்கல்வியானது அறிவைவிளக்குவதற்கு முக்கிய கருவியாகும். இக்கல்வியைக் கல்லாதார் எத்தகையரெனினும் பகுத்தறிவற்ற மிருகங்களோ டொப்பாவாரென்பதில் எட்டுணையும் ஐயமின்று. இதனாலன்றோ வள்ளுவனாரும், "கற்றுணர்ந்தாரோடு கல்லாதார் கலந்திருத்தல் மனிதர்களுடனே மிருகங்கள் கலந்திருப்பது போலாம்" என்னும் பொருள்பட,

> "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
> கற்றோரோ டேனை யவர்"

எனத் திருவாய் மலர்ந்தருளினர்? இஃதன்றி, எல்லாத் தொழில்களுக்கும் உதவியாயிருந்து அவை நாகரிகத்தோடு முடிவதற் கேதுவாயிருப்பதும் கல்வியேயாம். கற்றறிந்தோரில் ஒருவன் செய்யும் சிறுதொழிலும் பெருந்தொழிலாம்; கல்லாதமாந்தரில் பலர்கூடி ஒருபெருந்தொழிலைச் செய்துமுடிப்பினும் அஃது அத்துணைச் சிறப்புறாது. கற்றோனொருவன் எத்தேசஞ்செல்லினும் அங்குள்ள இபலை மிக எளிதிற் கற்று, அங்கு வசிப்போரையும் வசப்படுத்தி, எல்லாரினும் மேம்பட்டுத் தன்றேயத்தில் விளங்குவதுபோலவே பிரகாசிப்பான்; அவனுக்கு எந்நாடுந் தன்னாடேயாகும்; உய்த்துணருமிடத்து ஒருவகையில் மன்னரும் கற்றோருக் கிணையாகார். இவ்வுண்மையை,

> "மன்னரு மாசறக் கற்றோருஞ் சீர்தூக்கின்
> மன்னரிற் கற்றோர் சிறப்புடையர் - மன்னர்க்குத்
> தந்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
> சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

என்னும் மூதாட்டியின் (ஔவையார்) அருமைத்திருப்பாடலே நன்கு விளக்கும். மேலும், "கல்வியால் எந்நாடுந் தன்னாடாகும்; எந்தவூரும் தன்னூராகும்; அவ்வாறு இக்கல்வி சிறப்பினைத் தருவதாயிருக்க, இதனை ஒருவன் இறுதிவரை கல்லாது காலத்தை வீணாகப் போக்குவதென்னை?" என்னுங் கருத்து விளங்க வள்ளுவப் பெருந்தகையார் வழுத்திய,

---

* விடப்படுவதுவீடு; அஃதாவது இவ்வுலகத்தைவிட்டு அடைதற்கு உரியது; அது ஸ்வர்க்கம்.

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்னுந் திருக்குறளும் அறிவுறுத்தும்.

இன்னும் இக்கல்வியானது, தவம், ஒழுக்கம், கொடை ஆகியவற்றிற்கும் இன்றியமையாததா யிருக்கின்றது. மேற்குறித்த மூன்றனுள்ளும் சாமானியம் விசேடம் என்னும் இருபகுப்புக்களுள; இத்தகைய பகுப்புக்களைக் கல்வியறிவாலன்றி வேறு ஹேதுவைக் கொண்டு பகுத்தறிதல் இயலாது. அவ்வாறுணரா தியற்றின் அப்புண்ணியங்களாற் பயனிலவாம்; அவ்வாறு பயனற்றவை செய்வதினும் வாளா இருத்தல் சாலவும் நன்றாம்; ஆதலின், கல்வி யறிவற்றார்க்கு அம்மூன்றும் வாய்ப்பினும் பயனற்றவாய் முடியும். கல்வியறிவுள்ளவன் ஒன்றுமிலனாயினும் எல்லாமுளனாவான்; கல்லான் யாவு முளனாயினும் இல்லானேயாவன். இதனைக் கீழ்வரும் குறள்விளக்கும்.

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்."

கற்றறிவான்.

தத்துவ இஸ்லாம்.

. 1892-ம்௵ நவம்பர்௴ 25௳ வெள்ளிக் கிழமையன்று, காலை எட்டு மணிக்கு, ஹைதராபாத் நகரில் பகிரங்கத்தோட்டத்தில் பல்வகை முஸ்லீம்கள் சுமார், 3,000 பேர்கள்வரை கூடிய மஹாஸபையில், ஹலரத் ஸையது ஷா அப்துர் ரகீம் கமிஸியுல் காதிரி அவர்களென்னும் முஸ்லீம் ஸாதுவின் அக்கிராசனத்தின் கீழ், **முகம்மது அலெக்ஸாந்தர் ரஸ்ஸல் வெப்** என்னும் கனவான் இஸ்லாத்தின் தத்துவ விஷயமாக ஒரு மணிக்கதிகம் அரியதொரு பிரசங்கம் செய்தனர். அதன் தமிழ்மொழிபெயர்ப்பு வருமாறு:—

பெரும்பாலும் முகம்மதியர்களாகவும், அவர்களில் பலர் விசேஷ புத்திக் கூர்மையும் கல்விச் செல்வமும் படைத்தவர்களாகவும் கூடியிருக்கும் இச்சபையில் நான் பிரசங்கம் புரியப்புகுந்திருப்பதால், இஸ்லாம் மார்க்கத்தின் பக்தி, ஆசாரம் இவைகளைப்பற்றிய விதிகள், சடங்குகள் ஆகியவற்றின் விஷயமாகச் சாமான்யமாய்ச் சொல்வதைக் காட்டிலும், அதன் தத்துவ விஷயமாக வுள்ளவற்றைச் சொல்வது நலமென்று தோற்றுகின்றது. இஸ்லாம் மார்க்கத்தின் வெளிவிஷயத்தைப்பற்றி உங்களுக்கு ஏற்கனவே தெரியாதிருக்கும்விவரம் ஒன்றையும் நான்சொல்வதற்குவரவில்லை; இஸ்லாமிய தத்துவத்தைப் பூர்ணமாக உங்களுக்குச் சொல்ல முயன்றால், பன்னிரண்டு பிரசங்கங்கள் புரிந்தாலும் அவைகளில் அதைச் செவ்வனே சொல்லித் தீர்வது முடியாது.

முகம்மதிய மார்க்கத்தைப் பின்பற்றுவோர்களில் பலர், தங்களுடைய மதக்கொள்கையில் தத்துவ விஷயம் அடங்கியிருக்கின்றதென்பதை அறியாமலே இருக்கிறார்களென்று நான் நிச்சயமாக அறிகிறேன். அவ்வாறு அவர்கள் தெரிந்துகொள்ளாமலிருப்பதும் நன்மைதான். ஏனெனின், அவ்விதஞானம், ஒருகால் அவர்களுடைய கைக்குள்ளிருக்கும் சுலபமும் சுத்தமும் நிர்ப்பயமுமான உண்மைகளினின்றும் அவர்களை வெளியில் செல்லும்படி உய்த்து, சதா சலிக்கும் குணமுள்ள மனமாகிய படகுகள், சந்தேகம் ஏக்கம் என்னும் பாறைகளில் மோதுண்டு சின்னாபின்னமாகும்படி மானஸ தத்துவமான வீணெண்ணமாகிய பெருங்கொடிய கடலில் அவர்களைக் கொண்டு சேர்த்து விடுதல்கூடும். பிரவிர்த்தியடைந்த லோகாயதக் கல்வி, நாகரிகம் ஆகிய இவைகளைத்தாயாகப் பெற்றசந்தேகமும் நிச்சயமின்மையும் அதிகதீவிரமாக அதிகரித்துவரும் இக்காலத்தில், மார்க்கவிஷயத்தைப் பற்றிய உண்மைக்குச் சாட்சியமாக, அம்மார்க்க விஷயங்களில் பிரமாணர்களென்றுசொல்லிக் கொள்பவர்களின் ஸ்வமதாபிமானப் பிடிவாத மொழியைக் காட்டிலும் வேறு பலமான சாட்சியத்தைக் கோரும் ஜனங்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுடைய முன்னோர்களால் தலைமுறை தலைமுறையாகக் கொடுக்கப்பட்டுவந்த சுத்தமும் கபடமின்மையுமான மதக் கொள்கையானது, நாஸ்திகம், அஜ்ஞேயவாதம் இவைகளாகிய கொடிய உறைபனிபால் அழிக்கப்பட்டும், மேற்றிசையாரின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நாகரிக மெனப்படும் குளிரால் கொல்லப்பட்டு மிருக்கின்றது:

இனி, சில விஷயங்களைக் கவனிக்குமிடத்து இந்த நிலைமையும் ஒருவிதத்தில் நேராக நற்பயனைக் கொடுப்பதாகவே தெரிகிறது. * ஏனெனின், உறைந்து கிடந்த செடியானது, ஆத்ம உண்மையாகிய சூரிய காந்தியின் வெப்பத்தால் உருகிவரும்போது, அது தன் பழைய நிலைமைகளில் அடைய முடியாதவொரு நிலைமையுடன், புதுமையாகத் தழைத்துக் கனி நல்கும் ஸ்திதிக்கு வருதல் கூடும். நமது நவீன லோகாயத தத்துவ ஞானிகளில் பலருடைய நூல்கள் வெளிவராமலிருந்தால் நன்மையுண்டாகியிருக்கும் என்று நான் சொல்லவரவில்லை; ஏனெனின், அவைகள், கல்விகேள்விகளில் வல்லவராய், முன்னோக்கிப் போகும் ஜனங்களை நல்வழியில் கொண்டுவரக்கூடிய சக்தியுடையனவாக விருந்தாலுமிருக்கும். ஆயினும், சிலவேளைகளில் அவைகள், ஆக்குவதற்குக் கொஞ்சம் நம்பிக்கையுள்ளதை அழித்துத் தள்ளுகின்றனபோல் காணப்படுகின்றன. ஒவ்வொரு விஷயத்துக்கும் காரணத்தை ஆராயும் மனிதனிடம் எனக்குப் பூர்ண அபிமானமுண்டு; ஏனெனின், இருபது வருஷங்களாக எனது மனமும் அவ்வாறான நிலைமையிலிருந்ததனால் தான். கிறிஸ்தவ போதகர்களிடமிருந்த மதக்கொள்கைக்குத் தகுந்த காரணம் எனக்கு அவர்கள் கொடுக்காமற் போனபடியால் நான் பருவமடைந்தவுடன், கிறிஸ்தவமார்க்கமெனப் பிழைபடக் கூறும் முறையைக் கைவிட்டுவிட்டேன். ஒன்றானது உண்மையில் மூன்றாயிற்றெனவும், கேவலம் மனத்திலுதித்த வோர் எண்ணத்தைத் திருப்திசெய்வதற்காக நீதியும்தயையுமுள்ளகர்த்தர் ஒருவர் அசம்பாவிதமான குரூரச்செய்கை யொன்றைச் செய்தனரெனவும் நான் நம்பவேண்டுமெனப் பட்டபோது, அவைகளை உறுதிப்படுத்தக் கூடிய சாட்சியங்களைக் கேட்டேன்; அவ்வித சாட்சியங்கள் ஒன்றுமே யில்லையென்று எனக்குப் பதில் கிடைத்தது; இவ்வாறு சாட்சியங்கள் இல்லாமற் போனதனால் தான், நான் அவ்விஷயத்தை விசாரணைசெய்யாமல் அகற்றிவிட்டேன். ஆயினும், பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் தனது மதக்கொள்கையைப்பற்றிய ஆதிவிஷயங்களைத் தெரிந்துகொள்ள உண்மையோடும், ஊக்கத்தோடும், துரபிமானமின்றியும் முயற்சிசெய்யவேண்டுமென்றும், "அது மனத்தில் கண்டவாறு எழுந்த பயனற்ற கிரியைகளையும் விதிகளையும் அடக்கியுள்ளதா, அல்லது சாசுவதமான உண்மையையே ஆதாரமாகப் பெற்றுள்ளதா" என்று தானே திருப்தியடையும்படி தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் எனக்குத் தோன்றுகின்றது. நாஸ்திகனும் லோகாயதனும் கொண்ட கொள்கைகள் நியாயமானவையாமாயின், உலகத்தில் மனிதனுக்கு மதக்கொள்கை யொன்று வேண்டுமென்பதற்குக் காரணமேயில்லை. ஆயினும், விஷயம் மிக்க முக்கியமாகத் தோன்றுகிறபடியால், மேற்படையாக ஆராய்ச்சி செய்வதைக் காட்டிலும், சற்றுக் கவனமாகவே பார்க்கவேண்டுமென்றுபுலப்படுகின்றது. மதவிஷயத்தில் பற்றுள்ளவர்கள் சொல்கிறபடி, இந்த வாழ்க்கை யானது, இனி வரப்போகும் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, அதிக அற்பமான காலப்பிரமாணமுள்ளதாகவும், இம்மையில் நமது நடை அபிப்பிராயம் இவைகளாலேயே நமது மறுமையின் ஸ்திதியும் முக்கியமாக நிச்சயிக்கப்படுவதாகவு மிருப்பின், மார்க்கத்தின் வேண்டுகோள் நியாயமானதாவென்றும், விரும்பிய பயனைப் பெறுவதற்கு எவ்வகையான மார்க்கம் தேவையென்றும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசிய மாகின்றது.

மார்க்கமென்பது தான் என்ன? "மனிதர்களால் தெய்வீகம் என்று சொல்லப்படுகிற ஓர் உயர்ந்த சக்தியின் பராமரிப்பையும் வழிபாட்டையும் தன்னுடன் கொண்டுவரும் பொருள்" என்று ஸிஸிரோ அதை விவரிக்கிறார்.

மாக்ஸ்முல்லர், தாம்செய்த கிப்போர்டு உபன்யாசங்களில் அவ்வார்த்தையின் வரலாற்றை நன்றாக ஆராய்ந்து, முதலில் அது மரியாதை, பராமரிப்பு, பக்தி என்னும் பொருளையே தான் உடைத்தாயிருந்ததென்றும், பிற்காலத்தில், பழிக்கு அஞ்சுதல், மனச்சாட்சி யென்னும் சன்மார்க்கப் பொருளைப் பெற்றதென்றும், கடைசியாகக் கடவுளுக்குப் பக்திசெய்ய வேண்டுமென மனத்துள் எழும் உணர்ச்சியையும் அவ்வித பக்தியை வந்தனை வழிபாடுகளாலும், பலி முதலியவற்றாலும் வெளிப்படையாகத் தெரிவிக்கும்

---

* இவ்வாக்கியம் எல்லோருக்கும் விளங்கும்படி எழுதப்பட்டிருந்தால் நன்றாயிருக்கும். ப-ர்.

தோற்றத்தையுமே குறிப்பிக்கும் பொருளைப்பெற்றதென்றும் கூறுகின்றார். உரோமன் ஜாதியார் "மார்க்கம்" என்று கொண்டது அதன் அனுஷ்டானத்தையும் சன்மார்க்கத்தையுமே; அதன் தத்துவத்தையும் வீணெண்ணத்தையுமன்று. தேவர்கள் அசுரர்களுடைய பயத்தையும், நற்கருத்தைத் தெரிவிக்கும் தெய்வீக சக்தியையும் தெரிவிப்பதற்காகவே கிரேக்கர் அவ்வார்த்தையை முதலில் உபயோகித்தார்கள். ஆனால், அதி சீக்கிரத்தில் அவ்வார்த்தை மூட பக்தியைத் தெரிவிக்கும் கெட்ட அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டது. "மூட பக்தியில்லாமல், கடவுளுக்குப் பயந்தொழுகுவதுதான் அதன் பொருள்"என்று மார்கஸ் ஆரிலியல் கூறுகிறார்."அனுஷ்டான மார்க்கமானது, தத்துவம், ஞானத்தில் அன்பு இவைகளல்லாமல், எப்போதும் சுலபமான பக்தியையும் கீழ்ப்படிதலையும் உடைத்தாயிருக்கவேண்டும்" என்று ஸ்பைனோஜா நினைக்கின்றார்.

நவீன விவரணங்கள் பற்பலவும் வேறுபட்டனவாக வுள்ளன. தத்துவஞானி பொருவர், "பிரகிருதியின் ஐக்கியத்தை நாம் தெரிந்து கொள்வதுதான் மார்க்கம்" என்றும், "நாம் இப்பெரும் அண்டத்தினொரு பகுதியென்று தெரிந்துகொள்ள அது கற்பிக்கின்றது" என்றும் கூறுகின்றார். மற்றொரு நூலாசிரியர், "சமயாசாரமும் மானஸதத்துவமும் சன்மார்க்கத்தோடு ஒருவிதத்திலும் சம்பந்தப்பட்டவையல்ல; மார்க்கமென்பது, பக்தி அல்லது வழிபாடு என்பதனோடு கூடிய சாஸ்திரத்தைத் தவிர வேறொன்றுமில்லை" என்கிறார்.

மாக்ஸ்முல்லர் இவ்வாறு கூறுகின்றார்: "கண்டகண்ட விதமெல்லாம் மார்க்கத்தைப் பற்றி விவரிக்காத கிரந்தம் ஒன்றையும் நாம் பிரித்துப் பார்ப்பதில்லை; மார்க்கமென்பது ஞானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது; அஞ்ஞானமும் அதுவேயென்று சொல்லப்பட்டிருக்கிறது; சுயேச்சையே மார்க்கமென்று கூறப்பட்டுள்ளது; பராதீனமும் அதுவேயென்று கூறப்பட்டுள்ளது; ஆசையே மார்க்கமென்றும், அவ்வித ஆசையைத் துறந்திருப்பதுவும் மார்க்கமென்றும் கூறப்பட்டுள்ளன; சாந்தமாகத் தியானம் செய்வது மார்க்கமென்றும், அதிக ஆடம்பரத்தோடும் அலங்காரத்தோடும் கடவுளை வணங்குவதும் மார்க்கமென்றும் கூறப்பட்டிருக்கின்றன; இந்தப் பழைய வார்த்தையை ஜனங்கள் தங்கள் மனம்போன போக்கிலெல்லாம் உபயோகிக்கின்றனர். நூதன கவிகள் காவியமே தங்களுடைய மார்க்கமென்று சொல்வார்கள்; நூதன சிற்பிகள் தங்களுடைய சிற்பமே மார்க்கமென்பார்கள்; முன்னாளிலோ, துன்பமனுபவிக்கும் விதவைகளையும், தகப்பனற்றவர்களையும்போய்ப் பார்த்து வருவதும், உலகத்தில் மாசுமறுவில்லாமல் தன்னை வைத்துக் கொள்வதுமே மார்க்கமென்று கூறப்பட்டிருக்கின்றன."

இவ்விஷய விசாரணையில் ஒழுங்கில்லாமல் அடிக்கடி உபயோகிக்கும் "மார்க்கம்," "சமயாசாரம்" என்னும் இரண்டு பதங்களின் வித்தியாசத்தை நாம் மறந்துவிடக்கூடாது; மார்க்கம் என்பது நாம் பேச எடுத்துக்கொண்ட விஷயம்; சமயாசாரம் என்பது அவ்விஷய ஆராய்ச்சி அல்லது சாஸ்திரம்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், "ஏதாவது ஒருவிதமான மார்க்கக் கொள்கைகள் பொதுப்பட உலகமுழுவதிலும் உண்டு" என்கிறார். "அக்கொள்கை, பலர் சொல்கிறபடி தெய்வீகமாகத் தோன்றாமல் போனபோதிலும், மானிட அனுபவத்தினாலேயே மெதுவாகச் சேர்ந்து வருவிக்கப்பட்டு உற்பத்தியாகி யிருக்கவேண்டுமென்பதை நாம் அங்கீகரிக்க வேண்டி யிருக்கிறது. ஜீவப்பிராணிகளுக்கும் அவைகளைச் சுற்றியுள்ள பொருள்களுக்கும் உண்டாகும் சம்பந்தத்தால் நாளாவர்த்தியில் நேரும் மாறுதல்களால் உற்பவிக்கக் கூடிய எல்லாச் சக்திகளையும் கவனித்தால், அவ்விதச் சுற்றுப் பொருள்களில் பிரஸ்தாபத்திலிருக்கிற உணர்ச்சியின் அபிவிருத்தியை நிச்சயிக்கும் சிற்சில தோற்றங்களோ நிலைமைகளோ இருக்கின்றனவென்று நாம் அங்கீகரிக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, அதுவும் மற்றைச் சக்திகளைப்போலச் சாமான்யமானதுதானென்றும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னும்இவ்வித உணர்ச்சியானது மானிட நன்மைக்கு ஏற்றதாகவுமிருக்கிறதென்றும் ஊகிக்கவேண்டி யிருக்கிறது" என்றும் கூறுகிறார்.

இப்படி ஒப்புக்கொள்வதனால், நாம்செய்யப்புகும் விசாரணையில் சற்றுப் பயனைக் கொடுக்கக்கூடிய சாட்சியம் ஒன்றுக்கு ஒரு சூக்ஷ்மம் தோன்றுகின்றது. ஏனெனின்,மார்க்க விஷயமாய் மனிதனிடம் உள்ள குணத்தையும், அதற்கு உண்மையானவும் சந்தேகமானவும் ஆன காரணங்களையும் நாம் கவனிக்கும்படி அது நம்மைத் தூண்டும். ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு குடும்பம், ஜாதி, ஜனஸமூகம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே மார்க்கவிஷயத்திலோர் அபிப்பிராயமும், பிரத்தியேகமான வழிபாட்டு முறையும் இருந்திருக்கின்றன. நாகரிக மடைந்த கிரிஸ்தவப் பிரதேசங்களுக்கு வெளியே, மார்க்கவிஷயங்களில் தங்களுடைய மனோபாவங்களைத் தெரிவிக்கும் முறை யேதேனுமொன்று இல்லாத மனிதர்களைக் காண்பது இக்காலத்தில் துர்லபமாகும். அசாத்தியமென்பதைச் சொல்லவேண்டிய தில்லை. பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள சில தீவுகளில் சில ஜாதியார் இருக்கின்றனர்; அவர்கள் இதுவரையில் ஏதேனுமொரு ஜன ஸம்மதமான மார்க்கத்தை யனுசரிக்கும் ஜனங்களோடு நேரான சம்பந்தத்தையாவது, சாயர்த்தியமான கூட்டுறவையாவது பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் அவர்களிடமும், கிரிஸ்தவ மார்க்கம், இஸ்லாம் மார்க்கம், பௌத்தமதம் இவைகளில் காணக்கூடியன வற்றைப் பெரும்பாலும் ஒத்திருக்கும் மதவிஷயமான கிரியாவிதிகளும் மரணாதீதநிலையைப்பற்றிய அபிப்பிராயங்களும் உள்ளன; இவர்கள் இவைகளை மேற்கூறிய மார்க்கங்களிலிருந்து கிரகித்துக் கொண்டனரோ என்ற சந்தேகங்கூட உண்டாகும். பிலிப்பைன் தீவுகளில் உள்ள மலைப்பிரதேசங்களில் ஸ்பெயின் ஜாதியாரால் இன்னும் ஜெயிக்கப்படாத அநாகரிகர்கள் இருக்கின்றனர்; வெள்ளைக்காரருக்கும் அவர்களுக்கும் ஜன்மப்பகை; அவர்களுக்குத் தங்கள் தேசமும் மதக்கொள்கையும் தவிர வேறொன்றுந் தெரியாது; ஆயினும், அவர்களிடத்திலும் ஆதிக் கிரிஸ்தவர்களிடத்தும், மூடபக்தி மிகுந்த கிரிஸ்தவரிடத்தும் இருந்ததை யொத்த மார்க்கக் கொள்கைகளும் அபிப்பிராயங்களும் இருக்கின்றன.

மற்றைய சக்திகளைப் போலவே சர்வ சாதாரண மென்று நம்மிடமுள்ள சாட்சியங்களால் தெரிகிற இந்த மார்க்கச் சக்தியின் காரணந்தான் என்ன? அது கல்வியறிவாலும் தற்செயலாலும் உண்டாயிருக்க மாட்டாது; ஏனெனின், அது சரித்திரம் எட்டியுள்ளவரையில் எல்லா ஜாதியாரிடத்தும் இருந்ததாகத் தெரிகின்றது; இன்னும் கல்வியே யில்லாத இடங்களில் தான் அது மிகுதியாக இருந்ததாகவும் தெளிவாகத் தெரிகின்றது. மிகுந்த நாகரிக மடைந்த மானிடப் பிரகிருதியில் அஃது ஒரு பாகமாக விருப்பதைப் போலவே, கல்வி கேள்வியில்லாத அநாகரிகமான மானிடப் பிரகிருதியிலும்,அஃது ஒருபகுதியாக வுள்ளது. உண்மையை நோக்குங்கால், படித்தறியாத ஜாதியாரைக் காட்டிலும், படித்தறிந்த வகுப்பார் தாம் மார்க்க விஷயமான பக்தியில் குறைவாயிருப்பதாக நாம் காண்கிறோம்.

(தொடரும்.)

☞ நன்றி செலுத்துகிறோம்.

சென்றமாதம் இஸ்லாம் நேசனுக்காகப் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்த கனவான்களுக்கும், அவ்வாறு சந்தாநேயர்களாகச் சேர்ந்திருக்கும் மேன்மையுள்ள அபிமானிகளுக்கும் நன்றி செலுத்துகிறோம். ப-ர்.

பொறாமை.

—:0:—

ஒழுக்கத்தை விரும்பும் உத்தமர்காள்! இந்தப்,"பொறாமை" என்னும் பதத்திற்கு, "பிறர்வாழச் சகியாமை" எனப்பொருளாகும். இது, "சகிக்கக் கூடாமை" எனப் பொருள்பட்டு எல்லா விஷயங்களிலும் பொதுவாகச் சாரக்கூடிய தெனினும், முக்கியமாகப் "பிறர் வாழச் சகியாமை" என்னும் பொருளையே உணர்த்தி நிற்கும். இதனை, "பொறா + மை" எனப் பிரித்து, "பிறர் வாழச் சகிக்காத் தன்மையாகிய மயக்கம்" என வேறொருவனைப் பொருளாகவும் கூறலாம். இந்தக் குணம், கேவலம்! மூடத்துவத்தையே மிகுதியாகப் பெற்றிருத்தலாலும், நரகத்தையும் கேட்டையும் அ

டைவதற் கேதுவா யிருத்தலாலும், உலகமருட்சியில் புகுத்துதற்கான கருவியா யிருத்தலாலும் இதனை மயக்கமெனக் கூறுதல் சாலவுந்தகும்.

இத்தகைய மயக்கமும் பெருங்கேடும் பொருந்திய தீக்குணம், அறிவுடையோர் ஒவ்வொருவரும் வெறுக்கத்தக்கதாம். இது, மிகவும் பயங்கரமாகிய அந்தகாரத்தில் ஒவ்வொருவரையும் ஆச்சரியிக்கும்படி அமிழ்த்திவிடத்தக்க தாகலான், மேம்பாடுற விரும்பும் மானிட வகுப்பா ரனைவரும், இதனைத் தங்கள்பாற் சாராது விலக்கிவைப்பது மெத்தவும் உத்தமமாம். இந்தக் கொடிய பொறாமையானது, தன்னை யடைந்தவனை இம்மையிற் செல்வமற்றிருக்கு மாறு கெடுத்து, மறுமையில் நிச்சயமாக நரகத்தில் சேர்த்து விடும்;

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

என்னுந் திருக்குறள் இக்கருத்தை நன்கு விளக்கும். இன்னும் உலகத்தில் ஒருவன், அளவற்ற குபேர சம்பத்துடையனா யிருப்பினும், அவன் பொறாமையிற் சிறிது கொள்வானெனின், அவனிடத்திருந்த செல்வமானது, அங்கிருக்க எட்டுணையும் மனம்பொருந்தாதெழுந்து, வறுமையை யழைத்து அங்குக் குடியெய்து மாறு செய்து உடனே விலகிவிடும். இதனைப் பொதுமறையாளராகிய திருவள்ளுவப் பெருவள்ளலும்,

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்"

என்னுங் குறளில் ஐயமற விளக்கி யிருக்கின்றார். ஆகவே, ஒருவன், இம்மையிற் செல்வத்தையும், மறுமையில் நற்பதவியையும் அடைய விரும்பின், இந்தப் பொறாமையாகிய பேய் தன்னைப் பற்றாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டு மென்பதும், இகத்தில் வறுமையையும் பரத்தில் வெறுமையையும் பெற நினைக்கின், பொறாமை யென்னுந் தேவதையைப் புந்தியிலிருத்தி அந்தி சந்தியென்னும் கணக்கின்றி எந்தநேரமும் சிந்தித்து வந்திக்கவேண்டு மென்பதும் உலகில் ஒவ்வொருவர்க்கும் பிறர் எடுத்துச் சொல்லாமலே நன்கு விளங்கக் கூடியவா யிருக்கின்றன.

இவ்வாறிருந்தும், நம் இந்திய நாட்டு மானிட வகுப்பாரில் பெரும்பாலார், இக்கொடிய குணத்தை யனுசரிக்கா திருக்கவில்லை; அப்படி யனுசரிப்பதிலும் இஃது, ஒரு வகுப்பாரிடத்து மாத்திர மிருப்பதாகத் தெரியவில்லை; எல்லாவகுப்பாரிடத்தும், எல்லாத் தொழிலாளிகளிடத்துமே குடியேறி யிருக்கின்றது. இத்தகைய பொறாமையைப் பெற்றவர்கள், அதன் அர்த்தத்தின்படி, பிறர்வாழச் சகியாமையை மாத்திரம் கைக்கொண் டிருக்கவில்லை; அதனடியாக எத்தனையோ கொடுஞ்செயல்களையும் விருத்திசெய்து கொள்கின்றார்கள்; அவையாவன:—பிறர் வாழப் பொறாமைக்கறிகுறியாக 'அவர்கள் செல்வம் செருக்கு முதலியயாவும் கெடவேண்டும்' என்று, இடைவிடாது சிந்தித்தல், அதற்கான உபாயத்தையே தேடிச் செய்தல் முதலியனவாம். இவ்வகையார் செய்யும் பல விநோதக் கொடுஞ்செயல்களை நாம் எத்தனையோவிடங்களில் பிரத்தியக்ஷமாக அறிகிறோம்:

ஒருவன், "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்றதற்கேற்பச் சோம்பலின்றிப் பன்னாளும் நன்முயற்சிகளைச் செய்து, அவற்றின் பயனாக, "தீவினைவிட்டீட்டல் பொருள்" என்பதற்கிலக்கியமா யமையப்பெற்ற பெருஞ் செல்வத்தைக் கைக்கொண்டு நித்தியானந்த வாழ்வோடு வசிப்பானாயின், பொறாமைக் குணமுள்ள மற்றொரு சோம்பேறி, ஏதோ சகிக்க முடியாத தீங்கடைந்தவன்போல வயிற்றெரிச்சல் கொண்டு, தனக்கிதமான சிநேகிதனோடு, "என்னடா ஆச்சரியம்! இவன் நேற்று வெறும் பயலாய்க் கிடந்தவன்; இடுப்பில் கட்ட துணியில்லாமல் நான் எத்தனையோ முறை கொடுத் துதவியிருக்கிறேன்; இப்போது ஏதேதோ உருட்டுப் புரட்டுச் செய்து கொஞ்சம் கைப்பசை தேடிவிட்டான்; இதனால், அவனுக்குச் சிறிதேனும் கண்தெரியவில்லை; நம்மையும் மதிப்பதில்லை; எப்படியாவது இரண்டொரு கேசுகளில் இழுத்துவிட்டுக் கையிருப்புக்குக் கொஞ்சம் கேடு தேடவேண்டும்; அப்படிச்

செய்தாற்றான் நம்மை மதிப்பான்" என்று, ஒருகுறையுமில்லாத அவனைப் பலவாறு பழித்துத் தூக்கமில்லாமல் அவன் கெடுவதற்கான மார்க்கத்தையே தேடிக்கொண்டிருக்கிறான். பின்னொருவன் அன்னியதேசஞ் சென்று,பல வியாபார வழிகளையெல்லாம் கற்றுத் தெரிந்து கொண்டு வந்து, நல்ல வியாபாரத்தை யுத்தியோடுசெய்கிறான்; அதைக்கண்டு கைபாலாகாத சோம்பேறி யொருவன், ஆத்திரங்கொண்டு வேறொரு தொழிலும் செய்யாமல் அவன் தொழிலுக்கே கேடுதேடக் கங்கணங் கட்டிக்கொள்ளுகிறான்; இன்னுமொருவன், ஒரு நூதனவித்தையைக் கற்றுக்கொண்டுவந்து அதன் மூலமாகச் சம்பாதித்துச் சுகத்தை யடைகிறான்; அதைப் பார்த்து மற்றொரு பொறாமைக் குணமுள்ளவன்,பெருமூச்சுவிட்டுப் பலரிடத்தும் அவன் வித்தை பிரயோசனமற்றதெனத் தூற்றி, அவனடையும் வருவாயைக் கெடுக்கப் பார்க்கிறான். இப்படியே ஒவ்வொருவர் நலத்தையுங் கண்டு, அழுக்காறுடையார், உணவுப் பொறாமை, உடைப் பொறாமை, நடைப்பொறாமை, நகைப்பொறாமை, செல்வப் பொறாமை, நிலப்பொறாமை, வீட்டுப்பொறாமை, காட்டுப்பொறாமை, நாட்டுப்பொறாமை, தொழில்பொறாமை, வித்துவப் பொறாமை முதலிய எண்ணத்தொலையாத பொறாமைகளைக் கொண்டு, "தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனத் தடையாயிருந்தால் போதும்" என்றதற்கேற்பத் தாங்கள் தொழில் கெட்டுத் திரிந்தாலும் மற்றையர் கேடடைந்தால் போதுமென்று கருதிப் பிறர்க்குத் தீங்கிழைத்துத் திரிகின்றனர். அந்தோபாவம்! இவர்கள் எத்தொழிலையுங் கருதாது குடிகெடுக்கும் பொறாமைக் குணமாகிய இத்தொழிலையே மேற்கொண்டு, இதனால் ஒருபயனுமின்றித் தங்கள் குடியே கெடுவதற் கேதுவாய்த் திரிதல் எவ்வளவு வியக்கத்தக்க செயல்? இவர்கள், பிறர்வாழ்க்கையில் அசூயை கொள்வதை விட்டு, "நாமும் அவர்களைப்போல் வாழவேண்டும்; அதற்குத் தக்க தொழிலைத் தேடவேண்டும்; அவர் வாழ்க்கையில் பொறாமை கொள்வதனால் ப்யனொன்றுமில்லை" என்று, தங்கள் புத்தியை முயற்சியிற் றிருப்புவார்களானால், எவ்வளவோ பெரும்பாக்கிய மெய்திச் சுகம்பெறலாம்; அதை எள்ளளவுங் கருதவே மாட்டார்கள்; எந்தநேரமும் தெருத்திண்ணையிலிருந்துகொண்டு, பிறர்நிந்தை கூறி நேரம்போக்குதலே இவர்க்கு மிகவும் பிரீதியாயிருக்கும். "புருஷர்கள் செய்கைதான் இப்படி; இவ்விஷயத்தில் ஸ்திரீகள் எப்படியிருக்கிறார்கள்?" என்று விசாரிக்கப் புகுமிடத்து அவர்கள், புருஷர்களை மிகவும் நல்லவராக்கி விடுவார்கள்; புருஷர்கள், பொறாமையைப் பெரும்பான்மை யனுசரித்தாலும், சிற்சில சமயங்களில் சிறுபான்மை அனுஷ்டிக்காதவராவார்கள்; ஸ்திரீகளோ அப்படியில்லை; எடுப்பதற்கெல்லாம் பொறாமைக் குணத்தைக் குலதெய்வமாகக் கொண்டாடுவார்கள்; சில உத்தமிகள் தவிர மற்றையரிடத்திலெல்லாம் இது பிறவிக்குணமாகவே கூடப்பிறந்து வளரும். இவர்களினும் வித்வான்களுக்கிடையிலுண்டாகும் பொறாமைக் குணம் மிக விசேஷமாயிருக்கும்; இந்த ஸ்திரீகளுக்கிடையிலாவது பொறாமைக்குச் சிறிது காரணமேற்படும்; வித்வான்களென்கின்ற புண்ணியவான்களிடத்திலோ எவ்வகைக் காரணமும் அகப்படாது; இவர்கள் மிகவும் படித்தவர்களாதலால் அதற்குக் காரணம் கருதுவதில்லை. "காரணமின்றிக் காரியமில்லை" என்னும் சித்தாந்தத்தை விலக்கி, "காரணமின்றிக் காரியம் உண்டு" என்னும் புதுக்கொள்கையை உண்டாக்கி, அதைத் தாங்களே அனுஷ்டானத்தில் விளக்குகின்றனர் போலும்? "கறுவொடு மொன்றோடொன்று காரணமின்றிச் சீறிப்,பொறியுடைக்குறும்பூழ் தம்மிற் போர்செய........" என்றநைடதச்செய்யுளின்படி,பகுத்தறிவற்ற சில பக்ஷி மிருகங்களிடத்து மாத்திரம் காரணமில்லாமல் பொறாமையையோ பகையையோ கொள்ளுதலை அறிகிறோம்; இக்கேவலமான கொள்கை,பகுத்தறிவுள்ள மனிதருள்ளும் கல்வியறிவுள்ள வித்வான்களிடத்திற் காணுதல் புதுமையினும் புதுமையே! இதனாலேயே ஸ்திரீகளிடத்தும் வித்வான்களிடத்தும் இடைவிடாது கலகங்கள் நடந்துகொண்டே யிருக்கின்றன; இவ்வேடிக்கைகளைப் பற்றி விரிவாக எழுதப்புகின் இப்பத்திரிகை இடந்தராது. இந்தப் பொறாமையாகிய பூஷணத்தை யணிவார் அடையும் நற்பயன் என்னை? வறுமையும் நரகமுமன்றி வேறொன்றின்றாம். இத்தீக்குணம் எவரிடத்து மிருத்தல் கூடாதென்றும், இதனை அடியோடு விலக்கியவரே சுகம் பெறுவாரென்றும், இதனைக் கைக்கொண்டார் அடைவது நரகமும் காரியக்கேடுமே யென்றும் பநுவல்களெல்லாம் முறையிடுகின்றன. இதற்குதாரணமாக நாம் எத்தனையோ சரித்திரங்களைப் படித்துணர்ந்தி

ருக்கின்றோம். பொறாமை யுடையார் கேடடைவாரென்பதற்கு அபூஜாகில், எஜீத் முதலியோர் முக்கிய சான்றாவார்கள். இன்னும் எத்தனையோ பேர்களும் உண்டு; இதுசம்பந்தமான பலவேடிக்கைக் கதைகளுமுள. சந்தர்ப்பம் நேருமாயின் அவை இப்பத்திரிகை வாயிலாக வெளிவரவுங் கூடும். இவற்றால், பொறாமையென்னும் விஷத்தைப் பொறுமையென்னும் ஔஷதத்தால் போக்கவேண்டுமென்பது, ஒவ்வொருவர்க்கும் அவசியமான தொழிலாக முடியும். அவ்வாறின்றி அதை யனுஷ்டித்துப் பிறர்க்குக் கேடு நினைக்கின், நினைப்பார் தமக்கே கேடாகும்.

> "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
> பிற்பகற் றாமே வரும்"

என்பது திருக்குறள்.

பொறாமைக்குப் பகைவன்.

விநோதமஞ்சரி.

யுக்தியான தீர்ப்பு.

பிரயாணஞ்செய்துகொண்டிருந்த இரண்டு வழிப்போக்கர்கள், மார்க்கத்திலிருந்த ஒருநகரத்தின் குளக்கரையில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள். அவர்களுள் ஒருவனிடத்தில் 5-அப்பமும் மற்றொருவனிடத்தில் 3-அப்பமு மிருந்தன. அவற்றை அவர்கள் உண்ணுவதற்கு முன்னரே பின்னொருவனும் ஆகாரமின்றி அவர்களிடம் வந்து சேர்ந்தான். ஆகவே, மூவரும் ஒன்றுகூடி அந்த 8-அப்பங்களையுந் தின்றனர். முடிவில், புதிதாய் வந்தவன், தான் ஆகார முண்டதற்கு விலையாக 8-ப்பணத்தை முன்னிருவருக்கு மிடையில் வைத்துவிட்டுச் சென்றான். உடனே 5-அப்பக்காரன் அவற்றுள் 5-பணத்தைத் தனக்குச்சேர வேண்டியதென்று எடுத்துக்கொண்டு, 3-அப்பக்காரனுக்கு, 3-பணத்தைக் கொடுக்கப் போனான். அவன், அதைவாங்காமல், 8-ப்பணத்தில் பாதி, தனக்குக் கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்டான். இருவருக்குள்ளும் பெரியவாதம் நேர்ந்தது; அதனால், அதைத் தீர்த்துக்கொள்வதற்காக இருவரும் அவ்வூர் நியாயாதிபதியிடம் சென்று, தங்கள் விவகாரத்தைத் தெரிவித்தார்கள். அவர், நன்றாக ஆலோசித்து, அவர்களைப் பார்த்து, "நீங்கள் மூவரும் எட்டு அப்பங்களையும் சமமாகப் பங்கிட்டுத் தின்றிருப்பதால், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அப்பத்திலும் மூன்றிலொரு பாகம் சேர்ந்திருக்கிறது; இந்தக் கணக்கின்படி ஒவ்வொரு அப்பத்தையும் மூன்றாகப்பிரித்தால், 8-அப்பங்களும், 24-துண்டுகளாகின்றன; அவற்றுள், 5-அப்பக்காரனிடத்தில் 15-துண்டுகளும், 3-அப்பக்காரனிடத்தில் 9-துண்டுகளும் இருந்தனவென்று ஏற்படுகின்றது. மூவருள் ஒவ்வொருவனும் சமமாக உண்டதில் நபர் ஒன்றுக்கு 8-த்துண்டுகள் சேர்வதால், 5-அப்பக் காரனுடைய மீதித்துண்டு 7-ம், 3-அப்பக்காரனுடைய மீதித்துண்டு 1-ம் புதிய பிரயாணிக்குச் சேர்ந்திருப்பதாக ஏற்படுகிறது; ஆகையால், அவன் கொடுத்த எட்டுப்பணத்தில் 5-அப்பக்காரன் 7-பணமும், 3-அப்பக்காரன், 1-பணமும் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று தீர்ப்பளித்தார். அங்குள்ள யாவரும் வியப்புற்றனர்.

உலகவர்த்தமானம்.

பொதுவர்த்தமானம்.

1. ஜெர்மானியா தேசத்திலுள்ள ராஸிட்டன் என்னும் பட்டணத்தில் பக்ஷிகளின் வேகத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு ஓரிடம் ஏற்பட்டிருக்கிறது. அதில் இரண்டு நாரைப்பக்ஷிகள் ஒன்பதுமாத காலத்தில் 6,000 மைல் தூரம் பறந்துபோ யிருப்பதாகக் கணக்கிடப்பட் டிருக்கிறது.

* * *

2. எல்லோரும் அதிலகுவில் கற்றுக்கொள்ளும்படியான பாஷையொன்று சில்லாண்டுகளாக உலகத்தில் பரவிவருகிறது. இ

தன்பேர் எஸ்பிராண்டோ என்பார்கள். இதை 24-மணி நேரத்தில் யாரும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் "ஐடோ" என்னும் வேறொரு பாஷை இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஐடோ பாஷை, எஸ்பிராண்டோவை வென்று விடுமென்று எல்லோரும் எண்ணுகிறார்கள். எஸ்பிராண்டோவைக் காட்டிலும் இலகுவான பாஷையொன்றிருக்குமாயின் அது மனிதர்களுக்கு மிக்க உபயோகமாகுமென்பதில் ஐயமில்லை.

* * *

3. கறையான்பூச்சி வீடுகளிலும் மரங்களிலும் பற்றிவிட்டால் மிக்க நஷ்டத்தை விளைக்குமென்பது நிச்சயம். கெருஸீனாயில் என்னும் மண்ணெண்ணெயிலிருந்துண்டாகும் "புனா ஆயில்" என்னும் எண்ணெயைப்போட்டால் கறையான்பிடிக்காதென்று ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். ஆனால், கறையானுள்ள விடங்களில் "பொட்டாஸியம் ஸியனைடு" என்னும் வஸ்துவைக் கரைத்துக்கொண்டு ஊற்றினால் அவை அடியோடு அழிந்துபோமென்று வேறொருவர் எழுதுகிறார்.

* * *

4. மாட்சிமைதங்கிய ஐந்தாவது ஜார்ஜ்மன்னரவர்களுடைய முடியமைந்த நாணயங்கள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. முழுப்பவுன், ஷில்லிங், அரைப்பென்னி என்னும் மூன்று ஆங்கிலேய நாணயங்கள் முடிவாகிவிட்டன. மற்ற நாணயங்களும் சீக்கிரம் வெளிவரும்.

* * *

5. சென்ற 1910ஹு 30 மனிதர்கள் ஈரோப்லேன் என்னும் ஆகாயக் கப்பலால் மரணமடைந்திருக்கிறார்கள். ஆகாயக்கப்பலும் புகைக்கூண்டைப்போல் மனிதசஞ்சாரத்துக்கு உதவாமற்போமோவென்னும் சந்தேகம் இப்போது பிறந்திருக்கிறது.

* * *

6. வைசூரியென்னும் கொள்ளைநோய் வாராமல் தடுத்துக்கொள்ளும் பொருட்டு அம்மைவைத்துக் கொள்ளும் வழக்கம் நெடுங்காலத்துக்கு முன்னரே ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் இருந்திருக்கிறது. கி. பி. 11 ஆவது நூற்றாண்டில் முதல் முதல் இவ்வழக்கம் சீனா தேசத்தில் உண்டாயிற்று. இப்போது அம்மைவைக்கும் விதம், வெவ்வேறுதேசத்தில் வெவ்வேறு வகையாகக் காணப்படுகிறது. பாரஸீகத்தில் முன்கையை நன்றாக இரத்தம் வரும்வரையில் சொறிந்து, உதிரம் நின்றவுடன் அப்புண்ணில் வைசூரி வார்த்த வேறொருவனுடைய தேகத்திலுள்ள தழும்புகளின் அசடுகளைவைத்துத் தேப்பார்கள். ஆபிரிக்காவிலுள்ள அஷாண்டி என்னும் நாட்டில் மனிதர்களுடைய காலிலும் கையிலும் 7-இடங்களில் அம்மைவைப்பது வழக்கம். இன்னும், ஸீயம் என்னும் நாட்டிலுள்ளார் வைசூரிப்புண்ணின் அசடுகளைத் தூளாக்கிப் பொடிபோல் மூக்கில்வைத்து உறிஞ்சுவார்களாம்.

முஸ்லீம் வர்த்தமானம்.

——:0:——

முஸ்லீம் சர்வகலாசாலை:—மார்ச் மாதம் 5-ந் திகதி வரையில் 22½ லட்சம் ரூபா சேர்ந்துவிட்டது. இன்னும் மாட்சிமைதங்கிய ஆகாகானவர்கள் தென்னிந்தியாவுக்கு வரவில்லை. முதலில் 20 - லட்சம் போதுமென்று மதிப்பிடப்பட்டிருந்தது. இப்போது முஸ்லீம்களுக்குள்ள உணர்ச்சியை நோக்குங்கால் ஒருகோடி ரூபா சேரும்போலிருக்கிறது. இவ்வளவு தொகையும் மூன்றே மாதத்தில் சேர்ந்துவிட்டது. இச் சென்னைமாநகருக்கும் கனம் ஆகாகானவர்களை வரவழைப்பதாகச் சென்ற பிப்ரவரிமாதம் 23-ந் திகதி சென்னை முஸ்லீம்கள் தீர்மானம் செய்தார்கள். சர்வகலாசாலையின் விருத்தாந்தத்தைப் பற்றித் தெலுங்கிலும் தமிழிலும் விளம்பரங்கள் அச்சிட்டுத் தென்னாட்டு முஸ்லீம்களுக்குக் கொடுப்பதாகவும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. நாமும்நம்முடைய இஸ்லாம் நேசன் ஏப்ரில் மாதம் பத்திரிகையில் முஸ்லீம் சர்வகலாசாலையைப் பற்றி விவரித்து எழுதுவோம்.

* * *

பாட்னா நகரவாசியான சகோதரர் ஸைபது பாதுஷா நவாப் ரிஸ்வி அவர்கள், உபாத்திச்சிமார்களுக்கென்றே ஒரு வாத்திமை

ப் பள்ளிக்கூடம்ஸ்தாபித்திருக்கின்றனர். அவருடையகருத்து மகாமேலானதென்பதில் தடையில்லை. அவ்விஷயத்தில் அவருக்குப்பல்விதத்திலும் ஆங்கு வசிக்கும் நண்பர்கள் உதவிபுரிந்து புரோத்ஸாகப் படுத்துவார்களென்று நம்புகிறோம்.

* * *

பூனா நகரத்தில் பிரசுரமாகும் "முஸ்லீம்" என்னும் பத்திரிகை, நம் நாட்டிலுள்ள முகம்மதிய ஸ்தாபனங்களுக்கு ஒரு நற்போதம் சொல்லுகின்றது: முஸ்லீங்கள் தங்கள் தங்களுடைய பணங்களை வட்டிக்குக் கொடுப்பதை விலக்கி, கல்வியில் அபிலாசம் கொள்ளும் ஏழை முகம்மதியர்களுக்கு மாதநிவேதனமாகக் கொடுத்து அவர்கள் முன்னுக்கு வந்ததும் அவர்களிடமிருந்து சிறுகச் சிறுகக் கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறலாமென்கிறது. இது செய்து பார்க்கக் கூடிய விஷயமென்றே தோன்றுகின்றது. வட்டிக்குக் கடன் கொடுக்கக் கூடாதென்பது குரானின் கட்டளை. ஆகவே மேற்கூறிய விதம் செய்தால் புண்ணியமும் நற்பயனுமாகும்.

* * *

கல்கத்தாவில் பிரபல புகையிலை வியாபாரியான ஹாஜீ பக்ஷ் இலாஹி என்னும் சகோதரர், டில்லிப்பட்டணத்தில் முகம்மதியர்களுக்கு ஒரு முஸாபர்கானா கட்டிக் கொடுப்பதாகச் சொல்லுகின்றனர். கவர்ன்மெண்டார் இடம் கொடுக்கவேண்டும். கொடுத்தால்,யாத்திரைசெய்வோரும் மற்றையோரும் தங்குவதற்கு இடமின்றித் தவிக்கும் கஷ்டம் இனி நீங்கிவிடும். தமது மார்க்கத்தில் பயபக்தியுள்ள ஹாஜியவர்கள் எண்ணம் முற்றுப்பெறும்படி அல்லாஹுத்த ஆலா அருள் புரிவானாக.

* * *

பஞ்சாப் மாகாணத்தில் அக்கவுண்டாண்டு ஜெனரல் உத்தியோகங்களுக்கு நடந்தபோட்டிப் பரீக்ஷையில் கனம், தாஜ்முகம்மது அவர்கள் M. A., M. Sc. முதலாவதாகத் தேறியிருக்கின்றனர். இவர் தாம் இவ்வேலைக்குவந்த முதல் முகம்மதியர். சர்வகலாசாலையில் இவருடைய அபிவிருத்தி மிக்க மேலானதாகவே யிருந்தது. 1908-ம் வருஷத்தில் நடந்தேறிய M. Sc பரீக்ஷையில் இவர் முதலாவதாகத் தேறினர். இவருக்குச் சர்வ மங்களமும் உண்டாகவேண்டுமென்பது எமது பிரார்த்தனை.

தலைமாட்டு வைத்தியன்.

பூர்வத்தில் பாண்டிநாட்டைச் சார்ந்த தச்சனேந்தல் கிராமத்தில், "பச்சைவெட்டுச் சாமியார்" என்னும் ஒரு வைத்தியப்பரதேசியிருந்தார். இவர் பாஷாணச் சரக்குகளைச் சுத்திசெய்யாமல் பச்சையாகவே போட்டு மருந்துகளை முடித்துவைத்துக்கொண்டு வைத்தியம் செய்பவ ராதலால் இவருக்குக் காரணம்பற்றிப் "பச்சைவெட்டுச் சாமியார்" என்னும் பட்டம் கிடைத்தது. சுத்திசெய்யாத சரக்கால் முடிந்த மருந்துகளையெல்லாம் பச்சைவெட்டென்று சொல்வது நாட்டுப்புற வழக்கம். அவற்றைச்செய்து உபயோகிப்பவர்களையும் சிலசமயம் 'பச்சைவெட்டு' என்றே பரிகாசமாகக் கூப்பிடுவார்கள்.

இந்தப் பச்சைவெட்டுச் சாமியாருடைய மருந்துகளால் வியாதியஸ்தருக்கு வாய் வயிறு முதலியன வெந்துபோவதா யிருந்தாலும், இவர் சற்று வியாதியின் சுபாவத்தையும், தேகநிலைமையையும் ஆராய்ந்து உபயோகித்துவந்ததால் முதலில் கஷ்டமுண்டாகிப் பின்பு வியாதிகள் தீர்ந்துகொண்டே வந்தன. நாட்டுப்புறத்திலுள்ள முரட்டுத்தேகிகளுக்கு இந்தவைத்தியமே பிடிக்குமாதலால் இவருக்குச் சிற்றூர்களில் அதிக கீர்த்தி யேற்பட்டிருந்தது. இப்பொழுதும் கிராமங்களில் இவ்வகை வைத்தியங்கள்தாம் நடந்து வருகின்றன; இத்தகைய வைத்தியர்களில் ஊருக்கொருவன் தவறாமலிருப்பான். இன்னும் மருந்தைக் கொடுத்தவுடன் வியாதிக்காரனைப் பரலோகத்துக்கனுப்பும் வைத்தியர்களுமுண்டு.

மேற்கண்டபடி பச்சை வெட்டுச் சாமியார் கீர்த்திபெற்றிருக்குங் காலத்தில் தமக்குப் பணிவிடை செய்வதற்குச் சீஷனொருவனைச் சேர்த்திருந்தார். அவன்பெயர் சொக்கன்; மூடத்துவத்தில் முதன்மைபெற்றவன்; மழைக்குக்கூடப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கியிருக்க மாட்டான்; எனினும், அவன், எல்லாம் தனக்குத் தெரிந்திருப்பதாக நினைத்துக் கொள்வான். பன்னிரண்டு வருஷகாலம் சாமியாரிடத்தில் அவனிருந்தும் பச்சைவெட்டு வைத்தியத்தில்

ஒன்றையுமே அறிந்திருக்கமாட்டான். இருந்தும் அந்த வைத்திய முழுதும் தெரிந்திருப்பதாகச் சில சமயங்களில் சுருக்கமாகக் கருதுவான்.

இந்த மூடசிகாமணியாகிய சொக்கனோடு பச்சைவெட்டுச் சாமியார் வசித்துவருங் காலத்தில் பலவகைப் பாஷாணங்களைப் பச்சையாகவே தூள்செய்து ஒருவிதமாகப் பக்குவப்படுத்தித் தனித்தனியாக ஒவ்வொரு குப்பியில் அடைத்து ஒவ்வொன்றிலும் நம்பரிட்டு, இன்னநம்பர் குப்பியிலுள்ளது இன்னவியாதிக் காகுமென்று, பலநாளுங் கொடுத்துக் கொடுத்து அனுபவமாகி நிச்சயப்படுத்திவைத் திருப்பார்; எவரேனும் வியாதிபஸ்தர் வந்தால், அவர்களுடைய வியாதியை அறிந்து, அதற்குத் தக்க மருந்திருக்கும் குப்பியின் நம்பரைக் குறிப்பிட்டு, இன்ன நம்பர் குப்பியை எடு என்று சொக்கனுக்குக் கட்டளை யிடுவார். அவன் படியாதிருந்தாலும் பலநாள் அனுபவத்தால் நம்பர்களை மாத்திரம் தெரிந்துகொண்டிருந்ததால், அவர் சொன்ன நம்பருள்ள குப்பியை யெடுத்துக் கொடுப்பான். சாமியார் அதிலிருந்து மருந்தை யெடுத்து வியாதியஸ்தருக்குக் கொடுத்துச் சௌக்கியப்படுத்தி யனுப்புவார். எனினும், சொக்கனுக்கு இன்னவியாதிக்கு இன்னமருந்து கொடுப்பதென்பது தெரியாது. சுருக்கமாக அவன், "ஒரு சீஷனைவைத்துக்கொண்டு ஒருநம்பரைக் குறிப்பிட்டுக் குப்பியை யெடுக்கும்படி கட்டளையிட அவன் எடுத்துக் கொடுக்கும் குப்பியிலிருந்து மருந்தை எடுத்து உபயோகிப்பதுதான் வைத்தியம்; எல்லாம் நம்பரில்தானிருக்கிறது; எந்தவியாதியா யிருந்தாலும் நம்முடைய வாயில் எந்த நம்பர் வருகிறதோ அந்தமருந்துதான் வந்த வியாதிக்கு வைரி" என்று தீர்மானப்படுத்திக்கொண் டிருந்தான்.

அப்படி யிருக்கும்போது சிறிது நாட்கள் சென்றவுடன் அவனுக்குத் தனக்குத்தானே ஒரு கெர்வமுண்டாயிற்று; அதனால் அவன், ஒருநாள், "நாம் எதற்காக இந்தச் சாமியாரிடத்தில் தொண்டுபுரிய வேண்டும்? நமக்கோ பன்னிரண்டு வருஷத்து அனுபவத்தால் வைத்தியமுழுதும் தெரிந்திருக்கிறது; எவனாவது ஒரு சீஷனை வைத்துக்கொண்டு ஏதாவது ஒருநம்பர்க்குப்பியை யெடுக்கச்சொன்னால் எடுத்துக்கொடுப்பான்; அதிலுள்ளமருந்தை வியாதியஸ்தனுக்குக் கொடுத்தால் எந்தவியாதியா யிருந்தாலும் சௌக்கியமாகிவிடும்; அவ்வாறு செய்வோமாகில் எல்லோரும் நம்மைக் கொண்டாடுவார்கள்; பின் நாமும் ஒரு பெரிய சாமியாராகிவிடலாம்; நமக்கு மருந்து செய்யவேண்டிய கவலை ஒன்றுமில்லை; இந்தச் சாமியாரிடத்தி லிருப்பவைகளையே காணாமல் அடித்துக்கொண்டு போய்விடலாம்; ஒரு சீஷனையும் நமக்குத் தக்கபடி தேடிக் கொள்ளலாம்" என்று தீர்மானித்து,இரவில் பச்சைவெட்டுச்சாமியார் நித்திரையிலிருக்குஞ் சமயமறிந்து, ஐயோ பரிதாபம்! அவர் ஆஸ்தியாக வைத்திருந்த பச்சைவெட்டு மருந்துகளையெல்லாம் திருடிக்கொண்டு விடியுமுன் வேற்றூர்போய்விட்டான். சாமியாரோ,தமது ஆஸ்தியாகிய பச்சைவெட்டு மருந்துகள்போனவுடன் வேறுதொழில் செய்ய வகையறியாமல், பிச்சையெடுப்பதே சரியென்று தமக் கிச்சையான விடத்துக்குப் போய்விட்டார்.

வேற்றூர்போன சொக்கனோ சிலதினங்களில் சோழதேசம் சென்று, அங்கே தனக்குத் தகுதியான திண்ணைச்சோம்பேறியொருவனைச் சேர்த்துக்கொண்டு, "நாம் இந்தநாட்டுக்குப் புதியவனாயிருப்பதால் ஒவ்வொரு ஊர்களிலும் நாமேசென்று வியாதியஸ்தர்களைத் தேடிப்பிடித்து மருந்து கொடுக்கவேண்டும்; அப்படிச் செய்தாற்றான் நம்முடைய பெயர் வெளிக்குவரும்; கீர்த்தியுண்டானதற்குமேல் ஓரிடத்தில் மடங்கட்டிக்கொண்டு தங்கிவிடலாம்" என்றுறுதி செய்துகொண்டு,மருந்துக் குப்பிக ளடங்கிய மூட்டையைத் தான் புதிதாகச்சேர்த்த சீஷனாகிய தாண்டவராயனை யெடுத்துக்கொண்டு வரும்படி செய்து ஒரு சிற்றூரில் சென்று பிணியாளரைத் தேடினான். அப்போது அங்கே திக்கற்ற ஒரு கிழவி, தன்னுடைய முப்பதுவயதுள்ள மகன் வயிற்றுக் கடுப்பால் வருந்துவதைப்பார்த்துத் துக்கப்பட்டிருப்பதுணர்ந்து, அவளிடம் சென்று, தான் அதிக சீக்கிரத்தில் சௌக்கியப்படுத்துவதாகச் சொன்னான். உடனே கிழவி,அதிக சந்தோஷத்தோடு குரு சீஷன் ஆகிய இருவருக்கும் அன்னமிட்டு வைத்தியஞ்செய்யுமாறு வேண்டினாள். உடனே சொக்கன், வியாதியஸ்தனைக் கிழக்குமுகமாக எழுந்துட்காரும்படி செய்து, தன்சீஷனாகிய தாண்டவராயனைக் கூப்பிட்டுத் தான் மூடத்தனமாகத் தீர்மானஞ் செய்துகொண்டப

டி எதுவாயிருந்தாலும் கடவுள் கிருபை செய்வாரென்று "பதினைந்தாம் நம்பர்க் குப்பியை எடு" என்றான். உடனே அவன் எடுத்துக் கொடுத்தான். சொக்கன் குப்பியைக் கையில்வைத்தபடியே இஷ்டதேவதையைத் துதித்து அதிலுள்ள மருந்தில் ஒரு சிட்டிகையள வெடுத்து அந்த வயிற்றுக்கடுப்புக் காரன் வாயிற் போட்டுவிட்டான்; அந்தோ பரிதாபம்! அது பக்குவப்படுத்தி வைத்திருந்த பாஷாணத் தூளானதால், கால்மணி நேரத்தில் குடலையெல்லாம் அறுத்து இரத்தபேதியாகி வயிற்றுக்கடுப்புக்காரன் உயிரைப்போக்கி விட்டது. உடனே கிழவி, அழுது பிரலாபித்துச் சொக்கனை மடிபிடித் திழுத்து,உன்னை இலகுவில் விடமாட்டேன் என்று சண்டை தொடுக்க ஆரம்பித்தாள். அதற்குச் சொக்கன், தன்னுடைய மருந்து மிகவும் நல்லதென்றும், அவன் தலைவிதியால் இறந்தானென்றும் ஏதேதோ ஜாலமான வார்த்தைகளைப் பேசி அவளைச் சமாதானப் படுத்தினான். அவளைப் பேசாமலிருக்கும்படி செய்வது பெருங்கஷ்டமாக முடிந்தது. அதன்மேல் கிழவி, தனக்கு வேறொருவருந் துணையில்லாததால், "இந்தப்பிணத்தை நீங்களிருவருமே தூக்கிக்கொண்டுபோய் அடக்கம்செய்து வரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். சொக்கன், "இதன்மூலமாக வாவது இவள்கையினின்றும் தப்பிச்செல்வது நலம்"என்று கருதி அதற்கிசைந்து, தான் தலைமாட்டிலும் தாண்டவராயன் கால்மாட்டிலும் நின்று பிணத்தைத் தூக்கிச் சென்றார்கள். அப்போது கால்பக்கம் தூக்கிய சீஷனுக்குப் பிணத்தின் மலஜல முதலியவைகளெல்லாம் மேலேவடிந்ததால் மிக்க அருவருப்பை உண்டாக்கியது; அதனால் அவன், 'இஃது என்ன கஷ்டகாலம்?' என்று வருந்திச் சென்றான். முடிவில் இருவரும் அப்பிணத்தைப் புதைத்து ஸ்நானஞ் செய்துவிட்டு, "இனி இவ்வூரிலிருப்பது மரியாதையல்ல" என்று வேற்றூர் சென்றார்கள். அங்கே ஒருதிக்கற்ற நோயாளி அகப்பட்டான்; அவனையும் இவ்வாறே ஒன்றிருக்க ஒன்றைக்கொடுத்து வேலையைத் தீர்த்துவிட்டார்கள்; அங்கும் பிணம்தூக்கும் வேலை இவர்களுடையதாகவே முடிந்தது. இப்படி ஐந்தாறு ஊர்களில் சென்று வைத்தியஞ் செய்தும் ஒரு பலனும் கிடைக்கவில்லை; இவர்களுடைய நம்பர் வைத்தியம் சும்பத்தனமாக முடிந்தது. அதன்மேல் சொக்கன், "இஃது என்ன

ஆச்சரியம்! சாமியார் போலவே நாம் நம்பர்க்குறிப்பிட்டு மருந்து கொடுத்தும் பலிக்கவில்லையே; ஒவ்வொருவருக்கும் உயிர்போய் விடுகின்றதே; இப்படி இன்னும் சில விடங்களில் நடந்தால் நம்மைத் துன்பப்படுத்தாமல் விடுவார்களா? ஆயினும் பாதகமில்லை; நாம் ஓரே ஊரிலிருந்தாற்றானே மோசம்; வேறு வேறு ஊர்களுக்குச்சென்று விட்டால் எவர் என்னசெய்ய முடியும்? நமக்கு இன்னும் அனுபவம் வரவில்லை; 'ஆயிரம்பேரைக்கொன்றவன் அரை வைத்தியன்' என்கின்றார்களே; அவ்வளவு மனிதரையாவது வேலையைத் தீர்த்தாலல்லவா நமக்கு வைத்தியத்தில் அரைவாசியாவது கைகூடும்; இப்போது நான்கைந்துபேர்வரைதானே ஆகியிருக்கின்றார்கள்; எப்படியாவது ஆயிரம்பேரைத் தொலைத்துவிட வேண்டும்; அப்படிச் செய்வதற்கு இவ்விதம் திக்கற்றவர்களாயிருந்தாற்றான் உத்தமம்; கொஞ்சம் நல்ல நிலைமையிலிருப்பவர்களிடம் சென்றால் நமது பிராணனை வாங்கிவிடுவார்கள்; அப்படி அகப்பட்டுக்கொள்ளக் கூடாது; எப்படியாவது தந்திரமாயிருந்து ஆயிரம் ஆசாமிகளை பொழித்துச் சாமியாரைப்போல வைத்தியத்தில் கீர்த்தி பெறுவதே சரி" என்று தீர்மானித்துக் கொண்டு தன் சீஷனுக்கும் இதோபதேசம் பண்ணி அவன், தனக்கு வசமாகும்படி செய்து பற்பல விடங்களினும் சென்று, மேற்கண்டபடியே நம்பர் வைத்தியஞ் செய்து திக்கற்ற பலரைக் கொன்று பிணங்களையெடுத்து அடக்கஞ்செய்து வந்தான். இப்படி வைத்தியஞ்செய்து பிணந்தூக்கும்போதெல்லாம் சொக்கன் தலைப்பக்கத்தில் நிற்கும் சுதந்திரத்தை மட்டும் விடுவதில்லை;சீஷனாகிய தாண்டவராயன், தன்மீது பிணங்களின் மல ஜலங்கள் விழுந்து அருவருப்பைத் தருவதை நினைத்து எப்படியாவது பிணங்களின் கால்பக்கத்தைக் குருவுக்கு விட்டுவிட்டுத் தான் தலைப்பக்கத்தைத் தூக்கவேண்டுமென முயன்றும்,சொக்கன் முந்திக்கொள்வதால் தனக்கு அது கிடைக்காமற் போயிற்று. இதனால் அவனுக்கு விசனம் அதிகரித்துக்கொண்டே வந்தது; எவ்விதத்தாலாவது இந்தச் சங்கடத்தைத் தொலைத்துவிட வேண்டுமென்று தன்குருவின் மீது மிக்க வெறுப்படைந்திருந்தான்.

இவன் இவ்வாறு வெறுப்படைந்திருக்குஞ் சமயத்தில், ஒரு நாள் இருவரும் ஒரு நாகரிகமான ஊரில் சென்று, சொக்கனுக்கு நாசகாலம்கிட்டியதால் சிறிது நல்லநிலைமையிலுள்ள ஒரு தனவந்தர்வீட்டில் வைத்தியத்துக்குப் புகுந்துவிட்டார்கள். அப்போது அங்கே கிடந்த நோயாளிக்கு மருந்து கொடுப்பதற்காகச் சொக்கன் வழக்கம் போல் வாய்க்குவந்தபடி "ஒன்பதாம்நம்பர்க் குப்பியை எடு" என்றான். உடனே தாண்டவராயன், "ஐயோ! இங்கும் ஓர் ஆசாமியை வேலை முடிக்கப்போகிறான்; இனிக் கால்மாட்டுச் சனியன் நமக்கு உதவாது; நாம் இப்பொழுதே முடியாதென்று சொல்லிவிடவேண்டும்" என்று கருதி, "ஐயா! நீர் கால்மாட்டில் நிற்பதாயிருந்தால்மாத்திரம் குப்பியை யெடுப்பேன்; இல்லாவிட்டால் முடியாது" என்று கூறினான். உடனே அங்குள்ளவர்கள் ஆச்சரியப்பட்டு "இஃது என்ன" என்று கேட்டார்கள். உடனே தாண்டவராயன், சொக்கன்மீ திருந்த வெறுப்பால், தங்கள் வைத்திய சரித்திரமுழுமையும் ஒன்றொழியாமற் சொல்லிவிட்டான். அதைக்கேட்கவே எல்லோரும் திடுக்கிட்டுக் கோபங்கொண்டு சொக்கனைப்பிடித்துக் கட்டியடித்து நியாயாதிபதியிடம் சேர்த்தார்கள். அவர், சொக்கனை ஐந்துவருஷம் சிறையிலிருக்கும்படி தீர்மானித்தார். சொக்கன், "நாம் ஊர் ஊராய்த் திரிந்து சாப்பாட்டுக்கு அலைவதைக் காட்டிலும் இங்கிருந்து நேரந்தவறாமல் சாப்பிட்டுக் காலங்கழிப்பது மெத்தவும் நலம்" என்று அச்சிறைச்சாலையில் சந்தோஷமாகவே யிருந்தான். தாண்டவராயன் சனியன்தொலைந்ததென்று தன்மனத்திற் கிசைந்த விடத்திற்குச் சென்றான். ஆதலால் அறிவுடையோர் இத்தகைய வைத்தியர்களிடம் மோசம்போகாமல் தம்மைக் காத்துக் கொள்ளுவாராக.

விஷதாரி.

சென்றமாதப் பத்திரிகையில் 161-ம் பக்கத்தில் "கண்டனச் சூறாவளி" என்றிருப்பதைக் "கண்டனத்தின் கண்டனம்" என்று திருத்திக்கொள்ளுக.

OFFICE OF ... BOOKS, REGISTERED 6 SEP 1911 MADRAS.

بسم الله

இஸ்லாம் நேசன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை-2] 1911, ஏப்ரில். [வகை-6

லண்டன் பள்ளிவாயில்.

ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது.

லண்டனில் உள்ள முஸ்லிம்களுக்கும், வெளிதேசங்களிலிருந்து இங்கிலாந்துக்குப் பிரயாணமாகும் முஸ்லிம்களுக்கும் தொழுகைக்கு வேண்டிய பள்ளிவாயில் ஒன்று லண்டன்மாநகரில் இருக்கவேண்டியது அதிக அவசியமென்று சிலகாலமாக முஸ்லிம்கள் கவனித்து வருகிறார்கள். சில வருஷங்களாய் முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் அதிகமாகப் பாடுபடுகிறார்கள். இங்கிலாந்துக்கு வாலிப இந்தியர்கள் மிகுதியாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் பெரும்பான்மையோர், இந்தியாவிலிருந்து மாணாக்கர்களாகவே கல்வியின் பொருட்டு அங்கே போகிறார்கள். இவர்களுக்காகவே ஒரு பள்ளிவாயில் அவசியம் கட்டவேண்டியிருக்கிறது. இந்திய முஸ்லிம்கள் அங்கே இரண்டு மூன்று வருஷம்வரையில் தங்குகிறார்கள்; சிலர் இன்னும் அதிக காலம் அங்கே இருக்கிறார்கள்; தாய் தகப்பன்மாரையும், சொந்த ஊரையும் விட்டு நெடுந்தூரம் சென்று விடுவதால் தங்களுடைய மதப்பற்றையும், சுஜாதியாருடைய கொள்கைகளையும் அவர்கள் இழக்கநேரிட்டு, நீரீசுரவாதிகளாகவும், தெய்வபக்தி யற்றவர்களாகவும் மாறிவிடுதல் கூடும். இவ்விஷயத்தில் மாணாக்கர்களுடைய நிலைமையை மட்டும் நாம் சொன்னோம்; ஆனால், மற்றவர்களுடைய நிலைமையும் கவனிக்கத்தக்கதே. லண்டன் மாநகரத்தில் உலகத்தின் எல்லாப் பாக

த்திலுமுள்ள முஸ்லிம்களும் வந்து வசிக்கிறார்கள்; முஸ்லிம் இராஜ்யங்களிலிருந்து போகும் பிரதிநிதிகளும், மந்திரிகளும் ஆகிய இவர்கள்முதல் இந்தியாவிலிருந்தும் இதர நாடுகளிலிருந்தும் போகும் மன்னர்கள், சிற்றரசர்கள், நவாபுகள் ஆகியவர்களும், வியாபாரத்தின் பொருட்டுப்போகும் மனிதர்களும், கப்பலோட்டிகளாக இருந்து அக்கப்பலோடு இங்கிலாந்துக்குப்போகும்போது லண்டனில் தங்கும் நூற்றுக்கணக்கான மாலுமிகளும் ஆகிய இவர்கள் வரையில் முஸ்லிம்கள் இங்கிலாந்துக்குப் போய் வருகிறார்கள். இஸ்லாம் மார்க்கமோ உட்பிரிவின் வேற்றுமையில்லாமல் எல்லா முஸ்லிம்களும் ஒரே வகுப்பாரென்று அங்கீகரிக்கும் மதமாகும். லண்டனில் ஒரு பள்ளிவாயில் இருந்தால் நம்முடைய நாயக சிகாமணி சர்வரே ஆலம் முகம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களால் கொண்டுவரப்பட்ட சத்திய மார்க்கத்தைப் பின்பற்றும்முஸ்லிம்கள் எல்லோருக்கும் அவர்கள் மேற்குலத்தாராயினும், கீழ்குலத்தாராயினும், எத்தேசத்தாராயினும், எப்பாஷைக்கு உரியாராயினும் அது போதும். ஆதலின் இப்பொழுது லண்டனில் உண்டாயிருக்கும் உணர்ச்சியை முஸ்லிம் உலகத்தாரெல்லோரும் ஆதரித்து அதற்கு வேண்டிய உதவியைச் செய்வார்களென்று நம்புகிறோம். இதில் இந்திய முஸ்லிம்களே மிக்க ஊக்கமெடுத்து அதற்குவேண்டிய ஐசுவரியம் சேர்த்துக்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனெனின், இந்தியாவில் மட்டும் பத்துக்கோடி முஸ்லிம்களிருக்கிறார்கள்; இவர்களுக்குத் தான் லண்டனுடைய சம்பந்தம் அதிகம் வேண்டியிருக்கிறது; நம்முடைய சக்கரவர்த்தியவர்களின் தலைநகரும் அஃதே.

முன் ஏற்பாடு.

இத்தகைய உணர்ச்சி, சென்ற மூன்று நான்கு வருஷங்களாக இங்கிலாந்துக்குப் போகும் இந்திய முஸ்லிம்களின் மனத்தில் உதித்திருக்கிறது. மாட்சிமைதங்கிய ஆகாகானவர்களும் ஆனரபிள் மிஸ்டர் அமீர் அலி அவர்களும் உசிதமான நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்து தக்க காலத்தில் ஆரம்பித்திருக்கிறார்கள். லண்டனிலுள்ள முஸ்லிம் கனவான்களும், இஸ்லாம் மார்க்கத்தில் பற்றுள்ள அநேகம் ஆங்கிலேயர்களும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டம் கூடினார்கள். சென்ற நவம்பர் மாதத்தில் கனம் ஆகாகானவர்கள் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது ஒரு முதற்கூட்டம் அவருடைய அக்கிராசனத்தின்கீழ் கூட்டப்பட்டது. லண்டனில் ஒரு பள்ளிவாயில் இருப்பது அவசியமென்றும், அதற்கு வேண்டிய தொகை முஸ்லிம் மன்னர்களிடத்திலிருந்தும், மற்றெல்லா முஸ்லிம்களிடத்திலிருந்தும் வசூல் செய்யவேண்டியதென்றும் முடிவு செய்தார்கள். அவ்விஷயத்தை நிறைவேற்றும் பொருட்டு ஒரு நிருவாக சபையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்விடத்திலேயே அப்பொழுதே ஸ்ரீமான் ஆகாகானவர்கள் 5,000 பவுன் நன்கொடையளித்தார்கள். அவர்களே இந்தியாவுக்கு அக்கிராசனாதிபதியாக நியமனம் பெற்றார்கள். இங்கிலாந்திலிருந்து நடத்தவேண்டிய பொதுச் சங்கத்துக்கு மிஸ்டர் அமீர்அலி யவர்கள் அக்கிராசனாதிபதி. துருக்கி தேசத்திலிருந்து இங்கிலாந்துக்குப் போயிருக்கும் மந்திரியும், பாரஸீகதேசத்து மந்திரியும், பிரஸல்ஸ் நகரத்திற்குப் போயிருக்கும் துருக்கி மந்திரியும், லார்டு லாமிங்டன் பிரபு அவர்களும், லார்டு ஆம்தில் துரையவர்களும், லார்டு ஆவர்பரி துரையவர்களும், லார்டு ரெய்னல்ஷே எம். பி. துரையவர்களும், ஸர் செய்மூர்கிங் எம். பி. அவர்களும், ஸர் வில்லியம் புல் எம். பி. அவர்களும், இன்னும்சீர்த்திவாய்ந்த பிரபுக்களும், இந்தியா கவுன்ஸில் மெம்பர்களில் மூவரும், ஸர் தியடோர் மாரிஸன், ஸர் ஜேம்ஸ் லா டச், மிஸ்டர் அப்பாஸ் அலி பெய்க் ஆகிய இவர்களும் நிருவாக சபையில் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். மிஸ்டர் சி. ஏ. லத்தீப், மேஜர் சையத் ஹஸன் பில்கிராமி, வித்வான் டி. டபில்யூ. ஆர்னால்டு ஆகிய இவர்கள் காரியதரிசிகள்; மிஸ்டர் ஏ. எஸ். எம். அனீக் நிதித்தலைவர்; மிஸ்டர் எம். டி. காதர்பாய் உபகாரியதரிசி; இந்தியா, சைப்ரஸ், சிங்கப்பூர், பினாங், ஹோங்கோங், கீழ் ஆபிரிகா முதலிய இடங்களில் வசிக்கும் நவாபுகள், கனவான்கள், பெரியோர்கள், சிறியோர்கள் ஆகிய எல்லோரும் இதற்கு உபகாரம் புரிவார்கள். இந்தியாவில் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்துவதாகத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களெல்லோரும் இவ்விஷயத்தில் தலையிட்டு உழைப்பார்களென்று நம்புகிறோம். நிருவாக சபையில் மெம்பராயிருக்கும் துருக்கி தேசத்து மிஸ்டர் ஹலீல் ஹாலித் பே அவர்கள் உதுமானியா ராஜ்யத்தில் உள்ள முஸ்லிம்களுக்கு ஊக்கம் விளைத்து அவர்களி

டமிருந்து பணம் வசூலித்துக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். இவர்களுடைய கணக்கு இங்கிலாந்து பாங்கில் வரவுசெலவு செய்யப்படும்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க்.

முஸ்லிம்கள் லண்டனில் பள்ளிவாயில் கட்டுவதற்கு முழு ஊக்கத்தோடு முன் வராமல், வேறு தேசங்களிலிருந்து இங்கிலாந்துக்குப் போகும் வேறு மதத்தினர்கள் தங்கள் தங்கள் மதஆராதனைக்குரிய கோயில்களைக் கட்டுவதற்குப் பெரு முயற்சியெடுத்துக்கொள்ளாததால் நாம் மட்டும் ஏன் அதிக திரவியம் செலவுசெய்து பள்ளியொன்று கட்டவேண்டுமென்று வீண்வாதம் புரிகிறார்கள். லண்டன் சங்கத்திலிருந்து இனி வெளிவரும் விண்ணப்பப் பத்திரங்களில் இதைப்பற்றி விரிவாக எழுதுவார்கள். லண்டன் மாநகரில் ஐரோப்பாவிலுள்ள எல்லாப் பாஷைகளிலும் தெய்வ ஆராதனை செய்வதோடு வேறு அன்னியபாஷைகளிலும் ஆராதனை புரிகிறார்கள். அநேக மதத்தினர்கள் தங்கள் தங்கள் ஜாதியாரால் மிக்க பக்தி விசுவாசத்தோடு லண்டனில் கட்டிவைக்கப்பட்டிருக்கும் கோயில்களுக்குச் சென்று அங்கே வணக்கம் புரிகிறார்கள். அந்தோ பரிதாபம்! நம் முஸ்லிம்கள் மட்டும் ஜும்ஆ தொழுதற்கும், ஈதுல் பித்ர், ஈதுல் அல்ஹா தொழுதற்கும் ஒரு பள்ளியில்லாமல் ஹோட்டல்களிலும், பொதுச் சத்திரங்களிலும் சென்று தொழுகிறார்கள். நம்முடைய ராஜாங்கத்தார் வாழும் தலைநகரில் நம்முடைய பள்ளியொன்று இல்லாதிருப்பது நமக்குப் பெருங்குறையன்றோ? நமக்கும் என்ன மதிப்புண்டு? இந்தியாவிலுள்ள அநேகம் முஸ்லிம் மன்னர்களைக் காட்டிலும் குறைந்த செல்வாக்கும், ஐசுவரியமுமுடைய புகாரா தேசத்து அமீர் ஒருவரே தம்முடைய உதாரகுணத்தால் மிகப் பணச்செலவுசெய்து ருஷியா தேசத்துத் தலைநகராகிய செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் ஒருபள்ளிவாயில் கட்டிமுடித்தார்கள். அப்பள்ளிவாயிலின் அஸ்திவாரக்கல் ருஷியா தேசத்துச் சக்கரவர்த்தியாகிய ஜார் என்பவரால் நாட்டப்பட்டது. அத்தேசத்துக் கவர்ண்மெண்டாருடைய அனுமதியின்மேல் அந்நகரிலேயே மகா நேர்த்தியான வேறொரு பள்ளிவாயில் கட்டும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கிலுள்ள பள்ளிவாயிலைக் காட்டிலும் நம்முடைய தயாள பரிபூரண மன்னராகிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் வசிக்கும் லண்டன்மாநகரில் ஒரு பள்ளிவாயிலிருந்தால் அஃது உபயோகப்படாமற் போகாது.

ஒரு கடிதம்.

அடியில்வரும் கடிதம் ஆனரபிள் மௌல்வி ரபீ உத்தீன் பார் அட்லா அவர்களுக்கு ஆனரபிள் ஸைய்யத் அமீர் அலி அவர்கள் எழுதியது:--

அருமைவாய்ந்த மௌல்வி ரபீ உத்தீன் அஹமத்! லண்டன் நகரில் முஸ்லிம்கள் தொழுதுகொள்ளும் பொருட்டு ஒரு பள்ளிவாயில் இல்லாதது அநேக காலமாக இஸ்லாம் மார்க்கத்தின் எல்லா மதகபாரின் கவனத்திலும் பட்டிருக்கிறது என்னும் விஷயம் தங்களுக்குச் சந்தேகமறத் தெரியுமே. ஒவ்வொரு வருஷமும் அதிகமான முகம்மதிய மாணவர்கள் இத்தேசத்துக்கு வந்துகொண்டிருப்பதால் பள்ளிவாயிலொன்றிருப்பது அவசியமென்பது எல்லாருக்கும் அதிகமாகத் தெரிந்திருக்கிறது. வணக்கத்துக்குரிய இடமொன்றில்லாமையால் நம்மார்க்கத்தால் கடமையென்று வற்புறுத்தப்படும் வருஷத்தொழுகைகளையும் ஹோட்டல்களிலும், சாப்பாட்டுக் கடைகளிலும் முஸ்லிம்கள் கூடித்தொழுகிறார்கள்.

மாட்சிமைதங்கிய ஆகாகானவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நவம்பர் மாதம் 29உ யன்று இவ்விஷய சம்பந்தத்தைப்பற்றிப் பரியாலோசனை செய்யும்பொருட்டுக் கூடிய முதற்கூட்டத்தில் அப்பொழுது லண்டனில் தங்கியிருந்த பிரபல முகம்மதியர்களும், இவ்விஷயத்தில் ஊக்கமுள்ள ஆங்கில நண்பர்களும் பிரசன்னமாயிருந்தார்கள்.

லண்டனில் பள்ளிவாயிலிருப்பது அத்தியாவசியமென்றும், இஸ்லாமிய மன்னர்கள், பெருந்தனிகர்கள், இன்னும் முஸ்லிம் உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்கள் ஆகிய எல்லாருக்கும் இவ்விஷயத்தைப்பற்றி விண்ணப்பம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உடனே செய்யப்படவேண்டுமென்றும், பத்துக்கோடி முஸ்லிம்களடங்கிய இந்திய ராஜ்யத்தின் தலைநகரில் வணக்கத்துக்குரிய முஸ்லிம் பள்ளியொன்று இல்லாமலிருக்கும் குறையை நிறைவேற்றவேண்டுமென்றும் முடிவு செய்தார்கள்.

இங்கு வந்திருக்கும் இந்திய முஸ்லிம்கள் மட்டுமன்றி இதர தேசத்து முஸ்லிம்களும் இவ்விஷயத்தை முழுமனத்தோடேற்றுக் கொண்டார்களென்றும், துருக்கி தேசத்தாருக்கு இதைப்பற்றித் தெரிவிக்கும் பொருட்டு முன்னமே ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனவென்றும், கண்ணியம் பொருந்திய துருக்கிதேசத்து மந்திரி, பாரஸீக மந்திரி, பிரஸல்ஸிலுள்ள துருக்கிய மந்திரி, இன்னும் லார்டு ஆம்தில், லார்டு ஆவர்பரி, லார்டு லாமிங்டன், லார்டு ரெய்னால்ஷே எம். பி, ஸர் ஜேம்ஸ் டிக்கீஸ் லாட்டச், ஸர் தியடோர் மாரிஸன், ஸர் வில்லியம் புல் எம். பி, ஸர் செய்மூர் கிங் எம். பி. இன்னோரன்ன ஆங்கில அனுதாபமுள்ளவர்களும் இத்தீர்மானத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு இச்சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கும் விஷயத்தில் எனக்கு அதிக சந்தோஷமுண்டாகிறது.

சொந்தவூரையும், சுற்றத்தாரையும் விட்டு நெடுந்தூரம் பிரயாணம் வரும் நம்முடைய முஸ்லிம் பாலியர்கள் நம்மார்க்கத்தையும், நம்மவரின் கொள்கைகளையும் விட்டுவிடாமலிருப்பது மிக்க ஆவசியகம் என்பதைக் கண்டுகொண்ட தாங்கள், இப்பொழுது உறுதியாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தப் பக்திவிஷயத்தில் அனுதாபம் கொள்வீர்களென்று நான் முழுநம்பிக்கை வைத்திருக்கிறேன். பெருந்தனிகர் முதல் கப்பலோட்டிகளீறாகப் பெருந்தொகுதியாகவரும் இஸ்லாம் மார்க்கத்தொடர்புள்ளவர்களாகிய எல்லா மூமின்களின் ஆத்மசம்பந்தமான விஷயம் முன்போல கவனக்குறைவாக விடப்படக் கூடாதென்று நம்புகிறேன்.

சமீபத்தில் இதன் சம்பந்தமான வேறு விஷயங்களைத் தெரிவிக்கிறேன். ஆனால், எனக்கு இப்போதுள்ள தாத்பரியம் என்னவெனின், இது பக்திவிஷயமாதலால் இச்சங்கத்தில் தாங்கள் ஓர் அங்கத்தினராகச் சேர்ந்து கொள்ளும் பொருட்டு வேண்டிக்கொள்ளும் விண்ணப்பமே. சமீபத்தில் எப்பொழுதேனும் தாங்கள் ஐரோப்பாவுக்கு வரும்படி நேரிட்டாலொழிய எங்கள் ஆலோசனையில் தங்களுடைய வாய்ப்பிறப்பைத் தெரிந்துகொள்ள முடியாதென்பது எனக்கு நன்றாகத்தெரியும். ஆனால், சங்கத்தில் தங்களுடைய பெயரிருக்குமாயின் நாங்கள் செய்யப்புகும் விண்ணப்பத்துக்கு மிக்க கௌரவம் உண்டாகும். இதன் சம்பந்தமாக உண்டாகும் அபிவிருத்தியைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்கும் சௌகரியமுண்டாகும். மேலும் எங்கள் தீர்மானம் முதிர்ச்சியை அடைந்தவுடன் இந்தியாவில் வேறு வேறு மாகாணக் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தப்படும். அப்பொழுது, இச்சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் தங்கள் பெயர் மாகாணச் சங்கங்களுக்கு மிக்க நன்மையை உண்டாக்கும். இப்பொழுது ஆரம்பம் செய்திருப்பதால் இனித் தாமதமின்றி உலகத்தவருக்கு மனுப்பண்ணிக் கொள்ளப்போகிறோம். தாங்கள் அங்கத்தினராகச் சேர்ந்துகொள்ள எங்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் விண்ணப்பப்பத்திரத்திலும் தங்கள் பெயரைப்பதிந்து கொள்ளும்பொருட்டுத் தந்திவாயிலாக மறுமொழி தெரிவிக்கவேண்டுமென்றும் வினயமாகக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.--தங்கள் உண்மையுள்ள அமீர் அலி.

எங்கள் வேண்டுகோள்.

முஸ்லிம் சகோதரர்களே! லண்டன் பள்ளிவாயில் சம்பந்தமாக முன் பிப்ரவரி மீ சஞ்சிகையில் ஒரு விஷயம் எழுதியிருந்தோம்; அதை எல்லோரும் கவனித்திருப்பீர்கள்; நாளதுவரையில் அநேகம் பிரபுக்கள் பள்ளிக்காகப் பணம் சேர்த்துக்கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்; இச்சிறு பத்திரிகையும் தன்னாலியன்றவரையில் ஐசுவரியம் சேர்த்துக் கொடுப்பதாக முயற்சிசெய்கிறது; பள்ளிக்குப் பணமளிக்கும் உதாரகுணமுள்ள உத்தமர்கள் தாங்கள் கொடுக்கும் தொகையை லண்டன் பாங்கிக்கு நேரே அனுப்பிவிடலாம். எமக்கு அனுப்பினும் அவ்வாறு சேரும் தொகையைச் சேர்த்து நாமே அனுப்பிவிடுவோம்; ஒரு பை முதல் எவ்வளவு தொகை அனுப்பினும் ஏற்றுக்கொள்வோம். பணம் கொடுக்கும் ஒவ்வொரு பிரபுவின் பெயரையும் அவர் தொகையுடன் இஸ்லாம் நேசனில் பிரசுரித்து வருவோம். இஃதோர் தவாபான காரியமன்றோ? ஒரு பள்ளிவாயில் கட்டினால் அதனாலுண்டாகும் நன்மைக்கோரளவில்லை. இவ்வாறிருக்க, பெருநாள் தொழுகைக்கும் இடமில்லாமல் தவிக்கும் ஒருநகரில் பள்ளிகட்டினால் எவ்வளவு நன்மையுண்டாம்? நாம் பள்ளிவாயில் கட்டும்படியான நன்மை

யைப் பெறுவதென்றால் இச்சமயமின்றி வேறு எச்சமயம் கிடைக்கும்? நம்முடைய ஊர்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருமஸ்ஜிது இப்போதுண்டு; நாம் எங்கே பள்ளியைக் கட்டப்போகிறோம்? வேறு சிற்றூர்களில் ஒரு மஸ்ஜிது கட்டப்பட்டால் அது நம்முடைய கவனத்திற்கு எட்டாது. உலகத்தில் இதுதான் மகா பெரிய நகரமென்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படும் லண்டன்மாநகரின் விஷயமாதலின் அது நம்முடைய பார்வைக்கு எட்டியிருக்கிறது. நாம் பணம் கொடாவிடில் பள்ளிவாயில் கட்டப்படாமல் நின்றுபோம் என்னும் சந்தேகமில்லை; அநேக லட்சம் வேண்டிய ஒருபள்ளிக்கு நாம் கொடுக்கப்போகும் தொகை ஒரு கல்லுக்கும் ஈடாகாது. ஆனால், பள்ளிவாயில் கட்டும் தவாபை நாம் கைவிடக் கூடாதென்னும் நோக்கத்தோடே இவ்வளவு பிரயாசையெடுத்துக் கொள்ளுகிறோம்; நாம் இச்சமயத்தைக் கைவிடாமல் பிடித்துக்கொள்ளவேண்டியது அவசியமன்றி, அச்சமயம் நம்மை வந்து தானே பற்றாது. இத்தகைய விஷயங்களில் நாம்தாம் முந்திக்கொள்ள வேண்டும். இப்போது கட்டப்படும் பள்ளி ஒருகால் கியாமத்துநாள் வரையில் இராதென்று யார்சொல்லக்கூடும்? அஃது எத்துணைக் காலமோ நிலைபெற்றிருக்கும். அப்பள்ளியுள்ள வரையில் எத்தனைகோடி முஸ்லிம்கள் அதில் தொழுதுகொள்வார்கள்? அவர்கள் பள்ளிகட்டியவர்களின் ஆத்மாவுக்கு நன்மையுண்டாகும்படி துஆ செய்யும்போது நமக்கும் ஒருகூறு கிடைக்குமன்றோ? இப்படிப்பட்ட வேறொரு நற்காரியம் நம்முடைய ஆயுளுக்குள் கிடைப்பது அரிதினும் அரிதாகும். “தங்களுடைய வாயால் கடவுளுடைய ஒளியை அணைக்க அவர்கள் ஆசைகொள்ளுகிறார்கள். ஆனால், நன்றியற்றவர்கள் விரோதம் பாராட்டினும் இறைவன் தன்னுடைய ஒளியை நிரம்பச் செய்வான்.” (குர்'ஆனே ஷரீப்)

يريدون ليطفئوا نور الله بأفواههم والله متم نوره ولوكره الكافرون*

ஆதலின் அல்லாகுத் தஆலாவினுடைய காரியங்களில் நாம் முன்னோக்கி வருவோமாக.—ஆமீன்.

பத்திராதிபர்.

*அடியில்வரும் கடிதம் எம்முடைய கிருபநேயர் ஒருவரால் எழுதப்பட்டு எமக்கு நேற்று வந்துசேர்ந்தது. இக்கடிதம் படிப்போருக்கு மிக்க நன்மை பயக்குமாதலாலும், கடிதக்காரருடைய தாக்ஷிணியத்தை மறுக்கக் கூடாமையாலும் அவருடைய ஓர் எழுத்தையாவது மாற்றாமல் அடியில் வருமாறு முழுக்கடிதத்தையும் பிரசுரிக்கிறோம்:—

“ஐயன்மீர்! தங்களுடைய மேலான பத்திரிகையின் ஒரு மூலையில் அடியேனுடைய தாழ்மையான கடிதத்தைப் பிரசுரிக்கும்படி மிக்க வினயத்தோடு வேண்டிக்கொள்கிறேன்.

தங்களுடைய பிப்பிரவரி மாதத்துச் சஞ்சிகையைப் பார்த்தேன். அதில், தாங்கள் லண்டன் பள்ளிவாயிலுக்காக ஒரு பண்டு சேர்ப்பதாக எழுதி யிருக்கிறீர்கள். அஃதெனக்கு மிக்க இன்பத்தை விளைத்தது. ஆனால், அவ்விஷயத்தில் உங்களுக்கு ஏன் இவ்வளவு தலைப்பொறுப்பு? நீங்கள் பணம் சேர்த்துக் கொடாவிடில் அப்பள்ளிவாயில் நிறைவேறாதோ? பத்திரிகைக்காரர்களுக்கெல்லாம் இதுதான் ஓயாத மணியமாகி விட்டது. ‘வடையைத் தின்னச் சொன்னார்களா? மற்றொன்று செய்யச்சொன்னார்களா?’ என்றவாறு நீங்களெல்லோரும் பத்திரிகையைச் சும்மா நடத்திக் கொண்டிராமல், ‘இன்னதற்கு வேண்டும்’ ‘அன்னதற்குவேண்டும்’என்று எங்களுடைய பணத்தைச் சேகரித்து ஏன் அபகரித்துக் கொள்ளுகிறீர்கள்? பணத்தை அனுப்புவதாகப் பொய்சொல்லி ஏமாற்றுகிறீர்கள். அவ்வாறின்றி ஒருகால் தப்பித்தவறிப் பணத்தை அனுப்பிவிட்டாலும் பெரும்புகழும் பட்டமும் நீங்கள் பெறுகிறீர்கள்; பணம்கொடுப்பது நாங்கள்; பட்டம்பெறுவது நீங்கள்; லண்டன் பள்ளிக்குப் பணம் கொடுப்பது அவசியமானால் நேரே மணியார்டர் செய்து அனுப்புவதற்கு எங்களுக்குத் தெரியும்.

மேலும் லண்டன் பள்ளிவாயிலுக்குப் பணம் வேண்டியது அவசியம் என்பது எனக்குத் தோன்றவில்லை; நாம் ஏன் மஸ்ஜிதுக்குப் பணம் கொடுக்கவேண்டும்? கிறிஸ்தவர்களன்றோ கட்டிக் கொடுக்கவேண்டும்? தாங்கள் பத்திராதிபராயிருந்தாலும் விஷயத்தின் உண்மையைத் தெரிந்து கொள்ளவில்லை; உங்களுக்குத் தெரியாவிடில் நான் சொல்லுகிறேன்; என்னுடைய நண்பரொ

ருவர் இவ்வருடம் ஹஜ்ஜுக்குப் போயிருந்தார்; அங்கே இங்கிலாந்திலிருந்து அநேகர் வந்திருந்தார்கள்; அவர்கள் வாய்ப்பிறப்பால் தெரிந்துகொண்ட விஷயத்தை எனக்கு நண்பர் சொன்னபடியே தங்களுக்கு எழுதுகிறேன்:

லண்டனில் முதன் முதல் பார்லியமெண்ட்டுக்கெதிரில்ஒரு மஸ்ஜிது ஏற்பட்டிருந்தது; அதில் முஸ்லிம்கள் தொழுதுகொண்டிருக்கும்போது நஸாராக்கள் கூட்டமாக வந்து கூச்சல் செய்தார்கள்; பிறகு முஸ்லிம்களுக்கும் நஸாராக்களுக்கும் கலகம்விளைந்தது; கிரிஸ்தவர்கள் நம்முடைய மஸ்ஜிதை இடித்து விட்டார்கள். பிறகு முஸ்லிம்கள் கிரிஸ்தவர் கோவில்களையும் இடித்தார்கள். இக்கலகம் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டுக் கப்பலேறி மத்திய தரைக்கடல்வழியாகச் சமுத்திரத்திலுள்ள பள்ளிகளையும் கோவில்களையும் இடித்துக்கொண்டு மிசுறுதேசம் வந்துசேர்ந்தது. பிறகு அனேக ராஜாங்கத்தார்கள் ஒன்றுசேர்ந்து சமாதானம் செய்து ஒருவாறு முடிவு பண்ணினார்கள். அஃதாவது:—கிரிஸ்தவர்கள் முஸ்லிம்களுடைய பள்ளிகளைத் தங்கள் செலவினால் கட்டிக்கொடுக்க வேண்டும்; நஸாராக்கள் தங்கள் கோவிலைத் தாங்களே கட்டிக்கொள்ளவேண்டும் என்பதே. கிரிஸ்தவர்களே முதலில் பள்ளியை இடிக்க ஆரம்பித்ததால் அவர்களே லண்டன் மஸ்ஜிதைக் கட்டிக்கொடுக்கவேண்டும்; அதற்கு நீங்கள் ஏன்பணம் சேர்க்கிறீர்கள்? நஸாராக்கள் கட்டிக்கொடாவிடில் நாங்கள் சும்மா இரோம்; நாம் ஒருகை அவர்கள் ஒருகை பார்ப்போம்; நமக்கென்ன கோர்ட்டுத் தெரியாதா? லண்டன் வரையில் அப்பீலுக்குமேல் அப்பீல்செய்து வழக்காடுவோம்; இந்தியா கேஸ்களைக் கவனிக்கும்பொருட்டு இங்கிலாந்தில் பிரிவி கவுன்ஸில் என்னும் ஒரு தருமாலயம் இருப்பதாக எங்கள் வக்கீல் சொல்லுகிறார்; அதில் துலுக்கரும் ஒருவர் இருப்பதாக அவர் சொன்னார்; அந்தக் கோர்ட்வரையிலும் அப்பீல் செய்வோம்; அவர் பெயர் அமீர் அலியோ, சுல்தான் அலியோ என்பது ஞாபகமில்லை; அவர் யார் பக்கம் தீர்ப்புச்சொல்லப் போகிறார் பார்ப்போம்? பிரிவிகவுன்ஸில் வரையில் எவ்வளவு திரவியம் செலவானாலும் தலைக்கொரு விகிதம் வரிவைத்துச் செலவு செய்வோம்; விடுவதில்லை; அந்த நஸாராக்கள் தாம் மஸ்ஜிது கட்டிக்கொடுக்கவேண்டும்; அந்தப் பள்ளிக்காக நாங்கள்ஒரு நாகூர்த் தம்பிடியும் கொடுக்கமாட்டோம்; ஆனால், இவ்வளவு விஷயமும் இங்கிலீஷ் பத்திரிகையில் எழுதமாட்டார்கள்; தங்களுடைய விஷயத்தைத் தாங்கள் சொல்லிக்கொள்வார்களா? அந்தப் பத்திரிகைகளைப் பார்த்துத் தானே நீங்களும் பத்திரிகை எழுதுகிறீர்கள்; அதனால்தான் நாங்கள் ஒரு பத்திரிகையும் வாங்கிப்படிப்பதே கிடையாது. நாம் தெரிந்துகொண்டதுபோல் நேரே லண்டனுக்குப்போகும் மனிதர்கள் மூலமாக விஷயம் தெரிந்து கொள்வதே நன்று; பத்திரிகைக்காரர்களெல்லோரும் பொய்யர்களே; தாங்கள் இனி உண்மையான விஷயத்தை எழுதாமல் வேறு பத்திரிகைகள் சொல்லும் பொய்யான விஷயத்தை எழுதுவீர்களாயின், தயவுசெய்து என்னுடைய பெயரைத் தங்களுடைய சந்தா லிஸ்டிலிருந்து எடுத்து விடுங்கள்.

இங்ஙனம் தங்கள் உண்மையுள்ள
முஸ்லிம் கிராமவாசி.”

இவ்வாறு நம்முடைய நண்பர் ஒருவர் எழுதியிருக்கிறார்; இவருடைய நிலைமையைப் பார்க்கும்போது எமக்கு மிக்க பரிதாபமுண்டாகிறது; இவரைப்போல் இன்னும் அநேகர் நம்மவர்களுள் இருத்தல் கூடும்; இப்படிப்பட்டோர் நாகரிக நிலைமைக்குவந்தால் இஸ்லாம் மார்க்கம் மிக்க உன்னத நிலைமைக்கு வரும்; உலகத்தின் மற்றத் தேசங்களிலுள்ள எல்லா முஸ்லிம்களும் இஸ்லாமார்க்கத்தில் சொன்ன விதிப்படி நடக்கவில்லையென்றும், இந்தியாவில் சென்னைக்குத் தெற்கிலுள்ள இரண்டு மூன்று ஜில்லாக்களிலிருக்கும் முஸ்லிம்கள் மட்டும் இஸ்லாம் மார்க்கத்தின் உண்மையான பாதையில் ஒழுகுகிறார்கள் என்றும் நினைப்பது உத்தமமான அபிப்பிராயமாகாது. ப—ர்.

இஸ்லாம் நேயர்களுக்கோர் அறிவிப்பு.

நேசர்களே!

சென்ற ஆறுமாதகாலமாக உலகத்தில் ஒரு பெரும் பிறழ்ச்சியுண்டாயிருக்கிறது. முன்னுக்கு வரவேண்டுமென்னும்நோக்கம் முஸ்லிம்களுடைய மனத்தில் உதித்திருக்கிறது. எல்லா நாடுகளிலுமுள்ள முஸ்லிம்களும் முன்னோக்கி வர ஆரம்பித்திருக்கின்ற

ணார். துருக்கியிலும் இரண்டொரு வருடங்களுக்குமுன் ஒரு சீர்திருத்தமான பிறழ்ச்சியுண்டாகி அத்தேயத்தார் நாகரிக மடைந்து வருகிறார்கள்; பார்லியமெண்ட்டும் பெற்றிருக்கிறார்கள்; பாரஸீகத்திலும் அவ்வாறே பிறழ்ச்சி யுண்டாகி அத்தேசத்தாரும் பார்லியமெண்ட்டுப் பெற்றுக்கொண்டு சீர்திருத்தமாக இராஜ்யபரிபாலனம் செய்து வருகிறார்கள். அரபியாவிலும் ஹிஜாஸ் இருப்புப்பாதை போடப்பட்டு ஹஜ்ஜுக்குப் போகும் பிரயாணிகள் சௌகரியமடைந்து வருகிறார்கள். ஆப்கான் தேசத்து மகா மாட்சிமைதங்கிய அமீர் அவர்களும் ஹபீபியா என்னும் நாமம் பூண்ட ஒரு சர்வகலாசங்கம் ஏற்படுத்த உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். லண்டன்மாநகரிலும் மிக்க நேர்த்தியான பள்ளியொன்று கட்டப் போகிறார்கள். இந்தியாவிலும் அலிகார் நகரில் முஸ்லிம் சர்வகலாசங்கமொன்று ஏற்படப்போகிறது. இப்பொழுது நமக்கேற்பட்டிருக்கும் ஊக்கத்தைப்பற்றி உலகத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார்கள். அஃதே நமக்குப் போதுமானது. நமது முயற்சியைப்பற்றிப் புகழாதார் உலகத்தில் ஒரு ஜாதியாருமில்லை. ஆதலின், இம்மாதம் வெளிப்படும் இஸ்லாம் நேசன் முழுப்பத்திரிகையிலும் லண்டன் பள்ளிவாயிலைப்பற்றியும், முல்லிம் சர்வுகலாசங்கத்தைப் பற்றியும் எழுதுவதாக எண்ணியிருக்கிறோம். சர்வகலாசங்கம் அதிக அவசியமாதலாலும், அதன் சம்பந்தமான விஷயங்கள் மிகுதியாகக் குவிந்து விட்டபடியாலும் அதை இங்கு எழுதுகிறோம்.

ப-ர்.

முஸ்லிம் சர்வகலா சங்கம்.

“கல்வியில் ஆயுளைக் கழிப்பவன் இறக்கிறதில்லை.”

“இரவாமல் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டும், தன் குடும்பத்துக்கு ஒரு ஜீவனோபாயம் தேடிக்கொள்ளும் பொருட்டும், தன்னுடைய அபலானிடத்தில் அருள்பாராட்டும் பொருட்டும், நியாயமான வழியில் உலகத்தையும் அதன் ஐசுவரியங்களையும் ஆசிக்கிற ஒருவன், 14-ஆம் இரவில் தோன்றும் முழுமதி போன்றபிரகாசம் பொருந்திய முகத்தோடு கடவுளிடத்தில் வருவான்”.——நாயக சிகாமணி யவர்களின் திருவாக்கு.

முஸ்லிம் சர்வகலா சங்கத்தைப்பற்றி எழுதுமுன் சர்வகலாசாலை யென்பது இன்னதென்றும், சர்வகலாசங்கம் இன்னதென்றும் முதலில் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். கலையென்பது கல்வி அல்லது சாஸ்திரமாகும். கலாசாலையென்பது கல்வி கற்குமிடம்; அஃதாவது பள்ளிக்கூடம். இப்பொழுது மெட்றிக்குலேஷன் படிப்புமட்டும் சொல்லிக்கொடுக்கும் ஹைஸ்கூல்களைக் கலாசாலை யென்று சொல்லலாம். அதற்குமேல் எப். ஏ., பீ. ஏ. வகுப்புக்க ளடங்கிய காலேஜ்களுக்குச் சர்வ கலாசாலையென்று பெயர் சொல்லலாம். சர்வ கலாசாலையென்பது எல்லாக் கலைஞானங்களும் கற்றுக்கொடுக்குமிடம் என்பதாகும். எல்லாக் கலைஞான மென்பதனால் தமிழ் நாட்டில் வழங்கும் 64 கலைகளல்ல. ஆங்கில சர்வகலாசாலைகளில் இங்கிலீஷ் பாடம், ஒரு இந்திய பாஷை, கணித சாஸ்திரம், வானசாஸ்திரம், இயற்கை சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், ஜீவ சாஸ்திரம், பூச்சி சாஸ்திரம், தாவர சாஸ்திரம், தாது சாஸ்திரம், தத்துவசாஸ்திரம், தேச சரித்திரம் ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. சர்வே, ஓவர்ஸீயர், இஞ்சினீயர், இவர்களுக்குரிய படிப்பும், வைத்திய சாஸ்திரமும் உடன் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. இவ்வளவு சாஸ்திரங்களும் வேண்டியோருக்கு வேண்டிய விதம் கற்றுக்கொடுக்கப்படும் காலேஜ்களுக்குத்தான் சர்வ கலாசாலையென்று பெயர். இவ்வாறு அநேகம்சர்வ கலாசாலைகளை ஒரே சட்டத்துக்குள் அடக்கி அவற்றில் பயிற்றுவிக்கப்படும் மாணாக்கர்கள் எல்லோரையும் வித்தியாசம் பாராட்டாமல் ஒரே முறையில் பரீக்ஷை செய்யும் ஒரு சங்கத்திற்குச் சர்வகலா சங்கமென்று பெயர். இச்சங்கத்தாருக்குத் தான் மாணாக்கர்களுக்குப் பட்டமளிக்கும் சக்தியுண்டு. இவர்களால் அளிக்கப்படும் பி. ஏ. முதலிய பட்டங்களைக் கவர்ண்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். இச்சங்கத்துக்குக் கவர்ண்மெண்டாருடைய ஆதரிப்புமுண்டு. இதற்கு ஆங்கிலத்தில் யூனிவர்ஸிட்டி யென்று பெயர். இந்தியாவில் கல்கத்தா, சென்னை, பம்பாய், பஞ்சாப், அலகபாத் ஆகிய ஐந்து நகரங்களில் ஐந்து சர்வகலா சங்கங்கள் உண்டு. இவையெல்லாவற்றிற்கும் அரசாட்சியாருடைய ஆதரிப்புண்டு. ஆனால், இங்கிலாந்திலுள்ள யூனிவர்ஸிட்டிகளில் சிலவற்றிற்குக் கவர்ண்மெண்டாருடைய சம்பந்தமில்லை. ஆயினும் அச்சங்கத்தில் பட்டம்பெறும் மாணாக்கர்களைக் கவர்ண்

மெண்ட்டார் அங்கீகரிப்பதுண்டு. இங்கிலாந்திலுள்ள சர்வகலா சங்கங்களிலாயினும், இந்தியாவிலுள்ள ஐந்து சங்கங்களிலாயினும் மத சம்பந்தமான கல்வியே கற்றுக் கொடுப்பதில்லை.

இவ்வாறு மத சம்பந்தமில்லாமல் உலகத்துக்காக வேண்டிய படிப்பைமட்டும் கற்றுக்கொடுப்பதால் பிரயோசனமில்லையென்று நம் முஸ்லிம்கள் கண்டு கொண்டனர். ஆயினும், அநேக மதங்கள் நிரம்பியுள்ள இந்தியாவில் மதப்படிப்பைச் சர்வகலாசங்கத்தில் எதிர்பார்ப்பது அசாத்தியமான காரியமாகும். ஒரு கலாசாலையில் அநேகம் மதத்தினர் கல்வி கற்கும்போது அவர்களுக்கு மதப் படிப்புக் கற்றுக்கொடுப்பதென்றால் அஃதெவ்வாறு முடியும்? ஆதலின் முஸ்லிம்கள் பிரத்தியேகமான சர்வகலா சங்கமொன்று ஏற்படுத்திக்கொள்ள எண்ணங்கொண்டிருக்கிறார்கள். இதில்இதர சர்வகலாசங்கங்களில் கற்றுக்கொடுக்கப்படும் கல்வியோடு இஸ்லாம் மார்க்கசம்பந்தமான ஞானமும் பயிற்றுவிக்கப்படும். இதற்காகத் தான்முஸ்லிம் சர்வகலாசங்கம் ஒன்று அலிகாரில் ஏற்படப்போகிறது. அந்நகரில் அநேகம்வருடங்களுக்கு முன் ஸர் ஸையத்அகமது கான், கே. ஸீ. எஸ். ஐ., எல், எல். டீ. அவர்களால் நிலைநிறுத்தப்பட்ட முகம்மதிய சர்வ கலாசாலையை அஸ்திவாரமாகக் கொண்டு நம் முஸ்லிம் சர்வகலாசங்கம் ஆரம்பிக்கும். அந்தக் கலாசாலை இப்பொழுது அலகபாத் யூனிவர் ஸிட்டியைச் சேர்ந்திருக்கிறது. இனித் தனி யூனிவர் ஸிட்டியாக ஆகிவிடும். சென்றமுறை நாகபுரத்தில் முழு இந்தியா முகம்மதிய கல்விச்சங்கம்(ஆல் இந்தியா மகமடன் எஜுகேஷனல் கான்பரன்ஸ்) கூடியபோது அச்சங்கத்துக்குச் சபா நாயகராய் வீற்றிருந்த உண்மை ஞானியாகிய மிஸ்டர், அப்துல்லா யூஸுப் அலீ, ஐ. ஸீ. எஸ். அவர்கள் பேசிய உபந்யாசத்தில் அலிகார் முஸ்லிம் சர்வகலா சங்கத்தைப்பற்றி விவரித்துப் பேசினார்கள். அப்பொழுது அங்கே பிரசன்னமாயிருந்த மாட்சிமைதங்கிய ஆகாகானவர்கள் அச்சமயத்தை வீண்படுத்தக் கூடாதென்று முஸ்லிம் சர்வகலா சங்கத்தைப்பற்றி முயற்சியெடுப்பதாகத் தீர்மானம் செய்தார்கள்.

அதற்கு முன்னரே முஸ்லிம்களுடைய மனத்தில் தனிச்சர்வகலா சங்கத்தின் எண்ணம் நிறைந்திருந்ததால் உலர்ந்த புல்லில் தீப்பற்றியதுபோல் இம்முயற்சி எங்கும் பரவி, வெற்றி பெற்றுவருகிறது. சென்ற அநேக நூற்றாண்டுகளாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள விரோதமானது இப்பொழுது தணிந்து எல்லா இந்தியர்களும் முஸ்லிம் சர்வகலா சங்கத்தைப்பற்றி ஆமோதித்துப் பேசுகிறார்கள்.

இந்த ஏற்பாட்டில் தலையிட்டுக் கொண்டிருக்கும் பெரியோர்கள், எல்லா ஜனங்களுக்கும் தெரியும்படி தங்களுடைய நோக்கம் இன்னதென்று தெரிவிக்கவில்லை என்று சில அறியாதவர்கள் பிதற்றிக்கொண்டிருக்கிறார்கள். பிறகு செய்யப்படவேண்டியவை இன்ன இன்னவையென்று தெளிவாக இப்பொழுதே சொல்லப்படவேண்டுமென்பது அவர்கள் விருப்பம். “பிறகுதான் பணம் வசூலிக்கவேண்டும்; முதன் முதல் இம்முயற்சியை அனுஷ்டித்துப் பார்த்து இது வெற்றிதருவதாயின் பிறகு வேறு காரியங்கள் செய்து கொள்ளலாம்” என்று அவர்கள் சொல்லுகிறார்கள். “இந்தியாவில் இப்போதுள்ள விஷயங்களைக்கவனிக்கும்போது தனிமையான ஒரு சர்வகலா சங்கம் வேண்டுவதுஏன்அவசியம் என்று தெரிவிக்கவேண்டும்”என்றும், “இப்போதுள்ளகல்வியொழுக்கம் முஸ்லிம்களின் கொள்கைகளுக்கு எவ்வாறு இடையூறு செய்கிறது”என்றும் அவர்கள் வாதுசெய்கிறார்கள். இவ்வாறு குறைகூறுவோர்கள் இப்பொழுது முஸ்லிம்களுக்குள்ள ஒற்றுமையைப்பார்த்தே அது நமக்கு அவசியமானதென்று தெரிந்துகொள்ளுதல் கூடாதா? நவாபுகளும், அரசர்களும் ஷியா சுன்னி முதலிய வர்க்கத்தாரும் ஆகிய எல்லோரும் இச்சர்வகலா சங்கத்துக்காக மிகுதியான நன்கொடை அளித்திருப்பதை நோக்கும்போதேஅது முஸ்லிம்களுக்கு இவ்வளவு அவசியம் என்பது தானே விளங்கும்; முஸ்லிம்களுக்கு எப்போதுமுள்ள வழக்கம்போல் அவர்கள் இவ்விஷயத்திலும் மிக்க உதார குணமுள்ளவரா யிருக்கிறார்கள். இன்னும் மகா மாட்சிமை பொருந்திய மகாராஜா அவர்களுடைய உத்தரவுகிடைக்கவில்லை; சர்வகலா சங்கத்தின் சட்டதிட்டங்களும் இதுவரையில் ஏற்படவில்லை. ஆனால், ஒருவகைநம்பிக்கையோடு நம்மவர் உழைத்துவருகிறார்கள். உள்ளே பிரவேசிக்குமுன் உறுதியான சட்டதிட்டங்கள் வேண்டுவதில்லை. முஸ்லிம்கள் மற்றெல்லாச் சாதியாரைக்காட்டிலும் கல்வியில் பின்னிடைந்தவர்கள் என்னும் வசனத்தைக்கேட்டுக் கேட்டு நம்முடைய மனம் மிகவருந்தி இப்பொழுது இனியில்லா ஊக்கத்தோடு உழைத்துவருகிறது. கல்வியினால் மட்டும் நமது முன்னோர்கள் அடைந்திருந்த உ

ன்னத நிலைமைக்கு நாம் போகக்கூடும் என்று தெரிந்துகொண்டோம். இப்பொழுது இக்காலத்துக்குரிய கல்வி முறையை அனுசரிப்பதே உசிதமாகும். இதற்கு அறிகுறியாகத்தான் முதன் முதல் அலிகார் கலாசாலை ஏற்பட்டது· அக்கலாசாலையை ஏற்படுத்திய மகானவர்களாலும், அவர்களுக்குப் பின்வந்த ஸ்ரீமாந் முகசினுல் முல்க் அவர்களாலும் நெடுங்காலமாகக் கருதப்பட்டு வந்த எண்ணம் இப்போது நிறைவேறி வருகிறது. ஆதலின், சர்வகலா சங்கத்தைப்பற்றிய ஏற்பாடு நேற்றைக்குண்டான புதிய ஏற்பாடன்று. நெடுநாளாக அதைப்பற்றி எண்ணிக்கொண்டு வந்த முஸ்லிம்கள் தங்கள் உயிரைக் கொடுத்தாயினும் அதை நிலைநிறுத்த யத்தனிக்கிறார்கள். இவ்வாறு நாம் செய்வது நமக்கும் இந்துக்களுக்குமுள்ள ஒற்றுமையைக் கெடுத்து இருவகுப்பாரையும் மிகுதியாக வேறுபடுத்தி விடுமென்று சிலர் தெரியாமல் சொல்லுகிறார்கள். ஆனால், இந்தியாவிலுள்ள எல்லா முஸ்லிம்களின் கல்வியையும் ஒருவகைப்படுத்தும் பொருட்டு எடுத்துக்கொண்ட ஏற்பாடாகும் இது.

இவர்கள் சொல்லுவதுபோல் இது முஸ்லிம் இந்துக்களுடைய ஒற்றுமையைக் கெடுக்காமல் மிக்க நன்மையையே விளைவிக்கும். இங்கிலாந்திலிருப்பதுபோல் இந்தியாவில் யூனிவர்ஸிட்டிகள் இல்லாமையால் மிக்க நன்மை உண்டாகிறதில்லை என்று இங்கிலீஷ் பத்திரிகைகள் கூறுகின்றன. மாணாக்கர்களுக்கு நற்குணத்தைப் பயிற்றுவித்து அவர்களுக்கு உண்மையான ஞானத்தை விளக்காமல் இப்போதுள்ள சர்வகலா சங்கங்கள் வெறும் பரீக்ஷை சங்கங்களாகவே யிருக்கின்றன. அவற்றைச் சேர்ந்த கலாசாலைகளில் வாசிக்கும் மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பகல் காலத்திலல்லாமல் இராக்காலத்தில் 'தொடர்புண்டாவதில்லை; கல்விப் பரீக்ஷகர்கள், இராக்காலத்திலும் ஆசிரியர்கள் மாணாக்கர்களைக் கவனிக்கவேண்டியது அவசியமென்று தெரிவித்தபோதிலும் சர்வகலா சங்கத்தார் அதைக் கட்டாயப்படுத்த முடியவில்லை.

பெரிய சர்வகலா சங்கங்களின் சரித்திரங்களைப் பார்த்தால் அவற்றிலெல்லாம் மாணாக்கர்கள் பள்ளிக்கூடத்திலேயே இராக்காலத்திலும் வசித்துவந்தார்களென்று நாம் அறிகிறோம். முஸ்லிம் அரபிக் கலாசாலைகளிலும் இதுதான் வழக்கமாயிருந்து வருகிறது. அதனால் மிக்க பயனுண்டென்பது எல்லோருக்கும் தெரியும். சர்வகலா சங்கத்தாரும், ஆசிரியர்களும், மாணாக்கர்களும் சதாகாலமும் உடன் வசிப்பதால் மேலோர்களுடைய பழக்கவழக்கங்கள் சிறியோர்களிடத்தில் பரவிச்செல்லும். நிஷாப்பூர், கார்டோவா, கைரோ இம்மூன்று நகரங்களிலும் பழபகாலத்திலிருந்த அரபி மதுரஸாக்களில் இவ்வகை வழக்கமிருந்து நன்றாக வேலைசெய்திருக்கிறது. நம் நாட்டிலும் வேலூர், வாணியம்பாடி, பிரம்பூர் முதலிய ஊர்களிலுள்ள அரபி மதுரஸாக்களிலும் மாணாக்கர்கள் இரவும் பகலும் ஆசிரியர்களின் பராமரிப்பின்கீழ் இருப்பதால் மிக்க நன்மையுண்டாகிறதென்பது திண்ணம். இங்கிலாந்துச் சர்வகலா சங்கங்களிலெல்லாம் இவ்வழக்கம் அனுசரிக்கப்படுகிறது. அலிகார் கலாசாலையில் இவ்வழக்கத்தாலுண்டான பிரயோசனம் அனந்தம். இதனால் அநேகம் அலிகார் மாணாக்கர்கள் பெரிய ஞானவான்களாகவும் கௌரவம் வாய்ந்த கிரந்தகர்த்தர்களாகவும், இராஜ்ய பாரம் தாங்கத்தக்க யூகிகளாகவும் வெளிவந்திருக்கிறார்கள். ஆனால், இவ்வழக்கத்துக்குப் பணச்செலவு அதிகமாகும். இவ்வளவு தொகையும் மாணாக்கர்களிடமிருந்து எதிர்பார்ப்பது முடியாது. அதற்கு வேறு ஏற்பாடுகள் செயயப்படும். இப்பொழுதுள்ள கலாசாலைகளில் முஸ்லிம்களுக்கு அரைச்சம்பளம் இருந்தும் நம்மில் அநேகருக்கு அது பெருந்தொகையாகக் கனக்கிறது. இப்போதுள்ள படிப்பு விஷயங்களும் அடிக்கடி மாற்றப்படுகின்றன. இதில் பரியாலோசனை செய்யப்படாமலும், அவசரமாகவும், அவசியமில்லாமலும் புதுமாறுதல்கள் உணடாகின்றன. இன்னும் முஸ்லிம் மாணாக்கர்கள் மேல்தேசத்தாருடைய சாஸ்திரங்களைக் கற்பதால் அவர்களுடைய இளமனம் நிலைகெட்டு ஒருபக்கம் சாய்ந்து அவர்களை நிரீசுர வாதிகளாகவும், தாந்தோன்றிகளாகவும், மாற்றிவிடுகிறது.

ஆகவே, மாணாக்கர்களைப் படிப்பிக்கும்போது மதசம்பந்தமான ஞானமும் உடன் சொல்லிக்கொடுக்கப்படவேண்டிய அவசியமாகிறது. அவ்வகை ஞானமிருந்தால் முஸ்லிம் சிறுவர்கள் தங்களுடைய கொள்கைகளைவிட்டு விடாயலும், மதத்திற்குமாறான துறைகளில் இறங்காமலும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

ஒரு சர்வகலா சங்கத்தில் படித்து வெளிவரும் மாணாக்கர்களுக்குள் எவ்வகை ஒற்றுமையும் காணப்படுவதில்லை. தமக்குள் ஒருவரோடொருவர் நட்புப் பாராட்டுவதில்லை· பரீக்ஷை முடிந்துவிட்டால் மாணாக்கர்களுக்கும், சர்வகலா சங்கத்தாருக்கும் எவ்வகைச் சம்பந்தமும் உண்டாவதில்லை. பள்ளிக்கூடத்தை விட்டு வெளிவந்தால் ஆசிரியர்கள் மாணாக்கர்கள்மேல் ஒருவகை அதிகாரமும் செலுத்துதல் முடியாது. பெரிய பட்டணங்களில் வசிக்கும் மாணாக்கர்களை ஆசிரியர்கள் கண்டிக்கமுடியாமல் போவதால் அவர்கள் ஒழுங்கீனமான துறைகளில் இறங்கி விடுகிறார்கள். சிறுவர்களுடைய குணாதிசயங்களைத் திருத்துவதற்குரிய அதிகாரம் ஆசிரியர்களுக்குக் கிடையாது உபாத்தியாயர்களுக்கும், மாணாக்கர்களுக்கும் உள்ள ஒற்றுமையெல்லாம் பள்ளிக்கூட அறைகளுக்குள்ளேதான்.

இப்பொழுது ஏற்படப்போகும் முஸ்லிம் சர்வகலா சங்கத்தில் அனுசரிக்கப்படவேண்டிய விதிகளைப்பற்றியும், அங்கே சொல்லிக் கொடுக்கவேண்டியபாடங்களைப்பற்றியும் ரைட் ஆனரபிள், மிஸ்டர் ஸையது அமீர் அலி யவர்கள் கீழ்வருமாறு தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார்கள்:

“......இப்பொழுது அவசியமாகக் காணப்படும் இந்த முஸ்லிம் சர்வகலா சங்கத்துக்குக் கௌரவம் ஏற்பட வேண்டுமாயின் அஃது அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்படவேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாவிடின் அச்சங்கத்தால் என்ன என்ன நன்மைகள் விளையுமென்று எதிர் பார்க்கிறோமோ அவை யனைத்தும் உண்டாகா. அவர்களுடைய ஆதரிப்புக் கிடைப்பதாக நாம் எண்ணிக்கொள்வோம். பிறகு, அச்சங்கத்தில் உழைக்கும் மகான்கள் இந்திய மாணாக்கர்களை மேல்நாட்டுச் சாஸ்திர ஞானங்களைக் கற்கும்படி தூண்டவேண்டும். இவர்கள் அச்சாஸ்திரங்களின் உண்மை ஞானத்தைப் பெறவேண்டும். இவ்விஷயம் அச்சங்கத்தாருக்கு அருத்தம் விளங்காமல் மயக்கத்தை உண்டுபண்ணக் கூடும். இதன் கீழ் நான் என் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்போது அச்சந்தேகம் தெளிந்துவிடும்; நாகரிகத்தில் விருத்தியடைந்திருக்கும் இதர ஜாதியாரோடு கலந்து அவர்களுக்குப் பின்னிடையாமல் இகலோக வாழ்க்கையில் நன்றாகப் பிரயாசைப்பட்டு வெற்றிபெறுதற்குவேண்டிய வழிகளைத் தெரிவிக்கும்படியான கல்வியை நாம் முஸ்லிம் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும்; ஆனால், அவர்களுக்கு மதப்படிப்பில் அதி ருசியை யுண்டாக்கக் கூடாதென்றும், அவர்களுடைய முயற்சியைச் சன்மார்க்கத்திற் செலுத்திப் புராதன ஞானங்களைக் கற்பிக்கக் கூடாதென்றும், நான் சொல்லவில்லை; மதப்படிப்போடு அவர்களுடைய கல்வி முக்கியமாக இக்காலத்துக்குரியதா யிருக்கவேண்டும். இதற்காக நான் சர்வகலா சங்கத்தின்படிப்பை மூன்று பாகமாகப் பிரித்துக் கொள்வேன்; அவையாவன:

(a) புராதனபாகம்.

(b) நவீனபாகம்.

(c) சாஸ்திரமும் கைத்தொழிலும் சம்பந்தமான பாகம்.

(a) புராதன பாகத்தை நான் இரு பிரிவாகப் பிரிப்பேன்; அவை:

1. புராதன பாஷைகள்.

2. இஸ்லாம்மார்க்கசம்பந்தமான கல்வியும், முகம்மதிய ஞானானுஷ்டானமும்.

1. பாஷை சம்பந்தமான பிரிவில் மாணாக்கர்கள் தம் தமக்கு இஷ்டமான புராதன பாஷைகளுள் ஒன்றைப் படிக்கவேண்டுமென்று நான் சொல்லுவேன். உதாரணமாக, முஸ்லிம்கள் அரபி பாஷையும், இந்துக்கள் சமஸ்கிருத பாஷையும், ஐரோப்பியர்கள் லத்தீன் கிரீக் பாஷைகளும் படிக்கலாம். இவ்வகுப்பில் சேருவோர் அவ்வப்பாஷைக்குரிய இலக்கியம், சரித்திரம், காவியம், வசனம், தர்க்க சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம் முதலியவற்றைப் படிக்கவேண்டும்.

2. மார்க்க சம்பந்தமான பிரிவில் சேருவோர் முஸ்லிம் ஞானானுஷ்டானத்திற்குரிய நூல்களைப் படிக்கவேண்டும்; மார்க்கக் கல்வியோடு பிக்ஹும் பயிற்றுவிக்கவேண்டும். இவர்களுக்குக் குறைந்தபக்ஷம் சாமானியமான ஆங்கிலப்பயிற்சி இருக்கவேண்டும் என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். மதத்தைப் பற்றி மட்டும் படிப்போர் மெட்ரிகுலேஷனுக்குரிய இங்கிலீஷ் படி

ப்புமட்டுமாவது கற்றுக்கொள்ள வேண்டும். முதல் பிரிவில் சேர்ந்து பாஷையைமட்டும் படிப்போருக்கும் இவ்வளவு இங்கிலீஷ் ஞானம் வேண்டும். ஆனால், இதைப்பற்றிப் பின்னர் ஆலோசனை புரிவதற்காக ஏற்படும் சங்கத்தார் நன்றாகக் கவனித்துக் கொள்வார்களாக.

(b) நவீன பாகத்துக்குரிய கல்வியில் இக்காலத்தில் வேறு சர்வகலா சங்கங்களில் கற்றுக்கொடுக்கப்படும் விதத்துக்குத்தக்கபடியே கீழ்வரும் பாடங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது என் அபிப்பிராயம்:

1. இங்கிலீஷ் இலக்கியச் சரித்திரமும், பாஷை சரித்திரமும்.

2. இங்கிலாந்து, இந்தியா, மேல்ஆசியா, கிரீஸ், உரோம் இத்தேசங்களுக்குரிய சரித்திரங்கள். மேல்ஆசியாவின் சரித்திரத்தில் மத்திய காலத்துக்கு உரியபாகம் போதும். கிரீஸ், உரோம்தேசங்களின் சரித்திரங்கள் அவ்வளவு அவசியமில்லை.

3. சாதாரணமாகப் போதுமான வரையில் வேண்டிய கணக்குக்கள்.

4. தர்க்க சாஸ்திரமும், தத்துவ சாஸ்திரமும். இவற்றை இங்கிலீஷ் பாஷையில் கற்றுக் கொடுக்கவேண்டுமென்பதே என் நோக்கம்.

5. பார்ஸி பாஷையும், உருது பாஷையும் அவசியமான பாஷைகள்; இந்துக்கள் வேறு பாஷைகளையெடுத்துக் கொள்ளலாம். கீழ்வரும் பாஷைகளில் ஒன்றை வேண்டுவோர் எடுத்துக் கொள்ளலாம்.

௧. இலேசான அரபி பாஷை.
௨. துருக்கி பாஷை.
௩. பிரஞ்சு பாஷை.
௪. ஜர்மன் பாஷை.
௫. இத்தாலிய பாஷை.

அரபி பாஷையை எல்லோருக்கும் அவசியமான பாஷையாக ஏற்படுத்த வேண்டுமாயின் அதன் ஆரம்பமான சிறிது படிப்பைமட்டும் சொல்லிக் கொடுக்கவேண்டும்; அரபியை எல்லோருக்கும் அவசியமான பாஷையாக ஏற்படுத்தவேண்டுமென்பது எனக்கு அபிப்பிராயம் இல்லை; இதுவரையில் முகம்மதியர்களுடைய கல்வியெல்லாம் அனுபவத்துக்கு ஒத்துவராதவண்ணமே யிருந்திருக்கிறது. இன்னவிதம் படிப்பதுதான் முறை என்று ஒருகடுமையான வழியை அனுசரித்து வருகிறார்கள். அப்படிப்பால் என்ன பிரயோசனமென்பதை அவர்கள் ஆலோசிப்பதில்லை. வேறு ஜாதியாரோடு ஒத்து நடக்கமுடியாமல் முஸ்லிம்கள் இவ்வளவு பின்னிட்டிருப்பதெல்லாம் அவர்களுடைய அனுபவத்துக்குதவாத படிப்பாலேயே விளைந்திருக்கிறது. ஒரு முஸ்லிம் வாலிபனை அவன் ஆயுள் முழுதையுமாவது அல்லது ஆயுளின் பெரும்பாகத்தையாவது அரபி பாஷைபோன்ற மகா கடினமான பாஷையைக் கற்கும்படி தூண்டுவதால் அவனுடைய பாலிய முயற்சி தடைப்பட்டு மந்தமடைகிறது. இருவகைக் கருத்தை உட்கொண்டு இப்படிப்பட்ட படிப்பைக் கற்றுக்கொடுக்கிறார்கள். 1. முஸ்லிம்கள் தங்கள் மதத்தை அறிய வேண்டும் என்பது. 2. நாமெல்லாம் நல்ல முஸ்லிம்கள் என்று எண்ணப்படவேண்டுமென்பது. இவற்றுள் இரண்டாவது கருத்தைப்பற்றி நாம் இங்கே விரிக்கவேண்டாம். ஆனால், மதப்படிப்பைப்பற்றி நான் பிறகு எழுதுகிறேன்; அவர்களுடைய நோக்கம் எதுவாயிருந்தாலும் அவர்கள் அனுசரிக்கும் முறையால் உலக ஞானத்துக்கும், வேறு விஷயத்துக்கும் எவ்வளவு கேடு உண்டாகும் என்பதை முஸ்லிம் சிறுவர்களின் தகப்பன்மார்கள் கருதுவதில்லை. தகப்பன்மாரால் உண்டாகும் குற்றங்களை நம்முடைய ஜாதியாருக்கே உரிய குற்றமென்று அறியாமல் சொல்லுகிறோம். நம்மைச்சுற்றி இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் கஷ்டமான உலக வாழ்க்கையில் ஒன்றும் செய்ய வழியறியாமல் இம்முஸ்லிம்கள் நொண்டியடித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் வசிக்கும் இவ்வுலகத்தில் முயற்சிச் சுருக்கம், வேண்டாமென்று சும்மா இருத்தல், சோம்பல், மனத்தடுமாற்றம், முதலியவைகள் நம்முடைய முக்கிய குறியல்ல; ஆனால், 'அசையாமலிருந்தவன் மரணந்தானடையவேண்டும்' என்று சொல்லும்படியான சுறுசுறுப்பும், ஆசார சீர்திருத்தமும் மலிந்துள்ள உலகத்தில் நாம் இப்பொழுது வசிக்கிறோம். பழைய காலத்திலிருந்த கொள்கைகளையும், வழக்கங்களையும் கைவிடாமல் அவற்றை [illegible]

கப் பற்றிக்கொண்டு மறுபடியும் அவற்றுள்ளேயே நுழைந்து கொண்டிருக்கும் ஜாதியார் சீக்கிரத்தில் அழிந்துபோவார்கள்; அரபி பாஷையே படிக்கக்கூடாதென்று நாம் சொல்லவில்லை. அதைப் பரிசுத்தமான ஒரு புராதன பாஷையென்று மதித்து அதற்கேற்றவாறு பயிலவேண்டும்; சிறுவர்கள் பள்ளிக்கூடப் பயிற்சியை ஆரம்பிக்கும்போதே இந்த இடையூற்றை அவர்களுக்கெதிரில் காட்டுதல் கூடாது. மற்றப் பாஷைகளைப் பற்றியும், முக்கியமாகத் துருக்கி பாஷையைப் பற்றியும் கவனிக்கும்போது அவற்றால் மிக்க பிரயோசனம் உண்டென்று தெரிகிறது.

(c) சாஸ்திரமும் கைத்தொழிலும் சம்பந்தமாக உள்ள பாகத்தை நான் இருபிரிவாகப் பிரிப்பேன்; இப்பொழுது இந்தியாவின் நிலைமையைக் கவனிக்கும்போது சாஸ்திரக் கல்வியெல்லாம் இங்கிலீஷ் பாஷையிலேயே கற்றுக்கொடுக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. துருக்கி தேசத்தில் சமீப காலத்திற்குள் ஜெர்மானியம், பிரஞ்சு, இங்கிலீஷ் பாஷைகளிலிருந்து சாஸ்திர சம்பந்தமான கிரந்தங்கள் துருக்கி பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறிருந்தும் சாஸ்திரங்களின் உன்னத பாகங்களைக் கற்றுக்கொள்ள விரும்புவோர் ஜெர்மானியம் பிரஞ்சு பாஷைகளிலேயே கற்றுக்கொள்ளுகிறார்கள்; அல்லது மாணாக்கர்கள் ஞானம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆஸ்திரியா, பிரான்சு, இங்கிலாந்து முதலிய தேசங்களுக்குச் செல்லுகிறார்கள். பாரஸீகம், ஈஜிப்ட்டு தேசத்தோரும் இப்படியே செய்கிறார்கள்.

இலேசான கைத்தொழில் கற்றுக்கொள்ளும் மாணாக்கர்களுக்கு இலேசான சாஸ்திரப் பழக்கம் போதும். அவர்களுக்கு உருது பாஷையில் கற்றுக்கொடுக்கலாம். ஆனால், சாஸ்திரத்தின் ஆழ்ந்த பாகங்களைத் தெரிவிக்கும்போது ஆங்கிலமே உசிதமான பாஷை. கைத்தொழில் கல்வியில் இருபிரிவுகள் ஏற்படவேண்டும்; இவற்றில் மேல்வகுப்பைச் சேர்ந்தோர் ரூர்க்கி, ஷீர்ப்பூர் நகரங்களிலுள்ள காலேஜ்களில் கற்றுக்கொடுக்கும் கல்விபோல் கற்றுக்கொள்ளவேண்டும். கீழ்வகுப்பைச் சேர்ந்தோர் இங்கிலாந்தில் கைத்தொழில் விருத்தி சங்கங்களில் மாணாக்கர்கள் கற்றுக்கொடுக்கப்படுவதுபோல் கற்றுக்கொடுக்கப்படவேண்டும்.

மத விஷயத்தைப்பற்றி நான் முன்பு சொல்லாமல் அதன் அவசியத்தைக் குறித்து இது வரையில் எழுதாமல் நிறுத்திவைத்திருந்தேன் அதைப்பற்றி நான் இப்போது எழுதுகிறேன்; இவ்வகைக் கல்விக்கு மிக்க ஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளவேண்டுமென்பது என்னுடைய முக்கியமான அபிப்பிராயம். நீண்டகாலக் கல்வியாலும், அனுபவத்தாலும் எனக்குண்டாகி யிருக்கும் அபிப்பிராயத்தை வைத்துப் பார்க்கும்போது, முஸ்லிம்களுக்கு இதுவரையில் பயிற்றுவிக்கப்படும் மதசம்பந்தமான படிப்பில் நல்லொழுக்கத்துக்கும், மேதை மரியாதைகளுக்கும் உரிய வழிகள் அதிக நன்றாகக்கற்றுக் கொடுக்கப்படுவதில்லை எனத் தெரிகிறது. அவர்கள் கற்றுக்கொள்ளும் மரியாதைகள் அனுஷ்டானத்தில் வருவதில்லை. உலகமுழுதும் உள்ள முஸ்லிம்கள் இக்காலத்தில் அடைந்திருக்கும் இந்தத் தாழ்மையான நிலைமைக்குக் காரணம் இதுதான் என்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. குணத்தைத் திருத்துவதற்குமுன் செய்கையைக் கற்றுக் கொடுப்பதைப் பார்த்தால், மனத்தின் தூய்மையைக் காட்டிலும் குருட்டு அனுஷ்டானமே சிறந்ததென்று முஸ்லிம்கள் நினைக்கிறார்கள் எனத் தோன்றுகிறது. ஒருவனுடைய குணவொழுக்கம் மிகத் தாழ்ந்த நிலையிலிருந்தாலும், எல்லாராலும் அவமதிக்கத்தக்க விதம் அவனுடைய எண்ணம் பாவத்தொழில் செய்துவந்தாலும், அவன் எல்லா வெளித்தோற்றத்துக்கும் நல்லவன்போல நடித்துத் தினம் ஐந்துவேளையும் தொழுதுகொண்டு ரம்லான் மாதத்தில் முப்பது நோன்பும் வைத்தாவது வைப்பதுபோல் நடித்தாவது நடந்து வருவானாயின் அவனை நல்ல முஸ்லிமென்று சொல்வார்கள். இஸ்லாம் மார்க்கம் மனத்தைத் தூய்மைப்படுத்தி நல்லொழுக்கத்தை நிலைநிறுத்துமென்பதை எவ்வளவுகாலம் வரையில் முஸ்லிம்கள் தெரிந்துகொள்ளாம லிருப்பார்களோ அதுவரையில் அவர்களுக்கு இங்கே உன்னத பதவி கிடைக்காது. தங்களுடைய பழக்கவழக்கங்களையும் சீர்திருத்திக் கொள்ளமாட்டார்கள். நாகரிக நிலையிலிருந்து தாழ்ந்துகொண்டே போவார்கள். இஸ்லாம் மார்க்கம் அனுஷ்டானத்துக்கு மட்டும் உரியதன்றே; மனிதர்களுடைய நிலைமையையும் உன்னதப்படுத்துதற்கு ஏற்பட்ட மார்க்கமாகும். இப்பொழுது முஸ்லிம் சர்வகலா சங்கம் ஏற்படுத்தப்பட்டால் மாணாக்கர்களுக்கு மதப்பிரசங்கம் செய்யுமுன் அ

வர்களுடைய குணத்தையும் பழக்கவழக்கங்களையும் உயர்த்துவதற்குரிய சன்மார்க்க போதகங்களையே கற்றுக்கொடுக்கவேண்டுமென்பது என்னுடைய மனதார்ந்த அபிப்பிராயம். இறுதியில் நோக்கும்போது இஸ்லாம் மார்க்கத்துக்குரிய சன்மார்க்க போதகங்களுக்கும் இதரர்களுடைய சன்மார்க்கங்களுக்கும் வேறுபாடு மிகுதியாயில்லை. இப்படிப்பட்ட சன்மார்க்க போதனையை இந்துக்களும் கிரிஸ்தவர்களும் விரும்புவார்களென்பதில் எனக்கு ஐயமில்லை. இஸ்லாம் மார்க்க சம்பந்தமான சன்மார்க்க கிரந்தங்கள் அநேகமுண்டு. புராதன பாகத்துக்குரிய வகுப்பைச்சேர்ந்த மாணாக்கர்களுக்கு அரபி பாஷையில் ஆயிரக்கணக்கான கிரந்தங்கள் உண்டு. அவற்றையெல்லாம் இங்கே குறிப்பது முடியாது. ஷியா ஸுன்னி வர்க்கத்தார்களுக்குரிய சிறந்த கிரந்தங்களிலிருந்து வேண்டுவனவற்றைப் பொறுக்கிக் கொள்ளலாம். நவின பாகத்துக்குரிய வகுப்பைச் சேர்ந்தோர் பார்ஸி பாஷையில் (அக்லாக்) (اخلاق) மேதை மரியாதைகளுக்குரிய கிரந்தங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும்; பார்ஸி பாஷையில் இல்லாத கிரந்தங்களை அரபி பாஷையிலிருந்து மொழிபெயர்த்துக் கொள்ளவேண்டும்; கூடுமாயின் நல்லொழுக்கத்துக்குரிய பரிசுத்தமான கிரந்தங்களை ஒரு தொகுதியாகச் சேர்க்கவேண்டும்; வெறும் உதடுகளை மாத்திரம் பழக்குவதை விட்டு மனிதர்களுடைய மனத்தையும் எண்ணத்தையும் திருத்துவதே அத்தியாவசியமென்று நான் சொல்லுவேன்; மாணாக்கர்களுக்கு 'வணக்கத்தை மட்டும் கற்றுக்கொடுப்பதோடு அவ்வணக்கத்தின் தாத்பரியம் இன்னதென்றும், வணக்கத்துக்காக ஏற்பட்ட கட்டளையின் காரணமின்னதென்றும் கற்றுக்கொடுக்கவேண்டும். நோன்பு வைப்பதோடு நோன்பின் தாத்பரியம் இன்னதென்றும், நோன்பு வைக்கவேண்டிய காரணமின்னதென்றும் கற்றுக்கொள்ளவேண்டும். உண்மையில் முஸ்லிம் சர்வகலா சங்கத்தில் இனிப்படிக்கும் மாணாக்கர்களை அனுஷ்டானமட்டும் செய்யும் போலி முஸ்லிம்களாக ஆக்கிவிடாமல் உண்மையான பக்தி முஸ்லிம்களாக ஆக்கவேண்டும்.

காலேஜுக்குப்போகும் மாணாக்கர்களைக் கலாசாலையிலேயே இரண்டொரு வேளைகளுக்குரிய தொழுகைகளைத் தொழும்படி கட்டாயப்படுத்தவேண்டும்; காலேஜில் தொழவேண்டுமென்பது காலேஜு சட்டதிட்டங்களில் ஒன்றாகவேண்டும். இவ்வாறு கலாசாலையில் தொழுது முடிந்தவுடன் சன்மார்க்க சம்பந்தமான பிரசங்கம் சிறிது செய்யப்படவேண்டும்.

நோன்பு வைக்கவேண்டியது அவசியமான காரியமாகக் கலாசாலை ஒழுங்குகளில் ஒன்றாயிருக்கவேண்டியதில்லை. ஏனெனின், நோன்பு வைப்பதெல்லாம் சிறுவர்களுடைய தேக நிலைமையைப் பொறுத்திருக்கிறது. ஆனால், ரம்லான் மாதங்களில் சன்மார்க்க உபதேசங்களும், உண்மையான உயர்ந்த உயிர்வாழ்க்கை இன்னது என்ற பிரசங்கமும் நடைபெறவேண்டும்; பிறருக்காகத் தன் வாழ்நாளைச் செலவிடுதல், சுயநயம் பாராட்டாமை, மனம் வாக்குக் காயங்களை அடக்குதல், லோகோபகாரம், அன்னியரை ஆதரித்தல், முதலிய விஷயங்களை நம்முடைய நாயக சிகாமணியவர்கள் உபதேசித்த முறைப்படி உபதேசிக்கவேண்டும். இத்தகைய ஞான உபதேசங்களில் எவ்வகை மதத்தினரும் வித்தியாசம் பாராட்டாமல் பயின்றுவரலாம்.

இதுவரையில் ஹைஸ்கூல்களுக்குரிய படிப்பு முறையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை; ஆனால், கலாசாலைப் படிப்புக்குத் தக்க விதம் கீழ் வகுப்புப் படிப்புகளிருக்கவேண்டும்; ஆயினும் யூனிவர்ஸிட்டி ஏற்படுத்தும் மகான்கள் ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் கவனிக்கவேண்டும். அஃதாவது:—தனிகர்களாயினும் ஏழைகளாயினும் சர்வகலாசங்கத்தில் சேர்ந்துபடிக்கும் மாணாக்கர்களுடைய தாய் தந்தைமார்கள் எவ்வகைச் சந்தேகமுமின்றித் தங்கள் குழந்தைகளைப் பத்துவயதில் கலாசாலையிலேயே இரவும் பகலும் தங்கி வசிக்கும்படி விட்டு விடுதற்குவேண்டிய நம்பிக்கை அவர்களுக்குண்டாகும்படி சர்வகலாசங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டும்; இவ்வாறு முஸ்லிம் சிறுவர்கள் பள்ளிக்கூடங்களிலேயே இரவும் பகலும் தங்கி வசிப்பதாயின் அவர்களைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு இங்கிலீஷ் பெண்மணிகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். பத்துவயதுக் குழந்தைகளுக்குப் பெண்பாலாருடைய மேற்பார்வை இருப்பது அவசியம். முஸ்லிம் மாதுகள் இவ்வேலைக்கு அகப்படமாட்டாராதலால் ஆங்கில மாதுகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறேன்.

முகம்மதிய கல்வி சம்பந்தமாக நான் இதுவரையில் தெரிந்துகொண்டவற்றுள் முக்கியமானவற்றைச் சர்வகலா சங்கத்தாருக்குத் தெரிவிக்கிறேன். அதிக துரிதமாகவும், ஆராய்ச்சி செய்யாமலும் மேல் நோக்கான சிலவற்றை மட்டும் தெரிவித்தேன்; என் அபிப்பிராயத்தைப்பற்றி யூனிவர்ஸிட்டிக் கமிட்டியார் எத்தகைய எண்ணம் கொள்ளினும் கொள்ளுக. ஆயினும், என்னாலியன்றமட்டும் இப்பெரிய காரியத்தில் என்னுடைய மனதார்ந்த உதவியையும் அனுதாபத்தையும் நான் காட்டுகிறேன்.

அமீர் அலி, சி. ஐ. ஈ.”

மெஸ்மரிஸத்தின் மகிமை.

விஷத்துக்கு ஒரு விநோதச் சிகிச்சை.

சென்ற பிப்ரவரி மாத சஞ்சிகையில் ஹிப்னாடிஸம் என்னும் மந்திரத்தைப்பற்றிக் கு’ஆக்கன் போஸ் என்பவரால் ஒருவியாசம் எழுதப்பட்டிருந்ததை நம் நேசர்கள் பார்த்திருப்பார்கள். அதில் சொல்லியிருக்கிறபடி இந்தச் சாஸ்திரத்தால் மிக்க நன்மைகள் உண்டாகும். மெஸ்மரிஸம் என்பதும் ஹிப்னாடிஸம் என்பதும் ஒரே மந்திர சாஸ்திரந்தான். அதனாலுண்டாகும் பயன்களை மூன்றுவகையாகப் பிரிக்கலாம்: 1. விநோதப் பொழுது போக்குக்காக அநேகம் வேடிக்கைகள் செய்யலாம். 2. மனிதர்களுடைய தீய குணங்களை மாற்றி அவர்களை நற்குணமுள்ளவர்களாக ஆக்கலாம். 3. வைத்தியர்களால் கைவிடப்பட்ட வியாதிகளையும் மெஸ்மரிஸத்தால் அதிக சீக்கிரத்தில் போக்கலாம். இவ்வகை உபகாரத்துக்காகத்தான் அந்தச் சாஸ்திரத்தை எல்லோரும் மிகுதியாகக் கற்கிறார்கள். வியாதிகள் மட்டுமின்றிப் பாம்பு முதலிய விஷ ஜெந்துக்களாலுண்டாகும் விஷத்தையும் ஒரு விநாடியில் போக்கலாம். விஷங்களுக்கு மெஸ்மரிஸம்போல் கைகண்ட மருந்து வேறொன்றுமில்லை. இந்தியாவில் பாம்பு விஷம் மிகக்கொடியது. இதுவரையில் ஆயுர்வேத சாஸ்திரிகளும் யூனானி ஹகீம்களும், இங்கிலீஷ் டாக்டர்களும் தகுதியான மருந்தொன்றைக் கண்டு பிடிக்கவில்லை. பாம்பு கடித்த விடத்தைக் கத்தியினாலறுத்துவிட்டால் விஷமிராதென்று இங்கிலீஷ் டாக்டர்கள்

சொல்லுகிறார்கள். ஆனால், மந்திரத்தாலன்றி இந்தியாவிலுள்ள நல்லபாம்பு விஷத்தைப் போக்குவதற்கு வேறு வழியில்லை. சிலர் மந்திரத்தாலேயே பாம்பு விஷத்தைப் போக்கிவிடுகிறார்கள்; ஆனால், அம்மந்திரமும் எல்லோருக்கும் தெரிவதில்லை. இப்பொழுது நம்முடைய காருண்ய மன்னராகிய நிஜாம் அவர்கள் ஒரு முறை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை எல்லோரும் உபயோகிக்கலாம். நிஜாம் கவர்ண்மெண்ட்டிலிருந்தே விளம்பரங்கள் வந்திருக்கின்றன. அரண்மனை முத்திரை யிடப்பட்ட காகிதங்களில் உருது தெலுங்கு இரண்டு பாஷைகளிலும் அச்சடிக்கப்பட்ட விளம்பரங்கள் இந்தியா முழுதும் பரவச் செய்யப்பட்டிருக்கின்றன. அதன் விஷயமாவது:—

பாம்புகடித்தவருக்கோர் அறிக்கை.

ஒருவனுக்குப் பாம்பு கடித்தால் அவனுக்குச் சமீபத்திலுள்ள மற்றொருவன் உடனே கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொன்னால், அந்த நிமிஷத்திலேயே எவ்வகைப் பாம்பு விஷங்களும் ஆச்சரியப்படும்படி இறங்கிவிடும். அந்த மந்திரமாவது:

> “ஏ விஷமே! உனக்கு மீர் மஹபூப் அலிகான் அவர்களுடைய சத்தியம் ஏற்பட்டிருக்கிறது; இறங்கிப்போ; நான் இதைப்பற்றி (இத்தனை) நாளுக்குள் அவர்களுக்குத் தெரியப்படுத்துவேன்,”

என்பதுதான். இவ்வாக்கியத்தில் இந்த () அடையாளத்துக்குள் **இத்தனை** யென்று இருக்குமிடத்தில் ஒருநாள்முதல்மூன்று வருஷம் வரையில் இஷ்டமான நாளைக் குறித்துக்கொள்ளலாம். மூன்று வருஷத்துக்கு அதிகமான நாளைக் குறிக்கக்கூடாது. இத்தனை நாளென்பது மூன்றுவருஷத்துக்குட்பட்ட ஒருநாளா யிருக்கவேண்டும். இவ்வாறு ஒரு நாளைக்குறித்துவிட்டால் அந்தநாளைக்குள் அவசியம் தந்திமூலமாவது கடிதமூலமாவது நிஜாம் அவர்களுக்கு மேற்கண்டபடி விஷம் தீர்ந்தவிபரத்தைத்தெரிவித்துவிடவேண்டும். ஷை மந்திரத்தில்வரும் **மீர் மஹபூப் அலிகான்** என்னும் பெயரை அரைகுறையில்லாமல் சுத்தமாக முழுப்பெயரையும் சொல்லவேண்டியது. மேற்கண்டவாறு நாமே குறித்துக்கொள்ளும் தேதிக்குள், “உங்களுடைய பெயரால் ஒருவனுடைய பாம்புவிஷம்நீங்கிற்று”

என்று நிஜாமவர்களுக்குத் தெரிவிக்காவிடில் மறுநாள் அந்த விஷம், கடித்தவனுக்கு மறுபடியும் வந்துவிடும். ஆதலின் மறந்துவிடாமல் தந்தியினாலாவது கடிதத்தினாலாவது தெரிவித்துவிடவேண்டியது. அவ்வாறு தெரிவித்துவிட்டால் நம்முடைய கடமை நீங்கிவிடும். தனக்குப் பாம்பு கடித்தால், தானேயும் இம்மந்திரத்தைச் சொல்லிக்கொள்ளலாம். ஒருவன் பாம்புகடித்து விஷத்தால் ஸ்மரணையற்று மயங்கிக்கிடந்தால் அவனுடைய காதில் மேற்படி மந்திரத்தைச் சொல்லவேண்டும்; ஆடுமாடு முதலிய மிருகங்களுக்குப் பாம்பு கடித்துவிட்டால் அவற்றின் காதிலும் இவ்வாறே மந்திரத்தை உச்சரிக்கவேண்டும்; இதை உச்சரிப்போர் இரகசியமாக முணுமுணுத்த குரலால் சொல்லாமல் பாம்பு கடித்தவனுடைய காதில் விழும்படி உரத்த குரலால் சொல்லவேண்டும்.

பாம்பு விஷந்தீர்ந்த சமாசாரத்தைத் தெரிவிக்கவேண்டிய விலாசம்:

ஹைதராபாத்து, டக்கான்.

கடித மெழுதுவோர் மேல்விலாசப் பக்கத்தில் பாம்பு விஷம் என்று எழுதவேண்டும்; ஹைதராபாத்துக்குத் தெரிவித்தவுடன் அங்கே நம்முடைய விஷயம் ஒப்புக்கொள்ளப்பட்ட சமாசாரத்துக்கு அவர்கள் மறுதபால் எழுதுவார்கள்.

இவ்விஷயத்தைப்பற்றி ஒருவரும் சந்தேகிக்கவேண்டாம்; நாம் மேற்சொன்னபடி அரண்மனை முத்திரை யிடப்பட்ட காகிதத்தில் அச்சிட்டு அதன்கீழ் அவ்வூர் அரண்மனையின் சீப்சிக்ரடெரி உத்தியோகம் பார்க்கும் ஸ்ரீமாந், அஹமது ஹுஸேன் சாயபு அவர்கள் கையொப்ப மிட்டிருக்கிறார்கள்; எம்மிடத்திலும் தெலுங்கு நோட்டீஸ் ஒன்றும், உருது நோட்டீஸ் ஒன்றும் இருக்கின்றன.

9—4—911 இரவு 7½ மணிக்கு ஒருவருக்குப் பாம்புகடித்த விஷத்தை இம்மந்திர உதவியால் நாமே நீக்கினோம்.

பாம்புகடி மந்திரமும் அதை உபயோகிக்கும் முறையும் அதிக இலேசாகக் கண்டுகொண்டோம். ஆனால், இதன் சம்பந்தமாக நிஜாம் அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு மந்திரம் செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது; இது மிக்க அருமையான மந்திரமே. இஃதெல்லாம் மனத்தை ஒன்றுபடுத்துவதால் உண்டாகும் வெற்றியே. இதைப்பற்றிச் சொல்லும் சாஸ்திரத்திற்கு இங்கிலீஷில் மெஸ்மரிஸ்ம் என்று பெயர். மெஸ்மரிஸத்தால் உண்டாகும் நன்மையைப்பற்றி இங்கே எடுத்துரைப்பது முடியாது; மெஸ்மரிஸத்தை நம்பாமலிருக்கும் மனிதர்கள் இப்பொழுது ஹைதராபாத்தில் நடக்கும் அதிசயத்தைக் கண்டேனும் சந்தேகம் தெளிவாராக. இந்தச் சாஸ்திர சம்பந்தமான கிரந்தங்கள் இங்கிலீஷில் அநேகமுண்டு; தமிழில் இப்பொழுது இரண்டொன்றே வெளிவந்திருக்கின்றன. தமிழில் இன்னும் அநேகங் கிரந்தங்கள் வெளிவந்தால் தமிழ்மட்டும் தெரிந்தோருக்கு மிக்க பயனுண்டாம். *

தமிழில் குர்’ஆனே ஷரீப்.

இப்பொழுது இங்கிலீஷில் அநேகம் குர்’ஆன் மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. இவற்றுள் பெரும்பான்மையன கிரிஸ்தவ பாதிரிமார்களால் எழுதப்பட்டவை. இரண்டொன்றே முஸ்லிம்களால் எழுதப்பட்டவை. அலகாபாத் நகரத்திலுள்ள அபுல் பஜ்ல் என்பவர் ஒரு மொழிபெயர்ப்பு இங்கிலீஷில் வெளிப்படுத்தி யிருக்கிறார்; அது மிக்க நன்றாயிருக்கிறது. அரபு வாக்கியங்களும் சேர்த்து எழுதப்பட்டிருக்கின்றன. படிப்போருக்குச் சௌகரியம் உண்டாகும். அரபு குர்’ஆனைப் படிக்கவும், அதன் பொருளைத் தெரிந்துகொள்ளவும் ஏதுவுண்டாகிறது. ஆனால், அந்த ஆசிரியர் இப்பொழுது குர்’ஆனில் இருக்கும் வரிசைபோல், “அலீப் லாம்” முதல் ஆரம்பிக்காமல் அல்லாருத் தஆலா விடத்திலிருந்து இறக்கப்பட்ட காலக்கிரம வரிசைப்படி, “இக்ரௌ” பாடம் முதல் ஆரம்பித்திருக்கிறார். இப்பொழுது எல்லோரும் அ

---

* இஸ்லாம் நேசன் ஆபீஸில் வெளிப்பட்டிருக்கும் ஹிப்னாடிஸம் என்னும் மனோவசிய தத்துவம் என்னும் புத்தகம் இந்த மந்திர சாஸ்திரத்தைப்பற்றித் தெளிவாகச் சொல்லும்; இதன் சம்பந்தமான வேறொரு புத்தகம் இப்பொழுது அச்சிலிருக்கிறது. அது சீக்கிரம் வெளிவரும்.

ப—ர்.

ங்கீகரித்திருக்கும் முறையை விட்டு இவர் மட்டும் வேறு முறையை அனுசரித்தது யாதுகாரணம் பற்றியோ அறிகலம்.

இவ்வாறே தமிழிலும் குர்'ஆனை மொழிபெயர்த்து வெளிப்படுத்தவேண்டுமென்னும் அவா முஸ்லிம்களுடைய மனத்தில் சமீபகாலமாக உதித்திருக்கிறது. தமிழில் குர்'ஆனே ஷரீப் வெளிப்பட்டால் மிக்க பயனுண்டாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால், தமிழில் மொழிபெயர்ப்பவர்கள் தவறான முறையில் இறங்கிவிடாமல் உலகத்துக்குப் பயன்படும்படி செய்தால் நன்றாயிருக்கும். தென்னாட்டில் இரண்டொரு முஸ்லிம்கள் சேர்ந்து குர்'ஆனை மொழிபெயர்த்து வருகிறதாகக் கேள்வியுறுகிறோம். அவர்களுக்கு இவ்விஷயத்தில் அவா மிகுந்திருக்கக் கூடும்; ஆனால், அவர்களுக்குத் தமிழிலும், அரபி பாஷையிலும் குர்'ஆன் மொழிபெயர்ப்புக்கு வேண்டியதேர்ச்சி இருந்தால் மிக்க நலமாகும். கிறிஸ்தவர்களுடைய பைபிள் மொழிபெயர்ப்பைப் பார்த்தால் ஹீப்ரூ, இங்கிலீஷ், தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளிலுள்ளவைகளெல்லாம் ஒன்றற்கொன்று பொருள் விஷயத்தில் வேற்றுமை காணப்படுகின்றன. இவ்வாறின்றி நல்ல மொழிபெயர்ப்பாகக் குர்'ஆன் வெளிப்பட்டால் மிக்க நலம். மொழிபெயர்ப்போர், இஸ்லாம் மார்க்கம் தெரியாத இந்துக்களை வைத்துக்கொண்டு இங்கிலீஷிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து விட்டால் பைபிளுக்குள்ள குறையே இதற்கும் ஏற்படும்; தமிழும் அரபும் உடன் தெரிந்த பெரியோர்களை வைத்து மொழிபெயர்ப்பதே உசிதம். வெறும் அரபுமட்டும் தெரிந்தோருக்குத் தமிழில் எழுதுவது முடியாது. இந்துக்களுக்கு இஸ்லாம் மார்க்கம் தெரியாது. இரண்டும் தெரிந்தவர்கள் செய்யவேண்டிய காரியம் இது. இதில் சிறிதும் மோசம்போகக் கூடாது. பிரம்பூர் மதரஸாவில் கீழக்கரையிலிருந்து சையது முகம்மது என்னும் பெயர்கொண்ட ஒரு பெரியோர் வந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள்; இவர்களுக்குத் தமிழ்ப் பாஷையில் தேர்ந்த பாண்டித்தியமுண்டு; மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் ஒரு வித்வான்; குர்'ஆன் முழுதும் மனப்பாடம் பண்ணியிருக்கும் ஹாபில்; அரபி பாஷையிலும் ஆழமான ஆராய்ச்சியுள்ளோர்கள்; இவர்களைப்போன்ற மூன்றுநான்கு ஆலீம்கள் சேர்ந்துழைத்தால் குர்'ஆன் திருத்தமாக வெளிப்படுமென்று நம்புகிறோம்; மற்றவர்கள் மொழிபெயர்க்கக் கூடாதென்பது எமது அபிப்பிராயமன்று; இருபாஷையிலும் தேர்ச்சியுள்ள இப்படிப்பட்ட புத்திமான்கள் சேர்ந்துழைத்தால் மிக நன்றாயிருக்குமென்று அபிப்பிராயப்படுகிறோம்.

ப—ர்.

கோட்டாற்று முஸ்லிம் ஸமாஜம்.

இச்சங்கமானது, பரோபகாரத்தையும், முஸ்லிம்கள் கல்வியபிவிர்த்தியையும், ஊர்ச்சீர்திருத்தத்தையும் கருதி 1910ல் ஏற்படுத்தப்பட்டது. 1911 மார்ச்சு 26ந்தேதியோடு இதன்முதல்வருடம் பூர்த்தியானதால், அன்று கனம். V. S. T. தரகனாரவர்களின் பங்களாவின் முன் ஞா. செ. ஸெய்யிது தாஹா ஆலிம் ஸாஹிபவர்களின் அனுமதிப்படி அமைக்கப்பெற்றிருந்த அலங்காரப் பந்தலின்கண் வெகு விமரிசையுடன் ஷை முதல் வருடத்தின் கொண்டாட்டம் நடைபெற்றது. இதற்காகச்சங்கத்தின் அங்கத்தவரோடு இன்னும் அநேகம் கனவான்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். இக்கூட்டத்திற்குக் கனம். V. சந்தாமிய்யான் சாஹிபவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள்.

அப்பொழுது இச்சங்கத்தின் காரியதரிசி மு. அகமது லெப்பை யவர்கள், இந்த ஒரு வருஷத்தில் நடந்த சங்கத்தின் காரியங்களடங்கிய பத்திரத்தை வாசித்தார்கள். அதன்மேல் கதியற்ற முஸ்லிம்களை ஆதரித்து வரவேண்டியதைப்பற்றியும், இச்சங்கத்துக்குக் கனவான்கள் பணவுதவி செய்யவேண்டியதைப் பற்றியும், இனி இச்சங்கத்தாரால் செய்ய உத்தேசித்திருக்கும் காரியங்களைப் பற்றியும் ஓர் பிரசங்கம் நடந்தது. பின்னர், சபாநாயகர் பிரசங்கத்தோடு சபைமுடிந்தது. சபா நாயகருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் நடந்தபின் சபை கலைந்தது.

தென்னிந்தியா இருப்புப்பாதை விபத்து.

தென்னிந்தியா இருப்புப்பாதையில் வைத்தீசுவரன் கோயிலுக்கும் ஆனைதாண்டவபுரத்துக்கு மிடையே 17உ திங்கட்கிழமையிரவு சென்னையிலிருந்துபோன போட்மெயிலும் எதிர்முகமாய் வ

ந்துகொண்டிருந்த ஒரு சாமான் வண்டியும்மோதிக்கொண்டனவாம்; அப்படி அவை மோதிக்கொண்டதில் சில பிரயாணிகளுக்குக் காயமும் பட்டிருக்கிறதாம். ஆனைதாண்டவபுரம் அஸிஸ்டண்ட் ஸ்டேஷன் மாஸ்டர் முதலில் வைத்தீசுவரன் கோயில் ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தந்தி கொடுத்து, தம்முடைய ஸ்டேஷனிலிருந்து புறப்படவிருந்த சாமான் வண்டிக்கு லயன்கிளியர் (Line clear) சீட்டுக் கேட்டாராம். அது கொடுக்கப்படவே, அந்தச் சீட்டை அவர் சாமான் வண்டியின் கார்டுக்குக் கொடுத்து விட்டாராம்; தாம் லயன் கிளியர் அனுப்பிய சிறிது நேரத்துக்குள் வைத்தீசுவரன் கோயில் ஸ்டேஷன் மாஸ்டர் ஆனைதாண்டவபுரம் ஸ்டேஷன் மாஸ்டருக்குச் சாமான்வண்டிக்குக்கொடுக்கப்பட்ட லயன் கிளியரை ரத்துசெய்து விடும்படியும் வைத்தீசுவரன் கோயிலிலிருந்து புறப்பட விருந்த போட் மெயிலுக்கு லயன்கிளியர் கொடுக்கும்படியும் கேட்டாராம்; ஆனைதாண்டவபுரம் ஸ்டேஷன் மாஸ்டர் தமக்கு வந்த லயன்கிளியரை ரத்துசெய்துவிட்டு மெயிலுக்கு லயன்கிளியர் கொடுத்தாராம். ஆனால், அவர் சாமான் வண்டி கார்டுக்குத் தாம் வைத்தீசுவரன் கோவில் ஸ்டேஷனிலிருந்து வாங்கிக்கொடுத்த லயன் கிளியரைத் திருப்பி வாங்கிக்கொள்ள மறந்துபோனாராம்; அதனால் போட்மெயில் வைத்தீசுவரன் கோயிலை விட்டுப் புறப்பட, சாமான் வண்டியும் ஆனைதாண்டவபுரத்தைவிட்டுப் புறப்பட்டு விட்டதாம். இது காரணமாக அவை இடைவழியில் மோதிக்கொண்டனவாம். போட்மெயில் டிரைவர் எதிரே சாமான் வண்டி வருவதை அறிந்துகொண்டு, தம் வண்டியைப் பிரேக்போட்டு நிறுத்திப் பின்னுக்கு முடுக்கினாராம்; அவர் என்ன எச்சரிக்கையாயிருந்தும் சாமான்வண்டி வெகு வேகமாய் வரவே இரண்டும் மோதிக்கொண்டனவாம்; அவ்வாறாகவே போட் மெயிலில் இஞ்சினை அடுத்திருந்த கம்பாஸிட் வண்டியிலிருந்த ஜனங்களுக்குக் காயம் பட்டதாம்; அப்போதே இரண்டு வண்டி இஞ்சின்களும் சிதறுண்டு போயினவாம். சாமான் வண்டியைச் சேர்ந்த வாகன்கள் சிலவும் சேதமாயினவாம். இதனால், பாதை அடைபட்டுப்போயிற்று. ஆனால், ரெயில்வே அதிகாரிகள் இரவும் பகலும் வேலைசெய்து வண்டிகள் தடைபடாமல் ஓடும்படி செய்துவிட்டார்கள்.

OFFICE OF ✱ MADRAS.

بسم الله

இஸ்லாம் நேசன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை-2] 1911, மே. [வகை-7

இஸ்லாம்.

بسم الله الرحمن الرحيم

மிக்க தயாபரனும், தாக்ஷண்ய பிரானுமாகிய இறைவனது திருநாமத்தினால் (ஆரம்பிக்கின்றேன்.)

உலகத்தில் உயிர்வாழ்க்கை செய்வதிலும் அதன் சம்பந்தமான காரியங்களைத் தெரிந்துகொள்வதிலும் இறைவனுடைய கட்டளைக்குச் சிறிதும் மாறுபாடு செய்யாமல் மிக்க தாழ்மையோடு நடக்கவேண்டும் என்றும், கடவுளால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சட்டங்களுக்கு முரண்செய்யாமல் சொன்னதைச்சொன்னவண்ணம் பக்தி விசுவாசத்தோடு செய்யும்போது வேறு வழியில் மனத்தையும், ஆலோசனையையும் திருப்பாமல் பொறுமையற்ற எண்ணத்துடன் கடவுளுடைய கட்டளையைப் பணிவச்சங்களோடு சிரமேற்கொண்டு ஒழுகவேண்டுமென்றும் பொருள்படுகின்ற இஸ்லாம் என்னும் நாமம்பூண்ட மார்க்கமானது, இவ்வுலகத்தில் அநேக காலங்களில் அநேக தேசங்களில் கடவுளாற் கொடுக்கப்பட்டு, அவர் அருள்வழிப்பட்ட நபிமார்கள் மன்பதைகளுக்கு உபன்னியசித்து வெளிப்படுத்தியிருக்கிற எல்லாப் பரிசுத்தமார்க்கங்களையும் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கிறது. இதன் சம்பந்தமான வாக்கியம் குர்'ஆனே ஷரீபில் காணப்படுகிறது:—

قولوا امنا بالله و ما انزل الينا وما انزل الي ابرا هيم
وا سمعيل وا سحق ويعقوب والاسباط وما اوتي موسى و عيسى
وما اوتي النبيون من ربهم لا نفرق بين احد منهم ونحن له مسلمون

"இறைவனிடத்திலும், எங்களுக்கும், இன்னும் இபுராகீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யாகூப் இவர்களுக்கும், இவர்கள் சந்ததியார்களுக்கும் அருளப்பட்டவற்றினிடத்திலும் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்; மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் அண்டகோளத்தின் சிருஷ்டிகரால் உண்டாக்கப்பட்ட எல்லாத் தீர்க்கதரிசிகளுக்கும் கொடுக்கப்பட்டவற்றிலும் நம்பிக்கை வைக்கிறோம். அவற்றுள் எவ்வகை வித்தியாசமும் பாராட்டாமல் அவற்றையெல்லாம் நாங்கள் அங்கீகரிக்கிறோம், என்று சொல்லும்."

அல்குர்'ஆன் அருளப்பட்ட காலத்துக்கு முன்னுள்ளோர்கள், தங்கள் தங்களுடைய வேதத்துக்குமட்டும் தெய்வகடாட்சம் உண்டென்றும், வேறு மதத்தினருடைய வேதங்களெல்லாம் கடவுளால் அருளப்பட்டனவல்ல என்றும் வாதுசெய்து வந்தார்கள். இப்படி வேறு மதத்தினரை விலக்கித் தாங்கள்மட்டும் கடவுள் அருளுக்கு வழிப்பட்டோர்களென்று சொல்லிவந்ததால் தற்பெருமையும், உதாசினமும், பொறாமையும், மதச்சண்டைகளும், துவேஷமும் கடவுளுடைய ஆன்மகோடிகளுக்குள் விளைந்துவந்தன. அண்டகோள நாயகனுடைய சிருஷ்டியில் ஒவ்வொரு நாளும் காணப்படும் தேவ கருத்துக்களைப்பற்றி ஆலோசிக்கும் பொருட்டு அவர்களுள் ஒருவரேனும் சிறிதுபொழுது நிதானித்துப் பார்த்ததில்லை; எல்லா மனிதவர்க்கத்தாருக்கும் உணவு கொடுத்துக் காத்தளிக்கும் இரட்சகன் ஞானசம்பந்தமான விஷயங்களில் மட்டும் வேறு மதத்தினர்கள் பிரவேசிக்காமலிருக்கும்படி ஒருவர்க்கத்தாரைமட்டும் தன்னருளுக்குள் வைத்து மற்றவர்களைஎவ்வாறு மூடர்களாக ஆக்கியிருக்க முடியும்? இறைவனுடைய சூரியன், அவனுடைய சந்திரன், அவனுடைய நக்ஷத்திரங்கள், அவனுடைய ககோளங்கள் எல்லாம் வேற்றுமை பாராட்டாமல் எல்லா மனிதவர்க்கத்தாருக்கும் சமமான ஒளியைக் கொடுக்கவில்லையா? நிலம், நீர், தீ, காற்று முதலிய இயற்கை வஸ்துக்களால் உண்டாகும் இலௌகிக காரியங்கள் வேற்றுமை யில்லாமல் மனிதவர்க்கத்தாருக்குக் கொடுபட்டிருக்கும்போது, இலௌகிக வாழ்க்கைக்கு இன்றியமையாததும், வைதீகவாழ்க்கைக்கு அவசியமானதுமாயிருக்கும் ஆத்மஞானமும் மனிதவர்க்கத்தார் எல்லோருக்கும் சர்வக்ஞனால் கொடுக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதைமட்டும் ஏன் அவர்கள் நம்புவதில்லை? பஞ்சேந்திரியங்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்த அல்லாகுத்தஆலா ஞானேந்திரியத்துக்கு வேண்டியவற்றைக்கொடுப்பதில் என்ன இடர்ப்பாடு உண்டாகக்கூடும்? ஞானேந்திரியமன்றோ கருமேந்திரியங்களுக்கு முதற்கருவியாயிருப்பது? இத்தகைய ஞானவிஷயத்தில் இறைவன் எவ்வாறு பக்ஷபாதம்பாராட்டமுடியும்? ஒருமதத்தினருடைய ஞானமார்க்கம் மட்டும் கடவுளுக்குரியதென்று கொண்டால் நாம் அக்கடவுளுடைய சர்வவல்லமையை அறியாதவராவோம். மனிதர்களுக்குள்ள ஒற்றுமையைக் கெடுப்பதும் இப்போலியெண்ணந்தான். தங்கள் வேதம் மட்டும் சிறந்ததென்னும் தப்பு அபிப்பிராயம் அநேக நூற்றாண்டுகளாக இருந்திருக்கிறது. இறுதியில் அல்லாகுத்தஆலாவினுடைய ஒரு வார்த்தையானது இத்தகைய துவேஷ அபிப்பிராயத்தை மாற்றிவிட்டது. குர்'ஆனே ஷரீபின் முகவுரையின் முதல் வாக்கியம், الحمد لله رب العلمين என்பதாகும்; "அண்டகோளங்களுக்குத்தலைவனாகிய அல்லாவுக்கு எல்லாப்புகழும் உரித்தாகும்"என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லாமல் இந்தியாவுக்குமட்டுமாவது, அரபியாவுக்கு மட்டுமாவது, பாரஸீகத்துக்குமட்டுமாவது,சிரியா நாட்டுக்கு மட்டுமாவது உரிய தலைவன் என்று காணப்படவில்லை; ஆனால், எல்லாவுலகத்தையும் படைத்துக் காத்தளிக்கும் இரட்சகனென்றே சொல்லப்படுகிறது. அக்கடவுள் எல்லா மனிதர்களுக்கும் ஐம்புல அறிவைக் கொடுத்திருப்பதுபோல் பகுத்தறிவையும் தந்திருக்கிறார்; மனிதவர்க்கத்தில் நுழைந்துகொண்டு அவர்களுடைய ஒற்றுமையைக் கெடுத்து, ஏகநாயகனாகிய கடவுளுடைய சிருஷ்டிகளெல்லாம் ஒன்றற்கொன்று சகோதரபாந்தல்யம் பாராட்டவேண்டுமென்னும் எண்ணத்தைமாற்றித் துன்பம்செய்துகொண்டுவந்த மனத்தின் அற்புதத்தன்மையை ஒழித்து நமக்குள் ஏக சகோதரத்துவத்தை உண்டுபண்ணியிருப்பது நம்முடைய குர்'ஆன் வாக்கியமே. இவ்வாறு அல்குர்'ஆனில் வந்திருப்பதைக் காணும்போது, இவ்வுலகில் கடவுள் அருள்வழிப்பட்ட உண்மையான தீர்க்கதரிசிகளால் செய்யப்பட்ட உபந்நியாசமெல்லாம் கடவுளருளால் உண்டாயின வென்றே நாம் நம்பவேண்டும்; பூர்க்

கானுக்கு முன்னுள்ள மூஸா, ஈஸா, தாவூத்அலைகிஸ்ஸலாமவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேதங்கள் போலவே மற்ற உண்மையான நபிமார்களுக்கும் அருளிச்செய்யப்பட்ட விஷயங்களும் நம்முடைய நம்பிக்கைக்கு உரியதாகின்றன. ஆதலின், அல்குர்’ஆனில் வந்துள்ள உபதேசத்தின்படி நோக்கும்போது கடவுள் அருள்வழிப்பட்ட உண்மைஞானிகளால் பலவேறு பாஷைகளில் பலவேறு தேசங்களில் பலவேறு காலங்களில் உபதேசிக்கப்பட்ட ஒவ்வொரு உண்மையான மார்க்கத்தையும் இஸ்லாம் என்னும் மார்க்கம் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது எனத்தோன்றுகிறது. அம்மார்க்கங்களெல்லாம் இஸ்லாமார்க்கத்தின் உண்மையான சொரூபத்தையே உபதேசித்துவந்திருக்கின்றன; ஆனால், காலம் செல்லச் செல்ல உண்மை ஞானமில்லாத போலிகள் மார்க்கங்களிற் புகுந்து அவற்றின் கருத்துக்களைமாற்றியும், வேறு அபிப்பிராயங்களைச் செருகியும் வேற்றுமை செய்து விட்டார்கள்; ஆதலின், மனிதர்கள் மயக்கங் கொண்டு தவறிய துறைகளில் இறங்கி விட்டார்கள். இன்னும், முற்காலங்களில் செய்யப்பட்டு வந்த உபதேசங்களை எழுதி வைத்திருந்த பாஷைகள் பேச்சுவழக்கற்று ஒழிய அப்பாஷைகளைப் படிப்போரின்றி அவற்றின் கருத்துக்களும் நசித்துப்போயின. பின்னுள்ளோர் முன்னுள்ளோர்களின் உண்மையானமார்க்கத்தை மறக்கும்படி நேரிட்டது. மேலும் மனிதர்களுடைய சாமர்த்தியம் விருத்தியடையுந்தோறும் அவர்களுடைய பாபத்தொழில்களும் வளர்ந்து வந்தன. நாகரிகம் முதிருந்தோறும் அநாகரிகமும் உடன் வளரும் என்பது நம் அனுபவம். மனிதர்கள் விருத்தியாக விருத்தியாகப் புது ஏற்பாடுகளும் அவசியமாயிருந்தன. இவ்வகை ஏற்பாடுகள் செய்து உண்மையான மார்க்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டே ஒருதீர்க்கதரிசிக்குப்பின் மற்றொருதீர்க்கதரிசியாக அநேக நபிமார்கள் உதித்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் முதன் முதல் உண்டான இஸ்லாம் மார்க்கத்தை நிலைநிறுத்திக் காலநிலைமைக்குத்தக்க ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள். பண்டைக்காலங்களில் ஒருதேசத்திலிருந்து மற்றொருதேசத்துக்கு இப்போதிருப்பதுபோல் எளிதான போக்கு வரவு இல்லாமையால் ஒவ்வொரு தேசத்தினருக்கும் ஒவ்வொரு நபி உதவி புரிந்திருக்கக்கூடும். இதற்கு மேற்கோளாக அல்குர்’ஆனிலும் وان من امة الا خلا فيها نذير என்று வந்துள்ளது. “உபாத்தியாயரைப் பெறாத ஜாதியார் ஒருவருமில்லை,” என்பது இதன் பொருள்.

ஹிந்துஸ்தானம், சீனம், பாரஸீகம், ஜார்தான் முதலிய தேசங்களில் அங்கங்கே அந்த அந்தக் காலங்களில் அவசியம் ஏற்பட்டபோது பழைய இஸ்லாம் மார்க்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டுக் கடவுளால் அனுப்பப்பட்ட தூதர்கள், மனிதர்களை நல்வழிப்படுத்தியிருக்கிறார்கள். இறுதியில் இவ்வுலக முழுதும் ஒருவகை மாறுபாட்டை அடையத்தலைப்பட்டது. உலகத்தின் எல்லாத்தேசங்களிலுமுள்ள எல்லோரும் அல்லாகுத்தஆலாவுடைய ஆக்ஞையைக்கடக்க ஆரம்பித்தார்கள். ஏககாலத்தில் இந்நிலவுலகமுழுதிலும் பாபத்தொழிலும் அநீதியும் மிகுந்துவிட்டன. ஒவ்வொருதேசத்திலுமுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் சன்மார்க்கத்தினின்றும் தவறிவிட்டார்கள். நன்னடக்கையென்பதே காணாமற்போயிற்று. கடவுளருளை மறந்தவர் போல் மனிதர்கள் காணப்பட்டார்கள். உலகமுழுதும் ஷைத்தானுடைய துஷ்ட அரசாட்சியின் கீழ்ப் புகுந்துவிட்டது. விக்கிரக ஆராதனை எங்கும் நிறைந்திருந்தது. சன்மார்க்க நெறியிலும், ஞானமார்க்கத்திலும் மனிதர்கள் மிகவும் தாழ்ந்திருந்தகாலம். கி. பி. 6-வது நூற்றாண்டல்லாமல் வேறொரு சமயமன்று. இயற்கையில் இருளுக்குப்பின் ஒளியும், பஞ்சத்துக்குப்பின் மழையும் உண்டாவதும், உலகில் பாபம் மிகுந்தபோது நபிமார்கள் உதிப்பார்கள் என்பதும் உண்மையாயின் இந்தக் கி. பி. 6-வது நூற்றாண்டல்லாமல் வேறு எப்போது ஒரு தீர்க்கதரிசி உதயமாகக் கூடும்? பகவத்கீதையில் கிருஷ்ணபகவான் சொல்லியபடி, பாபம் மிகுந்தபோது அவர் அவதாரம் எடுப்பது சத்தியமாயின் இந்த 6-வது நூற்றாண்டில் ஓர் அவதாரம் எடுத்திருக்கவேண்டும். அவதாரத்துக்குரிய அவ்வளவு பாபம் மிகுந்த காலம் 6-வது நூற்றாண்டுதான். ஆதலின், அந்த நூற்றாண்டில் உலகத்தின் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு தீர்க்கதரிசிகளாவது அல்லது, எல்லாத் தேசங்களுக்கும் பயன்தரத்தக்க மகா வல்லமைசாலியான ஒரே தீர்க்கதரிசியாவது அப்பொழுது திருவவதாரம் செய்து, பிராசீன இஸ்லாம் மார்க்கத்தை நிலைநிறுத்தவேண்டியது அவசியமாயிற்று. ஆனால், அக்காலத்தில் நாகரிகம் மிகுந்து ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் போக்குவரவு செய்வது எளிதாயிருந்தது. பண்டைக்காலங்களில் இயற்கையாகவும், செயற்கையாகவும் ஏற்பட்டிருந்த மலைகளும், மதில்களும் பிற்காலத்தில் அழிந்து எல்லாத் தேசத்தாரும் வேற்றுமை

யின்றி ஒரே ஜாதியாராக வசிக்கத் தலைப்பட்டனர்; நகரங்களை தெருக்களாகவும், தேசங்களை நகரங்களாகவும் மாறி இவ்வுலக முழுதும் ஒரே தேசமாயிற்று. பல்வேறு ஜாதியார்களும், தேசத்தினரும் தம்முள் கலக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு எல்லோரும் ஒன்றுபட ஆரம்பித்த காலத்தில் வெவ்வேறு தேசத்தில்வெவ்வேறு தீர்க்கதரிசி அவதரித்திருந்தால் மிக்க குழப்பமுண்டாயிருக்கும். இவற்றையெல்லாம் உணர்ந்த சர்வக்ஞனாகிய அல்லாசுபஹானஹுவத ஆலா, தீர்க்கதரிசிகளுள் கடைசியானவராகிய நபியவர்களை உலகத்துக்கு நடுநாயகமாகிய அரபியாவில் உதிக்கும்படி திருவருள் புரிந்தான். அவ்வாறு கி. பி. 6-வது நூற்றாண்டில் திருமக்காநகரில் திரு அவதாரம் செய்த நம்முடைய நபிகள் நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள், தங்களுக்கு முன்னுள்ள நபிமார்களால் உபதேசிக்கப்பட்டுவந்த பிராசீன இஸ்லாத்தையே நிலைநிறுத்தினார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட புருக்கான் வேதமும், முன்னுள்ள உண்மைகளையே ஒழுங்குபடுத்திக் குற்றங்களை நீக்கிய ஒரு சத்தியவேதமாகும். ما فرطنا في الكتاب من شي * صحفا مطهرة فيها كتب قيمة என்னும் வாக்கியம் குர்’ஆனே ஷரீபில் காணப்படுகிறது. பழையவேத புத்தகங்களில் மனிதர்களால் செருகப்பட்ட குற்றங்களைக் களைந்து தீமையற்ற சத்தியங்களை மட்டும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதே அல்குர்’ஆன். முன்னுள்ள வேதங்களில் கண்ட உண்மைகளே இதிற் காணப்படும். மனிதர்களின் சீர்திருத்த விருத்திக்குத் தக்கவிதம் புதுஏற்பாடுகளும், இவ்வேதத்தில் அல்லாகுத்த ஆலாவால் அருளப்பட்டுள்ளன.

(தொடரும்.)

பத்திராதிபர்.

மறுபிறப்பு.

[ஒரு மறுப்புரை யுபந்யாஸம்.]

(128-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிரமஸமாஜத்தின் ஒரு பிரிவான "புதுமார்க்கத்"தில் இதே ரகஸியத்துக்கு இன்னொரு விவரமும் கொடுக்கப்பட்டுள்ளது. அ

தை உலகத்தார் தெரிந்துகொண்டு நம்பக்கூடுமானால்நம்பலாம். கேசவரோடு இயேசு கிறிஸ்துவுக்கு ஆத்மலைக்யம் இருந்ததென்பதற்கு நிதர்சனம் வேண்டுமானால், கேசவசந்திர சேனருடையமரணாவஸ்தையில் அது காணப்பெறும். தம்முடைய சிலுவையைக் கேசவர் தாங்கிக்கொண்டிருக்கும்படி சர்வ தாராளமாக இயேசுகிறிஸ்து அவரிடம் அதைக் கொடுத்தார். கேசவரும் அதைப்பெறுவதற்கு அத்தியந்த சந்துஷ்டியுள்ளவராகவே யிருந்தார். எட்டுநாள் இரவும் பகலும், கேசவ சந்திர சேனர் முட்படுக்கையில் புரண்டு கொண்டிருந்தனர். வாதை வெகு குரூரமாகவிருந்தது. அது சிலுவையிலறையப்பெற்றதன் வேறொரு மாதிரியாகவே யிருந்ததென்றாலும், காலவளவில் நீடித்ததாக விருந்தது. ஆயினும் அவர் அத்தகைய கொடூரவாதையின் மத்தியில், தாம் சர்வதயாபரனான கடவுளின் அருகில் இருப்பதாக உணர்ந்தார். இவ்வித உணர்ச்சி அவருக்கு இதற்குமுன் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. அவருக்கு அது வேதனையாகவே தோன்றவில்லை. ஆனந்தமாகவே தோன்றிற்று. சரீரம் அமைதியற்றுச் சலித்துக்கொண்டிருந்தது. ஆனால் ஆத்மாவோ அதிக சாந்தமாயடங்கி, பரிபூரண நிர்வாண நிலைமையை எய்தியது போன்றிருந்தது. தம்முடைய கடவுள் தமக்கு அக்கொடிய காலத்தில் அவ்வளவு அன்போடும் தயையோடு மிருந்ததைப்போல, தம்முடைய வாணாளில் வேறெக்காலத்திலும் அவர் அவ்வித மிருந்ததில்லையென்று அவரே தயங்காமல் கூறியிருக்கின்றார். அவ்வனுபவம், அவர் அதுவரையில் அனுபவித்திருந்த அனுபவங்களைக் காட்டிலும் மிக்க இன்பமாகவிருந்தது. என்ன ஆச்சரியமான விளம்பரம்! கேசவரால் பிரியமாகப் பாராட்டப்பட்டவர்களும் அவருடைய நண்பர்களும் அப்புதுமார்க்கத்தில் நம்பிக்கை வைத்தவர்களுமாகிய சுற்றியுள்ளோர்கள், மரணத்தருவாயிலிருந்த அவருடைய பரிதாபமான தீனஸ்வரங்களைக் குறிப்பாய்க் கவனித்துவந்தார்கள். ஆனால் அந்தோ! யார்தாம் அவருடைய உரைக்கடங்கா ஆனந்தத்தை உடனனுபவித்திருக்கக் கூடும்? மரணாவஸ்தை பயங்கரமானதாக ஆக, அவருடைய யோகம் மிக்க உறுதியுள்ளதாயிற்று. பிதாவினுடைய அச்சத்தைத்தரும் கொடுமையில் மாதாவின் அத்தியந்த தயையை அவர் நன்குணர்ந்தார். இப்படி எப்போதும் புன்சிரிப்புடன் விளங்கிய உதடுகளில் "அப்பா", "அம்மா" என்ற இர

ண்டு சொற்களையே கூறிக்கொண்டு, இம்மதபோதகர், புதியமார்க்கத்தின் நற்செதியைப் பூர்ணமாக்கினர்.

தூய்மையான வாதனையின் நற்குணத்துக்கு நிதர்சனமாகக் கேசவ சந்திர சேனருடைய வார்த்தைகளையே அவர் சொல்லிய ஸ்தோத்திரங்களிலிருந்து ஈண்டு எடுத்துக் கூறுகின்றோம்:—"எனது ஆண்டவனே! வாணாளின் துன்பங்கள் உண்மையிலேயே துன்பங்கள்தாம். ஆயினும் வியாதியில் சில காலங்களில் இனிமையும் இருக்கின்றது. துர்ப்பலமும் தளர்ச்சியுமுற்றிருக்கும் சரீரம் தன்னை யறியாமலே யோகத்தின் தெளிவில் எப்படி ஆழ்ந்துபோவதென்பது எனக்கு ஆச்சரியத்தைத்தரும் விளம்பரமாகவும் புதியவோர் ஆனந்தமாகவும் இருக்கின்றது. வியாதியுற்றிருப்பது சந்தோஷமுற்றிருப்பதாகு மென்கின்றனர். ஆயினும் நீர் வியாதியஸ்தன் படுக்கையில் மறைவாய்வந்து, கீழே சோர்ந்துகிடக்கும் உம்முடைய குழந்தையின் தொங்கிக்கொண்டிருக்கும் தலையை மெதுவாகத் தூக்கி, தாயினும் பிரியமான உமது மடிமீது வைத்துக்கொண்டு இன்பமும் மேன்மையுமுள்ள மிருதுவான பேச்சுக்களைப் பேசும்போது எல்லாத் துன்பமும் எப்படிப் பறந்தோடிப் போகின்றது! ஆத்மா பரம சந்தோஷத்துடன் உம்முடன் கலக்கின்றது. உடனே அந்த முட்படுக்கை ரோஜாமலர்ப் படுக்கையாக மாறிவிடுகின்றது. உம்முடைய தயைசொரியும் கண்களைநான் காணும்போதும், அமைதியையே பேசும் உமது புன்சிரிப்பு விளங்கும் உதடுகளை நான் கேட்கும்போதும் உம்மிடத்திலே நான் ஐக்கியமாகின்றேன். என்னுடைய யோகம் வரவர ஆழமானதாகின்றது. எனக்கு அளவில்லாத புன்சிரிப்புண்டாகின்றது. தாய்போலவும் நோய்ச்செவிலிபோலவும் என்னருகில் நீயிருக்கும் அப்படிப்பட்ட வியாதி நிமிஷங்களே, எனக்கு நினது சாந்நித்தியமில்லாத செல்வத்தையும் சுகத்தையும் காட்டிலும் மேலாகத்தோன்றுகின்றன. வியாதியஸ்தர்களுக்கு நோயைப்போக்கி, ஆச்வாசத்தைத் தருபவனே! உன்னுடைய நாமம் போற்றப்படுவதாக."

இனி மறுபிறப்பு உண்டு என்னும் கொள்கையில் எனக்குள்ள சில ஆக்ஷேபங்களைச் சுருக்கமாய் ஒன்றன்பின் ஒன்றாய்க் கூறுவேன். கவனத்துடன் கேட்பீராக:—

(1) கடவுளைப் போலவே மானிட ஆத்மாவும் ஆதியில்லாதது என்று ஆரிய ஸமாஜிகள் நம்புகின்றனர். ஆதலால், அதனதன்

நிகழ்கிற ஜனனம் புதிதல்ல; எண்ணிறந்த மறுபிறப்புக்களில்லொன்றாகும். சூன்யத்திலிருந்து ஏதேனுமொன்று உண்டாகாதென்று அவர்கள் கூறுகின்றனர். நல்லது, மானிட ஆத்மாவும் ஜடமும் ஏதேனுமோர் பொருள்களெனவே கொள்வோம். இனி, இவைகள் சூன்யத்திலிருந்து வராவிட்டால், வேறு எங்கிருந்து எப்படி வந்தனவென்று ஆர்ய ஸமாஜிகள் கூறுவார்களா? அவைகள் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டனவென்று நாம் நம்புகிறோம்; எவ்வாறு உண்டாக்கப்பட்டனவென்பது நமக்குத் தெரியாது; ஆரிய ஸமாஜிகளுக்குந் தெரியாது. பரமாணுக்களிலிருந்து கடவுள் உலகமாகிய வியக்கத்தக்க இயந்திரத்தை உண்டாக்கியிருக்கின்றனர். ஆர்ய ஸமாஜிகளின் கொள்கைப்படி, முடிவற்ற சர்வசக்தியுள்ள கடவுளால் மனிதனும் ஜடமும் சிருஷ்டிக்கப்படுவது முடியாத காரியமென்று ஏற்படும். ஆனால் முடிவுள்ள அணுவும் முடிவுள்ள ஆத்யாவும் தாமே நிலைபெற்றிருக்குமென்று அவர்கள் கூறுகின்றனர். மானிட ஆத்மாவையும் அணுவையும் சிருஷ்டிப்பது கடவுளால் இயலாத காரியமானால், முடிவுள்ள பொருள்களான ஆத்மாவும் ஜடமும் தாங்களே தங்களுக்குச் சிருஷ்டி கர்த்தாக்களாக விருக்கக்கூடுமென்று நம்புவது அசம்பாவிதத்துக்கெல்லாம் முதன்மையானதல்லவா?

(2) சூனியத்திலிருந்து எவ்வாறு கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தானென்று நாம் சத்தியமாக அறிந்துகொள்ளக்கூடவில்லையென்பது உண்மையே. அது நமக்கு ஓர் இரகஸியமாகவேயிருக்கின்றது. ஆனால் அதைப்போலவே இரகஸியமான விஷயங்கள் வேறு பலவுமிருக்கின்றன. உதாரணமாக ஆரிய ஸமாஜத்தரான நமது நண்பர்கள், பரமாணுக்களிலிருந்து இப்பௌதிகவுலகம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதென்று நம்புகின்றனர். நல்லது, ஆத்மரூபியான கடவுள் உருவமைந்த கைகளின் உதவியின்றி எவ்வாறு ஜடப்பொருளைப் படைத்திருக்கக் கூடுமென்பதை அவர்கள் அறிவார்களா? கடவுளுக்குச் சிருஷ்டி செய்யக்கூடிய சக்தியில்லையானால் அவனுடைய சர்வ வல்லமை பொருளற்றதாகின்றது. அவர்கள், கடவுள் சர்வ வல்லமையுள்ளவனல்லன் என்று வெளிப்படையாகக் கூறிவிடட்டுமே. சர்வ வல்லமையுள்ள கடவுள் பௌதிக விதிகளுக்குக் கட்டுப்பட்டவனென்று கருவது விபரீதத்துக்கிடமாகும். கடவுளுடைய சர்வ வன்மையை மட்

டும்பற்றிப் பேசுவானேன்? அவனுடைய ஒவ்வொரு குணாதிசயமும் மானிட அறிவுக்கு எட்டாததாகவே யிருக்கின்றது. அவன் சர்வஜ்ஞனென்றும் சர்வ வியாபியென்றும் ஆர்ய ஸமாஜிகள் நம்புகின்றனர். ஆயினும் அவனுடைய சர்வ வல்லமையைப் போலவே, அவனது சர்வ ஞானமும் சர்வ வியாபகமும் அறியக்கூடாதவையாகவே யிருக்கின்றன.

(3) ஆத்மாவும் ஜடப்பொருளும் கடவுளோடு ஸமநித்தியத்துவமுள்ளவையானால், அஃதாவது, அவைகள் அவனைச் சார்ந்திராமல் சுதந்திரமாகவே நிலைத்திருப்பவையானால், அவைகள் உண்மையாகவே இவ்விஷயத்தில் அவனுக்கு ஸரிஸமானமானவைகளாம். ஒவ்வோர் ஆத்மாவும் தனக்குள்ளேயே வாழ்ந்து சலித்து நிலைபெற்றிருக்கின்றதென ஆரிய ஸமாஜிகள் கருதுகின்றனர். ஆயினும், அவர்களுடைய ஸமாஜத்தின் பத்துக்கொள்கைகளுள் ஒன்றென்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறபடி, கடவுள்தான் எல்லாவற்றுக்கும் முழுமுதற் காரணனென்று அவர்கள் கூறுவது எப்படிப் பொருந்தும்?

(4) பற்பல விதமான உருவமைந்த சரீரங்களுக்குள் ஆத்மா பரகாயப் பிரவேசம் செய்வதானது, அவ்வாத்மாவின் கருமங்களின் பயனாமென்று ஆரிய ஸமாஜிகள் கொள்கின்றனர். அதே காலத்தில், உருவமைந்த சரீரமில்லாமல் ஆத்மாவானது உணர்ச்சியை யறியாதென்றும் நினைக்கும் சக்தியைப் பெற்றிராதென்றும், ஏதேனுமொரு காரியத்தை உன்னிச் செய்வதற்கியலாதென்றும் அவர்கள் நம்புகின்றனர். ஒன்றுக்கொன்று விரோதமாகத் தோன்றுகிற இவ்விரு கொள்கைகளையும் அவர்கள் எவ்வாறு இணங்கச் செய்வார்கள்? சரீரமில்லாமல் ஆத்மாவானது யாதொன்றையும் செய்யாதானால், தண்டனையின் பயனாகவோ வெகுமானத்தின் பயனாகவோ இப்படி அடுத்தடுத்துவரும் பிறப்புக்களுடைய கருமங்களை அவ்வாத்மா எவ்வாறு செய்தது? ஏதேனுமொரு ரூபமாகச் சரீரமானது ஆத்மாவினின்றும் வேறு பிரிக்கப்படாதவொரு பகுதியாக விருக்குமானால், அச்சரீரம் அவ்வாத்மாவின் நற்கருமங்களின் பயனால் வந்ததென்றாவது தீக்கருமங்களின் பயனால் வந்ததென்றாவது சொல்வதற்குக் கூடாது. இதற்கு வேறு விதமாக விருக்குமானால் ஆத்மாவின் சரித்திரத்தில் அது வெளி

யுருவமே இல்லாது நிலைபெற்றிருந்த காலமொன்று இருந்திருக்கவேண்டும்.

(5) மனிதன் தோன்றுவதற்கு அநேக காலத்துக்கு முன்னரே இவ்வுலகத்தில் எண்ணிறந்த ஜாதி ஜீவப்பிராணிகள் இருந்து இறந்துபோயினவென்று பிரகிருதி சாஸ்திரம் நமக்குக் கூறுகின்றது. இவ்விதமான சிருஷ்டி கிரமம் அநேக கற்பகாலங்கள் வரையில் நடந்துவந்தது. அதன் பின்னர், கடைசியாகத்தான் மனிதன் தோன்றியவனானான். இன்னும், உலகத்தில் நானாவித ஜீவப்பிராணிகளின் தோற்றத்தில் தாழ்ந்ததினின்றும் உயர்ந்தது உண்டான ஒருவித அபிவிருத்தி யிருக்கிறதென்றும் கருதப்படுகின்றது. இனி, நாம் மறுபிறப்புக் கொள்கையில் நம்பிக்கை வைப்போமானால் மேலே கூறிய அபிவிருத்தி விவரிக்கவொண்ணாத அசம்பாவிதமாக முடியும். மானிட சரீரத்திலிருந்து தாழ்ந்த பிராணிகளின் சரீரத்தில் ஆத்மா புகுவதானது ஆரிய ஸமாஜிகள் நம்புகிறபடியே, பாபங்களின் தண்டனையானால், இவ்வுலகத்தில் தாழ்ந்த ஜாதிப் பிராணிகள் தோன்றுவதற்கு முன்னால் பாபிஷ்டரான மனிதர்கள் தோன்றியிருக்கவேண்டியதை நாம் எதிர்பார்த்திருக்கவேண்டும். பாபிஷ்டரான மனிதர்கள் தங்களுடைய பாபத்தின் பயனாக எந்தப் பிராணிகளின் சரீரத்தில் புகவேண்டியிருந்ததோ அந்தப் பிராணிகளுக்குப் பின்னால் அநேக காலத்துக்கப்புறம் தோன்றினதானது முழுமையும் அசம்பாவிதமானதாகவிருக்கின்றது. ஆனால் மனிதன் பிறப்பதற்கு முன்னால் இவ்வுலகத்திலிருந்த ஜீவப் பிராணிகள் முந்திய உலகத்திலோ அல்லது வேறுள்ள பற்பல கிரகங்களில் ஒன்றிலோ இருந்த ஜனங்களின் ஆத்மாக்களென்று கூறலாம். அப்படியானால், மனிதன் தோன்றுவதற்கு முன்னால் வாழ்ந்து இறந்துபோன கோடிக்கணக்கான பிராணிகளுள் மானிட சரீரத்தில் புகுந்ததாகவுள்ள பரகாயப் பிரவேசத்துக்கு ஓர் உதாரணங்கூட இல்லாமற்போகக் காரணமென்ன? இக்காலத்திலோ, ஒவ்வொரு வருஷமும் லக்ஷக்கணக்காக அவ்வித உதாரணங்களை நாம் காண்கிறோம். பஞ்சாப் மாகாணத்தில் மட்டும் வருஷாவருஷம் எழெட்டு லக்ஷம் குழந்தைகள் பிறக்கின்றன. இதுகாறும் கூறியவாற்றால், மனிதன் தோன்றிய காலத்துக்கு முன் வரையில், அநேக கற்பகாலங்களாக மறுபிறப்பு என்னும் சட்டம் நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததெ

ன்று ஏற்படும் அன்றேல், இம்மறுபிறப்பானது கேவலம் தாழ்ந்த ஜாதிப் பிராணிகளிடத்து மட்டுமே இருந்ததென்றும் உயர்ந்த ஜாதிப் பிராணிகள் காலக்கிரமத்தில் தோன்றத்தோன்ற, அபிவிருத்தி தர்மத்தையொட்டி, ஒருங்காக்கப் பட்டதென்றும் நாம் கொள்ளவேண்டி யிருக்கின்றது.

(தொடரும்)

ஜலாலுத்தீன்.

கண்டனம்.

(160-ம் பக்கத் தொடர்ச்சி.)

முந்தின பக்கங்களில் இயேசு சிருஷ்டிகர் என்று பார்த்தோமல்லவா? இப்போதும் நற்செய்தி ஆசிரியர் 5-ம் பக்கத்தில் வரைந்திருப்பதைச் சிறிது ஆராய்வோம். எரேமியா 31 அதி. 9,20ல் சொல்லிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எப்ராயீம் இஸ்ரவேலரைக் குறிக்கும். இஸ்ரவேலர் பாவம்செய்து கெட்டுப்போனாலும் தாம் அவர்களை வெகுவாய் நேசிப்பதாயும், அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பும்பொழுது சகல சிலாக்கியங்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுவார்களென்றும் காட்டி, சகல ஜாதிகளிலும் தமக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஜாதியார் என்று விளக்கத் தக்கதாய் எப்ராயீம் என்னும் பதத்தைத் தேவன் சொல்லுகிறாரேயொழிய வேறல்ல. இதை யறியாமல் எப்ராயீமுக்கும் ஏசுவுக்கும் ஒற்றுமை தேடி இக்காரணத்தால் இயேசுவின் தேவத்தன்மையை மறுப்பது சுத்த ஆராய்ச்சியின்மையே ஒழிய வேறன்று. ஆதி. 48. 20 ல் சொல்லியபடி எப்ராயீம் இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் சிறந்து விளங்கிய காரணம் பற்றி அவரையே அக்கூட்டத்தாருக்குக் குறிப்பாய்த் தேவன் பேசினார். மேலும் முன்காட்டியபடி கடவுளின் குமாரர்கள் என்று காட்டியவர்களெல்லாம் கடவுள் எப்படி ஆவார்கள்? கடவுளுக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள் மனுஷ்யர்களுக்கு அமைய முடியுமோ? தேவனுடைய லக்ஷணங்களாகிய சுயம்புத்துவம், ஸ்வாதீன நிலைமை, நீதிலக்ஷணங்கள், ஆவியாயிருக்கும் தன்மை, நித்தியம், மாறாமை, சர்வவியாபகம், சர்வ அறிவு, சர்வ வல்லமை இவைகள் மனிதரிடம் எப்படி இருக்கக்கூடும்? எப்ராயீம் மனுஷ்யன், இயேசுவோ கடவுள்.

கடவுள் என்று பிரித்து அர்த்தப்படுத்தின் மனிதனுடைய புத்தி, யுக்திக்கு எட்டாத பரம்பொருள்.

அதேபக்கத்தில் இயேசு காப்பாரொருவரு மின்மையால் இறந்தார் என்றார். நித்திய மரணத்திற்குப் பாத்திரரான மனிதர் செய்த பாவங்களை நிவர்த்திசெய்கிற பலியாகத் தேவனால் நியமிக்கப்பட்ட படியால் அவமானமுள்ள சிலுவையின் மரணத்தை அடையவேண்டியதாயிற்று. கிறிஸ்து நம்மை மீட்கும்பொருட்டுத் தேவ நீதியைத் திருப்தியாகவும், சர்வலோகத்தின் பாவங்களுக்காகப் பிராயச்சித்தம் பண்ணவும் சிலுவையில் பாடுபட்டு மரணமடையவேண்டியதாயிருந்தது. இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பில்லை. ஆத்மாவிற்காகப் பாவ நிவர்த்திசெய்கிறது இரத்தமே; லேவி. 17. 11. கிறிஸ்தவ வேத வசனங்களில் பிழைகண்டு பிடிக்கப் பிரயாசைப்படுகிறவர்கள் முழுவதும் ஆராய்ச்சி செய்யாமல் உலகறிந்த சத்தியத்தை மறைக்க எத்தனிப்பது புதுமையிலும் புதுமையே. இயேசு நீச மரணத்தை அடையவேண்டுமென்பது அநாதி தேவ தீர்மானம். ஏசாயா. 5. 3. 3. லிருந்து வாசிக்க. ஏசா. 53. 10. ல் தேவன் அவரை நொறுக்கச் சித்தமானார் என்றிருக்கிறது. இதனால் பாவம் தேவ சமுகத்தில் மகா தோஷமுள்ளதென்றும், தேவன் பயங்கரமான நீதியுள்ளவராய் இருக்கிறாரென்றும், அவருடைய அன்பும் நீதியும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் இசைவாய் ஒன்றித்து மகிமையாய்ப் பிரகாசிக்கிறதை நேயர்கள் உணர்வார்களாக. மேலும் இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். 1 பேதுரு 1. 18, 19; 1 பேதுரு 3. 18. ரோ. 3. 25. ஆகையால் நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களில் நம்மைக் கழுவித் தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமான்களாக்கின அவருக்கு முன்பாகப் பணிந்து ஸ்தோத்திரிப்பது நமது கடமை என்று உணர்வோமாக. இப்பேர்ப்பட்ட இயேசு எம்பெருமானைக் கடவுள் எனக்கூறுவது ஞாயம் என்று சிறு குழந்தை முதலாய்ச் சொல்லாது விடுமோ?

நிற்க; இயேசு கன்னிமரியாள் வயிற்றில் அற்புதவிதமாய்ப் பிறந்ததனால் மாத்திரமன்று, குறைவில்லாத பூரண பரிசுத்தத்தைத் தமது நடக்கையால் விளக்கித் தமது அரிய பூரண உபதேசங்

களை நமக்குப் போதித்து நமக்காகப் பாடுபட்டு மரித்ததனாலேயும் மூன்றாம் நாளில் திரும்பவும் உயிர்த்தெழுந்துபோய்ப் பரலோகத்தில் வீற்றிருக்கிறதினாலேயுமே கடவுள் என்று சாதிக்கிறோம். ஆசிரியர் 6-ம் பக்கத்தில் புன்னகைக்கிடமான ஒரு புதிய கோட்பாட்டைச் சாதிக்கிறார். ஆதாமும் இயேசுவும் ஒன்றாம். என்ன விநோதம்! நினைக்க நினைக்க வேடிக்கையாய் இருக்கிறதே. ஆதாம் மண்ணிலிருந்து உண்டானவன். இயேசுவோ முன்னறிவிக்கப்பட்டுப் பரிசுத்தஆவியினாலே ஸ்திரீயின்வயிற்றில் உற்பவித்தவர். இவர் வானத்திலிருந்த கர்த்தாவாயிருக்க, ஆதாமோடு எப்படி ஒப்பாக்கலாம்? ஆதாம் பரிசுத்த நிலைமையிலிருந்து தவறினான். இயேசுவோ பரிசுத்தராகவே ஜீவித்தார். பாவமுள்ள மனுஷ்யனுக்கும் பரலோகத்திலிருந்துவந்த கர்த்தனுக்கும் வித்தியாசம் தெரியாமல் எழுதுவது தேவதூஷணையாகாதோ?பரிதாபம்! ஐயோ!! பாவம்!!! இந்த அறிவீனத்தைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாய் இருக்கிறது. ஆதாமினால் வந்த பாவத்தை நீக்கத்தான் இயேசுவாகிய ஒளி உதித்தார். ஆகையால் இதை வாசிக்கும் நண்பர்களே! தேவனுடைய குமாரனைக்காலின்கீழ் மிதித்துத்தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணிக் கிருபையின் ஆவியை நிந்திக்கிறவர்கள் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவான்களாய் இருப்பார்கள் என்று யோசித்துப் பாருங்கள்.

சாமுவேல் தாமஸ் நாடார்.

இந்தக் கண்டனம் செந்தமிழ் நடையில் விளக்கமாக எழுதப்படாமையாலும் எழுத்துப் பிழை நிறைந்து கிடப்பதாலும் எல்லோருக்கும் இது பயன்தராதென்று நம்புகிறோம். ஆதலின் இனி நாடாரவர்களுடைய விஷயம் பிரசுரிக்கப்படமாட்டாது.

ப—ர்.

மேசியாவுக்கும் மகுத்துவமா?

அழகிய திரிசிரபுரத்தில் கல்விச் செல்வமும் பொருட்செல்வமும் ஒருங்கமையப்பெற்றுப் பிரபல பிரபுவாகியும், பற்பல பாஷைகளில் விற்பன்ன விவேகசிகாமணியாகியும் விளங்கிய மஸ்தான் சாஹிபு அவர்கள், தூஷித்தலை யணிகலமாகக் கொண்ட மருட்சி மிகுந்த கிரிஸ்துவர்களுக்கிரங்கிக் கிரிஸ்துவமார்க்கத்தின் கோட்பாடுகளின் தவறுகளை யவர்கள் அறிந்துய்யுமாறு நியாய மழை சொரிந்து, "கிரிஸ்து மதகண்டன வச்சிரதண்டம்" என்ற ஒரு நூலைப் பல்லாண்டுகளுக்கு முன் இயற்றி வெளியிட்டார்கள்.

தஞ்சையிலுள்ள ஞான சிகாமணி முனிஷி யென்னும் கிரிஸ்துவ நண்பரொருவர், அவ்வச்சிரதண்டத்தில் நிலைநிறுத்தப்பெற்றிருக்கிற விஷயங்களையூன்றிக் கவனித்தறியாது அதற்கு மறுப்பெழுதுபவர்போற்றோன்றி அப்புத்தகத்திலுள்ள சில விஷயங்களுக்குத் தவறுதலாகப் பதில் சொல்லி, "மேசியா மகத்துவம்" என்னும் ஒரு புத்தகத்தை யியற்றி, கி. பி. 1861-ல் பிரசுரஞ் செய்தனர். அப்புத்தகம் கிரிஸ்து மதகண்டன வச்சிரதண்டத்தை மறுக்கவில்லை யென்பதும், மேசியாவுக்கு மகுத்துவத்தை நிலைநிறுத்தவில்லையென்பதும் பிறவுமே நாம் இங்கே எடுத்துக் கொண்ட விஷயம். அது வருமாறு:--

மேசியா மகுத்துவ முகவுரை மறுப்பு.

1. பூர்வபக்ஷம்.

திருச்சினாப்பள்ளியிலிருந்த அத்தர் வியாபாரி மஸ்தான் சாஹிபு சென்னபட்டணத்திலிருந்த ஒருத்துவமார்க்கத்தாராகிய வில்லியம் உரோபர்த் என்பவரால் போதிக்கப்பட்ட போதனைகளால் மயங்கித் தாம் வேதாகமங்களை யறியாதிருந்தாலும் வில்லியம் உரோபர்த் என்பவர் கிரிஸ்துவுக்கு விரோதமாக உண்டுபண்ணின புஸ்தகங்களில் அடங்கிய கேள்விகளைத் தெரிந்து அதைத் தம்முடைய கேள்விகளாக்கிச் சத்திய வேதத்திற்கு விரோதமாக, "கிரிஸ்துமத கண்டன வச்சிரதண்டம்" என்னும் ஒரு புஸ்தகத்தை உண்டுபண்ணினார். கிரிஸ்துமத கண்டன வச்சிரதண்டமாவது, கிரிஸ்து மார்க்கத்தைக் கண்டிக்கிற வச்சிரதடியென்பது.

1. சித்தாந்தம்.

கிரிஸ்துமத கண்டன வச்சிரதண்டத்தை நாம் பலமுறை படித்துப்பார்த்தாலும் மஸ்தான் சாஹிபு அவர்கள் முனிஷியாரது கொள்கைகளை மறுத்துக் கேள்வி கேட்கும் விஷயங்களுக்கெ

ல்லாம் புரோடஸ்டாண்டரின் பைபிளிலிருந்தும், கத்தோலிக் கிறிஸ்துவர்களின் கொள்கைகளைக் கண்டிக்குமிடத்து அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிற காமன் பிரையா புத்தகத்திலிருந்தும் கேள்விகள் கேட்டிருக்கின்றாரேயன்றி வில்லியம் உரோபர்த் என்பவரால் இயற்றப்பட்ட புஸ்தகங்களிலிருந்து கேள்விகள் கேட்கவில்லையே இதை நமது பூர்வபக்ஷத்தாரும் அதே முகவுரையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். அஃதாவது; "மஸ்தான் சாஹிபோ கிறிஸ்துவின் தேவ தத்துவத்தைத் தமது குர்'ஆனாகிய வேதத்தைக் கொண்டு மறுக்காமல் சுவிசேஷத்தை (பைபிள்) க்கொண்டே மறுக்கிறார் என்பதே." இதனால், மஸ்தான் சாஹிபு அவர்கள் பைபிளைக்கொண்டே இவரது கொள்கைகளை மறுத்திருக்கிறாரென்று தெரியவருகிறதேயன்றி வில்லியம் உரோபர்த் என்பவரால் உண்டுபண்ணப்பட்ட புஸ்தங்களைக்கொண்டு இவரது கொள்கைகளை மறுக்கவில்லையென்பது தெளிவாம்.

வில்லியம் உரோபர்த் ஒருத்துவமார்க்கத்தாரானதால் இயேசு மனிதனே யென்று அவர் தம் புத்தகங்களில் எழுதி யிருப்பாராயின் அதனால் நம் மஸ்தான் சாஹிபு மயங்கவேண்டியதில்லை. ஏனெனின், மஸ்தான் சாஹிபு உன்னதமான இஸ்லாம் மார்க்கத்தவரானதால் அவருடைய கொள்கையும் இயேசு மனிதனென்பதேயாம். அதுமட்டுமா? இல்லை. பின்னை? கடவுள் மனிதனாகவரான் என்பதும் அவன் ஒரு வயிற்றிற் பிறக்கவில்லையென்பதும் அவன் ஒருவனைப் பெறவில்லை யென்பதும் அவன் அடிமுதலியவற்றைப் பெறுகிறவன் அல்ல என்பதும் அவர் சித்தாந்தமேயாம். ஆகவே அவர் சித்தாந்தத்தின்படி வில்லியம் உரோபர்த்து போதிப்பாராயின் அல்லது எழுதுவாராயின், அதனால் அவர் மயங்குவதெவ்வாறு? ஒருவன் சித்தாந்தத்திற்குப் பொருத்தமாக மற்றவன் பேசினால் அவன் மகிழ்பவனேயன்றி மயங்கான். ஒருத்துவ மார்க்கத்தானாகிய வில்லியம் உரோபர்த்து இயேசுவை மனிதனென்று புஸ்தகங்கள் எழுதி யிருக்கலாம். அவைகளை நமது பூர்வபக்ஷத்தார் பார்த்து அவைகளில் அவரது கொள்கைக்கு விரோதமாய் இயேசு மனிதனேயென்று வரைந்திருப்பதன் நிமித்தம் மயக்கமும் தியக்கமும் கொண்டிருக்குங்காலை, இயேசு கடவுளன்று என்னுங் கொள்கையை மட்டுமன்றி, கிறிஸ்துவர்களுடைய பிரதான கொள்கைகள் பலவற்றையும் தவறென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தக்க ஆதாரத்துடன் காட்டி வரையப்பட்டிருக்கிற வச்சிரதண்டத்தை முனிஷியார் பார்க்கநேரிட்டு முன்னிலும் பன்மடங்கு மயக்கமும் தியக்கமும் கொண்டு, காமாலைக்கண்ணுடையவனுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள் நிறமென்பது போல், மயக்கங்கொண்ட பூர்வபக்ஷியார்க்குப் பைபிளில் தக்க ஆராய்ச்சியையுடைய மஸ்தான் சாஹிபு மயக்கங்கொண்டதாய்த் தோற்றிற்றுப்போலும்.

(வரும்)

யதார்த்தவாதி.

தத்துவ இஸ்லாம்

(முன் 225-ஆம் பக்கத்தொடர்ச்சி)

உங்களுடைய ஜாக்கிரதையான கவனத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்று நான் விரும்புகிற அபிப்பிராயங்களை நோக்கி நாம்போகும் பிரயாணத்தில் இவ்வளவு தூரம் வந்ததும் இனிநாம் நமக்கு அறிமுகமானவொரு பாதையில் திரும்பி, இந்தக்கேள்விக்கும் இன்னும் அவசியமாகக்கேட்கவேண்டி வரும் சில கேள்விகளுக்கும் பௌதிகசாஸ்திரம் பதில் சொல்கிறதாவெனப் பார்ப்போம். சாஸ்திரத்துக்கும் மார்க்கத்துக்கும் உள்ள தீராச்சண்டையைப்பற்றி நாம் அடிக்கடி கேட்கிறோம். ஆனால் அஃதெல்லாம் பௌதிகசாஸ்திரத்துக்கும் லோகாயத மார்க்கத்துக்குமுள்ள சண்டையேயன்றி, உண்மைச்சாஸ்திரத்துக்கும் உண்மைமார்க்கத்துக்குமுள்ள சண்டையன்று. லோகாயதமார்க்கங்களைப் பௌதிகசாஸ்திரத்தோடு ஒன்றும்படிசெய்யும் பிரயத்தனங்களெல்லாம் கேவலம் பயனற்றனவாகவே முடிந்திருக்கின்றன: இன்னும் அவ்வாறே தான் முடியும்.

ஜனஸம்மதமான மார்க்கங்களை ஆராயவும் சாஸ்திரத்துக்குத் தெரிந்தவைகளைக் கவனிக்கவும் முயற்சிசெய்யாமல் சாஸ்திரத்துக்குத் தெரியாதவற்றைப்பார்ப்போம். நிலையானதும் மாறுபாடற்றதுமானவொரு சக்தியால் மரங்கள் வளர்வதையும் புஷ்பங்கள் மலர்வதையும் நாம் பார்க்கிறோம். அந்தச் சக்தியைச் சாஸ்திரஞ்ஞ

ர்கள் உள்நுழைந்து பார்க்கமுடியாத ரகஸியம் என்று கூறுகின்றனர். வாழ்க்கையென்பது உண்மையாகவே இன்னதுதானென்றும், ஆத்மா இருக்கிறதா அல்லது இல்லையாவென்றும், இருக்குமானால், உடல் அழிந்தபின் அஃது எவ்வாறாகின்றதென்றும் சொல்வதற்கு அவர்கள் சக்தியுடையவர்களானதேயில்லை. பாண்டித்தியமடைந்த வைத்தியன் ஒருவன், மானிடசரீரத்திலுள்ள எலும்பு, தசை, நரம்பு, உறுப்பு இவைகளில் ஒவ்வொன்றின் பெயரையும், *மண்ணீரலைத்தவிர, மற்றவற்றின் ஸ்தானங்களையும் தொழில்களையும் கூறுவானாயினும். ஒரு சரீரத்தை உயிருள்ளதாகவும் சுவாசம்விடும் மனிதனாகவும் ஆக்கி, அன்பும் வெறுப்பும், மானிடபிரகிருதிக்கேற்ற எல்லாக்குணங்களும் ஆசாபாசங்களும் நிரம்பியதாகச் செய்யும் சக்தியைப்பற்றி ஒன்றுமே தெரியாத அஜ்ஞானத்தில் மூழ்கிக்கிடக்கிறான். கத்தியினால் ஒரு குத்தாவது, மூளையிலேனும் இருதயத்திலேனும் பாயும் ஒரு குண்டாவது அந்த உயிருள்ள உருவத்தை உயிரற்ற ஜடமாகச் செய்துவிடுகிறது. அவ்வுயிரற்ற உருவம் அதிசீக்கிரத்தில் சீழ்க்கொண்டு அழுகிப்போய், புழுக்கள் பூச்சிகள்ரூபமாகப்புதியஜீவப்பிராணிகளை உண்டாக்குகின்றது. முன்போலவே அம்மனிதனை உயிருள்ளவனாக்கி அன்பும்வெறுப்புமுள்ளவனாகச் செய்வதற்குச் சாஸ்திரஜ்ஞனால் முடியுமா? முடியாது. அம்மனிதனிடமிருந்து ஏதோவொருபொருள், திரும்பிவருவதற்கில்லாது வெளியில் போய்விட்டது. அந்த ஏதோவொரு பொருள்தான் என்ன? அஃது எங்கேபோய்விட்டது? சாஸ்திரம் பதில் சொல்லாமல் ஊமையைப்போலவுள்ளது. மின்சாரம் இன்னதென்று சாஸ்திரம் நமக்குச் சொல்லக்கூடுமா? கூடாது; ஆயினும்மேற்றிசையுலகத்தில் முக்கியமாக அமெரிக்காவில் இந்தநுண்ணிய மறைபொருளான திரவபதார்த்தத்தைச் சேர்த்துக்கட்டி, நமக்குப் பல்விதத்திலும் தொண்டுபுரியும்படி செய்திருக்கிறோம். நமது தெருவழியே ஓடும் வண்டிகளுக்கு அதைப் பூட்டியுள்ளோம்; வீடுகளிலும் வீதிகளிலும் அதன் பிரகாசத்தைக் கக்கும்படி அதைப்பலவந்தப்படுத்தியிருக்கிறோம். இன்னும் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு மனிதனுடைய குரலையும், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு எழுத்துச் சமாசாரத்தையும் கொண்டுபோகும்படிக்கும் அதைச்செய்திருக்கிறோம். ஆயினும் அஃது என்ன? சாஸ்திரத்துக்குத் தெரியவில்லை. புயல் அடிக்கப்போவதை நம்பத்தகுந்த நிச்சயத்துடன் முன்னறிந்து சொல்லச் சாஸ்திரம் கற்றிருக்கின்றது. ஆனால் அகோரசப்தத்துடன் உண்டாகும் சண்டமாருதத்தையும், நமது புருவங்களின்மீது வீசும் மிருதுவான காற்றையும் எழுப்பும் சக்தி இன்னதென்று சொல்லச்சக்தியற்றிருக்கிறது. தூக்கம் இன்னதென்பதும், நாம் ஏன் கனவுகாண்கிறோம் என்னும் அதற்குத்தெரியாத விஷயங்கள். நாம் எப்படி யோசிக்கிறோமென்றும் ஏன் யோசிக்கிறோமென்றும் கூட அதற்குச்சொல்லத்தெரியாது. நமது லோகாயத நாகரிகத்துக்குச் சாஸ்திரம் விசேஷ அனுகூலத்தைச் செய்திருக்கிறது; ரஸாயன சாஸ்திரீயமாய் வெட்டவோ, உருக்கவோ, சோதிக்கவோ சக்தியுள்ள பொருள்களிடையே அது நிச்சயபுத்தியோடு அதிக அகங்காரத்துடன் சஞ்சரிக்கின்றது. ஆனால், ஜீவவாழ்க்கை, மரணம் என்ற ஆச்சரிய விஷயங்களின் முன்னர் நிற்கும்போதும், "இயற்கை" என்று நாம் சொல்லுகிற பல்வகைத் தோற்றங்களையும் அடக்கியாளுகிற அதிசய விதிகள் வேலை செய்வதைப்பார்க்கும்போதும், அது பரிதாபகரமான குழப்பத்துடன் கைகளையும் தலையையும் கீழே தொங்கவிட்டுவிடுகின்றது.

ஆயினும் நமது மேதாவிகளானதத்துவஞானிகள், மனிதனையும், இயற்கையையும் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியவற்றையெல்லாம் சாஸ்திரம் உண்மையில் தெரிந்துகொண்டு விட்டாற்போல மார்க்கத்துக்கும் சாஸ்திரத்துக்குமுள்ள முரண்பாட்டைப் பற்றி ஊக்கமாகவும் மும்முரமாகவும் பேசிக் கொண்டிருக்கும் வண்ணமாகவேயிருக்கின்றனர். சாஸ்திரத்துக்குத் தெரிந்துள்ள விஷயங்களையும் அதற்குத்தெரியாத விஷயங்களையும் ஆராய்ந்து பாருங்கள்; பார்த்தால், மேலான உண்மைகளை அறியவேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கும் ஒருவனுக்கு, அச்சாஸ்திரம் வழிகாட்டியாக விருக்கக் கூடாதவளவு அஜ்ஞானத்தில் அழுந்திக்கிடப்பது தெளிவாகும். ஆயினும், க்ஷீணமடைந்த இக்காலத்தில், மிக்க சிலர்க்குமட்டும் தெரிந்திருக்கும் மேலான சாஸ்திரத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் பொருந்தியிராத விஷயம் நவீன சாஸ்திரத்தில் இல்லையென்று இப்போது உங்களுக்கு வற்புறுத்திச் சொல்வேன்.

எண்ணங்கள் இன்னவென்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய வாணாளில் நிகழும் பற்பல காரியங்களையும் தூண்டுகிற

---

* மண்ணின் நிறமுள்ள ஒருவகை ஈரல்.

காரணங்களைப்பற்றி எப்போதாவது நீங்கள் சர்ச்சைசெய்யப் பிரயத்தனப்பட்டதுண்டா? மிகுந்தசாமர்த்தியமுள்ள தத்துவஞானியொருவர், "காரணங்களைச் சரியானபடி விவரிக்கமுடியாது; அவை நம்முடைய மனத்தில் எழுந்ததானாலும் சரியே அப்போதும் விவரிக்கமுடியாது; நாம் ஏன் ஒரு காரியத்தைச் செய்கிறோமென்பதற்குச் சில வேளைகளில் நமக்குச் சொல்லத்தெரியாது; ஒவ்வொருகாரணத்தையும் அதற்குச் சொல்லலாம்:—சாமான்யஞானம், வழக்கம், மனச்சாய்வு, அனுபவம், கடமை இவற்றைச்சொல்லலாம். எல்லாம் ஒருவழியே நோக்கி இழுத்துக்கொண்டிருக்கலாம்; ஆயினும் நாம் அவற்றை விட்டுப்பிரிந்து வந்து, காரியத்தைச்செய்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்.

இஃது உண்மையல்லவா? சாந்தமாக வோரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, அநேக காட்சிகளைப்போல, தூண்டப்படாது தாமே எழும் உமது எண்ணங்களையெல்லாம் கவனியுங்கள். அவைகளில் ஒன்றைப் பிடித்து வைத்துக்கொண்டு, பத்து நிமிஷமாவது அல்லது ஐந்து நிமிஷமாவது, மனத்தில் உறுதியாக நிலைநிறுத்தப் பாருங்கள். ஒரு நிமிஷம் அதை நிறுத்துவதற்கு முன்னமேயே மற்றொன்று தோன்றும்; ஆகவே முதலில் நிறுத்தியது உங்களுடைய பிடிப்பை விட்டகன்று, உங்களுக்குப் பழைய ஞானம் வருவதற்கு முன்பே, ஓடிப்போய் விடும். உங்களுடைய எண்ணங்களுக்கே நீங்கள் தலைவர்களாக விருக்கிறீர்களா? நீங்கள் உங்களையே அடக்கியாளச் சக்தியுற்றிருக்கிறீர்களா?

ஆனால், "மனிதன் ஒருவனாலும் விளங்கச்செய்ய முடியாமல் இவ்விஷயங்கள் ரகஸியமாக விருக்கையில்அவைகளைப்பற்றிப் பேசுவதில் பயன் என்ன? " என்று யாரோ கேட்பதுபோல் தோன்றுகிறது.

அவைகள் மனிதன் ஒருவனாலும் விளங்கச்செய்ய முடியாத ரகஸியங்கள் அல்ல. லோகாயத சாஸ்திரம் அவைகளை விளக்கச் சக்தியுற்றிருக்கவில்லையென்பது உண்மையே. அதற்குக் காரணம் அந்த லோகாயத சாஸ்திரம் உண்மையைவிட்டு அதிக தூரம் விலகிய மார்க்கங்களில் செல்வதும், மனிதனுக்குத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ள முறைகளைப் பிடிவாதமாகவும் உறுதியாகவும் தவிர்த்துச் செல்வதுமாம். நமது பரிசுத்த தீர்க்கதரிசி—என்றும் அவர்க்கு அமைதியுண்டாவதாக—வாழ்க்கை மரணம் இவைகளைப்பற்றிய ரகஸியங்கள் எல்லாவற்றையும் அறிந்திருந்தார். நாஜரத்வாசியான இயேசுவும் உலகத்துள்ள மற்றைய உண்மைத் தீர்க்கதரிசிகளும் இவ்வாறே அறிந்திருந்தனர். வாஸ்தவ சாஸ்திரமான ஒரே உண்மையானது மானிட அபிவிருத்தியின் தொடக்கத்திலிருந்து அநேக தீர்க்கதரிசிகளின் மூலமாக முகம்மது நபிக்கு—ஹலரத் முகம்மது ஸல்லல்லாஹு அலைகிவசல்லம்—அருளப்பட்டிருக்கிறது. இந்த உண்மைதான் மனித கோடிகளுக்கும் மிக்க ஊக்கத்துடனும் பிரசங்க வல்லமையுடனும் வலிந்து கொடுக்கப்படுகின்றது. ஆனால் ஐயோ! மூடஜனங்கள் அதைத் திரும்பிப்பாராமல் செல்வம் சுகம் சௌகரியம் இவைகளைத் தேடுவதிலேயே கருத்தூன்றியவர்களாய் அலைந்து திரிகின்றனர்.

நாம் சற்று நின்று முக்கியமான ஒரு விஷயத்தைக் கவனிப்போம். தீர்க்கதரிசிகளின் உபதேசங்களும், பௌதிக சாஸ்திரத்தால் அறிந்தவைகளும், நம்முடைய தினசரி அனுபவங்களும் நாம் மற்றைய ஜீவப்பிராணிகளினின்றும் வேறானவர்களென்று நம்மை நம்பும்படி செய்கின்றன. மனிதனிடத்திலும் கேவலம் மிருகத்தன்மையதான குணங்கள் சுமாராக இருக்கின்றன. ஆயினும் அவனிடம் செய்கையிலும் சிந்தனையிலும் சுயேச்சை, புத்திசாமர்த்தியம், அரிய பகுத்தறிவு இவைகள் இருப்பதால், அவன் மிருகத்தைக் காட்டிலும் உயர்ந்தவனாகவே இருக்கவேண்டும். ஆனால் பொதுவான குணத்திலும் எண்ணத்திலும் அவன் மிருகங்களினின்றும் அதிகமாக வேறு பட்டவனா? பார்ப்போம். அதிர்ஷ்டமற்ற ஈ. வந்து விழும்படியான சவுகரியம் வாய்ந்தவோரிடத்தில் சிலந்திப்பூச்சி தனது வலையைக் கட்டுகின்றது. நமக்குத் தெரிந்தவரையில், அந்தச் சிலந்தியின் எண்ணம்தான் என்ன? ஈயின் உடலைத்தின்றால், சிலந்தி, தனது உடற்கூறு விருத்தியடையுமென்று நிதானமாக போசனை செய்கிறதென நீர் நம்புகிறீரா? யுக்திக்கு ஒத்த யூகம் என்னவெனின் அவ்விஷயமாகச் சிலந்தி ஒருவித யோசனையும் செய்வதில்லை. ஈயைப் பிடித்துத் தின்னவேண்டுமென்ற தடுக்கவொண்ணாத உணர்ச்சியினால் அது கட்டாயப்படுத்தப்படுகிறது. அல்லது ஈக்கள் இன்சுவையுள்ளவையென அது கண்டுகொண்டிருக்கிறது. அதனுடைய பொது நடை

யினால் அதற்கு யூகித்தறியும் சக்தியில்லையென நாம் நம்புகிறோம். உலகத்திலுள்ள சிலந்திப் பூச்சிகள் எல்லாவற்றுக்கும் திடீரென்று தின்பதைத் தவிர்த்திருக்கவேண்டுமென்ற உணர்ச்சி வந்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். அந்த வர்க்கத்தின் அபிவிருத்தி நின்றுபோகும். சிலந்திப் பூச்சியே இல்லாது போய்விடும். இனி, மானிடச் சிலந்தியோ வேறு விதமானது. அவனுக்கு யூகித்தறியும் சக்தியுண்டு. இன்னொரு மனிதனைப் பிடிக்கவேண்டுமென்று அவன் ஒரு வலை கட்டுவானானால் பிடிபட்டவன் இவ்வளவு ரூபா கொடுப்பான் என்று வலை கட்டியவன் கணக்கிடுகிறான். ரூபாவை என்ன செய்வதற்காக அவன் விரும்புகிறான்? நன்மை செய்யவும், தனது ஸஹஜனங்களைச் சந்தோஷமாக்கவும், சுகமாக்கவுமா? அப்படியும் சிற்சில வேளைகளில் இருக்கலாம்; ஆனால் பொதுவாக அந்தப் பணத்தைக்கொண்டு தனக்குச் சுகசவுக்கியத்தை வாங்கவும் தன்னுடைய மிருகத்தன்மையான ஆசா பாசங்களைத் திருப்தி செய்துகொள்ள முயலவுமே விரும்புகிறான். பசுவுக்கும் குதிரைக்கும் உண்டு குடிக்கவேண்டுமென்ற உணர்ச்சியிருக்கின்றது. அவ்வுணர்ச்சி, ஒழுங்காகச் செய்த யுக்தி வாதத்தால் உண்டானதன்று; சரீராபிவிருத்தியை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்று ஜீவவர்க்கத்தைக் கட்டாயப்படுத்தும் உணர்ச்சியினாலேயே உண்டானதாம். ஆனால் மனிதனிடம் சரீராபிவிருத்தி உணர்ச்சியைத் தவிர புத்தி சாமர்த்தியமும் ஆத்ம குணமும் அமைந்துள்ளன. இந்தக் குணங்களை அபிவிருத்தி செய்வதையே அவன் இந்த வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருக்கிறானா அல்லது தன்னிடமுள்ள மிருகத்தன்மைக்குத் தன்னை ஆளாக்கித் தேக சுகத்தையும் சவுகரியத்தையும் கொடுக்குமென்று நம்புகிற பொருள்களைப் பெறுவதுதான் உடம்பெடுத்த பயன் என்றிருக்கிறானா? பூர்த்தியான கல்வியைக் கற்கவேண்டுமென்று பாடுபடும் சிறுவன் ஒருவனை நோக்கி ஏன் நீ இவ்வாறு செய்கிறாய் என்று கேட்டால், ஜன ஸமூகத்துக்குத் தொண்டுபுரியத் தன்னை தகுதியுள்ளவனாக்கிக் கொள்வதுதான் தனது முதல் நோக்கமென்று அவன் பதில் சொல்வான். ஆனால் உலகத்தில் மதிப்பையும் பெருமையையும் பெறுவதும், நல்ல அந்தஸ்தையடைவதும், வருங்காலத்துக்குக் கொஞ்சம் செல்வத்தைப் பெறுவதுமே அவனுடைய உண்மைக் கருத்தென்பது சாதாரணமாக இருக்கலாமல்லவா? கல்வியையும் புத்தி சாமர்த்தியத்தின் அபிவிருத்தியையும்

நான் இழிவாகப் பேசவில்லையென்று உங்களுக்கு இப்போது சொல்கிறேன். விஷயத்தை நீங்களே ஆராய்ந்து, மானிடரின் பொதுவான கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று உங்களைத் தூண்டுவதற்கே நான் முயற்சிசெய்ய விரும்புகிறேன். தன்னைத்தானே அறிபவன் ஒருவன் கடவுளை அறிவான் என்று நமது நபி நாயகம் ஓரிடத்தில் கூறியிருக்கின்றனர். அதிகம் சொல்வானேன், நீங்களே கவனித்துப் பார்த்தால் விஷயம் மிக்க இன்பமானதாகவே யிருக்கக் காண்பீர்கள்.

* “நமது மார்க்கத்துக்கும், வாழ்க்கை மரணத்தைப்பற்றிய ரகஸியங்களுக்கும் இவற்றோடுள்ள சம்பந்தம் என்ன?”என்று யாரேனுமொருவர் கேட்கலாம்.

* ஒவ்வொன்றுந்தான். சாமானிய கல்வியைக் கற்றவனால் திகிலோடும் ஆச்சரியத்தோடும் கருதப்படுவதும் பலபேர்களால் உறுதியானதென்றும், ஒரு நாளும் தவறாததென்றும் எண்ணப்படுவதுமான நவீன சாஸ்திரம் மானிட வாழ்க்கையின் முக்கியமான விஷயங்களை விளக்கச் சக்தியில்லாமலிருப்பதையும், அப்படிச் சக்தியற்றிருப்பதை ஒப்புக் கொள்வதையும் உங்களுக்கு நேருக்கு நேரில் காட்டுவது அதுதான். இன்னும், விலைமதிக்கமுடியாத இவ்வித ஞானத்தைப் பெறுவதற்குச் சாஸ்திரம் ஒருபோதும் கேட்டிராத, மார்க்கங்கள் இருக்கலாமென்று மதியூகிகள் நம்புவதற்கான பிரபோதங்களையும் அது கொடுக்கின்றது.

(தொடரும்)

---

* இவ்விடங்களில் சொல்லப்படும் விஷயம் இன்னதென்பது விளங்கவில்லை. இந்த வியாசம் முழுதிலும் விளங்காத விஷயங்கள் அநேகமுண்டு. ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்போர் தமிழ்மட்டும் அறிந்தோர்களுக்கு விளங்கும்படி எழுதவேண்டுமல்லாமல் ஆங்கிலத்திலுள்ள ஒவ்வொரு பதத்துக்கும் தமிழில் பிரதிபதம் போட்டுக் கொண்டேபோனால் அது சரியான மொழிபெயர்ப்பாகாது. முதலில் ஆங்கிலத்தைப் படித்தவருக்குத்தான் இவ்வகையான மொழிபெயர்ப்பு விளங்கும். தமிழில் எழுதும்போது தமிழ் மரபின்படியே எழுதவேண்டும்.

ப—ர்.

அலி ஹஸீன்.

(பாரஸீகக் கவி சிரேஷ்டர்.)

பாரஸீகம், மத்திய ஆசியா, எகிப்து, இந்தியா, ஸ்பெயின் முதலிய நாடுகளில் இளம்பிறைக் கொடி மேலோங்கி யாடிக்கொண்டிருந்த காலங்களில் அங்கங்கே பற்பல கவி சிரேஷ்டர்கள் விளங்கிக்கொண்டிருதந்தனர் என்பது உலகமறிந்த விஷயம். காவிய மெழுதுவதிலும் யுத்தங்களை வர்ணிப்பதிலும் பிர்தௌஸி சிறந்தவராக விருந்தார்; சன்மார்க்கத்தைப் போதிப்பதில் ஸஅதி ஒப்புயர்வில்லாதவரானார்; ஹாபிஸ் என்பவர் இனிமையான பாரஸீகப் பாடல்களைப் பாடியுள்ளார். ஈரடிச் செய்யுள்கள் இயற்றுவதில் உமர்கையூம் கைதேர்ந்தவராக விருந்தார். ஆழ்ந்தகருத்தும் இனிய ஓசையுமுள்ள பாடல்களை அமீர் குஸ்ரு என்பவர் இயற்றி யிருக்கின்றனர். நஸீர், ஸாபாய், அலி ஹஸீன், முதலியோர்களும் பேர்போன கவி சிரேஷ்டர்களாகவே யிருந்தனர். இங்கு அலி ஹஸீன் என்பவருடைய ஜீவிய சரிதச் சுருக்கத்தையே எழுதுவதாகத் தொடங்கினோம்:

"முகம்மதலி" என்ற இயற்பெயரையும் "ஹஸீன்" என்ற புனை பெயரையுமுடைய நமது கதாநாயகர் பாரஸீக நாட்டின் தலைநகரான இஸ்பஹான் என்னும் நகரில் ஜனனமானார். அவர் ஜனனமான காலம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியென்று மட்டுமே பொதுவாகத் தெரிகின்றது. அவர் உயர் குலத்தில் உதித்தவராதலால் கல்வி கேள்விகளில் வல்ல பிரபல உபாத்தியாயர்களால் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டனர். "விளையும் பயிர் முளையிலே" என்பது பழமொழி. பிற்காலத்தில் தமக்கு வரப்போகும் பேரையும் பிரதாபத்தையும் சூசிப்பிக்கும் குணங்களைப் பாலியத்திலேயே அலிஹஸீன் வெளிப்படுத்தினார். நியாய சாஸ்திரம், கணித சாஸ்திரம், வைதீக கிரந்தங்கள் முதலியவைகளில் நமது கதாநாயர் அதிசீக்கிரத்திலேயே பாண்டித்தியமடைந்தார். இவர் எங்கே யாதொரு பயனுமில்லாததாகக் கருதப்படும் கவன விஷயத்தில் கருத்தைச் செலுத்தி விடுவாரோ என்று பயந்து, இவருடைய பிதா இவரை அவ்வழியில் செல்லாதிருக்குமாறு வேண்டிய முன் ஜாக்கிரதைகள் செய்திருந்தார். என்னதான்

இவ்வாறு இடையூறு நேர்ந்தபோதிலும் நமது கதாநாயகர் செய்யுள் இயற்றுவதில் சாமர்த்தியத்தையும் சுலபத்தையும் அடைந்து அதி சீக்கிரத்திலேயே தமக்குள்ள அரிய சக்தியை வெளிப்படுத்தத் தொடங்கினார். முதன் முதலில் சற்றுச் சங்கோசத்தால் தமது காவியங்களை வெளிப்படுத்தவில்லை. இடையிட்ட அவகாசங்களில் இவர் வைத்திய சாஸ்திரத்தையும் கற்றுணர்ந்தார். தமது ஆயுள் முழுவதையும் கல்வியைக் கற்பதில் செலவு செய்யவேண்டுமென்று தீர்மானித்தபடியே இவர், சம்சார வாழ்க்கையினாலுண்டாகும் கவலைகளுக்கும் மனச்சஞ்சலத்துக்கும் இடங்கொடுக்கக் கூடாதென்று எண்ணிக் கல்யாணம் செய்துகொள்ளாமல் தமது வாணாள் முழுவதையும் கழித்தனரென்றால் இவருக்கு ஞானத்தின் பால் இருந்த பேரவா எவ்வளவு என்பதைத் தனியே கூறவும் வேண்டுமோ?

இவருக்குப் பாலியத்திலேயே பெற்றோர்களுடைய வியோகம் நேரிட்டது. குடும்ப வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பந்தங்கள் அற்றுப்போவதற்கு இவ்வியோகம் ஏற்றதென்றே இவர் எண்ணிச் சிலாகித்தார். கூச்ச சுபாவமுடைய நமது கதாநாயகருக்கு உலக வாழ்வைத் தனிமையாகவே நடத்தவேண்டியதாயிற்று. ஆதலின், தமது மனத்துக்குச் சமாதானத்தையும் ஆறுதலையும் கொடுக்கக்கூடியது தேச சஞ்சாரம்தான் என்றறிந்து, பிரயாணப்படத் தொடங்கினர்.

முதன் முதலில் தமது ஜன்ம தேசமாகிய பர்ஸியாவில் உள்ள முக்கிய பட்டினங்களுக்கெல்லாம் சென்று, ஆங்காங்குள்ள அற்புதங்களையெல்லாம் கண்டு களித்தனர். பின்னர், முகம்மதிய ராஜ்யத்தின் அழகு விளங்கிக்கொண்டிருந்த நகரங்களுக்குச் சென்றனர். கலீப் சக்கரவர்த்திகளுடைய புராதன தலைநகரான பக்தாத், கிர்மான், குராஸான் முதலிய பட்டினங்களுக்கும் விஜயம் செய்தார். புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்யவேண்டிப் பின்னும் இவர் செய்த பிரயாணத்தில் திருமக்காவுக்குப் போகவேண்டிப் பிரபலமாக விளங்கிய கடற்றுறைப் பட்டினமாகிய ஸூரத் நகருக்குவந்து சேர்ந்தார். பர்ஸியாவிலும் அதனை யடுத்

த நாடுகளிலும் அப்போது உண்டாகிக் கொண்டிருந்த ராஜாங்கக் குழப்பங்கள் இவருக்குச் சமாதானத்தைக் கொடுக்காமற் போயின. எப்போதுமே காவியத்தில் கருத்தைச் செலுத்திய மனத்துக்கு ராஜாங்க மாறுதல்கள் ஒருபோதும் இன்பத்தையாவது, சந்தோஷத்தையாவது கொடுக்கா. ஆதலால், இவ்வித விஷயங்களால் மனத்திருப்தி அடையாத ஹஸீன் அமைதியும் தொந்தரையில்லாமையும் பொருந்திய வேறொரு ஸ்தலத்தில் தமது வாணாளைக் கழிக்க உத்தேசித்தனர்.

அப்போதுதான் இவர் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டனர். ஹிந்து மாகாணத்தின் வழியாக இந்திய நாட்டின் எல்லைப்புறத்தைக் கடந்துவந்து, மூஸ்தான், லாகூர் முதலிய பட்டணங்களின் வழியே டில்லிப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார். அப்போது டில்லியின் பெருமையும் சீரும் சிறப்புமாகிய தீபச்சுடர் அணைந்துபோகும் தருவாயிலிருந்தது. நாதர்ஷா என்னும் பார்ஸிய சக்கரவர்த்தி படையெடுத்து வந்து இந்திய ராஜ்யத்தை மிகுதியாகச் சீர்குலைத்துவிட்டுப் போயினன். இவ்விஷயமும் நமது கதாநாயகர் மனத்தில் ஆழ்ந்து பதிந்திருந்தது. இத்தகைய அருஞ்சந்தர்ப்பத்தில் நமது ஹஸீனுடைய அந்தஸ்தும், உயர்குலமும், அரிய சாமர்த்தியமுமே இவருக்குத் துணையாகவிருந்தன. நாட்டில் உள்ள பிரமுகர்களெல்லோரும் இவருக்குவேண்டிய உதவிகளைச் செய்தனர். ஆகவே, நாதர்ஷா படையெடுத்து, வந்ததில் நமது ஹஸீனுக்குத் தெய்வாதீனயாய் யாதோர் அபாயமும் இல்லாமலிருந்தது.

இவர் டில்லியில் நெடுங்காலம் தாமதிக்கவில்லை. இந்தியாவையும் இந்திய கவிகளையும் இவர் தூஷித்துப் பேசினபடியால் டில்லிப்பட்டணத்தில் இவரது வாழ்க்கை மனரம்மியமில்லாததாயிற்று. ஆகவே அந்நகரை விட்டுவிட்டு ஆக்ரா நகருக்கும் அப்பால் காசிவழியாகப் பாட்னா நகருக்கும் சென்றார். பின்னர், மறுபடியும் காசிக்கே திரும்பிவந்து அங்கேயே தமது வாணாளின் எஞ்சிய பாகத்தையும் கழித்தனர். கி. பி. 1766-ம் ஆண்டில் இவர் காசியிலேயே தேக வியோகமாயினர். இப்போதுள்ள ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து நகருக்குவரும் ரஸ்தாவில் இருக்கும் “படிமான்” என்னுமிடத்தில் இவரது பிரேதம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

காசிப்பட்டணத்தில் இவர் உயர்ந்த அந்தஸ்தினரைப்போலவே வாழ்ந்தனர். இவருக்கென்று எழுப்பப்பட்ட கோரியை இவரே தமது வாழ்நாளிலேயே தம்முடைய சொந்தச் செலவில் கட்டிமுடித்துக்கொண்டனர் என்று சொல்லப்படுகின்றது. இன்னும் இவர் தம்முடைய அந்தியகாலத்துக்குச் சற்று முன்னே இவரது சவத்தைச் சேமித்து வைத்திருக்குமிடத்துக்கு அருகில் சாமான்யமான அறைகளுள்ள ஓர் இடத்தில் வாசஞ்செய்யப் போனதாகவும் கர்ண பரம்பரைச்செய்தி யொன்றுண்டு. இவருடைய கோரியில் விசேஷமொன்றுமில்லை. சிற்பவேலைகள் அருமைப்பாடுள்ளனவாகக் காணப்படவில்லை. டில்லி, லக்னோ முதலிய ராஜகிருகங்களைத் தவிர்த்து, மறைவாகவே வாழ எண்ணம் கொண்ட இவரது அருமை பெருமைகளைக் காசிவாசிகள் அவ்வளவாகத் தெரிந்து கொண்டிருக்கமாட்டார்கள். கோரியின் மேலுள்ள சரமகவி இவராலேயே எழுதப்பட்டதாம். தம்முடைய ஜன்மதேசத்தையும் ஸஹ ஜனங்களையும் விட்டு விட்டு, மனச்சமாதானத்தைப் பெறும்பொருட்டு மிகுதியாக வெளிப்பிரயாணம் செய்ததையும், ஆங்காங்கு தாம் கஷ்டப்பட்டதையும், ஜனங்களுக்குத் தம்மிடம் ஏற்பட்ட விரோதத்தையும், சாஸ்வதமான அமைதியைக் கொடுக்க இஸ்ராயீல் வந்ததுவரையில் ஜனங்களால் தாம் அடைந்த துன்பங்களையும் அச்சரம கவியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

நமது கதா நாயகரான கவி சிரேஷ்டருக்கு ராஜநீய விஷயத்திலும் ராஜாங்க முறையிலும் பழக்கமுண்டு.

ஜலாலுத்தீன்.

ஒரு வினா.

ஹனபி மதுஹபின்படி மையத்தைக் குளிப்பாட்டும் மனிதர்கள் குளிக்கவேண்டியது வாஜிபா, ஸுன்னத்தா, முஸ்தகப்பா?

வாஜிபு, ஸுன்னத்து அல்லது முஸ்தகப் என்று ஏற்பட்டதற்கு மூலகாரணமென்ன?

நம்மார்க்கப்படி ஒரு செய்கை வாஜிபு அல்லது ஸுன்னத்து அல்லது முஸ்தகப் என்று தீர்மானம் செய்திருக்கிறதைப் போலி ஆதாரங்களைக்கொண்டு முஸ்தகப்பை ஸுன்னத்தென்றும், ஸுன்னத்தை வாஜிபென்றும் சொல்வது குற்றமாகுமா?

முஸ்லிம் மார்க்காபிமானி.

இக்கடிதக்காரர் ஒரே வினாவை மூன்று பகுப்பாகப் பிரித்துக் கேட்கிறார்; இதில் மூன்றாவது பிரிவு இன்னதென விளங்கவில்லை. இந்த வாக்கியம் தவறாயிருப்பதால் இதிலுள்ள விஷயமும் விளங்கவில்லை. முதல் இரண்டும் நன்றாய் விளங்குகின்றன. எல்லோருக்கும் விளங்கும்படி தெளிவாய் எழுதினால் மிக்க பயனுண்டாம்.

ப—ர்.

* * *

புத்தகவரவு.

மதுரை இஸ்லாம்மதாபிவிர்த்திசங்கத்தாரால் அனுப்பப்பட்ட சீறாவேண்பா என்னும் புத்தகத்தைப் பார்த்தோம். மிக்கசந்தோஷமாயிற்று. நபி அவதாரப்படலமட்டும் அதில் 125 நேரிசை வெண்பாக்களால் இனிமைபெறப்பாடப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் எளிதில் பொருள்விளங்கும்படியான எளியநடையில்பாடப்பெற்றிருப்பதாலும் இதன்விலை ஓர் அணாவாதலாலும் இதை எல்லோரும் வாங்கிப் பயன்பெறுவார்களென்று நம்புகிறோம். இனி இதன் மற்றப்படலங்களும் சீக்கிரம் வெளிவருமென்பதை எதிர்பார்க்கிறோம். இது மதுரையிலும் கிடைக்கும்; இஸ்லாம் நேசன் ஆபீஸிலும் விற்கப்படுகிறது.

மதுரைத்தமிழ்ச் சங்கவித்துவான் கீழக்கரை ஸ்ரீமாந், செ. முஹாபிலு, செய்பிது முகம்மது ஆலிம்புலவரவர்களியற்றிய முனாஜாத்து மாலிகை என்னும் புத்தகத்தைப் பார்வையிட்டோம். அதில் அல்லாகுதஆலா, நபிகள் நாயகம், அலிரலியல்லாகு அன்கு, கௌதுல் அகுலம், சாகுல்ஹமீது ஆண்டவர்கள் ஆகியஐவர்மீதும் 66 செய்யுட்களால் முனாஜாத்துக்கள் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் எளிதில் விளங்கும்படி செய்யுள்நடை எளிதாயிருக்கிறது. பாடல்கள் செந்தமிழ் நடையில் எழுத்துப்பிழையற இயற்றப்பட்டிருப்பதால் பொருள் தெரிந்துகொள்வதில் சிரமமில்லை. "தான் கற்றநூலளவேயாகுமா நுண்ணறிவு" என்றபடி இந்நூலாசிரியருடைய நூலாராய்ச்சிக்குத்தக்கபெருமை இவர்களுடைய பாடல்களில் காணப்படுகிறது. இன்னும் இப்புத்தகம் மிக்கநேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதை இவர்கள் எல்லோருக்கும் இனாமாகவே கொடுத்து வருகிறார்கள். இஸ்லாம் நேசன் ஆபீஸிலும் இஃது இனாமாகக்கிடைக்கும். பிரம்பூர் மதுரஸாவிலும் அகப்படும். நமக்கு அரை அணாஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் ஒரு புஸ்தகம் இனாமாக அனுப்புவோம்.

சாதுல்லாகான்.

(முகலாய மந்திரி சிரேஷ்டர்)

அலாமி பஹாமி என்ற குடும்பப் பெயரும், ஜும்லத்துல்முல்க் என்ற பட்டப்பெயரும் பெற்று விளங்கிய "ஸாதுல்லாகான்" என்னும் முகலாய சார்வ பௌமத்தின் பிரதான மந்திரியின் ஜீவிய சரித்திர சுருக்கத்தை இப்போது எழுதுவதாகத் துணிந்தனம்; அபார சக்தியும் அருமையான நற்குணங்களும் ஒருங்கே வாய்ந்த இம்மகானுடைய ஜனன நகரமும் ஜனன காலமும் தெரியாமல் கிடக்கின்றன; இவர் பெருங் குடும்பங்களைச் சேர்ந்தவரல்லராதலால்தான், இவ்விஷயங்கள் வெளிவரவில்லை; ஆயினும், ஹிஜ்ரி 1008-ம் ஆண்டில் பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஜாங் ஜில்லாவிலிருக்கும் "சினியாட்" என்னும் சிற்றூரில் இவர் அவதரித்தனரென்று முஸ்லிம் சரித்திர நூலாசிரியர்கள் கூறுகின்றனர்; இவர் பிறந்த தினத்திலேயே இவரது பிதா மரணமடைந்தனர்; ஆதலால், அண்டையயலார்கள் இந்தக் குழந்தை துரதிருஷ்டமுள்ளதென்று சொல்வது வழக்கம்; ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இவருடைய மாதாவும் தேக வியோகமாயினர். அதன்மேல் 'சினியாட்' என்னும் ஊரை விட்டுப் புறப்பட்டு, அக்காலத்தில் முகம்மதியக் கல்வி போதிக்கப்பட்டுவந்த லாகூர்ப் பட்டணத்தைச் சேர்ந்து அங்குக் கல்வி கற்கத்தொடங்கினர்; கலாசாலை யதிகாரிகள்

162395

[illegible] 11, N01 N01-3

இவருக்கு உணவும் உடையும் கொடுத்து உதவினர்; கல்வியில் இவர் காட்டிய ஊக்கமும், இவரது நற்குண நற்செய்கைகளும், கடினமான விஷயங்களைக்கூட மிக்க எளிதில் உணர்ந்து கிரகித்துக் கொள்ளக்கூடிய புத்திக் கூர்மையும் பிறர்க்குக் கிடைக்காத "முல்லா ஸாதுல்லா லாகூரி" என்னும் பட்டப்பெயரை இவர்க்குக் கொண்டுவந்தன; இவரது கல்வித்திறமையைக் கண்டுவியந்த மாணவர்களெல்லோரும் பற்பல விடங்களிலிருந்தும் திரள்திரளாகக் கூடிவந்து இவரிடமிருந்து கல்வியைப் பெறுவாராயினர்.

ஞான விஞ்ஞானங்களில் பாண்டித்தியமடைந்த நமது ஸாதுல்லாகான், பின்னர், லாகூரில் தாம் மதித்த பேகார் முல்லா குவாஜா என்னும் பிரபல ஸூபி சிரேஷ்டரிடமிருந்து ஆத்ம விஷயமான விசாரங்களைச் செய்வாராயினர்; இவரது கல்வி, பக்தி, சன்மார்க்கம், நற்குணம், யோக்கியதை, இவைகளெல்லாம் லாகூர் நகரவீதிகளில் இவருடைய பெயரே ஒரு பழமொழியாக மாறும்படி செய்துவிட்டன. இம்மகானுடைய பூர்ண பாண்டித்தியம், அருமையான அமைதிக்குணம், காட்சிக்கெளிய தன்மை, அபார ஜனரஞ்சகத்துவம் ஆகிய இவையெல்லாம் அக்காலத்தில் மகோன்னதராய் வீற்றிருந்த மொகலாய சார்வ பௌம சக்கரவர்த்தியவர்களுடைய அறிவுக்கு எட்ட, அவர்கள் நமது ஸாதுல்லாகானைத் தம்முடைய தலைநகருக்கு அழைப்பிக்கும்படி பிரதான மந்திரியான முஸாவிகான் என்பவருக்கு ஆக்ஞைசெய்தார்கள். இக்கட்டளையின்படி, நமது கதாநாயகர் ஹிஜ்ரி 1050 - ம் ஆண்டில் ரம்லான் மாதம் 10-ந்தேதியன்று டில்லிக்கு வந்தனர்.

அக்காலத்தில் போர்த்தொழிலில் புகழ்பெற்றவர்களே அரசருடைய தயவைச் சம்பாதிப்பவர்களாயிருந்தனர். ஆயினும், நம்முடைய ஸாதுல்லாகான் விஷயத்தில் மட்டும் அவருடைய கல்வித்திறமையே சக்கரவர்த்தியின் தயவைப் பெறும்படி செய்தது. மனிதர்களுடைய குணாகுணங்களைத் தெரிந்து கொள்வதில் மகா சமர்த்தரான ஷாஜஹான் சக்கரவர்த்தி, நமது கதாநாயகரிடத்தில் இலைமறை காய்கள்போல விருந்த அரிய சக்திகளைக் கண்டு, அவர் ஒரு சிறந்த இராஜ்ய தந்திர நிபுணராகலாமென்று நினைத்து, அவருடைய கல்விக்கும் ஞானத்துக்கும் ஏற்றதான பொறுப்புவாய்ந்த உத்தியோகமொன்றைக் கொடுத்தனர். ஐந்து வருஷங்களுக்குள் நம்பிக்கையான அரிய பல வேலைகளையும் ஸாதுல்லாகான் பார்த்து விட்டபிறகு, ஹிஜ்ரி 1055-ம் ஆண்டில் ரஜப் மதியில் 25-ம் தேதியன்று பரந்த மொகலாய சார்வபௌமத்தின் பிரதான மந்திரியாக நியமிக்கப்பட்டனர். இதைப்பற்றி ஒரு கதையுண்டு. அஃதாவது: ஸாதுல்லாகானுடைய சாமர்த்தியம், நிர்வாகசக்தி, கண்டிப்பான உறுதி காரியத்தில் கண்ணாயிருத்தல், சுத்தமான நடை, உண்மையான உத்தமகுணம், கடமையைச்செய்வதில் பின்வாங்காமலிருத்தல் முதலிய குணங்களையெல்லாம் அனுபவத்தில் கண்டுகொண்ட சக்கரவர்த்தி, இவர்க்குப் பிரதான மந்திரி ஸ்தானத்தைக் கொடுக்கலாமென்று எண்ணினர். ஆனால், அப்போது அப்பதவியைத் திறமையுடன் வகித்துவந்த இஸ்லாம்கான் என்பவரை வேறொரு ஸ்தானத்துக்கு அனுப்பவேண்டியதாயிற்று. அத்தருணத்தில், தக்ஷிணத்தில் கவர்னராகவிருந்த கான்துரான்கான் என்பவர் மரணமடைந்துவிட்டதாகச் சமாசாரம் வந்தது. உடனே சக்கரவர்த்தியானவர், இஸ்லாம் கானை வரவழைத்து, தக்ஷிணம் கவர்னர் ஸ்தானத்துக்கு ஒரு தகுந்த மனிதனைப் பார்க்கும்படி கட்டளையிட்டனர். சக்கரவர்த்தியின் உள்ளக்கருத்தை யறிந்த இஸ்லாம்கான், தன்னைத்தவிர வேறு தகுதியுள்ளவரிருப்பதாகத் தெரியவில்லையென்று கூற, இவ்வித வார்த்தை எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சக்கரவர்த்தி, இஸ்லாம்கானை, மந்திரி ஸ்தானத்தை ஸாதுல்லாகானிடம் ஒப்புவித்துவிட்டு, உடனே தக்ஷிணத்துக்குப் புறப்படும்படி உத்தரவிட்டனர். ஆகவே, இஸ்லாம்கானுடைய சுயநயம் கருதாக்குணமே தான் ஸாதுல்லாகானுக்குப் பிரதான மந்திரி ஸ்தானத்தைத் தந்தது.

ஒரு நாட்டில் வாழும் ஜனங்களுடைய சுகசவுகரியங்கள், அவர்களுடைய அபிவிருத்தி முதலியவைகளால் இராஜாங்கம் நடந்தேறிவரும் விதத்தைக் கண்டுகொள்ளலாம். முக்கியமாக வியவசாயிகளைக் கவனிக்கவேண்டும். இவர்கள் திறைப்பணத்தை நேராகவே கஜானாவில் செலுத்தவேண்டியிருந்ததனால், இடையில் உள்ள சிறு உத்தியோகஸ்தர்களுக்குக் கைக்கூலி கொடுத்துக் கஷ்டப்படவேண்டியிருந்தது. அற்ப நிலம் வைத்துக்கொண்டு பி

ழைக்கும் ஏழைகள் இடையிலுள்ள சிறு தெய்வங்களுக்குப் பூசை போடவேண்டியிருந்ததைத் தெரிந்துகொண்ட ஸாதுல்லாகான், உடனே அவ்விஷயத்தில் தலையிட்டுக் குடிகளுக்கு அவ்விதமான கஷ்டமே வராமலிருக்கும்படி ஏற்பாடுகள் செய்துவிட்டனர். அவருடைய காலத்தைப்போல மற்றக் காலங்களில் இன்பமாகக் குடிகள் வாழ்ந்ததில்லையென்று கூறப்படுகின்றது.

அரசிறை வரவுசெலவு விஷயங்களில் ஸாதுல்லாகான் சிறந்த நிபுணராக விருந்தபடியால், சக்கரவர்த்தியால் அவர் நிதித்தலைவராக நியமிக்கப்பட்டார். அதில் இவர் மிகுந்த ஊக்கமும் சிரத்தையும் காட்டி உழைத்ததன் பயனாக, நிலவரும்படி வருஷமொன்றுக்குப் பதினேழுகோடி ரூபாவிலிருந்து இருபத்து மூன்றுகோடி ரூபாவாக அதிகரித்து விட்டது. சர்வ ஜாக்கிரதையுடன் அவர் இருந்து வேலை பார்த்ததனால், அரண்மனை பூஸ்திதிகள் முன்னே கொடுத்த வரும்படியைக் காட்டிலும் ஆறுமடங்கு அதிகமான ஆதாயத்தைக் கொடுத்தன.

(தொடரும்.)

ஜலாலுத்தீன்.

வர்த்தமானம்.

மணி-1-க்குப் பத்துலட்சம் ஸ்டாம்பு விகிதம் நாள்முழுதும் ஓயாமல் ஒவ்வொருநாளும் ஒருவருஷம் வரையில் அச்சடித்துக் கொண்டிருந்தாலும் இப்போது உலகத்தில் வேண்டியிருக்கும் மகாமாட்சிமைதங்கிய 5-ஆவது ஜார்ஜ் அரசரவர்களின் தலையின் முத்திரை போடப்பட்ட ஸ்டாம்புகள் போட்டு முடியாதென்று ஓர் ஆங்கிலப்பத்திரிகை கூறுகிறது.

* * * *

நம் மன்னரவர்களின் முடிசூட்டு வைபவத்துக்காக இங்கிலாந்துக்குப் போயிருக்கும் போப்பால் பேகம் அவர்களை அங்குள்ளோர் மிக்க மரியாதையோடு நடத்துகிறார்களென்று கேள்வியுறுகிறோம். மேமீ 9உ அரசரும் அரசியாரும் பேகம் அவர்களைக் கண்டுகொண்டார்கள். முடிசூட்டு நாளில் பேகம் அவர்கள் முகமூடியிட்டுக்கொண்டே தர்பாருக்குப் போவார்களாம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8-SEP 1911
MADRAS.

بسم الله

இஸ்லாம் நேசன்

فا نظر الى ما قال و لا تنظر الى من قال*

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”

தொகை-2] 1911, ஜூன். [வகை-8

இஸ்லாம்.

(278-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஈஸா, மூஸா, தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குண்டான வேதங்களில் சொல்லப்பட்ட உண்மைகளே அல்குர்’ஆனிலும் சொல்லப்பட்டுள்ளன. எல்லாத் தேசங்களிலும் எல்லா நபிமார்களுக்கும் உண்டான வேதங்களின் சாரம் இதில் காணப்படுகிறது. அவற்றில் காணப்படாத விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. குர்’ஆனுடைய கட்டளையாலும், நம்முடைய பரிசுத்த தூதரவர்களாலும் முஸ்லிம்களுடைய மனத்தில் நன்றாகப் பதிக்கப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான விஷயத்தை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம்; அஃதாவது: எல்லா மதங்களும் கடவுளிடத்திலிருந்தே உண்டாயின என்பதே. இதைப்பற்றி அடிக்கடி அநேகம் ஆரிபீன்கள் வற்புறுத்திச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் காலம் செல்லச்செல்ல இந்த உண்மையை நாம் மறந்துவிடுகிறோம். தாராள சிந்தையென்னும் நற்குணம்போய் அ

ற்பகுணம் என்னும் தொற்றுவியாதி நம்மைப்பற்றிக்கொண்டது. ஆகவே வேறு மதத்தினர்போலவே நாமும் பிறருடைய மார்க்கம் தாழ்ந்ததென்றும் நம்முடைய மார்க்கமட்டும் கடவுளால் உண்டாக்கப்பட்டதென்றும் வாதுசெய்ய ஆரம்பிக்கிறோம். இதனால் ஒருவருக்கொருவர் இருந்த பரஸ்பர நட்பானது குறையத் தலைப்பட்டது. அன்னியரை அன்பாய் நடத்தவேண்டுமென்னும் எண்ணம் நம்மைவிட்டு நீங்கிவிட்டது. அநேக மதங்கள் தங்குவதற்கு இடமாயிருக்கும் இந்த இந்தியாவில் மதசம்பந்தமான குழப்பம் எப்போதும் இருக்கிறது. மதத் தர்க்கங்களும் கலகங்களும் முற்காலத்தில் மிக்கிருந்தன. அவ்ற்றால் அநேகம் தீமைகளெல்லாம் விளைந்தன. பிறர்மதத்தில் குற்றம் கண்டுபிடிப்பதே அக்காலத்தில் பெருவழக்காயிருந்தது. முற்காலங்களில் மதங்களை ஸ்தாபித்த பரிசுத்த உத்தமபுருஷர்களை இப்போது இவ்வுலகத்தில் கோடிக்கணக்கானவர்கள் பெருமை பாராட்டுகிறார்கள். அப்படிப்பட்ட மகான்களை முற்காலத்தோர் மிகுதியாகப் பழித்துவந்தார்கள். அறிவற்ற மூடர்கள் மார்க்கஸ்தாபகர்களின் மேன்மையை யறியாமல் பிறமதங்களைத் தூஷித்தலையே முதற்கடமையாகக் கொண்டு அவர்களையெல்லாம் திட்டிக்கொண்டிருந்தார்கள். பிறமதங்களைத் தூஷிக்கும் வழக்கம் இப்போதும் இருப்பதனால் தான் முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஒற்றுமையுண்டாவது கஷ்டமாயிருக்கிறது. நாம் இருதிறத்தாரும் ஒத்துழைத்தால் மிக்க நன்மையுண்டாகும். நாம் ஒருவர்மேல் ஒருவர் வைத்திருக்கும் துவேஷத்தால் நம்முடைய பொதுவான காரியங்களெல்லாம் பலிக்காமல் போகின்றன.

இவ்வாறு தனக்கு முன்னுள்ள உண்மையான வேதங்களின் சாரங்களைச் சேர்த்துக்கொண்டு வந்திருப்பதுதான் இந்த இஸ்லாம் மார்க்கம். இஃது, உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் தழுவிக்கொண்டிருக்கிறது. முன்னுள்ள நபிமார்களுக்கு அருளப்பட்ட வேதங்களின் இரகசியங்களெல்லாம் அல்குர்'ஆனில் காணப்படுகின்றன. முற்காலங்களுக்கு வேண்டிய ஒழுங்கு முறைகள் அதில் காணப்படுவதல்லாமல் பிற்காலத்துக்கு வேண்டிய எல்லாப் புது ஏற்பாடுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்கள் வெவ்வேறிடங்களில் தனித்தனியாய் வசித்தபோது அவர்களுக்கு வேண்டியிருந்த சட்டங்களும், எல்லோரும் ஒன்றாய்ப்போக்குவரவுசெய்து கலந்திருக்கும் இக்காலத்துக்கும் வேண்டிய சட்டங்களும் அல்குர்'ஆனில் அமைந்திருக்கின்றன. ஜீவவாழ்க்கைக்குவேண்டிய அவசியங்களுக்குத் தக்க முறைகளெல்லாம் நம்முடைய வேத புத்தகத்தில் உண்டு. சித்தாந்தங்களைமட்டும் சொல்லிக்கொண்டுபோகும் புத்தகம் அஃதன்று. அனுஷ்டானத்துக்குவேண்டியவைகளெல்லாம் உடன் அமைந்திருக்கின்றன. அல்லாகு தஆலாவின் உண்மையான தன்மையை அறிந்து கொள்ளுதற்குவேண்டிய விஷயங்கள் அவ்வேதத்தில் காணப்படுகின்றன. மலக்குக்கள், தேவதரிசனம், தீர்க்கதரிசனம், மறுவுலகம், சுவர்க்கம், நரகம் ஆகியவற்றைப்பற்றி உண்மையான சித்தாந்தங்கள் அதில் விளக்கப்பட்டிருக்கின்றன. இராஜாங்கம், ஆசாரம், குடித்தனப்பாங்கு, குடித்தனச்செட்டு ஆகிய மனிதவர்க்கத்தாருக்கு வேண்டிய எல்லா வுண்மைகளும் உண்டு. அல்குர்'ஆனில் சொல்லியபடி மனிதவர்க்கத்தார் நடப்பார்களாயின் அவர்களுடைய நிர்வாணத்துக்கு வேண்டிய எல்லா உபகரணங்களும் உண்டாகும். மனிதன் உன்னதபதவியை அடையவேண்டுமாயின் அவனுக்குக் குர்'ஆனே ஷரீப் ஒன்றேபோதும்.

அல்குர்'ஆனில் தொழுகை, நோன்பு, தானதன்மம், ஆகிய இவற்றிற்குரிய ஒழுங்குகள் மட்டும் காணப்படுகின்றன என்று நினைக்கவேண்டாம். உயிர்வாழ்க்கைக்குவேண்டிய எல்லா வுண்மைகளும் முழுதும் நிறைந்திருக்கின்றன. தன் தேசத்தைப் பரிபாலனம் செய்யும்பொருட்டு அரசனுக்கு வேண்டிய ஒழுங்குகளும் உண்டு. அன்னியர்களாயினும் தம் நாட்டார்களாயினும் அரசர்களா யிருப்போருக்குக் குடிகள் ஒடுங்கி நடக்கவேண்டுமென்னும் முறைகளும் உண்டு. நியாயாதிபதி, மந்திரி, சட்டநிரூபணம் செய்வோன், போர்வீரன், வியாபாரி, தொழிலாளி, தகப்பன், மகன், அண்ணன், தம்பி, புருஷன், மனைவி, அயலான், நண்பன், ஏழை, பணக்காரன் ஆகிய எல்லோருக்கும் வேண்டிய ஒழுங்குகள் அதில் உண்டு. சுருங்கச் சொல்லுமிடத்து உலகத்திலிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டிய அனுஷ்டான முறைகள் அதில் உண்டு. இவ்வாறு எல்லாப்பாடங்களும் நிறைந்திருப்பது அல்குர்'ஆன் ஒன்று தான். ஆதலின், அநேக பரம்பரையாக நபிமா

ர்களால் உபதேசிக்கப்பட்டுவந்த பிராசீன இஸ்லாம்,சட்ட விஷயங்களில் குர்'ஆன் உண்டானகாலத்தில் முடிவடைந்தது என்று முஸ்லிம்களெல்லோரும் நம்புகிறோம். குர்'ஆன் சொல்லுகிறதாவது:

اليوم اكملت لكم دينكم※

“இன்றைக்கு உங்களுக்காகச் சட்டம் பூர்த்தி செய்யப்பட்டது” என்பது பொருள். நம்முடைய வேதத்தில் உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வுண்மைகளும் நிறைந்திருக்கின்றன வென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அல்குர்'ஆனிலிருந்து உதாரணங்களை எடுத்துச் சொல்வோமென்றால் கொஞ்சமும் நமக்கு இங்கே இடமில்லை. ஆனால், நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை முடிக்குமுன் மனிதவர்க்கத்தாருக்கு மிக்க நன்மையை உண்டுபண்ணியிருக்கும் குர்'ஆனே ஷரீபில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு முக்கியமான விஷயத்தைமட்டும் தவறாமல் எழுதுவோம். மனிதர்களிடத்தில் நன்மை பெறுதற்குரிய மகா சக்திகளெல்லாம் அமைந்து கிடக்கின்றன வென்றும், அவற்றைச் சரியான மார்க்கத்தில் செலுத்தினால் மிக்க உன்னதபதவிகளெல்லாம் கிடைக்கும் என்றும் சொல்லியிருக்கும் ஒரு வேதத்தைக் காட்டினும் மனிதவர்க்கத்தாருக்கு மிக்க பயன்தரத்தக்கது வேறெதுவுமில்லை. பாவம் நம்மோடு கூடப்பிறந்ததென்றும், அதன் பந்தத்திலிருந்து நம்மை நாமே நம்முடைய சொந்த முயற்சியால் விலக்கிக்கொள்ள முடியாதென்றும் அல்குர்'ஆன் சொல்லவில்லை. ஆனால், பாப சம்பந்தமில்லாமலே மனிதன் இவ்வுலகத்தில் ஜனனமெடுக்கிறான் என்றும், சில சட்டங்களில் சொல்லியபடி அவன் நடப்பானாயின் அளவற்ற இடையூறில்லாத உயர்வைப் பெறக்கூடுமென்றும் நம்முடைய வேதம் சொல்லுகின்றது. அதில்,

لقد خلقنا الانسان في احسن تقويم ثم رددناه اسفل سافلين

الا الذين آمنوا وعملوا الصالحات فلهم اجر غير ممنون※

இவ்வாறு காணப்படுகிறது. “மிக்க உயர்ந்த நல்ல சக்திகளோடு நாம் மனிதனைப் படைத்தோம். சில உண்மைகளை அவன் நம்பி அவற்றிற்குத் தக்கபடி நடப்பானாயின் அவன் எல்லையில்லாத முடிவுகளைப் பெறுவான். ஆனால், அவன் அவற்றை அலக்ஷியம் செய்வானாயின் தாழ்மையினுடைய ஆழமான குழியில் விழும்படி அவனுக்கு விதி ஏற்படும்”. விருத்தியடைவதற்கு இதைக்காட்டிலும் வேறு என்ன பலமான உறுதிமொழி வேண்டியிருக்கிறது. நம்மைப் பாபவழியில் செல்லாமல் தடுப்பதற்கு இந்த வாக்கியங்களில் சொன்ன விஷயங்களைக் காட்டிலும் வேறு தடைவேண்டியதில்லை. நம்மோடு பாபம் கூடப்பிறந்திருக்கிறதென்றும் அதன் பந்தத்திலிருந்து நம்மை நாமே நம்முடைய சொந்த முயற்சியால் விலக்கிக்கொள்ள முடியாதென்றும் சொல்வோமாயின் நம்முடைய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கெடுத்து நம்மை முழுச்சோம்பேறிகளாக்குவதற்கு இஃதொன்றே போதும். எல்லையில்லாத ஆனந்தத்தை அடைவதற்கு நம்மால் முடியாதென்றும் நம்முடைய பாபத்தினின்றும் வெளிபெற முடியாதென்றும் நினைப்போமாயின் அதைக்காட்டிலும் ஆத்ம தத்துவத்துக்கு இழிவுதரத் தக்கது வேறென்ன இருக்கிறது? தேக சம்பந்தமான இன்பத்தை மட்டும் பெறலாம். ஆத்மஞானத்தைப் பெறமுடியாதென்பது எவ்வளவு அறிவீனம்? நம்முடைய பரிசுத்ததீர்க்கதரிசியவர்கள், இவ்வுலகத்தில் மனிதன் பிறக்கும்போதே பாபத்தோடு பிறக்கிறான் என்று சொல்லவில்லை. அவர்களுடைய சித்தாந்தப்படி நோக்கினால் மனிதன் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தன்மை பொருந்தியுள்ளவன் என்பதும், அதனாலவன் பாபமற்றவனாயிருக்கிறான் என்பதும் தெளிவாகும். சட்டத்துக்குக் கீழ்ப்பட்டு நடக்காவிடிற்றான் பாபம் சம்பவிக்கும். சட்டத்துக்குக் கீழ்ப்படாவிடில் ஒருவகை மேன்மையான நன்மையும் கிடைக்காது. குழந்தை பிறக்கும்போது பரிசுத்தமாயிருக்கிறது. இதற்குக் காரணம் அக்குழந்தை ஒரு முஸ்லிமுடைய மகனாயிருப்பதன்று. ஆனால், மனிதனுடைய மகனாயிருப்பதுதான் பாபம் இன்மைக்குக் காரணம் என்று நம்முடைய மேன்மையும் தயையும் பொருந்திய நபிகள் நாயகம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு பரிசுத்தமாய்ப் பிறக்கும் குழந்தைக்கு அதற்குத் தக்க நல்ல முறையைக் கற்றுக்கொடுத்தால் மனிதனால் அடையப்பட வேண்டிய உன்னதபதவியையெல்லாம் அக்குழந்தை அடைவதற்கு ஏதுவுண்டு.

உலகத்தில் கல்வியில் தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் ஆயிரக்கணக்காய் உதிக்கும்போது கிருஷ்ணன், இயேசு, புத்தன் முதலி

யோர் சொல்லியிருப்பது உண்மையாயின் ஏன் அவர்கள் அவதரிப்பதில்லை? உலகத்தில் பாபம் மிகுந்தபோது தாங்கள் புதிதுபுதிதாக அவதாரம் செய்வதாகச் சொன்னவர்கள் இதுவரையில் அநேகமுறை செய்திருக்கவேண்டும். அவர்களுடைய வேதங்கள் கவர்பொருள்படாமல் செம்பொருள் படுவதாயின் பாபம் மிகும்போது அவர்கள் அவதாரம் எடுக்கவேண்டும்.

(தொடரும்.)

ப-ர்.

—:0:—

இந்தியர்கள் எப்படி எழுதக்கற்றுக்கொண்டார்கள்?

பண்டைக்காலமுதல் இன்றளவும் இந்தியதேசமானது நாகரிகத்தில் மிகுந்ததாகவே யிருந்து வருகிறது. இந்த நாகரிகத்துக்காக இந்தியர்கள் மிக்க பெருமையும் பாராட்டிக்கொள்ளலாம். இங்கேஇப்படிப்பட்ட நாகரிகமட்டும் இருந்ததென்று நினைக்கவேண்டாம். இன்னும் பழைய காலங்களில் தோன்றின கிரந்தங்களும்ஆயிரக்கணக்காயுண்டு. இக்கிரந்தங்களைப் படிக்குந்தோறும் இந்தியர்களுடைய நுண்ணறிவும்விடாமுயற்சியும் புலனாகின்றன. இவற்றில் காணப்படும் விஷயங்களும் தொடர்ச்சியான சரிதைகளும் வேறு தேசகிரந்தங்களில் இவ்வாறு எழுதப்படவில்லை. உலகமுழுதும் அந்தகாரத்தில் அழுந்திக்கிடக்கும்போது இந்திய கல்விமட்டும் மிக்க உன்னத நிலைமையடைந்திருந்தது. இத்தேசத்தில் நிலவளம் நீர்வளத்தோடு அறிவுவளமும் மிகுந்திருந்தபடியால் எவ்வகை இடையூறுமில்லாமல் 3, 000 வருஷகாலம் வரையில் கல்வி தழைத்தோங்கி வந்தது. இந்திய கிரந்தங்களைப்பற்றிப் பொய்யென்றும் தாமஸ புராணங்களென்றும் மேல்நாட்டார் கூறியபோதிலும், மனிதர்களுடைய புராதன சரித்திரங்களை அறிந்து கொள்வதற்கு இத்தேச கிரந்தங்கள் மிகவும் பயன்படுகின்றன.

இந்தியாவில் கல்வி ஆரம்பித்தகாலம் 3,500 வருஷங்களுக்கு முன்னர் என்னலாம்; ஆனால் இந்தியாவில் இப்போது காணப்படும் பல்லாயிரம் கிரந்தங்களும் அக்காலத்தில் புத்தக உருவமாக இருந்தனவென்று கருதுவது முடியாது. அதற்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்னே இந்தியரின் கல்வி கிரந்தமாகவும் புத்தகமாகவும் ஆக்கப்பட்டிருக்கவேண்டும். அக்காலத்தில் கல்விமட்டுமிருந்தது, புத்தகங்களில்லையென்னும் விஷயம் அசம்பாவிதம்போல் தோன்றியபோதிலும் அதுதான் உண்மையென்பது பின்வரும் காரணத்தால் நன்கு விளங்கும். அக்காரணம் அதிக தூரத்திலில்லை. அக்காலத்திய இந்தியர்களுக்கு எழுதத் தெரியாது. எழுதத் தெரிந்தாலன்றோ அவர்களுடைய கல்வி புத்தக ரூபமாக எழுதப்பட்டிருக்கும்? முதலில் எழுதுவதற்கு அவர்களுக்கு நெடுங்கணக்கு வேண்டியிருந்தது. நெடுங்கணக்கு ஏற்படுத்திக் கொண்ட பிறகும் எழுதுவதற்குரிய ஆயுதங்கள் அகப்படவில்லை. எழுதுவதற்கு எழுத்துக்களும் ஏற்பட்டு ஏடும் எழுத்தாணியும் கிடைத்த காலத்திலும் வேதம் வல்ல பிராமணர்கள் புஸ்தக உதவியின்றியே வேதங்களையும் மற்றைக் கிரந்தங்களையும் மனப்பாடம் செய்துவந்தார்கள். எழுதவேண்டிய ஆவசியகமின்றியே ஒவ்வொரு விஷயத்தையும் ஸ்லோகங்களாகச் செய்து மனப்பாடம் பண்ணி வந்தார்கள்.

இவ்வகை அநுஷ்டானம் வேறு தேசங்களில் காணப்படவில்லை. கல்வியிருந்தும் புத்தகமில்லாத வழக்கம் வேறெங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இந்தியாவிலிருந்த வழக்கமட்டும் விந்தையாகவே யிருக்கிறது. அநேக நூற்றாண்டு வரையில் இந்தியர்கள் தங்கள் கல்வி சம்பந்தமானவற்றையெல்லாம் மனப்பாடமாகவே வைத்து வந்திருக்கிறார்கள். சுருதி யென்னும் பதம், கேட்கப்படுவது என்றேபொருள்படும். ஆதலின், ஹிந்துக்களின் சுருதிகளெல்லாம் எழுதப்படாமலே கர்ண பரம்பரையில் வந்தனவென்று புலப்படுகின்றன. சுருதிகளுக்குத் தமிழில் எழுதாக்கிளவி யென்று சொல்லுவதும் இவ்வழக்கத்தையே உறுதிப்படுத்துகின்றது. நெடுங்கணக்கு ஏற்படுத்தப்பட்டு ஏடு எழுத்தாணிகளும் உண்டான காலங்களிலும் பழய வழக்கங்களில் அபிமானமுள்ள இந்தியர்கள் தங்களுடைய முன்னோர்களின் வழக்கத்தை விடக்கூடாதென்று தங்கள் கல்வியை மனப்பாடமாகவே வைத்திருந்தார்கள். கர்ணபரம்பரையாய் வந்த சுருதிகளை ஏடுகளில் புத்தகமாக எழுதினால் அவற்றின் பரிசுத்தத்

தன்மை குறையுமென்றும் எண்ணினார்கள் இந்தியர்களில் சில வருணத்தார் பார்க்கக்கூடாத மறைபொருள்கள் அவர்களுடைய சுருதிகளில் பொதிந்திருப்பதாக எண்ணியிருந்தமையால் அவர்கள், தங்களுடைய கல்வி விஷயங்களைப் புத்தகமாக எழுதத்துணியவில்லை. வேதத்தை எல்லோரும் பார்த்து விடுவார்கள் என்னும் அச்சத்தால் அந்தணர்கள் சுவடிகளில் எழுதாமல் ஒவ்வொன்றையும் மனப்பாடம் பண்ணியே வைத்திருந்தார்கள்.

ஆயினும் இந்தியர்கள் நெடுங்காலத்துக்கு முன்னரே எழுதக் கற்றுக்கொண்டார்கள் என்பதில் சிறிதும்சந்தேகமில்லை. இதைப் பற்றிப் புத்தர்களுடைய கிரந்தங்களில்அநேகம் அத்தாக்ஷிகள் காணப்படுகின்றன. அப்போதிருந்த இந்தியர்களுக்கு நன்றாக எழுதத்தெரியும். அவர்களுக்கு எழுத்தில் இருந்த மிக்க பழக்கத்தால் அவர்களுடைய குழந்தைகளும் இவ்வெழுத்தின் சம்பந்தத்தால் அகரிகா என்னும் ஒருவகை விளையாட்டையும் விளையாடி வந்தார்களென்பது தெரிகிறது. ஆகாயத்திலாவது அல்லது ஒரு பையனுடைய முதுகிலாவது ஓர் எழுத்தை எழுதிவிட்டு அவ்வெழுத்து என்னவென்று கேட்பார்களாம். இவ்விளையாட்டுக்குத் தான் அகரிகா எனப் பெயர். இதை நோக்கும்போது அக்காலத்திய சிறுவர்களுக்கிருந்த எழுத்துப்பழக்கம் இவ்வளவென்பது செவ்வனே விளங்குகின்றது. சிறு கணக்குக்களைக்குறித்து வைத்துக்கொள்வதற்கும் கடிதப்போக்குவரவு செய்வதற்குமட்டுமே அவர்கள் எழுத்துக்களை உபயோகித்து வந்தார்கள். ஆனால் இவ்வெழுத்துக்களை வைத்துக்கொண்டு பெரிய புத்தகங்களை எழுதுவதற்கும் வேதங்களை வரைவதற்கும் அவர்கள் எத்தனிக்கவுமில்லை; எழுதவேண்டுமென்னும் ஞாபகமும் இருந்ததில்லை. இந்தியாவில் கல்வி ஆரம்பித்து நெடுங்காலத்துக்குப் பின்னரே எழுத்துக்கள் உண்டாக்கப்பட்டன. இவ்வெழுத்துக்கள் உண்டான காலத்தில் இந்தியர்களுடைய கல்வி மிகவும் உயர்ந்திருந்தது. ஆனால் இந்தியாவில் எந்தக் காலத்தில் எப்படி எழுத்துக்கள் உண்டாயினவென்பதைப்பற்றியே நாம் இங்கே ஆராய்வோம். அவ்வெழுத்துப் பிறகு என்ன என்ன மாறுபாடு அடைந்ததென்பதையும் ஆராய்வோம்.

புராதன காலத்தில் இந்தியாவில் உபயோகிக்கப்பட்டுவந்த எழுத்துக்களெல்லாம் பழைய காலத்திலிருந்த ஸெமடிக் என்னும் எழுத்துக்களைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றனவென்று இக்காலத்திய ஆராய்ச்சிக்காரர்கள் தீர்மானம் செய்திருக்கிறார்கள். ஸெமடிக் எழுத்துக்களிலிருந்து இந்தியர்கள் எழுதக்கற்றுக்கொண்ட காலம் இன்னதென்று வரையறுத்துச் சொல்லமுடியாது; ஆனால் ஸெமடிக் எழுத்துக்களுக்கும் இந்திய எழுத்துக்களுக்கும் மிகுதியான ஒற்றுமை இருப்பது எந்தக்காலமோ அப்போதுதான் இந்தியாவில் எழுத்துண்டாயிருக்கவேண்டும். கி. மு. 7-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் தென்பாகத்திலிருந்த திராவிடர்கள் என்னும் கூட்டத்தார், அக்காலத்தில் வியாபாரத்தில் மிக்க பேர்பெற்றிருந்த பாபிலோன் என்னும் நகரத்தோடு வர்த்தகம் செய்துவந்தார்கள். அங்கே இந்தத் திராவிடர்கள் பாபிலோனியருடைய எழுத்துக்களைக் கற்க ஆரம்பித்தார்கள். கி. மு. 7-வது நூற்றாண்டுக்கு முன் இந்தியாவுக்கும் பாபிலோனுக்கும் போக்குவரவு கப்பல் மார்க்கமாயில்லையென்பது அநேகம் ஆதாரங்களால் உறுதியாகின்றது. அந்த 7-வது நூற்றாண்டிலேதான் இந்திய எழுத்துக்களும் ஸெமடிக் எழுத்துக்களும் மிகுதியாக ஒத்திருந்திருக்கின்றன. ஸெமடிக் எழுத்துக்களுக்கும் மூலஸ்தானம் பாபிலோன்தான். ஆதலின், அந்த 7-வது நூற்றாண்டில் பாபிலோனிலிருந்தே இந்தியவர்த்தகர்கள், தங்களுடைய நெடுங்கணக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள். இவ்வாறு அக்காலத்தில் திராவிடர்கள் ஏற்படுத்திய எழுத்துக்களிலிருந்தே இந்தியா, பர்மா, ஸீயம், சிலோன் முதலிய இடங்களிலுள்ளோர் தம் தமக்கு ஏற்றவாறு வேறு வேறு வகையாக நெடுங்கணக்கு வகுத்துக்கொண்டார்கள்.

“ஆரியர்கள் இந்தியாவில் புகுமுன்னரே தென்மேற்குத் திசையிலுள்ள அரபிக்கடல் வழியாகத் தமிழர்கள் (திராவிடர்கள்) வர்த்தகம் செய்யத்தொடங்கினார்கள். மயில் என்னும் பறவையைக் குறிக்கும் தோகை என்னும் செந்தமிழ்ச் சொல் எபிரேய பாஷையில் டுகிம் என்று வழங்குதலும் காண்க. வடமேற்குத் திசையிலுள்ள வாணிகராகிய பினீஷியர் என்னும் சாதியார் பலமயில்களைத் தம்முடைய அரசன் சாலமோனுக்குக் கொண்டுபோனபோது தோகை என்னும் தமிழ்ச் சொல்லையும் கொண்டுசென்

றனர். எகிப்தியரும் தென்னிந்தியாவிலுள்ள தமிழர்களுடன் கி. மு. 5-வது நூற்றாண்டுக்கு முன்னரே வாணிகம் செய்துவந்தனரென்பது மலையிலக்கே. அங்ஙனம் தென்னிந்தியர்கள் வடமேற்குத் திசை வர்த்தகர்களோடு வியாபாரம் செய்யப் புகுந்தபோது கணக்கு முதலியன குறித்தற்கும், சிறு விஷயங்கள் எழுதுவதற்கும் எழுத்தும் சுவடியும் அவர்களுக்கு அதிக அவசியமாயின. ஆகவே அவர்கள் நெடுங்கணக்கு (அரிச்சுவடி) வகுத்தனர். அந்நெடுங்கணக்குத் தமிழ் நாடெங்கும் பரவிற்று. அதுமுதல் பேச்சுவடிவில் மட்டுமிருந்த தமிழ்ப்பாஷை எட்டுவடிவும் அடைவதாயிற்று" என்று தமிழ் மொழியின் வரலாறு என்னும் புத்தகத்திலும் எழுதியிருக்கிறார். ஆகவே திராவிடர்கள்தாம் முதன்முதல் இந்தியாவில் எழுத்தைக் கொண்டுவந்தார்கள் என்பது நன்றாகத் துணியப்படும்.

இவ்வாறு பாபிலோனிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்ட எழுத்துப் பிற்காலத்தில் என்ன என்ன விதமாக மாறுபாடு அடைந்தது என்பதைப்பற்றி இங்கே விவரிக்க முடியாது. பழையகாலங்களில் பாபிலோனியர்கள் களிமண் பலகையில் எழுதிவந்தார்கள். இந்தியாவிலோ பனையோலையும், மரப்பட்டைகளும் உபயோகிக்கப்பட்டுவந்தன. இவர்கள் எழுதிவந்த கருவி, இரும்பினால் செய்யப்பட்ட ஒருவகை ஆணி. இதைத் தமிழர் எழுத்தாணியென வழங்குவர். களிமண் பலகைகளும் ஓலைகளும் பட்டைகளும் எளிதில் ஒடிந்துபோகும் வஸ்துக்களானபடியால் அவை அவ்வளவு பயன்படவில்லை. பிறகு நெடுங்காலத்துக்குப் பின்னர் எழுதுவதற்கு ஒருவகை மையும் ஒடியாத நீண்ட பட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆயினும் பெரும்பாலும் ஓலையும் எழுத்தாணியுமே உபயோகிக்கப்பட்டுவந்தன. இந்தியாவிலுள்ள சிறு கிராமங்களின் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும் கடைகளிலும் இன்றைக்கும் ஏடும் எழுத்தாணியும் காணப்படுகின்றன. காகிதமும் எழுதுகோலும் மிக்க மலிவாயிருக்கும் இக்காலத்திலும் சில இந்தியர்கள ஏடும் எழுத்தாணியும் உபயோகிப்பதைப் பார்த்தால் இவர்களுக்கு முற்கால வழக்கங்களிலுள்ள அபிமானம் நன்றாக வெளிப்படுகின்றது.

எழுத்துக்களும் எழுதுவதற்கு வேண்டிய உபகரணங்களும் மிகுந்திருந்த காலத்திலும் ஹிந்துக்கள் தங்களுடைய மூளையில்

மனப்பாடமாகச் சுமந்திவைத்திருந்த கல்விச் சுமையைப் புத்தகரூபமாக ஏடுகளில் எழுதத்துணியவில்லை. இதற்குக் காரணம் யாதெனின், அக்காலத்திலிருந்த இந்தியர்களுக்குக் குருக்கள்மார்களாயிருந்த பிராமணர்கள் தங்களுடைய சொந்தப்பொருளாகிய சுருதிகளை ஏடுகளில் எழுதுவதால் அவற்றின் பரிசுத்தத்தன்மை குறையுமென்று கருதியிருந்தார்கள். எழுதத்தெரிந்திருந்தபோதிலும் தங்கள் கல்வியைப் புத்தமாக ஆக்கவில்லை. அந்தணர்கள் வேதகுருக்களானமையால் தங்களுக்கு மட்டும் சுவதந்திரமான விஷயத்தை ஏடுகளில் ஏழுதாமல் மறைத்து வைத்திருந்தார்கள். வேதங்களையும் வேதாங்கங்களையும் கற்பதற்குத் தங்களுக்கு மட்டும் உரிமையுண்டென நினைத்தார்கள். முற்காலத்திலிருந்த இந்திய நூல்கள் எல்லாம்வேதத்தோடும் மதத்தோடும் சம்பந்தப்பட்டிருந்தனவாதலாலும், எல்லா விஷயங்களையும் ஸ்லோகங்களாக மனப்பாடம்செய்யும் பழக்கம் ஏற்பட்டிருந்த படியாலும், தங்கள் கல்வியை ஏடுகளில் புத்தமாக எழுதினால் மற்றெல்லோரும் படித்துக்கொள்வார்களென்னும் அச்சம் மிகுந்திருந்தபடியாலும் இந்திய குருமார்கள் தங்கள் நூல்களைப் புத்தகமாக எழுதாமல் பத்திரப்படுத்திவந்தார்கள். வேதத்தை ஏடுகளில் எழுதிவிட்டால் அதைப்படிப்பதற்கு அருகரல்லாதவரெல்லோரும் படிக்கத்தலைப்பட்டு வேதத்தின் பரிசுத்தத்தைக்கெடுத்து விடுவார்களென்று அஞ்சினார்கள். இவற்றையெல்லாம் நோக்கும்போது ஆரியர்கள் தம் நூல்களைச்சுவடிகளில் எழுதாமல் மறைத்துவைத்திருந்தது ஓர் ஆச்சரியமாகத்தோன்றவில்லை.

எவ்வாறாயினும் இந்தியாவில் எழுதப்படும் எழுத்துக்களெல்லாம் இந்தியாவிலேயே உண்டாக்கப்பட்டன என்பதற்குத் தக்க ஆதாரம் கிடைக்கவில்லை. இன்னும் இவ்வெழுத்துக்களை ஆரியர்கள் உண்டுபண்ணினார்கள் என்பதற்கும் அவர்கள் இந்தியாவுக்குள் நுழையும்போது கொண்டுவந்தார்கள் என்பதற்கும் கொஞ்சமேனும் ஆதாரமில்லை. ஆரியர்களிடமிருந்து திராவிடர்கள் எழுதக்கற்றுக்கொண்டார்கள் என்பது முழு அசம்பாவிதமாம். எழுத்தின் உற்பத்திக்கும் ஆரியருக்கும் எவ்வகைச் சம்பந்தமுமில்லை. முற்காலங்களில் பாபிலோனுக்குப்போய் வியாபாரம் செய்துவந்த

திராவிடர்கள் (தமிழர்கள்) அங்கிருந்து முதலில் எழுத்தைக் கொண்டுவந்தார்கள். அவர்களிடமிருந்து ஆரியரும் மற்றையோரும் எழுதக் கற்றுக்கொண்டார்கள். இதுதான் உண்மை.

எழுத்தறிவிப்போன்.

மறு பிறப்பு.

[ஒரு மறுப்புரை யுபந்யாசம்.]

(284-ம் பக்கத்தொடர்ச்சி.)

(6) நம்முடைய ஆத்மாக்கள் சதா சர்வகாலமும் உண்மையாகவே நிலைபெற்றிருப்பவையானால், நமது அதிக புராதனமான ஜனனங்களைப்பற்றியில்லாது போனாலும் இப்பிறப்புக்கு அடுத்து முந்தியதில் நிகழ்ந்த மிக்க முக்கியமான விஷயங்களைப்பற்றிய அறிவாவது நமக்கு இருந்திருக்கலாம். அவ்வித அறிவு அவசியமில்லையென்று சில ஆரிய சகோதரர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். யுக்திக்கு ஒப்பப்பேசும் வேறு பலர், முந்திய பிறப்பைப்பற்றிய ஞானம் நெடுங்காலம் செய்யும் யோகாப்பியாசத்தால்தான் வருமென்கின்றனர். அப்படிப்பட்ட யோகிகளுள் எவ்வளவுபேர் ஆரிய ஸமாஜத்தில் இருக்கின்றனரெனக்கேட்டபோது, பூர்வ ஜன்மஞானத்தை யறிந்த யோகி ஒருவரேதாம் இருந்தனரென்றனர். புராணக் கட்டுக்கதைகள் என்றுமிகுதியாக வைத்துத் தள்ளிவிடப்படும் இம்மாதிரியானபல கதைகளில் இதுவும் சேர்ந்துவிடுமென்றஞ்சி இவ்விரகசியத்தை அவர்கள் இப்போது வெளிவிடாமல் வைத்துக்கொண்டிருக்கின்றனர். கொஞ்ச காலத்துக்கு முன்னால் ஓர் ஆரிய பத்திரிகையின் ஆசிரியர், ஒரு குழந்தையின் புன்சிரிப்பும் அழுகையும் அதன் பூர்வ ஜன்மத்தின் நிலைமையை யறிந்ததற்கு நிச்சயமான குறிகளென்று தாம் நம்புவதாக வெளியிட்டார். மானிடவுணர்ச்சியே நன்றாகத் தோன்றியிராத குழந்தைப்பருவத்தில் ஒருவனுக்கு அவனுடைய பூர்வ ஜன்மஞானம் இருக்கிறதென்றும், அவ்வுணர்ச்சி முதிர்ந்த காலத்தில் அப்பூர்வ ஜன்ம ஞானம் மறந்து போகிறதென்றும் கூறுவதைக் காட்டிலும் பரிகாசத்துக்கிடமான விஷயம் வேறொன்றில்லை.

(7) முற்பிறப்பில் செய்த பாபச்செயல்களுக்காக இப்பிறப்பில் நாம் தண்டனை பெறுகிறோம் என்பது நியாயமானால் அப்பாபச்செயல்கள் இன்னவையென்று நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். குற்றமுள்ள நெஞ்சுக்கு அப்படிப்பட்ட ஞானம் தேவையில்லையென்கின்றனர்! இதைக்காட்டிலும் அசங்கியமான விஷயம் வேறொன்றுண்டா? அவர்கள் வாதாடுவது இதுதான்:— நாம் சிறு குழந்தைகளாக இருக்கும்போது செய்தகாரியங்களை ஞாபகத்திலிருத்திக்கொள்கிறோமில்லை. அயர்ந்து தூங்குகிறவனுக்கு வாழ்க்கையானது கனவைப்போன்றுள்ளது; பைத்தியம் பிடித்த ஒருவனுக்கு அவனைப்பற்றிய ஞாபகமேஇல்லாமல் போகின்றது; மரணத்தில் இவ்வித அறிவில் கொஞ்சங்கூட நிலைத்திருப்பதில்லை. அறிவற்றிருப்பதுதான் வாழ்க்கையின் முழுப்பயனென்று இவர்கள் எண்ணுகிறார் போலும்! இத்தகைய வாதமெல்லாம் உபயோகமற்ற வார்த்தையைத் தவிர வேறில்லை. பைத்தியம் பிடித்த ஒருவன் கொலைக்குற்றத்தைச் செய்தபோதிலும் அவனுடைய புத்திசுயாதீன நிலைமையை யடையும் வரையில் அவன் தண்டிக்கப்படுவதில்லை. மேலும் அக்குற்றத்தைச்செய்தபோது அவனுடைப புத்தி நல்ல நிலைமையிலிருந்ததென்றும் ருஜுவாகவேண்டும். குழந்தைகளும் தூங்குபவர்களும் இறந்த சரீரங்களும் ஒருபோதும்சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவதில்லை. இவ்விஷயங்களை நமது ஆரிய ஸமாஜ ஸகோதரர்கள் மேற்கூறியவாறு பேசும்போது முற்றிலும் மறந்துவிடுகிறார்கள்போலும். வாக்குவாதத்துக்காக வேணும் நம்முடைப ஆரிய நண்பர்களில் சிலர் திடீரென்று லாகூர் மாஜிஸ்திரேட்டார் ஒருவரால் அழைக்கப்பட்டு, அவர்கள்மீது சுமர்த்தப்படும் குற்றங்களைத் தீர விசாரித்து ருஜுப்படுத்தாமலே அவர்கள் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்டகாலம் சிறைத்தண்டனை விதிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட மாஜிஸ்திரேட்டை ஓர் அநீதனான குரூரப்பேயென்று அவர்கள் நினைக்கமாட்டார்களா? அப்படியிருக்க மனிதர்களை அவர்களுக்குத் தெரியாத குற்றங்களுக்காக நீதிக்கு ஓர் உறைவிடமாகிய கடவுளே தண்டிக்கத்தொடங்கினால் அவனைப்பற்றி நாம் என்ன சொல்கிறது?

(8) இயற்கை விதிக்கு விரோதமாக நடப்பவன் ஒருவனுக்கு அதிக சீக்கிரத்தில் தண்டனை வருகின்றதை நம்மைச் சுற்றிலும்கா

ண்கின்றோம். உதாரணமாக நெருப்பில் நமது கையை வைத்தால், அந்நெருப்பு உடனே கையைக் கொளுத்திவிடுகின்றது. பாபத்தின் தண்டனையாக மானிடசரீரத்திலிருந்து பிராணிகளின் சரீரத்துக்கு ஆத்மா பரகாயப்பிரவேசம் செய்வதை நாம் நம்ப வேண்டுமானால், பாபஞ்செய்த காலத்துக்கும் அப்பாபத்துக்காகத் தண்டனை பெறும் காலத்துக்கும் இடையில் உள்ள கால வரையறை ஓர் ஆயுள் பிரமாணம் இருப்பது தெளிவாகும். ஆகவே இந்த நம்பிக்கை, பிரதிபலனைக்குறித்த இயற்கை விதிக்கும் நீதிக்கும் விரோதமாகவுள்ளதாம்.

(9) தண்டனையென்பது உணர்ச்சியாலறியக்கூடியதாகவிருக்கவேண்டும்; இல்லையேல் அது தண்டனையாகமாட்டாது. பிராணிகளின் சரீரத்தில் ஆத்மா பரகாயப் பிரவேசம் செய்வதானது பாபத்தின் தண்டனை யென்கின்றனர். ஆனால் அப்பிராணி அதை உணருகின்றதா? நிச்சயமாயில்லையென்றே கூறி விடலாம். கேவலம் தாழ்ந்த வாழ்க்கையென்று நமக்குத்தோன்றுவது காட்டுமிராண்டிக்கு அதிருப்திகரமாக இருப்பதில்லை. அந்நிலைமை ஒரு தண்டனை யென்றும் கருதப்படுவதில்லை. இதற்கு எதிராகக் குப்பை மேட்டில் கழுதை யொன்றை மேயவிட்டாலும், துர்க்கந்தம் எவ்வளவு அதிகமாக இருந்தபோதிலும் ஒரு பிணத்தைத் தின்னும்படி கழுகை விட்டாலும் அவைகள் மகாராஜ போகத்தை யனுபவிப்பவர்களைக் காட்டிலும் சந்தோஷமுள்ளவைகளாக விருக்கின்றன.

(10) இக்கொள்கையானது பாபத்தின் தண்டனையை மிக்க அற்பமான தாக்கிவிடுகின்றது. உண்மையைக்கற்கவேண்டுமானால் பாபத்தின் பாரம் உங்களுடைய ஒட்டகங்களினாலாவது கழுதைகளினாலாவது தாங்கக்கூடியவளவு இலேசானதன்று. நிச்சயமாகவே, மனிதர்களுடைய அதிக்கிரமங்களின் தண்டனையை எளிதில் மாற்றிக்கொள்ளக்கூடிய பதில் பொருள் இல்லை. பாபத்தின் பாரமோ மிக்க பளுவானது. பாபியானவன் தனது பாபத்தை ஒரு பரிசுத்த மகான் மீதோ ஒன்று மறியாத பிராணி மீதோ தள்ளிவிட்டு, அதனின்றும் உடனே விடுதலையடையவேண்டு மென்று அடிக்கடி விரும்புகின்றான். பதில் தண்டனை யென்னும் எண்ணத்தினால் ஏமாந்து போன பயபக்தியுடைய ஆத்மாக்கள் பல. ஆனால் கடவுளுடைய நீதியான ராஜாங்கத்தில் தீங்கிழைத்தவன் ஒருவனாவது தண்டனை பெறாமல் போகக்கூடுமென்று எதிர்பார்க்கவேண்டியதில்லை.

(11) மனிதனுக்கும் பிராணிக்கும் உள்ள வித்தியாசம் அளவினால் வேறுபட்டதன்று, விதத்தினால் வேறுபட்டதாகும். பிராணியைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவனென்றாவது அதிகபுத்திக் கூர்மையுள்ளவனென்றாவதுமட்டும் சொல்லக்கூடாது. அதற்கு முற்றிலும் வேறான ஜீவப்பிராணியாவான் அவ்விருவரும் ஒரே தன்மையராகவிருந்தால், நம்மைச்சுற்றிலும்காண்கிறபடி, மனிதன் மாத்திரம் ஆச்சரியப்படும்படியான அபிவிருத்தியடைந்திருக்க, தாழ்ந்த ஜீவப்பிராணி, உலகந்தோன்றிய காலத்தில் இருந்த நிலைமையிலேயே இன்னும் இருக்கக்காரணமென்ன? வேத கற்பத்தின் ஆரம்ப காலமுதற்கொண்டு நாளதுவரையில் கழுதை கழுதையாகவேயிருக்கின்றது. மானிட ஆத்மாவுக்கு உள்ள குணங்களான பொறுப்பு, மனச்சாட்சி, நம்பிக்கை, பகுத்தறிவு முதலியவைகளில் ஒன்றையேனும் ஜீவப்பிராணி பெற்றிருக்கவில்லை. மறுபிறப்பு என்னும் கொள்கையில் நம்பிக்கைவைப்பதானது, சிருஷ்டிகர்த்தரின் உருவேயானவனும், சாசுவதமாக விருத்தியடையக்கூடிய தெய்வீகசக்திகள் வாய்க்கப்பெற்றவனுமான மனிதனை, பகுத்தறிவில்லாத காட்டுமிராண்டியோடு ஸரிஸமான நிலைக்குத் தாழ்த்துவதாகும்.

(12) இவ்விபரீதத்தைப் பின்வரும்விதமாகப் பகுத்தறிவுள்ள ஆரியர்களில் சிலர் விவரணம் செய்கின்றதை நான்கேட்டிருக்கிறேன். மானிட ஆத்மாவும் தாழ்ந்தபிராணியின் ஆத்மாவும் ஒன்றென்றே அவர்கள் கூறுகின்றனர். பிராணிகளின் ஆத்மாக்களே இல்லையென்றும், அவைகளெல்லாம் பிராணிகளின் சரீரத்திலுள்ள மானிட ஆத்மாக்களென்றும், அப்பிராணிகளின் சரீரத்தில் புகுந்த ஆத்மாக்கள் அபிவிருத்தியடையாததற்குக்காரணம் மானிடமூளைக்கும் பிராணிமூளைக்கும் அமைப்புமாத்திரத்தினால் ஏற்பட்ட சிறிய வித்தியாசந்தானென்றும் கூறுகின்றனர். காளியை வணக்கம் செய்யும் பசியோடிருப்பவன் ஒருவன் பிராணியின் தலையிலுள்ள ருசி மிகுந்த மூளைமுழுவதையும் தின்றுவிடு

வானால், அப்பிராணியின் சரீரத்தில் புகுந்துள்ள ஆத்மாவானது பிழைத்திருக்குமென்பதற்கு உத்தரவாதம் என்னவிருக்கின்றது?

(13) இக்கொள்கையானது கடவுளுடைய அருளின் அவசியம் இல்லாமல் செய்துவிடுகின்றது. மனிதனுடைய பரமானந்தமும் பரமதுக்கமும் அவனுடைய கர்மங்களிலேயே முற்றிலும் சார்ந்திருப்பவையானால் கடவுளுடைய அவசியமிருப்பதாகத் தெரியவில்லை. அவனுடைய துணையும் வழிகாட்டுதலும் வேண்டிய அவசியமும் இல்லாததாகின்றது. "கர்மம்" என்ற கொள்கை சொல்கிறபடி மனிதனானவன் தன்னுடைய சொந்தச் செய்கைகளினாலேயே தனது முக்தியைப் பெறக்கூடுமானால், அவனுக்குக் கடவுளிடத்துள்ள நம்பிக்கை பெயர் மாத்திர அளவுள்ளதாகின்றது. உண்மையிலேயே அம்மனிதன் கடவுள் இல்லையென்று சாதிக்கும் நிரீசுவரவாதிகளில் ஒருவனாக மாறிவிடுகிறான்.

(தொடரும்.)

ஜலாலுத்தீன்.

தத்துவ இஸ்லாம்.

(235-ம் பக்கத்தொடர்ச்சி)

மரணத்துக்குப் பிறகு ஏதாவது ஒரு வாழ்க்கையிருக்கின்றதாவென்றும், அவ்விதவாழ்க்கையில் அடையக்கூடிய மேலான நிலைமையைப் பெறுவதற்கு அவசியமாகச் செய்யவேண்டியது இன்னதென்றும் ஒருவன் தெரிந்துகொள்ள முயற்சிசெய்து காலத்தைச் செலவிட்டால் அதனால் ஏதாவது பயனுண்டாகுமா? இக்கேள்வி ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே பதில்சொல்லிக்கொள்ளவேண்டிய கேள்வியாம். இனியும் ஒரு வாழ்க்கையிருப்பது மெய்யானால் அஃது இவ்வுலகில் நமக்குள்ள அறுபது அல்லது எழுபது வருஷங்களுக்கு வெகு அதிகமான காலப்பிரமாணமானதாகவிருக்குமென்றுயூகிப்பது பொருத்தமானதாகும். ஆதலால், அதுதான் மனிதன் கவனிக்கக்கூடிய மிக்கமுக்கியமான விஷயம் என்று எனக்குத் தோன்றுகின்றது.

சர்வசந்தேகியொருவன், "ஆனால், இவைகளைப்பற்றியெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பம் எங்களுக்கு இருக்கவே இருக்கிறது; ஆனால் அதை நாங்கள் எப்படிச் செய்யப்போகிறோம்? ஜான் ஸ்டுவேர்ட் மில், ஹக்ஸ்லி, டின்டல், டார்வின், பிச்ட் இவர்கள் எழுதிய நூல்களையும், எங்களுக்குக் கிடைக்கக்கூடிய மற்றவைகளையும் பார்த்துவிட்டோம்; என்றாலும் நாங்கள் இன்னும் நடுக்கடலிலேயே இருக்கிறோம். சாஸ்திரத்தைக் கேட்டோம்; அது தனக்கு ஒன்றுந்தெரியாதென்று ஒப்புக்கொண்டு, வாழ்க்கையின் ரகஸ்யத்தை ஒருவரும் அறியாரென்று சொல்வதைத்தவிர, எங்களுடைய நன்மதிப்பையும் பெறும் அதன்முறைகளால், எங்களுடைய மார்க்கம் அதன் முடிவோடு ஒற்றுமைப்பட்டிருக்கவில்லையென்றும் நேராக நிரூபிக்கின்றது. நாங்கள் என்ன செய்வோம்?" என்கிறான்.

கடினமான மரத்துண்டு ஒன்றில் பதிந்துள்ள திருகாணியைச் சிறிய தமருசியொன்றால் எடுக்கமுயன்று, திருகாணியின் துவாரத்தில் ஆயுதம் பதியவில்லையாதலினால் அதை எடுக்கமுடியவில்லையென்று பிடிவாதமாகக் கூறும் மனிதன் ஒருவனைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அவன் ஒரு முட்டாள் என்று கூறிப் போய் ஒரு திருப்புளியைக்கொண்டுவரும்படி அவனிடம் சொல்வது சர்வ சாதாரணமல்லவா?

இனி, நவீன சாஸ்திரம், தனது தமருசி, ஆத்மசலந ஆந்திரீகத்தின் திருகாணியைக் கழற்றமுடியாதென்றுகண்டுகொண்டது; ஆதலால்தான் அத்திருகாணி கழலாதென அது முறையிடுகின்றது. எனக்கு இப்பொழுது ஆச்சரியத்தையுண்டாக்குவது என்னவெனின் திருப்புளி அதிக சமீபத்தில் இருக்க, அதைவிட்டுவிட்டுத் தமருசியையே மிக்க பிடிவாதமாகச் சர்வசந்தேகி கைப்பற்றிக்கொண்டிருப்பதுதான். இஃது ஓர் அதிநசாதாரணமான உவமையென்று நான் ஒப்புக்கொள்கிறேனானாலும் இப்போது என்மனத்தில் தோன்றும் மற்றதைக் காட்டிலும் இதுவே நமது நிலைமையை மிக்க நன்றாக விவரிக்கின்றதென நம்புகிறேன்.

உலகமறிந்துள்ள ஒவ்வோர் உண்மைத் தீர்க்கதரிசியும் வாழ்க்கை மரணத்தைப்பற்றிய பிரசினங்களுக்குப் பதில் சொல்லும்

வழியைக் காட்டியுள்ளனர். ஒவ்வொரு சந்தேகியும் லோகாயதனும் பிடிவாதத்துடனும் முட்டாள் தனத்துடனும் அதை அலக்ஷியம் செய்துவிட்டு, அதைவிட்டுவிலகிப்போகும் மார்க்கத்தினூடேபோகின்றான். தமரூசியைக் கைக்கொண்டு, திருப்புளியை வலியக்கொடுத்தாலும் வேண்டாமென்று நிராகரித்துவிடுகிறான். ஏன்? உண்மை வழியில் சென்றால், இவ்வுலகவாழ்க்கையிலுள்ள சுகசவுகரியங்களில் சிலவற்றை விட்டுவிடவேண்டி வருவதனால் மட்டுந்தான். மேலும், அவனுடைய துணைவர்களும் அயலார்களும் அவனை ஏளனம் செய்து அவனைத்தங்கள்கூட்டத்தினின்று விலக்கிவிடுவார்களென்றும் பயப்படுகிறான். இஃது உண்மையே,

சுறுசுறுப்பும், சாமர்த்தியமும் ரஞ்சகமும்உள்ளவொரு வாலிபன் தன் துணைவர்களை நோக்கி, "நான் அதிக சுத்தனாயும், சுயநயம் கருதாதவனாயும், நல்லவனாயும் பரிசுத்தனாயும் இருக்கப் போகிறேன்; மார்க்க சம்பந்தமான கடமைகளைக் கவனமாகச் செய்து கடவுளைமுழு மனத்தோடும்வந்தனைசெய்யப் போகிறேன்; என்னிடமுள்ள மிருகத்தன்மையைக் கண்டிப்பாய்த் தவிர்த்துவிட்டு, கடவுள் எனக்குக் கொடுத்துள்ள மேலான குணங்களை விருத்திசெய்யப்போகிறேன்; என்னுடைய ஸஹஜனங்களை எனது ஸகோதரர்களைப்போலவே நேசிப்பேன். கடவுளுக்கும் மனிதனுக்கும் செய்யவேண்டிய முழுக்கடமையையும் செய்வேன்" என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். அவன் எவ்வளவு நாளைக்கு அவனுடைய தோழர்களால் நன்கு மதிக்கப்படுவானென நினைக்கிறீர்கள்? அவன் இம்மாதிரியான வாழ்க்கையைக் கைக்கொண்ட பின்னர் பல நாள்வரையில் அவர்கள் அவனைத்தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டிருப்பார்களென நினைக்கிறீர்களா? உண்மையென்னவெனின், எல்லோரும்பெற விரும்புகிற அந்த மேலான ஞானத்தை அடைவதற்குக் கூட மிக்க சிலர்தாம் இவ்விதமாகப் பரித்தியாகம் செய்யமனங்கொள்வர். ஒருமனிதனுடைய சவுகரியம், இன்பம், பேராசை, செல்வம் இவைகளைத்தட்டினால், உடனே அவன் தன்னுடைய பொருட்குவியல்களை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடிப்பான்; அல்லது அவைகளை நிறுத்திக்கொள்ள ராக்ஷதனைப்போலச் சண்டைபுரிவான்.

உலகசரித்திரத்தில் மகோன்னதமாக விளங்கிய ஒரு மாகானின் உருவம் என் மனத்தில் தோன்றுகின்றது; அவர், மனிதனுக்குத் தெரிந்திருக்கும் சிரேஷ்டர்களில் மிக்க மேலானவரும் உத்தமருமாவார். அவர் அமைதியும் காம்பீர்யமுமுள்ளவர்; அவருடைய உருவத்தில் நம்முடைய மரியாதையையும் பயங்கரத்தையும் சிறப்பையும் எழுப்பக்கூடியதொன்றுண்டு. மதினமாநகரத்தில் தம்முடைய கைகளாலும் உதவிசெய்துகட்டிய சிறிய மஸ்ஜிதின் முரட்டுத்தூண்கள் ஒன்றில் தமது முதுகை வைத்துக் கொண்டு நிற்கையில், அவருடைய முகத்தில் தெய்விக ஆவேசத்தின் சோபை ஜ்வலிக்கின்றது. அவரைச் சுற்றிலும் ஒரு கூட்டம் மனிதர்கள் உட்கார்ந்து இருக்கின்றனர். அவர்கள் அவருடைய வாயினின்று வரும் வார்த்தைகளை அதிக கவனமாய் உற்றுக்கேட்கின்றனர். அவரை அத்தியந்த பயபக்தியோடும் உற்றுநோக்குகின்றனர். உலகிலுள்ள மனிதர்கள் பாடுபட்டு விலையுயர்ந்தனவென்று மதிக்கும் பொருள்களையெல்லாம் அவர் திரஸ்கரித்து விட்டனர். முன்னம் அவருக்குத் துணைவர்களாகவும் அபிமானிகளாகவும் இருந்த சுயாபிமானமுள்ள துஷ்ட ஜனங்களால் கண்டுபிடிக்கக்கூடிய மகா குரூரமும் அமானுஷ்பத்தனமுமான அவமானத்தையும் இம்சையையும் அவர் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டனர். சாதாரண மனிதன் ஒருவனை முற்றிலும் தளர்ந்தவனாகச் செய்துவிடக்கூடிய துன்பங்கள், துக்கங்கள், ஏக்கங்கள் இவைகளையெல்லாம் அவர் பொறுமையுடன் சகித்தனர். அவருடைய மனத்தில் வன்மமும் பழிக்குப்பழிவாங்கவேண்டுமென்ற விருப்பமும், சுயநயம் கருதிய பேராசையும், வெறுப்பும் இல்லவே இல்லை. அவருடைய தேகமுழுவதிலும் தெய்விக ஒளி பரவியிருப்பதால், அமைதியும் சந்தோஷமும் அன்புமே அவருடைய ஆத்மாவை நிரப்பியிருக்கின்றன. பொறுமையோடும் ஊக்கத்தோடும் அவர் நித்தியவாழ்க்கையையடையச்செய்யும் உண்மை நெறியைத்தமது தாழ்ந்த சிஷ்யர்களுக்குக் காட்டியருளுகின்றார். அவர்களும் அவர் சொல்வதைக் கவனமாகவும் நன்றியறிவோடும் கேட்டு, அவ்வார்த்தைகளை மனத்தின்கண் வேரூன்றும்படி பதித்து, அவைகள் தங்களுடைய தினசரி வாழ்க்கையிலும் அங்கேயே இருக்குமாறு அதிக ஜாக்கிரதையாகக் காத்து வருகின்றனர். அவருடைய உபதேச மொழிகளைப் பற்றி அவர்கள் ஆக்ஷேபிப்பதுமில்லை; சந்தேகிப்பதுமில்லை. ஆனா

ல் "எங்களுக்கு வழியைக் காட்டுங்கள், நித்திய உண்மையான விலையிலா மாணிக்கத்தை நாங்கள் காணும்வரையில் அவ்வழியிலேயே உண்மையோடும் பணிவோடும் செல்வோம்" என்று சொல்லுகின்றனர்.

தீர்க்கதரிசிகள் எல்லாரினும் மகாமேம்பட்டவரான இவரால் காட்டியருளப்பட்ட வழிதான் யாது? இஸ்லாம்! கடவுளுடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து விடுதலாம்; லோகாயதமான அந்தகாரத்தினின்றும் மோக்ஷத்துக்குஒரு வழிகாட்டிபோல எல்லோர்க்கும் சுடர்விட்டெரியும் வெளிச்சத்துக்கு அவாவுள்ள ஆத்மாவை நடத்திக்கொண்டு போவதற்குச் சித்தமாகவுள்ள சர்வஜ்ஞரும் எங்கும் நிறைந்தவரும் சர்வவல்லமையுள்ளவருமான கடவுளுடையசித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து விடுதலாம். சந்தேகமில்லாமல் மார்க்கம் காட்டப்பட்டிருக்கின்றது. அதன் வழியே மனிதன் போகமாட்டேனென்பானால் இந்த லோகாயத உலகத்தின் எல்லைக்கப்புறமுள்ளவற்றைப்பார்க்க அவன் ஆசை கொள்ளக்கூடாது.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய கழுத்து நரம்பைக் காட்டிலும் இன்னும் அதிசமீபமாகக் கடவுள் இருக்கின்றாரென அல்குர்ஆன் அருள்கின்றது. "அவர் நம்பிக்கையற்றவருக்கு வழிகாட்டுவதில்லை;" "தமக்குப் பிரியமானவர்க்கெல்லாம் வழிகாட்டுகிறார்;" இவற்றையும், "தன்னையறிந்தவன் கடவுளை அறிந்தவன்" என்றுநமதுநபிநாயகம் இன்னோர் இடத்தில் சொன்ன வாக்கியத்தையும் சேர்த்துப்படித்தால் என்ன பொருள் கிடைக்கின்றது? சாமர்த்தியசாலியான ஒவ்வொருவனுக்கும் பொருள் மிக்க தெளிவாகத் தெரியவேண்டும்.

(தொடரும்)

கைத்தொழில்.

உலகத்திலுள்ள மானிடர்களுக்குக் கைத்தொழில் மிக அவசியமானது. நாகரிகமுற்றவர்கள் நாகரிகமற்றவர்கள் ஆகிய எல்லோருக்குமே செல்வத்தைத் தருவதற்கு இது முக்கிய காரணமாதலால், இதனை ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ளுதல்இன்றியமையாததாம். ஒருவன், எவ்வகைச் சம்பத்துடையவனாயினும், கல்விமானாயினும் அவனைப் பசிதாகம் குளிர் முதலியவை பீடிக்காமலிரா, இவற்றை நிவர்த்தித்துக்கொள்ளக் கைத்தொழிலே முக்கிய சாதனமாகும். இதர பிராணிகள் தம்மை வருத்தும்போது அவ்வருத்தத்தை நிவிர்த்தித்துக்கொள்வதற் கேதுவாகக் கொம்பு முதலிய உறுப்புக்களையும்; குளிர், வெயில், பனிமுதலியவற்றால் நேரும் துன்பங்களைப் போக்கிக்கொள்வதற்காகச் சருமம், உரோமம், இறகு முதலியவைகளையும் மிருகங்கள் பக்ஷிகள்முதலிய தொகுதிகளுக்குக் கடவுள் அமைத்திருப்பதுபோல மானிடர்களுக்கு யாதொன்றையும் அமைத்து வைக்கவில்லை. ஏனெனின், மனிதர், தமது பாதுகாப்புக்காக வேண்டிய சகல ஹேதுக்களையும் தங்கள் விவேகத்தினால் கரசரணாதி அவயவங்களைக் கொண்டு தாமே நடத்திக்கொள்வதற்காகவேயாம். இவர்களுக்குப் பகுத்தறிவைக் கொடுத்திருப்பதனால் அதுவே சகலத்துக்கும் உதவியாமென்று கடவுள் இவ்வாறு மற்றவைகளைக் கொடுக்காமல் விட்டார். ஏனைய பிராணிகளுக்குப் பகுத்தறிவு என்னும் அரியபொருளைக் கொடுக்காததனால், அப்பிராணிகள், தம் பாதுகாப்புக்குரியன இன்னவை இன்னவை யென்றுணரச் சக்தியற்றிருப்பதை நோக்கி அவைகளுக்கு மாத்திரம் மேற்கண்டவாறு இயற்கையாகவே அவ்வுறுப்புக்களைப் படைத்து வைத்திருக்கிறார். அவர் இவ்வாறு ஏற்படுத்தியிருப்பது எவ்வளவு வியக்கத்தக்க விஷயம்? கடவுள் கட்டளைப்படி மனிதர் தம் தம் பகுத்தறிவைக்கொண்டே கரசரணாதி அவயவங்களினாலே பல தொழில்களைச்செய்து ஜீவிக்கவேண்டியது முறைமையாதலால், மானிடராகிய நாம், நம்மாற் கூடியவரையில் முயற்சித்துப் பல தொழில்களைக் கற்றுக்கொண்டு அவற்றால் திரவியத்தைச் சேகரித்து நாம் சுகத்தையடைவதுமல்லாமல் நமதுறவினர், நேயர், ஏழைகள் ஆகியவர்களுக்கும் உபகாரிகளாயிருக்கவேண்டியது நமது முக்கிய கடமையாம்.

இந்தக் கைத்தொழிலை விருத்திக்குக் கொண்டுவராமலிருப்பதே நமது இந்து தேசத்துக்குப் பெருங்குறைவாயிருக்கின்றது. ஆங்கிலேயர்கள் அவர்களுடைய கைத்தொழில்களின் அபிவிருத்தியினால்தான் சம்பத்தும் கீர்த்திப் பிரதாபமும் அடைந்து வருகிறார்கள். அவர்கள் நம் தேசத்தில் விளையும்படியான அநேகம்

பொருள்களைத் தங்களுடைய சுதேசமாகிய இங்கிலாந்துக்குக் கொண்டுபோய் அவ்விடத்தில் அவைகளைப் பலவித வஸ்துக்களாகச்செய்து நமது தேசத்திற்கே மீண்டு மனுப்பி, விற்றுத் தக்க இலாபத்தை யடைந்து வருகிறார்கள். நாம் கைத்தொழிலில் ஒவ்வொருநாளும் விருத்தியடைந்து சகல பொருள்களையும் நாமேசெய்து நம் தேசத்திலேயே விற்றுவந்தால் நம்முடைய பணங்கள் இதர தேசத்திற்குப்போகாமல் நம் இந்து தேசத்திலேயே இருக்குமல்லவா? அப்போது நம் தேசம் பஞ்சத்தினாற் பீடிக்கப்படுவதற்குக் காரணமே யிராது. அவ்வாறாயின் நமது இந்துதேசவாசிகள் சௌக்கியமாய் வாழ்வார்களென்பதற்குத் தடையேது? ஆகையால், நாம் ஒவ்வொருவரும் கைத்தொழிற்பயிற்சியைக் கைக்கொண்டுவர முயலவேண்டும்.

தொழிலாளி.

காலஞ்சென்ற டாக்டர்
சையது அலி பில்கிராமி அவர்கள்.

இக்காலத்தில் இந்தியாவில் காணப்படும் கலை ஞானிகளுள் முதன்மைபெற்றவராய் விளங்கின டாக்டர் சையது அலி பில்கிராமி அவர்கள் ஹிருதயநோயால் திடீரென்று அகாலமரணமடைந்தார்களென்பதை நாம் கேட்டு மிகவிசனிக்கிறோம். இந்தியாகவுன்ஸிலில் முன்னமே மெம்பராயிருந்த மிஸ்டர் சையத் ஹஸேன் பில்பில்கிராமி ஸீ. எஸ். ஐ. அவர்களின் இளையசகோதரரே இப்பொழுது காலஞ்சென்று போனவர்கள். டாக்டர் பில்கிராமி அவர்களுடைய மற்றொரு சகோதரர் மேஜர் சையது ஹஸேன் என்பவர்களே. இந்த மேஜர் இந்தியன் மெடிகல் சர்விஸில் ஒரு மெம்பராயிருந்து அதினின்று சில வருஷங்களுக்கு முன் நீங்கி இப்பொழுது லண்டனில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். டாக்டர் சையது அலி அவர்களுடைய பிதா காலஞ்சென்றுபோன கான்பகதூர் சையது ஜைனுத்தீன் என்பவர்களே. இக்காலத்தில் புரவின்ஷியல் ஸிவில்சர்விஸ் என்னும் உத்தியோகத்துக்கு அக்காலத்தில் சமானமாயிருந்த அன்கவனெண்டட் ஸிவில் சர்விஸ் என்னும் உத்தியோகத்தில் ஜைனுத்தீனவர்கள் மிக்ககீர்த்தி வாய்ந்தவர்களா யிருந்தார்கள். அந்த உத்தியோகத்தின் நிருவாகவேலையில் அமர்ந்திருந்தார்கள். பிகார்என்னும் ராஜ்யத்தில் மிக்க கீர்த்திவாய்ந்த டிப்டிக் கலெக்டராயிருந்திருக்கிறார். அயோத்தியா மாகாணத்தில் ஹார்டோய் என்னும் ஜில்லாவில் உள்ள பில்கிராம் என்னும் கிராமமே அவருடைய சொந்தவூர். அவ்வூரிலிருந்தே அவருடைய புகழ்பெற்ற குமாரர்கள் பில்கிராமி என்னும் புனை பெயரைவைத்துக்கொண்டார்கள். மிஸ்டர் சையத் ஹஸேன் கயா என்னும் ஊரில் ஜனனமானார். டாக்டர் அலியவர்கள் பாட்னா நகரத்தில் (பாடலிபுரம்) 1853 ௵ நவம்பர் ௴ 10உயன்று ஜனனமானார்கள். அவர்கள் மரணமாகும்போது வயது 58 தான்.

டாக்டர் சைபது அலியவர்கள் பாட்னா நகரத்துச்சர்வ கலாசாலையிலேயே முக்கியமாகக் கல்வி பயின்று வந்தார்கள். இந்தியாவுக்கு ஒரு ஞானியை உண்டுபண்ணின விஷயத்தில் அந்நகர கலாசாலைக்கு ஓர் உண்மையான கௌரவம் உண்டு. இலக்நௌ என்னும் நகரத்திலுள்ள கன்னிங் சர்வகலாசாலையிலும் தம்முடைய பால்ய பருவத்தில் சில காலம் கல்வி கற்றதுண்டு. ஆனால், கடைசியில் பாட்னா கலாசாலையிலிருந்தே பட்டப் பரீக்ஷை தேறினார்கள். இரண்டு பாடங்களில் முதல் வகுப்பில் தேறினார்கள். அவர்களுடைய இரண்டாவதுபாஷை சம்ஸ்கிருதம். பிறகு கணிதசாஸ்திரத்திலும் மிக்கநிபுணராயிருந்தார்கள். ரூர்க்கி என்னும் நகரத்திலுள்ள தாம்சன் கலாசாலையில் படித்து இஞ்சினீயர்வேலையில் தேர்ச்சிபெற்றார்கள். 1876 ௵ த்தில் லண்டனுக்குப் பிரயாணமாகி அங்கே ராஜாங்கச் சுரங்கப் பாடசாலையிற் சேர்ந்து இரண்டு வருஷத்தில் அசோஸியேட்ஷிப் என்னும் பரீக்ஷையில் தேறி, தாது சாஸ்திரத்தில் மர்க்கிஸன் என்னும் தங்கப் பதக்கமும் பெற்றார்கள். இங்கிலாந்தில் தங்கியிருந்தபோது பிரஞ்சு, ஜர்மானியம், லத்தீன், கிரீக் என்னும் நான்கு பாஷைகளையும் நன்றாகக் கற்றுக்கொண்டார்கள். அங்கே படிப்பு முடிந்தவுடன் ஐரோப்பா கண்டத்துக்குள் வந்து பிரான்சு, ஜர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் வழியாகச் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள்.

இந்தியாவுக்கு வந்தபின் டாக்டர் சையது அலியவர்கள் 1879 ஆம் ஆண்டில் மாட்சிமை தங்கிய நைஜாம் அவர்களிடம் உத்தியோகத்திலமர்ந்தார்கள். சிறிது காலத்துக்குள் பப்ளிக்ஒர்க் டிபார்ட்டுமெண்டு, ரயில்வே, சுரங்கம் ஆகிய வேலைகளில் காரி

யதரிசியாக அமர்ந்தார்கள். பிறகு நிஜாம் ரெயில்வே போர்டில் ஒரு மெம்பரானார்கள். 21-வருஷம் வரையில் மிக்க சாமர்த்தியத்தோடும், ஊக்கத்தோடும் ஐதராபாத் ராஜ்பத்தில் வேலை பார்த்து வந்தார்கள். அதன் பின் பென்ஷன் பெற்றுக்கொண்டு இங்கிலாந்துக்குப் போய்த் தம்முடைய கல்வி விஷயத்தைக் கவனித்து வந்தார்கள். உத்தியோகத்திலிருக்கும்போதே 1892. ல் கல்கத்தா சர்வ கலா சங்கத்தின் பி. எல். பட்டப்பரீக்ஷையில் முதலாகத்தேறிச்சங்கத்தாருடைய தங்கப்பதக்கமும் பெற்றார்கள். டாக்டர் கஸ்டாவ் லீபோ என்பவரால் எழுதப்பட்ட அரபியரின் நாகரிகம் என்னும் புத்தகத்தைப் பிரஞ்சுபாஷையிலிருந்து குற்றமற்ற இனிமையான ஹிஸ்துஸ்தானி நடையில் மொழிபெயர்த்து 1898. ல் புத்தகரூபமாக வெளிப்படுத்தினார்கள். பிறகு இந்தப் பிரஞ்சு கிரந்த கர்த்தவால் எழுதப்பட்ட மிக்க அருமையான புத்தகமாகிய இந்தியா தேசத்து நாகரிகம் என்னும் கிரந்தத்தை, டாக்டர் சையது அலியவர்கள் மிக்க சுறுசுறுப்போடு மொழிபெயர்த்து வந்தார்கள். சென்றவருஷம் பிரசுரம் செய்யப்பட்ட விளம்பரத்தில் மொழி பெயர்ப்பு வேலை முடிந்துவிட்டதாயும், 1910 ஆம் ௵ மார்ச்சு மாதம் முடிவுக்குள் அது புத்தகமாக வெளிவருமென்றும் டாக்டர் சையது அலியவர்கள் சொல்லியிருந்தார்கள். இப்புத்தகம் முடிவு பெறாமலிருந்தாலும் அல்லது வேறு காரணத்தால் அச்சாகி வெளிவரக் கூடாமலிருந்தாலும் இந்திய தேசத்துக்கல்விக்கு அஃதொரு பெரு நஷ்டமாகவே இருந்திருக்கும். இந்தியநாட்டு நாஷனல் மூவ்மெண்டு என்னும் சங்கத்துக்கும் நஷ்டம் விளையும். இந்தக்கிரந்தத்தைப்பற்றி அதன் ஆசிரியர் தம்முடைய விளம்பரத்தில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்.

“இந்தியா தேசத்தைப்பற்றிய இந்தப் பெரிய பிரஞ்சுப் புத்தகத்தை இந்தியர்களுக் கெதிரில் கொண்டுவருவதற்கு இதுதான் தக்க சமயமென்று எண்ணுகிறேன். கவர்ண்மெண்டாரால் இப்பொழுது கொடுக்கப்பட்ட தாராளமான இராஜ்யாதிகாரங்களால் தேச முழுதும் ஓர் ஊக்கமுண்டாகியிருக்கிறது என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஒவ்வொரு கல்வியறிவுள்ள இந்தியனும் தனக்குக் கொடுக்கப்பட்ட நம்பிக்கையைச்சரியாகச் செலுத்தவேண்டும் என்னும் ஆவலோடிருக்கின்றான். டாக்டர் லீ போ என்பவருடைய புத்தகத்தால் இந்துக்களும் முகம்மதியர்களும் ஒன்றாக நன்மை பெறுவார்கள். தங்களுக்குப் பொதுவான தேசத்தின் பெருமையையும் அதன் பழைய இராஜ்ய விஷயங்களையும் நன்றாகத் தெரிந்துகொள்வார்கள்.” இந்தப்புத்தகம் சில மாதங்களுக்குமுன் முடிவுபெற்று இப்பொழுது அச்சில் இருக்கிறது என்னும் சமாசாரத்தைக் கேட்டு நாம் மிக்க சந்தோஷமடைகிறோம். அது சீக்கிரம் வெளிவரக் கூடும்.

டாக்டர் சையது அலியவர்களின் கல்வித் திறத்தைப்பற்றி நாம் வியக்கத்தக்க முக்கிய அம்சம் யாதெனின், அவர்களுக்கு, சம்ஸ்கிருதத்திலிருந்த அதிக பாண்டித்தியம்தான். இக்காலத்தில் இந்தியாவில் இவ்வாறிருப்பது ஆச்சரியமே. தங்களுடைய உடன் தேசவாசிகளான இந்துக்களின் பரிசுத்தபாஷையில் மிக்க தேர்ச்சியடைந்த முஸ்லிம்கள் நாலைந்து பேரையும் காண முடியாதபோது இவர் ஒருவர் இவ்வாறிருந்தது வியக்கத்தக்கதே. சென்னைச்சர்வகலா சங்கத்தாரும் அநேக முறை டாக்டர் சையது அலி அவர்களுக்கு, சம்ஸ்கிருதத்திலிருந்த பாண்டித்தியத்தைப் பற்றி அங்கீகரித்து அப்பாஷைக்கு அவரை ஒரு பரீக்ஷகராகவும் நியமனம்செய்தார்கள். அவர்களுக்கு அரபு, பார்ஸி ஆகிய பாஷைகளில் இருந்த பாண்டித்தியத்துக்காக, கவர்ண்மெண்டார் 1891 ௵த்தில் ஷம்ஸுல் உலமா என்னும் பட்டமளித்தார்கள். அப்பட்டத்தோடு இன்னும் அதிக சுதந்தரத்துடன் மகாமகோபாத்தியாயர் என்னும் பட்டத்தையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கலாம் என்று எல்லோரும் அப்போது அபிப்பிராயப்பட்டார்கள். டாக்டர் சையது அலியவர்கள் இந்திய பாஷைகளின் சொல் இலக்கணத்தைப்பற்றி அநேகம் சிறு புத்தகங்கள் எழுதியிருக்கின்றார்கள். ஹிந்து ஆரிய பாஷைகளைப்பற்றியும் அவர்களுக்கு மிகுதியாகத்தெரியும். இங்கிலாந்தில் வசித்தபோது கேம்பிரிஜ்ஜு சர்வகலாசங்கத்தில் மகாராஷ்டிர பாஷையில் தலைமைப் புலமை வகித்துவந்தார்கள். டாக்டர் சையதுஅலியவர்கள் மிக்க கீர்த்திவாய்ந்த மகா பண்டிதரென்றே சொல்லலாம். அவர்களுக்கிருந்த பாண்டித்தியத்தைப்பற்றி இந்திய வாசிகள் மிக்க பெருமை பாராட்டிக்கொள்ளலாம். இரண்டு வருஷங்களுக்குமுன்னர்தான் கல்கத்தா சர்வகலா சங்கத்தார், தங்கள் சங்கத்தில் புதிதாயேற்பட்ட டாக்டர் ஆவ் லிட்டரேச்சர் என்னும் பட்டத்தை அவர்களுக்குக் கௌரவமாக அளித்தார்கள்.

(தொடரும்.)

நற்செய்தியின் கண்டனம்.

(286. ஆம் பக்கத்தொடர்ச்சி.)

மேலும் "நற்செய்தி" ஆசிரியர், "இயேசு 'என் தேவனே! என்தேவனே!! ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று சிலுவையில் அறையுண்டபோது மொழிந்ததனாலே அவர்மனிதர்தாம்" என்று அதிகமாய் வற்புறுத்திக் குதூகலித்துப் பேசுகிறார். தமக்குக் கிறிஸ்து மார்க்க சத்தியங்கள் புலப்படாமையால் எல்லோரும் தம்மைப் போலவே அறிவீனராயிருக்கும்படி இவர் விரும்புகிறார் என்று எமக்குத் தெரிகிறது. "என்தேவனே! என்தேவனே!!" என்ற இந்தப் பயங்கரமான சப்தம் இயேசு அடைந்த வியாகுலத்தின் அகோரத்தைக் காட்டுகிறது. மனிதர் படவேண்டிய துன்பங்களையெல்லாம் அவர் பட்டு அனுபவிக்கச் சம்மதித்தபோது தேவனால் கைவிடப்படுகிற பயங்கரமான அவஸ்தையையும் சகிக்கவுடன்பட்டார். இதனால் பாபத்தின் கொடுமை இவ்வளவென்று நிதானிக்கலாம். இயேசு மனிதருடைய பாவங்களைச் சுமந்தவராய்த் தேவ நீதிக்குத்தக்க பிராயச்சித்தத்தைச் செலுத்தும்போது பிதாவாகிய தேவன் பாவத்துக்கேற்ற தண்டனை செலுத்துவதில் கொஞ்சநேரம் கைவிடப்படுவதுபோல் காணப்படுவதால் துக்கம் நிறைந்த மனத்தோடு இப்படிச்சொல்லுகிறார். எபி. 2. 17 - ல் சொல்லியிருக்கிறபடி எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியிருந்தது. பூரணதேவனும் பூரணமனிதனுமான இயேசுவின் சுவிசேஷத்தின் உண்மையை அறியாது அதன் மறைபொருள்களைக் கண்டறிந்துகொள்ளச் சக்தியற்று வீணாய்ப்பிதற்றுவதில் யாதுபயன்? பாவியும் தேவ துரோகியுமான மனிதனைப் பாவத்தைச் சகிக்கக்கூடாத கடவுளோடு ஒப்புறவாக்கத்தக்க வழி இன்னதென்று கிரேக்கஞானிகள் ஆராய்ச்சிசெய்தும் கண்டுபிடிக்க வில்லை.

நியாயப்பிரமாணத்தின்படி குற்றஞ் சாற்றப்படாதவனாய் ஜீவித்த பவுலும் தன்பிரயத்தனங்களால்கண்டு அடையவில்லையே. வானஜோதிகளின் தூரம் பருமன் முதலியவற்றைப் பரிசோதித்தறிந்து தீர்மானித்திருக்கும் தற்கால சாஸ்திரிகளும் தீர்மானிக்கமுடியவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷம் ஒன்றுதான் அதை மனிதருக்கு வெளிப்படுத்துகிறது. சுவிசேஷத்தின் இரக்ஷிப்பை அடைந்துகொண்ட அநேகர் மரணப்படுக்கையிலே சந்தோஷமும் நல்நம்பிக்கையுமாய் மரித்து நித்தியத்திற்குள் பிரவேசிப்பதை

நாம் காணும்போது, சிலுவையில் அறையுண்டு மீட்பைச்சம்பாதித்த இயேசுகிறிஸ்துவின் பாதங்களண்டை ஓடிச்சேர யார்தாம் துணியமாட்டார்?.

கனம் ஆசிரியரவர்கள் ஏழாம் பக்கத்தில் இயேசுவை நம்புவோர் இரக்ஷிப்படைவார் என எழுதி அதற்காதாரமாக மத். 7. 21.ஐக் குறிப்பிக்கிறார். மேற்கோள் எடுத்து எழுதியவர் ஏன்முழுதும் எழுதவில்லை? சாரத்தைக் கைவிட்டுச் சக்கையைத்தான் பிடித்தார். வாக்கியம் முழுதையும் வாசித்தால் நன்கு விளங்குமே. இயேசு இந்தவாக்கியத்தில் காட்டுகிறது என்ன? பக்தியாய்ப் பேசுகிறவர்களல்ல, பக்தியாய் நடக்கிறவர்கள் தாம் இரக்ஷிக்கப்படுவார்கள் என்று போதிக்கிறார். தாமும் பிதாவும் ஒன்றானபடியால் தம்முடைய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றாமல் தம்மைநோக்கிக் கர்த்தாவே என்று கூப்பிடுவதில் மாத்திரம் பயனில்லையென்று தெளிவாய்ப் போதித்தார். போதனைமாத்திரமல்ல சாதனையும் வேண்டுமென்று காட்டினார். இப்படியிருக்க இயேசுவை நம்பினவர் இரக்ஷிப்படையாராம். நன்றாயிருக்கிறது. இந்தச்சத்தியத்தை எப்படிக் கண்டுபிடித்தாரோ தெரியவில்லை! இரக்ஷிப்படைவார்கள் என்பதற்குப் பின்வரும் வாக்கியங்கள் மேற்கோள். ரோ. 6. 11; I திமோ. 1. 15; எபி. 7. 25; எபி. 9. 28; I யோ. 2. 2; I யோ. 5. 1. இப்படிப்பட்ட அநேகம் தேவ ஆவியால் ஏவப்பட்டவர்கள் எழுதிய வசனங்களை நாம் பார்க்கும்போது ஏசுவே உலக ரக்ஷகர் என்பது தெற்றெனவிளங்குகிறதல்லவா? இயேசுவைக் கிறிஸ்துவாக நம்பித் தனக்கு எஜமானாக ஏற்றுக்கொள்ளாதவன் தண்டனை அடைவான் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. மாற்கு. 16. 16. இயேசுவை இரக்ஷகரென விசுவாசியாமல் நல்லொழுக்கமுடையவராய் இருந்தே மோக்ஷம் போகலாமென்று கிறிஸ்தவவேதத்தில் எங்கும் சொல்லப்படவேயில்லை. அப்படிச்சொல்லப்பட்டிருந்தால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லையே. விசுவாசியாதவன் தண்டிக்கப்படுவான் என்பது மெய். அறியாமையுள்ள காலங்களில் தேவன் காணாதவன் போலிருந்தான். இப்பொழுதோ மனம் திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள எல்லாருக்கும் கட்டளையிடுகிறான். அப். 17. 30. ஆகையால் நேசர்களோயீராயினும் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை. இயேசுவை விசுவாசிப்பவர்கள் மோக்ஷமடைவார்கள் என்பது மெய்.

சாமுவேல்காமல்ஸ்நாடார்.

“நற்செய்தி” என்னும் புத்தகம் இஸ்லாம் நேசன் வாயிலாக முதலில் வெளிப்படாமையாலும், அப்புத்தகத்துக்கும் இப்பத்திரிகைக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமையாலும், பெரும்பான்மையான முஸ்லிம்களுக்கு இந்தத் தர்க்கத்தை அறிந்துகொள்ளும்படியான கிறிஸ்துமதஞானம் இல்லாமையாலும், இவ்வாறு தர்க்கம்செய்யும்படி நாடாரவர்களுக்கு முன் உத்தரவு கொடுத்தவர்கள்இப்போது பத்திராசிரியராய் இல்லாமையாலும், விளக்கமாகத்தர்க்கம் செய்வதற்கு வேண்டிய எழுத்துநடை நாடாரவர்களிடம் இல்லாமையாலும் இனி ஒரு முறை இக்கண்டனம் பிரசுரிக்கப்படமாட்டாது.

சென்ற சஞ்சிகையிலும், இந்தச் சஞ்சிகையிலும் வெளிவந்திருக்கும் கண்டனங்களுக்கு மட்டும் எதார்த்தவாதியின் மாற்றுக்கண்டனம் அங்கீகரிக்கப்படும். அதுவும் மிகவிரிவாயிருப்பதால் இனி நிறுத்தப்படும்.

ப-ர்.

கொலாசஸ்.

பண்டைக்காலங்களில் கோலாசஸ் என்னும் பதம் அளவுக்குமிஞ்சியபருமனுள்ள உருவங்களுக்குப் பெயராயிருந்தது. முக்கியமாய் ரோட்ஸ் என்னும் தீவின் துறைமுகத்தில் அப்பாலோ என்பவனுடைய வெங்கல உருவத்தைத்தான் கொலாசஸ்என்னும் பெயரால் அழைப்பார்கள். இவ்வுருவம் மிதமிஞ்சிய பருமனுள்ளதாயிருப்பதனால் இதை உலகத்தின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாக மதித்திருக்கிறார்கள்.

ரோட்ஸ் என்னும் தீவு கிரீஸ் தேசத்தைச்சேர்ந்த ஒரு முக்கியமான ராஜ்யம். கிரீஸ்தேசத்தாரின் பழக்கவழக்கங்களும், கல்வி யொழுக்கமும் பாவாத தேசத்தார் ஒருவருமில்லை. இக்காலத்திலும் மேல் நாட்டில் கிரேக்கருடைய சீர்திருத்தம் காணப்படுகிறது.

ரோட்ஸ் துறைமுகத்தில், நடுவில் குழிந்தும், ஓரங்களெல்லாம் கற்பாறைகளால் அமைந்தும் மூன்றாம்பிறைபோல் ஒரு ஹார்பர் உண்டு. அதன் இரண்டு கொம்புகளும் அதிகசமீபத்தில் நெருங்கியிருந்தன. அவற்றில் ஒவ்வொன்றிலும் சிற்பவேலையாலமைந்த அதிகபலமான கற்கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இரண்டிக்கும் நடுவே ஒருகப்பல் தான் செல்லக்கூடும். இயற்கையாகவும், செயற்கையாகவும் அமைந்திருக்கும் இவ்வளவு பலமான கப்பல் நிற்குமிடத்தைப் பெற்றிருந்த அந்தத் தீவிலுள்ளவர்கள் தங்களுக்குள்ள வீண் கர்வத்தால் அந்தத் துறைமுகத்தின் பெருமையை எப்பொழுதும் நிலைத்திருக்கும்படி செய்யவேண்டுமென்று ஒருபலமான யோசனைசெய்தார்கள். தங்கள் பெருமையைக்காட்டுவதைப் பார்க்கிலும் தூரத்தில் வரும் கப்பல்களை அழைப்பதற்கு உதவியாயிருக்கும் பொருட்டு ஓர் உருவத்தைச் செய்து நிறுத்துவதே நலமெனக் கருதினார்கள்.

கிரேக்கருடைய தெய்வங்களுள் அப்பாலோ என்றதனுடைய மிகப்பெரிய உருவத்தை நிருமிக்க யத்தனம்செய்தார்கள். லிண்டஸ் என்னும் நகரத்திற் பிறந்தவனும் லிஸிப்பஸ் என்னும் சிற்பியின் சிஷ்யனுமான சார்ல்ஸ் என்பவனை இவ்வேலைக்கு உரியவனென்று தேர்ந்தெடுத்தார்கள். லிஸிப்பஸ் என்பவனும் மிக்க கீர்த்தி வாய்ந்த ஒருசிற்பியே. ஆனால், அவனுடைய மாணாக்கன் அவனைக் காட்டிலும் சிறந்தவன். இந்தக் கொலாசஸ் உருவம் ஒன்றே சார்ல்ஸ் என்பவனுடைய நுண்ணறிவைப் புலப்படுத்தப் போதுமானது. இவனால் செய்யப்பட்ட வேறு சிற்பங்களெல்லாம் அழிந்து போயின. இவ்வோர் உருவமே அவனுக்குச் சிற்பசாஸ்திரத்தில் இருந்த மேதாவித்தன்மையைப் புலப்படுத்துகின்றது. அவ்வுருவத்தை இயற்றி நிறுத்தினவுடன் அதன் பருமனைக்கண்டு எல்லோரும் வியப்படைந்தபோதிலும் அதன் வேலைப்பாடும்மிக்க அருமையாயிருந்தது. அந்த உருவம் எவ்வாறு வார்க்கப்பட்டதென்று நாம் அறிந்துகொள்ளவழியில்லை. அக்காலத்திய மனிதர்களுக்கிருந்த உபகரணங்கள் இன்ன இன்னவென்று நமக்குப்புலப்படவில்லை. இந்த உருவத்தைச் செப்பம் செய்து நிலைநிறுத்துவதற்குப்பன்னிரண்டு வருஷகாலம் ஆயின என்பது மட்டும் நமக்குத் தெரிகிறது. மிக்க விலையுயர்ந்த வெண்கலத்தால் அது செய்யப்பட்டது. என்ன என்ன உலோகங்களை எந்த எந்த அளவாகச்சேர்த்து அவ்வெண்கலத்தை உண்டுபண்ணினார்களோ தெரியவில்லை. ஹார்பரைச் சுற்றி நிற்கும் இயற்கை மதில்களின் வாயிலில் பக்கத்துக்கு ஒருகாலாக எப்படி அந்த உருவத்தை நிற்கச்செய்தார்கள் என்பது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அதன் உயரம் 70 முழம். அஃதாவது, சற்றேறக்குறைய 105 அடியாகும். அதன் இரண்டு கால்களுக்கும் இடையில் ஒருகப்பல் பாய்மரங்களை இறக்காமல் எல்லாப்பாய்களையும் விரித்துக்கொண்டு எவ்வகை இடையூறுமி

ல்லாமல் உள்ளும் புறமும் போக்குவரவு செய்யலாம். கிறிஸ்துபிறப்பதற்குச் சுமார் 300 வருஷங்களுக்குமுன் அந்த உருவம் அங்கே நிறுத்தப்பட்டிருக்கவேண்டும். 56 வருஷங்கள் வரையில்தான் இந்த விக்கிரகம் செம்மையாக அங்கே நின்றுகொண்டிருந்தது. 88 வருஷங்கள் வரையில் நின்றதாகவும் சொல்லுகிறார்கள். அது நின்றுகொண்டிருந்தகாலம் வரையில் அதன் பயங்கரமான தோற்றமும், கௌரவமும் சிறிதும் குலையாமல் இருந்தன. அந்தப்பெரிய உருவத்தினின்றும் தோன்றும் நிழல் சமுத்திரத்தில் அதிகதூரம் வரையில் நீண்டிருக்கும். சமுத்திரத்தில் போக்கு வரவு செய்யும் கப்பல்பிரயாணிகள் அவ்வுருவத்தைத் தெய்வமென்றே கருதினார்கள். அதன் கெம்பீரமான தோற்றம் ஆகாயத்தை அளாவிக்கொண்டிருந்தது. அங்கேபெய்யும் மழைகளாலும் விழும்இடிகளாலும் அவ்வுருவத்திற்கு ஒன்றும் தீங்கு விளையவில்லை. கீழிருந்து அதன் தலைவரையிலும் செல்லத்தக்க சுற்றுப்படிக் கட்டொன்று இருந்தது. அப்படிகளின்வழியாய் உச்சியில் ஏறி நின்று அவ்வுருவத்தின் கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் நச்சுக்குழல்களின் வழியாகத் தூரத்தில் வரும் கப்பல்களைப் பார்ப்பார்களாம்.

சுமார் 88 வருஷகாலம் நின்றபின், கி. மு. 224 ல் அங்குண்டான ஒரு பூகம்பத்தால் அவ்வுருவம் சிறிது குலைந்தது. அக்குலைந்த உருவோடு 894௵ நின்றுகொண்டிருந்தது. அவ்வளவு காலம் வரையில் ஒருவரும் அதைப்பழுதுபார்க்க எத்தனிக்கவில்லை. இந்த அப்பாலோவின் உருவத்தைத் தங்கள் தேசத்துக்கு மிக்க கௌரவமாகக் கருதியிருந்த கிரேக்ஜாதியார் அதை முன்போல் பூர்த்திசெய்யும் பொருட்டு வரிவசூல் செய்தார்கள். ரோட்ஸ் தீவிலுள்ளாரும் அதைக்கேட்டு மிக்கமகிழ்ச்சியடைந்தார்கள். பணம் மட்டும் வசூலாயிற்று. ஆனால், ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு சாக்குப் போக்குக்கள் சொல்லிக்கொண்டு கோரியகாரியத்தை நிறைவேற்றாமலிருந்தார்கள். கடைசியில் இதற்காகப் பணம் வசூல் செய்ய முன்னின்றவர்கள் காரியம்முடிவுபெறாமலிருப்பதைக் கண்டு திரவியத்தைச் சொந்த உபயோகம் செய்து கொண்டார்கள். பிறகு கிரீஸ்தேசத்து உத்தியோகஸ்தர்கள் இதற்குக்காரணம் யாதென்று விசாரித்தபோது டெல்பியென்னும் ஊரிலுள்ள ஆகாயவாணி, அந்த உரு முடிவு பெறாமலிருப்பதே கடவுளுக்குத்திருப்தியென்று சொன்னதாக மறுமொழி கூறிவிட்டார்கள். பணம் கொடுத்தவர்கள் அதிக அவமானமடைந்த போதிலும் அதை அபகரித்துக்கொண்டவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளச் சக்தியற்றிருந்தார்கள். பணம் ஒருபோதும் திருப்பிக் கொடுபடவில்லை. அதற்கு அநேக நூற்றாண்டுகளுக்குப்பின் அவ்விக்கிரகம் அழிபடும் வரையில் குலைந்த உருவத்தோடே நின்றுகொண்டிருந்தது.

பிறகு கிரீக்ஜாதியாரும் அவர்கள் தேசமும் உரோமன் ஜாதியார் வசம் அகப்பட்டுக்கொண்டபோது ரோட்ஸ் என்னும் தீவும் அநேக காலம் வரையில் உரோம் ராஜ்யத்துக்குள் கட்டுப்பட்டிருந்தது. பிறகு அதனின்றும் நீக்கிக்கொண்டு தனியே இருக்கும்போது கீழ்தேசத்தாரும் மேல்தேசத்தாரும் அத்தீவை ஒரு பொருளாகவே யெண்ணாமல் விட்டுவிட்டார்கள். ஒருவராலும் அநேகம் வருஷம்வரையில் கவனிக்கப்படாமலிருந்த அந்தத் தீவில் சாரஸன் என்னும் முஸ்லிம் வர்க்கத்தார் குடியேறியபோது அந்தத் தீவைப் பெருமையாக நடத்திவந்தார்கள். ஆனால், புத்திக்கூர்மையும் நாகரிக முதிர்ச்சியும் வாய்ந்திருந்த இந்தமுஸ்லிம் வர்க்கத்தாருக்குக் கொலாசஸ் என்னும் அவ்விக்கிரகம் மிக்க அருவருப்பை உண்டாக்கிற்று. விக்கிரக ஆராதனையும், உருவங்களை வைத்திருப்பதும் முஸ்லிம்களுக்குத் தகாதகாரியமல்லவா? ஆதலின், இவ்வுருவத்தையும் அவர்கள் ஒரு பொருளாகஎண்ணவில்லை. கி. பி. 672. ஆம் வருஷத்தில் இவ்விக்கிரகம் இடிபட்டு எடிஸா என்னும் நகரவாசியான ஒரு எகூதி வர்த்தகனிடம் விலைக்கு விற்கப்பட்டது. அதன் கிரயம் 36,000 பவுன். ஆனால், அவ்வுருவத்தின் முழு அங்கத்தையும் நோக்கும்போது இந்தக் கிரயம் மிகக் குறைந்ததென்றே சொல்லவேண்டும். அதன் முழு உருவமும் இருந்தால் அதன் விலை எவ்வளவாகுமோ தெரியவில்லை. அதை வாங்கின யூதசாவகாரி அங்குள்ள வெண்கலத்தையெல்லாம் இடித்துப்பேர்த்து, 900 ஒட்டகங்களில் ஏற்றிக்கொண்டு சென்றான். அவ்வெண்கலத்தின் நிறை 1,080,000 சேர் இருந்ததாம். இவ்விக்கிரகத்தை அழித்தபின் ரோட்ஸ் என்னும் தீவுக்கு எவ்வகைக் கௌரவமும் உண்டாகவில்லை. காலம் செல்லச்செல்ல அத்தீவும் அழிந்துவருகிறது. அங்குள்ள துறைமுகங்களில் இஃதொரு முக்கியமான பட்டினமாயிருந்தபோதிலும் உலகத்தாரெல்லோரும் அதைப்பற்றிப் பெருமை பாராட்டிப் பேசுவதில்லை. 2,500 வருஷங்களுக்கு முன்னிருந்ததுபோலவே இப்பொழுதும் அப்பட்டினம் சாந்தமுள்ளதாகக் காணப்படுகிறது.

விநோத மஞ்சரி.

தெருத்திண்ணையிலிருந்த ஓர் ஆடவனை, அழகிய ஸ்திரீ ஒருத்தி நெடுநேரம்வரை உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றாள். அதைக்கண்டு அந்த மனிதன், "அம்மா! நீ ஒரு நாழிகையாக என் இவ்வாறு என்னை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கின்றாய்?" என்

று கேட்டான். அதற்கவள், "ஐயா! தங்களைப் பார்க்கும்போது, தாங்கள் என் கணவனைப்போன்றிருந்தீர்கள்; அதனாற்றான் அவ்வாறு பார்த்தேன்; இதற்காக மனஸ்தாபப் படவேண்டாம்" என்று சொல்லிப்போய்விட்டாள்.

* * * *

ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, "நேயனே! உன்னுடைய மனைவி எப்படிக் கோபித்து உன்னைத் திட்டினபோதிலும் நீ ஏன் பதில் சொல்லாமலிருக்கின்றாய்?" என்று கேட்டான். அதற்கவன், "போ போ பைத்தியக்காரா! அவளுக்கு நான் பயந்த ஆசாமியா? அவள் இறுமாப்பை ஒரு நிமிஷத்தில் அடக்கிவிடுவேன். ஆயினும், இப்போது அவளுடைய இடிபோன்ற குரலோசைக் கல்லவா பயந்து அடங்கி யிருக்கிறேன்" என்றுரைத்தான்.

* * * *

மூன்றுபேர் கூடியிருந்த ஓரிடத்தில் ஒருவன் மற்றொருவனைப்பார்த்து, "இவ்வருஷத்தில் விவாகம் அதிகமாய் நடந்திருக்கிறது" என்றான். அதைக்கேட்டு வேறொருவன், "ஆம்; விவாகம் அதிகம்தான்; அவற்றுள் ஸ்திரீகளுக்குத்தான் அதிகவிவாகங்கள் நடந்திருக்கின்றன" என்றுரைத்தான்.

வர்த்தமானம்.

இந்தியாவில் முடிசூட்டிக் கொள்ளும்பொருட்டு மகா மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியாரும், சக்கரவர்த்தினியாரும்இவ்வருஷம் டிசம்பர்மீ 2௳ சனிக்கிழமையன்று இந்தியாவுக்குவந்து சேருவார்கள். அம்மாதம் 7௳ வியாழக்கிழமை டில்லிமா நகருக்கு வந்துவிடுவார்கள்.

* * * *

அநேகம் இந்திய பாஷைகளோடு ஐரோப்பிய பாஷைகளுள் ஆறுவரையில் கற்றுத் தேர்ந்திருந்தவரும் மிக்க புத்திக்கூர்மையுள்ளவரும், சம்ஸ்கிருதபாஷையில் நிபுணருமாகிய ஸ்ரீமாந் டாக்டர் சையதலி சாகிபு பில்கிராமி யவர்களைச் சில நாட்களுக்குமுன் இழக்க நேரிட்டதைப்பற்றி மிக விசனிக்கிறோம்; இவர்கள் சென்னைச் சர்வகலாசங்கத்தில் வடமொழிப் பரீக்ஷகராக அநேக வருஷமிருந்திருக்கிறார்கள். இங்கிலாந்திலும் கீழ்தேச பாஷைக்குரிய பரீக்ஷகராக இருந்ததுண்டு.

* * * *

லண்டனில் ஸ்ரீமாந். ரைட் ஆனரபிள். அமீர் அலிசாகிபு அவர்களின் பெருமுயற்சியால் லண்டன் மஸ்ஜிது விஷயம் உற்சாகமாய் நடைபெற்றுவருகிறது. துருக்கி சுல்தானவர்கள் 1,000 பவுன் சன்மானமளித்திருக்கிறார்கள்.

MADRAS 1911

بسم الله

இஸ்லாம் நேசன்.

فانظر الى ما قال ولا تنظر الى من قال *

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை-2] 1911, ஜூலை [வகை-9

இஸ்லாம் நேசன்.

இஸ்லாம் நேசர்களே!

நம்முடைய பத்திரிகைக்கு இப்போது இரண்டாவது வயது முடிவாகப் போகிறது. அடுத்த ஆகஸ்ட் மாதத்தோடு இரண்டாம் பிராயம் பூர்த்தியாகும். செப்டம்பர் பிறந்தால் மூன்றாம் பிராயம் ஆரம்பமாகும். இஸ்லாம் நேசன் 1909 ௵ செப்டம்பர் மாதத்தில் தொடங்கிற்று. அம்மாதத்திலிருந்து 1910 ௵ ஜூன் மாதம் முடியுமட்டும் மூன்று மாதத்துக்கு ஒருமுறை விகிதம் நான்கு பத்திரிகைகளே வெளிவந்தன. அக்காலத்தில் இது மாதாந்த பத்திரிகையாயில்லை. முதல் பத்திரிகை 1909 செப்டம்பரிலும், இரண்டாவது சஞ்சிகை 1909 டிஸம்பரிலும், மூன்றாவது சஞ்சிகை 1910 மார்ச்சிலும், நான்காவது சஞ்சிகை 1910 ஜூனிலும் வெளிவந்தன. மூன்றுமாதப் பத்திரிகையாகவே யிருந்தால்இரண்டாவது தொகுதிப் பத்திரிகை 1910 செப்டம்பரில் ஆரம்பமாயிருக்கவேண்டும்; ஆனால், அதற்குள் இஸ்லாம் நேசன் மாதாந்த பத்திரிகையாக மாறிவிட்டது. ஆதலின், மாதாந்த பத்திரிகையின் முதல் சஞ்சிகை 1910 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பமாயிற்று. இந்தக் கணக்குப்படி இப்பத்திரிகையின் மூன்றாம் தொகுதி 1911 ஆ[illegible]ட் மாதத்தில் ஆரம்பமாக வேண்டும்; இந்த ஜூலை மாதத்[illegible]

இதன் இரண்டாம்பிராயம் முடிவாகவேண்டும்; ஆனால், இவ்வருஷம் செப்டம்பர் மாதத்தில் மூன்றாம் தொகுதி ஆரம்பமாகும்போல் தோன்றுகிறது. இதன் காரணமாவது:

1910 ஆகஸ்ட் மாதத்தில் இதனுடைய இரண்டாம்தொகுதி முதல் சஞ்சிகை வெளிவந்தது. அக்காலத்தில் இப்பத்திரிகை மதுரையில் பிரசுரமாய்க்கொண்டிருந்தது. இரண்டாவது சஞ்சிகை செப்டம்பரிலும், மூன்றாவது சஞ்சிகை அக்டோபரிலும் வெளியாயின. ஆனால், சிலவகை அசம்பாவிதங்களால் இப்பத்திரிகை சிறிது காலம் தடைபட்டு நின்றது.

இறுதியில், இவ்வருஷம் பிப்பிரவரிமாதத்தில் இதன் நான்காவது சஞ்சிகை வெளிவந்தது. அதுமுதல் இச்சென்னைமாநகருக்கு அப்பத்திரிகை கொண்டுவரப்பட்டு இங்கேயே பிரசுரம்செய்யப்படுகிறது. பிப்பிரவரிமாதத்தில் வெளிவந்த 4-வது சஞ்சிகையில் சென்ற நவம்பர், டிஸம்பர், ஜனவரி, பிப்பிரவரி ஆகிய நான்குமாதப் பத்திரிகையையும் சேர்த்து வெளிப்படுத்த எத்தனித்தோம். ஆனால், அவகாசக் குறைவால் நவம்பர், டிஸம்பர், ஜனவரி ஆகிய மூன்று மாதப் பத்திரிகைகள்மட்டும் அப்போது வெளிவந்தன. ஆதலின், பிப்பிரவரிமாதப் பத்திரிகை யொன்று இடையில் நின்றுவிட்டது. அதன்பின்னர் ஒழுங்காய் ஒவ்வொரு மாதமும் நடந்துவருகிறது. 1910 ஆகஸ்ட்டு முதல் 1911 ஜூலை முடிவு வரையில் ஒருவருஷமாயினும் இடையில் ஒரு சஞ்சிகை விடப்பட்டிருப்பதால் ஆகஸ்ட்டு முடிவோடுதான் ஒரு வருஷமாகும். இச்சஞ்சிகையில், "தொகை 2, வகை 9" என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்வொன்பதோடு 4-வது சஞ்சிகையில் அதிகமாகச் சேர்ந்திருக்கும் இரண்டு சஞ்சிகைகளையும் சேர்த்தால் பதினொன்றாகும். ஆகஸ்ட்டுமாதத்தில் 10-வது சஞ்சிகை வெளிவந்தால் 12 மாதப் பத்திரிகைகள் முடிவாகின்றன.

இஸ்லாம் நேசர்களே! அடுத்த செப்டம்பர்மாதத்தில் இப்பத்திரிகையின் மூன்றாவது தொகுதி ஆரம்பமாகும். அப்போது சந்தாநேயர்களுக்கு வி-பி யில் முதல்சஞ்சிகை அனுப்பப்படும். சென்ற செப்டம்பரில் சந்தா நேயராகச் சேர்ந்தவருக்கு ஒரு வருஷ சந்தாவுக்கு வி-பி அனுப்பப்படும். இடையில் சேர்ந்தவர்களுக்கு இதுவரையில்அனுப்பிய பத்திரிகைகளின் சந்தாவைக்கழித்துக்கொண்டு மிகுதிப்பணத்தை அவர்களுடைய கணக்கில் அதிகவரவாக ஏற்றுக்கொண்டு, குறையும் தொகைக்கு மட்டும் வி-பி அனுப்பப்படும். ஒவ்வொரு சந்தா நேயரும் பத்திரிகையின்புது வருஷ ஆரம்பத்தில் சந்தாவைச்செலுத்திவிட்டால் எமக்குச் சிரமமில்லாமற்போம். பத்திரிகையும் செவ்வனே நடைபெறும். வி-பி யில் அனுப்பிவிட்டோமென்று கோபித்துக் கொள்ளாமல் பார்ஸலைப் பெற்றுக்கொள்ளும்படி ஒவ்வொரு சந்தா நேயரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். இதுவரையில் சிலர் சந்தாப் பணத்தைக் கொடாமல் வைத்திருக்கிறார்கள்; அவர்கள் தயவுசெய்து முன் பணத்தையும் அடுத்த வருஷ சந்தாவையும் கொடுத்து விடுவார்களென்று நம்புகிறோம்.

இப்போது இஸ்லாம் நேசன் டெமி 8 ப் பக்கம் சைஸில் 32 பக்கத்தோடு வெளி வருகிறது. அடுத்த செப்டம்பரில் டபிள் கிரௌன் 8 ப் பக்கம் பெரியசைஸில் 26 பக்கத்தோடு இதே சந்தாவுக்கு அனுப்பப்படும். இதைக்காட்டிலும் அழகாகவும் பெரிதாகவும் நேர்த்தியாகவு மிருக்கும். இங்கிலீஷ் மாதாந்த பத்திரிகைபோலிருக்கும். முன் பக்கத்தில் அழகான சித்திரப்படங்கள் போடப்படும். எல்லாம் நம்முடைய மார்க்கத்துக்கு விரோதமில்லாத படங்களா யிருக்கும். அதனருமை அப்போதுதான் தெரியும். இப்போது 25உ வெளிவரும் பத்திரிகை செப்டம்பர் முதல் 15உயிலேயே வெளிவரும்.

இனி நாம் போடப்போகும் பெரிய சைஸ் பத்திரிகைபோல் 40 பக்கங் கொண்ட வேறு பத்திரிகைகள் 3 ரூபா சந்தாவுக்கு விற்கப்படுகிறது. ஆனால், நம்முடைய சந்தா நேயர்கள் இப்போதிருப்பதைக் காட்டிலும் இருமடங்கு அதிகமானால் இந்த இரண்டு ரூபா சந்தாவுக்கே அந்த 40 பக்கத்தையும் சேர்த்து வெளிப்படுத்தலாம். சந்தா நேயர்களின் தயைவேண்டும்.

ப-ர்.

இஸ்லாம்

310-வது பக்கத் தொடர்ச்சி

உலகத்தில் ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்களுடைய மதப்புத்தகமே பூர்த்தியான கிரந்தமென்று சொல்லிக் கொள்ளுகி

றார்கள். ஆனால், பூர்த்தியான கிரந்தத்தின் தன்மையைப் பரீக்ஷிக்க வேண்டுமாயின் அதற்கு ஓர் உபாயம் உண்டு. ஒரு வேதத்திற் காணப்படும் சட்டதிட்டங்களின் முறைப்படி அனுஷ்டானம் செய்து வந்தால் இக்காலத்திலும் முற்காலத்தைப்போல் அநேகம் மகான்கள் உண்டாகவேண்டும். ஒரு கிரந்தத்தின் முறைப்படி இக்காலத்தில் அனுஷ்டிக்க முடியாமற் போனால், அவ்வேதம் முடிவானதென்று எப்படி நாம் சொல்லக்கூடும்? இவ்வாறே தீர்க்கதரிசிகளுள்ளும் கடைசியானவரை நாம் அறிந்து கொள்ளலாம். கடவுள் சம்பந்தமாகவும் ஆத்ம சம்பந்தமாகவும் அடையக்கூடிய வெற்றிக்குரிய முறையைப் பிழைபறக் கற்றுக் கொடுத்தவரே இறுதி நபியாயிருக்க முடியும். இப்படிப்பட்ட திறமை நம்முடைய நபிகள் நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாகு அலைகிவ ஸல்லம் அவர்களிடத்தில் காணப்படுகிறது.

முற்காலத்தில் ஆத்ம தத்துவத்தில் முதிர்ச்சி யடைந்தவர்கள் இறைவனுடைய தரிசனத்தைப் பெற்றிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னுள்ள மகான்களும் இந்தத் திறமை பெற்றிருந்தார்கள். அக்காலத்தில் அல்லாகு தஆலா மனிதர்களோடு சம்பாஷணை செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இறைவனுடைய குணங்களுள் ஒன்று மகான்களுடன் சம்பாஷிப்பதாகும். இஃதுண்மையாயின் இதர மதத்தினர்கள் ஏன் இப்பொழுது கடவுளைக்காணும்படியான சத்தியைப் பெறுவதில்லை? அவர்களுடைய மார்க்கப் புத்தகங்கள் முடிவுள்ளவையாயின் இக்காலத்திலும் அவற்றில் சொல்லப்பட்ட முறைப்படி பழகி வருவோர் மகான்களாக வேண்டும். கடவுள் முற்காலத்தில் இருந்ததுபோல் இக்காலத்திலும் சர்வ சக்தித்துவம், எங்கும் நிறைந்திருத்தல், பரிபூரணம், தயை முதலிய குணங்கள் பொருந்தியவரா யிருப்பாராயின் முன்போலவே இக்காலத்திலும் மகான்களுக்குக் கடவுள் தரிசனம் கொடுக்கவேண்டும். ஒருகாலத்துக்குப் பின் கடவுள் மனிதருடைய கண்ணுக்குப் புலப்படும் தன்மையை நீக்கிக்கொண்டாரென்று சிலர் சொல்லுகிறார்கள். இஃதுண்மையாயின் தர்க்க முறைப்படி இதற்குக் காரணம் பின்வரும் இரண்டில் ஒன்றாயிருக்க வேண்டும்: ஒன்று, அல்லாகுதஆலாவிடத்தில் முன்னுள்ள குணங்கள் இப்போது குறைந்திருக்கவேண்டும்; இரண்டு, முன்னோர்களுக்கிருந்த சக்தி இப்போ திருப்பவர்களிடத்தில் இவர்களுடைய

தியஒழுக்கத்தால் குறைந்திருக்கவேண்டும். ஆனால், இவ்விரண்டு காரணங்களும் அசம்பாவிதமாகத்தோன்றுகின்றன. பரிபூரணமுள்ள அல்லாகு தஆலாவினுடைய தன்மைகள் எப்பொழுதும் மாறாமலிருக்கவேண்டும். உண்மையில் அவனுடைய குணங்கள் மாறுபடாமலே யிருக்கின்றன. தேக தத்துவ சாஸ்திரப்படி பரீக்ஷித்துப்பார்த்தால் மனிதன் முன்போலவே யிருக்கிறான். சில மனிதர்கள் மகான்களாவதற்கு அருகரல்லாதவரா யிருக்கலாம். ஆனால், கீதையில் கிருஷ்ணபகவான் தாம் அடிக்கடி இவ்வுலகத்தில் அவதாரம் செய்வதாகச் சொல்லி யிருக்கிறார். அவரைப்போன்ற மனிதர்களேனும் அவதரித்துக் கடவுளைக் காணலா மல்லவா? தங்களுடைய மத கிரந்தங்கள் முடிவானவை யென்று சொல்லும் வேறு மதத்தினர்களுள் எத்தனைபேர் மகான்களாக அவதாரம் செய்கின்றனர்? அவர்களுடைய தொகையைக் கணக்கிட்டுப்பார்த்தால் உண்மையான மகான் ஒருவரும் இல்லையென்றே சொல்லும்படி நேரிடும். அல்குர்’ஆனில் கீழ்க்காணும்வண்ணம் வாக்கியங்கள் வருவதைப்பார்க்கும்போது மிக்க ஆனந்த முண்டாகிறது. “ஏ இறைவனே! உன்னுடைய செல்வாக்குப்பெற்ற தீர்க்கதரிசிகளும் உண்மையுரைப்போர்களும் மதப்பற்றுள்ளோர்களும் சன்மார்க்கநெறியில் நடப்போரும்ஆகிய எல்லோரும் கடந்துசென்ற அந்த நேரான பாதையை எமக்கும் காட்டுவாயாக” என்று நாம் கடவுளைப் பிரார்த்திக்கும்போது அல்லாகு தஆலா அதற்கு மறுமொழி சொல்லுகிறதாவது: “நம்முடைய பாதையில் எவர் உழைப்பெடுத்துக் கொள்ளுகிறாரோ அவருக்கு நம்முடைய பாதையைக் காட்டுகிறோம்” என்பதே. அல்குர்’ஆனில் சொல்லியிருக்கும் விஷயமாவது அல்லாகு தஆலாவுக்குரிய பாதையில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த முயற்சியால் பாடுபடுவானாயின் அல்லாகு தஆலா அவனுக்குக் காட்சி கொடுக்கிறானென்பதே. கடவுளைக் காண்பதற்குரிய இலகுவானமார்க்கம் அல்குர்’ஆனில் தான் காணப்படுகிறது. பண்டைக் காலங்களில் மேன்மைபெற்றிருந்த மகான்களைப்போல் நாமும் இப்பொழுது அல்லாகு தஆலாவின் அடிமைகளாகலாம். சுருங்கச் சொல்லுமிடத்து நம்முடைய நபிகள்நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களே கடைசியான தீர்க்க தரிசியென்று சொல்லவேண்டும். ஏனெனின், இகலோகத்தில் உயிர் வாழ்க்கை செய்வதற்கு வேண்டிய எல்லா ஒழுங்குகளும் குறைவில்லாமல்

அந்த நபியவர்களால் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இன்னும் மகாத்மாக்களுக்குரிய பதவியை அடைய வேண்டிய மார்க்கங்களையும் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். "என்னுடைய பின்னோர்களில் தெய்விகம் பெற்றவர்களெல்லோரும் இஸ்ராயீல் அலைகிஸ்ஸலாமுடைய பரம்பரையாரைப்போல் ஆவார்கள்" என்று நாயகமவர்களுடைய திருவாக்குப் பிறந்திருக்கிறது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித் என்னும் மகாத்மா ஆசார சீர்திருத்தக்காரராக அவதரிப்பார் என்றும் சொல்லியிருக்கிறார்கள். முஸ்லிம்களின் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தால் இவ்வாறு அநேகம் முஜத்தித்கள் அவதாரம் செய்திருக்கிறார்கள். இக்காலங்களில் கிருஷ்ணபகவான் ராமசந்திரன் புத்தன் ஆகியவர்களைப்போல் வேறுமதத்தில் அவதார புருஷர்கள் தோன்றி யிருக்கிறார்களோ என்பது சந்தேகம். கிரிஸ்தவ மதத்தில் ஜான், பீட்டர் ஆகிய இவர்கள் ஏசுவினுடைய சற்குணம் வாய்க்கப் பெற்றிருந்தார்களோ என்பதும் சந்தேகமே. ஆனால், இஸ்லாம் மார்க்கத்தைப் பார்த்தால் கடவுள் அருள்பெற்ற மகான்கள் அவதாரம் செய்யாத காலம் ஒன்றுமில்லை. உதாரணமாக, உமர் பின் அப்துல்அஜீஸ்; பூஸ்தாமிலுள்ள பாயெஜீத்; பகுதாதிலுள்ள ஜூனைத்; ஸ்பெயினிலுள்ள முகையதீன் இபுன் அரபி; அப்துல்காதர்ஜீலானி; மொய்னுத்தீன்சிஷ்தி; ஷெய்க்அகமத்முஜத்தித்அலிப்ஸானி; நிஜாமுத்தீன் ஒளல்யா; பாவாபரீத் ஷக்கர்கஞ்சு; தாதா கஞ்சுபக்ஷீ; ஷாஒலியுல்லா; சையத்அகமதுபரேல்வீ; நாகூரிலுள்ள ஷாவுல்ஹமீது ஒளல்யா முதலியோர்கள் அல்லாகுதஆலாவின் அருள்பெற்றவர்கள். இன்னும் கணக்கிட்டுப்பார்த்தால் ஒவ்வொருகாலத்திலும் அநேகம் ஒளல்யாக்கள் அவதரித்திருக்கிறார்கள் என்பது புலப்படும். இவ்வாறு முஜத்தித்கள் அவதரிப்பார்கள் என்னும் உண்மை அல்குர்'ஆனில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இக்காலத்தில் எல்லாம் இயற்கைதான் என்று சொல்லும்வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதனால்தான் இப்பொழுது மதப்பற்றில்லாமல் ஒவ்வொரு விஷயத்திலும் அவநம்பிக்கை உண்டாகிறது. அடிக்கடி முஜத்தித்கள் அவதாரம் செய்யாமலிருப்பார்களாயின் இக்காலத்தில் ஐரோப்பாவில் எண்ணப்படுவதுபோல் இஸ்லாம் மார்க்க உண்மைகளும் கட்டுக்கதைகளென்றே தள்ளிவிடப்படும். இவ்வாறு அவதாரம்செய்யும் ஒளல்யாக்களெல்லோரும் "லாயிலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் ரசூலுல்லாஹி" என்னும் கலிமாவுக்கு உட்பட்டேயிருப்பார்கள். இதுவரையில் ஒளல்யாக்கள் உண்டானதுபோல் இனி உண்டாகமுடியாதென்னும் நிபந்தனையில்லை. கதவைத்தட்டுகிறவர்களுக்கு அது திறக்கப்படும். மனிதன் இவ்வுலகில் அடையக்கூடிய பதவிகளுள் உயர்ந்தது ஒளல்யா பதவிதான். இந்த மேலான பதவியை அடையும்படியான மார்க்கந்தான் இஸ்லாமென்னும் பெயரோடு பிராசீனகால முதல் விளக்கப்பட்டிருக்கிறது. கடைசியில் நம்முடைய அன்பியா நாயகம் முகம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய காலத்தில் இஸ்லாம் மார்க்கம் பூரணமாயிற்று. மனிதனிடத்தில் அளவற்ற சக்திகள் இருக்கின்றனவென்றும், அவனவன் தன்னுடைய சொந்தமுயற்சியால் மகோன்னத பதவியை அடைய முடியுமென்றும் உபதேசம் செய்கின்ற வேதமாகிய அல்குர்'ஆனும் முடிவான வேதமே. ஆதலின், இவ்வேதம் அல்லாகு தஆலாவால் அருளப்பட்டதென்று நாம்சத்தியமாக நம்புகிறோம். அவ்வேதம் நீடூழிவாழ்வதாக. அவ்வேதத்தில் சொல்லப்பட்ட முறைகளை அனுபவத்தில் செய்து காட்டி, நம்மெல்லோரையும் கடைத்தேறும்படி செய்தருளிய திருத்தூதரும் நீடூழி வாழ்வாராக. ஆமீன். ப - ர.

சையது அலி பில்கிராமி.

329-ம் பக்கத் தொடர்ச்சி.

டாக்டர் சையதலியவர்கள் இங்கிலாந்திலிருக்கும்போது பாரிஸ்டர் வேலை பார்க்கும்படியான உத்தரவு பெற்றுக்கொண்டு அங்குள்ள கோர்ட்டுக்களில் பேசி வந்தார். இந்தியாவுக்கு வந்தவுடன் ஹைதராபாத்தில் பாரிஸ்டர் வேலை ஆரம்பித்தார். ஹைதராபாத்தில் தெய்வாதீனத்தால் ஓர் உத்தரவு பிறந்தது. அப்பொழுது அநேகர் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார்கள். அதுமுதல் பில்கிராமி அவர்களும் நிஜாமுடைய கோர்ட்டில் வேலை பார்க்கக்கூடாதென்று பிரஷ்டம் செய்யப்பட்டார்கள். பின்னர் ஹைதராபாத்தில் முப்பது வருஷகாலம் வேலை பார்த்துவந்த பில்கிராமி அவர்கள் அத்தேசத்தைவிட்டு வெளிக் கிளம்பும்படி நேரிட்டது. தம்முடைய சொந்த ஊருக்கருகில் ஹார்டோய் என்னும் சிற்று

ரில் சென்றவருஷம் வந்து தங்கினார்கள். அவர்களுக்குப் பிரியமானவண்ணம் சதாகாலமும் கல்வியில் உழைத்துவந்தார்கள். அலிகார் சர்வ கலாசாலை சம்பந்தமான கூட்டத்தில் ஒருவராயிருந்து அதிக சிரத்தையோடு உழைத்து வந்தார்கள். அக்கலாசாலையை ஒரு தனி முஸ்லிம் சர்வகலா சங்கமாக ஆக்கவேண்டியதற்கு மிக்க பாடுபட்டார்கள்.

சையது அலி பில்கிராமி அவர்களைப் பற்றியும், அவர்களுடைய ஒழுக்கம் கல்வித்திறமை, புத்திக்கூர்மை முதலியவற்றைப் பற்றியும் முழுதும் எழுதவேண்டுமாயின் இங்கே இடம்போதாது. அவர்களைப்பற்றியும் அவர்களுடைய உழைப்பைப் பற்றியும் சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்ளவேண்டும். அவர்களுடைய குணாதிசயத்தைப் பார்க்கப் புகுந்தால் அது மிக்க ரம்மியமாயிருக்கும். எல்லோரையும் விசுவாசிக்கும் குணமுடையவர்கள். இவர்களையும் எல்லோரும் விசுவாசித்து வந்தார்கள். இவர்களுடைய கல்வியும் சாமர்த்தியமும் அதிகப்பட்டிருந்ததுபோல் சற்குணமும் மிகுந்திருந்தது. நல்லாசிரியனிடத்தில் கல்வி கற்ற மாணாக்கனிடத்தில் காணப்படும் ஒழுக்கங்களெல்லாம் நிறைந்திருந்தன. சாஸ்திர ஆராய்ச்சியில் அபிருசி உண்டு. உண்மையைக் கண்டுபிடிப்பதில் மிக்க ஊக்கமுடையவர்கள். பாஷாதத்துவத்திலும் சாஸ்திர தத்துவத்திலும் சிறிதும் பிழை செய்யார். இக்காலத்தில் சுதேசி சம்பந்தமாகவும் இராஜாங்க சம்பந்தமாகவும் சில ராஜதுரோகிகள் செய்யும் கைப்புரட்டு ஜாலங்கள் அவர்களுக்குத் தெரியா; எக்காலத்திலும் ராஜதுரோகம் பாராட்டினதில்லை; இப்பொழுது இந்து முஸ்லிம் சமாசாரங்களெல்லாம் ராஜாங்கத்தோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட விஷயங்களில் பில்கிராமி அவர்கள் ஒருபோதும் தலையிட்டதில்லை.

இந்திய ஐக்கிய மாகாணத்தில் கொஞ்ச காலத்துக்கு முன் கோர்ட்டுக்களில் தேவ நாகர எழுத்தை உபயோகிக்கலாம் என்று ஓர் உத்தரவு பிறந்தது. அப்பொழுது அநேகர் ஆக்ஷேபம் செய்தார்கள். ஆனால், டாக்டர் சையதலியவர்கள் எழுதிவந்த புத்தகங்கள் கவர்ண்மெண்டாருடைய உத்தரவுக்கு ஒத்தவண்ணம் இருந்தன. இவருக்குத் தேவ நாகர எழுத்தில் அதிகப் பயிற்சியுண்டு. ஹிந்துஸ்தானி பாஷையை இந்த எழுத்தின் மூலமாகவே கற்றுக்கொள்வது உசிதமென்று அதற்காகப் பரிந்து பேசுவார்கள். அரபு பாஷைக்குரிய எழுத்துக்களை ஹிந்துஸ்தானியில் உபயோகிப்பதனாற்றான் அதை எல்லோரும் கற்றுக் கொள்வதற்கு இடையூறுண்டாகிறது. அரபு எழுத்துக்களால் ஹிந்துஸ்தானி பாஷையைக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும் தேவநாகர எழுத்தால் கற்றுக்கொள்வது மிக்க எளிதென்பது பில்கிராமி அவர்களின் அபிப்பிராயம். அதற்கவர்கள் அநேகம் காரணம் காட்டுகிறார்கள். இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒற்றுமையை உண்டாக்குவதற்கு எல்லோரும் பாடுபடும் இக்காலத்தில் அவர்களுடைய உதாரகுணம் மிக்க நன்மை செய்தது. இவர்களைப்போன்ற பண்டிதர்கள் இக்காலத்தில் உண்டாவது அருமை. அவர்களுக்கு ஒப்பான சாமர்த்திய சாலியை இனிப் பார்க்க வேண்டுமாயின் அநேகங் காலம் செல்லும். இப்போது அவர்களை இழக்க நேரிட்டதைப்பற்றி நாம் விசனிக்கிறோம்.

குலாம் காதிறு நாவலர்.

முதல் அதிகாரம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் அவதரித்த உத்தம புருடருள் குலாம்காதிறு நாவலரும் ஒருவர். இவர் 1852-ம் ஆண்டில் நாகூரில் அவதரித்தனர். இவருடைய தகப்பனார் “வாப்பு” என்னும் பெயரினர். வாப்பு என்பவருக்கு ஆயுள்வேதத்தில் சிறிது பாண்டித்தியமுண்டு. வைத்தியம் புரியுந் தொழிலே இவருடைய ஜீவனோபாயத்திற்கு உரியதாயிருந்தது. மிகுந்த எளிமையான நிலைமையில் வைத்தியத் தொழிலினால் கிடைக்கும் அற்ப வருமானத்தைக் கொண்டே இவர் காலக்ஷேபம் செய்துவந்தார். இவர் உலகத்தில் தேடிவைத்த ஐசுவரியம் எல்லாம் இவரது அருமைப் புதல்வர் ஒருவரேயாம். அதிகம் பிரகாசியாததும் சிறியதுமான எளிய குடும்பத்தில் அவதரித்த குழந்தையை வாப்பு மிக்க அன்பாய் வளர்த்துவந்தார்.

தமது குலமும் செல்வமும் விளங்கவந்த குழந்தையென்று அவர் பலகாலும் சொல்லுவர்; தேசம் திகழவந்த மைந்தனென்றும் அவர் வாழ்த்துவதுண்டு. தமது வாணாளில் அக்குழந்தையைத் தவிர வேறு இகலோக பாக்கியத்தை அடையாத வாப்பு என்னும் ஆயுள்வேதபண்டிதர் அக்குழந்தையிடம் வைத்திருந்த அன்பிற்கோர் எல்லை கிடையாது. அக்குழந்தையின் விளையாட்டு

ம் பார்வையும் வளர்ச்சியுமே அவருக்கு ஆநந்தம் விளைவிப்பனவாயிருந்தன. குழந்தையோடு கொஞ்சுவதால் சிலநேரங்களில் தமது பசியைத்தானும் அவர் மறந்திருக்கிறார். தமது குழந்தை உலகத்தில் புகழத்தக்க ஒரு மனிதனாய் வரவேண்டுமென்பது ஆயுள்வேதபண்டிதரின் முழு விருப்பமுமாயிருந்தது. அவருடைய விருப்பத்தை ஆண்டவன் ஒப்புக்கொண்டானாயினும் அதை அறிந்து மகிழும் பாக்கியத்தை அவருக்குக் கொடுக்கவில்லை. குலாம்காதிறு என்னும் குழந்தை அதி பாலியமா யிருக்கும் காலத்திலேயே ஆயுள்வேதபண்டிதராகிய வாப்பு என்பவர் தேகவியோகமாயினர். தந்தையை இழக்கப்பெற்ற குலாம்காதிறு என்னும் சிறுவர் தமது பெரிய பிதாவாகிய பக்கீர்தம்பி யென்பவரின் ஆதரவில் அமர்ந்தார். பக்கீர்தம்பி என்பவர் தமது சகோதரரின் புதல்வரைத் தம் சகோதாரரைப்பார்க்கிலும் விசேஷ அன்போடு நடத்திவந்தார். வாப்பைப்போல் பக்கீர்தம்பி என்பவரும் எளியவரேயாயினும் தம் சகோதரருடைய புத்திரரைப் போஷிப்பதில் இவர் எவ்வித குறைவையும் காண்பிக்கவில்லை. சிறுவர் தம் வயதிற் கேற்ற எல்லா நலங்களாலும் போஷிக்கப் பெற்றாராயினும் அவருக்குப் பிரதானமான கல்வி நலத்தை யளிக்க அவரது பெரிய தந்தையரால் கூடவில்லை. மதாசாரப்படி சிறுவருக்கு மார்க்க சடங்குகள் செய்விக்கப்பட்டன. குலாம்காதிறு கல்வி கற்கும் பிராயத்தை அடைந்தபோது பக்கீர்தம்பி என்னும் பெரிய தந்தையானவர் தமது மகனைத் தம்முடைய சிறிய காசுக்கடையில் வைத்துத் தாமே தமிழ்ப்பாஷையைக் கற்றுக் கொடுக்கலானார்.

பக்கீர்தம்பி என்பவருக்குத் தமிழ்ப் பாஷையில் சிறிது விற்பத்தியுண்டு. குலாம்காதிறுக்குத் தமிழ் நெடுங் கணக்கைக் கற்பித்து, சற்றே எழுத்துக் கூட்டி வாசிக்கும்படி செய்யும் போதனா முறையைப் பக்கீர்தம்பி சிலநாட்கள் வரையில் வகித்துவந்தார். குலாம்காதிறு என்னும் சிறுவர் தமிழ் வாசக புத்தகங்களை ஒருவாறு எழுத்துக்கூட்டி வாசிக்கும் திறமையுள்ளவரானார். உடனே பக்கீர்தம்பி, "குலாம்காதிறே! நீ சீறாப் புராணத்தைப் படிப்பாயாக" என்று கட்டளையிட்டு அவ்வாறே சீறாப்புராணத்தைச் சிறுவர் கையில் அளித்து, தமது கைக்கு ஒரு மூங்கிற் றடியை ஏற்றுக்கொண்டார். நன்றாய் வாசிக்கவேண்டிய கடமை சிறுவரைச் சேர்ந்ததாகவும், அவர் வாசிக்கத் தடுமாறும் வேளைகளில் அவரை நன்றாக அடிக்கவேண்டிய கடமை பக்கீர்தம்பியைச் சேர்ந்ததாகவும் இருந்தது. இவ்விதம் சிலநாட்கள் சென்றன. இவ்வித ஒழுங்கான கல்விப்பயிற்சியில் சிறுவர் தமது பெரிய தந்தையின் பார்வையிலேயே எப்போதும் இருக்கவேண்டியதென்னும் பலமான தளையிடப்பட்டவராயிருந்தார்.

இவ்வித நிர்ப்பந்தமான நிலைமையில் சிறுவருடைய ஒப்பற்ற கீழ்ப்படிதலானது அவருக்கு ஒருவிதமான நன்மையைத் தருவதாயிற்று. எப்பொழுதாவது விசேஷித்த நாட்களில் அவருடைய பெரிய தந்தையார் அவருக்குச் சிற்றுண்டிக்காகச் சுவல்ப காசுகளைக் கொடுத்து, வெளியேபோய் வருமாறு அநுமதி கொடுப்பார். குலாம்காதிறு மற்றைய சிறுவர்களைப்போல் தின்பண்டங்களை வாங்கி யருந்துவதற்கு விரும்புவதில்லை. அவர் விருப்பம் வேறொன்றிலா யிருந்தது. இவ்வாறு சிலவேளைகளில் தமக்குக் கொடுக்கப்படும் அற்ப சன்மானங்களைச் சேர்த்து வைத்து, மூன்று பைசாமுதல் எட்டணா பத்தணா வரையில் விற்கப்படுகின்ற பல புத்தகங்களை விலைக்கு வாங்கி அவைகளை ஆசையோடு வாசிப்பார்.

இவ்வாறு சிறுவர் விருப்பமாய் வாங்கி வாசிக்கும் நூல்களில் இலக்கண நூல்களும் சம்பந்தம் பெற்றன. அவற்றில் சிறுவருக்கு மனப்பற்றுதல் அதிகரித்தது. தம் பெரிய தந்தையாரிடம் இலக்கண நூல்களில் பாடங் கேட்கச் சிறுவர் ஆரம்பித்தார். இவரது விருப்பத்திற் கிணங்கி அவர் இலக்கண நூல்களிற் பாடம் சொல்லிவந்தார். சில தினங்கள் வரையில் இலக்கண நூல் பாடங்கேட்டுவந்த சிறுவர் தமது அறிவின் வளர்ச்சியால் தமக்குப் பாடஞ் சொல்லும் பக்கீர்தம்பியின் போதனைகளிற் சில ஆக்ஷேபங்களை யறிந்தார். அவ்வாக்ஷேபங்களை யவரிடம் தெரிவித்துச் சமாதானம் பெறச் சிறுவர் துணியவில்லை. அவர் சங்கோசமும் அச்சமும் உள்ளவராய்த் தம்முள் எழுந்த ஆக்ஷேபங்களை வெளிவிடாமல் மறைத்துவந்தனர்.

அவரது நிலைமையைப் பக்கீர்தம்பி மெதுவாக அறிந்துகொண்டார். அவர் தம்மோடு வாசித்த விருத்தாசல உபாத்தியாயரிடம் சென்று, தம் சிறுவனை அவரிடம் அனுப்புவதாகவும் அவனுக்கு இலக்கணத்தில் ஏதோ பற்றுதல் இருப்பதாகவும் அவனைக் கவனித்து அவனோடு அவ்விஷயமாய்க் கலந்து பேசும்படியாகவும் சொன்னார். விருத்தாசல உபாத்தியாயரிடம் வேலைபொழிந்த நேரங்களிற் சென்று இலக்கண நூல் விசாரணை செய்யும்படி

யாகப் பக்கீர்தம்பி தமது சகோதரர் மகனுக்குக் கட்டளை யிட்டார். விருத்தாசல உபாத்தியாயர் சாதாரண கல்வி யறிவுள்ள ஒரு போதகாசிரியர். இவரிடமிருந்து சிறுவர் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் விசேஷமாயில்லை.

அக்காலத்தில் நாகூரிற் பிரபல வித்துவானாகவிளங்கிய முகம்மதுப் புலவருக்குப் பல மாணாக்கர் இருந்தனர். அந்த மாணாக்கருள் மு. செவத்தமரைக்காயர் என்பவரிடத்திலேயே நம் சிறுவர் பெரும்பாலும் சம்பாஷித்துவருவார். மு. செவத்தமரைக்காயர் மிகவும் சற்குணமுள்ள ஒரு கல்விமான். அவர் உபயோகமுள்ள பல செய்யுட்களை உலகத்துக்கு உதவி யிருக்கின்றார். அவருடைய வாக்குச் சீரிய செம்பாகமும் ஊறிய மதுரமும் நிரம்பியதாயிருக்கும். இதனால் அவருக்கு, "செந்நாப்புலவர்" என்னும் புனை பெயரும் உண்டு. இவர் நம் சிறுவருக்குப் பிரியமுள்ள ஒரு சகோதரரைப்போல் வாய்த்தது இவருடைய அதிருஷ்டமென்றே சொல்லவேண்டும்.

சிறுவருடைய புத்திக்கூர்மையையும் நுட்பமாய் விஷயங்களைக் கிரகிக்கும் ஆற்றலையும் அறிந்த முகம்மதுப்புலவர் குலாம்காதிறிடத்தில் ஒருவாறு அழுக்காறுள்ளவரானார். தம்மிடத்துக்கல்லாத ஒரு சிறுவன் தமது மாணாக்கரோடு சம்பாஷிப்பதிலேயே மாணாக்கரைப் பார்க்கிலும் கல்வியில் அதிகரித்துவருதல் அவரின் விருப்பத்துக்கு ஒரு சிறிதும் பொருந்தவில்லை.

நமது குலாம்காதிறு முகம்மதுப்புலவரின் மாணாக்கர்களிடத்துத் தருக்கமிட்டே பல விஷயங்களையும் அறிபவராயும், அவர்களைத் திருத்துவோராயு மிருந்தார். இதுமாத்திரமா ? நாகூரிலும் அதற்கடுத்த ஊர்களிலும் எந்தத் தமிழ் வித்துவான்களைக் கண்டாலும் அவர்களிடம் இலக்கிய விலக்கணங்களைப் பற்றித் தருக்கித்து விஷயங்களை யறிந்து அதிக விரைவில் பூர்வ பக்ஷத்து மதியைப்போல் தமது மதியை விருத்தியாக்கிவந்தார்.

குலாம்காதிறு வீட்டிலும் வெளியிலும் செல்வாக்கற்ற சிறுவராகவே யிருந்தார். இவருடைய பாலப்பருவம் முற்றும் அதிக நிர்ப்பந்தமாகவே கழிந்தது. குலாம்காதிறு விவேகத்தாலும், இடைவிடாக் கேள்வி, தருக்க விசாரணைகளினாலும், சொந்தப் படிப்பினாலும் அதிக சீக்கிரத்தில் முகம்மதுப்புலவரின் கல்வியிலேயே குற்றங் கண்டு திருத்தக்கூடியவரானார். இவர் செல்வாக்கின்றிப் பராதீனராக இருந்தமையால் இவரை முகம்மதுப் புலவரின் மாணாக்கரிற் சிலர் இராஜ வீதியிற் கண்டபோது இவருடைய தலையில் அடித்ததுமுண்டு.

அக்காலத்தில் குலாம்காதிறுக்குக் கவிகள் சொல்லுந் திறமையுண்டாயிற்று. தாம் இயற்றிய கவிதைகளையே வேறொருவர் பெயரால் பிரசுரித்து வெளியாக்குவதும், அதில்வரும் ஆக்ஷேப சமாதானங்களைக் கவனித்துத் தைரியங் கொள்வதும், பின்னர், "வா. குலாம்காதிறு நாவலரால் பிழையறப் பரிசோதிக்கப் பெற்றது" என்று சில புத்தகங்களை வெளியிடுவதும் இவருடைய வித்தியா பரீக்ஷைகளா யிருந்தன. இதற்காகவும் சிலர் இவருடைய தலையில் தட்டினதுண்டு. ஆனால் ஒருவரும் அவருடைய செய்யுட்களில் குற்றங்கண்டு திருத்தமுன்வரவில்லை. அவர்மீது கொண்ட பொறாமையும் அவருடைய எளிய நிலைமையின் இளக்காரமும் அவர்கள் அவருடைய தலையில் தட்டும்படி இடந்தந்தனவே யன்றி அவருடைய ஒழுங்கீனமன்று. இவ்விதம் யாரேனும் தம் தலையில் தட்டும்போது குலாம்காதிறு சிறுபிள்ளையைப்போல், "நானல்லேன்; நானல்லேன்" என்று சொல்லித் தப்பியோடிப்போவார்.

இவருடையவாழ்க்கைத்தன்மை இவ்வாறிருக்கையில்இவரது பெரிய தந்தையாகியபக்கீர்தம்பியும்தேகவியோகமடைந்தார். இப்போது நமது குலாம்காதிறு தம் சிறிய தந்தையாகியசெய்கு இபுறாஹீம் என்பவரின் ஆதரவுக்குள் ஆனார். செய்கு இபுறாஹீம் தமது காசுக்கடை வியாபாரத்தில் தமக்கு ஒரு துணைவராயிருக்கமாத்திரமேகுலாம்காதிறை ஏற்றுக்கொண்டார். ஆனாலுமென்ன? நம் குலாம்காதிறின் முயற்சி குறையவில்லை. குலாம்காதிறைக் கல்விப்பிரியரென்று பலருஞ் சொல்லக் கேள்வியுற்ற அவருடைய சிறிய தந்தை, கல்வி விஷயமாக நாகபட்டினம் முதலிய விடங்களுக்குப் போய்வரவும் பிரசங்கிகளைக் காணவும் அவர்களின் பிரசங்கத்தைக் கவனிக்கவும் தம் புதல்வருக்கு அனுமதி கொடுத்தார். அக்காலத்தில் சென்னபட்டணத்தி லிருந்தோ, பறங்கிமலையி லிருந்தோ நாகபட்டினத்துக்கு வந்து ஒரு வர்த்தகசாலையில் வேலை பார்த்துவந்த முத்துவையர் என்பவர் நம் குலாம்காதிறுக்கு நேசமானார். முத்துவையர் தமிழ்ப் பாண்டித்தியமுள்ளவர். இவரிடத்திலும் நமது குலாம்காதிறு இலக்கண விதிகளையும் வேறுபல

விஷயங்களையும் தருக்கித்தே யறிந்துகொள்வா ராயினார். இவருடைய தருக்கத்தால் ஐயர் மனவருத்தப்படவில்லை. இவர் எப்போதும் பிறருக்கு மனவருத்தமுண்டாகாமலும் ஆடம்பரமின்றியும் அடக்கம் பொறுமைகளுடனும் மிக்க விவேகத்தோடு நிதானமாக ஆராய்ந்து சாந்தமாய்த் தருக்கிப்பது வழக்கம். அதனால் முத்துவையர் அவ்வித விவேகமான தருக்கத்தில் மிகவும் பிரியமுள்ளவரா யிருந்தார். ஐயரும் தமது திறமை விருத்தியாவதற்கு நம் குலாம்காதிறின் தருக்கத்தை ஒரு சாதனமாய் ஒப்புக்கொண்டார். இவரோடு தருக்கித்து வந்ததால் குலாம்காதிறு அதிக விருத்தியடைந்தார்.

பல நேரங்களிலும் தமக்கு வசதியைத் தேடிக்கொண்டு, தமிழின் இலக்கண இலக்கியங்களைத் தமக்குத் தாமே கற்று வருவார். ஒரு நூலில் ஏற்படும் சந்தேக வினாவிற்கு மறுமொழிகொடுக்க அவ்வழியுள்ள மற்றைய நூல்களை யெடுத்து ஆராய்வார். குலாம்காதிறு சிறுவராயிருந்தாலும் அவருடைய ஞானம் பெரிதா யிருந்தது. மார்க்காசாரப்படி காலந் தவறாமல் கடவுளை (அல்லா சுபுஹானகுவதஆலாவை) வணங்குவார். இவருக்கு மிகச் சிறுபிராயத்திலிருந்தே தெய்வபக்தி சிறந்தோங்கிவரத்தலைப் பட்டது. சுவற்ப நேரத்தையும் அவர் அவமே போக்கவில்லை. சிற்சில செய்யுட் கிரந்தங்களை யடிக்கடி யியற்றினமையாலும் சில கிரந்தங்களைத் திருத்தி அச்சிடுவித்தமையாலும் குலாம்காதிறின் புகழ்ச்சி நாகூரில் சற்றே பரவத்தலைப்பட்டது. மாணாக்கர் முறையில் ஒருவரிடத்திலும் கல்வி கற்காமலே தானாக வித்துவானாயிருந்த நமது குலாம்காதிறை நாகூரார், "தானாப்புலவன்" என்ற நாமத்தால் அழைக்க ஆரம்பித்தார்கள். இந்தத் தானாப்புலவரின் கல்வித் திறத்தையும், செய்யுள் செய்வதிலும் மதுரமான தருக்க முறையில் எவரையும் மேற்கொள்வதிலும் இவருக்கிருந்த வெற்றியையும் அறிந்த முத்துவையர் மாத்திரம் இவரை, "குலாம் காதிறு நாவலர்" என்று அழைத்தனர். பின்பு ஐயர் இவரைக்கண்டபோதெல்லாம், "வாரும் நாவலரே" என்று அழைக்கத் தவறினதில்லை. அக்காலத்திற்றான் நம் குலாம்காதிறு நாவலருடைய பெயரும் பெருமையும் பல பாகங்களினும் பரவத் தொடங்கின.

(தொடரும்.)

உ. செ. மூ. காரைக்கால்.

ஒரு மறுப்புரை யுபந்யாசம்.

(320-ம் பக்கத் தொடர்ச்சி)

(14) இந்தக் கொள்கையானது ஹிந்துக்களுக்கு மிகுதியும் தீமையைச் செய்துள்ளது. இப்பிறப்பில் அனுபவிக்கும் துயரங்கள் முற்பிறப்பில் செய்த கர்மங்களோடு சம்பந்தப்பட்டிருக்கின்றனவென்னும் எண்ணத்தால் அத்துயரங்களை நிவர்த்தித்துக்கொள்ள யாதொரு முயற்சியும் செய்யப்படுவதில்லை; அவ்வாறு செய்துகொள்ள நினைப்பதுவும் அவசியமென்றாவது யுக்திக்கு ஒத்ததென்றாவது கருதப்படுவதில்லை. வியாதிகள் வந்து ஆபால விருத்தர்களில் ஆயிரக்கணக்கானவர்களை வாரிக்கொண்டு போய் விடுகின்றன. வியாதிகள் எவ்வளவோ சுவஸ்தப்படுத்தவும் தடுக்கவும் கூடியவையாக விருந்தபோதிலும் மரணங்கள் எவ்வளவு அகாலத்தில் நேர்ந்தபோதிலும் அவைகளெல்லாம் முன் ஜென்மத்தில் செய்த கர்மங்களின் பலன்களெனவும், ஆதலால் நிவர்த்திக்க முடியாதவையெனவும் கருதப்படுகின்றன. ஆகையால் இக்கொள்கையில் அவர்களுக்குள்ள நம்பிக்கையானது அவர்களை உணர்ச்சியற்ற கற்களைப்போலாக்கி, சுயேச்சாபுத்தியும் ஊக்கமும் நன்முயற்சியும் இல்லாத சோம்பேறிப் பதர்களாக்கி, இந்தியாவையே தரித்திரர்களுடைய ஸ்தானமாக்கிவிட்டது.

(15) உலகத்தில் வாழ்கின்ற கோடிக்கணக்கான ஜீவப்பிராணிகளில் மனிதன் ஒன்றாவான். உலக சரித்திரத்தின் பூர்வகாலத்தில் எப்போதாவது மானிட வகுப்புக்கும் மற்றைய தாழ்ந்த ஜீவப்பிராணிகளுக்கும் உள்ள சங்கியைவித்தியாசம் இப்போதுள்ளதைக் காட்டிலும் அதிகமாக விருந்ததென்று நினைக்கவிடமில்லை. ஆகவே, மானிட அறிவினின்றும் அனுபவத்தினின்றும் தெரிந்துகொள்வதுயாதெனின், ஜீவவர்க்கத்தில் மானிடர்கள் அனைவரும் மொத்தமாகக் கவனிக்கப்படும்போது வெகு அற்பமான சங்கியை யுள்ளவராவார் என்பதே. இதை ஒப்புக்கொண்டால் வேதங்களில் கூறப்பட்டிருக்கிறபடியே எவ்வளவு ஒழுங்காக மனிதர்கள் ஒழுகிவந்தாலும் அவர்கள் அவசியமாகவே தாழ்ந்த ஜீவப்பிராணிகளாக க்ஷீணித்துப் போகவேண்டியதாகத் தான் இயற்கையின் கிரமம் (ஆரியர்கள் தெய்வீக மனம் இடைபுகுவதை அங்கீகரிப்பதில்லை) ஏற்பட்டுள்ளதென்னும் முடிவிலிருந்து தப்பிக்கொள்ளமுடியாது. இந்நியாய வாதமானது ஹேஷ்ய தர்மத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. மானிட அறிவுக்கு எட்டிய கார

ணங்களில் பலவற்றைப்போல இதுவும் ஒரு நிச்சயமான விஷயத்தை ஸ்தாபிக்கக் கூடாமலிருக்கின்றது. இயற்கையின் கிரமம் எப்போதும் ஒரே மாதிரியானதாக விருக்குமென்று கொண்டு, நாம் நம்முடைய சிந்தனைகளையெல்லாம் இவ்வுலகத்துக்குமட்டும் பொருந்தியனவாகக் கட்டுப்பாடு செய்துகொண்டோம். மானிடவர்க்கம் அபரிமிதமாக விருத்தியடைந்து ஒரு காலத்தில் தாழ்ந்த பிராணிகளைக்காட்டிலும் அதிகமாக விருக்கக்கூடிய காலமொன்று வரலாமென்று சொல்லலாம். ஜீவவர்க்கம் முழுவதையும் கணக்கிடுவதற்கு இதுவரையில் ஒரு சாஸ்திரஜ்ஞனும் முயன்று முன் வரவில்லை. அது முடியும்வரையில் மானிட வர்க்கத்துக்கும் மற்றைய ஜீவவர்க்கத்துக்குமுள்ள ஸங்கியை வித்தியாசத்தை நிச்சயிக்க நினைப்பது சற்றுப் பருவத்துக்கு முந்தியகாரியமாகும். தாழ்ந்த ஜீவப்பிராணிகளின் சங்கியை அளவிறந்தது என்பதற்குச் சான்றாக, 1845-ம் வருஷத்தில் ஆல்ஜியர்ஸ் நாட்டில் மட்டும் ஐம்பதுகோடி வெட்டுக்கிளிகளின் புழுக்கள் நாசம் செய்யப்பட்டன வென்பதைச் சொல்லலாம். நாம் நிச்சயமான விஷயங்களைக் கொண்டல்லாமல் ஹேஷ்யமான விஷயங்களைக்கொண்டே ஆராய்ச்சி செய்கிறோம்.

(16) பூர்வகாலத்திய அனுமான ஞானத்தை நம்புவதனால் மானிட உருவமாகிய பெரும்பதவிக்குவர ஆத்மாக்களில் மிகுதியாகக் குறைந்த ஸங்கியையுள்ளவைகள்தாம் லாயக்குள்ளவையாகவிருக்கின்றன வென்று கொண்டால், கடவுளுடைய விதிகள் நீதியானவையல்லவென்னுமொருமுடிவுக்குநாம் அவசியமாக வரவேண்டியிருக்கின்றது. அவைகள் பெரும்பாலும் மனிதர்கள் தங்களுடைய பதவியைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடாதவாறும்செய்துவிடுகின்றன. மாறி மாறி வருகின்ற மறுபிறப்புக்களின் தொடர்ச்சி காரணமாக ஆத்மாக்கள் மேல்நிலைமைக்கு வருவதற்குவேண்டிய சவுகரியங்கள் மிகக் குறைந்தனவாக விருக்கின்றன. இவ்விஷயம் கர்மம் என்ற கொள்கையோடு எப்படிப் பொருந்தும்? முதலாவதின்கண் அடங்கியுள்ள அவசிய தர்மமானது இரண்டாவதுக்கு ஆதாரமான சுயேச்சா புத்தியின் கொள்கைக்கு விரோதமாக விருக்கின்றது.

(17) இவ்வித நியாய வாதத்தினின்றும் ஊகித்தறியவேண்டிய விஷயம் இன்னமொன்றுண்டு. தற்காலத்தில் தாழ்ந்த ஜீவப்பிராணிகளின் சரீரத்தில் உழலும் க்ஷீணித்த ஆத்மாக்களின் சங்கியைகள் எண்ணிறந்தனவாக விருக்கின்றன. இந்த ஆத்மாக்கள் எல்லாம் ஸதா ஸர்வகாலமாகவே இருந்துவருகின்றன. ஆதலால் இவைகள் பூர்வகாலத்தில் எப்போதாவது பரிபூர்ணமான முக்தியை அடைந்திருக்குமென்று நினைக்கவிடமில்லை. ஆகவே வருங்காலத்தில் அவைகள் இன்னும் க்ஷீணதசையை யடையக்கூடிய பரிதாபகரமான நிலைமையிலேயே இருக்கின்றன.

இனி, தொகுத்துச் சொல்லுவோம். ஆரியர்கள் பின்வருமாறு வாதம் புரிகின்றனர்:—இவ்வுலகத்தில் சுகதுக்க விநியோகத்தில் சமானத்துவமில்லை. முன் பிறப்புக்களில் ஆத்மாக்கள் செய்திருக்கும் கருமங்களின் பயனாக இதை நாம் கருதாமல்போனால் நீதிவிஷயமாக நமக்கிருக்கும் அபிப்பிராயப்படி இதற்குக் காரணம் கூறுவதற்கில்லை.

இவ்விரண்டாவது பிரதிஜ்ஞை ஒரு விவரணம்போலத் தோன்றுகின்றது; ஆயினும் ஆத்மா சாசுவதமானது என்னும் கொள்கையோடு சேர்த்துப்பார்த்தால் புதிதாக யாதொரு தெளிவையும் தருவதில்லை. சமானத்துவம் இல்லையென்பது வாஸ்தவம்தான். இது விவரிக்க முடியாததாகவும் இருக்கின்றது. ஆனால் சமானத்துவம் ஒருபோதும் இருப்பதில்லை யென்பதை நாம் நினைப்போமானால் இதற்குச் சமாதானம் ஏற்படும்; ஏனெனின், அவர்கள் சொல்கிறபடியே உண்மையான ஆதியே கிடையாது. இனி இவ்விரண்டாவது பிரதிஜ்ஞை அவர்களாகஏற்றுக்கொண்ட ஒரு பக்ஷம் என்கின்றோம். தெளிவில்லாத விதமொன்றினால் இப்பிரதிஜ்ஞை காரணங் கூறுவதாகவுள்ள மானிட சுகதுக்க விநியோக பேதத்தைத் தவிர அதற்கு ஆதாரமான மூல சித்தாந்தங்கள் வேறில்லை. இயற்கை யுணர்வினாலாவது அனுமானத்தினாலாவது அஃது அறியப்படுவதில்லை. ஒரு ரகஸியத்தை விவரிக்கவேண்டியதற்கு இன்னொரு ரகஸியத்தை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. இதை ஒரு விவரணம் என்றும் கூறுகின்றனர்!

(தொடரும்.)

ஜலாலுத்தீன்.

நாயகமான்மியம்.

135-வது பக்கத் தொடர்ச்சி

அக்காலத்திலிருந்த அரபிகளுக்கு ராஜரீக ஒழுங்குகள் தெரியா; இக்காலத்திலிருப்பதுபோல் அரசாட்சி முறைமை அப்போது கிடையாது. நல்ல குலத்திற் பிறந்த ஒருவன் பலசாலியாக இருந்தால் அவனையே தலைவனாக நியமித்துக்கொள்ளுவார்கள். அவனே போர்த்தலைவனாகவு மிருப்பான். எல்லோரையும் அடக்கியாளும்படியான அதிகாரம் அவனுக்கில்லை. மற்றையோரைக் காட்டிலும் எவ்வாற்றானும் அவன் மேலானவனாகக் கருதப்படான்; ஆனால், அவனுடைய வீரத்தனமும் மேன்மைப்பாடும் ஒருகாலத்தில் வெளிப்படுமாயின் அப்போது அவனுக்கு ஒருவகை மதிப்புண்டு.

பூர்வ அரபிகளுடைய மதத்தைப்பற்றி ஆராய்வோமென்றால் அக்காலத்தில் அந்தகாரமே குடிகொண்டிருந்திருக்கிறது. ஆனால், அக்காலத்தில் கீழ்தேசங்களில் சாபி, மாஜீ என்னும் இரண்டு மதங்களும் அதிகமாகப் பிரவர்த்தித்திருந்தன. இவ்விரண்டுந்தாம் அரபு நாட்டிலும் காணப்பட்டன. பெரும்பான்மையான அரபிகள் சாபி மதத்தையே தழுவியிருந்தனர். இந்தச் சாபிமதத்தின் மூலத்தைப்பற்றி வெவ்வேறுவகையார் வெவ்வேறு அபிப்பிராயம் கொடுக்கிறார்கள்.

இதன் ஆரம்பம் எவ்வாறு யிருந்தபோதிலும் ஆதிகாலத்தில் இது மிக்க பரிசுத்தமாயும் தெய்வத்தன்மை பொருந்தியதாயும் இருந்ததென்று சரித ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். ஒரே கடவுள் என்னும் நம்பிக்கை அவர்களுக்குண்டு; இறந்தபின் நன்மை தீமைகளுக்குத் தக்க சன்மானமும் சிக்ஷையும் உண்டென்றும் நம்பினார்கள். மறுமையில் பேரானந்தம் பெறவேண்டுமாயின் இம்மையில் சன்மார்க்க நெறியில் ஒழுகவேண்டுமென்னும் அவாவும் அவர்கள்பால் குடிகொண்டிருந்தது. மேலான கடவுளிடத்தில் அவர்களுக்குப் பக்தியும் அச்சமுமுண்டு; அக்கடவுளின் நாமத்தை வெளியிட்டுச் சொல்லுவதற்கும் அஞ்சுவார்கள்; ஆதலின், அப்படிப்பட்ட கடவுள்பால் நெருங்குவதற்கு மனிதனால் முடியாதென்றும், நெருங்கவேண்டுமென்னும் அவா அதிகரித்துவிட்டால் இடையில் தேவ தூதர்களை வைத்துக்கொண்டாலன்றி அங்கோரிக்கை நிறைவேறாதென்றும் கருதியிருந்தார்கள். மனிதனுடைய தேகத்தில் ஆத்மா குடியிருப்பதுபோல் அந்தத் தூதர்களெல்லோரும் வானத்தில் காணப்படும் நக்ஷத்திரங்களிலும் கிரகங்களிலும் குடிகொண்டிருப்பதாக எண்ணியிருந்தார்கள். அவர்களெல்லோரும் தம் தமக்காக ஏற்பட்டிருக்கும் கோளங்களிலிருந்து கொண்டு கடவுளுடைய கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருப்பார்கள். ஆதலின், பழையகாலங்களில் மனிதர்கள் ஆகாயத்தில் தோன்றும் சூரியன் சந்திரன் நக்ஷத்திரம் முதலியவற்றையே கடவுள் என்று நினைக்கவில்லை. ஆனால், கடவுளுடைய தூதர்கள் அவற்றில் குடியிருப்பதற்காகவும் அத் தூதர்கள் மூலமாய்க் கடவுளை நேசிப்பதற்காகவும் வானகோளங்களை வணங்கிவந்தார்கள். இந்த ஆகாயகோளங்களில் வசிக்கும் தூதர்களுடைய தயையால் உன்னத இறைவனுடைய தரிசனத்தைப் பெறலாமெனக் கருதுவார்கள்.

காலம் செல்லச்செல்ல இந்த மதத்திலிருந்த பரிசுத்தம் குறையத்தலைப்பட்டது. உலகத்திலுள்ள எல்லாவகை மாறுபாடுகளும் இம்மதத்துக்குள் நுழைக்கப்பட்டன; உடனே விக்கிரக ஆராதனையும் தலைகிளப்பிற்று. சாபி மதத்தைப் பின்பற்றினோர்கள் ஆகாயத்திலுள்ள பிரகாசமான வஸ்துக்களைத் தேவ தூதர்களுடைய இருப்பிடமாகக் கருதுவதை விட்டு அவற்றையே தெய்வங்களாகப் பாவித்து விட்டார்கள். பிறகு அத்தெய்வங்களின் பெயரால் விக்கிரகங்கள்செய்து பரிசுத்தமான தோப்புக்களிலும் அடர்ந்த காடுகளிலும் நிலைநிறுத்தினார்கள். அதன் பின்னர் மெல்லமெல்ல இந்த விக்கிரகங்களுக்குக் கோவில்கள் கட்டினார்கள்; இவற்றையே தெய்வங்களென்று எண்ணினார்கள். இந்தச் சாபி மதம் அநேகம் தேசங்களில் பரவியிருந்தது; அங்கங்கே வெவ்வேறுவித மாறுபாடுண்டாயிற்று. எகிப்து தேசத்தில் இம்மதம் மிகத் தாழ்ந்த நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கே எல்லாவகை ஜட வஸ்துக்களும் தெய்வங்களாகப் பாவிக்கப்பட்டன; ஆனால், புராதன எகிப்தியர்கள் விக்கிரக ஆராதனை புரியவுமில்லை; சாபி மதத்தைக் கெடுக்கவுமில்லையென்று இக்காலத்தவர் அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்களுடைய வணக்கமெல்லாம் ஒரே கடவுளைப் பற்றியதாகவே யிருந்ததென்கிறார்கள். சாபிமதத்தைச் சேர்ந்த அ

ரபிகள் மௌட்டீகம் மிகுந்தவர்களாகவும் கொடுமையான விக்கிரக ஆராதனை புரிபவர்களாகவுமிருந்தார்கள். ஒவ்வொரு கோத்திரத்தாரும் தம் தமக்குரிய நக்ஷத்திரத்தைத் தெய்வமெனக் கொண்டாடி அதற்கேற்ற விக்கிரகமும் செய்துகொண்டார்கள். அவர்களுடைய மதக்கொள்கையில் பெரும்பாலும் நரபலிகலந்திருந்தது; பெண் குழந்தைகளையே பலியிடுவார்கள்; பலியிட முடியாத காலங்களில் அவற்றை உயிரோடு புதைத்துவிடுவார்கள். பாலைவனங்களில் கூடாரங்களில் வசிப்பதால் பெண்களுக்கு அவ்வகை உயிர் வாழ்க்கை உசிதப்படாதென்றும், பெண்களால் பாபமும் பழியுமுண்டாகுமென்றும் தப்பெண்ணங் கொண்டிருந்தார்கள். இவ்வகை எண்ணத்தாற்றான் அவர்கள் தம்முடைய பெண் குழந்தைகளை வதைபுரிந்துவந்தார்கள்போலும்.

அக்காலத்தில் வழங்கிவந்த மற்றொரு மதத்தின் பெயர் மாஜீ என்பதாகும்; அதைப் பின்பற்றுவோர்களுக்கு மாஜீகள்(மஜூஸிகள்) அல்லதுஜூப்ரிகள் என்று பெயர் உண்டு. இவர் நெருப்பை வணங்குகிறவர்கள். கீழ்நாடுகளில் இம்மதம் மிகுதியாகப் பரவியிருந்தது; முக்கியமாகப் பாரசீக தேசத்திலேயே இதுகுடிகொண்டிருந்தது. அத்தேசத்தில் சில காலத்திற்குள் ஒரு மதத்தலைவர் உதித்து இம்மதத்துக்குவேண்டிய ஒழுங்குகளையெல்லாம் வரையறுத்தார். இவர் பெயர் ஜொராஸ்டர் என்பதாகும். இந்த ஜொராஸ்டர் என்பவர்தாம் அதற்குமுன் கர்ணபரம்பரையிலிருந்தவற்றையெல்லாம் ஜெண்டவெஸ்டா என்னும் கிரந்த ரூபமாகச் செய்தார்.

இம்மதமும் சாபி மதம்போலவேஆரம்பத்தில் பரிசுத்தமாயும் எளிதாயுமிருந்தது. ஆதிபந்தமற்ற ஓரே கடவுளையே தெய்வமாகக் கொண்டிருந்தார்கள்; அக்கடவுளாலேயே இவ்வுலகம் நடைபெறுகிறதென்றும் நம்பினார்கள். அக்கடவுள் இரண்டு தூதர்களைப்படைத்தார்; ஒன்று, ஆர்மஸ்த்; மற்றொன்று, அஹ்ரிமான். ஆர்மஸ்த் என்பவன் ஒளிக்கும் நன்மைக்கும் உரியவன்; அஹ்ரிமான் இருளுக்கும் பாபத்துக்கு முரியவன். இவ்விருவருடைய கலப்பால்தான் இவ்வுலகம் படைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தூதர்களும் இவ்வுலகத்தில்தான் தான்வெற்றிபெறவேண்டுமென்று நினைக்கின்றனர். ஆகலின், இவர்களுடைய வெற்றித் தோல்விக்குத் தக்கவண்ணம் உலகத்திலும் நன்மை தீமைகளும் அதிகரித்துக் குறைகின்றன. இவ்விருவருடைய விவாதம் உலகம் முடியுமட்டு மிருக்கும்; அப்பொழுது மறுவுலகம் உண்டாகும்; நன்மை தீமைகளின் விசாரணையும் அப்போது நடைபெறும். அக்காலத்தில் பாபத்தின் தூதனும் அவனைப் பின்பற்றினோர்களும் மிக்க துன்பமான சிக்ஷை பெறுவார்கள்; ஆனால், நன்மையைக் கைக்கொண்டவர்கள் சுகம் உற்று நித்தியானந்தத்தைப் பெறுவார்கள்.

இம்மதத்தில் முதன் முதல் ஏற்பட்ட கொள்கைகளெல்லாம் எளிதாயும் பரிசுத்தமாயுமிருந்தன. அக்காலத்திலிருந்த மாஜீகளுக்கு விக்கிரகங்களும் கோவில்களும் பலி பீடங்களும் இல்லை. தங்களுடைய ஜபங்களையும் வணக்கங்களையும் கடவுளுக்கே செலுத்திவந்தார்கள்; ஆனால், அக்கடவுளுடைய இருப்பிடம் சூரியனென்று எண்ணியிருந்தார்கள்; கடவுளுடைய வாசஸ்தலமாகிய சூரியனையும் கௌரவமாக மதித்திருந்தார்கள். கடவுளுடைய இருப்பிடமாயிருப்பதன்றி வானத்தில் காணப்படும் வேறு கோளங்களுக்கு உஷ்ணத்தையும் ஒளியையும் கொடுப்பது அச்சூரியனானபடியாலும் அதை மிகுதியாக மதித்திருந்தார்கள்; ஆதலின், சூரியன் கண்ணுக்குத் தோன்றாத காலங்களில் மலைச் சிகரங்களில் தீயை யுண்டாக்கி அதைச் சூரியனுக்கு ஈடாக மதிப்பார்கள். இம்மதத்தில் முதலில் கோவில்களை உண்டுபண்ணியவர் ஜொராஸ்டரே. அவர்களுடைய கோவில்களில் தேவலோகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட நெருப்பே எரிந்துகொண்டிருப்பதாக நடிப்பார்கள். அவ்வாறு தேவலோகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட நெருப்பை அணைக்கக்கூடாதென்று கோவில் பூசாரிகள் அதை இரவும்பகலும் அணைக்காமல் பத்திரமாக எரித்துவந்தார்கள்.

நாளடைவில் இம்மதத்தினர்கள் சாபி மதத்தினர்போலவே தங்களுடையநெருப்புண்டானதற்குக் காரணம் இன்னதென்பதையும் அதன் தாத்பரியத்தையும் அடியோடு மறந்துவிட்டு ஒளியையும் நெருப்பையுமே தெய்வமென்று வணங்கத் தலைப்பட்டார்கள்; இருளை ஷைத்தானென்று விலக்கிவிட்டார்கள். இம்மதத்தினருக்கு ஆவேசம் மிகுந்துவிடுங் காலங்களில் தங்களுடைய தெய்வத்தில் நம்பிக்கையில்லாதோரைத் தீக்கடவுளுக்கு இரையாக்கிவிடுவார்கள்.

நாம் முன்சொன்னதுபோல் இவ்விரண்டு மதங்களுள் சாபி மதமே அக்கால அரபிகளிடத்தில் மிகுதியாகக் காணப்பட்டது.

இம்மதம் மிகத் தாழ்ந்த நிலையில் எல்லாவகை மௌட்டீகத்தோடு கூடியிருந்தது. அரபிகள் ஒவ்வொரு கோத்திரத்தாரிடத்தில் வெவ்வேறுவகை மதக்கொள்கைகள் காணப்பட்டன. பாரசீகதேசத்தின் எல்லைநாட்டிலும் அதைச்சேர்ந்த விடங்களிலும் மாஜிமதம் அனுஷ்டிக்கப்பட்டுவந்தது. இன்னும் அரபிகள் எந்த எந்தத் தேசத்தாரோடு பழகினார்களோ அவர்களுடைய விக்கிரக ஆராதனையை யெல்லாம் மேற்கொண்டுவிட்டார்கள்; விக்கிரக ஆராதனையே மிகுதியாகத் தழைத்தோங்கி வந்தது.

பண்டைக்கால அரபிகள் ஜீவப்பொருள்களையும் ஜடப்பொருள்களையும் தெய்வங்களெனக் கொண்டாடி அவற்றிற்குத் தக்க விக்கிரகங்களும் செய்துகொண்டு பல தெய்வக் கொள்கைக்காரர்களாயிருந்தார்கள். சூரியன் நக்ஷத்திரம் மூன்று சந்திரன் ஆகிய இவையே பெருந்தெய்வங்களா யிருந்தன. மூன்று சந்திரன்களாவன: அல்லாத் என்னும் பிரகாசமான சந்திரன்; மானாத் என்னும் இருண்ட சந்திரன்; அல்உஸ்ஸா என்னும் ஒளியுமிருளும் கலந்த சந்திரன். இன்னும் மரங்கள் கல்லுகள் மலைகள் ஆகியவற்றையும் தெய்வமென்று வணங்குவார்கள். இவற்றையெல்லாம் நோக்கும்போது அரபிகள் இயற்கை வஸ்துக்களையே தெய்வமென மதித்திருந்தார்களென்பது புலனாகின்றது. இவ்வாறு விக்கிரகஆராதனை புரிந்தபோதிலும் உண்மையான கடவுளிடத்திலும் சிறிது நம்பிக்கை இருந்தாற்போல் தோன்றுகிறது. சந்திரன் சம்பந்தமான மூன்று தெய்வங்களும்வேறு சில தெய்வங்களும் உன்னதமான கடவுளுடைய குமாரிகளென்று நம்பப்பட்டன. இந்தச் சிறு தெய்வங்களுக்கெல்லாம் கோவில்களுண்டு; அங்கே பலிகளும் இடுவதுண்டு; ஆனால், உன்னததெய்வத்துக்குக் கோவிலில்லை. இவ்வாறு ஒவ்வொரு கோத்திரத்துக்கும் வெவ்வேறு தெய்வமிருந்ததல்லாமல் வீடுதோறும் தெய்வங்களுண்டு. இப்பட்டிப்பட்ட வீட்டுத்தெய்வங்கள் பத்தின் பெயர் அல்குர்’ஆனில் வந்துள்ளது. தெய்வங்கள் மட்டுமல்ல; இன்னும் தெய்விகம்பொருந்திய அம்புகளும் குறிசொல்லும் மரங்களும் அநேகமுண்டு. அவர்களுள்பெரும்பான்மையோர் இறந்தபின் மறுவுலகம் இல்லையென்றே எண்ணியிருந்தார்கள்; ஆனால், சிலர் இறக்குந்தருவாயில் மறுவுலகமுண்டென்று நம்புவார்கள். இப்படிப்பட்டவர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய ஒட்டகத்தைக் கோவிலில் கட்டிவைத்து ஆகாரந்தண்ணீர் கொடாமல் இறந்துபோகும்படி விட்டுவிடுவார்கள். இவ்வாறு செய்வதால் மறுவுலகத்தில் இறந்த மனிதர்கள் காலால் நடவாமலிருக்கும் பொருட்டு அவ்வொட்டகம் உதவி புரிவதாக எண்ணங்கொண்டிருந்தார்கள்; மறுவுலகத்தில் காலால் நடப்பது பேரவமானமென்று கருதியிருந்தார்கள். மறுவுலகமில்லையென்று நம்பினவர்கள் இவ்வுலகத்தில் செய்யும் பாபநன்மைகளுக்கு இனிச் சிக்ஷையும் சன்மானமும் இல்லையென்று சொல்வார்கள்.

(தொடரும்.)

அபுல்பஸ்ல்.

தத்துவ இஸ்லாம்.

324-ம் பக்கத் தொடர்ச்சி.

சாஸ்திர ஞானமே இல்லாத ஒருவன் தனது சுய அனுபவத்தால் தெரிந்து கொண்டதைப்போலப் பௌதிக சாஸ்திரமும், தேகத்தின் உறுப்பு ஒன்று இடைவிடாமல் செய்யும் வியாயாமத்தினால் பல மடைகிறதென்றும் வேலையில்லாமல் சும்மா நெடுநேரம் போடப்பட்டால் துர்ப்பலமடைந்து கடைசியாகப் பயனற்றுப்போகின்றதென்றும் கண்டுபிடித்திருக்கிறது. ஏதாவது ஒரு பொருள் மீது நெடுநேரம் எனது வலதுகையை வைத்திருந்தாலாவது, அல்லது எனது பக்கத்தில் அசைவற்றுத் தொங்கும்படி அதை விட்டிருந்தாலாவது அது சூம்பிப் போய்விடும். அதை மறுபடியும் உயரத் தூக்குவதற்கு எனக்குச் சக்தியிராது. புத்தி சாமர்த்தியத்தையும் இந்த விதிதான் அடக்கியாள்கின்றது. நான் எனது ஞாபகசக்தியை உபயோகித்து, அப்பியாசத்தினால் அதை நன்றாக அடக்கியாளக்கூடிய சக்தியைப்பெற்றால், காலக்கிரமத்தில் அதுவெகு பலமுள்ளதாக ஆய்விடும். பாஷைகளை நாம் எவ்வாறு கற்றுக் கொள்கிறோம்? பால்பத்திற் காட்டிலும் நாற்பது வயதுக்குமேல் ஒரு மனிதன் ஒரு பாஷையைக் கற்றுக்கொள்வது சற்றுப் பிரயாசையான காரியமென்பது நன்கு தெளியப்பட்ட விஷயமாம். இதற்குக் காரணமென்ன? இளமைப் பிராயத்தில் அவனுடைய குணத்தை யடக்கி யாளக்கூடிய யானஸ தேக உறுப்புக்களை அவன் பயிற்சிசெய்து, பின்னானகாலத்தில் விடமுடியாத சக்திகளைப்பெற்றுக்கொண்டிருக்கிறான். இவ்வித சக்திகள் இளமைப் பிராயத்தில்தான் உருவடைகின்றன. அப்போது பாஷா ஞானமும் மற்

றைய ஞானங்களோடு சுலபமாய்ச் சேருகின்றது. அதிக சீக்கிரத்தில் நாம் நற்குணங்களையோ தீக்குணங்களையோ கொண்டுவிடுகிறோம். அடிக்கடி அவைகள் நமது சக்தியில் அடங்காதனவையாய்ப் பலமடைந்து விடுகின்றன. புகையிலைக்கும் சாராயத்துக்கும் முழுவதும் அடிமைப்பட்டவரான ஜனங்கள் பலர் இருக்கின்றனர்; அவைகளை உபயோகிக்காமல் இருப்பது அவர்களுக்குக் கூடாத காரியமாம். அவர்கள் இவ்வழக்கங்களுக்கு முற்றிலும் தோற்றவர்களென்று தோன்றுகிறது. வாலிபன் ஒருவன் முதன் முதலில் சாராயத்தையேனும் புகையிலையையேனும் உபயோகிக்கத் தொடங்கினால் அப்போது அவைகளை விட்டுவிடுவது அவனுக்கு வெகு சுலபமான காரியமாகவிருக்கும். ஆனால் சில வருஷங்கள் உபயோகித்த பின்னர் முடியாதகாரியமாக முடியும். இந்நிலைமை முழுவதும் தேகத்தைப் பற்றியதென்று வைத்தியர்கள் நினைப்பது எனக்குத்தெரியும்; ஆயினும் மானிடவர்க்கத்தைப் பற்றும் மற்றைய வியாதிகளைப்போலவே இதுவும் பெரும்பாலும் மனத்தைப்பற்றியதாமென்பது எனது நிச்சயமான அபிப்பிராயம். தீக்குணம் ஒன்றை அகற்றிவிட முயன்றவன் ஒருவன் தன்னுடைய உணர்ச்சிகளை நன்றாய்க் கவனித்துப்பயன் என்னவாகுமென்பதைப் பார்க்கட்டும்.

ஆத்மா அகன்றபின்பு மானிட சரீரத்துக்கு யாதோர் உணர்ச்சியு மிருப்பதில்லை; உடலிலேயே உணர்ச்சி உண்டாகவில்லையென்பது மிக்க தெளிவு; அவ்வுணர்ச்சி உடலில் ஆத்மா குடிகொண்டிருக்கும்போதுதான் வெளியாகின்றது. உயிருடனிருப்பவன்மீது நெருப்புத் துண்டொன்றை வைத்தால் அவன் வேதனையினால் துடிப்பான்; பிணத்தின்மீது நெருப்புத் துண்டுகளைப்போட்டு நன்றாய் மூட்டினாலும் யாதோர் உணர்ச்சியும் அங்கு இருப்பதாகத் தெரியாது. நினைப்பதும் உணர்வதும் ஆத்மாவேயன்றி உடலன்று. ஆத்மாவற்ற உடல் தானாகவே சாராயத்தையேனும் புகையிலையையேனும் விரும்பாது. உடல்அழியும்போது இவ்விருப்பமும் உடனழிகின்றதா? ஆத்மா நித்தியம் என்பது உண்மையாயின் அவ்விருப்பம் அழிவதில்லை. எனக்குத் தெரிந்தமட்டில் ஆத்மா நித்தியமென்றுதான் நான் நம்புகிறேன். இனி, மரணத்துக்குப் பிறகு இவ்விருப்பம் ஆத்மாவைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறதென்றும் அவ்விருப்பத்தைத் திருப்திசெய்து கொள்ளக்கூடிய அனுகுணமான உடலொன்று அவ்வாத்மாவுக்கு இல்லையென்றும் கொண்ட

கொள்கையை நாம் அங்கீகரிப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படியாயின் வேதனை நூறுமடங்கு அதிகமானதாக இராதா? இஃது உத்தேசமாகச்சொன்ன விஷயம். உண்மையென்று இதைக் கொண்டுவிடக்கூடாது. பற்பல விதமாக யோசிக்கப்படுவதற்காக இதைச் சொல்கிறேன். நமது தேக வுறுப்புக்கள் சுலபமாகவும் நன்றாகவும் விருத்திசெய்யப்படுந் தன்மை யமைந்துள்ளன வென்பதைப்போல, நமது வாணாளைப்பற்றிய மறைந்துள்ள விஷயங்களும் அவ்வாறே விருத்திசெய்யப்படும் தன்மை யமைந்துள்ளனவென்று யுக்திவாதத்துக்கு ஒத்த காரண காரியத்தொடர்ச்சியினால் காட்டவேண்டுமென்பதே எனது கருத்து; இஃது உண்மையானால் நமது இயற்கையில் தாழ்ந்ததான மிருகத்தன்மையினின்றும் நீங்கி உயர்ந்ததான ஆத்ம தன்மையைநோக்கி மானஸீக சக்தி போகும் வழியைப் பின்றொடரும் பயன்கள் இவ்வாறுள்ளதென்பதை ஒருவாறு ஒருவன் தெரிந்துகொள்ளக்கூடும். ஸகோதர வாத்ஸல்யம், தேகத்திலும் மனத்திலும் பூர்ண சுத்தம் கடவுளிடத்துப் பக்தி இவைகளை விருத்தி செய்தால், அது நமது தேகமாத்தியந்தம் பூர்ணமாகப் பரவியிருக்கும்படி நமது இயற்கையிலுள்ள உயர்குணங்களை எழுப்பிச் சிறப்பிக்குமென்பது நிச்சயம்.

மார்க்க விஷயமான விதிகளையும் அனுஷ்டானங்களையும் கேவலம் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது பயனற்றதென்றும், நோக்கம் அந்தரங்கமானதாகவே யிருக்கவேண்டுமென்றும் ஞானத்தின்மேலான சிகரத்தைபடைவதற்கு ஒருவன் உண்மையோடும் ஊக்கத்தோடும் தனது மதக்கொள்கையில் ஈடுபடவேண்டுமென்றும் காட்டுவதற்குப் போதுமான வரை சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன். கடவுளால் காட்டப்படும் வழியில் மனிதன் செல்லாமல், அவனுள்ளேயே யிருக்கும் ஆத்மகுணத்துக்கு விரோதமாகப் போய் அவனது பிரகிருதியின் தாழ்குணங்களைப் பின்பற்றுவானானால் அவனது அபிவிருத்தி ஆத்ம ஸம்பந்தமானதாகவும் மேல்நோக்கிப் போவதாகவும் இராமல் கேவலம் தேகஸம்பந்தமானதாகவும் கீழ்நோக்கிப் போவதாகவும் இருக்கும். “அவர்களுடைய மனத்திலும் காதுகளிலும் கடவுள் ஒரு முகரைவைத்திருக்கிறார்; அவர்கள் கண்களின்மீது ஒரு திரையுள்ளது; அவர்களுக்கு ஒரு கொடுந்தண்டனை யிருக்கிறது” என்றும், “அவர்களுடைய விஷயம், ஒருவன் நெருப்பைமூட்ட அதனால் அவனைச் சுற்றியுள்ள பொருள்களெல்லாம் வெளிச்சத்தால் விளங்குகையில், கடவுள் அவ்வெளிச்சத்தை எடுத்துக்கொண்டு அவைகளை இருட்டில் விட்டு விடுகிறதைப்போல உள்ளது. அவர்களுக்குப் பார்க்கச் சக்தியில்லை” என்றும் அல்குர்’ஆன் யாரைப்பற்றிச் சொல்லுகின்றதோ அவர்களில் இவனும் ஒருவனாவான்.

(அன்பியா நாயகம் அருளிச்செய்த)

திருவாக்கியம்.

1. எண்ணங்களுக்குத் தக்கபடி செய்கைகள் பரீட்சிக்கப்படும்.

2. தனக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிடாமலிருப்பது தான் முஸ்லிமுடைய உண்மையைக் கண்டறிவதற்குரிய அடையாளம்.

3. தனக்கு வேண்டுமென்று விரும்புவதைத் தன் சகோதரனுக்கும் வேண்டுமென்று விரும்பினாலொழிய ஒருவன் உண்மையான நம்பிக்கை உள்ளவனாகான்.

4. சட்டத்துக்கு நேராயிருப்பது விளக்கமாகத் தெரியும்; அப்படியே சட்டத்துக்கு மாறாயிருப்பதும் தெரியும்; ஆனால், இவ்விரண்டுக்கும் இடையில் சந்தேகமான விஷயங்கள் சில உண்டு; அப்படிப்பட்ட காரியங்களைத் தவிர்த்திருப்பதே உசிதம்.

5. தெய்வத்துக்குரிய குணங்கள் உன்னிடத்தில் பொருந்தியிருக்கட்டும்.

6. கல்வியில் ஆயுளைப் போக்குகிறவன் மரணமாவதில்லை.

7. கற்றோருக்குக் கௌரவம் செய்கிறவன் எனக்குக்கௌரவம் செய்தவனாவான்.

8. காலையும் மாலையும் கடவுளை வணங்கு; பகற்காலத்தில் உன்னுடைய தொழிலைப் பார்.

9. தனக்காகவாவது பிறருக்காகவாவது வேலை செய்யாதவன் கடவுளுடைய சன்மானத்தைப் பெறான்.

10. வேலை செய்வதற்குத் தகுதியும் திடமுமுள்ளவன் தனக்காகவாவது பிறருக்காகவாவது வேலை செய்யானாயின் கடவுள் அவன்மேல் அருள்பாராட்டுவதில்லை.

நயாகரா நீர்வீழ்ச்சி.

இவ்வுலகத்தைப் பூகோளசாஸ்திரிகள் ஐந்து கண்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள்; அவற்றுள் அமெரிக்கா என்பது ஒன்று. இந்த அமெரிக்காகண்டம், வட-அமெரிக்கா தென் அமெரிக்கா என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விருபிரிவுகளில் வட-அமெரிக்காவில் நயாகரா என்னும் ஒரு நதியுண்டு; இந்நதி, ஸெய்ண்ட் லாரென்ஸ் என்னும் ஒரு பெரிய ஏரியோடு சம்பந்தப்பட்டுள்ளது. அமெரிக்க பாஷையில் "நயாகரா" என்னும் பதம் "தண்ணீர் இடி" என்னும் பொருள் உள்ளது. இந்த நதியிலுள்ள நீர் ஓடுகிறதிறத்தையும், அதில் காணப்படும் நீர் வீழ்ச்சியின் பேரோசையையும் குறிப்பிக்கும்பொருட்டு மேல் இந்திய ஜாதியார்கள் இதற்கு நயாகரா என்று பெயரிட்டனர். சமுத்திரமட்டத்தைக்காட்டிலும் 573 அடி உயரத்தில் ஏரி என்னும் பெயருள்ள ஓர் ஏரியுண்டு; நயாகராநதி இந்த ஏரியிலிருந்து புறப்பட்டு வடக்கு முகமாகச்சென்று ஒண்டாரியோ என்னும் ஏரிக்குள் விழுகின்றது. 33 மைல் ஓடுவதற்குள் 328 அடி கீழ்நோக்கி யிறங்குகின்றது. ஏரியிலிருந்து புறப்பட்டவுடன் இந்நதி இரண்டுமைல் தூரம் வரையில் மிக்கவேகமாக ஓடுகிறது; புறப்படுகிற இடத்தில் இதன் அகலம் முக்கால் மைல்தான். பிறகு இருபிரிவாகப் பிரிந்து இடையில் ஒரு தீவைச்சுற்றிக்கொண்டு அதற்கப்பால் ஒன்றுசேர்ந்து நிலைநீர்போல் சாந்தமாகக்காணப்படுகிறது. சிறிது தூரம் வரையில் அசைவில்லாமல் காணப்பட்டுப் பிறகு அகலங் குவிந்து ஒருமைல் தூரத்துக்குள் 52 அடி கீழே இறங்குகிறது; உடனே மிக்க கொந்தளிப்போடும் வேகத்தோடும் நீர் வீழ்ச்சியை நோக்கிச்செல்லுகிறது. இது மிக்கசெங்குத்தான வீழ்ச்சியே; ஆனால், அதிக பயங்கரமானது. இதைப்போல் அழகான வீழ்ச்சி வேறெங்குமில்லை. இவ்வீழ்ச்சிக்குத்தான் நயாகரா நீர்வீழ்ச்சியென்றுபேர். இந்த வீழ்ச்சிக்கருகில் அந்நதி 4, 750 அடி அகலமுள்ளதாயிருக்கிறது. இதன் மத்தியில் ஒரு சிறுதீவுண்டு; இது நீர் மட்டத்துக்குமேல் 40 அடி உயரத்திலிருக்கிறது; இத்தீவின் அகலம் 1,000 அடி; இதற்கும் ஒரு பக்கக்கரைக்கும் இடையில் 1,400 அடி தூரமுண்டு; மற்றொருகரைக்கும் இத்தீவுக்குமிடையில் 2,800 அடி தூரமிருக்கும். 1,400 அடி அகலமுள்ள இடத்தில் இந்நதி 164 அடி கீழேவிழுகிறது; ஒரு நிமிஷத்தில் 18,000,000 கனச்சதுர அடி நீர் கீழே விழுகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். கீழேவிழுந்தவுடன் 1,000 அடி அகலமுள்ள மடுவுக்குள் நீர் எல்லாம் நுழைகிறது. அதற்கப்பால் 7 மைல் தூரம் செல்லுமுன் 104 அடி இறங்குகிறது. அங்கே இந்நதி மிகச்செங்குத்தாகவே காணப்படுகிறது; ஆழமோ அதிகமாக இருக்கிறது. இருமருங்கிலும் செங்குத்தானகரைகள் 200 முதல் 350 அடி வரையில் வானத்தை நோக்கி வளர்ந்திருக்கின்றன. ஆற்றின் அகலமோ 750 அடி முதல் 3,200 அடிவரையில்குவிந்தும் விரிந்தும் பலமாதிரியாக இருக்கிறது. மேற்கூறிய நயாகரா நீர்வீழ்ச்சிக்கு மூன்று மைல்களுக்கப்பால் ஆற்றுநீர் ஒருகரையிலிருந்து மற்றொருகரையில் மோதிப் பெருஞ்சுழியை உண்டுபண்ணுகிறது; இந்தச்சுழி அதிகபயங்கரமானதே.

இந்த நீர்வீழ்ச்சிக்கு 750 அடிக்கு அப்பால் கால்நடைப் பிரயாணிகள் ஏறிச்செல்லும்படியான பாலமொன்றுண்டு; இப்பாலம் மிக்க வியக்கத்தக்க வண்ணமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு இடையில் ஓர் ஆதரவுமின்றித் தொங்கிக்கொண்டிருக்கிறது.

இரண்டு கரைகளிலும் கட்டப்பட்டிருக்கும் ஆதரவின்மேல் இப்பாலம் முழுதும் தொங்கிக்கொண்டேயிருக்கிறது. இதைத்தான் மகா ஆச்சரியமான தொங்கு பாலம் என்று சொல்லுகின்றனர். இப்பாலம் கட்டப்பட்ட சரித்திரத்தைக் கேட்டால் அஃது இதைக்காட்டிலும் ஆச்சரியமாயிருக்கும். ஆற்றின் குறுக்கே படகில் செல்லுதல் முடியாது. ஆனால், பாலம் போடுவதற்கு முதலில் செய்யவேண்டியிருந்த காரியமாவது, ஒருமெல்லிய இருப்புக்கம்பியை ஒருகரையிலிருந்து மற்றொருகரைக்கு எட்டும்படி செய்யவேண்டியதுதான். எப்படி ஒருகரையிலிருந்து மற்றொரு கரைக்கு ஒருகம்பியை எட்டும்படி செய்வது? ஆனால், அத்தொங்கு பாலத்தைக்கட்டி முடிக்கும் பொருட்டு வந்திருந்த இஞ்சினீயர் ஓர் உத்திசெய்தார்; அஃதாவது: அவ்வூரில் ஆகாயத்தில் பட்டம் விடுவதில் கைதேர்ந்த வாலிபன் யாரேனும் உண்டோ என்று விசாரித்தார். வால்ஷ் என்னும் சிறுவன் பட்டம் பறக்கவிடுவதில் மகாசாமர்த்தியசாலி; அவனை அந்த இஞ்சினீயர் அழைத்து நயாகரா ஆற்றின் குறுக்கே பட்டம் விடச்சொன்னார். இவ்வாலிபன் அவ்வாறே செய்தான்; பட்டம் அடுத்தகரைக்குச் சென்றவுடன் அதை அங்கே இறக்கினான். இதற்கு முன் இந்தப்பட்டத்தைப்பிடிக்கும் பொருட்டு அக்கரையில் மனிதர்கள் ஆயத்தமாயிருந்தார்கள்; அவர் அந்தப்பட்டத்தைப் பிடித்துக்கொண்டார்கள். பிறகு அந்த நூல் கயிற்றின்வழியே ஒரு கம்பியைக்கட்டி இழுத்தார்கள்; அக்கம்பி ஆற்றின் குறுக்கே சென்றவுடன் பாலம் ஆரம்பமாயிற்று. அப்போது பட்டம் பறக்கவிட்ட வால்ஷ் என்பவர் இன்னும் உயிரோடிருக்கிறார். இப்பாலத்தில் கால் நடையாகத்தான் போகலாம்.

இந்தத் தொங்கு பாலத்துக்கு ஒன்றரைமைல் தூரத்தில் இரண்டு ரெயில்வே பாலங்களுண்டு; இரண்டுக்கு மிடையில் 100 கிஜ தூரந்தானுண்டு. இவ்விரண்டில் ஒன்றுக்கீழ் 18 அடி ஆழத்தில் வண்டிகள் போகும்படியான பாலமொன்றுண்டு; மற்றொரு பாலம் சென்ற 1883-ம் ஆண்டில் முடிவாயிற்று; இதில் 4 தண்டவாளங்கள் போட்டு இரண்டு வண்டிகள் போவதற்கு ஏது அமைக்கப்பட்டிருக்கிறது.

உலகத்திலிருக்கும் நீர் வீழ்ச்சிகளுக்கெல்லாம் இந்த நயாகராநீர்வீழ்ச்சிதான் மிக்கபேர் பெற்றது. ஆயிரக்கணக்கான பிரயாணிகள் கூட்டம் கூட்டமாக அதைப்போய்ப் பார்த்துவருகிறார்கள். சுமார் ஒருநாளையில் நூறுகோடி கனச்சதுர அடி நீர் விழுகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வீழ்ச்சியில் உண்டாகும் அதிர்ச்சியும் ஆரவாரமும் 10 மைல் தூரம் கேட்கின்றனவாம். ஆதலின், இதற்குத்தண்ணீர் இடி என்றுபெயர் வைத்ததும் பொருத்தமாகவே காணப்படுகின்றது.

* * *

விநோத மஞ்சரி.

கைம்பெண்:—ஐயா அடுத்த வீட்டுக்காரரே! என்னுடைய கணவர் அதிகதிரவியத்தை வைத்துவிட்டு இறந்துபோனார்; உவில் ஒன்றும் எழுதி வைக்கவில்லை; மற்றப் பாகஸ்தர்கள் பாகம் கேட்குமுன் நீர் என்னுடைய கணவன்போல் வியாதியால் கஷ்டப்பட்டு நடித்துக்கொண்டிருக்கவேண்டும்; நான் ஓர் உவில் எழுதுகிறவனை அழைத்து வருகிறேன்.

அடுத்த வீட்டுக்காரன்:—அப்படியே செய்வோம்.

கைம்பெண் எழுத்துக்காரனை அழைக்கச் சென்றாள். அடுத்த வீட்டுக்காரன் அவளுடைய கணவன்போல் படுத்துக் கொண்டான்.

கைம்பெண்:—எழுத்துக்காரரே! என்னுடைய கணவன் சொல்லும் உவில்லை எழுதித் தாரும்.

எழுத்துக்காரன்:—ஐயா! நீர் சொல்லும்; நான் எழுதுகிறேன்.

அடுத்தவீட்டுக்காரன்:—எனக்கிருக்கும் ஐசுவரியத்தை என்னுடைய மனைவி மக்களுக்கே கொடுத்துவிட்டேன். வேறு யாருக்கும் என் திரவியத்தில் பாகமில்லை. ஆனால், அடுத்த வீட்டுக்காரனுக்கு மட்டும் ஐம்பதினாயிரம் ரூபா கொடுக்கவேண்டுமென்று எனக்கு அபிப்பிராயம் உண்டாகிறது.

இதைக்கேட்ட கைம்பெண் ஒன்றும் புலப்படாமல் திகைத்து நின்றாள்.

* * * *

எந்தநேரமும் மனைவியும் புருஷனும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் ஒருவீட்டுக்கு விருந்தினனாகச் சென்றிருந்த மற்றொருவன் அந்தவீட்டுக்காரனை நோக்கி, “நீங்கள் ஏன் எந்தநேரமும் இப்படிச் சண்டையிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? இருவரும் ஒரே மனமாயிருக்கலாகாதா?” என்று கேட்டான். அதற்கவன், “ஐயோ! இருவருக்கும் ஒரே விதமான மனமாயிருப்பதனாற்றானே இவ்வாறு இடைவிடாச் சண்டை நேருகிறது; அஃதெப்படியெனின், அவள் மனம் எப்படிச் சண்டை போடுவதில் விருப்பமாயிருக்கிறதோ அப்படியே என் மனமும் சண்டையிடுவதில் விருப்பமாயிருக்கிறது” என்றுரைத்தான்.

* * * *

ஒரு மனிதன், தன்னுடைய குமாரன் மிகவும் மூடனாயிருந்ததைப்பற்றிப் பலநாளும் அவனை நிந்தித்து வந்தான். அதனால் அந்தச் சிறுவன் ஆத்திரங்கொண்டு, “நமது தந்தை நமது புத்தியின் விசேஷத்தை உணராமல் இவ்வாறு நிந்திக்கிறார்; அவருக்கு நமது புத்தி தீக்ஷண்யத்தைக் காட்டிவிட வேண்டும்” என்று யோசித்து ஒருநாள் இரண்டு புறாக்களை விலைக்கு வாங்கி வந்து த

ன் தந்தையிடம் அவற்றைக்காட்டி, "இந்த இரண்டு புறாக்களையும் மூன்றாக்க முடியுமா?" என்று கேட்டான். அதற்குத் தந்தை "ஒருவராலும் முடியாது" என்றான். அதைக் கேட்டதும் அந்தப் புத்திசாலிப்பையன், "நான் அதிக சுலபமாக மூன்றாகும்படி செய்வேன்" என்று சொல்ல, "அப்படியானால் செய் பார்ப்போம்" என்று தந்தை கூறினான். அப்போது மகன், "ஒரு புறா, இரண்டு புறா, ஒன்றும் இரண்டும் மூன்று" என்று சொல்லிக் கணக்குக் காட்டினான். உடனே தந்தை புன்சிரிப்புடன் அப்படியானால் ஒன்றை என்னிடம் கொடுத்துவிடு, மற்றொன்றை உன்தாயிடம் கொடு, இன்னுமொன்றை நீ எடுத்துக்கொள்" என்றான். அதைக்கேட்டு மூடப்பையன் வெட்கத்தைபடைந்தான்.

வர்த்தமானம்.

ஆங்கில எழுத்தில் சுருக்கெழுத்து இருப்பதுபோல் தமிழிலும் கண்டுபிடித்திருக்கிறார்கள்; இப்போது உருது பாஷையிலும் சுருக்கெழுத்துக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

உலகத்தில் 222, 342, 599 முஸ்லிம்களிருக்கிறார்களாம்.

* * * *

பைபிள் வேதத்தை முழுதும் மனப்பாடம் செய்து அப்படியே ஒப்பிப்பவர் இவ்வுலகத்தில் ஒருவரேதாம்; அவர் பெயர் வில்லியம் பிரடரிக்; அவர்வசிப்பது நியூயார்க் பட்டணம்; ஆனால் குர்'ஆனேஷரீபை மனப்பாடம் செய்திருக்கும் ஹாபிலுகளுக்கு அளவுண்டோ? பைபிளை மனப்பாடம் செய்யும் பழக்கமில்லாமையால் தான் அதில் இவ்வளவு மாறுபாடுகள் காணப்படுகின்றன.

* * * *

தமிழ்ப்பாஷையில் வேறுவிதமான அக்ஷரங்களை மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அக்ஷரங்களுக்குப் பாண்டியம் எனப்பெயர்.

* * * *

உலகத்தில் அதிஷ்டமுள்ள நாடு ஐஸ்லாண்டு என்றே சொல்லவேண்டும்; அங்கே சிறைச்சாலைகளும் போலீஸ் வீரர்களுமில்லை. அங்குள்ள மனிதர்கள். அதிகயோக்கியர்கள். சென்ற 1,000 வருஷங்களில் இரண்டு களவுகளே நிகழ்ந்திருக்கின்றன. இஃதன்றோ புண்ணியபூமி?

* * * *

ஒரு பிரஞ்சுக்காரன் தன் உறவினர் மீது கொண்டகோபத்தால் தான் சாகும்போது தன்னுடைய ஐசுவரியத்தையெல்லாம் தான் வளர்த்து வந்த ஓர் ஆமைக்கு எழுதிவைத்தானாம்; இஃதன்றோ அறிவுடையோனுக்கழகு?

* * * *

தூத்துக்குடியில் குடிப்பதற்குச் சலமில்லாமல் கோடைக் காலத்தில் ஜனங்கள் மிகவருந்துகிறார்கள். சிலோனிலிருந்து குடிநீர்கொண்டுவந்து குடம் அரையணாவுக்கு விற்கப்படுகிறது. இஃதன்றோ தாமிரபரணியின் புண்ணியம்? இவ்வகைக் கஷ்டத்தை முனிஸிபாலிட்டியார் ஏன் கவனிப்பதில்லையோ?

* * * *

10 ரூபா பெறுமான தங்க நாணயம் போடப்போகிறார்கள்; இஃது இலங்கையிலும் வழங்கும்.

* * * *

பர்லின் நகரத்தில் ஒருவர், அநேகம் வருஷம் பாடுபட்டுச் செயற்கையாக ஒரு மனிதனை உண்டுபண்ணியிருக்கிறாராம்; அம்மனிதன் நடக்கிறானும்; சிரிக்கிறானும்; பாடுகிறானும்; உயிர் மனிதனைப்போலவே இருக்கிறானும்; பிறர் சொல்லும் உத்தரவுகளைக் கேட்டு அதன்படி செய்கிறானும்; நடக்கச்சொன்னால் நடக்கவும், நிற்கச்சொன்னால்நிற்கவும் தெரிகிறதாம்; பிறர்கேட்கும் வினாக்களுக்கு மறுமொழி சொல்லுகிறானும்; இதுகைப்புறட்டுச்சாலமன்று; ஆனால், உண்மையிலேயே அப்படிப்பட்ட மனிதனை அவர் உண்டுபண்ணி யிருக்கிறாராம்; இஃதன்றோ மனிதனுடைய மூளையின் தீக்ஷண்யம்?

* * * *

சுமாத்திராதீவில் 15 பவுண்டு நிறையுள்ள புஷ்பமொன்றிருக்கிறது; இதுதான் உலகத்தில் மிகப்பெரிய புஷ்பம்.

* * * *

ருஷியா தேசத்துப்பெண் ஒருத்தி ஆண்வேஷந்தரித்துக் கொண்டு 6,000 மைல் குதிரையில் பிரயாணம் செய்தாளாம்.

* * * *

மனிதன் ஆகாயத்தில் 30,000 அடி உயரத்துக்குமேல் பறக்கமுடியாதாம்; ஆனால், பக்ஷிகள் அதற்குமேல் அதிகதூரம் உயரத்தில் பறக்கின்றனவாம்.

* * * *

ஜலந்தர் என்னுமிடத்திலுள்ள தோட்டிகள் "வால்மீகி ஸமாஜம்" என்ற பெயருடன் ஒரு சங்கம் ஸ்தாபித்துக்கொண்டு தங்களுடைய அபிவிருத்தியை நாடுகின்றவராகியிருக்கின்றனர். ஹிந்துக்கள் இவர்களைக் காலின் கீழிட்டுத் துவைத்து வந்தனர். முகம்மதியர்களோ இவர்களைக் கவனிக்கவேயில்லை. மானிடகுணம் மேலெழப்பார்ப்பது சகஜந்தான். சென்ற தசரா உற்சவத்தில் அவர்கள் ஒரு பக்ஷணக்கடை போட்டிருந்தார்கள் அதன் முன்னால் "ஹிந்துக்களும் முகம்மதியர்களும் இவ்விடத்தில் பலகாரங்கள் வாங்கவரக்கூடாதென்று உயர்குலத்தோர் தெரிந்துகொள்ளட்டும். சூரர்களும் மற்றையோரும் வரலாம்" என்று ஒரு விளம்பரம் போடப்பட்டிருந்ததாம். என்னே காலத்தின் கோலம்!

குறிப்பு.

ஒவ்வொருமாதமும் தம்தமக்கு இஸ்லாம் நேசன் சரியாக வருகிறதாவென்று ஒவ்வொரு சந்தாநேயரும் கவனிக்கவேண்டும்; வராவிடின் உடனே எமக்குத்தெரிவிப்பீர்களாக. சில சமயங்களில் போஸ்டாபீஸில் தவறுகள் நடக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். போஸ்ட் பியூன்கள் பேப்பரை வேறு மனிதர்களிடத்தில் கொடுத்து விடுவதாகத்தெரிகிறது. சென்றமாதம், "மௌல்வி அப்துர்ரஹ்மான் சாஹிபு அவர்கள், பள்ளிவாசல் மதுரஸா, நாச்சியார்கோவில், கும்பகோணம்" என்ற விலாசத்துக்கு அனுப்பிய பேப்பர் அவர்கள் கைக்குப்போய்ச் சேரவில்லையென்று தெரிந்துகொண்டோம். இன்னாரிடத்தில்தான் அப்பேப்பர் கொடுபட்டிருக்கிறதென்பதும் தெரிந்துவிட்டது. இஃது அவ்வூர் போஸ்ட் பியூனுடைய தவறு; இவ்வாறு அப்பியூன் இனி மிஸ்டெலிவரிசெய்வாராயின் உடனே அவ்விஷயம் மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படும்.

பத்திராதிபர்.

ஹிப்னாடிஸம் என்னும்

மனோவசியதத்துவம்.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த கிரந்தம் இதுவரையில் தமிழில் வெளிப்படவில்லையென்பது திண்ணம். தன்னைத் தானறிந்து கொள்ளவும், மனத்தை வசப்படுத்திக்கொள்ளவும் முன்னோர்கள் கஷ்டமான பல மார்க்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர்; ஆனால், அமெரிக்க ஆங்கிலேய சாஸ்திரிகளோ அவ்விரண்டையும் பெறுதற்கு அதிலகுவான மார்க்கத்தைக் கண்டுபிடித்து மேஸ்மரிஸ்ம் எனப் பெயரிட்டு அதைப் பரமரகசியமாக வைத்து வருகிறார்கள். அந்த இரகசியங்களும், இங்கிலீஷில் அதிகபாண்டித்தியமடைந்து மிகப் பணச் செலவு செய்பவர்களுக்கு மாத்திரம் கிட்டுமேயொழிய மற்றவர்களுக்கு ஒரு சிறிதும் எட்டா. ஆகையால், நம்தமிழ் நாட்டாருக்கும் அஃது உபயோகப்படும்படி மேல் நாட்டாரால் எழுதப்பட்ட அதிக விலையுள்ள இங்கிலீஷ் சாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றின் நுட்பங்களை அநுபவமுகத்தால் நிச்சயித்தறிந்து இந்த மனோவசிய தத்துவமென்னும் நூலை இலகுவான தமிழ் நடையில் வெளிப்படுத்தியிருக்கிறோம். ஆண்பெண் இருபாலாரும் இதில் கண்டிருக்கிறபடி இரண்டு அல்லது மூன்றுவாரங்கள் அப்பியசித்துவரின் மேற்கண்ட மர்மங்கள் சித்தியாகிவிடும். இதற்காகக்குருமார் ஒருவரும் அவசியமேயில்லை; வீட்டைவிட்டுக் காட்டிற்குப்போகவேண்டியதில்லை; மலைகளிலும் குகைகளிலும் வசிக்கவேண்டியதில்லை; இலைகளைத் தின்று நோன்பிருக்கவேண்டியதில்லை; அவரவர்கள் தம் தம் இடத்தில் இருந்தபடியே பிரதிதினமும் சொற்பநேரம் சொற்பநாள் அப்பியசித்துவரின் போதும். அதனால் அரிய பெரிய காரியங்களையெல்லாம் சாதிக்கக்கூடும்; சர்வரோகங்களையும் ஒரு நொடியில் பறக்கவைக்கலாம்; அஷ்டாங்கயோகங்கள், ஆத்மஞானம் முதலியவற்றை அதிலகுவில் பெறலாம்; இந்திரஜாலம், கெஜகர்ணம், கோகர்ணம் முதலியவற்றைச் செய்யலாம்; மூடர்களைப் புத்திமான்களாகவும், துஷ்டர்களைச் சன்மார்க்கர்களாகவும், கோழை மனத்தோரைத் தைரியமுள்ளவர்களாகவும் ஆக்கலாம்; இன்னும் மனத்தால் சாதிக்கத்தக்க ஆயிரக்கணக்கான அற்புதங்களையும் செய்யலாம். இவ்வற்புத கிரந்தம் இகபர சுகானுபவங்களை விரும்பும் ஆண் பெண் இவ்

தென்பது, அதை உபயோகிக்கும் விதம், பிராணாயாமத்தின் சூக்ஷமம், ஹிப்னாடிஸத்தால் உண்டாகும் ஆத்மதரிசனம், தூரதிருஷ்டி, ஞானதரிசனம், சோதிடம் முதலிய இரகசியங்கள் ஆகியவை விளக்கிக்காட்டப்படும். இதுவரையில் தமிழில் மூளையின் தத்துவத்தைப் பற்றிய நூல் ஒன்றும் இல்லை; ஆனால், இப்புத்தகத்தில் மனிதனுடைய மூளையின் தன்மையும், அதனாலுண்டாகும் அற்புதச் செயல்களும் விளக்கமாகக் காணப்படும்; மூளைக்கும் நரம்புத் தூக்கத்துக்குமுள்ள ஒற்றுமை நன்றாய் விளங்கும்: ஹிப்னாடிஸம் என்னும்யோக முறையில் எல்லா வியாதிகளையும்நீக்கும் முறைகள் முன்பாகத்தைக் காட்டிலும் இதில் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன; கிளர்வாயன்ஸ் என்னும் ஆத்மதரிசனமும், தூரதிருஷ்டியும், சோதிடமும் கற்றுக்கொள்ளும் முறைகள் இதில் உண்டு. கடைசியில் சேர்க்கப்பட்டுள்ள அநுபந்தத்தில் மனிதர்களை வசப்படுத்துவதற்கு வேண்டிய பர்ஸனல் மாக்னடிஸம் என்னும் முறைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன; நம்முடைய ஹிப்னாடிஸம் என்னும் மனோவசியதத்துவம் முதற்பாகத்தில் 12-ம் பக்கம் 2-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் பர்ஸனல் மாக்னடிஸம் என்னும் வசிய வித்தையைக் கற்றுக்கொள்ளும் வழிகள் இங்கேதான் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு விஷயமே இப்புத்தகத்தின் முழுவிலைக்கும் ஈடாகும்; ஞானதரிசனக்கண்ணாடியென்னும் ஒருவகைக்கண்ணாடி யந்திரத்தில் ஆத்மதரிசனம் காணும் முறையும் இதன் அநுபந்தத்தில் உடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்வநுபந்தம் ஒன்றே உலகத்தை வெல்வதற்குப்போதும்.

இப்புத்தகத்தின் தன்மை இன்னதென எல்லோருக்கும தெரியுமாதலின் இதைப்பற்றி அதிகமாக எழுதுவது அனாவசியமாம். பாம்பின் விஷந்தீர்க்கும் மந்திரம் முதலியவைகளும் இப்புத்தகத்தில் காட்டிய மனோவசியத்தின் உதவியைக்கொண்டே நடக்கின்றன. மிருகங்களை வசப்படுத்தும் வசியமுறைகளும் இதில் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆடு மாடு குதிரை புலி கரடிமுதலிய மிருகங்களையும், கோழி முதலிய பறவைகளையும் வசப்படுத்தும் எளியமுறைகள் விரிவாகக்காணப்படும். இவ்வளவு இரகஸ்யங்களும் அடங்கிய இப்புத்தகம் 480 பக்கங்களுக்குமேல் அதிகமாகக்கொண்டிருக்கிறது. இதன் விலை இரண்டு ரூபா எட்டணாதான்

இப்புத்தகம், இதன் முதற்பாகத்தைத் தருவித்தோர், தருவிக்காதோர் ஆகிய எல்லோருக்கும் மிக அவசியமாகும். முதற்பாகம் இல்லாதவர்கள், இதனோடு அதனையும் சேர்த்துத் தருவித்துக்கொள்ளுதல் நலம். இந்தப்புத்தகம் அச்சிடப்பட்டு வெளிவருவதற்குள் ஆர்டர் கொடுத்துப் பெயரை ரெஜிஸ்டர் செய்து வைத்துக்கொள்ளுவோருக்கு, "சந்திரகாசன் சாமர்த்தியங்கள்" என்னும் ஆச்சரியமான கதைகளுள் முதல் சாமர்த்தியமான ஓர் அற்புதக்கதை இனாமாகக் கொடுக்கப்படும்.

மனோவசியதத்துவம் முதற்பாகம்	ரூ. 2—0—0
ஷை அப்பியாச சக்கரம்	ரூ. 0—5—0
மனோவசியதத்துவம் 2-ம் பாகம்	ரூ. 2—8—0

இங்ஙனம்:

கிரந்தகர்த்தா, ந. பா. தா.

* * *

விலாசம்:—இஸ்லாம் நேசன் ஆபீஸ்,
12, அப்புமேஸ்திரி தெரு, மாபூஸ்கான்தேவடி, மதுராஸ்.
G. T. MADRAS. E.

* * *

இஸ்லாம் நேசன் பத்திராதிபரும், யூனானி ஆயுர்வேத
பண்டிதருமாகிய,
ஹக்கீம். பா. முகம்மது அப்துல்லாசாயபு அவர்களால்
கண்டுபிடிக்கப்பட்ட

வீரியசிந்தாமணி மாத்திரை.

1. இந்த அபூர்வமாத்திரையைப் பற்றிய விபரங்கள் நமது 'வீரியவிர்த்திபோதினி' என்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும், இங்கும் அதன்கருத்தைச் சுருக்கமாக எழுதுவாம்.

2. விளம்பரங்கள் பெருத்த இந்தக்காலத்தில் உண்மையானது எது? உண்மையல்லாதது எது? என நிச்சயித்தறிவது மிகவும் கஷ்டம். ஆகையால் அதை வெளிப்படுத்துவோர்களின் விற்பனாசக்தி, சாஸ்திரப்பயிற்சி, அநுபவம், முதலியவைகளைத் தெரிந்து நிச்சயிக்கவேண்டியது.

3. நாம் இதுவரையில் கடவுளினது கிருபையால், ஐம்பதிற்கதிகமான யூநாநி ஆயுர்வேத வைத்திய கிரந்தங்களை இயற்றியும் வெளிப்படுத்தியுமிருக்கிறோம். இந்தச் சாஸ்திரங்களைப் பார்வையிட்டு அநுபவித்த ஒவ்வோர் அநுபவசாலிகளும், சாஸ்திரப்பயிற்சியுள்ள கல்விமான்களும் அவைகளை அங்கீகரித்து, அவை, நூதனமானவைகளென்றும், அருமை பெருமை வாய்ந்தவைகளென்றும், அவை அநுபவம், யுக்தி, புத்தி இவைகளுக்கு ஒத்தவையென்றும் மிகுதியாய்ப் புகழ்ந்துவருகின்றார்கள். இன்னும், இந்த வைத்தியத் தொழிலானது பல்லாண்டுகளாக, பரம்பரைவழியே, மாதாபிதாக்கள் இருவழியாகவும், தொடர்ந்து வருகிறதென்பதும் உலகறிந்தவிஷயம்.

4. தென்னிந்தியாவில் கஷ்டமான வியாதிகளை நிவர்த்திசெய்திருந்தபோதிலும் பிரதானமாகத் தாதுநஷ்டசிகிச்சையில் அதிக கீர்த்தியையும் அனேகசன்மானம் வெகுமானங்களையும் அடைந்துவருவதே அதற்குப் பிரத்தியக்ஷ அத்தாக்ஷி. இந்த விஷயத்தில் கடவுளினது கிருபையால் நாமே முதன்மையெனச் சொல்ல ஏதுவுண்டு.

5. ஆகையால், அநேக கனவான்கள் யாவருக்கும் உபயோகப்படும்படியாகவும், பத்தியம் பாவனைகள் இல்லாதவைகளாகவும், எல்லாவிதத்திலும் சுகத்தையே தருபவைகளாகவுமுள்ள சில அவுடதங்களை லோகோபகாரமாக வெளிப்படுத்தும்படி பலநாளாக வற்புறுத்தி வந்தபடியால் இந்த வீரியசிந்தாமணி மாத்திரையை, ஜீவகாருண்யத்துடன் மிகவும் குறைந்தவிலைக்கு வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

பலரின் அதிர்ஷ்ட வசத்தால் வெளிவந்த இந்த வீரியசிந்தாமணி மாத்திரையின் விசேஷகுணங்கள் அளவிட்டுச்சொல்லுதற்கரியனவாயினும் அவற்றுள் சில குறிப்பானவற்றை மாத்திரம் இங்கெடுத் தெழுதுகிறோம்:—

இது, பிறவியாலுண்டான தாதுநஷ்டம் தவிர மற்ற எல்லாவகைத் தாது நஷ்டங்களையும் தீர்ப்பதில் முதன்மை பெற்றது. நாம் உயிர்வாழ்வதற்கு மூலாதாரமாகிய தாது குறைவதாலுண்டாகும் தாதுநஷ்டம், முதுகெலும்பு முதலியவற்றின் நோய், முகவெளுப்பு, மனோசக்திக்குறைவு, ஆயாசம், கைகால்களின் எரிச்சல், ஞாபகமின்மை, கண்ணிருளல், தேகநடுக்கம், நெஞ்சுத்திடுக்கம், அதைரியம், சோம்பல், அஜீரணம், மூளைத்துர்ப்பலம், நரம்புத்தளர்ச்சி, கண்ணெரிவு, தேகச்சூடு, அஸ்திச்சூடு, வெட்டை, இரத்தப்பெருக்கு, அற்பவேலைக்கும் பெருமூச்சுவிடுதல் ஆகிய பல ரோகங்களையும் தீர்த்து இரத்தத்தை விருத்திசெய்யும்; நரம்புகளைப் பலப்படுத்தும்; தேகதிடத்தையுண்டாக்கும்; மனோவன்மையைத் தரும்; நிருவாகசக்தியை வெகு சீக்கிரத்தில் கொடுக்கும்; இல்வாழ்க்கையில் மிக்க திருப்தியுண்டாக்கும்படியான மார்க்கங்களையெல்லாம் செய்விக்கும்; நீர்த்த வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; சொப்பனஸ்கலிதத்தைச் சொப்பனத்திலும் காணமற்போக்கும்; ஆச்சரியமான வீரபராக்கிரமத்தை எய்துவிக்கும்; ஜீரண சக்தியை அதிகப்படுத்தும்; நபுஞ்சகத்தன்மையை நாசப்படுத்தும்; புருஷத்தன்மையை யளிக்கும்; நீண்ட ஆயுளையும் சௌக்கியத்தையும் தரும்; இரத்தத்தைச் சுத்தப்படுத்திப் பளபளப்பான மேனியைத்தரும்; மூளையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியை உண்டாக்கும்; கைகால் கண் அஸ்தி முதலியவற்றில் சுகத்திற்கேதுவான குளிர்ச்சியை உண்டாக்கும்; இனிமையை மாறாதிருக்கச்செய்யும்; எதிலும் ஊக்கத்தைத் தரும்; சுருங்கச்சொல்லுமிடத்தில் இது, தேகத்திற்கு இன்பத்தைத்தருவதில் தேவாமிர்தம்போன்றது. இதனை எக்காலத்தும், எத்தேசத்தும், எச்சாதியாரும், எவ்வித சங்கடமான நிபந்தனையுமின்றி உபயோகிக்கலாம்; உபயோகித்த சில தினங்களுக்குள்ளேயே இதன் சிறந்த குணம் ஒவ்வொருவருக்கும் கரதலாமலகம்போல விளங்குமாதலின் அதைப்பற்றி இங்கு விரிவாக எழுதல் அனாவசியமாம். இதுகாறும் இதனை அனுபவித்தவர்கள் இதன் சிறந்த குணத்தைப்பற்றிப் புகழ்ந்து அடிக்கடி சந்தோஷமான கடிதங்கள் எழுதி எம்மை உற்சாகப்படுத்தி வருகின்றார்கள். இதன் மேன்மையை அறிந்த சில பிரபுக்களும், ஜமீன்தார்களும், எப்பொழுதும் தங்கள் குடும்ப அவுடதமாயிருக்கும்படி இதனைத் தருவித்துவைக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். ஆதலின் இனி மற்ற எல்லா நண்பர்களுமே இதனைத் தருவித்துக் குடும்பவிர்த்திக்கேதுவான நற்பயன்களைக் கைக்கொள்ளுமாறு விரும்புகிறோம். இஃது உயிர்க்காதாரத்தைத் தரத்தக்கது; சமயசஞ்சீவி; சந்தான சிந்தாமணி; வீரியக்கற்பகம்; மெய்ப்பலன்தரும் சங்கநிதி; எப்பொழுதும் கைவிடாதீர்கள்; அற்புத சுகமடைவீர்கள்.

இதன் விலை 50-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ 1-0-0,

வைகளெல்லாம் அறபியெழுத்துக்களாலேயே எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றின்கீழ் அவ்வாக்கியங்களையே தமிழ் எழுத்துக்களாலும் எழுதி அறபி எழுத்திற்குச் சரியான உச்சரிப்பில்லாத எழுத்துக்களின் இன எழுத்துக்களின் மீது அந்தந்த அறபியெழுத்தென்னும் அறிகுறியாய் எழுதப்பட்டிருக்கின்றன; அப்படிச் செய்யப்பட்டிருப்பதால் அறபிவாக்கியத்தைப் பிழைபறத் திருத்தமாய் வாசிக்கக் கூடுவதுமன்றி அருத்த முதலியவைகளிலும் எவ்வித சந்தேகத்திற்கும் ஏதுவிராது.

ஆங்காங்கு வந்திருக்கும் எல்லா துஆக்கள் முதலியவைகளுக்கும் அதனதன்கீழ், அருத்தமும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொன்றின் மஅனாவையும் செம்மையாய்த்தெரிந்துகொள்ளக்கூடும்.

யாவருந் தெரிந்துகொள்ளும்படி யாவர் செந்தமிழ் நடையாகவும், ஒவ்வொரு மஸ்ஆலாவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்லாமானவர்களின் சிறுவர்களுக்கு நம்முடைய மார்க்கத்தில் மஸ்அலாக்களைப் படித்துக்கொடுக்க வேண்டியதென்பது முஸ்லிமாகிய தாய்தந்தையர் மீது பறலாம். அந்த மஸ்அலாக்களெல்லாம் இக்கிதாபுகளிலடங்கியிருப்பதால் இவைகளைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கவேண்டியதென்பதும் ஒவ்வொரு முஸ்லிம்களுக்கும் பறலாம். இக்கிதாபுகளிரண்டும் ஒன்றாகச்சேர்த்து ஓர் பிரதியாகக் கட்டப்பட்டிருக்கின்றன.

இக்கிதாபுகளைத் தாங்கள் பார்வையிட்டால் இது நூதன விதமாக அச்சிடப்பட்டிருக்கிறதென்பதும், இதுவரையில் இவ்விதம் அச்சிடப்படவில்லையென்பதும் தங்களுக்கு நன்கு புலப்படும். இதனருமையை அவரவர்கள் அறிந்துகொள்ளக் கூடுமாகையால் இவ்வளவோடு நிறுத்தப்பட்டது. யாவருக்கும் கிடைக்கும்படியாக விலையும் சுலபமாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இவ்விரண்டுமடங்கிய பிரதி 1-க்குக் கைவிலை ரூ. 0-12-0.
வி-பி. 0-15-0.

நோன்பாளி நன்கொடை, சீமான்கள் செங்கோடை.

இந்தக் கிதாபாகிறது இப்போது மத்ராஸிலிருக்கும் ஜனாப் மவுலானா, மவுல்வி, ஷம்ஷுல் உலமா ஹாஜி குலாம்றசூல் ஸாகிபு அவர்களால் ஹிந்திபாஷையில் கோவை செய்யப்பட்டுத் தமிழ்ப் பழக்க வழக்கமுள்ள முஸ்லிம்களின் உபயோகத்திற்காகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதில் நோன்பைப்பற்றிய முக்கியமானவைகளும் அடிக்கடி சம்பவிப்பவைகளுமான எல்லா மஸ்அலாக்களும் மிகவும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. தமிழில் வெளிப்பட்டுலாவும் இஸ்லா மார்க்க கிதாபுகளில் இவ்வளவு மஸ்அலாக்களடங்கிய கிதாபுகளொன்றுமில்லையென்றே சொல்லவேண்டும்; இந்தக் கிதாபும்மேற்கண்ட விதமாகவே நூதன ஏற்பாட்டுடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதனை வாசிப்பவர்கள் தாம்தாமே இதனருமையை அறிந்துகொள்வார்களாகையால், இதிலுள்ள அட்டவணையை மாத்திரம் இங்கு குறிப்பாகக் காட்டுவாம்.

றம்லான் மாதத்தின் சிறப்பு, பிறையைக் காண்பதின் விபரம், நோன்பின் வரிசையின் விபரம், நோன்பின் ஸிபத்தின் விபரம், நோன்பின் நிய்யத்தின் விபரம், ஸஹர், இப்தார், இவைகளின் விபரம், நபில் நோன்புகளின் விபரம், ஹறாமான நோன்பு, மக்றூஹான நோன்பு இவைகளின் விபரம், நோன்பின் மக்றூஹு, விபரம், நோன்பின் முகாஹ்ற உடைய விபரம், நோன்பை முறிக்காதவைகள் இன்னவையென்பது; கபாரா விதியாகும் விபரம்; கபாரா கலா ஆகிய இரண்டும் விதியாகும் விபரம்; கலா மாத்திரம் விதியாகும் விபரம்; தராவீஹ் தொழுகையின் விபரம்; பித்ரு ஸதகாவின் விப விபரம்; ஸதகா வாஜிபாகும் சொத்துக்களின் விபரம்; பித்ரு ஸதகா யார் யார்மீது வாஜிபு என்பது; பித்ரு ஸதகாவின் அளவு வகையறு, பிதரு ஸதகா வாஜிபாகும் நேரம், நிறைவேற்றும்நேரம், பித்ரு ஸதகாவைப் பெற்றுக்கொள்ளப் பாத்திரவான்கள்; குர்பானியின் விபரம், குர்பானி செய்யும் நேரத்தின் விபரம்; குர்பானிக்குத் தகுந்த பிராணி யின்னதென்பது, குர்பானியைத் துட்குசெய்யும் விபரம், அகீகாவின் விபரம், பட்டுச் சரிகைமுதலிய வஸ்திரங்களை யுடுத்திக்கொள்ளும் விபரம் ஆகியவைகளாம்.

இன்னும் தமிழ் வாசகத்துடன் வந்திருக்கிற அறபி சொற்களையெல்லாம் ஒன்றாகத்திரட்டி அகராதி ரூபமாக அமைத்து, பத அருத்தம், ஷரகுநடை அருத்தம் முதலியவைகளை யெழுதி அநுபந்தமாகவும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இன்னன நூதன விஷயங்களடங்கிய இந்த நூதன கிதாபு முஸ்லிமாகிய ஒவ்வொருவர் கையிலும் கட்டாயம் இருக்கவேண்டுமென்பது அதனைப் பார்வையிடும் ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கும்.

இதன் விலை பிரதி 1க்குக் கைவிலை ரூ 0-10-0 ஷை வி-பி.0-12-0.

பத்ஹுல் மன்னான்.

இது ஷாபியீ மதகபுகிதாபு. இதில் ஷாபியீ மதகபுக்காரர்களுக்கு வேண்டிய அகாயத், பிக்ஹு மஸ்அலாக்கள் சிறுபிள்ளைகளும் தெரிந்துகொள்ளும்விதமாகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இது ஹலாத் ஹாபிலு, முகம்ம இப்றுதுஹீம்லப்பை ஆலீம் ஸாகிபு ஷாபியீ அவர்களால் கோவை செய்யப்பட்டது. இந்தக் கிதாபிலும் ஆங்காங்கு வருகிற அறபி சொற்கள் அறபி வாக்கியங்க

ளான தலீல் ஹதீது முதலியவைகளும் அறபி யெழுத்துக்களாலும் எழுதி, அறபி எழுத்திற்குச் சரியான உச்சரிப்பில்லாத எழுத்துக்களின் இன எழுத்துகளின்மீது அந்தந்த அறபி யெழுத்தென்னும் அறிகுறியாய் எழுதப்பட்டிருக்கின்றன. அப்படி எழுதப்பட்டிருப்பதால் அறபு வாக்கியத்தைப் பிழையற வாசிக்கக்கூடுவதுமன்றி அருத்த முதலியவைகளிலும் எவ்வித சந்தேகத்திற்கும் எதுவிராமல் நூதன மாதிரியாக அச்சிடப்பட்டிருக்கிறது. இக்கிதாபில் அவசியமானவும், முக்கியமானவும் அடிக்கடி நேரக்கூடியவைகளுமான அநேக மஸ்அலாக்கள் அதிக திருத்தமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. முஸ்லிமாகிய ஆண், பெண், சிறுவர் முதலிய எல்லோருக்கும் எப்போதும் உபயோகப்படத் தகுந்தது. இதனைப் பார்த்தவுடன் இதன் அருமையைத் தெரிந்துகொள்ளக்கூடும். யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி மிகவும் குறைந்த விலையே யேற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதன் விலை பிரதி 1 க்குக் கைவிலை ரூ. 0-10-0. டை வி-பி 0-12-0

இஸ்லாத்தின் சிறப்புக்கள்.

இச்சிறு கிதாபில் இஸ்லாமார்க்கத்தின் றுக்னுகளானவை அநுபவம், புத்தி, யுக்தி முதலிய சுபாவ சட்டத்திற் கேற்றவைகளென நன்றாய் விளக்கிக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் பார்வையிடும் ஒவ்வொரு முஸ்லிம்களின் மனமும் ஆனந்தத்தை யடையுமென்பதிற் சந்தேகமில்லை. நம்மார்க்க றுக்னுகள் மற்றெல்லா மார்க்கத்தைப் பார்க்கிலும் மேலானவைகளெனவும் புத்தியுக்தி முதலியவைகளுக் கொத்தவைகளெனவும் தக்க உதாரணங்களாலும் தக்க விஷயங்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றன. இது முஸ்லிம் ஆகிய ஒவ்வொருவர் கையிலும் அவசியம் இருக்கவேண்டியது. முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் இதை வாசிப்பதுமன்றி தங்கள் பிள்ளைகள் முதலானவர்களும் வாசிக்கும்படியாகச் செய்வதால் அநேக நன்மைகளுண்டாம்.

பிரதி 1 க்குக் கைவிலை 0—4—0

அறபு தமிழ் அகராதியின் முதல்வாலியூம்.

இது 54 பாரங்களான 432 பக்கங்கள் உள்ளது. விலைக்குச் சித்தமா யிருக்கிறது.

இதன் கைவிலை ரூபா 3-0-0 வி-பி ரூபா 3-4-0

சொற்ப காப்பிக ளிருக்கின்றபடியால் முந்திக்கொள்பவர்களுக்கே கிடைக்கும்.

மு. அ. ஸ.
மானேஜர்.
ஹக்கீம். பா. முகம்மது அப்துல்லாசாயபு அவர்கள்
இராஜ அவுடதசாலை, 12, அப்புமேஸ்திரி தெரு
G. T. MADRAS. E.

பிஸ்மில்லாஹ்,

வந்துவிட்டது வெளிக்கு வந்துவிட்டது

வெகுநாளாய்க் காத்திருந்தது வந்துவிட்டது.

நமது சர்வறெஜூலம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஅஸ்ஹாபிஹி வஸல்லம் அவர்களின் சிறிய தந்தையாகிய அற்புத வல்லமை யமைந்த ஹஜரத்து

அமீர் ஹம்ஜா ஜங்கு.

முஸ்லிமாகிய உடற்பிறப்புக்களே இச்சரித்திரத்தை உலகோர் செவியாரலாய்க் கேட்டிருப்பார்களேயொழிய முழுவதையும் உள்ளபடி அரபி ஹிந்தி பாஷை யறியாதவர்கள் விபரமாய்ப் பார்த்திருக்க மாட்டார்களென்பது நிச்சயமே; ஆகையால் வெகு பிரயாசையோடு அநேக பொருள் செலவுசெய்து தமிழில் மொழிபெயர்த்து நான்கு வால்யங்களாய் வெளிப்படுத்தக் கருதி உயர்ந்த இக்கு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு முதல் வால்யம் நானூறு பக்கங்களடங்கியதாய் ஆயிரங்காப்பிகளும் இரண்டாம் வால்யத்திலும் ஆயிரங் காப்பிகளும் மட்டுந்தான் முதல் பதிப்பில் பதிப்பித்திருக்கிறோம். இச்சரித்திரத்தில் அடங்கியுள்ளவைகளில் சில முக்கிய விஷயங்களை மாத்திரம் இங்கு கூறுகின்றனம். அவையாவன, ஹம்ஜா ரலியல்லாகுத்தாலா அன்ஹு பிறந்தது முதல் அவர்கள் பலத்த,பலத்த, பைல்வான்களிடத்தில் எதிர்த்து யுத்தஞ்செய்து ஜெயித்ததும் தேவுகளோடும் எதிர்த்து அவைகளைச் சின்னாபின்னமாய்வெட்டியும் பிளந்தும் ஓர்காலில்ஓர்காலைமிதித்துக்கொண்டு மற்றொருகாலைக்கரத்தினால் பிடித்துக் கிழித்துஎறிவதும்,பெருத்த பெருத்த, மலைகளை ஒத்த வம்புத்தனமுடைய தேவுகளைச்சங்காரஞ்செய்து நரகலோகத்திற் கனுப்பியதும் ஜின்களுக்கும் தேவுகளுக்கும் பாதுஷாவாகிய ஷகப்பால் பின்ஷாஹருக் என்பவருக்கு உதவியாய் கோஹேகாப் என்னும் துன்யாவில் சென்று முற்கூறிய ஷகப்பால்பின்ஷாஹருக்பாதுஷா அவர்களின் செல்வப்புத்திரியாகிய ஆஸ்மான் பரியை விவாகம் செய்துகொண்டு அங்கு சிலகாலம் தேவுகளையெல்லாம் அடக்கி ஷகப்பால் பாதுஷாவிற்கு அவருடைய தேசத்தை மீட்டுக் கொடுப்பதும் இன்னும் அநேக அநேக சொல்லிடற்கரிய மஹா பலத்த யுத்தங்கள் செய்வதும் பார்க்கப் பார்க்கக் கேட்கக் கேட்க மனோஉற்சாகத்தையும் செவி

க்குத் தேனமிர்தத்தைப்போன்ற இனிமையையும் கொடுக்கக் கூடியதும் இன்னும் ஹப்தக்கிஸ்வர் நௌஷேரவான் ஏகசக்கிராதிபதி அமீர்ஹம்ஜா அவர்களைப் பகைத்து அவர்களோடு பலத்த பலத்த இராஜாக்களைக்கொண்டும் ஜங்கிப் பயில்வான்களைக் கொண்டும் யுத்தம்செய்து வருவதும் அமீர்ஹம்ஜா அவர்களுக்கு அநேக புத்திரர்கள் மிகப் பலக்கிரசாலிகளாய்ப் பிறந்து அவ்வொவ்வோர் புத்திரர்களும் ஹம்ஜா றலியல்லாகுத் தாலா அன்கு அவர்களுடைய பலத்தை நிகரற்றவர்களாய் யுத்தக் களங்களில் சண்டமாருத சங்கார ரணக்கள் துந்துமி செய்து ஜெயமடைவதும் துவர்க்கமுதல் சரித்திர முடிவுவரையில் ஹஜாரத்து காஜா உம்ரு ஐயார் கஞ்சர் குஜார் அவர்களுடைய அதிஅற்புத வேடிக்கை விநோத வெகு ஜால மாயாமாந்திரீக ஐயாரித்தனமும் அவர்களின் சாமார்த்தியமும் அடடா என்ன சொல்லுவேன்; சுபகானல்லா இச்சரித்திரத்தை வாசிப்பவர்கள் உம்ரு அவர்களின் செய்தி எங்கே வருகின்றதோ என்று சரித்திரத்தை வாசித்துத் தள்ளிக்கொண்டுபோகையில் அமீர்ஹம்ஜா அவர்களின் வல்லமையைக் கண்டு உம்ருவை மறக்கவும் உம்ருவுடைய செய்தியைவாசிக்கையில் அமீர் அவர்களை மறக்கவும் செய்துவிடும். அதிகமாய் விவரித்தெழுதினால் இடங்கொள்ளாது. இப்புத்தகம் முடிவாகு முன் அநேகர் முன்னாகவே ஆர்டர் செய்துவிட்டுப் புத்தகத்தை எதிர்நோக்கியிருந்தவர்களுக்கு அனுப்பியது போக மிகுதம் சில புஸ்தகங்கள் தான் இருக்கின்றன. ஆகையால் சீக்கிரம் எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

அமீர்ஹம்ஜாஜங் முதல்வாலியம் புஸ்தகம் 1-க்குக் கிரயம் ரூபா 1—8—0 போஸ்டேஜ் அணா 4.

இரண்டாம்வாலியம் புஸ்தகம் 1-க்குக் கிரயம் ரூ 1—10—0
போஸ்டேஜ் 0—4—0

ஒரே தடவை 10 புஸ்தகம் வாங்கினால் ஒரு புஸ்தகம் இனாம்.

அமீர் ஹம்ஜா புக்டிபோ மானேஜர்,
நெ. 33 பாரிஸ்வெங்கடாசல ஐயர் தெரு,
மாபூஸ்கான் தேவடி; ஜீ. டி. மதராஸ்.

REGISTERED
9-SEP 1911
MADRAS.

بسم الله

இஸ்லாம் நேசன்.

فانظر الى ما قال ولا تنظر الى من قال*

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை-2] 1911, ஆகஸ்ட் [வகை-10

அறிவிப்பு.

நண்பரவர்களுக்கு எம்முடைய அஸ்ஸலாமு அலைக்கும் உண்டாவதாக. தாங்கள் சென்றவருடம் இஸ்லாம் நேசன் இரண்டாவது தொகுதி ஆரம்பித்த காலத்தில் சந்தாத்தொகை கொடுத்திருப்பீர்களாயின், அடுத்தமாதம் 3-ம் தொகுதி ஆரம்பமாகும்போது ஒரு வருடச்சந்தாவுக்கு வி. பி. அனுப்பப்படும். சென்ற வருடத்தின் இடையில் தாங்கள் சந்தாக் கொடுத்திருப்பீர்களாயின், தங்களிடமிருந்து வந்திருக்கும் தொகையில் இதுவரையில் அனுப்பப்பட்ட பத்திரிகைகளின் கிரயத்தைக் கழித்துக்கொண்டு மிகுதியிருக்கும் பணத்தைத் தங்கள் கணக்கில் அதிக வரவு வைத்துக்கொண்டு பாக்கித் தொகைக்குமட்டும் வி. பி. அனுப்பப்படும். தங்கள் கணக்கில் முன்பாக்கி ஏற்பட்டிருந்தால் அதையும் அடுத்த வருடச் சந்தாவோடு சேர்த்து வி. பி. செய்யப்படும். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சந்தாநேயரும், சிங்கப்பூர் பினாங்கு முதலிய அன்னிய நாடுகளிலுள்ள சந்தாநேயர்களும் முன்பாக்கியையும் அடுத்த வருடச் சந்தாவையும் அடுத்த செப்டம்பர் மாதம் 10உ க்குள் முன் பணமாக அனுப்பிவிடுவார்களாயின் மிக்க நன்மையாயிருக்கும். முன்பாக்கி இல்லாதவர்கள் அடுத்த வருடச் சந்தாவைமட்டும் முன்பணமாக அனுப்புவார்களென்று நம்புகிறோம். முன்பணம் அனுப்பாதவர்களுக்கு வி. பி. செய்யப்படும்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய நாடுகளிலுள்ளவர்கள் முன்பணமனுப்புவார்களாக. இவர்களில் சிலர் முன்பாக்கி கொடுக்கும்படி ஏற்படுகிறது; அப்படிப்பட்டவர்கள் எல்லாப் பணத்தையும் அனுப்புவார்களாக. முன்பாக்கியுள்ளவர்கள் சிலர் அடுத்தடுத்துப் பணம் கேட்டும் கொடாமலிருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. பணமில்லாவிடின் பத்திரிகை செவ்வனே நடைபெறாதென்பது அவர்களுக்கே தெரியும்.

நண்பர்காள்! செப்டம்பர் மாதம் 10உ வி. பி. அனுப்பப்படும். தாங்கள் அதைத் திருப்பிவிடாமல் பெற்றுக்கொள்ளுவீர்களென்று நம்புகிறோம். வி. பி. யைத் திருப்பிவிட்டு எமக்கு அனாவசியமான நஷ்டத்தை உண்டுபண்ண மாட்டீர்களென்று உறுதி வைத்திருக்கிறோம். நாம் சென்றமாதப் பத்திரிகையில் சொன்னதுபோல் இஸ்லாம் நேசனை ஒவ்வொரு மாதம் 15உயில் வெளிப்படுத்த முடியாதுபோலிருக்கிறது. ஆனால் 10உ வெளிப்படுத்தப்படும்.

ப—ர்.

ஆங்கில அரசாட்சியாலுண்டாயிருக்கும் நன்மைகள்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

சென்ற சில நூற்றாண்டுகளாக நம் இந்திய நாட்டைத் தங்குடைக்கீழ் நிறுத்தி, அதிற் செங்கோலோச்சிவரும் ஆங்கில மன்னர்களின் தகைமையும் தண்ணளியும் இவ்வளவின என்றெடுத்துரைப்பது நம்மாலியலுங் காரியமன்று. அவர்களால் நமக்குண்டாயிருக்கும் நன்மைகளை நினைக்குந்தோறும், "செய்யாமற் செய்தவுதவிக்கு வையகமும், வானகமு மாற்ற லரிது," என்னும் அருமைத் திருக்குறள் நம் மனத்தைக் குளிர்விக்கின்றது. அவர்களாலுண்டாயிருக்கும் நன்மைகளை ஒன்றென்னலாமோ? இரண்டென்னலாமோ? ஆயிரமாயிரம் நன்மைகளை நாம் பெற்றிருக்கிறோம். இன்றுவரையில் அவர்கள் நம்முடைய சுகத்தையே தம்முடைய சுகமாகப் பாவித்துவருகின்றனர்.

நீராவிக் கலங்களாலும் இருப்புப்பாதைப் புகைரதங்களாலும் மின்சார வண்டிகளாலும் நமக்குண்டாயிருக்கும் நன்மைகளை என்னென்று சொல்வோம்? உலகத்தில் அதிக தூரத்துள்ள தேசங்களுக்குப் போக்குவரவு செய்வதும் அவற்றோடு வியாபாரம் செய்வதும் மிக்க எளிய காரியங்களாகிவிட்டன. போக்குவரவுச் சாதனங்கள் இப்போது இலகுவாயமைந்திருக்கின்றனவென்பதை யார் மறுப்பர்?

இவர்களுடைய ஆட்சியிற்றான் தபால் போக்குவரவு ஏற்பட்டன. இவ்வளவு எளிதான தபால் மார்க்கம் முற்காலத்திலிருந்ததில்லை. மிகச் சிறு தொகைக்கு எவ்வளவு தூரம் ஒரு கடிதம் போகிறது? இந்தத் தபால்மார்க்கம் ஏற்பட்டதன் பின்னர்ச் சமாசாரப் பத்திரிகைகள் உலகத்தில் தலையெடுக்க ஆரம்பித்தன. தபால் முறையாலும் சமாசாரப் பத்திரிகை முறையாலும் நாம் கோடிக்கணக்கான உதவியைப் பெறுகிறோம். இத்துணை நன்மை புரிந்தவர்களுக்கு நாம் செய்யத்தகும் கைம்மாறு என்னை?

இவ்வனைத்தினும் மேம்பட்டதும் மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத துரிதத்துடன் செல்லத்தக்கதும் பூவுலகத்தவருக்குப் பேருபகாரம் பயக்கத்தக்கதுமான மின்சாரத்தந்தியும், மின்சாரவிளக்கு முதலிய இதரசாதனங்களும் இவர்கள் காலத்தில் தோன்றியவே. மின்சாரத்தால் நாம் பெறும் பயன் சொல்லிமுடியுமளவுடைத்தோ?

நல்ல வழி நடப்புக்களும் பலமான பாலங்களும் இப்போது உண்டாயிருக்கின்றன. கப்பியினால் தளம் செய்யப்பட்ட பாதைகளும் இருப்புப்பாலங்களு மிருப்பதாலுண்டாகும் பயனை உறையிட்டேனும் சொல்லமுடியுமோ? 'மடியில் கனமிருந்தால் வழியில் பயம்' என்னும் பழமொழி பொய்த்துப்போமாறு சிறிதும் பயமில்லாமல் இப்போது ஊர்வழிச்செல்லலாம். ஆறலை கள்வர் பயம் எள்ளளவும் இல்லாமற் போயிற்று.

முற்காலத்தில் தமிழ்ச் சங்கங்களும் பிற்காலங்களில் வேறுவேறு கூட்டங்களும் சபைகளுமிருந்திருந்தும் இக்காலத்திற்போல அப்போது சர்வகலா சங்க முறையான கல்வி இருந்ததில்லை. இப்போதைய படிப்பு முன்னையைக் காட்டிலும் விசேஷமானதென்பது ஒரு சாரார் கொள்கை; அஃதன்றென்பது மற்றொரு சாரார் துணிபு. எங்ஙனமாயினும் சர்வகலாசாலைகளும், கல்லூரிக

ளும் இப்போதுள்ள முறைபோல் முன்பிருந்ததில்லை. இப்போது எவ்வருணத்தாரும் வித்தியாசமின்றிக் கல்வி பயில இடமுண்டாகிவிட்டது. இதர நாட்டார்களுடைய பாஷைகளைக் கற்பதற்கும் அவர்களுடைய குணம் நடையுடை பாவனைகளைத் தெரிந்துகொள்வதற்கும் எளியமார்க்கமுண்டாயிற்று.

இன்னமும் ஒரு பெரிய உதவியை நாமடைந்திருக்கிறோம். ஊர்தோறும் நியாயாலயங்களும் சுயஆட்சியும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. முனிஸிபல் கவர்ண்மெண்ட் என்னும் சுயஆட்சி இவர்கள் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய சௌகரியம்போல் நம்முடைய ஊர்களை வைத்துக்கொள்வதற்கு இஃதொரு முக்கிய சாதனமாயிருக்கிறது. ஊர்தோறும் போலீஸ் ஸ்டேஷன்களும் ஸிவில் கிரிமினல் நியாயசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பக்ஷபாதமில்லா நியாயம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்றது. ஜாதி மதம் வயது நிறம் முதலிய வேறுபாடுதோன்றாமல் நியாயம் செலுத்தப்பட்டுவருகிறது. "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற், கோடாமை சான்றோர்க் கணி," என்னும் குறளுக்கிணங்கச் சீரிய செங்கோலோச்சி வருகின்றனர்.

அன்பு அருள் என்னுமிரண்டற்குமுள்ள நெடுவாசியை நாம் அறிந்துணருமாறு கற்பித்தவர்கள் இவர்களென்றே ஒருவாறு சொல்லலாம். எங்ஙனமெனின், அன்பு முன்னுண்டாவது; இது சம்பந்தமுள்ளாரிடத்துண்டாகும்; அன்பு காரணமாக உண்டாகும் அளி அருளெனப்படும்; இஃது உறவில்லா அயலாரிடத்துக் காணப்படுவது. அருளென்பதெல்லாம்பிறருக்குண்டாகுந் துன்பத்தை நம்முடையதென்று கருதுவதுதான். பிறருடைய துன்பத்தை நம்முடையதென்று நினைக்கின் உடனே அவர்களுக்குண்டாயிருக்குந் துன்பத்தை நீக்கவேண்டுமென்று ஊக்கமுண்டாகும். மனிதருக்குண்டாகும் துன்பத்துள் பிணிவாய்ப்படுதலே மிகுதியும் வருத்தத்தைத் தரத்தக்கது. ஆகவே அவருக்கிருக்கும் பிணித்துன்பத்தை நீக்குவதே முதன்மையான அருளாகும். பிணியாளரின் துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டு நம்மரசாங்கத்தார் கோடிக்கணக்கான திரவியத்தைச் செலவுசெய்து தருமவைத்தியசாலைகள் திறந்திருக்கின்றனர். நம் தேசத்தில் பண்டைக்காலமுதலே ஆயுர்வேத சாஸ்திரங்கள் தழைத்தோங்கி

னும் இப்போதுள்ள வழக்கம்போல் முற்காலங்களில் தருமவைத்தியசாலைகளிருந்ததில்லை.

தருமகுண சிந்தையுள்ள நம்மரசாட்சியாரால் நாம் அடைந்திருக்கும் நன்மைகளை இத்தனையென்று எண்ணிக் கணக்கிடுதல் யாருக்கும் எளிய காரியமன்று. அவர்கள் செய்திருக்கும் நன்மைகளை நாம் மனமாரச்சிந்தித்து வாயார வாழ்த்துதலல்லாது பிறகுஎன்செய்யவல்லேம்? அவர்களுக்கு நாம் செய்பத்தக்க கைம்மாறுண்டோ? "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்றெரி வார்," என்பது சான்றோர் துணிபாயிருக்கப் பனைத்துணை நன்றியை யடைந்திருக்கும் நாம் அவர்கள் நன்மைகளை இவ்வாறு கருதவேண்டுமென்பதை அவரவரே நினைத்துக்கொள்ளவேண்டும். இத்துணை நன்மைகளையும் நமக்குச் செய்துவரும் மாட்சிமைதங்கிய அரசாங்கத்தார் முழுமுதற் கடவுளினருட்கிலக்காக வேண்டுமென்றே நாம் எந்நாளும் அல்லாகுதஆலாவைத் துதிசெய்யவேண்டும்.

இனி மற்றொரு சமயத்தில் இவ்விஷயத்தைப்பற்றி விரிவாக எழுதுவோம்.

பத்திராதிபர்.

குலாம்காதிறு நாவலர்.

அதிகாரம்-2.

(ஜூலைமாதப் பத்திரிகையின் றொடர்ச்சி.)

நமது குலாம்காதிறு நாவலர் தம்மை எவர் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் அதற்காகச் சந்தோஷத்தையாவது சஞ்சலத்தையாவது பாராட்டுவதில்லை. தம்முடைய கல்வியறிவை அபிவிருத்தி செய்துகொள்ளவும், வீண்படாடோபங்களைக் காட்டிக் கெருவித்துத் திரியும் போலிவித்துவான்களைக் கூடுமானவரையில் திருத்தவும் அவர் விரும்பினர். தம்மை எவ்விதமேனும் வித்துவானென்று வெளிப்படுத்தி விடவேண்டுமென்பது அவருடைய நோக்கமன்று. எந்த விதத்திலும் தமிழ்க்கல்வியின் உண்மையான அம்சத்தைக் காணவேண்டுமென்பதே அவருடைய விருப்பமாயிருந்தது. மகத்துவம் தங்கியஒலிகள்பிரான் ஷாஹுல்ஹமீது ஒலி

பாத்துஷா நாபகம் அவர்களுக்கு அப்போது நடைபெற்ற திருவிழாவின்போது வழக்கப்படி வெளியூர்களிலிருந்து பல கனவான்கள் நாகூரைத்தரிசிக்கப் போயிருந்தார்கள். அவர்களில் செய்னு முகம்மதுப் புலவர் என்னும் ஒருவரும் இலங்கையிலிருந்து வந்தார். இவர் இனிமையான உரத்ததொனியோடு கவிபாடக்கூடியவராயிருந்தார். நமது பாலிய குலாம்காதிறு நாவலர் இயற்றியிருந்த சில புத்தகங்களை இவர் பார்வையிட்டார். அப்போது இவர் நம்சிறிய நாவலரைப்பற்றி நாகூரில் விசாரித்து அவரை ஒரு கனவானுடைய மாளிகையில் சந்தித்தார். இவரைச்சந்திக்கு முன்பே அந்தப் புலவர் நாகூரிலுள்ள பலரால் அவருடைய இனிமையான குரலோசைக்காகப் புகழப்பெற்றும் மகாவித்துவானென்று அழைக்கப்பெற்றும் வந்ததை நாவலர் அறிந்திருந்தார். செய்னு முகம்மதுப்புலவர் நாவலரைப்பற்றி நாகூரில் மிக்க புகழ்ச்சியைக் கேளாமையால் தாமே அவரினும் சிறந்தோரென மதித்து, நமது இளநாவலரைச் சந்தித்தபோதே தமது பெருமைகளை விளக்கமுயன்றார். அவ்வேளையில் வீதிவழியே சென்றவர்களும் நின்றவர்களும் அப்புலவரைப் புகழவும் கவனிக்கவும் ஆரம்பித்தார்கள். இவ்வேளையில் நமது சரித்திர நாயகராகிய நாவலர் புன்னகையோடு தலையசைத்து நின்றார். இதனால் அப்புலவர் தம்மைமறந்து சோனாமாரிபோல் பலகவிதைகளை "மடமட" என்று வருஷிக்கத்தொடங்கினார். அதை நாவலர் சற்றுநேரம் கேட்டிருந்து, பின்பு அப்புலவரை மாளிகையின் உட்புறத்துக்கு அழைத்துச்சென்றார். அங்கே நாவலரும் புலவரும் நாவலருடைய நண்பர் இரண்டொருவரும் இருந்தனர். அப்போது நாவலர் அந்த வித்துவானை நோக்கிச்சொன்னதாவது:—

தாங்கள் நன்றாய்ப் பாடுகின்றீர்கள். தங்களுடைய பெயரும் புலவரெனச் சொல்லப்படுகிறது. தங்களிடத்திலுள்ள கல்வியினால் தாங்கள் உலகிற்குச் செய்துவரும் நன்மையுண்டேல் அதை மாத்திரம் எனக்குத் தெரிவிக்கும்படி மிகுதியும் தங்களைப் பிரார்த்திக்கின்றேன். தாங்கள் என்னிடம் தெரிவித்தமட்டில் தங்களிடத்து மிகுந்தபடி சந்தாபமே எனக்கு விளைகின்றது. எனது வார்த்தைகள் தங்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணாமலிருக்கட்டும். தாங்கள் "மடமட" என்று பாடிய (தனிப்பாடற்றிரட்டின்) பல பாடல்களும் சிற்றின்பச்சில்லரைக் கவிகளும்

தங்களை வீணரின் தலைவராக மகுடஞ்சூட்டி வைக்கப்போதுமானவை. அப்பாடல்களுக்கு இடையிடையே தாங்கள் செய்த வியாக்கியானம், தங்களை ஒருபெரிய வீணரிராஜ்யத்தை யேற்படுத்துந் திறமைசாலியாகக்காட்டிற்று. புலவரே என்மீது மனவருத்தப்படவேண்டாம். உங்களுடைய நிலைமை எதுவோ அதை உங்களின் உண்மையான நண்பனாகவும் சகோதரனாகவும் இருக்கவிரும்பும் நான் எனக்குத்தெரிந்தமட்டில் ஒளிக்காமற் சொல்லிவிட்டேன். இனி உங்களின் நன்மையைக்கோரி நான் சொல்லவேண்டிய இரண்டு வாக்கியங்களுண்டு. அவற்றை நீங்கள் ஏற்று உங்களின் ஜீவியகாலத்தில் அநுபவத்திற்கொண்டுவரும் பக்ஷத்தில் நான் உங்களுக்கு விரும்பும் நன்மையை நீங்கள் அடைவீர்களென்று நம்புகிறேன். அவ்வாக்கியங்கள்: (1) கல்வியானது மனிதனுடைய அழியாத செல்வமாதலின், அச்செல்வம் அவனுக்கும் பிறருக்கும் இம்மையிற் பயன்படல்வேண்டும். (2) கல்வியின் பயன் கடவுளைத்தொழுவதால் பூரணமாகும்; ஆதலின், அது தனக்கும் பிறருக்கும் மறுமைப்பயனையும் கூட்டுவிப்பதாயிருத்தல் வேண்டும். இவ்வாக்கியங்களை நீங்கள் நன்றாய்ச்சிந்தித்து உங்கள் ஜீவியகாலத்தில் அநுபவத்திற்குக் கொண்டுவரல் வேண்டுமென்பதே எனது மனம் நிறைந்த பிரார்த்தனை, என்பதாகும்.

இவ்வாறு நமது நாவலர் பணித்த மொழிகளையும் அவரது உண்மையும் நன்மையுமுள்ள அன்பான வசனங்களையும் கேட்ட புலவர் சினங்கொள்ளாமலும், வெட்கித் தலைகுனியாமலும் அதிக விநயமும் நன்றியறிவு முள்ளவராய், இனி அவ்வாறே தாம் தமது வாழ்நாளைப் பயன்படுத்துவதாய் நாவலரிடம் திருப்தியாக வாக்குறுதி செய்து ஒருவர்க்கொருவர் உபசாரவார்த்தைகளும் வந்தனோபசாரங்களும் வழங்கியபின் இருவரும் அங்கிபோங்கிய நேசத்தோடு பிரிந்தனர். இந்த விருத்தாந்தத்தால் நமது நாவலர் இளமையிலேயே உண்மையான கல்வியை எவ்வாறு விரும்பியிருந்தாரென்பது தெளிவாய் விளங்குகின்றது. இன்னும் இவ்விதமான பலவிருத்தாந்தங்களுண்டு.

ஒருநாள் அஷ்டசித்தி கவிராயர் என்பாரொருவர் நமது நாவலரை நாகூரில் சந்திக்கநேரிட்டது. நமது நாவலர் தோற்றத்தாலும் வார்த்தையாலும் தமது உண்மையான நிலைமையைக் காட்டத்தக்கவராயிருந்திலர். இஃது அவரைத்தரிசித்துள்ள யாவருக்

கும் தெரிந்த விஷயமேயாம். வெளித்தோற்றங்களால் மனிதரின் உண்மையான நிலைமையைத் தீர்மானித்தல் கூடாதென்பதை விளக்குவதற்கே யோர் உதாரணமாய் அவர் கடவுளால் அமைக்கப் பெற்றாரென்பது விசேஷவாக்கியமாகாது.

அஷ்டசித்தி கவிராயர் நமது நாவலரைச் சந்தித்துத் தாமியற்றியிருந்த சில செய்யுட்களை நாவலருக்குக்காட்டினார். அவைகள் ஒருபுத்தகத்தில் கையெழுத்துக்களாயிருந்தன. அந்தப்புத்தகத்தின் தலைப்பில் "அஷ்டசித்தி கவிராயரால் இயற்றப்பட்டது" என்று பெரிய எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தது. உள்ளே இரண்டொரு கவிதைகளைக் கண்ணுற்ற நாவலர் அவற்றைப் பாடியவர் யாவரென வினவினார். உடனே அந்தக்கவிராயர் தாமே இயற்றியதாய் மிகுந்த கெம்பீரமாகச்சொன்னார். அப்புத்தகம் அச்சிடத்தயாராயிருப்பதாய்த் தெரிவிக்கப்பட்டது. அதைக்கேள்வியுற்ற நாவலர் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார். அக்கவிராயர் நாவலரின் சாற்றுக்கவி வேண்டுமென்று கேட்டார். கவிராயரின் நிலைமை தமக்குத்தெரியாமையாலும் அவர்பாடிய கவிகளின் இலக்ஷணம் தமக்குத்தெரியாமையாலும் தாம் சாற்றுக்கவிகொடுத்தல் கூடாதென்று நாவலர் சொன்னார். கவிராயர் உடனே ஆவேசம் வந்தவர்போல் காளைப்பட்டுச் சாற்றுக்கவிக்கு இவ்வளவு கிராக்கியா? உமக்கு எத்தனை சாற்றுக்கவிகள் வேண்டும்? நான் தருகிறேன் என்றார். அதைக்கேட்ட நாவலர் சொன்னதாவது: "கவிராயரே உங்களுடைய தன்மைக்கு நீங்கள் என்னிடம் சாற்றுக்கவி கேட்கக்கூடாது. நீங்களோ அஷ்டசித்தி கவிராயர் என்னும் பெயரால் விளங்குகின்றீர்கள். நானோ இன்னும் வித்துவானென்று உலகில் ஒப்புக்கொள்ளப் பட்டவனாக என்னை நினைக்கவில்லை; நான் சில புத்தகங்களையியற்றி அவற்றில் என் பெயரை வெளியிட்டிருப்பது என்னுடைய கல்வியின் உண்மையை நானே முதலில் தெரிந்துகொள்ளவேண்டியதற்கேயன்றி வேறன்று. ஆதலின் இன்னும் எனக்கு அவ்விஷயத்தில் திருப்தியுண்டாகவில்லை; நீங்கள் அஷ்டசித்தியோடு விளங்குவதால் உங்கள் பதவியில் ஒருவருமில்லாத இக்காலத்தில் சாற்றுக்கவியில்லாமல் நீங்கள் புத்தகத்தை வெளியிடலாம். அல்லது நீங்களே சாற்றுக்கவி சொல்லிக்கொண்டாலும் பொருத்தமாயிருக்கும்" என்பதே.

இவ்வாறு நம் நாவலர் சொன்னவுடனே அஷ்ட சித்தி கவிராயர் இஷ்டம் நிறைவேறாமல் போய்விட்டார். நம் நாவலர் தமது யௌவன பருவத்திலேயே அநேக வித்துவான்களைக் கண்டு சம்பாஷித்தும் தருக்கித்தும் தமது அபாரமான யோக்கியதையை விருத்திசெய்துவந்தார்.

(தொடரும்.)

உ. செ. மு. காரைக்கால்.

நற்சாக்ஷிப் பத்திரம்.

சீர்வளமும் நிலவளமும் பொருந்திய மதுரையாநகரின்கண் கனம், உ. சி. ப. உ. சுல்தான் செய்யது அகமது ராவுத்தர் அவர்களின் நன்முயற்சியால் இது சனித்து இஸ்லாம் என்னும் நமது சுத்த சத்தியமார்க்கத்தின் தலைப்பெயரையும், அல்லாஃ என்னும் இஸ்மின் முதல் எழுத்தையும் அல்லாஜல்ல ஷானஹூ வதஆலா (கடவுள்) ஒருவனே என்பதற்கு அறிகுறியாயுமுள்ள அலீபு என்னும் முதல் அக்ஷரத்தையும்கொண்டு நாமஞ்சூட்டப் பெற்றதாய் வெளி உலாவித்திரிந்தது. தனக்கு வயது 'ஒன்று' பூர்த்தியானவுடன் தான் சனித்த பதியைவிடச் சிறப்புற்றோங்கிய சென்னைமாநகரின்கண் வசிப்பவரும் தனதாசானுக்கொரு நேசருமாகிய கனம், ஹக்கீம், பா. முகம்மது அப்துல்லாசாகிபு அவர்கள்பால் சென்று, மேற்படி இருவர்களையும் தன் அதிபராகக்கொண்டு, உலகப்புதினங்களையும் காலஞ்சென்ற பெரியோர்களின் சரித்திரங்களையும் நமது இஸ்லாத்தின் தத்துவங்களையும் கைத்தொழில் முதலிய பலகல்விகளையும் தன்மேல் சுமந்து, மாதமொருமுறை பலதேசங்கள்தோறுஞ் சென்று கல்விமான்களின் மடிமீது குந்தி விளையாடிக் கல்விபோதித்துக் கவலையைநீக்கும் இந்த இஸ்லாம் நேசன் பத்திரிகையை வாங்கிப்பாராதகண்ணும் கண்ணாகுமோ? படிக்கக்கேட்காத காதும் காதாகுமோ? படித்ததைப் பிறருக்குப் பகராத நாவும் நாவாகுமோ? என்பதைநாம் முக்காலும் உரைக்கப்பின்னடையோம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு,

என்று திருவள்ளுவர் கூறிய கூற்றுப்படி நல்லறிவுகளைப் படிக்கவேண்டுமென்பதை ஏன் நாம் உரத்துச்சொல்லமாட்டோம்?

கல்வியிற் சிறந்த முஸ்லிம்காள்!

நமக்குச் சொந்தமாகப் புத்தக ரூபமாய் உலகசமாசாரத்தைக்கொண்டு வெளி உலாவித்திரியும் பத்திரிகை இஃது ஒன்றே; இதை ஏனையோர்களும் எளிதில்வாங்கி வாசித்துணருமாறு பொது நல உபகாரமாய்ப் பத்திராதிபரவர்கள் பத்திரிகையின் சந்தாவை மிகக்குறைத்துத் தந்தும் பத்திரிகை விஷயத்தில் முஸ்லிங்கள் வெறுப்புற்றிருப்பது பெரும் ஆச்சரியமே!

நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

என்று குறளில் கூறியபடி நூல்களை ஆராயாதவன் எழுச்சியும் அழகும் மண்ணால் செய்த பாவைக்கொப்பாகு மென்றதை உணராதிருப்பதும் விசனத்திற்கிடமே.

நண்பர்காள் !

இதரமதஸ்தர்களின் பத்திரிகைகள் இவ்வுலகின்கண் எத்தனையோ தினம் ஒருமுறை வாரமும்முறை வாரமிருமுறை வாரமொருமுறை மாதமிருமுறை மாதமொருமுறை என்றபடி பலபத்திரிகைகள் நீடித்தகாலமாய் நடைபெற்று வருவதற்கும், நமது முஸ்லிம்களின் பத்திரிகைகள் ஒன்றுகூட நிலைநிற்காது தகர்ந்து போவதற்கும் காரணம் முஸ்லிங்களுக்குப் பத்திரிகையில் அபிமானமில்லாத குறையன்றோ?

என தன்புக்குரிய நண்பர்காள் !

தாங்கள் பத்திரிகையில் அபிமான மில்லாதிருப்பதை நாம் கவனிக்கின் தங்களுக்கு விரயமான செலவாகு மென்கிற எண்ணமுமன்று; படிக்கத்தெரியாமலுமன்று. ஆயினும் தங்களுடைய பல செலவுகளோடு சொற்பசந்தாவைக்கொடுத்து நமது இஸ்லாமிய பத்திரிகையைத் தருவித்துத் தங்கள்தங்கள் வீடுகளிலும் கடைகளிலும் எறிந்து விட்டாலும் தங்கள் புத்திரமித்திரர்கள் பள்ளிக்கூட மாணாக்கர்கள் அவகாசங்கிடைத்த நேரங்களிலாவது வாசித்தறிந்து உணர்ச்சி பெறமாட்டார்களா?

அன்றேல், தங்களின் வேலையாட்களாவது தங்களின் பொருட்டு நல்லகல்வி சமாசாரங்களைக்கற்று இன்னாரின் பொருளுதவியால் கற்றவை என்று மகிழ்ந்து திரிவாரேல் உண்மையில் தங்களைப் பத்திரிகையில் அபிமானமுள்ளவர்கள் என்று கருதுவார்களன்றோ? தங்கள்தங்கள் முயற்சியால் முஸ்லிங்களின் பத்திரிகை விலையாகிப் பத்திரிகை நிலைத்தோங்குமானால் பொதுவாக முஸ்லிம்களின் நன்முயற்சி சிறப்புற்றோங்கு மல்லவா? இன்னும் இதரமதஸ்தர்களின் சபைகளில் நம்முஸ்லிம்களின் நன்முயற்சியையும் சாதி ஒற்றுமையையும் பற்றிப்புகழ்வார்களன்றோ? பள்ளிக்கூடத்து இஸ்லாமிய மாணாக்கர்களுக்குக் கல்விவிஷயத்தில் ஊக்கமுண்டாகு மல்லவா? புத்தக ஆசிரியர்கட்கும் பத்திரிகை ஆசிரியர்கட்கும் உற்சாகமுண்டாகிக் கல்விப்பொக்கிஷத்தைத்திறந்து சொரிந்து விடுவார்களல்லவா? ஆதலின், கல்வி வெளிப்படுவதற்கும் சனங்கள் மேம்பாடு அடைவதற்கும் பத்திரிகை ஒரு கருவி என்பதை யார் மறுக்கக்கூடும்?

பிரபுக்களே !

பத்திரிகையில் அபிமானமில்லாது மவுனித்திருந்த நித்திரையை விட்டுத் தெளிந்து பத்திரிகையை ஆதரிக்கும் அபிமானமுள்ள விழிப்பை விழித்துப் பாருங்கள். முஸ்லிம்களின் பத்திரிகைகள் ஒன்றன்பின் ஒன்றாய் மறைந்து விடுவதைக் கவனியுங்கள். நம் பத்திரிகைகள், நம் சுத்தமான மார்க்கம் விருத்தியடைந்து வருவதைப்போல் நிலைத்தோங்கி நீடித்து வளர்ந்துவரும் பொருட்டு ஒவ்வொரு முஸ்லிமும் சொற்ப சந்தாவையளித்து இந்த இஸ்லாம் நேசனை ஆதரித்துவரும்படி நாம் கேட்டுக்கொள்வதை எம்மீது குறைகூறாதிருந்து கொள்வீர்களாக.

நாம் இந்த நேசனை 2 வருடமாய் வாங்கிப்பார்த்து அகமகிழ்ந்து, பத்திராதிபரவர்கட்கு எமது பூரண பக்ஷத்துடன் வந்தனஞ் செலுத்துவதுடன் 3-ம் வருஷ சந்தாவையும் முன்பணமாக அனுப்பி ஷை பத்திரிகைக்கு நன்றி செலுத்தும் நோக்கமாய்ப் புதிய சந்தா 2 சேர்த்து அனுப்பித்தந்தோம். வேண்டும். அஸ்ஸலாமு அலைக்கும்.

இங்ஙனம்:

அ. ஷெய்கு அலாவுதீன் சாகிபு
வேளாண்கண்ணிவாசி
பிறங்கு.

* * *

கண்டனையின் கண்டனை.

(கிறிஸ்தவர்களுக்கொரு நற்செய்தி என்னும் புஸ்தகத்திற்கு
மிஸ்டர் சாமுவேல் தாமஸ்நாடார் அவர்கள் எழுதிய
கண்டனையின் கண்டனை)

இஸ்லாம் நேசன் 4-வது ஸஞ்சிகை 161-ம் பக்கமுதல் 179-ம் பக்கம்வரை ஏசு கடவுளல்லரென்றும் மனிதனேயென்றும் நிலைநிறுத்தினோம். பின்னர் நண்பர் அதைப்பற்றி வாய்திறக்காவிடினும் இஸ்லாம் நேசன் 7–வது ஸஞ்சிகை முதல் நற்செய்தி 5–ம் பக்கத்திலிருந்து 7–ம் பக்கம் 4–ம் வரி வரை, சிறிது பேசிவந்திருக்கிறாராதலின் அதையும் மறுத்தொழிப்பாம்.

5. பூர்வ பக்ஷம்.

முந்தின பக்கங்களில் ஏசு சிருஷ்டிகர் என்று பார்த்தோமல்லவா? இப்போதும் நற்செய்தி ஆசிரியர் 5–ம் பக்கத்தில் வரைந்திருப்பதைச் சிறிது ஆராய்வோம். எரேமியா 31 அதி. 9, 20ல் சொல்லிய வசனங்களிற் கூறப்பட்டிருக்கும் எப்ராயீம் இஸ்ரவேலரைக் குறிக்கும். இஸ்ரவேலர் பாவம்செய்து கெட்டுப்போனாலும் தாம் அவர்களை வெகுவாய் நேசிப்பதாயும், அவர்கள் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பும்பொழுது சகல சிலாக்கியங்களையும் திரும்பப்பெற்றுக் கொள்ளுவார்களென்றுங் காட்டிச் சகல ஜாதிகளிலும் தமக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஜாதியார் என்று விளக்கத்தக்கதாய் எப்ராயீம் என்னும் பதத்தைத் தேவன் சொல்லுகிறாரேயொழிய வேறல்ல. இதை யறியாமல் எப்ராயீமுக்கும் ஏசுவுக்கும் ஒற்றுமை தேடி இக்காரணத்தால் இயேசுவின் தெய்வத்தன்மையை மறுப்பது சுத்த ஆராய்ச்சி இன்மையேயொழியவேறன்று. ஆதி 48; 20 ல் சொல்லியபடி எப்ராயீம் இஸ்ரவேலர் எல்லோருக்குள்ளும் சிறந்து விளங்கிய காரணம்பற்றி அவரையே அக்கூட்டத்தாருக்குக் குறிப்பாய்த் தேவன் பேசினார். மேலும் முன் காட்டியபடி கடவுளின் குமாரர்களென்று காட்டியவர்களெல்லாம் கடவுள் எப்படி யாவார்கள்? கடவுளுக்கு இருக்கவேண்டிய இலக்ஷணங்கள் மனுஷ்யர்களுக்கு அமையமுடியுமோ? தேவனுடைய லக்ஷணங்களாகிய சுயம்புத்துவம், சவாதீன நிலைமை, நீதிலக்ஷணங்கள், ஆவியாயிருக்கும் தன்மை, நித்தியம், மாறாமை, சர்வவியாபகம், சர்வ அறிவு, சர்வவல்லமை இவைகள் மனிதரிடம் எப்படி இருக்கக்கூடும்? எப்ராயீம் மனிதன், இயேசுவோ கடவுள். கடவுளென்று பிரித்து அர்த்தப்படுத்தின் மனிதனுடைய புத்தி யுக்திக்கு எட்டாத பரம்பொருள்.

5. சித்தாந்தம்.

நற்செய்தி ஆசிரியர், 5–ம் பக்கத்தில் எரேமியா 31 – வது அ–ம் 9, 20, வ–ம். வந்திருக்கிறபடி "ஆளுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழிநடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ளநதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதாவாக இருக்கிறேன். எப்ராயீம் என் சிரேஷ்ட புத்திரனாக இருக்கிறான். எனக்கு அருமையான குமாரனல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாகப் பேசினது முதல் அவனையே நினைத்துக்கொண்டிருக்கிறேன்; ஆகையால், என்னுள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது. அவனுக்கு உருக்கமாக இரங்குவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் எனக் கூறுவதால் எப்ராயீமே கடவுளுக்குப் பிரியமுள்ள சிரேஷ்ட குமாரராவார். அங்ஙனமாக அவரைச் சிரேஷ்டக் கடவுள் எனக் கூறுவதொழிந்து கடவுளின் பிரியத்திற் கிடம்பெறாத ஏசுவை மாத்திரம் கடவுளெனக் கூறுதல் பைபிளின் ஆராய்ச்சி யின்மையைக் காட்டுகின்றதன்றோ? என்று வரைந்திருக்கிறார். அதற்கு நண்பர் ஆதி 48, 20 ல் சொல்லியிருக்கிறபடி எப்ராயீம் இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் சிறந்து விளங்கிய காரணம்பற்றி அப்பெயர் இஸ்ரவேலரைக் குறிக்குமென்றும், சகல சாதிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜாதியார் இஸ்ரவேலரே என்று விளக்கத்தக்கதாய் எப்ராயீம் என்னும் பதத்தைத் தேவன் சொல்லுகிறாரேயொழிய வேறில்லை யென்கிறார்.

"எப்ராயீம் என் சிரேஷ்ட புத்திரனாக விருக்கிறான். எப்ராயீம் எனக்கு அருமையான குமாரனல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ?" என்று பைபிளில் வரைந்திருக்கிற வாக்கியம் எப்ராயீம் என்பவர் கடவுளுக்கு அருமையும் பிரியமுமுள்ள சிரேஷ்ட குமாரரென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிவிக்கிறதேயன்றி இஸ்ரவேலர் சகல ஜாதிகளிலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஜாதியாரென்று அது தெரிவிக்கவில்லை. "எப்

ராயீம் என் சிரேஷ்ட புத்திரனாக விருக்கிறான்" என்பதற்கு இஸ்ரவேலர் தெரிந்தெடுக்கப்பட்ட ஜாதியார் என்று அருத்தம்செய்த இவரும் இவரினத்தாரும் மத். 3, 17, "இவர் (ஏசு) என்னுடைய நேசகுமாரர்" என்று வந்திருப்பதை இஸ்ரவேலர் பிரியமுள்ள ஜாதியார் என்று அர்த்தம் செய்து அவரை மனிதரென்று தீர்க்காமல் நேசகுமாரன் என்ற வாக்கியத்தைக்கொண்டு கடவுளென்பதென்னே? ஏசு நேச குமாரனென்று வரைந்திருப்பதனிமித்தம் அந்த வாக்கியத்திற்கு இவரும் இவரினத்தாரும் நேரானபொருள் செய்வதோடுகூட அவ்வாக்கியத்திற்குப் பொருந்தாத நித்தியகுமாரன், கடவுள் என விசேஷப்பொருளும் கூறுகின்றனரே. இது கற்றவர்க்கு அழகாமா? எப்ராயீம் என் சிரேஷ்ட புத்திரனாக விருக்கிறான் என்பதற்கு இவரும் இவரினத்தாரும் ஏசுவைப்பற்றி "நேசகுமாரன்" என்று தேவன் சொல்லியிருக்கிற வாக்கியத்திற்கு விசேஷ வியாக்கியானம் செய்வதைப்போன்று செய்யாவிடினும் அதற்குள்ளபொருளை மறைக்காமலாவதிருக்கக் கூடாதா? எப்ராயீம் என் சிரேஷ்ட புத்திரனாக இருக்கிறான். என்பதற்கு நேரான பொருள் செய்யாமல் தவறாய்ப் பொருள்செய்து மதியிலிகளை மயக்கப் பார்ப்பது நண்பர்க்கு அழகன்று. இனியேனும் நண்பர் எப்ராயீம் கடவுளுடைய சிரேஷ்ட புத்திரன் என்பதை ஒழித்து உரையாது உண்மையை யுணர்ந்து அடங்குவாராக.

இஸ்ரவேல் என்ற பெயருக்கு ஆதிகாரணனாய் (ஆதி 36, 10 இப்பொழுது உன்பெயர் யாக்கோப்பு என்னப்படாமல் இஸ்ரவேல் என்று உனக்குப் பெயர் விளங்குமென்று அவனுக்கு இஸ்ரவேல் என்று பெயரிட்டார்.) விளங்கி நின்றவன் யாக்கோப்பானதால் இஸ்ரவேலரைக் குறிக்க எப்ராயீமே வழங்கவேண்டியதில்லை. இந்த இஸ்ரவேலர் என்னும் பெயரைத் தேவன் எப்ராயீமுக்குக் கொடுக்காமல் தேவனை மேற்கொண்டு (ஆதி 32, 24, யாக்கோப்புப் பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் (தேவன்) பொழுதுவிடியுமளவும் அவனுடனே போராடி அவனை மேற்கொள்ளாததைக்கண்டு அவனுடைய தொடைச்சந்தைத்தொட்டார். அதனால் அவருடனே போராடுகையில் யாக்கோப்பின்

தொடைச்சந்து * சுளுக்கிற்று. அவர் நான் போகட்டும்; பொழுது விடிகிறதென்றார். அதற்கு அவன் நீர் § ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான். அவர், உன் பெயரென்ன? என்று கேட்டார். யாக்கோப்பு என்றான். அப்பொழுது அவர் உன் பெயர் யாக்கோப்பு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும். தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்.)

---

* தேவனுடைய தொடைச்சந்தில் யாக்கோப்பு ஒரு சிறிய குத்துவிட்டிருந்தால், தேவனுடைய கதி என்னவாகுமோ? அந்தோ பரிதாபம்! தேவன் யாக்கோப்பினிடம் அகப்பட்டு விழித்துக்கொண்டிருப்பதை நினைக்குந்தோறும் பெரு நகைப்பு விளைகிறது.

§ யாக்கோப்பு ஆசீர்வதித்தாலொழிய உம்மைப்போக விடேனென்று வரைந்திருப்பதை ஆபத்தான வேளையில் அவர் (தேவன்) தனக்கு நன்மைசெய்யக்கூடியவரென்பதைக்கண்டு அவரிடத்தில் ஆசீர்வாதம் தேடினானென்று ஆதி ஆகம வியாக்கியானத்தில் கண்டிருப்பது தப்பாகும். தேவனும் யாக்கோப்பும் போராடுகையில் தேவன் யாக்கோப்பின் தொடையிலுள்ள நரம்பின் மர்மஸ்தானத்தில் தொட்டு அவனை விட்டுத்தப்பித்துக்கொள்ள வழிபார்த்தும் முடியாமல் அவனுடைய விடையை யெதிர்பார்க்கும்படி செய்த யாக்கோப்பு, தேவனைவிடத் தாழ்ந்தவனாய்த் தன்னைக் கருதி வாழ்த்தும்படி கேட்கவில்லை. பின்னையாக்கோப்புப்பொழுது விடியுமளவும் போராடித் தேவனைத் தோல்வியடையச் செய்தபின்னர், தேவன் நான் போகட்டும் பொழுதுவிடிகிறது என்று அவனிடம் தாழ்மையாய்க்கேட்டு நின்றதற்குத்தான் தேவனைத் தோற்கடித்ததற்காக அவரிடமிருந்து வெகுமதிபெறவேண்டி. அவன் உம்மை ஜெயித்தேன் என்று என்னை (ஆசீர்வதித்தல்) வாழ்த்தும். அப்போது தான் போகவிடுவேனென்றான். அதற்குத்தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே யென்று அவன் வலியின் பெருமையையுள்ளபடி சொல்லிவிட்டுப் போகவும் விடைபெற்றார். ஆகவே இங்கு ஆசீர்வதித்தலென்பது யாக்கோப்பினுடைய வலியின் பெருமையை வாழ்த்துதலாம்.

அவரை வதைக்காமல் இரக்ஷித்ததின் நிமித்தம் யாக்கோப்புக்குக் கொடுத்திருப்பதால் இஸ்ரவேலரைக் குறிப்பிக்கத்தேவன் எப்ராயீமைவழங்கவேண்டியதில்லை. நண்பர் மேற்கோளாகக்காட்டியிருக்கிற ஆதி 48, 20-ல் வரைந்திருக்கிற வாக்கியத்தில் யாக்கோப்பு எப்ராயீமை இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்களென்று ஆசீர்வதித்திருப்பதினாலே எப்ராயீம் இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் சிறந்து விளங்கிய காரணம்பற்றி அவரையே அக்கூட்டத்தாருக்குக் குறிப்பாய்த்தேவன் பேசினாரென்றார். நாம் மேலே வரைந்தவாறு இஸ்ரவேல் என்பதற்கு ஆதிகாரணனாயிருந்தவர் யாக்கோப்பேயாதலாலும்எப்ராயீம் இஸ்ரவேலின் (எபி. எ. கா.) அனுக்கிரகத்தைப் பெற்ற சிறியோனாதலாலும் இஸ்ரவேலரைக் குறிக்க யாக்கோப்புத் தகுந்தவரேயன்றி எப்ராயீம் தகுந்தவரல்லராம். ஆகவே இஸ்ரவேலரைக்குறிக்க எப்ராயீமே வழங்கவேண்டியதன்று. தேவனைத் தோல்வியடையச் செய்த மஹாப்பெரிய தேவனாகிய யாக்கோப்பினிடமிருந்து அநுக்கிரகம் பெற்றகாரணம்பற்றித் தேவனும் எப்ராயீமை எல்லாக்குமாரருக்கும் மேலாய் என் சிரேஷ்டகுமாரன் அருமைக்குமாரன் எனமொழிந்தாரென்க. ஆகவே, எப்ராயீம் சிரேஷ்ட குமாரராயிருக்கின்றமைபற்றி அவரை நண்பர் சிரேஷ்டகடவுளெனக்கூற வாய் கூசாதிருப்பாராக.

சிரேஷ்டகுமாரரான எப்ராயீம் சிரேஷ்ட கடவுளாகாதபோது சாதாரணகுமாரரான ஏசுவும் கடவுளன்றாம். பின்னை மனிதனேயாம்.

இஸ்ரவேலரை நண்பர் தெரிந்தெடுக்கப்பட்ட ஜாதியார் என்கிறார். அஃதாவது, இஸ்ரவேலர் உயர்ந்தஜாதியும் ஏனையோர் தாழ்ந்த ஜாதியுமாம். எரேமியா 13-அதி 10-வது வசனம்:—என்வார்த்தைகளைக் கேட்கமாட்டோமென்று மறுத்துத் தங்களிருதயத்தின் கடினத்தின்படி நடந்து அன்னிய தேவர்களைச்சேவிக்கவும் அவர்களைப்பணிந்து கொள்ளவும் அவர்களைப் பின்பற்றுகிற இந்த (இஸ்ரவேலுக்கு)ப் பொல்லாத ஜனங்கள் ஒன்றுக்கு முதவாமற்போன இந்தக்கச்சையைப் போலாவார்களென்று கருத்தர் சொல்லுகிறார். 14-வசனம்: பிதாக்களும் பிள்ளைகளுமாகிய அவர்களையொருவர்மேல் ஒருவர் மோதி விழும்படி பண்ணுவேனென்று கருத்தர் சொல்லுகிறார். நான் அவர்களை யழிப்பதேயன்றி மன்னிப்பதுமில்லை; தப்பவிடுவதுமில்லை; என்று கருத்தர் சொல்லுகிறார் என்றுசொல் என்னும் வாக்கியம் இஸ்ரவேலரை விடத்தாழ்ந்த ஜாதியார் ஒருவர் உளரோ என்று காட்டுகிறதல்லவா? அப்படியிருக்கும்போது இஸ்ரவேல் ஜாதியாரைத் தெரிந்தெடுக்கப்பட்ட உயர்ந்த ஜாதியார் என்பது ஒருபோழ்தும் அடாது. இந்துக்களுக்குள் பல பிரிவினர் இருக்கின்றமைபற்றி அன்னோரை வாய்சலிக்க இவரினத்தார் திட்டுகின்றனரே. ஆதாம் ஏவாள் இவ்விருவர்களின் சந்ததியாரான மனிதர்களுக்குள் உயர்ந்த வகுப்பும் தாழ்ந்தவகுப்பும் உளதோ என்று சங்கிக்கும் வகுப்பாரைச் சேர்ந்த நண்பர் இஸ்ரவேலர் மட்டும் தெரிந்தெடுக்கப்பட்ட (உயர்ந்த) ஜாதியார் என்று அன்னவரை உயர்த்திக்கூறுதல் ஒழுங்காமா? இதனால் கிரிஸ்துவர்கள் ஒரு நிலைமையினின்று பேசுந்திறத்தவரல்லரென்பது நன்குவெளியாம்.

யதார்த்தவாதி.

மறுபிறப்பு.

ஒரு மறுப்புரை யுபந்யாசம்.

353-வது பக்கத்தொடர்ச்சி.

ஆத்மாக்கள் முன் பிறப்புக்களை உடைத்தா யிருந்ததற்கு ருஜு என்னவென்று நீங்கள் ஓர் ஆரியரைக் கேட்டால், உடனே அவர், தற்காலத்தில் காணப்படும் பேதம் பூர்வகருமங்களால் உண்டானதென்று விடையளிப்பார். தற்காலத்தில் காணப்படும் பேதம் எதனாலுண்டாயிற்று என்று கேட்பீரானால் அவர் முன் சொன்னதையே திரும்பச்சொல்லி, அது பூர்வ ஜன்மங்களில் செய்த செய்கைகளின் பலனுமென்று கூறுவார். இந்தக் குதர்க்கம் வெகு தெளிவாகவுள்ளது. அது சுற்றிச் சுற்றிவரும் நியாயவாதமாகவுள்ளது.

ஆரியர்களின் முறையை அனுசரித்தே நாமும் மானிட ஞானம் அனுபவம் இவைகளைக்கொண்டு நியாயவாதம் புரிந்திருக்கின்றோம்; ஆனால் நியாயமாகக் கூறவேண்டுமானால் நமக்குள்ள குறுகிய ஞானத்தைக் கொண்டு இவ்விதமான ரகஸ்ய விஷயங்களை விவரிக்கமுடியாது. அவைகள் நமது புத்திக்கெட்டாதனவாம். இந்தச் சந்தர்ப்பத்தில் தற்கால சிரேஷ்ட தார்க்கீகர்களுள் ஒருவரு

டைய அபிப்பிராயத்தைக் குறிப்பிடுவது இன்பம் பயக்கும். ஜெவன்ஸ் ஆசிரியர் எழுதுவதாவது:—காலவரையறைக்கு உட்பட்ட அனுபவமானது பிரயோசனத்திலிருக்கும் சக்திகளைப்பற்றிப் பூர்ணமான அறிவைக்கொடுக்கமாட்டாது. உலகம் முழுவதும் ஒரு மொத்தமாக நிலைமாறாமல் போவதாகவும் வைத்துக்கொள்ளும் பக்ஷத்தில், இரண்டு விதத்தில் நமக்கு அதிசயம் ஏற்படுகின்றது. உலகமுழுவதையும் ஒரு மொத்தமாக நாம் உண்மையில் அறிந்து கொள்ளவில்லை. அதன் அளவு கடந்த பரப்பில் ஒரு மூலையையும், அளவுகடந்து காலவரையறையில் ஒரு நிமிஷத்தையுமே நாம் அறிவோம். உலகத்தின் அமைப்பைப்பற்றியோ, தார்க்கீகனாவது பௌதிக சாஸ்திரஜ்ஞனாவது ஒன்றும் சொல்வதற்கில்லை. உலகசிருஷ்டியானது எல்லா அனுபவத்துக்கும் ஞானத்துக்கும் எட்டாத செய்கையாக விருக்கவேண்டியதனால் அதைப்போலவே அவ்வுலகக்கில் உண்டாகும் யாதொரு மாறுதலும் அல்லது அவ்வுலகின் முடிவும் நம்முடைய மானஸ சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களாகவே இருக்கவேண்டும். அவ்விஷயத்தைப்பற்றிச் சாஸ்திரமாவது யுக்திவாதமாவது உறுதியுள்ளதாக விருப்பதற்கியலாது. ஏனெனின், அனுபவமில்லாமல் போனால் நாம் அறிவைப்பெறுவதற்கு வேண்டிய ஆதாரத்தையும் சாதனங்களையும் பெற்றவராகமாட்டோம்.'' என்பதே.

அக்கொள்கையை அனுசரித்தேஇன்றும் ஒரே ஒரு வார்த்தை மட்டும் தான் நான் பேசுவதாக விருக்கிறேன். இக்கொள்கையில் நான் கவனித்த நல்லவிஷயம் ஒன்று என்னவெனின், அது மானிட இருதயத்தில்சற்று தயையைக் கிளப்பிவிடுவது தான். மனிதர்களுக்குக் குரூரம் செய்வது எவ்வளவு பாபமோ அதைக்காட்டிலும் தாழ்ந்த பிராணிகளுக்குக் குரூரம் செய்வது குறைந்ததன்று. கோடிக்கணக்காகப் பிராணிகள்பூததயையின்றிக்கொலைசெய்யப்படுவது சாதாரணமாகவே சாந்தகுணமுள்ள ஹிந்துக்களின் மனத்தில் தயையை யுண்டாக்கியிருக்கவேண்டும். அப்பிராணிகள் அவர்களுடைய உற்றார் உறவினர் என்று சொல்லப்பட்டால் அப்படி யுண்டான தயை முன்னிலும் அதிகமாகும். ஆனால் அப்படிப்பட்ட பிராணிகளின் சிறைத்தண்டனையை நீடிக்கச் செய்வதா? அல்லது மறுபிறப்புக்கொள்கையில் நம்பிக்கையற்ற மாமிசபக்ஷணிகள் கண்டுபிடித்திருக்கிற மாதிரிகளில்ஒன்றினால் (அஃதாவது, அவைகளால் தங்கள் வயிறுகளை நிரப்பிக்கொண்டு, அதேகாலத்தில் அந்த ஏழைப் பிராணிகளுக்கு நித்திய முக்தியைக்கொடுப்பது) அவைகளின் உயிரைப்போக்கிவிடுவதா? இவ்விரண்டில் எது உண்மையில் தயையுள்ளதென்பதையும் எது யுக்திக்கு ஒத்ததென்பதையும் நீங்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டுமென்று நான் விட்டுவிடவேண்டும்.

முற்றிற்று.

ஜலாலுத்தீன்.

தத்துவ இஸ்லாம்.

(361-ம் பக்கத் தொடர்ச்சி.)

“அமெரிக்காவில் எவ்வாறு இஸ்லாத்தை நிலை நாட்டப்போகிறீர்?'' என்று பன்முறைகேட்கப்பட்டிருக்கிறேன். அவ்விஷயத்தில் எனக்கு மட்டுந்தான் கவலை கடவுளுக்குக் கவலையில்லை போலும்! எனது நாட்டு ஜனங்கள் அபிவிருத்தியிலும், புத்திசாமர்த்தியத்திலும் வெகுவாக முதன்மை யடைந்துள்ளவராதலால், இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு பின்பற்றமாட்டார்களென்றும் அதனால் இஸ்லாமிய காரியம் அமெரிக்காவில் ஜயமடைவது சந்தேகமென்றும் சிலர் சொல்கின்றனர். இஸ்லாம் மார்க்கத்தின் உண்மைக்கொள்கைகளை நன்றாகத்தெரிந்து கொள்ளாததினாலேயே இந்தச் சந்தேகம் ஜனிக்கின்றது. சரியானபடிகொடுக்கப்பட்டால் இஸ்லாம் மார்க்கத்தைஅமெரிக்கர்கள்ஏற்றுக்கொள்வார்களென்று நான் நம்புவதற்குள்ள காரணங்களில், அவர்கள் சாமர்த்திய சாலிகளாகவும், புரோ விருத்தியடைந்தவர்களாகவும் இருப்பது ஒன்றாகும். அஜ்ஞானிகள், மூடபக்தியுள்ளவர்கள், கொஞ்சம் அபிவிருத்தியடைந்த ஜனங்கள், இவர்களுடைய மனத்துக்குத்தான் இஸ்லாமிய முறை ஏற்றது என்னும் அபிப்பிராயம் வெகு பிழையானது. ஒரே நித்திய உண்மை அதுதான்; மனிதனுடைய யுக்திவாதத்துக்கு அஃது ஒத்திருப்பது மட்டுமன்று; மேலான நன்னிலைமையை யடைய விரும்பும் ஆத்மாவுக்கும் அது திருப்தியைக் கொடுக்கின்றது.

பம்பாயில் ஒரு சந்தேகி, “ஆனால், அமெரிக்கர்கள் தினந்தோறும் ஐந்து தரம் தொழுது, பட்டினி விரதமிருந்து, வெகு நா

யகிவாரணத்தையும், "கோஷா" முறையையும் அங்கீகரித்து, கீழ்த்திசையில் முகம்மதியர்கள் செய்யும் ஒவ்வொன்றையும் செய்வார்களென நீர் எதிர் பார்க்கிறீரா?" என்று கேட்டான்.

யுக்திக்கு ஏற்றவையும் நல்லவையுமான விஷயங்களைக் கிரகித்துச் சிலாகிக்கக்கூடிய சமமான மனமுடையவர்கள் ஆயிரக்கணக்காக அமெரிக்காவில் இருக்கிறார்களென்று நான் அறிவேன். இந்தியாவிலேனும், உலகத்தின் மற்றைப் பாகத்தில் எங்கேனும் சர்வ வல்லமையுள்ள கடவுளின் சக்தியும் செல்வாக்கும் பலமாக விருப்பதைப் போலவே அமெரிக்காவிலும் பலமாகவிருக்குமென்று நினைக்கிறேன்.

இஸ்லாம் மார்க்கத்தை எவ்வளவு தெளிவாகவும் ஒழுங்காகவும் காட்டக்கூடுமோ அவ்விதமாகவே அதை ஜனங்களுக்குக் காட்ட உத்தேசிக்கிறோம். அது நடையிடுவதினால் வரும்பயன்களைக் கடவுளுக்கு விட்டுவிடுவோம். கீழ்த்திசையில் வழங்கிவரும் "கோஷா" முறையையும் வெகு நாயகிவரணத்தையும்பற்றிய அனுபவ விஷயங்கள் எனக்கு நன்றாகத் தெரிந்திராதபடியால், அவைகள் உண்மையான இஸ்லாமிய கொள்கைக்குப் பொருத்தமாக அனுஷ்டிக்கப்படுகின்றனவா அல்லவா என்று என்னால் சொல்லக்கூடவில்லை. அவைகள் நியாயமாகவும் ஒழுங்காகவும் அனுஷ்டிக்கப்படாவிட்டால், நற்பயனைக் கொடுக்கமாட்டா. ஆனால் திரைமுறையையும் வெகு நாயகிவரணத்தையும் ஒழுங்காகவும் யுக்திக்கு ஏற்றவாறாகவும் எங்களுடைய ஜனஸமூக வாழ்க்கையில் கொண்டுவந்தால் அதில் இப்போது நிரம்பியுள்ள தீங்குகளுக்கெல்லாம் அவைகளே தாம் சரியான ஒரே பரிகாரமாமென்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம். விபசாரித்தனம், வைவாகிக துரோகம், மதுபானம் முதலான துன்மார்க்கங்களெல்லாம் நாடெங்கும் பரவியிருக்கின்றன. வைதீக கிரிஸ்தவ மார்க்கமும் வைதீக கிரிஸ்தவ சட்டங்களும் இவைகளோடு நூறுவருஷங்கள் போராடின போதிலும் இவைகள் இன்னும் நின்றபாடின்றி அதிகரித்தவண்ணமாகவே யிருக்கின்றன. இனி, எங்களுடைய ஜனஸமூக வாழ்க்கையை அரித்துத்தின்கிற பாபமாகிற ராக்ஷதர்களை அப்புறப்படுத்துவதற்கு இஸ்லாமும் இஸ்லாமிய விதிகளும் பரீக்ஷை செய்யப்படவேண்டுமென்று நினைக்கிறேன்.

இன்னும் ஐந்து வருஷங்களுக்குள் அமெரிக்காவில் ஜனஸங்கியையில் வெகு அதிகமானதும், உண்மையும் ஊக்கமுமுள்ள முஸ்லிம்களாலானதுமான முஸ்லிம் சகோதர சங்கமொன்று இதுவரையில் உலகம் கண்டிருக்கக்கூடியவாறு தோன்றிச் செழிக்குமென நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன்.

சென்ற பத்துவருஷங்களாக எனது நாட்டில் நடையாடிவரும் மார்க்கஅபிப்பிராயத்தின் முறையை நான், வெகு கவனமாகச் சவுகரியமான விடத்தில் நின்றுகொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறேன். புத்திசாமர்த்தியம் வாய்ந்த ஜனங்கள் கிரிஸ்தவ மார்க்கத்தைக் கைவிட்டுவிட்டு சுபேச்சா சங்கங்களென்றும், சன்மார்க்க அபிவிருத்திசங்கங்களென்றும், ஜாதிபேதமில்லாச் சங்கங்களென்றும் அநேகவிதமாக ஏற்படுத்திக்கொண்டு, ஆத்ம உண்மையை நாடுவதையே நோக்கமாகக்கொள்வதைக் கண்டிருக்கிறேன். இவர்களைத்தவிர, யாதொரு மார்க்கத்தையும் பின்பற்றாத ஆத்மவாதிகள் பிரமக்ஞானசங்கத்தார் முதலிய சிறுவகுப்புக்கள் பலவுள்ளன. பின்னும் ஏகேசுவர மதவாதிகளும் இருக்கின்றார்கள். இவர்கள் இஸ்லாம் மார்க்கம் இன்னதென்பதை வாஸ்தவத்தில் தெரிந்துகொண்டவுடன் அதைக் கைப்பற்றுவார்களென்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

விடுகவி வினா.

சிந்து.

தானதனத் தானதனத் தானதனத் தானதன
தானதனத் தானதனத் தான.

கண்ணிகள்.

செந்தமிழ்ச்சுட் டெழுத்துறுப் பொன்றுபொருட் பெயரொன்று
  தேவர்கோமான் பெயர்தனி லொன்று
சுந்தரத்தீ வொன்றுநேசன் பெயரொன்று சிங்கமெனச்
  சொல்லுமபி தானமதி லொன்று
சந்ததம் புகழ்பரவுஞ் சென்னபட்ட ணப்பேரொன்று
  தாமதிரு மகள்பெய ரொன்று
மந்திரஞ்சொல் பார்வதியின் பெயரொன்று மரமொன்று
  மஹம்மதியர் வேதப்பே ரொன்று (தானத)

வாசமுல்லைக் கொடிப்பெய ரொன்றுமந்தி ரத்திலொன்று
　　மன்னவர்கள் சேனையின்பே ரொன்று
ராஜரீக நன்னீதிப்பே ரொன்றுமின்னற் பெயரொன்று
　　ஞாலமிசைப் பஞ்சலோகத் தொன்று
சாசன வியப்பிடைச்சொற் பெயரொன்று மகிழ்வுடன்
　　சந்ததம்வாழ் தலின்பெய ரொன்று
தேசிக மிகுந்தசல நிதிப்பெய ரொன்றிதனைச்
　　செப்புதற்கு மூன்றெழுத்துப் போம். (தானத)

மங்களவிப் பொருள்தெரிந் தவைநடு வினிலுள்ள
　　வண்மையட்ச ரங்களை யெடுத்துப்
பங்கமின்றி வரிசைக் கிரமமாக வேயெழுதிப்
　　படிமீதி னில்வாசித்துப் பார்க்கச்
சங்கைதரும் [இஸ்லாம் நேசன் பத்திராதி பர்]இப்புவி
　　தன்னில்[நீடும் வாழ்க]வென வோது
துங்கதமிழ் வாணர்க ளிதன்பொரு ளறிந்துவிடை
　　சொல்லுவீர் மிகமகிழ்வு கூர்ந்தே. (தானத)

மௌனகுரு.

சங்கப்பரீக்ஷையும் தங்கப்பதக்கமும்.

சென்ற ஏப்ரில் மாதத்தில் மதுரைத்தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்பட்ட ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷையில் பா. தாவூத்ஷா என்னும் முஸ்லிம் மாணவர் பி. ஏ. பரீக்ஷையில் முதலாகத்தேறியிருக்கிறார்; இவருக்கு அச்சங்கத்தாரால் இவருடைய யோக்கியதையின் அறிகுறியாக 50 ரூபா பெறுமான தங்கப்பதக்கமொன்று சன்மான மளிக்கப்படும். இதுவரையில் ஒரு முஸ்லிம் மாணவனும் அச்சங்கத்தாருடைய பரீக்ஷையில் முதலாகத்தேறிப் பரிசு பெற்றதில்லை; தாவூத்ஷா என்பவரே முதன்முதல் சங்கத்தாருடைய சன்மானத்தைப் பெறும்படியான கௌரவத்தை அடைந்திருக்கிறார். இதற்காக நாம் மிகுதியாகச் சந்தோஷிக்கிறோம். இவர் இப்பொழுதுதான் இச்சங்கத்தாருடைய சன்மானத்தை முதன் முதல் பெறப்போகிறாரென்று நினைக்கவேண்டாம்; இதற்கு முன் இரண்டு முறை இச்சங்கத்தில் பரிசுபெற்றிருக்கிறார். இவர் எப்பொழுதும் தமிழில் தேர்ந்த ஞானமுடையவராகவே இருந்திருக்கிறார்.

இம்முஸ்லிம் மாணவருக்குத் தமிழிலிருக்கும் அபிருசியைக் காட்டும் பொருட்டு இங்கே இவருடைய சரித்திரத்தைச் சிறிது எழுதுவோம். இவர், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள கும்பகோணத்துக்குக்கிழக்கே ஆறுமயில் தூரத்திலிருக்கும் நறையூர் என்னும் கிராமத்தில் பிறந்தவர். சிறு பிராயத்திலேயே அவ்வூரிலுள்ள மதுரஸாவில் சேர்ந்து தம்முடைய மதக்கல்வியைப் பூர்த்திசெய்து கொண்டார். அதன் பின்னர் அங்குள்ள பிரைமெரிப்பாடசாலையில் ஆராவமுதையங்காரவர்களிடம் ஆங்கிலமும் தமிழும் பயின்றுவந்தார். ஆராவமுதையங்கார் சிறிது கோபமும் கடுமையுமுள்ளவர்; ஆனால், சிறுவர்களுக்குக் கல்விபயிற்றுவதில் மிக்க தேர்ச்சியுடையவர். தாவூத்ஷா என்பவர் அதிகபயந்த சுபாவமும் கடமையை முடிக்கும் பிடிவாதமுமுள்ளவராயிருந்தமையின், ஆராவமுதையங்காருடைய கோபத்தைச் சகிக்கமுடியாதவராய்த் தம்முடைய பாடங்களையெல்லாம் மனப்பாடம் செய்துவிடுவார். இவ்வாறு மனப்பாடம் செய்யும்பழக்கம் அதிகரித்தபடியால் கல்வியிலும் இவருக்கு விருப்பம் மிகுந்துவரத் தலைப்பட்டது. ஆனால், மற்றப்பாடங்களைக்காட்டிலும் தமிழில் அதிகப் பிரீதியுண்டாயிற்று. பிரைமெரி வகுப்பில் படிக்கும்போது இலக்கணப்பாடம், இலக்கியத்திலுள்ள வசனம் செய்யுள் ஆகிய பாடங்கள் இவைகளெல்லாம் மனப்பாடம் செய்யப்படும். மூதுரை, வாக்குண்டாம் முதலிய நூல்களையும், சிறு இலக்கணங்களையும் மனப்பாடம் செய்ததோடு, “சந்திரகாசன்கதை” “வீண்பெருமைபொழித்தலைக்காட்டிய குறவன் சரித்திரம்”, “ராபின்சன் குரூசோ” என்னும் வசனங்களையும் உருவேற்றிவிட்டார். பிரைமெரிப் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறிப் பிறகு கும்பகோணம் நேட்டிவ் ஹைஸ்கூலில் உயர்தரக்கல்வி பயின்றுவந்தார். அப்பொழுது, “மகாலிங்க ஐயர் இலக்கண”த்தை வாய்ப்பாடம் செய்திருந்தார். ஹிந்துமாணவர்கள் எல்லோரைக்காட்டிலும் இவர் தமிழில் விற்பத்தியுடையவராயிருந்தார். அக்காலத்திலேயே இவருக்கிருந்த தமிழ் ஞானத்தைப்பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருந்தார்கள். நேட்டிவ்ஹைஸ்கூலில் இவருக்குத் தமிழ்க்கற்றுக் கொடுத்தவர், இப்போது கும்பகோணம் கவர்ண்மெண்ட் காலேஜில் தமிழ்வித்

துவானாக உத்தியோகம் பார்க்கும் பிர்மஸ்ரீ மணலூர், வீ. இராமானுஜா சாரியர் அவர்களே. இவர்கள் மஹாமஹோபாத்தியாயர் பிர்மஸ்ரீ உ. வே. சுவாமிநாத ஐயரவர்களின் பிரதமசிஷ்யராவர். இப்படிப்பட்ட வித்துவானிடத்தில் தமிழ்ப்பயின்று வந்ததனால் தாஜூத்ஷாவுக்கு மேன்மேலும் விருத்தியுண்டாயிற்று.

மெற்றிகுலேஷன் வகுப்பில் படிக்கும்போது நன்னூல் முழுதும் பாடம்பண்ணியிருந்தார். ம. வீ. இராமானுஜா சாரியவர்களுக்கு இலக்கணத்தில் நுண்ணறிவுண்டு; ஆதலின், அவர்களுடைய மாணவராகிய இம்முஸ்லிம் வாலிபருக்கும் இலக்கண ஞானம் மிகுதியாயுண்டு. மெற்றிகுலேஷன் பரீக்ஷைக்குப்போகும்போது தமிழில் அவ்வகுப்பில் தம்மை ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கினார்.

இது நிற்க. அக்காலத்தில் மதுரைமாநகரில் தமிழ்ச்சங்கம் எற்படுத்தப்பட்டது; இச்சங்கத்தார் தமிழ்க்கல்வியை அபிவிருத்திசெய்யும் பொருட்டு அநேகம் எற்பாடுகள் செய்யபத்தனித்தார்கள். அவற்றுள் ஒன்று, ஆங்கில கலாசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கும் தமிழில் அபிருசியுண்டாகும் பொருட்டுச் செய்த எற்பாடு. இவ் எற்பாடாவது, சென்னைச் சர்வ கலாசங்கத்தாரால் மெற்றிகுலேஷன், எப். எ., பி. எ. பரீக்ஷைகளுக்குப் பாடமாக எற்படுத்தப்படும் தமிழ்ப்பாட புத்தகங்களில் அந்த அந்த வகுப்புக்குப் பரீக்ஷைசெய்து முதல் ஐவருக்குச் சன்மானம் கொடுப்பதாகச் செய்ததே. பரீக்ஷையில் தேறிய எல்லோருக்கும் போக்கியதா பத்திரமும் முதல் ஐந்துபேர்களுக்கு மட்டும் பரிசும் கொடுத்துவருகிறார்கள்.

நம்முடைய தாஜூத்ஷா மெற்றிகுலேஷனில் முதல் வகுப்பில் தேறி 25 ரூபா சன்மானம் பெற்றார். பிறகு எப். எ. பரீக்ஷையிலும் முதல் வகுப்பில் தேறி 35 ரூபா பரிசுபெற்றார். இவர் பி. எ. வகுப்பில் படிக்கும்போது சென்னை இராஜதானிக்கலாசாலையில் மஹாமஹோபாத்தியாயர் பிர்மஸ்ரீ உ. வே. சுவாமிநாத ஐயரவர்களிடம் தமிழ்ப்பயின்று வந்தார். பி. எ. பரீக்ஷைக்குப் போகும்போது இவருக்கு நன்னூல் விருத்தியுரை முழுதும் பாடம் உண்டு. சென்ற எப்ரில் மாதத்தில் நடந்தேறிய பி. எ. தமிழ்ச்சங்கப்பரீக்ஷையில் முதல் வகுப்பில் எல்லோருக்கும் முதலாகத் தேறியிருக்கிறார்.

நம்முடைய முஸ்லிம் வர்க்கத்தில் இவ்வாறு ஒருவர் தேறியிருப்பது நமக்கெல்லாம் பெருமையன்றோ? முஸ்லிம்கள் கல்வி அபிவிருத்தியில் பின்னிட்டவர்களென்று உலகத்தார் சொல்லிக்கொண்டிருந்தாலும் இடை இடையே ஒவ்வொரு முஸ்லிம் ஹிந்துக்களைக் காட்டிலும் விசேஷ புத்தியுள்ளவராகத் தோன்றிக்கொண்டேயிருக்கிறார். காலம் சென்ற சையது அலி பில்கிராமி அவர்கள் சமஸ்கிருத பாஷையில் அதிபாண்டித்திய முள்ளவராயிருந்தாரென்று முன்னமே சொன்னோம். சில வருஷங்களுக்கு முன் பி. யல். பரீக்ஷையில் ஒருமுஸ்லிம் இச்சென்னையில் எல்லோருக்கும் முதலாவதாகத் தேறினார். ஆனால், இப்படி ஒவ்வொரு சமயத்தில் முஸ்லிம்கள் நன்றாகத்தேறுவதை வைத்துக்கொண்டு நாம் வீண்பெருமை பாராட்டக்கூடாது. நம்முஸ்லிம்களுக்கு மார்க்கக்கல்வி மிகுந்திருந்தபோதிலும் இகலோக சம்பந்தமான கல்வி அவர்களுக்குப் போதாதென்றே சொல்லுவோம். இப்போதிருப்பதைக்காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமாக நம்மவர்கள் ஆங்கிலமும் தமிழும் கற்கவேண்டும். பரலோகத்தை யுத்தேசித்து இகலோகத்தை வெறுத்துவிட வேண்டுமென்று அல்குர்' ஆனும் சொல்லவில்லை; அன்பியா நாயகமும் அருளவில்லை. முஸ்லிம் சகோதரர்களே! நாம் இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ளவேண்டிய நிலையிலேயே யிருக்கிறோம். இது பக்ஷபாதத்தால் சொன்ன விஷயமன்று. உண்மையிலேயே நம்முடைய நிலைமை இன்னும் உயரவேண்டும்.

பத்திராதிபர்.

* * *

(அன்பியா நாயகம் அருளிச்செய்த)

திருவாக்கியம்.

11. போக்கியமாகச் சீவனம் செய்பவர்கள் கடவுளுடைய அருளுக்கு உரியவராவார்கள்.

12 யாசிக்காமல் தன்னுடைய சொந்த உழைப்பால் ஜீவனம் செய்கிறவனிடத்தில் கடவுள் கிருபை பாராட்டுகிறார்.

13. பிச்சைக்கெல்லாம் மேலான பிச்சை இடக்கைக்குத் தெரியாமல் வலக்கைபால் கொடுப்பதாகும்.

14. இரகசியமாகச்செய்யும் தர்மம் கடவுளுடைய கோபத்தைத்தணிக்கும்.

15. பேசும்போது பொய்சொல்லுவோனும், வாக்குறுதி செய்து பிறகு அதை முறிப்போனும், தன்மேல் பிறர்வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்வோனும் என்னுடைய வர்க்கத்தில் சேரமாட்டார்; ஆனால், கலகத்துக்குரிய சித்தமுடையவராவார்கள்.

16. தங்கள்மேல் பிறர்வைக்கும் நம்பிக்கையைச் செய்து முடிப்போரும், வார்த்தையில் தவறாதோரும், வாக்குறுதிப் பிழை செய்யாதோருமே நம்பிக்கையுள்ளவர்களாக (முஸ்லிம்களாக)க் கருதப்படுவார்கள்.

17. “துன்பம் நேரும்போது பொறுமையோடும், பிறர்குற்றம் செய்யும்போது மன்னிப்போடும் இருப்பவரே நல்லகாரியத்தைச் செய்கிறவராவார்” என்று இறைவன் சொல்லுகிறான்.

18. தெய்வபக்திக்கழகு வணக்கமும் தாழ்ச்சியுமாம்.

19. உண்மையான நாணம்தான் எல்லாநற்குணங்களுக்கும் மூலகாரணம்.

20. நாணமும் கற்பும் நம்பிக்கைக்கழகு.

வர்த்தமானம்.

ஓரற்புத வீடு:—அமெரிக்க ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த நீயூயார்க் பட்டணத்தில் 750 அடி உயரமுள்ள வீடொன்றிருக்கின்றது. அதில் 40-அடுக்கு மெத்தைக ளிருக்கின்றன. இன்னும் 25-மெத்தைகள் அவ்வீட்டின்மீது கட்ட வுத்தேசித்துக் கட்டிவருகின்றார்கள்.

* * * *

1910-௵ மே௴ 1௳ தோன்றின ஹாலிவால் நக்ஷத்திரத்தைப்போலவே, இவ்வருஷமும் ஆகஸ்டுமாதம் 15௳ ஒரு வால் நக்ஷத்திரமும், டிசம்பர் மாதத்தில் வேறொன்றுமாக இரண்டுவால் நக்ஷத்திரங்கள் தோன்றுமாம். இவைகளைத் தூரதிருஷ்டிக்கண்ணாடிகொண்டு பார்த்தாலொழிய நமது கண்ணுக்குத்தென்படாவாம். இவைகள் திடீரென்று வானத்தில்தோன்றுவதற்குக் காரணம் யாதோ?

* * * *

மரண அறிக்கை:—நாகபட்டணத்தில் ஆனரரி மாஜிஸ்திரேட்டாக இருந்துவந்த மிஸ்டர் K. S. உதுமான்ஸாகிபவர்கள் காலஞ்சென்ற செய்தியைக்கேட்டு விசனிக்கிறோம். இவரது குமாரர் சென்னை ஸீனியர் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் கான்பகதூர் S. M. V. உஸ்மான்ஸாகிப்பகதூர்.

* * * *

துருக்கியில் தீ விபத்து:—துருக்கிதேசத்துள்ள ஸ்டாம்போல் என்னும் நகரத்தில் ஜூலை௴ 23-தேதி தீ விபத்துண்டாயிற்று; இரவு 12-மணி வரையில் தீயை யவிக்க முடியாமற் போயிற்று; நூற்றுக் கணக்கான வீடுகள் நாசமாய்ப்போயின. அத்தேசத்தின் பிரதான நகரமாகிய கான்ஸ்டாண்டினோபிலிலும் தீ விபத்துண்டாய் 14-மணி நேரம்கொழுந்துவிட்டெரிந்திருந்தது. அதனால் 5000-வீடுகள் வரை நாசமாய்ப் போயின. துருக்கியின் யுத்த மந்திரிமீது எரிந்துகொண்டிருந்த வுத்தரம் விழ,அதனாலவர் விரணகாயம் மிகுதியாக வடைந்தார்.

* * * *

தேங்காய்க் கொட்டாங்கச்சியில் பொத்தான் செய்தல்:—இது தஞ்சாவூர் ஜில்லா பின்னத்தூரில் நடை பெறுகிறது. இதில் தேங்காயில் முற்றல் தன்மைக்குத் தகுந்ததுபோல் இனுசுவாரிகள் இருக்கின்றன. இளந்தேங்காயில் செய்யப்பட்டவைகள் சிறிது வெளுப்பாயும், அதிலும் முற்றல் சிறிது கறுப்பாயும், நல்ல முற்றல் கொட்டாங்கச்சியில் செய்தது நல்ல கறுப்பாயும் இருக்கின்றன. இதைச் செய்பவர் பி. ஏ. சுப்பிரமணிய அய்யர்.

* * * *

ஒரு பக்காத்திருடன் பலூன் மூலமாகத் தப்பிப் போயினான்:—ஒக்லஹோமாவைச் சேர்ந்த சேயார் நகரத்தில் நடைபெற்ற சந்தையில் ஒருவன் திருட்டுவேலை செய்வதைப்பார்த்திருந்த போலீசார் அவனைப் பிடிக்கப் பிரயத்தனஞ் செய்தார்கள். அதையறிந்த அவன் அங்கே பலூன் காட்சிக்காகப் பலூன் விடுவதற்குத் தயாராக விருந்ததைப் பார்த்து அதிற்குதித்ததும் பலூன் ஆகாயத்திற் கிளம்பியது; புகைக்கூண்டு செலுத்துபவரைச் சுட்டு விடுவதாகக்கூறிப் பலூனை 50 மைல் தூரம் போகும்படிசெய்து டெக்சாஸ் பிரதேசத்தைச் சார்ந்த குவாமாவில் பலூனை யிறங்கும்படிசெய்து தப்பி யோடிப்போயினன்.

* * * *

மகாராஜாவும் மகாராணியும் இந்தியாவுக்கு வருகிறார்கள்.

நமது மகாராஜா அவர்களும் அவரைச்சேர்ந்தவர்களும் நவம்பர்மாதம் 14-ந்தேதி லண்டனைவிட்டு, டோவருக்குப் புறப்படுவார்கள். டோவரிலிருந்து கப்பலேறி கலே சேர்ந்து, அங்கேயிருந்து

ரெயில்மார்க்கமாய் ஜீனேவாவந்து சேர்வார்கள். இத்தாலியா தேசத் துறைமுகமாகிய ஜீனேவாவில் சக்கரவர்த்திக்கும் சக்கரவர்த்தினிக்கும் தயாராய் ஒரு கப்பல் காத்துக்கொண்டிருக்கும். இக்கப்பல் பம்பாய்க்கு டிஸம்பர் மாதம் 2-ந்தேதி வந்து சேருமென்றெதிர்பார்க்கப்படுகிறது. சக்கரவர்த்தியையும் சக்கரவர்த்தினியையும் நமது வைசிராய் லார்ட் ஹார்டிஞ்சு பம்பாயில் வரவேற்பார். இரண்டு நாட்கள் பம்பாயில் தங்கினபிறகு டெல்லிக்கு அவர்கள் ஸ்பெஷல் வண்டியில் புறப்பட்டு 7-ந்தேதி டெல்லியைச் சேர்வார்கள். 10-தினங்கள் டெல்லியில் தாமதம் செய்வார்கள். 12-ந்தேதி தர்பார் நடக்கும். இதன் மத்தியில் நமது இந்து இராஜாக்கள் செய்யும் மரியாதையை அங்கீகரிப்பார்கள். ஒரு நாளோ இரண்டு நாளோ இருவரும் போலோ மாட்ச்க்குப் போவார்கள். டிசம்பர் 16-ந்தேதி பார்ட்டியுடன் வேட்டை நிமித்தமாக சக்கரவர்த்தி நேபாளத்துக்குப் போவார்கள். இதில் 10, 12 நாட்கள் கழியும். இதனிடையே நமது சக்கரவர்த்தினி முக்கியமான சில ஸ்தலங்களைப் பார்க்கப் போவார்கள். கல்கத்தாவில் 30-ந்தேதி இருவரும் வந்து சேர்ந்துவிடுவார்கள். 1912-ம் வருஷம் ஜனவரிமாதம் முதல்தேதி கல்கத்தாவில் மிலிட்ரி சைந்யக்காட்சி நடக்கும்.

* * * *

சீமைக்குச் சென்று தேறிவந்த ஒரு முகம்மதியமாணாக்கர்:- ஹைதராபாத்து சூபரின்டெண்டிங் இஞ்சினீயரின் பர்ஸனல் அஸிஸ்டெண்டான மிஸ்டர் K. B. அப்துல்லா டிப்ஸாகிபின் மகன் மிஸ்டர் அப்துல்காலிக் இரண்டு வருஷத்துக்கு முன் இங்கிலாந்தில் நூல் நூற்கும் தொழில் கற்க மான்செஸ்டருக்குச் சென்றிருந்தார். அவர் அங்கே கவலையோடு வேலை கற்றுவந்து கடைசித்தொழிற் பரீக்ஷையில் முதலாவதாகத் தேறினார். அவர் இங்கிலாந்துக்குச் செல்லுமுன் கள்ளிக்கோட்டைக் கவர்ண்மெண்டு வியாபாரப் பள்ளிக்கூடத்தில் படித்து வல்லவரென்று புகழ் பெற்றிருந்தார். பிறகு அவர் மலபாரில் நூல் நூற்கும் கம்பெனியிலும், நெய்யும் கம்பெனியிலும் வேலைசெய்து அனுப்பப்பட்டிருந்தார். அவருடைய தொழிற் பரிசய மிகுதியால் நமது தேசத்திற்கு நன்மை விளையுமென்பதில் ஐயமில்லை.

* * * *

திருச்சினாப்பள்ளியில் ஒரு மஸ்ஜிது நிலம் கிரிஸ்தவருக்கு விற்கப்படுவது:—இந்த மாசம் 7-ம் தேதி பகல் 12-மணி முதல் மாலை 4-மணி வரையில் ஒருமுகம்மதியப் பொதுக்கூட்டம் திருச்சினாப்பள்ளித்தெப்பக்குளத்துக் கருகிலுள்ள ஆர்க்காட்டுப் பிரின்சின் மஸ்ஜிதில் கூடிற்று. ஆர்க்காட்டுப் பிரின்ஸ் அந்த மஸ்ஜிதுக்குச் சொந்தமான நிலத்தை ரூபா 21000-க்குச் சில கிரிஸ்தவரிடத்தில் விற்றுவிடுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார் என்றும், அதற்காக ரூ. 1000 முன்பணம் வாங்கிவிட்டாரென்றும் அவர்கள் கேள்வியுற்றார்களாம். இந்த ஏற்பாடு அந்தப் பிரின்ஸின் ஏஜண்டால் செய்யப்பட்டதாகக் கருதப்பட்டது. அம்மஸ்ஜிதிற் கூடிய மீட்டிங்கில் மேற்படி நிலத்தை விற்கும் யோசனை நிறுத்தப்படவேண்டுமென்று ஆர்க்காட்டுப் பிரின்ஸுக்கும், லோக்கல் கவர்ண்மெண்டுக்கும் கலெக்டருக்கும் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறதென்று தீர்மானமாயிற்று.

* * * *

சுல்தான் அப்துல் ஹமீதுகான் ஓடிப்போக முயற்சியெடுத்தது.

இப்போது பம்பாயிலிருக்கும் ஜனாப் அப்துல் ஹமீது ஹாஜி சுல்தான்பாபா அவர்கள் மிஸ்ரிலுள்ள பத்திரிகைகளை ஆராய்ந்து பார்த்து எழுதியிருக்கிறதாவது:—துருக்கி கவர்ண்மெண்டார் சுல்தான் அப்துல் ஹமீதுகான் அவர்களைப் பெரும்பாதுகாப்பாக ஸலோனிக்கா அலாதீன் மாளிகையில் கைதிசெய்திருக்கிறார்கள். அதிலிருந்து பல தந்திரங்களால் வெளி வந்துவிட வேண்டுமென்று முயற்சி எடுத்து வருகிறார்கள். ஒருநாள் அம்மாளிகையில் ஓரிடம் இடித்து அதை ரிப்பேர் செய்கிறதற்கு வேலை ஆட்களை அழைத்தார்கள். பாதுகாப்புக்காரர் ஒருவேலை ஆளை அனுப்பினார்கள். அதை அவன் ரிப்பேர் செய்துவிட்டான்; ஆனால் சுல்தான் அவர்கள் அவனுக்கு லஞ்சம் கொடுத்து அவன் போட்டிருந்த உடுப்பைவாங்கித் தாம் போட்டிருந்த உடுப்பை அவனுக்குக் கொடுத்துத் தாம் வேலையாளைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு வெளியே வந்துவிடவேண்டுமென்று முயற்சி செய்து முதலாவது கேட்டில் வந்ததின்மேல் பாதுகாப்புக்காரர் அவரை வேலையாளைப்போல நினைத்துப் பாஸ்ஸைப்பார்த்து வெளியே போகிறதற்கு உத்தரவு கொடுத்து விட்டார்கள். அதுபோலவே இரண்டாவது கேட்டிலும் பாதுகாப்புக்காரன் விட்டுவிட்டான். மூன்றாவது கேட்டில் வரும்போது ஒருவன் இவர்களைப்பார்த்து, நீர் சுல்தான் அப்துல் ஹமீதுகான் அல்லவா, என்று சொல்லிக்கையைப்பிடித்துக்கொண்டு, நீர் எங்கள் அரசனுடைய கைதியா

யிருக்கிறீர்; நேராய் மாளிகைக்குள் போங்கள்; இல்லாவிட்டால் பிகில்கொடுத்துச் சைனியத்தை அழைக்கிறேனென்று சொன்னான். அதன்மேல் சுல்தானவர்கள் அவனுக்கு லஞ்சம் கொடுக்கப்போனார்கள். அதை அவன் ஒப்புக்கொள்ளவில்லை. அதன்பின் சுல்தான் அவர்கள் துக்கப்பட்டு மாளிகைக்குள் போய்விட்டார்கள்.

* * * *

சங்கப்பரீக்ஷையில் தங்கப்பதக்கம் பெற்றார்:—சென்ற ஏப்ரில் மாதத்தில் மதுரைத்தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்பட்ட ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷையில், சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜில் வாசித்துக்கொண்டிருந்த பா. தாவூத்ஷா என்னும் முஸ்லிம் மாணாக்கர் பி. ஏ. பரீக்ஷையில் முதலாவதாகத் தேறியிருக்கிறாரென்பதைக்கேட்டு அதிகமாகச் சந்தோஷிக்கிறோம். இவருடைய யோக்கியதைக்காக அச்சங்கத்தாரால் ஒரு தங்கப்பதக்கம் சன்மானம் அளிக்கப்படும். இவர் மெற்றிகுலேஷனிலும், எப். ஏ. பரீக்ஷையிலும் சன்மானம் பெற்றிருக்கிறார்.

* * * *

முஸ்லிம் யூனிவர்சிட்டி அங்கீகரிக்கப்பட்டது:—ஷை யூனிவர்ஸிட்டி ஸ்தாபனத்தை இந்தியா மந்திரிபவர்க ளங்கீகரித்துவிட்டார்கள்.

* * * *

நமது மாஜி கவர்னர் ஜனரலான மிண்டோ பிரபு முஸ்லிங்களுக்குச் செய்திருக்கும் அரிய உதவிகளுக்கொரு ஞாபகக்குறியாக இந்தியா முகம்மதியர்கள், அலிகார்பட்டணத்தில் ஒரு கைத்தொழில் கலாசாலை ஸ்தாபிக்கப்போகின்றனர். அதற்கு ஆரம்பத்தில் ஐந்து லக்ஷம் ரூபா செலவாகுமென்றும், வருஷா வருஷம் எண்பதினாயிரம் ரூபா வேண்டியிருக்குமென்றும் மதிப்பிட்டுள்ளது. பணத்துக்கு ஒரு விளம்பரப்பத்திரம் பிரசுரமாயிருக்கின்றது. ஆகாகான்போன்ற பிரபலர்கள் இதில் சேர்ந்திருப்பதால் இக்காரியம் ஆண்டவன் அருளால் இனிது நிறைவேறுமென்று எதிர்பார்க்கிறோம்.

* * * *

ஹஜாரிபாக் ஜில்லாவில் உள்ள பத்மா நகராதிபதியான மகாராஜா ராம் நாராயணஸிங் பகதூர் அவர்கள் தம்முடைய கோட்டைக்குச் சமீபத்தில் முஸ்லிங்களுக்கென்று ஒரு மஸ்ஜிது கட்டுகின்றனர். வேலை பாதி முடிந்திருக்கிறது. ஹிந்துக்களும் தம்முடைய உறவினர்களும் தடுத்தபோதிலும் கவனிக்காமல் தமது முஸ்லிம் பிரஜைகளின் நன்மையை உத்தேசித்து ஒரு மஸ்ஜிது கட்டிக்கொடுக்கும் மகாராஜாவின் பெருந்தன்மையும் தயாளத்துவமும் பாராட்டற்பாலன.

சத்ரபதி காசிமீர மகாராஜாவவர்கள் தம்முடைய நாட்டில் வாழும் முஸ்லிம் சமயபேதிகள் மனமொருமித்து வாழவேண்டியதற்காக அவர்களை நேரில் வரவழைத்துச் சண்டை சச்சரவுகளை அகற்றிவிட்டு ஒற்றுமையுடன் வாழும்படிசொல்லி, அவ்வாறு அவர்கள் நடந்துகொள்வதற்காக ஜாமீன் பத்திரமும் வாங்கியிருக்கின்றனர். "இஸ்லாம்" என்பதே "சமாதானம்" என்னும் பொருளுள்ளது. குர்'ஆன் முழுவதிலும் சகோதரத்துவமே மேலாடிநிற்கின்றது. ஆகவே இந்த ஒரு மார்க்கத்திலேயே சண்டை சச்சரவுகள் அசம்பாவிதமென்று ஏற்படும்.

(அரியநாவல்)

பண்டிதை மெஸ்மரிஸா.

அத்தியாயம் 1.

மெஸ்மரிஸாவைப்பற்றிக் கேள்வியுற்றேன்.

ஹோங்கோங் நகரமாயிருந்தும் என்றால் பொறுக்கமுடியாமல் அன்றிரவு அவ்வளவு உஷ்ணமாயிருந்தது. பட்டணத்திலுள்ள கடிகாரத்தில் மணி பத்தேகால் அடித்தது. கடிகாரம் அடித்து ஓய்ந்தபின்னரும் அம்மணியோசை அரைநிமிஷம் வரையில் நிசப்தமாயிருக்கும் அவ்விருள் நிறைந்த ஆகாயத்தில் சப்தித்துக்கொண்டிருந்தது. ஊர்முழுதும் அடங்கியிருக்கும் அவ்வகாலத்தில் தாய் தந்தையருக்குத் தெரியாமல் சிறுவர்களும், மனைவியருக்குத் தெரியாமல் பெரியவர்களும் தாம்கோரிய இடங்களைநோக்கி இரகஸ்யமாகச் செல்லும்போது, அவர்களைக் கொல்லைப்புறங்களிற் கண்ட நாய்கள் திருடர்களென்று நினைத்து அங்கங்கேகுரைத்துக் கொண்டிருந்தன; இரவையே தமக்குப் பகலாகக்கொண்டு சஞ்சரிக்கும் ஆந்தை, கோட்டான் முதலிய பறவைகள் கேட்பவருக்கு அச்சமுண்டாகும்படி சப்தித்துக்கொண்டிருந்தன. ஆடுகளைத் தின்னும்பொருட்டு நகரத்துள்வந்து பதுங்கிக்கிடக்கும் நரி, ஓனாய் முதலிய துஷ்டமிருகங்களின் குரைப்பும், கேட்பவருக்கு அச்சத்தையும் அமைதியையும் உண்டாக்குமாறு கம்ம்ம் மென ஒலிக்கும் சமுத்திர வொலியும், தலைப்பிள்ளைகளைப் பெற்ற தாய்மார் குழந்தைகளின் வாயில் பான்முலையை வைத்துத் தூங்கிவிடத் தமக்குப் பசிதணியாமல் குராவிக்கொண்டிருக்கும் இளம்பிள்ளைகளின் அழுகுரலும், வியாதியால் பிணிப்புண்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மனிதர்களின் துக்ககரமான குரலும், அவ்வாறு பிணிப்புண்டு மரண மடைந்தா ரகத்திலுண்டாகும் பேரிரைச்சலும், மரண மடைந்தாரை மயானத்திற்குத் தூக்கிச்செல்பவர்களின் ஓசையும், அவரைத் தகனம்செய்து திரும்பிவருபவர்களின் ஓசையும் ஒருபால் கேட்டுக்கொண்டிருந்தன; மற்றொருபால், மணம்புரிந்து முதல்நாள் பள்ளியறையில் சயனிக்கும்போது முர

கோத்தில் ஊற்றித் தின்ன ஆரம்பித்தோம்.
ஒருவாறு டீபார்ட்டி முடிந்தவுடன் எங்களி
ல் ஒருவர் வாயில் சுருட்டைப் பற்றவைத்தார்;
மற்றொருவர் தம் சுருட்டிலுள்ள வெண்ணிறமா
ன சாம்பலை விரலால் தள்ளினார்; நான் ஒரு தி
ருச்சிராப்பள்ளிச்சுருட்டைப் பற்றவைத்தேன்;
வேறொருவர் ஜாவாதேசத்துச் சிகரெட்டைப்
பிடித்தார். எல்லாரும் அன்றிரவின் புழுக்கத்
தைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருந்தோ
ம். இவ்வாறு எல்லாரும் உல்லாசமாயிருக்கும்
போது ஒருவர், "ஹோ! யாரது? இஃதென்ன
ஆச்சரியம்! வேலைக்காரா! ஏன் இவ்வளவு பத
ஷ்டம்?" என்று திடுக்கிட்டுக்கேட்டார்.

அப்பொழுது வந்தவன் ஒரு சிறிய உருவ
மும் பருத்துத் தடித்த தேகமும் உள்ளவன்.
அவனுடைய சிவந்த முகம் அன்றுதான் க்ஷவ
ரம் செய்ததுபோல் வழுவழுப்பாயிருந்தது.
வெண்மையான பற்களும், கறுத்த ச கண்களும்,
தடித்த காதும், செந்நிறமான மயிரும் வாய்க்க
ப்பெற்றவன்.
அவன் தடித்த அட்சரங்க ழுதும் வியர்
லாம்நேசன் பத்திராதிபர் நீடூம் ு. வந்து ஐந்
சய்த வந்தன
யமுடியாமல்
சு விட்டுக்கொ

மூன்றுந்ெ ன்பவன் எலி
ன்போலும்;
செந்தமிழ் மடந்தைபெய ரொ னுக்கு ஒரு
சிவைபெயரி லொன்றுமெ ன்று என்னை
இந்திரன்வ சந்தமண் டபகாம
ஏகசக் ராதிபதி பெயரொ பாடிக்கு ஒரு
சந்தமிகும் நாற்கவியி லொன் ளைக்குள் இற
தரணியி லறிந்ததின் னடுதுக்குத் தூக்
பந்தமுட னெழுதியவை முன்னால் நாளைக்கு
பண்பொடு தலைப்பினிற் ம்" என்று

"நல்லது; முதலில் உங்களுக்கு—" என்று பதஷ்டத்தோடு ஓடிவந்த பாடியென்னும் சுந்தர்பன் ஆரம்பித்தான்.

"இதோ! இதோ!! இதோ பேச ஆரம்பித்து விட்டான்."

"இதோ! அவனைத் தடுக்கவேண்டாம்; சுந்தர்பன்! நீ வந்ததைச் சொல்."

"உங்களுக்கு ஊட்ஞைட்டா என்னும் கப்பல்—"

"நல்லது! நல்லது!! அக்கப்பல்! அதற்கென்ன? இன்று மாலைதானே அது ஷாங்ஹாய் என்னும் நகர் நோக்கிப் புறப்பட்டது."

"கோடிக்கணக்கான சாமான்களேற்றிக்கொண்டு அது புறப்பட்ட செய்தி உங்களுக்கும் தெரியுமே; ஏழுமணிக்கு லையீமூன் என்னும் ஜலசந்திக் கருகில் ஒருசீனக்கப்பல் அதைச்சுற்றிக்கொண்டது; அக்கப்பல் அபாயத்திலிருப்பதாக நினைத்து, ஊட்ஞைட்டா துணைக்காக ஒருபடகனுப்பிற்று; அதன்பின் தானும்சென்றது; ஐயா! நான் சொல்வதை மன்னிக்கவேண்டும்; உடனே கப்பல் தலைவனும் பத்து மனிதர்களும் துப்பாக்கியால் சுடப்பட்டார்கள்; மீகான் கத்தியால் குத்தப்பட்டான்; ஏனையோர் அச்சங் கொண்டு தம் தம் அறையில் ஒளிந்துகொண்டார்கள்; அதன்பின் திரவியம் வைக்கப்பட்டிருந்த அறை துளைக்கப்பட்டது. ஒரு பையளவும் மிகுதியிராமல் அத்தனை திரவியமும் கொள்ளை போயிற்று—கொள்ளைக்காரர்கள் போன விடம் தெரியவில்லை; இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"ஆ! ஆ!! ஆ!!! என்ன ஆச்சரியம்!"

"அங்கு வந்த சீனக்கப்பற்காரர்கள் யார்?"

"யாருக்கும் தெரியவில்லை."

"லையீமூன் என்னுமிடத்திலோ! நம் கண்ணெதிரிலா இவ்வஙியாயம்! கடற்கொள்ளைக்காரர்களோ!"

(தொடரும்)

கு' ஆக்கன்போலவ்.

இஸ்லாம்நேசன் விளம்பரம்.

பிஸ்மில்லாஹி.

வந்துவிட்டது வெளிக்கு வந்துவிட்டது
வெகுநாளாய்க் காத்திருந்தது வந்துவிட்டது.

நமது சர்வறெஆலம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஅஸ்ஹாபிஹிவஸல்லம் அவர்களின்சிறிய தந்தையாகிய அற்புத வல்லமை யமைந்த ஹஜரத்து

அமீர் ஹம்ஜா ஜங்கு.

முஸ்லிமாகிய உடற்பிறப்புக்களே இச்சரித்திரத்தை உலகோர் செவியாரலாய்க் கேட்டிருப்பார்களேயொழிய முழூவதையும் உள்ளபடி அரபி ஹிந்தி பாஷை யறியாதவர்கள் விபரமாய்ப் பார்த்திருக்க மாட்டார்களென்பது நிச்சயமே; ஆகையால் வெகு பிரயாசையோடு அநேக பொருள் செலவுசெய்து தமிழில்மொழிபெயர்த்து நான்கு வால்யங்களாய் வெளிப்படுத்தக் கருதி உயர்ந்த திக்கு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு முதல் வால்யம் நானூறு பக்கங்களடங்கியதாய் ஆயிரங்காப்பிகளும் இரண்டாம் வால்பத்திலும் ஆயிரங் காப்பிகளும் மட்டுந்தான் முதல் பதிப்பில் பதிப்பித்திருக்கிறோம். இச்சரித்திரத்தில் அடங்கியுள்ளவைகளில் சில முக்கிய விஷயங்களைமாத்திரம் இங்குகூறுகின்றனம். அவையாவன, ஹம்ஜாரலியல்லாகுத்தாலா அன்ஹு பிறந்தது முதல் அவர்கள் பலத்த, பலத்த, பைல்வான்களிடத்தில் எதிர்த்து யுத்தம்செய்து ஜெயித்ததும் தேவுகளுடனும் எதிர்த்து அவைகளைச் சின்னபின்னமாய்வெட்டியும் பிளந்தும் ஓர்காலில்ஓர்காலைமிதித்துக் கொண்டு மற்றொருகாலைக்கரத்தினால் பிடித்துக் கிழித்து எறிவதும், பெருத்த பெருத்த, மலைகளை ஒத்த வம்புத்தனமுடைய தேவுகளைச் சங்காரஞ்செய்து நரகலோகத்திற் கனுப்பியதும் ஜின்களுக்கும் தேவுகளுக்கும் பாதுஷாவாகிய ஷகப்பால் பின்ஷாஹருக் என்பவரு
[illegible] கோஹேகாப் என்னும் [illegible]
யாவில் சென்று முற்கூறிய ஷகப்பால்பின்ஷாஹருக்பாதுஷா அவர்களின் செல்வப்புத்திரியாகிய ஆஸ்மான் பரியை விவாகம் செய்துகொண்டு அங்கு சிலகாலம் தேவுகளையெல்லாம் அடக்கி ஷகப்பால் பாதுஷாவிற்கு அவருடைய தேசத்தை மீட்டுக் கொடுப்பதும் இன்னும் அநேக அநேக சொல்லிடற்கரிய மஹா பலத்த யுத்தங்கள் செய்வதும் பார்க்கப் பார்க்கக் கேட்கக் கேட்க மனோஉற்சாகத்தையும் செவிக்குத் தேனமிர்தத்தைப்போன்ற இனிமையையும் கொடுக்கக் கூடியதும் இன்னும் ஹப்தக்கிஸுவர் நௌஷேரவான் ஏகசக்கிராதிபதி அமீர்ஹம்ஜா அவர்களைப் பகைத்து அவர்களோடு பலத்த பலத்த இராஜாக்களைக்கொண்டும் ஜங்கிப் பயில்வான்களைக்கொண்டும் யுத்தம்செய்து வருவதும் அமீர்ஹம்ஜா அவர்களுக்கு அநேக புத்திரர்கள் மிகப் பலக்கிரசாலிகளாய்ப் பிறந்து அவ்வொவ்வோர் புத்திரர்களும் ஹம்ஜா றலியல்லாகுத்தாலா அன்கு அவர்களுடைய பலத்தை நிகரற்றவர்களாய் யுத்தகளங்களில் [illegible] ண்டமாருத சங்கார ரணக்கள்
துத்துமி செ [illegible] வதும் அவர்க்
முதல் சரித்
காஜா உம்ரு
டைய அதி
ஜால மாயா
ளின் சாமர்
லுவேன்; சு
சிப்பவர்கள்
வருகின்ற
து தள்
ஜா அவர்
வை மறக்கவு
சிக்கையில்
துவிடும். அ
ங்கொள்ளா
அநேகர் [illegible]

பதைப்பற்றிச் சந்தேகம்கொள்ளுகிறார்கள். இதன்கீழ் கோஷா சம்பந்தமாக அல்குர்’ஆனில் வந்துள்ளவாக்கியங்களையும், அவ்வாக்கியங்களுக்கு மகா நிபுணர்களான உரைகாரர்களால் எழுதப்பட்டிருக்கும் உரைகளையும் சுருக்கி எழுதுவோம். அல்குர்’ஆன் கடவுளால் அருளப்பட்டதென்றும், அதைக்காட்டிலும் பெரியதும், தர்க்கம்பண்ண முடியாததுமான வேதம் வேறொன்றுமில்லை என்றும் உண்மையாக நம்பும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கீழ்க்காட்டப்படும் அல்குர்’ஆனின் வாக்கியங்கள் நன்றாக மனத்தில் பதியுமென்று நம்புகிறோம். இஸ்லாம்மார்க்கத்தில் பெருமை பாராட்டாதவர்களுக்கும், நம்முடைய நபிகள்நாயகமவர்கள் அருளிச்செய்த வாக்கியங்களைக்காட்டிலும் தம்முடைய சொந்த அபிப்பிராயமே சிறந்ததென்று மனத்தடிப்புக்கொண்டவர்களுக்கும், தேசாசாரத்தை உத்தேசித்து மதாசாரத்தைக்கைவிட்டவர்களுக்கும் இவ்விஷயம் திருப்திகரமாயிராதென்று எண்ணுகிறோம்.

حسبنا كتاب الله

இந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு ஒவ்வொருவரும் தம்தமக்குத்தோன்றியபடி குர்’ஆன்ஷரீபினுடைய வாக்கியங்களுக்குப் பொருள்செய்துகொள்ளலாம் என்றும், உரையாசிரியர்களுடைய உரையையே பின்பற்ற வேண்டியதில்லையென்றும் சிலர் சமாதானம் சொல்லுவார்கள். ஆனால், அதே வேதபுத்தகத்தில்

لايعلم تاويله الاالله والراسخون في العلم

என்று வந்திருப்பதால் கடவுளும், கல்வியில் நிபுணர்களுமே வேதவாக்கியங்களுக்குச் சரியான பொருள்செய்வார்கள் என்பது செவ்வனே விளங்கவில்லையா? இக்காலத்தில் அரபுபாஷையில் தேர்ந்த பழக்கமில்லாமல் எழுத்துக்களைக்கூட்டிப்படிக்கும்போலி மாணாக்கர்களும், அரபெழுத்துக்களை தெரியாக்காரணத்தால் சத்தியவேதத்தைப்படிக்கமுடியாமல் ஆங்கிலேய பாதிரிமார்களால் தவறாகமொழிபெயர்க்கப்பட்டிருக்கும் அல்குர்’ஆனுடைய பிழையானமொழிபெயர்ப்புக்களை வாசித்துணரும் ஆங்கிலம்படித்த முஸ்லிம் சகோதரர்களும் இஸ்லாமார்க்கத்துக்கே ஒரு முக்கியமான மூஅஜ்ஜிஸாத்தாக விளங்கும் சத்தியவேதத்துக்குப் பொருள்செய்வதென்றால் அஃது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கின்றது! நாம் வியாதியால் துன்பப்படும்போது உதவிக்கு வைத்தியரை அழைக்கிறோம்; கோர்ட்டுக்களில் கக்ஷி நடத்தும்போது நமக்குதவியாக லாயர்களை வைத்துக்கொள்ளுகிறோம்; வீடுகட்டும்போது இஞ்சினீயருடைய உதவியைத்தேடுகிறோம்; ஆறுதாண்டும்போது ஓடக்காரனை எதிர்பார்க்கிறோம். ஆனால், இவ்வுலகவாழ்க்கையில் இன்பத்தையும், பரலோகத்தில் பேரானந்தத்தையும் தரக்கூடிய மத விஷயத்தை ஆராயப்புகும்போது ஒவ்வொரு பள்ளிக்கூடச்சிறுவனும் நம்முடைய அன்பியாநாயகம் அவர்களுக்கு அடுத்தபடியில் இருப்பதாகக் கெர்வம்கொள்ளுகிறான். வேதத்தின் ஒருவாக்கியத்தையும் இவன் தெரிந்துகொள்ளமுடியாமலிருக்கும்போது அவ்வேதத்துக்கு அபிப்பிராயம் சொல்லமுயலுகிறான். எந்த எந்த வேதவாக்கியத்துக்கு எந்த எந்த ஹதீது சம்பந்தப்பட்டதென்றும் இவனுக்குத்தெரியாது. இச்சிறுவன், தன்னுடைய மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்காக எடுத்துக்கொள்ளும் சிரமமவ்வளவுகூட வேதப்படிப்பில் எடுத்துக்கொள்வதில்லை. இப்படிப்பட்டவனுடைய அபிப்பிராயத்தை ஒரு பொருளாகமதிக்கலாமா? மெட்ரிகுலேஷன்வரையில் ஆங்கிலம்படித்ததால் அல்குர்’ஆன் முழுதும் பாடமாகிவிட்டதாக நினைக்கிறான்போலும். கடவுளால் அருளப்பட்ட மகா இரகசியமான பொருள்களடங்கிய இவ்வேதத்தை இவன் தக்க ஆசிரியருடைய உதவியில்லாமல் எப்படித் தெரிந்துகொள்ளமுடியும்? இவ்வாறு பள்ளிக்கூடச்சிறுவர்கள் அல்குர்’ஆனைப்பற்றிச்சொல்லும் அபிப்பிராயத்தை ஒரு பொருளாகமதித்து நாமெல்லோரும் பின்பற்றவேண்டுமாயின், நியூஸென்ஸ் கேஸ்களுக்கு அபராதம்போடும் ஒவ்வொரு ஆனரெரி மாஜிஸ்ட்ரேட்டினுடைய சட்டத்தையும் பிரிவீகவுன்ஸிலாருடைய சட்டமாகவே பாவிக்கவேண்டும். பிரிவீகவுன்ஸிலாருக்கும் ஆனரெரி மாஜிஸ்ட்ரேட்டாருக்கும் உள்ள வித்தியாசத்தைக்காட்டிலும் அதிகமான வித்தியாசம், அல்குர்’ஆனுக்குப் பொருள் சொல்லும் மௌல்விகளுக்கும் அல்குர்’ஆனின் தப்பான இங்கிலீஷ் மொழிபெயர்ப்பைப் படித்துவிட்டுத்திரியும் சிறுவர்களுக்கும் உண்டு.

آيات حجاب

என்றதனால் முஸ்லிம் பெண்களுக்குப் பருதாவழக்கம் வேதசம்பந்தமான கட்டளையால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகின்றது.

“ راسخون فى العلم இவ்வகைக்கௌரவம் உள்ளவர்கள் தாம் வேதவாக்கியத்துக்குப் பொருள்செய்யவேண்டும்; இவ்

என்று பிரசுரித்திருந்தும் வேண்டாத இப்புண்ணிய சீலர்களெல்லாரும் இதுவரை ஒன்றும் தெரிவிக்காமல் பேசாமலிருந்து விட்டுக் கொடியபகைவன் சமயம்பார்த்து ஏறவிட்டு ஏணியைத்தட்டுவதுபோல் இப்போது வி. பி. களைத்திருப்பி வீண் நஷ்டத்தை உண்டாக்கிவிட்டார்கள். இவ்வாறு செய்ய எத்தனை நாட்கருதியிருந்தார்களோ தெரியவில்லை. இவர்கள் தன்மையை என்னென்றுசொல்வது? வி. பி. திரும்பியதால் நமக்குப்பெரும் நஷ்டமுண்டாயிருப்பதை நினைக்கும்போதெல்லாம், "வானரமழைதனில் நனையத்தூக்கணம்... .." என்றபாடல் அடிக்கடி ஞாபகத்தில் வருகின்றது.

லண்டன் முதலியவிடங்களில் சில பத்திரிகைகட்கு இலட்சக்கணக்கான சந்தாதாரர்களிருக்கின்றார்கள். அவர்களுள் வெளியூர்களிலிருப்பவர்கள் தவிர உள்ளூரிலிருக்கும் ஆயிரக்கணக்கான ஜனங்களெல்லாம் அந்தி நேரத்தில் பத்திரிகை அச்சடிக்கப்படும் ஆபீசுக்குச்சென்று அப்பத்திரிகை அச்சடிக்கப்படுவதற்கு முந்தியே எனக்குனக்கென்று நெருங்கி, கொடுக்கச்சிறிது தாமதித்தால் தாமே ஒவ்வொரு பத்திரிகையைப்பிடுங்கிக்கொண்டு ஓடுகிறார்கள். இஃதன்றோ பத்திரிகாபிமானம்! இதனால் அவ்விடங்களில் ஒவ்வொருமணிக்கும் ஒவ்வொருபத்திரிகைவெளியாகின்றது. இத்தகைய பத்திரிகாபிமானத்தால் அவர்கள் அடைந்துவரும் சீரும் சிறப்பும் அம்மம்ம! எம்மனோரால் அளவிட்டுச்சொல்லக்கூடுமா? பலவருடங்களுக்குள் எவ்வளவோ உயர்வையெல்லாம் அடைந்திருக்கின்றனர். இவர்களன்றோ மக்களிற்சிறந்தார்! இவர்களன்றோ ஸ்ரீமான்கள்! இவர்களன்றோ எம்மையிலும் இன்பமுறுவார் !.

இப்படியெல்லாம் அன்னியதேசங்களில் பத்திரிகாபிமானமிருப்பினும், இந்தியாவில் எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் ஒருபத்திரிகைக்கு ஆயிரம் சந்தாதாரருக்குமேற் சேர்வது மகாகஷ்டம்; அதினும் முகம்மதியர்களிலோ நானூறுபேருக்குமேல் சேரவேமாட்டார்கள்; இப்படிச்சேர்வதும் சரியான விதத்தில் எழுதப்படாத சாமானிய பத்திரிகைகளுக்கே. நல்லவிதத்தில் இஸ்லாம் நேசனைப்போல எழுதும் பத்திரிகைகளுக்கோ முஸ்லிம் நேயர்கள் இருநூறுபேருக்குமேல் சேரவேமாட்டார்கள். இவர்களுள்ளும் பத்திரிகையில் அபிமானமில்லாமல் பத்திராதிபருடைய தாக்ஷண்யத்திற்காகச் சேர்பவர்சிலர்; பெருமைக்காகச்சேர்ந்து ஒரு பத்திரிகையையாவது உடைக்காமல் போஸ்டு ஸ்டாம்போடு அடுக்கிவைத்து அழகுபார்ப்போர் சிலர்; பெரியமனிதராயிருப்பவர்கள், இவ்விதம் பத்திரிகையென்னும் ஒருவஸ்துவுக்கு வருடந்தோறும் பணம்கொடுப்பது வாடிக்கையோவென்று வி. பி. போனவுடன் பேசாமல் ரூபாவைக்கொடுத்துவிட்டுப்பத்திரிகை வந்ததாபோனதா என்னும் விசாரணையேயின்றியிருப்பவர் சிலர்; சந்தாதாரராகச் சேர்ந்துவிட்டுப் பின்பு நீங்கினால் ஏதாவது சங்கடமுண்டாகுமோ என்று பயந்து விடாமல் பத்திரிகைவாங்கிவருபவர் சிலர்; பத்திரிகையைத் தருவித்தும் படித்துணரும் சக்தியில்லாமல் தவிப்பவரும் சிலர். இவர்களொழிய மெய்யான விருப்பத்தோடு பத்திரிகை தருவிப்பவர் குறைந்த அளவாகவே ஏற்படுவார்கள். இவ்வாறு ஏற்பட்டவர்களிலும் பலர் ஒரே எண்ணத்தோடு படிப்பதில்லை. சிலர், பத்திரிகை கடின நடையில் எழுதப்பட்டு வருகிறதென்று குறைகூறுவர்; சிலர் சமாசாரங்கள் அதிகமில்லையென்பார்கள்; சிலர் கதைகள் இல்லையென்பார்கள்; சிலர் முஸ்லிம் விஷயம் அதிகமாயில்லையென்பார்கள்; சிலர் பத்திரிகை அகலமில்லையென்பார்கள்; சிலர் நீளமில்லையென்பார்கள்; சிலர் கோணலாயிருக்கிறதென்பார்கள். இப்படியே ஒவ்வொருவரும் ஒவ்வொருகுறைகூறிப் பத்திரிகையை நழுவவிடுதற்கு உற்றசமயத்தை எதிர்பார்த்திருப்பார்கள். பத்திரிகையில் உண்மையான அபிமானம் வைத்திருப்பவர் சிலர்தாம் இருப்பார்கள். இவர்கள் எவ்வழியிலும் சிறந்தேயிருப்பார்கள்.

வி. பி. கள் திரும்பியவிநோதமன்றி இங்குக் கூறிய கதைகளும் நமது இஸ்லாம்நேசன் விஷயத்தில் ஏற்படாமலிருக்கவில்லை; மூன்றுமடங்கதிகமாகவே ஏற்பட்டிருக்கின்றன: சிலர், "நாம் இதுவரை தாக்ஷண்யத்துக்காக வாங்கினோம். இனிவாங்கமுடியாது" என்று கடிதமெழுதித்திருப்பினார்கள்; சிலர் பத்திரிகைபடிக்கநேரமில்லையென்று திருப்பினார்கள்; சிலர் பத்திரிகைவிளங்கவில்லையென்று திருப்பினார்கள்; சிலர் பணம்கொடுப்பது வயிற்றெரிச்சலாயிருக்கிறதென்று திருப்பினார்கள். இவ்வாறு பணத்துக்குப் பயந்து திருப்பியவர்களுள் சிலர், சென்ற ஹு நம்மிடம் அதிகமாகப் பணம்கொடுத்திருந்தும் அதனோடு அடுத்த ஹு சந்தாவுக்காக 6 அல்லது 7 அணாச்சேர்த்து அந்த அணாவுக்கு மாத்திரம் வி-பி. செய்ய, இந்த ஆறு எழு அணாவைப் பெரிதென்றெண்ணி நம்மிடம் அதிக வரவாயிருக்கும் பணத்தைக்கருதாமல் வி-பி-யை

த்திருப்பினதோடு, பாக்கிப் பணத்துக்காவது பத்திரிகை தருவிக்க வேண்டுமே என்னும் எண்ணமேயில்லாமலும் அதைப்பற்றிக்கடிதமொன்றும் எழுதாமலுமே யிருந்துவிட்டார்கள். இதை நினைக்கும்போதுதான் அடங்காநகைப் புண்டாகிறது. பாக்கிப்பணத்துக்குப் பத்திரிகை அனுப்பும்படி எழுதினால், பத்திரிகையின் தொடர்பு ஒருவாறு மீண்டும் பற்றிக்கொண்டாலும் பற்றிக்கொள்ளக்கூடும் என்னும்பயமே இவர்களை இவ்வாறுசெய்யும்படி தூண்டியதுபோலும். இவர்களெல்லாம் ஒரு பக்கத்திலிருக்கச் சென்றவருஷமுழுதும் பணம்கொடுக்காமல் பத்திரிகையைப் பிரியத்தோடு வாசித்து வந்த நண்பரும் அந்தப் பாக்கிக்கும் சேர்த்தனுப்பிய வி. பி. களைத் திருப்பிவிட்டனர். இதைத் திருப்பினபோதிலும் சென்ற வருஷ பாக்கியையாவது அனுப்பினார்களில்லை. எல்லாவற்றினும் இந்த நேயர்களுடைய செய்கை மிகவும் வியக்கத்தக்கது. சிலகனவான்கள், வி. பி. அனுப்பினது தங்களுக்கு அகௌரவமென்று நினைத்துத் திருப்பிவிட்டார்கள்; சந்தாத்தொகையை வி. பி. மூலம் செலுத்துவதற்கும், சாதாரணமாக மணியார்டர் செய்வதற்கும், நேரில் கொடுப்பதற்கும் என்னவித்தியாசமோ? வி. பி. யானது எந்தவிதத்தால் கௌரவத்தைக் குறைத்துவிட்டதோ தெரியவில்லை. இவர்கள், பத்திரிகையில் மெய்யான அபிமானம் இருந்தால் வி. பி. வருவதற்கு முன்னரே பணத்தை மணியார்டர் செய்திருக்கலாம்; அல்லது நாம் “அடுத்தமாசம் வி. பி. அனுப்புவோம்” என்று முந்தினமாதப்பத்திரிகையில் பிரசுரித்திருந்ததைப் பார்த்த பின்னாவது பணத்தையனுப்பியிருக்கலாம்; பத்திரிகைவாங்க விருப்பமில்லையாயின் கடிதமூலம் தெரிவித்திருக்கலாம். ஒன்றுமே செய்யாமலிருந்துவிட்டுப் பத்திரிகையைத் திருப்பி நஷ்டத்தை உண்டாக்கி, “கிழவிக்குச் சறுக்கினது சாக்கு” என்பதற்கிணங்க வி. பி. வந்தது அகௌரவமாகிவிட்டதென்று காரணம் கூறிவிட்டனர்.

இத்தகைய சந்தாநேயர்களையெல்லாம் நம்பி நமது இஸ்லாம் நேசன் வெளிவந்தது மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கினது போலாகிவிட்டது. சிறிதும் மனதிரக்கமின்றி இரண்டொரு தினங்களில் எண்ணிறந்த வி. பி. களைத் திருப்பி மிகுந்த நஷ்டத்தை உண்டாக்கிய இந்தப் புண்ணியர்கள்தாமா பத்திரிகையை ஆதரிப்பவர்கள்? எத்தனையோபேர்கள் ஒவ்வொருமாதமும் எத்தனையோ

வீண்விஷயங்களில் நூற்றுக்கணக்கான பணங்களைச் செலவிடுகிறார்கள்; அவர்களுக்கெல்லாம் இந்தச்சந்தா ரூ 2—0—0 ம் ஒருமலைபோலத் தோற்றினது வியப்பினும் வியப்பே; நமது இஸ்லாம் நேசனுக்குச் சில இந்துக்களும் சந்தாதாரர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள்; அவர்களுள் ஒருவராவது வி. பி. யைத் திருப்பாமல் மிகவும் பிரியத்தோடு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அன்னிய மதக்காரருக்கு இருந்த அபிமானமும் முஸ்லிம்களுக்கு இல்லாமற்போனதைப்பற்றித் தான் அளவில்லாத விசனமுண்டாகிறது. பத்திரிகை எல்லாவிதத்திலும் நன்மையைத்தருவதற்கு முக்கியமானதென்றும், அதனை ஆதரிக்கவேண்டுமென்றும், மேன்மேலும் சந்தாதாரர்களைச் சேர்க்கவேண்டுமென்றும் பன்னிப்பன்னி எழுதியும் அதையெல்லாம் மரப்பொந்தில் உபதேசித்த மந்திரம்போலாக்கி, மேலே சந்தாதாரர்களைச் சேர்க்காவிட்டாலும், தாங்களாவது சந்தாதாரராக இராமல் சில முஸ்லிம்கள் விலகிக்கொண்டது விந்தையினும் விந்தையே. இவர்களெல்லோரும் பத்திரிகை வாசிப்பது வீண்வேலையென்று நினைக்கின்றனர்போலும்; இதனாலன்றோ, எல்லாவகுப்பாரும் நாகரிகத்தையடைந்தும் நம்மவர் மாத்திரம் இன்னும் நாகரிக நிலைமைக்கு வாராமல் அன்னியர் தாழ்த்திப் பேசுவதற்கு இலக்காயிருக்கின்றனர். கல்விகற்பதிலும், நற்பத்திரிகைகளைப் பிரியத்தோடு வாசிப்பதிலும் எப்பொழுது அபிமானம் ஏற்படுமோ அப்பொழுதுதான் நம்மவர் எல்லாராலுங்கொண்டாடத்தக்க உயர்பதவிக்கு வருவார்கள். அப்படிவருவதற்கு இப்போதிருக்கும் நிலைமையை உத்தேசித்தால் இன்னும் சில நூற்றாண்டுகள் கழியவேண்டுமென்று நினைக்கும்படி நேரிடுகிறது. ஆதலால் இப்பொழுது இவர்களைப்பற்றிக் கவலைப்படுவதில் பிரயோசனமில்லை. இதைவிட்டுவேறுகாரியத்திற் பிரவேசிப்பதே நலம்.

இவர்கள் இவ்வாறு நஷ்டப்படுத்தினும் நாம் தைரிய மிழந்து பத்திரிகையை விட்டுவிடவில்லை. எஞ்சியிருக்கும் உத்தம சந்தாநேயர்களின் உதவியைக்கொண்டும், நமது சொந்தச்செலவைக்கொண்டும் நடத்திவரவே துணிந்திருக்கின்றோம். பெரும்பான்மையும் பத்திரிகையைத் திருப்புவோர்களே மிகுந்துள்ள இச்சமயத்தில் வி. பி. களைப் பிரியத்தோடு ஏற்றுக்கொண்டு இந்த வரையிலாவது நமக்குத் தைரியமுண்டாகும்படிசெய்த கனவான்களின் நன்றி என்றும் மறக்கத்தக்கதன்று. இவர்களுக்குப் பூ[illegible]ண ஆயு

ளையும் நிறைந்தசெல்வத்தையும் அல்லாகுதஆலா அருளுவதோடு மற்ற நண்பர்க்கும் விரைவில் பத்திரிகாபிமான முண்டாகும்படி செய்வாராக.

ப. ர்.

விஞ்ஞாபனம்.

பத்திரிகையைத் திருப்பி நமது ஊக்கத்தைக் குறைத்த நண்பர்களொழிய மற்ற உண்மைநேயர்கள், இந்நேசன் செப்டம்பர் ௴ வெளிவந்ததைப்போல் கிரௌன் சைகில் பிளாக்குகளுடனில்லாமல் முந்தியிருந்தபடியே டிம்மிசைசிலிருப்பதைப் பற்றியும், தாமதமாகவெளிவந்ததைப் பற்றியும் ஒருவகை அதிருப்தியடையக்கூடும். ஆயினும், அஃது இதன்கீழேவரும் விஷயங்களை வாசிப்பதனால் நீங்குமென்றெண்ணுகிறோம்:

நாம், இன்னும் சந்தாதாரர்கள் அதிகப்படுவார்களென்றும், இருப்பவர்கள் குறையமாட்டார்களென்றும் கருதி நேயர்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கும்பொருட்டுச் செப்டம்பர்௴ பேப்பரை நல்லவிதத்தில் அதிகப்பணச்செலவுசெய்து வெளிப்படுத்தி வி-பி. அனுப்பினோம். அவ்வாறனுப்பியும் இதன் அருமைதெரியாமல், "இஸ்லாம் நேசனும் சந்தாநேயர்களும்" என்ற வியாசத்தில் கண்டபடிபெரும்பான்மையோர் அந்த வி. பி. களைத் திருப்பி நஷ்டத்தையுண்டாக்கிவிட்டார்கள். அவ்வாறுண்டான நஷ்டம் இவ்வளவென்று அளவிட்டுச்சொல்லமுடியாது. அதனால், இத்தகைய முஸ்லிம் நண்பர்களை நம்பிப் பத்திரிகை நடத்துவதிலும் நிறுத்திவிடுவதே நலமென்றுகருதி, இஸ்லாம் நேசனை அச்சிடாமலே நிறுத்திவைத்திருந்தோம். அப்படியிருக்கும்போது சிலர் "நஷ்டமாயினும் இன்னுஞ்சிலமாதங்கள் நடத்தவேண்டும்; அவ்வாறு நடத்தினால், நாங்கள் அதிக சந்தாதாரர்களைச்சேர்த்து 'இதற்கு உயர்வை உண்டாக்குவோம்" என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் சொல்லை மறுக்கமுடியாமையால் முந்தி ஏற்பட்டிருந்த டிம்மிசைசிலாவது வெளிப்படுத்தி வரலாமென்று கருதி இவ்வாறு செய்தோம். செப்டம்பர் ௴ சஞ்சிகைபோல வெளிப்படுத்துவதென்றால் செலவு அதிகமாகும்;-அதற்கு இப்போதிருக்கும் சந்தாபோதாது. சந்தாநேயர்கள் அதிகப்படும் பக்ஷத்தில் அவ்வாறே செய்ய உத்தேசித்திருக்கிறோம். ஆதலின், இப்போதிருக்கும் நேயர்கள் இவ்விஷயத்தில்

டைய முயற்சியெடுத்துக் கொள்வார்களாக. மேற்கண்டவாறு நின்றிருந்தபடியினாலேயே சென்ற அக்டோபர் ௴ பேப்பரும், இந்த நவம்பர் ௴ பேப்பரும் ஒன்றாகச்சேர்த்து வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ப. ர்.

வி. பி. போகக்கூடாத இடங்களிலுள்ள சந்தாநேயர்களுக்கோர் அறிவிப்பு.

வி. பி. இல்லாத பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களிலுள்ள சந்தாநேயர்கள் நெடுநாளாகச் சந்தாவை அனுப்பாமல் பத்திரிகையைமட்டும் மிகுந்த பிரியத்தோடு வாங்கிவாசித்து வருகின்றனர். இது, "சோறு தண்ணீர் கொடுக்காமல் பையனைப் பிள்ளைபோல வளர்ப்பேன்" என்றுரைப்பது போலிருக்கின்றது. சந்தாத்தொகையை ஒவ்வொருவரும் அனுப்பிவிட்டால் நமக்கும் சந்தோஷமாயிருக்கும். இப்போது புதுவருஷத்துக்குச் சந்தாத்தொகை செலுத்தவேண்டியவர்கள்தாம் இப்படியிருக்கிறார்களென்றால், சென்றவருஷத்துப் பாக்கி செலுத்தவேண்டியவர்களும் இவ்வாறில்லாமலில்லை. அவர்களும் கூட இரண்டுவருஷத்துப் பாக்கிகளையும் வைத்துக்கொண்டு மௌனம் சாதிக்கிறார்கள். சந்தாநேயர்கள் பணம்கொடுத்து ஆதரிக்காவிட்டால், பத்திரிகையின் ஊக்கம் குறையுமென்பது எல்லோர்க்கும் நன்றாகத்தெரியும். அப்படித்தெரிந்திருந்தும் நேயர்கள் கவனிக்காதிருப்பது அழகாமா? இந்த வருஷத்தில் அளவற்ற வி. பி. களைத் திருப்பி நஷ்டத்தை உண்டாக்கிய பல நண்பர்களின் செய்கையைக் காட்டிலும் இவர்கள் செய்கை மிக விசனிக்கக் கூடியதாயிருக்கிறது. வி. பி. யில்லாத இடங்களிலுள்ளவர்கள், அவரவர்களும் தாம் தாமே ஞாபகம் வைத்துப் பணத்தை அனுப்பாத பக்ஷத்தில் வேறு என்னசெய்யக்கூடும்? வி. பி. யுள்ள இடமாயிருந்தாலும் வி. பி. திரும்பிவருவதைப் பார்த்தாவது நண்பர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளலாம். அஃதின்மையால் பணங்கொடுத்துப் பேப்பர்வாங்கச் சம்மதமாயிருக்கிறார்கள் அல்லது இல்லை என்னும் இரண்டுமே தெரியவில்லை. இவர்களெல்லோரும் தங்கள் அபிப்பிராயத்தைக் கடித மூலம் தெரிவித்தாலும் நலமாயிருக்கும். அப்படியும் இல்லாமையால் விசனிக்கவேண்டியதாயிருக்கிறது.

ஆகையால் பினங், சிங்கப்பூர் முதலிய விடங்களிலுள்ள நண்பர் ஒவ்வொருவரும் பத்திரிகைக்குச் சேரவேண்டிய சந்தாத்தொகையைத் தயவுசெய்து அனுப்பிவிடவேண்டும். பத்திரிகை தருவிக்க இஷ்டமில்லையாயின் தெரிவித்து விடுவதோடு இதுவரை ஏற்பட்டிருக்கும் பாக்கியையும் வைத்துக்கொள்ளாமல் அனுப்பிவிடுவது அவர்கள் உத்தமகுணத்துக்குத் தகுதியான காரியமாம். அப்படியே பாக்கியை அனுப்பாவிட்டாலும் நாம் ஒன்றும் செய்யப்போகிறதில்லை. அதனால் நமக்கு ஏற்படும் குறைவும் ஒன்றுமில்லை. இந்த அற்பத்தொகையை வைத்துக்கொள்வோர் நல்லோர்களால் எவ்வளவு தூரம் கருதப்படுவார்களென்பதை நண்பர் ஒவ்வொருவரும் தாம் தாமே உய்த்துணர்ந்துகொள்வார்களாக. அல்லாகுதஆலா ஒருவன் உண்டென்பதையும் ஞாபகத்தில் வைப்பாராக. அடுத்த ௴ 10௳ க்குள் பழையபாக்கியையும் அடுத்த ௵ சந்தாவையும் அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

ப. ர்.

பத்திரிகைகளும், பரோபகாரமும்.

இப்போது, வெளிவந்துலாவும் பத்திரிகைகளெல்லாம் பரோபகாரமுடையவைகளென்றும், தேச நன்மையைக்கருதுபவைகளென்றும், எல்லோருக்கும் புத்திபுகட்டக்கூடியவைகளென்றும் பொதுஜனங்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படியே பத்திராதிபர்களும் அடிக்கடி மிகவும் கெம்பீரமாக எழுதிவருகின்றார்கள்.

எனினும், இவர்களுட்சிலர் எழுதுவதுமட்டும் அப்படியே அன்றி, முழுதும் அவ்விஷயங்களைக்கைக்கொள்ளுகிறார்களோஎன்பதுமாத்திரம் சந்தேகம். இவர்களது அந்தரங்கஎண்ணம், ஜீவனத்துக்குப்பொருளீட்டுவதிலும், இலாபத்தையும் தனவந்தர் நேயத்தையுங்கருதி அவற்றிற்கேற்றகாரியங்களைச்செய்வதிலுமே பிரவேசித்திருக்கும். இன்னும், சில பத்திராதிபர்களின் கொள்கைகளெல்லாம் அறிவுடையோருக்கு விருப்பத்தைத் தரத்தக்கவைகளாயிரா. இவர்களுட்சில தமிழ்ப்பத்திரிகைக்காரர்கள், தங்கள் பத்திரிகைகள் கடவுளாலேற்படுத்தப்பட்ட வேதங்களெனத்தீர்மானித்திருக்கிறார்கள். எத்தகைய விஷயமாயினும் இவற்றுள் வெளிவந்துவிட்டால் அது கடவுள் வாக்கென்று அபிப்பிராயப்படுகிறார்கள். தமிழில் சிறிதும் வன்மையில்லாவிடினும், உலகவிஷயங்களை ஆராய்ந்தறியும் அனுபவம் எட்டுணையும் இல்லாவிடினும் தங்களுக்குத்தெரிந்த சிறிது இங்கிலீஷ் விற்பத்தியைக்கொண்டே தங்களை உலகத்திற்கு இன்றியமையாத தீர்க்கதரிசிகளென நினைக்கிறார்கள். இவர்கள் பத்திரிகைகட்குத் தக்கபடியே வியாசமெழுதும் சாமானியர்களையும் பிருகஸ்பதிகள்போல நினைக்கிறார்கள். பண்டிதரைப்பாமரராகவும், பாமரரைப்பண்டிதராகவும், நல்லதைக்கெட்டதாகவும், கெட்டதைநல்லதாகவும், பொய்யை மெய்யாகவும் மெய்யைப்பொய்யாகவும், அணுவை மலையாகவும் மலையை அணுவாகவும், உயர்வைத்தாழ்வாகவும் தாழ்வை உயர்வாகவும், கருதி மாறுபாடான அபிப்பிராயம் கூறும் சாமர்த்தியம் இவர்களுக்கு மிகுதியும் உண்டு. எதையும் ஆழ்ந்துயோசிக்காமல் அவசரப்பட்டுத்தைரியத்தோடு எழுதிவிடுவார்கள். உலகத்தில் மெய்யாக நடக்கக்கூடியதை ஒருவன் எழுதினால் அது நடக்காததென்று மறுத்தெழுதுவார்கள்; நடக்காததை ஒருவன் நடந்ததாக எழுதினால் அவ்விஷயத்தை மிகவும் புகழ்ந்தெழுதுவார்கள்; தங்களுக்குவேண்டியவர்கள் உபயோகமற்ற விஷயத்தைச்செய்தாலும் அதைமிகவும் அருமையானதென்று புகழ்ந்து தங்கள் பத்திரிகை முழுதிலும் இடமில்லாமல் எழுதிவிடுவார்கள்; வேண்டாதோர் செயற்கரியசெய்யினும் அவற்றை உபயோகமற்றவையென இகழ்ந்தெழுதுவார்கள்; சிலர், புத்தகங்களை இயற்றி அவற்றிற்குப்பத்திரிகைகளின் அபிப்பிராயம் ஏற்பட்டால் அந்த அபிப்பிராயம் பழையகாலத்துத்தமிழ்ச்சங்க அபிப்பிராயம்போலாமென்றுகருதி இவர்களுக்கு அபிப்பிராயத்துக்காக அப்புத்தகங்களை அனுப்பினால், அவற்றுள், வேண்டியவர் புத்தகங்கள் உபயோகமற்றவையாயினும் அவற்றிற்கு உயர்ந்த அபிப்பிராயமும், வேண்டாதோர் புத்தகங்கள், உயர்ந்தவையாயினும் அவற்றிற்குத் தாழ்ந்த அபிப்பிராயமும் எழுதிவிடுவார்கள். வேறுபாஷைகளிலிருந்து விஷயங்களை விளக்கமாக மொழிபெயர்க்கும் தத்துவமின்றிப்பார்ப்போர்க்கு விளங்காதபடி மொழிபெயர்த்தெழுதினாலும் அதுவேசிறந்ததென்று தங்களைத்தாங்களே புகழ்ந்துகொள்வார்கள்; உத்தமர்களில் எவராவது இவர்களோடு ஒருவிஷயத்தைப்பற்றி வார்த்தையாடச்சென்றால் கெர்வத்தால் முகங்கொடுத்துப்பேசமாட்டார்கள்; அளவற்றவேலையிருப்பதுபோல் நடித்து நழு

ந்துபோய்விடுவார்கள்; ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பத்திரிகைகளே சிறந்தவையென்றும், மற்றவை தாழ்ந்தனவென்றும் சொல்லிக்கொள்வார்கள்; இன்னும், இவர்கள் பத்திரிகை நடத்தத்தொடங்குங்காலத்தில் சந்தாதாரருடைய தயவையும் வேறுபத்திரிகைகளின் உதவியையும் கருதியவர்களாகவேயிருந்திருப்பார்கள். நாளடைவில் அதிக சந்தாதாரர்கள் சேர்ந்தவுடன் இவர்கள் பழைய நிலைமையைச்சிறிதும் கருதுவதில்லைபோலும். அப்போது சந்தாதாரர்கள் நேரில் சென்றாலும் பேசுவதுங்கஷ்டமாயிருக்கும். இதரபத்திரிகைக்காரர்களையும் மதிப்பதில்லை. ஆரம்பத்திலோ முந்தி நடந்துகொண்டிருக்கும் பத்திரிகைக்காரர்களின் உதவியை எதிர்நோக்கியவர்களாயிருந்திருப்பார்கள். பத்திரிகைகள் ஒன்றற்கொன்று உதவியாயிருக்கவேண்டுமென்பதைப் பிறகு சிறிதும் கவனியார்கள். புதிதாகப் பத்திரிகை நடத்தத்தொடங்குவோர் மாதிரிப்பத்திரிகை அனுப்பினால் அதைச்சிறிதும் கவனிக்கமாட்டார்கள்; மாற்றுப்பத்திரிகையும் அனுப்பமாட்டார்கள். எனினும், எல்லோருமே இப்படியிருக்கிறார்களென்று சொல்வதற்கிடமில்லை. பல உத்தமப்பத்திராதிபர்களும் உண்டு. இவர்களுக்கிடையில் சில பத்திராதிபர்கள் இத்தன்மைகளையுடையவர்களாயிருக்கின்றனர். இவற்றைக்கருதாமல் நாம் பலமாதங்களாகப்பலருக்கும் நமது இஸ்லாம் நேசனை அனுப்பிவந்தும், லோகோபகாரிப்பத்திராதிபர் முதலிய சில உத்தமர்கள் தவிர மற்றையர் மாற்றுப்பத்திரிகை அனுப்பாமலேயிருந்துவிட்டார்கள். சிலருக்கு எழுதிக்கேட்டும் விடையில்லை; அதிக சந்தாவுள்ளபத்திராதிபர்களுக்கு, "தாங்கள் பத்திரிகை அனுப்பினால், எங்கள் பத்திரிகைக்கு உள்ளகிரயம் போகமிகுதியை அனுப்பிவிடுவோம்" என்று எழுதிக்கேட்டுக்கொண்டும் கூட அவர்கள் சிறிதும் கவனித்திலர்; இவர்கள் தாமா உலக நன்மைக்குப்பாடுபடுகிறவர்கள்? இவர்கள் தாமா பொது நோக்குடையவர்கள்? இவர்கள் தாமா சுயநலங்கருதாதவர்கள்? "சிறுதுரும்பும் பற்குத்த உதவும்" என்பதுபோல்இச்சிறு இஸ்லாம் நேசனால் பெரியபத்திரிகைகளுக்கும்சிறிது உதவி விளையாதென்று யார் நினைக்கக்கூடும்? அங்கடிப்புராணப்பிரசங்கிகளின் விஷயதானமெல்லாம் பத்திரிகைகளில் வெளிவரும்போது இஸ்லாம் நேசனால்மட்டும் பிரயோசனமில்லையென்று எவ்வாறு கருதமுடியும்?

அன்னதானம்.

தருமசிந்தனையுள்ள நேயர்களே! இவ்வுலகத்தில் இந்துக்களின் சாஸ்திரக்கிரமப்படி தருமம் முப்பத்திரண்டு வகையாக ஏற்பட்டிருந்தபோதிலும் அவற்றுள் மிகச்சிறப்புற்றோங்கியதும், எவரும் செய்யத்தகுந்ததும், விசேஷபுண்ணியத்தைக் கொடுப்பதும் அன்னதானம் ஒன்றுதான் என்பது சுருதி, யுத்தி, அனுபவம் ஆகியவற்றைக்கொண்டு எவராலும் நிச்சயிக்கக்கூடியதே. குறள் முதலிய அறநூல்களும் இதனையே வலியுறுத்திக் கூறுகின்றன. இதுபற்றியே இப்பரதகண்டத்தில் அநேகம் புண்ணிய சீலர்கள் பற்பலவிடங்களில் எண்ணிறந்த அன்னசத்திரங்களை ஏற்படுத்தி அன்னமிட்டுவருகின்றனர். ஆயினும் அவற்றுள் சிலரால் நடத்தப்படும், அன்னதான தருமங்கள் சரியாக நடத்தப்படவில்லை. நடுவுநிலைமையின்றியும், மனிதரின் உயர்வு தாழ்வு கருதியும், தற்பெருமை குறித்தும் அவை நடத்தப்படுகின்றன. இவ்வாறு நடத்தப்படுகின்றனவென்பதைத் தென்னாட்டிலும், இச்சென்னையிலும், வேறு சில இடங்களிலுமுள்ள சத்திரங்களிலும், உற்சவகாலங்களில் நடக்கும் தானங்களிலும் நிச்சயமாகக்காணலாம். அந்தோ! இவ்வகைத்தருமங்களைப்பற்றி நினைக்கும்போது வயிறெரிகிறது. இந்துக்களில் நடுவுநிலைமையில்லாத சில பிராமண சன்னியாசிகள் எழுதிவைத்த சுயநயங்கருதிய மிகவும் பாரபக்ஷமுள்ள சாஸ்திரங்களின் மாறுபாடான உபதேசத்தை, வேறு தொழில் செய்யமுடியாமல் வாய்ப்பகட்டால் ஜீவிக்க உபாயந்தேடும் சில பிராமணர்களாலேயே சொல்லக்கேட்டு அதையே கடவுள் வாக்காகக்கருதி, பிராமணர்களுக்கு மாத்திரம் அன்னமிட்டால் போதும், அதுதான் சிறந்த தருமம் என்று கருதிச்சிலர், தங்கள் சத்திரங்களில் பிராமணர்களுக்கு மாத்திரம் சாப்பாடுபோடும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்விடங்களில், எவ்வளவு பெருங்குடற்காரர்களாயிருந்தாலும், பசியில்லாமல் ஏப்பமிட்டுக்கொண்டிருக்கிறவர்களாயிருந்தாலும், பிறர்சகாயத்தை விரும்பாத தனவந்தர்களாயிருந்தாலும் அவர்கள் பிராமணர்களாய் மாத்திரமிருந்தால் அவர்களுக்கு மிகவும் தடபுடலாய் வடைபாயசத்தோடு உபசாரமான சாப்பாடு நடக்கும்; பலநாள்பட்டினியோடு சென்றாலும், கையில் ஒன்றுமில்லாத ஏழைகளாயிருந்தாலும், பிழைக்கவழியற்ற அங்கஹீ

ணர்களாயிருந்தாலும் அவர்கள், பிராமணரொழிந்த மற்ற ஜாதிக்காரராயிருந்தால் சத்திரத்தின் வாசலுக்குப் போவதற்கு முந்தியே அங்குள்ள பிராமணச் சுயம்பாகி, சத்திரத்து மணியக்காரர் முதலியோர், "சீ! சீ!! இங்கே சூத்திரப் பயல்களுக்குச் சாப்பாடு போடுவதற்குச் சத்திரம் வைக்கவில்லை; இங்கே நின்றால் தீட்டுண்டாகும்; வெளியே போய்விடுங்கள்" என்று துரத்துவார்கள்; தாகத்துக்காவது ஜலம் கொடுங்களென்று கேட்டால் பக்கத்திலிருக்கும் குளத்தைக்காட்டுவார்கள்; மீறிப்பேசினால் இரண்டு உதை கொடுத்து வெளியே தள்ளுவார்கள். இதைப்பற்றிச் சத்திரம் ஏற்படுத்திய புண்யாத்மாக்களிடத்திற் கேட்டால், எல்லாருக்கும் சாப்பாடுபோடுவதென்றால் முடியாதென்றும், ஆயிரம் ஏழைகளுக்கு அன்னமிடுவதைக்காட்டிலும் ஒருபிராமணனுக்கு அன்னமிட்டால் விசேஷபலனுண்டாகுமென்றும், அதனாலேயே இவ்வாறு செய்கிறோமென்றும், பிராமணர்களால் மயக்கிய மயக்கம் இந்த நாகரிக காலத்திலும் ஒழியாமல் சமாதானங்கூறுகின்றார்கள். இவ்வித அக்கிரமமான தருமம் தென்னாட்டில் அதிகமாயுண்டு. பலபேர்சொல்லி உபத்திரவிப்பதற்கஞ்சிச் சிலசத்திரங்களில் பிராமணரல்லாத மற்ற ஏழைகளுக்கு அரிசிமாத்திரம் கொடுக்கும்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருந்தாலும் சத்திரங்களிலுள்ளவேலைக்காரர்கள் கன்மனப்பார்ப்பாராகையால் அதையும் கொடுக்காமல் ஏழைகளை அடித்துத் துரத்திவிட்டுச் செலவுகணக்கெழுதி அரிசியைத்தாங்களே வாயிற்போட்டுக்கொள்வார்கள்.

இதுதவிர வீடுகளில் நடக்கும் விசேஷங்களிலும் சிலர், பிராமணர்களையேதேடி அன்னமிடுகிறார்கள். இவ்வாறு பிராமணர்கள் வயிற்றை நிரப்புவதே மேலானதருமமென்பது விசேஷ ஞானமில்லாதோர் மனத்தில் அழுத்தமாய்ப் பதிந்துகிடக்கின்றபடியால், ஒவ்வொருவரும் விசேஷகாலங்களில் பிராமணர்களுக்கே அன்னமிட்டுவிட்டு, "நான் 500-பிராமணர்களுக் கன்னமிட்டேன்; நான் 1000-பிராமணர்களுக் கன்னமிட்டேன்" என்று தற்பெருமையும் கூறிக்கொள்கிறார்கள்.

இவை நிற்க; மற்றொருவகையாரோ பிராமணர்களை விசேஷமாயெண்ணாவிடினும் பொதுவாக நடத்தும் அன்னதானங்களில் மனிதரின் தன்மையைப்பார்த்து நடத்துவார்கள். எப்படியெனின் ஒருவர், வெகு படாடோபமாகக்காலில் இஜாரும், உடம்பில்

கோட்டும், தலையில் இரவல் தலைப்பாகையும் உடையவராய் அன்னதானத்துக்குச் செல்லாமல் வேறு எங்கேயோ செல்பவர்போல் நடித்து அன்னதானம் செய்பவரிடத்தில் சென்று, "வாட் சார்" என்றால், அவர், "இங்கே அன்னதானம் நடத்துகிறேன்; கமான்! கமான்" என்றுகையைப்பிடித்துக்குலுக்கி, அவர், "எனக்கு வேலையிருக்கிறது; நான்போகவேண்டும்" என்று நடிப்பாகச் சொன்னாலும் விடாமல் உள்ளே இழுத்துக்கொண்டுபோய் மிகுந்த மரியாதையோடு உயர்ந்தசாப்பாடுபோட்டுத் தாம்பூலம் கொடுத்தனுப்புவார். இத்தகைய அன்னதானக்காரரிடத்தில் ஒருஏழை சென்றால் அவனை வெளியிலேயே நிறுத்தி, மேற்கண்ட இடம்பக்காரர்கள் சாப்பிட்டு மிஞ்சியவற்றை ஒன்றாகப்போட்டுப் பிசைந்து உருட்டி மிருகத்துக்கிடுவதுபோல கையில் போட்டனுப்புவார்கள். இதுவும் இஷ்டமிருந்தாற்றான் நடக்கும்; இல்லாவிடில் வந்த ஏழையை, "போ! போ!! அனாசாரம்பிடித்தவனே" என்று தூஷணையாகப் பேசித் துரத்திவிடுவார்கள். இப்படிப்பட்டவர்களெல்லோரும், கண்டவரிடத்திலெல்லாம், "நான் அன்னதானம் செய்தேன்" என்று தற்பெருமையாகச் சொல்லிக்கொள்வதில் மட்டும் முந்திவிடுவார்கள். இந்தவழக்கம் பெரும்பான்மையும் சென்னை முதலியவிடங்களில் உண்டு. இன்னும் இவ்வகை ஒழுங்கீனமான தருமங்களையெல்லாம் எடுத்தெழுதுவதென்றால் ஒருபெரிய புத்தகமாகமுடியும்.

அந்தோ! என்னபரிதாபம்! இப்படியெல்லாம் ஏழைகள் வருந்த, பார்ப்பார்க்கும், இடம்பப்பேர்வழிகளுக்கும் அன்னமிடுவதா தருமம்? பாரபக்ஷமின்றிப் பசித்துவந்தோர்க் கன்னமிடுதலல்லவா மேலானதருமம். இதை இவர்கள் சிறிதும்கருதாமல் குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொள்வதுபோலக் கண்மூடித்தனமாய்த் தருமஞ்செய்யப்புகுந்து பாவத்தைத்தேடிக்கொள்கிறார்கள்.

இக்காலத்தில் இத்தகையரே மிகுந்திருப்பினும், இவர்களுக்கு அறிவுவரும்படியாக முறைப்படி ஏழைகளுக்கே அன்னமிட்டுத்தருமத்தைத் தேடக்கூடிய சில உத்தமபுருஷர்களும் இருக்கின்றனர். அவர்களுள், சென்னை ஆனைகெவுனிக்கடுத்த இருளப்பன்தெரு 29-ஆம் நம்பர்வீட்டிலுள்ள கனம். எ. மா. அரங்கசாமி நாயுடு அவர்களும் ஒருவரே. இவருடைய அன்னதானம் அறிவு

டையோர்களால் மிகவும் கொண்டாடத்தக்கது. இவர் ஒவ்வொரு வருடத்திலும் சென்னையில் புரட்டாசிமாதத்தில் திருப்பதிக்குக் குடை புறப்படுந்தினத்தில் ஏழைகளாகப்பார்த்து அவர்களுள் மாத்திரம் 1000 பேருக்குக்குறையாதவருக்கு 12 வருஷகாலமாக அன்னமிட்டுவருகிறார். இந்த விசேஷதருமம் பெரும்பாலும் இவருடைய சொந்தச்செலவாலும் சிறுபான்மை தருமாபிமானிகளின் உதவியைக்கொண்டும் நடந்தேறிவருகிறது. இது, வழக்கம்போல் இவ்வருஷத்திலும் செப்டம்பர் மாசம் 24௳ நடந்தது. வருடந்தோறும் சாப்பிடவரும் ஏழைகள் 1000த்துக்கு மேற்படாவிடினும் இவ்வருஷத்தில் 1500 பேருக்கதிமாயிருந்தார்கள். இவர்களெல்லோரும் ஒருவாரத்துக்கு முன்னரே பல டிக்கட்டுக்கள் அச்சிட்டு நாலாபக்கங்களிலும் பலரால் தேடிக் கொடுத்துத் திரட்டப்பட்டார்கள். இவர்களெல்லோரையும் ௸ நாயுடவர்கள் மரியாதையோடு வரவேற்று அன்னமிட்டுபசரித்து ஒருவருக்கும் துன்பமில்லாமல் அனுப்பி மகிழ்வித்தது அற்புதத்திலும் அற்புதம்! ஏழைகளெல்லோரும் நாயுடவர்களை அளவற்றுப்புகழ்ந்தார்கள். எவர்க்கும் இத்தகைய இரக்கம்வாய்ப்பதரிது. சமீபகாலத்தில் இவர்புத்திரன் காலமானது முதலான சில விஷயங்களாலேற்பட்ட கவலைகளிருந்தும் அவற்றை ஒழித்து இடைவிடாமுயற்சியோடு இத்தருமத்தை எவ்வருஷத்திலும் இவ்வருஷம் விசேஷமாக நடத்தியதன்றோ பெருங்குணம்! இவரன்றோ தருமசீலர்! இத்தகைய தருமம் இன்னும் வளர்ந்தோங்கும்படியாக எல்லோருமே உதவிபுரிந்தும், தாமே நடத்தியும்வருவது மிகவும் உத்தமம்.

இவ்வகை அன்னதானம் எல்லாமதத்தினருமே கொண்டாடத்தக்கதாதலால் முஸ்லிம்களும்கூட வேறுவகைத்தருமங்கள் செய்வதினும் ஏழைகளுக்கு அன்னமிடும் தர்மத்தைக்கைக்கொள்வது மிகுந்த நன்மைபயக்கும். காதடைக்கும்படி வட்டப்பறைகளையடித்து உபத்திரவத்தை உண்டாக்கும் அகங்காரமுள்ள பக்கீர்களுக்குத் துட்டுக்கொடுப்பதைக்காட்டிலும் இஃது எவ்வளவோ மேலான தருமம். இந்தப்பக்கீர்களைப்பற்றி நேர்ந்தபோது விரிவாகஎழுதுவோம்.

ஞானசீலன்.

குலாம்காதிறு நாவலர்.

* * *

அதிகாரம்-3.

(செப்டம்பர் மாதச்சஞ்சிகையின் றொடர்.)

முகம்மதுப்புலவரை நமது நாவலர் "புலவர்மாமா" என்று முறைகொண்டாடிவந்தார். தம்மைப்பிரசங்கத்துக்கழைத்த தலைவர்களை நாவலர் நோக்கி "எனக்குப் பிரசங்கம்செய்து வருவதில் மிகவும் திருப்தியே; ஆயினும் புலவர்மாமா கோபித்துக்கொள்வார்களென்று அஞ்சுகிறேன்; அவர்களுடைய ஸ்தானத்தில் என்னைப்போன்ற செல்வாக்கற்ற சிறுவன் உட்கார்ந்து பிரசங்கிப்பது அவர்களுடைய மனத்திற்குக்கொஞ்சமேனும் பொருத்தமாயிராது; ஆனால், நான் பிரசங்கிப்பது அவர்களுடைய தகுதியையாவது, ஸ்தானத்தையாவது கெடுத்துவிடும் நோக்கமுடையதன்று; அவர்கள் வந்து கோபத்தோடு இரைந்தால் அவர்களுக்குச் சமாதானம் தாங்கள் சொல்லவேண்டும்; அவ்விதமே தாங்கள் சமாதானம் சொல்வீர்களென்று நம்பி நான் இதற்கு உடன்படுகிறேன்" என்றார். அதைக்கேட்டதலைவர்கள், "தற்காலம் பிரசங்கமின்றி வீணேசெல்லும் இரவுகளைப் பிரசங்கம்செய்து கழித்துவருவது முகம்மதுப்புலவருக்கு விரோதமாகாது; ஆதலின், நீர்அவருக்கு வதிலாய் அவர்வரும்வரையில் அவருடைய ஸ்தானத்திலிருந்து பிரசங்கம் செய்யலாம்; அதனால் உமக்குயாதொருகஷ்டமும் ஏற்படாது" என்றார்கள்.

நமது நாவலர் அவ்வாறே சம்மதித்து அவருக்கென்று ஏற்பட்டிருந்த நாளிரவில், உலகில் மிக்க பிரபலமுள்ளதும் அலங்காரமிக்கதுமான நாகூர் தருகாவின்கண்உள்ள பீர்மண்டபத்தில் வீற்றிருந்து, "நாகூர் காரணப்புராணம்" பிரசங்கம்செய்ய ஆரம்பித்தார். இதுதான் நமது நாவலருடைய முதல்பிரசங்கம். இப்பிரசங்கம், ஒவ்வொரு இரவும் தொடர்ச்சியாக நடைபெற்றது. முதல்நாட் பிரசங்கத்திலேயே கேட்டிருந்த புத்திமான்கள் யாவரும் முகம்மதுப்புலவரின் பிரசங்கத்தைவிட நாவலரின் பிரசங்கம் சிறந்ததென்பதைத் தெரிந்துகொண்டார்கள். கம்பீரமான தோற்ற

மும் குரலோசையும் நம் நாவலருக்கில்லையாயினும் தமது பிரசங்க சாதுரியத்தால் அங்கிருந்தோர் யாவரையும் மகிழ்வித்து வந்தனர். ஜனங்கள் நாவலருடைய பிரசங்கத்தில் மிகுந்த பற்றுள்ளவர்களானார்கள். நாளுக்குநாள் பிரசங்கங்கேட்கும் ஜனத்திரள் அதிகரித்துக்கொண்டிருந்தது. இவ்வாறு சில தினங்கள் சென்றன. முகம்மதுப்புலவர் காரைக்காலிலிருந்து நாகூருக்குவந்தார். நாவலர் தருகாவில் பிரசங்கம்செய்யும் விஷயம் அவருக்குத்தெரிவிக்கப்பட்டது. அவர் சினங்கொண்டார். அவரின் சினத்தையறிந்த சிலர் அவரை அதிகமாய்த்தட்டிக்கொடுத்தார்கள். தமது சாதாரண உடையோடு கால்வாய்க்குப்போக எத்தனித்த அவர் உடனே தருகாவை நோக்கிவேகமாய் நடந்தார். "அந்தத் தாணுப் புலவன் கீச்சுக்குரலோடு அங்கே என்னமோ குளறித்தள்ளுகிறான், தாங்கள் அவனை அடித்து விரட்டுங்கள்" என்னும் சத்தம் புலவர்காதில் விழுந்தது. அதனால் அவர் முடுக்கிவிடப்பட்ட யந்திர வண்டியைப்போல் அதிவேகமாய்ச்சென்றார்.

அங்கேசென்று பீர் மண்டபத்தில் நமது இளநாவலர் இருந்து பிரசங்கிப்பதையும் அதைத்திரளான ஜனங்கள் ஆவலோடு கேட்டிருப்பதையும் பார்த்தார். பார்த்தவுடனே அந்த முகம்மதுப்புலவருக்கு அதிக உக்கிராவேசம் உண்டாயிற்று. அவர் பிரசங்கிபொருக்கெதிரே சற்று தூரத்தில் வேங்கையைப்போல் சீறிநின்றார். அவருடைய கண்கள் சிவந்து மீசைதுடித்தது. பாவம் என்செய்வார்! புலவர் தம்மை முற்றும்கோபத்தின் வசமாக்கிவிட்டுப் பராதீனமாய் நின்றார்; நாவலரைப் பயமுறுத்தும் பார்வையாக கண்கள் ஊடுருவப்பார்த்தார். முன்னமே அஞ்சியிருந்த நம் சிறு நாவலர் புலவர்மாமாவை இந்தக்கோலத்தில் பார்த்தவுடனே கதாப்பிரசங்கத்தை நிறுத்திவிட்டு அவருடைய சாந்தமான மொழியை ஆவலோடு எதிர்பார்த்தார். முகம்மதுப் புலவர் மிக்க சினத்தினால் மூடப்பட்டிருந்தமையால் அவர் நமது நாவலரைப்பார்த்து, "ஓய்! நாமிருந்து பிரசங்கம்செய்யும் ஸ்தானத்தில் நீர் யாருடைய அனுமதியின்பேரில் மிகத்துணிவுடன் இருந்து பிரசங்கஞ்செய்யத் தலைப்பட்டீர்? உமக்கு அவ்வளவு துணிவு உண்டாய்விட்டதா? நீர்யாரிடம் பாடங்கேட்டீர்? உமக்கு என்ன தெரியும்? உமக்கு இவ்வளவு இடங்கொடுத்தவர் யார்? இவ்வளவு தைரியம் [illegible] உண்டாய்விட்டதா? நீர் [illegible]

இருந்து பிரசங்கம் செய்தற்கு அவ்வளவு வல்லவராகி விட்டீரா?" என்றார். இதைக்கேட்ட நம் நாவலர் அதிக சாந்தமாகவும் மரியாதையாகவும் "மாமா! நான் தங்களுடைய ஸ்தானத்திலிருக்க கொஞ்சமும் விரும்பவில்லை; தாங்கள் இவ்விதம் கோபித்துக்கொள்வீர்களென்று நான் முன்னமே பின்வாங்கினேன்; தாங்கள் வந்து பிரசங்கம்செய்யும் வரையில் அவ்வேலையை ஒப்புக்கொள்ளும்படி இந்த தருகாத்தலைவர்களிற் சிலர் என்னைக் கேட்டுக்கொண்டார்கள்; இப்போதும் காரியம் முழுகிப்போகவில்லை; என்னைப் பிரசங்கஞ் செய்யவேண்டாமென்றால் இத்துடன் நிறுத்திவிடுகிறேன்; தாங்கள் அதிகம் கோபிக்கவேண்டாம்" என்றார். இதைக்கேட்ட முகம்மதுப் புலவர் பின்னும் சினந்து, "ஆம் கட்டாயம் கோபிப்பேன்; நீர் பிரசங்கஞ்செய்யக்கூடாது; உமக்கு அவ்வளவு யோக்கியதை இல்லை; நீர் எவ்வளவு மனுஷர்? மிகவும் கேவலமான நீர் அவர்கள் சொன்னாலும் எம்முடைய அநுமதியின்றி இவ்வளவு துணிவோடு இதற்கு உடன்படக்கூடாது; உடனே எழுந்துபோம்; போம்! போம்!!" என்று துடிதுடித்துநின்றார். அத்தருணத்தில் நாவலரைப் பிரசங்கஞ்செய்யும்படி கேட்டுக்கொண்ட தருகாத்தலைவர்களில் ஒருவரேனும் அங்கில்லை. அங்கே பிரசங்கம் கேட்டிருந்தோர் யாவரும் ஒன்றும் பேசாமலிருந்தார்களாயினும் அக்கிரமமாய்க் கோபித்துக்கொள்ளும் புலவர்மீது வெறுப்பும் நம் நாவலரிடத்துப் பிரியமும் கொண்டிருந்தார்களென்பது அவர்களின் முகத்தோற்றத்தினால் தெரியக்கிடந்தது. நம் நாவலர் ஒரு நிமிஷம்வரையில் ஒன்றும் பேசாது நின்றார். அப்போதும் முகம்மதுப்புலவர் தமது கோபக்குரலுடனே, "வெட்கங்கெட்டவனே! விவேகமற்றவனே! விரைவாய் நீ கீழிறங்கு, இல்லாவிடில்" என்று, பின்னும் தூஷணைசொல்லத்தொடங்கினார். அதையறிந்து நம் நாவலர் தடுத்து, "நில்லுங்கள் புலவர் மாமாவே! நில்லுங்கள்; வீணில் அதிகமாய்த் துள்ளிவிழவேண்டாம்; தாங்கள்காரணமின்றி ஏன்கோபித்து அடாதவார்த்தைகளைச்சொல்லுகின்றீர்கள்? என்பிரசங்கத்தைத் தாங்களும் இருந்துகேட்டு அதன்பின் எனது குற்றங்களை யாவருமறிய எடுத்துக்காட்டுங்கள்; அப்போது தங்களுடைய திறமையும் என்னுடைய அயோக்கியதையும் எல்லாருக்கும் விளங்கும். அதைவிட்டுத் தாங்கள் பெருங்குரலோடு கத்தினால் எனக் [illegible] தரியும் [illegible] விடுமென்று [illegible]

[illegible]

நீர்கள்? அது ஒரு நாளும் இல்லை; தங்களுடைய ஸ்தானம் எனக்குத் தேவையற்றது; தாங்களே தங்களுக்குச்சமானர்; தாங்கள் சூட்டிக்கொண்ட கல்விக்களஞ்சியம் என்னும் பெயர் மகாவித்துவான் உமறுப் புலவர் அவர்களின் பேரனாருக்குரியதென்பதை நான் அறிவேன்; தங்களுக்கு அப்பெயர் எந்தக் கல்விச் சங்கத்தவரால் அளிக்கப்பட்டது? எவருடைய அநுமதிகொண்டு அந்தப் பெயரைத் தாங்கள் சூட்டிக்கொண்டீர்கள்? சிலவித்துவான்களாவது உங்களை அந்தப்பெயரால் அழைப்பார்களா? தருகாவில் செய்யும் பிரசங்க உரிமை, தங்களுக்கே யேற்பட்டுவிட்டதா? தாங்கள் வயதில் மூத்திருந்தால் காரணமில்லாமலே என் பிரசங்கத்தைத் தூஷிக்கலாமா? சற்றுஉட்கார்ந்துபொறுமையோடு என்னுடைய பிரசங்கத்தைக்கேளுங்கள்; பின்பு பிரசங்கயோக்கியதையைப் பற்றிப்பேசலாம்'' என்றார்.

நாவலர் இவ்வாறு சொல்லவே, புலவர் மாமாவுடைய கோபமும் அகந்தையும் சற்றே அடங்கின. அவர் நாவலரைப்பார்த்துத் தலையை ஒருவிதமாய் அசைத்துக்கொண்டு, "ஆ! ஆ!! உம்மேல் பிசகில்லை; உமக்கு அவ்வளவு தூரம் இடங்கொடுக்கப்பட்டாயிற்று; நீர் பிரசங்கவல்லவராய்விட்டீர்; உமக்கு அவ்வளவு தைரியம் உண்டாயிருக்கிறது; அவ்விதமாயின் நீரேயிருந்து பிரசங்கம் செய்யும்'' என்றுசொல்லிவிட்டு வேகமாய் வீடுநோக்கிச் சென்றார். அன்று முதல் நம்நாவலர் "நாகூர் தர்காமகாவித்துவான்'' ஆயினர்.

முகம்மதுப்புலவர், இச்சம்பவத்தின் பிறகு ஒருதந்திரம் செய்தார். ஆனால், அது அவருக்குப்பலிக்கவில்லை. அதுயாதெனில், நம் நாவலருடைய சிறியதந்தையாரிடம் முகம்மதுப்புலவர்போய் "உங்கள் புதல்வனிடத்து எனக்கு மனவருத்தமில்லை; ஆகிலும், அக்காரியத்தில் என்னைக்கலக்காமல் உங்கள் மகனை உடன்படுத்தியமனிதர்மீது எனக்கிருந்த கோபத்தை அவ்விதம்காட்டினேன்; குலாம்காதிறு மிகுந்த புத்திசாலி; ஆயினும் இன்னும், சில விஷயங்களை என்னிடம் படித்துக்கொண்டால் அதிகக்கெட்டிக்காரனாயிருப்பான்; சொற்பக்குறிப்புக்காட்டினாலும் தெரிந்துகொள்ளத்தக்க புத்திக்கூர்மை குலாம்காதிறுக்குஉண்டு; மேலும் எவரிடத்தும் படிக்கவில்லையென்ற இழிச்சொல்லும்மறைந்துவிடும்; ஆதலினாலே தங்களின் புதல்வனை என்னிடம் அனுப்புங்கள்'' என்

னார். முகம்மதுப்புலவர் இவ்வாறு சொன்னதைக்கேட்ட நாவலர் சிறியதந்தையாராகிய செய்குஇபுருஹீம், மெத்தவும் சந்தோஷமுற்றுப் புலவருக்கு மரியாதைசெய்து, தமது சிறுவரைப் புலவரிடம் அனுப்புவதில் தமக்கு ஆட்க்ஷேபமில்லையென்று தெரிவித்தார். நம் நாவலருடைய திறமை, தகுந் முதலியவற்றை அவரின் சிறியதந்தையார் அறிந்தவரல்லர்.

நாவலர் வீட்டிற்கு வந்தவுடனே அவரது சிறியதந்தை மிக்க சந்தோஷக்குறிபோடு முகம்மதுப்புலவருக்கும் தமக்கும் நடந்த விருத்தாந்தங்களைத்தெரிவித்துப் புலவரிடம் போகும்படி சொன்னார். இதைக்கேட்ட நாவலர்புன்சிரிப்புடன், "புலவரின்கையிருப்புத் தங்களுக்குத்தெரியவில்லை; அவர் தந்திரம்செய்கிறார்; அவருடைய மாணாக்கனாக நான் பெயர்வகிக்கவேண்டுமென்று விரும்புகிறார்; அவர் எவ்வளவோ சந்தேகங்களை என்னிடம் நிவர்த்திபண்ணிக்கொள்ளலாம்; தங்களின்சொல்லுக்காக நான் அவரிடம் போவேனாயின் அவருடைய இழிவான தந்திரத்துக்கு உட்பட்டவனாவேன்; ஆதலின், இவ்விஷயத்தில் என்னைக்கட்டாயப்படுத்தாதிருக்கும்படி மன்றாடுகிறேன்.'' என்றார். நமது நாவலரின் தன்மையை உண்மையாகவே அறியாமலிருந்த அவரது சிறியதந்தை, அன்றுமுதல் நம் நாவலராலும் மற்றவர்களாலும், அவரது தன்மையை அறிந்துகொண்டு, நாவலரை அவரிஷ்டப்படியே எதையும் செய்ய அனுமதிகொடுத்து விட்டார். இதன் பிறகுதான் நமது நாவலர் தம் சொந்தவிஷயங்களில் சுயேச்சையடையப் பெற்றாரென்று சொல்லலாம்.

(தொடரும்.)

உ. சே. மு.

* * *

காரைக்கால்.

கனம். ம. காதிருகனி எம். எஸ். அவர்கள்.

இத்திருநாமம்பூண்ட பெருந்தகையார், முஸ்லிம்களின் பொது நன்மைக்காக உழைப்பெடுத்துப் பலஅரிய பெரியவிஷயங்களை உள்ள ஒவ்வோரிடத்திற்கும் சென்று வியக்கி, முஸ்லிம்கள்

த்தக்க பிரசங்கங்களும் புரிந்து எல்லோரையும் மகிழ்வித்து வருகின்றனர். இத்தகைப் பெருங்குணம் வாய்ந்த இவரை முஸ்லிம் சகோதரர்களனைவரும் அறிந்திருக்கவேண்டியது அவசியமாதலின், இவரைப்பற்றிய விஷயங்களை எமக்குத்தெரிந்தவரையில் இப்போது நமது நேசனில் பிரசுரிக்கின்றோம்:

இவர், கிலேக்கோட்டை சம்ஸ்தான வித்வான், ஸ்ரீல ஸ்ரீ. செய்கு முகம்மதுப்புலவர் அவர்களின் மரபினர்; திருப்பாலைக்குடித் தலைமைப்புலமை, "குரிம்பிப்புலவர்" என்ற ஹலரத்து அகமது ஹுசைன் நாவலர் திவான் அவர்களின் பௌத்திரராயுள்ளோர்; காரைக்கால் புலவர், மஸ்தான்சாயபு அவர்களுக்குப் புத்திரரத்தினமாய் அவதரித்தோர். இவருக்குத்தமிழ், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் நல்ல விற்பத்தியுண்டு; அவற்றுள்ளும் தமிழில் கிரந்தங்களை இயற்றும் ஆற்றலும், அழகோடு பிரசங்கிக்கும் சாமர்த்தியமும் விசேஷமாயுண்டு; இவரால் (1) காரைமஸ்தான் காரணசரித்திரம், (2) பஞ்சாவரலாற்று விளக்கம், (3) சிக்கனம், (4) கிறிஸ்தவர்களுக்கோர் சுவிசேஷம், (5) கமுதி முஸ்லிம்களுக்கோர் சங்கம், (6) காரைதர்கா சுதந்தரம், (7) முஸ்லிம்கள்கவனிக்கத்தக்க வழி ஆகிய பல நூல்கள் தமிழில் இயற்றப்பட்டிருக்கின்றன. இவைகளே இவருக்குத்தமிழில் விசேஷபாண்டித்திய முண்டென்பதை விளக்குதற்குப்போதிய சான்றாகும்.

இவை நிற்க; இன்னும் இவர் பலவிடங்களில் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத அநேகம் சங்கங்களையும் ஸ்தாபித்து அவை வளர்ந்தோங்கத்தக்க இடைவிடாமுயற்சிகளையும் செய்து வருகின்றனர்; இரங்கூனிலுள்ள சென்னை முஸ்லிம் சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாயும், காரை தர்கா வித்வானாயும், ஐறுவுகூலப் பிரசங்கியாயும் அமைந்திருக்கின்றனர்; இவர் பொதுவிஷயத்துக்கு அளவிடற்கரிய நன்மைகளைச்செய்து வருவதுபற்றி இரங்கூன் சுதேசபரிபாலினி முதலிய பத்திரிகைகளிலும் புகழ்ந்தெழுதப்பட்டு வருகின்றார். பெரும்பான்மையும் இவர் இரங்கூனிலேயே வசித்துவரினும் சென்ற செப்டம்பர் மீ 21உ சுதேசபரிபாலினிப்பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தபடி, சென்னை முஸ்லிம் சங்கத்தின் அக்கிராசனப்பொறுப்பை, கனம், மு. மீ. முகம்மது சாலிஹு அவர்களிடம் ஒப்புவித்துப் பொதுநலமுயற்சி

காரணமாக இப்போது தமது ஜனனபூமியாகிய காரைக்காலுக்கு வந்திருக்கின்றார்.

மேற்கண்டவாறு இவர், காரைக்காலுக்கு வந்தவுடன் (1) இந்த 1911௵ அக்டோபர் மீ 1உ மதுராஸ் முஸ்லிம் யூனிவர்சிட்டி புரோவின்ஷியல் கமிட்டி காரியதரிசிகளாகிய கான்பஹதூர், ஹாஜி, இஸ்மாயில்சேட்; மிஸ்டர், யாக்கூப்குசைன் சேட்; சேலம், கான்சாஹிப், ஜே. மொய்தீன் பாக்ஷாசாஹிப் பஹதூர்; வாணியம்பாடி, மௌல்விகுத்புத்தீன் அகமத்சாயபு; முகம்மது இபுராகீம்சாஹிப் குறைஷி பீ. ஏ., எல். டி; நவாப்குலாம் அகமத்ஜலாமி ஆகிய பிரபுக்களின் நன்முயற்சியாலும், நாகை, ஏ. கே. ஜீ அகமது தம்பிமரைக்காயர்; வா. சின்னமரைக்காயர் மாலுமியார் ஆகிய கனவான்களின் விடாஊக்கத்தாலும் நாகையில்கூடிய முஸ்லிம் யூனிவர்சிட்டி பப்ளிக்மீட்டிங்கில், ஷை யூனிவர்சிட்டி உற்பத்திவரலாறு, அதனாலுண்டாம் பயன், அதைக்கண்டுபிடித்த சர், சையது அகமதுகான் பஹதூர் சி. எஸ். ஐ. அவர்களின் நோக்கம், அவர்களுடைய ஜீவியசரித்திரத்தின் முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைப்பற்றி மிகத்தெளிவாகவும், விரிவாகவும் சபை குதூகலிக்கும்படி கனம். காதிறு கனியவர்கள் நீண்டதொரு பிரசங்கம் புரிந்ததாகவும், அப்போது முஸ்லிம்யூனிவர்சிட்டிக்கு ரூபா 3035-0-0 சேர்ந்ததாகவும் சமாசாரம் எட்டியிருக்கிறது.

இஃதன்றி (2) நாகூரில் ஷை மாதம் 8உ சென்னை லெஜிஸ்லேட்டிவ் கவுன்ஸில் மெம்பராகிய திருச்சி ஆனரபிள் மவுல்வி சையது முர்தஜா சாகிப் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடந்த "சுல்தானியா ஸ்போர்ட்டிங் கிளப்" என்னும் தேகாப்பியாச சபையின் முதல் வருஷக்கொண்டாட்ட மீட்டிங்கில் அச்சபையார் ஸ்பெஷலாக வரவழைக்க அங்குப்போய், தேகாப்பியாசத்தினாலுண்டாம் பயனைப்பற்றியும், அச்சங்கத்தினாலுண்டாம் பிரயோசனத்தைப்பற்றியும், பத்திரிகையாலுண்டாம் கல்வியேற்றத்தைப்பற்றியும் பல மேற்கோள்களுடன் அழகாகப் பிரசங்கித்து அங்குக் குழுமியிருந்த எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சியை உண்டாக்கினதாகவும் அறிகிறோம்.

அன்றியும், (3) காரைக்காலில் "முஸ்லிம் மஜ்லிஸு சங்கம் ரிப்பப்ளிக் பிரான்ஸிஸ்யா" என்னும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி

அதற்குரிய சட்டதிட்டங்களையும் அமைத்துக் கொடுத்திருக்கின்றனர்.

இனி, கூடியவிரைவில் தஞ்சாவூர் அஞ்சுமனே ஆஜம் சங்கத்துக்கும், திருவாரூர் முஸ்லிம் சங்கத்துக்கும், அபிராமம் மன்பஉல் கைறாத் முஸ்லிம்தர்மசபைக்கும், நவம்பர் மாதம் 13உயில் ஏற்படும் கமுதி முஸ்லிம் கலாவிருத்தி சங்கவருஷக் கொண்டாட்டத்துக்கும் விஜயஞ்செய்து கல்வி, சங்கம் என்ற விஷயங்களைப் பற்றியும், வேறுபல விஷயங்களைப்பற்றியும் பிரசங்கங்கள் புரிவாரெனவும் அறிகிறோம்.

இவை நிற்க; இவர் இரங்கூனிலிருக்கும்போது முஸ்லிம்களுக்கு முக்கியதினமாகிய வெள்ளிக்கிழமையன்று முஸ்லிம்கள் தொழில்நீக்கம் செய்யவேண்டுமென்பதைப்பற்றி முயன்று அவ்வாறே எல்லோரையும் அனுஷ்டிக்கும்படி செய்திருக்கிறார். இந்தக் கொள்கையை இவர் போகுமிடங்களிலெல்லாம் பரப்புவாரென்றும் சுதேசபரிபாலினி கூறுகின்றது.

இவற்றோடு சின்னாட்களுக்கு முன்னர் நமது இஸ்லாம் நேசனை இரங்கூனில் ஒரு நண்பரிடம் பார்த்ததாகவும், இது மிகவும் உயர்வானதாயிருந்ததைப்பற்றித் தாமும் சந்தாதாரராகச் சேரவிரும்புவதாகவும், இனி இப்பத்திரிகையின் விருத்தியைப்பற்றி உழைப்பெடுத்துக்கொள்வதாகவும் கடிதமொன்று நமக்கெழுதி அதனோடு நமது பார்வைக்கு “முஸ்லிம்கள் கவனிக்கத்தக்க வழி”யென்ற புத்தகத்தையும் சேர்த்தனுப்பி நேசனை வி.பி. மூலம்வரவழைத்துக்கொண்டுமிருக்கிறார். இத்தகைய அருமைச்செய்கைகள், இவர், தமிழில் பாண்டித்தியம் பெற்றிருப்பதோடு பொதுநலப்பிரசங்கங்கள் புரிவதிலும் மிகவன்மைபெற்றவரென்பதற்கும், பொதுநன்மைக்குப் பாடுபடும் திடசித்தமுள்ளவரென்பதற்கும் முக்கிய சாக்ஷியாகின்றன. இன்னும் இவர் அருமைச்செயல்கள் பலவுள; அவற்றை அளவிட்டுரைதல் இயலாது. இவ்வளவு ஊக்கமுடைய இவரால் முஸ்லிம்கள் சீர்ப்படுவதற்கு என்ன தடை?

இவையெல்லாம் ஒருபக்கமிருக்க, இவர், நமது பத்திரிகை விஷயத்தில்காட்டியிருக்கும் அபிமானம் மிகவும் வியக்கத்தக்கது;

நாம் நாடாதிருந்தும் இவரே நாடிப் பத்திரிகைக்கு உழைக்க உடன்பட்டதன்றோ பெருங்குணம்! நமது நேசனுக்கு அநேகம் சந்தாநேயர்களிருப்பினும் மெய்யாகவே இதன் விருத்தியைக் கருதியநேயர்கள், இந்த எம். எஸ். அவர்களும், இவர்கள் வாசஸ்தானமாகிய காரைக்காலிலேயே வசிக்கும் குலாம்காதிறு நாவலரவர்கள் மாணாக்கராகிய கனம். உ. செ. மு. மரைக்காயரவர்களுமேயாவர். அவர்களும் இவர்களைப்போலவே தாங்களே சந்தாதாரராகச் சேர்ந்தும், இன்னும் பலரையும் சேர்த்தும்,பத்திரிகைக்கு வியாசங்கள் எழுதியும் மிக்க உதவிபுரிந்து வருகின்றார்கள். மிக்க அறிவாளிகளாயும், பொதுநன்மையுடையவர்களாயும், தமிழில் ஆசிரியபரம்பரையாக கல்விற்பத்தியுடையவர்களாயும், பத்திரிகாபிமானமுடையவர்களாயுமுள்ள இந்த உபகாரிகள் ஒருநகரில் அமைந்திருப்பது ஸ்தலவிசேடம்போலும்; இத்தகையநேயர்கள் இன்னும் சிலர் இஸ்லாம்நேசனுக்கு அபிமானிகளாக ஏற்பட்டால், அப்போது நமது நேசனின் சீரும்சிறப்பும் அளவிடற்கரியனவாம். அந்த எண்ணம் அல்லாகுதஆலாவின் கிருபையாலும், இந்த இரண்டு நண்பர்கள் உதவியாலும் நிறைவேறுமென்றே நிச்சயமாக நினைக்கின்றோம். சந்தாதாரர்களுள் பலர் செப்டம்பர் மாதம் சென்ற வி. பி. களைத் திருப்பி நமது ஊக்கத்தைக் குறைத்த இத்தருணத்தில் இவ்விருவரும் உதவிசெய்ய முன்வந்தது இஸ்லாம்நேசனின் அதிருஷ்டவசமென்றே சொல்லவேண்டும்.

ப். ர்.

புத்தகவரவு.

மேற்கண்ட வியாசத்தில் சொல்லியபடி நமது. கனம்-ம. கா திருகனி எம். எஸ். அவர்களால் நமக்கு அனுப்பப்பட்ட “முஸ்லிம்கள் கவனிக்கத்தக்கவழி” என்னும் அரியபுத்தகம் வரப்பெற்று இதனை முடிவுவரை பார்த்தோம்; இது எவரும் விரும்பத்தக்க செவ்விய செந்தமிழ் நடையில் மிகவும் அழகாய் எழுதப்பெற்றிருக்கின்றது. இதில் முஸ்லிம்கள் கவனிக்கத்தகுந்தவைகளாகிய உலகசபை, மார்க்கசபை, நியாயசபை, ஜாதிசபை, இராஜசபை, நகரசபை, குடும்பசபை ஆகிய பலசபைகளின் ஒழுங்குபாட்டைப்பற்றியும், அவற்றின் தன்மைகளைப்பற்றியும், அவற்றை ஏற்படுத்தும்

விதங்களைப்பற்றியும் அவற்றை நடத்திவருவதாலுண்டாம் பிரயோசனங்களைப்பற்றியும், வைதீகக்கல்வி இலௌகீகக்கல்வியென்னும் பாகுபாடுகளையுடைகல்வியின் விஷயங்களைப்பற்றியும், அதனால் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும், இன்னும் எல்லோரும் கவனிக்கத்தக்க பல ஆசாரங்களைப்பற்றியும் விளக்கமான அநேகம் விஷயங்களை ஷை எம். எஸ். அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். இது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மிக அவசியமானது. இதனைவாங்கிச் சிறுவர்முதல் எல்லோரும் வாசிக்கலாம். அப்படிவாசிப்பின் இது நல்லறிவையும், கல்வியபிவிருத்தியையும், நாகரிகத்தையும் உண்டாக்குமென்பதில் ஐயமின்று. இப்புத்தகம் இத்தகைய அருமைவாய்ந்ததாயிருந்தும் இதனை எல்லோருக்கும் பொதுநலங்கருதி இலவசமாகக் கொடுப்பதாகவும் வேண்டுவோர் 'சென்னை முஸ்லிம் சங்கம்; 37 சீக்கே மவுந்தாலே வீதி; இரங்கூன்" என்றவிலாசத்துக்கேனும், "ம காதிறுகனி எம். எஸ். அவர்கள்; 10 வண்டிக்கார வீதி; காரைக்கால்" என்ற விலாசத்துக்கேனும் போஸ்டுகார்டு மூலம் தெரிவித்தால் இது சார்ஜில்லாமல் அனுப்பக்கூடுமென்றும் பிரசுரித்திருக்கிறார்கள்; இது மிகவும்பேருபகாரமே; இஃதொன்றே இவர் பொது நலப்பிரியரென்பதை நன்கு விளக்குகின்றது. இப்புத்தகத்தை விரும்புவோர் மேற்கண்ட விலாசங்களுக்கு எழுதி இலவசமாக வரவழைத்துக்கொள்ளலாம்.

இஃது இலவசமாகக் கிடைக்கக்கூடியதாயினும் இதன் தன்மை முதலில் எல்லோருக்கும் விளங்குவதற்காகவும், எம். எஸ். அவர்களின் பெயர் பல நாளும் பத்திரிகையில் விளங்கிவருவதற்காகவும் இப்புத்தகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நமது இஸ்லாம் நேசனிலும் பிரசுரித்துவர எண்ணி இந்தச் சஞ்சிகைக்காக இதன் கீழே சிறிது பாகத்தைப் பிரசுரித்திருக்கின்றோம். எல்லோரும் வாசித்து மகிழ்வாராக.

இவ்வாறு செய்வது மிகவும் பொருத்தமுடைய விஷயமாதலின், நூலாசிரியாகிய கனம். எம். எஸ். அவர்கள் இதனை மறுக்கமாட்டார்களென்றெண்ணுகிறோம்.

ப—ர்.

கனம். ம. காதிறுகனி. எம். எஸ்.

அவர்களால் இயற்றப்பெற்ற

முஸ்லிம்கள் கவனிக்கத்தக்கவழி.

* * *

புகழ் அடங்கலும், நபிகட்கெல்லாம் நபியாகிய முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களை நமக்கு நபியாக்கி, யாவருக்கும் எளிதில் விளங்கக்கூடியதும், பரிசுத்தமுள்ளதும், ஒப்பற்றதுமான இஸ்லாம் என்னும் மார்க்கத்தை அவர்களுக்குக்கொடுத்துச் சிறந்த வேதமாகிய குர்ஆன்சரீபைக் கொண்டும், துப்பறவான சுன்னத்தைக்கொண்டும் நேர்வழிஇன்னது எனத்தெளிவாக நமக்குத்தெரிவித்து வழிகேட்டைவிட்டும் நம்மைவிலக்கி மற்ற நபிமார்களுக்குக் கொடுத்த சிற்சில அற்புதங்களைப்போலல்லாமல் பகைவர்கள் பிடர்முறிந்துமனந்தடுமாறி முகம்விழும்வண்ணம் அறுபத்தினாயிரம் அற்புதங்களை உலகமுடிவின் பரியந்தம் நிகழும்படி நமது நபிநாயகமவர்களுக்குக்கொடுத்து நபிமார்களின் கூட்டத்தாரில் நின்றும் நம்மைமேன்மையாக்கி எல்லாப்படைப்புகளாலும் வருணிக்கும் வருணனைக்குள் அடங்காமல் என்றும் நிலைபேறாய் விளங்கும் ஒப்பில்லாத அல்லாஹுத்த ஆலாவுக்கே உடையனவாகும்.

ஸலவாத்தும் ஸலாமும், படைக்கப்பட்டவைகள் அனைத்திற்கும் முதன்மையானவரும், காலத்தின் சுற்றுக்கு முடிவானவரும், மனிதப்பிறவிகள் அனைத்திற்கும் நாயகத்தனத்தை யுடையவரும், அடியார்களின் பாவமன்னிப்புக்காக மன்றாடுபவருமாய் நின்று விளங்கும் நபிமுஹம்மது சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் பேரிலும் அவர்கள் கிளையார்பேரிலும் தோழர்கள் பேரிலும் என்றென்றும் உண்டாவதாக.

கற்றுணர்ந்த சகோதரர்களே!

உலகத்திலே பல ஆடிமனிகளாலும் நியோகிக்கப்பட்ட தகுதியான பலசபைகளுண்டு. அவை:—உலகசபை, மூர்க்கசபை, நியாயசபை, சாதிசபை, இராஜசபை, நகரசபை, குடும்பசபை முதலியவாக மிகப்பலவாம். அவற்றுள் கல்விமான்கள் கூடி இலௌ

கை விஷயங்களை ஆராய்ந்து நடத்தும் சபையே உலகசபை எனப்படும். அப்படியே மார்க்க விஷயங்களை யாராய்ந்து நடத்துஞ் சபைக்கு மார்க்கசபையென்றும் நியாயங்களையாராய்ந்து நடத்துஞ்சபைக்கு நியாயசபையென்றும் ஜாதிவியவகாரங்களை யாராய்ந்து நடத்தும் சபைக்கு ஜாதிசபையென்றும் மற்றுஞ் சபைகளுக்கு அவ்வவற்றிற்கடுத்த வியவகாரங்களை யாராய்தலினாலுண்டாகும் அவ்வப்பெயர்களையே வகுக்கப்பட்டுள்ளன. ஆகையால் இத்தியாதி விஷயங்களுக்குக் கல்வியே பகுத்தறிவுடைய மனுமக்களாகிய நம்மனோர்க்கு இன்றியமையாச் சிறப்பினதாகும். உலகத்திலிருக்கும் மனிதர்கள் எல்லாரும், எல்லாம் வல்ல கர்த்தனின் அருளைப்பெற்று அவனால் விதிக்கப்பட்டவைகளை அடைந்து விலக்கப்பட்டவைகளை ஒழிப்பதற்கும் கல்வியைக்கற்கவேண்டும். உலகத்தில் கல்வியில்லாத மனிதர்களுக்கு நல்லறிவு நல்லொழுக்கம் முதலானவை வருவது முற்றிலும் அரிது. படித்தவனும் படியாதவனும் உருவத்தில் ஒன்றாகவிருந்தாலும், புத்தியில் மனுஷனுக்கும் மிருகத்துக்கும் எவ்வளவு தாரதம்பம் இருக்கிறதோ அவ்வளவு தாரதம்யம் உடையவர்களாய் இருக்கிறார்கள். ஆதலால் ஒவ்வொருவரும் கல்வியில் பழகுவதும் தமது பிள்ளைகளை அவற்றில் கடைத்தேறவைப்பதும் அவற்றிற்குத் துணையாய் நிற்கும்மஜ்லிஸ்களை (சங்கங்கள்) ஸ்திரப்படுத்தி நாள்தோறும் விஜயஞ்செய்வதும் முக்கியக்கடமை. எல்லா மனிதர்களுடைய புத்தியும் பால்யத்தில் ஒரேவிதமாக இராது. ஏனெனில் ஒருவன் தன்புத்தியை எப்படி உபயோகப்படுத்துகிறானோ அதற்குத்தக்க பலனை அவன் அடைகிறான். ஆகையால் நாம்புத்தியைவேறொருவிஷயத்தில் செலுத்தாமல் கல்வியில்செலுத்தி அதைமென்மேலும் கற்கவேண்டும். கல்வியானது அளவிறந்ததாக இருக்கின்றது. அதைக்கற்க விரும்பும் மனிதர்களின் ஆயுளோ ஸ்வல்பமாக இருக்கின்றது. இதற்காகவே "கல்விகரையிலகற்பவர் நாள்சில மெல்ல நடக்கின்பிணிபல" என்று நீதிநூற் கூறுகின்றது. ஆகையால் நமக்கு உபயோகமானவைகளில் சிலசில விஷயங்களை நாள்தோறும் புதிதாகக் கற்றுக்கொள்ளவேண்டும். கல்விமான்கள் கல்வியைப்பற்றியாவது அல்லது வேறே எந்த விஷயத்தைப்பற்றியாவது மஜ்லிஸின் (சங்கம்) கண்ணே அறிவாளிகள் பிரசங்கஞ்செய்தால் நாம் அதைக்கேட்டு அதில் அருமையான விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல்வேண்டும். உலகத்தில் வித்தையினால்

தான் மனிதர்களுக்கு அறிவில்லாத கீர்த்தியும் மரியாதையும் உண்டாகின்றன. நன்றாகக்கற்ற ஒருவன் எவ்வளவு தரித்திரனாகவிருந்தாலும் அவனைக்காண்கிற நல்லவிவேகிகள் அவனுக்கு மரியாயாதை செய்யாமலும், அவன் ஒரு மஜ்லிசுக்குப் (சங்கம்) போனால் அங்குள்ளவர்கள் அவனை மிகுந்த வணக்கத்துடனே உபசரிக்காமலும் இரார்கள். கல்வியில்லாத ஒருவனும் திரவியசம்பன்னனாயிருந்தால் அவனுக்கும் மேற்சொல்லிய மரியாதை நடக்கிறது. ஆனால் அந்த த்ரவ்யம் அவனை விட்டுநீங்காமல் இருக்கிறவரைக்குந்தான் அவ்வித மரியாதை நடக்கும். கல்விகற்றவர்களிடத்தில் இருக்கும் செல்வப்பொருள் அவர்களை விட்டுப்பிரிந்துவிட்டால் முன்பு எவன் அவர்களுக்கு மரியாதை செய்தானோ அவனே அவர்களை அவமதிக்கிறான். செல்வம் இருந்தபோது நல்லவாகனங்களில் ஏறிக்கொண்டு பலபேர்களால் பின்தொடரப்பட்டுப்போன அநேக சீமான்கள்வீட்டு மூடப்பிள்ளைகள் செல்வம்போய்விட்டபிறகு அன்னத்துக்கும் வருந்தப்பட்டுக்கொண்டு நடைப்பிணமாகத் திரிவதையும் நாம் காண்கிறோம். ஆகையால் நாம் செல்வமுடையவர்களாயிருக்கிறோமென்று கல்வியை அலக்ஷியஞ்செய்யக்கூடாது. கல்வியைக்கற்றவன் எவ்வளவு தாழ்ந்தவனாகவிருந்தாலும் களர்நிலத்தில் உண்டாகிய உப்பானது மற்ற உணவுகளைவிடச் சிறந்ததாகக் கொள்ளப்படுவதுபோல மேம்பாடுடையவனாகவிருக்கிறான். இதனாலேயே,

"களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத் தோரேனும் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்."

என்று நீதிநூற்கூறுகின்றது. நன்றாகக் கற்றவன் ஓரூரில் ஓரிடத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்தாலும் அவன் கீர்த்தி எல்லாத் தேசங்களிலும் உலாவிக்கொண்டிருக்கும். கல்லாத ஒருவன் தன்னுடைய குலத்தின் மேம்பாட்டை யெவ்வளவு வருணனையாக வெடுத்துச் சொன்னாலும் அவனுடைய வார்த்தை கல்வியாளர்க்கு அலட்சியமாகத் தோன்றும். இதற்காகவே,

"கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே." என

ஒளவையும் கூறிப்போந்தனள். வித்தையை யுடையவனுக்குக் கல்வியேசிறந்த ஆபரணமாக இருக்கும். இதனை,

“கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோரணிகலம் வேண்டாவாம்” என்னும் பாடலினாலுணர்க. ஆகையால் அவனுக்கு வேறே பூஷணம் வேண்டுவதில்லை. உலகத்தில் அறம், பொருள், இன்பம், வீடுஎன்று சொல்லுகின்ற இந்த நான்கு சாதனங்களுக்கும் கல்வியே முக்கிய காரணமாகவிருக்கின்றது. ஆதலால் நாம் இம்மையில் செல்வத்தையும் புகழையும், மறுமையில் நற்பதவியையும் அடையவேண்டும் என்று விரும்பினால் கல்வியைக் குறைவறக் கற்றுக்கொள்ளல்வேண்டும். இதற்காகவே, “பாடமேறினும் ஏடுகைவிடேல்” என்னும் மூதுரையும் வழங்கிவருகின்றது.

முகம்மதே! “கற்றவனுங் கல்லாதவனுந்தகுதியில்ஒன்றித்திருப்பார்களா? என்றுநீர்கேளும்” என்றும், “கல்வியையுடையவர்கள்தான் ஆண்டவனைப் பயந்து நடப்பவர்கள்” என்றும், “உங்களில் விசுவாசங்கொண்டவர்களையுங் கல்வியைக்கற்று அதன்படி நடப்பவர்களையும் ஆதிநாயகன் மேலான பதவிகளில் உயர்த்தி விடுவான்” என்றும், “கல்வியொழுக்கமில்லாதவர்கள் மிருகத்திலும் அதிகங் கெட்டவர்கள்” என்றும் நமது சுத்த சத்திய திருவேதமாகிய குர்ஆன் சரீபில் தலீலாக வந்திருக்கின்றன. நமது கற்றறிந்த ஆலிம்களிற் சிலர், “கல்வியானது, * வைதீகம்,‡ இலௌகீகம், என இருவகைப்படும். இவ்விருவகைக் கல்விகளில் வைதிகத்தையே கற்கவேண்டும். இலௌகீகத்தைக் கற்கக்கூடாது. கற்றால் காபராகிவிடுவான்” என்று சொல்லுகிறார்கள். அவர்கள் அவ்வாறு சொல்வது சுத்தப்பிசகு. சொல்லும் அவர்களின் கோட்பாட்டுக்கு எவ்வித தலீலும் சத்திய ஹதீதும் கிடையாது. படிப்பின் அரைகுறையே அவர்களை யிங்ஙனஞ்சொல்லத் தூண்டுகிறது. வைதீகமானது மேன்மாடிபோலவும் இலௌகீகமானது அதற்குச்சோபானம் (படிக்கட்டு) போலவும் இருக்கிறது. நாம் மேன்மாடியையடையவேண்டியதாயிருந்தால் படிக்கட்டானது இன்றியமையாததாயிருப்பதுபோல வைதீகத்தை யடைவதாயிருந்தால் இலௌகீகம் அவசியம் வேண்டுவதாயிருக்கிறது. ஆனால் வைதிகத்தை யடைந்தபிறகு இலௌகீகத்தை நாம் கவனிக்கவேண்டியதில்லையென்று மறுக்கலாம். மேன்மாடியை நாம் அடைந்தபோது படிக்கட்டு நமக்கு வேண்டுவதில்லையென்று நாம் படிக்கட்டை அப்புறப்படுத்திவிட்டால் நமது சந்ததியார் நம்மையடைவதற்கு வேறுவழியுண்டா? இல்லையே. அப்போது படிக்கட்டு வைக்கப்பட்டது நமக்கு மாத்திரமல்ல; நம்முடைய சந்ததியாருக்குங் கூடவேயாம். அதுபோலவே வைதீகத்தை நாம் மாத்திரம் அடைந்துவிட்டோம் என்ற தற்பெருமையினால் இலௌகீகத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்றால் நம்முடைய சாகியத்தவர்கள் வைதீகத்தையடைவதற்கு என்ன ஆதாரம் உண்டு? ஆதலால் வைதீகத்துக்கு இலௌகீகம் இன்றியமையாத்துணையாயிருக்கின்றது. ஒருகாலத்தில் ஷாபி இமாம் அவர்களை ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசச்சொன்னபொழுது அவர்கள் மவுனித்திருந்தார்களாம். மவுனமாயிருக்கவேண்டியது என்னஎனவினவ,

“பேசுவது நல்லதா அல்லது மவுனித்து நாவடக்கிக்கொள்வது நல்லதா என யோசிக்கிறேன்” என்றார்களாம்.

இவ்வாறாக நாவடக்கி மவுனித்திருக்காது அரைக்குடம் தளும்புவதுபோல் கருத்தறியாது மனம்போன போக்காகப் போதனைசெய்கிறார்கள். இவ்விதமான அவர்களின் பதர்ப்பிரசங்கத்தையொழுகியே அநேக இஸ்லாமானவர்கள் கல்வியில் வெகுதூரமாகிவிட்டார்கள். இது, முன்னோர் தமது அநுபவத்தில்கண்டனவும் வருங்கால நிகழ்ச்சிக்கு ஏற்றனவுமாகிய பல விஷயங்களைக்கொண்ட புத்தகங்களைப்படித்து முன்னேறும் நிலையைக் கெடுத்துவிட்டது. இம்மயக்கத்தால் அவர்கள் மதிமருண்டு முன்னோர்களின் கீர்த்தியையும், படிப்பினையும், சீர்திருத்தத்தையும் அறவே மறந்துவிட்டார்கள். தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகள் இலௌகீகக்கல்வியின் உறுப்புக்களிற் சிலவாம். அவைகளைப் படிக்கும் மாணுக்கர்களை இவர்கள் தடுக்கவேயில்லை. இங்கிலீஷ்,பிராஞ்சு முதலிய பாஷைகளும் இலௌகீகக் கல்வியின் உறுப்புக்க

---

* வைதீகம்-வேதக்கல்வி (அரபி) ‡ இலௌகீகம்-உலகக்கல்வி. இதை ஸ்தாபித்தவர் இதுரீஸ் நபியவர்களே. இலௌகீகக்கல்வி, கைத்தொழில் முதலிய அனைத்துக்கும் இதுரீஸ்நபியவர்களே முதல்வர். எல்லாம் அவர்கள்காலத்தில்தான் உண்டாயின. அவையாவும் தற்காலம் இங்கிலீஷ், பிராஞ்சுக் கல்விகளையே யுறைவிடமாகக் கொண்டிருக்கின்றன. ஆகையால் இவ்விருபாஷைகளைத்தான் நாம் இலௌகீகக் கல்வியாகக்கொண்டு கற்கவேண்டும்.

ளேயாம். இவைகளைப் படிக்கக்கூடாதாம்! இவைகள் காபரான பாஷைகளாம்!! தமிழ், தெலுங்கு, மலையாளம் காபரான பாஷை அல்லவாக்கும்!!! அந்தோ! பரிதாபம்!! இவ்வாறாகப்போதிக்கும் உலக்கைக்கொழுந்துகளுக்கு நாம் எவ்வித சமாதானத்தைப் புகலுவோம். இவர்களுக்கு எல்லாம் அறிந்த நாயனே கூலிகொடுப்பானாக.

அருமந்த சகோதரர்களே!

அறவே மறந்து தூங்கியும் கல்விக்கு வெகுதூரமாகியுங் கிடந்த நமது சகோதரர்கள், விழிக்குங்காலம் இதுவெனக்கண்டு இதற்குத் தக்கபடி நடக்கவும் வைதீகம், இலௌகீகம் என இருவகைக் கல்விகளையுங் கற்று இயற்கையறிவை விளக்கிக்கொள்ளவும் ஆரம்பித்துவிட்டார்கள். சதுர் வேதப்பொருள் மறைநீதியின் கட்டையவிழ்க்கத் தெரியாமலும் சந்தேகமாகவும் பேசித்திரிந்து போதிக்கும்ஆலிம்களின் அறிவைப்பற்றி விசனிக்கநேருகின்றது. எங்குப்பார்த்தாலும் கலாசாலைகளும், மத்ரசாக்களும், பள்ளிக்கூடங்களும், மஜ்லிஸ்களும் (சங்கங்கள்) ஏற்பட்டதும் ஏற்படுகிறதுமே நமது சாகியத்தவர்கள் கல்வியிலும் சீர்திருத்தத்திலும் ஆரம்பித்துவிட்டதற்கு அறிகுறியாகவிருக்கின்றன. உலகத்துக்கல்வியைப் படிக்க வேண்டாமென்றும், உலகத்துச் சீர்திருத்தத்துக்குப் புறம்பேயிருக்கவேண்டுமென்றும் ஆண்டவரவர்கள் தங்கள் உம்மத்துமார்கட்குச் சொன்னதாக நமது மார்க்கத்தில் ஒரு ஆதாரமுமில்லை.

“வேதக் கல்வியையும், உலகக் கல்வியையும் ஒருங்கே கற்பிக்கவேண்டும். அவ்வாறு செய்வது ஆகும்” என்று கற்றறிந்த உலமாக்கள் நாளுபக்கத்திலிருந்துகொடுக்கும் பத்வாக்களின் (நிச்சய பத்திரிகை) ஓசை நாள்தோறுங் கேட்டமணியமாகவே யிருக்கின்றது. நமது உலக இரக்ஷகராகிய நபி முஹம்மது முஸ்தபா இரசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லம் ஆண்டவரவர்கள் கல்விவிருத்தியில் கொண்ட அபேட்சையோ அம்மம்ம! பெரிது!! பெரிது!!

(தொடரும்.)

கூலிக்காரர்களும் குடியும்.

சாதாரணமாக நம் தேசத்தில் பணக்காரர் முதல்கொண்டு அன்றாடகம் கூலிவேலைசெய்து பிழைக்கும் கூலிக்காரன்வரையில் குடியென்னும் பெருங்கடலில் மூழ்கிப்போய் இருக்கிறார்கள். இவருள் பணக்காரர்கள், குடியிலும் அந்தஸ்துக்கருதிச் சாராயம், உஸ்கி, பீர், பிராந்தி இவைகளில் பணத்தை ஏராளமாகச் செலவிடுகிறார்கள். இவர்கள் செய்யினும் செய்யலாமெனினும், முடிவில் இது தீங்கேயாம்; இவர்கள் ஒருபக்கமிருக்க, அன்றாடம் கூலிவேலைசெய்தால் ஜீவனம் இல்லாவிட்டால் பட்டினிகிடக்கவேண்டும் என்று சொல்லத்தக்க ஏழைக் கூலிக்காரனும் இவ்வழியில் பிரவேசித்திருப்பதுதான் பரிதாபம்! இவன் கூலிவாங்கினதும் கள்ளுக்கடைக்குச் செல்கிறான்; அதில் பாதி செலவுசெய்துவிட்டு மிகுந்ததைத்தன் பெண்சாதியிடம் கொண்டுபோய்க்கொடுக்கிறான். இதைக்கொண்டு அவள், அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் எப்படிச் சமயல் செய்துபோட இயலும்? இதைப்பற்றி அவன் பெண்சாதி கேட்கஎத்தனித்தால் அவளுக்குக் கிடைப்பது என்ன? குத்தும்உதையும்தான். அந்தோ! இவன் இத்துர்ப்பழக்கத்தால் இவனுடைய குடும்பத்துக்கு செய்கிறதீங்கு இவ்வளவு அவ்வளவென்றுரைக்கவியலாது. கையில் காசு இல்லாவிட்டால் கடன் பட்டாவது, துணிமணிகளை விற்றாவது, வீட்டைவிற்றாவது குடிக்கத்தலைப்படுகிறான். அவற்றைக்கண்டு வீட்டிலிருக்கும் இவனுடைய பெண்சாதி சும்மா இருக்கிறாளா? ஒரு பெருங்குரலிட்டுப் பிரலாபித்துத் தன்முகத்தில் மோதிக்கொண்டு தலைவிரித்து அழுகிறாள். இவனுடைய பிள்ளைகளெல்லாரும் பசியால் கூக்குரலிட்டு ஏககோஷ்டமாகப் பிரலாபிக்கிறார்கள். இந்தப்பரிதாபத்தைப் பார்த்தயாவரும் மிகுந்ததுக்கத்தையடைகிறார்கள். இவனோ என்ன நடக்கினும் சற்றும் கவனிப்பதில்லை. பணம் அகப்பட்டால் போதும் எடுத்துக்கொண்டு கள்ளுக்கடையாகிய மதுரைவீர மகாராஜாவின் பங்களாவுக்குப்போய்விடுகிறான். அவ்விடத்தில் இவனுக்குத் திருப்தியாகுமட்டும் சாப்பிட்டு அங்கு இவன் சிநேகிதர்யாராவது வந்திருந்தால் அவர்களுக்கும் வாங்கிக்கொடுத்து அவர்களோடு கூடிக்கொண்டு தன்னானேப்பாட்டு, தில்லாலேப்பாட்டு ஆகியவற்றில் இறங்கிவிடுகிறான்; மூன்றடிவைப்பதற்குள் நாலுகிறுக்கிவாங்கிக்கொண்டு வீடுவந்து சேருகிறான். வீடுவந்து சேர்ந்த இக்கூலிக்காரனுக்கு வயிறு நிறையச் சாப்பாடுகிடைக்கிறதா? இல்லை. இவனுக்கு இத்துர்ப்பழக்கத்தால் தரித்திரம் மிகுந்திருப்பதினால் வயிற்றுக்கெட்டாத ஆகாரந்தான் கிடைக்கிறது. இதனால் நாளாவர்த்தியில் இவனுடைய தேகத்தின் நரம்புகள் தளர்ந்து பலஹீனப்பட்டுப்போவதும் தவிர தேகமும் உருமாறிப்போகின்றது. முடிவில் தூங்குபோன

கிறான். இவனைப்போல் இங்கே எண்ணிறந்தவர்களுண்டு. இவர்கள் நிற்க, இன்னும் வாரத்திற்கொருமுறை கூலிகொடுக்கும் சில மேல் நாட்டுத்தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்கள் கூலி பெற்றுக்கொண்டு மறுநாள் தலைகால் தெரியாமல்குடித்துமதிமயங்கித் திரிவதும் வழக்கம். இத்தகைய இவர்கள் குடிப்பதினால் அதிக வெறிகொண்டு தெருவில் போய்க்கொண்டிருக்கும் ஜனங்களின் மேல் விழுகிறார்கள். அவர்களை உதைக்கிறார்கள். அதைக்கண்டு பக்கத்தில் காத்துக்கொண்டிருக்கும் டாணாக்காரர்வந்து இக்குடிகாரர்களைப் பிடிக்கிறார்கள். அதனால் கேஸ் எழுதக்கோர்ட்டுக்குப் போக நேரிடுகிறது. அவ்வாறு போய் இரண்டு மூன்று ரூபா அபராதமும் கொடுக்கிறார்கள். இப்படிக்கொடுத்துவந்தாலும் குடியை இவர்கள்விடுவதில்லை. சில வேளைகளில் கையில் காசு இல்லாவிட்டாலும் கடன் வாங்கிக் குடிக்கிறார்கள்; கடன்கொடுப்பார்கள் அகப்படாவிடில் தம்மேலுள்ள வஸ்திரத்தைக் குதுவைவைத்துக் குடிக்கிறார்கள்; வஸ்திரம் இல்லாவிட்டால் வீட்டிலுள்ள பாத்திரத்தைக் கடைக்கு எடுத்துக்கொண்டுபோகிறார்கள். இவ்வளவு ஆட்டம் ஆடுவதும் அக்குடியென்னும் துர்ப்பழக்கத்தினாலன்றோ? குடியர்கள் இப்படித்தான்செய்வார்கள் என்பதற்குத் திருஷ்டாந்தமாக என் அனுபோகத்தில் பார்த்த ஒரு சிறுகதையை வரைகின்றேன்: அதாவது:—எனக்குத் தெரிந்த சிநேகிதர் ஒருவருண்டு; அவர் தினமும் இராப்போஜனத்துக்கு முன்னமே மதுக்கடைக்குப்போய் வருவதுவழக்கம். இப்படியிருக்கஒருநாள் அவருக்குக் கையில் காசு இல்லாமல் போயிற்று. இதனால், அன்றைய தினம் அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. மௌனமாய்த் திண்ணையின் பேரில் உட்கார்ந்திருந்தார். அவரைக்கண்டால் சிறிது நேரம் பேசிப்போகும் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவருண்டு; அவர்வந்து, ‘ஏமி? நாயுடு, போன்சேயலேதா?” என்று கேட்டார். குடியர், முதலில் காதுகேட்காததுபோல் மௌனமாய் இருந்துவிட்டார். பின்னும் அவர் மறுமுறை உசாவியபோது குடியர், “ஊம், ஏமி செப்தாவப்பா? ம்! ஏமி போஜனம்? ஏமி” என்று சொல்லிக்கொண்டே குரலை உள்ளுக்கிழுத்துக்கொண்டார். அதைக்கேட்டு அவர் “ஏமையா? அட்டசெப்தாவே” என்று கேட்க குடியர், “அங்கடிகி போய் ஒஸ்தே பாகாஉண்டுனு” என்றுபதில் சொன்னார். இத்தகைய துக்கமும், கஷ்டமும் எதினால் வந்தது? இவற்றிற்கும் காரணம் அக்குடி என்னும் துர்ப்பழக்கமே. இவர்களுக்கு வேறு சிலர், இக்குடியை ஒழிக்கப் புத்தி கூறுவார்களாகில், “நாள் முழுதும் கஷ்டப்பட்டதினாலடைந்த தேக சிரமத்தைப்போக்கிக்கொள்ள மாலையிலே கொஞ்சம்கள்ளோ, சாராயமோ குடிக்கவேண்டும்; அப்படிச் சாப்பிடாமல்போனால் உடம்புக்குச் சரிப்படாது: மலஜலோபாதைக்கும் சரியாகப்போகமுடியாது” என்று பதில் கூறுகிறார்கள். இது உண்மைதானா என்று ஆராய்ந்து பார்க்குமிடத்தில் இவர்கள் சொல்வது தப்பென்று தெரிகிறது. கள்ளோர் சாராயமோ சிரமபரிகாரஞ் செய்வதென்பது எவ்விதத்தாலும் ஒப்புக்கொள்ளக்கூடியதன்று. குடித்த சமயத்தில் அலுப்பை நிவர்த்தி செய்து கொஞ்சம்உற்சாகத்தைக்கொடுப்பதுபோல் காணப்பட்டாலும் பின்பு அதற்கிரட்டியான பலஹீனத்தை யுண்டாக்கி உண்மையிலே மதுபானம் தேகத்துக்குக் கெடுதியைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. இப்படியிருக்க மதுபானம் சிரமபரிகாரஞ் செய்கிறதென்பது அறியாமையேயாகும். இத்தகைய முறையை நீக்கினால் மெத்தவும் நலமுண்டாகும். அவ்வாறுண்டாகுமெனவும் திருஷ்டாந்தமாக ஒரு சிறுகதை வரைகிறேன். அதாவது:—ஒரூரில் ஒருபணக்காரனிருந்தான்; அவன் நாள்தோறும் குடிப்பது வழக்கம்; இத்தகை அவனுக்கொருமனைவியுமிருந்தாள். அப்படியிருக்கும்போது அவன் குடிக்கும்போதெல்லாம் அவன் மனைவியையும் குடிக்கும்படி வற்புறுத்துவதுவழக்கம். அப்படி வற்புறுத்தும்போது அது தனக்குச் சம்மதமில்லாமலிருந்தும், அவள் அவனுக்குக் கோபம்வருமென்றெண்ணிப் பயந்து, மதுவுற்ற அந்தக்கிண்ணத்தைக் கையில்வாங்கிக்கொண்டு குடிப்பதுபோல் அபிநயித்து அவனுக்குத்தெரியாமல் எங்கேயாவது அதை ஊற்றிவிடுவாள். அவ்வாறுசெய்ய அவன், அவள் குடித்தாளென்றெண்ணி வெளியிற் போய்விடுவான். இப்படியிருக்க, கொஞ்சக்காலத்திற்குப் பிறகு அப்பணக்காரன் ஒரு ஆபீசில் உத்தியோகத்திலமர்ந்தான். அதனால் அவன் எந்தநேரமும் ஆபீசிலிருக்கவேண்டியதாயிற்று; அவ்வாறாகவே வீட்டில் மனைவியோடு சேர்ந்து குடிக்கமுடியவில்லை. ஆகையால் அவன் மனைவியிடம் “இனி நாம் சேர்ந்து குடிக்கமுடியாது; ஆதலின், நான் ஆபீசில் குடிக்கிறேன்; உனக்குக் குடிப்பதற்குப் பணம் கொடுத்துவிட்டுப் போகிறேன்” என்று சொன்னான். இதற்கு அவள், “அப்படியே செய்யுங்கள்” என்று பதில் கூறினாள். அதன்மேல் அப்பணக்காரன் தினமும் அவ்விடம் குடிக்காக அரை ரூபா கொடுத்து ஆபீசுக்குப்போய் வந்துகொண்டிருந்தான். அக்குடியைச் சற்றும் விரும்பாத அவன் மனைவிக்கு இது மிகவும் சந்தோஷத்தை விளைவித்தது. அதனால் அவள் அந்த அரைரூபாவைத் தினந்தோறும் தன்னுடைய சமயலறையிலுள்ள ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டுவந்தாள். இவ்படியே ஒருவருஷங்கடந்தது. பிறகு ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஜனனநாளாகிய ஸ்ரீ கிருஷ்ணஜயந்திவந்தது. அன்றைய தி

ளை அப்பணக்காரனுக்குச் செலவுக்கில்லாமையால் ஒன்றும்தோன்றவில்லை. என்செய்வான்? மனைவியைப்பார்த்து, "என்செய்யப்போகின்றேன்? இன்றையதினம் என்கையில் ஒருகாசுகூட இல்லையே" என்று மிகவும் விசனத்தோடு சொன்னான். அப்பொழுது அவன் மனைவிக்கு, மட்பாண்டத்தில் பணம்போட்டுவந்த ஞாபகம் வந்தபடியால் உடனே அவள் அவனை நோக்கி, "விசனப்படாதிர்; என்னிடம் பணமிருக்கின்றது" என்று பதில்சொன்னாள். "அதைக்கேட்டு அவன், உனக்கேது பணம்? போ! போ!!" என்று சொல்லிக்கொண்டு அங்குக்கிடந்த ஒரு நாற்காலியில் குந்தினான். அவன் குடிப்பதற்காக அவளுக்கு கொடுக்கும்பணம் தவிர வேறு ஒன்றும் கொடுப்பதில்லையாதலால், இவளிடத்தில் வேறே பணமிராதென்று நினைத்தே கூறினான். பிறகு அவன் மனைவி, அந்தப்பாண்டத்தை அவனெதிரில் கொண்டுவந்து கொட்டினாள். அதுநிறைய அளவற்ற பணங்களிருந்துவிழுந்தன. அவற்றைப் பார்த்தவுடன் அம்மனிதன் ஆச்சரியத்தையடைந்தான். அப்போது அவள் அவனைநோக்கி, "நீர் எனக்குக் குடிப்பதற்குக்கொடுத்த பணங்களை இப்பாண்டத்தில் போட்டுவந்தேன்; அவற்றுள் நானொன்றுகூடச் செலவழித்ததில்லை; எல்லாம் அந்தக் குடிக்காகவே கொடுக்கப்பட்டு இந்த ஒரு வருடமாகச் சேர்த்துவைத்த பணங்களே; குடித்திருந்தால் இவ்வளவும் நம்கையைவிட்டுப் போயிருக்கும்; அதை விட்டிருந்ததனாலேயே கையில் இவ்வளவு பணங்கள் திரண்டிருக்கின்றன; இதுபோல் நீரும் விட்டிருந்தால் இதுவரை எவ்வளவோ பணம் சேர்ந்திருக்குமே; இப்படிக் குடிக்கும்விஷயத்தில் செலவழிக்கும் பணங்களைத் திரட்டிவேறு நல்லவழிகளில் செலவுசெய்தால் எவ்வளவோ புண்ணியமுண்டே" என்று கூறினாள். அதனால் அவன் அன்றுமுதல் குடியைவிட்டு நல்லவழியிற் பிரவேசித்தான். நண்பர்களே! குடியைப் பழகியிருப்பதால் எவ்வளவு நஷ்டமும், அதை விட்டிருப்பதால் எவ்வளவு இலாபமும் உண்டாகின்றனவென்பதை ஆராய்ந்துபாருங்கள். நன்றாய் ஆராயுமிடத்துக் குடியைப்போல் தீங்கானகாரியம் வேறொன்றுமில்லையென்பது புலப்படும். ஆதலின், இவற்றையெல்லாம் ஆழ்ந்துயோசித்துக் குடியை அனுசரித்துப் பணத்தைச்செலவழித்துப் பரதேசிகளாய்த்திரியும் நண்பர் ஒவ்வொருவரும் அப்பழக்கத்தை விட்டொழித்து அவ்வகையில் செலவிடும்பொருளை வேறு நல்வழியில் செலவிட்டுச் சுகத்தையும் புண்ணியத்தையும் அடைவார்களாக. சகல மதஸ்தருக்குமே இக்குடி அருவருப்புடையதாதலால் ஒவ்வொரு மதஸ்தரும் இதனை நீக்குதல் அவசியமாம்.

உலோகோபகாரி.

---

1. மனோவசியம்.

2. மானிடவசியம்.

(மகாரகசியம்.)

உலகத்தவரை வசப்படுத்தி அவர்களை இன்பசாகரத்துக்குள்ளாக்கக்கூடியதும், அவரவர்களுடைய புத்தியைத்தெளிவாக்கிக் கோரிய விருப்பத்தை நிறைவேற்றிக்கொடுப்பதுமாகிய மகா ஆச்சரியமான வசியவித்தையில் உமக்கு விருப்பம் இருக்கிறதா? உமக்கு நேரிடும் ஒவ்வொருகாரியத்திலும் வெற்றிபெறவேண்டுமென்னும் விருப்பமிருக்கிறதா?

மனத்தை அடக்கியாளக்கூடிய மனோவசியம் மானிடவசியசக்திகளை உடையவர்களுக்கு இவ்வுலகமே வெற்றியமாகவும் ஆனந்தமயமாகவும் தோற்றும்.

மருந்தில்லாமல் வீட்டில் வியாதியை நீக்கிக்கொள்வதற்கும், கெட்ட வழக்கங்களை விலக்குவதற்கும் வேண்டிய சாமர்த்தியம் உமக்குண்டாகும். பிறருடைய நேசத்தையும் விருப்பத்தையும் பெறுவதற்கும், உம்முடைய வரும்படியை விருத்திசெய்து கொள்வதற்கும், உம்முடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்து கொள்வதற்கும், மனத்திலுள்ள துன்பத்தையும் துக்கத்தையும் நிவர்த்திசெய்துகொள்வதற்கும், ஞாபகசக்தியை விருத்திசெய்துகொள்வதற்கும், குடும்பசாகரத்திலுள்ள துக்கங்களை நிவாரணம் செய்வதற்கும் உம்முடையமுகத்தில் ஜ்வலிக்கும் ஆச்சரியமான மானிடவசிய சக்தியை வளர்ப்பதற்கும், உம்முடையவெற்றிக்குத் தடையாயிருக்கும் இடையூறுகளைக்கடப்பதற்கும் அவசியமாயிருக்கும் இரகசிய சக்தியைப்பெறுவதில் உமக்கு விருப்பமில்லையா?

நொடிப்பொழுதில் திடீரென்று மனிதர்களை நீர் வசப்படுத்தலாம். உம்மையும் உம்மைச்சேர்ந்தவர்களையும் இரவிலேனும் பகலிலேனும் நினைத்தநேரத்தில் தூங்கவைக்கலாம். மனநோயையும், தேகப்பிணியையும் நீக்கலாம். நம்முடையமனோவசியம், மானிடவசியம் என்னும் 2 புத்தகமும் உமக்கு இவ்விஷயத்தில் மிக்க உதவிபுரியும். உலகத்தை வசப்படுத்தும் சக்தி இன்னதென்று தெரியுமா? அதுதான் உலகவசியம். வக்கீல்களும், டாக்டர்களும், வியாபாரிகளும், ஜனத்தலைவர்களும், பொதுவாக உலகத்தில் வெற்றியடையும் எல்லோரும் மானிடவசிய சக்தியையுடையவர்களே. இப்புத்தகங்களிலுள்ளவிஷயம் ஒவ்வொருவருக்கும் அவசியமானதே. இவற்றிற்குக்கொடுக்கும்பணம் வீண் நஷ்டமெனக்கருதவேண்டாம். இதனால் எவ்வளவோபணம் சம்பாதிக்கப்போகிறீர்கள்.

1. மனோவசியம் ரூ 2 0 0
2. மானிடவசியம் ரூ 2 8 0

ஹக்கீம், பா. முகம்மது அப்துல்லாசாயபு,
12, அப்புமேஸ்திரி தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

விஷத்துக்கு மெய்யானமந்திரம்.

நமது ஹைதராபாத் கனம் நிஜாம் அவர்களுடைய பெயரைச்சொன்னமாத்திரத்தில் விஷம் தீரும்படியாக அவர்கள் ஒருவகைச்சித்தியடைந்திருந்தார்கள். அந்த விபரங்கண்டு மந்திரமாகச்சொல்லவேண்டிய அவர்கள் பெயருடன் பல விளம்பரங்கள் வெளிப்படுத்தியிருந்தோம். அவற்றின் உதவியைக்கொண்டு அநேகர் ஆச்சரியப்படும்படி பல விடங்களில் விஷங்களைத்தீர்த்துக் கடிதங்கள் எழுதினார்கள். எந்தவகைமந்திரத்தால் தீராத கொடியவிஷங்களும் தீர்ந்திருக்கின்றன. இத்தகையமந்திரம் உலகத்தில் பரவிவரும்போது திடுமென நிஜாமவர்கள் காலமாய்விட்டார்கள். அதனால், இனி என்செய்வதென்று நாம் யோசித்திருந்தோம். அப்படியிருந்தகவலை தீரும்படி இப்போது அவர்கள் பேருக்குப்பதிலாக அவர்களின் குமாரரவர்களின் பெயரைச்சொன்னால் முன்போலவே விஷம் நீங்குமென்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. ஆதலால் இனி அந்தப்பெயரைச்சொல்லி எல்லோரும் விஷத்தைப்போக்கிக்கொள்ளலாம். விஷத்தை இறக்கவேண்டியகாலத்தில் அவர்கள்பெயரைச்சொல்லி மந்திரம் உச்சரிக்கும் விபரமாவது:—

“ஏவிஷமே! உனக்கு மீர்உஸ்மான் அலிகான் அவர்களுடைய சத்தியம் ஏற்பட்டிருக்கிறது; இறங்கிப்போ; நான் இதைப்பற்றி ஒருமாதத்துக்குள் அவர்களுக்குத்தெரிவிப்பேன்.”

இந்த மந்திரத்தை விஷந்தீண்டினவனுக்குக் கேட்கும்படி உரத்துச்சொல்லிவிடவேண்டியது. உடனேவிஷம் நீங்கிவிடும். அதன்மேல், மேற்கண்டமந்திரத்தில் குறித்தபடி இவ்வாறுவிஷம்நீங்கிய விபரத்தைப்பற்றி ஒருமாதத்துக்குள் நிஜாம் அவர்களுக்கு, “தங்கள்பெயரால் இன்னபெயருடையவர்க்கு விஷம் தீர்ந்தது” என்று கடிதமெழுதிவிடவேண்டும். அவ்வாறு எழுதும் கடிதத்தின்மேல் கவரின் ஒருமூலையில் “பாம்பு விஷம்” என்று அவர்களுக்கு அடையாளம் தெரியும்படி எழுதிவைக்கவேண்டும். கடிதமெழுதுவதாகக்குறிப்பிட்ட நாளைக்குள் எழுதாவிட்டால் மறுபடியும் விஷம்வந்துவிடும். ஆதலால் தவறாமல் கடிதமெழுதவேண்டும். மந்திரம் சொல்லும்போது கடிதம் எழுதுவதற்குச்சொல்லும் நாளை இஷ்டம்போல் மூன்றுவருஷத்துக்கு அதிகப்படாமல் ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்தமந்திரத்தை விஷம்தீண்டினவன் தனக்குத்தானேயும் சொல்லிக்கொள்ளலாம். பிரக்ஞை தப்பினவனுக்கும் ஆடு மாடு முதலியவற்றிற்கும் காதில்சொன்னால்போதும். விஷம் தீர்ந்ததைப்பற்றி நிஜாம் அவர்களுக்கு எழுதும்கடிதத்தின் மேற்கவரில் “ஹைதராபாத்து, டக்கான்” என்று விலாசமெழுதினால் அவர்களுக்குக்கிடைத்துவிடும். அது கிடைத்தவுடன் அவ்விஷயத்தை ஒப்புக்கொண்டதாக அவர்கள் பதில் எழுதுவார்கள்.

துருக்கியர்க்கும், இத்தாலியர்க்கும் நடக்கும் யுத்தசெய்திகள்.

சில வாரங்களாகத் துருக்கியர்க்கும் இத்தாலியர்க்கும் இடையில் யுத்தம் நடந்துவருவதை நண்பர்கள் எல்லோரும் அறிவார்கள். இந்த யுத்தம் தோன்றியதற்குப் பல காரணங்களுண்டு. அவையாவன:—

இத்தாலியர்களுக்கு ஆப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளில் செல்வமிக்க இடமொன்றும் சுவாதீனத்திலில்லை. மற்ற ஐரோப்பிய ராஜாங்கத்தாருக்கெல்லாம் ஆப்பிரிக்கா முதலிய விடங்களில் வளமிகுந்த பல நாடுகளிருந்தும் இவர்களுக்கு மாத்திரம் மேற்கண்டவாறு இல்லாதிருப்பது மிக்க விசனத்தையுண்டாக்கிற்று. அதனால், தாங்கள் வியாபாரத்தின் பொருட்டாகப்போய்ப் பிரவேசித்து உள்மர்மங்களையெல்லாம் அறிந்து பொருளீட்டிச் சுகம்பெற்றுவருவதற்கிடமாயிருப்பதும், மிக்க செல்வமோங்கியதும், துருக்கியருக்குச் சொந்தமானதுமாகிய திரிப்போலியைக் கைப்பற்றிக்கொள்ள நெடுங்காலம் மனதிற்குள் இரகசியமாகக் கருதிவந்தார்கள். இப்படிக் கருதியிருந்த இவர்களுக்கு அந்தத் திரிப்போலியின் வடபாகமும், சிரனிஷிய மாகாணமும் வியாபாரத்துக்கு மிகயோக்கியமுள்ளவைகளா யிருந்ததைப்பற்றியும், விலையேறப்பெற்ற தந்தங்கள், காகிதம் செய்வதற்குயோகப்படும் புற்கள் முதலியன மேற்கண்ட திரிப்போலிக்குத் தென்பாரிசத்தில் சுமார் 1500 மைல் தூரத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, திரிப்போலியிலேயே விற்கப்படுவதைப்பற்றியும் திரிப்போலி விஷயத்தில் இன்னும் பேராசை அளவு கடந்துண்டாய்விட்டது; இவற்றோடு இத்தாலியில் செய்யப்படும் சாமான்களை, ஐரோப்பாவின் போட்டியால்வரும் கஷ்டத்தையொழித்துவிற்று இலாபத்தையடைவதற்கும், உள்நாட்டிலிருந்துவரும் பொருள்களை ஏற்றுமதிசெய்வதற்கும் திரிப்போலி, தகுதியுடையதாயிருக்குமென்ற எண்ணமும் இவர்களுக்கு நன்றாய்ப்பதிந்துவிட்டது. மேலும், இந்தத் திரிப்போலிக்குப் பக்கத்தில் தக்க எதிரிகளில்லையென்றும், இது தங்களுடைய இத்தாலியாவுக்கு நேர்தெற்கே மிக்கசமீபத்திலுள்ளதென்றும், இதற்கிடையிலுள்ள கடலில் ஒருவருடைய [illegible]மே

விஷத்துக்கு மெய்யான மந்திரம்.

நமது ஹைதராபாத் கனம். நிஜாம் அவர்களுடைய பெயரைச்சொன்னமாத்திரத்தில் விஷம் தீரும்படியாக அவர்கள் ஒருவகைச்சித்தியடைந்திருந்தார்கள். அந்த விபரங்கண்டு மந்திரமாகச்சொல்லவேண்டிய அவர்கள் பெயருடன் பல விளம்பரங்கள் வெளிப்படுத்தியிருந்தோம். அவற்றின் உதவியைக்கொண்டு அநேகர் ஆச்சரியப்படும்படி பல விடங்களில் விஷங்களைத்தீர்த்துக் கடிதங்கள் எழுதினார்கள். எந்தவகைமந்திரத்தால் தீராத கொடியவிஷங்களும் தீர்ந்திருக்கின்றன. இத்தகையமந்திரம் உலகத்தில் பரவிவரும்போது திடுமென நிஜாமவர்கள் காலமாய்விட்டார்கள். அதனால், இனி என்செய்வதென்று நாம் யோசித்திருந்தோம். அப்படியிருந்தகவலை தீரும்படி இப்போது அவர்கள் பேருக்குப்பதிலாக அவர்களின் குமாரரவர்களின் பெயரைச்சொன்னால் முன்போலவே விஷம் நீங்குமென்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. ஆதலால் இனி அந்தப்பெயரைச்சொல்லி எல்லோரும் விஷத்தைப்போக்கிக்கொள்ளலாம். விஷத்தை இறக்கவேண்டியகாலத்தில் அவர்கள்பெயரைச்சொல்லி மந்திரம் உச்சரிக்கும் விபரமாவது:—

"ஏ விஷமே! உனக்கு மீர்உஸ்மான் அலிகான் அவர்களுடைய சத்தியம் ஏற்பட்டிருக்கிறது; இறங்கிப்போ; நான் இதைப்பற்றி ஒருமாதத்துக்குள் அவர்களுக்குத்தெரிவிப்பேன்."

இந்த மந்திரத்தை விஷந்தீண்டினவனுக்குக் கேட்கும்படி உரத்துச்சொல்லிவிடவேண்டியது. உடனே விஷம் நீங்கிவிடும். அதன்மேல், மேற்கண்டமந்திரத்தில் குறித்தபடி இவ்வாறுவிஷம்நீங்கிய விபரத்தைப்பற்றி ஒருமாதத்துக்குள் நிஜாம் அவர்களுக்கு. "தங்கள்பெயரால் இன்னபெயருடையவர்க்கு விஷம் தீர்ந்தது" என்று கடிதமெழுதிவிடவேண்டும். அவ்வாறு எழுதும் கடிதத்தின்மேல் கவரின் ஒருமூலையில் "பாம்பு விஷம்" என்று அவர்களுக்கு அடையாளம் தெரியும்படி எழுதிவைக்கவேண்டும். கடிதமெழுதுவதாகக்குறிப்பிட்ட நாளைக்குள் எழுதாவிட்டால் மறுபடியும் விஷம்வந்துவிடும். ஆதலால் தவறாமல் கடிதமெழுதவேண்டும். மந்திரம் சொல்லும்போது கடிதம் எழுதுவதற்குச்சொல்லும் நாளை இஷ்டம்போல் மூன்றுவருஷத்துக்கு அதிகப்படாமல் ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்தமந்திரத்தை விஷம்தீண்டினவன் தனக்குத்தானேயும் சொல்லிக்கொள்ளலாம். பிரக்ஞை தப்பினவனுக்கும் ஆடு மாடு முதலியவற்றிற்கும் காதில்சொன்னால்போதும். விஷம் தீர்ந்ததைப்பற்றி நிஜாம் அவர்களுக்கு எழுதும்கடிதத்தின் மேற்கவரில் "ஹைதராபாத்து, டக்கான்" என்று விலாசமெழுதினால் அவர்களுக்குக்கிடைத்துவிடும். அது கிடைத்தவுடன் அவ்விஷயத்தை ஒப்புக்கொண்டதாக அவர்கள் பதில் எழுதுவார்கள்.

துருக்கியர்க்கும், இத்தாலியர்க்கும் நடக்கும் யுத்தசெய்திகள்.

சில வாரங்களாகத் துருக்கியர்க்கும் இத்தாலியர்க்கும் இடையில் யுத்தம் நடந்துவருவதை நண்பர்கள் எல்லோரும் அறிவார்கள். இந்த யுத்தம் தோன்றியதற்குப் பல காரணங்களுண்டு. அவையாவன:—

இத்தாலியர்களுக்கு ஆபிரிக்கா முதலிய வெளிநாடுகளில் செல்வமிக்க இடமொன்றும் சுவாதீனத்திலில்லை. மற்ற ஐரோப்பிய ராஜாங்கத்தாருக்கெல்லாம் ஆப்பிரிக்கா முதலிய விடங்களில் வளமிகுந்த பல நாடுகளிருந்தும் இவர்களுக்கு மாத்திரம் மேற்கண்டவாறு இல்லாதிருப்பது மிக்க விசனத்தையுண்டாக்கிற்று. அதனால், தாங்கள் வியாபாரத்தின் பொருட்டாகப்போய்ப் பிரவேசித்து உள்மர்மங்களையெல்லாம் அறிந்து பொருளீட்டிச் சுகம்பெற்றுவருவதற்கிடமாயிருப்பதும், மிக்க செல்வமோங்கியதும், துருக்கியருக்குச் சொந்தமானதுமாகிய திரிப்போலியைக் கைப்பற்றிக்கொள்ள நெடுங்காலம் மனதிற்குள் இரகசியமாகக் கருதிவந்தார்கள். இப்படிக் கருதியிருந்தஇவர்களுக்கு அந்தத் திரிப்போலியின் வடபாகமும், சிரனிஷியா மாகாணமும் வியாபாரத்துக்கு மிகயோக்கியமுள்ளவைகளாயிருந்ததைப்பற்றியும், விலையேறப்பெற்ற தந்தங்கள், காகிதம் செய்வதற்குபயோகப்படும் புற்கள் முதலியன மேற்கண்ட திரிப்போலிக்குத் தென்பாரிசத்தில் சுமார் 1500 மைல் தூரத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, திரிப்போலியிலேயே விற்கப்படுவதைப்பற்றியும் திரிப்போலி விஷயத்தில் இன்னும் பேராசை அளவு கடந்துண்டாய்விட்டது; இவற்றோடு இத்தாலியில் செய்யப்படும் சாமான்களை, ஐரோப்பாவின் போட்டியால்வரும் கஷ்டத்தையொழித்துவிற்று இலாபத்தையடைவதற்கும், உள்நாட்டிலிருந்துவரும் பொருள்களை ஏற்றுமதிசெய்வதற்கும் திரிப்போலி, தகுதியுடையதாயிருக்கிறதென்ற எண்ணமும் இவர்களுக்கு நன்றாய்ப்பதிந்துவிட்டது. மேலும், இந்தத் திரிப்போலிக்குப் பக்கத்தில் தக்க எதிரிகளில்லையென்றும், இது தங்களுடைய இத்தாலியாவுக்கு நேர்எதிரே மிகச்சமீபத்திலுள்ளதென்றும், இதற்கிடையிலுள்ள கடலில் இருவருடைய ஹிம்மையுமே

றார்கள்; இஸ்தம்பூல் வாசிகளால் ஒரு பாங்கை ஏற்படுத்தும்படி செய்து நமது பாங்கிகளின் சிறப்பையும் வரும்படியையும் குறைக்கின்றார்கள்; ஆதலால், நம்முடைய முன் உத்தேசப்படி படையெடுத்து திரிப்போலியை நம்வசப்படுத்திக்கொள்வதே நலம்" என்று மிகவும் தப்பான சதியாலோசனைகளைத் தீர்மானித்து, துருக்கி கவர்ன்மெண்டார் இவர்கள் செய்த அக்கிரமங்களையெல்லாம் பொறுத்து இவர்களுக்கு நன்மைசெய்து கொண்டுவந்த நன்றியை அணுவளவும் கருதாமல் அக்கிரமமாய்ப் படையெடுக்கத் துணிந்து, சென்ற செப்டம்பர்மாதத் தொடக்கத்திலேயே ஆரம்பித்து யுத்தத்திற்கு வேண்டிய காரியங்களையெல்லாம் இரகசியமாகச் சித்தப்படுத்திக்கொண்டு, துருக்கி கவர்ன்மெண்டாருக்கு, "நீங்கள் திரிப்போலியில் வியாபார சம்பந்தமாகப் பல ஜனங்களையும் தூண்டிவிட்டு எங்களுக்குக் கெடுதிசெய்து வருகின்றீர்கள்; இதைப்பற்றிப் பலமுறை தெரிவித்தும் கவனிக்கவில்லை; ஆதலால், நாங்கள் திரிப்போலியையும், சிரேனிஷியாவையும் கைப்பற்றிக் கொள்ளப்போகிறோம்; இதற்கு நீங்கள் எவ்வித ஆக்ஷேபமும் செய்யக்கூடாது; அவ்வாறு செய்தால் பெருஞ்சண்டையுண்டாகும்; 24. மணி நேரத்துக்குள் இவ்விஷயத்திற்குப் பதில் சொல்லவேண்டும்" என்று தெரிவித்து விட்டு, இப்படிப்படையெடுப்பதைப்பற்றி சென்ற செப்டம்பர்மீ 25உ இதர பவர்க்காரர்களுக்கும் தெரிவித்தார்கள்.

இப்படிச்செய்யவே இவர்கள் செய்கை மிகவும் மூடத்தனமானதென்றும், நியாயவிரோதமானதென்றும்பத்திரிகைகளெல்லாம் இவர்களை நிந்திக்கத்தலைப்பட்டன. துருக்கி கவர்ன்மெண்டார், "இத்தாலியர் நம்முடைய உணவைத்தின்றுநமக்குத்தீங்குசெய்ய மாட்டார்கள்" என்று தீர்மானித்திருந்தவர்களானபடியாலும், சமாதானத்தையே கருதியிருந்தவர்களானபடியாலும், யுத்த ஆயத்தமொன்றும் செய்யாமல் பொறுமைபூண்டு, இட்டாலியர் திடுமெனச்செய்த அடாச்செய்கையைப்பற்றி இதர ராஜாங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொண்டார்கள். இதற்கு அவர்கள் பாம்புக்குத்தலையும் மீனுக்கு உடலுமாயிருக்கும் விலாங்கு மீனைப்போன்று, வெளிக்குச்சமாதானம் செய்வதுபோலும் உள்ளே வேறுவிதமாகவும் நடித்து, "நீங்கள் திரிப்போலியின் பூரணபாத்தியத்தையும் இழக்கமுடியாதென்று சொல்வதால் சமாதானத்துக்கு ஏதுவில்லாமலிருக்கிறது; சமாதானத்தைப்பற்றிய அபிப்பிராயம் நீங்களே சொல்லவேண்டும்" என்று போக்கிடங்கெட்ட பார்ப்பானுக்குப் பொட்டைப்பசுவைத் தாரைவார்ப்பதுபோல் பட்டும்படாமல் பதில்கூறிவிட்டார்கள். இவர்களின் அந்தரங்கக்கருத்து ஆழ்ந்துபோசிப்பவர்களுக்கு விளங்காமலிராது. இவர்கள் இச்சமயம் இப்படி நியாயங்கருதாதிருப்பது ஒழுங்கற்றகாரியமாகும். இவர்கள் இப்படியிருந்தாலும் உலகத்திலுள்ள எல்லாஜனங்களும் இத்தாலியர்மீது மிகவும் அதிருப்திபடைந்திருக்கிறார்கள். இச்சமயத்தில் பவர்கள் மௌனஞ்சாதித்ததைப்பற்றி உலகில் என்னதீங்கு விளையப்போகின்றதோ என்று சந்தேகிப்பதற்கிடமுண்டாகிறது.

இது நிற்க; மேற்கண்டவாறு தெரிவித்த இத்தாலியர் உடனே துருக்கியிலும் மற்ற துறைமுகங்களிலும் நின்றுகொண்டிருந்த போர்க்கப்பல்களை இத்தாலிக்குத்தருவித்து இரண்டு யுத்தக்கப்பல்களையும், 4 காவற்கப்பல்களையும் திரிப்போலிக்கு அனுப்பினார்களென்றும், இவ்வாறு அனுப்பும்போது இத்தாலிய ஜனங்கள் இந்தப்படையெடுப்பு மிகவும் அக்கிரமமானதென்று தெரிந்து ரெயிலில் சென்ற போர்வீரரைக் கல்முதலியவற்றாலெறிந்து தடுத்தார்களென்றும், அவ்வாறுதடுத்துங் கேளாமல் சென்றார்களென்றும், அதன்மேல் மேற்கண்டபடி சென்ற கப்பல்கள் திரிப்போலித்துறைமுகத்தில் சேர்ந்துநங்கூரமிடப்பட்டதாகவும், நங்கூரமிட்டவுடனே யுத்தத்துக்கு ஆயத்தம்செய்துகொண்டு முன்கூறியபடியே 24 மணி நேரத்துக்குள் திரிப்போலியைவிட்டுவிடவேண்டும், அல்லது சண்டைதொடுக்க நேருமென்று தெரிவித்ததாகவும்; அதற்குத்துருக்கியர் அவர்களுக்கு அனுகூலமானபதில் சொல்லாததால் உடனே யுத்தத்துக்கு ஆரம்பித்து விட்டார்களென்றும், அத்தருணத்தில் துருக்கியர் பவர்களுக்குத்தெரிவித்தார்களென்றும், பின்பு துருக்கிக்கப்பல்கள்திரிப்போலிக்கு வராதபடி கிரீஸ்கரையிலிருந்து திரிப்போலிவரையும் சண்டைக்கப்பல்களை நிறுத்த இத்தாலியர் ஏற்பாடுசெய்தார்களென்றும், மத்தியதரைக்கடலில் சஞ்சரித்துக்கொண்டிருந்த துருக்கிக்கப்பல்களை எதிர்க்க ஆரம்பித்தார்களென்றும், அதன்மேல் திரிப்போலியை விட்டுவிட்டால் 25 லட்சம் ரூபா கொடுப்பதாகத் துருக்கியர்க்கு அறிவித்தார்களென்றும், அதற்கவர்கள் இணங்கவில்லையென்றும், பின்பு இத்தாலியர், துருக்கியின் மேற்குக் கரையைத்தாக்கி அவ்விடத்திலுள்ள பிரிவிஜா கவர்னரைப்பயமுறுத்த அவர் அதற்கஞ்சவில்லையென்றும், இஃதொரு பக்கமிருக்க, திரிப்போலியில்

இவர்கள் பீரங்கிகளை உபயோகித்தார்களென்றும், அங்கிருந்த துருக்கிப்பீரங்கிகள், இத்தாலியர் அதிக தூரத்திலிருந்தபடியால் அவர்களைத்தாக்க முடியவில்லையென்றும், அதில் துருக்கியருள் சிலர் சேதத்தையும் காயத்தையும் அடைந்தார்களென்றும், பின்பு இத்தாலியர் திரிப்போலியை வசப்படுத்தி சிக்னர் பொரிடோல்மோ என்பவரை, கவர்னராக நியமித்துக்கொண்டார்களென்றும், அக்டோபர் மாசம் 10உ டாப்ருக் என்றபட்டணத்தையும் இத்தாலியர் பிடித்துக்கொண்டார்களென்றும், திரிப்போலியிலிருந்த துருக்கியசேனைகள் இஸ்தம்பூலின் உத்தரவை எதிர்பார்த்து, திரிப்போலிக்கு 5 மைல் தூரத்திலுள்ள மலைகளிலிருக்கின்ற கோட்டைகளைப்பலப்படுத்தி அவ்விடங்களில் தங்கியிருந்ததாகவும், 2200 ஆட்களையுடை இத்தாலியசேனை திரிப்போலிக்குவந்திருந்ததாயும், இதற்குமத்தியில் சில துருக்கிப்படைகள் சேதமாயிருப்பதாகவும், இவற்றோடு 167 வீரர்களும், ஆயுதங்களுமடங்கிய ஒரு துருக்கிபக்கப்பலை இத்தாலியர் பிடித்துக்கொண்டார்களென்றும், முடிவாக இத்தாலியர் ஹோம்ஸ், டெர்னு, பெங்காசி என்றபட்டணங்களையும் கைப்பற்றிக்கொண்டார்களென்றும், பெங்காசியையும் டெர்னுவையும் பிடிக்கும்பொழுது துருக்கியர் மிக்க கோபத்தோடு எதிர்த்தார்களென்றும், திரிப்போலியின் எல்லையில் அடிக்கடி துருக்கிவீரர்கள் தோன்றி இத்தாலியர்களைத் துப்பாக்கிகளாலும் பீரங்கிகளாலும் சுட்டுத்தாக்கி வந்ததாகவும், துருக்கிசைனியத்தின் கமாண்டராயிருந்த முனிர்பாஷாவை, தங்கள் நோக்கத்துக்கிணங்கி வீரமாக வேலைசெய்யவில்லையென்று சைனியஜனங்களே நீக்கிவிட்டு நிஷியத்பே என்பவரை அவ்வேலைக்குநியமித்துக்கொண்டதாகவும், மற்றொருசமயத்தில் துருக்கிவீரருக்கு 100 ஒட்டகைகளில் போய்க்கொண்டிருந்த உணவுப்பொருள்களை திரிப்போலியில் இத்தாலியர்கைப்பற்றிக்கொண்டதாகவும், பெங்காசியைப்பிடிக்கும் சமயத்தில் இத்தாலியரில் 22 பேரும், துருக்கிகளில் 200 பேரும் சேதமானார்களென்றும், இன்னும் பல பல வகையில் இத்தாலியர் ஜெயங்கொண்டார்களென்றும் தந்திகள் இம்மாதம் 6உ வரையில் எட்டிக்கொண்டிருந்தன. இங்கிலீஷ் பத்திரிகைகளில் வரும் தந்திகளெல்லாம் இத்தாலிய கவர்ன்மெண்டாரால் கொடுபட்டவைகள். இவர்கள் சண்டையின் உண்மைச்செய்தியைச் சொல்லாமல் பொய்யான சமாசாரங்களையே வெளிப்படுத்தினார்கள். இவர்களுடைய தந்திகள் உண்மையானவை

யல்லவென்று ரூட்டர்க்காரரும் இதுவரையில் சந்தேகங்கொண்டிருந்தார்கள். ஆனால், துருக்கியருக்கு, ரூட்டருக்கு நேரே தந்தி கொடுப்பதற்குவழியில்லாமலிருந்தபடியால் இங்கிலீஷ் தந்திகளில் துருக்கியருடையவிஷயம் ஒன்றும் வெளிவரவில்லை. துருக்கியிலிருந்துவரும் பத்திரிகைகளைக்கவனிக்கும்போது இத்தாலியர்சொல்வதெல்லாம் முழுப்பொய்யென்று விளங்கிற்று. அக்டோபர் மாசம் 23உ வரையில் 18000 இத்தாலியர்கள் மரணமானார்களென்றும், மூன்று இத்தாலியப்போர்க்கப்பல்கள் கடலுக்குள் தாழ்த்தப்பட்டனவென்றும் செய்தி எட்டுகின்றது. கப்பற்படையில் பலஹீனமுள்ள துருக்கியர்கள் இத்தாலியர்களுக்கு இவ்வளவு நஷ்டம் உண்டுபண்ணினது வியக்கத்தக்கதே. இத்தாலியர்கள், துருக்கியருடைய சாதாரணமான சிறு கப்பல்கள் இரண்டுமூன்றைப்பிடித்துக்கொண்டு துருக்கியருக்குப் பெரும்நஷ்டத்தை விளைத்துவிட்டதாகப் பொய்க்குதூகலம் அடைகிறார்கள்.

இத்தாலியருடைய படாடோபத்தால் மறைக்கப்பட்டு வந்த உண்மைவிஷயம் எவ்வளவுநாளைக்கு மறைந்துகிடக்கும்? இம்மாதம் 5உ ரூட்டருக்கு உண்மையான தந்திகள்எட்டியிருக்கின்றன. அரபிகளுடையகையில் இத்தாலியர்கள் அதிக உதைவாங்கினார்களென்று செய்திதெரிகிறது. இத்தாலியர்கள் திரிப்போலியைப் பிடிப்பது எவ்வளவு இலகுவென்றும், சீக்கிரம் முடிவடையக்கூடியதென்றும் நினைத்தார்களோ அவ்வளவு எளிதில் முடியக்கூடியதாயில்லை. இப்போதிருக்கும் நிலைமையை நோக்கும்போது இந்தயுத்தம் நெடுநாள் தொடரும்போலிருக்கிறது. இத்தாலியருக்கு ஒவ்வொருநாளைக்கும் பத்துலட்சம்பவுன் செலவாகிக்கொண்டிருக்கிறது. தங்களால் ஆனவரையில் ஒருகைபார்க்காமல் விடுவதில்லையென்று துருக்கியர் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இத்தாலியர்கள் யுத்தத்துக்குள் முன்யோசனையின்றி நெடுந்தூரம் தலையை நுழைத்துவிட்டார்கள். ஆரம்பித்ததை விடக்கூடாதென்று அவர்களும் பிடிவாதம் செய்கிறார்கள். துருக்கியர் ஆரம்பத்தில் பலஹீனமுள்ளவர்போல வெளிக்காட்டி இப்பொழுது தங்களுடைய சிங்கத்தன்மையை வெளிப்படுத்தி, திரிப்போலியை இத்தாலியருக்காவது வேறு நாட்டாருக்காவது விடுவதில்லையென்று உறுதிகொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய உண்மைத்தன்மை இன்னதென்று விளங்குவதற்கு முன் அவசரபுத்தியுடைத்த சில பத்திரிகைகள் துருக்கியருடைய பீரங்கிகளைப் பலஹீன

மானவையென்று பரிகசம்பண்ணத் துணிந்துவிட்டன. துருக்கியருடைய குண்டுகள் பலஹீனமானவையல்ல வென்று அப்பத்திரிகைகள் சீக்கிரம் தெரிந்துகொள்ளும். திரிப்போலியை விட்டுவிட்டால் அதைப்போன்ற அவமானமுள்ளவிஷயம் வேறில்லையென்றும், துருக்கியர்கள் இராஜ்ஜிய தந்திரவிஷயத்தில் பலஹீனமாயிருப்பதுபோல் யுத்தவிஷயத்திலும் சோம்பேறிகளாகக் கருதப்படுவார்களென்றும் துருக்கி யுத்தமந்திரி அபிப்பிராயப்படுகிறார். திரிப்போலியை இழக்கநேரிட்டால் துருக்கிராஜ்ஜியமே நாளுக்குநாள் குறைந்து ஐரோப்பாவிலிருந்து அப்புறப்படுத்தப்படுமென்றும் எண்ணுகிறார். யுத்தாவேசங்கொண்ட துருக்கியர்கள் எப்பிரஸ் என்னும் இடத்திலுள்ள துறைமுகங்களைப் பாதுகாக்கும்பொருட்டும், அவசியம் நேரிட்டால் இத்தாலியருடன் சண்டைசெய்வதற்கும், தங்களுடைய யுத்தக்கப்பல்களை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், இத்தாலியருக்கு முன் துருக்கியருடைய கடற்படை நிலைநிற்கமுடியாது. உயிரைக்கொடுத்தும் மானத்தைக்காப்பாற்றவேண்டுமென்று துணிந்திருக்கும் துருக்கியர், தங்களுடைய கப்பல்கள் நாசமடைவதைப்பற்றி அஞ்சமாட்டார்களென்று கருதுகிறோம். உயிர்போகும்வரையில் ஒருகை பார்த்தேவிடுவார்கள். கடற்படையில் இத்தாலியர் உயர்ந்தவராயினும் திரிப்போலியில் இவர்களுடைய நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறது. திரிப்போலியை இலேசாகப்பிடித்து விட்டதாக நினைத்தார்கள். கோட்டையைப்பிடிப்பது பெருங்காரியமன்று; தேசத்தைப்பிடிக்கும் காரியமே பெரிதாகும்; உள்நாட்டுக்குள் பிரவேசித்துச் சுகமாக இருந்தாற்றான் இத்தாலியர் ஜெயமடைந்தவராவர்; உள்நாட்டுக்குள் பிரவேசிப்பது எப்படி? துருக்கிச்சைனியத்தோடு அரபிகளுடைய படைகளும் கணக்கில்லாமலிருக்கின்றன; சுறுசுறுப்பு, குண்டுக்கு அஞ்சாத்தன்மை, பீரங்கிக்குத் தப்பிக்கொள்ளும் சாமர்த்தியம் முதலியவை அரபிகளுக்குண்டு. இத்தாலியருடன் பெரும்போர் செய்யாவிட்டாலும் அவர்களை உள்நாட்டிக்குள் பிரவேசிக்கவிடாமல் சிறு சிறு சண்டைகள் போட்டுக்கொண்டேயிருப்பார்கள். இதைப்பொறுத்துக்கொள்வதுதான் இத்தாலியர்க்குக்கஷ்டம். இத்தாலியில் குதூகலம் அதிகமாகக்காணப்படுகிறது. யுத்தத்தில் நேரிடும் நஷ்டத்தைப்பொருட்படுத்தவேண்டியதில்லையென்று அவர்கள் சொன்னபோதிலும் இத்தாலியரைப்போன்ற ஏழைக்குடிகளுக்கு நாள் ஒன்றுக்குப் பத்துலட்சம் பவுன் நஷ்டம் விளைவதென்றால் அஃது அவர்களால் பொறுக்கக்கூடியகாரியமன்று. இவ்வளவு நஷ்டத்தோடு கூடிய யுத்தம் இன்னும் அநேகம்நாள் நடக்கும்போலிருக்கிறது. துருக்கியர் சமாதானத்துக்கு உடன்பட்டாலும் திரிப்போலியிலுள்ள அரபிகுடிகள் உடன்படார்கள். அவர்களை அடக்குவதென்றால் அதிகப்பணச்செலவுசெய்து இருப்புப்பாதைகளும் இதரசௌகரியங்களும் இத்தாலியர் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இத்தாலியர் முதலில் உத்தேசித்திருந்த பணச்செலவைக்காட்டிலும் அநேகம்மடங்கு அதிகமான நஷ்டமுண்டாகும். அவ்வளவுபணமும் வேறு நாட்டாரிடம் கடன் வாங்கவேண்டும்; கடனென்றால் எவ்வளவோ வட்டி நஷ்டமுண்டாகும்; இவற்றையெல்லாம் நோக்கும்போது இத்தாலியர்க்கு ஏதோ துர்அதிருஷ்டமானகாலம்விளைந்திருக்கிறதென்று நினைக்க ஏதுவுண்டாகின்றது.

இத்தாலியர்கள்இதுவரையில் உலகத்தில்காணக்கிடைக்காத அவ்வளவு அநீதியும் அக்கிரமும் பொருந்திய யுத்தத்தைத்துருக்கியர்மேல் கிளப்பினதால் அவர்களை ஆண்டவன் மறந்துவிடவில்லையென்று தெரிகிறது; இத்தாலியருக்கு உண்மையான விரோதிகள் துருக்கியரல்லர்; அல்லாகுதஆலாவே இத்தாலியருக்கு விரோதமாகச்சண்டைசெய்கிறான்போலிருக்கிறது. இந்திய முஸ்லிம்கள் துருக்கியின் க்ஷேமத்தைக்கோரி ஆண்டவனிடம் துஆ கேட்கிறார்கள் என்னும் விஷயத்தைப்பற்றி வடஇந்தியாவிலுள்ள ஒருபத்திரிகை முஸ்லிம்களைப் பரிகசப்படுத்தி ஒருசமாசாரம்வெளிப்படுத்தியிருக்கிறது. அப்பத்திரிகைக்கு ஆண்டவனுடைய செய்கையில் நம்பிக்கை யில்லாமற்போயினும் முஸ்லிம்களுக்கு உறுதியான நம்பிக்கையுண்டு. முஸ்லிம்களுடைய வேண்டுகோளுக்கிரங்கி அல்லாகுதஆலா இத்தாலியருக்குத் துன்பம்செய்ய ஆரம்பித்திருக்கிறான். துருக்கியரோடு சண்டைசெய்வதே இத்தாலியருக்கு முடியாமலிருக்கும்போது அவர்களுடைய சைனியங்களுக்குள் காலராவந்து புகுந்துவிட்டது. ஆயிரக்கணக்கான இத்தாலியர்கள் மடிந்திருக்கிறார்கள். ஆனால் இத்தனைபேரென்று தெரியவில்லை. சுமார் 5000 க்கு மேற்பட்டு30000 வரையில் மடிந்திருக்கக்கூடுமென்று உத்தேசிக்கிறார்கள். இத்தாலியர்க்கு நாசகாலம் கிட்டிவிட்டதென்றேசொல்லாம். இத்தாலியருடைய சேனையல்லாமல் ஸிவில் உத்தியோகஸ்தர்களும் மடிகிறார்கள்.

திரிபோலியையும், சிரனிஷியாமாகாணத்தையும் சந்தேகமில்லாமல் முழுதும் பிடித்துவிட்டதாகவும் ஒருவாறு முடிந்து போன காரியத்தில் துருக்கியர் மறுபடியும் தலையிடுவது நன்றாயிராதென்றும், அவர்கள் திரிப்போலியை விட்டுவிட்டுச் சும்மா இருக்கவேண்டுமென்றும் இல்லாவிட்டால் அனாவசியமாக இரத்தச் சேதம் விளையுமென்றும் இத்தாலியர் இதரபவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறு குதூகலிக்கும் இத்தாலியருடைய கதியைச் சிறிது கவனிப்போம். திரிப்போலியிலுள்ள ரூட்டர் ஏஜெண்ட் மால்டாவுக்குப்போய் அங்கிருந்து இத்தாலியர்க்கு விரோதமாகத் தந்தி கொடுத்திருக்கிறார். அக்டோபர் மீ 23-26உகளில் நடந்தயுத்தத்தில் 2000 பேர்தாம் துருக்கியரும் அரபிகளும்சண்டைபோட்டார்களென்றும், அச்சண்டையில் இத்தாலியர்கள் மிக்கநெருக்கத்தையடைந்து அவர்களில் 1000 பேருக்குமேல் மரணமடைந்தும் காயம்பட்டும்போனார்களென்றும்தெரிகிறது. அந்த23உ கரையிலிருந்து 9மைல் திரிப்போலிக்குஉள்ளேசென்றஇத்தாலியர்இப்போது 4. மைலுக்கப்பால் போகமுடியாமல் துரத்தப்பட்டிருக்கிறார்கள். துருக்கியர்கள் தங்களுடைய பீரங்கிகளை இத்தாலியருக்கெதிரில் தள்ளிக்கொண்டும், அவர்கள்மேல் வெடிக்குண்டுகளை எறிந்துகொண்டும் எதிர்த்துப்போகிறார்கள். இத்தாலியபடைத்தலைவராகிய கனீவா என்பவருடைய இருப்பிடத்திற்குள்ளும் ஒரு வெடிக்குண்டு எறியப்பட்டது. இத்தாலியர் கடலோரத்தில் ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கிருந்து அவர்கள் நகரவேண்டுமானால் திரிப்போலியை விட்டுவிட்டுச் சமுத்திரத்திற்றான் செல்லவேண்டும். உள்நாட்டுக்குள் செல்லும் எண்ணம் இத்தாலியர்க்குத் தற்சமயம் இல்லை.

சிரனிஷியாவின் வளமானபாகமெல்லாம் துருக்கியர் வசமிருக்கின்றன. அவற்றின் நீளம் 15. மைல்; அகலம் 5. மைல். இவைபோக திரிப்போலிக் கோட்டைமட்டும் இத்தாலியர் வசமிருக்கிறது. அஃதும் துருக்கியராலும் அரபியராலும் முற்றுகை போடப்பட்டதுபோல் சூழப்பட்டிருக்கிறது. அங்கிருந்து ஒன்றும் செய்வதறகு இத்தாலியர் துணியவில்லை.

அரபிகளைக் கொல்லும்படி இத்தாலியர்கொடுத்த உத்தரவின் சமாச்சாரம் இப்போது வேறு விதமாகக் காணப்படுகிறது.

அக்டோபர் 23உ முதல் 27உ வரையில் தெரிந்த விஷயமாவது:—ஆயுதபாணியான ஒவ்வொரு அரபியையும் கொல்லும்படி ஜனரல் கனீவா என்பவர் உத்தரவுகொடுத்தார். ஆனால், இத்தாலிய அயோக்கியவீரர்கள் 4. நாள்வரையில் கையில் அகப்பட்ட எல்லா அரபிகளையும் கொன்றுவிட்டார்கள். இதற்கு உத்தரவாதி கனீவா என்பவரே. அக்டோபர் மீ 31உ நவம்பர் மீ 1உ ஆகிய இந்நாட்களில் 8000 துருக்கிகளும் 16000 அரபிகளும், 5000 இத்தாலியர்கள்மேல் விழுந்து அவர்களை நாசம்செய்து திரிப்போலியிலுள்ள 2. கோட்டைகளையும் அவர்களுடைய பீரங்கிகளையும், வெடிமருந்தையும் பிடுங்கிக்கொண்டார்கள்

திரிப்போலியில் 40000 துருக்கி வீரர்களும், 200000 கைதேர்ந்த அரபிகளும், 8000 மிசிர் அரபிகளும் இருக்கிறார்கள். இவர்கள் இத்தாலியருக்குப் பின்வாங்கமாட்டார்கள். உள்நாட்டுக்குள் இத்தாலியர் பிரவேசிக்காமல் அவர்களைத் தடுக்கும்பொருட்டுத் துருக்கியர் பலமான ஏற்பாடு செய்கிறார்கள். பென்காசிக்கு நெடுந்தூரம் தெற்கில் சேனூசிபோர்வீரராகிய மௌத்தாஹிர் அல்லா என்ற ஒருவர் 14000 வீரர்களுடன் ஒரு பலமான இடத்தில் காவல் காத்துக்கொண்டிருக்கிறார். அவர்களிடத்தில் சண்டைசெய்வதற்கும் ஆகாரத்துக்கும் வேண்டியவஸ்துக்கள் இருக்கின்றன. திரிப்போலிக்கும் பென்காசிக்கும் இடையிலுள்ள மர்ஜாஜாபுரான் என்னுமிடத்தில் துருக்கியர் படைவீடு ஏற்படுத்திக்கொள்ளப் போகிறார்கள். சாமிபே என்பவரும், பத்திபே என்பவரும் தம்தம்முடையசைனியங்களைத் திரிப்போலியின்வெவ்வேறிடங்களில்சேகரித்து வைத்திருக்கிறார்கள். இதுவரையில் துருக்கியர் இத்தாலியரை அநியாயமாகக் கொலைசெய்யவில்லை. இத்தாலியர் அரபிகளைக்கண்டபடி கொலைசெய்துவந்தார்கள். இந்த நவம்பர் மாசம் 6உ லக்னௌவிலும் சென்னையிலும் முஸ்லிம்களும் இந்துக்களும் கூட்டம் கூடி அரபிப்பெண்களையும் குழந்தைகளையும் இத்தாலியர் கொலைசெய்யக்கூடாதென்று தடுக்கும்படி இந்தியாகவர்ன்மெண்டாருக்குத் தந்தி அனுப்பியிருக்கிறார்கள். சென்னையில் இந்துக்களெல்லாம் மிகுதியாகப்பரிந்து பேசினார்கள். துருக்கியருக்கு உதவியாகப்பணம் அனுப்பும்பொருட்டுப் பணம் வசூல் செய்யப்பட்டது. ஜஸ்டிஸ் அப்துரஹீம் அவர்கள் 600 ரூபாகொடுத்தார்கள். மற்றவர்களும் தம் தம்மாலியன்றவரையில் வரிகொடுத்தார்கள்.

இத்தாலியர் உலகம் முடியும்வரையில் பழிப்புக்கிடமான யுத்தத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பித்தபிறகும் உலகத்தாரெல்லோரும் சந்தேகித்து நகைக்கும்படியான பொய்யானவிஷயங்களையும் வெளிப்பரப்பிவந்தார்கள். இந்த அயோக்கியதைநவம்பர்மீ 5உ யோடு வெளிப்பட்டுவிட்டது. அதற்குமுன் இத்தாலியர் மூலமாகவந்த தந்திகளைப்பார்த்துக்கொண்டு அவசரக்காரர்கள் துருக்கியரைப்பற்றி அகௌரவமாக நினைத்தார்கள். உண்மை அப்படியில்லை. இத்தாலியர் இதுவரை ஒருவகை ஜெயத்தையும் அடையவில்லை. ஆனால் அதிக நஷ்டமடைந்திருக்கிறார்கள். யுத்தம் முடியுமட்டும் இன்னும் அதிக நஷ்டமுண்டாகும். துருக்கியரை ஜெயிப்பது அவ்வளவு எளியகாரியமன்று. ஐரோப்பியவர்களெல்லாம் இனியாவது துருக்கியருடைய வீரத்தைத்தெரிந்துகொள்ளுமென்று நினைக்கிறோம். தினசரிப்பத்திரிகைக்காரர்கள் இத்தாலியருடைய பொய்யான தந்திகளைக்கண்டு ஏமாந்து போகாமல் நிதானமுள்ள உண்மைத்தந்திகள் வரும்வரையில் தம்முடைய அவசர அபிப்பிராயங்களை மட்டுப்படுத்தி வைப்பார்களாக. இந்த நவம்பர் மாசம் 5உக்குப் பிற்பட்ட உண்மைச்செய்தியை இங்கே வெளிப்படுத்தியிருக்கிறோம். இனிவரும் தந்திகளின் மெய்ப்பொய்யை நிதானித்தறிந்து அடுத்தமாதம் தொடர்ச்சியை எழுதுவோம்.

வர்த்தமானங்கள்.

ஆகாயவிமானத்தால் நேர்ந்த ஆபத்து:—சென்றமாதம் 19-ந்தேதி ஜார்ஜியாவென்னும் பட்டணத்தில் எலை என்பவர் தம்முடைய ஆகாயவிமானத்தின் மீதேறி மேலே சென்றபோது, அவ்விமானத்திற்குப் பழுதுநேரிட்டது; அதனாலவர் கீழேவிழுந்து தலையுடைந்திறந்துபோயினர்.

கந்தகச் சுரங்கத்தால் நேர்ந்த ஆபத்து:—சிசிலித்தீவில் ட்ரேபொனெல்லா என்னும் பிரதேசத்திலிருக்கும் கந்தகச் சுரங்கம் சென்றமாதம் 21-ந்தேதி தற்செயலாக வெடித்தது. அதனால் அப்போது அதில்வேலை செய்திருந்த 42-பேரு மிறந்துபோயினர்; அவர்களைத் தப்புவிக்கவேண்டுமென்று அச்சுரங்கத்துள்ளே யிருவர் சென்றனர்; அவரும் மாண்டுபோயினர்.

மிகவும்பெரிய கெம்பு:—ருஷிய சக்ரவர்த்தியின் மகுடத்தில் ஐந்து ரவைகளின் மத்தியில் பதித்துள்ள கெம்பே உலகத்துள்ள கெம்புகளில் மிகப்பெரியதாம். ஷை மகுடம்போன்ற மகுடம் எவ்விடத்துமில்லையாம்.

மரக்காகிதம்:—ஆஸ்திரியாவில் மரத்தைக்காகிதமாகச் செய்யும் தொழிற்சாலையொன்றிருக்கின்றது. அச்சாலையில் அறுக்கப்பட்டு விழும்மரத்துண்டுகள் 1¾-மணிநேரத்தில் காகிதங்களாக யந்திரங்களால் செய்யப்பட்டு, பத்திரிகைகளாக அச்சிடப்படுகின்றனவாம்.

மெயில்பியூனொருவன் சிட்சையடைந்தான்:—வாலாஜா நகர் மெயில் பியூன் நாராயணசாமி யென்பவன் ஷை நகர் போஸ்டாபீஸில் நோட்டுகளடங்கிய ரிஜிஸ்டர் கடித மொன்றைத்திருடினனென்று குற்றஞ்சாட்டப்பெற்று ராணிப்பேட்டை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டாரால் ஒருவருஷங் கடுங்காவற்றண்டனையும் 50-ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டான்.

ஒருபெருந் தீ விபத்து:—சென்றமாதம் 24உ மாலை 6-மணிக்குத் துருக்கியிலுள்ள ஸ்டாம்போல், பஜீஸித் என்னும் நகர்களில் தீ விபத்துண்டாயிற்று. அதே சமயத்தில் அத்தேசத்தின் பிரதான பட்டணமாகிய கான்டஸ்டாண்டி நோபிலிலும் பெருந் தீ விபத்து உண்டாயிற்று. அதனால் யுத்தமந்திரியின் வீட்டிற்கடுத்துள்ள 600-வீடுகள் சாம்பலாயின. ஸ்டாம்போலில் மாத்திரம் 2 இலட்சம் பவுண்டு மதிப்புள்ளசொத்து நாசமாயிற்று.

சென்னைப் புதிய கவர்னர்:—சென்னை ராஜதானிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் புதுக்கவர்னர் சர்தாமஸ் கிப்ஸன் கார்மேகல், இம்மாதம் 3-ந்தேதி கவர்னர் ஸ்தானத்தை வகித்தார். பழைய கவர்னர் சர் ஆர்தர் லாலி, அன்றே உதகமண்டலஞ்சென்றார். இனி அவர் டில்லி முடிசூட்டுத் தர்பாருக்குச்சென்று அங்கு நமது சக்ரவர்த்தியாரவர்களின் விருந்தினராகவிருப்பார்.

ஒரு பக்காதிருடன்:—தேவகோட்டை நாகலிங்கமுதலியார் சந்தைப்பேட்டையிலுள்ள ஜவுளிக்கடையில் இராகவாசாரி யென்பவன் 60-ரூபாய்க்கு ஜவுளிவாங்கி, வீட்டிற்குப்போய்ப்பணங்கொடுப்பதாக ஜவுளிக்கடைக்காரரிடத்திற் கூறி, ஒரு பையனை யழைத்துக்கொண்டுபோய், அப்பையனை யேமாற்றி யோடிப்போனான்.

பிறகு ஷை கடையின் ஆட்கள் தேடிப்போய், அவனைக்காரைக் குடியிற்கண்டு பிடித்துஉதைத்து, அவனிடத்துள்ள ஷை ஜவுளிகளை வாங்கிவந்தார்கள்.

கம்மலை விழுங்கி யிறந்தான்:—திண்டி வனந்தாலுக்காவிலுள்ள ஒரு கிராமத்தில் காதர் பாட்சாவென்பவன் கம்மலை விழுங்குகின்றேனென்று தன்னுடனிருந்தவர்களிடத்திற் பந்தயம் போட்டு, ஒரு கம்மலை விழுங்கினான். அஃதுள்ளே போகாமல் தொண்டையிற் சிக்கிக்கொள்ளவே, அவன் ஆசுபத்திரியிலிறந்து போனான்.

பம்பாய்க்கு இனிவருங் கவர்னர்:—பம்பாய்க் கவர்னர் ஸர் ஜார்ஜ் கிளார்க் அவர்கள் சிலதினங்களுள் தமது வேலையை விட்டு நீங்கிப் போவார்கள். அவர்களுக்குப் பிரதியாக ஸர் ஸ்டெய்னிங் எட்ஜர்லி என்பவர் வருவாரென்று கருதப்படுகின்றது.

ஒரு விநோதமான சிசுக் கொலை:—பஞ்சாபில் ஒரு ரயில்வே ஸ்டேஷன் சமீபத்தில் குடியிருக்கும் டெல்ஹி ஆங்கு என்பவனுக்கு இரண்டு மனைவியருண்டு; அம்மனைவியர்களில் ஒருத்திக்கு ஓர் ஆண்குழந்தை யுண்டு. அவ்வாண் குழந்தை யுடையவள் தன் கணவனோடு வயலுக்குச் சென்ற சமயத்தில் மற்றவள் அக்குழந்தையை அன்பின்றிக்கொன்று அதன் தலைகால்களை ஒருதுணியிற் சுருட்டிப் பெட்டிக்குள் வைத்து விட்டுப் பிறகு அதன் தேகத்தை ஒரு சட்டியிலிட்டுச் சமைத் துக்கொண்டிருந்தாள். அப்போது வயலுக்குச் சென்றவர்கள் வந்து நடந்த விஷயத்தை யறிந்து அப்பாதகியைப் போலீசார் வசம் ஒப்பிவித்தனர்.

ஓர் ஆச்சரிய மரணம்:-செப்டம்பர் மாதம்27-ந்தேதி புதன்கிழமை காலை மதராஸ் வாலண்டியர் கார்டைச் சார்ந்த சார்ஜண்ட் இன்ஸ்ட்ரக்டர் பாலர்டு என்பவர் தம் சயனக் கிருகத்தினின்றும் வெளிவராமையை அவரது வேலைக்காரர்கள் கண்டு, அச்சயனக் கிருகத்தினுள்ளே போய்ப் பார்த்தபோது அவர் கட்டிலில் பிணமாய்க் கிடந்ததையறிந்து போலீஸ் ஸ்டேஷனில் மரண சோதனை நடை பெற்றது.

42-முறை தண்டனையடைந்தவள்:—செப்டம்பர்மாதம் 28-ந்தேதி F-டிவிஷன் போலீசாரால் ஆண்டாள் என்பவள் சிந்தாதிரிப்பேட்டையில் குடிவெறியால் முறைதவறி நடந்தனளென்று குற்றஞ் சாட்டப்பட்டனள். இவள் கடைசி முறையாக இவ்வருடம்மே மாதம் 26-ந்தேதி குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டனையடைந்தனள்; பிறகு நான்கு மாதம் கிரமமாகவிருந்தனள்; இப்போது செய்த குற்றத்திற்காகப் பதினைந்து ரூபா அபராதம் அல்லது 7-நாள் காராக்கிருகதண்டனை யடைந்தனள்.

மீன்முள்ளால் நோந்த ஒரு குழந்தையின் மரணம்:— காஞ்சிபுரம் தாலுக்காவிலுள்ள தண்டலங் கிராமத்தில் 3 வயதுள்ள ஒரு பெண்குழந்தையின் தொண்டையில் ஒரு மீன்முள் மாட்டிக்கொண்டது. அதனை யெடுக்கப் பிரயத்தனங்கள்பலசெய்தும் முடியாமையால் தொண்டைவீங்கியது. குழந்தை ஜனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது. அஃது, அங்குச்சொஸ்தமடையாமல் மரணமடைந்தது. இம்மரணத்திற் கேது பெற்றோர்களின் அஜாக்கிரதையேயாம். எவரும் மீன்களை ஜாக்கிரதையோடு சாப்பிடவே வேண்டும்.

இந்தியாவிற்குச் சக்கரவர்த்தியவர்களின் விஜயம்:-நமது சக்ரவர்த்தியாரவர்கள் சக்ரவர்த்தினி யாருடன் இந்தியாவிற்கு விஜயஞ்செய்ய, நவம்பர் மாதம் 20-ந்தேதி புறப்பட்டுப் போர்ட்டு ஸெயிட்டுக்குவந்து சேருவார்.

பிரளயப் புளுகு:—லண்டனில் வசிக்கும் ஸ்டர்டி யென்னும் பாதிரியொருவர் 1916-வது வருஷத்தில்ஜலப்பிரளயத்தால் உலகம் முழுகிப்போமென்றுகூறுகின்றார். இவ்வாறு பலர்முன்பு கூறி அவமானத்திற் குள்ளா யிருக்கின்றனர்.

பெஷாவாரில் இஸ்லாமியா காலேஜ்:—இவ்வூரில் இக்காலேஜின் ஸ்தாபனத்துக்காகப் பணம் சேர்ந்து வருவதை நேயர்கள் அறிந்திருக்கலாம். இப்பொழுது இதற்கு லக்ஷ ரூபாய் சேர்ந்திருக்கிறதாம்.

ஸர் ஆர்தர்லாலி உதகமண்டலம் சென்றார்:—8உ மாலை 6-மணிக்கு ஸர் ஆர்தர் லாலி 17 மரியாதைக் குண்டுகள் போடவும் மிலிடரி துருப்புச் சிப்பாய்கள் சூழவும் ஜனங்களும் பெரிய மனுஷர்களும் காத்திருந்து வழியனுப்பவும் உதகமண்டலம் செல்வற்கு ஸெண்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்தார். அப்பொழுது எழும்பூர், திருவல்லிக்கேணி முதலிய விடங்களுக்குச் செல்லும் டிராம்வண்

டிகள் மேலே செல்லாமல் ஸெண்ட்ரல் ஸ்டேஷனிலேயே நிறுத்தப்பட்டன. பல கான்ஸ்டேபில்களும் ஸார்ஜண்டுகளும் வந்திருந்து கூட்டங்களை விலக்கிக்கொண்டிருந்தார்கள். துருப்புச் சிப்பாய்கள் வரிசை வரிசையாய் ஒரேசப்தத்துடன் நடந்து சென்றது பார்க்க வெகு சோர்த்தியாயிருந்தது.

ஒரு பிரம்மாண்டமான மலைப் பாம்பு:-சில தினங்களுக்கு முன் கல்கத்தா முனிசிபல் மார்க்கட்டுக்குக் கிழக்கே ஒரு வெறும் பெட்டியில் 25 அடி நீளமுள்ளதும், அதற்குத் தக்கபடி பருமனுள்ளதுமான ஒரு மலைப் பாம்பு இறக்கப்பட்டுக் கிடந்தது. அப்பொழுது பாம்பு ஜீவித்திருக்கவில்லை. இதைக் கண்டு ஜனங்கள் பெரும் வியப்புற்றனர். இது எவ்வாறு இங்கு வந்ததென ஒருவருக்கும் தெரியவில்லை. பாம்பு வேடிக்கை காட்டி ஜீவிப்பவன் ஒருவன் கல்கத்தாவுக்கு வரும்பொழுது அரவம் இறந்துபோனதைக் கண்டு, அதைக்குழிதோண்டிப் புதைக்கும் சிரமத்தை எடுத்துக்கொள்வானேனென, ஸர்க்காரே அக்காரியத்தைச் செய்யட்டுமேயென்று போட்டுவிட்டுப் போய்விட்டான்போலும்.

ஐம்பது அடி நீளமுள்ள இலை:— அமெரிக்காவில் உள்ள ஆமேசா என்னும் பெரிய நதிக்கரை யோரங்களில் வளரும் ஓர்வித மரத்தின் இலைகளொவ்வொன்றும் 50 அடி நீளமும் 12 அடி அகலமுமுள்ளதா யிருக்கின்றது. இதிலும் பெரிய இலைகள்உலகத்தில் வேறெங்குங்கிடையா.

முப்பத்துமூன்று பிள்ளைகளை யுடையவன்:—அமெரிக்காவிலுள்ள ஒட்டேவா பட்டணத்திற் கருகேயுள்ள ஹஸ் நகரத்தில் வசிக்கும் குருஸ் என்னுமொருவன் 3 மனைவியர்களை மணந்து 33 பிள்ளைகளைப்பெற்றனன். அவனிறந்தபோது அவர்களுள் இறந்தவர்கள்போக 24 பிள்ளைகள் வந்திருந்துமரணச்சடங்கினைநிறைவேற்றினார்கள். அவர்களும் தந்தையைப்போன்று புத்திரவிருத்தியுடையவர்களாயிருக்கின்றார்கள். அவனது முதல்மனைவிக்குப் பிள்ளை 1. 2-வதுமனைவிக்குப் பிள்ளைகள் 21. மூன்றாவது மனைவிக்குப் பிள்ளைகள் 13. ஆம். இம்மூவரும் ஏககாலத்திலவனுக்கு மனைவியரா யிருந்தவர்களல்லர்.

(அரியநாவல்)

பண்டிதை மெஸ்மரிஸா.

(செப்டம்பர் மீ-த் தொடர்)

“மறுமுறையும் அந்த அழகிய பண்டிதை மேஸ்மரிஸா வந்துவிட்டாள்போலும்?”

“அப்படித்தான் தோன்றுகின்றது; இன்றுமுதல் சமாசாரப் பத்திரிகைகள் இவ்விஷயத்தைப்பற்றி மிகுதியாக எழுத ஆரம்பிக்கும்; உம்மைப்போன்ற சண்டைக்கப்பற்காரர்களையே பத்திரிகைகள் தூஷிக்கும்.”

“நான் ஆங்கிலேயக் கடற்படைக்காரனாயிருந்து இவ்வாறு ஒரு பெண்ணையில் தோல்வியடைந்தால் அரசாட்சியார் என்னை இலேசில் விடார்.”

“இதோ! உடனே நீ உன் கப்பலுக்குப் போய்ச்சேர்.”

“நான் கரைக்கு வந்துவிட்டேன்; கப்பலில் ஒருவருமில்லை; உடனே புறப்படவேண்டும்; ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டிருக்கும் பத்திரிகைக்காரர்கள் ஒருமுறையேனும் கடற்கொள்ளைக்காரர்களைக் கண்டிருந்தால் கடற்படையைத் தூஷிக்கார்; யார் எவ்வாறு எழுதினாலும் இவள் ஒரு வியக்கத்தக்க பெண்ணாகவேயிருக்கிறாள்.”

“ஐயா! நீர் அவளிடம் அகப்பட்டுக்கொள்ளவேண்டாம்; அரசாட்சியார் உமக்குக் கடுந்தண்டனை விதிப்பார்; சிறிது காலமாக அரசாட்சியாரின் கப்பல்கள் மிக்க மோசம்போயிருக்கின்றன.”

இப்பொழுது நான் அவர்கள் சம்பாஷணையில் தலையிடலாமென்று நினைத்தேன்.

“இந்த ஏழைப் பாமரன்மேல் தயவுசெய்து யாரேனும் அவளைப்பற்றி விஸ்தரித்துச் சொல்லுவார்களா? நான் கீழ்த்தேசத்துக்கு வந்தது முதல் எங்கே பார்த்தாலும் பண்டிதை மெஸ்மரிஸா—பண்டிதை மெஸ்மரிஸா—பண்டிதை மெஸ்மரிஸா; கொழும்பு கவர்னர் வீட்டில் விருந்து—பண்டிதை மெஸ்மரிஸா, யாக்கொஹாமா என்னுமிடத்தில் டீபார்ட்டி—பண்டிதைமெ

ஸ்மரிஸா; நாகசாக்கி யென்னும் கப்பல்—பண்டிதை மெஸ்மரிஸா என்று எல்லாம் பண்டிதை மெஸ்மரிஸா மயமாகவே யிருக்கின்றன. அவளுடைய கப்பல்களுள் ஒன்றற்கொன்றுள்ள நெடுவாசி மிகுதியாம். அதைப்பற்றி முழுதும் கேட்க எனக்கு அவாவுண்டு" என்று நான் சொன்னேன்.

அப்பொழுது அந்நால்வரில் ஒவ்வொருவரும் சொல்லமுன்வந்தார். நான் கையை உயர்த்திக்கொண்டு, "நீங்கள் ஆபத்தமாயிருப்பது போதாது; சிறிது என்மேல் இரக்கமும் வைக்க வேண்டும்; நால்வரும் ஒரே காலத்தில் சொல்ல ஆரம்பித்தால் நான் எவ்வாறு கிரகிக்கமுடியும்?" என்று வேண்டிக்கொண்டேன்.

அங்கிருந்த சீனச்சிறுவர்களில் ஒருவன் சப்தம்செய்யாமல் என்னிடம்வந்து ஒரு நெருப்புக்குச்சியைக் கிழித்து என்சுருட்டு நெருப்புப்பிடிக்கும் வரையில் பற்றவைத்தான்: பிறகு நான் ஒரு கறுப்பு வர்ணங்கொடுத்த நீண்ட பிரம்பு ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டு கதையை ஆரம்பிக்கும்படி சொன்னேன்.

"பாடி யென்பவனே சொல்லட்டும்; அவன்தான் தனக்கு எல்லாம் தெரியுமென்று சொல்லிக்கொள்ளுகிறான். பாடி! உனக்குத் தெரிந்ததை டாக்டருக்கு ஆதியோடந்தமாகச்சொல்" என்று ஒருவர் சொன்னார்.

சுந்தர்பன் எல்லோரையும் நிசப்தமா யிருக்கும்படிசொல்லித் தன்பலமுழுதையும் ஒன்றாகத்திரட்டிக்கொண்டு புராணப் பிரஸங்கராகிய சூதமுனிபோல் சொல்ல ஆரம்பித்தான்: "இந்தப் பண்டிதை மெஸ்மரிஸா யார்? அது ஒருவருக்கும் தெரியாத இரகஸ்யம். எங்கிருந்து அவள் வருகிறாள்? அது மகா இரகஸ்யம். அவள் பெயரென்ன? சீனதேசத்தார் கூப்பிடும் பண்டிதை மெஸ்மரிஸா என்னும் பெயரை நான் சொல்லவில்லை. அவள் உண்மைப்பெயர்? அது மகா இரகஸ்யம். நமக்குத் தெரிந்தவரையில் இவள் முதலில் கீழ்த்தேசத்தில் காணப்பட்டது. 18—௵ ஜூலை௴ 24௳ இரங்கூனில். அங்கே இவள் ஒரு சுதேச மன்னனைப்பிடித்து அவன் ஐசுவரியத்தில் ஒன்றரைக்கோடி ரூபாவரையில் கடற்கொள்ளைசெய்து அபகரித்துவிட்டாள். இத்தகைய காரியம் செய்தவர் வேறொருவராயிருந்தால் உயிரோடு பிழைத்துப்போகார். ஆனால், இவள் தப்பிக்கொண்டனள்; இவள் அபகரித்த பொருளும் அகப்படவில்லை. அதன் பிறகு மூன்று மாதமானபின் ஒருநாள் ஒரு மரக்கலம் சிங்கப்பூர்த் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்ட நாற்பத்தெட்டு மணிக்குள் எங்கிருந்தோ சீனப்படகுகள் வந்து அதைச் சூழ்ந்துகொண்டன; கப்பலிலுள்ளவர்கள் அதிக தைரியத்தோடு தடுக்கமுயன்றும் படகிலுள்ளவர் அக்கப்பலுக்குச் சொந்தமான ஐம்பதினாயிரம் சவரன்களையும், பிரயாணிகளுக்குச் சொந்தமான மூவாயிரம் பவுன்களையும் கொள்ளைகொண்டு போனார்கள்."

"இக்காரியங்களில் பண்டிதை மெஸ்மரிஸாவைச் சம்பந்தப்படுத்துவதற்குக் காரணம்யாது?"

"சீனப்படகுக்காரர் கொள்ளையடிக்கும்போது அங்கே ஒரு வெள்ளைக்கப்பல் சுற்றித்திரிகிறது; அது அவளுக்குச் சொந்தமென்று சொல்லுகிறார்கள்; கொள்ளை நடப்பதற்கு முன் அக்கப்பலின் குறியைக்கொண்டே இவர்கள் நடக்கிறார்கள்; இருவருக்கிடையில் அடையாளம் காட்டப்படுகிறது; கொள்ளை நடந்தவுடன் கொள்ளைக்காரர்கள் நேரே அக்கப்பலுக்குச் செல்லுகிறார்கள்."

"நல்லது; மிகுதியைச்சொல்."

"மறு மூன்றுமாதம் வரையில் ஒன்றும் தெரியவில்லை; பிறகு சுராபாயாதேசத்துச் சுல்தான், பத்தேவியாவில் மனிதர்களாற் காணற்கரிய அழகுவாய்ந்த ஒரு பெண்ணைச் சிநேகிக்கும்படி நேரிட்டது. நாளுக்கு நாள் அவர்கள் நட்பு முதிர்ந்துவந்தது. பிறகு தன் ஊருக்குப் புறப்படும்போது, தனக்கு வழியனுப்புமாறு அச்சுல்தானைத் துறைமுகத்திலுள்ள ஒரு நீராவிக் கப்பலுக்கு அழைத்துச்சென்றாள். அவருக்கு உபசாரவார்த்தை சொல்லிக்கொண்டே கப்பலைப் பிரயாணப்படுத்திவிட்டாள். அதன் பிறகு அவருக்கு விலங்கிட்டு நாலுகோடி ரூபா கொடுத்தால் தான் சுயேச்சை பெறலாம் என்று உத்தரவளித்தாள். அதைக் கொடுத்துவிட்டு அவர் கரைவந்து சேர்ந்தார். அப்பால் இரண்டு மாதம் சென்றபின் ஹோங்கோங் நகரத்தில் ஜோஹர் தெருவில் வசிக்கும் பெருந்தனிகரான வாசியென்பவர், நாம் இப்போதிருக்கும் இதே ஹோட்டலில் ஓரழகியாகிய பெண்ணைக் கண்டார். அவள் அப்பொழுதுதான் பெற்றோரைவிட்டு ஓடிவந்துவிட்டதாகவும் தனக்கு இன்னது செய்வதென்று புலப்படவில்லை

பென்றும் சொன்னாள். முன்யோசனையில்லாமல் வாசியென்பவர் அவளை மணம்புரிய வேட்கைகொண்டார். அவள் அதற்கு உடன்பட்டவள்போல் ஒருநாள் அவரைச் சமுத்திரத்தில் படகுயாத்திரை செய்யும்பொருட்டு அழைத்துச்சென்றாள். அவள்பாலுள்ள விருப்பத்தால் அவர் உடனே அதற்குடன்பட்டுப் புறப்பட்டார். படகு சிறிது தூரம் சென்றவுடன் ஒரு வெள்ளைக்கப்பல் அங்கே தோன்றிற்று. உடனே வாசியென்பவருக்குச் சந்தேகம் பிறந்து அவள்மீது வைத்திருந்த மோகத்தைக்கைவிட்டார். அதைக்கண்ட அப்பெண் தன்கையிலுள்ள ரிவால்வரை அவர் தலைக்குநேரே பிடித்தாள். உடனே இருவரும் கப்பலில் சென்று சேர்ந்தனர். சுருங்கச் சொல்லுங்கால், வாசியென்பவர் திரும்பிவரும்போது ஐம்பதினாயிரம் சவரனுக்கு எழுதிக்கொடுத்து வந்தார். அவரைக்கரைக்கு அழைத்துவந்தவன் செல்வத்தைப் பெற்றுக்கொண்டுதான் மீண்டான். இவ் வாசியென்பவரைத் திருடிச்சென்றதாகச் சீன அரசாட்சியார் அவள்மேல் வைரம் வைத்திருக்கின்றனர். அவளைப்பிடிக்கப் பன்முறை முயன்றும் முடியவில்லை; ஓர் ஆங்கிலேயக்கப்பல் இரண்டு நாள் வரையில் அவளைப் பின்தொடர்ந்தது. பார்மோஸாஎன்னும் தீவுக்கருகில்அவள் மறைந்துபோனாள். மறு மூன்றுமாதம் வரையில் ஒன்றும் தெரியவில்லை. பிறகு கவர்னர் ஸர் பிரண்டர்காஸ்ட் என்பவரும் அவர் மனைவியும், “ஊலுமு” கப்பலில் யாத்திரைசெய்து வரும்போது ஓர் அபாயம் நேரிட்டது. கவர்னர் மனைவி விலையுயர்ந்த வயிரக்கற்கள் வைத்திருந்தாள். முப்பதினாயிரம் சவரன் பெறுமான இக்கற்களும் எண்ணாயிரம் சவரன் பெறுமான தங்கமும் ஷாங்ஹாய் நகரம் வருவதற்காகக் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஹோங்கோங் வந்துசேர்ந்தவுடன் தங்கமும், வயிரமும் காணப்படவில்லை. எவ்வளவு பிரயாசை பெடுத்தும் ஒன்றும் தெரியவில்லை. யாரேனுங்கள்வன் பனிமறைவில் மறைந்திருந்து வேறுகப்பலில் தாவிச்சென்றானோ, அல்லது இவர்கள் கப்பலிலே ஒளிந்துக் கொண்டானோ தெரியவில்லை. ஐசுவரியம்போனதில் ஒன்றும் சந்தேகமில்லை. கவர்னர் அக்கப்பல் தலைவரிடம் கள்வனைக் கண்டு பிடிக்கும்படி வற்புறுத்திச்சொன்னார். இரண்டு ரோவிப்படகுகள் பண்டிதை மெஸ்மரிஸாவைத் தேடிச்சென்றன. அவளுடைய கப்பல் இவர்கள் கண்ணில் புலப்பட்டும் பிலிப்பைன் தீவுக்கருகில் மூடுபனி மறைவில் மறைந்துவிட்டது. இவைதாம் அவளைப்பற்றிய சரித்திரங்கள். ஐயா டாக்டர்! உமக்கு இவ்வனைத்தும் ஆச்சரியமாகத்தோன்றவில்லையா?”

“மகா ஆச்சரியமாக விருக்கிறது. அவளையாராவது பார்த்திருக்கிறாரா?”

“அவள் இந்த ஹோட்டலில் இருக்கும்போது சுரபாயா சுல்தான், வாசி, சுதேச மன்னன் முதலியோர் அவளோடு தங்கியிருந்தார்கள்?”

“அவர்களெல்லோரும் அவளைப்பற்றி எவ்வாறு வருணிக்கிறார்கள்?”

“இருபத்தெட்டுப் பிராயமுள்ள ஒருசிறிய பெண்; உயர்ந்து வளர்ந்த மெல்லிய தோற்றமுடையவள்; மகாஅழகு வாய்ந்தவள், மதிபோன்ற முகமும் தங்கவர்ணமான மயிரும் உடையவள்; கிருஷ்ணன் வேணுகானத்தையும் ஏய்க்கும் குரல் வாய்ந்தவள்; அவளை மன்மதன் மனைவியென்றே சொல்லலாம்; ஆனால், அவள் ஒருவனை உற்றுநோக்கினால் அவனுடைய உள்ளத்தில் மறைந்துகிடக்கும் கருத்தைத் தெரிந்துகொள்ளும் கூரிய பார்வையுடையவள்; மனிதர்களை வசப்படுத்தும் மெஸ்மரிஸம் கற்றவள்; அவளுடைய மெஸ்மரிஸத்தின் பெருமையாற்றான் கீழ்த்தேசத்தாரெல்லோரும் அவளைப் பண்டிதை மெஸ்மரிஸா என்று சொல்லுகிறார்கள்.”

“பாடி! நன்கு சொன்னாய்; நீசொன்னதைக்கேட்டு இவர் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்” என்று ஒருவர்சொன்னார்.

“ஆனால், அவள் விஷயத்தில் மகிழ்ச்சி யடையக் காரணமில்லையோ? உண்மையில் அவளுடைய வாழ்நாட் சரித்திரத்தை யாரேனும் சொல்வாராயின் நான் கவனத்தோடு கேட்பேன்.”

“இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மானியா, சீனா, ஜப்பான் முதலிய தேசத்தார்களின் கப்பல் போக்கு வரவுசெய்யும் இச்சமுத்திரத்தில் அவள் அகப்படாமலிருப்பதன்றோ பெருவியப்பு” என்று அவர்சொன்னார்.

“அவளை ஏன் ஒருவரும் இதுகாறும் பிடிக்கவில்லை?”

“இந்த நிமிஷம் வரையில் உவள் அகப்படவில்லை. அவள் எவ்வளவு சாமர்த்திய சாலி! ஒருநாளிருந்த விடம் மற்றொரு நாளிருப்பதில்லை; அவளுடைய வெள்ளைக்கப்பல் இன்று சிங்கப்பூரில் காணப்படுகிறது; மறுநாள் மகாசார் என்னுமிடத்தில் ஒரு

தாம்பிர வர்ணமான கப்பல் காணப்படுகிறது; மற்றொருநாள் ஷாங்ஹாய் என்னுமிடத்தில் வெள்ளைப்பாய் கட்டிய கருங்கப்பலொன்று தோன்றுகிறது; போலீஸ் உத்திபோகஸ்தர்களும் கப்பலதிகாரிகளும் அவளைத்தேடிக் கண்பஞ்சடைந்து போகிறார்கள்."

"உண்மையில் நான் அவளைப்பார்க்க விருப்பங் கொள்ளுகிறேன்."

"ஐயா! அப்படிச் சொல்லவேண்டாம்; ஒருகால் அது நேரிட்டுவிடக்கூடும்; இங்கே அவளுடைய ஒற்றர்களில்லையென்று நினைக்கவிடமில்லை; மறுமுறை அவள் எங்கே காணப்படுவாளோ தெரியவில்லை; ஒவ்வோரிடத்திலும் அவளுடைய ஒற்றர்களிருக்கிறார்கள். கடற்கொள்ளைக்காரர்களிற் பாதிப்பேர் அவளுக்கு நண்பர்கள்."

"ஆனால், நீசொல்வது உண்மையாயினும் கேட்பவர்கள், ஒருபெண் இவ்வாறு செய்யமுடியுமோவென்று சந்தேகிப்பார்கள்; இஃதோர் ஆச்சரியமான கதை போலிருக்கிறது."

"ஆச்சரியமான கதை போலிருக்கவில்லை, இஃது ஆச்சரியமான கதையே; இதைக்கேட்டால் மிகுந்த துக்கமுண்டாகிறது சுரபாயா சுல்தானும் வயோதிகரான வாசியென்பவரும் அவளுடைய அனுபவத்தைக்கண்டறியுமாறு பாக்கியம் பெற்றவர்கள்; அவள் கப்பலைப்பற்றியும் அதன் அதிகாரிகளைப் பற்றியும் வாசி சொல்வது உமக்குத்தெரியுமா? இந்தப்பெண் தன்நாற்காலியிற் சாய்ந்துகொண்டு அரைக்கண்ணால் தம்மை உற்று நோக்கினபோது பச்சோந்தியைக்கண்ட மயில்போலத் தாம் எழுந்திருந்தும் பிறகு உட்கார்ந்தும் சிறிது கதறியும் உன்மத்தர்போல் மயக்கங்கொண்டும் நின்றதாக அவர் சொன்னபோது நாங்களெல்லோரும் ஒவெனக்கதறி யழுதோம்; அவர் அங் கப்பலில் அனுபவித்த இரண்டு மூன்று விஷயங்களைத் தம் ஆயுளளவும் மறக்க முடியாதென்று சொல்லுகிறார்."

"வாசியென்பவர் பரிசுத்தமான மனமில்லாதவரென்று எனக்குத் தோன்றுகிறது."

"அவர் நல்லொழுக்கமும், கூரியபுத்தியும், சமயோசிதமாக நடந்து கொள்ளும் சாதுர்யமும் அமையப் பெற்றவர்."

"எங்ஙனமாயினும் அவளைப்பார்க்கவேண்டுமென்னும் விருப்பம் எனக்கு மேன்மேல் அதிகரித்து வருகிறது."

"நல்லது; ஒருநாள் நீர் இவ்விடத்திற் காணாமற்போய்விட்டால் நாங்கள் ஒன்றும் ஆச்சரியமடையோம்; எல்லாத் தேசத்தாரும் அவளைப் பிடிக்க முயன்றுவருகிறார்கள்; பலமாதங்களுக்கு முன்னமேயே அவள் அகப்பட்டிருக்க வேண்டும்; இன்னும் அகப்படாமலிருப்பதுதான் எனக்கு ஆச்சரியமாகவிருக்கிறது."

"அவள் அகப்படாமலிருக்கிறாளென்பதில் எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை."

பிறகு மற்றொருமுறை எல்லோரும் சேர்ந்து தேக்கஷாயம் குடிக்க ஆரம்பித்தோம். இடக்கையில் தட்டைப்பிங்காணையும், வலக்கையில் டீக் கப்பையும் வைத்துக்கொண்டிருக்கும்போது அந்த ஹாலின் கதவிரண்டும் சடக்கெனத் திறந்தன. அப்பொழுது முகமூடி யிட்டுக்கொண்டு ஒரு பெரியவர் உள்ளே நுழைந்தார். தேகமுழுமையும் கறுப்பு ஆடையால் மூடியிருந்தார். இரண்டொரு நிமிஷம்வரையில் நான்கு புறத்தும் சுற்றிப்பார்த்து ஒன்றும் புலப்படாதவர்போல உட்கார்ந்திருந்தவர்களை நோக்கி வணக்கமாக வினவினார்.

"நான் இங்கு வந்ததை மன்னிக்கவேண்டும்; தாம்ஸன் என்பவர் அகப்படக்கூடிய இடத்தை உங்களில் யாரேனும் தெரிவித்தால் நான் மிகவும் நன்றியறிதலுள்ளவனாக நடந்து கொள்வேன்."

"நான்தான் அவன்!" என்று நாற்காலியினின்று எழுந்திருந்து சொன்னேன்.

"நான் சடக்கென வந்ததில் தாங்கள் வருத்தங்கொள்ள வேண்டாம்; ஆனால், தாங்கள் தயவுசெய்து என்னோடு ஐந்து நிமிஷம் சம்பாஷணை செய்யமுடியுமோ?"

"அப்படியே ஆகட்டும்."

அவர் நின்றுகொண்டிருந்த இடத்துக்கு நான் சென்று கதவண்டையில் ஒரு நாற்காலியில் அவரை உட்காரச்சொன்னேன்.

"ஐயா! மன்னிக்கவேண்டும்; ஆனால், நான் இப்போது வந்திருக்கும் காரியம் மகா இரகஸ்யமானது; ஒரு முக்கியமான காரியத்தினிமித்தம் தங்கள்பால் யோசிக்கவந்தேன்; நாமிருவரும் தனியே இருப்பதற்குரிய அறையொன்று இந்த ஹோட்டலில் இருக்கிறதோ?"

"நான் குடிக்கூலிக்கிருக்கும் என் அறை ஒன்றுதானிருக்கிறது; அங்கேசென்றால் வேறொருவரும் வாரார்."

"அது நன்று; நாம் அங்கேசெல்வோம்."

உடனே உப்பரிகையிலுள்ள என் அறைக்குச்சென்றே[illegible] அங்கே போகும்வரையில், கறுப்பு ஆடையால் தேகத்தையும் [illegible]கத்தையும் மூடிக்கொண்டு வந்திருக்கும் இந்தப் பெரியவருக்கு[illegible]ன் [illegible] காரியமிருக்கக்கூடுமென்று என்மனம் குழம்பிக்[illegible]ண்டிருந்தது. அவருடைய மாறுவேஷத்தையும் இரகஸ்யத்தையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும்அவா எனக்குஅதிகமா[illegible] உண்டாயிற்று; நான் ஒரு முறையும் பார்த்திராத ஒரு புதுமனி[illegible]ரென்பது மட்டும் எனக்குப் புலப்பட்டது.

என் அரைக்குள் வந்து சேர்ந்தவுடன் அங்கே எலக்ட்ரிக்விளக்கு நின்று விட்டதால் ஒரு மெழுகு வர்த்தியைக் கொளுத்திவைத்து, ஒரு நாற்காலியில் அவரை உட்காரும்படி சொன்னேன். அவர் உட்கார்ந்தவுடன் நானும் ஒரு நாற்காலியில் திறந்திருந்த சன்னலுக்கு எதிரில் உட்கார்ந்தேன். அறையின் கதவுக்குத் தாழக்கோ விட்டபின்னர் அவர் தம் தேகத்தில் போர்த்தியிருந்த ஆடையைக் கழற்றினார்; உச்சிமுதல் உள்ள[illegible]லளவும் வெள்ளை வஸ்திரம் உடுத்தியிருந்தார்; அவர்கையில் பெரிய குடையொ[illegible]றிருந்தது; தலையைச்சுற்றி அதிகதூரம் நீ[illegible]டிருக்கும் அகலமான தொப்பியொன்றுதரித்திருந்தார்; கண்ணில்கறுத்த மூக்குக்கண்ணாடிபோடப்பட்டிருந்தது; வீதியில் அகாலத்தில் போக்குவரவு செய்யும் மனிதர்களின் சப்தமும் ரிக்ஷாக்களின் ஓசையும் அதிக மந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தன; அப்பொழுதுதான் சந்[illegible]ரன் கீழ்த்திசையில் சமுத்திரத்துக்குமேல் உதயகிரியினின்று எட்டிப்பார்த்தான். அன்றிரவின் தோற்றம் [illegible]ன்றைக்கும் என் மனத்தில் நன்றாகப்பதிந்திருக்கிறது; இப்படித்தான் மனிதர்களின் மனத்தின் சிலவிஷயங்கள் சிறியனவாய்[illegible]ந்தாலும் நன்றாகப் பதிந்துவிடுகின்றன; அவை எத்தனை வருஷ[illegible]னாலும் சிலையிலெழுதிய எழுத்தைப்போல அழிவதில்லை, சந்[illegible]ன் பிரகாசிக்க ஆரம்பித்தவுடன் அக்கிரணத்தின் மகிமையால் சந்திரகாந்தக் கல்லினின்று ஊறிவரும் நீரைப்பருகி நிற்கும் நிலாமுகிப்பறவை[illegible] ஓசை நான்கு புறத்துங்கேட்டது. அப்போது விருந்தினரைப்பார்த்து, "நீங்கள் சுருட்டுப்பிடிப்பதுண்டோ? நல்லசுருட்டுத் தரு[illegible]றேன்." என்று சொன்னேன்.

(தொடரும்)

கு' ஆக்கன்[illegible].

இஸ்லாம் நேசன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை 3] 1911 டிசம்பர் [வகை 4.

துருக்கியுத்தம்.

பலவிதத்திலும் துருக்கியர்க்கு ஜெயம்.

நாம் முந்தினமீ சஞ்சிகையில் பிரசுரித்த விஷயங்கள்தவிர, இந்த யுத்தசம்பந்தமாகப் பிந்திவந்த சமாசாரங்களால் பலவிதத்தாலும் துருக்கியர்க்கு மிகுந்த ஜெயமுண்டாகியிருக்கிறதாகத்தெரிகிறது. இந்த ஜெயத்தைப்பற்றி, லிஸானுல் ஹால், பீரூத்தில் பிரசுரிக்கப்படும் ஜரீடதுல் அஹ்வால், அவ்விடத்திலேயே பிரசுரிக்கப்படும் அல்முபீத, இஸ்கந்திரியாவில் பிரசுரிக்கப்படும் வாதிஅல்நீல் என்னும் அறபுபத்திரிகைகளுக்குப் பலதந்திகள் வந்திருப்பதாகத்தெரிகிறது. இவை தவிர அல்அலம் என்னும் கீர்த்திபெற்ற பத்திரிகைக்கும் இந்த உண்மை ஜெயசமாசாரம் எட்டி அந்த ஆபிஸிலிருந்து ஸ்பெஷலாகத் துண்டு பத்திரிகைகளில் அச்சடித்துப்பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்கண்டபடிபிரசுரிக்கப்பட்டவிஷயம் யாதென்றால் தாஹிறு, ஒக்தோபர் மாசம் 30உ பின்னேரம் 7-37 தந்தியால் துருக்கிகளும் அறபிகளும் இரண்டு கடினயுத்தம் புரிந்து திரிப்போலியைக் கைப்பற்றிக்கொண்டார்களென்று விளங்குகிறதென்பதே.

இவ்வாறு துருக்கியர், திரிப்போலி நகரத்தையும், கோட்டையையும் வசப்படுத்தும்போது செய்ததீரமானயுத்தத்தில் 6000 இத்தாலியர் கொல்லப்பட்டார்களென்றும், 7000 இத்தாலியர்சிறைப்பட்டார்களென்றும், கோட்டையில் 60 பெரிய பீரங்கிகளும், 38 மத்றாஸ் பீரங்கிகளும், 1500 குண்டுமருந்து அடங்கியபெட்டிகளும், 17000 ரைபல் துப்பாக்கிப்பெட்டிகளும் அகப்பட்டனவென்றும், அப்போது போர்நடத்திய இத்தாலிய தளகர்த்தர் துருக்கியரிடம் கப்பற்கூட்டத்தோடு அடைக்கலம் புகுந்த[illegible]

டாரென்றும் தெரிகிறது. மிஸ்று கெஜட்டில்மட்டும் கொல்லப்பட்ட இத்தாலியர் 5000 பேர் என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேற்கண்டவாறு திரிப்போலியைத் துருக்கியர் கைப்பற்றும் சமயத்தில் முந்தியே பயந்து ஒளித்தோடின இத்தாலியத்தலைவராகிய ஆட்மிறுல்ஔப்றி என்பவர், திரிப்போலியில் அபஜெயப்பட்ட விஷயத்தை வெளிக்குக்காட்டாமல், "இனி நாம் துருக்கியரின் கடல்களுக்குப் போர்க்கப்பல்களைக்கொண்டு செல்லவேண்டும்; சின்ன ஆசியாப்பகுதியைத்தாக்கவேண்டும்" என்று தம்மைச்சேர்ந்தவர்களுக்குச்சொல்லி, "அமர்க்களத்தில் அடிபட்டோடிய ஒருவன் ஐம்பது மைலுக்கப்பால்சென்று மீசையை முறுக்கினது" போலத்துள்ளிப் பிரஸ்தாபித்துவிட்டாராம். இதையே தங்களுக்கு ஜெயமான சமாசாரமாகக்கொண்டு இத்தாலியர் எங்கும் தந்திகளைப்பரப்பிவிட்டனர். அஃதெல்லாம் வீண்முழக்கமென்று பிந்தி எல்லோரும் அறிந்துகொண்டார்கள். தாங்கள் மிக்க அபஜெயமடைந்தாலும் ஜெயமடைந்ததாகத் தந்திகொடுக்கும்படிசெய்வதே இத்தாலியருக்கு வழக்கமாகிவிட்டது. சென்ற ஒக்தோபர் மாசம் 23௳ முதல் 26௳ வரையிலும் நடந்தயுத்தங்களிலெல்லாம் இத்தாலியர் மிக்க அபஜெயமடைந்திருந்தும் அதைத்தந்திகள்மூலம் வெளிப்படாமலிருக்கும்படி செய்துவிட்டனர். இவர்கள் எவ்வாறு மறைத்தாலும் அறபுபத்திரிகைகளாலும் தந்திகளாலும் உண்மைவெளியாகி விடுகின்றது. துருக்கியரிடமிருந்து உண்மைச்சமாசாரங்கள் எப்படி வருகின்றனவென்றால், திரிப்போலியிலிருந்து கரைமார்க்கமாய் மிஸ்றுக்குப்போய் அங்கிருந்து பீருத்துக்குச்சென்று அவ்விடத்திலிருந்து இஸ்தம்பூல் சேர்ந்து அங்கிருந்து இந்தியாவிலுள்ள பல அறபுபத்திரிகைகளுக்கும் எட்டுகின்றன. ஆதலால், அறபுபத்திரிகைகளில் வருஞ்சமாசாரங்கள் உண்மையென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. நவம்பர் மாசம் 10௳ வெள்ளிக்கிழமையில் நடந்தயுத்தம் மிகக்கடுமையானதென்றும், அறபிகள், இத்தாலியருடைய எல்லைக்குள் நெருங்கி அவர்களோடு கைகலந்து மல்யுத்தம் புரிந்தார்களென்றும் இரண்டு பக்கத்திலும் அளவற்ற உயிர்ச்சேதமுண்டானதென்றும், திரிப்போலியிலிருந்துவந்த ஆஸ்திரேலியக்கப்பல் தெரிவித்ததாக நவம்பர் மாசம் 12௳ மேல்தாவிலிருந்து செய்திவந்திருப்பதும் இதற்கறிகுறியாகின்றது.

இவை நிற்க, பிந்தினசமாசாரங்களால் இருதிறத்தாருக்குள்ளும் சண்டை முன்போல மும்முரமாக நடக்கவில்லையென்றும், திரிப்போலியில் அதிகமழையினால் வெள்ளம்புரண்டு அதிகமாக இரண்டுபக்கத்திலும் சேதமுண்டாயிருக்கிறதென்றும். இட்டாலியர் சமாதானத்துக்கு முயற்சிக்கிறார்களென்றும், இன்னும் அவர்கள் திரிப்போலியைத்தங்களுக்கு விட்டுவிட்டால் யுத்தத்தால் துருக்கியருக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தைக்கொடுத்துவிடுவதாக பவர்களுக்குத்தெரிவித்துக்கொண்டதில் அதற்குத்துருக்கிகவர்ன்மெண்டு, என்னகொடுத்தாலும் திரிப்போலியில் ஈயிருக்கும் அவ்வளவு இடமுங்கூடக் கொடுக்கமுடியாதென்று மறுத்துவிட்டதாகவும் அறிகிறோம்.

துருக்கியர் சமாதானத்தை எட்டுணையும் விரும்பவில்லை. மேலும் சண்டைசெய்து இட்டாலியரை வேரறுக்கவேண்டுமென்னும் நோக்கத்துடனிருக்கிறார்கள். இவர்களுக்கு யுத்தத்தில் உதவிபுரியக்கணக்கற்ற அறபிகளும், மற்றவிடங்களிலுள்ள அநேகம் முஸ்லிம்களும் முன்வந்திருக்கிறார்கள்: அவர்களுள் எமன் தேசத்தலைவரான இமாம் எஹியாஹமீதுத்தீன் அவர்கள், நூறாயிரம்போர்வீரருடன் யுத்தத்துக்கு ஆயத்தமாயிருப்பதாக மாட்சிமைதங்கிய சுல்தான் அவர்களுக்கு ஒருகடிதமனுப்பியிருக்கிறார்கள்; அஸ்ஸெய்யிது இதுரீஸ் என்பவர்களும் இத்தாலியருடன்மோதுவதற்காக அவர்களுடைய கடலோரங்களுக்கு 40000 வீரர்களுடன் புறப்பட ஆயத்தமாயிருப்பதாகவும், அதற்காக உதவிசெய்யவேண்டுமென்றும் துருக்கிப்பட்டாளத்தளகர்த்தருக்கு ஒருநிருபம் எழுதியிருக்கிறார்.

இந்தச்சமாசாரங்கள் நடந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், திரிப்போலியிலுள்ள இத்தாலியக்கப்பல்தலைவன், திரிப்போலித்தலைநகரும் அதன் மற்றைபகாடுகளும் உதுமானியரிடமிருந்து தங்கள் வசமாகிவிட்டதாக எண்ணிக்கொண்டு துருக்கியருடைய பீரங்கிசாலைக்குச் சமீபமான துறைமுகத்தினுள் இரண்டு கப்பல்களுடன் நெருங்கியதாகவும், உடனே துருக்கியர் பீரங்கிகளைப்பிரயோகித்து அவ்விரண்டு கப்பல்களையும் கடலுக்குள் ஆழ்த்திவிட்டதாகவும் அல்முபீதுஎன்னும் பத்திரிகைமூலம் சமாசாரம் தெரிகிறது.

இன்னும் தூணிஸிலுள்ள அறபிகள் திரிப்போலிசண்டை விஷயமாய் மிகவும் ஆத்திரங்கொண்டெழுந்ததாகவும், அந்த எழுச்சியை அமர்த்துதற்கு பிரஞ்சுசேனையை அனுப்பும்படி நேர்ந்ததென்றும் சமாசாரம் எட்டுகிறது.

இதனோடு கிறிஸ்தவர்கள் பலவிடங்களில் இத்தாலியருக்கு வெற்றியுண்டாகவேண்டுமென்று மண்டிபோட்டு வணங்கி ஏசுவிடம் பிரார்த்தனை புரிவதாகவும் தெரிகிறது: எப்படியெனில், இத்தாலியரைச்சார்ந்த ஆத்மசங்கத்தலைவராகிய பரஹ்மோன் என்பவர் மறாஸிய்யாவிலுள்ள கிரிஸ்தவர்கள்யாவரும், இத்தாலியாவுக்கு வெற்றியுண்டாகும்பொருட்டு ஏசுவிடம் பிரார்த்தனை புரிவதற்காகத்திரிப்போலிக்குப் புறப்படவேண்டுமென்று அந்த ஜனங்களுக்குக்கட்டளை பிறப்பித்திருக்கிறாராம்.

உரோமாவிலுள்ள பொது ஜீவகாருண்ய சங்கத்தலைவரான ஸலாரந்து என்பவர்தாம்செய்த ஒரு பிரசங்கத்தில் "தேவனே! எங்கள் சேனைகளைப்பகைவர்களுடைய குண்டுக்குத்தப்பும்படியாதுகாத்துக்கொள். இன்னும் எங்கள் கப்பல்களையும் கடற்சேனைகளையும் சேதமாகாமல் காப்பாற்றுவாய்" என்று பிரார்த்தனை புரிந்தாராம். அதேசமயத்தில் மோனிஸ்தியூர் மார்க்கிஎன்பவரும் தங்கள்மூன்று நிறங்களையுடையகொடி நிலைநிற்பதற்கும், சிலுவை ஓங்குவதற்கும், இத்தாலியர் துருக்கியருடையபிறையினின்றும் தப்பிவெற்றியடைவதற்கும் தேவனிடத்திலும் சிலுவையிடத்திலும் மன்றாடிக் கேட்டுக்கொண்டாராம்.

இவர்கள் இவ்வாறுபரிதாபத்தோடு தங்கள்சிலுவையிடத்தில் வேண்டிக்கொண்டிருக்க, திரிப்போலியில் உதுமானியர் அடைந்த வெற்றியைப்பற்றி எல்லாவிடங்களிலுள்ள முஸ்லீம்களுக்கும்மிக்கசந்தோஷமுண்டாயிருக்கிறது. ஒவ்வோரிடங்களிலும் முஸ்லிம்கள் சந்தோஷத்தால் ஆர்ப்பரிக்கிறார்கள். சென்ற நவம்பர்மீ 1உ புதன்கிழமை மிஸ்றுதேச முஸ்லிம்களுக்கிடையில் நடந்த சந்தோஷமுழக்கத்திற்கு அளவேகிடையாதாம். அவ்விடங்களிலுள்ளமுஸ்லிம்கள், எந்த இத்தாலியனைக்கண்டாலும், அவன் தொப்பியைத்தட்டிவிட்டு, "ஐயா! இத்தாலியர் திரிப்போலியைப் பிடித்துவிட்டார்களா? துருக்கியருடைய பலமற்றகுண்டு ஏறாமற்போயிற்றா? துருக்கியருடைய வீரம் இப்பொழுது தெரிந்ததா? ஐயோ! உங்களுக்கு மிகவும் மானக்கேடாய்விட்டதே" என்று எளனம்செய்கிறார்களாம். பள்ளிக்கூடச் சிறுவர்களெல்லோரும் ஒன்றிரண்டு இத்தாலியர்மீது பரிகாசமானபாடல்களைப்பாடிநகைத்துக் கூச்சலிடுகிறார்களாம்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது இத்தாலியர்க்குக்கெடுதிக்காலம் சம்பவித்திருக்கிறதென்று நிச்சயமாகவிளங்குகின்றது. இத்தாலிரியருக்கிடையில் உண்டானகாலரா இன்னும்தொலைந்தபாடில்லையாம். காலராவினாலும் அவர்களுள் அநேகம்பேர் மாள்கின்றனராம். பின்யோசனையில்லாமல் சண்டைதொடங்கிய இத்தாலியர் இப்போது போர்புரிவதற்கியலாமலும், நிறுத்துவதற்கும் எண்ணமில்லாமலும் இருதலைக்கொள்ளியினடுவிலகப்பட்ட எறும்புபோலத்தவிக்கின்றனர். உள்ளேதைரியமில்லாவிட்டாலும் வீரமுள்ளவர்களைப்போல நடித்துச் சிறிது சிறிது சண்டையும் தொடுத்து இளைத்துப்போகிறார்கள். துருக்கிமாத்திரம் இச்சமயம் சமாதானத்துக்கிணங்கும் பக்ஷத்தில் இத்தாலியர் அதனைமிகவும் திருப்தியோடு தலையால் ஏற்றுக்கொள்ளும். எனினும் அதன்நோக்கத்துக்கு இப்பொழுது துருக்கி இடங்கொடுக்கவே மாட்டாது. நன்றாய் ஆராயும்பொழுது இந்தயுத்சம் விரைவில்முடிவு பெறக்கூடியதாயில்லையென்று விளங்குகின்றது. ஆயினும் சிலதினங்களாக ஹஜ்ஜுப்பெருநாளை உத்தேசித்துச் சண்டைநிறுத்தப்பட்டிருக்கிறதென்றும், இது தீர்ந்தவுடன் மீண்டும் சண்டையை ஆரம்பிப்பார்களென்றும், அதினாலேயே இப்போழுது அவ்விடத்தியசமாசாரங்கள் ஒன்றும்எட்டவில்லையென்றும் ஒருபிரஸ்தாபம் பரவியிருக்கிறது. எப்படியிருந்தபோதிலும் சிலதினங்களாக அங்கிருந்து விசேஷமான சமாசாரங்கள் ஒன்றும் வரவில்லையென்பது மட்டும் உண்மை. இதன்முடிவு இன்னவிதமாய்த்தான் ஆகுமென்று இப்பொழுது ஒருவருக்கும் தெரியாது. அதுபின்னாற்றான் விளங்கும். இனிமேல் இந்தயுத்தத்தைப்பற்றி விசேஷமான சமாசாரங்கள் வரும் பக்ஷத்தில் அவற்றை அடுத்தமீ பத்திரிகையில் வெளிப்படுத்துவோம்.

தருமமும் பக்கீர்களும்.

முஸ்லிம் சகோதரர்களே!

நமது மார்க்கத்தின்படி ஒவ்வொருவரும் தருமஞ்செய்யவேண்டியது அவசியமே. எனினும், அதனைப்பகுத்தறிந்து, செய்யத்தக்க ஒழுங்கோடுசெய்வதே சிறந்ததாகும். அப்படிச்செய்யும்தரு

மம் பசித்துவந்தோர்க்கன்னமிடல், தொழில்செய்யமுடியாத ஏழைகளுக்குதவல், தரித்திரத்தால் வருந்துவோர்க்குப் பொருளுதவிசெய்தல், வஸ்திரமில்லாதஏழைகளுக்குவஸ்திரங்கொடுத்தல், பணமில்லாக்குறைவால் முடியாமலிருக்கும் நிகாஹை நிறைவேற்றிவைத்தல், உண்மையுள்ளமகான்களை உபசரித்தல் முதலாகிய இன்னும் அநேகவகைகளையுடைத்தாயிருக்கின்றது. இவ்வாறு தருமமானது செய்கையில் பலவகுப்பாயிருப்பினும் பலன்தருவதில் ஒன்றேயாம். ஆதலால், எந்தவகையாகத் தருமஞ்செய்தபோதிலும் மேற்கண்டவாறு ஒழுங்கறிந்துசெய்யின் அல்லாகுதஆலா அதற்குத் தக்க பயனைத்தராமலிரான். இவ்வுண்மையை அறிந்தே நம்முன்னோர்கள் இடமறிந்துதருமஞ்செய்து சிரும்சிறப்பும் பெற்றிருக்கின்றனர். அப்படியிருந்தும் இக்காலத்தவர் வகையறியாது தருமஞ்செய்து பயனற்றிருக்கின்றார்கள். எப்படிச்செய்தாலும் தருமந்தானேயென்று இவர்கள் கண்மூடித்தனமாய்த்தருமஞ்செய்துவருவதால் தருமத்திற்குரிய பலனில்லாமற்போவதுந்தவிர அநேக சோம்பேறிகள் பக்கீர்வேடந்தரித்துத் தந்திரமாகப் பொருள்தேடி வட்டிக்குக்கொடுக்கும் அக்கிரமங்களுக்கும் இடமுண்டாய்விடுகிறது. ஒழுங்குப்படி, யாதொரு அங்கவீனமுமின்றி எத்தொழிலுஞ்செய்து ஜீவிக்கும்திராணியிருந்தும் சோம்பேறியாய் யாதொரு தொழிலும்செய்யாமல் பிச்சையெடுக்கவந்தவனுக்கும், தன்கையில் தக்கபொருளிருந்தும் மேலும் அதிகமாகப் பணம்சம்பாதிப்பதற்கு ஒன்றுமில்லாதவன்போல நடித்துப்பிச்சைக்குவருவோனுக்கும், கூத்திக்கள்ளனுக்கும், திருடனுக்கும், சூதனுக்கும், குடியனுக்கும், தடியனுக்கும், இன்னும் இவர்போன்ற பலதிருட்டு எண்ணமுடையவர்க்கும் துட்டுக்கொடுப்பது மிகவும் கெட்டவாடிக்கையாகும். இவர்களெல்லோரும் பாவச்செய்கையுடையவர்களாதலால், இவர்களுக்குக் கொடுக்கும்தருமத்தால் பாவமேவந்துசேரும். ஆதலால், இவர்களுக்குக்கொடுப்பது ஒருநாளும்கூடாது. பின்னையாருக்குத் தருமம்செய்யவேண்டுமெனில், யாதொரு தொழிலும்செய்ய வழியற்றிருப்போர்க்கும், கூன், குருடு, நொண்டி, ஊமை, செவிடு முதலிய அங்கவீனர்களுக்கும், தொழில்செய்யமுடியாத ஸ்திரீகள், திக்கற்றகுழந்தைகள் ஆகியவர்களுக்கும், பிணியால்வருந்துவோருக்கும், இடைவிடாது ஆண்டவன்மீது கருத்தைச்செலுத்தி வேறு தொழில்செய்யாமலிருக்கும் மகான்களுக்கும், இன்னும் இவர்போன்ற பலருக்குமே உபகாரம் செய்யவேண்டும். இவ்வகைத் தருமந்தான் தலைகாக்கும்.

இவற்றையெல்லாம் உணர்ந்திருந்தும், "இவர்களையெல்லாம் வேலையற்றுப்போய் எவர் ஆராய்ந்துகொண்டிருப்பவர்" என்று வீண்காரணம் சொல்லி முன்கூறியபடி நம்மவர் கண்டகண்டவாறு தருமஞ்செய்யத் தலைப்படவே இன்னைச்சோம்பேறிகளெல்லோரும், "கஷ்டமில்லாமல் பொருள்தேடி வயிறாரஉண்டு உறங்குவதற்கு இது ஒரு நல்லமார்க்கமாயிருக்கிறது" என்று தீர்மானித்து மிகவும் அசம்பாவிதமாக வட்டப்பறைகளையும், இருப்புலாடசங்கிலிகளையும், நெருப்புச்சட்டிகளையும், குறுந்தடிகளையும், சங்குமாலைகளையும் தாங்கிப் பலவிதமான வேடங்களைத்தரித்து இடிமுழங்குவதுபோல் காதடைக்கும்படி இரைச்சலிட்டுக்கொண்டு யாசகத்துக்குக் கிளம்பிவிட்டார்கள். இவர்களுடைய ஆர்பாட்டமும் கோலமும் சகிக்கக்கூடாதனவாயிருக்கின்றன. இவர்கள் துட்டுப்பறிக்கும் விதமும் மிகவினோதமாயிருக்கின்றது. சிலர், நான்கைந்து பேராகத்திரண்டு தப்பட்டைகளை மடார்மடாரெனவடித்துத் தலைவிரித்துப் போட்டுக்கொண்டு இந்துக்கள் பேயாடுவதுபோல் ஆடிப் புலிபோல் வீறிட்டுக்கதறுகிறார்கள்; சிலர், காதில் ஈயத்தைக்காய்ச்சி விட்டதுபோன்ற சில பாடல்களைப்பாடிக் கையில் இருப்புவளையங்களைவைத்துக் கணீர்கணீரென அடித்துக்கொண்டுவருகிறார்கள்; சிலர் இரண்டு செவிகளிலும் கையைவைத்துமூடிக்கொண்டு வெள்ளாடு கதறுவதுபோல் பலங்கொண்டு கதறுகிறார்கள்; சிலர் நடுக்குவாதங்கொண்டவர்கள்போலத் தொண்டையை ஆட்டிஆட்டி எதையோபாடிக் கத்திக்கொண்டுவருகிறார்கள்; சிலர், உடுப்புதலைப்பாகை முதலியவற்றையெல்லாம் மிகவும் அலங்காரமாக அணிந்துகொண்டு கையில் மயிலிறகைப்பிடித்துக் காலில் பாதகுறடிட்டு ஒரு புஸ்தகத்தைக் கையில்வைத்துப் படித்து ஒய்யாரமாய் நடந்துவருகிறார்கள்; சிலர், கையில் கட்டாரிபோன்ற ஒருவகை இருப்பாணியைவைத்துக் குத்திக்கொள்வதுபோல் பாசாங்குசெய்துவருகிறார்கள்; இன்னும் இவர்களுடைய பலவிதமான கோலங்களையெல்லாம் எடுத்தெழுதுவதென்றால் ஒருபுத்தகமாகமுடியும். இவர்கள் இப்படிக் கோலமெடுத்து வருவதெல்லாம் பணம்சம்பாதித்து முதல்சேர்ப்பதற்கேயல்லாமல் வேறொன்று

க்குமன்று. இவர்கள் வயிற்றுக்கில்லாமல் வருபவர்களுமல்லர்; பணம்தேடி நல்லகாரியங்கள்செய்யும் நோக்கத்தோடு வருபவருமல்லர்; இஃது சம்பாத்தியத்துக்கு ஒரு நல்லதொழிலென்றே கருதி வருகின்றார்கள். அதனால், ஒருவீட்டில் பணமோ அரிசியோ இல்லையென்றால் இவர்கள் போவதில்லை. தங்கள் தப்பட்டைகளைக் காதடைக்கும்படி அடித்து அவ்வீட்டிலுள்ளவர்க்கு வேறு எந்த சப்தமும் கேளாதிருக்கும்படிசெய்து அவர்கள் தொழிலைக் கெடுத்துச்சங்கடப்படுத்திஎதையாவது வாங்கிக்கொண்டேபோகிறார்கள். சில வீட்டுக்காரர்கள், இவர்களுக்குக் கொடுக்கக்கூடாதென்று எண்ணமிருந்தபோதிலும் இவர்களுடைய ஆர்பாட்டத்தால் வேலைகெடுகிறதென்று நினைத்தே இவர்கள் தலையைக்காண்பதற்குமுந்தியே காசைக்கொடுத்தனுப்பிவிட்டு மறுவேலை பார்க்கிறார்கள். இதனால் இவர்கள் வட்டப்பறைவைத்து முழக்குவதும், பேரிரைச்சலிடுவதும் பணம் பறிப்பதற்கேயன்றி வேறொன்றுக்குமல்லவென்பது நன்குவிளங்குகின்றது. இப்பொழுது இவர்கள் தட்டிவரும் பறை முதலியவைகள், பண்டைக்காலத்தில் மெய்யடியார்கள் ஆண்டவனை ஒருமனதுடன் உற்சாகங்கொண்டு துதித்துப்பாடுதற்குத் துணைக்கருவிகளாகும்படி ஏற்பட்டிருந்தாலும் அவற்றை இப்பொழுது பணம் பிடுங்குவதற்குரிய நச்சுக்கருவிகளாக இந்தப் பக்கீர்கள் உபயோகிக்கிறார்கள். இப்படி இவர்கள் பிச்சையெடுப்பதிலும் கெஞ்சிப்பிச்சை வாங்குவதில்லை; அதிகாரப்பிச்சையே வாங்குகிறார்கள். இவர்கள் வாங்காமல்போவதில்லையென்ற உறுதிவைத்திருப்பதோடு, தாங்கள், "வாங்குவது இவ்வளவுதான்" என்று ஏற்படுத்திக்கொண்ட அளவிற்குக் குறைந்துகொடுத்தாலும் வாங்குவதில்லை. இப்புண்ணியவான்கள் ஏற்படுத்தியிருக்கும் திட்டங்களைப்பார்த்தால் மிக விநோதமாயிருக்கின்றன. ஒருவருக்கு ஒருபடி அரிசியும் கால்படிநெய்யும் இரண்டணாவும் கொடுக்கவேண்டுமாம்; மற்றொருவருக்கு அரைப்படி அரிசியும் ஒருசேர் மாமிசமும் ஒரு அணாவும் அரைக்கால்படிநெய்யும் கொடுக்கவேண்டுமாம்; இன்னொருவருக்கு எட்டணாக்கொடுக்கவேண்டுமாம்; பின்னொருவருக்கு நான்கணாக் கொடுக்கவேண்டுமாம்; இதிலிருந்து மற்றவர்கள், அவரவர்களுடைய இஷ்டம்போல தம்பிடிவரை படிப்படியாகக் கட்டளையைக்குறைத்தும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய இத்தகைய ஏற்பாட்டுக்கு விரோதமாய்ச் சில வீட்டுக்காரர்கள் வேண்டுமென்றே ஒன்றும்

டுக்காமல் சாதித்துவிட்டால் இவர்கள் மிகுந்த கோபங்கொண்டு வாய்க்குவந்தபடி தூஷணையாகத் திட்டிக்கொண்டுபோகிறார்கள். இதற்குக்காரணம் இவர்கள், சம்பாத்தியத்தைக் கருதிவருவதுதான். தங்கள் எண்ணம்பலிக்கவில்லையே யென்று இவ்வாறு நிந்திக்கிறார்கள். மெய்யாகவே இவர்கள் தரித்திரப்பட்டு வந்தவர்களாயிருந்தால் இவ்வாறு கோபங்கொள்ளமாட்டார்கள். "இந்தவீட்டில் இல்லாவிட்டால் இன்னொருவீட்டில் கிடைக்கும்" என்று அடங்கிப்பேசாமல் போய்விடுவார்கள். இந்துக்கள் முதலிய மற்றவகுப்பாரில்உள்ள பிச்சைக்காரர்கள் வேடதாரிகளாயினும் உண்மையாசகர்களாயினும் இவர்களைப்போல அக்கிரமம் செய்வதில்லை. இல்லையென்றால் பேசாமல் போய்விடுவார்கள். எனினும் அவர்களுள் இவ்வளவு அதிகமான பிச்சைக்காரரும் இல்லை. நமது முஸ்லிம்களிலோ வரும்படியை உத்தேசித்து அதிகமான பக்கீர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். சென்னையில் மாத்திரம் எண்ணத்தொலையாதபேர்களிருக்கின்றார்கள். இவர்கள், முஸ்லிம்களின் வீடுகள் அதிகமான இச்சென்னையில் ஒவ்வொரு வீட்டிலும் தவறாமல் பிச்சைவாங்குவதால் ஒரு ஆசாமிக்கு ஒருநாளைக்கு இரண்டுமூன்று ரூபாவுக்குமேல் கிடைக்கிறதென்றும், இதனால் தாங்கள் சாப்பிட்டதுபோக மீதியில் நாலாயிரம் ஐயாயிரம்சேர்த்துவட்டிக்குக்கொடுத்து மேலும்மேலும் அதிகமானபொருளைத்தேடுகிறார்களென்றும், சிலருக்குக்குடும்பங்கள்ஏற்பட்டிருக்கின்றனவென்றும் பலர்சொல்லக்கேட்டிருக்கிறோம். இப்படி முதல் சேர்வதனாலேயேஒவ்வொருவருஷத்திலும்பிச்சைக்காரர்கள்குறையாமல் அதிகப்பட்டேவருகின்றார்கள். ஆறுவயதுச்சிறுவனுங்கூடத்தப்பட்டையடித்துக்கொண்டுவருகிறான். இப்படி மிகுந்துவிட்டபடியால் ஒவ்வொரு முஸ்லிம் வீட்டிலும் இவர்களுக்குப்பிச்சைபோடுவதற்கென்றே ஒருஆள் வாசலில் தவறாமல் காத்திருக்கவேண்டியதாயிற்று. சூரியன் அஸ்தமிக்கும்வரையிலும் கைஓயாமல் போட்டுக்கொண்டிருந்தாலும் முடிவதில்லை. இரவு 10 மணிவரையிலும் புற்றிலிருந்து ஈசல்வருவதுபோல் வந்துகொண்டேயிருக்கிறார்கள். இவர்களுக்கிடும் பிச்சைக்காக ஒருவீட்டில் நாள் ஒன்றுக்கு ஐந்துரூபா செலவிட்டாலும் பற்றாதுபோலிருக்கின்றது. இதை உத்தேசித்துச்சென்னையிலுள்ள முஸ்லிம்கள் ஒருவாரத்துக்கொருமுறை பிச்சைபோடுவதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இருந்தாலும் இதனால் சிரமந்தீரவில்லை. மேலும் பதின்மடங்கி

என்பதாம். இந்த உபமானம், உபமேயம் ஆகிய இரண்டையும் பலரும் அறிதல் அவசியமாதலின் இவற்றை இங்குச்சிறிது விரித்தெழுதி அவ்வகைபார்க்கறிவுறுத்துவாம்:

சர்க்கரையென்னும் பெயரையுங்கேட்டறியாததும், இலுப்பைப்பூ மிகுதியாயுள்ளதுமானவோர் ஊர்இருந்தால், அவ்வூராரெல்லோரும், துர்நாற்றம்மிகுதியாயுள்ளதாயினும், தேகத்துக்குக்கெடுதிசெய்வதாயினும் இனிப்பு இருப்பதையுத்தேசித்து அந்த இலுப்பைப்பூவையே சர்க்கரையாக உபயோகிப்பார்கள். அதுதான் தங்களுக்குச்சர்க்கரையென்று தீர்மானித்துக்கொண்டுமிருப்பார்கள். இன்னதுதான் சர்க்கரையென்று அறிந்த ஒருவன் இவர்களிடத்திற்போய், "இந்த இலுப்பைப்பூசர்க்கரையன்று; சர்க்கரை கருப்பஞ்சாற்றிலுண்டாகக்கூடியது; அது நல்ல சுவையும் சுகமும் உள்ளது; அது, என்னுடைய ஊரிலிருக்கின்றது; வேண்டுமானால் தருவித்துக்கொடுக்கிறேன்" என்றுசொன்னால், அவர்களெல்லோரும்கூடி, "ஏ பைத்தியம்பிடித்த மனிதனே! இந்த இனிமையான இலுப்பைப்பூ தவிர உலகத்தில் வேறே சர்க்கரையேது? அப்படியே வேறு ஏதாவது இருந்தாலும் அதற்கு இந்த இலுப்பைப்பூவைப்போன்ற மதுரமும் வாசனையுமிராது; நீ விஷயம்தெரியாதவன்" என்று பரிகசிப்பார்கள். அந்த மனிதன் எவ்வளவு உறுதிசொன்னாலும் கேட்கமாட்டார்கள். (பர்மாக்காரர்கள் வேப்பிலையை இனிமையோடு புசித்துவருவதே இதற்குத் தக்க உதாரணம்.) இதுபோல விசேஷ ஞானமில்லாத இடங்களிலுள்ளவர்கள், தங்களுக்குத்தெரிந்த அற்பவிஷயங்களையே பெரிதாகப் பேசுவார்கள்; அவர்களைச் சேர்ந்தவர்களும் அவற்றையே புகழ்ந்துகொண்டாடுவார்கள். அறிவுடையோர், இவர்களிடத்தில், "இவற்றைக்காட்டினும் இன்னும் உயர்ந்த விஷயங்களிருக்கின்றன; அவற்றையெல்லாம் உணர்ந்து அவற்றையே கொண்டாடவேண்டும்" என்று சொன்னால், இவர்கள், அவ்வறிவுடையோர்மீது கோபங்கொண்டு, "போம்! போய்!! உமக்கொன்றும் தெரியாது" என்று நிந்திப்பார்கள். "அவர்கள் சொல்லுவது நியாயந்தானே" என்று சிறிதும் கருதார்கள். இந்தக் கொள்கை பகுத்தறிவற்ற தன்மையாலேற்படுவதே. இந்தக் கொள்கையுடையவர்களெல்லாம் எப்பொழுதும் நல்ல நிலைமைக்குவரவுமாட்டார்கள், நிலைத்த புகழுக்கிலக்காகவுமாட்டார்கள். இவர்கள் தற்புகழ்ச்சியெல்லாம் நிலையற்ற மின்னலைப்போல் உடனே தோன்றிமறையும். இந்தத் தாழ்வான கொள்கையால் எவ்வித பிரயோசனமுமில்லையென்று தெரிந்திருந்தும் மானிடவகுப்பாருள் அநேகர் இதனை விட்டொழிகிறார்களில்லை. இதனை நம் தமிழ்நாட்டார் மிகவும் விருப்பத்தோடு அனுசரிக்கிறார்கள். எவ்வாறெனில்,

சிலர், கல்வியில் தேர்ச்சியில்லாவிடினும் தமக்குத்தெரிந்த அற்பஞானத்தையே பெரிதென்றெண்ணுகிறார்கள்; சிலர், பார்ப்பவர்மதிக்கத்தக்க வியாசம் எழுதத்தெரியுமுன்னமே, தாங்கள் பள்ளிப்பிள்ளைகள்போல்எழுதும்வியாசங்கட்குக் கூலிகேட்கஆரம்பிக்கிறார்கள்; சிலர், பாடத்தெரியாமல் மிகவும் ஆபாசமாக ஒரு செய்யுட் செய்தாலும் அதனையே காளிதாசன் வாக்கென்கிறார்கள். சிலர், சிறு குழந்தைகள்போல் உளறினாலும் தங்கள் பிரசங்கமே மேலென்கிறார்கள். சிலர், சித்திரகவி முதலிய கல்விசம்பந்தமான பெரும்விஷயங்களில் கோடியில் ஒருபங்கேனும் சாமர்த்தியம் தங்களிடத்திலில்லாவிடினும், படிக்காதவனும் சுலபமாகச் செய்யத்தக்க இரண்டொரு வியப்பற்றவிஷயங்களையும்தப்பாகச்செய்துவிட்டுக் கவிவன்மையில் காளமேகமென்கிறார்கள். சிலர், பள்ளிப்பிள்ளைகளும் ஏளனம்செய்யத்தக்க இரண்டொரு புத்தகங்களை எழுதிவிட்டுத் தங்களை அகஸ்தியனென நினைக்கிறார்கள். இவர்களைப்பற்றி இன்னும் எத்தனையோ எண்ணத்தொலையாத விஷயங்களிருக்கின்றன. இவர்கள்இவ்வாறு கருதுவதோடு இவர்களைச் சேர்ந்தவர்களும் கொண்டாடி வாய்கூசாமல் தாங்கக்கூடாத பட்டங்களையும் இவர்களுக்குச் சூட்டுகிறார்கள். இவர்களிடத்தில் அறிவுடையோர் உயர்ந்த விஷயங்களை அனுஷ்டிக்கும்படி சொன்னால் ஒரு சிறிதும் பொருட்படுத்துகிறார்களில்லை. இதற்குக் காரணம் அறியாமையே. இத்தகையோர் மிகுந்ததனாற்றான் தமிழுக்கு மிகவும் தாழ்ந்தநிலைமை உண்டாயிற்று. உண்மைக் கல்வியாளர்க்கும் மதிப்பில்லாமற்போயிற்று. இவர்களெல்லோரும் உயர்வு இன்னதென்று அறிந்து உண்மைக்கல்வியையும் உண்மைப்புகழையும் எப்பொழுது விரும்புகிறார்களோ அப்பொழுதுதான் தமிழுக்கும்தமிழ்நாட்டுக்கும் சிறப்புண்டாகும்.

உண்மைவிரும்பி.

கமாக ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், எட்டுநாளும் பொறுத்திருந்து குறிப்பிட்ட தினத்தில் மற்றநாட்களில் வருவதைக்காட்டிலும் பதின்மடங்கதிகமாய் ஆயிரக்கணக்கான பக்கீர்கள்வந்து கூடிவிடுகிறார்கள். அன்றைக்கு ஒரு பெருந்திருவிழாக்கூட்டமாய் விடுகிறது. வீட்டுக்குவீடு இவர்களுக்காக இடுப்புக்கட்டி வேலைசெய்ய வேண்டியதாயிருக்கிறது. இப்படி எட்டுநாளைக்கொருமுறை பிச்சையிடுவதென்று ஏற்படுத்தியிருந்தாலும் மற்றநாட்களில் இவர்கள் இந்தக்கட்டுப்பாட்டுக்கிசைந்து வாராமலிருப்பதுமில்லை. இடையிடையே வெளியூரிலிருந்து வந்தவர்கள்போல நடித்துவந்துகொண்டேயிருக்கிறார்கள்.

இப்படிப் பக்கீர்கள் மிகுவதற்கும், தொந்தரவு அதிகமாயேற்படுவதற்கும் காரணம்: நம்முஸ்லிம்கள் பகுத்தறிந்து, கொடுக்கத்தக்கவர்க்குக்கொடாமல் எல்லோர்க்கும் ஓயாது கொடுத்துவரத்தலைப்பட்டதே. இவர்கள் இப்படிக்கொடுப்பதனாலேயே நாம் முன்கூறியபடி வரும்படியை உத்தேசித்துச் சும்மாஇருந்தவர்களும் பக்கீர் வேடந்தரித்துவந்துவிட்டார்கள். நன்றாய் ஆழ்ந்துயோசிக்குமிடத்து இவர்களை இவ்வாறு பக்கீர்களாக்கினவர் நம் முஸ்லிம்கள்தாம் என்பது நன்குவிளங்கும். இவர்கள் வீண்வேடக்காரர்களுக்குக்கொடுப்பதை நிறுத்தியிருந்தால் அவர்களெல்லோரும் சோம்பலையொழித்து வெவ்வேறு ஜீவனத்துக்கான தொழில்களிற்பிரவேசித்திருப்பார்கள். பக்கீர்களும்இவ்வளவு அதிகப்படுவதற்கேதுவிராது. யாசித்தல் என்கிற இழிவானதொழிலும் குறையும். உலகத்தில் யாசித்தலைப்போல வேறு இழிவானதொழிலில்லை. அறிவாளிகளெல்லோரும் இதனைமிகவும் கேவலமான விஷயமாகக்கருதுவார்கள். நாகரிகத்தையும் உயர்வையும் விரும்பும்தேசத்தார் இந்தயாசகமென்னும் பெயரே இல்லாமல் போக்குதற்கு முயற்சிப்பார்கள். லண்டன் நகரவாசிகள் யாசகத்தை ஒழிப்பதில் மிகவும் சிரத்தையுடையவர்கள். அங்கே இப்படியாசகம் செய்வோருக்கென்று ஒரு சிறைச்சாலைபோன்ற தொழிற்சாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். வீதியில் எவர், யாசகரைக்கண்டாலும் அவர்களைப்பிடித்துக்கொண்டுபோய் அந்தச்சிறைச்சாலையிற் சேர்த்துவிடுவார்கள். அங்குள்ளவர்கள் அந்தப்பிச்சைக்காரருக்குத் தகுதியானவேலைகளை ஏற்படுத்தி அவற்றைச்செய்யும்படிசெய்து வேலைக்குத்தக்ககூலிகொடுத்து வருவார்கள். அவர்கள் அந்

தக்கூலியைவாங்கி ஜீவித்துவருவார்கள். அவர்கள், “இனிமேல் நாங்கள் வெளியேபோய் யாசகம்செய்வதில்லை.” என்று உறுதிசொல்லும்வரையில் அவர்களைச்சிறைச்சாலையினின்றும் விடுவதில்லை. சிலர், பிச்சையெடுப்பதில்லையென்று உறுதிசொல்லிப்போய்ப் பின்பு தெரியாமல் பிச்சையெடுத்தாலும் கண்டவர்கள் உடனே அவர்களைப்பிடித்துக்கொண்டுபோய் மீண்டும் சிறைச்சாலையில் சேர்த்துவிடுவார்கள். இதனால் சிறைச்சாலையிலிருந்து வெளிபேறுவோர் பிச்சைக்குப்போகாமல், தாங்கள் சிறைச்சாலையிற் கற்றுக்கொண்டதொழிலைச்செய்து ஜீவிக்க முயற்சிக்கிறார்கள். இவ்வித ஏற்பாட்டால் லண்டனில் பிச்சைக்காரரே இல்லாமலிருப்பதோடு ஒவ்வொருவரும் ஏழைகளாயில்லாமல் நல்ல தொழில்களைச்செய்து சீமான்களாயுமிருக்கின்றனர்.

ஆகையால், நமது முஸ்லிம்தனவான்கள், இவ்வளவு பக்கீர்கள் அதிகப்படாமலிருப்பதற்கும், எல்லோரும் நன் முயற்சியுடையவர்களாய் மேலோங்குவதற்கும் தொழிற்சாலை முதலியவற்றை ஸ்தாபித்து அவற்றில் இந்த வேடப்பக்கீர்களை வேலைசெய்யும்படி ஏற்படுத்தி ஒரு நன்முயற்சியைச்செய்ய முன்வருவார்களாயின், முஸ்லிம்வகுப்பாருக்கு மிக்கபுகழும் நலமுமுண்டாகும்.

“சர்க்கரையில்லாதவூரில் இலுப்பைப்பூ சர்க்கரையாம்.”

நண்பர்களே!

இந்தப்பழமொழியானது மந்தமதியினர்க்குப் புத்திபுகட்டக்கூடிய உயர்ந்தகருத்தைத்தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கின்றது. அக்கருத்தாவது: “சர்க்கரையையே பார்த்துங்கேட்டுமிராதவூரில் இலுப்பைப்பூவே சர்க்கரையாக மதிக்கப்படும்” என்பதே. இது, தங்களுக்குத்தெரிந்ததே பெரிதென்று பேசும் அறிவிலிகளைக்குறித்து எடுத்துக்காட்டுவமையாகச்சொல்லப்பட்டதாதலின், இதன் உட்கருத்து: சர்க்கரையில்லாத ஊரில் இலுப்பைப்பூசர்க்கரையாவதுபோல உயர்ந்தவிஷயங்களை அறியாத ஒருவனுக்குத் தெரிந்த ஒரு அற்பவிஷயமே அவனால் பெரிதாகக்கருதப்படும்

திருநெல்வேலிப்பேட்டை மவுலானா மவுலவி உஸ்தாது ஷெய்கப்துல் காதிறு ஆலிம்சாஹிப்
அவர்கள்பேரில்

சரமகவி.

கடவுள் துதி.

மறைப்பொருளேயெஞ்ஞான்றும்மண்ணும்விண்ணும்
மறைந்துநிறைந்திலங்குமொருவள்ளலான
பொறைக்கடலேபூரணமேபொன்னேநாயின்
புன்மையெடுத்தாண்டருளும்புனிதவாழ்வே
துறைப்புணையேமெய்யடியார்கல்புள்நின்று
தோற்றுவிக்குமானந்தத்துணையேநின்பால்
உறைத்தீமானுறுதியைவைத்தைந்தொகுத்து
மோங்குகலிமாவோதவருள்செய்வாயே.

அருட்குருவேமறைப்பொருளேயாதிஅல்லா
ஆண்டவனேறகுமானேஅகிலத்தோங்கும்
திருச்சுடரேமெய்த்தேவேதேனேபாலே
தெவிட்டாததெள்ளமுதேசிறியேன்முன்னுங்
கருத்துணையேகண்மணியேகனகக்குன்றே
காசினியினுளவுயிர்கள்கலிமாப்போற்றி
மருள்நீங்கியுன்னடியைவணங்கியேத்த
வள்ளலேநீகிருபைமகிழ்ந்துசெய்வாய்.

அன்பியாநாயகம் துதி.

அரியபெரியவருட்கடலாமாதிநாயன்றிருத்தூதர்
பிரியநபிசல்லல்லாகுஅலைகிவசலமெனும்பேராம்
உரியதீனினுயர்கடனையுயர்வாஞ்சுவர்க்கவீட்டில்வைக்கும்
துரியநபியேமுகம்மதுவேதோன்றலேறேகுருமணியே.

நூல்.

மங்கம்மாள்பேட்டையென்னுமாநகரதனிற்றோன்றித்
துங்கமாம்நாலாம்வேதச்சுருதிநூலனைத்துங்கற்று
எங்கள்தீன்குலத்தோர்க்கெல்லாமெழுதருமறையையீந்து
சங்கைஷெய்கப்துல்காதிராலிமேசான்றோய்சார்ந்தீர்.

புகழ்பெறுநாயன்பாதம்போற்றுநூலனேகஞ்செய்து
மகிழ்பெறும்இஸ்லாந்தன்னைவள்ளலாம்தாய்போல்காத்த
திகழும்நற்சீர்த்திவாய்ந்தநீதிஷேக்மதாருவீன்ற
மகவுஷெய்கப்துல்காதிர்வான் அல்லாவிடஞ்சேர்ந்தீரோ.

எங்களுக்கிறைவராகவீண்டுநீர்வதிந்துதீனைப்
புங்கமாய்ப்போதித்தேத்திப்பொழுதைந்துவஃத்தும்போற்றித்
திங்கள்போல்விளக்கஞ்செய்தஷெய்கப்துல்காதிரேநீர்
துங்கமார்நாயன்பாதம்தொழுதுதீனுலகம்பெற்றீர்.

(வேறு.)

நேர்வழிவிளக்கமெனுந்தீன்மணிமுளக்கமதை
நீள்புவியில்நாட்டியெங்கும்
காரிருளகற்றியொருகோடிரவியுற்றதெனக்
கருணைகொடுதீன்பயிரினைச்
சீர்பெருகுமிவ்வுலகமாந்தருயவேநாயன்
திவ்யகுணமகிமையாவும்
சேர்ந்துதிருமறையோதுமாதிபெரியோன்பேரில்
ஷெய்கப்துல்காதிர்ஆலிம்

பேர்பெரியவுலகிலுளநல்லோர்கள்வாக்கினால்
போற்றுமெய்ப்பொருளதாகப்
பிரியமுளவன்நாமம்யாவதூத்
யாலத்தீபுயாஅல்லாகு, ஓதுமாறு
ஆர்வமுடன்அனவரதம்அவனாணைப்படிதொழுது
அல்லாவையேத்தியுய்ய
அன்பில்மிகுகருணைகொடுஅவனியர்க்கோதியவன்
அடியாருள்ஒருவரானார்.

இத்தரையாயிரத்துமுந்நூற்றிருபத்தேழில்
இனிமையுளதுல்ஹஜ்ஜுமாசமான
சுத்ததினமிருபத்தேழ்தேதிசெவ்வாய்
சொலுமிரவிற்பனிரண்டுமணிக்குமேலாய்க்
கத்தனருளாலிரண்டுமணிநேரத்தில்
கனமானவாயுவரக்கலிமாவோதிச்
சித்திபெற்றுஷெய்கப்துல்காதிராலிம்
சென்னைபிரம்பூர்ப்பள்ளிக்ஷேமம்பெற்றார்.

வேறு.

சீரையுமதியார்கல்லாச்செல்வத்தைமதியார்மற்றைப்
பேரையுமதியார்நாயன்பெருமறைவிதியலாத
ஊரிலுள்ளார்கள்பல்லாரொழுங்கிலாத்துவசம்நாட்டச்
சீருடன்விலகிச்சென்றும்தீன்பயிர்வளர்க்கவேண்டி.

"அன்னையுமத்தன்மேலாம்ஆண்டவாபாதம்போற்றி
முன்னவன்பள்ளிசென்றுமூவிருகாலமேத்தி
மன்னியமங்கையூரில்வாழுந்தீன்குலத்தோர்க்கெல்லாம்
நன்னெறிகாட்டும்! தீனின்நற்பதமூட்டும்! காவும்!

"தீனெறிநடவாத்தீயர்தீநெறிநின்றார்குற்றம்
ஊன்புரிசெயலேயாகும்முத்தமம்! பொறுத்தல்வேண்டும்
கானுளகற்களாலுங்கடுந்துயரிழைத்தாரேனும்
வானுளவரசேமாந்தர்மதிக்குறைவயத்தாலன்றோ"

"ஆதலின்புரையைநீக்கிஅன்பினாலனைத்துச்செய்தப்
பாதகமனைத்துஞ்செற்றுப்பக்திகோடிகளைக்காத்தல்
நாதனே!வேண்டும்!வேண்டும்!நன்னெறியுய்ப்பவர்." என்று
ஓதியஉளத்தாயப்துல்காலிமுமுனைர்வீரிதை.

நித்தனேபரனேஅல்லாவினைத்தொழுமேமைகட்கு
முத்தியாஞ்சுவர்க்கவீட்டில்மோனமாயிருக்கவைக்குஞ்
சித்தனேநீனே! நீங்கு, ஷைகப்துல்காதிரோதும்
சித்தமேமறந்துசெய்துதிற்பிறுங்காப்பாய்போற்றி!

உலகெலாம்நிறைந்துதானாய்ப்போங்குமெய்ப்பொருளதாகும்
அலகிலாவேதம்நான்கின்ஆதிதீன்கவிமாபர்னும்
இலகுமைந்தொகுத்துமேத்துமெய்முடையப்துல்காதிர்
வலனுறுஒலியாஞ்சிங்கம்வானுலகடைந்தார்மன்றே.

மோனமாம்பொருளேஆதிமுடிவுநாளதனிலுன்றன்
தீனதாம்பயிரையெங்குஞ்செழித்திடவளர்த்தேயெங்கட்
கானதாந்தொழுகையீமானலேவிலாதிருந்தேயுன்னை
ஞானவைம்போதுமேத்திநற்கதிபெறச்செய்வாயே.

வேறு.

மாறுபடுபுறச்சமயவழியனைத்துமிரிந்தோடிமழுங்கத்தீனின்
வீறுயர்ந்தமெய்மதத்தின்மேன்மையுளஉறதீதைவிளக்கிக்கூறு
மாறுபல வேடுகளை யச்சிட்டு மதன்பொருளை யன்புகொண்டு
ஏற்றனைய பிரசங்கமெடுத்தோதும் பான்மையுள ரினியாரம்மா.

இத்தரைசெய்தவப்பயனாலெடுத்தவுடலீடேற இஸ்லாம்மார்க்கப்
புத்தமுதாய் நற்கிரந்த புத்தகக்கித்தாபுகளைப் புதுக்கிச்சென்னை
வித்தகமாவச்சிட்டு மேனென்றன் விபனுலகு மேவியாங்கு
உத்தமன்றன்பாதமலரடைந்தீர்பேருலகிலுமைப்போலுமுண்டோ.

வெண்பா.

செய்கப்துல்காதிர் செய்பிரசங்கம்போல
ஐயமினியாருரைப்பார் ஐயையோ—வையகத்தில்
அன்னவர்போல் தீன்மார்க்கமாராய்ந்திங் கச்சிட்டு
மின்னுபுகழ் பெற்றவர்யார் மேல்.

ஷைக்மகார் செய்தவம்போல் செய்யதவம் யார்புரிந்தார்
ஷைக்காதிரைப்போலச் சீருடையோர்—ஷைக்னார்கள்
வல்லவர்களன்னவர்போல் வந்துதிப்பாரிவ்வுலகில்
இல்லையில்லை யில்லை யினி.

வேறு.

புத்தகத்தாலும் பிரசங்கத்தாலும் பூரணபோதமா சொளியாம்
நித்தனைத்தொழுகைத் தொகுத்தினும்போற்றிநேர்மையாஞ்சலவா
[த்துக்கவிமா.

உத்தமத்தீனின் உண்மைநூற்பொருளையோதிடவைத்தனைபுனிதா
வித்தகப்பிரம்பூர் மேவியாங்கடைந்தாய் விற்பனனந்தசற்குருவே.

இங்ஙனம்,
ஆ. ப. கா. பக்கீருமுகம்மது,
யானைக்கனும் பேட்டை பாஷிய முஸ்லிம்ஸங்கத்தின்,
அங்கத்தினனும்.

காரைக்கால்

மிஸ்டர். ம. காதிறுகனி M. S. அவர்களின் போதஉழைப்பு.

* * *

நமது நண்பர் கனம் ம. காதிறுகனி M. S. அவர்கள், சென்றமாசம் இந்த நேசனில் கண்டபடி தென்னாட்டுப்பிரசங்கத்துக்காகத் தங்கள் ஜனனதேசத்தைவிட்டு இரயிலேறிப்பார்த்திபனூர் ஸ்டேஷனுக்குச்சென்றதும் கமுதி முஸ்லிம்கள் எதிர்வந்து வந்தனோபசாரஞ்சொல்லி அழைத்துச்செல்லுங்கால் அபிராமத்து முஸ்லிம் சகோதரர்கள்குறுக்கிட்டுக் கமுதிமுஸ்லிம்களின் அநுமதிபெற்று யாவரையும் அழைத்து நமது எம். எஸ். அவர்கட்கு வந்தனவாழ்த்துக்கூறி மாலைசூட்டிக்கமுதிக்கு வழிகூட்டியனுப்பினர். கமுதியார் இவர்களை 1911-ம்௵ நவம்பர்மாசம் 12-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஊருக்குள் அழைத்து இவர்களுக்காக அமைக்கப்பட்டவிடுதியில் அமரச்செய்தனர். நமது கனியவர்கள் அன்று சாயந்தரங்கூடிய மீட்டிங்குக்கு விஜயஞ்செய்து நமது நபிகள் திலகம் முகம்மது இரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் சரித்திரவரலாற்றை ஐரோப்பியர்களின் குறைக்கூற்றுக்குச் சமாதானஞ்சொல்லிப்பிரசங்கித்துச்சபையைக்குதூகலிக்கச்செய்தனர். அடுத்தநாள் காலையில் முஸ்லிம்கலாவிருத்தி சங்கபாடசாலை மாணாக்கர்களைப்பரீக்ஷித்து, தேறிய அப்பள்ளிக்கூடத்து நான்கு வகுப்புப்பிள்ளைகளின் முதலாவதான நான்கு மாணவர்களுள் நமது எம். எஸ். அவர்கள் முதல்மாணவர், நெய்னாமுகம்மதுக்கு ஒரு சூரத்துபட்டுலேஞ்சியும், மூன்றாவது வகுப்புமுதல் மாணவர், நாகூர் மீறாவுக்கு ஒரு பம்பாய்ப்பட்டுலேஞ்சியும், இரண்டாவது வகுப்புமுதல் மாணவர், சுல்த்தான் முகியித்தீனுக்கு ஒரு கொழும்புப்பட்டுலேஞ்சியும், முதலாவது வகுப்புமுதல் மாணவர் முகியித்தீன் பாவாவுக்கு ஒரு விசித்ரதைலாபெட்டியும் பிஸ்கெட் டின்னும் கொடுத்து, அவர்களுக்கு உற்சாகமூட்டி மற்றைய முஸ்லிம் பிள்ளைகளும் இதிற்சேர்ந்து கல்விகற்கும் வண்ணம் நீண்டபிரசங்கமுஞ்செய்து இப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களைப்புகழ்ந்தனர். அன்று 4 மணிக்கு முஸ்லிம்கலாவிருத்தி சங்கசாலையில் குறிக்கப்பட்ட 3-ம் வருடோற்சவக்கொண்டாட்ட மீட்டிங்கூடிற்று. அச்சபையில் முஸ்லிம்களும், ஹிந்துக்களும், கிறிஸ்தவர்களுமாக 500 பெயர்வரை விஜயஞ்செய்திருந்தனர். போலிஸ்காரரும், சப்இன்ஸ்பெக்டரும், ஹெட்டும், பிஷப்பும், போஸ்ட்மாஸ்டரும் இதரஉத்தியோகஸ்தரும் வந்திருந்தனர். இச்சங்கத்து அக்கிராசனாதிபதி கனம் இபுராமு அம்பலக்காரரின் பிரேரபனைக்கும், காரியதரிசி கனம் P. M. காதிறுமுசாபர் அவர்களின் ஆமோதிப்புக்கு மிணங்க விஜயஞ்செய்திருந்தவர்களின் விடாகரகோஷத்துடன் கனம் ம. காதிறுகனி எம். எஸ். அவர்கள் சேர்மெனாக நியமிக்கப்பட்டார்கள். நியமிக்கப்பட்டு ஆசனத்தில் அமர்ந்த நமது கனியவர்கள் சபையாரைவிளித்து நீண்ட பிரசங்கஞ்செய்தார்கள். இந்தப் பிரசங்கம் மற்றொரு சமயம் நேசனில் வெளிவரும்.

இந்தப்பிரசங்கம் முடிந்ததும் சப்இன்ஸ்பெக்டர் எழுந்து நமது எம். எஸ். அவர்களையும் அவர்கள்பிரசங்கத்தையும் ஆமோதித்துப் பிரசங்கமாரிபொழிந்தார்கள். அது வியக்கத்தக்கது. பிஷப்பவர்களும் மவுனித்திருக்காது அதையே கடைப்பிடித்தொழுகியது மல்லாமல் ஸ்கூலையும் சங்கத்தையும் பெருமைபாராட்டிப்பேசினார்கள். வந்திருந்தயாவரும் புஷ்பங்களைச் சொரியப்பட்டவர்களாகவும் சிற்றுண்டியுண்டவர்களாகவும் நமது எம். எஸ். அவர்களின் போதனையை மனத்திற்கொண்டவர்களாகவும் தத்தம் மனைக்கேகினர். அன்று 7 மணிக்கு அவ்வூர் சர்க்கஸ் உபாத்தியாயராகிய கனம், மறுதாறெலி அவர்கள் தங்கள் விளையாட்டை நமது கனியவர்கட்குக்காட்டவும் அவர்கள் மூலமாய்த் தங்கள் விளையாட்டுக்கூட்டத்தாருக்குப் பெயர்வைக்கவும் கருதித் தங்கள் கொட்டகைக்கு நானாவிதவெளிச்சம்போட்டு எம். எஸ். அவர்களை அழைத்துச்சென்றனர். அந்தூராரும், பலரும் விஜயஞ்செய்திருந்தனர். மேற்சொன்ன உபாத்தியாயர் தமது மாணவர்களைக்கொண்டு வெகுவிநோத விசித்ரவிளையாட்டுக்களைக்காட்டி நமது கனியவர்களிடமிருந்துநற்சாக்ஷிப்பத்திரம் பெற்றனர். முடிந்ததும் எம். எஸ். அவர்கள் எழுந்து இதற்கு “ஹமீதிய்யா ஸ்போர்ட்டிங்கிளப்” என நாமகரணமிட்டு இதன் வியாக்யானத்தை விளக்கி ஒருமணிநேரம் பிரசங்கித்து இக்கூட்டத்தாரை மகிழ்வித்தனர். அடுத்தநாள் அதாவது 14-ம்-திகதிகாலையில் அபிராமத்தார்

எதிர்வந்தழைக்கவும் கமுதியார் வந்தனோபசாரத்துடன் வழி கூட்டியனுப்பவுமாக நமது கனியவர்கள் அபிராமத்து எல்லைக்குள் புகுந்தார்கள். புகுந்ததுதான் தாமதம் ஒருபக்கம்அதிர்வெடியின் முழங்கமும் மறுபக்கம் வாத்தியகோஷ்டத்தின் ஆரவாரமும் காதைச்செவிடு படச்செய்தன. பின், மன்பஉல்ஹைருத் முஸ்லிம் தர்மசபையாரும், சிலம்பவித்துவ உபாத்தியாயரும், ஏனையோரும் பலவாத்தியங்களுடனும், கொடி, குடை, ஆலவட்ட முதலிய விருதுகளுடனும் எதிர்வந்து விசேஷமாய்த்தயாரித்து வைக்கப்பட்டிருந்த ஏறுவாகனத்தில் நமது எம். எஸ். அவர்களை உட்காரும்படிசெய்து பள்ளிகள்தோறும் பாத்திஹாவோதிக்கொண்டு ஊர் வலம்வந்து சபைக்கேகி, கனம், முத்து இபுராகீம் அவர்களின்கிரகத்தில் அமரச்செய்தனர். சற்று ஆயாசந்தீர்ந்த நமதுகனியவர்கள்பந்தல்குடி ஜமீன்தாரும், இரங்கோன் காசிம்பிரதர்ஸ் கம்பெனியின் மூலகர்த்தாவுமாகிய கனம் அப்பாஸ்காதர்அவர்களுக்கும், அவர்கள் புத்திரர்கட்கும், அவர்களின் மருகரும், அம்பலங்காரரும், மிராஸ்தாரும், நமது கனியவர்களின் பள்ளித்தோழருமாகிய மிஸ்டர். V. M. அப்துர்ரஹ்மான் அவர்கட்கும் பேட்டிகொடுத்தனர். கனம் அப்துர்ரஹ்மான் அவர்கள் நமது பிரசங்கியாருக்குடன் தந்துதங்கள் பக்கியில் ஏற்றிக்கொண்டு முஸ்லீம் மார்க்கட்டு மைதானத்தில் குறிக்கப்பட்டிருந்த மீட்டிங்கிக்குவந்தார்கள். அங்குப்பார்க்க ஏராளமான ஜனங்கள் விஜயஞ்செய்திருந்தனர். முஸ்லிம்களும் ஹிந்துக்களும் கிறிஸ்தவர்களும் குழுமியிருந்தார்கள். சபையாரின் வேண்டுகோளுக்கிணங்க கனம், V. M. அப்துர்ரஹ்மான் அவர்கள் அக்கிராசனாதிபதியாக அமர்ந்தனர். நமது பிரசங்கியார், மன்பஉல் ஹைருத் முஸ்லீம் தர்மசபையின் தாத்பரியங்களையும், பதவிளக்கத்தையும், கல்விகற்கும் நானுவழியையும்பற்றிப் பிரசங்கித்தார்கள். பின்புசபைகலைந்தது. இதற்குப்பின்னர் நமது கனியவர்கள் மதுரைசென்று கனம் அப்பாஸ்காதர் கமர்சியல் ஸ்கூலுக்கு விசிட்கொடுத்து கனம், பீர்முகம்மது நாஜிர்அவர்களிடம் கோர்ட்டுஆபிசில் சிலநேரம் கல்வியாபி விருத்திவிஷயமாய்க் கலந்திருந்து பேசியபின் தஞ்சைக்கேகினர். அங்கு அஞ்சுமனேஆஜம் சொசைட்டியிலே பிரசங்கித்து காரைசென்று நவம்பர்மாசம் 19-ம் திகதிகூடிய காஞ்சாயபு டாக்டர் N. முகம்மது உஸ்மான்சாயபு அவர்களின் வந்தனோபசார

மீட்டிங்கில் பரோபகாரம் என்றவிஷயத்தைப்பற்றிப் பிரசங்கித்துக் காரைசென்றனர்.

கண்டுகேளித்தோன்.

குலாம்காதிறு நாவலர்.

அதிகாரம்-4.

(அக்டோபர் நவம்பர் மாசத்துச்சஞ்சிகையின் றொடர்.)

இவ்வாறு சுயேச்சையடையப்பெற்ற நாகூர் தருகா மஹாவித்துவான் குலாம்காதிறு நாவலருக்கு அவர் விரும்பியிருந்தவாறு பிரசங்கங்களும் உபந்நியாசங்களும் செய்ய அநேகசந்தர்ப்பங்கள் கிடைத்தன.

ஒருநாள் நாகூரில் வாப்புச்சிலப்பைஸாஹிபு வீட்டில் நடைபெற்ற விருந்திற்கு நம் நாவலர்போயிருந்தார். அங்கே பல பெரியமனிதரும் சில புலவரும் கூடியிருந்தார்கள். அவர்களிற்சிலர் நாவலரைமுற்றும் அறிந்திராதவரும், சிலர் அறிந்திருந்தும் அவரிடத்துப்பொறாமையுள்ளவருமாக இருந்தனர். அக்கூட்டத்தில் “படைக்கப்பட்டகடவுள்” என்று யாரோ ஒரு மார்க்கப்பிரசங்கியார் எப்போதோ சொன்னவார்த்தையை அங்கிருந்த வித்துவான்களில் ஒருவர் குற்றமாய் எடுத்துக்கொண்டு அதைப்பற்றி விஸ்தாரமாய்ப்பேச ஆரம்பித்தார். மற்றவித்துவான்களும் அவ்விஷயத்தில் தங்கள் தங்களின் வித்தியாசாதுரியங்களைக்காட்டப் பலவாறு பேசத்தொடங்கினார்கள். யாவரும் முதலில் பேசிய வித்துவானுடைய கொள்கையை அநுவதித்தேபேசினர். சிலர் இரைச்சலிட்டும், சிலர் கம்பீரமாகவும், சிலர் படபடப்புடனும் அவ்விஷயத்தைப்பற்றிப்பேசினர். நம் நாவலர் அதைப்பற்றி யாதொன்றுஞ்சொல்லாமல் மௌனமாயிருந்தார். அந்த மார்க்கப்பிரசங்கியார், அவ்விதம் சொன்னது மூடத்தனமென்றும் சில வித்துவான்கள் தீர்மானித்தார்கள். கடைசியாக அவ்விஷயம் நமது நாவலரின் தீர்மானத்துக்கு வரும்படி அக்கூட்டத்திலிருந்த ஒருகனவான் தூண்டிவிட்டனர். நாவலர் அந்தக் கனவானுக்குவந்தனஞ்சொல்லி, அவ்விஷயத்தில் தாம் பேசும்வார்த்தை வீணாகாதபடி சுருக்கிச்சொல்வதாய்த்தெரிவித்து, பின்வருமாறுசொன்னார்:

"அவ்வசனம் சொன்னமார்க்கப்பிரசங்கிஇச்சபையில் இல்லை. அவரைமூடரென்றுசொல்வது அநாவசியகமான தூஷணையாகும். மேலும் அவர்தமிழிலக்கண இலக்கியங்களையறிந்தவராயிருக்கமாட்டார். அவர் அறபுக்கல்வியில் பயின்றவராயிருக்கலாம். அவர் எக்காலத்திலோசொன்னவார்த்தைக்கு இவ்வளவு குற்றநிரூபணங்களும் பிரசங்கவியாக்கியானங்களும் வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. வித்துவஜனக்கூட்டத்தில் இப்போது அவருடையவசனத்தைப்பற்றித் தீர்மானித்த இத்தீர்மானம் எவ்விதபயனளிக்குமோவென்பதும் எனக்குத்தெரியவில்லை. ஆயினும் அவருடையவசனம் அவருடைய பிரசங்கத்தின்போது கேட்டிருந்த பலருக்கும் அதிகபலனைக்கொடுத்திருக்குமென்று நம்புகிறேன். அவர்சொன்னவசனத்திற்கும் இலக்கணவிதி, இடந்தருகின்றது. இப்போது அதிகவழக்கத்திலிராத "காக்கைபாடினியம்" என்னும் இலக்கணநூலில் இதற்குவிதியுண்டு. ஆதலின் அந்தப் பிரசங்கியின்வசனம் அவ்விலக்கணவிதிக்கு ஒத்திருந்ததென்றுசொல்லி நாம் இவ்விஷயத்தை இம்மட்டோடு விட்டுவிடுவோம்."

இவ்வாறு நம்நாவலர் சொன்னவுடனே சற்றேறக்குறைய ஒருமணிநேரம் இவ்விஷயமாய் மாறிமாறிப் பிரசங்கம்செய்து வந்த வித்துவான்கள் யாவரும் வெட்கி, நமது நாவலரை ஒருவாறு தெரிந்து கொண்டவர்களாய் அவரிடத்து மிகுந்த நன்குமதிப்பைக்காட்டினார்கள். வித்துவான்களின் பிரசங்கமும் அறிவாளிகளின் உபந்நியாசமும் எங்கெங்கே நடக்கின்றனவோ அவ்வவ்விடங்களுக்கு நமது நாவலர் தவறாமற்போய்வருவார்.

(தொடரும்.)

உ. சே. மு.

பஞ்சாவரலாற்று விளக்கம்.

காப்பு - வெண்பா.

பொன்னார் சிலைகவர்ந்து போய்ப்பகிர்ந்தார் பங்கிலொன்றுங்
கொன்னார் கரமறைக்கக் கூடாமல் - அன்னார்தாம்
உய்யமுதற் பஞ்சாவென் றூன்றிவைத்த வாறுரைக்கத்
துய்யமுத லோனே துணை.

தற்சிறப்புப்பாயிரம்.

கலிநிலைத்துறை.

பந்தவொண்சிலைக் கரந்துணித் தூன்றிய பஞ்சா
வந்த வாறுரைத் தான்பொழில் காரைக்கால் வாழ்க்கை
சந்த நன்மகன் புலவர்மஸ் தானெறி தழைப்பக்
கந்த ரத்தைபொத் துரைமொழி காதிறுக் கனியே.

நூல்.

எல்லா வுலகங்களையும் உயிர்களையும் படைத்து இரணங்கொடுத்திரட்சிக்கும் புகழுக்குரியனாகி அரசாட்சிசெய்யும் வல்ல காரணக் கடவுளாகிய அல்லாகுதஆலாவின் ஒளியிலுண்டாகி, நபி ஆதம் அலைகிஸ்ஸலாமவர்களின் ஆண்மக்கள் மக்கள் வழியாகவந்த நபி இபுறுஹீம் அலைகிஸ்ஸலாமவர்களின் மகனார் நபிஇஸ்மாயீல் அலைகிஸ்ஸலாமவர்களின் கோத்திரத்திலுற்றமைந்து வந்த அதனான் கிளையிற்றோற்றிய அப்துல்முனாபு; அவர்களின் மகனார் ஹாஷீம், அவர்களின் மகனார் அப்துல் முத்தலிபு; அவர்களின் மகனார் தத்துவகலைக்கியான வுத்தமசுத்த சைதன்யரும், சத்துருக்களை யுத்தகளத்திற் கொத்திப்பிளந்து வெற்றிகொள்ளும் வாளாயுத அதிகாரஸ்தருமாகிய அப்துல்லா அவர்களின் திருநெற்றியிற் பெருமுத்தொளியாயிலங்கி, அவர்களின் திருத்தேவியாயும், கற்பு பொறுமை கல்விமுதலிய எல்லாநலனுமுள்ள கன்னிகாஸ்திரியாயும், லோகதாயாயும் விளங்கும் ஆமினாபீபியவர்களின் உதரகமலாசனக் கருவிலுற்றமைந்து முன்பின் அனேக காரண திருட்டாந்தர புதுமையோடும் பூரணமதிபோற்றோன்றிய தோன்றலானவர்களாயும், தறஜாத்தும், றிஸாலத்தும் பெற்றவர்களாயும், சிரசு அறுஷளவும் பாதந் தகுத்தறு அளவுமாக்கப் பட்டவர்களாயும், பார்வைக்குப் பாதம் பூமியினிடத்திற் படாமலும், ஆகாயத்தில் மேகங் குடையிடவும், கண்கட்குச் சாயைகாணாமலும், திருமேனியி லிருந்தெழும்புங் கஸ்தூரி வாசனை காதவழித்தூரம் வீசவும், முன்கண்ட தூரம்போற் பின்னாலே தெரியவும், நாசி முதலிய பொறிகளில் மலஜலாதி வெளித்தோற்றாமலும், திருமேனியில் ஈபெறும்பாதிக ளணுகாமலும் விளங்குகின்ற நமது ரட்சகர் பிர் எக்லியூதாசாகிய நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவ சல்ல மவர்கள். இவர்கள் திருமக்க

மா நகரைவிட்டெழுந்தருளித், திருமதீனமாநகர் சேர்ந்திருந்த எழுநூற்றுமுப்பத்து மூன்றும் வருஷத்தில்,

ஏஷியா கண்டத்தில் ருஷியாவிற்கும், காஸ்பியன் கடலுக்கும் வடக்கிலும், ஆப்கானிஸ்தானுக்கும், பில்ஜிஸ்தானுக்குங் கிழக்கிலும், பெர்சியாக் கடலுக்குத் தெற்கிலும், ஷை, ஏஷியாவில் துருக்கிக்கு மேற்கிலும் ஆகிய, இந்நான் கெல்லைகள் சூழ்ந்திருக்கின்ற ஹீறானென்னும் பெர்சியாவான பூமண்டலத்தில் மிகவும் வலுமையுங் கடினமுமாகியதோர் பஞ்சந் தோன்றினதினால், வலியோர்கள் நலிவோர்களைப் பிடித்துப் பிய்த்துத்தின்னும்படியான காலமாயிற்று.

அப்போ தவ்வூரில் வசிப்பவர்களிற் பெருந்தொகையான வழிகேடர்களும், நமது நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய ஷறதுக்கு விரோதம்பேசுகிறநரகவாதிகளுமான றாபிலிகளி லனேகர் அப்பஞ்சத்தி லுண்டாகிய கஷ்டத்தைச் சகிக்கமுடியாமற் பஞ்சம்பிழைக்கும்நோக்கமாய்ப் பலகூட்டங்களாகவூரை விட்டெழுந்து பலபல தேசங்களுக்குப் போனார்கள். அதுபோலே, இந்தியாவிற்குள்ளும் ஓர்கூட்டத்தார்களிற் பதினாறு வழிகேடர்களான றாபிலிகள் வந்து புகுந்தார்கள். இவர்களி லொருவன் கால் நொண்டியானவன். அவனை அப்பதினாறுபேர்கள் எந்தெந்த ஊர்களிற்போய்க் கூடாரமடித் திறங்கி யிருப்பார்களோ அந்தக் கூடாரங்கட்குக் காவலாக வைத்துவிட்டு ஊருக்குள்ளே போய்வருவது வழக்கமா யிருந்தது.

இவர்கள் தங்களூரிலுண்டான பஞ்சத்தி லடிபட்டு வந்தவர்களானதாலும், பணஞ்சம்பாதித்துக்கொண்டு ஊருக்குப்போகவேண்டுமென்கிற பேராசை பெரிதாகக் கொண்டவர்களானதாலும் வேறோர் வேலைகளிற் சிந்தையை நுழையவிடாமற் றிருட்டுத் தொழிலையே முக்கியமாகக்கொண்டு மும்முரமாக நடத்தி வந்தார்கள். அஃதெவ்விதமெனில், பகற்காலமெல்லாம் கத்தி கண்ணாடி, கரியமணி, காப்பு, பலகறை, மோதிரம், சங்குமணி, ஊசி, நூல்முதலிய சில்லறைச் சாமக்கிரிகைகளை ஆங்காங்கு தெருக்களிற், றிண்ணையோரங்களிற் கொண்டுபோய்ப் பரப்பி வைத்துக்கொண்டு மெய்யான வியாபாரிகளைப்போற் பாசாங்குசெய்து உளவு பார்த்துக்கொண்டு இராவானபோது தந்திரமாக ஆங்காங்கு போய்ப் புகுந்து திருடிக்கொண்டு தங்கள் கூடாரத்திற்குவந்து திருட்டுச் சொத்தைப் பங்கிட்டுத் தகுந்தபடி மறைத்துவைத்துக் கூடாரத்தைப் பிடுங்கிக்கொண்டு மறுதேசங்கட்குப் போவார்கள். அங்கு மேற்சொன்ன முறையாகக் கடைகளைவைத்துப் பகற்காலங்களிற் பணக்காரர்கள் வீடுவாயில்களெவையெவையென்று உளவுபார்த்து இராக்காலங்களிற் றந்திர வுபாயமாகப்போய்க் களவுசெய்வார்கள்.

இவ்விதமாக, அப்பாதகர்கள் இந்தியாவின் வடமேற்குமாகாணங்களைக் கடந்து, நானாராவ் ஆங்கிலேயரோடு கலகஞ்செய்த மீறுட் நகரத்திற்கும், தாவாவர்க்மங்களுக்குப் பேர்போன ஷஹாரன்பூருக்கு மத்தியி லிருக்கின்ற நவாபுசாகிபுக்குக்கீழானதும், நீர்வளம் நிலவளம் பொருந்தியதுமான தேவபந்து நகரத்திற் கருகாமையாகவந்து கூடாரமடித் திறங்கி யிருந்தார்கள்.

(தொடரும்)
எம். எஸ்.

சென்னை வி. பி. கம்பெனிகள்.

இந்தச் சென்னைமாநகரத்தில் அநேகம் கனதனவான்கள் பல வருடங்களாகப் பலவகையான வி. பி. கம்பெனிகளை ஏற்படுத்தி ஒழுங்கோடும் நாணயத்தோடும் வியாபாரம்செய்து பொருள் தேடிப்புகழடைந்து வருகின்றார்கள். எனினும் நல்லபயிர்களின் இடையிடையே களைகள் தோன்றுவதுபோல சாமானியர்களும் அவர்களைப்போல் வியாபாரம் செய்யத்தொடங்கிச்சரியாக நடத்தத் தெரியாமல் நாணயத்தைக்கைவிட்டு வெளியூரிலிருந்து வியாபாரப்பொருள்களைத் தருவிக்கும் ஜனங்களுக்கு அதிருப்தியை உண்டாக்கிவருகின்றார்கள். இதனால் மற்றநாணயமான பெரிய வியாபாரிகளுக்கும் மதிப்புக்குறைகிறது. அன்றியும் வெளியூரார் இவர்கள் செய்யும் அக்கிரமங்களைப்பற்றிப் பத்திரிகைகளுக்கெழுதி குறையிடவும் ஏதுவுண்டாகிறது. இதற்குதாரணமாக: சின்னமனூர் M. P. காதர்இஸ்மால் ராவுத்தர் என்பவர், தாம்சிலதினங்கட்கு முன்னர்சென்னை எல்-பி-ஆர். சின் அண்கோ என்னும்கம்பெனிக்குச் சிலசாமான்கள் அனுப்பும்படி எழுதினதாயும், அதற்கவர்கள், எழுதினதுபோல சாமான்களை அனுப்பவில்லையென்றும் அவற்றுள் சிலவற்றை எடுத்துக்கொண்டு குறைந்தவிலையுள்ள

சிலதாழ்ந்த சாமான்களைமட்டும் அனுப்பினார்களென்றும், இதைப்பற்றி நமதுநேசனில் பிரசுரிக்கவேண்டுமென்றும் நமக்குச்சென்றமீ 15உ கார்டின்மூலம் தெரிவித்திருக்கிறார். இவர் எழுதியிருக்கிறபடி மேற்கண்டகம்பெனியார் செய்திருப்பார்களாயின் அது நியாயவிரோதமான செய்கையாகும். வியாபாரம் செய்வோர் இத்தகைய பிரஸ்தாபமெல்லாம் வாராமல் செய்துகொள்வதே வியாபாரஒழுங்காகும். “வாணிகஞ்செய்வார்க்கு வாணிகம்பேணிப்பிறவுந்தமப்போற் செயின்” என்னும் குறளின்கருத்தை மனத்தில் வைத்து வியாபாரிகளெல்லாரும் நடக்கவேண்டும்.

டில்லியில் நடைபெறும் ஜார்ஜசக்கரவர்த்தியவர்களின் முடிசூட்டு விசேஷவிபரம்.

டிசம்பர்மாதம் 7-ந்தேதி வியாழக்கிழமை:—முற்பகல் 10-மணிக்கு ராஜப்பிரவேசம், பிற்பகல் 3-மணிமுதல் 5-மணிவரையில் அரசர்களை வரவேற்றல்.

8-ந்தேதி வெள்ளிக்கிழமை:—முற்பகல் 11-30-மணிமுதல் 1-30-மணிவரையில் மன்னர்களை வரவேற்றல். பிற்பகல் 3-40-மணிக்குக் காலஞ்சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியின் ஞாபகார்த்தச்சடங்குகள். இரவு 8-மணிக்கு ராஜதம்பதிகளுக்கு விருந்து.

9-ந்தேதி சனிக்கிழமை:—தேசமன்னர்களை முற்பகல் 11-30 மணிமுதல் 1-30 வரையிலும் வரவேற்றல். போலோ விளையாட்டும், புட்பாலும் பிற்பகல் 3-30-மணிக்கு நடைபெறும்.

10-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை:—முற்பகல் 10-30-மணிக்கு மிலிடெரி காம்பில்சர்ச்சு சர்விஸ் நடைபெறும்.

11-ந்தேதி திங்கட்கிழமை:-முற்பகல் 11-மணிக்குப்போலோ கிரவுண்டில் பலநிறமுள்ள கொடிகள் கொடுக்கப்படும். போலோ முடிவின் ஆட்டம்பிற்பகல் 3-30-மணிக்குத்தொடங்கும்.

12-ந்தேதி செவ்வாய்க்கிழமை:—பகல் 12-மணிக்குத்தர்பார் நடைபெறும். ராஜவிருந்தும், வரவேற்பும் இரவு 8-மணிக்கு நடைபெறும்.

13-ந்தேதி புதன்கிழமை:—முற்பகல் 10-45-மணிக்கு ராஜசக்கரவர்த்தியவர்களின் காம்பில் வாலண்டியர் ஆபீஸர்களையும் இந்திய ஆபீஸர்களையும் வரவேற்றல். பிற்பகல் 3-30-மணிக்கு ராஜத்தோட்டக்கச்சேரியும் ஜனங்களுக்கு விருந்தும் நடைபெறும். இரவு 8-மணிக்கு ராஜதம்பதிகளுக்கு விருந்து நடைபெறும்.

14-க்தேதி வியாழக்கிழமை:—முற்பகல் 10-30-மணிக்கு ரிவ்யூவும், பிற்பகல் 3-30-மணிக்கு ஹாக்கிவிளையாட்டும், இரவு 9-30 மணிக்குப் பட்டமளிக்கும் காரியங்களும் நடைபெறும்.

15-ந்தேதி வெள்ளிக்கிழமை:—முற்பகல் 11-மணிக்குப்போலோ கிரவுண்டில் போலீஸ் படைகளைப்பார்வையிடல், பிற்பகல் 3-மணிக்கு மிலிடெரிவிளையாட்டுக்கள் பலநடைபெறும். இரவு 9-மணிக்கு மல்யுத்தம் அல்லது குஸ்தி நடைபெறும்.

16-ந்தேதி சனிக்கிழமை:—பகல் 1-மணிக்கு மகாராஜாவும் பரிவாரங்களும் புறப்படுதல்.

இந்த முடிசூட்டுக்கொண்டாட்டத்துக்கு மாட்சிமை தங்கிய ஜார்ஜ் அரசரவர்களே மனைவியாரோடு நேரில்வந்தது, இவர்களுக்கு இந்தியாவின்மீதும், இந்தியஜனங்களின்மீதும் மிக்க அபிமானமுண்டென்பதை நன்கு விளக்குகின்றது. இதுபற்றி இந்தியர்கள் இவர்களிடத்தில் நன்றிசெலுத்தமிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தியர்கள் அவ்வாறு கடமைப்பட்டிருக்கிறார்களென்பதற்குப் பல இந்திய அரசர்களும், தனவந்தர்களும், மற்றுமுள்ள பிரஜைகளும் விசுவாசத்தோடு டில்லிக்குச்சென்று கூடியிருப்பதே முக்கியசாக்ஷியாகின்றது. இவ்வாறு இராஜபக்திசெலுத்தும் இந்தியர்களிடத்தில் தங்களுக்கேற்பட்டிருக்கும் விருப்பத்துக்குத்தக்கபடி மாட்சிமையுற்ற சக்கரவர்த்தியவர்கள் இந்தச்சமயத்தில் இந்தியாவுக்கு மிக்க நன்மையானகாரியங்களைச் செய்வதில் பின்வாங்கமாட்டார்களென்று பலர் எண்ணுகிறார்கள். அவ்வெண்ணம் கைகூடுமென்றே நாமும்கருதுகிறோம்.

முஸ்லிம் வர்த்தமானம்.

தார்பூர் சுல்தான்:—இந்த சுல்தான் அவர்கள் 15000 குதிரைச் சேனையை ஷேக்சனூஸி அவர்களிடம் அனுப்ப, ஷை ஷேக் அவர்கள் அவற்றைத்தம் சொந்தச்சேனைகளுடன் சேர்த்துத்தற்போதுதிரிப்போலியில் சண்டைசெய்யும் துருக்கியர்களுக்கு உதவியாக அனுப்பியிருக்கிறாராம்.

சிலதாழ்ந்த சாமான்களைமட்டும் அனுப்பினார்களென்றும், இதைப்பற்றி நமதுநேசனில் பிரசுரிக்கவேண்டுமென்றும் நமக்குச்சென்றமீ 15உ கார்டின்மூலம் தெரிவித்திருக்கிறார். இவர் எழுதியிருக்கிறபடி மேற்கண்டகம்பெனியார் செய்திருப்பார்களாயின் அது நியாயவிரோதமான செய்கையாகும். வியாபாரம் செய்வோர் இத்தகைய பிரஸ்தாபமெல்லாம் வாராமல் செய்துகொள்வதே வியாபாரஒழுங்காகும். "வாணிகஞ்செய்வார்க்கு வாணிகம்பேணிப்பிறவுந்தமப்போற் செயின்" என்னும் குறளின்கருத்தை மனத்தில் வைத்து வியாபாரிகளெல்லாரும் நடக்கவேண்டும்.

டில்லியில் நடைபெறும் ஜார்ஜ்சக்கரவர்த்தியவர்களின் முடிசூட்டு விசேஷவிபரம்.

டிசம்பர்மாதம் 7-ந்தேதி வியாழக்கிழமை:—முற்பகல் 10-மணிக்கு ராஜப்பிரவேசம், பிற்பகல் 3-மணிமுதல் 5-மணிவரையில் அரசர்களை வரவேற்றல்.

8-ந்தேதி வெள்ளிக்கிழமை:—முற்பகல் 11-30-மணிமுதல் 1-30-மணிவரையில் மன்னர்களை வரவேற்றல். பிற்பகல் 3-40-மணிக்குக் காலஞ்சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியின் ஞாபகார்த்தச் சடங்குகள். இரவு 8-மணிக்கு ராஜதம்பதிகளுக்கு விருந்து.

9-ந்தேதி சனிக்கிழமை:—தேசமன்னர்களை முற்பகல் 11-30 மணிமுதல் 1-30 வரையிலும் வரவேற்றல். போலோ விளையாட்டும், புட்பாலும் பிற்பகல் 3-30-மணிக்கு நடைபெறும்.

10-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை:—முற்பகல் 10-30-மணிக்கு மிலிடெரி காம்பில்சர்ச்சு சர்விஸ் நடைபெறும்.

11-ந்தேதி திங்கட்கிழமை:—முற்பகல் 11-மணிக்குப்போலோ கிரவுண்டில் பலநிறமுள்ள கொடிகள் கொடுக்கப்படும். போலோ முடிவின் ஆட்டம்பிற்பகல் 3-30-மணிக்குத்தொடங்கும்.

12-ந்தேதி செவ்வாய்க்கிழமை:—பகல் 12-மணிக்குத்தர்பார் நடைபெறும். ராஜவிருந்தும், வரவேற்பும் இரவு 8-மணிக்கு நடைபெறும்.

13-ந்தேதி புதன்கிழமை:—முற்பகல் 10-45-மணிக்கு ராஜசக்கரவர்த்தியவர்களின் காம்பில் வாலண்டியர் ஆபிஸர்களையும் இந்தியஆபிஸர்களையும் வரவேற்றல. பகல் 3-30-மணிக்கு ராஜத்தோட்டக்கச்சேரியும் ஜனங்களுக்கு விருந்தும் நடைபெறும். இரவு 8-மணிக்கு ராஜதம்பதிகளுக்கு விருந்து நடைபெறும்.

14-ந்தேதி வியாழக்கிழமை:—முற்பகல் 10-30-மணிக்கு ரிவ்யூவும், பிற்பகல் 3-30-மணிக்கு ஹாக்கிவிளையாட்டும், இரவு 9-30 மணிக்குப் பட்டமளிக்கும் காரியங்களும் நடைபெறும்.

15-ந்தேதி வெள்ளிக்கிழமை:—முற்பகல் 11-மணிக்குப்போலோ கிரவுண்டில் போலீஸ் படைகளைப்பார்வையிடல், பிற்பகல் 3-மணிக்கு மிலிடெரிவிளையாட்டுக்கள் பலநடைபெறும். இரவு 9-மணிக்கு மல்யுத்தம் அல்லது குஸ்தி நடைபெறும்.

16-ந்தேதி சனிக்கிழமை:—பகல் 1-மணிக்கு மகாராஜாவும் பரிவாரங்களும் புறப்படுதல்.

இந்த முடிசூட்டுக்கொண்டாட்டத்துக்கு மாட்சிமை தங்கிய ஜார்ஜ் அரசரவர்களே மனைவியாரோடு நேரில்வந்தது, இவர்களுக்கு இந்தியாவின்மீதும், இந்தியஜனங்களின்மீதும் மிக்க அபிமானமுண்டென்பதை நன்கு விளக்குகின்றது. இதுபற்றி இந்தியர்கள் இவர்களிடத்தில் நன்றிசெலுத்தமிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தியர்கள் அவ்வாறு கடமைப்பட்டிருக்கிறார்களென்பதற்குப் பல இந்திய அரசர்களும், தனவந்தர்களும், மற்றுமுள்ள பிரஜைகளும் விசுவாசத்தோடு டில்லிக்குச்சென்று கூடியிருப்பதே முக்கியசாக்ஷியாகின்றது. இவ்வாறு இராஜபக்திசெலுத்தும் இந்தியர்களிடத்தில் தங்களுக்கேற்பட்டிருக்கும் விருப்பத்துக்குத்தக்கபடி மாட்சிமையுற்ற சக்கரவர்த்தியவர்கள் இந்தச்சமயத்தில் இந்தியாவுக்கு மிக்க நன்மையானகாரியங்களைச் செய்வதில் பின்வாங்கமாட்டார்களென்று பலர் எண்ணுகிறார்கள். அவ்வெண்ணம் கைகூடுமென்றே நாமும்கருதுகிறோம்.

முஸ்லிம் வர்த்தமானம்.

தார்பூர் சுல்தான்:—இந்த சுல்தான் அவர்கள் 15000 குதிரைச் சேனையை ஷேக்சனூஸி அவர்களிடம் அனுப்பவே ஷேக் அவர்கள் அவற்றைத்தம் சொந்தச்சேனைகளுடன் சேர்த்து[illegible]போது திரிப்போலியில் சண்டைசெய்யும் துருக்கியர்களுக்கு உதவியாக அனுப்பியிருக்கிறாராம்.

முஸ்லிம் யூனிவர்ஸிடி:—இதுவரையில் 30 லக்ஷரூபா சந்தா சேர்ந்திருக்கிறதாம், அதில் நாளது வரையில் 17 லக்ஷரூபா வசூலாயிருக்கிறது. இந்த முஸ்லிம் யூனிவர்ஸிடிக்காக கனம் தங்கிய நிஜாம் அவர்கள்மாத்திரம் 5 லக்ஷம் ரூபா நன்கொடையளித்தார்களாம்.

ஆப்கான் அமீர்:—ஆப்கானிஸ்தான் அமீர் அவர்கள், பர்ஷியாதேசத்திலும், ஸ்தம்பூலிலும் இருந்து யுத்தசமாசாரங்களை அறிந்து தெரியப்படுத்துவதற்காகத் தங்கள்சேனையிலுள்ள ஆபீஸர்களை அனுப்பியிருக்கிறார்களாம்.

இந்தியாவில் துருக்கியுத்தசந்தா:—ஆகாகான் அவர்கள் 10000 ரூபாவும், பம்பாயிலிருக்கும் அறபியர்கள் 35000 ரூபாவும் சந்தாக்கொடுத்தார்களாம்.

லண்டன் மஸ்ஜித்: கூடியசீக்கிரத்தில் லண்டனில் மஸ்ஜித் ஏற்படுமென்று தெரியவருகிறது. இதற்கு போபால்பேகம் அவர்கள் 7000 பவுனும், ஆகாகானவர்கள் 5000 பவுனும், பர்ஷியா தேசத்து ஷா அவர்கள் 1000 பவுனும் கொடுத்திருக்கிறார்கள். கூடியசீக்கிரத்தில் இதற்குவேண்டிய 25000 பவுனும் சேர்ந்துவிடுமென்று நம்பப்படுகிறது.

பொதுவர்த்தமானம்.

மோதுண்டகப்பல்:—நார்த்து ஸீயில் (வடக்குச்சமுத்திரத்தில்) ஸ்கார்ப்பியனென்னும் பிரிட்டிஷ்கப்பல் ஒரு டேனிஸ்கப்பலோடு மோதிற்று. அதனால் டேனிஸ் கப்பலினொருபக்கம் ஓட்டையாய்விட்டது; அதுபற்றி அது ஸ்டோருக்கிழுத்துச் செல்லப்பட்டது.

கப்பலினின்றுந்தவறிக் கடலில் விழுந்திறந்தார்:—ஸெயின் ஓவின் லெண்ட் என்னும் கப்பலின் கமாண்டர் பிரயன் பெரிவெவனுக்குக்கப்பல் செல்லும்போது, அக்கப்பலிலிருந்து தவறிக் கடலில் விழுந்திறந்தார்.

கல்மழை:—சென்றமாதம் 2உ இரவு 7½-மணிக்குச் சோழவந்தானைச் சேர்ந்த முன்னீர்ப்பள்ளமென்னும் கிராமத்தில் கல்மழைபெய்தது. அக்கல் அபிரேக்குக்கல்லாம்; உள்ளங்கையகலமிருக்கின்றதாம். அது விழுகின்றபோது நெருப்பு விழுவதுபோலிருக்குமாம்.

ரயிலிலகப்பட்டிறந்தான்:—சென்றமாதம் 11உ இரவு விழுப்புரத்திலிருந்து புறப்பட்டுவந்த ரயில்வண்டி செங்கற்பட்டுக்கு வந்து நின்று புறப்பட்டவுடன் அதிலேறிவந்த பைராகியொருவன் தானேறிவந்த வண்டியினின்றுங் கீழேகுதித்து, வண்டியின் கீழகப்பட்டு, உடல்சிதையப் பெற்றிறந்துபோனான்.

ஒரு தற்கொலை:—சென்றமாதம் 13உ பச்சையப்பன் காலேஜியில் எப்-எ-ஸீனியர் வகுப்பில் வாசித்துவந்த எஸ்-வி-கணபதிசிவாவென்பவன் திருவல்லிக்கேணியில் கழுத்திற்கயிறிட்டுத் தற்கொலை செய்துகொண்டான்; காரணம் கடன் உபத்திரவமாம். மாணிகட்குக்கடனும் கழுத்துக்குக்கத்தியாகும்போலும்.

ஸ்ரீமான்-பொ-பாண்டித்துரைத் தேவரவர்கள் காலஞ்சென்றார்கள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியவர்களும், பாலவனத்தம் ஜமீன்தாரவர்களும் ஆகிய ஸ்ரீமான்-பொ-பாண்டித்துரைத்தேவரவர்கள் இந்த டிசம்பர் மாசம் 2உ சனிக்கிழமை காலஞ்சென்றதாக அறிந்து மிகவும் விசனிக்கிறோம். தமிழபிமானங்குறைந்த இக்காலத்தில் விடாமுயற்சியோடு மதுரையில் சங்கத்தை ஸ்தாபித்துப் பண்டைக்காலத்திலிருந்த பாண்டியர்கள்போலவே தமிழைவளர்த்து வித்வான்களையும் ஆதரித்துத்தங்கள் பெயர்ச்சிறப்பை விளக்கிய இப்பெருந்தகையினரை இத்தமிழ்நாடு இழந்தது, கல்விமான்கள் ஒவ்வொருவரும் கவலையுறத்தக்கதே. இவர்களைப்போன்று இனி எவர்தமிழில் அபிமானஞ்செலுத்துவார்?

துப்பாக்கியாற் சுட்டுக்கொண்டிறந்தான்:—ரிச்சார்டு ஹீப் என்னும் வாலிபன் சென்றமாதம் 13உ தன்னைப் பாங்கிமலைப்பட்டாளத்திற் சேர்த்துக்கொள்ளாமை பற்றித் துப்பாக்கியாற்சுட்டுக்கொண்டான்; இவன் தகப்பனார் மிஸ்டர் ஹீப்பினவர்கள் இவனை ஜனரலாஸ்பத்திரிக்குக் கொண்டுபோக, அங்குக்குணமடையாது அவன் அன்றுமாலை 6-மணிக்கு இறந்து போனான்.

புதுஸ்டாம்புகள்:—நமது சக்கரவர்த்தியவர்களது மகுடாபிஷேக வைபவகாலத்தில், அவரது திருவுருவம் பதியப்பெற்ற ஸ்டாம்புகள் விலைக்கு விற்கப்படுமென்று தெரிகின்றது.

நமதுகவர்னர் டில்லிக்குபோதல்:—நமது கவர்னரவர்கள் டில்லிதர்பாருக்கு இம்மாதம் 1-ந்தேதி பிரயாணமாய்ச்சென்றார்.

சென்னைமரணவிகிதம்:—சென்றமாதம் 18ந் தேதியோடு முடிவானவாரத்தில் 633பேர் மரணமடைந்தனர். 2 ஐரோப்பியர்,

14யூரேஷியர், 23 நேடிவ்கிறிஸ்தவர், 75 மகம்மதியர்,,, 518 இந்துக்கள்1 ஜாதிதெரியவில்லை, 5 அம்மை,74 வாந்திபேதி, 113 சுரம், 139 வயிற்றுவியாதி, 309 இதரகாரணம்.

புருஷனைக்கோல்லமுயன்று தண்டனையடைந்தவள்:—கல்கத்தாவைச்சேர்ந்த குல்னாஎன்னுமூரில் வசிக்கும் ஷர்ஜான் பீ பீ என்பவள் காலு மல்லிக்கென்னும் தனது புருஷனை விஷமிட்டுக் கொல்ல முயன்றாளென்று குற்றஞ்சாற்றப்பட்டு அவ்வூர் மாஜிஸ்டிரேட்டால் நான்குவருஷக் கடுங்காவல்தண்டனை விதிக்கப்பட்டாள்.

முஸ்லிம்கள் கவனிக்கத்தக்கவழி.

(அக்டோபர் நவம்பர்௴ சஞ்சிகையின் தொடர்)

அருமைவாய்ந்த சகோதரர்களே!

மக்கத்துக் காபிர்களின் இம்சைகளைத் தாங்க ஒண்ணாத நமது நபிகள் திலகமவர்களும் அவர்களைச் சார்ந்த சிலமுஸ்லிம்களும் பரிம்பரை நகரமாகிய மக்கத்தைவிட்டு மதீனத்துக்கு அடைக்கலம்புகுந்தது வேதவெளிச்சமன்றோ? அங்குந்துன்பந்தொடர்ந்து அதிகரித்தமையால் தங்களைக்காத்துக்கொள்ளும்பொருட்டு பதர் என்னும் இடத்தில் பாரியயுத்தம் நடத்தியதும் அந்த யுத்தத்திற்றான் கலகத் தலைமை மௌடீக பிதா அபூஜகில் மாண்டதும் வெளிப்படை. குறைஷிக் காபிர்களில்அநேகர் இறந்தும்புறங்காட்டியோடியும்பிடிப்பட்டும் போனது இந்தச்சண்டையிற்றான். இவ்வாறுகப்பிடிப்பட்ட அநேகரை அவாளவாள் இனத்தினர் பணங்கொடுத்து மீட்டுச்சென்றனர். எஞ்சியவர்கள் கற்றறிந்த கல்விமான்கள். அவர்களையெவரும்மீட்பாரில்லை. நமது நபியவர்கள் தயாளகுணத்தாலும் கல்வியிற்கொண்ட பிரியத்தாலும் அவர்களிடம் தனித்தனி ஒப்படைக்கும் பத்துச்சிறுவர்கள் கல்வியில்தேறியபின் அவர்கள் சிறையில் நின்றும் மீட்சிபெறலாம் எனக்கட்டளைபிறக்க அதனால் அவர்கள் சிறையினின்றும் விடுதலையடைந்தார்கள். இதனால் செல்வந்தருக்கு ஒருவர் துணைவேண்டுவதென்றும், கல்வியான்களுக்கு அது அனவசியமென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகின்றதல்லவா? இன்னும் நமது வள்ளலான இஸ்லாமதஸ்தாபகர் கல்விவிஷயமாய்ப் போதித்த போதனைகளிற் சில *ஹதீஸைத ஈங்கெடுத்துக்காட்டுவது அவசியம். அவையாவன:—

(தொடரும்.)

எம். எஸ்.

---

* இவைகள் பஹ்ருல் அன்வார் கஷ்பூஸ்ஸுனுன் முதலிய கிரந்தங்களினின்றும் எடுக்கப்பட்டவை.

இஸ்லாம் நேசன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை-3.] 1912 ஜனவரி [வகை-5.

மொஹறாம்பண்டிகை.

முஸ்லிம் நண்பர்களே!

இந்தப் பண்டிகையை நமது முஸ்லிம்களிற் சிலர் மொஹறாம் பண்டிகையென்றும், பத்துநோம்பு என்றும், சில பாமர இந்துக்கள் அல்லாசாமிபண்டிகை என்றும் சொல்லிப் பலவிதமாகக் கொண்டாடிவருகின்றார்கள். இந்த மொஹறாம்மாசத்தில் நம்முஸ்லிம்கள்,மார்க்கப்படி செய்யவேண்டிய கிரியை வேறு. அதைவிட்டுச் சிலபாமர முஸ்லிம்களும் இந்துக்களும் சேர்ந்து நமது மார்க்கத்துக்குமுற்றும் விரோதமான பஞ்சாவைத்து வணங்கும்செய்கையை இந்தப்பண்டிகையின் தலையிலேற்றி மிகவும் விமரிசையாகக் கொண்டாடிவருகின்றார்கள். இஃது எள்ளளவும் நமது மார்க்கத்துக்குப் பொருத்தமற்ற விஷயமென்பது படித்துணர்ந்த முஸ்லிம்களனைவருக்கும் தெரியும். அப்படித்தெரிந்திருந்தும் முஸ்லிம்களில் சில பெரியமனிதர்களும் இதிற்கலந்து இந்தத் துர்ச்செய்கை விருத்தியாவதற்கு இடங்கொடுப்பதுதான் மிகவும் விசனத்தை உண்டாக்குகிறது. இந்த அருவருப்பான செய்கையின் உற்பத்தி விபரத்தை இதன் பக்கத்தில்வரும் "பஞ்சாவரலாற்று விளக்கம்" என்னும் வியாசத்தால் நன்குணரலாம். இது, மிகவும் மார்க்கவிரோதமான செய்கையென்பதைப்பற்றிப் பலநாளும் பலவிவேகிகள் எழுதிக்கண்டித்துவந்தாலும் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றதே தவிர ஒடுங்கினபாடில்லை. இது, கண்டதையெல்லாம் தெய்வமென்றுவணங்கும் விவேகசூன்யமான சில இந்துக்களுடைய செய்கைக்குச் சிறிது ஒத்திருப்பதால் அவர்களிலேயே அதிகமானபேர் இந்தக் கிறுக்காட்டத்தில்வந்து கலந்துகொள்ளுகிறார்கள். இவ்விருவகுப்பாரும் சேர்ந்து பத்துநாள்வரை பட்டணங்களைப்பாழாக்கிவிடுகிறார்கள். அந்தோ! என்னகொடுமை! மொ

ஹாரம்வந்துவிட்டதென்றால் ஒழுக்கமுள்ளவர்களெல்லோரும் திடுக்கமடைந்துவிடுகிறார்கள். பத்துநாள்வரையும் வெளியேறி வீதியில் நடப்பதற்கு யோக்கியமில்லாமற் போய்விடுகின்றது; ரணபேரிகைபோன்ற வாத்தியங்களின்பேரொலியால் செவிகள் செவிடுபட்டு ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவும் ஏதுவில்லாமற்போகின்றது; வெளியேறினால் எங்கே கல்லெறிவிழுகுமோ, எவ்விடத்தில் பல்லுடைபடுமோ, எவர்மண்டை உடையுமோ, எவர்கைகால்கள் ஒடியுமோ, எங்கேவஸ்திரங்கள் நாசமாய்ப்போகுமோ, எங்கே ஆபரணங்கள் கொள்ளைபோகுமோ என்று எல்லோரும் அஞ்சுவதற்கிடமாகிவிடுகிறது. இந்த விநோதமான பண்டிகையைக்கொண்டாடும் பாமரர்களுடைய அயோக்கியச்செய்கைகளுக்கு அளவேகிடையாது: ஒவ்வொருவரும் எண்ணத்தொலையாத விகாரவடிவமுள்ளவேடங்களைத்தரித்துப் பலரிடத்தும் சென்று நச்சுப்படுத்தித் துட்டுவாங்கி அதைத் தங்கள் குடிவெறியாட்டுக்கும், பேயாட்டுக்கும் உபயோகிக்கிறார்கள். எல்லா இடங்களைக்காட்டிலும் சென்னையில் இந்தக் கிறுக்காட்டம் அதிகம். சிலர் புலிவேஷம்போடுகிறார்கள்; சிலர் கரடிவேஷம்போடுகிறார்கள்; சிலர் கழுதைவேடம்போடுகிறார்கள்; சிலர் நாய்வேடம்போடுகிறார்கள்; அம்மம்ம! இவர்களுடைய வேஷங்களைக்கணக்கிட யாரால்முடியும்! இன்னும் ஆண்வேடம், பெண்வேடம், கிழவன்வேடம், குமரன்வேடம், கருப்புத்துரை வெளுப்புத்துரை சிவப்புத்துரை முதலிய துரைவேடங்கள், சாமியார்வேடம், மாமியார்வேடம், மருமகள்வேடம், பறைச்சிவேடம், குறத்திவேடம், சக்கிலிச்சிவேடம் முதலாக எவ்வளவோ எண்ணத்தொலையாதவேடங்களையெல்லாம் தரித்துக்குதிக்கிறார்கள். இவர்களுள் சிலர் உடம்புமுழுதும் கரியைப்பூசிக்கொண்டு எதிர்ப்பட்டவர்கள்மேலெல்லாம் பாய்ந்து அவர்கள் வஸ்திரங்களையெல்லாம் பாழாக்கிவிடுகிறார்கள். இந்தக் கரிபூசிய கருப்புத்துரைவேடக்காரர்கள் எதிர்ப்பட்டுவிட்டால் எவராயிருந்தாலும் வாய்திறக்காமல் கேட்டதைக்கொடுத்துவிட்டுப்போகவேண்டும். இவர்களுள்ளும் பஞ்சாத்தூக்குகிறவர்கள் குதிக்கும்குதிக்கோ அளவுகிடையாது. இவர்கள் பஞ்சாவைத் தூக்கிக்கொண்டு தீம் தீமென்று தாவிவரும்போது எப்பேர்ப்பட்ட தைரியகாரனும் மனங்கலங்கிவிடுவான். கொஞ்சம் விலகாமலிருந்தால் குப்புறவீழ்ந்து பல்லைஉடைத்துக்கொள்வதில் தடையில்லை. இவ்வாறு பஞ்சாவைத்து வணங்கும்தொழிலை மகமதியர்களில் சாமானியமான சிலர்மாத்திரம் கைக்கொண்டிருக்கிறார்கள் எனினும் எண்ணிறந்த இந்துக்கள் அவர்களுடன் கலந்து பெரிய ஆர்பாடத்தை உண்டாக்கிவிடுகிறார்கள்; சென்னையில் ஒவ்வொரு இந்துக்கள் தெருவிலும்பஞ்சாக்கள் வைக்கப்படுகின்றன. அப்படிவைத்தாலும் அந்த இந்துக்கள் ஒவ்வொரு மகமதியனைக் குருவாக்கிக்கொள்ளுகிறார்கள். சில இந்துக்கள் குருக்களாக ஒரு முஸ்லிமானவனைத் தேடாமலே தாங்களே பஞ்சாநாட்டி அல்லாசாமியென்று பூசிக்கிறார்கள்; நமது முஸ்லிம்கள் செய்வதைக்காட்டிலும் இந்துக்கள்செய்யும்காரியங்களை நோக்கும்போது தான் மிகவும் வெட்கக்கேடாயிருக்கிறது. ஆண் பெண் ஆகிய எல்லோருமே அல்லாசாமி அல்லாசாமி என்று அவர்கள் வழக்கப்படியே பஞ்சாக்களைப்பார்த்துக் கும்பிட்டு, ஒருவிதமான சிவப்பு நூல்களை வாங்கிக் கையில் கட்டிக்கொள்வதும், வாசனைப்பொடியை வாங்கிப் பஞ்சாவின்மேல் சிதறுவதுமான மூடக்கிரியைகளையெல்லாம் செய்கிறார்கள். இந்த இந்துக்களில் சிறுபான்மையோர் மாத்திரம்தான் மேற்கண்டவாறு மூடபக்திகொண்டுசெய்கிறார்கள்; பெரும்பான்மையோர் இது காரணமாகத்துட்டுச்சம்பாதித்துக் குடித்துவெறிகொண்டாடுவதை முன்னிட்டே செய்கிறார்களென விளங்குகின்றது. பறையர்முதலிய தாழ்ந்தவகுப்பாருக்கும், வேறுசில சாமானியர்களுக்கும் கண்டபடி குடித்துவெறிகொண்டாடுவதற்கு இது ஒரு நல்லமார்க்கமாய்விட்டது. ஒவ்வொரு பஞ்சாவுக்கும் நூறு ஐம்பது வசூலாகிறது; வேடந்தரிப்பவர்களுக்கும் அப்படியே பணம்கிடைக்கிறது. அது இவர்களுடைய ஆட்டத்துக்கெல்லாம் உதவுகிறது. அதனால் கலகமும் பலமாகிறது; போலீஸ்காரருக்கும் சிரமம் அதிகமாயுண்டாகிறது, இவற்றுள் புலிவேஷக்காரருக்கிடையில் நடக்கும்சண்டையோ இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. இரண்டு புலிவேஷக்காரர்கள் எதிர்ப்பட்டுவிட்டால் விலகும் விஷயத்தில் பெருஞ்சண்டையுண்டாய்விடுகிறது; இதனால் போலீஸ்காரர் ஒவ்வொரு புலிவேஷத்துக்கும் கூடவேபோகவேண்டியதாயிருக்கிறது. நன்றாகத்தின்றுகொழுத்து வேலையின்றித்திரியும் பயில்வான்கள் தாம் இந்தப் புலிவேடத்தை மிகுதியாகத்தரிப்பார்கள். இவ்வாறுமுன்பு, திமிர்ப்பிடித்த எல்லோரும் புலிவேஷம்போட்டுவந்ததால் கலகம் அதிகப்பட்டதை முன்னிட்டு முகமதியர்கள்மாத்திரம் புலிவேஷம்போடவேண்டுமென்று போலீஸ்டிபார்ட்மெண்டில் உத்தரவுசெய்திருக்

கிறார்கள். அதனால்சிறிது கலகம் ஒடுங்கியிருக்கிறதெனினும் இதா வேடங்களை எல்லோரும் தரிப்பதனாலுண்டாகும் தொந்தரவு இன்னும் நீங்கினபாடில்லை. பட்டணம் தட்டென்றால் எதையும் செய்யக்கூடியதாகையால் வரும்படியை உத்தேசித்து ஒவ்வொரு இந்துச் சிறுவனும் வேஷம்போடத் தலைப்பட்டுவிடுகிறான் .இந்தச் சிறுவர்கள், "என்னாங்கோ! போனவாட்டி அல்லாசாமிபண்டிகைக்கு அஞ்சுரூபா சிக்கிச்சிங்கோ; பலேதமாஷாயிருந்துதுங்கோ" என்று சொல்லக்கேட்டிருக்கிறோம்.

இவற்றையெல்லாம் ஆலோசிக்கும்போது இந்தக் கொண்டாட்டம், தின்று கொழுத்து வேலையற்றுத்திரியும் பாமரத்தடியர்களுடைய வேலையென்றும், கலகத்துக்கிடமான நாகரிகமற்ற செய்கையென்றும், லாகிரிவஸ்துக்களை உண்டு ஆடுவதற்குரிய திருவிழாவென்றும் அறிவுடையோர்க்கு விளங்காமற்போகாது. நம்மவர்களில் எத்தனையோ பெரியோர்களாகிய ஆலிம்களிருந்தும் இந்தக் கெட்டகிரியைகளை நீக்கி மார்க்கசம்பந்தமான விஷயங்களில் பிரவேசிக்கும்படி இவ்வகை முஸ்லிம்களுக்குப் புத்தி புகட்ட முன்வந்தார்களில்லை. இந்துக்களிலும் எத்தனையோ விவேகிகளிருந்தும் இதில் பிரவேசிக்கும் பாமர இந்துக்களை விலக்கினார்களில்லை. இந்துக்கள், தங்கள் பலதெய்வங்களைத் தொழுதும் பலன்கிடைக்குமோ கிடைக்காதோ என்னும் சந்தேகத்தால் இவ்வகையான தெய்வங்களையும்கொண்டாடுகிறார்கள்போலும். பலரும் இவ்விருதிறத்தாருக்கும் காசுகொடுத்து இந்த மாசை வளர்த்துவிடுகிறார்கள். இது இவ்வாறு வளர்ந்துவருவதற்கு முக்கிய காரணம் பணவரும்படிதான். இதைக் குறைத்துவிட்டால் கெட்ட செய்கைகள் தாமே ஒடுங்கிப்போம்.

ஆதலின், முஸ்லிம் கனதனவான்கள் ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் சிறிது கவனஞ்செலுத்தி மார்க்கவிரோதமான செய்கைகள் நீங்கி மார்க்கசம்பந்தமான விஷயங்கள் உலகத்தில்பரவும்படி செய்யுமாறு மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பஞ்சாவரலாற்று விளக்கம்.

(டிசம்பர்மீ சஞ்சிகையின் றொடர்.)

மேற்சொன்ன தேவபந்தூரில் வசிக்கின்ற இந்துக்கள் யாவர்களுமொன்றுகூடி அங்கே மகாவுன்னதமாகத் தேவாலயமொன்றமைத்து அதனுள்ளே தாங்கள்வைத்து வணங்கும்படியாக ம

ற்றுயர்ந்த அபரஞ்சியென்னும் பசும்பொன்னில் மாணிக்கமுதலிய இரத்தினங்களைப்பதித்து ஓர் விக்கிரகஞ்செய்வித்து அதற்கு விலையுயர்ந்த நவரத்தினங்களினால் நகைவகைகள் செய்துபோட்டுக் (குதாபந்தென்னும்) நாமமிட்டுத்தாங்கள் நாடியபடிக்கு அக்கோயிலிற்குள்ளே வைத்து மிகுந்த மனமகிழ்ச்சியோடு நமஸ்காரமாய்ப்பூசை புனற்காரம் நைவேத்தியங்களுஞ்செய்து வந்தார்கள்.

இப்படி அங்கிருக்கும்போது, அவ்வூரிற்சென்று கூடாரமடித்திறங்கியிருந்த கெட்ட ரூபிகளான கள்ளர்கள், தங்கள் வழமைபோலே கூடாரத்திற்கு நொண்டி ரூபியைக்காவல்வைத்துவிட்டுப் பாசாங்குத்தனமாகத் தாங்கள்செய்யும் வியாபாரச்சரக்குகளை எடுத்துக்கொண்டு அத்தேவபந்து நகரத்திலுள்ள தெருவீதிகளில் நாள்தோறும் போய்ப் போய்ச் சுற்றித்திரிந்து உளவு பார்த்துத், தங்கள் கண்ணோக்கத்தைப் பூர்த்திசெய்யும்படியான வஸ்துக்கள் ஒன்றுந்தென்படாமையாற் சஞ்சலக்கடலிற்றாழ்ந்தவர்களாய்க் கண்களிற்பஞ்சுசூழ்ந்து முகங்கள் கூம்பி, மனங்கள்மடித்துத் தெருவீதிகளைவிட்டு நீங்கிக் (குதாபந்தென்னும்) விக்கிரகத்தினிருப்பிடமாயும், இந்து மதஸ்தர்களின் வணக்காலயமாயும் விளங்கும் கோயிலின் அருகாமையாகவந்தார்கள்.

அப்போது அந்தக்கோயில்வாயில்களில்ஜனங்கள் கூடிப்போக்குவரத்தாக இருந்தமையால் அங்கு நடக்குங்காரணங்களைத் தாங்களும் உட்புகுந்து பார்ப்பவர்களைப்போலே கள்ள ரூபிகள் கோயிலிற்குள் புகுந்ததில் மேற்சொன்ன பசும்பொன்னில் மாணிக்கமுதலிய இரத்தினம் அழுத்திச்செய்யப்பட்டதும், நவரத்தின நகைவகைகள் போடப்பட்டதுமான (குதாபந்தென்னும்) விக்கிரகம் இவர்களின் பஞ்சுசூழ்ந்த கண்களுக்குத்தோற்றிற்று. அப்போதே இவர்கள் கொண்டிருந்த சஞ்சலமும், கண்களிற்சூழ்ந்த பஞ்சடைப்பும், முகவாட்டமும், மனக்கோட்டமுஞ் சூரியனைக்கண்டபனி நீங்குவதுபோலே நீங்கி ஆனந்தக்கடலில் ஆழ்ந்தவர்களாய் ஓர்புயம், ஈர்புயமாகப்பூரித்து ரோமபுளகிதம் பூத்தவர்களாய் இவ்விக்கிரகத்தைக் கோயிலில் நின்று நாம் எடுத்துக்கொண்டு போவோமேயானால் நாமும், நமது குடும்பங்களும் அநேக நாட்கள் ஜீவிக்கலாமென்றும், இந்நீசத்தொழிலாகிய திருட்டுத் தொழிலை இனி விட்டுவிடலாமென்றும் நிர்ணயங்கொண்டு எவ்விதத்திலும் இன்றைய இரவில்வந்து விக்கிரகத்தைக் கொள்ளை

கொள்ளவேண்டுமென்கிற எண்ணத்தோடுங் கோயிலைவிட்டு நீங்கித் தங்கள் கூடாரத்திற்கு வந்தார்கள். வந்தாலுமென்ன, இவர்கள் மூவாசைகளிலோராசையாகிய பொன்னாசையையே கவசமாகப்பூண்டவர்களாய் எப்போது பொழுதுபோகுமோ போகுமோ என்கிற எண்ணம் பெரிதுங்கொண்டவர்களாயிருந்தார்கள். பின்னர், கிழக்கில் உதயமானசூரியன் மேற்கிலாகி மறைந்து இரவாகி எங்கும் இருளுண்டாகியது. அப்போது,

மேற்சொன்ன வழிகெட்ட கூட்டத்தாரான ரூபிகள் ஒன்றுசேர்ந்து பிரயாணப்பட்டுப்போய் அக்கோயிற் கதவிற்குப்போட்டிருந்த சூட்சுமப்பூட்டை மிகுந்த சாதுரியமாக உடைத்துக்கதவைத்திறந்து உள்ளேபுகுந்து பெரிதான ஆனந்தமகிழ்ச்சியோடும் அங்கிருந்த (குதாபந்தென்கிற) விக்கிரகத்தைப் பூனை எலியைக்கவ்வி எடுக்கிறதுபோலெடுத்துக்கொண்டு மிகு துரிதமாக நடந்து தாங்கள் கூடாரத்தில் வந்து அங்கோரிடத்திற் பூமியிற் குழிகல்லி அதிலே புதைத்துவிட்டுக் கள்ளச்சாஸ்திரத்தை அனுசரித்தவர்களாய் மௌனமாயிருந்து இரவைக்கழித்தார்கள். பின்னர், அன்றுகாலையில் தாங்கள் அவ்வூரைவிட்டுப் பிரயாணமானால் இந்துக்கள் தங்கள்பேரில் சந்தேகங்கொள்வார்களென்றெண்ணிப்பயந்து வழக்கம்போலே பாசாங்கான வியாபாரச்சரக்குகளை எடுத்துக்கொண்டு ஊருக்குள் நுழைந்தார்கள். இது நிற்க,

அங்கே இந்துமதக்குருக்களும், பூசாரிகளும், சூரியோதயத்திற்குமுன்னரெழுந்து ஸ்தானபானஞ்செய்து நேமநிஷ்டைமுதலிய கருமங்களை முடித்துக்கொண்டு அதிசீக்கிரமாகத்தேவாலயத்தைத் திட்டிக்கதவைத்திறக்கநெருங்கும்போது, அக்கதவின்பூட்டு உடைபட்டு வாயில் திறந்திருக்கக்கண்டு ஆ! ஆ!! என்று ஓர் ஏக்கங்கொண்டு இப்படிச்சம்பவித்த காரணம் என்னவென்று பெரிய திகில்கொண்டு கோயிலுக்குள் புகுந்து பார்க்கையில் நாள்தோறும் தாங்கள் வணங்குந்தெய்வமாகிய (குதாபந்தென்னும்) விக்கிரகம் இருக்குமிடத்தில் அது இல்லாதிருக்கக்கண்டு தாய் முகங்காணாத சிசுக்கள்போலும், மழைமுகங்காணாத பயிர்கள்போலும், கணவனைக்காணாத கற்புடைப்பெண்கள்போலும், போர்முகங்காணாத வீரர்கள்போலும், கொடுப்போர் முகங்காணாத இரப்போர்கள்போலும், இடிமுன்னான சர்ப்பங்கள்போலும், புலிகுழியில்விழுந்தயானை[illegible]லும் பொறிகலங்கிமிகுந்தசஞ்சலப்பட்டு மெய்ம்மறந்து அசைவற்றுச்சித்திரப்பாவைபோல்நின்றார்கள். பின்புசிலநிமிஷங்களுக்குள் அவர்க்குஉடலில்உணர்வுதோன்றிற்று. அப்போது, அந்தக்குருக்கள், பூசாரிகளுக்கெல்லாம் தலைமையான ஆசாரியனொருவன் கொடூரகோபதீரத்தோடுமுகங்கடுகடுத்துக், கண்கள்சிவந்து, வாய் பதைபதைத்துப் பல்லை நெறநெறவென்றுகடித்து, மீசை துடிதுடித்துக், கீழ்உதட்டை மேற்பல்லினாற் கடித்துக், கையோடு கைபுடைத்து, வாய் கண் செவி மூக்கு இவைகளிலிருந்து கபீல் கபீலென்று எழும்புபுகையோடு கோபாக்கினிப் பொறிபறக்கச் சில்லென்று சரீர ஆதியந்தமும்வெயர்க்கப் பெருமூச்சுவிட்டு மேற்புருவம் வில்லைப்போல்வளைந்து நெற்றிமேலேறக் கொடிய காலாந்தகனைப்போலாய்த் தன்பக்கத்திலிருப்பவர்களெல்லாங் கிடுகிடு என்று நடுநடுங்கி, நாவறண்டு, நெஞ்சயர்ந்து தடுமாறித் தத்தளிக்கப்பார்த்து உக்கிரகவேகத்தோடு கெக்கரித்துக்கிஞ்சித்தும் நெஞ்சம் அஞ்சாமல் நமது பஞ்சபுலாதிகள் அயரும்படியாக மகாபந்தோபஸ்தாக வைத்திருந்த சுவாமியைக் களவெடுத்துக்கொண்டுபோனவர் யாரென்றுகூச்சலிட்டான்.

அதுகண்டு மற்றவர்கள் “உப்புக்கண்டம் பறிகொடுத்தபார்ப்பினியைப்போலிராமல்” எல்லோருமொன்றுசேர்ந்து பெருங்கூரவிட்டுக்கதறினார்கள். அதனால், அவ்வூரெங்கும் (குதாபந்தென்கிற) தேவு களவுபோனசெய்தி பிரசங்கமாகிவிட்டது. பின்னர், யாவர்களும் தனித்தனிபிரிந்து நாடுநகரங், காடுகரைஆகிய எவ்விடங்களிலும்போய் மிகுபிரயாசையோடு தேடிப்பார்த்தும் “எருமைக்குநீர்பாய்ச்சினதுபோலாகி விட்டதேயல்லாமல்” குதாபந்து கண்டுகொள்ளக்கிடைக்கவில்லை. அதனால், அக்கோயிலின் அதிகாரஸ்தர்களெல்லோரும் ஒன்றுகூடி, ஆ! இதென்ன, நாம் தட்டானைத்தலையிலடித்தும், வண்ணானை வழிமறித்தும் பறித்தெடுத்த சொத்தல்லவே; ஊர்ப்பொதுவிற் சேர்த்துச்செய்த சொத்தாச்சுதே; அதனைத் திருடிக்கொண்டுபோனவன் எவனோவென்று அழுதகண்ணும், சிந்திய மூக்குமாய்ச் சஞ்சலித்திருந்தார்கள். இது நிற்க.

அந்த வழிகேடரான ரூபிகள் தாங்கள்களவெடுத்துப் பதுக்கிவைத்துக்கொண்டிருந்த விக்கிரகத்தைக்குறித்து இந்துக்கள் என்னபேசிக்கொள்கிறார்களென்னுங் கருத்தை அறிகிறதற்காக வேண்டிப் பாசாங்குத்தனமாகச்செய்யுந் தங்களின் வியாபாரச்

சாமக்கிரிகைகளை எடுத்துக்கொண்டு அந்தத்தேவபந்தூர்த் தெருவீதிகளின் இடமாகப்புகுந்து தங்கள் வியாபாரச்சாமான்களை விலைகூறித்திரியும்போது, அங்குள்ள இந்துக்களெல்லாம் பெரிய விசனமடைந்துகொண்டிருக்கக்கண்டு தாங்களும் மெய்யாகவே விசனப்படுபவர்கள் போலாய் முகங்குருவித்திரிந்தார்கள். திரிந்தபோதிலும், "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின்மேற் கண்ணென்பதுபோல" தாங்கள் கருமத்திலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார்கள். இவ்விதம் இவர்கள் அவ்வூரில் மூன்றுநாள் திரிந்து நாலாவதுநாள் முஹர்ரமாதமுதற்றெப்தி இராவானபோது யாவருமொன்றுசேர்ந்திருந்து நாம் திருடியநாள்முதல் மூன்றுநாள்வரைக்கும் இவ்வூரிலெங்கும் வியாபாரிகளைப்போலே திரிந்தோமே, அதிலே நமதுபேரில் யாதாமொரு புக்காறும் எழும்பவில்லை. இப்போது நாலாம்நாளுமாச்சுதாகையால், இனிமேல் இந்துக்கள் நமதுபேரிற் சந்தேகங் கொள்ளார்களென்றும், நாம் புதைத்து வைத்திருக்கிற குதாபந்தென்னுந் தேவைத் தோண்டிக்கொண்டுவந்து உடைத்துப் பங்கிட்டுக்கொண்டு நாளையதினம் அதிகாலையிற் கூடாரத்தைப்பிடுங்கிச் சுருட்டிக்கொண்டு போய் விடவேண்டுமென்றும் பேசித்தீர்மானித்துப், பின்னர் விக்கிரகத்தைத் தோண்டியெடுத்துக்கொண்டு வந்து துண்டு துண்டாகவெட்டிப் பங்குபோட்டதிலே திருடியபதினைந்து பேர்களுக்குந்தலைகழுத்து உடல் முதலிய அவயவாதிகள் கிடைத்தவைபோகக், கூடாரங்காத்திருக்கிற நொண்டிக் கள்ளனுக்கு வலதுகைபொன்று கிடைத்தது. இவ்விதத்திலே (குதாபந்து) விக்கிரகத்தைப் பங்கிட்டெடுத்தவர்கள் அவரவர்கள் பங்கை அவரவர்கள் நேமித்த இடங்களில்பூமியைத்தோண்டிப்புதைத்து வைத்துவிட்டுக் காலையில் இவ்விடத்தைவிட்டுப் பிரயாணமாகவேண்டுமென்கிற எண்ணத்தோடும் படுத்துக்கொண்டார்கள். அப்போது, கூடாரக்காவலாளியாகிய நொண்டி ரூமியானவன் தனக்குக்கிடைத்த (குதாபந்து) விக்கிரகத்தின் வலதுகையை மற்றவர்களைப்போலே புதைத்துவைக்க இஷ்டமில்லாமல் தான் படுக்கும் பாயிலேவைத்துச் சுருட்டித்தலைக்குவைத்துப் படுத்துறங்கிவிட்டான். இது நிற்க,

"திருடனுக்கு ஓர்புத்தி, திருடுகொடுத்தவனுக்குப்பலபுத்தி" யென்னும் பழமொழிபோலே இந்துக்களும், கோயிற்பூசாரிகளும்

திருட்டுப்போன (குதாபந்தென்னும்) தங்கள் தேவதையை அவ்வூரெங்கும் பலஉபாயதந்திரங்களோடு தேடித்திரிந்தும்திருட்டுப்புலப்படாமையால் மிகவும் வியாகூலஸ்தர்களாய்க் கவனமிட்டிருந்து மற்றொருவர்கள்பேரிலும் சந்தேகங்கொள்ளாது தங்களூரிற்புதிதாக வந்திருந்த ரூமிகள்பேரிற் சந்தேகந்தோற்றி அவ்வூரசராகிய நவாபுசாகிபுக்கோர் மனுவர்ஜி யெழுதினார்கள். அதாவது:

(இன்னும் வரும்.)

எம். எஸ்.

குலாம்காதிறு நாவலர்.

அதிகாரம்-4.

(டிசம்பர்மீ சஞ்சிகையின் றொடர்.)

ஒருநாள் நாகைப்பட்டினத்தில் ஒரு தனவந்தர்வீட்டில் நடந்தவிருந்திற்கு நம் நாவலரும் அழைக்கப்பெற்றிருந்தார். நாவலர் விருந்து வீட்டிற்குப்போனபோது அங்கே பல ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவர்களில் பலர் நாவலரை அறிந்தவர்களாயும் சிலர் மாத்திரமே நாவலரை அறியாதவராயும் இருந்தனர். யாவரும் அவரை ஒருவாறு நேரில் தரிசித்துச் சந்தோஷமடைந்தனர். நாவலரின் வார்த்தைகளை அந்தஜனசமுகத்திலிருந்த சிலர் ஆவலாக எதிர்பார்த்திருந்தனர். இக்குறிப்பை அவ்வீட்டிற்குடையார் அறிந்து நமது நாவலரை யாதேனும் ஒரு உபந்நியாசம் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். அதற்கு நம் நாவலர் இணங்கி, அங்குக் கூடியிருந்த ஜனங்களையும் அவர்களின் நிலைமையையும் ஒருவாறு தெரிந்துகொண்டு பின்வருமாறு உபந்நியாசித்தார்.

"சகோதர நண்பர்களே!

என்வார்த்தையை எதிர்பார்க்கும் ஜனங்களை நான் கண்டபோது அவர்களுக்கு நான் அறிந்தமட்டில் ஏதோகொஞ்சம் சொல்வது என் கடமை. அவ்விதமான தருணங்களை நான் இழந்துவிட விரும்பமாட்டேன். என்னுடைய, வார்த்தை, உங்கள் யாவருக்கும் பயனளிக்குமோ அளிக்காதோ வென்பது எனக்குத்தெரியாது. காலக்கிரமத்தில் மாத்திரமே கூடுமானால் அதன் பயனை நான் காணலாகும். உடனே அதுபயன் தரவேண்டுமென்பது

கொள்ளவேண்டுமென்கிற எண்ணத்தோடுங் கோயிலைவிட்டு நீங்கித் தங்கள் கூடாரத்திற்கு வந்தார்கள். வந்தாலுமென்ன, இவர்கள் மூவாசைகளிலோராசையாகிய பொன்னாசையையே கவசமாகப்பூண்டவர்களாய் எப்போது பொழுதுபோகுமோ போகுமோ என்கிற எண்ணம் பெரிதுங்கொண்டவர்களாயிருந்தார்கள். பின்னர், கிழக்கில் உதயமானசூரியன் மேற்கிலாகி மறைந்து இரவாகி எங்கும் இருளுண்டாகியது. அப்போது,

மேற்சொன்ன வழிகெட்ட கூட்டத்தாரான ருபிகள் ஒன்றுசேர்ந்து பிரயாணப்பட்டுப்போய் அக்கோயிற் கதவிற்குப்போட்டிருந்த சூட்சுமப்பூட்டை மிகுந்த சாதுரியமாக உடைத்துக்கதவைத்திறந்து உள்ளேபுகுந்து பெரிதான ஆனந்தமகிழ்ச்சியோடும் அங்கிருந்த (குதாபந்தென்கிற) விக்கிரகத்தைப் பூனை எலியைக்கவ்வி எடுக்கிறதுபோலெடுத்துக்கொண்டு மிகு துரிதமாக நடந்து தாங்கள் கூடாரத்தில் வந்து அங்கோரிடத்திற் பூமியிற் குழிகல்லி அதிலே புதைத்துவிட்டுக் கள்ளச்சாஸ்திரத்தை அனுசரித்தவர்களாய் மௌனமாயிருந்து இரவைக்கழித்தார்கள். பின்னர், அன்றுகாலையில் தாங்கள் அவ்வூரைவிட்டுப் பிரயாணமானால் இந்துக்கள் தங்கள்பேரில் சந்தேகங்கொள்வார்களென்றெண்ணிப்பயந்து வழக்கம்போலே பாசாங்கான வியாபாரச்சரக்குகளை எடுத்துக்கொண்டு ஊருக்குள் நுழைந்தார்கள். இது நிற்க,

அங்கே இந்துமதக்குருக்களும்,பூசாரிகளும், சூரியோதயத்திற்குமுன்னரெழுந்து ஸ்நானபானஞ்செய்து நேமநிஷ்டைமுதலிய கருமங்களை முடித்துங்கொண்டு அதிசீக்கிரமாகத்தேவாலயத்தைத் திட்டிக்கதவைத்திறக்கநெருங்கும்போது, அக்கதவின்பூட்டு உடைபட்டு வாயில் திறந்திருக்கக்கண்டு ஆ! ஆ!! என்று ஓர் ஏக்கங்கொண்டு இப்படிச்சம்பவித்த காரணம் என்னவென்று பெரிய திகில்கொண்டு கோயிலுக்குள் புகுந்து பார்க்கையில் நாள்தோறும் தாங்கள் வணங்குந்தெய்வமாகிய (குதாபந்தென்னும்) விக்கிரகம் இருக்குமிடத்தில் அது இல்லாதிருக்கக்கண்டு தாய் முகங்காணாத சிசுக்கள்போலும், மழைமுகங்காணாத பயிர்கள்போலும், கணவனைக்காணாத கற்புடைப்பெண்கள்போலும், போர்முகங்காணாத வீரர்கள்போலும்,கொடுப்போர் முகங்காணாத இரப்போர்கள்போலும்,இடிமுன்னான சர்ப்பங்கள்போலும்,புதைகுழியில்விழுந்தயானைகள்போலும் பொறிகலங்கிமிகுந்தசஞ்சலப்பட்டு மெய்ம்மறந்து அசைவற்றுச்சித்திரப்பாவைபோல்நின்றார்கள். பின்புசிலநிமிஷங்களுக்குள் அவர்க்குஉடலில்உணர்வுதோன்றிற்று. அப்போது, அந்தக்குருக்கள், பூசாரிகளுக்கெல்லாம் தலைமையான ஆசாரியனொருவன் கொடூரகோபதீரத்தோடுமுகங்கடுகடுத்துக், கண்கள்சிவந்து,வாய் பதைபதைத்துப் பல்லை நெறநெறவென்றுகடித்து, மீசை துடிதுடித்துக், கீழ்உதட்டை மேற்பல்லினாற் கடித்துக், கையோடு கை புடைத்து, வாய் கண் செவி மூக்கு இவைகளிலிருந்து கபீல் கபீலென்று எழும்பும்புகையோடு கோபாக்கினிப் பொறிபறக்கச் சில்லென்று சரீர ஆதியந்தமும்வெயர்க்கப் பெருமூச்சுவிட்டு மேற்புருவம் வில்லைப்போல்வளைந்து நெற்றிமேலேறக் கொடிய காலாந்தகனைப்போலாய்த் தன்பக்கத்திலிருப்பவர்களெல்லாம் திடுதிடு என்று நடுநடுங்கி, நாவறண்டு, நெஞ்சயர்ந்து தடுமாறித் தத்தளிக்கப்பார்த்து உக்கிரவேகத்தோடு கெக்கரித்துக்கிஞ்சித்தும் நெஞ்சம் அஞ்சாமல் நமது பஞ்சபுலாதிகள் அயரும்படியாக மகாபந்தோபஸ்தாக வைத்திருந்த சுவாமியைக் களவெடுத்துக்கொண்டுபோனவர் யாரென்றுகூச்சலிட்டான்.

அதுகண்டு மற்றவர்கள் "உப்புக்கண்டம் பறிகொடுத்தபார்ப்பினியைப்போலிராமல்" எல்லோருமொன்றுசேர்ந்து பெருங்குரலிட்டுக்கதறினார்கள். அதனால், அவ்வூரெங்கும் (குதாபந்தென்கிற) தேவு களவுபோனசெய்தி பிரசங்கமாகிவிட்டது. பின்னர், யாவர்களும் தனித்தனிபிரிந்து நாடுநகரங், காடுகரைஆகிய எவ்விடங்களிலும்போய் மிகுபிரயாசையோடு தேடிப்பார்த்தும் "ஏருமடைக்குநீர்பாய்ச்சினதுபோலாகி விட்டதேயல்லாமல்" குதாபந்து கண்டுகொள்ளக்கிடைக்கவில்லை. அதனால், அக்கோயிலின் அதிகாரஸ்தர்களெல்லோரும் ஒன்றுகூடி, ஆ! இதென்ன, நாம் தட்டானைத்தலையிலடித்தும், வண்ணானை வழிமறித்தும் பறித்தெடுத்த சொத்தல்லவே; ஊர்ப்பொதுவிற் சேர்த்துச்செய்த சொத்தாச்சுதே; அதனைத் திருடிக்கொண்டுபோனவன் எவனோவென்று அழுதகண்ணும், சிந்திய மூக்குமாய்ச் சஞ்சலித்திருந்தார்கள். இது நிற்க.

அந்த வழிகேடரான ருபிகள் தாங்கள்களவெடுத்துப் பதுங்கிவைத்துக்கொண்டிருந்த விக்கிரகத்தைக்குறித்து இந்துக்கள் என்னபேசிக்கொள்கிறார்களென்னுங் கருத்தை அறிகிறதற்காக வேண்டிப் பாசாங்குத்தனமாகச்செய்யுந் தங்களின் வியாபாரக்

சாமக்கிரிகைகளை எடுத்துக்கொண்டு அந்தத்தேவபந்தூர்த் தெருவீதிகளின் இடமாகப்புகுந்து தங்கள் வியாபாரச்சாமான்களை விலைகூறித்திரியும்போது, அங்குள்ள இந்துக்களெல்லாம் பெரிய விசனமடைந்துகொண்டிருக்கக்கண்டு தாங்களும் மெய்யாகவே விசனப்படுபவர்கள் போலாப் முகங்குறுவித்திரிந்தார்கள். திரிந்தபோதிலும், "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின்மேற் கண்ணென்பதுபோல" தாங்கள் கருமத்திலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார்கள். இவ்விதம் இவர்கள் அவ்வூரில் மூன்றுநாள் திரிந்து நாலாவதுநாள் முஹர்றமாதமுதற்றெப்தி இராவானபோது யாவருமொன்றுசேர்ந்திருந்து நாம் திருடியநாள்முதல் மூன்றுநாள்வரைக்கும் இவ்வூரிலெங்கும் வியாபாரிகளைப்போலே திரிந்தோமே, அதிலே நமதுபேரில் யாதாமொரு புக்காறும் எழும்பவில்லை. இப்போது நாலாம்நாளு மாச்சுதாகையால், இனிமேல் இந்துக்கள் நமதுபேரிற் சந்தேகங் கொள்ளார்களென்றும், நாம் புதைத்து வைத்திருக்கிற குதாபந்தென்னுந் தேவைத் தோண்டிக்கொண்டுவந்து உடைத்துப் பங்கிட்டுக்கொண்டு நாளையதினம் அதிகாலையிற் கூடாரத்தைப்பிடுங்கிச் சுருட்டிக்கொண்டுபோய் விடவேண்டுமென்றும் பேசித்தீர்மானித்துப், பின்னர் விக்கிரகத்தைத் தோண்டியெடுத்துக்கொண்டு வந்து துண்டு துண்டாகவெட்டிப் பங்குபோட்டதிலே திருடியபதினைந்து பேர்களுக்குந்தலைகழுத்து உடல் முதலிய அவயவாதிகள் கிடைத்தவைபோகக், கூடாரங்காத்திருக்கிற தொண்டிக் கள்ளனுக்கு வலதுக்கைபொன்று கிடைத்தது. இவ்விதத்திலே (குதாபந்து) விக்கிரகத்தைப் பங்கிட்டெடுத்தவர்கள் அவரவர்கள் பங்கை அவரவர்கள் நேமித்த இடங்களில்பூமியைத்தோண்டிப்புதைத்து வைத்துவிட்டுக் காலையில் இவ்விடத்தைவிட்டுப் பிரயாணமாகவேண்டுமென்கிற எண்ணத்தோடும் படுத்துக்கொண்டார்கள். அப்போது, கூடாரக்காவலாளியாகிய தொண்டி ரூமியானவன் தனக்குக்கிடைத்த (குதாபந்து) விக்கிரகத்தின் வலதுகையை மற்றவர்களைப்போலே புதைத்துவைக்க இஷ்டமில்லாமல் தான் படுக்கும் பாயிலேவைத்துச் சுருட்டித்தலைக்குவைத்துப் படுத்துறங்கிவிட்டான். இது நிற்க,

"திருடனுக்கு ஓர்புத்தி, திருடுகொடுத்தவனுக்குப்பலபுத்தி" யென்னும் பழமொழிபோலே இந்துக்களும், கோயிற்பூசாரிகளும்

திருட்டுப்போன (குதாபந்தென்னும்) தங்கள் தேவதையை அவ்வூரெங்கும் பலஉபாயதந்திரங்களோடு தேடித்திரிந்தும்திருட்டுப்புலப்படாமையால் மிகவும் வியாகூலஸ்தர்களாய்க் கவனமிட்டிருந்து மற்றொருவர்கள்பேரிலும் சந்தேகங்கொள்ளாது தங்களூரிற்புதிதாக வந்திருந்த ரூமிகள்பேரிற் சந்தேகந்தோற்றி அவ்வூரசராகிய நவாபுசாகிபுக்கோர் மனுவர்ஜி யெழுதினார்கள். அதாவது:

(இன்னும் வரும்.)

எம். எஸ்.

குலாம்காதிறு நாவலர்.

அதிகாரம்-4.

(டிசம்பர்மீ சஞ்சிகையின் தொடர்.)

ஒருநாள் நாகைப்பட்டினத்தில் ஒரு தனவந்தர்வீட்டில் நடந்தவிருந்திற்கு நம் நாவலரும் அழைக்கப்பெற்றிருந்தார். நாவலர் விருந்து வீட்டிற்குப்போனபோது அங்கே பல ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவர்களில் பலர் நாவலரை அறிந்தவர்களாயும் சிலர் மாத்திரமே நாவலரை அறியாதவராயும் இருந்தனர். யாவரும் அவரை ஒருவாறு நேரில் தரிசித்துச் சந்தோஷமடைந்தனர். நாவலரின் வார்த்தைகளை அந்தஜனசமுகத்திலிருந்த சிலர் ஆவலாக எதிர்பார்த்திருந்தனர். இக்குறிப்பை அவ்வீட்டிற்குடையார் அறிந்து நமது நாவலரை யாதேனும் ஒரு உபந்நியாசம் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். அதற்கு நம் நாவலர் இணங்கி, அங்குக் கூடியிருந்த ஜனங்களையும் அவர்களின் நிலைமையையும் ஒருவாறு தெரிந்துகொண்டு பின்வருமாறு உபந்நியாசித்தார்.

"சகோதர நண்பர்களே!

என்வார்த்தையை எதிர்பார்க்கும் ஜனங்களை நான் கண்டபோது அவர்களுக்கு நான் அறிந்தமட்டில் ஏதோ கொஞ்சம் சொல்வது என் கடமை. அவ்விதமான தருணங்களை நான் இழந்துவிட விரும்பமாட்டேன். என்னுடைய வார்த்தை, உங்கள் யாவருக்கும் பயனளிக்குமோ அளிக்காதோ வென்பது எனக்குத்தெரியாது. காலக்கிரமத்தில் மாத்திரமே கூடுமானால் அதன் பயனை நான் காணலாகும். உடனே அதுபயன் தரவேண்டுமென்பது

என்பிடிவாதமல்ல. என்வார்த்தை மிகவும் சிறந்ததென்பதும் எனதுகருத்தல்ல. உங்களைவிட எனக்குச் சில விஷயங்களில் அநுபவம் அல்லது ஆராய்வு அதிகமாயிருக்கலாம். சில விஷயங்களில் உங்களிலும் நான் அநுபவக்குறைவுள்ளவனாயிருக்கலாம். ஆதலின் எனது வார்த்தைகளின் அநுகுணத்தை மாத்திரம் நீங்கள் உங்கள் யோசனைக்கு எடுத்துக்கொள்ளுங்கள். நானும் எனக்கு அநுபவமற்ற விஷயங்களை வசனிப்பதில் மிகுந்த ஜாக்கிரதையாயிருப்பேன். அநுபவமற்ற விஷயங்களை நானே அநுபவப்படுத்திக்கொள்ளவேண்டியாகையால் அதற்கு நான் இவ்விததருணத்தை உபயோகிப்பதில்லை. இவ்வித தருணத்தைக் கூடுமானவரையில் எனது அநுபவங்களை வெளிப்படுத்துவதற்கே உபயோகித்துவருகிறேனென்று நம்புகிறேன். இந்த நம்பிக்கை சரியாவென்பதை நீங்கள் என் பிரசங்கத்தில் நன்றாய்க்கவனித்து முடிவில் எனக்குத் தெரிவித்தால் நான் மிகுந்த நன்றியறிதலுள்ளவனாயிருப்பேன். மனிதராகிய நாம் பற்பல அபிப்பிராயபேதமுள்ளவராகவும் பல அந்தஸ்துள்ளவராகவும் இருக்கின்றோம். நாம் உலகில் சஞ்சரித்து நற்கதி யடையவேண்டியவர்களாயுமிருக்கின்றோம். உலகில் சஞ்சரிப்பதானால் உலகத்தோடு பிணங்காமல் இணங்கி நடக்கவேண்டும். அவ்விதம் இணங்கி நடவாவிடின் நமக்கு மனச்சமாதானம் உண்டாகாது. மனச்சமாதானம் இல்லாதபக்ஷத்தில் நமக்கு நல்விஷயங்களிற் செல்ல அவகாசமிராது. மனச்சமாதானமுள்ளவனே இம்மைக்கும், மறுமைக்கும் ஆனசுகத்தையடைவான். ஒருவன் எப்போதும் அயலாரோடு சண்டையிட்டு அல்லது பகைமைபாராட்டிவந்தால் அவனுக்கு விதம் விதமான கோபமும் துவேஷமும் விருத்தியாகுமேயன்றி அவனுடைய மனம் எவ்வாறு சமாதானமடையும்? ஒருவன் மட்டுக்கு மிஞ்சிய செலவு செய்வானாயின் அவனுக்கு மனச்சமாதானம் எவ்வாறு உண்டாகும்? முதலில் ஒருவேளை அவனுடைய மனம் திருப்தியடைந்ததுபோல் காணப்படினும் பின்பு இடைவிடாத் துக்கத்தில் அவனுடைய மனம் அழுந்திவிடும். ஒருவன் மிகுந்த பேராசையுடையவனாயிருப்பின் அவனுக்கு மனச்சமாதானம் ஒருபோதும் உண்டாக நியாயமேயில்லை. உலோபியாயுள்ள ஒருவன் எக்காலத்தும் தைரியமின்றியும் ஓய்வின்றியும் உழல்வான். பெருண்டி, மிதமிஞ்சிய காமம், மதுமயக்கம், சூது முதலியவற்றில் பழகும் மனிதனுக்கு எப்பொழுதும் துன்பமும் அவகீர்த்தியுமே பலன்களாம். பெரியோர்களெல்லாம் மனிதவுடல் நிலையற்றதென்றும் மரணம் எப்போதும் நிச்சயமென்றும் பன்னிப்பன்னிப்பறையறைந்தார்கள். இவ்வுடலையும் இதன் சுகாநுபவங்களையும்மிகுதியாய் நம்பி இவற்றைப் பாராட்டுவதைவிட, மரணம் நிச்சயமென்பதைக் கூடியவரையில் மறவாமலிருப்போமாயின் நாம் பல தீங்குகளிலிருந்து மீள்வோம். அந்த நினைப்பு நம்மை வழிகேட்டிலிருந்து தப்புவிக்கும். ஆதலின் நாம் ஒவ்வொருவரும் மரணம் நிச்சயமென்பதை நமது ஞாபகத்தின் முதல்வரிசையில் எப்போதும் வைத்திருக்கவேண்டும். வீண்வாதங்கள் தருக்கங்கள் முதலியன பொழுது போக்கும் ஏற்பாடுகளேயன்றி உண்மையில் நன்மை தருவன அல்ல. ஒவ்வொருமனிதனும் தான் மேன்மையாய் இருக்கவேண்டுமென்றும் கீர்த்திவகிக்க வேண்டுமென்றும் விரும்புகிறான். இது மனிதருக்குள் இயற்கையான குணமாம். ஆயினுமென்ன? அவ்விதம் மேன்மையையும் கீர்த்தியையும் அடைவதற்கு ஏற்றவழியை அல்லவா பின்பற்றவேண்டும்? மனிதர் பெரும்பாலும் அவ்வித வழியைப் பின்பற்றுவதில்லை. அவரவர் அறிவின் அளவுக்கேற்றபடி நிதானமின்றி நடத்தல் மனிதருக்குள் சுபாவமாயிருக்கின்றது. ஒருவன் தன்னையாவரிலும் சிறந்தோனாய் உலகத்தார் மதிக்கவேண்டுமென்று விரும்புகிறான். அவ்விதமே உண்மையில் மதிக்கப்படுவதற்கு அவன் செய்யவேண்டிய காரியமென்ன? அதைப்பற்றி அவன் யோசிப்பதில்லை. தன்னைவிட நுண்ணறிவும் தகுதியுமுள்ளோர் ஒருவருமில்லையென்னும் இழிவான அகந்தையால் தன்னை மறைத்துக்கொண்டு உலகில் பிரகாசியாமலிருக்கின்றான். எவரையும் இழிவாய்ப்பாவித்துத் தாழ்த்திப்பேசித் தன் சமத்காரங்களை இடைவிடாமல் புகழ்ந்து தன்னெதிர்ப்படும் எவரும் தனக்கு ஒருவித மரியாதை செய்யும்படி அவர்களை ஒருவாறு வலாத்காரஞ் செய்கிறான். தன் வலாத்காரத்திற்கு இணங்காதவர்களைப் பகையாய்ப்பகைத்து, அவர்களிடம் பலவிதங்களில் குற்றங்கூற ஆரம்பிக்கிறான். இவ்விதம் வெறுக்கத்தக்க வீண்பழக்கத்தில் பயின்றமனிதன் காலடைவில் பலராலும் அருவருக்கப்பட்டுத் துஷ்டனென்றும், அறிவிலனென்றும், வீணனென்றும், கெருவி என்றும் அழைக்கப்படுகிறான். இவனுக்குப் புகழ்ச்சியும், மேன்மையும் எவ்வாறுகிடைக்கும்? இன்னும் இதைப்பற்றி விரிவாய்

ச்சொல்வதற்கு இப்போது நேரமில்லை. ஆதலின் சுருக்கிச்சொல்லுகிறேன்.

கீர்த்திமேன்மைகளை விரும்பும் ஒருவன், உலகத்தில் தங்கள் புகழுடம்பை ஸ்தாபித்துள்ளவர்களின் சரித்திரத்தை அறிய வேண்டும். அவர்கள் எவ்வாறு உண்மையில் பிரயாசைப்பட்டு சாந்தம், ஒழுக்கம், தைரியம், நிதானம், விடாமுயற்சி முதலியவற்றால் உலகத்தில் கீர்த்திவகித்தார்களென்பதை நன்றாய் விசாரித்துத் தன்னுடைய ஞாபகத்தில் நிறுத்தல்வேண்டும். பின்பு அவ்வித கீர்த்தியை வகித்தற்கு தன்னால் கூடுமான அளவு உண்மையில் பிரயாசைப்படல்வேண்டும். உலகில் எண்ணிறந்த மனிதர் அகந்தை; தற்பெருமை, பகைமை முதலியவற்றை யநுசரித்து வீணாக ஏமாந்துபோயினர். அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட கீர்த்தியின் நிழலைத்தானும் அவர்கள் காணவில்லை. அவர்களைப்பற்றி உலகில் எவரும் பேசுவதுமில்லை. ஆதலினாலே கீர்த்திமேன்மைகளை விரும்புவோர், உண்மையையும் பெருந்தன்மையையும் அநுசரித்தல் வேண்டும். இவ்வாறு அநுசரித்தால் உண்மையான இம்மைப்பயன் கைக்கூடும். மரணத்தின் நிச்சயத்தையும், காலம் இரவும் பகலுமாய்க்கழிந்து வருவதையும் ஒவ்வொருமனிதனும் கூடியவரையில் எப்போதும் மறவாமலிருப்பானாயின், அவன் மறுமைப்பயனை யடைவதற்கான முயற்சியில் இருப்பான். அப்போது, உலகில் நாம் தற்காலம் பார்ப்பதுபோன்ற அக்கிரமங்களும், வீண்கூச்சல்களும் போராட்டங்களும் இரா.

மனிதன் எப்போதும் சமாதானமுள்ளவனாகவேயிருத்தல் வேண்டும். அதற்கு ஒழுக்கமே இன்றியமையாத சாதனம். நம்மவருள் விவாகம்முதலியகாலங்களில், அநாவசியகமும் தொந்தரைதரத்தக்கதுமான வீண்செலவு செய்வோர் பலருண்டு. அவ்விதம் செய்தல் கூடாது. அதனால் நாம் நம்மையும் பிறரையும் தொந்தரைக்குள்ளாக்குவோம். வீண்செலவுகளை மட்டாக்கிஎளியோர்க்கும் கல்வியபிவிருத்திக்கும் அந்தப்பொருளைச் செலவிடுவோமாயின் அப்பொருளின் உண்மையான சுகத்தை நாம் அநுபவித்தவராவோம். பிறரும் அதன் சுகத்தைநம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறார்கள். சிலர், பொருளை ஏராளமாய்ப்பெற்றும் அதனையநுபவிக்கும் பாத்தியமின்றி அதைக்காவல் காக்கும் சேவகராயிருக்கின்றனர். இன்னோரைமுதலாளிகளென்று சொல்ல நியாயமில்லை. அவர்கள் முதலாளிகளாம்போது அவர்களுக்குப் பொருளை யுபயோகிக்கும்விதம் தெரிவிக்கப்படலாம். அங்ஙனமின்றேல் அவர்களுக்குத்தெரிவித்துப்பயனில்லை. ஏனெனில்பொக்கிஷம் அல்லது திரவியசாலை முதலியவற்றைக் காவல்காக்கும் சேவகருக்கு அங்கு உள்ளபொருளை இன்னவிதம் பயன்படுத்தல் வேண்டுமென்று நாம்யோசனை சொல்வதுபோலிருக்கும். திரவியசாலைச்சேவகனுக்கும் நாம்பேசும் சேவகனுக்கும்சிறிது வித்தியாசமுண்டு. அவன் சம்பளத்திற்குச்சேவிக்கிறான். இவன் சம்பளமில்லாமலே சேவிக்கிறான். ஆதலின் சேவகனைப்பார்த்து "உன்பாதுகாப்பிலுள்ளபொருளை நீ இவ்விதம் செலவு செய்யவேண்டும்" என்றுபோதித்தல் கூடாது. தனவானென்று உலகில் பிரஸ்தாபிக்கப்படும் எந்தமனிதனையும் அவன் முதலாளியா? காவல்காரனா? வென்பதை வடிவாய் விசாரித்தறிந்தே நிதானிக்கவேண்டும். முதலாளியிடத்துப்பேசத்தகும் வார்த்தைகளைக் காவல்காரனிடம் பேசக் கூடாது. சுருக்கமாய்ச்சொல்லுமிடத்து நாம் ஒவ்வொருவரும் நமது வார்த்தையையும் செய்கையையும் எண்ணத்தையும் ஒற்றுமையாக்கி அவற்றைக்கூடுமானவரையில் வீணுக்கு உபயோகியாமல் நன்மைக்கு உபயோகிக்கவேண்டும்.

மனிதன் பழக்கவழக்கங்களால் மாறும் சுபாவமுடையவனாதலால், அதிகஜாக்கிரதையாய் அவன் தனது பழக்கவழக்கங்களைத்தெரிந்து கொள்ளவேண்டும். மரணத்தின் ஞாபகத்தையும் உண்மையான கீர்த்தியையும் நாம் எப்போதும் அடைந்திருக்கவேண்டுமானால் நமது பெரியோர்களின் ஜீவியசரித்திரங்களை வாசித்து அவர்களின் ஒழுக்கங்களை மனத்திற்பதித்துக்கொள்ளல் வேண்டும். அதற்கு நமது மதக்கிரந்தங்களைத் தினந்தோறும் ஒருகுறிப்பிட்டசுவல்பநேரமாவது வாசித்துவரல்வேண்டும். நமதுபரிசுத்த இஸ்லாம்மார்க்ககிரந்தங்கள் அறபு பாரிஸ் முதலியபிறபாஷைகளிலிருக்கின்றன. அப்பாஷையில்வல்லவர்கட்கு அவை இலகுவாய்ப் பயனளிக்கக்கூடியனவாயிருக்கின்றன. தமிழ்நாட்டில் விசேஷமாய்த்தமிழின் பழக்கமேகொண்டுள்ள நமக்கு அவ்விதமான கிரந்தங்கள் அவசியம் தமிழில் வேண்டியனவாயிருக்கின்றன. இப்போதும் சில பெரியோர்கள் தமிழில் இயற்றியுள்ள கிரந்தங்கள் இருக்கின்றனவாயினும் அவைகள் நம்முடைய தற்காலத்தேவையை நிறைவு செய்யக்கூடியவைகளாக இல்லை. மேலும் அவை

யாரும் தெரிந்துகொள்ளக்கூடிய சுத்தமான ‘எளிய நடையிலும் இருக்கவில்லை. இவ்விஷயத்தில் என் வாழ்நாளைப்பயன்படுத்த ஆண்டவன் கிருபைசெய்யவேண்டும். எவ்வாறாயினும் நாம் காலத்தை வீணாக்காமல் கூடியவரையில் நமக்குக்கிடைத்துள்ள சௌகரியங்களைக்கொண்டே நாம் எவ்வளவுக்கு முன்வரலாமோ அவ்வளவுக்கும் பின்வாங்காமல் முன்வரவேண்டும். முயற்சிவீணாவதில்லை. என் சுவற்ப அறிவிற்கும் அநுபவத்திற்கும் அமைந்த சில விஷயங்களை இவ்வாறுசொல்லிவிட்டேன். இனிச்செய்யத்தக்கதை தீர்மானித்தல் உங்களின் கடமை.”

நம் நாவலரின் உபந்நியாசம் இவ்வாறு முடிந்தவுடன் அங்கிருந்தோர்யாவரும் நாவலரைப்புகழ்ந்து அவர் சொன்னமொழிகள் யாவும் ஆபரணமாய்ப்பூணத்தக்கன வென்றும் கூடியவரையில் அவர்மொழிகளை யநுசரித்து நடப்பதில் ஒருவருக்கேனும் அபிப்பிராயபேதம் இல்லையென்றும் தெரிவித்தனர். “சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல்” என்பது நம் நாவலரிடமே மிகுதியும் பொருந்தியுள்ளதென்னலாம். மார்க்கவிஷயத்திலும் தெய்வபக்தியிலும் நம் நாவலர் குறைந்திருக்கவில்லை. நாடோறும் வேளை தவறாமல் மார்க்காசாரப்படி தாமும்தொழுது அவ்வேளையில் தமக்கு எதிர்ப்படும் நண்பர்களையும் தொழுகைக்கு அழைத்துச்செல்வார். நம் நாவலரின் தன்மை இவ்விதமிருந்ததாயினும் அக்காலத்தில் நாகூரில் இவர்மீது பொறாமையும் பகைமையும் பாராட்டித்திரிந்தவர்களும் சிலர் உண்டு. வெளியில் நாவலரின் பிரக்கியாதியைக்கேட்டு அவரியற்றிய சில கிரந்தங்களைப் பார்வையிட்டவர்களில் அநேகர் அவரை நேரில் காணப்பெற்றபோது தாங்கள் அவரிடம் வைத்திருந்த மதிப்பைமறந்து அவரிலும் தங்களை மிக்க வல்லோராய் எண்ணி அவரோடு சம்பாஷித்ததும் உண்டு. கடைசியாக அவர்கள் நாவலரிடம் அளவற்றமதிப்பை நவீனமாய் விருத்திசெய்துகொண்டு மிக்க மரியாதையும் தாழ்மையுமுள்ளவர்களாய் அவர்பால் நடந்துகொண்டார்கள். பல சிறந்த விவேகிகளும் நாவலரின் தோற்றத்தாலும் வார்த்தையாலும் அவரைச்சரியாய் விளங்கிக்கொள்ளாமல் மோசம்போனார்கள். முடிவில் அவர்கள் நாவலரின் தகுதியை அறியப்பெற்றபொழுது அவரிடம் அளவற்ற நன்கு மதிப்புள்ளவர்களாய் அதாவது சரியாய்ச்சொல்லுமிடத்து அவரிடம் விசுவாசமுள்ள மாணாக்கர்கள்போல் நடந்துகொண்டார்கள். இராமாயண பிரசங்கஞ்செய்யும் பலவித்துவான்கள் அடிக்கடி நம் நாவலரிடம்வந்து தங்களைத்திருத்திக்கொள்வார்கள்.

(தொடரும்.)

ஊ. சே. மு.

துருக்கி இத்தாலியா யுத்தசெய்திகள்.

இத்தாலியா மதியீனத்தால் இந்த யுத்தவிஷயத்தில் தலையிட்டுக்கொண்டு இடுக்கிலகப்பட்ட எலிபோல் விழிக்கிறது; வெளிக்கு மிகவும் வீரத்தோடு சண்டைசெய்வதுபோல் நடித்துக்கொண்டு, உள்ளே மிகவுங் கலக்கத்தையடைந்து சமாதானஞ்செய்துவிடும்படி இதரவர்களிடம் முறையிட்டுக்கொள்ளுகின்றது. முன் இது அக்கிரமமாகத் திரிப்போலியில் பிரவேசித்ததைப்பற்றித் துருக்கியர் தெரிவித்துக்கொள்ளும்போதெல்லாம் பேசாமலிருந்த ஐரோப்பியவர்கள் இப்போது இத்தாலியா விஷயத்தில் மிகவும் பரிந்து சமாதானஞ்செய்ய முன்வந்திருக்கிறார்கள். “இத்தாலியர்க்கு திரிப்போலி ஹார்பர்வேலைகளையும், ரயில்வேஸ்தாபிக்கும் வேலைகளையும், வியாபாரத்துக்குவேண்டிய சௌகரியங்களையும் கொடுத்து யுத்தத்தை நிறுத்திவிடவேண்டும்” என்று ஆஸ்திரியாவும், ஜெர்மனியும் துருக்கியரிடம் கேட்டுக்கொண்டன. அதற்குத் துருக்கி எள்ளளவும் இணங்காமல் மறுத்துவிட்டது. முன்பு துருக்கிகளை அவமதித்து மௌனஞ்சாதித்தவர்கள் இப்போது மிகவும் பரபரப்போடு சமாதானஞ்செய்யும் விஷயத்தை யோசிக்கும்போது ஒருபக்கம் சிரிப்பும் ஒருபக்கம் வெறுப்புமுண்டாகின்றன. முன் இத்தாலியர்செய்த அக்கிரமங்களை உத்தேசிக்கும்போது இப்பொழுது துருக்கி சமாதானத்திற்கிசைவதற்கு எள்ளளவும் ஏதுவில்லை. மிகவும் பேடித்தனமாய்ச்சிசுக்களையும், பெண்களையும், விருத்தாப்பியர்களையும் வதம்செய்த இத்தாலியர்க்கு இப்பொழுதுதான் புத்திவந்திருக்கிறது. “கெடுவான் கேடுநினைப்பான்” என்னும் பழமொழியின் உண்மையை இந்த இத்தாலியரிடத்திற்றான் கண்டோம். சமாதானமாவதைத் தவிர வேறு நல்லமார்க்கமில்லையென்று இவர்கள் மனதிற்குள் தீர்மானித்திருக்கிறார்கள். எனினும் வெளிக்கு மகாவீரர்களைப்போல விளங்குகிறார்கள்; தாங்கள் ஜெயமடைந்துவருவதுபோல பொய்யான சங்கதிகளைப் பர

ப்பிவருகின்றனர். கீழ்க்கண்டபடி எட்டியிருக்கும் சமாசாரங்களைப்பார்த்தால் இவர்கள்மூலம்வந்து இந்தியாவில் உலவும் தந்திகள் பொய்யென்பது நன்குபுலப்படும்.

துருக்கியுத்த விஷயமாய்ப் பல அறபுபத்திரிகை முதலியவற்றால் எட்டியிருக்கும் சமாசாரங்கள்:

(:[*]:)

“உண்மையுள்ள பக்கத்தில் ரஹ்மான் அனுக்கிரகம் செய்வான்; திரிப்போலியுத்தத்தைச் சமாதானம் செய்யப்பவர்க்காரர்களும் முன்வருகின்றார்கள்; துருக்கிகவர்ண்மெண்டார் இதனை ஒருபோதும் ஒப்புக்கொள்ளார்கள்; அப்படி ஒப்புக்கொண்டாலும் நாங்கள் உயிரிருக்கும் வரையுத்தம்செய்வோம்” என்று இஸ்தம்பூலில் வெளியாகும் முதன்மைபெற்ற பத்திரிகையாகிய “அலஹிலாரு” என்ற பத்திரிகை கூறுகின்றது.

“சென்ற நவம்பர்மீ பெங்காசியில் நடந்தயுத்தத்தில் இத்தாலியருள் 4000 பேர் மாண்டனர்; 660 பேர் சிறைப்பட்டனர்; துருக்கிய அரபியர்களுள் 600 பேர்ஷஹீதானார்கள்; 100 பேர் காயமடைந்தனர்” என்று “அல்பாக்அல் ஆலம்” என்ற பத்திரிகைகளும், ஆஸ்திரியப் பத்திரிகைகளும் கூறுகின்றன.

“துருக்கிகள் டிரிப்போலியை மீட்டும் கைப்பற்றிக்கொண்டார்கள்; சமீபத்தில் நடந்த சண்டையில் நூற்றுக்கணக்கான இத்தாலியர் மாண்டுவிட்டனர்; இன்னும் அவர்களுள் அதிகமான பேர் காலராவினாலிறந்தனர்; வெள்ளமிகுதியால் 3000 பேர் அடித்துக்கொண்டு போகப்பட்டனர்; மிஞ்சியிருந்த இத்தாலியர் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்; துருக்கியர் தங்களிடம் அகப்பட்ட இத்தாலியக் கைதிகளை பெஸ்ஸானுக்கு அனுப்புகின்றார்கள்; அந்தக் கைதிகளுடன் ஜெனரல்கனிவாவும் சிறையாய் அனுப்பப்பட்டிருக்கின்றார்” என்று இங்கிலீஷ்மான் பத்திரிகை தெரிவிக்கின்றது.

“ஆயிரக்கணக்கான அரபியர்கள் டிரிப்போலிக்குப்போய்ச் சேர்ந்திருக்கின்றார்களென்று இத்தாலிய பத்திரிகையாகிய யஜரீத்துக்குச் சமாசாரம் எட்டியிருக்கிறது; ஆயிரம் துருக்கிவீரர்கள் பூமியானுக் கிணறுகளைக் கைப்பற்றிக்கொண்டு இத்தாலியர்களை உள்ளே துரத்திவிட்டார்கள்” என்று நவம்பர்மீ 13உ பாரிஸிலிருந்து ஆஸ்திரியாவுக்கு ஒருதந்தி கிடைத்திருக்கும் செய்தி தெரிவதாக ரெங்கோன் ஸைபுல் இஸ்லாம் பத்திரிகை தெரிவிக்கின்றது.

“ஸ்தம்பூல் பத்திரிகைகளெல்லாம் பெங்காசியில் ஒரு பெருஞ்சண்டை நடந்ததாகக் கூறுகின்றன; இத்தாலியர்களை அறபியர்கள் ஒருபுறமாகவும், துருக்கியர்கள் மற்றொருபுறமாகவும் நின்று தாக்கியதில் இத்தாலியர்கள் தோல்வியடைந்துபோனார்கள்; அவர்கள் பக்கம் 2200 பேர் சேதம்” என்று பெய்ரூட்டிலிருந்து வெளிவரும் அல்பாக் என்ற பத்திரிகை கூறுகின்றது.

“அநேகம் துருக்கிய ஆபீஸர் 30000 அரபிகளுடன் திரிப்போலிக்குவந்துவிட்டார்கள்” என்றும், “இத்தாலியரின் மூன்றுபீரங்கிகள் துருக்கியர் வசமாயின” என்றும் மேற்கண்ட பத்திரிகையே கூறுகின்றது.

இன்னும், ஷெய்க்ஸெனுஸிடம் இரண்டுலட்சம் ஒட்டைகளிருக்கின்றனவென்றும், அவரனுப்பியிருக்கும் சைனியங்களுக்கு அந்த ஒட்டைகளின் மீது உணவுப்பொருள்கள் அனுப்பப்படுமென்று அவர் தெரிவிப்பதாகவும், உதுமானியக் கொடிமீண்டும் திரிப்போலியில் பறந்துகொண்டிருக்கிறதென்றும், அரபிகள் ஜும்மாத்தொழுகையைத்திரிப்போலிப்பள்ளிவாசலில் நிச்சயமாகத்தொழுவோமென்று உறுதிசொல்லிக்கொண்டு மிகவும் மூர்க்கமாய் யுத்தம்புரிந்துவருகிறார்களென்றும், துருக்கிக்கருகேயுள்ள எஜியன் தீவுகளின்மேல் இத்தாலியர்தாக்கும் பக்ஷத்தில் அவ்விடங்களைக் காக்கும்பொருட்டு, துருக்கிகவர்ன்மெண்டார் 15000 வீரர்களை அனுப்பியிருக்கிறார்களென்றும், அங்கே கடற்கரையோரங்களில் துருக்கியர் வெடிக்குண்டுகளைப் பரப்பிவைத்திருக்கிறார்களென்றும், இத்தாலியக் கப்பல்கள் அவ்விடத்தில் நெருங்கினால் வெடிக்குண்டுகளால் நாசமாகிவிடுமென்றும், செங்கடலிலுள்ள ஹொடெய்டாத்துறைமுகத்தில் இருபதினாயிரம் அரபிகள் கூடினார்களென்றும், அப்போது இஜத்பாஷாவும் அங்கேயிருந்தாரென்றும், அவரிடம் மேற்கண்டவாறு கூடிய அரபிகள், திரிப்போலிக்கு வாலண்டியராய்ப்போக அனுமதிகொடுக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டார்களென்றும், அதைக்கண்டு இஜத் பாஷா, அவர்களுடைய தேசாபிமானத்திற்காகப் பரிவுற்றுக் கண்

ணீர்விட்டு அவர்கள் கொடுத்தமனுவைத் துருக்கிக் கவர்ண்மெண்டுக் கனுப்பியிருக்கிறாரென்றும், அமீர்பென்மரூத் என்பவரும் ஏராளமான சைனியங்களனுப்பியிருக்கிறார் என்றும், மதச்சண்டையென்று ஆப்பிரிக்காகண்டமுழுதும் சமாசாரம் பரவியிருப்பதால் அளவற்ற அரபிகள் உள்நாடுகளிலிருந்துவந்து குவிகின்றார்களென்றும், மற்றொருமுறை பெங்காசியில் நடந்தசண்டையில் 1500 இத்தாலியர் இறந்துபோனார்களென்றும், இத்தாலியக்கப்பலொன்று தண்ணீருக்குள் அமிழ்த்தப்பட்டதென்றும், டெர்னாவில் நடந்தசண்டையிலும் இத்தாலியர்க்குப் பெருஞ்சேதம் விளைந்ததென்றும், 80. இத்தாலியப்போர் வீரர்கள் டாப்ரூக் பட்டணத்தருகேயுள்ள தந்திக்கம்பிகளை அறுக்க எத்தனித்தபோது 10 அரபிகள் அவர்கள்மேற்பாய்ந்து தாக்கியதில் இரண்டு இத்தாலியர் உயிரிழந்தாரென்றும், பலர்காயமடைந்தார்களென்றும், எஞ்சியவர் ஆயுதங்களைப்போட்டு ஓடிவிட்டார்களென்றும், என்வர்பே டெர்னாவிற்குப் பக்கத்தில் ஒருபெரிய யுத்தப்படையைச் சேகரஞ்செய்துகொண்டிருக்கிறாரென்றும், இன்னும் அவர் டாப்ரூக் என்னும் ஊரைத்தாக்கி இத்தாலியரை நாசப்படுத்தத் தீர்மானித்திருக்கிறாரென்றும், திரிப்போலியில் சிறைப்பட்ட இத்தாலியக் கைதிகளையெல்லாம், திரிப்போலிக்குத் தென்பாலுள்ள பெஸ்ஸான் மகாணத்துக்குத் துருக்கியர் அனுப்புகிறார்களென்றும், அல் ஹேக்கிடுவோட், அலிஹெத்ராம் அல்பாக், அல்இந்திஹாத் அல் இஸ்லாமியா முதலிய பத்திரிகைகள் கூறுகின்றன.

"சமீபத்தில் இத்தாலியைச் சேர்ந்த மிலன்பட்டணத்திலிருந்துவந்த 83 ஆவது இத்தாலியப்பட்டாளத்தை துருக்கிய அரபிகள் தாக்கியதில் 200 இத்தாலியர் சேதமடைந்தாரென்று" ஏஜென்ஸி உதுமான் என்ற பத்திரிகைதெரிவிக்கிறது.

"துருக்கிகளுக்கு டியூனிஸ்மார்க்கமாகவும், மிஸ்றுமார்க்கமாகவும் படைகளும், ஆயுதங்களும், குண்டுமருந்துகளும் வந்துகொண்டேயிருக்கின்றனவென்று இங்குள்ள இத்தாலியர்கள் ஆத்திரப்படுகிறார்கள்" என்று நவம்பர்மீ 13உ ரோமிலிருந்து சமாசாரம் எட்டுகிறது.

"இத்தாலியர்கள் பலமாகவிருக்குமிடத்தில் துருக்கியர் எதிர்த்துக்கொண்டிருப்பதில் பலனுண்டாகமாட்டாது. பற்பல விடங்களிலும் சில்லரைச்சண்டைகளை நடத்தி யுத்தத்தை நெடுநாள்வரை வளர்த்துகொண்டிருந்தால் இத்தாலியர்நெஞ்சுடைந்து ஓட்டம்பிடிப்பார்கள்" என்று டானின் என்ற பத்திரிகை எழுதுகிறது.

திரிப்போலிக்கடற்கரையின் சமீபத்தில் தங்கியிருக்கும் இத்தாலியரைத் துருக்கிகள் மிகவும் கடுமையாய்த் தாக்கிவருகின்றார்களென்றும், டெர்னா, டாபரூக் என்ற விடங்களிலுள்ள இத்தாலியர்களையும் மேற்கண்ட துருக்கி அரபியர்கள் பலமாய்த்தாக்கிவருகிறார்களென்றும் இந்தச் சண்டையில் சுமார் 1500 பேர் இத்தாலியரில் சேதமென்றும், துருக்கியரும் அரபிகளும் சென்றநவம்பர்மீ 21உ முதல் இதுவரை பெங்காசியிலுள்ள இத்தாலியருக்கு உணவுப்பொருள் முதலியவை கிடைக்கவொட்டாமல் செய்துவருகிறார்களென்றும் இராக்காலங்களில் அடிக்கடி துருக்கியரும் அரபிகளும் இத்தாலியரை எதிர்த்து அவருக்குப் பெரும் நஷ்டத்தை உண்டு பண்ணிக்கொண்டேயிருக்கிறார்களென்றும் இத்தாலியர் கப்பல்கள், கரையிலிருந்து கிளம்பும் துருக்கியருடைய பீரங்கிக்குண்டுகள் எட்டும் தூரத்திற்கிப்பால் வரமுடியவில்லையென்றும், என்வர்பே, 115000 யுத்த தேர்ச்சியுள்ள அரபியருடனும், 3500 துருக்கியருடனும், 30 பீரங்கிகளுடனும் பெங்காசிக்கருகே தங்கியிருக்கின்றாரென்றும், மதச்சண்டையென்று கேள்விப்பட்டு அளவற்ற அரபிகள் சண்டைக்குவந்து திரளுகிறார்களென்றும், பெங்காசியில் கடினமாயெதிர்த்து இத்தாலியரைத் துரத்த நிச்சயித்திருப்பதால் அங்குள்ள ஜெர்மனியரை வேறிடத்திற்குப்போய் விடும்படி அவர்களுக்கு என்வர்பே தெரிவித்திருப்பதாயும், இத்தாலியர்க்கு வசப்பட்டிருக்கும் காப்ரா என்றவிடத்தைப்பீரங்கிகளால் தாக்கும்படி என்வர்பே ஆக்ஞாபித்திருக்கிறாரென்றும் இங்கிலீஷ்மெயில் விஷயங்கள் எட்டுவதாக ஸைபுல் இஸ்லாம்பத்திரிகை கூறுகிறது.

என்வர்பேசெய்யும் அந்தரங்க முயற்சிகளைக்கவனித்தால் இத்தாலியர் என்னும் நாமமே இல்லாமல் வேரற்றுப்போகக்கூடுமென்று யூகிக்க இடமுண்டாகிறதென்றும், அவர் திரிப்போலியிலுள்ள ஜெர்மனியர்கள் ஊரைவிட்டு வெளியே போய்விடவேண்டும், இல்லாவிடில் அபாயம்நேரும் என்றுசொல்லியிருப்பதாயும், இதைக்கவனிக்கும்போது அவர், இத்தாலியரை முழுமையும்

லைக்க எண்ணங்கொண்டிருக்கிறதாக விளங்குகிறதென்றும், இத்தாலியர்க்குப் பெங்காசி முக்கியஸ்தலமாயிருப்பதால் அங்குள்ள எதிரிகளை நாசஞ்செய்தபின்பு தான் திரிப்போலியில் பிரவேசிக்க வேண்டுமென்று கருதியிருந்ததினாலேயே இதுவரை திரிப்போலியில் செல்லாமலிருந்தாரென்றும், இப்போது திரிப்போலியில் பிரவேசித்திருப்பதால் அங்குள்ள இத்தாலியரின் கெதி என்னவாகுமோ என்றும் ஸைபுல்இஸ்லாம் பத்திரிகை கூறுகின்றது.

"திரிப்போலியிலுள்ள உதுமானியர் கியாம்புக்கு அராபிப் போர்வீரர்கள், மூன்று ஷேக்மார்களின் தலைமையின் கீழ் மூன்று பகுப்பாய்வந்து சேர்ந்துவிட்டதாக கவர்மெண்டாருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது" என்றும்,

"இஸ்தம்பூலிலுள்ள உதுமானிய கமிட்டியார் பெருஞ்சண்டைக்கு வேண்டிய ஒழுங்குகளைச் சித்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்" என்றும்,

"மக்கத்துஷரீப், யுத்தத்துக்கு வேண்டியசேனைகளையும், யுத்தகருவிகளையும் அனுப்புவதாய்த் தெரியப்படுத்திக்கொண்டதைக் கேள்விப்பட்டு உதுமானிய கமிட்டியார், 'படைகளும் வேண்டிய கருவிகளும் திரிப்போலியில் அளவற்றிருக்கின்றன, ஆகையால், இச்சமயம்வேண்டாம்' என்று வந்தனத்துடன் தெரிவித்ததோடு 'சண்டையில் வெற்றியடையும்படி துவாச்செய்யுங்கள்; ஹஜ்ஜூயாத்திரைக்காரரிடம் சண்டைக்குப் பணஉதவிசெய்யும்படி கேட்டு வசூலாகும் பணத்தை இஸ்தம்பூலுக்கு அனுப்புங்கள்' என்று கேட்டுக்கொண்டார்கள்; அதன்மேல் இப்போது மக்கத்தில் ஏராளமானபணம் வசூலாகிவருகிறது" என்றும், இஸ்தம்பூலிலிருந்து கிடைத்த தந்திசெய்திகளால் விளங்குவதாக ஸைபுல் இஸ்லாம் என்னும் பத்திரிகை தெரிவிக்கின்றது.

திரிப்போலிக்கருகேயுள்ள அரபிகள், சண்டையில் சேராத சாதாரணமனிதர்கள்போல் நடித்து ஆயுதங்களையெல்லாம் பேரீச்சமரங்களில் மறைத்து வைத்துவிட்டுப்பகற்காலங்களில் விவசாயவேலைகள் செய்கிறதும், இராக்காலங்களில் மறைத்துவைத்த ஆயுதங்களையெடுத்துக்கொண்டு மறைந்திருந்து இத்தாலியரைச்சுடுவதுமாயிருப்பதால் இத்தாலியர் மிகுந்த ஜாக்கிரதையாய்த் தூதுவர்மூலம் கவனித்து வருகிறார்கள்" என்று ஆஸ்திரியாவின் பிரதானநகராகிய வியன்னாவிலிருந்து கிடைத்த தந்திச்செய்திகளால் தெரிவதாக ஸைபுல்இஸ்லாம் கூறுகிறது.

"திரிப்போலிக்கு அரைமைல் தூரத்துக்குத்தெற்கே ஒரு பெரிய பாலைவனமிருக்கிறது; அது மிகவும் மணல் நிறைந்தவிடமாகையால் அங்கே விரைவாய்ச்செல்லும் ஒட்டகைகளும் 1-மணிக்கு 2-மைல் தூரத்துக்குமேல் நடக்கமுடியாது; அந்தப்பாலைவனத்துக்கப்பால் எயின்ஜாரா என்ற செழிப்புள்ள ஓயாஸிஸிருக்கின்றது; அவ்விடத்திற்றான் துருக்கியர் பெருங்கூட்டமாய்த்தங்கியிருக்கின்றனர்; அங்கிருந்து சுமார் 10 மைல் தூரம்வரை மற்றொருபாலை வனமுண்டு; அதற்கப்பால் 20 மைல் தூரம்வரை செழித்தமரங்களும் புற்பூண்டுகளும் நிறைந்த சிறிதுவளமான இடமொன்றிருக்கின்றது. அதிலிருந்து இடையிடையே மரங்களும், செடிகளும், தண்ணீரூற்றுக்களும் நிறைந்தவிடமொன்று காரியன்மலையைக்கிட்டும் வரையிலுமிருக்கிறது. இவற்றால் துருக்கிய அரபியர்க்குப் பலவிதசௌகரியங்களுண்டு. இப்பாலுள்ள இத்தாலியர்க்கோ எவ்விதசௌகரியமுமில்லை; தண்ணீர் முதலியவை கிட்டாமையால் அவர்களுக்கு முன்னேறிச்செல்வது கஷ்டமாயிருக்கிறது" என்று டிரிஸ்டர் ஜெபிட்டங் என்றபத்திரிகைக்குத் திரிப்போலியிலிருந்து கிடைத்திருக்கும் தந்திச்செய்தியால் விளங்குவதாக ஸைபுல் இஸ்லாம் தெரிவிக்கின்றது.

"துருக்கி கவர்ண்மெண்டாரின் உத்தரவின்பேரில் பாரிஸ் நகரிலிருந்து ஹெலன் என்ற ஆகாயகம்னி 4 ஆகாயக்கப்பல்களோடு இஸ்தம்பூலுக்குப் பிரயாணப்பட்டுவிட்டார்" என்றும்,

"துருக்கிய ரெட் கிரசெண்டு சொஸைட்டியார் மார்செயில் நகரில் பிரஞ்சுக்கப்பலிலேறி அம்மார்க்கமாகவே திரிப்போலிக்கு ஸ்பாக்ஸ்மார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கிறார்கள்" என்றும் பாரிஸ் நகரிலிருந்துகிடைத்த தந்தியால் விளங்குவதாக ஸைபுல் இஸ்லாம் கூறுகின்றது.

"திரிப்பொலியில் என்னுடைய சைனியங்கள்செய்த அக்கிரமத்தைக்கேட்ட சர்வதேச ஜனங்களும், மனக்கிலேச முறுகிறார்கள். பைத்தியம் பிடித்த இந்தக்குருடர்களை இவ்வநியாயம் செய்ய வற்புறுத்தினவர் யார்? இந்த துக்ககரமான செய்தியைக் கேட்டு நான் என்னுடைய சப்தத்தை மிஸ்டர் காருன்ஜி என்ற

தனவானிடம் அறியப்படுத்துகிறேன் கவனிப்பாராக" என்று இத்தாலியராஜஸ்திரீ டைம்ஸ்பத்திரிகைக்கு ஒரு கடிதமெழுதியிருப்பதாக அறிகிறோம்.

"இத்தாலிய ஸ்திரீகள் இத்தாலியச்சைனியம் துருக்கியுத்தத்திற்கு ரயில் மார்க்கமாகப்போவதைத் தடுக்குமாறு ரயில் தண்டவாளங்களின் குறுக்கே விழுந்துகொள்கிறார்கள்" என்று ரோமாபுரிதந்தியால் சமாசாரம் அறிவிக்கப்படுகின்றது.

"டார்டனல்ஸ் ஜலசந்தியை இத்தாலி தடுக்குமானால் பிரித்தானியா அதற்குமாறாக நின்று இத்தாலியைத்துரத்தி விடுவதாய் வாக்களித்திருக்கின்றது" என்று நவம்பர் மாசம் 26௳ லண்டனிலிருக்கும் துர்க்கி ஸ்தானாதிபதி இஸ்தம்பூலுக்குத் தந்திகொடுத்திருப்பதாக டெயிலி டெலகிராப்பத்திரிகையில் கூறுகிறதென்று அல்லிவாவில் வரையப்பட்டிருக்கின்றது.

கர்னல் ஷௌகத்பாக்ஷா, "டார்டனல்ஸ் ஜல சந்தியை காப்பாற்றும் பொருட்டு யுத்தத்திற்கு வேண்டிய சாமக்கிரிகைகள் சேர்ப்பித்து வைக்கப்பட்டிருக்கின்றன" என்றுஓர்தந்தி கொடுத்திருப்பதாயும், அதுதவிர துருக்கிகவர்ண்மெண்டார், சகல பவர்களுக்கும் "டார்டனல்ஸ் ஜலசந்தியை நீங்கள் கவனிக்காமலிருந்தால் நாங்கள் போகாசியிலும் அதைச்சார்ந்த எல்லைகளிலும் டைனமட் வைத்து யாருடைய வியாபாரக்கப்பல் வந்தாலும் உடைத்துத் தகர்த்துவிடுவோம் என்று கண்டிப்பாய்த்தெரிவித்திருக்கின்றார்கள்." என்றும் சமாசாரம் எட்டுகிறது.

"திரிப்போலி முன்போலவே மிக்க கஷ்டநிலைமையிலிருக்கின்றது. இத்தாலியர்கள் பட்டணத்திலிருந்து முன்னேறும் எண்ணத்தை மறந்துவிட்டார்கள். தினம் தினம் அராபிகள் இத்தாலியர்களை சங்காரம் செய்வதால் மிக்க பரிதாபநிலையிலிருக்கிறார்கள். தவிர உண்டிகிடைப்பது கஷ்டமாய்விட்டது. இந்த ஒரு வாரமாகப் பயறு மொச்சைப்பயறு கீரைவகைபருக்கிடைப்பதும் தடுக்கப்பட்டுப்போய்விட்டது. பூமிலியாருவினுடைய கிணற்றுத் தண்ணீர் போதாமையால் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளக் கப்பல் மூலமாய் ஜலம் கொண்டுவரப்படுகின்றது" என்று ஜோர்னல் தீதயா, பாரீஸ் ஜோர்னல் என்ற இரண்டு பத்திரிகைகளுக்கும் நவம்பர் மாசம் 15௳ திரிப்போலியிலிருந்து தந்தி கிடைத்திருக்கிறதாம்.

ஈரான் நிலைமையும், ருஷியாவின் அக்கிரமச்செய்கையும்.

இப்போது ருஷியர் ஈரான்மீது திடுமெனக்கிளம்பிச் சண்டைதொடுத்த விஷயத்தை நேயர்கள் அறிவார்கள். சமீபத்தில் அங்கு நடந்தவிஷயங்களை உத்தேசிக்கும்போது ஈரான்விஷயம் விசனத்திற்கிடமாயிருக்கிறது. நவம்பர் மாசம் 21௳ ஈரானின் வடபாகத்திலுள்ள டாபிரிஜ் என்றவிடத்தில் பிடேய் என்றவகுப்பார் ருஷியரோடு எதிர்த்து வீட்டின்மேற் கூரைகளிலும் தெருக்களிலும் நின்று தைரியத்தோடு சண்டைசெய்தார்களென்றும், அப்போது ருஷியசேனை டாபிரிஸிலுள்ள கோட்டைகளைப்பீரங்கியால் சுட்டுத்தாக்கினார்களென்றும், அதனால் அநேகம் கவர்ண்மெண்டுக்கட்டிடங்களும், இன்னும் சிலவீடுகளும் நாசமானதோடு சுமார் 50 ஈரானியர் மாண்டனரென்றும், ருஷியர்களிலும் பலர் கொலையுண்டார்களென்றும், செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து வந்ததந்தியால் விளங்குகின்றது.

இதற்குப்பின் வெளிவந்ததந்திகளால், ரெஷிட் என்றவிடத்திலும் ருஷியர் புகுந்து அநேகம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக்கொன்று, தந்திஆபீசுகளையும், போலீஸ்ஸ்டேஷன்களையும், கைப்பற்றிக்கொண்டார்களென்றும் சமாசாரம் எட்டுகின்றது.

இன்னும் ருஷியா, ஈரான் கவர்ண்மெண்டாரிடம் இருக்கும் பொக்கிஷத்தலைவராகிய ஷஸ்டர் என்ற அமெரிக்கரை நீக்கிவிடவேண்டுமென்றும், ருஷியா பிரிட்டன்ஆகிய இரண்டு கவர்ண்மெண்டாரின் அனுமதியின்றி ஈரான் கவர்ண்மெண்டுவேலைக்கு அந்நியரை நியமிக்கக்கூடாதென்றும், ருஷியாசேனையை ஈரானுக்குக் கொண்டுவந்ததனால் நேர்ந்தசெலவை ஈரான் கவர்ண்மெண்டார் கொடுத்து விடவேண்டுமென்றும் இந்த மூன்று நிபந்தனைகளுக்கு மிணங்கினால் சமாதானமாவதாயும் தெரிவிக்கின்றதாம்.

மேலும், ஈரான்வாசிகள் இந்தக்கலகசம்பந்தமாய் போலீசாரின் அனுமதியின்றிக்கூட்டம் கூடிப்பேசக்கூடாதென்றும், ருஷியர்கள்கேட்கும் நிபந்தனைகளுக்குக் கவர்ண்மெண்டார் இணங்கிவிட்டார்களென்றும் ஈரான் கவர்ண்மெண்டாரால் கட்டளைபிறக்கப்பட்டிருப்பதாக வேறு சிலதந்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வித பிரஸ்தாபங்கள் நடந்தாலும் நிபந்தனையின்படி ஷஸ்டர் இன்னும் வேலையிலிருந்து நீக்கப்பட்டதாய்த்தெரியவில்லை. இந்த நிலைமையில் ருஷியப்படைகள் கூடியசீக்கிரம் ஈரானைவிட்டுப்போய்விடுமென்றும், ஆனால், ஈரான் கவர்ண்மெண்டு நிபந்தனைகளுக்கு இணங்கியவுடன் மேற்கண்டபடைகள் நிச்சயமாகப் போய்விடுமென்று உறுதிசொல்ல முடியாதென்றும் ருஷிய உத்தியோகஸ்தர்கள் அபிப்பிராயம் கூறுகின்றார்களாம்.

இவற்றையெல்லாம் ஆலோசிக்கும்போது மனத்திற்கு மிக்க விசனமுண்டாகிறது. வேறுபவர்களிடமானால் ருஷியா இவ்விதம் வால் நீட்டமாட்டாது. சமீபத்தில் ஜப்பானியரிடம் பட்டபாட்டை மறந்து இப்போது ருஷியா இவ்விதம் துள்ளுகின்றது. "துள்ளினமாடு பொதிசுமக்கும்" அனியாயக்காரரைத்தண்டிக்க அல்லாகுதஆலா ஒருவனிருக்கிறான்.

இட்டாலிச்சரக்குகளை விலக்குதல்.

சகோதரர்களே!

இட்டாலியர் அக்கிரமமாகத் திரிப்போலியிற் புகுந்து யுத்தஞ்செய்துவரும்விஷயம் ஒவ்வொருவரும் நன்கறிந்ததே. அன்றியும், அவர்கள் அணுவளவேனுங் குற்றமற்ற திரிப்போலியின் வாசிகளான சிறுவர்களையுஞ் சிறுமியர்களையும் விருத்தாப்பியர்களையுங் குருடர்களையும் முடவர்களையுங் கொஞ்சமு மிரக்கமின்றி அநாகரிகமாய்க் கொடுங்கொலைசெய்த கொடுமையானது நம்மவர் மனதில் எந்நாளும் நிலைநிற்கும்படி ஆழப்பதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப்பயங்கரமான கொடுங்கொலையில் அன்னவர்மகிழ்ந்து இன்புறினும் அது அறிவீனத்தின் மகிழ்ச்சியேயன்றிப்பிறிதன்று. திரிப்போலியில் துருக்கியருக்கும் இட்டாலியருக்கும் நேரிட்டுக்கொண்டிருக்கிற யுத்தசமாசாரத்தைப் பத்திரிகைகளுக்குத் தெரிவிக்க லண்டனிலிருந்தும் ஜர்மனியிலிருந்தும் அவிடம்போன கடிதக்காரர் சமீபத்தில் தங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பியபொழுது அங்குநடந்த இட்டாலியரின் மிருகத்தனமான வதையைப்பற்றி விவரித்திருப்பதோடுகூட அதைக்கண்டு சகிக்கப்பெறாது தங்கள் சுதேசத்துக்குத் திரும்பிவிட்டதாகவுஞ் சொல்லியிருக்கின்றனர். இந்தக் கொடிய சம்பவத்தைப்பற்றிக் கலோனா ராஜதுமாரி லண்டன் டைம்ஸ்ப்பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—"நான் பிறப்பினால் இட்டாலியாதேசத்தைச் சேர்ந்தவன். திரிப்போலியில் இந்தயுத்தத்தை வேண்டுமென்று கோராத நிரபராதிகளான அரபியர்களை இட்டாலியர் கொடுங்கொலை செய்வதைப்பார்த்து எனக்குச் சகிக்கக்கூடாத துயரமுண்டாயிருக்கிறது. நாகரீகம்பெற்ற தேசத்தாரெல்லாரும் இந்தக் கடுங்கொலையை நிந்திப்பதால் என்னுடைய தேசத்தார் இந்த உதிரத்தை உறிஞ்சும்வழியில் தடைசெய்யப்படுவார்களென்றுநம்புகிறேன். இந்தயுத்தம் என்தேசத்துக்குப்பெரும் நிந்தை. யுத்தம் அடக்கப்படவேண்டுமென்றுவிரும்புகிறேன்" என்பதே. பிறப்பால் கிறிஸ்துவர்களான இவர்களே இட்டாலியரின் கோரச்செய்கைகளைக் கேட்டு வருந்துவார்களாயின் முஸ்லீம்களாகிய நாம் இவ்வளவு வருத்தத்தை யடைந்திருக்கிறோம் என்பது சொல்லாமலே விளங்கியிருக்கிறது.

இட்டாலியரோடு எதிர்த்து அமர்க்களத்தில் மிகவும் வீராதீரத்தோடு போராடுகின்ற பராக்கிரமம்பொருந்திய துருக்கிய அரபிய யுத்தவீரர்களை இட்டாலியர் கொன்றிருப்பாராயின், இட்டாலியருக்கும் அவர்தேசத்துக்கும் வெற்றியால் புகழேகிடைத்திருக்கும். ஆனால் இட்டாலியர் சென்ற அக்டோபர் மாதம் 23-ம் உ துருக்கிய அராபிய யுத்தவீரர்களுக்குச் சற்றேறக்குறைய 10000-இட்டாலி ஸோல்ஜர்களைப் பலிகொடுத்த தன்மையால் புத்திதடுமாறி நெறிதவறி அன்று முதல் நான்கு தினங்களாக யாதொரு யுத்தாயுதமுமற்ற நிரபராதிகளான அரபிய சகோதரிகளையுஞ் சிறுவர்களையும் வயதுசென்ற கிழவர்களையும் அந்தகர்களையும் கயிற்றினாற் பிணித்துக்கொன்றதானது பேடித்தன்மையேயன்றியாண்டன்மையல்லவாம். இட்டாலியருடைய இந்த இழிந்தசெய்கைக்குப் பதிலாக மாட்சிமை தங்கிய துருக்கிக்கவர்ண்மெண்டின் அதிகாரத்துக்குட்பட்டிருக்கிற தேசங்களில் சீவனார்த்தமாகப்போய் வசிக்கிற எண்ணிறந்த இட்டாலியர்களைப் பயித்தியம்பிடித்த நாய்களையடித்துக்கொல்வதைப்போலத் துருக்கியர்கள் அடித்துக்கொல்லக்கூடுமாயினும் இந்த இழிந்த செய்கையை யொருபோதும் அவர்கள் செய்யத்துணியார்கள். ஏனென்றால், நம்மவர்களுக்கெல்லாம் ஒரு பெரும்வழிகாட்டியாய் நின்ற அஜரத்மகம்மதவர்களொருபோதும் அநியாயவிரோதமான போர்செய்தார்களன்று: அவர்கள்செய்த

போர்களிலெல்லாஞ் சிறுவர்களையும் பெண்களையும் வயோதிகர்களையும் குருக்களையும் யுத்தத்தில் பின்காட்டி யோடுகிறவர்களையும் ஒருபோதும் கொல்லவில்லை. இச்செய்கையையே அவர்களைப்பின்பற்றியவர்களும் நடத்திக் காண்பித்திருக்கிறார்கள். சாந்தத்தையே அணிகலமாய்க்கொண்ட இந்த உன்னதத்தீர்க்கதரிசியைப் பின்பற்றின துருக்கிச்சகோதரர்கள் இந்த அடாத செய்கையைச்செய்து இழிவானபெயரை ஒருபோதும் பெற்றுக்கொள்ளவேமாட்டார்கள். துருக்கியரபிய சகோதரர்களிடத்திலிருந்து கடலாலும் பூமியாலும் வெகுதூரமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிற நாம் இட்டாலியர் செய்த இந்த இழிவான செய்கையைக்கேட்டு ஊணுறக்கமின்றி வருந்துவோமாயின், கொலையுண்டவர்களுக்குச் சமீபத்திலிருக்கிற துருக்கியரபிய வீரர்களின்மனம் என்னபாடுதான்படா! அவர்களுடைய இருதயம் எவ்வளவு கசிந்துருகினும் இட்டாலியர்கள் செய்த இந்த இழிவான செய்கையை அவர்களும் செய்வார்களென்று நீங்கள் நம்புகிறீர்களா? இல்லை; ஒருபோதுமில்லை. ஆனால், அவர்கள் இட்டாலியரின் யுத்தவீரர்களின் ஆவியையுண்டு நம்முடைய இருதயக்கொதிப்பையாற்றுவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் துருக்கியரபிய யுத்தவீரர்கள், இட்டாலியரின் அக்கிரமத்தை அடக்கி அவர்களுக்கறிவுறுத்துமாறு செய்தவொரு சாகசச்செயலை இங்குக் கூறுகிறேன். திரிப்போலியில் ஹென்னியென்ற விடத்துக்கருகில்ஒரு பள்ளிவாசலில் துருக்கியரால்இட்டாலியத் துருப்புக்களாகியபெர்ஸாக்ளிரியைச்சேர்ந்த 17-ஜோல்ஜர்களில் சிலர் சிலுவையில் அடிக்கப்பட்டும் சிலர் கொளுத்தப்பட்டும் சிலர் வெட்டப்பட்டும் கிடந்தார்களாம். இதை இட்டாலியரே தெரிவித்திருக்கிறார்கள். இதில் இட்டாலியருடைய இழிவானசெய்கையும் துருக்கியருடைய வீரச்செய்கையும் உலகத்தவர்க்குத் தெள்ளிதாய்க் காட்டப்பட்டிருக்கிறது. இட்டாலியர்கள் ஆயுதமற்ற குடிஜனங்களைக்கொன்ற பேடித்தன்மையும் துருக்கியர்கள் ஆயுதத்தோடு கூடிய இட்டாலிய யுத்தவீரர்களைக்கொன்ற ஆண்தன்மையும் இதில் விளங்குகிறதல்லவா? இது நிற்கத், தென்னிந்தியா முஸ்லீங்கள் இட்டாலியரின் அடாதசெய்கையைக் கேட்டு மசூதிகளிலும் வீடுகளிலும் ஒருங்கேயிருந்து விசனப்படுகிறதை என்கண்கள் பலமுறை பார்க்கின்றன. இப்படி நம்மவர்கள் விசனப்படுவதைத்தெரிந்து கொண்டார்களேயன்றி நாம் நம்சகோதரர்களுக்குச்செய்யக் கடமைப்பட்டிருக்கிறவிஷயத்தைச்

சிறிதும் கவனிக்கவில்லை. அதைமறந்திருப்பதுதான் நமக்கு மிகவும்பேராச்சரியத்தையும் விசனத்தையும் கொடுக்கின்றது.

உலகத்திலுள்ள முஸ்லீங்களெல்லாம் இட்டாலியருக்கு அறிவுறுத்தும்பொருட்டு இஸ்லாம் சகோதரத்துவத்திற்காகத்துருக்கியர்களுக்குப் (1)பணம் அனுப்பியும் (2)வாலண்டியர்களையனுப்பியும் (3)இட்டாலியச்சாமான்களை வாங்காது விலக்கியும் வருகிறார்கள். ஆனால் யுத்தத்திற்காகப்பணம் அனுப்புவதும் வாலண்டியர்கள்போவதும் இந்திய அரசாக்ஷியார் சட்டத்திற்கு விரோதமாகலால் ராஜவிசுவாசிகளான நாம் அதைவிட்டுவிட்டு மூன்றாவதாகிய இட்டாலிய சாமான்களையேவர்ஜனம் செய்வோமாக.

இது நமக்குச்சாத்தியமாகும் ஒரு சிறுகாரியமேயாம். இட்டாலியச்சாமான் விலக்குதலைக் கடைப்பிடித்து நிற்போமாயின் சகோதரத்துவத்தின் ஒரு பெருநன்மையை நாம் காட்டினவர்களாவோம்.

இட்டாலியிலிருந்து லட்டர்பேப்பர், டைமன்பித்தான், யானைமேக்கர்சீப்பு, கவர், முதலிய சிலசரக்குகள்தாம் இங்குவருகின்றன.

இட்டாலியிலிருந்து வரும்ஒவ்வொரு சரக்குகளிலும் இத்தாலியில் செய்யப்பட்டதென்று எழுதப்பட்டிருக்கும். இதேவிதமான சரக்குகள் லண்டன், ஜர்மன், ஆஸ்டிரியா முதலியதேசங்களிலிருந்தும் இங்குவருகின்றன. இட்டாலியசாமான்களை வாங்காதுபோனால், அதேமாதிரி வேறுசாமான் கிடையாதென்பதல்ல. ஆதலால், இதைமுஸ்லீங்கள் விலக்குவதிலிருந்து யாதொரு நஷ்டமும் நம்மவருக்கு விளையாதென்பது திண்ணம். ஒருசமயம் அற்பநஷ்டம் நேரிடினும் அது இஸ்லாம் சகோதரத்துவத்திற்கு மிஞ்சியதல்லவாம்.

இட்டாலியச்சரக்குகளை நாம் விலக்குவதிலிருந்து அன்னவருக்கு நேரிடும் நஷ்டம் அளவிறந்ததாம். உலகத்திலிருக்கிற முப்பதுகோடி முஸ்லீங்களும் இட்டாலியச்சரக்குகளை வெறுத்துத் தள்ளி விடுவோமாயின் இட்டாலியர் அடையுங்கதி அதோகதிதான். ஆகவேமுஸ்லீங்கள் ஒவ்வொருவரும் இட்டாலியச்சரக்குகளை விலக்கித்தள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அன்பார்ந்த சகோதரர்களே! இந்த நல்லசமயத்தில் ஒற்றுணர்ச்சியைக் காட்டத்தவறிவிடாதீர்கள். ஒருபோதும் தவறமாட்டீர்களென்றே மனப்பூர்வமாய் நம்புகிறோம்.

கிளைநலம்விரும்பி.

தாழ்ப்பாளில்லாத கதவு.

ஒரு குடியானவனுடைய வீட்டுக்கொல்லையைச் சுற்றிலும் ஒருபூனைகூட நுழையமுடியாதபடி வேலி யடர்த்தியாய்ப் போடப்பட்டிருந்தது. அந்த வேலிக்கப்புறம் ஒரு வயல்வெளியுண்டு. வீட்டுக்கொல்லையிலிருந்து அந்த வயல்வெளிக்குப்போகும்படி ஒருகதவுவைக்கப்பட்டிருந்தது. அந்தக் கதவின் தாழ்ப்பாள் துருப்பிடித்து ஒடிந்துபோய்விட்டது. அதனால் அந்தக் கதவைப் படியமூடமுடிகிறதில்லை. குடியானவன் வெளியில் போகும்பொழுதெல்லாம் அந்தக்கதவை மூடிக்கொண்டுபோவான். மற்றவர்கள் அவ்வளவு சிரத்தையாய் மூடுகிறதில்லை; அல்லவென்று மூடியுமென்ன; மூடினவுடனே ஒரு காற்றுவந்தால் கதவு திறந்துகொள்ளும். இப்படியாக அந்தக்கதவு ஒரு தாழ்ப்பாளின்றிக் காற்றில் அலைந்துகொண்டிருந்தது.

இதனால் கொல்லையில் இருக்கவேண்டிய கோழிகளெல்லாம் வயல்வெளிக்குப்போய்விடும். வயல்வெளியில் மேய்கிற ஆடுமாடுகளெல்லாம் கொல்லையில் நுழைந்து அங்குள்ள செடி செத்தை மேயவரும். வயல்வெளியில்போன கோழிகளை மடக்கிவந்து கொல்லையில்விடுவதிலும், கொல்லையில் மேயவந்த ஆடுமாடுகளைத் துரத்திக்கொண்டுபோய் வயல்வெளியில் விடுவதிலுமே அந்தக் குடியானவனுடைய குழந்தைகளுக்குப் பாதிப்பொழுதும் போய்விடும்.

ஒரு தாழ்ப்பாளை வாங்கிப்போட்டால்மெத்தச் சௌகரியமாயிருக்குமென்று அந்தக் குடியானவனிடத்தில் அவன் மனைவி எத்தனைதரம் சொன்னாலும் அவன் "அடிபோ! போ!! பைத்தியக்காரி! அதற்குக் கால்ரூபா அவிழ்த்துக்கொள்ளணுமே; முழுகிப்போனதென்ன? இந்தப் பையன்களுக்குக் கோழிகளை மடக்குவதும் ஆட்டை மாட்டைத் துரத்துவதும்ஆகிய இந்த வேலையைப்பார்க்கிலும் வேறு என்ன ஒடிக்கிறவேலை?" என்று சொல்லிவந்தான். கதவும் தாழ்ப்பாளில்லாமலே இருந்தது.

ஒருநாள் கொல்லையில் கட்டியிருந்த இளங்கன்றுகட்டை அறுத்துக்கொண்டு கொல்லைக்கதவைத் திறந்துகொண்டு வயல்வெளிக்குப்போய் அப்படியே அடுத்தகாட்டில் மேய ஓடிப்போய்

விட்டது. கன்றுக்குட்டி காணமற்போகவே அதைத் தேடிப்பிடிக்க ஆரம்பித்தார்கள். தொழுவத்தில் கட்டியிருந்த எர்க்குட்டையும் இந்தச் சந்தடியில் கன்றின்பின்னே யோடிப்போய்விட்டது.

குடியானவனுடைய மனைவி பொரி பொரித்துக்கொண்டிருந்தாள். அவளும் அதைவிட்டுக் கன்றுக்குட்டியைத் தேடிப்போன தன் புருஷன்பின்னே யோடினாள்.

அவளுடைய பெண் கூழ்ப்பானையைத் துழாவிக்கொண்டிருந்தாள். அவளும் அதைவிட்டுத் தன்னுடைய தாயின்பின்னே யோடினாள்.

குடியானவனுடைய வேலையாளும் பிள்ளைகளும் இவர்கள் பின்னே ஓடத்தலைப்பட்டார்கள். இப்படியாக எல்லாரும் தலைகால் தெரியாமல் அலங்கோலமாய்க் காட்டுக்கு ஓடும்போது அந்த வேலையாள் அதிக ஆத்திரத்துடனே ஒரு வேலியின்மேல் தாவிக்குதித்தான். குதிக்கையில் கணுக்கால் சுளுக்கிக்கொண்டது. எழுந்திருக்கமுடியவில்லை. கன்றுக்குட்டியைத் தேடுவதை விட்டுவிட்டுக் குடியானவனும் பிள்ளைகளுமாக அந்தஆளைத் தூக்கித்தோளில்வைத்து வந்து வீட்டிலிறக்கினார்கள். அவனுக்கு உபசாரம் செய்யும்படி வீட்டுக்காரியும் பெண்ணும் பின்னேவந்தார்கள்.

வீட்டுக்கு வந்துபார்த்தவிடத்தில் பொரியெல்லாம் தீய்ந்துபோய்விட்டன. பொரிபொரித்த இடத்துக்குச் சமீபத்திலே கொடியில் குடியானவனுடைய அங்கவஸ்திரமும் குட்டையும் இருந்தன. அவையிரண்டும் காற்றில் அலைந்து பொரிபொரித்த அடுப்பின் நெருப்புப்பற்றி எரிந்துபஸ்பமாகி விட்டன. கூழ்ப்பானை காய்ந்து பொங்கிப்போய் விட்டது. தொழுவத்திலிருந்த மாட்டையுங் காணவில்லை. அந்த மாடுஓடுகிற அவசரத்தில் அதன்பக்கத்தில் கட்டியிருந்த ஒரு ஆட்டுக்குட்டியை எட்டி உதைத்தது. ஆட்டுக்குட்டியின் கால் ஒடிந்து நொண்டியாகிவிட்டது. கால் சுளுக்கிக்கொண்ட ஆள் இரண்டுவாரகாலம் யாதொருவேலையும் செய்யஉதவாமல் போனதுமன்றி அவனுக்கு இவர்களே சோறுகொடுத்து அவன் கோப இலகுவாகிறவரையில் இன்னொரு ஆளைக்கூலிக்குப் பேசிவைக்கவேண்டியதும் ஆயிற்று.

பொரி தீய்ந்துபோனதையும் அங்கவஸ்திரம் எரிந்துபோனதையும் பார்க்கவே குடியானவன் தன்மனைவியை நன்றாகத்திட்டினான். காய்ந்து வழிந்துபோன கூழ்ப்பானையைபார்த்தவுடனே பெண்ணைப்பார்த்து, "தடிக்கழுதே"யென்று முழுமுழுறுத்தான். பிறகு தனக்குள்தானே, "கன்றுக்குட்டியோயிற்று, ஆட்டுக்குட்டி நொண்டியாயிற்று, மாடுபோயிற்று, வேலையாள் வேலையொழிகையும்

போயிற்று, அங்கவஸ்திரம் போயிற்று, குட்டையும் போயிற்று, பொரியும் போயிற்று, கூழும் போயிற்று;என்போயிற்று? கால்ரூபாய்த் தாழ்ப்பாள் போடாதபடியாலல்லவோ காணிச்சோம்பல் கோடிநஷ்டம்" என்று, அவன் அதிகவருத்தமுற்றுச் சொல்லிக்கொண்டான். இவ்வளவும் பட்டபின்புதான் அவனுக்குப்புத்தி வந்தது. காணிச்சோம்பல் கோடிநஷ்டம்: இச்சிறுவரியிலடங்கிய உண்மையையறிய அவ்வேழைக்குடியானவன் எவ்வளவுவிலை கொடுத்தான் பாருங்கள். அவனுதாரணத்தைக்கொண்டுதெளிந்து நடக்கத்தப்பினால் நாமும் இப்படித்தான் சமயத்தில் ஒன்றுக்குப் பத்தாக விலைகொடுத்து அறியவேண்டிவரும்.

* "விவேகபோதகன்.

---

* விவேகசிந்தாமணி யென்னும் ஒரு பத்திரிகையிருப்பதால் அப்பெயர்போடும் பக்ஷத்தில் இவ்விஷயம் அப்பத்திரிகையினின்றும் எடுக்கப்பட்டதென்றுகருதக்கூடுமென நினைத்துப் பெயர் மாற்றப்பட்டது. ப. ர்.

* * *

இலாஹி. 21—12—1911.

கோவை.

கனம்பொருந்திய இஸ்லாம்நேசன் பத்திராதிபரவர்கள் சமுகத்துக்கு தஸ்லீம்.

கீழ்க்குறித்திருக்கும் வினாவை நமது நேசன் ஜனவரிமாதப் பிரசுரத்தில் பிரசுரஞ்செய்யவேண்டுமாய் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்கிறேன்.

*வினா.

சத்தியந்தவறுப்பரிசுத்தமாகிய நம்மிஸ்லாமார்க்கத்திற் பற்றுள்ள எனதருமைச்சகோதரர்களே! கல்வியிற்சிறந்த ஆலிமுலமாக்களே!! எல்லாம் வல்லவிறைவன் நம்மீதன்புகூர்ந்து, பிரத்யேகமாகவோர் மார்க்கத்தையும் அதற்காகவேண்டிய வேதநூற்களையும் நமதன்பியாநபிகள் நாயகமவர்கள் மூலமாக இப்பூவுலகினிடையனுப்பி அதன்படி நாம் நடந்துகொள்ளவேண்டுமென்றும், மீறி நடப்பவன் நரகவேதனைக்காளாவானென்றும் தீர்மானித்திருக்கின்றான். இதையறிந்துகொள்ளாத நம்மவர்களிலனேகர் மனம்போனபோக்கில் நடந்துவருகிறார்களென்பதும் அவர்கள் நரகவேதனைக்காளாவார்களென்பது முள்ளங்கை நெல்லிக்கனியேயாகும்.

இகபரசுகதர்மவழிகள் நம்மார்க்கசட்டங்களிற்றான் திட்டமாகக்கூறப்பட்டிருக்கின்றன வென்பதைப்பற்றி விரித்துரைக்கவேண்டிய அவசியமில்லை.

நாடிய நாட்டத்தை நிறைவேற்றிக்கொடுக்கக்காத்திருக்கும் பல மார்க்கக்கோட்பாடுகளினும் நம்மார்க்கக்கோட்பாடே சிறந்ததாகும். ஆழ்ந்தகருத்தும் சிறந்தவாக்கும் மலிந்தநீதியும்நிறைந்துளவேதமெதுவென்று எம்மார்க்கத்தவரிடம் வினவினும்நம்மார்க்கவேதமென்றே பதிலளிப்பார்கள். இத்துணைச் சிறப்புவாய்ந்த நமது வேதக்கட்டளைகளின் உட்கருத்துக்களில் ஒவ்வொருவரின் அபிப்பிராயங்களும் ஒருகால் பேதப்படக்கூடும். அதனால் சிலர் தங்கள்மனம்போனபடி நடக்கிறார்கள். எனினும், கற்றுணர்ந்தனுபவித்தவர்களுக்குண்மையானது நன்கு புலப்படுமாகலின் பரிசுத்தமுள்ள திருக்குர்ஆன் ஆபத்துக்களின் உண்மைதெரிந்தமகான்கள் கீழ்க்கண்ட கேள்விகளைக்கவனித்துத்தக்கவிடையளித்து உண்மையை வெளிப்படுத்தி மாறாக நடப்போர்களைச் சீர்திருத்துவாராக.

1. நம்மார்க்கபுருடன் ஒருவன் எத்தனைபெண்ணைநிக்காஹ் செய்யலாம்?

2. அந்த நிக்காஹ்எப்படி யெப்படிச்செய்யவேண்டும்?

3. நிக்காஹ் செய்துகொள்ளவேண்டிய பெண்கள் யார்?

4. எந்தெந்தப்பெண்களை நிக்காஹ்செய்தல்கூடாது?

5. பெண்சாதி கூடப்பிறந்த தங்கையை நிக்காஹ்செய்துகொள்ளத்தடையுண்டோ?

6. நிக்காஹ்செய்துகொள்ளக் கணவனேற்படாத பெண்ணை என்னசெய்வது?

மேற்கூறிய 6 வினாக்களுக்கும் தக்க பதிலளிப்பதோடு,ஹராமென்பது இப்படிப்பட்டதென்றும், அதற்குச்சரியான தமிழ்ப்பதமின்னதென்றும், பஞ்சமாபாதகங்களுக்குச் சம்பந்தப்படாமல்பிறருக்குபகாரமுள்ளதாகவும் தனக்குத் திருப்தியுடையதாகவுமுள்ள ஒரு நிக்காஹைச்செய்துகொள்வதற்கு மார்க்கசட்டங்கள் தடுக்குமோ வென்பதைப்பற்றியும் விரித்துரைக்கவேண்டும். அன்றியும் ஓரிடத்தில் ஒருதாய்க்கு இரண்டு பெண்மக்கள்; மூத்தபெண்ணை ஒருவருக்கு நிக்காஹ்செய்துகொடுத்திருக்கிறார்கள்; இளையபெண் பக்குவமாகி அநேக நாட்களாகின்றன; மூத்தபெண்ணோ கணவனுக்குப்பணிவிடைசெய்யமுடியாத நோயாளியாகவிருக்கின்றாள். கணவனுமின்னொரு நிக்காஹ் முடிக்கப் பிரீதியுடையவனாகவிருக்கிறான்; இததருணத்தில் நோயாளிக்குத் தன்தங்கையைத்தன் கணவனுக்கு நிக்காஹ்செய்து வைக்கவேண்டுமென்ற பேராசை; தங்கைக்கோ வேறொருகணவனு மேற்படாதிருப்பதை முன்னிட்டுத்தமக்கையாரின் நாயகருக்கே பாரியாகவேண்டுமென்றவுள்ளன்பு; வரனுமப்பெண்ணை நிக்காஹ்செய்வதே யொழிய இரண்டாவதாக வேறுபெண்ணை இச்சிப்பதில்லை என்ற வைராக்ய முடையவனாகவிருக்கிறான். இந்த நிக்காஹ்செய்வதில் என்னதோஷமுண்

ஓ? பொருமையுள்ள அறைகுறைக்கல்வியாளர்சிலர் இவர்களின் விண்ணங்களைப் பங்கப்படுத்துகிறார்கள். மேற்கூறிய இவர்களின் நோக்கங்கள் கைகூடாவிடில் மார்க்க நீதிதவறிக்கேடுபாடுகளுண்டாகும்போலத் தோன்றுகிறபடியால் இவ்விஷயத்திலும் செய்யவேண்டியவழியாதென்பதையும் விஸ்தரித்து விடையளிக்கவேண்டுமாய் நம்மார்க்கவுலமாக்களிடத்தில் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இஸ்லாம் சகோதரன்.

---

* நமது நேசனில் இந்தவினாவெளியானபோதிலும், எத்தனையோ ஆலீம்களிருந்தும் ஒன்றுக்காவது விடையளிப்பதில்லை. பெரிய அந்தஸ்துள்ள ஆலிம்களிருக்கும்போது நாம் விடைஎழுதினால் அவர்களுக்கு கௌரவமுண்டாகாதென்று பேசாமலிருக்கிறோம். அதனால் சில வினாக்களுக்கு விடையே இல்லாமற்போகிறது. ஆதலால், இனிமேலாவதுமார்க்கந்தெரிந்தோர் மௌனஞ்சாதிக்காது விடையெழுதுவார்களென்று நினைக்கிறோம்.

ப-ர்.

◆

டில்லி மகுடாபிஷேக சந்தர்ப்பத்தில் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் செய்த நன்மைகள்.

(கல்விக்காக 50 லட்ச ரூபாய்.)

இந்தியாவில் கல்வி இலகுவாயும் விசாலமாயும் கிடைக்கும்படி செய்யும் நோக்கத்தை அனுசரித்து தக்ஷணமே 50 லட்ச ரூபாய் தனிப்பட எடுத்துவைக்கும்படி ஆக்ஞைபிட்டிருக்கிறார். இந்தத்தொகையுடன் சேரும்படி இனி வருஷாவருஷம் தாராளமாய் மேலும் தொகைகள் கொடுப்பதாகக் கவர்ன்மெண்ட் உத்தேசம்.

(கடற்படை தரைப்படை ஆள்களுக்கு அரை மாதச் சம்பளம் இனாம்.)

நான்கமிஷன்ட் ஆபீஸராயும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சேனையையும், இந்தியச் சேனையையும் சேர்ந்த ரிசர்வ் ஆள்களாயும், ராயல் இந்தியன் மாரீன்டிபார்ட்மெண்டில், அல்லது காம்ப்டண்ட் இலாக்காக்களில் மேற்கண்டவர்களின் அந்தஸ்தையொத்தவர்களாயும், உள்ளமாதம் ரூ. 50 சம்பளத்துக்குமேற்படாதவர்களுக்கெல்லாம் அந்தந்த அந்தஸ்துக்குள்ள சம்பளத்தில் அரை மாதச்சம்பளம் இனாம் கொடுக்கும்படி ஆக்ஞைபிட்டிருக்கிறார்.

மாற்றம்.

வங்காளப்பிரிவினை மாற்றப்பட்டது; டில்லிபிரதான நகரமாக்கப்பட்டது.

نظر الى ما قال و لا تنظر الى من قال *

இஸ்லாம் நேசன்.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”

தொகை-3.] 1912 பிப்ரவரி [வகை-6.

ஒற்றுமையிருந்தால் உயர்வடையலாம்.

உலகத்தில் எவரும் உயர்ந்தபதவிகளைப்பெற்று வாழவேண்டுமென்றால் ஒற்றுமையென்னும் இரத்னாபரணத்தை உறுதியோடணிந்துகொள்ளவேண்டும். இந்த ஆபரணமே எல்லாநலத்தையும்தரத்தக்கது; இதுவே அல்லாகுதஆலாவின் பேரருளைப் பெறுதற்கும் முக்கியகருவியாயிருப்பது. இதனைக் கைக்கொள்ளாதாரெல்லாரும் வறுமையுட்பட்டுமாற்றார்கையில்சிக்கி அல்லும்பகலும் பொல்லாததுக்கத்துக்கிலக்காகி அல்லலடைவார்கள். இந்த ஒற்றுமையின் உயர்வுதாழ்வைப்பற்றி உலகத்தில் சஞ்சரிக்கும் பலஜீவஜெந்துக்களிடத்திலேயே தெரிந்துகொள்ளலாம். மிகவும் அற்பபிராணிகளாகிய காகங்கள் ஒற்றுமையுடனிருப்பதனால் எல்லாப்பக்ஷியினங்களைக்காட்டிலும் இவைமிக்க செல்வாக்கடைந்துவருகின்றன; இவை இராஜாளிக்குங்கூட அஞ்சுவதில்லை. அதைக்கண்டால் எல்லாம்கூட்டமாகத்திரண்டு “கா! கா!!” என்று கதறிக்கொண்டு பயமில்லாமலும் அபாயமில்லாமலும்திரிவதோடு மற்றபக்ஷிகளுக்கும் இராஜாளிவருவதைக்காட்டிக்கொடுத்துக் காப்பாற்றிவிடுகின்றன. கூகைமுதலிய பெரியபக்ஷிகளையும் இந்தக் காகங்கள் திரண்டு அடித்துக்கொன்று விடுகின்றன. இவற்றின் இனங்களில் ஒன்றுக்கு அபாயம் நேர்ந்துவிட்டால் எல்லாக்காகங்களும்கூடி அதன்மேல்விழுந்துகதறித்துக்கிக்கின்றன. கூடியவரை அதைக்காப்பற்ற முயல்கின்றன. இந்தக்குணங்களே அவை பெருமையடைந்து எதிரிக்கு இடங்கொடாமலிருப்பதற்குக்காரணம். இன்னும் இவைபோன்ற எத்தனையோ தாழ்ந்தபிராணிகள், தங்களால்சாதிக்கமுடியாதபெருங்காரியங்களையும் ஒற்றுமையால் சாதித்துவிடுகின்றன. சமுத்திரத்தில் ஊதினால் பறந்துபோகக்கூ

டிய சிறுசிறுகூனிப்(இறால்) பொடிகள்திரண்டுமிகவும்வேகமுள்ள கப்பலைப்போகாதபடி தடுத்துவிடுகின்றன; இதை நினைக்கும்போதுதான் பெரிய ஆச்சரியமுண்டாகிறது. இவ்வளவு பெரியகாரியத்தை இவைசெய்வதற்கும் காரணம் இந்த ஒற்றுமைதான். இஃதிப்படியிருந்தும் இவ்வகை ஒற்றுமையைப்பெறாததனால் ஜீவராசிகளில் பெரிய ஜெந்துக்களும் துன்பத்தையடைகின்றன. நண்பர்களே! நாய்களைப்பாருங்கள்; இவை உருவத்தில் பெரியவைகளாயிருந்தும் இந்த ஒற்றுமையைக்கைக்கொள்ளாததனால் அடையுந் துன்பத்திற்களவில்லை. இவற்றுள் ஒவ்வொன்றும் ஒற்றுமையில்லாமல் பல்லிளித்துக்குலைத்து ஒன்றையொன்று கடித்துப்போர் புரிகின்றன; இவற்றின் கூக்குரலைக்கேட்ட ஒருவன் கல்லையெடுத்துவீசினால் இரண்டு நாய்களும்பயந்து திக்குக்கொன்றாக வாயுவேகம் மனோவேகமாய் ஓடுகின்றன. சிலசமயம் நாயடிக்கும்பறையர் தனித்துத்திரியும் சமயம்பார்த்து ஒரே அடியாகத்தலையிலடித்து இழுத்துக்கொண்டுபோய் விடுகிறார்கள். அந்தோபரிதாபம்! ஒற்றுமைக்குறைவால் இந்த நாய்கள் அடையும்கெதியை நன்றாய் யோசித்துப்பாருங்கள்; இவற்றையெல்லாம் ஆழ்ந்துயோசிக்கும்போது ஒற்றுமை ஒவ்வொருவர்க்கும் மிக அவசியமானதென்பது நன்குவிளங்கும். ஆதலால், எல்லோரும் உலகத்தில் ஒவ்வொருவிஷயத்திலும் ஒற்றுமையடைய வேண்டியது அவசியம். இந்த ஒற்றுமையில் மற்றவருப்பார் குறைந்தவர்களாயினும் நம்மவர் எப்பொழுதும் சிறந்தவர்களே. எனினும், சிற்சில காரியங்களில் அசிரத்தையாயிருந்து விடுகிறார்கள். இப்போது நடந்துவரும் துருக்கி யுத்தசம்பந்தமாய் உதவிசெய்யும் விஷயத்தில் சற்று பின்வாங்குகிறார்கள். (இங்கே உதவியென்றால் யுத்தத்திற்குப் போகவேண்டு மென்பதில்லை; துருக்கியர்க்குப்பொருளுதவிமுதலியன செய்தலேயாம்) வடதேசங்களிலுள்ள முஸ்லிம்கள் இவ்விஷயத்திற்கு ஏராளமானபொருள் சேர்த்தனுப்புவதோடு அநேகர் வாலண்டியர்களாகவும் போயிருக்கிறார்கள். அவர்செய்யும் உதவிக்குத்தென்தேசத்து முஸ்லிம்கள்செய்திருக்கும் சொற்பப்பணவுதவி எத்தனையோபங்கு குறைந்ததென்றே சொல்லவேண்டும். சில முஸ்லிம்கள் திரிப்போலியுத்தமென்றால் இன்னதென்றே தெரியாமலிருக்கிறார்கள். இது ஒற்றுமையுணர்ச்சிக்குச் சிறிது குறைவாம். பெய்ரூட்நகரத்தில் ஒருகன்னிகை தன்னிடம் பணமில்லாமல் இவ்விஷயத்திற்குக் கையிலணிந்திருந்த காப்பைக்கழற்றிக்கொடுத்திருக்கிறாள். இஃதல்லவா ஒற்றுமைக்கடையாளம்! இந்தப்பெண்ணே இவ்வளவு அபிமானமுடையவளாயிருக்கும்போது நாம் எவ்வளவு அபிமானமுடையவர்களாயிருக்கவேண்டும்? ஆதலின், தென்னாட்டு முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் இதற்குப்பணத்தாலாவது உதவிசெய்யவேண்டும். அஃதுமியலாதோர் முந்தினமீ சஞ்சிகையில் ஒருநண்பர் எழுதியிருக்கிறபடி இட்டாலியசாமான்களை விலக்கியாவது அவர்களுக்குப்பலத்தைக் குறைக்கவேண்டும்.

பஞ்சாவரலாற்று விளக்கம்.

(ஜனவரிமீ சஞ்சிகையின் றொடர்.)

மாதம் மும்மாரிபெய்ய, முப்போகம் விளையப் புலியும் பசுவும் பகையின்றி யோர்துறையில் நின்று நீருண்ணக், கிளியும் பருந்துங் கிஞ்சித்து மஞ்சாமல் ஓர் பஞ்சரத்தி லடைய, வருணாச்சிரம தருமம் வழுவாது, தெய்வபக்தி குன்றாது மனுநீதி குறையாது முறைபோற் செங்கோல் செலுத்தி யரசாண்டு வருபவரும், யுத்தகளத்தில் எதிர்த்த வீரர்களைக் கொத்திப் பிளந்து சிதற அடிக்கின்ற வேல், வாள்முதலிய ஆயுதங்களேந்தியவரும், ஒரு துஷ்டமிருகத்தாலே தானீன்ற கன்றுக்கபாயம் நேரிடக்கண்ட பசுவானது தன்னுயிர்க்கபாயம் வருவதைக் கவனிக்காமல் அம்மிருகத்தின்மேல் பாய்ந்துவிழுந்து தன்கன்றை எவ்விதம் பாதுகாக்குமோ அவ்விதம் தமதூர்ப்பிரஜைகளைப் பாதுகாக்கும் கிருபானுகூலத்தையுடையவருமாகிய நவாபுசாகிபவர்களுக்குத் தங்களூரில் வசிக்கும் ஏழைபடியார்களெழுதிக்கொள்ளும் விண்ணப்பமாவது யாதெனில்:

“எங்கள்கோயிலில் நாங்கள் வணக்கத்திற்கு முன்னிலையாக வைத்திருந்த தெய்வமான (குதாபக்தென்கிற) விக்கிரகத்தை யாரோ திருடிக்கொண்டுபோய்விட்டார்கள். அதனை நாங்கள் மூன்றுநாள்மட்டுந் தேடாவிடங்களெல்லாந் தேடியுந்தென்படவில்லை; ஆனால், இப்போது நமதூரிற்புதிதாக ஓர் கூட்டவியாபாரிகள் வந்தூருக்குப்புறத்தே கூடாரமடித்திறங்கியிருந்து ஊருக்குள்ளே வந்துவியாபாரங்களை விற்றுக்கொண்டுபோக்குவரத்துச்செய்கிறார்கள்; அவர்கள்பேரில்எங்களுக்குச்சந்தேகந்தோற்றுகிறது; ஆகையா

ல்; அவர்களைத்தாங்கள் சோதனைசெய்துஎங்கள் தேவிருந்தால்வாங்கித்தரும்படியாகக்கேட்டுக்கொள்ளுகிறோம்" என்பதே. இவ்வாறு எழுதிய விண்ணப்பத்தைமுறைபோல் மடித்து முத்தரித்து நவாபுசாகிபவர்கள் சமுகத்திற்கனுப்பினார்கள். அதனைநவாபுசாகிபு வாங்கி முத்திரையையுடைத்து விண்ணப்பவாசகத்தைப் படித்துப் பார்த்துக் கோபங்கொண்டதோடு கொஞ்சம் புன்சிரிப்புங்கொண்டு அந்தப்புதிய வியாபாரிகளை நாம்போய்ச்சோதனை யிடவேண்டுமென்று எண்ணமுற்றுக் கொத்தவாலை மெத்தவிரைவாக அழைத்து அவரிடத்தில் ரீ ராணுவத்துடனேபோய் நமதூருக்கு வெளியே புதிதாக வந்து கூடாரமடித்து இறங்கியிருக்கும் வியாபாரிகளைப் பிரயாணப்பட்டுப்போகாமல் தடைசெய்துவை; நாளைக்காலையில் நான் அவ்விடத்திற்கு வருவேனென்று தாக்கீதுசெய்தனுப்பினார். இவ்விதம், நவாபுசாகிபு செய்த தாக்கீதின் பிரகாரம் கொத்தவால் ஒருகூட்ட இராணுவங்களைத் திரட்டிக்கொண்டு ரூமிகள் கூடாரமடித்திருக்கிற எல்லையிற் சென்று இராணுவத்தை நான்காகப்பிரித்துத் தெற்கு வடக்குக்கிழக்கு மேற்கென்னும் நான்குதிக்கிலும்காவல்வைத்துத்தாமும் கண்ணுங்கருத்தும் அந்த ரூமிகளின்பேரில் வைத்தவராகஇருந்தார். இதுநிற்க.

இவ்விதம், அங்கே வீரமாக இராணுவங்கள் வந்த ஆரபாரச்சந்தடியினால் நித்திரைக்குச் சயனித்திருந்த ரூமிகள் திடுக்கென்று கண்கள் விழித்தெழுந்து நெஞ்சயர்ந்து குடற்கலங்கிச் சொப்பனத்தில் சிங்கத்தைக்கண்ட யானைபோலே கைகால்கள் வெடவெடத்துக் "கொல்லைக்காட்டுநரிபல்லைக்காட்டுவதுபோல்" கொத்தவாலையடுத்து அவரோடு நீரேன் இராணுவங்களைக்கொண்டுவந்து இங்கே காவற்போட்டிருக்கிறீரென்று கேட்டார்கள். அதற்கு, அவரிவர்களைப்பார்த்து நீங்கள் இந்துக்களின் கடவுளாகிய (குதாபக்கைத்திருடிக்கொண்டு வந்திருக்கிறதாக அவர்கள் இவ்வூராரும் நவாபுசாகிபுக்கு அர்ஜி யெழுதிக்கொடுத்ததின்பேரில் நவாபுசாகிபு என்னையனுப்பி உங்களைக்காவல் செய்யும்படிக்கும், தாம் நாளைக்காலையில் வந்து உங்களைச்சோதனை யிடுவதாகவும் சொல்லி ஆக்கியாபித்திருக்கிறாரென்று சொன்னார்.

அதுகேட்டு, ரூமிகள் காலைச்சுற்றிய பாம்பு கடியாமற்போகாதென்றும், பூனைபிடித்த எலியழுதாலும் அப்பூனைவிடாதென்றும் வழங்கும் பழமொழியை நினைந்து பலவாறு சஞ்சலப்பட்டுச் சிறிது யோசித்து, நவாபுசாகிபுவந்து நம்மைப்பரிசோதிக்கும்போது நம்மிடத்தில் அவ்விக்கிரகம் இருந்தால்தானே நாம்கைதியாவோம்; நாம் நமது பங்குகளை அயலாருக்குத்தெரியாமல் பூமியில்மறைவுசெய்து போட்டோமே; ஆனதால் நமக்குச்சஞ்சலம் வருகிறதற்குக்காரணமில்லை என்று தங்கள்மனங்களைத் தயிரியப்படுத்திக்கொண்டார்கள். இவ்விதம், இவர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கூடாரத்திலிருந்த நொண்டியானவன்காதிற்கேட்டுத்திடுக்கிட்டுப்பதறியெழுந்து நொண்டிநொண்டித் தன் கூட்டத்தார்களான மற்றப்பதினைந்துபேர்கள் இருக்குமிடத்தில் வந்து நின்று அவர்களைப்பார்த்துக் குளறுவார்த்தையாகத் தெற்றித்தெற்றி நீங்கள் என்பங்குக்குக்கொடுத்த விக்கிரகக்கையை நான் புதைக்கமறந்துவிட்டு அதனை என் படுக்கைப்பாயில் வைத்துச்சுருட்டியிருக்கிறேனே, நவாபுசாகிபுவந்து சோதனைசெய்தால், அஃதகப்பட்டுக்கொள்ளாமல் தக்கபடி தந்திரயுத்தி செய்யவேண்டுமேயென்று சொன்னான்.

அதுகேட்டவர்களெல்லாம் தங்களின் சந்துஷ்டியான உடைகலைந்து சஞ்சலக்கடலில் மூழ்கினவர்களாய் நொண்டியைப்பார்த்து (உள்ளதையுங்கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்) என்னும் பழமொழிபோலே அடா! நீ எங்களை அவமரியாதையில் இழுத்துவிட்டாயே என்று பலவாறு தூஷணித்துப் பெரிதாகப்பேசித் திட்டி இதற்கென்ன செய்வோமென்று எல்லோர்களும் ஒரேகவனமாக இருந்தார்கள். அப்போது, அவர்களில் நின்றும் வயதால் முதிர்ந்தவரும், உயுத்தி புத்தியிற் சிறந்தவருமான ஒருவரெழுந்து நின்று மற்றவர்களுடைய சஞ்சலமாறப் போற்றிப்பேசித் தயிரியப்படுத்தி அவர்களைப் பார்த்து, ஜனங்களே! நமது முன்னோர்கள் உயிர்விடுவதற்கு அஞ்சாதநெஞ்சுடைய அதிசூரர்களாயிருந்தார்களென்பதை நீங்கள் கேள்விப்படவில்லையோ; புலிபூனையானதுபோலே என் அதைரியத்துடன் அயரப்படுகிறீர்களென்றும் இதற்கு நானோர்தந்திரம் சொல்கிறேனென்றும்சொல்லத் தொடங்கினார். அதாவது:

இன்னும்வரும்.

எம். எஸ்.

வினா.

மகா கனம் இஸ்லாம்நேசன் பத்திராதிபரவர்கட்கு,
அஸ்ஸலாமு அலைக்கும்.

இதன் கீழ்க்காணும் வினாக்களை நமது அருமைநேசனில் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. காபிரீன்களிடத்தில் தொகைவசூலித்துத் தொழுவதற்காகப்பள்ளிகட்டல் ஆகுமா?

2. முஸ்லிம்களின் குமர்களைநிகாகுசெய்து கொடுக்கவும் முஸ்லிம்களின் மையத்துகளை அடக்கஞ்செய்யவும் காபிரீன்களிடத்தில் தொகைவசூலிக்கலாமா?

3. ஒக்புசொத்தின் வருமானங்களைக்கொண்டு நாயகத்தின் மவுலூது முதலியசெலவுகளையும் நோம்பாளிகளுக்கு நோம்புதிறக்கவும் முன்னேரம் பின்னேரங்களுக்கு ஒஜிபனம் கொடுக்கவுமாகியசெலவுகளையும் செய்யலாமா?

4. ஒக்புசொத்தின் பொருளைக்கொண்டு வீண்விளையாட்டு தமாஷாக்களுக்குச் செலவுசெய்யலாமா?

5. ஒக்புசொத்தின் பொருளைத் தற்காலம் நடக்கும் துருக்கி இத்தாலியுத்த விஷயசகாய நிதியாகத் துருக்கிக்கு அனுப்பலாமா?

6. ஒக்புசொத்து அளவுக்குமிஞ்சிச்சேருகிறதை நமது வேத சட்டப்படி எந்தவிதச் செலவுசெய்வது கடமையாகும்?

7. ஒக்புசொத்தைத் தின்னுவதற்குக்கடமைப்பட்டவர்கள் உண்டா? உண்டென்றால் அவர் எத்தன்மையுடையவர்கள்? இல்லையென்றால் தின்பவர்களுக்கு ஹுக்மென்ன?

8. ஹறாமானசொத்தை ஒக்பு செய்யலாகுமா?

9. தொழுதுவந்த பள்ளிவாசலை இடித்துவெறுந்தரையாகப் போட்டுவிட்டு வேறோரிடத்தில் பள்ளிவாசல் கட்டிக்கொள்ளலாகுமா?

10. ஹறாமானபொருளைச்சதக்காகொடுத்தால் அதின் தவாபு கொடுத்தவனுக்குக் கிடைக்குமா?

மேல்கண்ட 10 வினாக்களுக்கும் கற்றறிந்தஉலமாக்கள் பொதுநல உபகாரத்தை நாடித்தக்க ஆதாரத்துடன் விடைகொடுப்பதை எதிர்நோக்கி இருக்கிறேன்.

இங்ஙனம்,
ஏ. எஸ். ஏ. சாகிபு.
தென் இந்தியாவாசி.

"குலாம்காதிறு நாவலர்"

(ஜனவரி மாசத்துச் சஞ்சிகையின்றொடர்.)

(அதிகாரம் 4.)

"பெண்கல்வி"

பெண்களும் கல்விகற்கவேண்டுமென்ற கருத்துள்ள எம்மவருள் நம் குலாம்காதிறு நாவலரே முதன்மையானவர். பெண்கல்வி விஷயத்தில் இந்தியா, மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருந்தாலும், வட இந்தியாவைப்பார்க்கிலும் தென்னிந்தியா, பெண்கல்வி விஷயத்தில் அதிகம் தாழ்ந்திருக்கிறதென்றும், அதிலும் முஸ்லிம் வகுப்பினர் அவ்விஷயத்தில் மிகுதியும் பின்வாங்கியிருப்பதாகவும் நாவலர் அடிக்கடி சொல்லிவருவார். ஒருமுறை திருமலைராஜன்பட்டணத்திலே ஒருமுஸ்லிம் கனவானுடைய வீட்டில் நடந்த சிறப்பான விருந்தின்போது அங்கே கூடியிருந்த அவ்வூர் ஜனங்களும் காரைக்கால் முஸ்லிம்களிற் பலரும், மற்றும் வெளியூர் முஸ்லிம் கனவான்களும் நம் நாவலரிடம் முஸ்லிம் பெண்கல்வி விஷயமான உபந்நியாசத்தைக்கேட்கும் கௌரவத்தைப்பெற்றார்கள். நாவலர், அங்கிருந்த எல்லா முஸ்லிம்களையும் பெண்கல்வி விஷயமாய்த் தம்முடைய அபிப்பிராயத்துக்கு ஒருவாறு இணங்கி நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவர், அப்போது, கனம் முஹியத்தீன்பக்கீர் ஆலிம் சாஹிபு அவர்கள் கேட்டுக்கொண்டபடி பெண்கல்வியைப்பற்றிச் சொன்ன உபந்நியாசத்தின் சுருக்கமாவது:—

"சகோதரர்களே! இவ்வுலகம், ஸ்திரீ புருஷரோடு நிறைந்திருக்கின்றது. ஒவ்வொரு புருஷனுக்கும் அவனுக்கேற்ற ஸ்திரீவேண்டும். அவ்விதமே ஒவ்வொரு ஸ்திரீக்கும், அவளுக்கேற்ற புருஷன்வேண்டும். இவ்வாறு அமைந்தால்மாத்திரமே ஸ்திரீகளும், புருஷர்களும் குடும்பசுகத்தைச் சமமாய் அடையக்கூடியவர்களாயிரு

ப்பார்கள். அங்ஙனமின்றி இருவரிலொருவர் அறிவில்லாதவராயிருப்பினும், அல்லது இருவரும் விவேகசூனியராயிருப்பினும் அவர்களால் அடையப்படுவது குடும்பத்தொல்லையென்றே சொல்லப்படும். கஷ்ட நஷ்டங்களைச் சகித்துப்போவதற்கும், எவ்வித காலத்தும் தருணத்திற்கேற்றபடி நடந்து, வாழ்நாளை வில்லங்கமின்றிக் கழிக்கவும் ஆண்களும் பெண்களும் அறிவைத் தேடிக்கொள்ளவேண்டும். ஒருவன் கற்றநூலளவே அவனுடைய நுண்ணறிவு அமைகிறதென்பது, யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயம். 'மனிதவகுப்பு' என்றால், மனிதருள் ஆண்களாயுள்ளவர்களென்று அருத்தமாகாது. ஸ்திரீகளையும் புருஷர்களையுஞ்சேர்த்தே மனிதவகுப்பென்று சொல்லப்படுகின்றது. "விலங்கினம்" என்னும் வார்த்தை, மிருகங்களின் பொதுவைக் குறிப்பிடுவதுபோலவே மனிதர் என்னும் வார்த்தை, ஆண்பெண் இருபாலாரையும் குறிப்பிடுகின்றது. இதற்கு நமது வேதபாஷையில் "இன்ஸான்" என்று சொல்லப்படுகிறது. "இன்ஸான்" என்னும் மனிதவகுப்பே, அறிவை ஏற்றதாய்ப் படைக்கப்பெற்றிருக்கின்றது.' இவ்வறிவு, உலகத்தின் பலவிதமறைவுகளால் மழுங்கிச் சேற்றில்புதைந்த இரத்தினம்போல் இருக்கின்றது. அதனைத்துலக்கிப் பயன்படுத்துவதே, எல்லாம்வல்ல அல்லாகுதஆலாவின் கட்டளை. அதைப்பிரகாசிக்கச் செய்வதால் கிருபையுள்ள கடவுளை நாம் நெருங்கலாம். அதைக் குறைத்து வருவதால் ஆண்டவனுக்கு நாம் அதிக தூரப்பட்டவர்களாவோம். இந்த ஒருவிஷயத்திலேதான் நாம் யாவரும் மிகுந்த ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டும். மனிதருள் அறிவு பிரகாசிப்பதற்கு நாம் எவ்வளவு முயற்சி யெடுக்கின்றோமோ அவ்வளவுக்கு நாம் கடவுளின் கிருபையைப்பெறுகின்றோம். அறிவின் பிரயோசனம், சன்மார்க்கமும் கடவுள் வணக்கமுமாம். இவ்வித அறிவு, நேரான கல்விப்பயிற்சியால் விருத்தியடைகின்றது. நமது முன்னோர்களான பெரியோர்கள், அறிவின்பயனை யடைந்தவர்கள்; நாமும் அந்த அறிவின் பயனை யடையவேண்டுமென்பது அவர்களின்மேலான விருப்பம். அவர்களின் சரித்திரங்களால் நமக்கு அவர்கள், மேற்சொன்ன விஷயத்தை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். சரீரசுகமும், பலமும் அமையப்பெற்றவனுக்கு ஔஷதப்பிரயோகமும் பத்தியமும் தேவையில்லை. தேகசுகம் அற்றவனுக்கு அவை, அவசியம்வேண்டும். அவ்வாறே அறிவை விருத்திசெய்துகொள்வேண்டிய நமக்குக் கல்வி, மிக்க அவசியமாயிருக்கின்றது. மேலும் மனிதர், சிறுபிராயத்தில் எவ்வித பழக்கங்களையடைகிறார்களோ அவற்றையே அவர்களின் வாழ்நாள்முழுதும் ஏறக்குறைய அநுசரித்து வருகிறார்கள். நம்சிறுவர்க்கு ஆரம்பத்திலேயே மார்க்கக்கல்வியைக் கற்பிக்கவேண்டுமென்னும் ஒரு கண்டிப்பானதிட்டம் ஏற்பட்டிருக்கின்றது. சிறுவரை ஆரம்பத்திலேயே மார்க்கக்கல்வியோதச் செய்வதால், அவர்களின் பிற்கால நடைக்கு ஒழுங்கானபாதை யேற்படுத்துவது போலிருக்கிறது. ஆதலின் இவ்விஷயத்தில் நாம் மெத்தவும் விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும்.

இவ்விஷயத்திலே ஒரு குறைவு மாத்திரம் நம்மில் உண்டு. அதற்காக நான் மிகுதியும் விசனப்படுகிறேன். மார்க்கக்கல்வியை வேதபாஷையில் கற்கும் சிறுவர்கள், அதன் முழுப்பயனையும் அடைவதற்குத்தக்க பாஷாஞானம் பெற்றிருக்கவில்லை. இப்போது நாம் அதைப்பற்றி விசனமடைவதிலும் பயனில்லை. நமது மதக்கிரந்தங்கள், கொஞ்சங்கொஞ்சமாய்த் தமிழ்ப்பாஷையில் வெளிப்பட்டுவருகின்றன வென்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவ்வாறே அரபுத்தமிழிலும் கிரந்தங்கள் ஏற்பட்டுவருகின்றன. இவையெல்லாம், நம்மவர்களின் பிற்காலமேன்மைக்கு அறிகுறியாயிருக்கும். பிற்காலம் மேன்மைக்கு வரவேண்டிய மனிதரே, தற்காலம் சிறுவர்களாயிருக்கிறார்கள். இவர்களை மேன்மைக்கு உரித்தானவர்களாய்ச் செய்யவேண்டியது நம்முடைய கடமை. சிலபாகங்களில் நம்மவருள் பெரும்பாலார் தவறான அபிப்பிராயங்கொள்கின்றனர். அவர்கள் ஒருதலைப்பக்ஷமாய்ப் புருஷர்களை கற்றறிவாளராயிருக்கவேண்டுமென்றும், ஸ்திரீகள் இவ்வாறு இருக்கவேண்டியதில்லையென்றும் கருதுகின்றனர். அவர்களின் கருத்துப்படி பார்த்தாலும், புருஷரின் கல்வியபிவிருத்திக்கும் சன்மார்க்கப்பயிற்சிக்கும் ஸ்திரீகள் ஆரம்பகாரணமாயிருப்பதால் ஸ்திரீகள் அவ்விஷயத்தில் புருஷர்களுக்கு இடையூறுபுரியாதபடி செய்துகொள்வது அவசியமாகின்றது. எந்தச்சிறுவரும்பிறந்தது முதல்அதிபாலியபருவத்தில் சற்றேறக்குறையப் பாதிப்பாகத்தை, தாய்மாரின் மடியிலிருந்தே போக்கவேண்டியவராயிருக்கின்றனர். அவர்களின் விவகாரங்களையும், அறிவையும், வளர்ச்சியையும் ஏற்படுத்திவருவது தாய்மார்களின் மடியேயாகும். அவ்விதமடி

யில் அவிவேகமும், இருளும் நிறைந்திருந்தால் சிறுவர்களின் வருங்கால நிலைமை என்னாகும்?!

இவ்விஷத்திலே நாம் நன்றாய் ஆலோசிக்கவேண்டும். நற்குணமும் அறிவும்வாய்ந்த அன்னையின் மடியில்வளரும் சிறுவர்கள் இலகுவாய் மேன்மைபடைவார்கள். நற்குணமும் அறிவுமுள்ள மனைவியைப்பெற்ற மனிதன் இடையூறின்றிச் சுகமடைகிறான். அவ்விதஸ்திரீகளின் பாதுகாப்பிலுள்ள சிறுவர்களும், சிறுமிகளும் நற்குணநற்செய்கைகளால் விளங்குவார்கள். விவேகமுள்ள ஸ்திரீகள் இல்லாதவிடத்து, அதாவது உலகத்தில்ஸ்திரீகள்யாவரும்பேதைகளாயிருந்தால், மனிதர்உலகசுகத்தில்பாதிப்பாகத்தைத் தானும் அடையமாட்டார். அதுமாத்திரமன்று, மனிதரின் அறிவுவிருத்தியாவதற்கும் பெருந்தடையேற்பட்டுவிடும். நான் இவ்விதம் சொல்வதால் நமதுபெண்கள், ஐரோப்பியபாஷைகளில் உயர்தரப் பரீக்ஷை கொடுக்கவேண்டுமென்று அபிப்பிராயங் கொண்டிருப்பதாக நீங்கள் எண்ணிவிடக்கூடாது. குடும்பவியவகாரங்களைத் தங்களுடைய பொறுப்புக்குத்தக்க அளவில் ஒழுங்காய் நடத்திவருவதற்கும், சன்மார்க்கம் கடவுள்வணக்கம் இவற்றில் அதிகப்பற்றுதலாயிருப்பதற்கும் ஏற்றகல்வி, எவ்வளவோ அவ்வளவுகல்வி நம்பெண்களுக்கிருந்தால்போதும். இவ்வித நோக்கத்தையுத்தேசித்து எவ்விதகல்வி நமதுபெண்களுக்கு வேண்டுமோ அதைநாம் அநுசரிக்கவேண்டும்.

இந்தியாவின் சிலபாகங்களில் இங்கிலீஷ்கவர்ன்மெண்டார். முஸ்லிம் பெண்பாடசாலைகளை நம்மவரின் சம்மதங்கொண்டு ஏற்படுத்தியிருக்கின்றனர். சேலம் ஜில்லா ஆத்தூரில் இவ்விதகல்விச்சாலையொன்று இருப்பதாயும், அது, நான்சொன்ன நோக்கத்துக்கு ஒத்திருப்பதாயும், அங்கே மார்க்கக்கல்வியும், தமிழ்ப்பாஷையும், கணிதமும், தையலும், சுவல்பஆங்கிலமும் பெண்களுக்குக்கற்பிக்கப்படுகின்றனவென்றும் கேள்விப்படுகிறேன். நாம் இவ்வித ஏற்பாட்டை இப்போதே செய்துவிடக்கூடிய நிலைமையில் இல்லை. நமக்கு இவ்விஷயத்தில் காரணமற்ற பலதடைகள் உண்டு. அவற்றை இயன்றவரையில் மிதித்து, நாம்மேலேறவேண்டும். இதற்குப்போதுமான காலமும் விடாமுயற்சியும் வேண்டும். இவ்விரண்டும் ஒத்துப்போம்போது நம்முடையநோக்கம் நிறைவேறும். ஆதலின், நாம் நமதுபெண்களுக்குக்கல்விவேண்டுமென்னும் விருப்பத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, அதற்கு இடையூறாயுள்ள தடைகளை ஒவ்வொன்றாகக் களைந்துவரல்வேண்டும். இவ்வாறு நாம் முயற்சிசெய்து வருவோமாயின் ஒருகாலத்தில் நம்முடைய அபிப்பிராயத்தை யாவரும் ஏற்றுக்கொள்வர். அப்போது இக்காரியம் எளிதில் நிறைவேறும். இவ்விஷயத்தில் இவ்வளவு கஷ்டமிருப்பதை யெண்ணி நாம் இதனை அலக்ஷியமாய் விட்டுவிடக்கூடாது. எந்த நல்விஷயத்திற்கும் இவ்விதமான கஷ்டங்களுண்டு. அறிவாளிகள், அந்தக் கஷ்டநஷ்டங்களை லக்ஷியஞ் செய்வதில்லை. இப்போது இந்தவிஷயத்தில் நீங்கள்யாவரும் என்னுடைய அபிப்பிராயத்துக்கு விரோதப்படமாட்டீர்களென்றும், அதையே ஒருவாறு பின்பற்றுவீர்களென்றும் நம்புகிறேன்" என்பதே.

ஹிந்துக்களே நிறைந்துள்ள ஜனஸமூகங்களிலும் பெண்கல்வியைக்குறித்து நமது நாவலர் உபந்நியாஸங்கள் செய்திருக்கின்றனர். எப்போதும் அவருடைய உபந்நியாசங்கள் பயன்படத்தக்கவைகளாயிருந்தன.

(தொடரும்)
உ. செ. மு.

இரங்கற்பதிகம்.

(ஸ்ரீலஸ்ரீ. வா. குலாம்காதிறு நாவலரவர்கள்மீது
அவர்களின் மித்திரராகிய வித்துவான்
நாகூர், மு. செவத்தமரைக்காயரவர்கள் இயற்றியது.)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பேர்பூத்த ஞானகலை முதலவெல்லாம்
பிறங்கியோ ருருவெடுத்துப் பிறந்தன்மான
நீர்பூத்த நிலவலயத் தவதரித்து
நெடியபுகழ்ப் படாம்போர்த்து நெறிசேர்மும்மைச்
சீர்பூத்த திராவிடத்து ளொப்பிகந்த
சிரேஷ்டபண் டிதனாகிச் சிறந்துகூடல்
வார்பூத்த சங்கத்து வித்துவானும்
வயங்குகுலாம் காதிறுநா வலவன்மாதோ. (௧)

ஏய்ந்தஹிஜ் றத்தாயி ரத்துமுந்நூற்
றிருபத்தைந் தாண்டுதுல்ஹஜ் ஜென்னுமாசத்
தாய்ந்தவொரு பதினெட்டாந் தேதியான
வதிகாலை வியாழனன்றில் வகிலமேங்கத்
தோய்ந்தபுகழ்ப் பரம்பொருண்மாட் டோர்மைபூண்டு
தூய்தாக்குஞ் சொலைச்சொல்லிச் சோதிபூப்ப
வாய்ந்தமுக மண்டலமி லங்கச்சென்றான்
மாண்டகுலாம் காதிறுநா வலவனன்றே. (உ)

இவ்வித்த கப்புலவன் கற்றுத் தேரா
விலக்கணமு மிலக்கியமிங் குண்டோவென்ன
அவ்வியநீங் கறிஞரெலாம் வியக்கப்பெற்ற
வரும்பெரிய பெயரெடுத்த வமலஞானி
செவ்வியசொல் வன்மையிலே யீடிதீர்ந்த
சிகாமணிப்ர சங்கத்திற் றெருண்டவாக்கு
திவ்யநா கூர்ப்புரந்த வொலிகள்கோமான்
திருத்தருகா மஹாவித்வச் சிர்த்தியோனே. (௩)

பற்பல புராணங்கள் பிரபந்தங்கள்
பகர்வசன நூல்கண்மிறைக் கவிகளெல்லா
நற்பலனெம் போல்வாருண் ணயந்துகொள்ள
நவரச வலங்கார நயப்பச்செய்து
கற்பகா லம்வரையிற் பரிமளிக்கக்
கடலுடுத்த ஞாலமிசைக் கதிப்பவைத்தான்
பொற்பமைந்த சுகுணகுலாம் காதிறென்னும்
புகழுடம்பெ டுத்தொளிர்நா வலர்பிரானே. (௪)

சிறுபருவத் தித்துணையாங் கல்விகற்றோர்
சிலரென்றே யீழநாட் டான்றோரன்றிப்
பெறுவளமைச் சோழநாட் டறிஞரெல்லாம்
பெருமையொடு சொலப்பெற்றோன் றொல்லைநூல்கள்
உறுநோக்கம் பெறவிடத்து முற்றூற்போல
வுய்த்துணரும் வலமையுனக் கிருத்தல்போல
மறுபெயர்பால் யான்காணே னுண்மைநாகூர்
மறுவில்குலாம் காதிறுநா வலச்சிங்கேறே.

குவைகுவையாக் காணவந்து குழுமுவோர்பாற்
கோடாமற் காட்டுகுளிர் முகமுங்கண்ணும்
அவைபகந்து வீற்றிருந்து பிரசங்கங்கள்
அருளிச்செய் திருவாயு மரிய நூல்கள்
சுவையொழுகத் தீட்டியகைத் தலமுமன்பர்
சுகிர்தமுறச் சூழ்ந்திருக்கு மிருக்கையுநான்
நவையகலக் காண்பதினி யென்றோசொல்லாய்!
நண்பகுலாம் காதிறுநா வலப்பெம்மானே. (௬)

முன்னாளிற் பலபுலவ ரிருந்தாரென்ற
மொழியன்றி முன்னெதிரே கண்டதின்றால்
இந்நாளி லுனைக்கண்டு நுகர்ந்தவின்பக்
கெல்லையில்லை யெனினிதன்சீ ரியம்பலாமோ!
சின்னாளி லிவ்வளவு மகிமைவாய்ந்து
திதிபெறநா னாவிதநூற் றிரள்செய்தேற்றி
எந்நாளு மழியாத வீடவாவி
யேகினையோ நாவலனென் றிலகுவோயே. (௭)

பிள்ளையில்லை யென்றகுறை பெயரச்சீரான்
பிள்ளையொன்று பெற்றனையப் பிள்ளையாலே
கொள்ளைமகிழ் கூர்ந்தனையன் னதன்செவ்வாயாற்
குதலைமொழிகேட்டின்பங் கூர்ந்தாயில்லை
வெள்ளையறி வுடையோரா னுமன்னார்
விருப்பநிறை வுறச்செய்யும் விழுமியோயே
சள்ளையற்ற மனத்துகுலாம் காதிறென்னுஞ்
சகலகலா வித்வஜன சேகரன்னே. (௮)

பொய்யாமொ ழிப்புலவர் நன்னட்பொன்றைப்
பொறுத்தமட்டிற்புகன்றவுரைக் கிலக்காய்நின்றாய்
மையாரும் பொழின்மதுரைச் சங்கமேற்று
மதிக்கவொராற் றுப்படைசெய்தருளினாயால்
மெய்யான நூற்றுறையுட் பழகிநின்ற
விற்பனனே யருங்கலைவி னோதவாழ்வே
ஐயாவென் றேத்துநிற்குந் தகுதிமேய
வண்ணல்குலாம் காதிறுவே யறிஞர்கண்ணே. (௯)

மருத்துவநூற் புலமையில்வல் லுணராய்நின்ற
வாப்பென்பா ரூணசைதீர்த் துளூற்றிப்பெற்ற
திருத்துவநற் றவமைந்த ஞுகியெட்டுத்
திசைமுழுது மொளிபரப்புந் திவாகரன்போற்
பொருத்துவமை யற்றபெருஞ் சுட்டுப்பெற்றுப்
புலவரெலாஞ் சிந்திக்கத் தித்திக்கின்ற
குருத்துவஞ்சார்ந் துயர்நறிய தீங்கரும்பே
குலாம்காதி றென்றமுத்த மிழ்க்கொண்மூவே. (௧0)

(து ஆ.)

இரத்தல்.

ஆலமெல்லாந் தனதாணைக் குட்படுத்தி
யமைந்தவுயிர் கட்கிரண மளித்துக்காக்குந்
சாலவொரு மெய்ப்பொருளாய்த் தயங்குசர்வ
தயாபரகா ருண்யவல்ல தனிமையோனே
சிலகுலாம் காதிறுநா வலவ னென்றுந்
தெரிந்துதெரி யாமலுஞ்செய் பிழைகண்முற்றும்
ஏலவருள் கூர்ந்துபொறுத் தழியாவுன்றன்
இன்பவிகா வின்னிழலி லிருத்துவாயே.

உ. சே. மு.

பாம்பனில் மதரஸா.

பாம்பன் முஸ்லிம் சங்க காரியதரிசியாகிய கனம். சி., மீ. மு. முகமது அப்துறகுமான் மரைக்காயரவர்கள், தங்கள் சொந்தச் செலவின்பேரில் மதரஸா வொன்றையேற்படுத்தி மிக்க சிரத்தையோடு நடத்திவருவதாகவும், இதற்கு, அவ்வூரிலுள்ள கனம். முகம்மது மீராசாயபு மரைக்காயரவர்கள் மாதந்தோறும் ரூ 5--0--0 கொடுத்து உதவிசெய்துவருவதாகவும், இவ்விருவருடைய நன்முயற்சியாலும் மேற்படி மதரஸா, மிகவும் ஒழுங்கோடு நடைபெற்று வருகிறதென்றும், இவர்களுடைய ஊக்கத்தால் இது,நாளடைவில உன்னத நிலைமைக்கு வரக்கூடுமென்றும்கேள்விப்பட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இத்தகைய புண்ணிய சீலர்களன்றோ நம் மதத்துக்குப்பாடுபடுவோர்; ஒவ்வோரிடங்களிலும் இவர்களைப்போன்ற முஸ்லிம்நேயர்கள் ஏற்படுவார்களாயின் நமதுமார்க்கம் அடையும் சீரும் சிறப்பும் அளவின்றாம். இவர்களுள் சி. மீ. மு. முகமது அப்துறகுமான் மரைக்காயர் என்னும் கனவானவர்கள் நமது இஸ்லாம் நேசன் பத்திரிகையையும்தருவித்து ஆதரித்துவருகின்றார்கள். கீழக்கரை முதலியவிடங்களில் அநேகம் முஸ்லிம் நண்பர்கள் பத்திரிகைவேண்டாமென்று திருப்பிவிட்டிருந்துங்கூட, இவர்கள்மாத்திரம் மிக்க அன்போடு நேசனை ஆதரித்துவரும்செய்கை ஒன்றே இவர்களுடைய பரோபகாரச் சிந்தையையும், மார்க்காபிமானத்தையும், கல்விவிருப்பத்தையும், பெருந்தன்மையையும் நன்குவிளக்குகின்றது. இன்னும் இவர்கள் நமது நேசன் விஷயத்தில் அதிக கவனஞ்செலுத்திக் கூடியவரைசந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து ஆதரிப்பார்களென்று நினைக்கிறோம். ப—ர்.

புத்தகவரவு.

பாஸிமார்க்ககண்டனம்.

கொழும்பு கனம் இஸ்மாயிலெவ்வை மரைக்கார் ஹாஜியார் முகம்மதுயூசுபுஅவர்களாலியற்றப்பட்ட“பாஸிமார்க்ககண்டனம்” என்னும் ஓர் அருமையானபுத்தகம் கொழும்பிலிருக்கும் கனம். செ, ம. சுலைமாலெவ்வையவர்களால் அனுப்பப்பட்டு நமக்குக்கிடைத்துள்ளது. அது உயர்ந்த கடிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருப்பதோடு முஸ்லீம்கள் ஒவ்வொருவரும் வாசித்துணரக்கூடியதாயுமிருக்கிறது. ஆதலின், அதைப்பற்றி அபிப்பிராயம் எழுதுவதைக்காட்டிலும் அதனையே நேசனில் கொஞ்சம் கொஞ்சமாகப்பிரசுரித்து வருவதுயேலென்று நினைத்து இதுமுதல் பிரசுரித்து வரத்தொடங்கியிருக்கிறோம். இப்பத்திரிகையில் மற்றொரு பக்கத்தில் அதனைப் பிரசுரித்திருக்கிறோம். நண்பர்கள் வாசித்துணர்வார்களாக.

“1--அருமந்தபொருள் விளக்கம்”

“2--கீமியா உரையறியாப் பாமரரைப்பதபடுத்தல்”

இவ்விரண்டு புத்தகங்களையும் தோப்புத்துறை செய்கு அலாவுத்தீன் சாயபு அவர்கள் அனுப்பி,நமது நேசனில் பிரசுரித்துவரும்படி மிகவும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்புத்தகங்கள்

வாசிக்கும் முஸ்லீம்களுக்கு ஒருவகை உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியவைகளாயிருப்பதினாலும், அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றவேண்டியது அவசியமாதலாலும் அவற்றையும் நேசனில் சிறிதுசிறிதாகப் பிரசுரிக்கத்தொடங்கியிருக்கின்றோம். இம்மாதப் பத்திரிகையிலும் வெவ்வேறு பக்கங்களிற் அவை பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் நேயர்கள் வாசித்துமகிழ்க.

ப. ர.

பாஸிமார்க்ககண்டனம்.

அல்லாவென்னும் பரிசுத்த திருநாமத்தைக்கொண்டு நான் எனதுகுற்றங்கள் மன்னிக்கப்படுவதை ஆதாரவுவைத்தவனாக இந்த "பாஸிமார்க்க கண்டனம்" என்னும் புத்தகத்தை எழுத ஆரம்பிக்கின்றேன். உண்டாக்கல், அழித்தல், காத்தல் ஆகிய இம்முத்தொழிலையு மெப்பொழுதுந் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்ட வல்லநாயனாகிய அல்லாஹூத்தஆலாவினிடத்தில்நானிப் புத்தகத்தை எழுதி யொழுங்காய்முடிப்பதற்கு உதவிதேடுகின்றேன். சகல புகழும் அந்த நாயனுக்காயிருக்கும். அவனது கருணையுமீடேற்றமும் எங்கள் நாயகம் முகம்மது சல்லல்லாஹூ அலைஹிவசல்லம் அவர்கள் மீதும் அவர்களின் சுற்றத்தவர்கள் நேசர்கள்மீதும் உண்டாவதாக. ஆமீன்.

முஸ்லிமாகிய எனது சகோதரர்களே!

இவ்விலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கிடையில் இற்றைக்கு ஐம்பதுவருஷங்களுக்கு முன்னர் தரீக்குக் குழப்பமென ஓர் விவாதமுண்டுபட்டு ஒருவருக்கொருவர் பகைசாதித்து இருகட்சிகளாகப் பிரிந்திருந்தார்களென்பதாய் நாம் கேள்விப்பட்டதில்லை. காதிரிய்யா, ரிபாயிய்யா, நக்ஷபந்தியா, சத்தாரிய்யா, அலவியா முதலான தரீக்குகளின் செய்குமார்களும் அவர்களின் முரீதீன்களும் இங்கிருந்திருக்கின்றார்கள்; ஆனாலவர்களுள் ஒரு தரீக்கிலிருப்பவர் மறுதரீக்கையும் அத்தரீக்கிலிருப்பவர்களையும் நிந்தித்தது கிடையவேகிடையாது. இப்படி இருக்கையில் பாஸிய்யாத் தரீக்காகப்பட்டது சாதுலிய்யாவென்று ஓர் மாய்மாலப் போர்வையையிட்டுக்கொண்டு இங்குவந்து குடியேறியது. அப்படி அந்தத்தரீக்கு இங்குவந்து குடிகொண்டநாள்முதலிதுவரையிலுமிங்குள்ள முஸ்லிம்கள் படுந்தொல்லைகளையும்வருத்தங்களையும் நாமெடுத்துரைக்க

அவசியமின்று. முஸ்லிம் சகோதரர்கள் சகலருமிதுவிஷயத்தைக் குறித்து நன்றாகஅறிந்திருப்பார்கள். இங்குள்ள அதிகப்பற்றானமுஸ்லிம்களுக்கிடையில் மனஒற்றுமையைக்கெடுத்துச் சமாதானத்தைக் குலைத்தற்கு பாஸியா தரீக்கே முதற்காரணமாக விருக்கின்றதென்பதை எவருமறுக்கத்துணியார்கள்.

இன்னும் இந்தத் தரீக்கு சென்றவிடங்களிலெல்லாம் அங்குள்ள முஸ்லீம்களின் மன ஒற்றுமைகளைக்கெடுத்து அவர்களுக்கிடையில் நீங்காதபகைமைகளையுண்டாக்கி வைக்கின்றதென்பதற்குச் சந்தேகமில்லை. சொற்பநாட்களுக்கு முன் எமது சகோதரர்களான காயல் பட்டணத்து முஸ்லீம்களுக்கிடையில் உண்டுபட்ட கொலைபாதகங்களை நினைக்கும்போதெல்லாம் எங்களிருதயங்கள் அவர்களுக்கு நேரிட்டவைகளைக் குறித்துப் பரிதபித்துத் துக்கப்படுகின்றன. சமாதானமாயொத்து வாழ்ந்த அந்த முஸ்லீம்களுக்கிடையில் இவ்வித கொலைபாதகங்கள் வந்து சம்பவித்தற்குஇந்தப் பாஸிப்யா தரீக்கு அங்குச்சென்றதே முக்கியகாரணமாக விருந்திருக்கின்றது. மேலுமிவ்விதமானவோர்கலகம் கள்ளிக்கோட்டிலுமுண்டுபட்டு அதனால் புதிதாய் பாஸிய்யாத் தரீக்கில் திரும்பிய அபூபக்கர் காளி என்பவருடைய காளி உத்தியோகம் நீக்கப்பட்டு அவருக்குப்பதிலாக, கனம் தங்கிய அல்லாமத்தான காளிமுகம்மது பின் அலி காதிரீ என்பவர்கள் காளியாக ஏற்படுத்தப்பட்டு இப்போதும் அவரே அந்தக் காளிஉத்தியோகத்தைப் பார்த்துவருகின்றாரென்பதாகத் தற்போதுள்ள அந்தக் காளி அவர்களே எமக்குக் கடிதமூலமாகத் தெரிவித்திருக்கின்றார்கள். இன்னும் மேற்படி காளி அவர்கள் "ஹிதாயத்துர் ருசி அலாகவாயத்தல் பாசீ" என்ற நாமத்தோடு முகம்மது பாஸி என்பவரையும் அவரின் பாஸிய்யாத் தரீக்கையும் கண்டித்து ஒரு கித்தாபு எழுதியிருக்கின்றதாயும் இந்த 1910-ம் ௵ மார்ச்சி மாதம் 3-ந்திகதி எமக்கெழுதிய கடிதத்தில் சொல்லியிருக்கின்றார்கள்.

இந்தப் பாஸிய்யாக் கூட்டத்தவர்கள் மற்றும் தரீக்குகளிலிருப்பவர்களைக் கலைத்துத் திருப்பியிடும் நோக்கத்தோடு அவர்களுக்கு இல்லாத ஆசைவார்த்தைகளைச்சொல்லி ஏமாற்றித் தங்கள் கூட்டத்தில் சேர்க்கப்போனவிடத்தில் அநேகம் சண்டைபித்தனாக்களுண்டுபட்டிருக்கின்றன. இக்கூட்டத்தவர்களின் நீதியற்ற இச்செய்கைகளைக்கொழும்பிலும் நாளுக்குநாள் அதிகப்படுத்திவரு

கின்றதைக்கண்ட நாம் எமது இகுவான்களான சகோதரர்களை இக்கூட்டத்தவர்களின் ஏமாற்றுதலில்சிக்குண்டுமோசம்போகாதுகாப்பாற்றுதற்காய் எம்மால் வெளிப்படுத்தப்படுகின்ற "மிஸ்பாஹுல் இஸ்லாம் 9-ம் 10-ம் இலக்கப் புத்தகங்களில் மேற்படி கூட்டத்தவர்களிலுள்ள ஊழல்களை யெடுத்துக்காட்டி இக்கூட்டத்தவர்களின் செய்காரியங்கள் நாம் ஒப்புக்கொண்டிருக்கின்ற பரிசுத்த இஸ்லாமார்க்கத்தினுடைய ஏற்பாடுகளுக்கு விரோதிக்கின்றனவெனச்சொல்லி எம்முடைய சொற்களுக்காதாரமாக இமாம் இபுனுஹஜர், தர்தூசி இமாம் இன்னுமிவர்களைப்போன்ற அனேகம் நாதாக்களின் சொற்களையுமெழுதிவந்தோம். இயாதாமோர் பாரபட்சமின்றி மனதை நீதி என்னுந் தராசாகப்பாவித்து எம்மாலெழுதப்பட்டு வந்தவைகளை வாசித்திருப்பவர்களுக்கு அவைகள் தக்க பிரயோஜனத்தைக் கொடுத்திருக்குமென்பதிற்றையமின்று. எதைச் சொன்னாலும் என்புத்தி விடேனென்று எருமையையொப்ப ஏமாந்துகிடக்கின்ற அறிவில்லாத மூடர்களுக்கு ஒருவேளை "செவிட்டானைக்குச் சங்கூதல் பலன்கொடாது போனதுபோல்" எம்முடைய வார்த்தைகள் பலன்கொடாதிருக்கவுங்கூடும். ஆனலது விஷத்தில் நாமவ்வளவாக யோசிக்கவேண்டியதில்லை. ஏனெனில் பரிசுத்தகுர்ஆன்சரீபில் முகம்மதே! நீர் ஜனங்களுக்கு உபதேசிக்கின்றவராயிரும்; உம்முடைய வுபதேசமாகிறது மூமீன்களுக்குத் தக்கபிரயோசனத்தைக்கொடுக்குமென அல்லாஹுத்தஆலா சொல்லியிருக்கின்றான். இனி நாமும் மூமீன்கள் பிரயோசனமடைவதைக்கருதியே இந்தப் "பாஸிமார்க்ககண்டனம்" என்னும் புத்தகத்தை எழுதமுயன்றோம். இப்புத்தகம் எமக்கும் எமது மூமீனான சகோதரர்களுக்கும் நேர்பாதையளவில் சேர்க்கக்கூடிய ஓர் வழி காட்டியாகவிருத்தற்கு அல்லாஹுத்தஆலா உதவிபுரிவானாக ஆமீன்.

தொடரும்,
சே. ம. சு.

முஸ்லிம்கள் கவனிக்கத்தக்கவழி.

(டிசம்பர் மீ சஞ்சிகையின் தொடர்)

1. "கல்வியைத்தேடுங்கள், அங்ஙனம் தேடுகிறவர்கள் பரிசுத்தவான்களோடு சேர்வார்கள்."

2. கல்வியைப்பற்றிப் பேசுபவன் அல்லாவைப் புகழ்பவனாவான்."

3. "கல்வியைத்தேடுகிறவன் எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறவனாவான்."

4. "கல்வியைக் கற்றுக்கொடுக்கிறவன் எவனோ அவன் சதக்கா கொடுப்பவனைப்போலாவான்"

5. "பாத்திரமறிந்து கல்வியைக்கொடுப்பது ரஹீம் அனவில் முடித்தலையெய்துவிக்கும்"

6. ஹலால், ஹறாமையறிவதற்குக் கல்வியே பெருந்துணை."

7. "கல்வியானது சுவர்க்கத்துப் பாதைக்கு வெளிச்சம்"

8. "கல்வியானது வனாந்தரத்துச் சிநேகிதன்."

9. "கல்வியானது தனித்திருப்பதற்குச்சங்கம்"

10. "கல்வியானது மித்திரர்களின் இடுக்கண்களையும் நட்பு"

11. கல்வியானது வறுமையை நீக்கிச் சுகத்தைக் கொடுக்கும்."

12. "கல்வியானது ஜனசமூகத்துக்கு ஒரு அணிகலமாகும்."

13. "கல்வியானது சத்துருவைக்காக்கும் இரும்புக்கவசத்தை யொக்கும்."

14. "முத்தியடைகிறதும், சுபியாகிறதும்உன்னதஸ்திதியை யடைகிறதும், உலகத்து இராஜாக்களுடன் சமஸ்தானம் வகிப்பதும் கல்வியைக் கொண்டேயாம்."

15. "மாணாக்கன் உபயோகிக்கும் சாயம் (இங்க்) (மை) சஹீதானவர்களின் இரத்தத்தைப்பார்க்கிலும் பரிசுத்தம்."

16. "சீனஞ்சென்றாகிலும் கல்வியைத்தேடிக் கொள்ளுங்கள்."

17. "வைதீகஇலௌகீகக்கல்விகளைப் பாடங்கேட்பதின்பலன், ஆயிரஞ்(1000) சஹீதானமையத்துகளைத்தொடர்ந்து செல்வதைப்பார்க்கிலும் ஆயிரம் (1000) இரவுநின்று தொழுவதைப்பார்க்கிலும் பெரிது."

18. "கல்வியைத் தேடிச்செல்லும் மாணாக்கன் ஒருவனுக்கு எல்லாம் வல்லநாயன் ஜன்னத்தில் ஒரு மேலாம்பரமான கட்டிடத்தை ஏற்படுத்துவான். அதுவிஷேசமாய் அவன் நடக்கும் அடியொவ்வொன்றுக்கும் தரஜாத்துண்டு. ஒவ்வொருபாடத்துக்கும் வெகுமதியுண்டு. கல்வியைத்தேடுபவன் எவனோ அவனை மலாயிக்கத்துமார்கள் 'ஜன்னத்துக்குவா' என்று எதிர்வந்து அழைப்பார்கள்."

19. "வைதிக இலௌகிகக் கல்விகளைப்படித்த பெரியவர்களின் வார்த்தைகளைக்கேட்பதும் இலௌகிகக்கல்விகளை மனதிலேயிலகுவிற்பதியுமாறு இருத்திக்கொள்வதும்மார்க்கவழியெடுத்து நடத்துதலைக்காணவும் நூறு (100) அடிமைகளை உரிமைவிடுவதைக்காணவுஞ்சிறந்தது."

20. "கல்வியையும், கல்விமானையும் பெரிதுபாராட்டும் ஒருவனுக்கு ஆண்டவன் மறுமையில் நற்பதிகொடுப்பான்" முதலியவைகளே.

கல்விவிஷேசமாய், நமது உலக இரக்ஷகராகிய ஆண்டவரவர்கள் திருவாய்மலர்ந்தருளிய ஹதீதுகளின் சாராம்சத்தைபறித்து ஆரம்பத்திலேயே உம்மத்துமார்கள் அவைகளுக்குத் தலைசாய்த்து அவ்வாறு ஒழுகி நடந்திருக்கிறது சரித்திர வெளிப்படையாயிற்றே.

முன்னேறும் முஸ்லீம் சகோதரர்களே! சற்றுக்கவனியுங்கள்.

ஹிஜறத்து இரண்டாம்வருஷத்தில் பக்தாதின் கலீபாவாகிய மன்சூர் அவர்கள் வெளிதேசத்தும் புறபாஷைகளிலுள்ளதுமான இலௌகிகக்கல்வியை அரபிபாஷையில் மொழிபெயர்க்க உத்தரவுசெய்ததும், அவ்வாறே மொழிபெயர்க்கப்பட்டு அக்காலத்து முஸ்லிம்கள் வெகுகவனத்துடன் படித்துச்சீர்திருத்தநடையில் வெகுஉன்னதநிலையில் நிறுத்தி முன்னேறியதும் பின்சந்ததிகள் தொடர்ந்து நடக்கத்தக்கதாக விருத்தி செய்ததும் ஹதீதின் தாத்பரியம் அறிந்ததனாலன்றோ? அந்தோ! பரிதாபம்!! இக்காலத்து ஆலிம்களிற்சிலர் போலித்தனமாய் ஹதீதுகளுக்கு அருத்தஞ்செய்துகொண்டும் தாறுமாறாகஉபதேசஞ்செய்தும் நம்மவர்களின் கல்வி விருத்தியைக்கெடுக்கிறார்களே! இஃதல்லவா புறஜாதியார் நம்மை ஏளனஞ்செய்வதற்குத் தூண்டுகோலாகவிருக்கின்றது. இவ்விதப்பேர்விப்பிரசங்கத்தை

நாம் அறவேதொலைத்தாலொழிய நாம் யாவரும் கல்வியில் முன்னேறுவதுகஷ்டம். நமதுதீர்க்கதரிசி ஆண்டவரவர்கள் கிருபாநோக்கங்கருதிப்போதித்த "சீனஞ்சென்றுகிலும் கல்வியைத் தேடிக்கொள்ளுங்கள்" என்ற ஹதீதைச்சற்றுப்பரியாலோசிப்போம்.

தொடரும்.

எம். எஸ்.

அருமந்த பொருள் விளக்கம்.

முன்னுரை.

புகழடங்கலும் அல்லாவுக்கேயுரியன. சலவாத்தும், ஸலாமும், முஹம்மதுமுஸ்தபா றசூல்ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களுக்கும் அவர்களின் கிளையார், தோழர். தொடர்ந்தோர் அனைவர்க்கும் உண்டாகுக.

முஸ்லிம் சகோதரர்களே!

எறும்பாதியேனையவை யாவையும் உற்பவித்தருளிய அற்புத மெய்க்கடவுளாய், எப்பொருட்கும் முற்பொருளாய், உட்பொருளுமாய், விளங்காநிற்கின்ற அல்லாகுத்தஆலா, தனது திருமறையில் "உம்முல்குர்ஆன்" என்னும் பாத்திஹா சூறாவில் அருளிய "இஃதினஸ்ஸிராத்தல்" என்னும் ஆயத்திற்கு:—ளாஹிரில மாத்திரம் அதாவது வெளிப்படையான அருத்தத்தில் மாத்திரம் தரிபட்டு சரீர இச்சையைப்போன்றஐம்புலவின்பங்களுக்கேற்ற சுவர்க்கமாதி சுகிப்புக்களைத்தேடுவது கொண்டு இருளினால் திரைபோடப்பட்ட எஹூதிகளின் பாதையல்லாமலும், பாத்தினில் மட்டும் அதாவது: அந்தரங்கமான அருத்தத்தில் மாத்திரம் தரிபட்டு ளாஹிரின் ஜமாலைத் தரிசிப்பதைவிட்டும் ஒளியினால் திரைபோடப்பட்டநஸாறாக்களின் பாதையல்லாமலும், அகப்பொருளையும்புறப்பொருளையும்வேறுவேறென்று கருதிமருளாமல்அவற்றை ஒன்றுபடுத்திச்சென்ற,அன்பியாக்கள்,ஒளலியாக்கள்,ஸித்தீக்கீன்கள். தரிபட்டிருந்த நேரானபாதையில் எங்களை சேர்ப்பித்து வாயாக என்பதேபாத்திஹின் அருத்தமென்று, ஷைகுல் அக்பர், முஹியத்தீனிபுனியறபி ரகிமகுல்லாஹ் அவர்கள், தாங்களியற்றிய "தப்ஸீரு அஸ்ரூரி" என்னும் மேன்மைவாய்ந்த கிதாபில் மிகத்தெளிவாக

மனு எழுதியிருக்கின்றார்கள். இப்படியிருக்க இக்காலத்திற் சிலர் லாஹிர்வேறு, பாத்தின்வேறு என்றுசொல்லிச்சன்மார்க்கத்தைவிட்டு விலகி நிற்பதுமன்றி இதர ஜனங்களையும் அவ்வழிகேட்டில் நுழைக்கத்தக்க பிரயத்தனங்களைச் செய்துவருகின்றமையால், மிஸ்கீனாகிய நாம் நமது சத்தியமார்க்கத்தின் "அருமந்த பொருள்விளக்கம்" இது வென்பதைத் தகுந்த ஆராய்ச்சியுடனும் மார்க்கக்கல்வியில் முதிர்ந்து விளங்குகின்ற உலமாவுல் ஆலிமீராங்களின் நற்சாட்சிகளுடனும் தெளிவாயும், தீர்மானமாயும் இந்தச்சிறிய கிரந்தத்தில் எழுதத்துணிந்தோம். அல்லாகுத்தஆலா, நம்மையும், உங்களையும் லாஹிர், பாத்தினை வேறு காணாத கூட்டத்திலாக்கி ரஹ்மத்து செய்வானாக; ஆமீன்.

நூல்.

முஸ்லிம் சகோதரர்களே!

மகிமைதங்கிய கஸ்ஸாலி இமாம் அவர்களால் சில நூற்றாண்டுகளுக்குமுன்னே, பாரிஸ் பாஷையில் இயற்றப்பெற்றுள்ள "கீமியாயெஸஆதத்து" என்னும் அரும்பெருங்கிரந்தத்தை இப்பொழுது நெல்லிக்குப்பத்திலிருக்கும் மௌலவி அப்துர்றகுமான் சாஹிபு அவர்கள் தமிழில்மொழிபெயர்த்து அச்சிட்டுவருவதை நீங்கள் தெரிந்திருக்கின்றீர்கள். இந்த அரியகிரந்தத்தின் முதலாம் பாகம், 92-வது பக்கத்தில், "கியாமத்தில் மறுமுறை உயிர்கொடுத்தெழுப்புவதற்கு முன்னிருந்த சரீரமே வேண்டுமென்ற அவசியமில்லை" என்றிருக்கின்ற வசனத்திற்குச் சிலர் தப்பான அருத்தம்வைத்து, கியாமத்தில், அதாவது நடுத்தீர்ப்பு நாளில், மனிதரைத்தேகத்தோடு எழுப்பப்படுகிறதில்லை யென்றும், தேகம் தேவையில்லையென்றும் ரூஹூமட்டுமே அதாவது ஆன்மாமாத்திரமே அங்கே இன்பம், அல்லது துன்பத்தை யநுபவிக்குமென்று கஸ்ஸாலி இமாம் அவர்கள் சயிக்கினை செய்திருக்கின்றார்களென்றும் மருண்டு நிற்பதாய்த்தெரிகின்றது. இவ்விதம் மருண்டு தவறான விசுவாசத்தில் நிற்பாருள்தோப்புத்துறை கனம், முகம்மது ஷெய்கு மரைக்காயரவர்களின் குமாரர், கனம், முத்துமரைக்காயரவர்களும் ஒருவராயிருக்கின்றார்களென்பதை யறிந்து மெத்தவும் விசனிக்கின்றோம். ஏனெனில் இந்த முத்துமரைக்காயரவர்கள் நல்ல புத்திமானென்று நாம் அறிந்திருந்ததினாலேயாம். இவர்கள் சிலதினங்களுக்குமுன் பிரகாசப்படுத்திய

அச்சுப்பிரதிகளில் ஒன்று நம் பார்வைக்கும்வந்தது. அதைப்பார்த்ததும் நம் உள்ளம் துணுக்குற்று (நஊதுபில்லாஹிமின்ஹா,) நமது மரைக்காயரவர்கள் புத்திசாலியாயிருந்தும் இவ்வாறு தப்பருத்தம் பண்ணித் தவறான விசுவாசத்தில் தரிபட்டிருப்பதைப்பற்றி ஆச்சரியப்பட்டு, மரைக்காயரவர்களை நேரிற்சந்தித்து, அவர்கள் கொண்டிருக்கும் கருத்துச் சரியல்லவென்பதை அவர்களுக்குப்பலவாறுசொன்னோம். அவர்கள், நாம் கூறியபிராயங்களை ஏற்காமல் தாம் கொண்டகருத்திலேயே சலஞ்சாதித்து நிற்கின்றார்கள். இதுவுமன்றி, அவர்களின் கொள்கையை, மார்க்கப்பயிற்சியில் தேறாத சிலரிடத்து நிலைநாட்டி அவர்களையும் அஞ்சத்தக்க துறையில் விட்டிருக்கின்றார்கள். ஆதலினாலே நாம் இக்கிரந்தத்தில் சொல்லும் விஷயங்களை முஸ்லிம் உலகமும், நமது முத்துமரைக்காயரவர்களும் சிறிது கவனிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இன்னும்வரும்.

சே. சே. தோப்புத்துறை.

* * *

கீமியா உரையறியாப் பாமரரைப் பதப்படுத்தல்.

சன்மார்க்கமுறைசருகாச்சற்சனசிகாமணிகாள்! சொற்பகாலத்திற்குமுன் அச்சிட்டுவெளிவந்த கீமியாவென்னும் புத்தகம், 1-வது வாலியம். 92-வது பேஜில் மறுமுறை உயிர்கொடுத்தெழுப்புவதற்கு முன்னிருந்த சரீரமே வேண்டுமென்ற அவசியமில்லையென்ற வசனத்தைத் தோப்புத்துறை முத்துசெறியறியா முத்தர் நோக்கி நடுத்தீர்ப்புநாளில் தேகமின்றி ஆன்மாமட்டுமேவரும் என்று புலம்பவாரம்பித்தனர். அதையறிந்தயாம் பன்முறைகளாய் உபந்நியாசங்கள்செய்து ஈறுகாலத்தில் உடலுயிர் இரண்டுமே வருமென்பதற்குள்ள குர்ஆன்ஹதீது இஜ்மாகியாஸ் ஆகியபிரமாணங்களைத் தெளிவுறவிளக்கிக்காட்டியும் விளங்கிக்கொள்ளும் சக்தியற்றதன்மை யவர்க்குற்றதால் அவைகளை யொருமிக்க நிராகரிக்கத்துணிந்ததுமன்றிக் கற்றோராதி ஏனையோர்களிடமும் கண்டபடி உளறித்திரிந்தனர்.

குறள்.

ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

என்றபடி எம்முபதேச உயர்வாக்கியங்கள் அவரிருதயத்திலுறுதியாகாமலாயின வாயினும் இப்பேதையர் புன்மொழியைச் சிலர் நம்பி மோசமடைவாராயினது பெருங்குற்றமாகுமென்றஞ்சி மற்றோர்மனமுமாறாதிருக்கும் வண்ணம் அந்நூலை மொழிபெயர்த்தெழுதிய கனம் அப்துர்ரஹுமான் சாஹிபவர்கள்பாலோர் நிருபமனுப்பினோம். அவர்களதற்குப்போதியநியாயாதாரங்களுடனோர் நிருபமெமக்கு அனுப்பினார்களஃதாவது:-தங்கள் கடிதங்கிடைத்துச் சங்கதி தெரியலாயிற்று. கீமியாயெஸஆதத்து 1-வது வாலியம் 92-வது பக்கத்தில் கண்டிருக்கும் ஹஷ்றுபஉதுபயானைக்குறித்து அவ்விடத்தில் இகுத்திலாபு ஏற்பட்டதாக எழுதியிருக்கின்றீர்கள், புத்தகஆரம்பத்திலிருந்து ஒவ்வொருபாடத்தையும் நன்றாய்ப்பார்வையிட்டு விளங்காதவிடங்களில் தெரிந்தவர்களைக்கேட்டுத் தெளிந்துவந்தால் இமாமவர்கள் ஆங்காங்குச் சொல்லியிருக்கிற இசாறாக்களால் உண்மையிதுவென்று விளங்கியிருக்கும். இன்பதுன்பங்கள் யாவும் ரூகுக்கேயன்றி தேகத்துக்கு இல்லையென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லுந்துணிபு உண்டாகாது.

தாங்கள் கடிதத்தில் எழுதியிருக்குஞ் சில இபாறத்துகளைக்கொண்டு அவர்களுக்கு ஜவாபு போதுமாகவிருக்கின்றது. ஆயினும் அது லாஹிர்க்காரருடைய முடிவென்று அவர்கள் மறுத்துப்பேசும்போது வேறெவ்விதமாக ஜவாபுஎழுதுகிறது. மண், தண்ணீர், காற்று, நெருப்பிவைகளால் அமைக்கப்பட்டதேகங்களை எழுப்பப்படாதென்று சொல்லிய கஷ்பையுடையவர்களில் மிகுதமானவர்கள் கதாவிலாகி விட்டார்களென்ற இபாறத்து முழுதுங்கொண்டு ஜவாபெழுதலாமென்றாலு மதற்குத்தாங்கள்போதும். மேற்கொண்டு நாமெழுதவேண்டிய அவசியமில்லை. மேலுங்கீமியாவில் தேகங்களை யெழுப்புவதை இன்காறு செய்வதாக ஒரு இபாறத்துந் தென்படவேயில்லை. ஷை புத்தகம் 9-வது பக்கத்தில் இவையெல்லாவற்றிலுஞ் சரீரமதைத்தொடர்ந்திருக்குமென்ற வாசகத்தினால் ரூஹு இன்ஸானி அடைகிற அதாபுதவாபுகளில் சரீரமதைத் தொடர்ந்திருக்குமென்று நன்கு விளங்கும்போது

ரூஹுக்குமட்டுஞ் சொந்தமென்று எப்படிச்சொல்கிறது. ஆகையால் வேண்டும் என்பதாம்.

இந்நிருபம் வந்ததும் நம்முஸ்லிம் சகோதரர்களறியும்பொருட்டுத் தெளிவாய் அச்சிட்டுவெளியிட்டோம். மூங்கைக்கு மூக்கைச்சொறிதல் குற்றமானாற்போல் மேற்கூறியமுத்தர் உள்ளங்கொதித்து ஆற்றொணா விசனமடைந்ததுமன்றித் தாமுஞ்சில தீர்மானங்களைவெளிப்படுத்த வேண்டுமென்று இவர்கருத்துக்குமே பொருந்தாச்சில போலிவசனங்களடங்கிய புத்தகமொன்றைப்பார்ப்போர் நகைக்கப்பரவச்செய்தார். ஆனாலது கற்றுத்தேர்ந்த மேதாவிகள்பாலருவருக்கத்தக்கதாயினுஞ் சில கல்லார்மனத்தைக் கலங்கச்செய்யு மென்பதையுன்னி இந்நூலில் மேற்கூறிய முத்தரை முன்னோக்கிச் சித்திபெறச்செய்வான் வேண்டிச் சிற்சில நன்னெறிகளை யெடுத்தோதுவதை எம்நேச விசுவாச உல்லாசர்கள்கண்டு ஆனந்திப்பீர்களாக.

இன்னும்வரும்.
மு. மு. நாகூர்.

துருக்கியுத்தசெய்திகள்.

(இத்தாலியரில் பெருஞ்சேதம்.)

முந்தினமாதப் பத்திரிகையில் கூறியிருக்கும்விஷயங்கள்நடந்ததற்குப்பின்னால் ஒருதினம்இராவில்ஒரு துருக்கிப்பட்டாளமும் ஷேக்செனூஸியின் நான்குகூட்டத்தாரும்கூடி டெர்னாவை வளைந்து உள்ளேயிருந்த இத்தாலியர்களை மிகவும் கடினமாயெதிர்த்து மோதினார்களென்றும், அப்போது 500 இத்தாலியர்கொல்லப்பட்டார்களென்றும், எண்ணிறந்தபலர் காயமடைந்தனரென்றும், மற்றையர்சிறையாக்கப்பட்டார்களென்றும், அச்சமயம் இத்தாலியருக்குக் கப்பல்பீரங்கிகளின் உதவிகிடைத்தும்பலனில்லாமற்போயிற்றென்றும், நம் துருக்கியர்பக்கத்தில் 80 பேர் ஷகீதானார்களென்றும், சிலர் காயமடைந்தனரென்றும், இவ்வாறடைந்தாலும் இத்தாலியருடைய 18-பெரும் பீரங்கிகளையும், அளவற்ற சண்டைச் சாமான்களையும் துருக்கியர் கைப்பற்றிக்கொண்டார்களென்றும், இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட நம்மவர் பீஜபீலின் தவாபை ஏற்றுக்கொண்டார்களென்றும், இவர்களுள், மகா தைரியவான்களாகிய உசைல்துஅலவி, உசைய்த்நுனி, உசைய்த்ஹாஷிலல் அஹ

ஜரி, முகம்மது கஸ்ஸாலி, உசையது அப்துல்காதர், கைறகாஷி, உசையத்மர்லகர்லகாஹி, உசையத்முகம்மதுல் வக்கார், உசையத் மம்மது இபுனுஸ்ஹவுல், உசையத்சனூஸி இபனுஷாப்பாஸி ஷாபூகஸா வியாபைஸா ஆகியவர்களே உயிரையும் இலக்ஷியம் செய்யாமல் எதிர்த்து எதிரிகளை நாசஞ்செய்தார்களென்றும், இவ்விஷயத்தில் கனம் என்வர்பே அவர்கள், "பருஸா, ஹாஸா, தர்ஸா, அபீதாஸ் ஆகிய நான்கு ஸெனூஸிக்கூட்டத்தாரும் துருக்கியவீரர்களும் திரண்டு, டெர்னாவில் இத்தாலியரோடெதிர்த்து யுத்தம் புரிந்ததில் நம்பக்கத்தில் 80-பேர் ஷஹீதானார்கள்; இத்தாலியர் பக்கத்தில் 500பேர் மாண்டனர்; யுத்தசாமான்கள் நமக்கு அதிகமாக அகப்பட்டதோடு 18 பீரங்கிகளும் கிடைத்தன; அரபிகள் பீஜபீலுக்குத்துணிந்து நிற்கின்றார்கள்" என்று துருக்கிகவர்மெண்டிக்குச் செய்தி தெரிவித்திருப்பதாயும், இந்தச்செய்தியையும், மற்ற தந்திசமாசாரங்களையும் உணர்ந்து துருக்கிகவர்ன்மெண்டார், "நம் துருக்கிய அரபிகள் டெர்னாவைக்கைப்பற்றிக்கொண்டார்கள்; அங்கு நடந்தயுத்தத்தில் 500 இத்தாலியர் கொல்லப்பட்டார்கள்; பலர் காயமடைந்தனர்; மற்றவர் சிறையானார்; 18-ப்பீரங்கிகளும், பலயுத்தசாமான்களும் நமக்கு அகப்பட்டன" என்று ஒருரிப்போர்ட் பிரசுரம் செய்திருக்கிறார்களென்றும், இவ்விஷயமானது துருக்கி நாட்டில் அளவற்ற மகிழ்ச்சியை உண்டாக்கியிருப்பதோடு சுல்தானவர்களுக்கும் மிக்க திருப்தியை உண்டாக்கியிருக்கிறதென்றும், அதனால் அவர்கள் இந்தச் சந்தோஷ சமாசாரத்தை மிஸ்றின் கத்தீவு அவர்களுக்கும், அமெரிக்காவுக்கும் அறிவித்திருக்கிறார்களென்றும் இஸ்தம்பூலில் வெளியாகும் அல்அதல் என்ற பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது.

சில இத்தாலியர் சிறைப்பட்டனர்.

சென்ற டிசம்பர்மீ 6வ காலையில் சில இத்தாலியச்சைனிய வீரர்கள், பெங்காசியிலுள்ள தந்திக்கம்பிகளை அறுக்கக்கருதிவந்து சூழ்ந்ததாகவும், உடனே அப்படிச்சூழ்ந்தவர்கள், துருக்கியரால் துரத்தப்பட்டார்களென்றும், திரும்பவும் அன்றிரவில் 75-இத்தாலியர்கள் தந்திரமாகத் தந்திக்கம்பிகளை அறுக்க நெருங்கினதாகவும், அதையறிந்து 75 அரபிகள் சேர்ந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு இத்தாலியனைத்தாக்கியதில் அவ்வித்தாலியர்கள் சிறைப்பட்டு விட்டார்களென்றும், அப்படிச்சிறைப்பட்ட இத்தாலியர்,

"எங்கள் தலைவர், 'தந்திக்கம்பிகளை அறுத்துவந்தவர்களுக்கு 100 வீருதங்கம் தருவோம்' என்றுவாக்களித்ததினால் பணத்தாசைகொண்டு இக்காரியத்தில் பிரவேசித்தோம்; ஆகையால் எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று கெஞ்சினதாகவும் சென்ற டிசம்பர் மாதம் 7வ தந்திகிடைத்திருப்பதாக அல்லிவா என்னும் பத்திரிகை கூறுகின்றது.

திரிப்போலியில் நடந்த பெருநாள் கொண்டாட்டம்.

"அரபிகளும், துருக்கிகளும் திரிப்போலி ஜாமிபள்ளியில் ஈது தொழுதபின் ஒவ்வொருவரும் சலாம்செய்துகொள்ளும் சமயத்தில், 'இத்தாலியரைக்கருவறுப்பதில் பின்வாங்குவதில்லை' என்று பிரதிக்ஞைசெய்து சந்தோஷங்கொண்டாடினார்கள்" என்று திரிப்போலியிலிருந்து ஒரு தந்தி ஷௌக்கத்பாஷா அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதாம்.

இத்தாலியருடைய பாங்கிகள் கொள்ளை போய்விட்டன.

திரிப்போலியிலுள்ள காரியன், எப்ரான்' ஜியாத்தென், சிர்ட் என்ற நான்கிடங்களிலும் பேராசைபிடித்த இத்தாலியரால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ரோமா பாங்கிகளைத் துருக்கிய அரபிகள், கொள்ளையடித்து அங்குள்ள நாணயங்களையும், ஸ்டோர் சாமான்களையும் கைப்பற்றிக்கொண்டு போய்விட்டார்களாம்; இதனால், இத்தாலியர் இறகிழந்த பக்ஷிபோல விழிக்கிறார்களாம்.

இத்தாலியக்கப்பல்கள் நீரில் மூழ்கிப்போயின.

செங்கடற்கரையில் அரேபியாவைச் சேர்ந்த ஷேக்செத்கோட்டைகளிருக்கின்றன; இவை, இத்தாலியர்க்குச் சொந்தமான எரிட்டிரியா நாட்டிற்கெதிரே சிறிது தூரத்திலுள்ளவை. இந்தக்கோட்டைகள் இப்போது துருக்கியரால் பலமாய்ப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவ்விடங்களில் அநேகம் பீரங்கிகளைவைத்து அளவற்ற துருக்கிச்சேனைகள் காத்திருக்கின்றன; இன்னும் ரேஹெய்ட்டா என்ற இத்தாலிய நாட்டிற்குப் பின்புறத்திலும் அரபிகள் கூட்டங்கூடி ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலுள்ள டேஸ் என்னுமிடத்திலும் 2000 அரபி வாலண்டியர்கள் சேர்ந்திருக்கின்றனர். இவ்விஷயங்களால் இத்தாலியர் பயமடைந்திருக்கின்றனர். ஆகையால் அவர்கள் கப்பல்களைச்செ

ஒத்தி மேற்கண்ட ஷேக்செத்கோட்டைகளின்மீது பீரங்கிகளால் தாக்கினார்கள். அப்போது துருக்கியரும் கோட்டைகளிலிருந்து இத்தாலியர்கப்பல்களின் மீது பீரங்கிப்பிரயோகஞ்செய்தார்கள். அவ்வாறு செய்யவே “காலாபிரியா” என்றஇத்தாலியச் சண்டைக்கப்பலொன்று பீரங்கியால் தாக்குண்டு நாசமடைந்ததோடு, மற்றொரு இத்தாலியக்காவற்கப்பலும் நீரில் முழுகிப்போயிற்று.

ஈரான் விஷயங்கள்.

ருஷியர்கள், டாப்ரிஜ் பட்டணத்தில், ஷிக்கத்துல் இஸ்லாம் உள்பட 8 பேர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டார்களென டாபரிஸ் தந்திகூறுகின்றது. இரண்டு ருஷியப் பட்டாளங்கள் காஸ்வினை விட்டு ரெஷ்டுக்குப் புறப்பட்டுப் போயிருக்கின்றன.

ருஷியர்கள் வேறு 4 ஈரானியர்களைத் தூக்கிலிட்டார்கள். டாப்ரிஜ நகரிலுள்ள 4 வீடுகளிலிருந்து ருஷியச் சைன்யங்களின் மீது துப்பாக்கிக்குண்டு கிளம்பியமையால், அந்நான்குவீடுகளையும், ருஷியர்கள் நெருப்பிற் கிரையாக்கினார்கள்.

வேறு மூன்றுபேரை ருஷியர்கள் விசாரணைசெய்து தூக்கிலிட்டார்கள்.

மிஸ்டர் ஷஸ்டரை டிரஷரர் ஜெனரல் வேலையினின்றும் நீக்கிவிட்டமையால், 3 பெர்ஷிய உத்தியோகஸ்தர்கள் கொண்ட ஒரு கமிஷனை நியமித்து, யம் மொம்பா என்ற கஸ்டம்ஸ் ஆபிசரை ஆக்டிங் டிரஷரர் ஜெனரலாய் வேலைபார்க்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறது.

(அரியநாவல்)

பண்டிதைமேஸ்மரிஸா.

(அக்டோபர் நவம்பர் மாசங்களின் தொடர்)

அவர் சுருட்டுப்பெட்டியினின்று ஒன்றையெடுத்துப் பற்றவைத்து உல்லாசமாக மூக்கு வழியாகவும் வாய்வழியாகவும் புகையைவிட்டார். அப்பொழுது அவர் வந்த விஷயத்தை விசாரித்தேன்.

“ஐயா தாம்ஸன் துரையே! தாங்கள் ஹோங்கோங் நகரத்துக்குப் புதிதாக வந்திருப்பவர்களன்றோ?”

“ஹோங்கோங் நகரத்துக்குமட்டும் நான் புதியவனல்லேன்; ஆனால், கீழ்த்தேசத்துக்கே இப்பொழுதுதான் புதிதாக வந்திருக்கிறேன். நான் எழுதிக்கொண்டிருக்கும் ‘சர்வரோக நிவாரண போதம்’ என்னும் ஆயுர்வேத புத்தகத்தில் ஆசியாகண்டத்திற் காணப்படும் வியாதிகளைப்பற்றி எழுத நினைத்திருப்பதால் இத்தேசத்துக்கு வந்து சேர்ந்தேன்.”

“தாங்கள் டாக்டர்தொழிலில் சிறந்த பாண்டித்திய மடைந்திருக்கிறீர்களென்று நான் தெரிந்துகொண்டேன்; தங்களைப் பற்றி ஒவ்வொருவரும் சிலாகித்துப் பேசிக்கொள்ளுகிறார்கள்.”

நான் வணக்கமாக ஒன்றும் பேசாமல் சும்மா இருந்தேன். அவர்சொன்னதில் எனக்கு அதிகமான கௌரவமொன்றுமில்லாமலிருந்தாலும் மனிதனுக்குள்ள ஸ்தோத்திரப் பிரியத்தால் நான் அவர் சொன்னதை ஆமோதித்துக்கொண்டு அதிக நட்போடு அவரைப்பார்த்தேன்.

“நான் சொல்வதில் ஏதேனும் குற்றமிருந்தால் மன்னிக்க வேண்டும்; தாங்கள் எவ்வளவு காலம் கீழ்த்தேசத்தில் தங்கியிருப்பீர்கள்?”

“நான் அதை இப்போது சொல்லமுடியாது; ஆனால், ஆறுவாரம் வரையில் தங்கியிருக்கும்படி நேரிடும். பிறகு ‘எம் ஓ’ ஸ்டீமரில் பிரயாணமாகவேண்டும்.”

“இந்த ஆறுவாரத்திற்குள் இங்கே தங்களுக்கு ஏதேனும் அவசியமான காரியமிருக்கிறதா?”

“நான் அதை எவ்வாறு சொல்லமுடியும்? ஆனால், முக்கியமான வேலையொன்றுமில்லை; இப்பொழுதே நான் வந்தகாரியம் நிறைவேறிவிட்டது.”

“இப்பொழுதுதான் நான் வந்தவிஷயம் ஆரம்பிக்கிறது; சுருக்கச்சொல்லுங்கால், தங்களுக்கு ஆயிரம் சவான் சம்பாதிப்பதில் ஏதேனும் ஆக்ஷேபமுண்டோ?”

“சிறிதும் ஆக்ஷேபமில்லை! யாருக்கு ஆயிரம் சவான் கிடைக்கும்? நியாயமான வழியில் கிடைப்பதானால் எனக்கு ஆக்ஷேபமில்லை” என்று நான் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

“கொள்ளை நோயில் ஒன்றான வைசூரியில் தாங்கள் நிபுணரென்று கேள்வியுற்றேன்.”

“ஆம்; தாங்கள் சொல்வதுபோல் என்மேற்பார்வையின் கீழ் இரண்டு வைசூரி வைத்தியசாலைகளிருக்கின்றன.”

"ஆ! எங்களுக்குச் சொன்னவன் உண்மைபேசினன்போலும்; இவ்வியாதி ஓரிடத்தில் வியாபித்திருக்கிறது; அங்கேவந்தால் தங்களுக்கு ஆயிரம் சவரன் கிடைக்கும்."

"அவ்வியாதிக்குச் சிகிச்சைசெய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறீர்களோ?"

"அவ்விஷயமாகப் பேசும் பொருட்டுத்தான் நான் இங்கு அனுப்பப்பட்டிருக்கிறேன்."

"அக்கொள்ளை நோயுள்ள இடம் எங்கேயிருக்கிறது?"

"நான் அதைச் சொல்லமுடியாது?"

"என்பால் சொல்லமுடியாதா? இஃது ஏதோ வின்னியாசமாக விருக்கிறது?"

"ஆம்! ஆம்! மகாவின்னியாசம்தான்; தங்கள் உத்தரவானால் மேலும் சொல்லுகிறேன்."

அதற்கு உடன்பட்டுத் தலையை அசைத்தேன்.

"நான் சொல்வதெல்லாம் வின்னியாசமாகத்தானிருக்கும். ஆனால், தங்களுக்குக் கொடுக்கச் சம்மதித்திருக்கும் தொகையும் வின்னியாசமாகத்தானிருக்கிறது; கீழ்க்காணும் நிபந்தனைகட்கு உட்பட்டு வைசூரி வார்த்த இடத்துக்கு வருவதாக இருந்தால் எங்களுக்கு ஒரு டாக்ட்டர் வேண்டும்; அவருக்குக்கொடுக்கும் தொகை ஆயிரம் சவரன்; டாக்டர் தாம் ஏற்றுக்கொண்ட விஷயத்தை உலகத்திலுள்ள உயிர்ப்பிராணி யாருக்கும் வெளிப்படுத்தக்கூடாது; அவர் உடனே புறப்பட்டு வைசூரி வார்த்த இடத்துக்கு வரவேண்டும்; அவர்திரும்பிவரும்போது யாருக்கும் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் ஜீவகாலமட்டும் வெளிப்படுத்தக்கூடாது; ஐயா தாம்ஸன்! நான் சொன்னவை விளக்கமாயினவோ?"

"செவ்வனே விளக்கமாயின; ஆனால், இது மனிதனுடைய புத்திக்கு எட்டாத ஆச்சரியமாக இருக்கிறது."

"அப்படித்தான் இருக்கிறதென்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால், இப்படிப்பட்ட சமயம் வாய்த்தால் யார்தாம் தமக்குள்ள வருவாயைக் கைவிடுவார்?"

"ஒருவன் வருதற்கு ஒப்புக்கொண்டால் அவன் எவ்வாறு கொள்ளை நோயுள்ள இடத்தைக் கண்டுபிடிப்பது?"

"அதற்குநான் ஏற்பாடு செய்கிறேன்."

"அங்கிருந்து எவ்வாறு அவன் திரும்பிவருவது?"

"எவ்வாறு அழைத்துக்கொண்டு போகிறேனோ அவ்வாறே கொண்டு வந்துவிடுவேன்."

"எப்பொழுது அவன் புறப்படவேண்டும்?"

"தாமஸமன்னியில் இப்பொழுதே புறப்படவேண்டும்; இன்றிரவு பன்னிரண்டு மணிக்குப் புறப்படவேண்டும்."

"இப்பொழுது சற்றேறக்குறைய மணி பதினொன்றாயிற்று."

"தங்களுக்குப் புறப்படுவதற்கு இன்னும் ஒருமணி நேரமிருக்கிறது; ஐயா டாக்டர் தாம்ஸன்! என்னுடன் வருவதற்குத் தங்களுக்கு இஷ்டமுண்டா?"

"இன்னது மறுமொழிகூறுவதென்று எனக்குப் புலப்படவில்லை; தாங்கள் சொல்வது எனக்கு மிக்க வியப்பையுண்டுபண்ணுகிறது."

"எங்ஙனமாயினும் நான் வந்தவிஷயம் இரகஸ்யமாகத்தானிருக்கவேண்டியிருக்கிறது."

(தொடரும்,)

கு’ ஆக்கன் ம்பாவ்ஸ்.

கவனிப்பு.

இந்த "பண்டிதை மெஸ்மரிஸா" என்னும் நாவல்புத்தகரூபமாக முடிந்துவிட்டது. இந்தநாவலின் விலை ரூபா ஒன்றுதான். வேண்டுவோர் நம்மிடம் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

ப. ர்.

வர்த்தமானங்கள்

இந்தியாவிற்குத்தங்க ஏற்றுமதி:-பி அன் ஓ ஸ்டீமர் மாஸிடோனியாவின் மூலமாய் போர்ட்செத் துறைமுகத்திலிருந்து 200000 பவுன் பெறுமான தங்கம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

பீகம்பெருமாட்டியாரின் தயாளம்:—மாட்சிமை தங்கிய பீகம் பெருமாட்டியார், லண்டனிலுள்ள முஸ்லீம் பள்ளி வாசலுக்கு 7000 பவுன் நன்கொடையளித்திருக்கிறார்கள்.

ஒரு பிரிட்டிஷ் கப்பல் ஜலத்தில் அமிழ்ந்திப் போயிற்று:—சென்ற டிசம்பர்௴ 21௳ யன்று போர்த்துக்கல் தேசத்தின் பிரதான நகராகிய லிஸ்பனிலிருந்து ஐர்லாந்திலுள்ள டப்ளின் நகருக்குப் போய்க்கொண்டிருந்த ஹியூகென்டன் என்ற பிரிட்டிஷ்கப்பல், பிஸ்கே குடாக்கடலில் அலையிலகப்பட்டு அமிழ்ந்திப்போயிற்று. இரண்டு மாலுமிகள் மாத்திரம் தப்பிக்கொண்டார்கள்.

ஒருநிரியாணம்—கோம்பை. ம-௱-௱-ஸ்ரீ உ. ம. சே. தபக்கல் சாப்பு ராவுத்தர், உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர், உ. ம. சே. சின்ன முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் ஆகிய பெருந்தகையாளருடைய அருமைப்பிதா அவர்கள் சென்ற ஜனவரி௴ 19௳ வெள்ளிக்கிழமை இரவு பத்துமணிக்குக் காலஞ்சென்றார்கள் இது, முஸ்லிம்கள் விசனிக்கத்தக்கதே.

விளம்பரம்.

பண்டிதை மெஸ்மரிஸா.

இப்பெயரிய ஓர் அரிய தமிழ்நாவல்இப்போது பூரணமாகஅச்சிட்டுமுடிந்து வெளியாகிவிட்டது. இது மிகவும் அருமையானபுத்தகம். மெஸ்மரிஸத்தின் உதவியைக்கொண்டு,உலகத்தில் மனிதரால் செய்யமுடியாதென்று கருதப்படும் அருமையான காரியங்களையும் செய்துமுடித்துவிடலாம் என்பதற்கு உதாரணமாக, ஒருபெண்மெஸ்மரிஸத்தால் வெற்றியடைந்த அநேகம் அற்புதசரித்திரங்களையெல்லாம் இதிற்காணலாம்.

பண்டிதை மெஸ்மரிஸா என்பவள் ஒரு பெண்ணாயிருந்தும், மனிதர்கண்ணுக்கெட்டாத ஒருதீவிலிருந்துகொண்டு,அதில் அநேகரைக்குடியேற்றுவித்து,அங்கேஅரசாட்சிபுரிந்துகொண்டு, சொந்தமாகஏகாந்த நட்சத்ரமென்னும் கப்பலொன்றை உண்டாக்கி அதன்மூலம் கடலில்யாத்திரைசெய்து உலகத்தில் அக்கிரமஞ்செய்வோரையெல்லாம் மெஸ்மரிஸத்தால்மயக்கித்தன்னுடைய தீவுக்கு ஏமாற்றிக்கொண்டு போய்த்தண்டனைபுரிந்தவிதமும், அப்போதிருந்த அரசாட்சியார் தன்மீது விரோதங்கொண்டு தன்னைப்பிடித்துச் சிட்சிக்க எத்தனையோமுறை முயன்றும் அகப்படாமல் அவள், தன்னைப் பிடிக்கிறேனென்று சொன்னவர்களையெல்லாம் தான்பிடித்து நிர்ப்பந்தித்தனுப்பியவல்லமையான காரியங்களும்,தன்னுடைய தீவிலுள்ளோருக்குஏற்பட்டிருந்த கொள்ளைநோயைத்தீர்ப்பதற்காக ஒரு டாக்டரை ஏமாற்றிக்கொண்டுபோனவிதமும், இத்தகைய அவள் அந்தடாக்டரை மணம்புரிந்துகொள்ள இசைந்ததும், அதற்காக அவள் லண்டனுக்குப்போயிருக்கும்போது போலீஸ்காரர்வசம் அகப்பட்டுச்சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும்போது தவறியோடிய விநோதமும், இன்னும்பல அற்புதவிஷயங்களும் இதில் அடங்கியிருப்பதால், இதனைப்படிக்கப்படிக்க அளவிலா ஆச்சரியமும் ஆனந்தமும் உண்டாகும். இதைப் படிப்பதனால் மெஸ்மரிஸத்தொழிலினுடைய ஆச்சரியமான செய்கைகளெல்லாம் நன்குவிளங்கும். இது கதைக்குக் கதையாயும், மெஸ்மரிஸத்தின் விநோதங்களை விளக்கக்கூடியதாயுமிருப்பதால் இதனை எல்லோரும்வாங்கி வாசிப்பது அவசியம். அதிலும்மனோவசியதத்துவம், மாணிடவசியம் முதலியவற்றைவாங்கிவாசித்த நண்பர்கள் தருவித்துப் பார்க்கவேண்டியது மிகவும் அவசியம்.

இதன் விலை ரூ 1—0—0

சந்திரகாசன் சாமர்த்தியங்கள் அல்லது தர்பாங்காதாசி.

இது, மனத்தைக் கவரத்தக்க மிக அற்புதம்வாய்ந்தநாவல்; படிக்கப்படிக்க இனிமையைத் தரும்; தாசிகளின் விநோதமாயச் செய்கைகளையெல்லாம் இதில் விளக்கமாகக்காணலாம்.

இதன் விலை ரூ 0—2—0

இஸ்லாம்நேசன் ஆபீஸ்,
12. அப்புமேஸ்திரி தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

இஸ்லாம் நேசன்.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை-3.] 1912 மார்ச்சு [வகை-7.

ஆழ்ந்தயோசனையே அறிவுடையார்க்கழகு.

உலகத்தில் எவருக்கும் எவ்விஷயத்திலும் ஆழ்ந்தயோசனையிருக்கவேண்டும்; இதுதான் அறிவுடையோர்க்கழகு பயக்கும். அப்படியில்லாமல் அவசரப்பட்டுக் காரியம் நடத்துவதால் முன்னுள்ள நட்புங்கெட்டுப் பிறர்மனஸ்தாபத்துக்காளாவதன்றி வேறொரு பயனுமின்றாம். உண்மையுணரும் தன்மையுமேற்படாது. இதற்குதாரணமாக ஒருசெய்கை நிகழ்ந்திருக்கின்றது. அஃதாவது:—

இரண்டு மூன்றுமாதங்களுக்குமுன் நமது நண்பரொருவர் மதுரையிலிருந்து, "தாழ்ப்பாளில்லாத கதவு" என்னும் ஒரு வியாசத்தையெழுதி அடியில் விவேகசிந்தாமணியெனக் கைச்சாத்திட்டு இஸ்லாம்நேசனில் பிரசுரிக்கும்படி அனுப்பியிருந்தார். அதனைப் படித்துப்பார்த்தபொழுது பள்ளிச்சிறுவர்க்கும் கன்னியர்க்கும் உபயோகப்படக்கூடிய சாதாரண விஷயமாயும், உயர்ந்த கல்விமான்கள் வாசித்து மகிழக்கூடிய தன்மையற்றதாயும்,நமதுநேசனில் பிரசுரிக்கத்தகாததாயும், ஆங்காங்கே வழுக்கள் நிறைந்ததாயுமிருந்தது. அதனால், அதனைப் பிரசுரிக்காமல் கிழித்தெறிந்துவிட உத்தேசித்தோம்; எனினும், விருப்பத்தோடு எழுதியனுப்பிய நண்பர் சிறிது விசனமடையக்கூடுமென்று கருதி, அவருடைய தாக்ஷிண்யத்திற்காகச் சிற்சில விடங்களிலிருந்த எழுத்துப்பிழைகளைத்திருத்தி ஜனவரிமீ பத்திரிகையில் பிரசுரித்தோம்; அவ்வாறு பிரசுரிக்கும்போது அவ்வியாசமுழுதும், அனுப்பிய நண்பருடைய சிருஷ்டிப்பாயிருக்கக்கூடுமென்றும், வியாசமெழுதுவோர் மாற்றுப்பெயர் வைத்தெழுதும் வழக்கம்போலத்தம்முடைய பெயருக்குப்பதிலாக "விவேகசிந்தாமணி" என்னும் பெயரை

அடியில்போட்டிருக்கலாமென்றும், "விவேகசிந்தாமணி" என்னும் ஒரு பத்திரிகையிருப்பதால் இப்பெயருடன் வெளிப்படுத்தின் இவ்விஷயம் அதிலிருந்து எடுத்ததாகக்கருதப்படுமாகையால் இப்பெயரைமாற்றி வேறு பெயரிடவேண்டுமென்றும் கருதி, அப்பெயரைமாற்றி "விவேகபோதகன்" என்ற பெயரிட்டு, "ஒருவாறு இப்படிப் பெயர்மாற்றினதற்காக வியாசமனுப்பினோர் கோபித்தாலும் கோபிக்கக்கூடும்" என்று நினைத்து அவர்க்குச் சமாதானமாகும்பொருட்டு அடியில் அவ்விபரத்தைப் புட்நோட்டால் விளக்கிக்காட்டியும் அடியில் "ப-ர்." என்று கையொப்பமிட்டும் பிரசுரித்தோம். இக்குறிப்பினாலேயே இவ்விஷயம் நம்மாலேயே வேறொரு பத்திரிகையிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டதன்றென்பதும், வேறொருவர் எழுதியனுப்பிக்கேட்டுக்கொண்டதன்மேல் பிரசுரிக்கப்பட்டதென்பதும் சாமானியர்க்கும் நன்குவிளங்கும். அன்றியும் எடிட்டர்கலம் தவிர மற்றவை நம்மால் எழுதப்படுவனவல்ல; ஒவ்வொன்றும் நிருபரேயால் எழுதப்படுவது. * அவ்வாறு எழுதப்பட்டுவரும் வியாசங்களுட்சில உயர்ந்தவைகளாயும், சில தாழ்ந்தவைகளாயும், சில வேறு பத்திரிகைகளிலிருந்து எடுத்தெழுதப்பட்டவைகளாயுமிருக்கும். அவற்றையெல்லாம் ஆராய்ந்து நமது பத்திரிகையில் பிரசுரிக்கத்தக்கதைமாத்திரம் பிரசுரித்து, மற்றவைகளைத்தள்ளிவிடுவோம்; அவற்றுள்ளும் வேறு பத்திரிகையில்வந்த விஷயமென்பது தெரிந்தால் அதனை அதிக ஜாக்கிரதையுடன் தள்ளிவிடுவது வழக்கம்; இவ்விஷயத்தில் நமது பார்வைக்கெட்டாததாயிருந்தால் தவறிப்போவதுமுண்டு. "யானைக்கும் ஒருசமயம் அடிசறுக்கும்" ஆனால், வர்த்தமானங்களைமாத்திரம்ஒரு பத்திரிகையிலிருந்து மற்றொரு பத்திரிகைக்கு எடுக்கும் வழக்கம்போல எடுத்துக்கொள்வோம்; இவ்வழக்கம் எல்லாப் பத்திரிகைகட்கும் உரியதே. ஆயினும், நாம் அச்சமாசாரங்களைக்கூடவேண்டிய நண்பர்களுடைய பத்திரிகைகளிலிருந்து மாத்திரம் அவர்கள் சம்மதத்தோடு எடுத்துக்கொள்வோம். .

---

* நிருபர்களுடைய அபிப்பிராயத்துக்குப் பத்திராதிபர்கள் உத்தரவாதியாகமாட்டார்கள். நிருபத்தினுடைய அபிப்பிராயம் எம்முடைய அபிப்பிராயமன்று. இவ்விதி இஸ்லாம் நேசனுக்கு எக்காலத்திலும் உண்டு.

ப. ர.

இப்படியிருக்க, நமக்கு மிக்க நண்பரும், நம்மைநேரில் நன்குணர்ந்தவருமாகிய விவேகசிந்தாமணி பத்திராதிபர், சென்ற பிப்ரவரிமீ பத்திரிகையில் "விஷயத்திருட்டு" என்னும் தலைப்பெயரின்கீழ், மேற்படி, "தாழ்ப்பாளில்லாத கதவு" என்னும் விஷயம் தம்முடைய விவேகசிந்தாமணி 5 வது வால்யூம் 3 வது நெ-1886 ௵ ஜூலை மாதத்துச் சஞ்சிகையில் 92-93-வது பக்கங்களில் "சிறுவர்க்கான பக்கம்" என்ற தலைப்பின்கீழ்ப் பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவும், அதனை இப்பொழுது நாம் கவர்ந்தச்சிட்டு அக்களவை மறைக்கும்பொருட்டு "விவேகபோதகன்" என்று கையொப்பமிட்டிருப்பதாகவும், இந்த ஆச்சரியமான விஷயத்திருட்டைத் தாம் மகா தீரத்துடன் கண்டுபிடித்துவிட்டதாகவும் கோபக்குறிகாட்டி எழுதியிருக்கிறார். இவர் எழுதியபடியே அவ்விஷயம் இவர்க்குச்சொந்தமானதாகவே யிருக்கலாம். ஆயினும், அதனை நாமே எடுத்துப் பிரசுரித்துக்கொண்டோமென்று இவர் எப்படித் தீர்மானிக்கலாம்? நாம் மேற்கூறியபடி, புட்நோட்டே, "இது அன்னியருடைய விஷயம்" என்பதை விளக்கிக்காட்டக்கூடியதாயிருக்க அதை ஆழ்ந்துயோசிக்காமல் நண்பர் இவ்வாறு அவசரப்பட்டு எழுதினதைப்பற்றி மிகவிசனிக்கிறோம்; நாம் இந்த விஷயத்தை எடுத்துக்கொண்டு இதனை மறைப்பதற்காக இவ்வாறு அன்னியருடைய வியாசம்போலத் தோற்றுவதற்குத் தந்திரமாக ஒருபுட்நோட்டும்போட்டுவிட்டோமென்று நண்பர் கருதியிருந்தாலும் கருதியிருக்கக்கூடும்; அப்படிப் பத்திரிகையிலிருந்து விஷயம் எடுக்கக்கூடியவன் அப்பத்திரிகையின் பெயரையே குறிப்பிட்டு, "விவேகசிந்தாமணியென்னும் ஒரு பத்திரிகையிருப்பதால் அப்பெயர்போடும்பக்ஷத்தில் இவ்விஷயம் அப்பத்திரிகையினின்றும் எடுக்கப்பட்டதென்று கருதக்கூடுமென நினைத்துப் பெயர் மாற்றப்பட்டது" என்று எழுதுவானா? இதனாலேயேவிவேகபோதகன் என்ற பெயருக்குமுன் விவேகசிந்தாமணியென்னும் பெயர்போட்டு ஒருவர் வியாசம் எழுதியிருக்கிறாரென்றும், அதை முன்னே நாம் கூறியவாறுகருதி மாற்றியிருக்கிறோமென்பதும் விளங்கவில்லையா? இஃதெல்லாம் ஒழியட்டும்; நாம் அவ்விஷயத்தைக் கவர்ந்துகொண்டே அதற்குச் சமாதானமாக இப்படியெல்லாம் எழுதினோமென்று இவர் முடிவுசெய்துகொள்வதாயிருந்தாலும், அப்படியாவது கஷ்டப்பட்டு எடுத்தெழுதி மறைப்பதற்கு இது என்ன! உலகத்தில் இல்லாத நூதனமான விஷயமா? இவ்வியாசமில்லாவிட்டால் இ

ஸ்லாம்நேசனுக்குச் சிறப்புண்டாகமாட்டாதா? இத்தகைய விஷயங்களை எதிர்நோக்கித்தானா நேசன் நடைபெறுகின்றது? நாம் எத்தனையோ உயர்ந்தபத்திரிகைகட்கு விஷயதானம் செய்யக்கூடிய நிலைமையை யடைந்திருந்தும் இவ்விதமான ஒரு தமிழறிவில்லாதபோலிகள் அடையக்கூடிய கெட்டபெயரையும் ஏற்றுக்கொள்ள நேர்ந்தது கிரகசாரபலனென்றே சொல்லவேண்டும்; இது நமக்குவியாசமெழுதிய நண்பரின் குறைவு; அவர், வியாசத்தின்கீழ் "விவேகசிந்தாமணி" என்று மாற்றுப்பெயர்போல் கைச்சாத்திடாமல், "விவேகசிந்தாமணியென்னும் பத்திரிகையினின்று எடுத்தெழுதிய விஷயம்" என்று எழுதியிருப்பாராயின் இவ்வளவு அசம்பாவிதம் ஏற்பட்டிராது. விவேகசிந்தாமணிப் பத்திராபர் நமக்கு எவ்வளவோ முக்கிய நண்பராயிருந்தும், "இஸ்லாம்நேசன் பத்திராபர் இப்படிச் செய்வாரா" என்று சிறிதும் யோசிக்காமல் எழுதியிருக்கிறார்; இவர் நமக்கு இவ்விஷயத்தைப்பற்றிக்கடிதமெழுதிக்கேட்டிருக்கலாம்; அல்லது நேரில் வினவியிருக்கலாம்; அப்படிக்கேட்டிருந்தால் அப்பொழுதே நாம் இந்த உண்மையான சமாதானத்தைக் கூறியிருப்போம். அப்படியில்லாமல் இந்த உபயோகமற்ற விஷயத்துக்காக இவர் நீண்டவியாசமெழுதியது அமைதியின்மையைக்காட்டுகின்றது. மேற்கண்ட விஷயம் நிச்சயமாக இவருடைய பத்திரிகையிலுள்ளதென்று தெரிந்திருந்தால் நாம் பிரசுரித்திருக்கவேமாட்டோம்; விஷயம் நாட்பட்டதாதலாலும், விவேகசிந்தாமணியின் பழையகாப்பிகள் நம்மிடமில்லாததாலும் இஃது அதிலுள்ளவிஷயமென்பது தெரிந்துகொள்ளக்கூடாமற்போயிற்று. ஒருவர் எழுதும் வியாசத்தை விவேகசிந்தாமணியில் உள்ளதுதானென்று எப்படி அறியக்கூடும்?; விவேகசிந்தாமணியின் ஆதியோடந்தமான எல்லா ஸஞ்சிகைகளும் நம்மிடமிருந்தால்மாத்திரம் அறிந்துகொள்ளலாம். ஆதலால் நண்பர் பழைய பத்திரிகைகளையெல்லாம் அனுப்புவாரானால் அவற்றை ஆராய்ச்சிசெய்து இனி இத்தகைய விஷயங்களின் உண்மையைத்தெரிந்துகொள்வதற்கேதுவாகும். நண்பர் எவ்வாறுகருதினும் தமிழுலகம் நமதுண்மையுயர்வை உணராமலிராது; இவையெல்லாம் ஒருபக்கமிருக்க நண்பர் உண்மையை உணராமற்போனதும், அவர்வியாசத்தில் வரம்புகடந்து சில அசம்பாவிதமான வார்த்தைகளை உபயோகித்திருப்பதும் அறிவுடையோர்வெறுக்கக்கூடியவாயிருக்கின்றன. இப்படி அவசரப்படுவதுதானா இவர் சுமார் 25 வருஷகாலமாகப் பத்திரிகை நடத்தியதின் அனுபவமுதிர்ச்சி?.

ப—ர்.

துருக்கி இத்தாலிய யுத்த செய்திகள்.

சிரெனிக்காவிலுள்ள துருக்கிய அராபியர்கள், பெங்காஸி, டெர்னா, தப்ருக் முதலிய விடங்களிலுள்ள இத்தாலியர்களை அடிக்கடி தாக்கி வருகிறார்களென்றும், சௌடானிலிருந்தும் அராபியர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்களென்றும், பெங்காஸிக்குக்கிழக்கே 17 மைல் தூரத்தில் என்வர்பே அவர்களின் சேனைகளிருக்கின்றனவென்றும், சேனைகளிருக்குமிடத்தின் விஸ்தீரணம் 4 மைல் சுற்றளவிருக்குமென்றும், பெங்காஸிக்கருகேயுள்ள பேஹெட் என்ற ஓயாசிஸில் உபயோகிப்பதற்கு வேண்டிய தண்ணீர்க்கிணறுகளிருக்கின்றமையால் அவ்விடத்தில் துருக்கியர்கள் தைரியமாய் அடிக்கடி எதிர்த்துவருகிறார்களென்றும், அவ்விடத்தில் தண்ணீர்ச் சௌகரியமிருந்தாலும் இத்தாலியச்சேனைகளுக்குக் கப்பல்களிலிருந்து தண்ணீர் உதவப்படுகிறதென்றும், இவ்விடங்களில் இத்தாலியர்க்குத் தண்ணீர்க்கஷ்டம் அதிகமாயிருக்கிறதென்றும், சையித்பாக்ஷாவின் புதிய மந்திராலோசனைச் சபையால் சண்டையின் நிலைமை மாறுபடக்கூடுமென்று இப்பொழுது சொல்லமுடியாதென்றும், துருக்கி கவர்ன்மெண்டார் சமாதானமாய்ப்போகும்படி சொன்னாலும், என்வர்பே சம்மதிக்கமாட்டாரென்றும், அவரிடமிருக்கும் அரபிவீரர்களும் அவருடைய நோக்கத்துக்கு மாற்றமாகச் சண்டையை நிறுத்தி ஆயுதங்களைக் கீழேவைக்கமாட்டார்களென்றும், சமாதானத்தைப்பற்றிய பிரஸ்தாபங்களை நம்புவதற்கு ஏதுவில்லையென்றும், இத்தாலியா திரிப்போலியைச் சேர்த்துக்கொண்டதாய் அறிவித்திருக்கும் டிக்கிரியே சமாதானப்பேச்சைப் பேசுதற்கும்கூட இடங்கொடுக்காமலிருக்கிறதென்றும், அவர்கள் நோக்கம்போல திரிப்போலியை விட்டுவிடத் துருக்கியர்க்குத் தினையளவும் இஷ்டமில்லையென்றும், இத்தாலிக்குமாத்திரம் சமாதானமாய்ப்போக விருப்பமிருக்கிறதென்றும், இருந்தாலும் சலோனிக்கா கமிட்டியார் கடைசிவரை யுத்தஞ்செய்தே தீரவேண்டுமென்று சொல்லுகிறார்களென்றும், துருக்கியர் தங்களுடைய பூமியில் எள்ளத்தனை யிடத்

தையாவது இத்தாலியர்வசம் விடமாட்டார்களென்றும், இவ்விதமான பேச்சுக்களையெல்லாம் ஒரு துருக்கியமந்திரி பேசினாரென்றும், இன்னும் யுத்தம் நடந்துவருகிறதென்றும், சென்ற டிசம்பர் மாதம் 31உவரை காற்று அதிகக்கொடூரமாயிருந்ததால் ஆகாயக்கப்பல்கள் பிரயோசனப்படாமற் போயினவென்றும், இத்தாலியருடைய யுத்தசாமான்களும் சேனைகளும் காற்றின் தொந்தரவால் இறங்கமுடியவில்லையென்றும், சிரெய்னிக்காவிலுள்ள துறைமுகங்களுக்குத் தபாற்கடிதங்கள்கூடப் போகவர ஏதுவில்லாமற் போனதால் இத்தாலியர் அதிகக்கஷ்டமடைந்தார்களென்றும், இன்னும், கிறிஸ்துமஸ் சமயத்தில் 35, 89. ரிஜிமெண்டுகளை நேப்பிள்ஸ் நகரத்திலிருந்து ஏற்றிக்கொண்டு சென்ற 4 டிரான்ஸ்போர்ட்டுக்கப்பல்கள் திரிப்போலியிலுள்ள செளரா என்றவிடத்தில் அந்தச் சேனைகளை இறக்கும்படி கூடியவரை முயன்றும் வாயுவின் உக்கிரத்தால் முடியாமற்போகவே மீண்டும் அவை இத்தாலிக்கே திரும்பிப்போக நேர்ந்ததென்றும், யுத்தம் ஆரம்பித்து மூன்றுமாதமாகியும், திரிப்போலியில் 9,2000 இத்தாலிய வீரர்களிருந்தும். 1,100 மைல் நீளமுள்ள திரிப்போலிக்கரையில் 5 இடங்களில் மாத்திரமிருந்துகொண்டு எதிரிகளால் அடிக்கடி தாக்கப்பட்டு வருகிறார்களேயன்றி மேற்செல்ல முடியவில்லையென்றும், உள்நாடுகளெல்லாம் துருக்கிய அரபியர்கள்வசமிருக்கின்றனவென்றும் லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் நிருபநேயர் தெரிவிப்பதாக இரங்கூன் ஸைபுல் இஸ்லாம் கூறுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கும்போது சண்டை இப்பொழுது முடிவு பெறாதென்றும், நீடித்து நடக்குமென்றும், இத்தாலியரைத் துருக்கியர்கள் இட்டிலகப்பட்ட முயல்களைப்போல வேட்டையாடிக்கொண்டிருப்பார்களென்றும் விளங்குகின்றது. அடியிற் குறிப்பிட்டெழுதப்பட்டிருக்கும் பெங்காசியுத்தம் முதலியவைகளும் இதற்கறிகுறியாகின்றன.

பெங்காசியுத்தம்:—சில தினங்களுக்கு முன் பெங்காஸியில் துருக்கிய வீரர்களால் அடிக்கடித்தொந்தரவு செய்யப்பட்டுவரும் இத்தாலியச்சேனைகள் ஒரே மொத்தமாகத்திரண்டு துருக்கிய அராபியரோடு மிகவும் உக்கிரமாகச் சண்டைதொடுத்தார்கள். அப்போது அவர்களும் வீராவேசத்தோடு எதிர்த்துத்தாக்கினார்கள்; இராத்திரி 12 மணி வரைக்கும் சண்டை நடந்தது. இத்தாலியருக்குக் கப்பலிலிருந்து பீரங்கி உதவிகிடைத்தது; ஆயினும், துருக்கிய அரபிகள் அதிக தைரியத்தோடு எதிர்த்தபடியால் இத்தாலியர் திகிலடைந்தனர். அச்சமயத்தில் துருக்கி அரபிவீரர்கள் அவர்கள்மேல் விழுந்து கத்தியால் வெட்டிப்பலரை நாசப்படுத்தினார்கள்; அவர்களின் வெட்டுக்குத்தப்பிய இத்தாலியர் எதிர்க்க வல்லமையின்றி கடற்கரையருகேயுள்ள அரண்களை நோக்கி ஓடிவிட்டார்கள்; அதில் சுமார் 500 இத்தாலியர் கொல்லப்பட்டார்கள்; அவர்களுள் அநேகம் ஆபீசர்களும் உயிரிழந்தனர்; அளவற்ற இத்தாலியர் காயமடைந்தனர்; துருக்கியர்க்கு இரண்டு பெரிய பீரங்கிகளும், வேறுபல சிறு பீரங்கிகளும், 500 துப்பாக்கிகளும், 5 பெட்டிகளடங்கிய வெடிகுண்டுகளும், 30 கோவேறு கழுதைகளும் கிடைத்தன; அப்போது சிறையாக்கிக்கொண்டு வரப்பட்ட இத்தாலியரனைவரும் துருக்கித்தளபதியவர்களிடத்தில், "சண்டையிட இஷ்டமில்லாதிருந்த எங்களை, எங்கள் தலைவர்கள் கட்டாயப்படுத்திக் கொண்டுவந்து சண்டைபோடும்படி செய்தார்கள்; நாங்களே வேண்டுமென்று சண்டைக்கு வரவில்லை; ஆதலால், தயவுசெய்து எங்களை விட்டுவிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்; அதனைத் துருக்கியசேனைத்தலைவர்கேட்டு, "பலமற்றுச்சரணமடைந்தவர்களை நாங்கள் கொல்லமாட்டோம்; பேடித்தனமாய்ப்பெண்களையும் குழந்தைகளையும் கொல்லும்வழக்கம் உங்கள் இத்தாலியர்க்குத்தாம் உண்டு; நாங்கள் எதிர்ப்பவர்களை மாத்திரந்தான் கொல்வோம்; நீங்கள் பிழைத்துப்போகலாம்" என்று சொல்லி அவர்களை விட்டுவிடும்படி ஏற்பாடுசெய்தார்; இவ்வாறு விடவே அப்படி விடுதலையடைந்த இத்தாலியர்க்கு மனக்கலக்கம் நீங்கியதுமன்றி, அவர்களுடைய படைத்தலைவர்கள்மீதும் கவர்ன்மெண்டுமீதும் வெறுப்புண்டாய் விட்டது. இனிச்சீக்கிரத்தில் இத்தாலியக்கவர்ன்மெண்டின் உத்தரவை அவர்கள் மீறிவிடுவார்களென்று தெரிகிறது. என்வர்பே இந்தயுத்தத்தில் குதிரைமீதிருந்து படையில் உலாவித் தம்முடையவீரர்களுக்கு வீராவேச வார்த்தைகளைச்சொல்லி உற்சாகமுண்டாக்கி வெற்றியடையும்படி செய்தார்; இது மிகவும் மெச்சத்தக்கது. (ஸை-இ.)

ஜனவரிமீ 6உ கும்ஸில் நடந்தயுத்தம்:—ஷை 6உ கும்ஸிலுள்ள இத்தாலியப்படைகள் நகரத்தைவிட்டு ஒரு கலோமிட்டர் தூரம் முன்செல்ல ஆரம்பித்தார்களாம். அப்போது துருக்கிப்

படைகள், அவர்களுக்கு இடப்பக்கத்தில் வந்து எதிர்த்தடித்தார்களாம். அவ்வாறாகவே இத்தாலியர் எதிர்த்து நிற்கவல்லமையின்றிப் புறங்காட்டியோடினார்களாம்; அதில் 50 இத்தாலியர் உயிரிழந்தார்களென்றும், அளவற்ற யுத்தசாமான்களும் கிடைத்தனவென்றும், பிந்தின லபனிலிருந்த 150 இத்தாலியர்களில் ஒருவர் கூடத்தவறாமல் இறந்துவிட்டார்களென்றும், துருக்கியர் பக்கத்தில் ஒரு ஆபிஸரும், இரண்டு துருக்கிய சோல்ஜர்களும் 15 அரபிகளும் உயிர் நீங்கினரென்றும், 37 பேர் காயமடைந்தனரென்றும் ஒரு ஸ்திரீக்கும் குழந்தைக்குங்கூடக் காயம்பட்டதென்றும் சமாசாரம் எட்டுகிறது. இது, திரிப்போலியிலிருக்கின்ற துருக்கி பாளயத்திலிருந்து துருக்கியுத்த மந்திரியாகிய ஜெனரல் ஷவகத் பாக்ஷாவுக்குக் கிடைத்த செய்தியென்று அரசுப்பத்திரிகைகளில் வெளியாயிருக்கிறது.

கும்ஸில் நடந்த மற்றொருயுத்தம்:—சென்ற ஜனவரி௴ 14௳ கும்ஸிலிருந்த இத்தாலியக் காலாட்படைகளை ஒரு கிலோமிட்டர் தூரத்திலிருந்து துருக்கிய அராபியர்கள் எதிர்த்துச்சண்டைதொடுத்ததில் இத்தாலியருள் 400 பேர் கொல்லப்பட்டார்களென்றும், துருக்கியரில் 47 பேர் ஷஹீதானார்களென்றும் அல்பலாக் என்ற பத்திரிகைக்குத் திரிப்போலியிலிருந்து தந்திசமாசாரம் எட்டியிருக்கிறதாம்.

கார்கரேஷ் என்றவிடத்தில் நடந்தயுத்தம்:--சென்ற ஜனவரி௴ 18௳ கார்கரேஷ் என்றவிடத்திற்குச் சமீபத்தில் 3½மணி நேரம்வரை கடுமையான சண்டை நடந்ததென்றும் அதில் இத்தாலியரில் 120பேர் இறந்தார்களென்றும், துருக்கியரில் 15பேர்சேதமானார்களென்றும், துருக்கியர்க்கு எதிரிகளிடமிருந்து அநேகம் யுத்தசாமான்களும், ஆகாரவஸ்துக்களும் அகப்பட்டனவென்றும் சமாசாரம் எட்டுகிறது.

துருக்கிய அரபியர் அயின் ஜாராவில் முன்னேறிவிட்டார்கள்:—துருக்கிய அரபியர்கள் அயின் ஜாராவைநோக்கி 20கிலோமிட்டர் தூரம் முன்னேறி வந்துவிட்டார்களென்று ரோம் தந்தியால் தெரியவருகிறதென்று அல்பலாக்பத்திரிகை கூறுகின்றது.

இத்தாலியக் கப்பலொன்று ஜலத்தில் முழுகிப்போயிற்று:— 4000 டன் கரியேற்றிக்கொண்டு இத்தாலியிலிருந்து திரிப்போலிக்கு வந்த இத்தாலியக்கப்பலொன்று திரிப்போலிக்கரைக்குச் சமீபத்தே அலையிலகப்பட்டுச் சுழன்று முழுகிப்போயிற்றாம்.

ஜான்ஜிபார் முஸ்லிம்களுக்கு துருக்கியுத்த விஷயத்திலுள்ள அபிமானம்:—ஆப்பிரிக்காவின் கீழ்ப்புறத்திலுள்ள ஜான்ஜிபார் என்ற தீவின்கரையில் இத்தாலியக்கப்பலொன்று வந்து சாமான்களை யிறக்கப்போகுந்தருணத்தில், திரிப்போலி யுத்தவிஷயமாய் ஆத்திரங்கொண்டிருந்த அத்தீவின் முஸ்லிம்கள், அந்தக்கப்பலைக் கரைக்குவாராதபடி தடுத்து விட்டார்களென்று தந்திச்செய்தி கிடைத்திருப்பதாக அல்முஐயத் என்ற பத்திரிகை தெரிவிக்கின்றது. இஃதன்றோ மதாபிமானம்!.

இத்தாலியர் வீரரோடு சண்டைசெய்ய முடியாமல் பேடித்தனமாய்ப்பெண்களையும் பிள்ளைகளையும் கொலைசெய்கிறார்கள்:—இப்போது இத்தாலியரின் வசப்பட்டிருக்கும் சில கிராமங்களிலுள்ள முஸ்லிம் பெண்களையும் குழந்தைகளையும், விருத்தாப்பியர்களையும் விவேகமற்ற இத்தாலியர்கள் சிற்சில சமயங்களில் இரக்கமின்றிக்கொலைசெய்து வருகிறார்களாம். இந்தச்செய்தி துருக்கிச் சேனைத்தலைவராகிய கர்னல் நஷ்அத்பே என்பவருக்குத்தெரியவே அவர், இத்தாலியஜெனராலுக்கு, "ஜனரலே! உம்முடைய படைவீரர்கள் நியாயமின்றிக் குடிஜனங்களைக் கொல்வதாகத்தெரிகிறது; இது எவ்வளவும் தகாதகாரியம், இனி மேலும் இப்படி நடக்கும்பக்ஷத்தில் என்கைவசம் சிறைப்பட்டிருக்கும் 8000 இத்தாலியரையும் கொன்றுவிடுவேன்" என்று எழுதினாராம். இதைக்கண்டு அந்த இத்தாலிய ஜனரல்பயந்து, "இனி அப்படிச்செய்யக்கூடாது" என்று தம் சைனியங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாராம்.

கீமியா உரையறியாப் பாமரரைப் பதப்படுத்தல்.

* * *

(பிப்ரவரி மாதசஞ்சிகையின் தொடர்.)

1911௵ கீமியாஉரைமறுக்கும் "கெருவிக்கறிவிப்பு" என்று நாமஞ்சூட்டி வெளியிட்ட போதகமறிந்தோனென் றோதித்திரியும் புண்ணியரே! நீவிர் கீமியாவின்கருத்தறியா ஆரிகளுக்கு அபி

வுறுத்தல்என்றகோட்டீசைவிளக்கிக்கொள்ளச்சக்தியற்றுமுஜதஹிதுகளான இமாம்களை துன்மார்க்கரென்ற வியாக்கியானர்தரும்முல்ஹிதென்று உமதுபுத்தகம் 8-வது பக்கத்தில்தாக்கிக் கால்சறுக்கிவிட்டீரே. இபிலீசுவலேயில் அகப்பட்டீரே. ஞானமதியில்லாதநண்பரே! நீவிர்மதுகோட்டீசை நிராகரணம் செய்வதற்காக எடுத்தெழுதிய ஸூபியாவசனங்களையும் ஆரிபுகள் பாடல்களையும் பயனைவிளக்கிச் சாரங்களைக்கண்டுணர உமக்குச் சக்தியுண்டா. அப்படிக்கிருக்குமாயின் நீர்காட்டியிருக்குங் கிதாபினுடைய முன்பின்னுள்ள வசனங்களின் அம்சங்களை யறிந்திருப்பீர். அவ்விதமறியும்பட்சத்தில் நாமேன் வீண்வாதத்திற்கு வெளிப்படவேண்டுமென்பதை யுமதிருதயமே உபதேசம்புரிந்து உமதறியாமைகண்டு பெட்டியின் சர்ப்பம்போலொடுங்கியிருப்பீர்.

மரைக்காயரே! மேற்கண்ட கோட்டீசில் எழுதப்பட்டுள்ள கனம் மௌலவி அப்துர்றஹிமான் அவர்களால்வரையப்பட்ட கிருபத்தின்தொடக்கமுடிவையுணராது நடுவேயுள்ளவைக்கடையிற்கடாவிருப்பதாய்த் திட்டி, நீர்பிடித்தமுயலுக்குக்கால் இரண்டென்றுசாதிக்கத் தலைப்பட்டீர். ஜட்சிகளின் ஜட்சிமெண்டு முடிவுகள் கடைசியிற்காட்டியிருக்குங் கருத்துரைகளென்பதே மறுக்கப்படாத சத்தியமாகையால் மேற்படி கடிதங் கியாமத்திற்சரீரசம்பந்தமில்லையென்றுபகர்ந்த அவுலியாக்கள் கத்தாவிலாகி என்றால்கால்சறுக்கிவிட்டார்களென்றச்சம்பூட்டியுங் கீமியாவில் தேகங்களையெழுப்புவதை இன்காறுசெய்வதாய் தென்படவில்லையென்றால் நான்குவால்யங்களிலு மில்லையென்றெழுதி முந்தினவால்யம் 9-வது பக்கத்தில் இவையெல்லாவற்றிலுஞ் சரீரமதைத்தொடர்ந்திருக்குமென்ற வாசகத்தைக்கொண்டு ஆத்மாவுடையும் நற்பதவி துர்ப்பதவிகளில் தேகமதைத்தொடர்ந்திருக்குமென்ற கருத்துரையே கடிதத்தின்முடிவென்று அறியாமல் நடுவில்லாஹிர்க்காரரின் முடிவென்று மறுத்துப் பேசும்போது வேறு எவ்விதமான ஜவாபை எழுதுகிறது என்றதே உமது சித்தாந்தபட்டத்தைக் காட்டுகின்றதென்று மௌனஞ்சாதித்திருக்கின்றீர். பரிதாபம்!

இதின் கருத்தையறியாதவர் இனியாவை யெப்படி விளக்கிக்கொள்வீர்? இதின்படியாவது பாத்தின் முடிவுகளையெல்லாம் லாஹிர்காரரின் முடிவென்றுமறுத்துப்பேசும் அறிவிலிகட்குவேறு என்னவிதமான பாத்தின்ஜவாபையான் எழுதுகிறதென்றதாய்வெள்ளிடைமலைபோல் விளங்கக்கிடக்கின்றன. இது பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளும் அறிந்துகொள்ளும் விஷயம். ஆரிகுபில்லாஹியவர்கள் அருமைக்குமாரரே! ஒருவரோடொருவர் வாதாடவந்தால் எதிரியின்சொற்களைத் தீரஅறிந்து அதற்குத் தக்கவகையான மறுப்பெழுதவேண்டும். அதுதான் கற்றோரின் குணம். அப்படிக்கில்லாமல் கோட்டீசிலும் கருத்தின்னதுதானென்று விபரித்துணர்த்திலர் என்றுமது புத்தகம் 1-வது பேஜில் கண்டிருக்கிறீர். எமதுகோட்டீசில் மறுமுறை உயிர்கொடுத்தெழுப்புவதற்கு இதுவேசரீரம் வேண்டுமென்ற அவசியமில்லையென்ற பதத்தைக்காட்டியும் அதற்குத் தேகசம்பந்தமில்லையென்போரைச் சலஞ்சாதிக்கின்றவரென்று தீட்டியும் ஈறுகாலத்தில் சரீரசம்பந்தமேயில்லையென்பார் காபிராகிவிட்டாரென்று ஆரிபு நாயகமவர்கள் அருளியதாய் அறைந்துமதைத்துலக்காமல் விடுத்ததாகிறது, மேற்கண்டபதத்திற்கு அறிவிற்றாழ்ந்தவர்களுந் தேகசம்பந்தமில்லையென்ற கருத்தமைக்கவேமாட்டார்கள். உமதறியாமையால்கருத்தமைத்துக் கால்சறுக்கிவிட்டீரென்று கற்றவர்களுமக்குநற்புத்தி புகட்டிவைப்பார்களென்பதைக் கருதியே.

இன்னும்வரும்.
மு. மு. நாகூர்.

அருமந்தபொருள் விளக்கம்.

(பிப்ரவரி மாதசஞ்சிகையின் தொடர்.)

முத்து மரைக்காயரவர்கள் வெளியிட்டிருக்கின்ற "ஸூபியாவுரை மறுக்குங் கெருவிக்கறிவிப்பு" என்ற புத்தகத்தின் 6 வது பக்கத்திலே "வேதமாதிய பலகிரந்தங்களிலும் மறுமையில் உயிரை உடலோடுமீட்டி யெழுப்பி, தான்செய்கிரியைகளுக்குத் தக்கபிரதியளிக்கப்படும் என்றும் இமாமவர்களின் சுன்னத்து ஜமாஅத்துடைய இஃதிகாது உடைய பாடத்திலும் கூறப்பட்டிருக்கின்றனவேயெனில், இதுவோ ஹகீகத்தென்னும் உட்பொருளுக்கு மேற்கூடான தொலியாயிருக்கிறதென்று முன்னமே விளக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் ஆதிமுதல் அந்தம்பரியந்தம் நிகழும் எல்லாசம்பவச் சமாசாரங்களும் வருகிறது. இஃதன்றி, மதபேத மோதிமறைக்கும் மறைசொல்வதெல்லாங் கதையாய் முடி

த்துவைத்தாள் கண்ணே பராபரமே, என்று குணங்குடியாரும் கூறியிருக்கின்றார்" என்று வரைந்திருக்கின்றார்கள்.

இந்த வசனங்களில் கியாமத்தில் உயிரை உடலில்மீள்வித்து எழுப்பப்படுமென்று சுன்னத்து ஜமாஅத்துடைய பாடத்தில் இமாமவர்கள் சொல்லியிருப்பதைக்கூட மறைக்காயரவர்கள், இதுவோ ஹகீகத்தென்னும் உட்பொருளுக்கு மேற்கூடானதொலியாயிருக்கிறது என்று முன்னமே விளக்கப்பட்டிருப்பதாய்த் தந்திரமாக மறுக்கின்றார்கள். இவர்கள் புத்தகத்தில் இவ்வாறு, தொலியென்று ஒதுக்கிப்பேசிப் பாமர ஜனங்களின் மனத்தைக் குழப்பத்தில்வைத்தது மாத்திரமல்ல நாம் நேரிற்கண்டு பேசியபோதும் கியாமத்தில் உடலில் உயிரை மீள்வித்து எழுப்பப்படுகிறதே யில்லையென்றும், ஆன்மாவுக்குத்தேகம், ஆவசியகமில்லையென்றும்பகிரங்கமாயுந் துணிகரமாயும் சொல்லியிருக்கின்றார்கள். ஆதலால் இப்போது மிஸ்கீனாகிய நாம், மறைக்காயரவர்கள் கியாமத்தில் றாகுசரீரத்தில் மீள்விக்கப்படமாட்டாதென்று கொண்டிருக்கும் ஈமான் (விசுவாசம்) தவறென்பதற்கு நமது வேதங்கலையிலுள்ள சில ஆதாரங்களை எழுதுகின்றோம். அவையவருமாறு:—

(கு-ன்; சூரத்துல்பகறு-வஇதுகாலஇபுறாஹீமு என்னும்ஆயத்து)

ஒருநாள் இபுறாஹீம் நபியவர்கள் கடற்கரையோரமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது அங்கே செத்துக்கிடந்த ஒரு கழுதையின் மாமிசத்தை அங்குள்ள மிருகங்களும் பக்ஷிகளும் புசிக்கவும், சிலபாகம் மண்ணுக்கு இரையாகவுங்கண்டு அல்லாவை நோக்கி எனதுநாயனே! ஐவாய் மிருகங்களின் வயிற்றிலும் பக்ஷிகளின் இரைப்பையிலும் ஜீரணித்துப் போனவைகளையும், மண்ணுடன் மக்கிப்போனவைகளையும் ஒருங்குசேர்த்து உயிர்கொடுத்து எழுப்பக்கூடியவனென்று, உன்னை நானறிந்து இருக்கின்றேனாயினும், அவைகளை யெப்படி ஒருங்குபடுத்தி உயிர்த்தெழுப்புவாயென்பதை அறிய ஆசைப்படுகிறேன். அதை இந்த அடிமைக்குத் தெரியப்படுத்துவாயாகவென்றுகேட்டார்கள்.

அதற்கு அல்லாகுத்தஆலா, இபுறாஹீமே! அவ்விதம் ஈமான் (விசுவாசம்) கொள்ளவில்லையாவென்றான். நபி அவர்கள் நான் அப்படி ஈமான்கொண்டேயிருக்கின்றேன். ஆகிலும் நான் அதைப்பிரத்தியக்ஷமாகப் பார்த்தால் அந்த நிருணயத்தை என் ஹிருதயத்தில் அதிகப்படுத்திக்கொள்வேன் என்றார்கள்.

இன்னும் வரும்.
சே. சே. தோப்புத்துறை.

பஞ்சாவரலாறு விளக்கம்.

(பிப்ரவரிமாத சஞ்சிகையின் றொடர்.)

இன்றையதினம் நமக்கு விசேஷ சிறப்புள்ள நாளும், ஆண்டவன் பூமிமுதலியவைகளைச் சிருஷ்டித்தநாளும், நபி ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களைச் சிருஷ்டித்தநாளும், நபி மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் பிரஊனென்னும் சண்டாள பாதகனை நீலாற்றிற் றாழ்த்தி வெற்றிபெற்றநாளும், சகல நன்மைகளும் பொருந்திய நாளுமான முஹர்றமாதமுதற் றெய்தியாயிருக்கின்றமையால் அந்த விக்கிரகத்தின் கையையெடுத்து மணிக்கட்டளவிலும் சிவப்பு வஸ்திரத்தினால் சுற்றிக்கட்டிக் கூடாரத்திற்குள் ஓரிடத்தில் நாட்டிவைத்து நாமெல்லோரும் அதைச் சூழ்ந்திருந்துகொண்டு யானைப்பதாதியையுடைய இராஜர்கள் போற்றிப்புகழும்நன்மையானவர்களும், பலதேசத்தவர்களும் வந்து பாததாமரையிற் பணிந்து போற்றிசெய்யும் இராஜாரானவர்களும், மலையைப் பழித்துந்திரண்ட தோட்களையுடையவர்களுமான சர்வரே ஆலம் நபிமுகம்மது முஸ்தபாசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மெய்ச்சும் புத்திரியிலும், பலத்தினு மிக்கசெல்வமருகரும், அறுஷப்புலியும், துல்துலென்னுங் குதிரைச் சாவாரிசெய்யுந்திராணி பெற்றவர்களுமான (அலிறலியல்லாகு அன்கவர்களின் புத்திரசிகாமணியாகிய இமாம் குசைன்றலியல்லாகு அன்கவர்கள், எஸீதிபுனு மஆபியா ராஜனின் உத்திரவுபெற்ற இபுனுஸியாதோடு யுத்தஞ்செய்து (கர்பலாவில்) ஷஹீதான மரணசரித்திரமென்னும் (மறதியாவையும்) நினைத்தகருமமுடியத்தக்கதான (காதிஅலி) என்னும் இஸ்மையுமோதுவமேயானால் யாதொரு சந்தேகமின்றி ஜயமடையலாமென்று சொன்னார். இவ்விதம், இவர்சொன்ன தந்திரயுத்தியைக் கேட்டவர்களெல்லாம் சந்துஷ்டியாகிப் பெரிய ஆவலோடும் நொண்டி படுக்கைப்பாயிற் சுற்றிவைத்திருந்த விக்கிரக வலதுகையை யெடுத்துவந்து அதன் மணிக்கட்டளவும் சிவப்புத்துணி பொதிந்துகட்டிக் கூடாரத்திற்குள் ஓர் பாகத்தில் நாட்டிவைத்து யாவரும் ஒரேமனமாய் ஏகோபித்துமேற்சொன்ன (மறதியாவையும்) நாதி அலியென்னும் இஸ்மையுமோதிச். சஞ்சலக் கடலில் தாழ்ந்தவர்களாயிருந்தார்கள்-இதுநிற்க'

ன் சமுகத்தை அதிக மரியாதையோடு மெத்தவும் வேண்டுதலாகக் கேட்டுக்கொள்கின்றேன். எனது புத்தகத்தைக்குறித்து வியந்தெழுதப்பட்ட தங்களின் பத்திராதிபர்குறிப்பில் இப்புத்தகம்ஒவ்வொரு முஸ்லிம்களிடத்திலும் அவசியமிருக்கவேண்டுமென எழுதியிருக்கின்றீர்கள். துரையே! தங்களில்நின்றும் வெளியான அந்தவார்த்தைமெத்தவும் பெருமையுள்ளதும், ஜனங்களால் நன்குமதிக்கப்படுவதாயுமிருக்கிறதென்பதில் யாதும் சந்தேகமின்று. ஆனால் தங்களுடைய அந்தச்சொல்லின்பேரில் ஜனங்கள்கொண்டிருக்கும் நம்பிக்கையைக் கெடுத்துவிடக்கூடிய மாற்றமானவார்த்தைகள்பின்னால் தங்களில் நின்றும் வெளியாகாவென்பதில் எனக்கதிகம் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

நான் எனது புத்தகத்தில் அல்லாவுடையவும், அவனது றஸூலினுடையவும், நேர்வழிபெற்ற இமாம்களினுடையவும் சொற்களில்வருகின்ற ஆதாரங்களையெடுத்து விவரித்துக்காட்டி பாஸிப்யாக்களின் கொள்கைகளை மறுத்திருக்கின்றேனென்பது நீதியானமனத்தையுடையவர்கள் அறியக்கூடிய விஷயமே. தங்களின் சந்தாதாரர்களில் இரண்டொருவர் கருதியிருப்பதுபோலப் புத்தகம் ஒருபோதும் முஸ்லிம்களின் சமாதானத்தைக் கெடுத்துவிடக்கூடிய தன்மையிலுள்ளதன்று. அநேகம் உலமாக்களும், சாதாத்துமார்களும், மவ்லவீமார்களும் அப்புத்தகம் மெச்சத்தக்கதெனச்சொல்லி எனக்கு நற்சாட்சிப்பத்திரங்கள் அனுப்பியிருக்கிறார்கள். பாஸிப்பாகூட்டத்தவர்களின் அறிவீனத்திலிருந்து முஸ்லிம்களை மீட்சிசெய்து சகல முஸ்லிம்களும் சமாதானத்தைக் கைக்கொண்டிருக்கவேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டவனாகவே நானப்புத்தகத்தை எழுதியிருக்கின்றேன். அப்புத்தகத்திலுள்ளவற்றைக்குறித்து பாஸிப்பாக்களால் கேட்கப்படுகின்ற எந்தக்கேள்விகளுக்கும் றஹ்மானின் உதவிகொண்டு நான் உத்தரஞ்சொல்ல ஆயத்தப்பட்டவனாகவிருக்கின்றேன். ஆதலால் பத்திராதிபதுரையே! தாங்கள் யாதொன்றைக்குறித்தும் சிந்தியாமல் உங்கள் பத்திரிகையில் பாஸிமார்க்க கண்டனத்தைத்தவறாது பிரசுரித்துக்கொண்டுவாருங்கள். அல்லாஹுத்தஆலா உங்களுக்கு நற்பயனைக் கொடுத்தருள்வானாக.

கொழும்பிலுள்ள...............என்பவர் தங்கள்பத்திரிகையிலெனது புத்தகத்தைப் பிரசுரியாது தடைசெய்தற்காகத் தங்களுக்குத் தூதுகள் எழுதுகின்றாரென்று எனதுநேசர்களில் சிலர் சொல்லக்கேட்டேன். அவர் பாஸிய்யாத்தரீக்கைச் சேர்ந்தவர்; அவருடையசொற்களுக்குத் தாங்கள் செவிகொடுத்துவிடாதீர்கள். இக்கடிதத்திற்குத் தங்களால் அனுப்பப்படும் அருமையான பதில் உத்தரக் கடிதத்தை மெத்தவும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றேன்.

இங்ஙனம்
உங்கள் தாழ்மையுள்ள
29—2—1912. ஐ. எல். எம். முகமது யூசுபு.
76. கியூமூர் ஸ்டிரீட், கொழும்பு.

பாஸிமார்க்க கண்டனம்.

(பிப்ரவரி மாத சஞ்சிகையின் தொடர்)

கேள்வி.

அல்குத்துபு இமாம்முஷ்ஷஉறானி(றலி) அவர்களுக்குரிய “மினன்” என்னும் கிதாபின்முதலாம் பக்கத்தில் அஷ்ஷெய்கு அபுஸ்ஸஊது இபுனு ஷிபுலீ (றலி) அவர்களின் ஷெய்காகியநாயகம் செய்யிதுனா அஷ்ஷெய்குஅப்துல்காதிறுல் ஜீலானி (றலி) அவர்களைவிட மக்காமால்மேற்கூறிய ஷிபுலீ (றலி) மிகஉயர்த்தியானவர்களென்று அஷ்ஷெய்கு முகியித்தீன் இபுனு அறபி (றலி) அவர்கள் கூறியிருக்கின்றதாக பாஸிப்யாத் தரீக்கைச்சேர்ந்த ஒருவரால்தற்போது புதிதாகத் தமிழில் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்ற “தலாயிலுல் அயிம்மா” வென்னும் புத்தகம் 4-ம்பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதே, இதற்கு மறுமொழி என்ன?

உத்தரம்.

ஷெய்குல் அக்பர் முகியித்தீன் இபுனு அறபி (றலி) அவர்களால் எழுதப்பட்ட “புத்தூஹாத்தல்மக்கிய்யா” வென்னும் கிதாபில் அவர்கள் சொல்லியிராத அநேகம் பொய்க்கட்டுகளையுங் கூடச்சேர்த்து அவர்களுக்குப்பின்னால் வந்தவர்கள் அச்சிட்டிருக்கின்றார்களென இமாம் சவுறானி (றலி) அன்ஹு அவர்களுக்குரிய “அல்யவாகீத்து வல் ஜெவாஹிர்” என்னும் கிதாபிலும் வேறு இமாம்களுக்குரிய இன்னுமநேக கிதாபுகளிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. இதுபோலவே நாயகம் அபூசஊது ஷிபுலீ(றலி)

அவர்களுடைய மக்காம் அவர்களின் செய்கு ஆகிய நாயகம் அப்துல் காதிறுல் ஜீலானி ஆண்டவர்களின் மக்காமைக்காண மேலிட்டுவிட்டதென முகிய்யத்தின் இபுனு அறபி (றலி) அவர்கள் தங்களுக்குரிய "புத்தூஹாத்துல் மக்கிய்யா" வென்னும் கிதாபில் கூறியிருக்கின்றதாகப் பேசிவரப்பட்டிருப்பவை பின்னால் அக்கிதாபில் சேர்க்கப்பட்ட செய்குல் அக்பர் முகிய்யத்தின் இபுனு அறபி (றலி) அவர்கள் சொல்லி இராத பொய்க்கட்டுகளிலொன்றென "புயூளாத்துர் றப்பானீயா" என்னும் கிதாபில் சொல்லப்பட்டிருக்கின்றது.

மேலும் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டவர்களின் சிஷாரிய நாயகம் அபூசுஊது ஷிப்லி (றலி) ஆகிறவர்கள், நானிறவன் ஒருசெய்கினுடைய பணிவிடையிலிருக்கின்றேனென்றும், அந்த செய்குக்குக் கொடுக்கப்பட்டவரிசைகளையும் மேன்மைகளையும் அவரைத்தவிரவுள்ள பின்னொருவருக்குக்கொடுக்கப்படவில்லையென்றுஞ்சொல்லி இருக்கின்றார்களென முகிய்யத்தின் இபுனு அறபி (றலி) அவர்கள் பேசிவந்திருக்கின்றதாக நாயகம் இபுனு அத்தாவுல்லாஹி இஸ்கந்தரீ சாதுலீ (றலி) அவர்களுக்குள்ள "லத்தாயிபுல்மினன்" என்னுங் கிதாபில்சொல்லப்பட்டிருக்கின்றதாய் இதுவும் "புயூளாத்துர் றப்பானிய்யா" என்னுங் கிதாபில் வருகின்றது.

இன்னும்முகிய்யத்தின் இபுனுஅறபி (றலி) அவர்கள்தங்களுக்குரிய "புத்தூஹாத்துல் மக்கிய்யா"என்னும் கிதாபு73-ம்பாபில் கவ்து நாயகம் அப்துல் காதிறுல் ஜீலானி ஆண்டவர்களைக் குறித்துச்சொல்லி இருக்கின்றதாவது:—எங்களுடைய செய்கு ஆகிய அப்துல் காதிறுல் ஜீலானீ (றலி) ஆகிறவர்கள் தனித்தமக்காமைப்பெற்ற குத்புமார்களிலொருவராக பகுதாதில் வெளியானார்கள். அவர்களுக்கு மனதைரியமும் உள்ளமையைக்கொண்டு மனிதர்களின் மீது அடர்ந்தேறி முன்னேறிச் செல்லுதலுமுண்டாயிருந்தன. இன்னுமவர்கள் மெத்தவும் பாரதூரமான கருமங்களைப்பெற்று மதிக்கத்தக்க ஒருவராக விருந்திருக்கின்றார்கள். அவர்களின் மதிக்கத்தக்க கருமங்கள்யாவும் எங்கும் பகிரங்கமாக அறியப்பட்டிருக்கின்றன. எனக்கு அவர்களைக்கண்டு கொள்ளக்கூடாமல் போய்விட்டது. என்கிலும் எங்களுடைய இந்தக்காலத்திலுள்ள ஒருவரை நான் அப்துல் காதிர் அவர்களின் மக்காமில்

கண்டிருக்கிறேன். ஆனாலும் அப்படிக்கண்ட அந்த மனிதனைவிட நாயகம் அப்துல்காதிறுல் ஜீலானி ஆகிறவர்கள் வேறு அநேககருமங்களில் அதிக சிறப்பைப்பெற்று மெத்தவுஞ் சிறந்தவர்களாக விருந்திருக்கின்றார்கள் என்பதே.

முகியத்தீன் இபுனு அறபி (றலி) அவர்கள் சொல்லியதாக நாமிப்போது எழுதிவந்த இந்நியாயங்களைக்கொண்டெங்கள் நாயகம் அப்துல்காதிறுல் ஜீலானி ஆண்டவர்களின் மக்காமைக்காட்டிலும் அவருடைய சீஷராகிய அபூசுஊது ஷிப்லி (றலி) அவர்களின் மக்காமை முகியத்தீன் இபுனு அறபி(றலி) அவர்கள் மேலாகக்கண்டிருக்கின்றதாய்ப் பேசிவரப்பட்டிருக்கின்றதென்று "தலாயிலுல் அயிம்மா" என்னும் சில அறிவில்லாத மூடர்களை ஏமாற்றுதற்காக எழுதப்பட்ட அந்த அனுப்பு புத்தகத்தில் சொல்லப்பட்டிருப்பவை முகிய்யதின் இபுனு அறபி (றலி) அவர்களின்மீது பதூறாகச் சொல்லப்பட்ட பொய்க்கட்டுகளிலொன்றென்பது எவருக்கும் விளங்காதிருக்கக்கூடாது.

(இன்னும்வரும்.)
ஐ. எல். எம். எம்.

முஸ்லிம்கள் கவனிக்கத்தக்கவழி.

(பிப்ரவரிமாத சஞ்சிகையின் தொடர்.)

1. இக்கல்வியானது, மார்க்கக்கல்வி, அதாவது வைதீகக்கல்வி எனப்பொருள்படின், ஆண்டவரவர்கள் அக்காலத்தில் சீனதேசஞ்சென்று மார்க்க இல்மைப்போய்ப் படித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதாகநேரிடும். சீனாவைப்போலுற்ற காபிரான பூமியில் மார்க்க இல்மு ஏது? இஸ்லாத்தின் வாடையே வீசப்படாத ஒரு அந்நிய தேசத்துக்குச்சென்று மார்க்க இல்மைப்படித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருப்பார்களா? ஒருகாலும் அவ்வருத்தங்கொண்டு சொல்லியிருக்கவே மாட்டார்கள். பின்னர்.

2. இக்கல்வியானது, மார்க்கக்கல்வி, உலகக்கல்வி அதாவது வைதீகக்கல்வி, இலௌகீகக்கல்வி என்னும் இரண்டையும் உள்ளடக்கிய அருத்தம் பொருந்தியது. ஆண்டவர்கள் இலௌகீகக்கல்வியையல்ல, வைதீகக்கல்வியையே படிக்கவேண்டும் என்ற

அருத்தத்துடன் சொல்லியிருந்தால் அவர்கள் தங்கள் உம்மத்துமார்களுக்கு மற்றவூர்களுக்குப்போகவேண்டாம் என்றும் மற்றவுலகத்துச் சீர்த்திருத்தங்களைக் கவனிக்கவேண்டாம் என்றும் இந்துதேசத்துச் சந்நியாசிகளைப்போல அரபியாதேசத்து மலைகளையும் வனாந்திரங்களையும் உறைவிடமாகத் தெரிந்துகொள்ளுங்கள் என்றும் போதித்திருப்பார்கள். அவர்களின் கருத்து அப்படியல்ல என்பதை, அவர்களுக்குப்பின்வந்த கலீபாமார்கள் ஐரோப்பாவரைசென்று அச்சனங்களின் சீர்த்திருத்தநடைநொடிபாவனைகளைப் பயின்று அவர்களின் கல்விகளைப்படித்தறிந்து செருக்கு இறுமாப்புகளை யடக்கிவென்று இஸ்லாத்தின் கொடியை நாட்டியது வெளிப்படுத்துகிறது.

3. மேலும், நமது நபியவர்கள், அரபியாவில் பிறந்தவர்களாயிருந்தபோதிலும், அரபியர்களுக்குமாத்திரம் வந்தவர்களல்லர். இவர்களுக்கு முன்னர்வந்த நபிகளெல்லாம் குறிக்கப்பட்டகவும்களுக்கே (கோத்திரத்தார்) அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆனால் இவர்களை (நமது நபியவர்களை) எல்லாம்வல்ல ஆதிகர்த்தன் உலகஜனங்கள் முழுமைக்கும் நபியாய்த்தெரிந்திருக்கிறான் என்பதை நமது பரிசுத்த திருக்குர் ஆனை சாட்சிபகர்கின்றது. அவ்வாறிருக்க நபியவர்கள் உலகக்கல்வியை யெவ்விதம் புறம்பேதள்ளுவார்கள். ஆண்டவரவர்கள் இவ்வுலகத்துக்கு வந்தது இஸ்லாம்மார்க்கத்தைப் பரவச்செய்வதற்கே யாகையால் அது உலகப்பிரசித்தமாவதற்கு உலகபாஷையின் ஆதாரம் வேண்டுமல்லவா? அப்பாஷைகளின் விருத்திக்கு அவர்கள் உதவியாயிருந்தாலொழிய அவர்கள் வந்தகாரியம் அநுகூலமாவது எங்ஙனம்? ஒரு ஊரைப் பிடிக்க ஆசித்த ஒருஅரசன் பிடிபடும் ஊரின் அந்தரங்கமான விஷயங்களை யறிந்தாலொழிய அல்லது அறியும்படிதன் வேவுகாரர்களுக்குக் கற்பித்தாலொழிய அவன்காரியம்கைகூடுமோ? கைகூடுவதற்கு மேற்சொன்ன விஷயங்களை யறியத்தான் வேண்டும். அவ்வாறேபோல நபியவர்களின் காரியம் அநுகூலமாவதற்கு அவர்களுக்கு அந்தக்கருத்து இருந்திருக்கவே வேண்டும். அதைச் சிந்தையில்வைத்து, ஆசியாக்கண்டத்துக்கு அரபியாமேற்கு எல்லையானதாலும், சீனதேசம் கிழக்கு எல்லையானதாலும் ஆகக்கீழ்த்தேசமாகிய சீனவரைசென்றும் உலகக்கல்வியைக் கற்றுக்கொள்ளச்சொன்னார்கள்.

(இன்னும் வரும்.)

எம். எஸ்.

(அரிய நாவல்.)

பண்டிதைமேஸ்மரிஸா.

(பிப்ரவரிமாத சஞ்சிகையின் தொடர்.)

அப் பெரியவருக்கு இன்ன உத்தரம் சொல்வதென்று புலப்படாமல் நாற்காலியினின்றெழுந்திருந்து மனக் குழப்பத்தோடு அவ்வறையில் உலாவிக்கொண்டிருந்தேன்; இவர் சொல்லும் வேலை அங்கீகரிக்கலாமா? அல்லது வேண்டாமென்று சொல்லலாமா? அவர் கொடுப்பதாகச்சொல்லும் ஆயிரம் சவரன் எனக்குப் பேராசையை விளைத்தன. அவர் சொல்வதில் ஏதோ பயங்கரமான இரகஸ்யமிருந்தாலும் நான் கீழ்த்தேசத்துக்குப் புதியவனாதலால் அதை இன்னதென்று கண்டுபிடிப்பதே எனக்கு அஸாத்தியமாயிருந்தது; அச்சமும் அவாவும் என்மனத்தைக் குழப்பிக்கொண்டிருந்தன; நான் முப்பது பிராயமுள்ள சிறுவனாதலால் எனக்குப்பணவிஷயத்தில் பேராசை பிறந்தது; ஆனால், விஷயம் பயங்கரமாக விருந்ததனால் ஏதேனும் அபாயம் நேரிட்டால் என் வாழ்நாள் முழுதும் வீணாய்ப்போகுமென்று மற்றொருபால் சந்தேகமும் பிறந்தது.

“ஐயா! நான் புறப்படுவதற்கு முன் ஐந்நூறு சவரன் முன்பணமாகக் கொடுத்துவிடவேண்டும். அதற்குடன்பட்டால் இப்பொழுதே புறப்படுகிறேன்.”

“ஐயா டாக்டர்! தங்களுக்கு எவ்வாறு முன்பணமாகப் பாதித்தொகையைக் கொடுப்பேன்?”

இப்படிச்சொல்லிக்கொண்டு அவர்தம் சட்டைப்பையிலுள்ள ஒரு சிறு புத்தகத்தைத் திறந்துபார்த்தார். அதில் நான் கேட்ட தொகை யில்லாததால் அவர் ஒன்றும் பேசாமல் மௌனமாகவிருந்தார்.

“ஐயா! தாங்கள்கேட்கும் தொகையில்லாததால் நான் கோரிய விடம்போய்ச் சேர்ந்தவுடன் முழுத் தொகையையும் கொடுத்துவிடுகிறேன்.”

“ஐயா! நீர் சொல்வதை என்னால் அங்கீகரிக்க முடியாதென்று சொல்வதற்கு——”

“ஐயா! அப்படிச் சொல்லவேண்டாம்; நீர்கேட்ட தொகையைக் கொடுத்துவிடுகிறேன்; நான் சொல்வதை நன்றாக அறிந்துகொள்ளவேண்டும்; இப்பொழுதேனும் நீர் திரும்பிவந்த பிறகேனும் இவ்விஷயத்தை யாரிடத்தும் வெளியிடக்கூடாது.”

“ஐந்நூறு சவரன் கொடுத்தால் நான் வெளியிடமாட்டேன்.”

“குறிப்பிட்ட நேரத்தில் தாங்கள் கடற்கரையோரம் வந்து சேரவேண்டும்.”

“நிச்சயமாக வந்துவிடுவேன்; என்னைக் கடற்கரையில் நீர் சந்திக்கவேண்டும்; நீர் இவ்விடம் விட்டுப் புறப்படுமுன் வைசூரி நோயைப்பற்றிச் சிறிது தெரிவிக்கவேண்டும்; அவ்வியாதி மிக்க கொடுமையாயிருக்கிறதோ?”

“மிக்க கொடுமையாயிருக்கிறது; இதுவரையில் நூறுபேர் அதனால் தாக்கப்பட்டிருக்கிறார்கள்; ஐம்பதுபேர் வரையில் மரணமாய்விட்டார்கள்; அவ்விடத்தில் தங்களுக்கு வேலையில்லையென்று சந்தேகிக்கவேண்டாம்; இராப்பகல் ஓய்வில்லா வேலையிருக்கும்.”

“அப்படியாயின் சிகிச்சை செய்தற்கு வேண்டிய மருந்துகளனைத்தும் சேகரிக்கவேண்டும். அங்கே சென்றபின் யாதொன்றுக்காகவும் முட்டுப்படக்கூடாது.”

“தாங்கள் அவ்வளவு சிரமமெடுத்துக்கொள்ளவேண்டியதில்லை; எல்லா வஸ்துக்களையும் நாங்களே சேகரித்து வைத்திருக்கிறோம்; வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்துகளெல்லாம் எங்கள் பாலுண்டு.”

“நல்லது; நான் உம்மைக் கடற்கரையில் வந்து பார்க்கிறேன்.”

“சரியாகப்பன்னிரண்டு மணிக்குப் பார்க்கவேண்டும்; இப்பொழுதுபோய் வருகிறேன்” என்று சொல்லி அவர் எழுந்திருந்தார்.

“ஐயா! பணங்கொடுக்காமற் புறப்படுகிறீர்களே.”

“டாக்டர் தாம்ஸன்! நீர்கடற்கரை வந்தவுடன் கொடுக்கிறேன்.”

“இப்பொழுது கொடாவிடில் நான் புறப்படேன்.”

“புறப்பட மாட்டீரோ? புறப்பட மாட்டீரோ? உம்மைப் புறப்படும்படி செய்யட்டுமா? என்னை யாரென்று நினைத்தீர்” என்று எனக்கு அச்ச முண்டாகும்படி சொல்லிக்கொண்டு தம் மூக்குக் கண்ணாடியைக் கழற்றினார்.

கண்ணாடியைக் கழற்றினவர் இரண்டொரு நிமிஷம் என்னை உற்று நோக்கினார்; ஒன்றும் பேசாமல் நான் நாற்காலியிற்சாய்ந்து விழுந்தேன். அவர், “தூங்கு” என்றுபலமாகச்சொன்னார். பிறகு யாதொன்று மறியேன்.

கு ஆர்கன் டோயல்.

இக்கதை புத்தகமாக முடிந்துவிட்டபடியால் அதை இப்பத்திரிகையில் பிரசுரித்து வருவது உசிதமாகாதெனக்கருதி இப்பிரசுரத்தை இதுமுதல் நிறுத்திவிட்டோம். வேண்டுவோர், புத்தகத்தைத்தருவித்து வாசித்துக்கொள்க.

இனி அடுத்தமாத சஞ்சிகைமுதல் இக்கதைக்குப்பதிலாக “மாந்தீகிரிஸ்தமன்னன்” என்னுங் கதை இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுவரும்.

ஒரு வினாவிற்கு விடை.

(இஸ்லாம்நேசன் வால்யம் - 2. பக்கம்-299)

1. பிரேதத்தை ஸ்நானஞ்செய்விக்கிறவர் நீராடவேண்டியது முஸ்தகப்பு.

2. பிரேதஞ் சுத்தமற்றதாகையினாலே அதைத் தண்ணீரால் கழுவிச் சுத்தஞ்செய்விக்கவேண்டியது அவசியமாதலின், அதைச்செய்பவருக்குப் பிரேதத்தின்மீதுள்ள தண்ணீர் தம்மீது படுமென்றோ அல்லது பட்டிருக்குமென்றோ சந்தேகம்ஜனித்தல் சுபாவமாதலின் அன்னவர் ஸ்நானஞ்செய்யவேண்டியது முஸ்தகப்பாய் முடிந்தது.

3. முஸ்தகப்பை ஸுன்னத்தென்று சொல்வது குற்றமன்று. ஸுன்னத்தை வாஜிபு எனல் கூடாது.

யதார்த்தவாதி.

ஜனவரி மாதம் சஞ்சிகையில் வெளிவந்த இஸ்லாம் சகோதரனின் வினாவிற்கு விடை.

1. பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவியுள்ள ஒரு புருடன் சக்தியும் அவசியமுமுள்ளவனாயின், நாலு ஸ்திரீகளை விவாகஞ்செய்து கொள்ளலாம். ஒரு மனைவியைப்போன்று மற்றொரு மனைவியையும் சமரசமாக நடத்த முடியாத ஒருவன் ஒரு மனைவிக்குமேல் மற்றொருமனைவி விவாகஞ்செய்வது கூடாது.

2. மணமகன் மணமகள் என்ற இருவரும் சரியானபக்குவகாலமாயிருந்தால் (பாலிக்) அவர்களுடைய சம்மதத்தின்பேரிலும், அப்படிப் பக்குவமல்லாமலிருந்தால் அவர்களுடைய கார்டியன் சம்மதத்தின்பேரிலும் உண்மையுள்ள இரண்டு ஆண்மக்கள் சாக்ஷிகளின் முன்னிலையிலும், ஆண்மகன் ஒருவனே சாக்ஷியிருக்கின், குறைவான ஆண்மகனுக்குப்பதிலாக இரண்டு ஸ்திரீகள் சாக்ஷிகளாக மூன்று சாக்ஷிகள் முன்னிலையில், விவாகம் நடத்தவேண்டும். பெண்மக்கள் சாக்ஷி முற்றுமாயிருத்தல் கூடாது.

3. காலில்வரைந்திருக்கிற பெயர்வழிகளை விவாகஞ்செய்யக் கூடாது. ஏனையோரை விவாகஞ்செய்துகொள்ளலாம்.

4. (A) தாய், தாயைப்பெற்றவள், தந்தையைப்பெற்றவள் மேல்நோக்கிச்செல்லுகிற தலைமுறைமுடிய மகள் தங்கை, தமக்கை உடன்பிறந்த சகோதரர்மக்கள் தலைமுறைமுடிய தந்தையுடன் பிறந்தாள், தாயுடன்பிறந்தாள், மனைவியின்மாதா, மனைவி ஜீவனோடிருக்கும்வரை அன்னவள் உடன்பிறந்தாள் இவர்களும், தான் பால்அருந்தியமாது அவள்மக்கள் முதலிய அவளின்சுற்றத்தினர் மேல்வரைந்தபடியே உடற்பிறப்பின் தன்மையையுடையவர்களே யாதலின், அவர்களையும் தன்மனைவி உயிரோடிருக்குங்காலத்து அவளையாண்மகளைப்பாலித்து நாலு வயில் வரையப்பட்டிருக்கிறவர் அவளுக்கு விவாகஞ்செய்யகூடாதவர்களாதலின் அவர்களையும் விவாகஞ்செய்தல்கூடாது.

5. 4ல் விடையிருக்கிறது. (6) ஆடவன் ஏற்படாதபெண்ணை அவ்வூரிலுள்ள முஸ்லிம் சகோதரர்கள் அன்னவளுக்குவேண்டும் பொருள் முதலியவற்றை யுதவி அவளை விவாகஞ்செய்து கொடுக்கவேண்டியது முஸ்லிம்கள்பேரில் கடமையாம். ஹறும் என்பது உன்னதமான கடவுளின் சட்டத்தை நிராகரிப்பதிலிருந்துண்டாகும் பாவமாம். மனைவி வியாதியாயிருக்கின் அவளை விவாகவிலக்குச்செய்துவிட்டு அவளுடைய சகோதரியை விவாகஞ்செய்து கொள்ளுவது மிக்க எளிதானவிஷயமே. மனைவியின் சகோதரியை விவாகஞ்செய்துகொள்ள விரும்புவோர் இவ்வாறு செய்துகொள்வதில் தோஷமின்று. மூத்தமனைவியை விலக்கிவிட்டாலும் அவர்களை மற்றோர் கிரகத்தில்வைத்து ஆதரித்து அன்புபாராட்டிவருவது சாலவுஞ் சிறந்ததாம். கன்ஸு, ஸறஹு பிகாயா துர்ருல்முக்தார், முதலிய கிரந்தங்களைப்பார்க்க.

நண்பன்.

ஜனவரிமாத சஞ்சிகையில் வெளிவந்த இஸ்லாம் சகோதரனின் வினாவிற்கு மற்றொரு விடை.

முபஸ்மிலன், முகம்திலன், முஸல்லியன், முஸல்லிமா
அஸ்ஸலாமு அலைக்கும்.

கனமுள்ள இஸ்லாம்நேசன் பத்திராதிபரவர்களே! ஜனவரி மாசம் தங்கள் 5-வது சஞ்சிகை 153-வது பக்கத்தில் கேட்டவினாவிற்கு அடியில்வருமாறு விடையளித்திருக்கிறேன். அதை அடுத்தமார்ச்சுமாசம்நேசனில் பிரசுரிக்கக்கோருகிறேன்.

1. ஒரு முஸ்லிம் ஆண்மகன் 4 மனைவிகளை நிக்காஹு செய்யலாம்.

2. தனக்கு ஹலாலான பெண்ணை 2 சாக்ஷிகள் முன்பில் ஈஜாப் கபூல் என்ற உறுதிகூறி ஒப்புக்கொண்டபின் இருவருக்கிடையில் நிக்காஹு சம்பந்தமுண்டாகிவிடும்; நிக்காஹில் குதுபா ஓதுதல், ஜனக்கூட்டம் இவைகள் நிக்காஹில் சுன்னத்தாம்; இப்படித்தான் நிக்காஹ் நடத்தவேண்டும்.

3. 4. ஒருவன் நிக்காஹ்செய்யக்கூடாத ஸ்திரீகள் அநேகருண்டு. அவர்களைத்தவிர வேறுயுள்ளஸ்திரீகள் நிக்காஹுக்குப் பொருத்தமானவர்களாவர். இதன் விபரங்களை நேர்வழிவிளக்கம் என்ற கிரந்தத்தில் காண்க.

5. மனைவியுடன்பிறந்தவளை நிகாஹ்செய்துகொள்ளவேண்டியதானால் மனைவி இறந்துபோயிருக்கவேண்டும். அல்லது தலாக்குசொல்லி இத்தாகழிந்திருக்கவேண்டும். இவ்வாறானால் மட்டும் அவள் சகோதரியை நிக்காஹ்செய்துகொள்ளலாம். மற்றப்படி வழியில்லை. அப்படியிருக்க, யாதொருவன்மீறி நடத்தினால் அது நிக்காஹ் ஆகாது. அவளைத்தொடுவதால் அன்னிய ஸ்திரீயை தொட்டகுற்றமும், ஸினாவும் ஏற்படும்-அவ்விவாகத்தில்பிறக்கும் குழந்தைகள் ஹறாமில்பிறந்த பிள்ளைகளாவர். அது குற்றமல்லவென்று விசுவாசித்தவன் காபிராகிப்போவான். (நஊதுபில்லாகிமின்கா.)

6. நிக்காகுசெய்துகொள்ள கணவன் ஏற்படாத பெண், கணவன்வரும்வரை சகித்திருக்கவேண்டியதைத் தவிர வேறு கெதியில்லை.

ஹறாமானது, நமதுமார்க்க மூலாதாரங்களாகிய குருஆன் ஹதீது இஜ்மாஃ கியாஸ என்ற நாலாதாரங்களிலொன்றினால் செய்யக்கூடாதென்று விலக்கிய விஷயமேயாம்; இதுவேஹறாமென்று சொல்லப்படும்; இதைச்செய்தால் நரகவேதனையும் அல்லாகுத்தஆலாவின் கோபமுமுண்டாகும்; ஹறாமென்றசொல்லுக்கு "விலக்கப்பட்டது" என்று அருத்தமாகும். (பஸ்ஸலாம்)

முஸ்லிம் அபிமானி,
தென்காசி.

பிப்ரவரிமாத சஞ்சிகையில் வெளிவந்த ஏ. எஸ். ஏ. சாகிபு அவர்கள் வினாவுக்கு விடை.

கனமுள்ள இஸ்லாம்நேசன் பத்திராதிபரவர்களே!

நம்நேசன் பிப்ரவரிமாசம் சஞ்சிகை-6. 160-வது பக்கத்தில் கண்ட வினாக்களுக்கு இதன்கீழ் விடையெழுதியிருக்கிறேன். அதைநேசனில் பிரசுரிக்கும்படி விரும்புகிறேன்.

1. காபிர்களிடம் தொகை வசூலித்துப் பள்ளிவாசல் கட்டுவது ஜாயிஸல்ல.

2. முஸ்லிம்களால் கொடுக்கமுடியாதபக்ஷத்தில் காபிர்களிடத்தில் பணம்வசூலித்து முஸ்லிம்குமார்களுக்கும், மையத்துச்செலவுகளுக்கும் உபயோகிக்கலாம்.

3. வக்புசொத்து, எந்தச் சங்கதிக்காகக் குறிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வழியிலல்லாமல் மற்றவகையில் செலவுசெய்யக்கூடாது.

4. வக்புசொத்தை வீண்விளையாட்டில் செலவுசெய்வது பெரும்பாவமாகும்.

5. வக்புசொத்தை அனுபவிக்க பாத்தியஸ்தர் அல்லாதவர்கள் அதில் கையாடுவது திட்டமான ஹறாமாகும்.

6. வக்புசொத்தில்மீதித்தொகைகளைக் காவந்துசெய்துவைத்தல்வேண்டும்; பின்னுக்கு அது வேண்டியதாயிருக்கும்; அப்படி அப்பணத்தைச் செலவுசெய்யக்கூடிய காரியம் ஏற்படாவிட்டால் அதை எந்தவகையான தர்மத்தில் செலவுசெய்வது தகுதியோ அந்தவகையான தர்மத்தில் செலவுசெய்யலாம்; மதுரஸாவகை வக்பில் மிஞ்சியதை வேறுமதரஸாவகையில் செலவுசெய்யவேண்டும்; மற்ற விஷயங்களுமிப்படியே பார்த்துக்கொள்ளவும்.

7. வக்புசெய்தவன் எந்தவகைக்காக அல்லது எவர்களுக்காகச் சொத்தை ஏற்படுத்தியிருக்கிறானோ அந்தவகையில் அதை உபயோகப்படவிடாமல் தடுத்துத்தங்கள் சொந்தத்தில் அனுபவிப்பவர்கள் ஹறாமான சொத்தைத்தின்ற பாவத்திலாவார்கள்.

8. ஹறாமான சொத்துக்களை வக்புசெய்வது கூடாது.

9. பழையபள்ளியை இடித்து வேறிடத்தில்கட்ட அவசியமிருந்து மஹல்லாதார்கள் எல்லாரும் சம்மதித்தால் அப்படிச்செய்வதில் குற்றமில்லை.

10. ஹறாமான சொத்துக்களை ஸதக்காசெய்வதில்யாதொரு பலனுமில்லை, ஆனால் அந்தச்சொத்துக்குப் பாத்தியக்காரர்களைக்கண்டு அச்சொத்தைக் கொடுக்கமுடியாதபக்ஷத்தில் அவர்கள்பேரால் ஸதக்காச்செய்யவேண்டும். அப்போது கொடுத்தவன்மேலிருக்கும் பாவம் நீங்கும்; பாத்தியக்காரர்களுக்கு நன்மைகிடைக்கும். (பஸ்ஸலாம்)

ஹிஜ்ரி 1330 வருஷம், சபர்மாதம் 27ந்தேதி
முஸ்லிம் அபிமானி, தென்காசி.

பிப்ரவரிமாத சஞ்சிகையில் வெளிவந்த ஏ. எஸ். ஏ. சாகிபு அவர்களின் வினாவிற்கு மற்றொரு விடை.

1. கூடாது.

2 முஸ்லிம்களின் மார்க்கக் கட்டளைகளைத் தடைசெய்யாத தாருல் இஸ்லாத்தின் காபிரீன்களிடம் வாங்கலாம்.

3. ஒக்பு விட்டவரின் அபிப்பிராயப்படி தர்மத்தை நடத்தல் வேண்டும்.

4. கூடாது.

5. ஒக்புவிட்டவர் அபிப்பிராயம் அதுவன்றாயின் * சாத்தியமில்லை.

6 ஒக்புவிட்டவரின் கருத்தை நிறைவேற்றுதலில் அதிகப்படுத்திக்கொள்ளலாம்.

7. ஒக்புசொத்தை விட்டவரின் அபிப்பிராயமில்லாமலும் அனுமதியன்றியும் அதை அருந்தக்கூடாது.

8. கூடாது.

9. கூடாது.

10. கிடைக்காது. கிடைக்குமென்று ஆதரவுவைப்பவன் இஸ்லாத்தைவிட்டும் தவறும் ஸ்திதியிலாகின்றான். ஒக்புசொத்தை அனுபவிப்பவர்களைப்பற்றி அடுத்துவரும் இஸ்லாம்நேசனில் ஒருவியாசம் வரைவோம்.

நண்பன்.

ஓர் முக்கிய வேண்டுகோள்.

எனதன்பிற்குரிய பிதா அவர்களின் சற்குருவாகிய கீழக்கரையில் வாஸஞ்செய்து காலஞ்சென்ற கனம். ஸ்ரீமான். ஹலரத் மாப்பிள்ளைலெப்பை ஆலிம் அவர்களின் செல்வப்புதல்வர்களில் சிரேட்ட புத்திரசிகாமணியாகிய ஸ்ரீமத் ஷெய்கு அப்துல்காதிர் ஆலிம் அவர்கள், தாங்கள்கற்றஞான நூல்களின்பொருளையுள்ளபடியே யுணர்ந்துதெளிந்து இல்லாச்சிரமவிருப்பு அவர்களுக்கு எட்டிபோலாய், பரவாழ்க்கையே மேலானதெனக்கருதி அல்லாஹ் சுபுஹானகுத்தஆலாவின் அடியாராய் முத்தியின்பத்துக்குரிய வழியில் மனத்தைச்செலுத்த ஆரம்பித்து ஹிஜரத்து 1306௵ தொடக்கம் சூபியாக்களின் வேடந்தாங்கியவர்களாய் கல்வத்திலிருக்கின்றார்களென்று இம்மகானுபாவர் பிதா அவர்களின் ஜீவிய சரித்திரத்தில் காணப்பட்டது.

சுமார் 24-வருஷகாலமாக மேற்படியார்கள் அவ்வாறேயிருக்கிறார்களென்றும் முலாகத்செய்ய சென்ற சிலர்களுக்குக்கிட்டவில்லையென்றும் பலவாறாய்ச் செய்தியெட்டுகிறது.

ஆகையால், தற்காலம் கல்வத்திலிருந்து வெளிவந்தார்களா? அப்படி வெளிவந்திருந்தால் அன்னோர்களின் புதினவிசளம் கிராமத்துகளென்ன?

இவற்றை அறிந்தோர்யாரும், இந்நேசன் வாயிலாக விரைந்தனுப்ப மிகவும் வேண்டுதல் செய்கிறேன்.

வெ. பெ. முகையதீன் பாவா.

சமாசாரங்கள்.

துருக்கியுத்தத்தைப்பற்றிய தந்திசமாசாரம்:—லண்டன் பிப்ரவரிமீ 25உ இஸ்தம்பூல் தந்தி கூறுகின்றது:—

இத்தாலியர்கள் பீரங்கிப் பிரயோகஞ் செய்தபொழுது, பெய்ரூத் கோட்டைகளிலிருந்தும், டஅவ்னில்லா என்றயுத்தக்கப்பலிலிருந்தும், மற்றொரு கன்போட்டிலிருந்தும், துருக்கியர் எதிர்ப்பிரயோகஞ் செய்தார்கள். என்றாலும் அவனில்லா எரிந்துபோயிற்று; கன்போட் தண்ணீருள்முழுகிப்போயிற்று. பிறகு இத்தாலியப்போர்க் கப்பல்கள் புறப்பட்டுப்போய்விட்டன; எங்குப்போயினவெனத்தெரியவில்லை. இது முடிந்தவுடனே ஜனங்கள் கலக்கமுற்று, கவர்ண்மெண்டு ஆயுதச்சாலையிலுள்ள ஆயுதங்களைப் பலவந்தமாய்க் கைப்பற்றி ஒவ்வொருவரும் ஆயுதங்களைக் கையிலேந்தி வெளிக்கிளம்பிவிட்டார்கள். கலகமுண்டாயிற்று; 30பேர் கொல்லப்பட்டார்கள்; இரண்டு ருஷியர்களுங்கூட இதில்மாண்டுபோயினர். 50பேர் காயமடைந்தனர்; இத்தாலியர்கள் எஜியன் கடலில் நுழைந்து அக்கிரமஞ்செய்வதாயிருந்தால், டார்டினலஸ் கடலை யடைத்து விடப்படுமென்றும், துருக்கியிலுள்ள இத்தாலியர்களெல்லாம் துரத்தப்படுவார்களென்றும், துருக்கிய கவர்ண்மெண்டார் பவர்களுக்கறிவித்திருக்கின்றார்கள். யுத்தத்திற்குபகாரமாயுள்ள சாமான்களை திரிப்போலிக்குக் கொண்டுபோவதற்கனுகூல

---

* இதை நண்பர்சற்று ஆராய்ந்துவரைக. ப—ர்.

மாயும், அம்மார்க்கமாய்ச் சைனியங்களேற்றிச் செல்லும் கப்பல்களைத் தாக்குவதற்காகவும் மேற்கண்ட கப்பல்கள் பெய்ரூத்துறைமுகத்தில் நின்று கொண்டிருப்பதாய்த் தெரிந்தமையால், அவைகளை நாசஞ்செய்யக்கருதினதாய் இத்தாலிய அபிஷியல் ரிப்போர்ட்டின் மூலமாய்த்தெரியவருகிறது.

திரிப்போலியைச் சேர்த்துக்கொண்டதைப்பற்றி மீண்டும் உறுதிப்படுத்திய பின், மந்திராலோசனைச் சபைக்குக் கொண்டுவரப்பட்டபொழுது மெம்பர்களனைவரும், ஏகோபித்து, மிகுந்த உற்சாகத்துடன் அங்கீகரித்தார்கள். 'ஆஸ்டா' ஜினோவாப் பிரபுக்களும், அங்கு விஜயஞ்செய்தபொழுது, நல்வரவுகூறி மரியாதை செய்தார்கள்.

லண்டன் பிப்ரவரிமீ 25உ

அட்மைரல் பாரவல்லி யென்பவர் தாம் பெய்ரூத்துறைமுகத்தில் அதிகாலையில், அவனில்லால் என்ற கன்போட்டையும், மற்றொரு டார்ப்பிடோபோட்டையுஞ் சந்தித்து விடிந்து 9 மணிவரையும் சாவகாசம் கொடுத்ததாயும், பிறகு பீரங்கிப்பிரயோகஞ் செய்தபொழுது எதிரிகளின் கப்பல்கள் 20 நிமிஷம்வரை எதிர்த்து நின்றும் பிரயோஜனமின்றி கன்போட் தீப்பற்றிக்கொள்ள நேர்ந்ததென்றும், டார்ப்பிடோபோட் குண்டடிப்பட்டுத் தண்ணீருள் தாழ்ந்து போயிற்றென்றும், பெய்ரூட்டவுனைத் தாக்கவில்லையென்றும் கூறுகிறார். பிரான்சுக்கு பெய்ரூத்தில் அதிகமான காரியங்களிருப்பதால் இத்தாலியர்கள் பெய்ரூத்தைத் தாக்கினதைப்பற்றி, பிரான்சில் இத்தாலியர்மீது மிகுந்த அதிர்ப்தியுண்டாயிருக்கிறது.

லண்டன் பிப்ரவரிமீ 26உ

பெய்ரூத், தமஸ்கஸ், ஜெருசலேம், அலெப்போ முதலிய விடங்களிலுள்ள மதசம்பந்தமான இத்தாலிய உத்தியோகஸ்தர்களைத் தவிர மற்றெல்லா இத்தாலியர்களையும் உடனே துரத்திவிடவேண்டுமென்றும் மதசம்பந்தமான உத்தியோகஸ்தர்களும், 15 தினங்களுள் ஓடிப்போய் விடவேண்டுமெனவும் துருக்கிய மந்திராலோசனைச்சபையார் தீர்மானித்திருப்பதாக இஸ்தம்பூல் தந்தி கூறுகின்றது.

ஸை. இ.

சென்ற 3ந்தேதி டர்னாவில் இத்தாலியர் கட்டுமானங்கள் செய்துகொண்டு நிற்கையில் துருக்கிகளும் அறபிகளும் அவர்களை நெருங்கிப்பலத்தபோர் நடத்தினர். இத்தாலிய சேனைக்குத்துணையாக வேறொரு அணி கூடவந்து சேரவே அத்தமனம் வரைக்கும் இருதிறத்தாரும் பையனத்துகளால் குத்தியும் சுட்டும் போர்நடத்தியதில் இத்தாலியருள் 150 பேர் இறந்ததாகவும் துருக்கிகளுள் இறந்தோர் தொகை தெரியவில்லையென்றும் தந்திகூறுகின்றது.

வேறு சமாசாரங்கள்.

துணிகரமான திருட்டு:—பாரிஸ் நகரைச்சார்ந்த போலோக்நெசூர் செயினி என்ற இடத்தில் சிலதிருடர் துணிந்து களவெடுக்கும் சிந்தையோடு ஓர் நகை வியாபாரஷாப்புக்குள் ஓர் வெடிக்குண்டையெறிந்தனர். இக்குண்டு வெடிக்கவே உள்ளே வைக்கப்பட்டிருந்த நகை முதலிய விலையுயர்ந்த சாமான்களில் அநேகம் அவ்வெடி அதிர்ச்சியினால் தெருக்களில் வீசுண்டன. இச்சம்பவம் காவல்செய்யும் பட்டாளவீரருக்குத் தெரிந்து அவர்கள்வரவே அவர்களை அத்திருடர் நேர்ந்தபடி துப்பாக்கிகளினாற் சுட்டுப்பின்னிடச்செய்து, அநேக நகைகளைக் கையாடிக்கொண்டு ஓட்டம் பிடித்தனராம்.

புலி ஆளைக்கொண்டுபோனது:—கல்கத்தாவுக்குச் சமீபத்துள்ள ஜெயிநாகூர் என்னுமிடத்தில் ஓர் வெட்டாற்றில் தோசோ சாதார் என்பவனும் வேறு சிலரும் மீன் பிடித்துக்கொண்டிருக்கும்போது பக்கத்துள்ள காட்டிலிருந்து திடீரென ஓர் பெரும்புலிபாய்ந்துவந்து சாதாரைத் தூக்கிச்சென்றது. இதற்கு இரண்டு நாட்களின் பின் கன்னிங்டவுனிலிருந்து சிலர் விறகொடிக்கும் நோக்கத்தோடு வள்ளமேறி ஜாலக்காடியிலுள்ள காட்டுக்குச் சென்றனர். விறகொடித்துக்கொண்டு பின்னும் வள்ளத்திலேறி அவர்கள் பிரயாணப்படவே ஆற்றங்கரையிற் பதுங்கிக்கிடந்த புலியொன்று வேகமாக வள்ளத்துட்பாய்ந்து ஒருவனைத் தூக்கிச் சென்றதாம்.

கம்பியில்லாத்தந்தி—இவ்வேலை முடிவுக்கு வந்திருக்கிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை பொம்பாயிலிருந்தும் வார்விக்சயர் புகைக்கப்பலிலிருந்தும் செய்திபேசப்பட்டது. இன்னுமொரு மாதத்துள் பூரணமாய் வேலையாவும் முற்றுப்பெறும்.

அலஸ்காவில் பூகம்பம்:—அலஸ்கா என்னுமிடத்தில் பூகம்பமும் கடும்புயலுமுண்டாகி பெருந்தொகையான நட்டமும் உயிர்ச்சேதமும் நேரிட்டன. பெரியபண்டச்சாலைகள் அநேகம் சின்

ணபின்னமாயின. கார்டோவாவில் வெளிச்ச இயந்திரங்கள் மோசப்பட்டன.

இ. மி.

குஞ்சுபொரிக்கும் யந்திரம்:—இங்கு பேட்டரென்றும் யந்திரத்துள் நிறைய நீரைவார்த்து, கோழிமுட்டைகளைப் பதமாக அதனுள்ளேவைத்து, அந்த யந்திரத்தினொருபக்கத்தில் சிறுவிளக்கொன்றை வைத்து. அந்த நீரைச்சூடேறச்செய்யின், அம்முட்டைகள் அச்சூடுதாக்கப்பட்டு, சில நாளைக்குள் குஞ்சுகளாகி விடுமாம். இக்குஞ்சுகள் பிழைப்பது கஷ்டமென்று தெரிகின்றது. இங்கு பேட்டரென்னும் யந்திரம் தகரத்தாற்செய்து 10 ரூபாய்க்கு விற்கப்படுகின்றதாம்.

ஒரு மாஜிஸ்டிரேட் அடிக்கப்பட்டார்:—திருவநந்தபுரத்தைச்சேர்ந்த ஆலங்காட்டுத்தாசில்தார் மாஜிஸ்டிரேட் எஸ். கே. மகாதேவ ஐயர், பீ. ஏ., பி. எல். அவர்களைக்கோர்ட்டில் யாவரும் பார்க்கக் கான்ஸ்டேபிலொருவன் நன்றாகவடித்துவிட்டனன். இதற்குக்காரணம் ஷை கான்ஸ்டேபிலுக்கு ஷை அய்யர் ஒரு கிரிமினல் குற்றம்பற்றி 20 ரூபாய் அபராதம் விதித்ததேயாம். இவனிப்போது போலீசார் வசத்திருக்கிறான்; மாஜிஸ்டிரேட் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றனர்.

தோணிப்பாலங்கள்:—தென்னிந்தியா ரயில்வே கம்பெனியார் இராமேசுவரத்திலுள்ள தனுக்கோடி முனைக்குந் தலைமன்னாருக்குமிடையில் ரயில் வண்டித்தொடரை அப்படியே யேற்றிச்செல்லுமாறு மூன்று தோணிப்பாலங்கள் செய்யக் கிளாஸ்கோவிலுள்ள இங்கிலீஷ் கம்பனியாருக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

சிறுபெண்களுள் விதவையாயிருப்பவர்கள் தொகை:—இப்போது இந்தியாவில் 9,000,000 சிறுமிகள் 11 வயதிற்குமேல் 15 வயதிற்குள் விவாகஞ்செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களுள் 2,500,000 சிறுமிகள் 11 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், 400000 சிறுமிகள் விதவைகள் என்றும் தெரிகின்றன.

ரயிலேறிப்போய்வரும் ஆடுகள்:—நாகப்பட்டணத்து ரயில்வே ஸ்டேஷனில் நாகூர்க்குப்போகும் ரயில்வண்டித்தொடரில் சில ஆடுகள் ஏறி நாகூர் ரெயில்வே ஸ்டேஷனிலிறங்கி ஆங்குப் பிளாட்பாரத்திலுள்ள வாழைப்பழத்தோல் முதலியவற்றைத்தின்று மீண்டும் நாகப்பட்டணத்திற்குப் போகும் ரயில்வண்டித்தொடரில் ஏறிவந்து விடுகின்றனவாம். இன்னுஞ்சில ஆடுகள் வாரமொருமுறை தஞ்சாவூருக்கு ரயிலேறிப்போய்வருகின்றனவாம். இவ்வாறு நடப்பது சகஜமென்று நாகப்பட்டணம் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் சொல்லுகின்றாராம்.

லோ, பீ.

இஸ்லாம் நேசன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகை-3.] 1912 ஏப்பிரல் [வகை. 8.

சீதனம்.

"சீதனம்" என்னும் பதத்திற்கு, "ஸ்திரீக்குரிய பொருள்" என்று அர்த்தம். இதற்குப் பொதுவாக எவ்வகையானும் ஸ்திரீக்குரிமையானபொருளை யெல்லாமுணர்த்தக்கூடியஇவ்வருத்தமேற்பட்டிருந்தாலும் பெரும்பான்மையும் இது, பெண்ணின் தகப்பன்வீட்டிலிருந்து, மணம்புரிவித்தனுப்புங்காலத்தில் பெண்ணுக்காதரவாகக் கொடுக்கும்பொருளையே குறிப்பிடும். இன்னும் மாப்பிள்ளைவீட்டார் பெண்ணுக்குப் பரியமாகக்கொடுக்கும்பொருளும்ஸ்திரீக்குரியதாயிருப்பதால் அதனையும் சீதனமென்றுகூறலாம். இவ்விருவகைக் கருத்துக்களையும் அனுசரித்தே நம்மவர் நெடுங்காலமாகச் சந்தர்ப்பத்துக்குத்தக்கபடி மாப்பிள்ளைவீட்டார்பெண்வீட்டாரிடத்திலும், பெண்வீட்டார் மாப்பிள்ளைவீட்டாரிடத்திலும்பணம்வாங்கும் வழக்கம் பரவிவருகின்றது. இதில் பெண்கள் மலிவாயிருந்தால் பெண்வீட்டார் பணம்கொடுப்பார்கள்; மாப்பிள்ளைகள் மலிவாயிருந்தால் மாப்பிள்ளைவீட்டார் பணம்கொடுப்பார்கள். இப்படிக்கொடுப்பதில் தனவந்தர்களுக்குக் கஷ்டமில்லாமல்போகிறது. ஏழைகளோ படுங்கஷ்டத்திற்கு அளவில்லை. கடன்பட்டாவது நிலபலங்களை விற்றாவது எந்தவகைக்கேனும் பணத்தைக்கட்டித் தொலைத்துவிட்டுச் சம்பந்தத்தை முடித்துக் கொள்கிறார்கள். இவ்வகைச் சம்பந்தத்தால் அவர்களை மூன்றாநாளே மூதேவிவந்து பிடித்துக்கொள்ளுகிறாள்; வறுமையென்னும் கொடியபேய் அவர்கள் வீட்டில்வந்து குடியேறி விடுகின்றது. அதனால் அரைவயிற்றுக்கும் அன்னம் அகப்படாமல் அலைச்சல்படுகிறார்கள். இப்படி அலைச்சற்படுவதில் மாப்பிள்ளைவீட்டார் [illegible] ணம் செய்ததனால் ச[illegible]

யடையவேண்டிய மாப்பிள்ளை வறுமைக்கஷ்டத்தால் மனைவியை மெல்லத்துரத்த வழிபார்க்கிறான்; பெண்வீட்டார் கொடுத்துக்கெட்டிருந்தால் அவர்கள்படும் தரித்திரக்கஷ்டத்தைப்பார்த்துப் பெண் சகிக்காமல் எந்நேரமும் கண்ணீர்வடித்து மாப்பிள்ளைக்குச்சந்தோஷத்தை உண்டாக்குவதற்குப்பதிலாக துக்கத்தையே உண்டாக்கிக்கொண்டிருப்பாள். இவ்விருவகையாலும் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் சந்தோஷமே ஏற்பட இடமில்லாமற்போகின்றது. இதனால் சம்பந்தம் நீங்கிப்போகவும் ஏதுவுண்டாகிறது. இஃதன்றிச்சிலர் பணம் கொடுக்கமுடியாமல் பெண்களையும் மாப்பிள்ளைகளையும் கலியாணமில்லாமல் நெடுங்காலம் வரை வைத்துக்கொண்டு துக்கப்பட்டுப் பெருமூச்சு விடுகிறார்கள். இப்படி இருவகையாருக்கும் கஷ்டம் ஏற்படுவது சகசமாயிருந்தாலும் இப்போது தென்னாட்டிலுள்ள முஸ்லிம்கள் இருக்கும் சில ஊர்களில் பெண்வீட்டாரே மாப்பிள்ளைக்குப் பணம்கொடுத்துக் கலியாணமுடிக்கிறதென்ற நூதனவழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம்: அவ்வூர்களுள் மாப்பிள்ளைகள் அதிகமானவர் இல்லாததும், அவர்கள், தங்கள் ஊரில் நெருங்கின பந்துக்களாயுள்ளவர்கள் தவிர மற்றையர்க்குப் பெண்கொடுக்கலாகாது என்று தீர்மானித்திருப்பதுமேயாம். இதனால், மாப்பிள்ளை படிக்காதவனாயிருந்தாலும், மூடனாயிருந்தாலும், அக்கிரமமுடையவனாயிருந்தாலும் அவனுடைய யோக்கியதையைச் சிறிதும் கவனியாமல் பணத்தையும் கொடுத்துப் பெண்ணையுங்கொடுத்து விடுகிறார்கள். இவ்வாறு கொடுப்பதனால் அப்பெண்கள் இன்னவிதமான கெதியையடைவார்களென்பதைத் தந்தைமார்கள்தாம் யோசித்துக்கொள்ளவேண்டும். இதனால் மாப்பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கும் கெர்வத்துக்கு அளவேகிடையாது. பெண்வீட்டாரைச் சிறிதும் மதியாமல் தாங்கக்கூடாதபடி பதினாயிரத்துக்கு மேற்பட்டதொகை கூடக்கேட்க ஆரம்பிக்கிறார்கள்; அவர்கள் நோக்கம்போல மாமன்மார்கொடுத்தும் தீர்க்கிறார்கள். சிறிதுபடித்துப் புத்திமான்களாயுள்ள மாப்பிள்ளைகள் இவ்வாறு கேட்டாலும் பாதகமில்லை. அவர்கள் தகுதியை உத்தேசித்து ஒருவாறு அதிகப்பணம் கொடுத்தாலும் கொடுக்கலாம். இவர்களோடு உபயோகமற்ற மாப்பிள்ளைகளும் தங்கள் தகுதியைச்சிறிதும் கருதாமல் செருக்கோடு பணம்கேட்பதுதான் மிக்க வயிற்றெரிச்சலாயிருக்கிறது. அவர்கள் "நான் கேட்ட தொகையைக்கொடுத்தால் கொடுங்கள், இல்லாவிட்டால் பெண் எனக்கு வேண்டியதில்லை" என்று மிகவும் முறுக்காய்ப்பேசுகிறார்கள். அந்தோ பரிதாபம்! மிக்க நாகரிகமுள்ள ஒரு பெண்மணியை, அவளுக்குச்சிறிதும் ஒவ்வாத அறிவிலியிடம் தள்ளுவதோடு பணத்தையுமா கொடுத்தழுகவேண்டும். இந்தக் கெட்டவழக்கத்தைச் சில பணக்காரர்களே இலட்சியமில்லாமல் பணத்தைக்கொடுத்து ஏற்படுத்திவிட்டார்கள்; இதனால் ஏழைகளுக்கு மிக்க கஷ்டமாயிருக்கிறது; நன்றாக ஆராய்ந்து யோசித்தால் இது, மிகவும் அநாகரிகமான விஷயமென்பது நன்கு புலப்படும். இவர்கள் வெளியேபோய் நல்ல இடங்களை விசாரித்துப் படிப்பும் விவேகமுமுள்ள மாப்பிள்ளைகளுக்குப் பெண்ணைக்கொடுத்தால் என்னமோசம்? சொந்தத்திலேயே அதிலும் உள்ளூரிலேயே செய்யவேண்டுமென்று நினைத்து இவ்வாறு பாமருக்குப் பெண்ணைக்கொடுத்துப் பணத்தையும் இழப்பதால் வரும் இலாபமென்ன? "குட்டுப்பட்டாலும் மோதிரக்கையினால் குட்டுப்படவேண்டும்" என்றபடி பணம் கொடுத்தாலும் நல்ல புத்திசாலிகளுக்குக்கொடுக்கவேண்டும். அதிலும் அவன் சிறிது வறுமையுள்ளவனாயிருந்தால் மாத்திரம் அவ்வாறு கொடுப்பது தகும்; ஏனென்றால், பெண் சவுக்கியத்தை யடைவதற்கேதுவாம். பணக்காரனுக்குக்கொடுத்தல் அனாவசியமாம். இதேவிதமாகப் பெண்வீட்டார் வறுமையுள்ளவர்களாயிருந்தால் அவர்களுக்கு மாப்பிள்ளைவீட்டார் அதிகத்தொகை கொடுத்துதவுதல் நலம். இதனால் இருவகையார்க்கும் சந்தோஷமுண்டாகி ஒத்துவாழ ஏதுவாம். இதனோடு வெளியேறி நாலாபக்கங்களிலும் ஆராய்ந்து நல்ல குடும்பத்தையும் நல்ல மாப்பிள்ளையையும் தேடிச்சம்பந்தம் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் மாத்திரம் உலகத்தில் சிறப்புண்டாகும்; இதையனுசரிக்காது பழையவழக்கங்களை விடக்கூடாதென்று நினைத்துப்பணத்தையுங்கொடுத்து ஒழுங்கற்ற சம்பந்தங்களைச்செய்வோர்க்கு மனதிருப்தி ஒருநாளும் உண்டாகமாட்டாது. மாப்பிள்ளைகளுக்குப் பணம்கொடுக்கும் ஒழுங்கற்றவாடிக்கையினால் சில மாப்பிள்ளைகள் பெண்ணுடன் பொன்னும்வருமென்ற எண்ணத்தால் ஒருதொழிலும் செய்யாமலிருந்து சோம்பேறிகளாய்ப்போய்க் கலியாணம் செய்தபின்பும் சீதனப்பொருளைவைத்துக் காப்பாற்ற வகைதெரியாது மூன்று[illegible] தொலைத்துவிட்டுத்தரித்திரத்துக்குள்ளாகின்றார்கள்; பின்பு பெண்ணின்கதியும் அதோகதியாய்விடுகின்றது. [illegible]ர்வு தாழ்வறியாமல் மா

ப்பிள்ளைக்கே பணம் கொடுக்கும் வழக்கத்தையனுசரிக்கும் தனவந்தர்கள் சற்று ஆலோசித்து இதனைமுற்றும் நிறுத்தி இனிமேலாவது ஒழுங்கானவழியைக் கடைப்பிடித்தொழுக முன்வருவார்களென்றெண்ணுகிறோம்.

The Future of Turkey.
துருக்கி ராஜ்யத்தின் வருங்காலநிலை.

லண்டன் நகரத்தில் பிரசுரமாகும் “ரிவ்யூ ஆவ் ரிவ்யூஸி”ன் பத்திராசிரியரான மிஸ்டர் உவில்லியம் டி. ஸ்டெட் என்பவர் துருக்கிநாட்டுக்குச்சென்று அங்கு ஒருமாதம் தாமதித்து அத்தேசத்தின் துரைத்தனவிஷயமாகத் தாம்கொண்ட அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இஸ்லாம்நேசனின் அபிமானிகளுக்காக அவ்விஷயத்தைச் சுருக்கித் தமிழில் எழுதுகிறோம். அதாவது:—

நான் கான்ஸ்தாந்தினோபிளுக்குப்போகும்போது சற்று வியாகூலத்தோடேபோனேன்; திரும்பிவரும்போது, சந்தோஷத்தோடும், துருக்கிராஜ்யம் இப்போதைய சங்கடத்தினின்றும் சுலபமாய் வெளிவந்து புதிதான ஊக்கத்தோடு அண்டையயலார்களுக்கும் நன்மை பயக்கக்கூடுமென்னும் ஆழ்ந்த நம்பிக்கையோடும் வந்தேன். நான் துருக்கியில் ஒரு மாதமே தாமதித்தேன். அதற்குள்ளேயே அந்நாட்டுச் சங்கதிகளை யறிந்துகொண்டு, துரைத்தனநிர்வாகர்களைக் கண்டுபேசி எனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறேன். ஒவ்வொரு நாட்டுக்கும் அவசியமாக ஒரு மகாபுருஷனும் ஒரு பிரதான கொள்கையும்வேண்டும்; இரண்டையும் நான் துருக்கியில்கண்டேன். மகாபுருஷன் யாரெனில் சுல்தானவர்களே; கொள்கையென்னவெனில, சுல்தானவர்களுடையகொள்கையே.

சுல்தான் ஐந்தாவது முகம்மது அவர்களைப்பற்றி முதலில் பேசுவோம்; அவர் வயதானவர். அறுபத்தேழு வருஷங்களில் முப்பதுவருஷம் அவர் சிறைச்சாலையிலிருந்ததுபோலவே இடையறாத காவலில் இருந்திருக்கின்றனர். இவ்வாறு உலகவிஷயங்களினின்றும் பிரிந்திருந்ததனால் இவருக்கு மனோதிடனும் தேகதிடனும் குன்றிப்போனதுண்டு. ஆகவே இவர் எப்போதும் விழிப்புள்ளவராக இருப்பதற்கில்லை. இவரது குணமோசதா தியானத்திலேயே செல்வதன்றி காரியநிர்வாகத்தில் செல்வதில்லை. சுருக்கிச்சொல்லுங்கால் சுல்தானவர்களுக்கு விருத்தாப்பியத்தோடுபலவீனமும் உண்டாகியிருக்கின்றது. மதியூகமும் மனவுறுதியும் இல்லாதவரென்றும், பாலிய துருக்கியர்கள் சொல்கிறபடி ஆடவேண்டியவரென்றும் சுல்தானவர்களைச் சொல்லவேண்டும். இந்தப் பாலிய துருக்கியர்களே இவரை சுல்தானாக்கினர். அவர்களுடைய சொல்படி நடவாதபோனால் அவர்கள் இவரைத் தள்ளிவிட்டு வேறொருவரை சுல்தானாக்கிக்கொள்ளவும் கூடும்.

இவையெல்லாம் உண்மையாகவே இருப்பதாக நாம் வைத்துக்கொண்டாலும், இப்போதைய நிலைமைக்கு அவசியமாகவேண்டிய மகாபுருஷர் அவரேயென்றும், ராஜ்யநன்மையை உத்தேசித்து அவர்கொண்ட கொள்கை முற்றுப்பெறும்படி மந்திரிமார்கள் திடசித்தத்தோடு அவருக்கு உதவிசெய்வார்களென்னும் நம்பிக்கையிலேயே வருங்காலநிலைமை இருக்கிறதென்றும் நான் நிச்சயமாகச் சொல்வேன்.

தற்காலத்துக்கு அவசியமாயுள்ள மகாபுருஷர் அவரென்றேன். ஏனெனில், முதல்காரணம் அவர் சுல்தானாகவிருப்பது; இரண்டாவது அவர் இஸ்லாம் மார்க்கத்துக்கே தலைவரென்னும் கலிப்பாகஇருப்பது; மூன்றாவது, ராஜ்யநிர்வாக விஷயமாக அவருக்கு நல்ல கருத்துக்களிருக்கின்றன. அவர் என்னதான் பலமற்றவராகவும் திடசித்தமில்லாதவராகவும் இருந்தாலும், நாட்டுக்கும் முஸ்லிம் உலகத்துக்கும் அவர் தலைவரானபடியால், ஸ்தானமாத்திரத்தாலேயே வைதீகராயும் லௌகீகராயும் விளங்குகின்றார். துரைத்தனநிர்வாகம் அவர் பெயராலேயே நடைபெறுகின்றது. பாதுஷா ஸ்தானத்துக்கு ஏற்பட்ட அந்தஸ்துக்களை பாலிய துருக்கியர்களால்கூட எடுத்துவிடமுடியவில்லை. சுல்தான் அப்துல்ஹமீது அவர்கள் தமது அந்தஸ்தை துர்விநியோகப்படுத்திப்போயினரென்றாலும், ஜனங்களில் பெரும்பாலார் பாதுஷாவிடத்தில் சர்வமரியாதையையும் வைத்திருக்கின்றனரென்பதை ஐந்தாம் முகம்மது சுல்தானவர்கள் கண்டுகொண்டனர்.

சுல்தானவர்களை நான் காணச்சென்றபோது அவர் காற்றிலலைக்கப்பட்ட நாணலைப்போலவும், ராஜ்யாதிகாரத்தை வகிக்கும் போலியரசரைப்போலவும், பிரதிமைபோல வழக்கமாக ஏற்பட்ட

ராஜஸபைக்கிரமங்களை அனுசரிப்பவரைப்போலவும் இருப்பாரென்று எண்ணியிருந்தேன். திரும்பிவரும்போது, முதல்தரமான மனிதரைக் கண்டுவந்ததாகவே எண்ணினேன். மதியூகத்தில் மெதுவாகவிருந்தாலும் அதில் அவருக்கு உறுதியுண்டு; மேன்மேலெழவேண்டுமென்னும் பேராசை அவரிடமில்லை. சுபாவத்தில் அடக்கமும் ஒதுக்கமுமுள்ளவர். என்றாலும் உறுதியான திடசித்தமுள்ளவர்; அவ்வுறுதியோடு கருமங்களை எண்ணிச்செய்யக்கூடிய சக்தியும் வாய்ந்தவர்; இன்னும் அவர் விநோதமாகவும் சாதுரியமாகவும் பேசக்கூடியவர்; ஒருவன் அந்நியனாயினும் அவனுடன்பேசி அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டுமென்னும் ஆவலுமுடையவர். அவரிடம் பாசாங்கு என்பதேகிடையாது. சற்று சிரயசாத்தியமானபதவியில் அவரிருப்பதாகவே எனக்குத் தென்பட்டது. ரூஸ்வெல்டு, ஜர்மானிய சக்கரவர்த்தி, ஏழாம் எட்வர்டு சக்கரவர்த்தி முதலியவர்களோடு இவரை ஒப்புமைகூறுவதற்கில்லையாயினும் இவர் உண்மையில் அன்பும் அருளும்வாய்ந்த நற்குணர். தமக்கென்றே ஒருவித குணத்தையும் மனவுறுதியையும் பெற்றவர். துருக்கிராஜ்யத்தை ஸ்திரப்படுத்தி ஜனங்கள் சமாதானத்தோடும் திருப்தியோடும் வாழ்வதற்கேற்ற கொள்கைகளையுடையவர். இத்தகைய குணசீலர் இப்போது துருக்கிராஜ்யத்தில் தலைவராக வீற்றிருப்பதனால்தான் அதற்கு நற்காலம் சீக்கிரத்தில் வருமென்பது எனது திடமானசித்தம். ஆதலால்தான் சுல்தானவர்களை இப்போது அவசியமாக வேண்டப்பெற்ற மகாபுருஷர் என்று கூறினேன்.

இனி அவர்களுடைய கொள்கையைப்பற்றிப் பேசுவோம்:

அப்துல் ஹமீதின் கொடுங்கோன்மை முடிவடைந்ததும் ஜனங்களுக்கிருந்த சந்தோஷகாலத்தில் பாலிய துருக்கியர்கள்கொண்டிருந்தகொள்கையே சுல்தானவர்களுடைய கொள்கையாம். அதாவது நியமத்துக்குக்கட்டுப்பட்டு ஆளும் அரசருடைய கொள்கையாம். இதன்படி, சுல்தானவர்கள் மந்திரிமார் மூலமாகவே ராஜ்யவிஷயங்களைச் செய்யவேண்டியவராயினும் அவரது கொள்கை உண்மையான முஸ்லிம் ஒருவனுடைய கொள்கையாகவுமிருக்கிறது. மார்க்கவிஷயங்களில் இவர் வைராக்கியம்கொண்டவரன்று. என்றாலும் எல்லாவிஷயங்களையும் கடவுள் ஒருவன், மேலிருந்து கவனித்துவருகிறானென்றும், அவனுக்குத் தம்முடைய

செய்கைகளைப்பற்றி உத்தரவாதம் செய்யவேண்டியகாலம் ஒன்று வருமென்றும் சுல்தானவர்களுக்குப் பூர்ண நம்பிக்கையுண்டு. ஆகவே முகம்மதியமதத்தில் இவருக்கு முழுவிசுவாசமிருந்தாலும், மற்றையமதங்களுக்கும் வேண்டியவளவு மரியாதைவைத்துத்தானிருக்கின்றனர். இதனால், துருக்கிராஜ்யத்துக்கு விசேஷநன்மைகள் உண்டாகுமென்பது எனது அபிப்பிராயம். இன்னும் சுல்தானவர்களுடைய நோக்கமென்னவெனில், நாடெங்கும் சமாதானமே பரவியிருக்கவேண்டுமென்பதாம். யுத்தம் தொடங்குவதற்கு உத்தரவிடவேண்டுமானால் இவருக்கு எளிதில் மனம்வராது. ஐரோப்பியநாடுகள் எல்லாவற்றோடும் நட்புடனிருக்கவேண்டுமென்பதே அவருடைய முழுநோக்கம். அந்நாடுகளில் ஏதாவதொன்றுடன் மற்றெல்லாவற்றைக்காட்டிலும் அதிகமான நட்புப்பாராட்டவேண்டியிருக்குமாயினும் அதன் காரணமாகத் துருக்கி ராஜ்யத்துக்கும் மற்றைய ராஜ்யங்களுக்கும் மனஸ்தாபம் வராமல் பார்த்துக்கொள்வதிலேயே சுல்தானவர்கள் கருத்துள்ளவர்கள். இதுமட்டுமன்று. துருக்கிராஜ்யத்திலிருந்து பிரிந்துபோன கிறிஸ்தவநாடுகளான பல்கேரியா, கிரீஸ், ஸர்வியா, மாண்டிநிகிரோ முதலியவைகளோடு துருக்கிராஜ்யம் ஐக்கியமாக உறவுகொண்டாடவேண்டுமென்பதுவும் சுல்தானவர்களுடைய பிரதான நோக்கமாம். இவைகளெல்லாம் சகோதரவாஞ்சையுடன் ஒத்துழைக்கவேண்டுமென்பது அவர் மனத்தில் நெடுநாளாகவுள்ள எண்ணம். ஆகவே, பால்கன்நாடுகளில் கலகம் நேர்ந்தபோது அக்கலகத்துக்கு இவர்தாம் அதிகமாகக் கவலைப்பட்டுவருந்தியவர். இவருடைய ஆளுகையில் துருக்கிக்கும் அதற்குக் கீழடங்கிவாழும்நாடுகளுக்கும் கூட்டுறவு அதிகப்படுமென்றும் அதன்மூலமாகப் பரஸ்பர நன்மைகளுண்டாகுமென்றும் நினைப்பதற்கேதுவுண்டு. அவரது ராஜ்யத்தில் பல்வேறு ஜாதியார்வசிக்கின்றனர். பாஷை, மதம், சட்டதிட்டங்கள், ஆசார அனுஷ்டானங்கள் ஆகிய இவைகளுக்குள் மிகவும் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. இவ்வித்தியாசத்தையெல்லாம் அறவே ஒழித்து அனைவரும் ஒரே விதத்தினராக வேண்டுமென்னும் நீதியற்ற கொள்கையை சுல்தானவர்கள் ஒப்புவதில்லை. இதனால் ராஜ்யத்தின் ஐக்கியத்துக்குக் கேடு நேருமென்பது இவருக்கு நன்றாய்த்தெரிந்தவிஷயமாம். இவ்வித கொள்கையினால் அரேபியாவிலும் ஆல்பானியாவிலும் கலகங்கள் நேர்ந்தபோது, சுல்தானவர்கள் தமது அபிப்பிராயத்தை வெ

ளியிட்டுக் கலகத்தையடக்கமுயன்றனர். பின்னொருபொழுது, அப்துல்லாபாஷா என்பவர் சுல்தானவர்களிடம் விடைபெற்றுச்செல்லும்போது, அவர்கள் அவரிடம் மாண்டினிக்ரோவரிடம்சண்டைபோடவேண்டாமென்றும் சமாதானமாய்ப் போகவேண்டுமென்றும் சொல்லியனுப்பினார்கள். ஆல்பானியர்கள் அனைவரையும் கலகத்துக்காகத் தண்டிக்காமல், மன்னித்துவிட்டதும் சுல்தானவர்களுடைய கொள்கையை வலியுறுத்தும்.

இனி, இவ்வளவு குணசீலரான சுல்தானவர்களுடையகொள்கையை நிறைவேற்றும் விதத்தைப்பற்றி இரண்டொருவார்த்தை பேசுவாம். ஒரு காரியத்தைச்செய்யவெண்ணினால், அதன் மார்க்கத்தையும் கவனிக்கவேண்டும். துரைத்தனமாறுபாட்டுக்குப்பின் அதிகாரத்தைவகிக்கும் பாலியதுருக்கியர்கள் சிற்சில சந்தர்ப்பங்களில் தாங்கள் எதிர்பார்க்கும் காரியத்துக்கு விரோதமான செய்கைகளைச்செய்வதில் சற்றுப்பிடிவாதமாகவிருந்தனர். அவர்களில் கெட்டிக்காரர்களுக்கு இதன்தவறு சீக்கிரத்திலேயேதெரிந்தது. அதன் காரணமாகச் சில சீர்பாடுகளும் உண்டாயின.

முதன் முதலில், துருக்கியராஜ்யத்தில் அடங்கியுள்ள பல்வேறு ஜாதியாரையும் ஒரேதன்மையினராக்க எண்ணும் காரியத்தை அறவே ஒழித்துவிடவேண்டும். ஒவ்வொரு ஜாதியாரும் வகுப்பினரும் இதுவரையில் அனுபவித்துவந்த உரிமைகள், சுதந்தரங்கள், பாத்தியங்கள் ஆகியவைகளை இனிமேலும் அவ்வாறே தங்குதடையின்றி அனுபவிக்கலாம் என்ற ராஜவிளம்பரத்தை உடனே பிரசுரம் செய்யவேண்டும். போர்த்தொழிலில் பயிலுவதோ, மார்க்கசுதந்தரமோ.கல்விகற்பிப்பதில் பிரத்தியேகபாத்தியமோ, சுயபாஷையை உபயோகிப்பதோ, வியாபார சவுகரியமோ, எதுவாகவிருந்தாலும் சரியே, அதில் இதுவரையில் ஏற்பட்டுவந்த சவுகரியத்துக்கு விரோதமாகவொன்றும் செய்யக்கூடாது.ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் துரைத்தனநிர்வாககர்கள் ஏதேனுமொரு புதிய சவுகரியம்செய்து கொடுக்கவேண்டும்.

இரண்டாவது, சுல்தானவர்களுடைய மரியாதைக்கும் அந்தஸ்துக்கும் யாதொருவரையறையும் ஏற்படுத்தக்கூடாது; துருக்கிய ராஜ்யத்துக்கும் முகம்மதிய மார்க்கத்துக்கும் அவரே பிரதம அதிகாரியாதலால், அவர் நாட்டுக்கு ஓர் விலையிலாமாணிக்கமென் எண்ணப்படவேண்டும். அவருக்கு ஜனங்கள்செய்யும் வந்தனை வழிபாடுகளைக்கண்டு புரோவிருத்திச் சங்கத்தார் பொறாமைப்படவும்வேண்டாம். துரைத்தனஹானி நேர்ந்துவிடுமென்று பயப்படவும்வேண்டாம். அவர்பாலியராயும் சுயபயங்கருதும் போராசைக்காரராயும் இருந்தால் அவ்வாறு பயப்பட ஏதுவுண்டு. இப்போதிருக்கிற ரீதிக்கு ஒரு பயமும்வேண்டாம்.

சுல்தானவர்களுடைய அரசாட்சியைச் செவ்வையானதாகச் செய்யவேண்டுமானால், ராஜ்யத்தில் அமைதியைப்பரப்பி ஜனங்கள் ராஜவிசுவாசமுள்ளவராகவிருக்கும்படி செய்யவேண்டும். உயிர் பொருள் முதலியவற்றுக்கு அபாயம்வராமலும், சுதந்தரங்களுக்கு இடையூறுநேராமலும், செல்வாபிவிருத்திக்கும் நீதிக்கும் குறைவுண்டாகாமலும் இருப்பது சார்வபௌமராஜ்யத்தின் கீழடங்கியிருப்பதினால்மட்டும் கிட்டுமேதவிர ராஜ்யத்தைப்பிரிவுபடுத்துவதால் கிட்டாதென்பதை ஜனங்கள் உணருமாறு செய்யவேண்டும்.

இவ்விதமாக ஜனங்களுடைய சுதந்தரங்களைப்பாதுகாக்க ஏற்பாடுசெய்தபிறகு, ராஜ்யத்தின் செல்வநிலைமையை ஒழுங்குபடுத்தவேண்டும். கடன்கொடுத்த யூதர்களின் பொருட்டே துரைத்தனமாறுபாடு உண்டானதென்று வதந்தியுலாவுகின்றது. இதில் உண்மை ஒன்றுமேயில்லை. இதனால் ஜனங்களுக்குள் கலகம் நேரவும் கூடும். அப்படிக் கலகம்நேராமல்போனாலும் துரைத்தன நிர்வாககர்கள் ஏதோ கெட்டவெண்ணத்துடன் காரியங்களைச் செய்கிறார்கள் என்ற சந்தேகமாவதுண்டாகும். இதற்கு இடங்கொடுக்கவே கூடாது. பால்கன் நாடுகளுடன் சிநேகபந்தம் செய்துகொள்ளவேண்டும். கிரீஸ்தேசத்திலிருந்துவரும் பண்டங்களை மறியல் செய்திருப்பது பிழையாகும். அதை உடனே ரத்துசெய்யவேண்டும். ராஜ்யத்துக்கு அகத்தும்புறத்துமுள்ள கிறிஸ்தவநாடுகளோடு நட்புப்பூண்டொழுகுவது சற்று சிரமசாத்தியமென்றாலும் அதைச்செய்ய முயலவேண்டும். பார்லிமெண்டுசபைக்குபல்கேரியா, கிரீஸ், ஆர்மினியா முதலிய இடங்களிலுள்ள கிறிஸ்தவர்களும் நியமனம் பெறலாமென்று சவுகரியம் செய்துகொடுக்கவேண்டும். இஃதொன்றே ராஜ்யத்தை வெகுதூரம் ஐக்கியப்படுத்தும். பற்பலகாரணங்களால் அதிருப்தியடைந்திருக்கும் ஜனங்களைச் சமாதானப்படுத்தவேண்டும். குற்றத்தை ஒப்புங்கொள்ளும்படி. கைதிகளைக

குரூரவதை செய்கிற உத்தியோகஸ்தர்களுக்குங் கடுந்தண்டனை விதிக்கவேண்டும். இவ்வாறெல்லாம்செய்தால் நாட்டில்நடப்பதாக வெளியாகும் கொள்ளைகொலை முதலியவையெல்லாம் நன்றொழியும்.

பால்கன் நாடுகளை ஒன்றாக்கவேண்டியது அவசியம். மற்றைய பிரதேசங்களிலிருந்து கிளம்பும் குறைபாடுகளைத் தீர்க்கவேண்டியதும் அவசியம். இவ்விரண்டுக்குமாக ஒருமத்தியஸ்தர் சபைஏற்படவேண்டும். ஏற்பட்டால் சுகசவுகரியங்கள் தாமே உண்டாகும். எல்லாம் புரோவிருத்திச் சங்கத்தாராகிய பாலிய துருக்கியர்கள் நடந்துகொள்ளும் மாதிரியைப்பொறுத்துள்ளது. அவர்களும் நாட்டுக்கு நன்மைசெய்வதையே விரதமாகக்கொண்டிருக்கின்றனரென்றே தோன்றுகின்றது.

ஆலம்காஹிறு நாவலர்.

(பிப்ரவரிமாசத்துச் சஞ்சிகையின் தொடர்.)

அதிகாரம் 4.

“தேசாபிமானம்.”

நாகூரில் புத்தகவியாபாரம் செய்துவந்த நாராயண சாமி பிள்ளையென்பவரோடு நமது நாவலர், அடிக்கடி கல்விவிஷயமாய்ச்சம்பாஷித்துவருவார். நாராயணசாமிபிள்ளை யென்பவர் ஒரு வித்துவான்; திரிசிரபுரத்தைச்சார்ந்த மேலைச்சிந்தாமணியைத்தமது பிறப்பிடமாய்ப்பெற்றவர். அவரோடு சம்பாஷித்தல் நம் நாவலருக்கு மிகுந்தசந்தோஷகரமாயிருந்தது. தாம் இயற்றுங்கிரந்தங்களில் ஆக்ஷேபங்களைக்கண்டு தம்மோடு அவைகளைப்பற்றித் தருக்கிக்கும்படி அந்தவித்துவானை நாவலர் கேட்பார். அவரும் அவ்வாறே தருக்கஞ்செய்ய, நாவலர் தகுந்த நியாயங்களைக்கொண்டு அவரை வெல்லுவர். இதனால், நாவலருக்கும், அவ்வித்துவானுக்கும் மிகுந்த பிரயோஜனங்கள் விளைந்தன.

ஒருநாள், நாவலர், அந்த வித்துவானுடைய புத்தகக்கடையிலிருந்தபோது, ஒருபிராமணர், ஏதோ புத்தகம் வாங்கும்பொருட்டு அங்கேவந்தார். அவரைப்பார்த்தவுடனே நாவலர் அவருடைய விருத்தாந்தத்தை விசாரித்தார். அப்பிராமணர், தாமிருப்பது “திரிசிரபுரம்” என்றும் தாம் இங்கிலீஷ்கல்வியிலும், தமிழ்க்கல்வியிலும் பழகியிருப்பதாயும், தமக்கு சர்க்கார் உத்தியோகஞ்செய்யவிருப்பமில்லையென்றும், கைத்தொழின் முறையிற்பிரவேசித்து, ஏழைஜனங்களுக்கும்பிழைப்பூட்டி, சுபாதீனமாய் ஜீவிக்கவேண்டுமென்பதே தமது விருப்பமென்றும், ஜனங்களுக்குள் ஒற்றுமை, தேசாபிமானம், கைத்தொழில் விருத்தி முதலியவை உண்டாவதற்குத்தம்மால் ஆனமட்டும் முயற்சிசெய்யப்போவதாகவும், தம்மைஇவ்வித எண்ணத்துக்குத் தூண்டியவர்கள், திருச்சியில் தம்மோடு சேர்ந்து உழைப்பார்களென்றும் சொன்னார். இப்பிராமணருக்கும் நாவலருக்குமிடையில் அதிக நேரம் சம்பாஷணை நடந்தது. அப்பிராமணரின் தகுதியை நாவலர், ஆரம்பத்திலேயே தெரிந்துகொண்டனர். நாவலரின் தகுதியை, அப்பிராமணர் தெரிந்துகொள்ள அதிகநேரஞ்சென்றது. நாவலரின் ஆலோசனைக்கு அந்தப்பிராமணர், விருப்பங்கொண்டவராய்க்காணப்பட்டார். அத்தருணத்தில் அவ்விடத்திற்கு இன்னும் சிலகனவான்கள் விஜயமானார்கள். தமது ஆலோசனையை விரும்பிக்கேட்ட பிராமணரைப்பார்த்து நமது தேசாபிமான நாவலர் அடியில் வருமாறு சொன்னார்:—

ஐயா!

நான் தங்களோடு வார்த்தையாடவும், தங்களைப்பார்க்கவும் மிகுந்த சந்தோஷத்தை என்னுள் அடைகின்றேன்.

நான், தங்களை எந்தப்பலனைக்கருதியாவது முகஸ்துதிசெய்யத்துணியவில்லை. நான், நம் தென்தேசப்பிராமணர்களிடம் எவ்வளவுக்குப்பழக்கப்பட்டேனோ அவ்வளவுக்கு பிராமணசாதியாரிடம் எனக்கு ஒருவிதமான வெறுப்பும், ஆசங்கையும் உண்டாயிருந்தன. அச்சாதியாரில் தங்களையன்றி விரும்பத்தக்க ஒருமனிதனையேனும் இதுவரையில் நான் காணப்பெறவில்லை. தங்களின் நண்பர்கள் இன்னும் சிலர் தங்களூரிலிருப்பதாகச் சொன்னீர்கள். அவர்கள் அனைவரையும் நானும் என்னுடைய நண்பர்களாக ஒப்புக்கொள்கிறேன். பொறாமை, பேராசை, சுயநலநோக்கம், இழிவானகருமங்கள் முதலியவற்றால் பெருந்தன்மையை முற்றும் இழந்து, பெயருக்கு மாத்திரம் இந்துக்களில் உயர்ந்த சாதியாரென்று சொல்லப்பெற்றுவரும் பிரயோஜனமற்ற பிராமணர்களையே

இதுகாறும் நான் பார்த்தேன். இன்று அந்தச்சாதியாரிடம் நான் வைத்திருந்தவெறுப்பையும், அவநம்பிக்கையையும் ஒருவாறு மாற்றிக்கொள்ளும் பொருட்டு, தங்களைப்பார்க்கின்றேன். ஐயா! நம் தேசத்தில் ஒற்றுமையென்னும் பயிருக்கு, அநாவசியகமான ஜாதிமதப்போராட்டங்களே வேர்ப்புழுக்களாக இருக்கின்றன. இந்த போராட்டத்திற்கு ஆதாரம், எவ்விடத்திலிருக்குமோவென்று நான் ஆராய்ந்துபார்த்தேன். அது பிராமணர்களையே குறிப்பிடுகின்றது. ஹிந்துக்களின் ஆசார நாகரிகங்களுக்கு, பிராமணர்களே உத்தரவாதிகள். அவர்கள், தங்கள் உத்தரவாதத்தை மறந்து இந்தியாவை இவ்வாறு கெடுத்துவிட்டார்கள். இதற்குக்காரணம், பழிக்கத்தக்க சுயநல எண்ணமேயன்றி வேறல்ல. நான் இவ்வாறுசொல்வதால், ஹிந்து மதத்தையாவது, பிராமணர்களையாவது தூஷிக்கும் நோக்கமுள்ளவனென்று தாங்கள், என்னைத்தவறாய் எண்ணிவிடல் கூடாது. உங்கள் மதத்தை, மாற்றிவிடச்சொல்ல நான் வரவில்லை. மதப்போராட்டங்களை மாற்றுங்கள். சாதி வேற்றுமைகளால் அன்னியரைக் குறைவாக எண்ணிப்பகைமை பாராட்டும் இழிதன்மையை, இந்தியாவினின்றும் ஓட்டுங்கள். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பது அவரவர் அநுசரிக்கும் முறையால் விளங்கத்தக்கது. "பெருமையும் சிறுமையும் தான்றரவருமே" என்னும் ஆன்றோர் மொழியை மறந்துவிடாதீர்கள். பொறாமையும், அகந்தையும், சுயநல எண்ணமும் மனிதனை, ஒருகாலத்தும் மேன்மையடைய விடமாட்டா. பொறுமையும், அன்பும், பரோபகாரநோக்கமும் மனிதரை உயர்வுபடுத்தும். இவ்விதகுணங்களால் நிறையப்பெற்றவர்களே மேன்மக்களென்று உலகம் ஒப்புக்கொள்ளும். ஹிந்து ஜனங்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு, ஜாதிமதப்போராட்டங்களை முதலில் நீக்கவேண்டும். இந்தப்போராட்டத்தைக் கவனியாமல் ஒற்றுமையைக்கோரினால் எவ்வாறு ஒற்றுமை உண்டாகிநிலைபெறும்? ஒற்றுமைக்கு அஸ்திவாரம், ஜனக்கட்டுமானம் அல்லவா? அவ்விதக்கட்டுமானத்திற்றான் ஒற்றுமை, காலூன்றி நிற்கும். ஆதலின் அஸ்திவாரத்தைப் பலமாய்ப்போடுங்கள். தாங்கள் என்னிடத்துச் சொன்னவார்த்தைகளால் இந்துக்களிற்பெரும்பாலார், தங்கள் மார்க்க உண்மைகளை அறியவில்லையென்றும், அவ்விதம் அறியாமையால் மதப்போராட்டம் விளைகிறதென்றும் தெரிகிறது. மார்க்க உண்மைகளை இந்துக்கள் அறியும்படி செய்வது, பிராமணர்களின் கடமையல்லவா? தற்காலப்பிராமணர்களிலும் பலர், மார்க்க உண்மையறியாரென்று சொன்னீர்கள். இவ்வித நிலைமையில், இவ்விந்தியாவின் ஐக்கியத்தைப்பற்றி யெண்ணுவது எவ்வளவு கூடாதகாரியம்! ஆயினும் உங்களின் முயற்சியை நீங்கள் கைவிடவேண்டாம். உங்களால் இயன்றவரையில் நீங்கள் இவ்விஷயத்தில் முயற்சிசெய்யுங்கள். உங்கள் முயற்சிக்கு உபபலம் தேடுங்கள். நீங்கள் செய்துகாட்டும்வழியை மற்றவர்களும் பின்பற்றச்செய்யுங்கள். இவ்வாறு தளராமல் பாடுபட்டு ஒற்றுமையைக்காட்டிவரின், ஒருகாலத்தில் இந்தியாவின் ஒற்றுமை நிலைக்கும்.

கைத்தொழில் முதலியவற்றில் ஜனங்களுக்கு விருப்பமுண்டாகும்படி செய்வதற்கு, அன்னியசாதியாரின் முயற்சிகளையும், தந்திரோபாயங்களையும் ஜனங்களின் மனத்திற்படும்படி செய்தால் போதும். அதன்பொருட்டு வீணாக அந்நியரின் அதாவது ஆளுஞ்சாதியாரின் விரோதத்தை, இந்தியாவுக்குள் பரப்பிவிட வேண்டாம். மேலும், அரசாங்கத்தின் அநுகூலத்தை உங்கள் முயற்சிக்கு ஒரு துணையாக்கிக்கொள்ளுங்கள். அவ்வாறு கூடாவிட்டால், அரசாக்ஷியின் பிரதிகூலம், உங்கள் முயற்சியில் குறுக்கிடாமலிருக்கும்படியாவது செய்து கொள்ளுங்கள்.

சுதேச சாமான்களையே ஜனங்கள் உபயோகித்தல் வேண்டுமென்பது என்கருத்து. ஆயினும் சுதேச சாமான்கள் முதலெடுப்பில் விலையதிகமாகவும், கண்களுக்குப் பகட்டில்லாமலும் இருக்குமாதலின், விலைகுறைந்தும், அழகாயுமுள்ள பிறதேச சாமான்களையே ஜனங்கள் வாங்குவார்கள். ஏழைகளும், மத்தியவகுப்பாரும் முதலில் சுதேச சாமான்களையே உபயோகிக்கவேண்டுமென்ற தீர்மானத்துக்குவருவது கஷ்டம். ஆதலால் தனவான்களே! ஆரம்பத்தில் அவ்வித சுதேச சாமான்களை வாங்கி உபயோகிக்குந் தீர்மானத்தைப் பிடிவாதமாய்க்கொள்ளல் வேண்டும். லாயர்கள், பாரிஸ்டர்கள், வக்கீல்கள், வியாபாரிகள் முதலியவர்களெல்லாம் "சுதேசசாமான்களையேயுபயோகித்தல்" என்னும் ஒருவிரதத்தைக் கைக்கொள்ளல்வேண்டும். அவ்விதம்செய்தால் மாத்திரம் சுதேசகைத்தொழில் ஆதரிக்கப்பெற்றுதொழில் விருத்தியாகி, சாமான்கள், மலிந்துபரவும். அப்போதுயாவரும் சுதேசசாமான்களை உபயோகிக்கத்தலைப்படுவார்கள். பெரியமனிதர்களக்காரியத்தைய

னுசரிக்கிறார்களோ அதை, மற்றவர்களும் விரும்பிக்கைப்பற்றுவார்கள். ஆதலின், உங்கள் எண்ணங்கைகூடுவதற்கு அதுவேசிறந்த முறை. சுருக்கிச்சொல்லுமிடத்து, பாடசாலைப் பிள்ளைகளிலிருந்தே ஒற்றுமையும், தேசாபிமானமும் வளரவேண்டும். இதில்நீங்கள் முயற்சிசெய்யவேண்டும்; ஆனால், இந்த முயற்சி செய்யப்படும்போது நீங்கள் அதிகஜாக்கிரதையுள்ளவர்களாக இருங்கள். ஏனென்றால், சிறுவர் எந்தக் காரியத்தையும் ஆவலாய்ப்பின்பற்றும் சுபாவமுடையர். அன்னோரிடத்து இவ்வொற்றுமையை, மாசுமறுவின்றிக் கொடுக்கவேண்டும். அந்நியரைப்பகைத்து, தம்மில் ஒற்றுமையைக்காட்டுதலென்னும் கேடான விதையை, நம் சிறுவரின் நெஞ்சில தூவிவிடாதீர்கள். உத்தரவாதம் இன்னதென்பதை யறியாதசிறுவர், எந்த அல்பகாரியத்தையும் இயற்கையான படபடப்பு, உற்சாகம் முதலியவற்றால் பிரமாதமாக்கிவிடுவர். அவ்விதமாயின் ஒருபயனும் விளையாமல், உங்கள் முயற்சிக்குப் பெரும் இடையூறுகள் சம்பவிக்கும். எப்போதும் நம்முடைய முயற்சிக்குத்தக்க துணைகளைத்தேடிக்கொள்ள வேண்டுமேயன்றி, நாம் வேலைசெய்யும் கைகளை முடமாகத்தக்க இடையூறுகளை உண்டாக்கிக்கொள்ளல்கூடாது. எவ்வித நல்லவிஷயத்திற்கும் இடையூறு உண்டாதல் சகஜம். ஆயினும் நாமே அவ்வித இடையூறுகளைத்தேடிக்கொள்ளல் கூடாது. சகஜமாய்வரும் இடையூறுகள், நமது முயற்சிக்குத்தோல்வியடைந்துபோம். நமது முயற்சியே இடையூறுகளை விளைவித்தால் பின்பு அவைகளைப்பரிகரித்தல் சாத்தியமாகாது. ஐயா! தாங்கள்எடுத்துள்ள முயற்சி, மேலான நோக்கமுள்ளதாகையால் அதைநிதானமாகவும், தளராமலும், பொறுமையுடனும் நிலை நாட்டுங்கள். நம்மிடம் ஐக்கியம் உண்டாவதற்கு நாம் அன்னியரின் பகைமையைத் தேடிக்கொள்ள வேண்டியதில்லை. இதை நீங்கள் ஒருபோதும் மறவாமல் உங்களாற்கூடியமட்டும் பிரயாசைப்படுவீர்களானால் உண்மையாகவே உங்களின் முயற்சி கைகூடும்'' என்றார்.

நம் நாவலர், சுதேசியவிஷயமாய் அக்காலத்திலேயே இவ்வளவு திட்டமான அபிப்பிராயங்கொண்டிருந்தது மிகவும் வியக்கற்பாலதே. அக்காலத்தில் தேசாபிமானவூக்கம், ஜனங்களுள் அதிகமாயிராமையால் நாவலர், அதைப்பற்றி ஜனக்கூட்டங்களில் பிரசங்கிக்க விரும்பவில்லைபோலும். ஆயினும், தேசாபிமானவூக்கம் படைத்தவர்களுக்கு நாவலர் தமது திருத்தமான அபிப்பிராயங்களைச்சொல்லி உற்சாகமூட்டுவதில் பின்வாங்கினதில்லை.

(தொடரும்.)

உ. செ. மு.

துருக்கியுத்தசெய்திகள்.

இத்தாலியர் ஆரம்பத்தில் எவ்வளவும் நியாயத்தை அனுசரிக்காமல் நீதிவிரோதமானவழியில் பிரவேசித்து, யுத்தசட்டத்தை மீறிச்சண்டைதொடங்கி ஆர்ப்பரித்தபோது, அவர்களுடைய அடாச்செய்கைகளைப்பற்றித் துருக்கியர் பன்முறை கவனிக்கும்படி அறிவித்துங்கூட மௌனஞ்சாதித்துக் கண்மூடியிருந்தபவர்கள், இப்போது இத்தாலியர் நாடோறும் நன்றாகத்துருக்கியர்கையால் உதைவாங்கிச் சீரழிவதைப்பார்த்து விட்டு ஏதோமிகவும் நடுவு நிலைமை காட்டுகிறவர்கள் போன்று சமாதானஞ்செய்துவிடுவதாய்ப்பிரவேசித்துத் தலைவிரித்தாடுகின்றார்கள். இதை நன்றாகயோசிக்கும்போது இப்போதுள்ளசில பயில்வான்கள் தங்கள்தங்கள் சிஷ்யர்களைக்குஸ்திக்குவிட்டு, ஒருவன்கீழேவிழப்போகுந்தருணத்தில் அவனைச்சேர்ந்த பயில்வானும், மற்றவர்களும் எழுந்தோடிக்குஸ்தியை நிறுத்தி, சரிஜோடியாய்ப் போய்விட்டார்களென்று வாய்ப்பறையடிப்பது போன்றிருக்கின்றது. இதுவும் ஒரு நியாயமா? இவர்கள் இவ்வாறு சமாதானப்பேச்சிற் பிரவேசிக்கவே, நன்றாக மற்றொருவனிடத்தில் உதைபட்ட ஒரு சிறுபையன், தன்னைச்சேர்ந்தவர் பக்கத்தில் வரக்கண்டு, தான் தோல்வியடைந்திருந்தாலும் துள்ளித் துள்ளித் தன் பகைவன்மேற்பாய்ந்து கெர்வங்கொண்டாடுவதுபோல், பொய்யும் புளுகும் வீரமற்றசெய்கையும் பொருந்திய இத்தாலியர், திரிப்போலியை விட்டு மேலே கொஞ்சதூரமாவது செல்லமுடியாமல் உதைபட்டோடித்திரிந்தும், திரிப்போலி நாடு தங்களுக்கு வசமாய்விட்டதென்றும், இது ஜெயித்துக்கொண்ட பூமியாகையால் இதைப்பற்றிச் சுல்தானவர்களிடம் விட்டுவிடும்படி கேட்கவேண்டிய அவசியமில்லையென்றும், துருக்கியசேனை உடனே திரிப்போலியைவிட்டுப் போய்விடவேண்டுமென்றும், இவ்வாறுசெய்தால் மாத்திரம்

சமாதானத்துக்கிடமுண்டாகுமென்றும் இருந்த விடத்திலிருந்தே தள்ளுகிறார்களாம். இதற்கு பவர்கள் என்னபதிலளித்தனரோ தெரியவில்லை. ஆனால், “சண்டையை நிறுத்தவேண்டுமென்று வற்புறுத்தவில்லை” யென்றும், “சமாதானவிஷயத்தில் நடுநிலைமையைக்கைவிடமாட்டோம்” என்றும், பவர்கள் துருக்கி கவர்ன்மெண்டுக்கு உறுதியான ரிப்போர்ட்டுகள் அனுப்பியிருக்கிறார்களாம். துருக்கிய அறபியர், இதுவரை, திரிப்போலியில்தினையளவும் இத்தாலியர்க்கிடங்கொடோம் என்று கூறிவந்ததும், இனிமேலும் அவ்வித உறுதியையே நிலை நாட்டுவார்களென்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயங்களே. இத்தருணத்தில் பவர்கள் சமாதானத்திற்குக்கிளம்பியது துருக்கியர்க்குக்கெடுதி செய்தற்குச்சமானமாகும். இதன் முடிவு எம்மட்டிலாகுமோ தெரியவில்லை. இஃதொருபக்கமிருக்கச் சமீபத்தில் நடந்தயுத்தங்களைப் பார்த்தால் இத்தாலியர் மிகவும் துன்பமடைந்திருக்கிறார்களென்பது நன்கு விளங்கும். அச்செய்திகளாவன:—

மிஸ்றிலிருந்து தெர்ணாவுக்கு வாலண்டியராய்ப்போய்ச் சண்டைசெய்யும் ஒருவர், சென்ற பிப்ரவரிமீ 3உ தமது நேயரொருவர்க்கு எழுதியகடிதத்தில், “நாங்கள் சுகமாய்வந்து சேர்ந்தோம்; இங்கேயாவரும் சௌக்கியமாயிருக்கிறார்கள்; யுத்தம் மிகவும்நன்றாக நடக்கின்றது; நம்பக்கத்தில் வெற்றியே அதிகரித்துவருகின்றது; எதிரிகள் பக்கம் தோல்வியே நிகழ்கின்றது; மிஸ்றுபத்திரிகைகட்கு இஸ்தம்பூலிலிருந்து கிடைத்த சமாசாரங்கள் உண்மையே; உரோமிலிருந்து வெளிப்படும் ரிப்போர்ட்டுகளனைத்தும் பொய்யே; இங்குவந்து நேரிற் பார்வையிடும் ஒவ்வொருவரும் உண்மையை நன்றாக உணர்ந்துகொள்வார்கள்” என்றும், “சென்ற ஜனவரிமீ 17உ இரவு 10 மணிக்கு ஜனரல் அன்வர்பே, ‘யுத்தத்திற்கு வேண்டிய கருவிகளோடு சித்தமாயிருக்கவேண்டு’மென்று எங்களுக்கு உத்தரவுசெய்தார்; நாங்கள் அப்படியே போர்க்கோலங்கொண்டு நின்றோம்; 5-நிமிஷங்களுக்குப்பின் அவர் எங்கள் முன்வந்து வழிகாட்டிச்சென்றனர்; இராத்திரி சுமார் 2 மணிக்கு நாங்கள் முன்னேற ஆரம்பித்தோம்; அப்படி முன்னேறிப்பார்க்கும்போது தெர்ணாவுக்கருகே சமபூமியென்பதேகிடையாது; 2 கஜமுள்ளபள்ளமும், மேடும், குன்றும், குழியுமாகவே நிறைந்திருந்தன; நாங்கள் அந்தக்கஷ்டமான வழியிற் சென்று, இத்தாலியரிருந்த அரண்களினருகே சேர்ந்தோம்; அப்போது சுமார் காலை 4 மணியிருக்கும். அவ்வாறு சேர்ந்தவுடனே நாங்கள் அவ்வரண்களை எதிர்த்துத்தாக்க ஆரம்பித்தோம்; அத்தருணத்தில் ஜனரல் என்வர்பேக் எங்களுக்கு முன்னே நின்று உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார்; சிறிது நேரத்திற்குள் இத்தாலியருடைய அரண்களை நாசஞ்செய்து விட்டோம்; இத்தாலியரின் 2¼ கம்பெனி சோல்ஜர்கள் அடியோடு இறந்தொழிந்தனர்; அவர்கள் நித்திரையில் மயங்கிக்கிடந்தமையால் நாங்கள் சண்டைதொடங்கிய 1½ மணி நேரத்துக்குப்பின்புதான் விழித்தார்கள்; அவ்வாறு விழித்தவுடனே பீரங்கியாலும், துப்பாக்கியாலும் குண்டுகளை அதிகமாகச்சிதறினார்கள்; ஆயினும், நாங்கள் அக்குண்டுகளுக்குத்தப்பிக்கொண்டு முன்னிலும் அதிகமாய் முன்னேறித்தாக்கினோம்; அவர்கள் 400 குண்டுகளுக்குமேல் பிரயோகஞ்செய்தும் ஒன்றும் பயன்படவில்லை; எங்களில் எவருக்கேனும் காயமுண்டாகவில்லை” என்றும், “அதன்மேல் துருக்கி பீரங்கி உத்தியோகஸ்தர்கள் இத்தாலியர்மீது பீரங்கிப்பிரயோகஞ்செய்துகொண்டுபோக அதைக்கண்டு அவர்கள் மேற்கண்ட துருக்கி ஆபீஸருக்கெதிரே பீரங்கிகளைத் திருப்பிவைத்துக்கொண்டு நான்குபுறத்திலுமிருந்து குண்டுகளைச் சொரிந்தார்கள்; அக்குண்டுகளோ பாம்புகளைப்போன்று சீறிக்கொண்டு வந்து விழுந்தன. எனினும், அத்துருக்கி ஆபீஸர்கள் அக்குண்டுகளை இலக்ஷியஞ்செய்யாது தமது பீரங்கிகளுடன்தப்பிவந்துவிட்டார்கள்; இந்தயுத்தத்தில்இத்தாலியர் பக்கத்தில் 450 பேர் சேதம்; காயமடைந்தவர்களுக்கோ கணக்கில்லை; நம் பக்கத்திலோ 10 பேர் காயமடைந்தனர்; 6 பேர் ஷஹீதானார்கள்; நமது சேனையிலோ 150 பேரேயிருந்தனர்; இவர்களாலேயே வெற்றியுண்டாயிற்று. இத்தாலியரிலோ 4000 பேரிருந்தார்கள்; அப்படியிருந்தும் ஒன்றும் பிரயோசனமுண்டாகவில்லை; இன்னும் இதைப்போல் எத்தனையோ யுத்தங்கள் நடந்திருக்கின்றன” என்றும், “இச்செய்கைகளே இத்தாலியரின் பேடித்தனத்தையும், துருக்கியரின் வீரத்தையும் காட்டுதற்குப்போதுமான சாக்ஷியாயிருக்கிறது” என்றும் எழுதியிருக்கிறதாக ஸைபுல் இஸ்லாம் கூறுகின்றது.

“தெர்ணாவில், இத்தாலியர் கட்டியிருந்த அரண்களையும், எதிரிகள் தாக்கவரும்பக்ஷத்தில் அவ்விபரத்தை அறிவிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த காந்தக்கம்பங்களையும் இன்றிரவு நம

து அரபியவீரர்கள் நாசஞ்செய்துவிட்டனர்; அதனால் அவர்கள் மதிமயங்கி விடியும்வரை துப்பாக்கி, பீரங்கி முதலியவற்றைப் பிரயோகஞ் செய்துகொண்டேயிருந்தார்கள். ஆயினும் அவற்றால் ஒரு பிரயோசனமுமில்லை; அவர்களுடைய கோழைத்தனத்தைப் பார்த்து அராபியர் நகைத்தார்கள்; தாகத்திற்கு உபயோகப்படும் தண்ணீர் ஊற்றுக்களையெல்லாம் அராபியர் கைவசப்படுத்திக் கொண்டபடியால் இத்தாலியர் பெருங்கஷ்டத்தையடைந்து கப்பலிலிருந்து கொண்டுவரப்படும் தண்ணீரைக்கொஞ்சம் கொஞ்சமாக உபயோகப்படுத்தித் துன்பப்படுகிறார்கள்" என்று அல்முஐயத் பத்திரிகையின் நிருபநேயர் பிப்ரவரி 9௳ தெர்னாவிலுள்ள போர்க்களத்திலிருந்து கடிதமெழுதுவதாக ஸைபுல் இஸ்லாம் கூறுகின்றது.

பின்னும் ஷை நிருபநேயரே பிப்ரவரி 16௳ அல்முஐயத் பத்திரிகைக்கு எழுதியகடிதத்தில் "இப்பொழுது பராப்ஸாக்கூட்டத்தாரின் அடிமைகள் ஆயிரக்கணக்காக இங்குவந்திருக்கின்றனர்; இவர்களெல்லோரும் யுத்தப்பழக்கமும், வல்லமையுமுள்ள வீரர்கள்; இவ்வகுப்பின் தளகர்த்தரோ மிகவும் சீர்த்திவாய்ந்த ஸஜாஸிஷேக் அலாமியா என்பவர்; இக்கூட்டத்தவரை வரவேற்பதற்கு மதிப்புவாய்ந்த உத்தியோகஸ்தர் கூட்டம் எதிரேசென்று இவர்களை வரவேற்று உபசரித்தது. பின்பு எல்லோரும் ஒன்றாகக்கூடி யுத்தவிஷயங்களைப்பற்றிப் பேசி நாயகம் சுல்தானவர்களுக்கு வாழ்த்துக்கூறி அவருடைய அபிவிருத்தியைக்கருதி துவாவும் ஓதினார்கள். இதனால், தெர்னாவிலுள்ள உதுமானியப் பாளையத்தாருக்குச் சந்தோஷமுண்டாயிற்று; இத்தாலியர்க்கோ முன்னிலும் அதிகமாகப் பயமதிகரித்திருக்கிறது" என்று எழுதியிருப்பதாக ஸைபுல் இஸ்லாம் கூறுகின்றது.

இன்னும், சென்ற பிப்ரவரி 14௳ தெர்னாவில் நடந்தயுத்தத்தில் என்வர்பேயவர்களின் தலைமையின்கீழ்ச் சென்ற துருக்கிய அராபிவீரர்கள் தெர்னாவைச்சுற்றிக்கொண்டு இத்தாலியரின் அரண்களை நாசஞ்செய்தபோது அவ்வரண்களைக்காத்திருந்த இத்தாலிய சைனியம் நாசமடைந்ததென்றும், அதுகண்டு அதற்குத்துணையாக வந்தனவாகிய வேறுபட்டாளங்களும்சிதைந்தனவென்றும், இந்தயுத்தத்தில் இத்தாலியருள் 500பேர் கொல்லப்பட்டார்களென்றும், 300பேர் காயமடைந்தார்களென்றும், நம்பக்கத்திலே

50பேர் ஷஹீதானார்களென்றும், 60பேர் காயமடைந்தனரென்றும், இன்னும் பல நன்மையான விதமாகமாகவும், அல்முஐயத் பத்திரிகையின் நிருபநேயர் தமிம் என்றவிடத்திலிருந்து அம்மாதம் 17௳ தந்திகொடுத்திருப்பதாக ஸைபுல் இஸ்லாம்மூலம் சமாசாரம் எட்டுகிறது.

சென்ற பிப்ரவரிமாசம் 25௳ காலையில் ஒரு அராபிக்கூட்டத்தார் சில துருக்கிய ஆபீஸரோடு சேர்ந்து தப்ருக்கிலுள்ள இத்தாலியரின் அரண்களைத்தாக்கினதாகவும், அப்போது அவர்கள் கரையிலிருந்தும், கப்பலிலிருந்தும் பீரங்கிப்பிரயோகஞ்செய்தும் துருக்கிசைனியம் மேலேறிச்சென்று அமர்புரிந்தது வியக்கத்தக்கதாயிருந்ததென்றும், வீரமுள்ள அநேகம் பீபிமார்கள் துருக்கிசேனையின் பக்கத்தில் நின்று பைத்துகளோதித் தங்கள் தங்கள் கணவர்களை உற்சாகப்படுத்தி "தீன் தீன்" என்று சப்தமிட்டார்களென்றும், அதனால் அராபியர் உற்சாகங்கொண்டு தாக்கவே இத்தாலியர் நடுக்கங்கொண்டு தங்களில் மரணமடைந்தவர்களில் மூவரையும், காயமடைந்தவர்களில் அறுவரையும் போட்டுவிட்டு மற்றவர்களை இழுத்துக்கொண்டோடிவிட்டனரென்றும், இந்தயுத்தத்தில் இத்தாலியருக்கு அளவுக்கு மிஞ்சின சேதமெனவும், பக்பக் என்னுமிடத்திலிருந்து ஷை நிருபக்காரரே அம்மாதம் 27௳ ஒரு தந்திகொடுத்திருப்பதாக ஷை ஸைபுல் இஸ்லாம் மூலமாகவே சமாசாரம் தெரிகிறது.

இன்னும் ஷை அல்முஐயத் பத்திரிகையின் நிருபநேயரான கனம் அப்துல் ரஹிமான் என்பவர் கொடுத்ததந்தியில், சென்ற பிப்ரவரிமாசம் 25-26-27௳ இரவுகளில் பெங்காஸியில் இத்தாலியர் கட்டியிருந்த கோட்டைகளை நமது துருக்கிய அராபியர் நாசப்படுத்தி இத்தாலியரிடமிருந்த யுத்தகருவிகள், உணவுப்பொருள்கள் முதலியவைகளைக் கைப்பற்றிக்கொண்டார்களென்றும், இந்த 3 நாள் யுத்தங்களிலும் சுமார் 1500 இத்தாலியர் மாண்டுபோயினரென்றும் 3000பேர் காயமடைந்தனரென்றும், அத்தருணத்தில் மற்றொருகூட்டத்தார் ஈச்சங்காட்டில் பதுங்கியிருந்து உளவு பார்ப்பதையறிந்து அவர்களையும் நாசப்படுத்தியதோடு, மேலேறி உளவுபார்ப்பதற்காக நாட்டப்பட்டிருந்த ஸ்தம்பங்களையும் நாசஞ்செய்துவிட்டனரென்றும், இந்தயுத்தத்தில் கிடைத்தசாமான்கள் நமது துருக்கிசேனைக்குச்சிலமாதங்களுக்கு உதவியாயிருக்கு

மென்றும், கர்னல் அஜிஸ்பே என்பவரே இந்தயுத்தங்களில் தலைமையாக நின்று வெற்றியடைந்தவரென்றும், நமது பக்கத்திலும் 60பேர் ஷஹீதானார்களென்றும் 90பேர் காயமடைந்தார்களென்றும் கண்டிருப்பதாகவும் ஸைபுல் இஸ்லாம் கூறுகின்றது.

முஸ்லிம்கள் கவனிக்கத்தக்கவழி.

(மார்ச்சுமாச சஞ்சிகையின்றொடர்.)

4. மேலும், அரபியாவுக்கு அடுத்தடுத்திருக்கும் பல தேயங்களிலொன்றைக்குறித்துச் சொல்லாது அக்கண்டத்தின் ஆகக்கடைசியெல்லையாயிருக்கும் சீனைவைக்குறித்துச் சொன்னதெல்லாம் அரபியா முதல் சீனவரையான சகலபாஷைகளையும் கற்கவேண்டுமென்பதே. இன்னும் இவ்வெல்லைக்குட்பட்ட மத்திய ஆசியா உலகமனுக்களுக்கு ஆதிதேசபூமியாயிருப்பதால் உலகபாஷையை அல்லது இலௌகிகக்கல்வியைக் கற்கவேண்டுமென்பது நமது நபியவர்களின் கருத்து. அன்றியும் உலகத்திலுள்ள மற்ற எல்லாப்பாஷைகளிலும் மிகவும் கடினபாஷை சீனபாஷையைவிட வேறுகிடையாது. அப்பாஷை சீனர்களுக்கேயன்றி மற்றையோருக்கு எளிதில் படித்துக்கொள்ளும் ஆற்றல் உடையது அல்ல. இந்தக்காரணத்தைக்கருதியும் நமது நபியவர்கள். சீனஞ்சென்றாகிலும் கல்வியைந் தேடுங்கள்'' என்று மொழிந்துள்ளார் எனக்கொள்ள நேருகின்றது.

5. பிராஞ்சுதேசத்திலும், இங்கிலாந்து தேசத்திலுஞ்சென்று தமது மார்க்கத்தைப்பரவச்செய்ய நாடிய ஒரு இஸ்லாமான பிரசங்கி ஜனங்களைக்கூட்டுவதற்கு எந்தபாஷையில் நோட்டீஸ் போடல்வேண்டும்? பிராஞ்சு, இங்கிலீஷ், பாஷைகளிலல்லவா? இவ்வாறாகக்கூட்டப்பட்ட ஜனங்களை எந்தபாஷையைக்கொண்டு விளித்து இசுலாமார்க்கத்தைப் போதிக்கவேண்டும். பிராஞ்சு, இங்கிலீஷ், பாஷைகளைக்கொண்டல்லவா? அரபில் சொல்லி பிராஞ்சு, இங்கிலீஷில் மொழிப்பெயர்ப்பதால் மார்க்கம் ஜனங்களின் மனதில் அவ்வளவாய்ப்படியாது. பிரசங்கியின் பிரசங்கம் ஜனங்களின் மனதில் பதிந்து பலனைத்தரவேண்டுமானால் பிராஞ்சு, இங்கிலீஷ் கல்விகளைக்கற்கவேண்டும். அவ்வாறு கற்றுக்கொண்ட பிரசங்கி ஆண்டவர்கள் சொன்ன ஹதீதின்படி, வைதீக இலௌகிகக்கல்விகளையொருங்கே கற்றவராவார். இவர்பிரசங்கம் அச்சனங்களுக்குப் பிரயோசனங்கொடுக்கும். இக்கருத்துகளையெல்லாம் அறிந்துதான் நமது நபிகள் திலகமவர்கள் "சீனஞ்சென்றாகிலும் கல்வியைத்தேடுங்கள்" என்று வைதீக, இலௌகிகக் கல்வியைக்குறித்துச்சொன்னது பட்டப்பகல் வெளிச்சமே.

(இன்னும்வரும்.)

எம். எஸ்.

பஞ்சாவரலாற்று விளக்கம்.

(மார்ச்சுமாச சஞ்சிகையின்றொடர்.)

அதுகேட்டவுடனே அந்தரூபிகளில் நின்றும் இரண்டுபேரெழுந்து மனதயிரியத்தோடும் கைகட்டி நின்றுகொண்டு நவாபுசாகிபைப்பார்த்து, ஓமே! கல்விப்பொருளிலும், செல்வப்பொருளிலும் குறைவில்லாது சகல நற்குணமும் பொருந்தி அரசாட்சி செய்யும் நவாபுசாகிபே! தங்கள் சொல்லுக்கிரண்டுண்டா; தேவரீர் உங்கள் மனம்போலேவந்து பார்த்துக்கொள்ளுங்களென்று சொன்னார்கள். அதுகேட்டு நவாபுசாகிபு, கொத்தவாலோடும், தன்னோடுகூடவந்த மந்திரி பிரதானிகள் ஊர்ச்சனங்களோடும், அக்கூடாரத்தைப் பரிசோதனையிட்டுக்கொண்டு வரும்போது ஓராசாரியன் கண், அந்தப்புத்தின் கையைக்கண்டு கோபாவேசங்கொண்டவனாகி, அதோ இருக்கின்றது எங்கள் தெய்வமென்றலறினான். அதுகேட்டு அந்த ரூபிகள் கடுமையான கோபங்கொண்டவர்களைப்போலே பாசாங்குபண்ணி முகக்கடுகடுப்போடு அந்த ஆசாரியனைப்பார்த்து, நீர் ஏன் தெரியாமல் உளறுகிறீர், இக்கையை நாங்கள் எந்தெந்தவூர்களுக்குப் போகிறோமோ அந்தந்தவூர்களுக்கெல்லாமெடுத்துக்கொண்டுபோய் முஹர்றமாதம் வந்தால் எங்கள் இமாம் குசைறலியல்லாகு அன்கவர்கள் கையைப்போற் பாவித்து நாட்டிவைத்து அவர்களை நாங்கள் தியானஞ்செய்கிறது எங்கள் தேசவழக்கமாகையால், அதுபோலே செய்திருக்கிறோமேதவிர உங்கள் விக்கிரகத்தின் கையைக்கொண்டுவந்து வைக்கவில்லையென்று நவாபுசாகிபு முதலிய யாவருமறியச் சொன்னார்கள்.

அதுகேட்ட அவ்வாசாரியன், பதைபதைத்துத் துடிதுடித்து ரூபிலிகளைப்பார்த்து, இஃதென்ன விபரீத ஆச்சரியமாயிருக்கிறது, "களைத்தண்டுபிடுங்க ஏலப்பாட்டுப்பாடவேண்டுமா" "காவடிப்பாரஞ் சுமப்பவனல்லோ அறிவான்" அதுபோல, எங்கள்சுவாமியின் கையெங்களுக்குத்தெரியாதா; நிச்சயமாகவே அஃதெங்கள் சுவாமியின் கையேயல்லாது வேறில்லையென்றும், நீங்கள், "ஏடாகோடக் காரனிடத்திற்போகிறதற்கு வழியெங்கேயென்று கேட்பவர்கட்கு, அவன், போகிறவன் தலைமேலென்று சொல்வதுபோலே நீங்களுங்கள் கையென்று சொல்லுகிறீர்களென்றுஞ் சொல்லி வாதாடினான். அதுகேட்டு அங்கிருந்த நவாபுசாகிபு, அந்த ரூபிலிகளைப்பார்த்து, ஏன் வாதாடுகிறீர்கள்? நீங்கள் அந்தக்கையையெடுத்துவந்து யாவர்க்கும் பரிஷ்காரமாகக்காட்டினால், அஃதின்னாருடைய கையென்று இலேசாகத் தெரியவருமல்லவா என்றுசொன்னார்.

அதுகேட்டு, ரூபிலிகள் நவாபுசாகிபைப்பார்த்து, பரதுக்கஞ்சகியாத பரமபுருஷராகிய நவாபுசாகிபே! எங்கள் தேசத்திலே முஹர்ரமாத முதற்றேதியிற் பஞ்சாக்கைகளை நாட்டிவைத்து வணக்கத்தியானத்தோடிருந்து பத்தாம்நாளிலே தானெடுக்கிறது. அவ்வழமைபோலே நாங்கள் இக்கையை நாட்டிவைத்து இமாம் ஹுசைன் றலியல்லாகு அன்ஹவர்களுடைய நாட்டத்தியானத்திலிருக்கிறோம்; ஆகையால், நாங்கள் அக்கையை அவ்விடத்திலிருந்தெடுக்கமாட்டோம்; அப்படி அதனை யெடுக்கும்படிக்குத் தாங்கள் ஆக்கியாபித்தால் நாங்களெங்கள் உயிரை இந்தவிடத்திலிழந்துவிடுவோமென்று அழுதகண்ணும், சிந்தியமூக்குமாகச் சொன்னார்கள்.

இவ்விதம், ரூபிலிகள் சொன்னசொல் சாதுரியம் நவாபுசாகிபுக்குக்கொஞ்சம் இரக்கத்தைக்கொடுத்தமையால், அவர் அந்த ஆசாரியனையும், மற்ற இந்துக்களையும் பார்த்து அவர்கள் பத்துநாட்சென்றுதான் கையை வைத்த இடத்தில் நின்றுமெடுக்கிறது எங்கள் தேசவழமையென்று சொல்லுகிறபடியினால், அதுபோலே நாமெல்லோரும் பத்தாம்நாள் வந்து சோதிப்போமென்றும், அதுவரைக்கும் இவர்களை நான் காவலில் வைக்கிறேனென்றும் சொன்னார். இவ்விதம், நவாபுசாகிபுசொன்ன சொற்களைக்கேட்ட இந்துக்களெல்லாருங்கூடி ஒரேமனதாகி நவாபுசாகிபைப்பார்த்து, எங்களையாளுகின்ற நவாபவர்களே! பத்துநாளைக்குப்பின்னர், இக்கையானது எங்களுடையதென்றும், அவர்களுடையதென்றும் எப்படி அறிகிறதென்று கேட்டதற்கு, நவாபுசாகிபு, அந்த இந்துக்களைப்பார்த்து முஹர்ரமாதம் பத்தாம்நாள் ஒருபெரிய குழிதோண்டி அதிலே பெரிதாகக்கட்டைகளைப்போட்டு நெருப்பெரித்து அந்நெருப்பில் இக்கைக்குச் சொந்தக்காரர்கள் கையைப்பிடித்துக்கொண்டிறங்கி விளையாடிவரச்சே, காலிற்சூடேறாமல் வரில் நிசமாகக்கையானது அவர்களுடையதுதானென்று சொன்னார்.

(இன்னும் வரும்.)

எம். எஸ்.

பாலிமார்க்க கண்டனம்.

(மார்ச்சுமாச சஞ்சிகையின்றொடர்.)

இனி தலாயில்காரனார் சொல்கிறபடி நாபகம் அபூ சுஊது ஷிப்லீயுடைய மகாம் அவர்களின் செய்கு ஆகிய அப்துல் காதிறுல் ஜீலானீ ஆண்டவர்களின் மகாமைக்கான மேலிட்டிருக்கின்றதென முகியத்தீன் இபுனு அறபி (றலி) அவர்கள் சொல்லியது நிசமாகவிருந்தால், அப்போது அப்துல்காதிர் ஜீலானீ ஆண்டவர்களைக்குறித்தும் சாதுலீ ஆண்டவர்களைக்குறித்தும் தலாயில்காரனார் தமது புத்தகம் 6-வது பக்கத்தில் சொல்லி இருக்கின்றதின்படி அப்துல் காதிர் ஜீலானி ஆண்டவர்களினுடைய ஒரு சிஷனின் மகாம் அபுல் ஹஸன் சாதுலி ஆண்டவர்களுடைய மகாமைக்கானவும் உயர்த்தியாகிமேலிட்டு விட்டதென்றாகிறது. தலாயில் காரனார் அவருடைய புத்தகம் 6 வது பக்கத்தில்சொல்லி இருக்கின்றவை வருமாறு:—

"மபாகிர்" என்னுங்கித்தாபில் அலிய்யுல் குறைஷி (றலி) அவர்கள் நான் செய்யிதினா அபுல் ஹஸனிஷ் ஷாதுலீ (றலி) அவர்களுடைய செய்தியைப்பேசினால் செய்யிதினா அப்துல்காதிர் ஜீலானீ (றலி) அவர்களுடைய செய்தியையும் பேசுவேன். செய்யிதினா அப்துல்காதிர் ஜிலானி (றலி) அவர்களுடைய செய்தியைப்பேசினால் செய்யிதினா அபுல் ஹஷன்ஷாதுலி (றலி) அவர்களுடைய செய்தியையும் பேசுவேன். ஏனெனில், அவர்களி

ருவரினதும் மக்காம் ஒன்றாயும் அவர்களிருவருடைய ஸிர்று ஒன்றாயிருப்பதினாலேயும், அவர்களிருவரும் ஒன்றைவிட்டொன்று பிரியாததனாலேயுமே என்று கூறுவதாய் வருகின்றது. என்பதே.

மேலும் தலாயில் காரனார் "மபாகீர்" என்னும் கிதாபில் வருகிறதாக தம்முடையபுத்தகம் 10-ம் பக்கத்தில் எழுதி இருக்கின்றதாவது:—

செய்கும் ஆரிபும் இமாமுமாகிய செய்யிதினா அஹ்மதிபுனு அஷ்ஷெய்கு பகுறுத்தீன் இபுனு அபூபக்கறுல் ஏமனிய்யில்கற்சீ (றலி) அவர்களுடையகாலத்தில் தனித்த நாயகமாகிய செய்யிதினா அலிய்யிபுனு உமறுல் கற்சீய்யிஷ் ஷாதுலீ அவர்களுடைய கீர்த்திகளைப்பேசுமிடத்தில் சொல்கிறதாவது: இந்த உம்மத்துகளுள் குத்துபுமார்களில் முதலாவதாய் வந்தவர்கள் செய்யிதினா ஹஸனிபுனு அலிய்யிபுனு அபீதாலிப் (றலி) அவர்களே. இவர்களிலிருந்து ஒருவருக்குப்பின் ஒருவராய் இந்த குத்துபிய்யத்து செய்யிதினா முகியத்தீன் ஆண்டவர்களுக்குவந்தது. அவர்களுக்குப்பிறகு அல்லாகுதஆலா அவனுடைய சிறப்பைக்கொண்டும் அவனின் கார்மானத்தைக்கொண்டும் எக்காலமுமுள்ள அவலியின் வைளைக்கொண்டும் இந்த மக்காமை மறைவாக்கிவைத்துக்கொண்டு அதிகாரஞ்செய்திருந்தான். பின்பு அந்த மக்காமாகிய கிலாபத்துல் குபுறாவைக்கொண்டுள்ள மக்காமில் செய்யிதுனா அபுல் ஹஸனுஷ் ஷாதுலீ (றலி) ஆண்டவர்களை வெளியாக்கினான். அவர்களுடைய தனித்த மக்காமைப்பற்றி அவர்களது காலத்துள்ள முகர்றபான அவ்லியாக்களும் ஆரிபீன்களான உலமாக்களும் சித்தீக்கீன்களாகிய அவ்லியாக்களும் ஒருங்கியப்பட்டுத் தலைசாய்த்தார்களென்பதே.

இப்போது மேலே சொல்லப்பட்டவிதமாக நாயகம் அப்துல் காதிர் ஜீலானீ ஆண்டவர்கள் பெற்றிருந்த குத்துபிய்யத்துல் குபுறாவை அவர்களுடைய மவுத்துக்குப்பிறகு நாயகம் அபுல் ஹஸன் ஷாதுலீ ஆண்டவர்கள் வெளியாகும்வரையில் மறைத்துவைக்கப்பட்டிருந்தால் இனி அப்துல்காதிர் ஜீலானீ ஆண்டவர்களுக்கும் அபுல் ஹஸன் சாதுலீ ஆண்டவர்களுக்குமிடையிலுண்டான நாயகம் அபூசுஊது ஷிப்லீ ஆகிறவர்கள் அப்துல் காதிர் ஜீலானீ ஆண்டவர்களைவிட மக்காமால் மேலிட்டிருக்கிறதெப்படி? தலாயில்காரனார் தம்முடையபுத்தகம் 6-ம் 10-ம் பக்கங்களில் எழுதி இருப்பவைகளைச்சற்றுஞ்சிந்தித்துப்பாராமல் நாயகம் அப்துல் காதிறுல் ஜீலானீ ஆண்டவர்களின் மக்காமைபெனலற்ற பொய்க்கட்டுகளைக்கொண்டு தாழ்த்திப்பேசுதற்காய் முன்வந்தது அவருடைய மடைமையும் அறிவீனமுமே காரணமெனச் சொல்லவேண்டியதாய்க்கிடக்கின்றது. தாமெழுதியவைகளை ஆராய்ந்து விளங்கிக்கொள்ள சக்தியற்ற இவர் பிறராலெழுதப்படுபவைகளை எப்படி விளங்கிக்கொள்வாரோ தெரியவில்லை.

(இன்னும்வரும்.)

ஐ. எல். எம். எம்.

ஸ்ரீமான். பா. பு. ச. சுல்தான்அப்துல்காதிறுப்புலவரவர்
களுக்காக பேரம்பூர் மகாகனம் ம. ஜ. ஹாஜி;
ஜமால்முகியித்தீன் சாகிபு அவர்களுடைய
மதுரசா ஜமாலியாவிலிருக்கும்
மதுரைத்தமிழ்ச் சங்கவித்வான்
கீழக்கரை-ஸ்ரீமத் செ-மு,

ஹாபிலு, செய்யிது முகம்மது ஆலிம்புலவரவர்களியற்றிய வேண்டுதற்பதிகம்.

வெண்பா.

தாண்டும் ஹிஜுரி தசமூன்று நூற்றுமுப்ப
தாண்டு முஹற்றம் தசமூன்றும்—வேண்டுபுகழ்
சோதி வியாழன் சுபுகுமுன்சுல் தான்அப்துல்
காதி றகன்றனராம் காண்.

விருத்தம்.

திருபரவுமொருவானதேவர்மனுயாவரையுஞ்சிதைக்குமாதி
பொருபரமனுரைமேவுந்திருமதினத்திறைமகுழதுயர்சலாமும்
அருள்பரவும்சலவாத்துமவர்கிளைஞான்பர்தமக்கருளுமாற்றல்
மருபரவும்பிரபலசுல்தானப்துல்காதிறைநீமகிழ்விப்பாயே. (1)

நாடெல்லாமுனதரியதிருநடனமெனமறைகணவிலக்கேட்டுத்
தேடலாமெனக்கருதுந்திறலோரினுரங்கவரத்தினம்பார்த [ட்ச
பாடெல்லாம்படித்துவிக்கும்பரம்பொருளையுண துரியபரிவான்போ
வீடெல்லாம்புகுத்திடுசுல்தானப்துல்காதிறையுன்விருப்பாலன்றோ.

மதியுதவுமுதிபோரைகிதமருவியவரிதயமதனில்மோட்சப்
பதியுதவுமெனவோதிபரவைதருகிலவுலகப்பலனுஞ்செம்பொன்
நிதியுதவுதமர்தாரகிணைவகலநெறியருளுகிமலாசொர்க்க
நதியுதவிய திவிதசுல்தானப்துல்காதிறைநீரட்சிப்பாயே. (3)

காதகர்களொருகோடிகருதரியபெரியமனக்கரவால்பஞ்ச
பாதகமேபுரிந்திடினும்பரகதியைமறந்திடினும்பணித்திடாது
சாதகமேபுரிந்துதவுந்தற்பரமே! தயைநிதியே! தளராவின்ப
மாதவமே! புனிதருள்சுல்தானப்துல்காதிறக்கும்வருசிப்பாயே.(4)

மிஞ்சுபஞ்சவினையுடையோர்மிகமருவுமவரிதயவினைவாலுன்னை
கெஞ்சிடினுமவருபரக்கேட்டிடினுமுனதுபெருங்கிருபையாலே
அஞ்சலஞ்சலென்றவருக்கருள்புரியும்பெருமுகிலே! பழிவில்லாத
தஞ்சமதுவுஞ்சரண்சுல்தானப்துல்காதிறக்குந்தயைசெய்வாயே.

கண்ணிறைந்தகற்பகமே! கருதமலவுற்பவமே! ககனேர்போற்று, மெண்ணிறந்தவுனதுபுகழெடுத்தோதவிசைந்தவர்களெவரொன்றாலும், பண்ணிறைந்தபலநாளும்பகர்ந்திடினும்வரைந்திடினும்பணித்தல்போமா?, விண்ணிறைந்தமதிநிகர்சுல்தானப்துல்காதிறையுன்மிசைகொள்வாயே. (6)

மன்னுதவுலகமெலாமன்னிபவைவையெனமருண்டுமைகள்கூறு, மன்னுனைமறந்துழலுமடமாந்தருடையவிருண்மனதுவெண்டும், பொன்னுதிபொருள்பரவுங்கொடுத்தவரைவிடுத்திகழும்புனிதவாய்மை, சொன்னோனே! புனிதொளிசுல்தானப்துல்காதிறக்குந்தோற்றுவாயே. (7)

அறியாதசிறியோர்களறியவிழைபிழைபுரிகுவதுமவைகள்யாவும், பொறையாரும்பெரியோர்கள்பொறுப்பதுவுஞ்சரதமெனிற்புவனமூன்றுக், கிறையாகுமுனதடிமையெனவைசெயினும்பொறுப்பதுனதியற்கையன்றோ?, குறையாதவுனதருள்சுல்தானப்துல்காதிறக்குங்கொடுத்திடாயே. (8)

எக்காலமுமவரோடிருப்பமெனவிருப்பமுறவிசைந்தேனின்றேல், இக்காலக்கொடுமைவருமெனவறியாதெனதுமதிபிழைத்தேனந்தோ!, முக்காலுமுனதுசரணவர்க்குதவவேண்டிநின்றேன், முடிவில்லாத, அக்காலம்வருமுன்சுல்தானப்துல்காதிறக்குனருள்செய்வாயே. (9)

தாயினும்பேரன்புடையதடங்கருணைச்சாகரமே! தனியே! யெல்லாம், சேயெனும்பேரன்புடைமைச்சிறிதகலாதருள்புரியுந்தெளிவே! பொல்லா, நாயினும்பேரிழிவுடையேனுனதடிமைநலிவகலவிலற்காக, வாயினும்பேரழிவுறுசுல்தானப்துல்காதிறக்கின்னருள்செய்வாயே. (10)

இங்ஙனம்:

ஆ. ப. ம. அப்துல்காதிறு ஆலிம்.

மதுரசா ஜமாலிய்யா, பேரம்பூர்.

அருமந்தபொருள் விளக்கம்.

(மார்ச்சுமாத சஞ்சிகையின் தொடர்.)

இதற்கு அல்லாகுத்தஆலா அப்படி நீர்விரும்புகிறபடியால் நான்குவகைப் பக்ஷிகளைப்பிடித்து அறுத்து, அவைகளின் மாமிசத்தைத் துண்டுபடுத்தி ஒன்றாய்க்கலந்து அவற்றை நாலு, அல்லது ஏழுபங்குகளாகச்செய்து ஒவ்வொருபங்கை ஒவ்வொருமலையின்மீது வைத்துவிட்டு, பிறகு அவைகளை நீர் கூப்பிடும். அப்போது அவைகள் உம்மிடத்திற்கு விரைந்துவரும் என்றான். இதைக்கேட்ட நபியவர்கள், மயில், காகம், கழுகு, சேவல் இவைகளைப்பிடித்து அறுத்து, அவைகளின் மாமிசங்களை வித்தியாசந்தெரியாமற்கலந்து, குறித்தபடிபாகஞ்செய்து மலைகளின்மீதுவைத்தபின் அப்பக்ஷிகளின் தலைகளைமாத்திரம் தங்கள் கைகளில்வைத்துக்கொண்டு, மலைகளில் வைக்கப்பட்டுள்ள மாமிசங்களை நோக்கி அல்லாவுடைய உத்தரவின்படி வாருங்கள் என்று அழைத்தார்கள். அப்பொழுதே ஆச்சரியமுண்டாகும்படி எலும்பு, தசை, தோல், உரோமங்கள்முதலியன யாவும் தம் தம் இனத்தைச்சேர்ந்து ஒட்டி உருவாகி ஆகாயத்தில் தலையில்லாப்பக்ஷிகளாக விரைந்து வந்து நபியவர்களிடமிருந்த தலைகளுடன் பொருந்தி முன்னிருந்தவாறு கிரப்பமானபறவைகளாய் நின்றன.

[குன்-சூரத்து யாசீனுடைய தப்ஸீர், மிஷ்காத்து ஷரகு அபூஹுறைறா (றலி) அவர்களின் ரிவாயத்து]

கியாமத்தில் (இறுதிநாளில்) அல்லாகுத்தஆலா சிருஷ்டிகளை உயிர்த்தெழுப்பாடிருல் அறுஷின்கீழ் உள்ள பஹ்றுல் ஹயாத்

தென்னும் சமுத்திரத்திலிருந்து ஆண்பிள்ளைகளின் மணியைப் போன்ற, அதாவது சுக்கிலத்தைப்போன்ற ஒருவகை ஜலத்தினால் நாற்பது நாள்வரையில் பூமியின்மீது மழைவருஷிக்கும். அதனால் சிருஷ்டிகளின் ஸ்தூலங்கள் மாரிகாலத்து மழையினால் புல்பூண்டுகள் முளைப்பனபோல உற்பவமாகி ஆன்மாவில்லாத தேகங்களாய்த் தரையில்கிடக்கும். அப்போது இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் சூர்ஊதுவார்கள். அதனால் தேகங்களில் ஆன்மா புகுந்து எல்லாமனிதர்களும் நித்திரையிலிருந்து விழித்தவர்களைப்போல் தலையையுயர்த்தி யெழும்புவார்கள் என்றும் நமது வேத நூற்களில்மிகவும்தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. மறுமுறை உயிர்கொடுத்தெழுப்புவதற்கு இதுவேசரீரம் வேண்டுமென்பதவசியமில்லை என்று கஸ்ஸாலிஇமாமவர்கள் கீமியாவில், கூறியவசனத்தில் இந்தச்சரீரம் அவசியமில்லையாயினும் வேறு சரீரம்அவசியமென்று அருத்தமாகிறதேயல்லாமல் எந்தச்சரீரமும் தேவையில்லையென்று எங்ஙனம் அருத்தமாகின்றது?

இன்னும் வரும்.

சே. சே. தோப்புத்துறை.

கீமியா உரையறியாப் பாமரரைப் பதப்படுத்தல்.

* * *

(மார்ச்சுமாத சஞ்சிகையின் தொடர்.)

ஆனதாலிதுவரையில் கல்விமான்களா லுணர்ச்சிபெற்றுக் கொள்ளாத காலிகுமாரரே இதுவேசரீரம் வேண்டுமென்ற அவசியமில்லையென்பதற்குத்தான் நடுத்தீர்ப்புநாளில் ஜடசம்பந்தமில்லையென்று கருத்தமைத்துவிட்டனர்; அதற்குமேல் வரையப்பட்டுள்ள மறுமுறை உயிர்கொடுத்தெழுப்புகிறது என்றதற்கும் இன்னம் குர்ஆனில் பற்பல இடங்களில்நீண்டு முடிவரைச் சரீரத்தில் மீள வைக்கப்படுமென்றும் வருவதற்கு என்ன கருத்தமைக்கின்றீர்? சரீரமேயில்லையென்றால் ஆன்மாவைஎதிற்கொடுத்தெழுப்புகிறது? எதில் எதை மீளவைக்கிறது? இன்னமும் சூரத்து யாஸீனில் உக்கிப்போன எலும்பை அல்லாகுத்தஆலா ஹயாததாக்கி வைப்பாமென்றும் மேலும் அதுவே சூரத்திலும் சூரத்து ஹாமீம் ஸஜ்தாவிலும் ஈற்றுவிசாரணையில் கை கால் தோல் முதலிய அவயவங்களும் சாஹிது சொல்லுமென்று வந்திருக்கின்றன. ஆனதால் அந்தரங்கமறிந்த ஆரிபுகள் ஆயிரமாயிரக்கணக்கான மஅனாக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அவைகளை அறியக்கூடிய சக்தி எனக்கேயிருக்கிறதென்று சந்திகள்தோறுஞ் சப்திக்கும் பெரியோரே! மேற்கூறிய உக்கிப்போன எலும்புஉறுப்புத்தொகைகளிவைகட்குச் சரீரசம்பந்தமேயில்லையென்பதை ரூபித்து நீர்கொண்ட கருத்தை நீரே சோதிக்க முன்வாரும்.

வீண்வாதம்புரியும் இபுனுக்காலியே புறப்பொருளன்றி அகப்பொருள்மட்டிலுண்டென்று நீர் நம்பியதுமன்றி ஆன்மா சுவர்க்க நரகமும் உண்டு என்று நிர்ணயித்திருக்கின்றீர். அகப்பொருளும் புறப்பொருளும் உண்டென்பதும் ஒன்றென்பதும் ஆன்மாசுவர்க்க நரகமும் சரீரசுவனநரகமும் உண்டென்பதும் கற்றுத்தேர்ந்த கலைவல்லோராதி எனையோரும் அறிந்தவ்வாறு நிர்ணயித்திருக்கின்றார்கள். இவ்விதமிருக்க நீவிர் சரீரசுவர்க்க நரகமும் அவ்வுலகில் உண்டென்று கீமியாவில் வருவதாய் உமதுபுத்தகம் இரண்டாவது பக்கத்தில் ஏனெடுத்தெழுதவேண்டும். அவ்வாறு எடுத்தெழுதியவர் அவ்வுலகத்தில் ஜடசம்பந்தமேயில்லையென்று ஏன் சாதிக்கவேண்டும். ஆனதால் ஹக்கை மறுத்துப் பாத்திலைக் கைக்கொண்டவரிவ்வித இழிவுக்கு ஏற்படுவதே வழக்கம்.

கீமியா நான்காவது—உன் வானிலுள்ளவைகளையும் உமது புத்தகத்திலுள்ளவைகளையும் ஒத்துப்பார்க்குமிடத்துச் சில வசனங்களை முன்பின்னாகப் புரட்டியுஞ் சிலதை உமது கருத்துக்கிசைய இஷ்டப்படி வருவித்துமிருக்கின்றீர். ஏடுகளைப்புரட்டுவதும் எழுத்துகளை நோக்குவதுங் கற்றோர்களின் குணம். எழுத்துகள வசனங்களை உள்ளதுக்கு மாறாய்ப்புரட்டுவது கல்வியற்றோரின் குணம். வீண்வாதம் புரியும் சிதாசோதி கிரந்தகர்த்தாவே அறிந்துகொள்ளும். துன்யாவிலிருந்த சரீரத்தைஈற்றுக்காலத்திலெழுப்பப்பட்டு ஆன்மாவுக்குக்கொடாது வேறுதேகத்தைக் கொடுத்தால் அலைவிட்டு மாறாமல் தஸ்பீகு செய்துகொண்டிருந்த பரிசுத்த வஸ்துக்களை வேதனைசெய்ய நேரிடுகின்றமையால் அவ்வுலகத்திலுமிதுவேயுடலை ஆத்மாவுக்குக்கொடுக்கப்பட்டு நற்பதவிதுர்ப்பதவியடைய வைப்பதே முடிவான தீர்மானமாகவிருக்கு

மென்பதாய் லாஹிர்பாத்தின் உலமாக்களடங்கலும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். இதையொத்துக் கஸ்ஸாலியிமாமவர்களுந் தங்களின் துற்றத்துல்பாகிறாயீ அஹ்வாலில் ஆகிருபோன்ற அநேகம்கிரந்தங்களில் சற்றுவிசாரணையிலிதுவே சரீரத்தை ஆன்மாவுக்குக் கொடுக்கப்பட்டு அதாபுதவாபை மனிதன் பெற்றுக் கொள்வானென்று தீர்ப்பெழுதியிருக்கிறார்கள். அன்றியும்கீமியா போன்ற சிலகிரந்தங்களிலிதுவே சரீரம் அவசியமில்லையென்றுஞ் சொல்லியிருக்கின்றார்கள். ஆனதுபற்றி இஜ்மாஉக்கு ஒற்றுமையாய் இத்தேகமே அவசியமென்றுசொல்லி இதற்கு மாற்றமாய் இதுவே சரீரம் அவசியமில்லையென்றும் ஏன் சொல்வார்கள் என்பதாய் இங்ஙனம் ஓர் வினாவேற்படுகின்றது. இதற்கு விடையாக இதுபாவின்சரகு இத்திஹாபென்ற கிரந்தத்தில் வரைந்திருப்பதை ஈண்டுத்தருதும். அஃதாவது: மேற்கண்ட இமாமவர்கள் காலத்திலிதுவே சரீரத்தை ஈற்றுக்காலத்தில் ஆத்துமாவுக்குக் கொடுக்கப்படுமென்பதாய்ப் பலரால் ஆட்சேபனைகள் ஏற்பட்டுப் பலாசபாக்காபிருகளினின்றும் சிலரால் அவைகளை மறுத்து ஒருவன் ஒருவனைத் தின்றுவிட்டாலிருவரையும் எப்படி எழுப்பப்படுமென்பது போன்ற சில வினாக்கள் வரவும் அவைகளுக்குப்பலஹீனமான சமாதானங்கள் கூறவுமீண்டுமவைகளை அவர்கள் மறுக்கவுமிவ்விதகுதர்க்கஞ் சம்பவித்தபடியால் இமாமவர்கள் பைலாசபாக்கள் அடங்கும்பொருட்டு மறுமுறை உயிர்கொடுத்தெழுப்புவதற்கிதுவே சரீரம் அவசியமில்லை. துன்யாவிலிருந்த சரீரத்தை மீட்டுக்கொடுத்தாலும் அல்லது வேறுதேகத்தைப் புதிதாயுண்டாக்கிக் கொடுத்தாலும் ஆத்மாவென்ற ஏறாவானுக்கு ஏறவிடம்பாடிருக்கின்றது. இத்தேகத்தையே மீட்டுக்கொடுக்கவும் அல்லது வேறுதேகத்தைப் புதிதாயுண்டாக்கிக் கொடுக்கவும் அல்லாகுத்தஆலா தத்துவம் பெற்றவனாயிருக்கின்றான்.

(இன்னும் வரும்.)

மு. மு. நாகூர்.

(ஓர்அற்புதநாவல்)

மாந்திகிறிஸ்தமன்னன்.

அத்தியாயம் 1.

* மாஸேல் நகரம்—பேரூன் வருகை.

1815-ஆம் ஆண்டு பிப்ரவரிமீ 28ஆம் தேதி நாதர்தேம் தீலாகார் என்னும் காவற்கோபுரத்தின் மேற்பறந்து கொண்டிருந்த துவஜம் ஸ்மர்ணா, திரிஸ்தி, நேப்பிள்ஸ் என்னும் நகரங்களுக்குச் சென்றிருந்த பேரூன்என்னும் முப்பாய்மரக்கலம்மாஸேல் நகரை நோக்கிவந்துகொண்டிருந்ததாகத் தெரிவித்தது.

வழக்கம்போல் கடல்வழிகாட்டியொருவன் சந்தியிற்புறப்பட்டுப்போய், சேதுநிலைத்தாண்டிச்சென்று, அம்மரக்கலம் மார்ஜியான் முனைக்கும், இரியான் தீவுக்கும் நடுவேவரும்போது அதில் தாவியேறினான்.

உடனே எப்போதும்போல் போர்ட்ஸஞ்சீன் என்னும் மேடையின்மேல் வேடிக்கைபார்க்கவந்தவர்களுடைய கூட்டம் நிறைந்திருந்தது. ஒருமரக்கலம் அம் மாஸேல் நகரத்தாருக்குச்சொந்தமாயிருந்து, இந்தப் பேரூனைப் போற்செய்யப்பட்டு, அவ்வாறேபாயும் பாய்மரங்களும்உடையதாகி, பேரூன் ஏற்றிவரும் சரக்குகளைப்போல்தானும் ஏற்றிவருவதாக இருந்தால்மட்டும் அக்கப்பலைத் துறைமுகத்துக்குள் நுழைய அனுமதிகொடுக்கும் வழக்கம் மாஸேல் நகரில் எப்பொழுதும் நடைபெற்றுவருகிறது.

நம்முடைய பேரூன் கரைநோக்கி வந்துகொண்டிருந்தது. கலாஸரீன், ஜோராஸ் என்னும் இரண்டு தீவுகளுக்குமிடையில்ஒரு காலத்தில் அங்குண்டான பூகம்பத்தால் ஜலஸந்தியொன்றுண்டாயிருந்தது. அந்த ஜலஸந்தியையும், அதற்கிப்பாலுள்ள போங்கூ என்னும் முனையையும் கடந்து இம்மரக்கலம் துறைமுகத்துக்குள் நுழைந்தது; அப்பொழுது இதன்பாய்மரத்தின்உச்சியிலும், முன்புறத்திலும், மற்றும் இருமருங்கிலும் கட்டப்பட்டிருந்த பாய்கள் இன்னும் அவிழ்க்கப்படாமல் அப்படியே பறந்துகொண்டிருந்தன; "அகத்தினழகு முகத்திற்றெரியும்," என்பதுபோ

---

* மாஸேல்:—பிரான்ஸ் தேசத்திலுள்ள ஒருதுறைமுக

162395

லி இந்தக்கப்பல் மிக்க தாமஸமாக அசைந்துகொண்டு வந்தபோது, அதைக்கண்ணுற்றுக்கொண்டு கரையில் கூடிநின்ற சோம்பேறிகள், "இம்மரக்கலத்துக்கு என்ன துரதிஷ்டம் நேரிட்டிருக்கக் கூடும்?" என்று ஒருவரோடொருவர் வினவிக்கொண்டிருந்தனர். ஆயினும், கப்பல் யாத்திரைசெய்வதில் கைதேர்ந்தவர்கள் எண்ணினதாவது, அப்படி ஏதேனும் துன்பம் நேரிட்டிருந்தால் அதனால் கப்பலுக்கு ஒன்றும் அபாயமுண்டாயிராது. ஏனெனின் இஃது அதிக சாமர்த்தியசாலியான மீகானால் உய்க்கப்பட்டு வருவதாகத்தோன்றுகிறது, என்பதே. பிறகு கப்பலோட்டிகள் கயிறுகளையெல்லாம் அவிழ்த்து நங்கூரம்பாய்ச்ச ஆயத்தம்செய்தார்கள். கடல் வழிகாட்டி சொல்லிய முறைமை அங்கீகரித்து, அக்கப்பல் உய்க்குமாலுமி, பேரூன்செல்லும் ஒவ்வொருமார்க்கத்தையும் உற்று நோக்கிக்கொண்டு மிக்க நெருக்கமான அந்த மாஸேல் துறைமுகத்துக்குள் மெல்ல மெல்லச்சென்றான். கடல்வழிகாட்டிக்கருகில் உட்கார்ந்திருந்த அம்மீகான் மிக்க சுறுசுறுப்பும் கவனமும் பொருந்திய ஒரு வாலிபனாகக்காணப்பட்டான்.

வேடிக்கை பார்க்க வந்திருந்தவர்கள் இவ்வாறு குழப்பம் கொண்டிருக்கும்போது, அக்கூட்டத்தின் இடையில் [illegible]றுகொண்டிருந்த ஒருவர் இதைச்சகிக்காமல் கப்பல் கரைவந்துசேருமுன் தாம் ஒருபடகில் குதித்திறங்கி, அதிவேகமாகப் பேரூனுக்குச்சமீபத்தில்போய்ச் சேர்ந்தார்; அப்போது பேரூன் லாரிஸர் என்னும் முனைக்கருகில் வந்துகொண்டிருந்தது.

கப்பலின் மேற்றளத்தில் கடல் வழிகாட்டிக்கருகில் உட்கார்ந்திருந்த அந்தவாலிபன் இவர் படகில்வருவதைக்கண்டு எதிர்கொண்டழைக்குமாறு தன் தொப்பியைக்கையிலெடுத்துக்கொண்டு கப்பலின் கைப்பிடிசுவருக்கருகில் வந்தான்.

அவன், கறுத்தகண்களும், இருண்டதலைமயிரும் பொருந்தி உயர்ந்து மெலிந்து அழகுபொருந்திய வாலிபனாயிருந்தான்; அவனுடைய முழுத்தோற்றத்தையும் பார்த்தால் பிறந்ததுமுதல் அபாயத்திலேயே உழன்றுவரும் மனிதர்களுக்குரிய அமைதியும், மனவுறுதியும் அவன்பால் காணப்பட்டன.

(தொடரும்.)

அலக்ஸாண்டர் மோஸ்.